பெருங்கதை

மகதகாண்டம் -

வத்தவகாண்டம் -

நரவாணகாண்டம்

பெருமழைப் புலவர்

பொ வே சோமசுந்தரனார்

கழக வெளியீடு : கருஅறு

கொங்குவேளிர்
இயற்றிய

பெருங்கதை

(பகுதி-உ)

௩. மகதகாண்டம் -
௪. வத்தவகாண்டம் -
௫. நரவாணகாண்டம்

பெருமழைப் புலவர்
திரு பொ வே சோமசுந்தரனார்
எழுதிய
விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1970

பொன்னுசாமி வேலுத்தேவர் சோமசுந்தரனுர் (1909)

Ed: 1 April 1970

PERUNKATHAI Part II

iii Magatha Kaandam

iv Vaththava Kaandam

v Naravaana Kaandam

Appar Achakam, Madras-1. (-/6)

முன்னுரை

செந்தமிழ்க் காப்பியங்களில் பெருங்கதை எனப் பெயர் பெற்ற கொங்குவேளிர் மாக்கதை மூன்றாங் காண்டமாகிய மகத காண்டம் தனிநூலாக முன்னர் வெளியிடப்பட்டது. நான்காம் காண்டமாகிய வத்தவ காண்டமும், ஐந்தாம் காண்டமாகிய நரவாண காண்டமும் ஒரு நூலாக வெளியிடப்பட்டன.

சங்க இலக்கியத் தொகுப்பிலே காப்பிய வரிசைக்கு அழகுதரும்வகையில் இவ்விரண்டு நூல்களையும் இணைத்து ஒரே கட்டடமாகச் செய்து பெருங்கதை இரண்டாம் பகுதியாக வெளியிட்டுள்ளோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

பெருங்கதை

பெருங்கதை

௩. மகத காண்டம்

கழக வெளியீடு : ககசச

கொங்குவேளிர்

இயற்றிய

பெருங்கதை

மூன்றாவது

மகத காண்டம்

※

பெருமழைப்புலவர்

திரு. பொ. வே. சோமசுந்தரனார்

எழுதிய

விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை - 1
திருநெல்வேலி - 6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1970

பொன்னுசாமி வேலுத்தேவர் சோமசுந்தரனார் (1909)

Ed 1 Dec 1962
Reprint : Aug 1970

O31, 1DK, 1
N 70

PERUNKATHAI
III. MAGATHA KAANDAM

Appar Achakam, Madras-1. (I/2)

பதிப்புரை

உயர்தனிச் செம்மொழி என உலகமெங்கும் புகழப்பட்ட மொழி நமது தமிழ்மொழியே. பழைமை, பெருமை, அருமை, இனிமை, தெய்வத்தன்மை யமைந்த மொழியும் நம் மொழியே. தமிழ்மொழியிலுள்ள தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களையும் திருக்குறள் முதலிய ஒழுக்க நூல்களையும் சிலப்பதிகாரம் முதலிய காப்பிய நூல்களையும் ஆய்ந்தால் தமிழ்மொழியின் அருமை பெருமை எல்லாம் நன்கு விளங்கும். உலகில் எத்துணையோ ஆயிரக்கணக்கான மொழிகள் தோன்றித் தோன்றி யழிந்தொழிய நம் தமிழ்மொழி மட்டும் தோன்றிய காலமுதல் இன்று வரை நின்று வளர்ந்து வருவதைக் கண்டால் எவர்தாம் தெய்வத்தன்மை வாய்ந்த மொழியெனச் செப்பாதிருப்பர்? தமிழரசு மாய்ந்து வேற்றுமொழியரசு வேரூன்றிப் பல்லாண்டுக ளாகியும் செழித்துத் தழைத்துத் திகழ்ந்து நிலைபெற்று நம் நாட்டி லுலவுவதும் அன்றி வேற்று நாட்டிலும் சென்று விளையாடுகின்றது செந்தமிழ் என்றால் இதனை எந்நாட்டினரும் வியந்து கூறுவரன்றோ? இங்ஙனம் பிற நாட்டினரும் வியந்து பேசுமாறு வளர்ந்து வருகின்றது செந்தமிழ்.

செந்தமிழ் மொழி நிலைத்து நிற்பதற்குக் காரணம் இலக்கண வரம்புகளே யென மொழிப்புலவர் கூறுவர். வரம்பு உறுதியின் றெனில் வயலில் நீர் நில்லாதது போல இலக்கணமின்றெனின் எம்மொழியும் விரைவில் அழிந்தொழியும் என்பது திண்ணம். ஆதலால் ஒருநாட்டுமக்கள் தம்மொழியைக் காக்க வேண்டு மெனின் அம் மொழியி லமைந்த இலக்கண நூல்களைப் போற்ற வேண்டும். அதற்குரிய இலக்கிய நூல்களையும் போற்றி வர வேண்டும். நமதுநாட்டிற் பல இலக்கணம் இலக்கியம், கணிதம், மருத்துவம், இசை, நாடகம் முதலிய கலை நூல்கள் மறைந்தன வெனினும் இந்நாளிருக்கும் நூல்களையாவது போற்றிவர வேண்டியது நமது கடமையாம். நாட்டின் பெருமை பழைமை களை எடுத்துக் காட்டுவன அந்நாட்டுமொழி யிலக்கிய நூல்களே யாம்.

நமது நாட்டின் பழைமை பெருமைகளை எடுத்துக்காட்டும் இலக்கியநூல்களிற் சிறந்தவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய சங்கமருவிய நூல்களே. மற்றும் பலநூல்கள் பண்டைக்காலநூல்களாகக் காணப்படுகின்றன. அவற்றுள் பெருங்கதை எனவும் கொங்குவேள் மாக்கதை எனவும் பெயர் பெற்ற நூல் ஒன்று உளது. டாக்டர்

உ. வே. சா அவர்கள் ஏடுதேடிய காலத்து அகப்பட்டது இது. இதனை முதலில் வெளியிட்ட அவர்கட்குத் தமிழ்நாட்டார் என்றும் நன்றி செலுத்துங் கடப்பாடுடையவராவர். இதன் பழைமையும் பெருமையும் இந்நூல் உரையாசிரியர் தம் முன்னுரையில் விளக்கினர் ; ஆண்டுக் காண்க.

இப் பெருங்கதையில் உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்ற ஆறு பெரும்பகுதிகளும், அவற்றின் உட்பிரிவுகள் பலவும் அடங்கியுள்ளன. பெருங் கதை என்ற பெயருக்குத் தகுதியாக உலகியலில் நிகழும் செயல்கள் பலவும் ஒருங்கே யமைந்துள்ளன இந் நூலின்கண். இந் நூலின் பெருமையும் கதைவரலாறும், இந்நூலாசிரியர் வரலாறும் மிகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் முன்னர் வெளிவந்துள்ள உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம் என்ற புத்தகங்களில் வரைந்திருத்தலால் ஈண்டும் வரைவது மிகையென விடுத்தாம். உஞ்சைக் காண்டம், இலாவாண காண்டம் ஆகிய இரு பகுதியும் தனித்தனியாகப் பெரு மழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள் உரையுடன் கழக வெளியீடாக வந்துள்ளன. இப்பொழுது கழக வாயிலாக மூன்றாவது மகத காண்டமும் அம் முறையில் வெளிவருகின்றது. மற்றைக் காண்டங்களும் இம் முறையே வெளிவரும்.

இம் மகத காண்டம், "யாத்திரை போகியது" முதலாக "பறை விட்டது" இறுதியாக இருபத்தேழு பிரிவுடையது. இவற்றுள் அமைந்த அகவற்பாக்களின் அடி சுருக்கம் 55, பெருக்கம் 295 ஆகும். வரலாற்றுக்குத் தக்கவாறு அக்வற் பாக்களின் அடி குறைந்தும் கூடியும் வருமாறு அமைத்திருக் கின்றார் ஆசிரியர். இருபத்தேழு பிரிவும் இருபத்தேழு அகவற் பாக்களைக் கொண்டது எனக் கூறலாமேயன்றி அடி வரையறை கூறவியலாது. உதயணன் மகத நாட்டிற்குச் சென்று இராச கிரியம் என்ற நகரத்தின் புறத்தே தோழர்களுடன் மறைந் துறைதலும், மகத நாட்டு மன்னன் தங்கையாகிய பதுமாபதி காமவேள் விழாவிற்கு வருவதும், அவளை உதயணன் கண்டு காதல் கொள்வதும், அவளும் உதயணனைக் கண்டு காதல் கொள் வதும், உதயணன் பதுமாபதியின் தோழியாகிய யாம்பியாயினி வாயிலாக வரலாறு தெரிந்து மணக்க விழைவதும், இருவரும் உள்ளப்புணர்ச்சிக் குரியவராய்ப் பின்னர்க் காமவேள் கோட்டத் திற் கள்ளப்புணர்ச்சியால் இன்பந் துய்த்தலும், பதுமாபதி உதயணனைத் தன்னுடன் சிவிகையிலேற்றி ஒருவரும் அறியாமல் அரண்மனைக் கன்னி மாடத்திற்குக் கொண்டுபோய் வைத்து

பதிப்புரை

இன்பந் துய்த்திருத்தலும், பின்னர் உதயணன் மகத நாட்டு மன்னன் தருசகனோடு நண்பு கொண்டு பதுமாபதியை மணத்த லும், மணந்தபின் மகதநாட்டுப் படையுடன் உதயணன் தனது நாட்டிற்குச் செல்வதும், ஆருணி மன்னன் உதயணனோடு போர் புரிய வருதலும், ஆருணியைக் கொன்று வெற்றி பெற்று உதயணன் தன் தலைநகரமாகிய கோசம்பியிற் புகுதலும் ஆகிய பல செய்திகள் இக் காண்டத்திற் கூறப் படும். காதலும் வீரமும் கலந்த செய்திகள் இக் காண்டத்தில் வருவதால் இது மிகவும் சிறந்த பகுதியாகும். கற்போர் கருத்துக் களிப்பெனுங் கடலின் மூழ்கி யின்பப்பே றெய்தும் என்பது ஒருதலை.

இக் காண்டத்திற்கும் உரை வரைந்துதவியவர் பெருமழைப் புலவர் திரு பொ. வே. சோமசுந்தரனாரே யாவர். குறுந் தொகை, பத்துப் பாட்டு முதலிய பல நூல்களுக்கும் உரை வரைந்து உரையாசிரியர் எனப் பெயர் பெற்றவர் அவராதலின் அவ்வுரையின் பெருமை கூறாமலே நன்கு விளங்கும். மற்றைக் காண்டங்களுக்கும் அவருரை கிடைத்துள்ளது. அவை அச்சிடப் பெறுகின்றன.

பெருங்கதை என்ற நூலைக் கற்றுற் பெரும் பயன் எய்தலாம். உலகியலில் உள்ள நிகழ்ச்சியனைத்தும் இந் நூலிற் பரந்து கிடக்கின்றன. தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம் ஆங்காங்கே யமைந்துள்ளன அறியலாம். தமிழன்பர் பலரும் வாங்கியும் வாங்குவித்தும் கற்றும் கற்பித்தும் நாட்டுமக்கள் நல்வாழ்வு பெறச் செய்க.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

உ

பெருங்கதை

மூன்றாவது

மகத காண்டம்

[உதயணன் மகதநாட்டிலிருந்தபொழுது நிகழ்ந்த வரலாற்றின் தொகுதிகளைக் கூறும் பகுதி என்க]

இதன்கண்: உதயணன் உட்கோளும், பாஞ்சாலமன்னன் உட்கோளும், அமைச்சர் உதயணனுக்குக் கூறுதலும், உதயணன் இரங்குதலும், தோழர் தேற்றுதலும், இசைச்சன் கூறுதலும், உதயணன் கூற்றும், தோழர் செயலும் வேற்று வேடம் கோடலும், உதயணன் மான் முதலியவற்றை நோக்கிப் புலம்புதலும், உதயணன் முதலியோர் மகத நாட்டின் எல்லையை அடைதலும், தோழர் உதயணனைத் தேற்றுதலும், மகத நாட்டின் சிறப்பும், ஊர்களின் சிறப்பும், மகதநாட்டின் தலைநகர மாகிய இராசகிரியத்தின் சிறப்பும், அந்நகரத்தின் புறத்தே உதயணன் முதலியோர் மறைந்துறைந்ததும், மகதமன்னன் தங்கையாகிய பதுமாபதியின் மாண்பும், விழாமுரசறைதலும், விழாத்தொடங்கலும், பதுமாபதி விழாவிற்கு வருதலும், உதயணன் பதுமாபதியைக் காண்டலும் உதயணனும் பதுமா பதியும் தம்முட் காட்சி யெய்தி மயங்குதலும், அவள் இறைவழி பாடு செய்தலும், உதயணன் வருந்துதலும், அவன் ஒரு கூனியைக் கண்டு பதுமாபதியைப் பற்றி வினவுதலும், கூனி உதயணனுக்குக் கூறுதலும், மாலைப் பொழுதிலே உதயணனும் பதுமாபதியும் தனித்தனியே வருந்துதலும், பொழுதுவிடிதலும், பதுமாபதி காண உதயணன் பூம்பந்துருட்டலும், பதுமாபதி கூனியின் வாயிலாய் உதயணனைப் பற்றி அறிதலும், உதயணன் பதுமாபதியைப் பற்றித் தோழரிடம் கூறலும், அவளை மணத்தல் வேண்டும் என்றலும், தோழர் மறுத்தலும், உதயணன் வற்புறுத்தலும், உதயணன் வாழைக் குருத்தைச் சித்திரித்து மலர் மாலையோடு வைத்தலும், பதுமாபதி அவற்றைக் கொள்ளலும்,

யாப்பியாயினி பதுமாபதியை ஐயுற்று வினுதலும், பதுமாபதி வைத்த மாலையை வயந்தகன் எடுத்து வந்து உதயணனிடம் கொடுத்தலும், பதுமாபதி உதயணனைக் காண்டலும், உதயணன் அவளைக் காண்டலும், உதயணன் பதுமாபதியை அடைய விரும்புதலும், அமைச்சர் உடன்படலும், உதயணன் தருசகமன்னனைக் காண்டலும், தருசகனுக்கு உதயணன் நிலத்தினூடே பொருள் புதையலைக் காட்டலும், பதுமாபதி காமவேள் கோட்டத்தே உதயணனைக் காண்டலும், இருவரும் இயற்கைப் புணர்ச்சி எய்துதலும், உதயணனைப் பிறர் அறியாதபடி பதுமாபதி சிவிகையில் அரண்மனைக்குக் கொண்டு போதலும், பதுமாபதி ஊடலும், உதயணன் ஊடல் தீர்த்தலும், உதயணன் பதுமாபதிக்கு யாழ் இசைத்துக் காட்டலும், அவள் வியத்தலும், யாழின் நலத்தை உதயணன் பதுமாபதிக் குணர்த்தலும், உதயணன் பதுமாபதியைப் பிரிதலும், தருசகன் பகைவர் போர்க்கு வருதலும், உதயணன் மறவர் இரவில் அவருடன் போர் செய்து தொலைத்தலும், உதயணன் தருசகனோடு கேண்மை கோடலும் தருசகன் பகைவர் மீட்டும் போரிட வருதலும், உதயணன் படையோடு சென்று அவருடன் போரிட்டு வென்றி எய்துதலும், பதுமாபதியை உதயணன் மணந்து கோடலும், உதயணன் மகதநாட்டுப் படையோடு தன்னாட்டிற்குப் போதலும், படைதிரட்டுதலும், தம்பியர் வருகையும், ஆருணி மன்னன் உதயணனோடு போர்க்கு வந்து எதிர்த்தலும், போர் நிகழ்ச்சியும், ஆருணியரசன் கொலையுண்ணலும், உதயணன் தன் தலைநகரமாகிய கோசம்பியிற் புகுதலும் பிறவும் கூறப்படும்.

க. யாத்திரை போகியது

இதன்கண் : வாசவதத்தையின் பிரிவாற்றாமல் வருந்திச் செயலற்றிருந்த உதயணகுமரனைத் தோழர்கள் தேற்றிப் பகைவனை வெல்லவேண்டும் என்று வற்புறுத்துதலும், பின்னும் வருந்தாநின்ற உதயணனை மீண்டும் தேற்றும்பொருட்டு இசைச்சன் என்பான் இராசகிரிய நகரத்தில் இறந்தவர்களைப் பழைய உருவத்தோடு வரவழைத்துத் தரும் முனிவர் ஒருவர் இருக்கின்றனர் என்றும் அங்குச் சென்று அவரைக் காணின் வாசவதத்தை முதலியோரை மீண்டும் காண்டல் கூடும் என்றும் கூறுதலும், உதயணன் முதலியோர் வேற்றுருவங் கொண்டு சிலபடை மறவருடன் மகத நாட்டில் இராசகிரிய நகரத்தை அடைதற்குப் புறப்பட்டுப் போதலும், மகதநாட்டின் எல்லையை அவர்கள் எய்துதலும் பிறவும் கூறப்படும்.

ஆங்கினி திருந்த காலை யீங்கினி
வேந்துபடக் கடந்த வேந்துசுடர் நெடுவேல்
உதயண னிலைமை யிதுவென வுரைப்பேன்
பழனப் படப்பைப் பாஞ்சால ராசன்
அழன்மிகு சீற்றத் தாருணி யரசன்
திரியு நெய்யு மொருவயிற் செல்லிய
எரிவிளக் கற்ற மிருள்பரந் தாங்குப்
பாய தோல்சீர்ப் பகையடு தானை
ஏய ரற்றத் திடுக்கட் காலை
அன்றவ னறிந்தே தோன்றுவழி வந்த
குலப்பகை யாகிய வலித்துமேல் வந்து
நன்னகர் வௌவு மின்னாச் சூழ்ச்சியன்
என்வகை யறிந்த நன்பொரு ளாளன்
பெரும்படைத் தானைப் பிரச்சோ தனன்றன்
அரும்படை யழியா வாற்றலிற் போந்தவன்
மடமகட் கொண்ட விடனறி சூழ்ச்சி
யூகி யுளனெனி னிகழா னிவனெனச்
சாவுமுன் துறந்த வலிப்பின னாகித்
தீயகங் கழுமிய கோயில் வேவினுள்
தேவியை யிழந்து பூவிதழ்ச் சோலைப்

புல்லென் யாக்கையொடு போயின னுதயணன்
இல்லெனக் கெழுபகை யிம்மையி னினியென
மாற்று வேந்தன் மதில்காப் பிகந்துதன்
ஆற்றன் மகிழ்ந்த வங்கிலை யொற்றி
மகத மன்னனொடு மகட்கிளை யாகித்
தொகைகொண் டீண்டியவன் றெல்படை தழீஇ
ஆதித் துணிவுடை நீதியிற் கரந்த
தம்பியர் கூட வெம்பிய வெகுட்சியின்
ஒடுங்கா மாந்த ருள்ள மஞ்சப்
பாடுபெயர்க் கிடிக்கு மேடகம் போல
அகன்றுபெயர்ந் தழிக்கு மரும்பெறற் சூழ்ச்சி
நவின்ற தோழனொடு பயம்பட வலித்து
மதியுடை யமைச்சர் மனந்தெளி வுறீஇப்
புதிதிற் கொண்ட பூக்கவின் வேழம்
பணிசெயப் பிணிக்கும் பாகர் போல
நீதி யாள ராதி யாகிய
திறத்திற் காட்டவு மறத்தகை யழுங்கி
முன்னுப காரத்து நன்னயம் பேணித்
தன்னுயிர் கொடுக்குந் தவமுது தாயும்
விறப்பினிற் பெருகியும் வறப்பினிற் சுருங்கியும்
உறுதி நோக்கி யுயிர்புரை காதலொ
டாழ்விடத் துதவு மரும்புணை போலத்
தாழ்விடைத் தாங்கிச் சூழ்விடைத் துளங்கா
உள்ள வாற்ற லுறுபுகழ் யூகியும்
அள்ளற் றாமரை யகவித ழன்ன
அரிபரந் தகன்ற வம்மலர் நெடுங்கட்
டரிமலர்க் கோதைத் தேவியு மின்றித்
தருமமு மருத்தமுங் காமமு மிழந்தே
இருநில மருங்கி னிறைமை தாங்கி
வாழ்தலி னினிதே யாழ்தலென் றழிந்தே
உரக்கவின் றேய விரக்கமோ டரற்றவும்
கைவரை நில்லாக் கையறு கவற்சிகண்
டின்மொழி விச்சை யிலாமய னென்னும்
ஆளவி நெஞ்சத் தந்தண னிருந்த

காள வனமும் வெந்தீப் புக்கெனக்
காதலன் றன்னையுஞ் சாவற வுறீஇ
மயக்க நெஞ்சமொடு மனம்வலித் திருந்துழி
இசைச்சன் கூறுவ னீங்கிது கேட்கென
விச்சையின் முடியா விழுவினை யில்லெனல்
பொய்ச்சொ லென்பர் புன்மை யோரே
அற்ற தாத லிற்றுங் கூறுவென்
கற்றதுங் கேட்டதுங் கண்ணு மாந்தர்க்
கொற்கிடத் துதவு முறுவலி யாவது
பொய்ப்பது போவு நம்முதற் றாகப்
பற்றொடு பழகி யற்பழ லழுந்தி
முடிவது நம்மைக் கடிவோ ரில்லை
இல்லை யாதலிற் சொல்லுவ லின்னும்
முடியாக் கரும மாயினு முடியும்
வாயின் முற்றித்து வயங்கா தாயினும்
சாவினும் பழியார் சால்புடை யோரென
மல்லற் றானை மறங்கெழு மன்னவன்
செல்வப் பாவை சென்றினிது பிறந்துழி
இம்மை யாக்கையி னியல்பின ளாகத்
தன்மையிற் றரூஉந் தாழாப் பெருவினை
உட்குடை விச்சை யொன்றுண் டதனைக்
கற்றுநனி நவின்ற கடனறி யந்தணன்
இருந்தினி துறையு மிராச கிரியெனும்
பொருந்தரு வியனகர்ப் புக்கவற் குறுகி
ஆற்றளி வழிபா டாற்றி யமைச்சனொடு
பூக்குழை மாதரை மீட்டனங் கொண்டு
பெறற்கரு விச்சையுங் கற்று நாமெனத்
திறற்படு கிளவி தெரிந்தவ னுரைப்ப
விறற்போ ருதயணன் விரும்புபு விதும்பி
என்னே யன்னவு முளவோ வென்றலின்
வேட்ட தன் வழியே பாற்பட காடி
ஆதி வேதத் தகவயிற் பெரியோர்
ஓதிய வுண்டென வுணரக் கூற
இன்னே போது மேகுமின் விரைந்தெனப்

பள்ளம் படரும் பன்னீர் போலவன்
உள்ளம் படர்வழி யுவப்பக் காட்டிக்
கணம்புரி பெரும்படைக் காவ னீக்கிக்
குணம்புரி தோழர் கொண்டனர் போதர
ஆற்றலும் விச்சையு மறிவு மமைந்தோர்
நூற்றுவர் முற்றி வேற்றுரு ராகென
வெண்ணூற் பூந்துகில் வண்ணங் கொளீஇ
நீலக் கட்டியு மரகதத் தகவையும்
பாசிலைக் கட்டியும் பீதகப் பிண்டமும்
கோல மாகக் கொண்டுகூட் டமைத்துப்
பிடித்துருக் கொளீஇக் கொடித்திரி யோட்டிக்
கையமைத் தியற்றிய கலிங்கத் துணியினர்
கொய்யுளைப் புரவி மேற்கொண் டவரிற்
கைவினைக் கம்மங் காண்பினி தாக
வாரமைத் தியற்றிய காலமை செருப்பினர்
செம்பொற் கோட்டைப் பந்தர்க் கொளுவினர்
மாத்திரை நுண்கயிற் றுத்திரை யாப்பினர்
உள்கூட் டமைந்த சில்கூட் டல்குலர்
இரும்பனை யிளமடல் விரிந்துளர் வெண்டோட்
டீர்க்கிடை யாத்த நூற்புரிப் பந்தச்
செந்தோட் டணிமலர் சேர்ந்த வுச்சி
அந்தோட் டம்பணை யரக்குவினை யுறீஇய
சித்திரத் திண்கால் வித்தகக் குடையினர்
மரகத மணிக்கை மாசில் பொற்றொடி
உருவுபடச் செறித்த வுரோமக் கோட்டையிற்
செந்தளிர் மராஅத்துப் பைங்காய் பழித்த
செண்ணார் வடிவிற் கண்ணார் கத்தியர்
ஏரில வங்கந் தீம்பூ வேலம்
கப்புரப் பளிதமோ டுட்படுத் தியற்றிய
வாசத் திரையோடு பாகுநிறைத் தடக்கிய
மாசி லருமணி மடைத்த வாடையர்
பட்டுச் சுவேகமொடு பாட்டுப்புற மெழுதிய
கட்டமை சுவடி பற்றிய கையினர்
புரிநூ லணிந்த பொன்வரை மார்பினர்

வீரிநூற் கிரந்தம் விளம்பிய நாவினர்
வாச வெள்ளை வரைந்த கழுத்தினர்
தேசந் திரிதற் காகிய வணியொடு
வளங்கெழு மாமலை வன்புன் ருளக
கலங்கெழு சிறப்பி ஞட்டக நீந்திப்
பைங்தொடி யரிவைக்குப் படுகடங் கழீஇய
கண்புரை யந்தணன் காள வனத்தினின்
உதய ஞாயிற்றுத் திசைமுக நோக்கித்
திருமகட் டேரு மொருமையிற் போந்து
கருப்பாச மென்னுங் கானக் கான்யாற்றுப்
பொரும்புன னீத்தம் புணையிற் போகிச்
சேணிடைப் போகிய பின்றை யப்பால்
நீணிலைப் படுவிற் பேர்புணை நீந்தி
நொந்துநொந் தழியு நோன்புரி யாக்கையர்
அருஞ்சுரக் கவலையு மடவியும் யாறும்
பெருஞ்சின வீர ரொருங்குடன் போர்வழி
வென்றடு சிறப்பின் வீணை வித்தகன்
ஒன்றிய தேவியை யுள்குவன ளுகிச்
செறிந்த மருங்கிற் றிரிமருப் பிரலை
புறந்தற் காப்பப் புணர்மறி தழீஇய
மடமா னம்பிணை கண்டு மாதர்
கடைபோழ் நெடுங்கட் காம நோக்கம்
உள்ளத் தீர வொள்ளழ லுயிரா
இனத்திற் கெழீஇ யின்ப மகிழ்ச்சியொடு
புனத்திற் போகாது புகன்றுவிளை யாடும்
மான்மடப் பிணையே வயங்கழற் பட்ட
தேனேர் கிளவி சென்ற வுலகம்
அறிதி யாயின் யாமு மங்கே
குறுகச் செல்கங் கூறு யெனவும்
பணிவரை மருங்கிற் பாறை தோறும்
மணியிரும் பீலி மல்க வுளரி
அரும்பெற லிரும்போத் தச்சங் காப்ப
மதநடை கற்கு மாமயிற் பேடாய்
சிதர்மலர்க் கூந்தற் சேந்தீக் கவர

மயர்வனள் விளிந்தவேன் வஞ்சி மருங்குல்
மாறிப் பிறந்துழி மதியி னாடிக்
கூறிற் குற்ற முண்டோ வெனவும்
வெஞ்சுரஞ் செல்வோர் வினைவழி யஞ்சப்
பஞ்சுர வோசையிற் பையெனப் பயிரும்
வெண்சிறைச் செங்கா னுண்பொறிப் புறவே
நுண்சிறு மருங்கு னுகர்வின் சாயற்
பாசப் பாண்டிற் பல்கா ழல்குலென்
வாசவ தத்தை யுள்வழி யறியின்
ஆசை தீர வவ்வழி யடைகேன்
உணரக் கூறா யாயிற் பெடையோடு
புணர்வு விரும்பல் பொல்லா தெனவும்
பசைந்துழிப் பழகல் செல்லாது பற்றுவிட்
டுவந்துழித் தவிரா தோடுதல் காமுறும்
இளையோ ருள்ளம் போலத் தளையவிழ்ந்
தூதுமல ரொழியத் தாதுபெற நயந்து
கார்புன மருங்கி னார்த்தனை திரிதரும்
அஞ்சிறை யறுகாற் செம்பொறி வண்டே
எரியுள் விளிந்தவேன் வரிவளைப் பணைத்தோள்
வள்ளிதழ்க் கோதை யுள்ளுழி யுணரிற்
கவற்சி வகையிற் பெயர்த்தனை களைஇயர்
அரும்பூங் கோதைப் பூந்தா துண்டவள்
அவிழ்பூங் கூந்தலுண் மகிழ்துயில் வெய்தி
நீயு மெவ்வந் தீர யானும்
நல்லிள வனமுலை புல்லுபு பொருந்த
உய்த்தனை காட்டுதி யாயிற் கைம்மா
றித்துணை யென்பதோன் றில்லென விரங்கியும்
பொங்குமழை தவழும் பொதியின் மீமிசைச்
சந்தனச் சோலைதொறுந் தலைச்சென் றாடி
அசும்பிவ ரடைகரைப் பசுந்தோ டுளரிச்
சுள்ளிவெண் போது சுரும்புண விரித்து
மணிவாய் நீலத் தணிமுகை யலர்த்தி
ஒண்பூங் காந்த ளுழக்கிச் சந்தனத்
தந்த ணறுமல ரவிழ மலர்த்தி

நறுங்கூ தாளத்து நாண்மல ரளைஇக்
குருந்தாட் குரவின் குவிமுகை தோலேச்சி
முல்லைப் போதி னுள்ளமிழ் துணஅப்
பல்பிட வத்துப் பனிமலர் மறுகிப்
பொற்றார்க் கொன்றை நற்றாது நயந்து
சாத்துவினைக் கம்மியன் கூட்டுவினை யமைத்துப்
பல்லுறுப் படக்கிய பையகங் கமழ
எல்லுறு மாலை யிமயத் துயர்வரை
அல்குதற் கெழுந்த வந்தண் டென்றல்
செவ்வழித் தீந்தொடை சிதைந்தன கிளவியென்
எல்வளைத் தோளியை யெவ்வழி யானும்
நாடிச் சென்றவள் சேடிள வனமுலைக்
குழங்கற் சாந்திடைக் குளித்துவிளை யாடியேன்
அழுங்க னெஞ்சத் தயாஅநோய் தீர
மயர்வேனை மாற்றுதி யாயி னின்மாட்
டுயர்வுள வியற்கை யொழியுமோ வெனவும்
இன்னவை பிறவு மன்னவை கண்டோர்
அவல நெஞ்சமோ டறிவுபிறி தாகத்
தவலருந் தேவியைத் தானினைந் தாற்று
திறுதி யெண்ணி யிகவா மன்னனை
உறுதி மொழியி னுணர்த்துவன ராகிப்
பல்வகைத் தோழர் படிவ வேடமொடு
செல்வ மகதத் தெல்லை யெய்தி
ஒருவழிப் பழகல் செல்லா துருவுகரந்து
பெருவழி முன்னினர் பெருந்தகைக் கொண்டென்.

———

உரை

௧. யாத்திரை போகியது

அஃதாவது உதயணன் முதலியோர் தங்கள் நாட்டினின்றும் மகதநாட்டிற்குச் சென்ற நிகழ்ச்சியினைக் கூறும் பகுதி என்றவாறு.

(ஆசிரியர் கூற்று)

௧ - ௩ : ஆங்கு............உரைப்பேன்

(பொழிப்புரை.) இவ்வாறு யூகி வாசவதத்தையை முதலியோருடன் சண்பை நகரத்தே முட்டில் வாழ்க்கைச் செட்டியர் பெருமகன் மித்திரகாமன் பெருமனையின் இனிதே ஒடுங்கி இருந்த பொழுது, வத்தவநாட்டிலே இலாவாண நகரத்தே இருந்தவனும் பகைவேந்தர் பலரும் மாண்டொழியும்படி வென்று வாகை சூடிய வேந்தனும் ஒளிவீசும் வேற்படையையுடையவனும் ஆகிய உதயண மன்னனுடைய நிலைமை இங்ஙனமிருந்தது என்று இனிக் கூறாநிற்பேன் கேளுங்கோள் என்க.

(விளக்கம்) ஆங்கு என்றது, சண்பை நகரத்து மித்திரகாமன் இல்லத்தை; ஈங்கு என்றது இலாவாண காண்ட நகரத்து அரண்மனையை என்க.

ஏந்தாநின்ற சுடர்வேலுமாம்.

இஃது ஆசிரியர் நுதலிப்புகுதல் என்னும் உத்தியால் தோற்றுவாய் செய்தபடியாம்.

(உதயணன் உட்கோள்)

௪ - ௧௨ : பழன............சூழ்ச்சியன்

(பொ - ரை.) இனி இலாவாண நகரத்தே இருந்த உதயண மன்னன், "என்னே! கழனிகளையும் தோட்டங்களையும் உடைய பாஞ்சாலநாட்டு மன்னனும் நம்பால் வெப்பமிக்க வெகுளியையுடையவனும் ஆகிய ஆருணியரசன் தன்பாலிட்ட திரியும் நெய்யும் ஒருசேர அற்றுப் போம்படி எரிந்த விளக்கினது அறுதியிலே இருளானது யாண்டும் பரவிக் கவிழ்ந்து கொள்ளுதல் போன்று பரவிய பழைய புகழையும் தம் பகைவரைக் கொன்று வாகை சூடும் வன்மையுடைய படைப் பெருக்கத்தினையும் உடைய ஏயர்களின் சோர்வுடைய இடுக்கட் காலத்தே அச்சோர்வினை அற்றைநாள் அவ்விடத்திருந்தே தெரிந்துகொண்டு தொன்று தொட்டுத் தான் மேற்கொண்ட குலப்பகைவளுதற்குத் துணிந்து நம் நகரின் மேல் படையொடு வந்து நமது நல்ல நகரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் இன்னுமையுடைய சூழ்ச்சியை உடையனுயினன், என்க.

(வி - ம்.) இஃது உதயணன் தன் நெஞ்சத்தே கருதியது என்க. பழனம் - கழனி. படப்பை - தோட்டம். தன்குலத்தார்க்கும் அவன் குலத்தார்க்கும் தொன்றுதொட்டுப் பகைமையுள தென்பான் அழன் மிகு சீற்றத்து ஆருணி அரசன் என்றான். விளக்கெரியுங்காலமெல்லாம் இருள் பரவாது பதுங்கியிருந்து அதன் அறுதியில் அவ்விளக்கொளி பரவிய இடனெல்லாம் கவிழ்ந்து கோடல் போன்று நாம் ஆட்சி செய்யும் துணையும் அடங்கியிருந்து யாம் சோர்வுற்று ஆட்சியொழிந்துழி மேல் வந்தனன் என்றவாறு.

செல்லிய - அற்றுப்போக. பாய - பரவிய. தொல்சீர் - தொன்று தொட்டு வளர்ந்து வந்தபுகழ். ஏயர் என்றான் தனக்கும் அவனுக்கு முள்ள பகை தன்முன்னோர் காலத்திருந்தே தொடர்ந்து வருதலைக் கருதி. ஏயர் - உதயணன் தாய்வழி முதல்வர். 'அன்று என்றது தான் தெய்வயானையைத் தேடப்புறப்பட்ட நாளை என்க. ஆகிய - ஆக. வலித்து - துணிந்து. நன்னகர் என்றது கோசம்பி நகரத்தை. இன்னா - துன்பம். அச்சூழ்ச்சி அவனுக்கே கேடாய் முடிதலின் இன்னாச் சூழ்ச்சி என்றான். இனி அஃதறத்துவழிப்படாமையின் இன்னாச் சூழ்ச்சி என்றான் எனினுமாம்.

(இதுவுமது)

கரு - உக: என்வகை..........உதயணன்

(பொ - ரை.) என்னுடைய இயல்பினை நன்குணர்ந்தவனும் எனக்கு உறுதி பயக்கும் நல்ல பொருளாக அமைந்தவனும், யான் சிறைப்பட்டிருந்த காலத்தே பெரிய படைக்கலன்களை ஏந்திய படைஞரையுடைய பிரச்சோதன மன்னனுடைய வெல்லுதற்கரிய படை மறவரை யெல்லாம் அழித்துத் தனது ஆற்றலாலே என் முன்னர் வென்றி கூறிவந்து அந்த மன்னவனுடைய இளமகளை யான் கைப்பற்றிக் கொண்டமைக்குக் காரணமான இடனும் காலமும் பிறவும் எல்லாம் அறிகின்ற சூழ்ச்சியைச் செய்தவனுகிய யூகி உயிரோடிருப்பனாயின் இப் புல்லியோன் என்னை இங்ஙனம் எளியனாகக் கருதி இகழ்வனோ இகழானே! இனி யான் உயிர் விடுதலே செய்யத்தக்கதாம் என்று தனது சாவினையே முன்னிட்ட துணிவினையுடையனாகித் தன் அரண்மனை தீயினில் வெந்த நிகழ்ச்சியிலே தன் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையையும் இழந்தவனாய்ப் பொலிவிழந்த யாக்கையோடு கையறவு கொண்டு அயலிலுள்ளதொரு பூம் பொழிலிலே புகுவானாயினன் என்க.

(வி - ம்) வகை - இயல்பு. நன்பொருள் - உறுதிப்பொருள் - எனக்கு எல்லா நன்பொருளும்தானே ஆகியவன் என்றவாறு. படைத்தானை - படைக்கலனேந்தியதானை, இருபெயரொட்டுமாம். அழியா - அழித்து. மடமகளைக் கொண்ட சூழ்ச்சி இடனறி சூழ்ச்சி எனத் தனித்தனி கூட்டுக. இவன் - என்றது, ஆருணியரசனை, இப்புல்லியோன் என்பதுபட நின்றது, கோயில்வேவு - கோயில் வெந்த நிகழ்ச்சி. தேவி - வாசவதத்தை. உதயணன் - எழுவாய்.

(பாஞ்சால மன்னன் கருத்து)

௨௨ - ௨௪. இல்...........ஒற்றி

(பொ - ரை) இனி, உதயணனின் பகைவேந்தனாகிய அந்த ஆருணி 'இப் பிறப்பின் கண்ணே இனி எனக்குப் பகையாகி வருபவர் இவ்வுலகத்தே யாண்டும் இலர்' என்று கருதித் தன் வலிமையைத் தானே புகழ்ந்து பொச்சாப் புடையவனாய் அவ் வுவகை மகிழ்ச்சியிற் சோர்வுடையனாய் அரண்மனையைப் பாது காக்குஞ் செயலையும் கைவிட்டவனாக இருக்கின்ற அந்த நிலைமை யினை, உதயணனுடைய மதியுடையமைச்சர்கள் (௲) ஒற்றர் வாயிலாய் நன்குணர்ந்து கொண்டு என்க.

(வி - ம்) எழுபகை : வினைத்தொகை. இம்மை - இப்பிறப்பு. மாற்றுவேந்தன் - பகைமன்னன்; ஆருணியரசன், தன் ஆற்றலைத் தானே வியந்து அவ்வியப்பினால் மகிழ்ந்த என்றவாறு. "இறந்த வெகுளியிற்றீதே சிறந்த உவகை மகிழ்ச்சியிற் சோர்வு" என்னும் அருமைத் திருக்குறட்கு (௫௩௧) இவ்வாருணி வேந்தன் எடுத்துக் காட்டாக அமைதனினைக. அந்நிலை - அந்தப் பொச்சாப்புற்றநிலை உதயணன் அமைச்சர் ஒற்றராலுணர்ந்து என்க.

(அமைச்சர் தம்முட் சூழ்தலும் உதயணனுக்கு உறுதி கூறலும்)

௨௫ - ௩௭ : மகத...........அழுங்கி

(பொ - ரை) அவ்வமைச்சர்கள் தம்முள் ஒருங்கே குழுமி ஆராயுங்கால் "யாம் ஆருணியரசனை வெல்லுதற்கு மகத நாட்டு மன்னவனோடு அவன் குடியிற் பிறந்த மகளுக்குக் கணவனாகு மாற்றாலே நம் மன்னவன் அவனது கேண்மையைக் கொண்டு அவனது பழைய படையையும் சேர்த்துக் கொண்டு முன்னரே காலம் வருமளவும் கரந்துறைதல் வேண்டும் என்னும் அரசநீதி யினாலே துணிந்து மறைந்துறையா நின்ற நம்மிளவரசராகிய பிங்கலகடகரும் நம்மொடு வந்து கூடா நிற்ப நம்பால் மனம் வேதற்குக் காரணமான வெகுளியையுடைய நம் பகைவரெல்லாம் ஒரு சேர உள்ளம் நடுங்கும்படி, பின் சென்று வலி சேர்த்துக் கொண்டு முன்னேறித் தாக்கா நின்ற போர்க்கிடாய் போன்று நாமும் இடம் பெயர்ந்து அஞ்சுவார் போன்று சென்று மீண்டும் முன்னேறிப் போராற்றி அவரை அழித்தல் வேண்டும் என்னும் பெறுதற்கரிய சூழ்ச்சியினைத் தம்பாற் கூறிய தோழனாகிய உரு மண்ணுவாவோடு மீண்டும் அச்சூழ்ச்சி பயன்படும் வழிமுறை யெல்லாம் நன்கு ஆராய்ந்து துணிந்து அவ்வமைச்சர்கள் உதயணன்பாற் சென்று அவன் மனத்தைத் தெளிவுறச் செய்தற் குத் தொடங்கிப் புதுவதாகக் காட்டினின்றும் கைப்பற்றிக் கொணர்ந்த, தெறுழம்பூப் போன்று அழகுற்ற புகர்களையுடைய

யானையைத் திருத்தித் தாம் ஏவிய தொழிலைச் செய்யப் பயிற்று விக்கும் பாகர் போன்று பண்டைக் காலத்து அரச நீதி கூறிய சான்றோர் கூற்றுக்களை எடுத்தோதித் தெளிவியா நிற்பவும், அற வோனாகிய அவ்வுதயண மன்னன் தெளியானாய் வருந்தி என்க.

(வி - ம்.) மகதமன்னன் - தருசகமன்னன். மகட்கிளை - மகட் கோடல் வாயிலாய் உண்டாகும் உறவு, மகதமன்னனொடு மகட்கிளை யாகி என்றது பேணிக்கொளல் என்னும் உபாயம். "பிரித்தலும் பேணிக், கொளலும் பிரிந்தார்ப், பொருத்தலும் வல்ல தமைச்சு" என வரும் திருக்குறளும் காண்க அமைச்சர் தொகை கொண்டீண்டி என்க. மன்னரோடு தொகைகொண்டு ஈண்டி என்க: தொல்படை - வழிவழிவந்த பழம்படை. ஆதி - முன்னர், தம்பியர் - உதயணன் தம்பியராகிய பிங்கலகடகர். ஒடுங்காமாந்தர்-பகைவர், பாடு - இடம், மேடகம் - ஆட்டுக்கிடாய், பாடுபெயர்ந்திடிக்கும் மேடகம் என்னும் இவ்வுவமையோடு "ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர், தாக்கற் குப் பேருந் தகைத்து" எனவரும் இனிய திருக்குறளையும் (சஅசு) நினைக. தோழன் உருமண்ணுவா. பூக்கவின் வேழம் என்றது தெறுழம் பூப்போன்ற புகர்களாலே அழகெய்திய வேழம் என்றவாறு. என்னை?" "களிற்றுமுகவரியிற் றெறுழ்வீபூப்ப" எனப் பிறரும் ஓதுதல் (புறநா - கசுக,) காண்க. ஆதியாகிய நீதியாளர் திறத்திற் காட்டி என்க. அறத்தகை: அன்மொழி; உதயணன்.

(உதயணன் இரங்கல்)

௩அ - சச : முன்..........யூகியும்

(பொ - ரை) "முன்னொரு காலத்து யான் செய்த உதவியின் நல்ல பயனை நெஞ்சத்தே மறவாது நினைந்திருந்து, அதற்குக் கைம்மாறாக என் பொருட்டுத் தனது உயிரையே வழங்கும் தவத் தையும் மூதுமையையும் உடைய சாங்கியத்தாயும், என்னுடைய செல்வக் காலத்தே தானும் மனம் மகிழ்ந்துபெருக்க மடைந்தும், என்னுடைய நல்கூர்தல் உடைய அல்லற் காலத்தே தானும் அல்லலுற்று மனஞ்சுருங்கியும் நண்பனாகிய தன் கடமையை நோக்கித் தனது ஆருயிரின்பால் அன்புறுமாறு போன்று என் பாலும் அன்புகூர்ந்து நிலைகொள்ளற் கியலாத வெள்ளத்தே ஆழ்ந்த இடத்திலே உதவாநின்ற அரிய தெப்பம் போல எனது தாழ்வுக் காலத்தே என்னைத் தாங்கி உய்யக் கொண்டும் தன் தொழிலாகிய சூழ்ச்சிப் பொழுதில் மனத் தடுமாற்றமில்லாத நெஞ்சுரம் படைத்த மிக்க புகழையுடைய யூகியும்;" என்க.

(வி - ம்.) முன்னுபகாரம் என்றது முன்னொரு காலத்தே சாங்கியத் தாயைப் புலையன் மணற் குடப்பூட்டி யமுனையாற்றில் முழுகுவித்துக் கொல்லத் தொடங்கிய காலத்தே உதயணன் அவளை மீட்டு உயிர் வாழச் செய்ததனை. இந்நிகழ்ச்சியை உஞ்சைக்காண்டத்தே "சாங்கியத் தாய் உரை' என்னும் (௩௬ - ஆம்) காதையிற் காண்க. உயிர் கொடுத் தது என்றது அவளும் வாசவதத்தையோடு கோயில் வேவினுள் தீயில்

இறந்தனள், என்னும் தன்கருத்தினை என்க. தாய் - சாங்கியத் தாய். விறப்பு - மிகுதி. அஃதாவது செல்வக்காலம். வறப்பு - நல்குரவு. உறுதி - நண்பன் கடமை. அஃதாவது "உடுக்கை இழந்தவன் கை போல" நண்பனுக்குற்ற இடுக்கண் களையும் கடமை என்க. புரை : உவமையுருபு. உயிரைக் காதலிக்குமாறு போலக் காதலிக்கும் காதல் என்றவாறு. புணை - தெப்பம். தாழ்விடை - தாழ்வுற்ற காலம். உள்ள ஆற்றல் - நெஞ்சுரம். உறு - மிகுதி.

(இதுவுமது)

சரு - ருக : அள்ளல்............அரற்றவும்

(பொ - ரை.) "சேற்றில் பிறந்த செந்தாமரை மலரின் அக விதழ் போன்ற செவ்வரி பரந்து அகன்ற அழகிய மலர்ந்த நெடிய கண்களையும் ஆராய்ந்து தொடுத்த மலர் மாலையினையும் உடைய என் ஆருயிர்க் காதலியாகிய வாசவதத்தையும் ஆகிய இம் மூவரையும் இழந்து, அவரின்மையாலே யான் இவ்வுலகத்தே மக்கட்குரிய அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள் மூன்றனையும் ஒருங்கே இழந்து அரசுரிமையை மட்டும் சுமந்து கொண்டு உயிர் வாழ்ந்திருத்தலினுங் காட்டில் இறந்து படுதல் ஆற்றவும் இனிதாமன்றே!" என்று நினைந்து நினைந்து நெஞ்ச ழிந்து தனது அறிவும் அழகும் தேய்ந்தொழியுமாறு இரக்கத் தோடு அழா நிற்ப என்க.

(வி - ம்.) சாங்கியத்தாயாகிய நட்பும், யூகியாகிய அமைச்சும் இன்மையால் பொருளும் வாசவதத்தை இல்லாமையால் அறமும் இன்பமும் இல்லையாயின என்க. அள்ளல் - சேறு. அரி - செவ்வரி. மலர்கண் நெடுங்கண் என்று தனித்தனி கூட்டுக. மலர்கண் : வினைத் தொகை. தெரியலரும் அது. தேவி - வாசவதத்தை. இறைமை - அரசுரிமை. ஆழ்தல் - இறத்தல். உரமும் கவினும் என்க. இரக்கம்- அழுகை என்னும் மெய்ப்பாடு. இஃது இழவு நிலைக்களனாகப் பிறந்தது. என்னை "இளிவே இழவே அசைவே வறுமையென, விளிவில் கொள்கை அழுகை நான்கே" என்பவாகலின் (தொல்-மெய்ப்- ரு.). அரற்றவும் என்புழி உம்மை இசைநிறை.

(தோழர் உதயணனைத் தேற்றல்)

ருஉ - ருஎ : கை............இருந்துழி

(பொ - ரை.) அத்தோழர் உதயணனுடைய எல்லை கடந்த கையறவினையுடைய துன்பத்தைக் கண்டு மிகவும் பரிந்து "பெருமானே! ஊழ்வினையா லுறும் நிகழ்ச்சியினை யாவரே மாற்ற வல்லார் இனிய மொழியினையும் முக்காலமும் உணரும் அரிய வித்தையினையும் உடைய இலாமயன் என்னும் தன் முனைப்பற்ற நெஞ்சத்தையுடைய துறவோன் இருந்த காள வனமும் வெவ்விய தீக்கிரையாயிற் றென்று யாம் கேட்டிருப்பேமல்லமோ?" என்று

கூறி ஒருவாறு உதயணனை இறத்தலினின்றும் தவிர்த்துப் பாதுகாத்தலானே அவன் பின்னரும் மம்மருற்ற நெஞ்சத்தோடு சிறிது தேறி இராநின்ற பொழுது என்க.

(வி - ம்.) கைவரை - தன்வயம். கவற்சி - துன்பம். இலாமயன் என்னும் ஒருசிறந்த முனிவன் உறையுளாகிய காளவனம் தீப்பட்டொழிந்தமை இவர் கூற்றால் உணர்கின்றோம். ஆனவிநெஞ்சம் என்றது தான் என்னும் செருக்கவிந்த தூயநெஞ்சம் என்றவாறு. ஆன் - செருக்கிற்குக் காரியவாகுபெயர் என்க. அறலுறீஇ - அறலுறத்தப்பட்டு, முற்றும் தெளிவடையாமையாலே மயக்கமொடு இருந்தான் என்றவாறு.

(இசைச்சன் கூற்று)

௫௮ - ௬௬ : இசைச்சன்......... ..இல்லை

(பொ - ரை.) இசைச்சன் என்னும் பார்ப்பனத் தோழன் "எம்பெருமானே! அளியேன் கூறுமிதனைக் கேட்டருள்க !" என்று கூறுவான்—'வித்தையினாலே செய்து முடிக்கப்படாத சிறந்த செயல் யாதும் இல்லை' என்று சான்றோர் கூறுவதனைக் கல்லாத புல்லரே பொய்ச் சொல் என்று புறக்கணியா நிற்பர். அஃது அங்ஙனமாக; அளியேன் இன்னும் அச்சான்றோர் கூற்று மெய்ச் சொல் என்றே துணிந்து கூறுகிற்பேன். "பெருமானே! மாந்தர் கற்றதும் கேட்டதுமாகிய அறிவு அவர்க்கு இடையூறுற்றுழிக் கண்ணாக உதவுகின்ற மிக்க வலிமையுடைய காதல் நம்மிடத்தே மட்டும் பொய்யாகி விடும் போலும். நாம் கற்றதும் கேட்டதும் ஆகிய அறிவு இப்பொழுது இத் துயரத்தினின்றும் யாம் அகன்று உய்தற்கு வழி காட்டிற்றில்லையே! இல்லையாகவே நாம் பற்றுதற்குரிய பொருளோடு பெரிதும் பழகி அவற்றின் அழிவின்கண் அன்பு என்னும் நெருப்பிலே முழுகி இறக்கொழிவதனை நம்மைக் கடிந்து விலக்குவோருமிலர்" என்க.

(வி - ம்.) இசைச்சன் - உதயணனுடைய பார்ப்பனத்தோழன். இவன்தான் பின்னர்க் கூறவிருக்கின்ற செய்திக்கு ஆக்கமாகத் தோற்றுவாய் செய்கின்ற இம்மொழிகள் பெரிதும் இன்பம் தருதல் காண்க. இம்மொழிகள் அவன் சொல்வன்மைக்குக் கட்டியங்கூறி நிற்கின்றன.

விச்சை - வித்தை - புன்மையோர் - கல்லாக்கயவர். மாந்தர் கற்றதும் கேட்டதும் ஒற்கிடத்துக்கண்ணாக உதவும் வலியென இயைக்க. உதயணன் தனக்குற்ற இடுக்கணைத் தனது கல்வி கேள்விகளானுய அறிவாற் கடவாமையைக் குறைகூறுவான் நம்வயிற் பொய்ப்பது போலும் என்றான்; கேண்மையால்தான் அவன் என வேறாகாமல் ஒன்றுபட்டிருத்தலாலே. நின்னிடத்தே பொய்ப்பது போலும் எனக் கூறாமல் நம்வயிற் பொய்ப்பது போலும் என்று கூறுகின்ற நயம் நினைந்து நினைந்து இன்புறற்பாலது.

துன்பத்தாலே அழுதழுது சாதல் எளியோர் செயலென்பான் நாம் அற்பமழல் அழுந்தி முடிவதனைக் கடிவோரும் இல்லை என்றான். இக் கருத்தோடு,

> " அன்பினி னவலித் தாற்றா தழுவது மெளிது நங்கள்
> என்பினி னுவி நீங்க விறுவது மெளிது சேர்ந்த
> துன்பத்தாற் றுகைக்கப் பட்டார் துகைத்தவத் துன்பந் தாங்கி
> இன்பமென் றிருத்தல் போலு மரியதிவ் வுலகி லென்றான் "

எனவரும் (சீவக - கஙகஉ) திருத்தக்கதேவர் செம்மொழியும் நினைக. ஒற்கிடம் - துன்பத்தாற்றளர்ச்சியுறுமிடம், "கற்றதும் கேட்டதும் கண்ணுமாந்தர்க்கு ஒற்கிடத்துதவும் உறுவலியாவது' என்னுமிதன் கண் திருவள்ளுவனார் கருத்தோடு அவர்தம் சொல்லையும் பொன் போலப் போற்றி இப்புலவர் பெருமான் ஆளுதல் காண்க. அத்திருக் குறள்,

> " கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்
> கொற்கத்தி னூற்றாந் துணை " (குறள் - சகச)

என்பதாம்.

(இதுவுமது)

கள - எகு : இல்லை...........ஒன்றுண்டு

(பொ - ரை.) "நம்மைக் கடிவோர் யாரும் இல்லை யாத லானே யான் பின்னும் இதனைச் சொல்லுவேன். பெருமானே! முடியாத செயலேயாயிருப்பினும் அச் செயல் முடித்தற்கியன்ற துணைக் காரணமான செயலை யெல்லாம் நன்கு செய்து முடித்த பின்னர் அச்செயல் முடிவுற்றுத் திகழாத விடத்தும் அச்செயலின் பொருட்டுச் சாவுறினும் சான்றாண்மை யுடையதோர் பழி கூற மாட்டார்." என்றும், வளமிக்க படையையும், மறப்பண்பையும் உடைய பிரச்சோதன மன்னனுடைய செல்வ மகளாகிய கொல்லிப் பாவையை ஒத்த வாசவதத்தை இப் பிறப்பினின்றும் சென்று இனிதாக மறுபிறப்புப் பிறந்த விடத்தினின்றும் கழிந்து போன இப்பிறப்பின் கண் இருந்த உடம்போடும், பண் போடும் வரவழைத்துக் கொடுக்கின்ற தாழ்வில்லாத பெரிய செயலாகிய அச்சந் தரும் வித்தையொன்றுண்டு" என்க.

(விளக்கம்.) நான் கூறப்போவது முடியாக்கருமம் என்று அறிவி லார் கூறினும், நாம் அக்கருமத்தைச் செய்துபார்ப்போம். செய்யுங் காலத்தே அது நிறைவேறிப் பயன் தாராமற்போயினும் அறிஞர் நம்மைப் பழியார் என்றவாறு. மேலே அக்கருமம் இஃதென இயம்பு கின்றான். மல்லல் - வளம், மன்னவன் - பிரச்சோதனன். பாவை - வாசவதத்தை, இம்மையாக்கை என்றது வாசவதத்தை வடிவத்தை. உட்கு - அச்சம்.

இதுவுமது

எடு - அஉ : அதனை .... உரைப்ப

(பொ - ரை.) "அவ்வரிய பெரிய வித்தையினை நன்கு பயின்று நன்கு செய்து பழகியவனும் தன் கடமையை நன்கு அறிபவனும், அந்தணனும் ஆகிய முனிவன் இருந்து இனிதாக வாழ்கின்ற 'இராசகிரியம்' என்னும் ஒப்பற்ற அகன்ற நகரத்தே நாம் சென்று அம்முனிவனை அணுகி முறைப்படி வழிபாடு செய்து இறந்தொழிந்த யூகியையும், பொலிவுடைய குழையணிந்த கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையையும் மீட்டும் வர வழைத்துக் கோடலோடு, பெறுதற்கரிய அந்த வித்தையையும் நாம் அவன் பாலே கற்றுயர்வோம்," என்று ஆற்றலுடைய இம்மொழியினை அவ்விசைச்சன் செவ்வி தெரிந்து கூறு நிற்ற லாலே என்க.

(வி - ம்) நவிலுதல் செய்து பழகுதல். கடன் - தன்னை எய்திய வர்க்கு ஆவன செய்யும் கட்டுப்பாடு. பொருந்து - ஒப்பு. ஆற்றுளி-முறைப்படி. அமைச்சன்-யூகி. மாதர்-வாசவதத்தை. கற்றும்-தன்மைப் பன்மை வினை முற்று. திறல் - கேட்போரைப் பிணிக்கும் ஆற்றல். செவ்வி தெரிந்து என்க. அவன் - இசைச்சன்.

(உதயணன் கூற்றுந் தோழர் செயலும்)

அரு - அஎ : விறல்............கூற

(பொ - ரை.) இம் மொழிகளைக் கேட்டிருந்த வெல்லும் போரையுடைய உதயண மன்னன் பெரிதும் விரும்பி விரைந்து "என்னே! என்னே! இத்தகைய வித்தைகளும் உலகில் உள்ளனவோ?" என்று கூறி வியந்து வினுதலும், அவன் விரும்பிய அச்சூழ்ச்சி வழியாகவே பகுதிபட நன்கு ஆராய்ந்து "பெருமானே! உண்டு; உண்டு! இத்தகைய அரும்பெறல் விச்சைகள் பல நந்தம் முதனூலின் அகத்தே நம் சான்றோர்கள் ஓதியுணர்ந்தன உள", என்று நன்குணரும்படி கூற என்க.

(வி - ம்) விறல்-வெற்றி. விரும்புபு-விரும்பி. விதும்பி-விரைந்து. என்னே! என்றது வியப்பு மொழி. பால் - பகுதி. ஆதிவேதம்-அருக னாற் கூறப்பட்ட முதனூல்.

(இதுவுமது)

அஅ - கூச : இன்னே............வேற்றுநராகென

(பொ - ரை.) அது கேட்ட உதயணன் "அங்ஙனமாயின் இப்பொழுதே அவ்விராசகிரிய நகரத்திற்குச் செல்வோம். விரைந்து புறப்படுங்கோள்!" என்று கூறு நிற்ப, இவ்வாறு

பள்ளங் கண்டுழிப் பாயும் வெள்ளம்போன்று அவன் நெஞ்சம் விரும்பி விரையா நின்ற அவ்வுபாயத்தைத் தகவுக்கோடாகக் கொண்டு அவன் மகிழும்படி அவன் உவப்பனவற்றையெல்லாம் காட்டிக் கூட்டத்தைச் செய்கின்ற பெரிய படையினது காவலை அகற்றிவிட்டு நலமே புரிகின்ற தோழர்கள் உதயணனை அழைத்துக்கொண்டு போதற்கு ஆற்றலும், போர்க்கலையும், நுண்ணறிவும் அமைந்த ஒரு நூறு மறவர் மட்டும் எம்மைச் சூழ்ந்து உள்வரிக்கோலம் கொள்க என்று பணித்தலானே என்க.

(வி - ம்.) இன்னே - இப்பொழுதே. விரைந்து ஏகுமின் என என்று மாற்றுக. பன்னீர் என்றது-வெள்ளத்தை. அவன்-உதயணன். கணம்-கூட்டம். கூட்டமான பெரும்படையோடு செல்லின் தம்மைப் பிறர் இன்னாரென அறிவராகலின் அப்படையை நீக்கினர் என்பது கருத்து. குணம்-ஈண்டு நலத்தின் மேற்று. முற்றி-சூழ்ந்து. வேற்று நர் - உள்வரிக்கோல முடையோர் வேற்றுநராதலும், பிறர் தம்மை உணராமைக்கு என்க.

(உள்வரிக் கோலங் கோடல்)

௯௫ - ௧௦௬ : வெண்ணூல்..........அல்குலர்

(பொ - ரை.) வெள்ளிய நூலாணியன்ற அழகிய துகிலின்கண் வண்ண மூட்டி நீனிறக் கரையும் மரகத நிற வுடலும் பச்சிலைக் கரையும் பொன்னிற உடலும் பல்வேறு கோலமாகக் கொண்டு கொய்து கூட்டிப் பிடித்து உருவமைத்து ஊடே ஊடே பூங்கொடி யுருவமுண்டாக வண்ண நூற்றிரிகளைப் போக்கி ஒப்பனை செய் தமைத்த கலிங்கமாகிய ஆடைகளையுடுத்தோராய்க் கொய்து மட்டஞ் செய்த பிடரி மயிரையுடைய குதிரையிலே ஏறிச்செல் வோர் போன்று தங்கால்களிலே கைத்தொழிற்றிறங் காண்டற் கினிதாக வாரமைத்துச் செய்த தத்தம் காலுக்குப் பொருந்திய செருப்புகளை அணிந்தோராய்ச் செவ்விய பொன்னாலியன்ற குமிழமைத்த மராஅடியை அணிந்தோராய்ப் பல்வேறு மருந்து களையும் வைத்த நுண்ணிய கயிற்றாலியன்ற உறியினையுடை யோராய் யாத்திரை செல்வோர் உடுத்துக் கொள்ளும் முறைமை யாலே அகத்தே பொருந்துதலமைந்த சிலவாகிய ஆடைக் கூட்டுகளை அசைத்த அல்குலையுடையவராய் என்க.

(வி - ம்.) கட்டி - கரை; விளிம்பு. கட்டியும் அகவையும் என் றது கரையும் உடலும் என்றவாறு. அகவை-உள்ளிடம். பிண்டம் - உடல். பீதகம் - பொன். பிடித்து - உருக்கொளுவுதலும் 'திரியோட்டு தலும் நெய்தற்றொழில் வகையென்க. குதிரையிற்]செல்வோர் அணி யும் அழகான செருப்புப் போன்ற செருப்பினையுடையோராய் என்க. கொட்டைப் பந்தர் - குமிழ் வைத்த மராஅடி. மாத்திரை - மருந்து.

அல்குல் - இடை. யாத்திரை செல்வோர் இடையிலே உடுத்த ஆடையின்றிப் பிற ஆடைகளையும் ஒன்று கூட்டிச் சுற்றிக் கொள்வராகலின் உள் கூட்டு அமைந்த சில் கூட்டு அல்குலர் என்றார். கூட்டு - ஒன்று கூட்டப்பட்ட ஆடை என்க.

(இதுவுமது)

கoஎ - கக்க : இரும்பனை..........குடையினர்

(பொ - ரை.) கரிய பனையினது இளமையுடைய குருத்து விரிந்து அசையா நின்ற வெள்ளிய ஓலையின் இடையே ஈர்க்கு வைத்து நூற்புரியாலே கட்டப்பட்ட கட்டினையும், செவ்வண்ணந் தோய்த்த ஓலையாலே இயற்றிய அழகிய தாமரை மொட்டமைக்கப்பட்ட உச்சியினையும், அழகிய ஓலையிலே கொம்பரக்கு வழித்த வினைத்திறத்தையும் சித்திரச் செயலையும் திண்ணிய காலையும் உடைய அழகிய குடையினையுடையோரும்.

(வி - ம்.) இரும்பனை - கரிய பனை. இளமடல் - குருத்து. உளர் - அசைகின்ற. ஈர்க்கு வைத்து நூற் புரியாலே கட்டிய கட்டென்க. செந்தோடு - செந்நிற மூட்டிய ஓலை. மலர் - ஈண்டு மொட்டு. மலர் எனினுமாம். கால் - ஈண்டுக் குடைக் காம்பு.

(இதுவுமது)

ககஉ - கஉக : மரகத.............கையினர்

(பொ - ரை.) மரகத மணிகளிழைத்த கைப்பிடியினையும் பொன்னாலியன்ற பூண்களையும் அழகுண்டாகச் செருகப்பட்ட மயிராலாகிய கொட்டையினையும் சிவந்த தளிரையுடைய மராமரத்தினது பசிய காயை யொத்த ஒப்பனை செய்யப்பட்ட வடிவத்தினையும் கண்ணிறைந்த எழிலையுமுடைய கத்தியினையுடையோரும் எழுச்சியுடைய இலவங்கத்தின் இனிய பூவும் ஏலமும் கற்பூரமுமாகிய பளிதமும் ஆகிய இவையிற்றைக் கூட்டிச் செய்த மணமுடைய வெற்றிலையையும் பாக்கையும் நிறைத்துக் கட்டிய குற்றமற்ற அரிய மணிகள் பதித்த அடைப்பையினையுடையோரும் பட்டாலியன்ற உறையிற் செறிக்கப்பட்டனவும் புறத்தே செய்யுள் எழுதப்பட்டனவும் கட்டுதல் அமைந்தனவும் ஆகிய சுவடிகளைப் பற்றிய கையினை யுடையோரும் என்க.

(வி - ம்.) கை-கைப்பிடி. தொடி-பூண்; கொட்டை. உரோமத்தால் உருண்டை வடிவாகச் செய்து செறித்த ஓருறுப்பு என்க. கப்புரப்பளிதம் - இருபெயரொட்டு. திரை - வெற்றிலை. ஆடை : ஆகுபெயர்; ஆடை அதனாலியன்ற பைக்கும் பின்னர் அஃது அருமணி பதித்துப் பொன்னாற் செய்த அடைப்பைக்கும் ஆயிற்றென்க. சுவேகம் - உறை. சுவடி - நூல், பொத்தகம்.

(இதுவுமது)

௧௨௨ - ௧௨௭ : புரி............நீந்தி

(பொ - ரை.) பூணூல் அணிந்த பொன்மலைபோலும் அகன்ற மார்பினையுடையோரும், விரிந்த நூலின் கண்ணதாகிய கிரந்தங்களை ஓதாநின்ற நாவினையுடையோரும், மணமுடைய வெண் சந்தனமெழுதிய கழுத்தினையுடையோரும் ஆகி இவ்வாறு நாட்டி யாத்திரை செய்தற்கேற்ற ஒப்பனையோடு அவ்வுதயணன் முதலி யோர் வளம் பொருந்திய பெரிய மலையினையுடைய வன்னிலப் பரப்பாகிய 'புன்றுளகம்' என்னும் நலம்மிக்க சிறப்பமைந்த நாட்டைக் கடந்து என்க.

(வி - ம்.) புரிநூல் - முப்புரிநூல். பொன் வரை - அழகிய கோடுகளுமாம். கிரந்தம்-சுலோகம்; சாத்திரமுமாம். வெள்ளை-வெண் சந்தனம். புன்றுளகம் - ஒரு குறிஞ்சி நாடு.

(இதுவுமது)

௧௨௮ - ௧௩௮ : பைந்தொடி............பேர்வுழி

(பொ - ரை.) தீயின் மூழ்கி இறந்தொழிந்த தன் மனைவிக்குத் தான் செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடித்த கண் போன்ற சிறப்புடைய முனிவனாகிய இலாமயன் இருந்த காள வனத்தினின்றும் தோன்றாநின்ற ஞாயிற்றுத் தேவனுக்குரிய கீழ்த்திசையை நோக்கித் திருமகளை போல்வாளாகிய வாசவ தத்தையை ஆராய்ந்து காணும் ஒன்றுபட்ட கருத்தோடு சென்று "கருப்பாசம்" என்னும காட்டின் கண்ணதாகிய காட்டி யாற்றினது பெரிய வெள்ளத்தைத் தெப்பத்தின் வாயிலாய் நீந்திச் சென்று அப்பால் வெகு தொலைவு போய பின்னர் எதிர்ப் பட்ட நீண்ட கிலைமையினையுடைய நீர் நிலையாகிய மடுவினையும் இயங்காநின்ற தெப்பத்தாலேயே நீந்திக் கடந்து இவ்வாறு ஆறு செல்லும் வருத்தத்தாலே நொந்து நொந்து மெலியாநின்ற நோன்பினை மேற்கொண்ட உடம்பினையுடையராய்க் கடத்தற்கரிய பாலை நிலத்துக் கவர்த்த நெறிகளினும் காட்டினூடும் யாற்று களினும்சென்று சென்று பெரிய வெகுளியையுடைய அவ்வீரர்கள் ஒருங்கு கூடிச் செல்லும் பொழுதென்க.

(வி - ம்.) முன்பு (௫ - ௬) "இன் மொழி விச்சை இலாமயன்" என்றும், "ஆளவி நெஞ்சத்து அந்தணன் இருந்த காளவனமும் மவந் தீப்புக்கது" என்றும் அமைச்சர் வாசவதத்தை தீயிலிறந்தமைக்கு வருந்தியிருந்த உதயணனுக்கு எடுத்துக் காட்டித் தேற்றினமை கண்டாம். ஈண்டுப் பைந்தொடி அரிவைக்குப் படுகடங் கழீஇய கண்புரை அந்தணன் என்றமையாலே காளவனம் தீப்புக்குழி அந் தீயின் மாண்ட தன்மனைவிக்குக் கடங்கழித்திருந்த காளவனம என்ப

தும் பெற்றும். ஞாயிற்றுத் திசை என்றது - கீழ்த் திசையை. திருமகள் - ஈண்டு வாசவதத்தை. காப்பாசம் யாறு என்க. கானக் கான் யாறென்புழிக் கான் அடை மாத்திரையாய் நின்றது. படு - மடு.

(உதயணன் மான் முதலியவற்றைக் கண்டுழிப் புலம்பல்)

கங்க - கசங : வென்று...........கண்டு

(பொ - ரை.) பகைவரை நேர் நின்று பொருது கொன்று வெல்லும் சிறப்பினையும், யாழ்ப் புலமையையும் உடையவனாகிய உதயணமன்னன் நெறியின் கண்ணே காடு செறிந்த பக்கத்தே முறுக்கி விட்டாலொத்த கொம்பையுடைய கலைமான் தன் பக்கத்தே நின்று தன்னைப் பாதுகாவா நிற்பத் தன்னைக் கூடி நிற்கும் தனது குட்டியை அன்போடு தழுவி நின்ற மடப்பமுடைய அழகிய பிணைமானைக் கண்டு தன்னோடு அன்பாலொன்றிய தன் தேவியாகிய வாசவதத்தையை நினைவானாகி என்க.

(வி - ம்.) மருங்கில் - பக்கத்தே. திரி மருப்பு-முருக்கிவிட்டாற் போன்ற கொம்பு. இரலை-ஆண்மான். பிணை - பெண்மான். வித்தகன் பிணைமான் கண்டு தேவியை உள்குவனாகி என மாறி இயைத்துக் கொள்க. பிணைமான் தன்நோக்கத்தாலே வாசவதத்தையின் நினைவை எழுப்புதலாலே உதயணன் தேவியை உள்கினன் என்பது கருத்து. மறி - குட்டி.

(இதுவுமது)

கசங - கருக : மாதர்...........எனவும்

(பொ - ரை.) வாசவதத்தையின் கடை நீண்டு கண்டோர் நெஞ்சத்தைப் பிளக்கும் நெடிய கண்ணினது காமப் பார்வை தன் நெஞ்சத்தே தோன்றி அதனை ஈர்வது போன்று வருத்துதலானே ஒள்ளிய தீயுண்டாகப் பெருமூச்செறிந்து "நினது காதற்றுணையொடு பொருந்தி இன்பத்தாலுண்டான மகிழ்ச்சியினாலேகாட்டினூடும் செல்லாமல் அத்துணையைப்பெரிது விரும்பி விளையாடா நின்ற பிணை மடமானே! விளங்கா நின்ற தீயினுட்பட்டு இறந்தொழிந்த தேன்போன்ற இனிய மொழி பேசும் வாசவதத்தை சென்ற உலகத்தை நீ அறிவாயோ. அறிவாயாயின் எமக்குக் கூறுவாயாக! கூறுவாயாகின் யாமும் அவளிருக்கும் உலகத்தே அவளை அணுகப் போவோங் காண்" என்றும் என்க.

(வி - ம்.) உன் கணவனாகிய இரலை உன் மருங்கே நின்று உன்னைப் புறங்காத்தல் போன்று யாமும் அவள் மருங்கிருந்து அவளைப் பாதுகாத்து இன்ப மகிழ்ச்சியாலே விளையாடுவோம் என்பது கருத்து. கடை பிளவுபட்ட கண் எனினுமாம். புகன்று - விரும்பி. தேனேர் கிளவி - வாசவதத்தை.

(மயிற் பெடை)

௧௫௨ - ௧௫௬ : பணி.......... எனவும்

(பொ - ரை.) தாழ்ந்த மலைப்பக்கத்தே பாறை தோறும் பெறலரிய நீல மணி போலும் நிறமுடைய தோகையினை விரிய உளர்ந்து நினக்கு அச்சம் சிறிதும் உண்டாகாமல் நின் காதலனு கியமயிற்சேவல் நின்னைப் பாதுகாவாநிற்ப இள நடை பயிலாநின்ற பெரிய மயிற் பேடையே! சிதருகின்ற மலரணிந்த தன் கூந்தலைச் சிவந்த தீப்பற்றிக் கொள்ளலாலே மயங்கி, இறந்துபட்ட என் ஆருயிர்க் காதலியாகிய கொடியிடை வாசவதத்தை நல்லாள் இம்மை மாறி மறுமையிற் பிறந்துள்ள இடத்தை நின் கூர்த்த அறிவால் ஆராய்ந்து கண்டு எனக்குக் கூறுவாயாயின் அச் செயல் நினக்கு நல்லறமேயாதலன்றிக் குற்றமாதலுண்டோ காண்? என்க.

(வி - ம்.) நின்னை நின் சேவல் காத்தல் போன்று யான் என் காதலியைக் காவாதொழிந்தேனே! என்று கழிவிரக்கங் கொள்வான், போத்து அச்சங்காப்ப நடை கற்கும் பேடாய்! என்று விளித்தான். பணிவரை - தாழ் வரை. மணி - நீலமணி - அரும் பெறல் மணி என மாற்றுக. அரும் பெறற் போத்தெனினும் ஆம். மத - இளமை. மயர் வனள் - மயங்கி; முற்றெச்சம். விளிந்த - இறந்த. வஞ்சி மருங்குல் - வாசவதத்தை. மதி - கூர்த்த அறிவு என்பது படநின்றது. குற்றம் உண்டோ என்பது - அறமாதலன்றிக் குற்றம் ஆதலும் உண்டோ என்பது படநின்றது.

(ஆண் புறா)

௧௬0 - ௧௬௮ : வெஞ்சுரம்...........எனவும்

(பொ - ரை.) வெவ்விய பாலைவழியிலே செல்லுபவர் தாம் மேற்கொண்ட செயலைச் செய்தற்கு அஞ்சி மீள நினையும்படி 'பஞ்சுரம்' என்னும் இரக்கந் தோற்றுவிக்கும் பாலைப் பண்ணினது இசையுண்டாகப் 'பை' என்று கூவாநின்ற வெள்ளிய சிறகுகளையும் சிவந்த கால்களையும் நுண்ணிய புள்ளிகளையும் உடைய புறவே! புறவே! நுண்ணிய சிறிய இடையினையும், ஐம்பொறி களானும் நுகர்தற்கினிய மென்மையினையும் உடையவளும், பொற் சரட்டில் கோத்த வட்டமாகிய பொற்காசுகளையுடைய பலவாகிய கோவையினை யுடைய அல்குலினையும் உடையவளும் ஆகிய என்காதலி வாசவதத்தை நல்லாள் மாறிப்பிறந்திருக்குமிடத்தை இப்பொழுது யான் அறிவேனாயின் என் ஆசை தீரும்படி அவ் விடத்தை யான் அடைவேன் காண்! அவளிருக்குமிடத்தை யறியாத யான் அறியும்படி நீ எனக்குக் கூறுக! கூறுவாயின் நீ நின் காதலியாகிய பெடைப் புறவோடு புணர்ந்தின்புறுதலை

விரும்புதல் பெரிதும் தீயதொரு வினையே யாகுங்காண்! ஆகவே கூறிவிடு! என்றும் என்க.

(வி - ம்.) வினை - தாம் மேற்கொண்ட பொருளீட்டல் முதலிய தொழில். பஞ்சுரம் - ஒரு பாலைப்பண். இப்பண் கேட்டோர் நெஞ்சத்தே இரங்கல் என்னும் மெய்ப்பாட்டைத் தோற்றுவிக்குமாதலின் அது கேட்போர் துணி விழந்து அஞ்சா நிற்பர் என்றவாறு. "வெண் ணிறச் செங்கா லுண்பொறிப் புறவு" என்னும் சொல்லோவியம் ஆற்றவும் இனிதாதலுணர்க. ஈண்டுப் பொற் சரடு என்க. பாசம் - கயிறு ; பாண்டில் - வட்டக்காசு. யான் காதலியை யிழந்து கையறவு கோடலைக் கண்டுவைத்தும் என் துயர் தீர்க்க முயலாமல் நீ காதலின்பம் நுகர்வது தீவினை என்பான், பெடையொடு புணர்வு விரும்பல் பொல்லாதென்றான்.

(வண்டு)

கசுகூ - களச : பசைந்துழி............வண்டே

(பொ - ரை.) தாம் அன்பு கொண்டவிடத்தே கடைபோகப் பழகுதலைத் தவிர்ந்து பின்னரும் தம் மனம் விரும்பிய விடங் களிலே தவிராமல் ஓடுதலையே விரும்பா நின்ற இளமையுடைய காமுகக் கயவர் போன்று, நின்னைக் கண்டு கட்டவிழ்ந்து மலரா நிற்றலாலே நீ விரும்பித் தேன் பருகுகின்ற மலரை வெறுத்துப் பின்னும் புதிய தேன் பருகுதலையே விரும்பிக் கரிய காட்டினூடே ஆரவாரித்துத் திரியா நின்ற அகத்தே சிறகுடைய ஆறு கால்களையுடைய சிவந்த புள்ளிகளையுடைய வண்டே! வண்டே! என்க.

(வி - ம்.) பசைந்துழி - அன்புள்ளவிடத்தே. பழகாதென்றது கடைபோகப் பழகாமல் என்றவாறு. தளை - கட்டு. தாது - தேன். புனம் - காடு.

(இதுவுமது)

களகூ - கஅரு : எரி............இரங்கியும்

(பொ - ரை.) தீயினுட்பட்டு இறந்துபட்ட என் காதலி யாகிய வரிவரியாக அணியப்பட்ட வளையல்களையும், மூங்கில் போன்ற தோள்களையும், பெரிய இதழையுடைய மலர் மாலை யினையும் உடைய வாசவதத்தை இருக்குமிடத்தை நீ அறிவா யெனின், என்னை என் கவலை வகைகளி னின்றும் அகற்றி என் துயரத்தைத் தீர்க்கவும், நீதானும் அவளுடைய பெறுதற்கரிய மாலையின்கண் மலரிடத்தே தேனுண்டு அவளுடைய அவிழ்ந்த கூந்தலினூடே மனம் மகிழ்தற்குக் காரணமான இனிய துயிலைப் பெற்று நினது துன்பங்களும் தீரவும், மேலும், யானும் அவளுடைய அழகிய இளமுலையினைத் தழுவி இன்புறு நிற்பவும்

என்னை அவ்விடத்தே அழைத்துப் போய் அவளைக் காட்டுக! அங்ஙனம் காட்டுவா யாயின் அவ்வுதவிக்கு அளியேன் நினக்குச் செய்யவேண்டிய கைம்மாறுக்கு இவ்வளவு என்னும் ஓர் எல்லை கூறவும் இயலுமோ? என்று இரங்கியும் என்க.

(வி - ம்.) எரி - தீ. கோதை - வாசவதத்தை. கவற்சி-கவலை; களைஇயர் - களைய. அவள் கோதைத் தாதுண்டு கூந்தலுள் துயில் எய்தி எவ்வந்தீர என்க. "காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப் பெரிது," எனவும, (குறள் க0உ) "பயன்றூக் கார் செய்த வுதவி நயன்றூக்கி, னன்மை கடலிற் பெரிது" எனவும் (குறள் - க0ங) சான்றோர் ஓதுபவாகலின் "காட்டுதியாயிற் கைம் மா றித்துணை என்பது ஒன்றில்" என்றான்.

என் கவற்சி வகையிற் களையவும் நீ எவ்வந்தீரவும் யானும் பொருந்தவும் காட்டுதி என உம்மை விரித்து இயைத்துக் கொள்க.

(தென்றல்)

கஅச - கசுகூ : பொங்கு..........தென்றல்

(பொ - ரை.) மிக்க முகில்கள் தவழாநின்ற பொதிய மாமலை யினது உச்சியிலமைந்த சந்தனமரச் சோலை தோறும் முற்படப் புகுந்து ஆங்கே உலாவிப் பின்னர், நீரூற்றுக்கள் பெருகுகின்ற நீரடைகரைகள் தோறும் உள்ள நாள் மலர்களை அசைத்து, அவற்றின் நறுமணத்தையும் முகந்து கொண்டு, மராமரத்தின் வெளிய மலர்களை மோதி அலைத்து வண்டுகள் தேன் பருகுமாறு மலர்வித்தும், நீலமணிபோன்ற நிறமமைந்த வாயையுடைய அழகிய கருங் குவளையினது மொட்டுக்களை மலர்வித்தும், ஒளி யுடைய அழகிய காந்தண் மொட்டுக்களை அலைத்தும், சந்தன மரத்தினது அழகிய குளிர்ந்த நறிய மலர்கள் விரியும்படி மலர் வித்தும், இவையிற்றின் மணமெலாம் அளாவிக் கொண்டு, மேலும், நறிய கூதாளத்தினது நாள்மலர் மணத்தையும் அளாவிக்கொண்டு, குறிய தாளையுடைய குராமரத்தினது குவிந்த அரும்புகளை அலைத்தும், முல்லைமலரினது அகத்தே யுள்ள மணத்தையும் தேனையும் உண்டு, பல பிடாமரத்தினது குளிர்ந்த மலர்களையும் அணுகிப், பொன் மாலைபோன்று மலர் கின்ற கொன்றையினது நல்ல பூந்துகளையும் விரும்பிச் சேர்த்துக் கொண்டு, இவ்வாற்றான் நறுமணச் சாந்தியற்றும் தொழிலுடை யோன் பல்வேறு மணப் பொருள்களையும் ஒருங்கே சேர்த்துச் செய்யும் செயலாலே அமைக்கப்பட்ட பலவாகிய உறுப்புக்களை யும் தன்னுள்ளே அடக்கிக்கொண்டுள்ள பையினது உள்ளிடம் போலப் பல வேறு மணமும் ஒருங்கே கமழா நிற்ப, இரவு வருவ தற்குக் காரணமான மாலைக் காலத்தே இமயமாகிய உயர்ந்த

மலையிலே சென்று தங்குதற்கெழுந்த அழகிய குளிர்ந்த தென்றலே! தென்றலே! கேள், என்க.

(வி - ம்.) தலைச்சென்றுடி - முற்படச் சென்றுலாவி. அசும்பு - நீரூற்று. பசுந்தோடு - புதுப்பூ. உளரி - அசைத்து. சுள்ளி - மராமரம். சுரும்பு - வண்டு, முகை - அரும்பு. உள்ளமிழ்து - அகத்துள்ள மணமும் தேனும். சாத்துவினை - நறுமணச் சாந்து இயற்றும் தொழில். பையகம் போலக் கமழவென்க. எல் - இரவு. அல்குதல் - தங்குதல். தென்றல் : விளி.

(இதுவுமது)

உ00 - உக0 : செவ்வழி..........மன்னனை

(பொ-ரை.) செவ்வழி என்னும் பண்ணினது இனிய இசைத் தொடை சிதைந்தவற்றை ஒத்த இனிமையுடைய சொற்களையுடைய என் ஆருயிர்க் காதலியாகிய ஒளி வளையணிந்த தோளையுடைய வாசவதத்தையை, நீ செல்லும் எல்லா வழிகளிடத்தும் குறிக்கொண்டு ஆராய்ந்து சென்று அவளைக் கண்டு, அவளுடைய பெரிய இளமையுடைய அழகிய முலைகளிடத்தே அணியப்பட்ட குழம்பாகிய சாந்தின் கண்ணே நீ நன்றாக முழுகி விளையாடி, அந்த நறுமணத்தோடே மீண்டும் என்பால் வந்து, அவலமுடைய என்னெஞ்சத்தின் வருத்தமாகிய நோய் தீரும்படி என் மயக்கத்தை மாற்றுவாயாயின் பண்டும் நின்பால் உயர்வாக மதிக்கப்படும் உன்னுடைய இயற்கைப் பண்பாகிய அருளுடைமை சிறப்பதே யன்றி ஒழிதலும் உண்டோ? என்னும், இவற்றையும் இவைபோல்வன பிறவற்றையும் கூறி அக் கூற்றுக்களைக் கேட்டு அவன் நிலைமையையும் கண்ட தோழர்கள் அறிவு கலங்கி மயங்கும்படி தீதில்லாத தன் தேவியாகிய வாசவதத்தையை நினைந்து துயரம் ஆற்றாமல் அவளது சாக்காட்டைக் கருதித் துயரத்தே மிக்குச் செல்கின்ற அவ்வுதயணனை என்க.

(வி - ம்.) செவ்வழி - ஒருவகைப் பண். அயா நோய் - வருத்தமாகிய நோய். மயர்வு- மயக்கம். இறுதி - வாசவதத்தையின் சாக்காடு. மன்னன் - உதயணன்.

(உதயணன் முதலியோர் மகதநாட்டின் எல்லையை அடைதல்)

உகக - ககூ : உறுதி...........கொண்டேன்

(பொ - ரை.) உருமண்ணுவா முதலிய தோழர்கள் பல்வேறு உறுதி மொழிகளைக் கூறிக் கூறி மயக்கொழித்துத் தெளிவிப்போராய்ப் பலவேறுவகை உள் வரிக்கோலமுடைய தோழர் வடிவத்தோடே ஓரிடத்திற் போலப் பிறவிடத்தும் பழகாமல் பெருந்தகைமையுடைய அவ்வுதயண மன்னனை அழைத்துக்

கொண்டு சென்று செல்வமிக்க மகத நாட்டின் எல்லையை அடைந்து அவ்வெல்லையினின்றும் அகத்தே செல்லாநின்ற பெருவழி வாயிலாய் அந்நாட்டினுட் புகுவாராயினர் என்க.

(வி - ம்.) உறுதி மொழி - வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் மொழிகள். படிவவேடம் - உள் வரிக்கோலம். உருவு கரந்து - தம்முண்மை வடிவத்தை மறைத்துக் கொண்டு. ஒரு வழிப் பழகல் செல்லாதென்றது, ஓரிடத்திற்போல எவ்விடத்தும் பழகாமல் என்றவாறு. பெருவழி - பெருஞ்சாலை. பெருந்தகை - உதயண மன்னன்.

க - யாத்திரை போகியது முற்றிற்று

உ. மகத நாடு புக்கது

இதன்கண் : உருமண்ணுவா முதலியோர் வளமிக்க மகத நாட்டினூடே சென்றதும், அந்நாட்டு வளமும் அருவிச் சிறப்பும் பிறவும் விரிவாகக் கூறப்படும்.

பெருவழி முன்னிப் பெருந்தகை வேந்தனை
உருமண் ணுவாவும் வயந்தக குமரனும்
அருமறை நாவி னந்த ணாளன்
மயக்கமில் கேள்வி யிசைச்சனு மென்றிக்
கடனறி தோழர் காவல் போற்றி
மடநடை மாதர் மாறிப் பிறந்துழி
மீட்கும் வேட்கையொடு சேட்புலம் போகி
விரிகதிர்த் திங்கள் வெண்குடை யாக
ஒருவயிற் கவித்த லுற்ற வேந்தற்
கருமை யமைச்சர் பெருமலை யேறிக்
கொண்டியாந் தருதுங் கண்டனை தெளிகென
கண்புணத் தெளித்த நாடகம் போலப்
படைச்சோற் பாசத் தொடக்குள் ளுறீஇக்
கலாவேற் குருசில் விலாவணை யோம்பி
வயல்கோள் வினைஞர் கம்பலை வேரீஇக்
கயமூழ் கெருமை கழைவளர் கரும்பின்
விண்ட விளமடன் முருக்கித் தண்டாது
தோகைச் செந்நெல் சவட்டிப் பாசிலை
ஒண்கேழ்த் தாமரை யுழக்கி வண்டுகள்
ஆம்ப லகலிலை முருக்கிக் கூம்பற்
குவளைப் பன்மலர் குழைத்துத் தவளைத்
தண்டுறை கலங்கப் போகி வண்டினம்
பாட லோவாப் பழனப் படப்பைக்
கூடுகுலைக் கமுகின் கொழுநிழ லசைந்து
மன்றயற் பரக்கு மருதந் தழீஇக்
குன்றயற் பரந்த குளிர்கோ ளருவி
மறுவின் மானவர் மலிந்த மூதூர்

வேறிது சேறல் விழுப்ப மன்றெனக்
கான வாழைத் தேனுறு கனியும்
அள்ளிலைப் பலவின் முள்ளுடை யமிர்தமும்
திரடாண் மாஅத்துத் தேம்படு கனியும்
வரைதாழ் தேனோ டுகாய்விரை சூழ்ந்து
மணியு முத்து மணிபெற வரன்றிப்
பணிவில் பாக்கம் பயங்கொண்டு கவரா
நிறைந்துவந் திழிதரு நீங்காச் செல்வமொடு
சிறந்த சீர்த்திக் குறிஞ்சி கோலிக்
கல்லென் சும்மையொடு கார்தலை மணந்த
முல்லை முதுதிணைச் செல்வ மெய்திப்
பாலையு நெய்தலும் வேலி யாகக்
கோல மெய்திக் குறையா வுணவொடு
துறக்கம் புரியுந் தோல்லையி னியன்றது
பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது
சிறப்பிடை யறுத தேசிக முடையது
மறப்பெருந் தகையது மாற்றோ ரில்லது
விறற்புக முடையது வீரிய மமைந்த
துலகிற் கெல்லாந் திலகம் போல்வ
தலகை வேந்த னாணை கேட்ப
தரம்பு மல்லலுங் கரம்பு மில்லது
செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது
நல்குர வாளரை நாடினு மில்லது
நன்பெரும் புலவர் பண்புளி பன்னிய
புகழ்ச்சி முற்று மகிழ்ச்சியின் மலிந்த
தின்னவை பிறவு மெண்ணுவரம் பிகந்த
மன்பெருஞ் சிறப்பின் மகதநன் னாடு
சென்றுசார்ந் தனராற் செம்மலோ டொருங்கென்.

உரை

2. மகத நாடு புக்கது

அஃதாவது, உருமண்ணுவா முதலியோர் உதயணனோடு மகத நாட்டினூடே சென்றதனைக் கூறும்பகுதி என்றவாறு.

(தோழர் செயல்)

க - எ : பெருவழி.........போகி

(பொ - ரை.) இவ்வாறு மகதநாட்டினகத்தே செல்லுமொரு பெரிய வழிமேற்கொண்டு பெருந்தகைமையுடைய வேந்தனாகிய உதயணனை அவனுடைய அமைச்சரும் தத்தம் கடமைகளை நன்குணர்ந்த தோழருமாகிய உருமண்ணுவாவும் வயந்தககுமரனும் அரிய மறைபயின்ற செங்காவினையுடைய அந்தணனும் மயக்கமற்ற நூற்கேள்வியையுடையவனும் ஆகிய இசைச்சனும் காவற்றொழிலை மேற்கொண்டு, மடப்பமமைந்த நடையையுடைய வாசவதத்தை நல்லாள் மாறிப் பிறந்திருக்குமிடத்தைக் கண்டு அவளைத் தம்மோடு மீட்டுக் கொணரும் விருப்பத்தோடே மிகத் தொலைவிலுள்ள நாட்டிற் சென்று,

(வி - ம்.) வேந்தன் - உதயணன். இசைச்சன் - பார்ப்பனத் தோழன். கடன் - தத்தமக்குரிய கடமை. மாதர் - வாசவதத்தை. சேட்புலம் - தொலைவிலுள்ள நாடு.

(இதுவுமது)

அ - கச : விரி...........ஓம்பி

(பொ - ரை.) விரிந்த ஒளியையுடைய நிறைநாட்டிங்கள் மண்டிலத்தைத் தனக்கு வெண்கொற்றக் குடையாக்கித் தன் அரசுகட்டிலின்மேல் மட்டும் கவித்து வைத்துக் கோடற்கு வருந்திய பேதையாகிய வேந்தன் ஒருவனுக்கு அவனுடைய அருமதி அமைச்சர் "வேந்தே! யாங்கள் இமயமலையினுச்சியிலேறி அத்திங்கள் மண்டிலத்தைக் கைப்பற்றிக் கொணர்ந்து நினக்குத் தருவேங் காண்! தெளிவாயாக!" என்று தங்கள் நட்பின் சிறப்பினை அம்மன்னன் சுவைத்து மகிழும்படி தேற்றியதொரு நாடக நிகழ்ச்சிபோலவே இத்தோழரும் தங்கள் படைத்து மொழியாகிய கயிற்றாலே போரிற்சிறந்த வெற்றி வேலையுடைய அவ்வுதயணனைக் கட்டித் தம் வழிப்படுத்து அவனது அழுகையை அகற்றிப் பாதுகாத்து என்க.

(வி - ம்.) திங்களைக் குடையாக்கிக் கொள்ள விரும்பிய அரசனுக்கு அவனமைச்சர் யாங்கள் மலையேறி அதனைக் கைப்பற்றி வருகி

ரேும், வருந்தற்க என்று நடித்த நாடகம் இறந்த வாசவதத்தையை மீண்டும் மனைவியாக்கிக் கொள்ள விரும்பி வருந்தும் உதயணனுக்கு அவளை மீட்டுத் தருவதாக அழைத்தேகும் அமைச்சருடைய நாடகத்திற்குவமை என்க; இவ்வுவமையும் ஓர் அழகிய படைத்து மொழியே போலும் : ஒரோ வழி ஆசிரியர் காலத்தே இங்ஙனம் ஒரு கதையையுடைய நாடகம் நடிக்கப்பட்டிருத்தலும் கூடும் என்க.

நட்புண - தம் நட்பை விரும்புமாறு. படைச் சொல் - படைத்து மொழி. கலாவேல் - போரிற் சிறந்த வேல். விலாவணை - அழுகை.

(மருத நிலத்தின் மாண்பு)

கு-உரு : வயல்...........தழீஇக்

(பொ - ரை.) குளத்துநீரிலே மூழ்கிக் கிடக்கும் எருமைகள் வயலிலே தொழில் கொண்ட உழவர் ஆரவாரத்திற்கு அஞ்சிக் கோலாக வளர்கின்ற கரும்பின்கண் தோன்றிய இளமடல்களை முருக்கியும், அமையாமல் தோகையையுடைய செந்நெற் பயிரையழித்தும், பசிய இலைகளையுடைய ஒளியும் நிறமு மமைந்த தாமரை மலர்களை உழக்கியும், வண்டுகள் உகளாநின்ற ஆம்பலினது அகன்ற இலைகளை அழித்தும், கூம்பிய குவளையினது பலவாகிய மலர்களைக் குழையச் செய்தும், தவளைகளும் தண்ணிய துறையினீரும் ஒரு சேரக் கலங்கும்படி பாய்ந்து சென்று கரையேறி, வண்டினம் இசைபாடுதல் ஒழியாத பழனத்திலுள்ள தோட்டத்தின்கண் ஒருங்கே கூடிக்கிடக்கும் குலைகளையுடைய கமுகின் கொழுவிய நிழலிலே கிடந்து இளைப்பாறிப் பின்னர்த் தம் தொழுவங்களின் பக்கத்தே பரவிச் செல்லுதற் கிடனுன வளமிக்க மருத நிலத்தாற் றழுவப்பட்டு என்க.

(வி - ம்.) எருமை வெரீஇ முருக்கிச் சவட்டி உழக்கி முருக்கிக் குழைத்துக் கலங்கிப்போகி அசைந்து பரக்கும் மருதம் என்க. இவ் வெருமையின் செயலாலேயே இப்புலவர் பெருமான் வளமிக்க மருத நிலப் பரப்பொன்றினைப் படைத்துத் தருதலுணர்க.

வயல் கொள் வினைஞர் - உழவர். கம்பலை - ஆரவாரம். விண்ட - தோன்றிய. முருக்கி, சவட்டி, குழைத்து என்பன அழித்தென்னும் ஒரு பொருளன. தவளையையுடைய தண்டுறையில் தவளையும் நீரும் கலங்கப் போகி என்க. பழனம் - ஊர்ப் பொது நிலம். படப்பை - தோட்டம். கூடு குலை : வினைத்தொகை. அசைந்து - இளைப்பாறி. மன்று - தொழுவம் ; ஊர் மன்றமுமாம்.

(அருவி)

உசா - ௩௫ : குன்று...........செல்வமொடு

(பொ - ரை.) மலைகளின் பக்கத்தே பரவி வீழாநின்ற குளிர்ச்சியுடைய அருவிகள், ஆற்றமமற்ற சான்றோராகிய மக்கள்

மிக்க பழைதாகிய ஊரின்கண்ணே செல்வோம் அவர்க் காங் கையுறையோடு செல்வதல்லது வறிதே செல்லுதல் சிறப்பாகாது என்று கருதிக்காட்டுவாழையினது தேனொழுகக் கனிந்தகனிகளை யும், பெரிய இலைகளையுடைய பலாமரத்தினது முள்ளுடைய அமிழ் தனைய கனிகளையும், திரண்ட அடியையுடைய மாமரத்தினது இனிமைமிக்க கனிகளையும், மலையிலே தூங்காநின்ற தேனிறாலை யும் சுமந்துகொண்டு, மேலும்உகாய் மரத்தின் நறுமணத்தையும் அளாவிக்கொண்டு, மாணிக்கம் முத்து முதலிய மணிகளையும் அழகுற வரன்றிக் கவர்ந்துகொண்டு, தாழ்வில்லாத பாக்கங் களிலே இப்பயன்றரு பொருள்களைக் கொண்டு நிறைந்து வந்து பாயா நின்ற நீங்குதலில்லாத செல்வங்களோடே என்க.

(வி - ம்.) மானவர் - மக்கள். வெறிது - வெறுங்கையோடு. விழுப்பம் - சிறப்பு. வாழை, மா, பலா என்னும் முக்கனியையும் கூறி யது காண்க. முள்ளுடையமிர்தம் - பலாக்கனி. உகாய் - ஒரு நறுமண முடைய மரம். விரை - மணம். பணி - தாழ்வு. பயங்கவரா, கொண்டு இழிதரும் என்க. கவரா - கவர்ந்து.

மகதநாட்டின் சிறப்பு

௩௬ - ௪௫ : சிறந்த...........அமைந்தது

(பொ - ரை.) சிறந்த பெரும் புகழையுடைய குறிஞ்சி வளத் தையும் அங்கிலத்திலே கால்கொண்டு சூழப்பட்டுக் கல்லென் னும் ஆரவாரத்தோடு முகில் சென்று பெயலை மேற்கொண்ட முல்லையாகிய பழைய நிலத்திலுண்டாகிய வளங்களையும் பெற்று ஒருபால் பாலை நிலத்தையும் மற்றொருபால் கடலும் கடல் சார்ந்த நிலமும் ஆகிய நெய்தலையும் தனக்குப் பாதுகாவலாகும் வேலி யாகப் பெற்று ஐந்திணையழகும் பெற்று என்றும் குறையாத உணவுப்பொருட் பெருக்கத்தோடு துறக்கத்தே வாழும் தேவரும் விரும்புமாறு மிகப் பழங்காலத்தேயேதோன்றியதும், அன்றியும் பிறப்பின்றுன்பத்தை தெளிந்துணரும் பேரறிவோடுதோன்றிப் பிறப்பறுதற் குக் காரணமான துறவறநெறியிலே நிற்கும் பெரியோர் பலரும் பிறத்தற்கிடனானதும், இடையறவில்லாதபுகழையும் ஒளியையும் உடையதும், மறப்பண்புடைமையிற் பெருந்தகைமையுடையதும், எஞ்ஞான்றும் தன்னை வென்றடிப்படுத்தும் பகைவரை இல்லாத தும், பிறநாட்டை வெற்றிகொண்டமையாலே எக்காலத்தும் புகழுடையதும் அதற்கேற்ற மறப்பண்பமைந்ததும் என்க.

(வி - ம்.) சீர்த்தி - மிகுபுகழ். கம்மை - ஆரவாரம். முதுதிணை - பழைமையான நிலம். துறக்கம்-தேவர். தொல்லை - பழைமை. பெரி யோர் கண்டுத் துறவோர். தேசிகம் - ஒளியுடைமை. மறப்பெருந் தகை. மாசில்லாத வீரப்பண்பு. மாற்றோர் - பகைவர். விறல் - வெற்றி. வீரியம் - ஆண்மைத் தன்மை.

இதுவுமது

௪௬-௫௫ : உலகிற்கு..........ஒருங்கென்

(பொ - ரை.) நிலமகளுக்கிட்ட திலகம் போன்றதும், ஏனைய மன்னர்க்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்த சிறந்த முடிமன்னனுடைய ஆணையினடங்கி ஒழுகுவதும், வேந்தனுக்கும் கொல் குறும்பில்லாததும், களம்பு நிலமற்றதும், செல்வப் பெருக்குடைய பெருங்குடி மக்களாலே சிறப்புற்று அழகுடையதும், அந்நாடு முழுதும் தேடிப்பார்த்தாலும் வறியோர் ஒருவரையேனும் காண்டற்கியலாததும், நல்லிசைப் பெரும்புலவர்கள் தமக்குரிய பண்போடு புனைந்த புகழ்ச்சி முடிவுறாததும், மகிழ்ச்சியின் பிறநாட்டினும் மிக்கதும் இன்னோரன்ன நல்ல நாட்டிற்குரிய ஏனை நலங்களானும் அளவுபடாது நிலைபெற்ற சிறப்பினையுடையதும் ஆகிய மகதம் என்னும் நல்ல நாட்டினை அவ்வுருமண்ணுவா முதலியோர் செம்மலாகிய உதயணனை அழைத்துக்கொண்டு எய்தா நின்றனர் என்க.

(வி - ம்.) "நிலமகண் முகமோ திலகமோ ?" எனக் கம்ப நாடரும் கூறுதல் காண்க. அலகை - எடுத்துக் காட்டு. அரம்பு - கொல் குறும்பு, களம்பு - பாழ் நிலம். புலவர் பன்னிப் பன்னிப் புகழ்ந்தும் புகழ்தல் முற்றுப் பெறாதது என்றவாறு. செம்மல் - தலைவன், உதயணன்.

௨. மகத நாடு புக்கது முற்றிற்று.

ரு. இராசகிரியம் புக்கது

இதன்கண்: மகதநாட்டு ஊர்ச் சிறப்பும், அவ்விராசகிரிய நகரத்தின் மதிற்சிறப்பும், படைச்சேரி, பரத்தையர் தெரு, வேளாளர் தெரு, வாணிகர் தெரு, அந்தணர் தெரு, அமைச்சர் தெரு, அரண்மனை முதலியவற்றின் சிறப்பும் உதயணன் முதலியோர் அந்நகரத்தே புக்கதும் பிறவும் கூறப்படும்.

மன்பெருஞ் சிறப்பின் மகதநன் னாடு
சென்று சார்ந்தபின் வென்றியிற் பெருகி
யாறுங் குளனும் வாய்மணந் தோடித்
தண்டலை தோறுந் தலைபரந் தூட்டி
வண்டிமிர் பொய்கையும் வாவியுங் கயமும்
கேணியுங் கிணறு நீணிலைப் படுவும்
நறுமலர் கஞலி யுறநிமிர்ந் தொழுகிச்
சாலி கவினிய கோலச் செறுவிற்
செல்வங் கொடுத்து நல்குத லறாஅ
இன்பங் கெழீஇய மன்பெருஞ் சிறப்பிற்
பல்குடித் தொல்லூர் புல்லுபு சூழ
உயர்மிசை யுலகி னுருகெழு பன்மீன்
அகவயிற் பொலிந்துத னலங்குகதிர் பரப்பி
நிலப்புடை நிவத்தரு நிறைமதி போலக்
காட்சி யியைந்த மாட்சித் தாகிச்
சித்திரக் கைவினை செறிந்த கோலத்துப்
பத்திரப் பாம்புரி யத்தகக் கலாஅய்
முற்பட வளைஇய பொற்படைப் படுகாற்
கண்டவர் நடுக்குங் குண்டகழ்ப் பைந்துகில்
தண்டாச் செல்வமொடு தனக்கணி யாக
உடுத்துவீற் றிருந்த வடுத்தீ ரல்குல்
மாற்றோர் நுகரப் படாஅ தேற்ற
பன்மணி பயின்ற வொண்முகட் டுச்சி
நலத்தகு ஞாயி லிலக்கண விளமுலைப்
பொறிநிலை யமைந்த போர்ப்பெருங் கதவிற்
செறிநிலை யமைந்த சித்திரப் புதவின்

யாப்புற வமைத்த வாய்ப்புடைப் பணதி
வல்லோர் வகுத்த செல்வக் கூட்டத்
தாய்நலக் கம்மத் தழகொடு புணர்ந்து
தீயழற் செல்வன் செலவுமிசை தவிர்க்கும்
வாயின் மாடத் தாய்நல வணிமுகத்
தோர்ண்பொற் சத்தித் திண்கொடி சேர்ந்து
விண்ணிற் செல்லும் விளங்கொளி யவர்களை
மண்ணிற் செல்வங் காணிய வல்விரைந்
தடைதர்மி னென்னு மவாவின போல
வடிபட வியங்கும் வண்ணக் கதலிகைக்
கூந்த லணிந்த வேந்துநுதற் சென்னிக்
கடியெயின் முதுமகள் காவ லாக
நெடுநீர்ப் பேரியாறு நிறைந்துவிலங் கறுத்துப்
பல்வழிக் கூடிய படிய வாகிச்
செல்வழி யெல்லாஞ் சிறந்த கம்பலை
கரைபொரு துலாவுந் திரையொலி கடுப்ப
நிறைவளங் கவினிய மறுகிரு பக்கமும்
அந்தி வானத் தகடுமுறை யிருந்த
ஒண்கே ழுடுவி னொளிபெறப் பொலிந்து
கண்ணுற நிவந்த பண்ணமை படுகாற்
கைவினை நுனித்த மைதவழ் மாடத்
தரும்படைச் செல்வ ரமர்ந்தினி துறையும்
பெரும்படைச் சேரி திருந்தணி யெய்திக்
கைபுனை வனப்பினோர் பொய்கை யாக
வானுதன் மகளிரு மைந்தரு மயங்கிக்
காம மென்னு மேமப் பெருங்கடற்
படுதிரைப் பரப்பிற் குடைவன ராடி
அணிதவும் புனைதவு முனிவில ராகிக்
காத லுள்ளமொடு கலந்துண் டாடுநர்
போகச் சேரி புறவித ழாகச்
சால்பெனக் கிடந்த கோலப் பெருநகம்
பொறைக்கழி கோத்துப் பூண்டன ராகி
மறத்துறைப் பேரியாற்று மறுகரை போகி
அறத்துறைப் பண்டி யசைவிலர் வாங்கி

உயர்பெருங் கொற்றவ னுவப்பினுங் காயினும்
தவிர்க்கவும் போக்கவும் படாத தன்மையர்
நன்புலந் தழீஇய மன்பெருஞ் செய்கைக்
காரணக் கிளவிப் பூரண நோக்கிற்
பெருங்கடி யாள ரருங்கடிச் சேரி
புறவிதழ் மருங்கிற் புல்லித ழாக
மதியுறழ் சங்கின் வாய்வயிற் போந்த
நிதியம் பெற்ற நீர்மையர் போல
அதிரா வியற்கை யங்கண் ஞாலத்துக்
குதிரை மருப்புங் கொளற்கரி தாகிய
அழலுமிழ் நாக நிழலுமிழ் மணியும்
சிங்கப் பாலுந் தெண்டிரைப் பௌவத்து
மூவா வமரர் முயன்றுடன் கொண்ட
வீயா வமுதமும் வேண்டிற் போய்த்தரும்
அரும்பெறற் பண்ட மொருங்ககத் தடக்கி
விட்டன ரிருவா முட்டில் செல்வத்துப்
பல்விலை வாணிகர் நல்விலைச் சேரி
புல்லிதழ் பொருந்திய நல்லித ழாக
மேன்முறை யியன்ற நான்மறைப் பெருங்கடல்
வண்டுறை யெல்லை கணடுகரை போகிப்
புறப்பொரு ளெல்லா வறப்பொரு ளுவின்
ஒளிகண் கூடிய நளிமதி போல
ஒத்தொடு புணர்ந்த காப்புடை யொழுக்கின்
உலகப் பல்லுயிர்க் கலகை யாகிப்
பெருந்தகை வேள்வி யருந்தவப் படிவமொடு
தத்தொழி றிரியாத் தரும நெஞ்சின்
அந்தணர் சேரி யகவித ழாக
இருநில வரைப்பி னெதிர்ப்போ ரின்றி
அருநிலை யுலகி னாட்சி விறப்பினும்
பெரும்படைக் கொற்றம் பீடழிந்து சுருங்கா
அரும்படை மன்ன ராற்றலி னெருங்கத்
தலைமையின் வழீஇய நிலைமை யெய்தினும்
உற்றது முடிக்கு முறுதி நாட்டத்துக்
கற்றப்பொரு டெரிந்த கண்போற் காட்சி

அருமதி யமைச்சர் திருமதிற் சேரி
மாசில் பைந்தாது சுமந்த மத்தகத்
தாசில் பன்மல ரல்லி யாகச்
சுடுகதி ரணிந்த சூழ்கதிர்ச் செல்வன்
விடுசுடர்ப் பேரொளி விமானம் போலச்
சேண்ணொளி திகழு மாண்வினை மாடம்
வேண்டிய மருங்கிற் காண்டக நெருங்கிச்
செஞ்சுடர் மணிமுடி திகழுஞ் சென்னிப்
பைந்தலை நாகர் பவணங் கடுப்பக்
காப்பின் றுயினுங் கண்டோ ருட்கும்
யாப்புடைப் புரிசை யணிபெற வளைஇ
அருமணிப் பைம்பூ ணரசகத் தடைந்து
வாயி லணிந்த வான்கெழு முற்றத்துக்
கோயில் கோட்டை யாகத் தாமரைப்
பூவொடு பொலியும் பொலிவிற் றாகி
அமையாச் செய்தொழி லவுணர்க் கடந்த
இமையாச் செங்க ணிந்திர னுறையும்
அமரா பதியு நிகர்தனக் கின்றித்
துன்ப நீக்குந் தொழிலிற் றாகி
இன்பங் கலந்த விராச கிரியமென்
றெண்டிசை மருங்கினுந் தன்பெயர் பொறித்த
மன்பெருஞ் சிறப்பின் மல்லன் மாநகர்
சாரச் சென்றதன் சீர்கெழு செல்வமும்
விள்ளா விழுச்சீர் விச்சா தரருறை
வெள்ளியம் பெருமலை யன்ன வளங்கொளி
மாட மறுகின் மயங்கொளிக் கழுமலும்
நீடுபுகழ்க் குருசி னெஞ்சிடை நலிய
வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தையை
உள்ளுபு திருநகர் புக்கன னுடங்தென.

உரை

ரு. இராசகிரியம் புக்கது

அஃதாவது - உதயணன் முதலியோர் மகதநாட்டுத் தலைநகரமாகிய இராசகிரிய நகரத்தை எய்தியதனைக் கூறும் பகுதி என்றவாறு.

(மகத நாட்டகத்தூர்களின் சிறப்பு)

க - கக : மன்பெரு............தூஉ

(பொ - ரை.) பிறநாட்டை வென்று பெருக்கமடைந்தமையாலே நிலைபெற்ற பெரிய சிறப்பினையுடைய 'மகதம்' என்னும் நல்ல நாட்டினை இவ்வாறு உதயணன் முதலியோர் சென்று சேர்ந்த பின்னர் அம்மகத நாட்டின்கண், யாறுகளும் ஏரிகளும், வாய்க்கால்களைப் பொருந்தி ஒழுகி மலர்ப் பொழில்தோறும் பரவி நீரூட்டி வண்டுகள் இசைமுரலாகின்ற பொய்கைகளும் வாவியும் குளமும் கேணிகளும் கிணறுகளும் நீண்ட நீர்நிலையாகிய மடுக்களும் நறிய மலர்களானே நிறைந்து சிறக்கும்படி பெருகிப் பாய்ந்து நெற்பயிராலே அழகெய்தி வேறுபல அழகுமுடைய கழனிகளின்கண் விளையும் நென்முதலிய செல்வங்களை ஆற்றவும் பெருக்குதலாலே அவற்றைப் பிறநாட்டினின்றும் வருந்தி வருவோர்க்கு வழங்குதல் ஒழியாமையாலே அறத்தால் வரும் இன்பத்திலே திளைத்தலையுடைய நிலைபெற்ற பெரிய சிறப்பினையுடைய பலவாகிய குடிமக்கள் வாழ்கின்ற பழைமையான ஊர்கள் தன்னைத் தழுவியவாய்ச் சூழ்ந்துளவாகாநிற்றலாலே என்க.

(வி - ம்.) யாறும் குளனும் (ரு) என்பது தொடங்கி இன்பங் கலந்த என்னுமளவும் (கக) இராசகிரிய நகர்க்கு வண்ணனையாய் வந்த அடைமொழிகளாகும். குளனும் (ரு) என்றது ஏரிகளை, வாய் - வாய்க்கால். தண்டலை - மலர்ப்பொழில். பொய்கை - இயற்கை நீர் நிலை. வாவி - நீரோடை. சயம் - ஆழமான குளம். கேணி - சிறு குளம். இதனை இக்காலத்தார் குட்டை என்று வழங்குப. படு - மடு. களுலி - செறிந்து. சாலி - நெற் பயிர், சாலி கவினியதனாலுண்டான கோலமென்க. கோலம் - அழகு. செறு - கழனி. கொடுத்தலாலே நல்குதல் அறாஅத என ஏது வாக்குக. நல்குதல் அறுமையாலுண்டான இன்பம் என்க. "அறத்தான் வருவதே இன்பம்" என்பதுபற்றி நல்குதல் அறாஅ இன்பம் என்றார். அந்நாடு நல்குரவாளரை நாடினும் இல்லது என்றமையின் ஈண்டு நல்குதல் என்றது வேறு நாட்டினின்றும் நல்கூர்ந்து வரும் இரவலர்க்கு என்பது பெற்றாம். புல்லுபு-புல்லி-தழுவி. இராசகிரியத்தைப் புல்லுபு சூழ என்றவாறு.

(இராசகிரியத்தின் சிறப்பு)

கஉ - கரு : உயர்............ஆகி

(பொ - ரை.) (இராசகிரியம்! இராசகிரியம்! என்று எட்டுத் திசைகளினும் மாந்தர் கிளந்தெடுத்துக் கூறிப் புகழாநின்ற

இராசகிரிய நகரமானது (கநச - கரு) மேனிலை யுலகத்தின் கண்ணே அழகு பொருந்திய பலவாகிய விண்மீன்களினிடையே பொலிவுற்றுத் திகழ்ந்து அசைகின்ற தனது நிலாவொளியை உலகெலாம் பரப்பிக்கொண்டு நிலத்தின்மேல் வந்து உயர்ந்து தோன்றுகின்ற முழு வெண்டிங்கள் போன்று தோன்றுகின்ற மாண்பினையுடையதாகி என்க.

(வி - ம்.) விண்மீன்கள் தன்னைச் சூழத் திங்கள் நிலத்தின்கண் வந்து உயர்ந்து தோன்றினாற் போன்று இராசகிரிய நகரம் இவ்வுலகத்தே தன்னைச் சூழ்ந்து பற்பல ஊர்கள் திகழ அவற்றின் நடுவண் உயர்ந்து பொலிந்து தோன்றிற்று என்பதாம்.

உரு - அழகு. மீன் - விண்மீன். அலங்கு கதிர்-அசைகின்ற கதிர். நிலப்புடை - நிலத்தின் மேல் : மீன் - ஊர்கட்கும்; திங்கள் - நகர்க்கும் உவமை.

(மதிற் சிறப்பு)

கசு - உச : சித்திர............இளமுலை

(பொ-ரை.) சிற்பத்தொழில் நிறைந்த கோலத்தாலுண்டான அழகுடைய பாம்புரி என்னும் அழகு தக்கிருப்பப் பல்வேறு மணிகளையும் விரவி முன்புறத்தே வளைத்து அணியப்பட்ட பொன்னுலியன்ற மேகலையணியையும், நீராகிய பசிய ஆடையினையும் குறையாத பிற செல்வங்களையும் தனக்கு அணிகலன்களாகப் பூண்டுகொண்டு கிடந்த கண்டவர் அஞ்சி நடுங்கும்படி செய்கின்ற ஆழ்ந்த குற்றமற்ற 'அகழி' என்னும் அல்குலினையும் பகைவராலே ஒரு காலத்தும் கைபபற்றி ஆட்சி செய்யப்படாததும் பொருத்தமான பல்வேறு மணிகளையும் பதித்த ஒள்ளிய முகடு என்னும் நுனியையுடையதும் கலத்தினாற் றகுதிபெற்றதும் இலக்கணமமைந்ததும் ஆகிய 'ஞாயில்' என்னும் இளமையுடைய முலையினையும் என்க.

(வி - ம்.) பாம்புரி என்னும் மேகலையினையும், (நீராகிய) பைந்துகிலையும், தனக்கு அணியாக உடுத்த அகழ் என்னும் அல்குலையும், ஞாயிலாகிய முலையினையும் என்க. பத்திரம் - அழகு. பாம்புரி - ஆளோடி என்னும் ஒரு மதிலுறுப்பு. அத்தக - அழகாற் றகுதியுண்டாக. கலாஅய்-விரவி என்க. பொற்படைப் படுகால்-பொன்னுலியன்ற மேகலையணி. நீராகிய பைந்துகில் என்க. கண்டவர் நடுக்கும் அகழி; துகில் அணியாக உடுத்திருந்த அகழி என்க. அகழியாகிய அல்குல் என்க. மாற்றோர் - பகைவர். ஏற்ற-பொருத்தமான. முகடாகிய உச்சி என்க. உச்சி - முலை. ஞாயில் - ஒரு மதிலுறுப்பு.

(இதுவுமது)

உரு-௩க : பொறி........முகத்து

(பொ - ரை.) பொறியையுடைய சிலையோடு பொருந்திய பொருத்துவாயுடைய பெரிய இரட்டைக் கதவுகளும், அப்பெருங்

கதவின்கண்ணே செறித்துச் செய்யப்பட்ட சித்திரத் தொழிலை யுடைய சிறு கதவுகளும் ஆகிய உறுதியாக அமைக்கப்பட்ட பொருத்தமான அணிகலன்களையும் வல்லவர்களாலே இயற்றப் பட்ட பிறசெல்வத் தொகுதியோடே நுண்ணிய நன்மையுடைய தொழில் அழகோடு கூடி உயர்ந்து ஞாயிற்று மண்டிலத்தின் இயக்கத்தையும் தவிர்க்கின்ற கோபுரம் என்னும் ஆராய்தற்குரிய நன்மையுடைய அழகிய முகத்தையும் என்க.

(வி - ம்.) பொறி-இயந்திரம்; இலச்சினையுமாம். போர்-பொருந்தல். செறிகிலை யமைந்த சித்திரப் புதவு என்றது பெருங்கதவின் கண் அமைக்கப்பட்ட சிறுகதவுகளை. புதவு - கதவு. பணதி - அணிகலன், இதனைப் பணிதி என்றும் வழங்குப. தீயழற் செல்வன் - ஞாயிறு. வாயின் மாடம் - கோபுரம். பெருங்கதவும் புதவும் ஆகிய பணதியையும் வாயின் மாடமாகிய முகத்தையும் என்க.

(இதுவுமது)

௩௨-௩௮: ஒண்........காவலாக

(பொ - ரை.) அவ்வாயின் மாடமாகிய தலையிலே ஒள்ளிய பொன்னாலியன்ற சூலமாகிய திண்ணிய ஒழுங்கினைச் சேர்ந்து நின்று வானத்தே இயங்காநின்ற விளங்கும் ஒளிபடைத்த தேவர் களை எம்முடைய நிலவுலகத்தேயுள்ள செல்வச் செழிப்பினைக் கண்டு மகிழ்தற்பொருட்டு மிகவும் விரைந்து ஈண்டு வாருங் கோள் என்று அழைக்கும் அவாவுடையன போன்று தம்மேற் காற்று மோதுதலானே அசையாநின்ற வண்ணமுடைய கதலி கைக் கொடிகளாகிய கூந்தலையும், அழகு செய்யப்பட்ட ஏந்திய நெற்றியினையும், சென்னியையுமுடைய காவலமைந்த மதில் என்னும் முதுமகள் தனக்குக் காவலாக அமையாநிற்ப என்க.

(வி - ம்.) சத்திக் கொடி - சூல ஒழுங்கு. ஒளியவர்கள்-தேவர். காணிய - காண, அடைதர்மின்-அடைமின். வடி - வளி.

(௧௭-௩௮:) பாம்புரியாகிய மேகலையையும் நீராகிய துகிலையும் அகழியாகிய அல்குலையும் ஞாயிலாகிய முலையையும் கதவும் புதவு மாகிய பணதியையும் வாயின் மாடமாகிய முகத்தையும் கதலிகை யாகிய கூந்தலையும் நுதலையும் சென்னியையும் உடைய முதுமகள் என்க.

(படைச்சேரி)

௩௯-௪௦: நெடு........பொய்கையாக

(பொ - ரை.) நெடிய நீரையுடைய பேரியாறுகள் நிறைந்து ஒன்றனை ஒன்று ஊடறுத்துச் சென்று பலவிடத்தும் கூடினாற் போன்ற தோற்றத்தையுடையவாகித் தாம் செல்லுமிடனெல்லாம்

மிக்கெழாநின்ற ஆரவாரம் கரையை மோதி உலாவாநின்ற அலையினது ஆரவாரத்தை ஒப்ப, நிறைந்த செல்வங்களாலே அழகுற்ற வீதிகள் தமது இரண்டு பக்கங்களினும் அந்தி மாலைப் பொழுதின்கண் வானத்தின் இடையே நிரல்பட இருந்த ஒளியும் நிறமும் உடைய விண்மீன்களின் ஒளி தம்மேற்றவழப் பொலிவுற்று இடத்தோடுயர்ந்துள்ள ஒப்பனை செய்யப்பட்ட படிக்கட்டுகளையுடைய கைத்தொழில் நுணுக்கமுடைய முகில் தவழாநின்ற மாடமாளிகையின்கண் பிறரால் வெல்லுதற்கரிய ஆற்றலுடைய படைத் தலைவர்களாகிய செல்வர்கள் இன்புற்றினிதமர்ந்து வாழாநின்ற பெரிய படைச்சேரியானது திருந்திய அழகோடு ஒப்பனையும் செய்யப்பட்டமையாலே அழகினாலே ஒரு பொய்கைபோலத் தோன்றாநிற்ப என்க.

(வி - ம்.) புறத்தே பலதிசையினின்றும் வந்து நகரத்தே ஒன்றனை ஒன்று ஊடறுத்துச் செல்லும் வீதிகள் பொய்கையிற்புகும் பேரியாறுகள் போன்றிருந்தன என்றவாறு. வீதிகளிலே உண்டாகின்ற ஆரவாரம் பொய்கையில் எழும் அலைகளின் ஆரவாரம் போன்றிருந்தது என்றவாறு. பொய்கையில் போல ஈண்டும் படிக்கட்டுகளிருந்தன என்றவாறு. மாடங்கள் மலராலே ஒப்பனை செய்யப்பட்டிருத்தலால் அப்படைச் சேரி மலர்ந்ததொரு பொய்கை போலவே தோன்றிற்று என்றவாறு. படைச்சேரி அகநகரத்தைச் சூழ்ந்திருத்தலின் பொய்கைபோன்றிருந்ததென்றார்.

(பரத்தையர் தெரு)

௩௪-௩௫ : வாணுதல்.........புறவிதழாக

(பொ - ரை.) இனி அப்படைச்சேரியாகிய பொய்கையின் கண்ணே ஒளியுடைய நெற்றியையுடைய இளமகளிரும் இளமைந்தரும் ஒருவர்பால் ஒருவர் காமமுற்று மயங்கிக் காமம் என்கின்ற இன்பப் பெருங்கடலிலே எழாநின்ற நினைவுகளாகிய அலைப்பரப்பிலே தம் மனம்போல முழுகி விளையாடி தம்மை அணிந்து கொள்ளுதலினும் புனைந்து கொள்ளுதலினும் சிறிதும் வெறுப்படையாராகி அன்புடைய நெஞ்சத்தோடே கலந்து நுகர்ந்து விளையாடுவோர் இன்ப நுகர்தற்கிடனான பரத்தையர் சேரிகள் இராசகிரியம் என்னும் அத்தலைநகராகிய தாமரை மலரினது புறவிதழ்களாகவும் என்க.

(வி - ம்.) படைச்சேரியாகிய பொய்கையின்கண் அமைந்துள்ளதொரு தாமரை மலராக இராசகிரியம் உருவகப்படுத்தப்படுகின்றது. அத்தாமரைமலர்க்குப் பரத்தையர் சேரிகள் புறவிதழ்களாக என்க. காமம் - இன்பம். திரைப்பரப்பென்றது நினைவலைகளை. அணிதல் - அணிகலன் அணிதலாம். புனைதல் - மலர் முதலியன புனைதலும் தொய்யில் எழுதுதலும் பிறவும் என்க. போகச்சேரி - காமவின்ப நுகரும் பரத்தையர் சேரி,

(வேளாளர் தெரு)

ளக-சுசு ; சால்பெனு.........புல்லிதழாக

(பொ - ரை.) சான்றாண்மை என்று பாராட்டப்பட்டிருந்த அழகிய பெரிய நுகத்தடியின்கண் பொறுமை என்னும் கழியைக் கோத்து அறத்தின் பகுதியாகிய வண்டியை மடுத்தவாய் தோறும் விடாதிழுக்கும் பகடுகளாய் நின்றிளைப்பின்றி யிழுத்துத் தீவினையென்னும் பெரிய யாற்றினைக் கடந்து அதன் மறுகரையை எய்தித் தம்மை ஆள்கின்ற அரசன் தம்மை விரும்பினாலும் அல்லது சினந்தாலும் தம் நிலையினை மாற்றவோ அல்லது அகற்றவோ இயலாத தன்மையினையுடையராய் நல்ல நிலங்களைத் தழுவிய நிலைபெற்ற பெரிய தொழிலையும் காரணத்தை யுடைய சொற்களையும் நிறைந்த கண்ணோட்டத்தையும் உடைய உலகிற்குப் பெரிய காவலாகிய வேளாளருடைய அரிய காவலமைந்த தெருக்கள் புறவிதழ்களை அடுத்து அகத்தேயுள்ள புல்லிதழ்களாகவும் என்க.

(வி - ம்.) சால்பு - பல குணங்களானும் நிறைதல். நுகம் - நுகத்தடி. பொறைக்கழி - பண்புத்தொகை. கழி - மூளை ; கயிறுமாம். மறத்துறைப் பேரியாறு - தீவினையாகிய துறையையுடைய பெரிய யாறு. எருதுகளாகி இழுத்து என ஒருசொல் வருவித்தோதுக. அறத்தின் பகுதியாகிய வண்டி என்க.

(ளக-சுo) இப்பகுதியோடு, "கவற்சியிற் கையறனீக்கி முயற்சியிற், குண்டுதுறையிடுமணற் கோடுற வழுந்திய, பண்டிதுறையேற்றும் பகட்டிணைபோல, இருவேமிவ்விடர் நீக்குதற் கியைந்தனம்" எனவும் (க-ருங : ருஉ - ரு) "மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற இடுக்கணிடர்ப்பா டுடைத்து." (திருக்குறள் - சுஉ௪.) எனவும், "அச்சொடு தாக்கிப் பாருற்றியங்கிய, பண்டச் சாகாட்டாழ்ச்சி சொல்லிய, வரிமணன் ஞெமரக் கற்பக நடக்கும் பெருமிதப் பகட்டுக்குத் துறையுமுண்டோ" (புறநா - கo.) எனவும், 'நிரம்பாத நீர்யாற்றிடு மணலுளாழ்ந்து பெரும்பார வாடவர்போற் பெய்பண்டந்தாங்கி மருங்கொற்றி மூக்கூன்றித் தாடவழ்ந்து வாங்கி, யுரங் கெட் டுறுப் பழுகிப் புல்லுண்ணுப் பொன்றும்" (சீவக - உளஅச) எனவும் வரும் பகுதிகளை ஒப்புக்காண்க. பூரண நோக்கு - கண்ணோட்டமைந்த பார்வை. நிறைந்த ஆராய்ச்சி யெனினுமாம். பெருங்கடியாளர் என்றது உலகிற்குப் பாதுகாவலாக அமைந்தவேளாளரை.

(வாணிகர் தெரு)

கள-எஅ : மதி.........நல்லிதழாக

(பொ-ரை.) திங்கள் மண்டிலம் போன்ற தெய்வச் சங்கினின் றும் சொரியப்பட்ட செல்வங்களையெல்லாம் பெற்ற தன்மை யுடையவர்போலச் செல்வச் சிறப்புடையராய் நடுங்காத இயல்

பினையுடைய அழகிய இடங்களமைந்த இவ்வுலகத்தே இல்லாப் குதிரைக் கொம்பும், இருந்தும் கைக்கொள்ளுதற்கரிதாகிய நெருதபினையுயிர்க்கின்ற பாம்பினது ஒளிவீசுகின்ற மணியும், அரிமான் பாலும், தெளிந்த அலையினையுடைய கடலிடத்தே மூவாமையை யுடைய தேவர்கள் பெரிதும் முயன்று ஒருங்கே கூடிக் கடைந் தெடுத்த சாவாமைக்குக் காரணமான அமுதமும் வேண்டுமெனி னும் இல்லையென்னுது அவை கிடைக்குமிடத்தே சென்று கைக் கொண்டு கொணர்ந்து தருகின்றவரும், பெறுதற்கரிய பண்டங் களையெல்லாம் ஓரிடத்தே திரட்டி அடக்கி வைப்போரும் தம் பண்டங்களைத் தங் கையைவிட்டுப் பிறவிடங்களிலே வைத்தலில் லாதவரும் முட்டுப்பாடில்லாத செல்வரும் ஆகிய பலவேறு பண் டங்களையும் விற்கும் வாணிகருடைய நல்ல விற்பனையையுடைய தெருக்கள் அப்புல்லிதழின் அகத்தே பொருந்திய நல்ல இதழ்க ளாகவும் என்க.

(வி - ம்.) மதியுறழ் சங்கு என்றது - சங்கநிதியினை. சங்க நிதியே நிதிவழங்குவனவற்றுள் சாலச் சிறந்ததென்பர். சங்க நிதிபெற்றோர் பின்னர் எக்காலத்தும் நல்குர வெய்தாராகலின் சங்கிற் போந்த நிதியம் பெற்ற நீர்மையர் போல என்றார். குதிரை மருப்பு - இல்பொருள். கொளற்கரிதாகிய என்பதனை சிங்கப்பால் முதலியவற்றோடும் தனித்தனி கூட்டுக. மூவா - மூத்தலில்லாத. வீயா - சாவாத. சாவாமைக்குக் காரணமான அமுதம் என்க. இவற்றால் வணிகர் யார் எப்பொருளைக் கேட்பினும் தருகின்ற ஆற்ற லுடையவராய் இருந்தனர் என்றுணர்த்தினர். விட்டனர் - முற்றெச்சம். வணிகர் தம் பொருளைப் பிறவிடத்தே வையார் என்பார் விட்டனரிருவா வாணிகர் என்றார். "விற்றாற் பையிலே வில்லாக்காற் கையிலே" என்பதொரு பழமொழியும் உண்டு. இதனோடு,

> "இரவலாளரே பெருந்திரு வுறுக
> அரவுமிழ் மணியு மலைகட லமுதும்
> சிங்கப் பாலுந் திங்கட் குழவியும்
> மூதிரை வாலுங் குதிரை மருப்பும்
> ஆமை மயிரும் அன்னத்தின் பேடும்
> ஈகென இரப்பினு மில்லென வறியான்
> சடையனை யயன்றைத் தலைவனை
> உடையது கேண்மின் உறுதி யோர்ந்தே"

எனவரும் பிற்றை நாட் செய்யுள் ஒப்பு நோக்கற் பாலது.

(அந்தணர் தெரு)

எகூ-அஎ : மேன்முறை.........அகவிநழாக

(பொ-ரை.) மேலான ஒழுக்கமுறைமையாலே இயன்ற நான்கு மறைகளாகிய பெரிய கடல்களின் வளவிய துறையிற் பயின்று

அவற்றின் எல்லைகளைக் கண்டு கரையேறிப் புறப்பொருளாகிய பொய்ப்பொருள்களின் வேறாகிய உட்பொருளைப் பயின்றுணர்ந்த நாவினோடும் ஒளியுடைய இடமாகிய கலைகள் முழுதும் நிறைவு பெற்ற குளிர்ந்த திங்கள் மண்டிலம்போலே மறையோடு பொருந்திய பொறிகளைக் காக்கின்ற காவலமைந்த ஒழுக்கத்தோடும் உலகத்தே வாழாநின்ற பலவாகிய உயிர்கட்கும் தாமே மேல் வரம்பாகிப் பெரிய தகுதியையுடைய வேள்வி செய்தலோடே தவவேடமுந் தாங்கித் தமக்கு மறைகூறிய அறுவகைத் தொழிலினின்றும் பிறழாத அறமுடைய திண்ணிய நெஞ்சத்தோடும் கூடிய பார்ப்பனருடைய தெருக்கள் அந்த நல்லிதழுக்கும் அகத்தே பொருந்திய அகவிதழாகவும் என்க.

(வி - ம்.) வண்டுறை - வளமுடைய துறை. நான்மறைப் பெருங்கடல் துறை எல்லைகண்டு கரைபோகி என்றது நான்கு வேதங்களையும் கடைபோக ஐயந்திரிபறப் பயின்று முதிர்ந்து என்றவாறு. கலைநிறைதலின் கலைநிரம்பிய மதி உவமமாயிற்று. ஓத்து - நூல். காப்பு - பொறியடக்கம். தந்தொழில் என்றது ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் இவ்வாறுமாம். தருமம் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மைபூண்டொழுகும் அருளறம் என்க.

(அமைச்சர் தெரு)

அ௮-கூள : இருநில.........அல்லியாக

(பொ - ரை.) பெரிய இந்த நிலத்தின்கண்ணே அரசன் தன்னை எதிர்க்கும் பகைவர் இன்றித் தன் ஆட்சியிற் பெருகிய விடத்தும், அன்றித் தனது பெரிய படைகள் தம் வெற்றியும் பெருமையுங் குன்ற வெல்லுதற்கரிய படையையுடைய பகை மன்னர் தமது ஆற்றல் மிகுதியானே போர் மேற்கொண்டு நெருங்குதலானே தனது அரசுரிமையின் வழுவிய நிலைமையை எய்திய விடத்தும், தமக்குரிய கடமையைச் செய்து முடித்தற்குக் காரணமான திண்ணிய நோக்கத்தையும் தாம் நன்கு கற்றுப் பொருளையும் ஆராய்ந்துணர்ந்து அரசனுக்குக் கண்போன்ற மெய்க்காட்சியினையும், உடைய பெறுதற்கரிய அறிவினையும் உடைய அமைச்சருடைய அழகிய மதிலாற் சூழப்பட்ட தெருக்கள் குற்றமற்ற பசிய தாதுக்களையுடைய பொகுட்டைச் சூழ்ந்துள்ள குற்றமற்ற பலவாகிய மலர்ந்துள்ள அல்லியிதழாகவும் என்க.

(வி - ம்.) அரசன் உலகடைய வென்று பகைவரின்றி இறுமாந்திருக்கும் போதும், அல்லது அவன் கெடுநிலை எய்திய போதும் என்னும் இருநிலையினும் தங்கள் கடமையைச் செய்து அவனுக்கு உறுதி செய்யும் அமைச்சர் என்றவாறு. இப்பகுதியோடு,

"உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினும் மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்"

எனவும்,

"காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குணித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார்"

எனவும்,

" தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லார் ஒருமையே மொழியு நீரார்"

எனவும் வரும் கம்பநாடர் செய்யுட்கள் (மந்திரப். எ - கூ) நினையற் பாலன.

விறப்பினும் - பெருகினும். சுருங்கா - சுருங்கி. இதனை செயவெ னெச்சமாக்கி ஏது வாக்குக. அரசனுக்குக் கண்போல் என்க. மத்தகம் என்றது தாமரைப் பொகுட்டினை. ஈண்டு அல்லி என்றது, பொகுட் டைச் சூழ்ந்து பொற்கம்பி போன்று செறிந்துள்ள நுண்ணிதழ் களை.

(அரண்மனை)

கூஅ-சுoஅ: சுடுகதிர்............கொட்டையாக

(பொ . ரை.) சுடாநின்ற ஒளிக்கற்றைகளை அணிந்த உலகத் தைச் சூழ்ந்து வருகின்ற கதிர்ச் செல்வனாகிய ஞாயிற்றுத் தேவன் ஊர்ந்து வருகின்ற ஒளிவீசும் பெரிய சுடர்களையுடைய விமானத்தைப் போன்று நெடுந்தொலைவினும் ஒளிவீசித் திகழா நின்ற மாட்சிமையுடைய தொழிற் சிறப்பமைந்த மாடமாளிகை கள் அமையவேண்டிய இடந்தொறும் காண்டற்கினியனவாக நெருங்கப்பட்டுச் செவ்விய ஒளி மணியையுடைய முடிவிளங்கா நின்ற உணர்ச்சியினையுடைய பசிய தலையினையுடைய நாக ருடைய உலகமாகிய பவணவுலகினைப் போன்று பகையின்மை யாலே பாதுகாவல் இல்லையாயினுங் கண்டோர் அஞ்சுதற்குச் காரணமான தொடர்புடைய மதில்களாலே அழகுண்டான் சூழப்பட்டுப் பெறற்கரியமணிகள் பதித்தபசிய பொன்னணிகலத் பூண்ட மன்னன் தன்னகத்தே வீற்றிருக்கப்பட்டு வானத்தைக தீண்டும் மாடவாயில் அழகு செய்யப்பட்ட முன்றிலையும் உடைய அரண்மனை நடுவணிருக்கும் பொகுட்டாகவும் என்க.

(வி - ம்.) கதிர்ச் செல்வன் - ஞாயிறு. ஞாயிற்றின் விமானம் என்க. விமானம் அரண்மனையகத்துள்ள மாடமாளிகைகட்குவமை. வேண்டிய மருங்கு - அமைய வேண்டிய இடம். நெருங்கி - நெருங்கப் பட்டு பவணம் - நாகருலகம். பகையின்மையாற் காப்பின்றுயினும் என்க. அரசு - அரசன். கோயில் - அரண்மனே. கொட்டை - பொகுட்டு.

(இதுவுமது)

கம௪-ககஎ: தாமரை............சாரச்சென்று

(பொ - ரை.) ஒரு தெய்வத் தாமரை மலரைப்போன்றுபொலி கின்ற அழகினையுடையதாய் அறத்தொடு பொருந்தாத தீவினைத் தொழிலேயுடைய அவுணர்களைக் கொன்ற இமையாத சிவந்த கண்களையுடைய இந்திரன் அரசுவீற்றிருக்கும் அமராபதி தானும் தனக்கு நிகரின்றித் தன்கண் வாழுமாந்தருடைய துன்பத்தை அகற்றுகின்ற ஆட்சித் தொழிலையுடையதாய் இன்பமே விரவிய இராசகிரியம் என்று எட்டுத் திசைகளிடத்தும் தனது புகழை நிலைநாட்டிய நிலைபெற்ற பெரிய சிறப்பினையும் வளத்தையு முடைய பெரிய நகரத்தை எய்தச் சென்று சேர்ந்தென்க.

(வி - ம்.) படைச்சேரி பொய்கையாகவும், அதன்கண் போகச் சேரி புறவிதழாகவும் கடியாளர் சேரி அப்புறவிதழ் மருங்கிற் புல்லித ழாகவும் வணிகர் சேரி அப்புல்லிதழ் பொருந்திய நல்லிதழ் ஆகவும் அந்தணர் சேரி அகவிதழாகவும் அமைச்சர் சேரி அல்லியாகவும் கோயில் கொட்டையாகவும் மலர்ந்ததொரு தாமரைப் பூப்போன்ற பொலிவுடைய இராசகிரியம் என்க.

இதனோடு "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவின்
இதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும் பொகுட்டனைத்தே யண்ணல் கோயில்"

என வரும் பரிபாடலையும் (பரிபாடல் - பின் சேர்க்கை)

"நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்
சுடுமண்ணோங்கிய நெடு நகர்"

எனவரும் பெரும்பாணாற்றுப் படையையும் (சல௨-ரு) ஒப்பு நோக்குக.

இனி ஆசிரியர் திருத்தக்கதேவரும்.

"பொய்கை போர்க்களம் புறவிதழ் புலவு வாட்படை புல்லிதழ்
ஐய கொல்களி றகவித ழரச ரல்லிதன் மக்களா
மையில் கொட்டையம் மன்னனு மலர்ந்த தாமரை வரிசையாற்
பையவுண்டபின் கொட்டைமேற் பவுத்திரத் தும்பி பறந்ததே"

என ஈண்டுக் கூறியவாறே கூறுதலுங் காண்க. (சீவக. உ௩கக)

(உதயணன் இராசகிரியம் புகுதல்)

௧௧௭-௧௨௫ : அதன்............உலந்தென்

(பொ - ரை.) அவ்விராசகிரிய நகரத்தின் சிறப்புடைய செல்வப் பெருக்கமும், வேறுபடாத மாபெருஞ் சிறப்புடைய விச்சாதரர் வதிகின்றவெள்ளி மாமலைபோன்ற விளங்கும் ஒளியையுடைய மாடங்களையுடைய தெருக்களிலே பொருந்திய ஒளிப் பெருக்கமும் நீண்ட புகழையுடைய உதயண மன்னனுடைய நெஞ்சினை வருத்தாநிற்ப மேலும் தன் காதலியாகிய பெரிய மலர் மாலையணிந்த வாசவதத்தை நல்லாளையும் நினைந்து நினைந்து மெலிந்து அச்செல்வமா நகரினூடே புகுந்தனன் என்க.

(வி - ம்.) விச்சாதரர் வெள்ளிமலையில் வாழ்வோர் என்பது சைன நூற்றுணிபு. கழுமல் - பெருக்கம். அரசனுக்கு இவ்வேறூர் அரசன் செல்வப் பெருக்கமும் அவர் நகர்ச் சிறப்பும் மனத்தை நலிந்தன என்பது கருத்து. உள்ளுபு - நினைந்து. உலந்துபுக்கனன் என்க.

௩. இராசகிரியம் புக்கது முற்றிற்று.

௪. புறத்தொடுங்கியது

இதன்கண் : உருமண்ணுவா முதலியோர் இராசகிரிய நகரத்தே காகதுண்ட முனிவனைக் கண்டு அவனைக் கொண்டு வாசவதத்தையை மீட்டுத் தருவதாகக் கூறுவித்து உதயணனைத் தேற்றுதலும், அந்நகரின் புறத்தே மறைந்திருத்தலும் கூறப்படும்.

உள்ளுத லான துள்ளகஞ் சுருங்கிய
வள்ளிதழ் நறுந்தார் வத்தவன் றன்னொடு
விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கிலுங் காவல் கண்ணி
வேந்துபிழைத் தொழுகினுங் காய்ந்து கலக்கரு
முழுப்பரி சார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
ஐம்பதி னிரட்டி யவனச் சேரியும்
எண்பதி னிரட்டி யெறிபடைப் பாடியும்
அளப்பருஞ் சிறப்பி னாயிர மாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழச் சேரியும்
கொலைப்பெருங் கடுந்திறற் கொல்லர் சேரியும்
மிலேச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து
வித்தக வினைஞர் பத்தியிற் குயிற்றிய
சித்திரச் சாலையு மொத்தியைந் தோங்கிய
ஓட்டுவினை மாடமுங் கோட்டுவினைக் கொட்டிலும்
தண்ணீர்ப் பந்தருந் தகையமை சாலையும்
அறத்தியல் கொட்டிலு மம்பலக் கூடமும்
மறப்போர்க் கோழி மரபிற் பொருத்தும்
விறற்போ ராடவர் விரும்பிய களனும்
மறக்களி யானை வடிக்கும் வட்டமும்
கடிசெல் புரவி முடுகும் வீதியும்
அடுத்தொலி யறாஅ வரங்கமுங் கழகமும்
அறச்சோற் றட்டிலு மம்பலச் சாலையும்
தேவ குலனுந் தேசிகப் பாடியும்
மாவுந் தேரு மயங்கிய மறுகும்

காவுந் தெற்றியுங் கடவுட் பள்ளியும்
தடவளர் செந்தீ முதல்வர் சாலையும்
வேண்டிடந் தோறுங் காண்டக நெருங்கி
ஆதி யாகி யமைந்தவனப் பெய்தி
மயங்கிய மாந்தர்த் தாகி யார்க்கும்
இயங்குதற் கின்னாப் புறம்பணைச் சேரியும்
அந்தண் பாடியு மணுகி யல்லது
வெந்திறல் வேகமொடு விலக்குதற் கரிய
ஐங்கணைக் கிழவ னமர்ந்துநிலை பெற்ற
எழுதுவினைத் திருநக ரெழிலுற வெய்தி
இட்டிகைப் படுகாற் குட்டக் கோணத்
துத்தர மருங்கி னத்திணஞ் சொரிந்த
மணிதெளித் தன்ன வணிநிறத் தெண்ணீர்ப்
பெருந்தண் பொய்கை மருங்கிற் குலாஅய்ச்
சேறுபடு செறுவி னாறுநடு கடைசியர்
கழிப்புநீ ராரலொடு கொழுப்பிறக் கொளீஇய
நாரைச் சேவல் பார்வலொடு வதிந்த
எழிற்பூம் புன்னைப் பொழிற்புடை நிவந்த
வள்ளிதழ்த் தாமரை வான்போ துளரி
முழுத்திரட் டெங்கின் விழுக்குலை நெற்றி
அகமடல் வதிந்த வன்புபுரி பேடை
நரல்குர லோசை யளைஇ யயல
கணைக்காற் கமுகி னிணைப்போதி யவிழ்ந்த
அம்மென் பாளையு ளசைந்த வண்டினம்
மம்மர் வைகறை மருங்குதுயி லேற்ற
அனந்தர் முரற்சி யளைஇப் புதைந்த
பூங்கண் முற்றிய புறத்துப் புடை யாடித்
தேங்கட் டும்பி தீங்குழ லிசைப்ப
இயல்பிற் கெழீஇய வின்றுணைப் பிரிந்தோர்க்
குயலரி தாக வூழூழ் கவற்றும்
வயலுந் தோட்டமு மயல்பல கெழீஇய
தாமரைச் செங்கட் டமனிய விணைக்குழைக்
காமன் கோட்டத்துக் கைப்புடை நிவந்த
இளமரக் காவி னிணந்தனக் கில்லாத்

தூபத் தொழுக்கத் தாபதப் பள்ளி
தமக்கிட மாக வமைத்த பின்றை
வீழ்துணை மாதர் விளிவுநினைந் திரங்கி
வாழ்த லாற்றான் வாய்மொழி யரசன்
உற்றவ ளுருயி ருய்தல் வேண்டி
இற்றவள் பிறந்துழிக் காட்டு மந்திரம்
கற்றுவினை நவின்றனென் காட்டுவே னினக்கென
வஞ்ச மாயினு நெஞ்சுவலி யுறுக்கெனக்
கண்கவர் பேரொளிக் காகதுண் டகனேனும்
அந்த ணாளனை யமைச்சர் தருதலின்
அருமதி யண்ணற் கவனிது கூறும்
இருமதி யெல்லை யியைந்த விரதமொ
டிரக்க மின்றி யிருக்கல் வேண்டும்
அத்துணை யிருந்தபி னருங்காட் டகவயின்
மொய்த்தழ லீமத்து முன்னர்க் காட்டிய
தவாஅ வன்பிற் றவமா சாதனை
போகிய பொழுதி னாகிய நலத்தொடு
மேலை யாகிய வடிவின ளாகி
மற்றவ ளடைவது தெற்றெனத் தெளியெனக்
கற்புடை மாதரைக் கைப்படுத் தன்னதோர்
கட்டுரை வகையிற் பட்டுரை யகற்றி
ஆப்புடை யொழுக்க மறியக் கூறிக்
காப்பொடு புணரிற் காணலு மெளிதெனக்
காவல குமரற்கு மேவன வுரைத்து
விடுத்தவன் போகிய பின்றை மடுத்த
இருநிலம் புகுதலு மொருவிசும் பிவர்தலும்
வருதிரை நெடுங்கடல் வாய்க்கொண் டுமிழ்தலும்
மந்தர மேந்தலு மென்றிவை பிறவும்
பண்டியல் விச்சை பயிற்றிய மாக்களைக்
கண்டு மறிதுங் கண்கூ டாகச்
செத்தோர்ப் புணர்க்கும் விச்சையொடு புணர்ந்தோர்க்
கேட்டு மறியலம் வீட்டருஞ் சிறப்பிற்
புண்ணிய முடைமையி னண்ணின னிவன்
ஒருதலை யாகத் தருதல் வாயென

உறுதி வேண்டி யுருமண் ணுவாவும்
மருவிய தோழரு மன்னனைத் தேற்றி
மாய வொழுக்கமொடு செயலதை நோக்கி
மிகுதிக் காதன் மகத மன்னனொடு
சுற்ற மாக்குஞ் சூழ்ச்சிய ராகிக்
கொற்ற வேந்தன் குறிப்புவழி யோடி
அகத்துறைந் தொடுங்குதல் செல்லா ரகன்மதிற்
புறத்தொடுங் கினராற் பொருள்பல புரிந்தேன்.

உரை

௪. புறத்தொடுங்கியது

அஃதாவது : உதயணன் முதலியோர் இராசகிரிய நகரத்தின் புறத்தே கரந்துறைந்ததனைக் கூறும் பகுதி என்றவாறு.

(இராசகிரிய நகரத்துச் சேரிகள்)

க - கரு : உள்ளுதல்..........சிறந்து

(பொ - ரை.) வாசவதத்தையை நினைந்துருகுதல் தவிராது ஊக்கங் குன்றிய பெரிய நறிய மலர்மாலையையுடைய வத்தவ மன்னனாகிய உதயணனோடு சென்ற உருமண்ணுவா முதலிய தோழர்கள்—வானுற உயர்ந்த ஒப்பனையையும் பலபடைகளாலாய மதில் வாயிலையும் மாடவாயிலையும் பக்கங்களையும் காவல் செய்தலைக் கருதி அமைந்த தம்மன்னன் தம்பால் தவறி நடந்தாலும் அவனுடைய பகைவரைச் சினந்து தாக்குதல் ஒழியாத முழுமையான வழிபாட்டுத் தொழிலின்கண் முதலிடம் பெற்று மிகவும் சிறந்த செல்வத்தோடே வெற்றியையும் பெற்ற ஒரு நூறு யவனச் சேரியும், நூற்றறுபது வேல் முதலிய எறிபடை ஏந்திய மறவர் வாழும் சேரியும், அளத்தற்கரிய வெற்றிச் சிறப்போடு தலைமைத் தன்மையும் உடைய படை மறவராகிய தமிழர் வாழும் ஓராயிரம் சேரியும், கொலைத் தொழிலில் பேராற்றல் வாய்ந்த கொல்லருடைய ஓராயிரஞ் சேரியும், மிலேச்ச மறவர் வாழும் ஓராயிரம் சேரியும் ஆங்காங்குச் சிறப்புற்றமைந்து என்க.

(வி - ம்.) உள்ளம் - ஊக்கம். வத்தவன் - உதயணன். படை - சுவரின் உறுப்பு. கண்ணி - கருதி ; கருதியமைந்த சேரி என்க. வேந்து தம்பெருமை பேணாது ஒழுகினும் தங்கடமை தவறாமல் பகைவரைக் காய்ந்து கலக்கும் யவனர் என்க. பரிசாரம் - வழிபாடு.

யவன நாட்டு மறவர் உறையுஞ் சேரி. எறிபடை - எறியும் வேல் முதலியன ஏந்தும் மறவர் என்க. ஆயிரமாகிய என்பதனைக் கொல்லர் சேரிக்கும் மிலேச்சர் சேரிக்கும் கூட்டுக. கொல்லர் வேல்முதலியன வடிக்குந் தொழிலோடு போர்த் தொழிலினும் சிறந்தவர் என்பது தோன்றக் கொலைப் பெருந்திறற் கொல்லர் என்றார். தலைத்தலை - இடந்தோறும் இடந்தோறும்.

(சித்திரச்சாலை முதலியன)

கசு - உசு : வித்தக............அம்பலச்சாலையும்

(பொ-ரை.) சிற்பத் தொழிலோர் விரல்பட இயற்றிய சித்திரச் சாலையும் ஒன்றனோடு ஒன்று ஒத்துப் பொருந்தி உயர்ந்துள்ள ஒட்டுத் தொழிலையுடைய மாடங்களும் செம்பு முதலியன கொட்டித்தொழில் செய்யும்கொட்டிலும், தண்ணீர்ப் பந்தர்களும், அழகுசெய்து கொள்ளுதற்கியன்ற சாலைகளும், அறஞ் செவியறிவுறுத்தும் கொட்டிலும், பொதுமன்றங்களும் மறத்தோடு போர் புரியும் கோழிச் சேவலை முறைமையாலே போரிடச் செய்கின்ற வெற்றியையுடைய போர் மறவர் விரும்புகின்ற விளையாட்டுப் போர்க்களங்களும், மறமும் களிப்புமுடைய யானைகளைப் பயிற்றும் வட்டவடிவமான களங்களும் விரைந்து செல்லுங் குதிரைகளை முடுக்கிச் செலுத்தும் வீதிகளும், அடுத்தடுத்து இசையரூத கூத்தாட்டரங்கமும் சூதாடுகளங்களும் அறச்சோறு சமைக்கும் அட்டில்களும் அம்பலச்சாலைகளும் என்க.

(வி - ம்.) வித்தக வினைஞர் என்றது சிற்பிகளையும் ஓவியரையும், ஒட்டு வினை மாடம் செங்கல்லைச் சுண்ணத்தால் ஒட்டிய மாடம் என்க. கொட்டுவினை - செம்பு முதலியன கொட்டிச் செய்யும் கன்னார் தொழில். தகை - அழகு. ஒப்பனை செய்து கோடற்குரிய சாலை என்க. அறத்தியல் கொட்டில் என்றது அறங் கூறுஞ் சமயக் கணக்கர் இடம் என்க. அம்பலக் கூடம் (கஅ) அம்பலச்சாலை (உசு) என்னும் இவற்றுள் முன்னது நகர மக்கள் கூடும் மன்றம் என்றும் பின்னது வம்பலர் தங்குஞ் சத்திரம் என்றும் கொள்க. விரும்பிய கண்ணும் என்புழி கண் - இடம் என்க. வட்டம் - வட்டமான களம். கழகம் - சூதாடு களம். படைக்களம் பயிலுமிடமுமாம்.

அறச்சோற்றட்டில் என்பதனோடு தொடர்தலின் ஈண்டுக் கூறும் அம்பலச்சாலை சத்திரமேயாதல் தெற்றென விளங்கும்.

(இதுவுமது)

உரு-ஙசு : தேவ...........எய்தி

(பொ - ரை.) தேவர் கோட்டமும் பிறநாட்டு வணிகர் உறையும் தேசிகச்சேரியும், யானை, குதிரை, தேர் என்னும் இம்முப்படையும் கலந்த வீதிகளும் மலர்ப்பொழில்களும் மேடைகளும் துறவோரிருக்கையும் வேள்விக்குழியில் சிவந்த தீயினை வளர்க்கும்

பார்ப்பனர் வேள்விச்சாலையும் அவை அவை இருத்தற்குரிய இடந்தோறும் இடந்தோறும் அமைந்து காட்சிக்கினியவாக நெருங்கி இருத்தலானே நகரத்திற்கோதிய இலக்கணங்களுள் தலையான இலக்கணமமைந்து யாண்டுஞ் செறிந்த மக்களை யுடையதாய் யாவரானும் ஊடே செல்லுதற்கின்னாமை செய்யும் நகரத்தின்புறத்தே அமைந்தஇடத்தினும் சேரிகளும் பார்ப்பனச் சேரியும் அணுகப்பட்டதாய், வெவ்விய ஆற்றலும் வேகமும் உடையவாய், யாரானும் விலக்குதற்கு அரியவாகிய ஐந்து மலர்க் கணைகட்கும் உரியவனாகிய காமவேள் விரும்பி எழுந்தருளிய ஓவியமெழுதப்பட்ட அழகிய காமவேள் கோட்டத்தையும் தன் அழகுமிகும்படி தன்பாலுடையதாய் என்க.

(வி - ம்.) தேவகுலம் - திருக்கோயில். தேசிகப்பாடி - பிற நாட்டு வணிகர் வந்துறையும் தெரு. கடவுட் பள்ளி - துறவோரி ருக்கை. தட-வேள்விக் குழி. முதல்வர்-அந்தணர். புறம்பணைச்சேரி - நகரின் மருங்குள்ள சேரி. அந்தண்பாடி - அந்தணர் தெரு. ஐங் கணைக் கிழவன் - காமவேள். திருநகர் - காமன் கோயில்.

(பொய்கை)

௩௭-௪௦ : இட்டிகை..........சூலாஅய்

(பொ - ரை.) வடகிழக்குத் திசையிலே செங்கல்லாணியன்ற படிக்கட்டுகளோடு ஆழமானதும் சங்கீன்ற முத்தினைக் கரைத் துத் தெளியவைத்தாற்போன்ற அழகிய நிறத்தையுடைய தெளிந்த நீர் நிரம்பியதுமாகிய பெரிய குளிர்ந்த பொய்கையின் பக்கங்களைச் சூழ்ந்தென்க.

(வி - ம்.) இட்டிகை - செங்கல். படுகால் - படி. உத்தரகோண மருங்கின் என்க. அது வடகிழக்கு என்க. நத்தினம் - சங்குகள். மணி - முத்து. சூலாய் - சூழ்ந்து.

(தாபதப் பள்ளி அமைந்துள்ள இடம்)

௪௧-௪அ : சேறு..........அணைஇ

(பொ - ரை.) உழுதுசேறுபடுத்தப்பட்ட கழனியிலே நாறு நடுகின்ற உழத்தியர் வடியவிட்ட நீரின்கண் ஆரல்மீனையும் கொழுப்புடைய இருமீனையும் இரையாகக் கொள்ளல்வேண்டி நாரையின் சேவல் கூர்ந்த பார்வையோடு உறையாநின்ற அழகிய மலரையுடைய புன்னையம்பொழிலின பக்கத்தே நீரினின்றும் உயர்ந்துள்ள பெரிய இதழ்களையுடைய வெண்டாமரை மலரை அலகாற் கோதித்தின்று திரண்ட தெங்கினது முழுமையான சிறந்த குலையின்மேல் பாளையினகத்தே தங்கிய சேவலின்பால்

அன்பு புரிகின்ற பெடையன்னம் அச்சேவலை அழைத்து நரலா நின்ற குரலினது ஓசை கலந்து என்க.

(வி - ம்.) செறு - கழனி. நாறு - நாற்று. கழிப்பு நீர் - வடிய விட்ட நீர். ஆரலும் இருவும் மீன்கள். பார்வல் - பார்வை. முழுவிழுக் குலை என்க. நரலுதல் - ஒலித்தல். அளைஇ - கலந்து.

(இதுவுமது)

சஅ-ருச : அயல்............இசைப்ப

(பொ - ரை.) பக்கத்திலுள்ளனவாகிய திரண்ட அடிப்பகுதியினையுடைய கமுகினது இரட்டையாகிய விரிந்த அழகிய மெல்லிய பாளையினூடே தங்கிய வண்டுகள் மயக்கந்தரும் வைகறையாமத்தே துயிலெழுந்து துயின் மயக்கத்தோடே முரலாநின்ற இசையும் கலந்து தேன்முதிர்ந்த கூம்பிய மலர்ப் புறங்களிலே எல்லாம் பக்கங்களிலே பறந்து ஆடி இனிய தேன் கொள்ளும் தும்பிகள் இனிய குழலிசைபோன்று முரலாநிற்பவும் என்க.

(வி - ம்.) கணை - திரண்ட, இரட்டை - இணைந்த எனினுமாம். அசைந்த - தங்கிய. மம்மர் - மயக்கம். அனந்தர் - துயின் மயக்கம். முரற்சி - இசை.

(இதுவுமது)

ருரு - சுஉ : இயல்பின்............பின்றை

(பொ - ரை.) இயல்பாகத் தம்முள் காதலாலே பொருந்திய இனிய காதற்றுணைவரைப் பிரிந்து தனித்துறைவோர் உயிர்வாழ்தல் அரிதாகும்படி முறை முறையே மனக்கவலையை மிகுவித்தற் கிடனான முற்கூறிய வயல்களும் தோட்டங்களும் பலப்பல பொருந்தியதும் முற்கூறப்பட்ட செந்தாமரை மலர்போன்ற சிவந்த கண்களையும் பொன்னாலியன்ற இரண்டாகிய குழைகளையும் உடைய காமதேவன் கோயிலின் பக்கத்தே உயர்ந்துள்ள இளமரச் சோலையின்கண் அமைந்ததும் ஒப்பற்றதும் ஆகிய நறும்புகை கொடுத்து வழிபாடுசெய்யும் துறவோர் பள்ளியையே தாங்கள் கரந்துறைதற்கேற்ற இடமாகத் தேர்ந்து கொண்ட பின்னர் என்க.

(வி - ம்.) பறவைப் பாடலும் வண்டின் முரற்சியும் பிறவும் தனித்துறைவோர்க்குக் காமக் கிளர்ச்சியுண்டாக்கலான் உயலரிதென்ற படியாம் கோட்டம் - கோயில். கைப் புடை - அணித்தாய பக்கம். இணை தனக்கில்லாப் பள்ளி தாபதப் பள்ளி எனத் தனித்தனி கூட்டுக. தாபத் தொழுக்கம் - இறைவழிபாட்டுத் தொழில். பின்றை - பின்னை.

அமைச்சர் செயல்

௬௯ - ௭௦ : வீழ்துணை...........தருதலின்

(பொ - ரை.) தான் பெரிதும் விரும்புகின்ற வாழ்க்கைத் துணைவியாகிய வாசவதத்தையின் சாவினை நினைந்து நினைந்து இரங்கி நம் வாய்மைமிக்க அரசனாகிய உதயணகுமரன் இனி உயிர் வாழ்தல் செய்யான் என்று கருதி அவனுடைய அரிய உயிர் உய்தலின் பொருட்டுச் சூழ்ச்சிசெய்து அமைச்சராகிய உருமண்ணுவா முதலியோர் கண்டோர் கண்ணைக் கவரும் பேரொளி படைத்த 'காகதுண்டகன்' என்னும் ஒரு துறவியைக் கண்டு வணங்கி "பெரியோய்! பொய்ம்மொழியே யாயினும் நீ எம்மரசன் பால் வந்து யான் இறந்துபட்ட நின் காதலி பிறந்த இடத்தைக் கண்கூடாகக் காட்டு மொரு மந்திரத்தைப் பயின்றுளேன் அவ்வாறு முன்னரும் அவ்வருஞ்செயலைச்செய்துமிருக்கின்றேன். ஆதலால் நின் மனைவியையும் நினக்குக் காட்டுவேன் காண்!" என்று கூறி அவன் இறந்துபடாவண்ணம் அவன் நெஞ்சினைத் தேற்றி வலியுடையதாக்கியருளுக என்றிரந்து அம்முனிவனை உதயணன்பால் அழைத்து வருதலாலே என்க.

(வி - ம்.) வீழ்துணை - வினைத்தொகை. மாதர் - வாசவதத்தை. விளிவு - சாவு. வாய்மொழி - உண்மை பேசுகின்ற. அரசன் - உதயணன். இற்றவள் - இறந்தவள். வினைநவின்றனென். அத்தொழிலைச் செய்து பழகியுளேன். வஞ்சம் - பொய். புரைதீர்ந்த நன்மை பயத்தலின் இப்பொய் கூறுதல் தகும் என்பார் வஞ்சமாயினும் கூறுக என்றார். இதனை,

> "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்" (குறள் - ௨௯௨)

என்பதனானுமுணர்க.

காகதுண்டக முனிவன் கூற்று

௭௧ - ௭௯ : அருமதி...........தெளியென

(பொ - ரை.) பெறலரிய அறிவினையுடைய அண்ணலாகிய உதயணகுமரனை நோக்கி அந்தத் துறவி இவ்வாறு கூறுவார்:— "ஐய! நீ இரண்டு திங்களளவும் பொருந்திய நோன்பினோடு நின் மனைவியை நினைந்து இரங்குதலின்றி இருத்தல் வேண்டும்! அத்துணைக்காலம் நீ அவ்வாறிருந்த பின்னர் யான் இருத்தற்கரிய நன்காட்டின்கண் பற்றியெரியும் தீயிற்குரிய பிணஞ்சுடு விறகடுக்கின்மேலிருந்து நின் மனைவியை நினக்கு முன்னர்க் கண்கூடாகக் காட்டும்பொருட்டுக் கெடாத அன்போடு செய்கின்ற தவமாகிய

பெரிய செய்கையைச் செய்துமுடித்தபொழுதே முற்பிறப்பிலே யுண்டான தன் பழைய வடிவத்தையுடையவளாய் இத்தவத்தால் உற்ற புத்தழகோடே இறந்துபட்ட நின்மனைவி நின்முன்னர் வருவதனை நீ நன்கு தெரிந்துகொள்க!" என்று கூறி என்க.

(வி - ம்.) அண்ணல் - உதயண குமரன். அவன் - காகதுண்டக முனிவன். அத்துணை - அவ்வளவு காலம். காடு - நன்காடு. ஈமம் - பிணஞ்சுட அடுக்கிய விறகடுக்கு. மாசாதனை - பெரிய செய்கை. மற்றவள் - வாசவதத்தை.

(இதுவுமது)

௮௦ - ௮௫ : கற்புடை............பின்றை

(பொ - ரை.) கற்புடைய வாசவதத்தை நல்லாளை அப்போதே அவன் கையில் கொடுப்பதுபோன்ற தனது படைத்துமொழி வகையாலே தேற்றி அவனது இரங்கற் சொற்களையும் அகற்றி அந்த இரண்டு திங்கள்காறும் அவன் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாடுடைய நோன்பொழுக்கத்தையும் அவன் உணரும்படி கூறி ஐய! நீ இந்நோன்புக்குரிய காவலோடு பொருந்தியிருப்பின் நின்மனைவியைக் காண்டல் எளிதேயாம் என்றும் கூறிப் பின்னரும் வேந்தன் மகனாகிய உதயணகுமரனுக்குப் பொருந்தும் அறிவுரைகள் பலவும் கூறிவிட்டு அத்துறவி சென்றபின்னர் என்க.

(வி - ம்.) மாதர் - வாசவதத்தை. கட்டுரைவகை - படைத்து மொழிவகை. பட்டுரை - உதயணனுடைய இரங்கற் சொற்கள். பண்டுள்ள சொற்களுமாம். இதற்கு பண்டுரை - பட்டுரை ஆயிற்றென்க. ஆப்பு - யாப்பு - கட்டுப்பாடு. ஆப்புடையொழுக்கம் - நோன்பு. காப்பு - மனஞ் சென்றவாறு செல்ல விடாமற் பாதுகாத்தல். காவலகுமரன் - அரசகுமரன்; உதயணன். மேலன - பொருந்தும் மொழிகள்: அவன் - முனிவன்.

(உருமண்ணுவா முதலியோர் கூற்று)

௮௫ - ௯௦ : மடுத்த............கண்கூடாக

(பொ - ரை.) தமது செலவினைத்தடுத்த பெரிய நிலத்தினுட் புகுதலும் ஒப்பற்ற விசும்பிலே இயங்குதலும் மேலேமேலே வாரா நின்ற அலைகளையுடைய நெடிய கடனீர்முழுதும் வாயிலே கொண்டு பின்னர் உமிழ்தலும் மலையைக் கையிலேந்தலும் என்னும் இவ்வருஞ் செயல்களையும் இன்னோரன்ன பிறசெயல்களையும் பண்டைக்காலத்தே தோன்றிய வித்தைகளாலே செய்து காட்டிய மாந்தர்களைக் கேள்வியானன்றி யாம் கண்கூடாகக் கண்டும் அறிந்துள்ளோம்; என்க.

(வி - ம்.) நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச் சலத்திற் றிரியுமோர் சாரணன்'' எனவரும் மணிமேகலையும் (௨௪ : ௩௬-௭.) காண்க. அகத்தியன் கடலுண்டுமிழ்ந்தமையும் நினைக. மாக்கள் - மக்கள்.

(இதுவுமது)

௬௧ - ௬௬ : செத்தோர்............தேற்றி

(பொ - ரை.) இறந்தோரை மீட்டுத் தருகின்ற வித்தையை யுடையோரை யாம் கேட்டும் அறிந்திலேம். நீங்குதலில்லாத சிறப்பினையுடைய புண்ணிய மிகுதியாலே இம்முனிவன் இவ் வித்தையை அடைந்தான் ஆதல் வேண்டும். இவன் வாசவதத் தையைப் பழைய வடிவத்தோடு ஒரு தலையாக மீட்டுத் தருதல் வாய்மையேயாகும்;ஐயமின்று என்றுகூறி மேல்வரும் உறுதியை விரும்பி உருமண்ணுவாவும் ஏனைத்தோழரும் உதயணனைத் தேற்றி யென்க.

(வி - ம்.) வீட்டரும் சிறப்பு - விடுதல் இல்லாத சிறப்பு. அருமை - ஈண்டின்மை மேற்று. இவன் புண்ணியமுடைமையின் நண்ணினன் ஆம் என்க. நண்ணினன் - எய்தினன். உறுதி - ஆக்கம். மன்னன் - உதயணன்.

(இதுவுமது)

௬௭ - ௧௦௨ : மாய............புரிந்தென்

(பொ-ரை.) இவ்வாறு பொய் யொழுக்கத்தை மேற்கொண்டு அவ்வமைச்சர்கள் எதிர்காலத்தே நிகழவேண்டிய செயல்களைக் கூர்ந்து நினைந்து அந்நிகழ்ச்சிக்கு உதவியாம் பொருட்டுப் பேரன் புடைய அம்மகத நாட்டு மன்னனோடு உதயணகுமரனை உறவு கொள்வித்தற்குரிய செயலை ஆராய்ச்சி செய்பவராகி அவ் வாராய்ச்சிக்கு ஏதுவாம்படி வெற்றியுடைய அம் மகத மன்னன் பாற்சென்று அவன்குறிப்பின் வழியேசென்று அந்நகரத்தினூடே உறைந்து மறைதலைச் செய்யாமல் அந்நகரத்தின் அகன்ற மதிலின் புறத்தேயே உள்ள அத்துறவோர் பள்ளியிலேயே பல வேறு செயல்களைச்செய்துகொண்டு கரந்துறைவாராயினர் என்க.

(வி - ம்.) மாய வொழுக்கம் - பொய் யொழுக்கம். கரந்துறை தலின் மாய வொழுக்கம் உடையராதல் வேண்டிற்று. சேயதை நோக்கி எதிர்காலத்தே நிகழவேண்டிய நிகழ்ச்சியை மனத்தானோக்கி என்க. அஃதாவது பகைவெல்லல். மிகுதிக்காதல் - பேரன்பு. வேந்தன் - மகத வேந்தன். ஒடுங்குதல் செல்லார் - ஒருசொல். பொருள்பல புரிந்து புறத்தொடுங்கினர் என மாறுக.

௪. புறத்தொடுங்கியது முற்றிற்று.

ரு. பதுமாபதி போந்தது

இதன்கண் : மகதமன்னனாகிய தருசக னியல்பும், அவன் தங்கையாகிய பதுமாபதியின் இயல்பும், பதுமாபதி காமவேள் கோட்டம் புகுவாள் என முரசறைதலும், நகரமாந்தர் காமவேளுக்கு விழாவெடுத்தலும்; பதுமாபதி புறப்படுதலும், அவள் ஏறும் வண்டி எருதுகளியல்பும், மகளிர் ஏந்திய பொருளியல்பும் பதுமாபதி வண்டியேற வருதலும் வண்டியேறிக் காமன் கோயில் செல்லலும் கூறப்படும்.

பொருள்புரி யமைச்சர் பூங்கழற் குருசிலோ
டிருளறு திருமணி யிராசகிரி யத்துப்
புறமதி லொடுங்கிய பொழுதின் மறனுவந்
தமரா மன்ன ரருஞ்சம முருக்கிப்
பைங்கழ லமைந்த பாடமை நோன்றாள்
வெண்கதிர் மதியின் வீற்றொளி திகழ்ந்து
தான்மீக் கூரிய வேம வெண்குடை
மணிமுடிச் சென்னி மகத மன்னவன்
தணியா வேகத்துத் தருசகன் றங்கை
பசும்பொற் கிண்கிணி பரடுசுமந் தரற்ற
அசும்பம ராமரை யலைத்த வடியினள்
சிறுபிடித் தடக்கையிற் செறிவொடு புணர்ந்து
மென்மையி னியன்று செம்மைய வாகி
நண்புவீற் றிருந்த நலத்தகு குறங்கினள்
மணியும் பவழமு மணிபெற நிரைஇய
செம்பொற் பாசிழை செறிய வீக்கிய
பைந்துகி லணிந்த பரவை யல்குலள்
துடிதோங் கூறிய விடுகிய நடுவிற்குப்
பார மாகிய வீரத் தானையள்
ஊக்க வேந்த னாக்கம் போல
வீக்கங் கொண்டு வெம்மைய வாகி
இலைப்பூண் டிளைக்கு மேந்திள முலையள்
திலதஞ் சுடருந் திருமதி வாண்முகத்
தலரெனக் கிடந்த மதரரி மழைக்கட்

கதிர்வளைப் பணைத்தோட் கணங்குழைக் காதிற்
புதுமலர்க் கோதை புனையிருங் கூந்தற்
பதுமா பதியெனும் பைந்தொடிக் கோமகள்
கன்னி யாயந் துன்னுபு சூழ
மதிற்புறங் கவைஇய புதுப்பூங் காவின்
மகர வெல்கொடி மகிழ்கணைக் காமற்கு
நகரங் கொண்ட நாளணி விழவினுள்
எழுநா டோறுங் கழுமிய காதலொடு
வழிபா டாற்றிய போதரு மின்றென
அழிகவுள் வேழத் தணியெருத் தேற்றிய
இடியுமிழ் முரசி னிருங்கண் டாக்கி
வடிவேற் கொற்றவன் வாழ்கெனப் பல்லூழ்
அணித்திரட் கந்தின் மணிப்பொற் பலகைச்
சித்திர முதுசுவர் வித்தக வேயுள்
ஆவணந் தோறு மறைந்தறி வுறுத்தலின்
இடையற வில்லாக் கடைமுத றோறும்
கைவ லோவியர் மெய்பெற வெழுதிய
உருவப் பூங்கொடி யொசிய வெடுத்துத்
தெருவு மந்தியுந் தெய்வச் சதுக்கமும்
பழமண னீக்கிப் புதுமணற் பரப்பி
விண்மிசை யுலகின் விழவமைந் தாங்கு
மண்மிசை யுலகின் மன்னிய சீர்த்தி
முழவுமலி திருநகர் விழவுவினை தொடங்க
அரும்பொறி நுனித்த யவனக் கைவினைப்
பெரும்பொறி வையத் திருந்தியாப் புறீஇ
மங்கலச் சாந்தின் மலர்க்கொடி யெழுதிப்
பைம்பொற் பத்திரம் புளகமொடு வீக்கிக்
கதிர்நகைத் தாம மெதிர்முக நாற்றிப்
பத்திர மாலை சித்திர மாகப்
புடைப்புடை தோறுந் தொடக்கொடு தூக்கிக்
கட்டி தோய்த்த காழகி னறும்புகை
பட்டுநிணர் கட்டிற் பல்படை குளிப்ப
உள்ளக மருங்கின் விள்ளாக் காதற்
றுணைநலத் தோழியர் துப்புர வடக்கி
அணிநலத் தோழிக் கமைந்தன வியற்றி

சேய்நிறங் கொண்ட பைந்நிற மஞ்சளின்
வைம்மருப் பணிபெற வண்ணங் கொளீஇக்
கைவினைக் கண்ணி கவின்பெறச் சூட்டித்
தகைமலர்ப் பொற்றார் வகைபெற வணிந்து
காண்டகு வனப்பிற் காலியற் செலவிற்
பாண்டில் வையம் பண்ணிப் பாகன்
கோலுடைக் கையிற் கூப்புவன னிறைஞ்சி
வையம் வந்து வாயி னின்றமை
தெய்வ மாதர்க் கிசைமின் சென்றென
இசைத்த மாற்றத் துரைப்பெதிர் விரும்பிப்
போதுவிரி தாமரைத் தாதகத் துறையும்
தீதுதீர் சிறப்பிற் றிருமக ளாயினும்
உருவினு முணர்வினு மொப்புமை யாற்றாத்
தெரியிழை யல்குற் றேமொழிக் குறுமகள்
பாவையும் பந்துங் கழங்கும் பசும்பொற்
றூதையு முற்றிலும் பேதை மஞ்ஞையும்
கிளியும் பூவையுந் தெளிமணி யடைப்பையும்
கவரியுந் தவிசுங் கமழ்புகை யகிலும்
சாத்துக் கோயும் பூத்தகைச் செப்பும்
இன்னவை பிறவு மியைய வேந்தி
வண்ண மகளிர் வழிநின் றேத்திச்
சென்னச் சேவடி போற்றிச் சேயிழை
மென்மெல விடுகெனப் பன்முறை பணிய
ஒண்சேங் காந்தட் கொழுமுகை யுடற்றிப்
பண்கெழு தெரிவிர லங்கை சிவப்ப
மயிலெருத் தணிமுடி மாதர்த் தோழி
கயிலெருத் தசைத்த கைய ளாகித்
தாழியுண் மலர்ந்த தண்செங் குவளை
ஊழுறு நறும்போ தொருகையிற் பிடித்து
விண்ணக மருங்கின் வேமா னியர்மகள்
மண்ணகத் திழிதர மனம்பிறழ்ந் தாங்குக்
கன்னிக் கடிநகர்ப் பொன்னிலத் தொதுங்கி
விடுகதிர் மின்னென விளங்குமணி யிமைப்ப
இடுமணன் முற்றத்து மெல்லென விழிதர

வாயில் போந்து வைய மேறிற்
சாய ஞேமெனத் தாயகட் டெடுத்துப்
போற்றுப்பல கூற வேற்றுவன ளிருப்பப்
பாகனை யொழித்துக் கூன்மகள் கோல்கொளப்
போதியிற் சோலையுட் கதிரெனக் கவினிய
கருங்கட் சூரற் செங்கோல் பிடித்த
கோற்றொழி லாளர் மாற்றுமொழி விரவி
நலத்தகு நங்கை போதரும் பொழுதின்
விலக்கரும் வேழம் விடுதி ராயிற்
றாயப் படுதிர் காவலன் பணியென
வாயிற் கூறி வழிவழி தோறும்
வேக யானைப் பாகர்க் குணர்த்தி
உட்குவ ருருவங் கட்புல மருங்கிற்
காண விடாஅ ராணையி னகற்றிக்
கச்சுப்பிணி யுறுத்துக் கண்டகம் பூண்ட
அச்சுறு நோக்கி னறுபது கழிந்த
காஞ்சுகி மாக்கள் சேர்ந்துபுடை காப்பக்
கண்டோர் விழையுந் தண்டாக் காதலோ
டருந்தவ முண்மை யறிமி னீரெனப்
பெருஞ்சாற் றறாஉம் பெற்றியள் போலப்
பைந்தொடி மகளிர் நெஞ்சுநிறை யன்போடு
வண்ண மலருஞ் சுண்ணமுந் தூவ
அநங்கத் தானத் தணிமலர்க் காவிற்
புலம்படை வாயில் புக்கனள் பொலிந்தேன்.

உரை

ரு. பதுமாபதி போந்தது

அஃதாவது - பதுமாபதி காமன் கோயிலை அடைந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

மகத மன்னவன்

க-சு : பொருள்..............நங்கை

(பொ-ரை.) எதிர் காலத்திற்கு ஆக்கந் தருகின்ற செயல்களை விரும்பிச் செய்கின்ற உருமண்ணுவா முதலிய அமைச்சர் பொலி

வுடைய வீரக்கழலணிந்த வேந்தனாகிய உதயணனோடு இருளறு தற்குக் காரணமான மணிமண்டபங்களையுடைய இராசகிரிய நகரத்தின் புறத்தே கரந்துறைந்த காலத்தே மறச்சிறப்பினை விரும்பிப் பகை மன்னரோடு செயற்கரிய போர் செய்து வென்று பசிய வீரக் கழலணிந்த பெருமை பொருந்திய வலிய முயற்சி யினாலே வெள்ளிய கதிரையுடைய முழுத்திங்கள் போன்று மிக்க ஒளியாலே பிறமன்னர் குடைகளினும் காட்டிற் றலைசிறந்த உயிர் கட்குப் பாதுகாவலாக வமைந்த வெண்கொற்றக் குடையினையும் மணி பதித்த கொற்ற முடிபுனைந்த சென்னியினையும் உடைய மகத நாட்டரசனாகிய தணியாத சினத்தையுடைய தருசகனு டைய தங்கையாகிய என்க.

(வி - ம்.) அமைச்சர்-உருமண்ணுவா முதலியோர். அமரா மன்னர்- பகையரசர். பாடு - பெருமை. நோன்றாள் - வலிய காலுமாம். வீறு- வேறொன்றற்கில்லாத சிறப்பு; மீக்கூரிய - மீக் கூர்ந்த; தலை சிறந்த. வேகம் - சினம். தங்கையாகிய பதுமாபதி (உஎ) என இயையும்.

பதுமாபதியின் அடிமுதல் முடிவரையமைந்த அழகு

௬0-௧௧: பசும்பொன்.........நாளையள்

(பொ - ரை.) பசிய பொன்னாலியன்ற கிண்கிணியணி தன் காற் பரட்டாற் சுமக்கப்பட்டு ஒலியா நிற்கும் நீருற்றின் கண் தோன்றிய தாமரை மலரைத் தோற்பிக்கும் அழகுடைய சிற்றடி களையுடையவளும், சிறிய பிடி யானையின் பெரிய கை போன்றன வாய் ஒன்றனோடொன்று நெருங்கிச் சேர்ந்து மென்மைப் பண் பின் மிகுந்து செம்மையுடையனவுமாகிக் கேண்மைப் பண்பு வீற்றி ருந்த அழகாலே தகுதிபெற்ற துடைகளையுடையவளும், மாணிக்க மும் பவழமும் அழகுண்டாக நிரல் படக் கோத்த செம்பொற்பசிய மேகலை அணிகலன் பொருந்தக் கட்டிய பசிய ஆடையணிந்த பரந்த அல்குலையுடையவளும், உடுக்கையைப் பழித்த நுண்ணிய இடைக்குச் சுமையாகிய மற முன்றானையையுடையவளும் என்க.

(வி - ம்.) கிண்கிணி பரட்டாற் சுமக்கப்பட்டு அரற்ற என்க. அசும்பு - நீருற்று. அமலுதல் - தோன்றுதல், செறிதலுமாம். இளமைக்குச் சிறுபிடி கூறினர். "ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித் தடக்கையிற் சேர்ந்துடன் செறிந்த குறங்கு" என்றார் சிறுபாணி னும் (௧௧௨0). குறங்கு - துடை. மணி - மாணிக்கம். துடி-உடுக்கை. தோம் - குற்றம். நடு - இடை. கன்னியாகலின் அல்குற்குக் காவலா யமைந்து ஆடவரை அச்சுறுத்தலான் ஆடைக்கு மறங்கூறினர்.

(இதுவுமது)

௨0 - ௨௭: ஊக்க.........கோமகன்

(பொ - ரை.) ஆள்வினையின்கண் மடிதலின்றிப் பெரிதும் மனக் கிளர்ச்சியையுடைய மன்னனுடைய பொருட்பெருக்கம்

போன்று பெருத்து வெப்பமுடையனவாகி, இலைத்தொழி லமைந்த அணிகலன்கள் தழுவாநின்ற ஏந்திய இளமையுடைய முலைகளை யுடையவளும், திலகம் ஒளிருகின்ற அழகிய திங்கள் போன்ற ஒளி படைத்த முகத்தின்கண்ணே செந்தாமரை மலர் கள்போன்று அமைந்துகிடந்த மதர்த்த செவ்வரிபரந்த குளிர்ந்த விழிகளையும், ஒளிவீசும் வளையணிந்த பருத்த தோள்களையும், கனவிய குழையணிந்த செவிகளையும், புதிய மலர்மாலையணிந்த கரிய கூந்தலையும் உடையவளும் ஆகிய பதுமாபதி என்னும் பசிய குறுந்தொடியணிந்த இறைமகள் என்க.

(வி - ம்.) ஊக்கம் - மனக் கிளர்ச்சி. "ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா, ஊக்க முடையா னுழை" என்னும் அருமைத் திருக்குறளையும் (௫௯௪) ஈண்டு நினைக. இலைப்பூண் - இலைபோன்ற உருவம் அமைத்த அணிகலன், திலதம் - நெற்றிச்சுட்டி; பொட்டு மாம்; அலர் - மலர். செந்தாமரை மலர் என்க. அரி - செவ்வரி. தொடி - வளை கழலாமைக்கு இடும் ஓரணிகலன்.

முரசறைதல்

உ௮ - ௩௬ : கன்னி.........அறிவுறுத்தலின்

(பொ-ரை.) தன்னுடைய கன்னியராகிய தோழியர் கூட்டம் தன்னைச் சூழ்ந்து வாராநிற்ப நகரமதிலின் புறத்தே வளைந்த புது மலர்க்காவிலே மகரமீன் எழுதப்பட்டதும் அனைவரையும் வெல்லும் ஆற்றலுடையதும் ஆகிய கொடியினையும், கூடிமகிழ் தற்குக் காரணமான மலர்களையும் உடைய காமதேவனுக்கு நமது நகரம் எடுக்கின்ற திருநாளாகிய அழகிய விழவினூடே ஏழு நாளும் நிறைந்த அன்போடே அக்கடவுளை வழிபாடு செய்தற்கு இற்றைநாள் எழுந்தருளுவாள் என்று கூறி வள்ளுவர் மதநீரால் சிதைந்த கவுளையுடைய யானையின் அழகிய எருத்தின் கண்ணே ஏற்றப்பட்ட இடிபோன்று முழங்கும் முரசத்தின் கரிய கண்ணிலே குணிலாலே தாக்கி "வடித்த வேலையுடைய வெற்றியுடைய நம்மரசர் பெருமான் வாழ்வானாக!" என்று வாழ்த்திப் பன்முறை யும் நிரல்பட்ட திரண்ட தூண்களையும் மணிபதித்த பொன்னு லியன்ற பலகைகளையும் சித்திரமுடைய பழைய சுவர்களையும் வித்தகத் தொழிலாலே இயற்றிய கூரையினையும் உடைய அங்காடித் தெருத்தோறும் முழக்கி அறிவுறுத்தலாலே என்க.

(வி - ம்.) தருசகன் தங்கை பதுமாபதி எனுங் கோமகள் இன்று போதரும் என்று முரைசறைந்து அறிவுறுத்தலின் என்க. ஆயம் - தோழியர் கூட்டம். கவைஇய - வளைந்துகிடந்த. நகரம் - நகர மாந்தர். ஆகுபெயர். கழுமிய - நிறைந்த. ஆற்றிய - ஆற்றற்கு. இன்று போதரும் என மாறுக. இடியுமிழ்; உவமத்தொகை. கண் - முரசின்பக்கம். பல்லூழ் - பன்முறையும். கந்து - தூண். வித்தகம் - சிற்ப முதலிய கலைப்பண்பு. ஆவணம் - கடைத்தெரு.

நகரமாந்தர் விழாத் தொடங்கல்

சுo - சஎ : இடை.........தொடங்க

(பொ - ரை.) நிலவுலகத்தின்கண் நிலைபெற்ற சீர்த்தியை யுடைய முழவொலிமிக்க அழகிய அவ்விராசகிரிய நகரத்துமாந்தர் மகிழ்ந்து இடையீடில்லாத தத்தம் முன்றில்தோறும் கைத்தொழி வில் வல்லுநரான ஓவியர் உண்மையுருவம் போன்று தோன்றும் படி வரைந்த உருவங்களையுடைய அழகிய கொடிகளை வானத்தே நுடங்கி ஆடும்படி உயர்த்தி, தெருக்களினும் முச்சந்திகளினும் தெய்வங்களையுடைய நாற்சந்திகளினும் பழைய மணலை அகற்றிப் புதுமணல் கொணர்ந்து பரப்பி வானுலகத்தே விழவணி செய் தாற்போன்று திருவிழாச் செயலைத் தொடங்கா நிற்ப வென்க.

(வி - ம்.) கடைமுதல் - முற்றில். மெய்பெற - உண்மையுருவம் போன்று தோன்றும்படி. ஓசிய - நுடங்க. அந்தி - முச்சந்தி. சதுக்கம் - நாற்சந்தி. நாற்சந்திகளிலே கோயில்கள் இருத்தல் தோன்றத் தெய்வச் சதுக்கம் என்றார். சீர்த்தி - மிகுபுகழ். நகர் - நகரமாந்தர்.

(பாகன் செயல்)

சஅ - ருகூ : அரும்பொறி.........இயற்றி

(பொ-ரை.) செயற்கரிய பொறிகளைக் கூர்ந்துணர்ந்து இயற் றும் யவனர்கள் கைத்தொழிலாணியன்ற பெரிய பொறிகளை யுடைய வண்டியைத் திருத்தமாகக் கோத்து மங்கலமான சந்தனத்தாலே மலர்க்கொடிகளை எழுதிப் பசிய பொன்னாலி யன்ற இலையுருவங்களைக் கண்ணாடிகளோடு ஒளிமிக்க முத்து மாலைகளை முகப்பின்கண் தூங்கவிட்டுப் பொன்னாலியன்ற இலை மாலைகளைப் பக்கங்கள் எங்கும் சித்திரம் வரைந்தாற்போலே கொக்கிகளிலே தூங்கவிட்டு, நேர்கட்டி தோய்த்த முற்றிய அகிலை யிட்டுப் புகைத்த நறுமணப்புகையிலே பட்டினாற் பிணித்த கட்டி லின் மேலிட்ட பலவாகிய அடுக்குமெத்தைகள் மறையும்படி புகைத்து அவ்வண்டியின் அகத்தேயமைந்த பக்கங்களிலே வேறு படாத அன்பையுடைய தோழியர் கொணர்ந்த நுகர் பொருள் களை அடக்கிவைத்துப் பதுமாபதியின் உசாத்துணைத் தோழிக்கு வேண்டிய இருக்கை முதலியனவற்றையும் அமைத்தென்க.

(வி - ம்.) பொறி - இயந்திரம். யாப்புறீஇ - கோத்து. பொற் பத்திரம் - பொன்னாலியன்ற இலைகள். புளகம் - கண்ணாடி. நகைத் தாமம் - முத்துமாலை, தொடக்கு - கோக்கி. இதனை இக்காலத்தார் கொக்கி என்று வழங்குப. கட்டி - புகையுறுப்புக்களுள் ஒன்றாகிய நேர்கட்டி. இதனை, "நேர்கட்டி செந்தே னிரியாசம் பச்சிலை ஆரமகிலுறுப் போடாறு" என்பதனாலுணர்க (சிலப் - இ: கச அடியார்க்கு நல்லாருரை) அகிலுறுப்பு ஆறாகவும் தலைமைபற்றிக்

கட்டியொன்றே கூறியொழிந்தார். புகையில் குளிப்பப் புகைத் தென்க. தோழியர் கொணர்ந்த துப்புரவு என்க. துப்புரவு - நுகர் பொருள். அணிநலத் தோழி என்றது உசாத்துணைத் தோழியை.

(வண்டி யெருதுகளின் மாண்பு)

சுO - சுஅ : நெய்.........சென்றெனு

(பொ-ரை) நெய்யின் நிறம்போன்ற நிறமமைந்த பசுமஞ்ச ளாலே கூரிய கொம்புகள் அழகெய்தும்படி வண்ணந்தீற்றிக் கைத்தொழிலாற் சிறந்த நெற்றிமாலையை அழகாகச் சூட்டி அழகிய பொன்மலர் மாலையைத் தகுதியாக அணிந்து விரும்பிக் காண்டற்குத் தகுந்த அழகினையும் காற்றெனு விரைந்து செல்லும் செலவினையும் உடைய நரையெருதுகள் பூட்டப்பட்ட அவ்வண்டியைப் பண்ணுறுத்தித் தாற்றுக் கோலையுடைய கையையுடைய வண்டிப்பாகன் வந்து காவன் மகளிரைக் கைகூப்பி வணங்கி நின்று நீயிர் சென்று வண்டி வந்து வாயிலிலே நிற் பதனை நந்தெய்வம்போன்ற கோமகளுக்குக் கூறுங்கோள் என்று கூறு நிற்ப என்க.

(வி - ம்.) வைமருப்பு - கூரிய கொம்பு. கண்ணி - நெற்றிமாலை. கவின் - அழகு. காலியல் - காற்றைப்போன்று விரைந்துசெல்லுந் தன்மை. கோல் - தாற்றுக்கோல், தெய்வமாதர் - பதுமாபதி.

பதுமாபதி மாண்பு

சுகூ - எகூ : இசைந்த.........குறுமகள்

(பொ - ரை.) பாகன் கூறிய மொழியைத் தன்பால் கூறிய வுடன் பெரிதும் விரும்பி இதழ் விரிந்த தெய்வத் தாமரை மலரின் தாதுகளின் மேல் வீற்றிராநின்றவளும், உயிர்களின் தீங்கினைத் தீர்க்குஞ் சிறப்பினையுடையவளும் ஆகிய திருமகள் தானும் அழகானும் உணர்வினானும் தனக்கு உவமையாகமாட்டாத சிறப்பினையுடைய ஆராய்ந்தணிந்த அணிகலன்களையுடைய அல்குலினையும் இனிய மொழிகளையும் உடைய இளமகளாகிய பதுமாபதி என்க.

(வி - ம்.) உரைப்பு - கூறுதல். தாது - பூந்துகள். தீது - வறுமை. உரு - அழகு. உணர்வு - அறிவு. குறுமகள் - இளமகள்.

மகளிர் ஏந்திய பொருள்கள்

எச - எகூ : பாவையும்.........ஏந்தி

(பொ-ரை.) விளையாட்டுப் பாவையும் பந்தும் கழங்கும் பசிய பொன்னாலியன்ற பானையும் சிறுசுளகும் மடமயிலும் கிளியும் நாகணவாய்ப் புள்ளும் தெளிந்த ஒளிமணிபதித்த அடைப்

பையும் சாமரையும் இருக்கைகளும் நறுமணங்கமழும் புகையை யுடைய அகிற்குறடும் சாந்திட்டுவைக்கும் உக்கோயும் மலரிட்டு வைக்கும் அழகிய செப்பும் இன்னோரன்ன பிறவுமாகிய பொருள் களை நிரல்பட ஏந்திவந்து என்க.

(வி - ம்.) தூதை - சிறுபானை. முற்றில் - சிறு சுளகு. பெண் தன்மையுடையதாகலின் பேதைமஞ்ஞை என்றார். மஞ்ஞை - மயில். பூவை - நாகணவாய்ப்புள். அடைப்பை-வெற்றிலைப்பை. உக்கோய் - பரணி என்னுமொரு சிமிழ்.

(பதுமாபதி வண்டியேற வருதல்)

அ0 - கூக : வண்ண.........இழிதர

(பொ-ரை.) பணிமகளிர் வழியிலே நின்று வாழ்த்திப் பரவிச் சிவந்த அணிகலன்களையுடைய கோமகளே! நினது அழகிய சிவந்த திருவடியினை மெல்ல மெல்ல வைத்தருள்க என்று பலகாலும் போற்றுக் கூறி வணங்கா நிற்ப, ஒள்ளிய செங்காந்தளினது வளவிய அரும்பை வென்று பண்பயின்ற ஆராய்ந்து காண்டற்குரிய விரலையுடைய அழகிய தன்கை சிவக்கும்படி மயிலின் கழுத்தின் நிறம்போன்ற நிறமுடைய அழகிய கூந்தலையும் அன்பையுமுடைய தோழியினது அணிகலன்களின் பொருத்துவாயையுடைய பிடரினகண் இட்ட ஒரு கையையுடையவளாய் மற்றொரு கையில் தாழியில் வைத்து வளர்க்கப்பட்டு மலர்ந்த குளிர்ந்த செங்குவளையின்கண் ஊழ்த்த நறிய மலரினைப் பிடித்து, விண்ணுலகத்திலுறையும் வேமானியர் மகள் ஒருத்தி தன் மனந்திரிந்து இந்நிலவுலகத்தே வாழ்தற்கு வந்தாற்போலக் காவலையுடைய கன்னிமாடத்தினது பொன்றளமிட்ட தரையினின்று ஒளிவீசும் மின்னல்போன்று விளங்காநின்ற அணிகலன்கள் சுடரக் கொணர்ந்து பரப்பிய புதுமணலையுடைய முன்றிலிலே மெல்ல இறங்கி வாராநிற்ப என்க.

(வி - ம்.) சேயிழை - விளி. பண் - யாழ் குழல் முதலியவற்றி லெழும் பண். கெழு - பயின்ற. தெரிவிரல் : வினைத்தொகை. பலரும் ஆராய்ந்து நன்றென்றற்குக் காரணமான விரல் என்க. கயில் - அணிகலன்களின் பொருத்துவாய்; பிடருமாம். ஊழுறு நறுமலர் - ஊழ்த்தலுற்ற நறியமலர். வேமானியர் - தேவருள் ஒருவகையினர். இவர்கள் விமானத்திலே செல்லுதலாலே இப்பெயருடையராயினர். கடிக்கன்னி நகர் என்க. இடுமணல் - கொணர்ந்திட்ட மணல்.

(பதுமாபதியைச் செவிலித்தாய் வண்டியேற்றுதல்)

கூச-கூக : வாயில்............இருப்ப

(பொ - ரை.) அங்ஙனம் இறங்கியவள் முற்றத்தே நடந்து வந்து வண்டியிலேறின் அவளுடைய மென்மைத் தன்மையாலே

பெரிதும் வருந்தாநிற்பள் என்றுட்கொண்டு செவிலித்தாய் அவளைத் தன் வயிற்றிலே அணைத்தெடுத்துக் கொடுபோய்த் தோழியர் வாழ்த்துக்கள் பலவுங் கூறுநிற்ப வண்டியிலே ஏற்றுத லாலே பதுமாபதி வண்டியிலே அமர்ந்திராநிற்ப என்க.

(வி - ம்.) வையம் - வண்டி. சாயல் - மென்மை. மென்மை யுடைமையாலே நோமென்க. தாய் - செவிலி. தோழியர் போற்றுக் கூற என்க. அகட்டெடுத்து - வயிற்றிலணைத் தெடுத்து.

(காவலர் செயல்)

௬௭-௯௦௫ : பாகனை..........உணர்த்தி

(பொ - ரை.) அவ்வண்டியைப்பண்ணுறுத்திக் கொணர்ந்த பாகனை அகற்றிவிட்டு ஐராவதி என்னுங் கூன்மகள் கோலேந்தி நடத்தாநிற்பப் பொதியமலைச் சோலையிலே ஞாயிற்றின் கதிர்கள் போன்று அழகுடையனவாக வளர்ந்த கரிய கணுக்களையுடைய பிரம்பாகிய செவ்விய கோல்களைப்பற்றிய தொழிலையுடைய காவலாளர் வழியிலுள்ளாரை மாற்றுதற்குரிய ஆணை மொழிகளை விரவிச் சினமிக்க யானைகளின் பாகர்களை நோக்கி நீயிர் பெண்மை நலத்தால் தகுதிபெற்ற நங்கையாகிய நங்கோமகள் பதுமாபதி வரும்பொழுது தடுத்தற்கரிய யானைகளைச் செலுத்துவீராயின் ஒறுக்கப்படுவீர்! இஃது அரசன் ஆணையென்று வாயினாலே எடுத்துச் சொல்லி வழியெங்கணும் கூறி அறிவியாநிற்ப என்க.

(வி - ம்.) பாகன் - அவ்வண்டிக்குரிய பாகன். மகளிர் ஊர்தியை மகளிரே ஊர்தல் மரபு. கூன்மகள் - அயிராபதி என்னும் ஒரு கூன் மகள்; இவள் பதுமாபதியின் தோழி. நங்கை - பதுமாபதி. இது காவலன் பணி என்க. உணர்த்தி - உணர்த்த.

(காஞ்சுகி மாக்கள் செயல்)

௧௦௬ - ௧௧௦ : உட்கு..........காப்ப

(பொ-ரை.) காண்போர்க்கு அச்சம் வருதற்குக் காரணமான உருவமுடையோர்களைப் பதுமாபதி தன் கண்ணெதிரே காணாதிருத்தற் பொருட்டு ஆணை கூறி அகற்றி இடையிலே கச்சை யிறுக்கி உடைவாளைக் கையிலே பற்றியவரும் காண்போர் அஞ்சும் நோக்குடையோரும் அறுபதுயாண்டைக்கடந்த முதுமை யுடையோருமாகிய காஞ்சுகி மாக்கள் அணுகி நின்று பக்கங்களிலே பாதுகாவல் செய்து வாராநிற்ப என்க.

(வி - ம்.) காஞ்சுகி மாக்கள் உட்குவரும் உருவமுடையாரை அகற்றிக் காப்பவென்க. கண்டகம் - உடைவாள். மகளிரைக் காக்குங் காவலர் ஆகலின் முதுமையுடையராதல் வேண்டிற்று. காஞ்சுகி மாக்கள் - மெய்ப்பை புக்கவர்.

(பதுமாபதி காமன் கோயிலையடைதல்)

கககூ - கூகள : கண்டோர்............பொலிந்தென்

(பொ - ரை.) இவ்வாறு பதுமாபதி தன்னைக் கண்டோரெல்லாம் ஆர்வமுறுதற்குக் காரணமான பேரன்போடு உலகினர்க்குச் செயற்கரிய தவம் என்று ஒன்றுண்டு அதனை என் வாயிலாய் அறிந்து கொண்மின் என்று முரசறைந்து கூறுவாள் போன்று பசிய தொடியணிந்த மகளிர்தம் நெஞ்சு நிறைந்த அன்போடு நிறமிக்க மலர்களையும் சுண்ணங்களையும் தூவாநிற்பச் சென்று பொலிவுடையளாய்க் காமவேள் கோயிலைச் சார்ந்த அழகிய பூம்பொழிலிலே புகுந்து ஆங்கு பிறர் யாருமில்லாத தோர் இடத்தை எய்தினள் என்க.

(வி - ம்.) காஞ்சுகி மாக்கள் - மெய்ப்பையிட்ட காவலர்கள். தண்டா - அமையாத. கக௨-ரு. இவ்வடிகளின் கருத்தோடு "அறத்தா றிதுவென வேண்டா சிவிகை, பொறுத்தா னொடூர்ந்தா னிடை" என்னும் திருக்குறளின் கருத்தையும் நினைக.

அநங்கத்தானம் - காமன் கோயில்.

ரு. பதுமாபதி போந்தது முற்றிற்று.

௬. பதுமாபதியைக் கண்டது

இதன் கண்: காமன் கோட்டத்தையடைந்த பதுமாபதியை உதயணன் காண்டலும், அவனை அவள் காண்டலும், இருவர் மன நிலைகளும், பதுமாபதி காமன் கோயிலை வலம்வருதலும், தானம் வழங்கலும், ஒருத்தி காமவேளை வாழ்த்திப் பாடுதலும், பதுமாபதி அரண்மனை சேர்தலும், பதுமாபதி கட்டிலேறியிடுதலும், உதயணன் கூனியை வினவுதலும் அவள் விடைகூறலும், கூனி உதயணனை வினவுதலும், அவன் விடைகூறுதலும் கூன்மகள் போதலும் கூறப்படும்.

வாயில் புக்கபின் வைய நிறீஇ
ஆய்வளைத் தோழி யகம்புக் கருளென
வைய வலவன் வந்தனன் குறுகிப்
பூண்ட பாண்டியம் பூட்டுமுதல் விட்டபின்
மஞ்சுவிரித் தன்ன வைய வாயிற்
கஞ்சிகை கதுமெனக் கடுவளி யெடுப்ப
வெண்முகிற் பிறழு மின்னென நுடங்கித்
தன்னொளி சுடருந் தையலை யவ்வழிக்
குறுஞ்சினைப் புன்னை நறுந்தா தாடிக்
கருங்குயிற் சேவ றன்னிறங் கரந்தெனக்
குன்றிச் செங்க ணின்றுணைப் பேடை
உணர்தல் செல்லா தகமுறும் விரும்பிப்
புணர்த லுணர்வொடு போங்குசிறை யுளரி
அளிக்குர லழைஇத் தெளித்துமன நெகிழ்க்குமக்
குயிற்புணர் மகிழ்ச்சி யயிற்கூட் டமைத்த
செஞ்சுடர் வேலி னெஞ்சிடம் போழத்
தன்ஞாழ் நவிற்றிய தாமரை யங்கைப்
பொன்ஞாண் டுயல்வரும் போங்கிள வனமுலை
மனைப்பெருங் கிழத்தியை நினைத்தன னாகிச்
செம்மை நெடுங்கண் வெம்மை யுறாஅத்
தெண்பனி யுறைத்தரத் திருத்துஞ் சகலத்துப்
பொன்பூத் தன்ன வம்பூம் பசப்போடு
நாண்மலர்ப் புன்னைத் தாண்முதல் பொருந்திக்

கோடிக்குருக் கத்திக் கோலச் சேந்தளிர்
பிடித்த விரலின னாகிக் கேடுத்த
அவந்திகை மாத ரணிநல நசைஇக்
கவன்றன னிருந்த காலை யகன்று
போமின் போமி னென்றுபுடை யோட்டும்
காவ லாளரைக் கண்டிவட் புகுதரும்
உரிமை யுண்டேன வரிமா னன்ன
வெஞ்சின விடலை நெஞ்சுநிறை துயரமோடு
நீக்கச் சென்றனே னொருந லின்றிவண்
நீக்கப் பட்டனே னாதலி னிலையா
ஆக்கமுங் கேடும் யாக்கை சார்வா
ஆழிக் காலிற் கீழ்மேல் வருதல்
வாய்மை யாமேன மனத்தி னினைஇ
நீங்கிய வெழுந்தோன் பூங்குழை மாதரை
வண்ணக் கஞ்சிகை வளிமுகந் தேடுத்துழிக்
கண்ணுறக் கண்டே தன்னமர் காதல்
மானேர் நோக்கின் வாசவ தத்தை
தானே யிவளேனத் தான்றெரிந் துணரான்
மந்திர விதியி னந்த ணாளன்
தந்தனன் மீட்டேனுஞ் சிந்தைய னாகி
உறுப்பினு நிறத்தினும் வேற்றுமை யின்மையின்
மறுத்து நோக்கு மறத்தகை மன்னன்
செஞ்சுடர் முகத்தே செருமீக் கூரிய
வெஞ்சின வேந்தர்க்கு நஞ்சுமிழ் நாகத்துத்
தீயோ ரன்ன திறல வாகி
முளையோர் முறுவன் முகிழ்த்த சின்னகை
இளையோர் நேஞ்சிற் றளைமுதல் பரிந்தவர்க்
கமிழ்தம் போதிந்த வருளின வாகித்
தலைப்பெருந் தாமரைச் செம்மல ரன்ன
நலத்தோடு புணர்ந்த விலக்கண நெடுங்கண்
வயப்பட லுற்று வயங்கிழை மாதர்
தானுங் கதுமேன நேர்முக நோக்க
நெஞ்சிறை கோளீஇய நிறையமை நெடுந்தாழ்
வெந்தொழிற் காம வேட்கை திறப்பத்

திண்பொறி கலங்கித் திறல்வே றாகி
வேலை யெல்லை மீதூர்ந் திரண்டு
கோலப் பெருங்கடல் கூடி யாங்கும்
இசைந்த வனப்பி னேயர் மகற்கும்
பசைந்த காதற் பதுமா பதிக்கும்
யாப்புறு பால்வகை நீப்புற வின்றிப்
பிறப்புவழிக் கேண்மையிற் சிறப்புவழி வந்த
காமப் பெருங்கடல் கண்ணுறக் கலங்கி
நிறைமதி யெல்லைத் துறையிகந் தூர்தர
நன்னகர் கொண்ட தன்னமர் விழவினுட்
கரும்புடைச் செல்வன் விரும்பு தோன்றித்
தன்னலங் கதுமெனக் காட்டி யென்னகத்
திருநிறை யளத்தல் கருதிய தோன்றுகொல்
அந்தண வடிவோடு வந்திவட் டோன்றி
மேவன நுகர்தற்கு மாயையி னிழிதரும்
தேவ குமரன் கொல்லிவன் றெரியேன்
யாவ னாயினு மாக மற்றென்
காவ னெஞ்சங் கட்டழித் தனனென
வெஞ்சின விடலையொடு நெஞ்சுமா றாடி
உலைப்பருந் தானை யுதயண குமரற்
கிலைக்கொழுந்து குயின்ற வெழில்வளைப் பணைத்தோள்
உரிய வாயின வுணர்மி னென்றுதன்
அரிமதர் நெடுங்க ணயனின் றோர்க்கும்
அறியக் கூறுத லமர்ந்தன போல
நெறியிற் றிரியா நிமிர்ந்துசென் றோட
வளங்கெழு மாவி னிளந்தளி ரன்ன
நயத்தகு மேனியு நல்லோர் நாடிய
பயப்புள் ளுறுத்த படியிற் றாகக்
கைவரை நில்லாப் பையு ளொடுக்கி
உட்கு நாணு மொருங்குவந் தடைதர
நட்புடைத் தோழி நண்ணுவன ளிறைஞ்சு
மேதகு வையத்தின் மெல்லென விழிந்து
தாதுகு புன்னைமலர்த் தண்பூங் காவினுட்
சூடக முன்கைச் சுடர்க்குழை மகளிரோ

டாடுத லானு வவாவொடு நீங்கி
வனப்பெனப் படூஉந் தெய்வந் தனக்கோர்
உருவுகொண் டதுபோற் றிருவிழை சுடரத்
தன்னமர் தோழி தன்புறத் தசைஇ
அன்ன நாண வண்ணலைக் கவற்றுப்
பொன்னரிக் கிண்கிணி புடைபெயர்ந் தரற்ற
அரிச்சா லேகத் தறைபல பயின்ற
திருக்கிளர் மாடஞ் சேர்ந்துவலங் கொண்டு
கழிபெருஞ் சிறப்பிற் கன்னி மகளிர்
அழியுந் தான மவ்விடத் தருளி
நான்முகன் மகளிர் நூன்முதற் கிளந்த
ஒழுக்கிற் றிரியா னுறுபொருள் வேண்டும்
வழுக்கா வந்தணர் வருக யாவரும்
விலக்கவு நீக்கவும் பெறீஇ ரென்றுதன்
தலைத்தாண் முதியர்க்குத் தானே கூறி
நோன்புமுத றொடங்கித் தேங்கமழ் கோதை
தலைநாட் டானந் தக்கவை யளித்தலிற்
பலநா ளேற்ற பயனுண் டெனினே
வளமையும் வனப்பும் வண்மையுந் திறலும்
இளமையும் விச்சையு மென்றிவை பிறவும்
இன்பக் கிழமையு மன்பே ருலகினுள்
யாவர்க் காயினு மடையு மடையினும்
வார்கவுள் யானை வணக்குதற் கியைந்த
வீணை விச்சையொடு விழுக்குடிப் பிறவரிது
விழுக்குடிப் பிறந்திவ் வீறொடு விளங்கிய
வழுக்கா மரபின் வத்தவர் பெருமகன்
உதயண குமரனொ டொப்போன் மற்றிவள்
புதைபூண் வனமுலைப் போகம் பெறுகென
மரபறி மகடூஉப் பரவினள் பாட
அன்ன னாக வென்னயந் தோனெனப்
பொன்னிழை மாதர் தன்மனத் திழைப்பத்
தலைநாட் டான மிலக்கணத் தியைந்தபின்
மாயிரு ஞாலத்து மன்னவன் மகளே
ஞாயிறு படாமற் கோயில் புகுதல்

இன்றை நன்னாட் கியல்புமற் றறிகெனத்
தோன்றியன் மகளிர் தொழுதனர் கூறச்
செய்வதை யறியலள் வெய்துயிர்ப் பளைஇத்
தெய்வத் தானம் புல்லென வையத்
திலங்கிழை மாத ரேற்ற வேறிப்
பொலங்தொடி மகளிர் பொலிவொடு சூழ
வந்த பொழுதிற் கதுமென நோக்கிய
அந்த ணாளற் கணிநல ளொழியப்
பெருநகர் புகழத் திருநகர் புக்கபின்
இகலடு தானை யிறைமீக் கூறிய
தவலரும் வென்றித் தருசகன் றங்கை
கொங்கலர் கோதை நங்கைநம் பெருமகள்
புகழ்தற் காகாப் பொருவில் கோலத்துப்
பவழச் செவ்வாய்ப் பதுமா பதிதன்
கன்னி நோன்பின் கடைமுடி விதனொடு
முன்னி முற்று மின்ன தீமென
நச்சுவனர் வரூஉ நான்மறை யாளரை
அச்சங் கொள்ள வகற்றன்மி னென்றுதன்
ஆணைவைத் தகன்றனள் யாண ரமைத்தவிஃ
தறிமி னீரெனப் பொறியமை புதவிற்
கடைமுதல் வாயிற் கடுங்காப் பிளையரை
அடைமுது மாக்க ளமைத்தகன் றமையிற்
கண்டோர் பெயர்த்துக் காண்ட லுறாஉம்
தண்டா வனப்பின் றகைமைய ளாகிய
கன்னி யாகங் கலக்கப் பெறீஇயரெனப்
பன்மலர்க் காவினுட் பகலு மிரவும்
உறையு ளெய்திய நிறையுடை நீர்மை
இளையோ னமைந்த காலை மற்றுத்தன்
தளையவிழ் கோதைத் தையல் லிவளெனும்
மைய லுள்ளமொடு பைத லெய்தி
மன்னவன் மடமகள் பின்னொழிந் திறக்கும்
எந்திள வனமுலை யெழில்வளைப் பணைத்தோள்
மாந்தளிர் மேனி மடமா னோக்கின்
ஆய்ந்த கோலத் தயிரா பதியெனும்

கூன்மட மகடூஉக் கோமகன் குறுகி
யாவளிந் நங்கை யாதிவண் மெய்ப்பெயர்
காவலர் கொள்ளுங் காவினுள் வந்த
காரண மென்னை கருமமுண் டெனினும்
கூறினை செல்லிற் குற்ற மில்லென
மாறடு குருசில் வேறிடை வினவ
அந்த ணாள னரும்பொரு ணசையின்
வந்தன னென்னும் வலிப்பின னாகி
இன்பங் கலந்த விந்நகர்க் கிறைவன்
தன்பெரு மாட்டி தலைப்பெருந் தேவி
சிதைவில் கற்பிற் சிவமதி யென்னும்
பேருடை மாதர்க் கோரிடம் பிறந்த
உதையை யோடை யென்னு மொண்டொடி
காசி யரசன் காதலி மற்றவள்
ஆசின்று பயந்த வணியிழைக் குறுமகள்
மதுநாறு தெரியன் மகளிருட் பொலிந்த
பதுமா பதியெனப் பகர்ந்த பேரினள்
துன்னருஞ் சிறப்பிற் கன்னி தானும்
வயந்தக் கிழவற்கு நயந்துநகர் கொண்ட
விழவணி நாளகத் தழகணி காட்டி
எழுநாள் கழிந்த வழிநாட் காலை
வேதியர்க் கெல்லாம் வேண்டுவ கொடுக்கும்
போதல் வேண்டா பொருட்குறை யுண்டெனின்
ஏத மில்லை யிவணி ராமினென்
றிந்நாட் டாரலி ரென்னையர் போல்வீர்
எந்நாட் டெவ்வூ ரெக்கோத் திரத்தீர்
யாமு நும்மை யறியப் போமோ
வாய்மை யாக மறையா துரைமினென்
றேயர் குருசிலைத் தூய்மொழி வினவ
நன்றான் மற்றது கேளாய் நன்னுதல்
கண்டார் புகழுங் கலக்கமில் சிறப்பிற்
காந்தார மென்னு மாய்ந்த நாட்டகத்
தீண்டிய பல்புக ழிரத்தின புரத்துள்
மூண்ட வேள்வி மந்திர முத்தீச்

சாண்டிய னென்னுஞ் சால்புடை யோழுக்கின்
ஆய்ந்த நெஞ்சத் தந்தணன் மகனேன்
மாணக னென்பேன் மற்றிந் நாடு
காண லுறலொடு காதலிற் போந்தனென்
என்றது சொல்ல நன்றெனெ விரும்பி
ஆய்புக ழண்ணலை யறிந்தன ளாகிச்
சேயிழைக் கூன்மகள் சென்றனள் விரைந்தென்

உரை

௬. பதுமாபதியைக் கண்டது

அஃதாவது, உதயணன் காமகோட்டத்திலே பதுமாபதியைக் கண்டு காமுற்ற செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

க - அ : வாயில்.........தையலை

(பொ - ரை.) இவ்வாறு பதுமாபதி அநங்கன் திருக்கோயில் முன்றிலையடைதலும் அவ்வண்டிப்பாகன் வண்டியை நிறுத்தி எதிர்வந்து அழகிய வளையணிந்த கைகளையுடைய இறைமகளே! வண்டியினின்றும் இறங்கித் திருக்கோயிலின்கண் புகுந்தருள்க! என்று கூறி வண்டியில் பூட்டப்பட்ட எருதுகளின் பூட்டினைத் தெரித்துவிட்ட பின்னர் அவ்வண்டியின்கண் வெண்முகிலை விரித்து வைத்தாற்போன்ற திரைச் சீலையைக் காற்று ஒதுக்குதலாலே அதனகத்திருந்து வெண்முகிலினூடே பிறழாநின்ற மின்னற்கொடிபோன்று அசைந்து தண்ணொளி பரப்பும் பதுமாபதியை என்க.

(வி - ம்.) நீரீஇ - நிறுத்தி. தோளி - விளி. வையவலவன் - வண்டிப்பாகன். கஞ்சிகை - திரைச்சீலை. கதுமென - விரைவுக் குறிப்பு. மஞ்சு - முகில். நுடங்கி - அசைந்து. வெய்யவொளியு முண்டாகலின், தண்ணொளி என்றார். தையல் - பதுமாபதி.

உதயணன் நிலை

அ - கக : அவ்வழி...........நினைத்தனனாகி

(பொ - ரை.) அவ்விடத்தே குறிய கிளைகளையுடைய புன்னையினது நறிய பூந்துகளிலே பயின்று கரிய குயிற்சேவல் தனக்கு இயல்பான நிறம் மறைபட்டமையாலே குன்றிமணிபோன்று சிவந்த கண்களையுடைய இனிய காதற்றுணையாகிய பெடைக்குயில் தன்னைக் காதலன் என்றுணராமல் விலகி விலகிச் செல்

லுந்தோறும் அச்சேவல் புணர்ச்சி வேட்கையோடே பெரிதும் அப்பெடையைப் பெரிதும் விரும்பித் தன்னிறம் தோன்றும் பொருட்டுத் தனது மிக்க சிறகுகளை அசைத்துதறித் தனது அன்பைப் புலப்படுத்தும் இனிய குரலாலே அழைத்தழைத்து அதன் ஐயத்தை அகற்றித்தேற்றி அப்பெடையின் மனத்தை நெகிழ்த்து அதனோடு புணராநிற்ப, அக்குயில்களின் புணர்ச்சிக் களிப்பு எஃகின் கூட்டமைந்த சிவந்த ஒளியையுடைய வேல்போன்று தனது நெஞ்சத்தை ஊடுருவிப் பிளத்தலாலே உதயணகுமரன் தன்னுடைய கோடவதி என்னும் யாழைப் பயின்ற செந்தாமரை மலர்போன்ற அழகிய கைகளையும் பொற்கொடி அசைந்தாடும் பருத்த இளமையுடைய அழகிய முலைகளையும் உடைய தன் மனைவியாளாகிய வாசவதத்தையை நினைத்து நினைத்து வருந்துவானாகி என்க.

(வி - ம்.) ஒரு குயிற் சேவல் பூந்துகளிற் பயின்றமையாலே தன்னிறம் மறைந்து பொன்னிறமுடையதாக, அதன் பெடை அதனை ஐயுற்று அஃது அணுகுந்தோறும் விலகிச் சென்றதாக. அச்சேவல் தன் சிறகை யுளரி அப்பூந்துகளை யுதிர்த்துத் தன்னிறங்காட்டித் தன் குரல் காட்டி அப்பெடையின் ஐயந்தீர்த்துப் புணர்ந்தது. அக்குயில்களின் புணர்ச்சியை உதயணன் கண்டமையாலே அவன் வாசவதத்தையை நினைந்து வருந்துவானாயினன் என்பது கருத்து.

தன்னிறம் - தனக்கியல்பான கருநிறம் என்க. குன்றிமணி போலும் சிவந்த கண்ணையுடைய பெடைக்குயில், இன்றுணைப் பெடைக்குயில் என்று தனித்தனி கூட்டுக. ஊர்தல் செல்லாது - ஒரு சொல்; உணராமல். சிறை - சிறகு. அளிக்குரல் - அன்பைப் புலப்படுத்தும் குரல். அயில் - எஃகு. வேலின் - வேல்போன்று. ஞாழ் - யாழ். போலி. பொன்ஞாண் - பொற்கொடி. மனைப்பெருங்கிழத்தி. மனையாட்டி - வாசவதத்தை.

(இதுவுமது)

௨0 - ௨எ : செம்மை.........காலை

(பொ - ரை.) தனது சிவந்த நெடிய கண்கள் வெப்பம் நீங்காத தெளிந்த துன்பக் கண்ணீரைத் துளியாநிற்பத் திருமகள் வீற்றிராநின்ற தனது மார்பின்கண்ணே தோன்றிய பொன்பூந்தாற் போன்ற அழகிய பொலிவுடைய பசலை நிறத்தோடே புதிதாக மலர்ந்த மலர்கள் நிறைந்த ஒரு புன்னைமரத்தடியிலே அமர்ந்து கொடியாகிய குருக்கத்தியினது அழகிய சிவந்த தளிரைப் பிடித்த விரலையுடையனும் தான் இழந்துவிட்ட வாசவதத்தையின் காதற்பண்பினையும் அழகையும் பெண்மை நலத்தையும் கருதிக் கருதி விரும்பிக் கவலையுற்றிருந்தபொழுது என்க.

(வி - ம்.) வெம்மையறாஅத் தெண்பனி என்றது துன்பக் கண்ணீரை. உதயணன் மார்பிற் பசலையும் அழகே செய்ததென்பார்

அம்பூம் பசலை என்றார். கெடுத்த - இழந்த. அவந்திகை - வாசவ தத்தை. மாதர் - காதல், அணியும் நலமும் என உம்மை விரிக்க.

இதுவுமது

உஎ - ௩௧ : அகன்று........துயரமொடு

(பொ - ரை.) விலகிப் போங்கோள்! விலகிப் போங்கோள்; என்று உரப்பிக் கூறி ஆங்குள்ள மாந்தரைச் சேய்மையிலோட்டா நின்ற காவலாளரைக் கண்டு இவ்விடத்தே இப்பொழுது வந்து புகுதும் உரிமைமகளிர் உளர் போலும் என்று ஊகித்தறிந்து கொண்டு சிங்கம்போன்ற வெவ்விய வெகுளியையுடைய தலைமகனாகிய அவ்வுதயணகுமரன் தனது நெஞ்சம் நிறைந்த துன்பத்தோடே என்க.

(வி - ம்.) காவலர் ஆங்குள்ள மாந்தரை விலகிப் போமின் போமின் என்று ஓட்டுதலாலே உதயணன் இவ்விடத்தே இப்பொழுது உரிமை மகளிர் உளர்போலும் என்று ஊகித்தறிந்தான் என்க. உரிமை - அரசனுடைய தேவி முதலிய மகளிர். அரிமான் - சிங்கம். விடலை - தலைவன்; உதயணன்.

(இதுவுமது)

௩௨ - ௩௬ : நீக்க.........நினைஇ

(பொ-ரை.) என்னையோ! நேற்று எனக்குப் பிறர் வழிவிலக்கி விட யான் சென்றேன்! அங்ஙிலைமை மாறி இற்றைநாள் நான், பிறராலே வழியினில்லாதே! அகன்றுபோ! என்று விலக்கப்பட்டேன். இங்ஙனமாதலின் இவ்வுடலின் சார்வாக வருகின்ற ஆக்கமாதல் கேடாதல் ஒருவர்பாலே நிலைத்து நிற்பன அல்ல; அவை சகடக்கால் போன்று கீழும் மேலுமாய் மாறிவருவது வாய்மையேயாம் என்று தன் நெஞ்சத்தே நினைந்து என்க.

(வி - ம்.) நெருநல் என்றது இறந்தகால அணிமையைக் குறித்தற்கு ஒன்று கூறியபடியாம். நேற்று எனக்குப் பிறர் வழிவிலக்க யான் சென்றேன்; இன்று என்னையே பிறர் விலக்காநின்றனர். என்னே! இவ்வுலகியலிருந்தவாறு என்றிரங்கியபடியாம்.

இதனோடு, "அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம், சகடக்கால் போலவரும்" எனவரும் நாலடியையும் (உ) நினைக.

உதயணன் பதுமாபதியைக் காணல்

௩௭ - சரு : நீங்கிய.........மன்னன்

(பொ-ரை.) அவ்விடத்தினின்றும் நீங்கிப் போதற் பொருட்டு எழுந்தவன், முற்கூறப்பட்ட அழகிய குழையணிந்த பதுமாபதியை நிறமிக்க திரைச் சீலையைக் காற்றுத் தூக்கி விலக்கிய

பொழுது தன் கண்ணாலே பார்த்துத் தன் விருப்பத்திற்குக் காரணமான காதலையுடைய மான்போன்ற நோக்கினையுடைய வாசவதத்தையே இவள் என்று கருதியவனாய் ஆராய்ந்து நோக்கானாய்க் காகதுண்டக முனிவனாகிய அவ்வந்தணனே தனது மந்திர முறைமையாலே இவ்வாறு வாசவதத்தையை மீட்டருளினன் என்று நினைத்தவனாய் உறுப்புக்களாலும் நிறத்தாலும் வாசவதத்தைக்கும் இப்பதுமாபதிக்கும் வேற்றுமை காணப்படாமையாலே மீண்டும் நோக்காநின்ற மறவோனாகிய அவ்வுதயண மன்னனுடைய என்க.

(வி - ம்.) நீங்கிய - நீங்கற்கு. எழுந்தோன் - பெயர். மாதர் - பதுமாபதி. வளி - காற்று. தெரிந்துணரான் - ஆராய்ந்து காணானாய். அந்தணாளன் - காகதுண்டக முனிவன். மறுத்தும் - மீண்டும். மன்னன் - உதயணன்.

உதயணன் கண்கள்

சசு - ருங : செஞ்சுடர்.......நெடுங்கண்

(பொ - ரை.) செவ்வொளி திகழும் முகத்தின்கண்ணே, போரிலே மேம்பட்ட வெவ்விய வெகுளியையுடைய பகையரசர்க்கு நஞ்சைக் காலுகின்ற பாம்பினது நஞ்சைப்போன்ற திறலுடையனவாய், நாணல் முளைபோன்ற பல்வரிசையினையும் தோன்றுகின்ற புன்சிரிப்பையும் உடைய இளமையுடைய மடந்தையரின் நெஞ்சின்கண் நிறையை அறுத்து அம்மடந்தையர்க்கு அமிழ்தம்போன்ற அருளைப் பொழிவனவாகித் தாமரையினது முதற் பூவாகிய பெரிய சிவந்த மலரையொத்த அழகோடு கூடிய நல்லிலக்கணமுடைய நெடிய கண்கள் என்க.

(வி - ம்.) உதயண மன்னனுடைய கண்கள், பகைவேந்தர்க்குத் தீயோரன்ன கண்கள், இளையோர்க்கு அமிழ்தம் பொதிந்த அருளினவாகிய கண்கள், செம்மலரன்ன நலத்தொடு புணர்ந்த கண்கள், இலக்கணமுடைய கண்கள், நெடுங்கண்கள் எனத் தனித்தனி கூட்டுக. செஞ்சுடர் முகம் - ஞாயிறுபோன்ற முகமுமாம். வேந்தர் - பகைவேந்தர். தீ - நஞ்சு. உவமவாகுபெயர். தளை - நிறை. தாமரையினது தலைப்பெருஞ் செம்மலர் என்க. இலக்கணம் - கண்ணுக்குரிய நல்லிலக்கணம்.

உதயணனும் பதுமாபதியும் தம்முள் மயங்கல்

ருச - சுo. வயப்படல்.........கூடியாங்கும்

(பொ - ரை.) வயப்பட்டு விளங்காநின்ற அணிகலன்களையுடைய அப்பதுமாபதி தானும் அவன் நோக்கெதிர் நோக்குதலானே தனது நெஞ்சின்கண் நெடுங்காலமாகத் தங்கிக்கிடந்த நிறையாலே அமைந்த தாழக்கோலை அப்பொழுது தன்னெஞ்

திலே தோன்றிய வெவ்விய செயலேயுடைய காமவேட்கை திறவா நிற்பத் தனது திண்ணிய மெய் முதலிய பொறிகள் நிலேகுலேந்து ஆற்றல்கெட இவ்வாற்ருன் இரண்டு அழகிய பெரிய கடல்கள் தமக்குரிய கரையாகிய எல்லேயைக் கடந்து பொங்கி ஒன்ருகக் கூடிஞற்போலவும் என்க.

(வி - ம்.) மறத்தகை மன்னன் (௬௫) நெடுங்கண் (௬௯) வயப் பட்டு மாதர் நோக்க என்க. தன்வயமிழந்து அக்கண்களாற் கவரப் பட்டு என்றவாறு. மாதர்-பதுமாபதி. கதுமென - விரைவுக் குறிப்பு. இறைகொள்ளுதல் - நெடுங்காலந் தங்குதல். பொறி - மெய் முதலி யன. திறல் - தத்தமக்குரிய ஆற்றல். வேலே - கடற்கரை. இரண்டு கடல் - இருவர் நெஞ்சமும்.

(இதுவுமது)

௬௧ - ௬௬ : இசைந்த.........ஊர்தர

(பொ-ரை.) பொருந்திய பேரழகுடைய ஏயர்குலத் தோன்ற லாகிய உதயண குமரனுக்கும், அன்புற்ற காதலேயுடைய பதுமா பதிக்கும் தொடர்புடைய ஊழ்வகை நீங்குதலின்றிப் பல பிறப்புக் களினும் பயின்று பயின்று அடிப்பட்டுவந்த கேண்மையுண்மை யாலே சிறப்பு முறையாக வந்த இருவருடைய காமப் பண்பாகிய பெருங்கடலிரண்டும் பொங்கிக் கலந்து கலங்கி நிறையும் அறிவு மாகிய கரையையும் துறையையும் கடந்து பரவாநிற்ப என்க.

(வி - ம்.) ஏயர்மகன் - உதயணன். பசைந்த - அன்புற்ற, யாப்பு - தொடர்பு. பால்வகை - ஊழ்வகை. நீப்புறவு - நீங்குதல். பிறப்புவழிக் கேண்மை - பண்டும் பண்டும் பலப்பல பிறப்புக்களினும் பயின்றடிப்பட்டுவரும் பேரன்புடைமை. உடுத்துவழிவந்த உழுவ லன்பு என்றும், (க. ௩௨:௬௨;) பிறப்பிடைக் கேண்மைப் பெருமனேக் கிழத்தி'' என்றும் (௨ - ௧௧ : ௩௬ ; ௧அ : ௧௧௬.) இவ்வாசிரியரே ஓதுதல் காண்க. நிறையாகிய எல்லேயையும் மதியாகிய துறையை யும் இகந்தென்க.

பதுமாபதி நினேத்தல்

௬௭ - ௭௬ : நன்னகர்.........மாருடி.

(பொ - ரை.) ஒன்று, நல்ல நகரமாகிய இவ்விராசகிரியத்து மாந்தர் மேற்கொண்ட தன்னே விரும்புதற்குக் காரணமான இத் திருவிழாவின்கண் கரும்பு வில்லுடைய செல்வனுகிய காமதேவன் தான், பெரிதும் விரும்பி உருவங்கொண்டு பலரும் காணத் தோன்றித் தன்னுடைய பேரழகினே எனக்குக் காட்டி என்னெஞ் சத்தின் பெரிய நிறையை அளக்கக் கருதிய கருத்தாலோ? அல்லது பார்ப்பன வடிவத்தோடுவந்து இங்குத் தான் விரும்பும் இன்பங்களே நுகர்தற்கு மாயையினுலே இங்ஙனம் மாணிட

வடிவங்கொண்டு வந்ததொரு தேவகுமரனோ? இவருள் இவன் தான் யாவன்? என்று யான் அறிகின்றிலேன். இவன் யாவனே யாயினும் ஆகுக! இவன் காவலுடைய என்னெஞ்சின் கட்டுப் பாட்டை அழித்துவிட்டனன் என்று வெவ்விய வெகுளியை யுடைய பெருமகனாகிய உதயணன் நெஞ்சில் தானும் தன்னெஞ் சில் அவனுமாக மாறி இருவரும் ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுந்து என்க.

(வி - ம்.) நன்னகர் - ஆகுபெயர். தன்அமர் - தன்னை விரும்பும்- கரும்புடைச் செல்வன் - காமவேள். விரும்பு - விரும்பி. இருஙிறை. பெரிய நிறை. ஒன்று காமவேள் என்னிறையளத்தற்கு இங்ஙனம் மானிட வடிவங்கொண்டு வந்தனனோ? அல்லது தேவகுமரன் ஒருவன் இங்குள்ள இன்பங்கள் நுகர எண்ணி மனிதனாய் இங்ஙனம் வந்தனனோ? என்று ஐயுற்றபடியாம். மேவன - விரும்புவன. மாயை - இந்திரசாலம். இதனோடு "யாவனே யானுமாக வருநிறைக் கதவநீக்கிக், காவலென்னெஞ்சு மென்னுங் கன்னிமாடம் புகுந்து, நோவவென்னுள்ளம் யாத்தாய்" எனவரும் சீவக சிந்தாமணியை (எகச) ஒப்புநோக்குக. நெஞ்சு மாறுடல் - ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுதல் "வரிசிலை யண்ணலும் வாட்கணங்கையும், இருவரு மாறிப் புக்கிதய மெய்தினர்" என்றார் கம்பநாடரும். (மிதிலைக். நு௪)

பதுமாபதியின் கண்கள்

எஎ - அஉ : உலைப்பரு..............சென்லுட

(பொ - ரை.) அவ்வழி, பதுமாபதியின் செவ்வரிபரந்த மதர்த்த நெடிய கண்கள் பகைவராற் குலைத்தற்கரிய படைகளை யுடைய உதயண குமரனுக்கு இலையுங்கொழுந்தும் எழுதப்பட்ட அழகிய வளையலணிந்த இவளுடைய பருத்த தோள்கள் உரியன வாயின; இச்செய்தியை எல்லீரும் அறிந்துகொள்ளுங்கோள்! என்று அயலிலே நின்றோரும் அறிந்துகொள்ளுமாறு கூறவிரும் பினபோன்று தமக்கியற்கையாகிய நெறியினின்றும் பிறழ்ந்து நிமிர்ந்து இருமருங்கினும் சென்று சென்று ஆடாநிற்ப என்க.

(வி - ம்) உலைப்பருந்தானை - பகைவராற் குலைத்தற் கியலாத ஆற்றலுடைய படை. இலையும் கொழுந்துமாகத் தொய்யில் எழுதப் பட்ட தோள் என்க. இலையுருவமும் கொழுந்துருவமும்பட இயற்றிய வளையல் எனினுமாம். அமர்ந்தன - விரும்பின. திரியா - திரிந்து.

பதுமாபதி கோயிலை வலஞ்செய்தல்

அகு - கூஉ : வளங்கெழு...............நீங்கி

(பொ - ரை.) வளம் பொருந்திய மாவினது இளந்தளிர் போன்ற கண்டோர் விரும்புந் தகுதியையுடைய அவள் திருமேனி தானும் தோழியர் ஆராய்ந்துணரும்படி பசலை பாய்ந்ததாக

அவனுடைய அறிவின் எல்லையிலே அடங்காத துன்பத்தை ஒருவாற்ருன் அடக்கி அச்சமும் நாணும் ஒருங்கே மிகாநிற்ப மிக்க நட்பினையுடைய உசா அத்துணைத் தோழியாகிய யாப்பி யாயினி தன்னை அணுகி வணங்காநிற்ப மேம்பாடுடைய அவ்வண்டியினின்றும் இறங்கிப் பூந்துகள் சிந்தாநின்ற புனைந் தாற்போன்று செறிந்த மலரையுடைய குளிர்ந்த பூம்பொழிலி னின்றும் வளையலணிந்த முன்கையினையும் சுடர்வீசும் குழை யினையும் உடைய மகளிரோடே விளையாடுதலிலே அடங்காத விருப்பத்தோடே அகன்று போய் என்க.

(வி - ம்.) நல்லோர் - தோழியர். நாடிய - நாடும்படி. பயப்பு - பசலை. பையுள் - துன்பம். உட்கு - அச்சம். நட்புடைத் தோழி என்றது யாப்பியாயினியை. காவினுள் நீங்கி என்க.

(இதுவுமது)

கூரு - கூகூ : வனப்பு..............கொண்டு

(பொ - ரை.) அழகு என்று சொல்லப்படுகின்ற அருவமான தெய்வந் தனக்கென ஓர் உருவங்கொண்டு தோன்றினாற்போன்று தோன்றி அழகிய அணிகலன்கள் ஒளிவீசாநிற்பத் தன்னைப் பெரிதும் விரும்பும்உசா அத்துணைத் தோழியாகிய யாப்பியாயினி யின் புறத்தே ஒதுங்கி அன்னப் பறவைகளும் தனது நடைகண்டு நாணவும் உதயண நம்பியைக் கவலச்செய்து தன் பொன்னு லியன்ற பரலையுடைய கிண்கிணி இடம் பெயர்ந்து ஒலியா நிற்பவும் மான் கண்போன்ற சாலேகங்களையும் அறைகள் பலவற் றையும் உடையதாய் அழகு கிளர்ச்சியுறுகின்ற காமதேவன் கோயிலையடைந்து தோழியரோடு கூடி அதனை வலம்வந்த பின்னர் என்க.

(வி - ம்.) வனப்பு - அழகு; அழகு என்னும் பண்பு நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்டலாகாப் பொருளாகலின் "வனப்பெனப் படூஉந்தெய்வம் தனக்கோர் உருவுகொண்டது போல்'' என்று கூறினர் இதனை,

"ஒப்பும் உருவும் வெறுப்பும் என்ரு
கற்பும் ஏரும் எழிலும் என்ரு
சாயலும் நாணும் மடனும் என்ரு
நோயும் வேட்கையும் நுகர்வும் என்ருங்கு
ஆவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப''

எனவரும் தொல்காப்பியத்தான் (பொருளியல். ருஉ) உணர்க. நடை கண்டு அன்னம் நாண என்க. அண்ணல் - உதயணகுமரன். அரி - பரல். அரிச்சாலேகம். மான்கட் காலதர் மாடம்; காமதேவன் கோயில்.

பதுமாபதி தானம் அளித்தல்

௧௦௦ - ௧௦அ : கழி..............அளித்தலின்

(பொ - ரை.) மிகப் பெரிய சிறப்பினையுடைய கன்னி மகளிர் தங்கன்னிமையழிந்து தமக்குத் திருமணமாதற் பொருட்டுச் செய்கின்ற தானத்தை அவ்விடத்திலே வழங்கி அருகக்கடவுள் மகளிர்க்கு ஓதிய நூலிடத்தே கூறப்பட்ட ஒழுக்கத்திலே பிறழாதவளாய் மிக்க பொருளை வேண்டிவந்த நல்லொழுக்கத்தினின்றும் பிறழாத அந்தணர் எல்லாம் நம்பால் வருவாராக! அவரை நும்முள் ஒருவரும் தடுக்கவும் போக்கவும் செய்யாதொழிமின்! என்று தன் காவல் முதியர்க்கெல்லாம் தானே கட்டளையிட்டுத் தேன்கமழும் மலர்மாலையணிந்த கோமகளாகிய பதுமாபதி காமன் நோன்பைக் காரணமாகக் கொண்டு அந்நோன்பின் முதல் நாள் வழங்கும் தானத்தைத் தகுதியான பொருள் கொண்டு வழங்குதலாலே என்க.

(வி - ம்.) கழிபெருஞ் சிறப்பு - மிகப் பெரிய சிறப்பு. அழியும் தானம் - கன்னிமையழிதற்குக் காரணமான தானம் என்க. எனவே தமக்குத் திருமணம் நிகழும் பொருட்டுச் செய்யும் தானம் என்றுயிற்று. நான்முகன் - அருகக்கடவுள். மகளிர் நூல் - மகளிரைப் பற்றிக் கூறிய நூலென்க. உறுபொருள் - மிக்க பொருள். வழுக்கா - பிறழாத, தலைத்தாள் முதியர் - தன் மருங்கே நின்று காக்கும் காஞ்சுகி முதியர். கோதை - பதுமாபதி. தலைநாட்டானம் - முதனாளில் வழங்குந் தானம். தக்கவை - தகுதியான பொருள்.

ஒரு மங்கை காமதேவனைப் பாடிப் பரவுதல்

௧௦௯ - ௧௧௫ : பலநாள்..............பிறவரிது

(பொ-ரை.) நிலைபெற்ற இப்பேருலகத்தில் எத்தகையோர்க்கும் பற்பல நாள் நோன்புசெய்த பயன் உண்டாயின் செல்வ வளமும் அழகும் வள்ளன்மைக் குணமும் ஆற்றலும் இளமையும் வித்தையும் என்னும் இப்பேறுகளும்பிறவும் இன்பநுகரும் உரிமையும் உண்டாகும் அங்ஙனம் இப்பேறுகள் கிடைப்பினும் நெடிய கவுளையுடைய யானைகளை வணங்கச் செய்தற்குரிய யாழ் வித்தையுடனே சிறந்த நற்குடியில் பிறத்தல் மிகவும் அரிதாகும் என்க.

(வி - ம்.) வளமை - செல்வமுடைமை. வனப்பு - உடல் அழகு. திறல் - ஆற்றல். விச்சை - கலைகள். "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (குறள். ௩௭௭) என்பதுபற்றித் துய்க்கும் உரிமையும் தவப்பயனின் விளைவே என்பார் இன்பக்கிழமையும் என்றார். வார் - நெடிய; மதமொழுகும் எனினுமாம். விழுக்குடி-ஒழுக்கொடு புணர்ந்த உயர்குடி. பிறவு-பிறத்தல். "பிறவினை பிறவுமானான்" எனவும், (தேவா - திருஞான - இடைமருது) "பிறவாழிக் கரைகண்டாரே" எனவும், (வில்லிபா-கிருட்டினன்-க) வருதல் காண்க.

(இதுவுமது)

கசகூ - கஉரு : விழுக்குடி...............இயைந்தபின்

(பொ - ரை.) அத்தகைய பேறுகளோடே சிறந்த குடியினும் பிறந்து வேறொருவர்க்கில்லாத சிறப்போடு விளங்கிய தப்புத லில்லாத முறைமையினையுடைய வத்தவநாட்டு வேந்தனுகிய உதயணகுமரனையே ஒத்தவனுகிய ஒரு நம்பி எங்கோமகளாகிய இப் பதுமாபதியின் அணிகலன்களிலே புதைந்த அழகிய முலைப் போகத்தைப் பெறுக என்று பாடும் மரபறிந்த தோழியொருத்தி காமதேவனை வேண்டிப் பாடிப் பரவாநிற்பவும் அதுகேட்ட பதுமாபதி இற்றைநாள் என்னால் விரும்பப்பட்ட அந்தத் தலைவன் அத்தகையோன் ஆருக! என்று பொன்னணி கலனணிந்த பதுமாபதி தன்னெஞ்சினுள்ளே ஊன்றி நினைப் பவும், அற்றை நாள் வழங்கும் தலைகாட்டானம் அதற்குரிய இலக்கணத்தோடே வழங்கப்பட்ட பின்னர் என்க.

(வி - ம்.) வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு. இவள்-பதுமா பதி. பூண்புதை வனமுலை என்க. மரபு - பாடும்முறை. என்னயந் தோன் - என்னை நயந்தோன்; என்னால் நயக்கப்பட்டோன் என இரு பொருளினும் மயங்கிற்று. மாதர் - பதுமாபதி. மனத்திழைத் தல் - மனத்திலே ஊன்றிக் கருதுதல்.

(பதுமாபதி அரண்மனை அடைதல்)

கஉசா - கஉஎ : மாயிரு...............கூற

(பொ - ரை.) பழைய முறைமையையுணர்ந்த மகளிர் சிலர் கோமகளைக் கைகூப்பித் தொழுது "பெரிய நிலவுலகத்தை ஆளும் எங்கள் மன்னன் மகளே! காமன் விழவின் முதனுளாகிய நல்ல இற்றை நாளிலே ஞாயிறு மறைதற்கு முன்பே அரண்மனை மகளிர் அரண்மனைக்குப் போதல் முன்னோர் முறைமையாகும்; இதனைத் திருவுள்ளம் பற்றுக!' என்று அறிவுறுத்த என்க.

(வி - ம்.) கோயில் - அரண்மனை. இன்றை நன்னாள் என்றது விழவின் முதனுளை. அரண்மனை மகளிர்க்கியல்பு என்க. தொன்றியல் மகளிர். பழைய முறைமையினை அறிந்த மகளிர்.

(இதுவுமது)

கஉஅ - கருசா : செய்வதை...........புக்கபின்

(பொ - ரை.) அதுகேட்ட விளங்கிய அணிகலன்களையுடைய பதுமாபதி தான்கண்ட காளை திறத்திலே தான் செய்தற்குரிய செயல் யாதென்பதனை அறியாமல் இகைப்புற்று வெப்பமுடைய பெருமூச்செறிந்து அக்காமதேவன் கோயிலினின்றும் புறப்பட்டு

அவ்விடம் பொலிவற்றுப் போம்படி வண்டியின்கண் தன் தோழி மார் ஏற்ற ஏறியருளிப் பொன்வளையலணிந்த மகளிர் பொலிவோடு தன்னைச் சூழாநிற்பவும் தான் வந்தபொழுது ஒருசேரெலன நோக்கிய பார்ப்பன மகனுடைய அழகும் நலமும் அழிந்தொழியவும் பெரிய அவ்விராசகிரிய நகரத்து மக்கள் புகழாநிற்பவும் அழகிய அரண்மனையை அடைந்த பின்னர் என்க.

(வி - ம்.) தான் கண்ட அந்தணன் திறத்திலே தான் செய்வதை அறியாளாய் என்க. தெய்வத்தானம் - காமன் கோயில். பொலந்தொடி - பொற்றொடி. அந்தணாளன் - உதயணன். நகர் - ஆகுபெயர். திருநகர் - அரண்மனை.

பதுமாபதியின் கட்டளை

கரு௫ - சுக : இகல்............ஈமென

(பொ - ரை.) பகைவரைப் போரின்கண் வெல்லும் ஆற்றலுடைய படைகளையுடையவனும் அரசர்களுள் மேம்பட்டவன் என்று புகழப்பட்டவனும் தப்புதலில்லாத வெற்றியையுடையவனும் ஆகிய நம் தருசகமன்னன் தங்கையும் மணம் விரிகின்ற மலர்மாலையை உடையவளும் பெண்டிருட் சிறந்தவளும் நமக்கெல்லாம் பெருமாட்டியும் புகழ்தற்கியலாத ஒப்பற்ற அழகினையும் பவழம்போன்று சிவந்த திருவாயினையும் உடையவளாகிய பதுமாபதி தான் மேற்கொண்ட கன்னி நோன்பு முடியுந்துணையும் முற்பட்டு இன்ன பொருளை வழங்காநிற்பள் என்று, என்க.

(வி - ம்.) இகல் - போர். இறைமீக் கூறிய - அரசர்களிலே மேம்படுத்துக் கூறிய. தவல் - தப்புதல். நங்கை - மகளிருள் தலை சிறந்தவள். பொருவில் - ஒப்பற்ற. முன்னி - முற்றும் முன்னி என்க. முழுதும் முற்பட்டென்க. இன்னது - சாதியொருமை. ஈம் - ஈவாள்.

(இதுவுமது)

கசஉ - கசஎ : நச்சுவனர்..........அகன்றமையின்

(பொ - ரை.) பதுமாபதியோடு வந்த காஞ்சுகி முதியோர் பொறியமைந்த அரண்மனை வாயிலைக் கடிதிர் காவல்புரிகின்ற மறவர்க்கு அறிவுறுத்து மேலும் தானம் பெறுதலை விரும்பி வருகின்ற நான்கு மறைகளையும் ஓதியுணர்ந்த அந்தணர் அஞ்சும்படி போக்கா தொழிமின் என்று நம் பதுமாபதி கட்டளையிட்டுச் சென்றனள்; புதுவதாக விதித்த இக்கட்டளையையும் நீயிரெல்லாம் அறிந்தொழுகுமின்! என்றும் அக்காவலரை அடக்கிப் போனமையாலே என்க.

(வி - ம்.) நச்சுவனர் - விரும்பியவர். ஆணை - கட்டளை. யாணர் - ஈண்டுப் புதிய கட்டளை என்னும் பொருண்மேனின்றது. புதவு - கதவு, முதுமாக்கள் - காஞ்சுகி முதியோர்.

(உதயணன் நிலை)

கசஅ - கருரு : கண்டோர்...........எய்தி

(பொ - ரை.) ஒருமுறை கண்டோர் மீண்டும் மீண்டும் காண்டற்குக் காரணமாய்க் கண்டு கண்டமையாத பேரழகின் தகுதியையுடைய இக்கன்னியை யான் கூடப்பெறுவேனாக என்று பலவாகிய மலரையுடைய பொழிலிலே பகலும் இரவுமாகிய இருபொழுதினும் தங்கியிருந்த தனது நிறையுடைந்துபோன தன்மையுடைய உதயணன் இருந்தபொழுது பின்னரும் ஒருகால் இவள் கட்டவிழ்ந்த மலர்மாலையையுடைய தன் காதலியாகிய வாசவதத்தையே என்னும் மயக்கவுணர்விஞேடு துயரமெய்தி என்க.

(வி - ம்.) மயக்கங் காரணமாக ஒருமுறை இவள் ஓர் அரச கன்னி என்று கருதியும் மீண்டும் இவள் வாசவதத்தைதானே என்று கருதியும் உதயணன் அல்லலுற்றான் என்பது கருத்து. இவள் கன்னியாயின் இவளை நான் கூடப்பெறுவேனாக என்று கருதினன் என்க. தண்டாவனப்பு - கண்டு கண்டமையாமைக்குக் காரணமான பேரழகு. கன்னி - பதுமாபதி பெறீஇயர் - பெறுக. காகதுண்டக முனிவன் கூறியபடி தான் மேற்கொண்டிருந்த நிறை உடைந்த நீர்மை என்க. இளையோன் - உதயணன். தன் தையல் என்றது வாசவதத்தையை. பைதல் - துயரம்.

உதயணன் கூனியை வினவுதல்

கருகூ - கசுரு : மன்னவன்...........வினவ

(பொ - ரை.) பகைவரைக் கொல்லும் ஆற்றலுடைய தலைவனாகிய அவ்வுதயணன் கோமகளாகிய பதுமாபதியோடு செல்லாமல் தங்கிப்பின்னர்த் தமியளாகச்செல்லாநின்ற ஏந்திய இளமையுடைய அழகிய முலையினையும் அழகுடைய வளையணிந்த பருத்த தோள்களையும் மாந்தளிர்போன்ற நிறத்தினையும் இளமானின் நோக்கம்போன்ற நோக்கினையும் ஆராய்ந்து புனைந்த ஒப்பனையையும் உடைய அயிராபதி என்னும் பெயருடைய கூனியை அணுகி "நங்காய் இப்பொழுது இங்கே காமதேவனைக் கைதொழுது சென்ற நங்கை யார்? இவளுடைய வாய்மையான பெயர் யாது? காவலரால் காவல்கொள்ளப்பட்ட இந்தப் பொழிலிலே இவ்வாறு வந்தமைக்குக் காரணந்தான் என்னை? உனக்கு வேறு காரியமிருந்தாலும் என்னுடைய இவ்வினுக்கட்கு விடைகூறிச்செல்லின் அதனால் குற்றம் ஏதுமில்லையன்றோ கூறுக! என்று தனித்ததோரிடத்தே வினவாநிற்ப என்க.

(வி - ம்.) மன்னவன் மடமகள் - பதுமாபதி. பின்னே தங்கித் தமியளாய்ச் செல்கின்ற கூன்மகள் என்க. கோமகனாகிய மாறடு குரிசில் வினவ என இயைத்துக் கொள்க. இந்நங்கை என்றது பதுமாபதியை. கா அலர்கொள்ளும் என்றுமாம். வேறிடை - தனி யிடத்தே.

கூனியின் விடை

கசகூ - களச : அந்தணாளன்............குறுமகள்

(பொ - ரை.) அவ்வினாக்களைக்கேட்ட அயிராபதி இப்பார்ப்ப னான் இங்கே வழங்கும் அரிய பொருள்களைத் தானமாகப் பெறு கின்ற அவாவோடு இங்கே வந்தவன்போலும் என்று தனக்குள் நினைந்தவளாய் அவன் வினாக்களுக்கு விடைகூறத் தொடங்கிப் "பெரியீர்! இன்பமெல்லாம் விரவிய இந்த இராசகிரிய நகரத்து வேந்தனுடைய வாழ்க்கைத் துணைவியும் பட்டத்துத் தேவியும் கலங்காத கற்பு உடையவளும் ஆகிய 'சிவமதி' என்னும் திருப் பெயருடைய கோப்பெருந் தேவியுடன் பிறந்த உதையையோடை என்னும் ஒள்ளிய தொடியணிந்த பெருமாட்டி ஒருத்தியுளள். அவள் காசி நாட்டரசனுடைய தேவியுமாவாள். அவ்வுதைதைய யோடை யென்னும் அரசி குற்றமின்றி ஈன்ற மகளாவாள். இங்கு வந்துபோன அழகிய அணிகலன்களையுடைய இளமகள் என்க.

(வி - ம்.) உதயணன் "இந்நங்கை யாவள்?" என்று வினவிய தற்கு இது விடை. மகதமன்னன் மனைவியுடன் பிறந்தவளும் காசி யரசன் மனைவியும் ஆகிய உதையையோடையின் மகள் இந்நங்கை என்று இறுத்தபடியாம்.

இந்நகர்க்கிறைவன் என்றது தருசகன் தந்தையை. சிவமதி - தரு சகன் தாய். எனவே பதுமாபதி தருசகன் சிற்றன்னை மகள் என்றாளா யிற்று. ஓரிடம் பிறந்த - ஒரு வயிற்றிற் பிறந்த. குறுமகள் - சிறுமி; பதுமாபதி.

(இதுவுமது)

களரு - கஅரு : மதுநாறு...........ஆமினென்று

(பொ - ரை.) தேன் மணங்கமழும் மலர்மாலையணியும் மகளி ருள்வைத்து மிகவும் பொலிவுடைய இவள் 'பதுமாபதி' என்னும் திருப் பெயரையுடையவளாவாள். யாவரானும் கிட்டுதற்கரிய சிறப்பினையுடைய இக்கன்னி இங்கு வேனிலானாகிய காமதேவ னுக்கு இந்நகரத்தார் விரும்பி எடாநின்ற இத்திருவிழா நாட் களிலே ஒவ்வொரு நாளும் இங்கெழுந்தருளித் தனது அழகிய ஒப்பனைகளை நம்மனோர்க்குக் காட்டிச் செல்வாள். இத்திருவிழா விற்குரிய ஏழு நாட்களும் கழிந்த மறுநாள் விடியற்காலத்தே இவள் நும்போன்ற மறையோர்க்கெல்லாம் அவரவர் விரும்பிய

பொருளைத் தானமாக வழங்குவள். ஆதலாலே நுமக்கும் பொருட் குறைவு உண்டாயின் நீயிர் நும்மூர்க்குப் போதல் வேண்டாம்; விழா முடியுமளவும் இங்கேயே தங்குமின். அங்ஙனம் தங்கின் நுமக்குத் துன்பம் ஒன்றும் உண்டாகாது என்று கூறி என்க.

(வி - ம்.) இதன்கண் உதயணன் "இவள் பெயர் யாது? காவினுள்வந்த காரணமென்னை? என்று வினவிய இரு வினவிற்கும் விடை கூறுதல் காண்க. வயந்தக்கிழவன் - காமவேள். நாளகத்து எழுந்தருளி அழகணிகாட்டி என்க. பொருட்குறைவு - வறுமை. இவணிர் ஆமின் - இவ்விடத்திலிருப்பீராக.

கூனி உதயணனை வினாதல்

கஅ௪ - கஅஅ : இந்நாட்டார்...........வினவ

(பொ - ரை.) பின்னர் அயிராபதி ஏயர்குலத் தோன்றலாகிய உதயணனை நோக்கி, "அந்தணரே! நீயிர் இம்மகதநாட்டுப் பார்ப்பனர் அல்லீர்! என்றுணர்கின்றேன். பிறநாட்டினின்றும் இங்கு வந்தவர்போலத் தோன்றுகின்றீர். ஆயின் நீயிர் எந்த நாட்டினிர்? எந்த ஊரினிர்? நுங் கோத்திரம் யாது? யாங்களும் நுங்களை இன்னாரென்று தெரிந்து கொள்ளலாமன்றோ? மறைத்தல் வேண்டா! வாய்மையாகவே என் வினாக்கட்கு விடை கூறுமின்! என்று வினவாநிற்ப என்க.

(வி - ம்.) ஏனையர் - வேறு நாட்டினிர். யாம் என்றது தன் தோழிமாரை உளப்படுத்தியபடியாம். ஏயர் குருசில்.

உதயணன் விடை

கஅ௯ - க௯௫ : நன்றால்...........மகனென்

(பொ - ரை.) அயிராபதியின் வினாக்களைக் கேட்ட உதயண குமரன் "நன்று நன்று; நல்ல நுதலையுடையோய்! நின் வினவிற்கு விடை கூறுவேன்; கேள்! யான், கண்டோர் பெரிதும் புகழ்தற்கிடமானதும் கலக்கமில்லாத சிறப்பினையுடையதுமாகிய 'காந்தார' மென்னும் பிறரால் ஆராயப்பட்ட நாட்டின்கண் செறிந்த பலவாகிய புகழ்களையுமுடைய 'இரத்தினபுரம்' என்னும் நகரத்திலே வாழ்பவனும் மாட்சிமையுடைய வேள்வியிலே மந்திரமோதி மூன்று தீயையும் ஓம்புகின்றவனும், 'சாண்டியன்' என்னும் பெயரையுடையவனும் சான்றாண்மைக்குரிய நல்லொழுக்கங்களையுடையவனும் நூல்களை ஆராய்ந்துணர்ந்த நன்னர் நெஞ்சமுடையவனும் ஆகிய அந்தணனுடைய மகனாவேன் என்க.

(வி - ம்.) நன்னுதல்: விளி. பகைவராலே கலக்கம் இல்லாதது என்றபடியாம். ஈண்டிய - செறிந்த. வேள்வியின்கண் மந்திரமோதி மூத்தீ ஓம்பும் சாண்டியன் என்க. சால்பு - நற்குணங்களானிரம்பு

தல். ஆய்ந்த நெஞ்சம் - நுண்மாணுழை புலனுமாம். மகனென் ஃ தன்மைபொருமை.

(இதுவுமது)

கசுசு - உ00 : மாணகன்.........விரைந்தேன்

(பொ - ரை.) மாணகன் என்பது என் பெயர்; யான் இம் மகதநாட்டினைக் காண்டல் வேண்டும் என்னும் விருப்பத்தோடே இங்கு வந்தேன்காண்! என்ற விடையைக் கூறுதலாலே சிவந்த அணிகலன் அணிந்த அந்தக் கூனி "நன்று! நன்று!" என்று விரும்பிக் கேட்டுப் பலரும் ஆராய்தற்குரிய புகழையுடைய உதயண நம்பியை இவ்வாறு அறிந்துகொண்டவளாய் விரைந்து அவ்விடத்தினின்றுஞ் சென்றனள்; என்க.

(வி - ம்.) காணலுறல் : ஒருசொல். அண்ணலை வாய்மையாக அறியாமல் இவன் காந்தாரநாட்டுப் பார்ப்பனன் என்று அறிந்தவளாய்ச் சென்றனள் என்றவாறு.

சு. பதுமாபதியைக் கண்டது முற்றிற்று.

எ. கண்ணுறு கலக்கம்

இதன்கண் : உதயணனும் பதுமாபதியும் தம்முள் ஒருவரை யொருவர் கண்டமையாலே அற்றை நாளிரவு அவ்விருவரும் தனித்தனியே வருந்திய வருத்தம் கூறப்படும்.

சேயிழைக் கூன்மகள் செவ்வனங் கூறிப்
போகிய பொழுதி னாகிய சூழ்ச்சி
அரும்பெறற் றோழரைப் பொருந்தலும் பொருக்கெனப்
பகலிடம் விளக்கிய பருதியஞ் செல்வன்
அகலிடம் வறிதி தாக வத்தத்
துயர்வரை யுப்பாற் கதிர்கரந் தொளிப்ப
ஆண்கட னகற லதுநோன் றொழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதற்
கற்புடை மகளிர் கடனெனக் காட்டி
வினைக்கும் பொருட்கு நினைத்துநீத் துறையுநர்
எல்லை கருதிய திதுவென மெல்லியற்
பணைத்தோண் மகளிர்க்குப் பயிர்வன போல
மனைப்பூங் காவின் மருங்கிற் கவினிய
பைந்தார் முல்லை வெண்போது நெகிழ
வெறுக்கைச் செல்வம் வீசுத லாற்றாது
மறுத்துக் கண்கவிழ்ந்த மன்னர் போல
வாச மடக்கிய வாவிப் பன்மலர்
மாசி லொள்ளொளி மணிக்கண் புதைப்பப்
பெருமை பீடற நாடித் தெருமந்
தொக்க லுறுதுய ரொப்புத லுள்ளிப்
பக்கந் தீர்ந்த பரிசில ருந்தவாச்
செறுமுகச் செல்வரிற் சேராது போகி
உறுபொரு ளுள்ள துவப்ப வீசி
வெறுவது விடாஅ விழுத்தகு நெஞ்சத்
துரத்தகை யாளர் சுரத்துமுற் சீறூர்
எல்லுறு பொழுதிற் செல்ல லோம்பி
மகிழ்பத மயின்றிசி னாங்கு மல்லிகை

அவிழ்தா தூதி யளிதுயி லமரக்
கழனி யாரல் கவுளகத் தடக்கிப்
பழன மருதிற் பார்ப்புவாய் சொரிந்து
கருங்கா ணுரை நரன்றுவந் திறப்பத்
துணைபிரி மகளி ரிணைமலர் நெடுங்கண்
கட்டழன் முத்தங் காலப் பட்டுடைத்
தனிக்கா ழல்குற் பனிப்பசப் பிவர
அழல்புரை வெம்பனி யளைஇ வாடை
உழல்புகொண் டுறூஅ தொல்லென் றூர்தரச்
செங்கேழ் வானக் கம்பலம் புதைஇ
வெங்க ணீர தாகி வேலிற்
புன்கண் மாலை போழத் தன்கட்
டீராக் கற்பிற் றேவியை மறந்து
பேராக் கழற்காற் பெருந்தகை புலம்பிப்
பைவிரி யல்குற் பதுமா பதிவயிற்
கைவரை நில்லாக் காம வேகம்
அன்றுமுத லாகச் சென்றுமுறை நெருங்கப்
பவழமு மணியும் பாங்குபட விரீஇத்
திகழ்கதிர்ப் பசும்பொற் சித்திரச் செய்கை
வனப்பமை வையந் தனக்குமறை யாகிய
கஞ்சிகை கடுவளி யெடுப்ப மஞ்சிடை
வானர மகளிரிற் றானணி சுடர
முகைநலக் காந்தண் முகிழ்விர லேவைத்
தகைமலர்ப் பொய்கைத் தண்செங் கழுநீர்
சில்லெனப் பிடித்து மெல்லென விழிந்து
நண்ண வருவோள் போலு மென்கண்
ஆற்றே னவட னஞ்சாந் திளமுலை
நோற்றே யாயினு நுகர்வல் யானெனத்
தெய்வ நல்யாழ் கையமைத் தியற்றிய
ஐதேந் தல்கு லவந்திகை வீவும்
உறுதுணைத் தோழ னிறுதியு நினையான்
மாண்ட சூழ்ச்சி மந்திர வமைச்சர்
வேண்டுங் கோள்கைய னாகி நீண்ட
தடம்பெருங் கண்ணி தகைபா ராட்டி

உறுவகை யண்ண றறுகண் பொருந்தலும்
கைவயிற் கொண்ட கழுநீர் நறும்போது
கொய்மலர்க் கண்ணி கொடுப்போள் போலக்
கனவிற் றேன்றக் கண்படை யின்றி
கனவிற் றேன்றிய நறுநுதற் சீறடி
மைவளர் கண்ணியை யெய்தும் வாயில்
யாதுகொ லென்றுதன் னகத்தே நினைஇ
வெங்கனன் மீமிசை வைத்த வெண்ணெயின்
நெஞ்ச முருக நிறுத்த லாற்றுன்
காவினுட் காவலன் கலங்கக் கோயிலுட்
பாசிழை யல்குற் பாவையும் புலம்பித்
தாயில் கன்றி னுய்நலந் தொலைஇப்
புகையினுஞ் சாந்தினுந் தகையிதழ் மலரினும்
வாசங் கலந்த மாசி றிருமனை
ஆயஞ் சூழ வமளியு ளேறி
நறுமலர்க் காவினுட் டுறமிய பூந்துணர்க்
கொடிக்குருக் கத்திக் கொழுந்தளிர் பிடித்து
நாண்மலர்ப் பின்னைத் தாண்முத லணைந்து
பருகு வன்ன நோக்கமொடு பையாந்
துருகு முள்ளமோ டொருமர னொடுங்கி
நின்றேன் போலவு மென்றேள் பற்றி
அகலத் தொடுக்கி நுகர்வோன் போலவும்
அரிமலர் நெடுங்க ணகவயிற் போகாப்
புரிநூன் மார்பன் புண்ணிய நறுந்தோள்
தீண்டும் வாயில் யாதுகொ லென்றுதன்
மாண்ட சூழ்ச்சி மனத்தே மறுகி
ஆசி லணியிழை தீயயல் வைத்த
மெழுகுசெய் பாவையி னுருகு நெஞ்சினள்
பள்ளி கொள்ளா ளுள்ளுபு வதிய
இருவயி னேத்த வியற்கை நோக்கமொ
டொருவயி னேத்த வுள்ள நோயர்
மல்லற் றுனை வத்தவர் மன்னனும்
செல்வப் பாவையுஞ் செய்திற மறியார்
கொல்வது போலுங் குறிப்பிற் றுகி

எல்லி யாம மேழிருள் போலப்
பசுங்கதிர்த் திங்கள் விசும்பளந் தோடிக்
கடுங்கதிர்க் கனிலி கக்குபு போகித்
தாஞ்ளி மழுங்கி மேன்மலை குளிப்ப
மீன்முகம் புல்லென வா.........ஞ.........கை
தெளிமணி விளக்கு மளிமலர்ப் பள்ளியுட்
புலப்பிற் றீரக் கலப்புறு கணவரை
முயக்கிடை விடாஅச் சுடர்க்குழை மகளிர்
தோணமுதற் புணர்ச்சி யிரியத் துட்கென
வாண்முக மழுங்க வலியற வராவும்
வைவாள் போலும் வகையிற் றகி
வெள்வேல் விடலையொடு விளங்கிழை மாதர்க்குச்
செந்தீக் கதீஇய வெந்தழற் புண்ணினுட்
சந்தனச் சாந்திட் டன்ன தண்மையொடு
வந்தது மாதோ வைக லின்றேன்.

உரை

எ. கண்ணுறு கலக்கம்

அஃதாவது - உதயணனும் பதுமாபதியும் ஒருவரை ஒருவர் கண்ணுற்றமையாலுண்டான காமத் துன்பத்தைக் கூறும் பகுதி யென்றவாறு.

(ஞாயிறு மறைதல்)

க - சு : சேயிழை.........ஒளிப்ப

(பொ - ரை.) *சிவந்த அணிகலன்களையுடைய கூனியாகிய அயிராபதி இங்ஙனம் பதுமாபதியைப்பற்றி உதயணன்பால் விளக்கமாகச் சொல்லிப் போனபொழுது உதயணன் ஆக்கம் பெற்ற சூழ்ச்சியையுடைய பெறற்கரிய தோழராகிய உருமண்ணுவா முதலியோரிடத்தே சென்றுசேர்தலும், பகற்பொழுதிலே உலகத்தை விளக்கிய ஞாயிற்றுச்செல்வன் ஞெரேலென அகன்ற இவ்வுலகம் வறுமையடையும்படி மேற்றிசையில் உயர்ந்த மலைக்கும் அப்பாலே தனது கதிர்களை மறைத்துக்கொண்டு மறையாநிற்ப என்க.*

(வி - ம்.) செவ்வனம் - விளக்கமாக; நன்றாக. தோழர் - உருமண்ணுவா முதலியோர். பருதி - ஞாயிறு. அத்தத்து உயர்வரை - உயர்ந்த அத்தகிரி. உப்பால் - அப்பால்.

(மாலைக் காலம்)

எ - கச: ஆண்.........நெகிழ

(பொ - ரை.) உலகின்கண் ஆடவர்க்குப் போர் கருதியாதல் பொருளீட்டல் கருதியாதல் தம் காதலியைப் பிரிந்துபோதல் கடமையாகும். மனைமாட்சியோடு பொருந்திய குற்றமற்ற அழகிய நுதலையுடைய கற்புடைய மகளிர்கடன் அப்பிரிவுத் துயரைப்பொறுத்து ஒழுகுதலையாம் என்று குறிப்பாகக்காட்டிப் போர்க்கும் பொருளுக்குமாக நுங்களைப் பிரிந்துபோய்ச் சேய்மையில் உறைகின்ற நுங்காதலர் தாம் மீண்டு நும்பால் வருதற்கு எல்லையாகக் கருதியபொழுது இந்த மாலைப்பொழுதேகாண் என்று, மெல்லியலையும பருத்த தோள்களையுமுடைய அந்த மகளிர்க்கு நினைவூட்டுவனபோன்று மனைப்படப்பை வேலியிற் படர்ந்து அழகுற்ற பசிய மாலைபோன்று செறிந்த முல்லையினது வெள்ளிய அரும்புகள் மலராநிற்ப வென்க.

(வி - ம்.) ஆண் - ஆடவர். அது - அப்பிரிவினை. நோன்று - பொறுத்து. மாணபு - மனை மாண்பு. வினை - போர். நீத்து - பிரிந்து தாம் மீண்டு வருவதாகக் குறிப்பிட்ட எல்லை. பயிர்வன - அறிவிப்பன. மனைப்பூங்கா - வீட்டைச் சூழ்ந்துள்ள தோட்டம். பசியதார் போன்று செறிந்தபோது என்க.

(இதுவுமது)

கரு - கஅ: வெறுக்கை......புதைப்ப

(பொ - ரை.) பொன்னாகிய தம் பொருளை இரவலர் ஏற்ற பொழுது அள்ளி அள்ளி வழங்குதல் செய்யாது இல்லை யென்று மறுத்துக் கூறிக் கீழ் நோக்கிய வச்சை மன்னர்போன்று நீர் நிலையிலுள்ளனவாகிய மணத்தைத் தம்முள் அடக்கிய பலவாகிய தாமரை மலர்கள் தந்தேனை வண்டுகட்கு வழங்க மறுத்துக் குற்றமற்ற பேரொளியையுடைய மணிகள் அமைந்த பொகுட்டை இதழான் மறைத்துக்கொண்டு குவியாநிற்ப என்க.

(வி - ம்.) வெறுக்கை - பொன். வீசுதலாற்றாது: ஒரு சொல்; வழங்காமல் என்க. கண்கவிழ்தலாவது இரவலர் முகத்தை நோக்கவும் நாணி நிலத்தை நோக்குதல். வாவிப் பன்மலர் என்றது சிறப்பினால் தாமரை மலர் என்பதுபட நின்றது. மணி - தாமரைக் கொட்டை. மணிக்கண் என்றது கொட்டையமைந்த இடமாயகி பொகுட்டை. அழகிய கண் எனவும் ஒரு பொருள் தோன்றிற்று. மறுத்து என்றதனால் இரவலர்க்கு என்றும் வண்டுகட்கு வழங்க மறுத்தென்றும் கூறிக்கொள்க.

(இதுவுமது)

கசு - உஎ : பெருமை.........அயின்றிசினுங்கு

(பொ - ரை.) கைப்பொருள் அற்றுப்போன இரவலர் தமது பெருமையும் பீடும் அறும்படி நல்குரவான் நலிந்து மனஞ் சுழன்று அது தீர்க்கும் வழியை ஆராய்ந்து தமது சுற்றத்தார் எய்துகின்ற துன்பத்தை அகற்ற எண்ணி எண்ணிப் புரவலர்பால் தம்மைச் செலுத்தாநின்ற அவாவினாலே புறப்பட்டுச் சினமுடைய முகத்தையுடைய தீய செல்வர் இல்லங்களைச் சேராமல் ஒதுக்கித் தம்பால் உள்ள மிக்க பொருளை இரவலர் மனமுவக்கும்படி வழங்கி அவரை வாளா விடாத சிறப்புடைய நன்னர் நெஞ்சத்தை யுடைய நல்லறிவாளர் வாழும் சிறிய ஊர் கொடிய பாலைநிலத் தின் கண்ணதாயினும் மடியின்றி ஞாயிறு வீழும் மாலைப் பொழுதிலே சென்று தமது வறுமைத் துயரத்தைப் பரிகரித்து அப்புரவலரோடு மனமகிழ்தற்குக் காரணமான உணவை உண்டு அவர் மனையில் இனிதே தம்வழி நடை வருத்தந்தீரத் துயின்றாற் போன்று என்க.

(வி - ம்.) நல்குரவான் தமது பெருமையும் பீடும் அற்றுப்போம் படி என்க. நாடுதல் - நல்குரவு தீர்தற்குரிய வழியை ஆராய்தல். ஒக்கல் - சுற்றத்தார். ஒப்புதல் - அகற்றுதல். பக்கம் - கைப்பொருள்: ஆகுபெயர். கைப்பொருள் தீர்ந்துபோன பரிசிலர் என்க. தெருமந்து - மனஞ்சுழன்று. உந்துகின்ற அவாவினால் என்க. செறுமுகச் செல்வர் - தம்பால் வருவாரைச் சினந்து அகற்றும் தீய செல்வர். செல்வரிற் சேராது எல்லுறுபொழுதிற் போகி என இயைக்க. எல்லுறுபொழுது - இரவு வரும்பொழுது. பாலைநிலம் ஆகலின் நண் பகலிற் செல்லாமல் மாலைப் பொழுதிலே சென்று என்றவாறு. இரவலர் மனமுவப்ப வீசி என்க. தம்முள்ளம் உவப்ப வீசி எனினு மாம். உரத்தகையாளர் - நல்லறிவாளர். செல்லல் - துன்பம். பின்னர்ப் பொருளுக்கு ஓதிய துயில் அமர்தலை ஈண்டு உவமத்திற்கும் கொள்க. மகிழ்தற்குக் காரணமான உணவு என்க.

(இதுவுமது)

உஎ - ௩௧ : மல்லிகை...........இறுப்ப

(பொ - ரை) வண்டுகள் குவிந்த நீர்ப்பூக்களை விரும்பிக் குளங்களிலே செல்லாமல் முல்லைப் பரப்பிலே சென்று ஆங்குத் தம்மை வரவேற்று இன்முகங்காட்டி மலரும் மல்லிகையை எய்தி அம்மல்லிகை கசிந்து வழங்கும் தேனை வயிறாரப் பருகி அம் மலரிலேயே இனிய துயிலிற் பொருந்தாநிற்பவும், கரிய காலை யுடைய நாரைகள் கழனிகளிலே ஆரல் மீனைப்பற்றித் தங்கவுளிலே அடக்கிக்கொண்டு சென்று ஊர்ப் பொது நிலத்திலே நிற்கின்ற மருதமரத்திற் குடம்பையிலுறைகின்ற தம் குஞ்சுகளின்

வாயிலே அவ்வாரல் மீனைச் சொரிந்தூட்டி மகிழ்ச்சியாலே ஆரவாரித்துத் தங்காநிற்பவும் என்க.

(வி - ம்.) செறுமுகச் செல்வரிற் சேராது என்று உவமையிற் கூறியதற்கேற்ப சுண்டும் குவிந்த நீர்ப்பூக்களின்பாற் போகாமல் என்க. அளி - வண்டு. ஆரல் - ஒருவகை மீன். பழனம் - ஊர்ப் பொதுநிலம். மருது - மருதமரம். பார்ப்பு - குஞ்சு. உவந்து நரன்று இறுப்ப என்க. நரன்று - ஆரவாரித்து. இறுப்ப - தங்க.

(இதுவுமது)

௩௨ - ௩௩ : துணை..........போழ

(பொ - ரை.) வாடைக்காற்றுத் தீப்போலும் கொடிய பனியோடு கலந்து தங்கணவரைப் பிரிந்துறையும் மகளிருடைய இணைந்த மலர்போன்ற நெடிய கண்கள் தீப்போன்று சுடுகின்ற துன்பக் கண்ணீரை முத்து முத்தாய் உகுப்பவும் பட்டாடையையும் ஒப்பற்ற மேகலையையுமுடைய அல்குலின்கண் நடுக்கஞ் செய்யும் பசலைநோய் படராநிற்பவும் சுழன்று வீசுதலைக்கொண்டு இடையறுமல் ஒல்லென்னும் ஓசையோடே பரவாநிற்பவும் துன்பத்தைத் தரும் மாலைக்காலமானது சிவந்த நிறமுடைய வானமாகிய கம்பலத்தைப் போர்த்துவந்து வெவ்விய கண்ணையுடையதாய்த் தன்னெஞ்சினை வேல்போன்று பிளவாநிற்பவும் என்க.

(வி - ம்.) துணை - கணவன்மார், இணைமலர் : வினைத்தொகை. கடு - அழல், கட்டழல். முத்தம் : உவமவாகுபெயர்; கண்ணீர்த்துளி. தனிக்காழ் - ஒற்றை வடமுமாம். பனி - நடுக்கம், இவர - படர; வாடை காலவும் இவரவும் உழல்புகொண்டு ஊர்தர என்க. உழல்பு. உழலல்; சுழலுதல். ஒல்லென்று - ஒலிக் குறிப்பு. கேழ் - நிறம். கம்பலம் - போர்வை. நீரது - தன்மையுடையது: மாலை வேல்போல நெஞ்சம் போழ என்க.

(உதயணன் வருந்துதல்)

௩௩ - ௪௪ : தன்கண்..........நெருங்க

(பொ - ரை.) பிறக்கிடாத மறக்கழல் கட்டிய கால்களையுடைய உதயணன் தன்பாற் நீராத கற்பையுடைய தன் தேவியாகிய வாசவதத்தையைத் துவரமறந்து பாம்பினது படம் விரித்தாற்போன்ற அல்குலையுடைய பதுமாபதியின்பால் உண்டான தனது ஒழுக்க எல்லையிலே அடங்காத காமவேகமானது அவளைக் கண்டநாள் தொடங்கிப் படிப்படியாக மிகுந்து தன்னைப் பெரிதும் துன்புறுத்துதலாலே துன்புற்று என்க.

(வி - ம்.) தன்கட்டீராக் கற்பு - தன்பானின்றும் அகலாத கற்புடைமை என்க. பேராக்கால், கழற்கால் எனத் தனித்தனி கூட்டுக.

பேரா - போரிற் பிறக்கிடாத. பெருந்தகை - உதயணன். பெருந் தகை காமவேகம் முறை நெருங்கப் புலம்பி என்க. பை - பாம்பின் படம், கைவரை - தன்னெழுக்க எல்லை. அன்று - பதுமாபதியைக் கண்டநாள். சென்று - மிகுந்து.

(இதுவுமது)

௪௩ - ௫௫ : பவழமும்...........யானென

(பொ - ரை.) பவழமும் பிற மணிகளும் அழகுண்டாக விரித் துத் திகழாநின்ற ஒளியையுடைய பசும்பொன்னாலே சித்திரச் செயல் செய்து அழகோடு அமைந்த வண்டியிலே தனக்கு மறைப்பாக இட்ட திரைச்சீலையைக் கடுங்காற்று விலக்கிய பொழுது வெள்ளை முகிலினூடே தோன்றும் தேவமகள்போன்று அணிகலன்கள் ஒளிவீசாநிற்பக் காந்தளரும்புபோன்ற அழகு டைய தனது கூப்பிய விரல் வருந்தும்படி அழகிய மலரையுடைய பொய்கையிற் றோன்றிய குளிர்ந்த செங்கழுநீர் மலர் ஒன்றனைக் காண்போர் மெய் சில்லென்று மயிர்க்கூச்செறியும்படி பற்றிக் கொண்டு மெல்லென இறங்கி என்பால் அடைதற்கு வருவாள் போன்று என் மனக்கண்ணிலே தோன்றுகின்றாள்! ஆதலாலே யான் ஆற்றுகின்றிலேன்! அப்பதுமாபதியின் சந்தனம் நீவிய அழகிய இளமையுடைய முலைகளை யான் தவஞ்செய்தாயினும் நுகர்வேன் என்று கூறி என்க.

(வி - ம்.) உதயணன் முதன்முதலாகப் பதுமாபதியைக் கண்ட காட்சி, தன் மனக்கண்ணிலே நன்கு பதிந்து கிடத்தலாலே அக் காட்சியையே மீண்டும் மீண்டும் கண்டு வருந்துகின்றான்.

பாங்கு-அழகு. விரீஇ-விரித்து. தனக்கு-பதுமாபதிக்கு. மஞ் சிடை-முகிலினூடே. வான் அரமகளிரில்-தேவமகளிர் போல. காந் தண்முகை நலவிரல் என்க. முகை-அரும்பு. சில்லென-சில்லென்று மயிர்க்கூச்செறியும்படி என்க. என்கண் நண்ணவருவோள்போல் கின்றாள். ஆனால் நண்ணுகின்றிலள். அதனால் யான் ஆற்றேன் என்றவாறு.

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்" (குறள் உ௬௫)

என்பதுபற்றி "யான் நோற்றேயாயினும் நுகர்வல்" என்றான்.

இதுவுமது

௫௬ - ௬௨ : தெய்வ..........பொருந்தலும்

(பொ - ரை.) பதுமாபதியின் திறத்திலே இவ்வாறு புலம் பிய உதயண குமரன் மெல்லிதாய் உயர்ந்த அல்குலையுடைய வாசவதத்தை இறந்தமையையும் தனக்கு உற்ற துணைவனாகிய

யூகிமந்தணன் இறந்தொழிந்தமையையும் ஒருசிறிதும் நினையாத வனாய்ச் சிறந்த ஆராய்ச்சியை யுடைய சூழ்ச்சித்திறமுடைய அமைச்சராகிய உருமண்ணுவா முதலியோர் துயின்றருள்க! என்று தன்னை வேண்டாநிற்றலை மேற்கொள்வானாய்த் தன் னெஞ்சினுள்ளே நீண்ட பெரிய கண்களையுடைய பதுமாபதி யையே பாராட்டிக் கிடந்து அவ்வண்ணல் துயில் வரும் வகையா லேயே சிறிது தனது தறுகண்மையுடைய கண்களை முகிழ்த்த அளவிலே என்க.

(வி - ம்.) அவந்திகை-அவந்தி நாட்டினள்; வாசவதத்தை. வீவு - சாவு. தோழன்-யூகி. மந்திரச் சூழ்ச்சி என்க. அமைச்சர்-உருமண் ணுவா முதலியோர். வேண்டுங்கொள்கையை மேற்கொண்டவனாய் என்க. அண்ணல்-உதயணன்.

(இதுவுமது)

௬௫ - எக : கையயிற்...........கலங்க

(பொ - ரை.) கையின்கண் பற்றிய நறிய செங்கழுநீர் மல ரோடு கொய்து தொடுத்த மலர் மாலையை அணிந்த கோலத் தோடு அப்பதுமாபதி தோன்றி அச்செங்கழுநீர் மலரைத் தனக் குக் கொடுப்பவள்போன்று கனவிலே தோன்றாநிற்றலாலே துயில் கலைந்து விழிப்புற்று நனவிலே காமன் கோயிலிலே தோன்றிய நறிய நுதலையும் சிறிய அடிகளையும் மைதீட்டப்பட்ட நெடிய கண்களையும் உடைய அப்பதுமாபதியை அடைதற்குரிய வழிதான் யாது? என்று தன்னெஞ்சத்தே நினைந்து நினைந்து பார்த்து வெவ்விய தீயின்மேல் வைக்கப்பட்ட வெண்ணெய் போன்று நெஞ்சம் உருக அவள்பாற் செல்லும் அந்நெஞ்சத்தை நிறுத்தமாட்டாதவனாய்த்தான் உறையும் அப்பூம்பொழிலிலேயே உலகங் காவலனாகிய அவன் கலங்காநிற்ப வென்க.

(வி - ம்) கொய்மலர் : வினைத்தொகை. தோன்றுதலாலே கண் படை கலைந்து என்க. கண்படை-உறக்கம். நனவிற்றோன்றிய என்ப தற்கு நனவுபோலத் தோன்றிய எனினுமாம். கண்ணி - கண்ணையுடை யோள் - வாசவதத்தை. வாயில் - வழி. நினைஇ - நினைந்து. காவலன்- உதயணன்.

௨௰

(பதுமாபதியின் நிலைமை)

எக - எ௬ : கோயிலுள்........ஏறி

(பொ - ரை.) இனி இங்ஙனமே உதயணகுமரனைக் கண்கூடா கக் கண்டு சென்ற பசிய அணிகலன்களையுடைய கொல்லிப் பாவை போன்றவளாகிய பதுமாபதிதானும் அரண்மனையின்கண் பெரிதும் காம நோயாலே வருந்தித் தாயைப் பிரிந்த ஆன்கன்று

போலே தன் அழகும் பெண்மை நலமும் கெட்டு நறும்புகையானும் சந்தனத்தானும் கட்டப்பட்ட மலர் மாலைகளானும் மிக்க மணம் கலந்த குற்றமற்ற தனது கன்னிமாடத்தே தன் தோழிமார் சூழ்ந்து வரச்சென்று ஆங்குக் கிடந்த படுக்கைக் கட்டிலில் ஏறிக் கிடந்து என்க.

(வி - ம்.) கோயில்-அரண்மனை. பாவை-பதுமாபதி. தாய்-தாய்ப் பசு. ஆய்-அழகு. நலம்-பெண்மைநலம். மாசில் திருமனை என்றது கன்னிமாடத்தை. ஆயம்-தோழியர் கூட்டம். அமளி-படுக்கை.

(இதுவுமது)

எஎ - கூ0 : நறுமலர்..............வநிய

(பொ - ரை.) நறிய பூம்பொழிலின்கண் செறிந்த பூங்கொத்துக்களையுடைய கொடியாகிய குருக்கத்தியின் வளவிய தளிரைக் கையிற்பற்றி அன்றலர்ந்த மலர்களையுடைய புன்னை மரத்தின் அடிப்பகுதியைச் சேர நின்று தன்னை வாரிப் பருகுவான்போன்ற நோக்கத்தோடே துன்புற்று உருகுகின்ற நெஞ்சத்தோடு ஒரு மரத்தின்கண் மறைந்து நிற்போன்போலவும் தன்பால் வந்து தனது மெல்லிய தோளைப்பற்றி அவனுடைய மார்பிலே தன்னை யணைத்து இன்பம் நுகர்வோன் போலவும், தனது செவ்வரி பரந்த மலர்போன்ற நெடிய கண்களினூடே நீங்காமல் நிலைபெற்ற முப்புரி நூலணிந்த மார்பையுடைய அப்பார்ப்பன மகனுடைய புண்ணியமுடைய நறிய தோள்களைத் தழுவுவதற்குரிய வழிதான் யாது? என்று ஆராய்கின்ற தனது மாட்சிமையுடைய சூழ்ச்சியை யுடைய மனத்திலே சுழற்சியடைந்து குற்றமற்ற அழகிய அணி கலன்களையுடைய அந்நங்கை தீயின் பக்கத்தே வைக்கப்பட்ட மெழுகாலியன்ற பாவைபோல உருகாநின்ற நெஞ்சினையுடைய வளாய்த் துயிலாமல் அப்பார்ப்பன மகனையே இடையறாது நினைந்து கிடப்ப என்க.

(வி- ம்.) ஈண்டுப் பதுமாபதி உதயணனைக் காமன்கோயில் மருங்கே முதன் முதலாகக் கண்ட அக்காட்சியே தன் னெஞ்சத்தே பதிந்து அகலாமல் நிலைபெறுதலின் அக்காட்சியையே மீண்டும் மீண்டும் நினைந்து வருந்துகின்றாள் என்றபடியாம்.

துறுமிய-செறிந்த. துணர்-கொத்து. நாண்மலர் - அன்றலர்ந்த மலர். மென்றோள்-இடக்கரடக்கல். அழகுடைமைக்கும் மேலைப் புண்ணியமே காரணமாகலின் புண்ணிய நறுந்தோள் என்றாள். மெழுகு செய்பாவை-மெழுகாற் செய்த பாவை. பள்ளிகொள்ளாள்-துயிலாமல். உள்ளுபு-நினைந்து.

(இதுவுமது)

௯௧ - ௯௬ : இருவயின்............போல

(பொ - ரை.) இவ்வாறு இருவர் நெஞ்சத்தும் ஒத்த இயற்கையையுடைய காமநோக்கத்தோடே ஓரிடத்துப்போல ஈரிடத்தும் ஒத்த வருத்தத்தையுடையவராகிய வளமிக்க படையையுடைய வத்தவ நாட்டுமன்னனாகிய உதயணனும் மகதநாட்டுச் செல்வ மகளாகிய பதுமாபதி நல்லாளும் தாம் தாம் மேற்செய்யும் செயல் யாதென அறியாராய் வருந்தா நிற்ப, அற்றை இரவு இவர்களைக் கொன்று தீர்க்குமொரு குறிக்கோளுடையதுபோல ஒவ்வொரு யாமமும் ஏழு ஏழு யாமங்கள் ஒன்றுகூடினாற் போன்று நீளிதாகத் தோன்றாநிற்ப வென்க.

(வி - ம்.) இயற்கை நோக்கம்-இயற்கையால் உண்டாகும் காம நோக்கம். ஒருபடித்தாக ஒத்த நோயர் என்க. மன்னன்-உதயணன். பாவை-பதுமாபதி. எல்லி-இரவு. இருள்-யாமம்: ஆகுபெயர்.

"ஒருநாள் எழுநாள்போற் செல்லும்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு" (குறள்-௧௨௬௯)

எனவரும் திருக்குறளும் காண்க.

(திங்கள் மறைதல்)

௯எ - ௯௯ : பசுங்............குளிப்ப

(பொ - ரை.) பசிய ஒளியையுடைய திங்கள் மண்டிலம் வானத்தை அளந்தியங்கிய பிரிந்துறைவார் திறத்திலே சுடு நெருப்பை வீசிச்சென்று தனது ஒளிமழுங்கி மேலைத்திசை மலையிலே மறையாநிற்ப வென்க.

(வி - ம்.) குளிர்ந்த ஒளியாகலின் பசுங்கதிர் என்றார். கடுங்கதிர் என்றது பிரிந்துறைவாரைச் சுடுதனோக்கி. கனலி-தீ. மேன்மலை-அத்தகிரி.

(விடியற்காலம்)

௧00 - ௧௧0: மீன்.........இன்றென்

(பொ - ரை.) விண் மீன்களின் முகங்கள் ஒளியிழந்து பொலிவறும்படியும், வா......ஞ......கை தெளிந்த ஒளியையுடைய மணி விளக்கங்கள் (ஒளியிழப்பவும்) வண்டுகள் மொய்க்கும் மலர்ப் பள்ளியிடத்தே தாம் ஊடலிற்றீரும்படி பணிமொழி கூறித் தம்மோடு கூடும் கணவன்மாரைத் தழுவுதலிடையறாத ஒளியுடைய குழையணிந்த மகளிருடைய தோளிற்றுயிலும் கூட்டம் கெடுதலாலே அம்மகளிர் துட்கென்று ஒளி முகமழுங்கி வருந்தும்படியும்

அவர் தம் வலிமை தேயும்படியும் அராவுமொரு வாளரம்போலும் தன்மையுடையதாய் அற்றைநாள் விடியற்காலம், வெள்ளிய வேலை ஏந்தும் தலைவனாகிய உதயண குமரனுக்கும் விளங்கிய அணிகலன்களையுடைய பதுமாபதிக்கும் சிவந்த தீயாற்சுடப் பட்ட வெவ்விய தீப்புண்ணின்கண் குளிர்ந்த சந்தனக் குழம்பை யிட்டாற்போன்ற குளிர்ச்சியோடே வந்தது என்க.

(வி - ம்) மீன் - விண்மீன். இவ்விடத்தே (க00) சில சொற்கள் அழிந்தன. அளித்தற்கிடனை மலர்ப்பள்ளியுமாம். புலம்பின் - தனி மையினின்று எனினுமாம். இரிதலாலே துட்கென வாண்முகமழுங்க என்க. விடலை - உதயணன். கதிஇய-கதுவிய. மாதும் ஓவும் அசை கள். இன்றுவைகல வந்தது என்க.

எ — கண்ணுறு கலக்கம் முற்றிற்று

அ. பாங்கர்க் குரைத்தது

இதன்கண்-பதுமாபதியின் நிலைமையும், செவிலி முதலியோர் பதுமாபதியிடம் கூறுதலும், அவள் கூற்றும், அவள் செயலும் உதயணன் பதுமாபதியாகிய இருவர் செயலும், பதுமாபதி அயிராபதியை வினாதலும், அவள் விடையும், பதுமாபதி அயிராபதியிடம் கூறுதலும், அயிராபதி உதயணன்பால் குறிப்பித்தலும், உதயணன் செயலும், உதயணன் தன்னிலையைத் தோழர்க் குணர்த்தலும், இசைச்சன் மறுத்தலும், ஏனைய தோழர் மறுத்தலும் உதயணன் கூற்றும் கூறப்படும்.

வைகிய காலை வத்தவ ரிறைவனும்
பைவிரி யல்குற் பதுமா பதியும்
கண்ணுறக் கலந்த காம வேகம்
ஒண்ணிறச் செந்தீ யுண்ணிறைத் தடக்கிய
ஊதுலை போல வுள்ளகங் கனற்ற
மறுத்தவற் காணுங் குறிப்புமனத் தடக்கி
பண்கெழு விரலிற் கண்கழூஉச் செய்து
தெய்வம் பேணிப் பையென விருந்தபிற்
பாசிழைச் செவிலியும் பயந்த தாயும்
நங்கை தவ்வையும் வந்தோருங் கீண்டிப்
படிநலப் பாண்டியங் கடிதூர்ந் துராஅய
வையத் திருப்ப மருங்குனொந் ததுகொல்
தெய்வத் தானத்துத் தீண்டிய துண்டுகொல்
பாடகஞ் சுமந்த சூடுறு சேவடி
கோடுயர் மாடத்துக கோடுமுடி யேற
வாதக் கோப்புளோடு வருத்தங் கொண்டகொல்
அளிமலர்ப் பொய்கையுட் குளிர்நீர் குடையக்
கருங்கண் சிவப்பப் பெருந்தோ ணொந்தகொல்
யாதுகொ னங்கைக் கசைவுண் டின்றெனச்
செவ்வி யறிந்து பையெனக் குறுகி
வேறுபடு வனப்பின் விளங்கிழை வையம்
ஏறின மாகி யிளமரக் காவினுட்
சேறு மோவெனச் சேயிழைக் குரைப்ப

முற்ற நோன்பு முடியு மாத்திரம்
கொற்றக் கோமான் குறிப்பின் றுயினும்
வினவ வேண்டா செலவென விரும்பி
மெல்லென் கிளவி சில்லென மிழற்றிப்
புனைமாண் வையம் பொருக்கெனத் தருகென
வினைமா ணிளையரை யேவலின் விரும்பி
நாப்புடை பெயரா மாத்திரம் விரைந்து
காப்புடை வையம் பண்ணி யாப்புடை
மாதர் வாயின் மருங்கிற் றருதலின்
கோதை யாயம் பரவ வேறித்
திருமலர் வீதி போதந் தேதிர்மலர்க்
காவினுட் போலிந்த வோவக் கைவினைக்
கண்ணூர் மாட நண்ணுவன ளிழிந்து
தேனிமிர் படலைத் திருவமர் மார்பனைத்
தானினி தேதிர்ந்த தானத் தருகே
அன்று மவாவி நோக்கின னன்றியல்
இருவரு மியைந்து பருவரல் காட்டிப்
புறத்தோர் முன்னர்க் குறிப்புமறைத் தோடுக்கிக்
கருங்கண் டம்மு ளோருங்குசென் றுட
வந்தும் பெயர்ந்து மன்றைக் கோண்டும்
காலையும் பகலு மாலையும் யாமமும்
தவலருந் துன்பமோடு கவலையிற் கையற்
றைஙநாள் கழிந்த பின்றைத் தன்மேல்
இன்னு வெக்கோய் தன்னமர் தோழிக்
குரைக்கு மூக்கமோடு திருத்தகு மாதர்
வான்றோய் மண்டபம் வந்தோருங் கேறித்
தேன்றோய் கோதை சில்லென வுராய்
இடுகிய கருங்கண் வீங்கிய கோழுங்கவுட்
குறுகிய கடுவிற் சிறுகிய மென்முலை
நீண்ட குறங்கி னிழன்மணிப் பல்கலம்
பூண்ட வாகத்துப் பூந்துகி லல்குல்
அயிரா பதியெனுஞ் செயிர்தீர் கூனியைத்
தடந்தோண் மாதர் கோடுங்கழுத் தசைஇ
நின்ற செவ்வியு ளோன்று ரட்ட

வாமான் றிண்டேர் வத்தவர் பெருமகன்
கோமாட் கொடிய குறிப்பின னாகித்
திகழ்தரு மதியிற் றிருமெய் தழீஇ
வெள்ளைச் சாந்தின் வள்ளி யெழுதிய
வயந்தக குமரன் வரைபுரை யகலத்
தசைந்த தோள னாகி யொருகையுட்
டாரகம் புதைத்த தண்மலர் நறும்பைந்
தூழறிந் துருட்டா வொருசிறை நின்றுழிப்
பந்தவன் செங்கை பயில்வது நோக்கி
அந்தண வுருவொடு வந்தவ னின்றோன்
யார்கொ லவனை யறிதி யோவெனப்
பாவை வினவப் பணிந்தவ ளுரைக்கும்
அடிகள் போக யானு மொருநாள்
ஒடியாப் பேரன் புள்ளத் தூர்தர
ஆண முடைத்தாக் கேட்டனெ னவனை
மாணக னென்போன் மற்றிந் நாடு
காண லுறலொடு காதலின் வந்தோன்
மறையோம் பாளன் மதித்தன னாகித்
தானுந் தோழருந் தான நசைஇ
நின்றனர் போகா ரென்றவட் குரைப்பப்
பல்வகை மரபிற் பந்துபுனைந் துருட்டுதல்
வல்லவன் மற்றவன் கைவயிற் கொண்டது
புறத்தோ ரறியாக் குறிப்பி னுணர்த்தி
நமக்கு வேண்டென நலத்தகை கூறக்
கண்ணினுங் கையினுங் கண்ணிய துணர்த்திப்
பெருந்தகை யண்ண றிருந்துமுக நோக்கி
நின்கைக் கொண்ட பூம்பந் தென்கை
ஆய்வளைத் தோளிக் கீக்க வென்ன
அங்கை யேற்றிச் செங்கணிற் காட்டிய
கூன்மகள் குறிப்புத் தான்மனத் தடக்கித்
தன்வயிற் றாழ்ந்த தைய னிலைமை
இன்னுயிர்த் தோழர்க் கிசைத்தல் வேண்டி
மந்திரச் சூழ்ச்சியுள் வெந்திறல் வீரன்
வள்ளிதழ்க் கோதை வாசவ தத்தையை

உள்வழி யுணரா துழலுமேன் னெஞ்சினைப்
பல்லிதழ்க் கோதைப் பதுமா பதியெனும்
மெல்லியற் கோமகண் மெல்லென வாங்கித்
தன்பால் வைத்துத் தானுந் தன்னுடைத்
திண்டா னெஞ்சினைத் திரிதலோன் றின்றி
என்னுழை நிறீஇத் திண்ணிதிற் கலந்த
காம வேட்கைய டானெனக் கூற
ஈங்கிது கேட்கென விசைச்ச னுரைக்கும்
மன்னிய விழுச்சீர் மகதத்து மகளிர்
நன்னிறை யுடையர் நாடுங் காலை
மன்னவ னுணையு மன்ன தோன்றெனக்
கன்னி தானுங் கடிவரை நெஞ்சினள்
வேட்டுழி வேட்கை யோட்டா வொழுக்கினள்
அற்றன் றாயிற் கொற்றங் குன்றித்
தொடிகெழு தோளி சுடுதீப் பட்டெனப்
படிவ நெஞ்சமொடு பார்ப்பன வேடம்
கொண்டான் மற்றவன் கண்டோர் விழையும்
வத்தவர் கோமா னென்பதை யறிவோர்
உய்த்தவட் குரைப்ப வுணர்ந்தன ளாகிப்
பெறுதற் கரிய பெருமக னிந்நகர்
குறுக வந்தனன் கூறுதல் குணமென
நெஞ்சுநிறை விட்டன ளாகு மன்றெனின்
ஈன மாந்த ரொப்ப மற்றிவர்
தானி மேற்ற றகாஅ தென்றுதன்
நுண்மதி நாட்டத்து நோக்கின ளாமது
திண்மதித் தன்றெனத் திரிந்தவன் மறுப்ப
ஒருப்பா டெய்தி யுற்றவ ரெல்லாம்
குறிப்பின் வாரா நோக்கெனக் குருசிற்கு
மறுத்த வாயிலொடு வலிப்பன ராக
உயிரோன் றாகி யுள்ளங் கலந்தவள்
செயிரின் றாகிய செங்கடை நோக்கம்
அணங்கெனக் காயிற் றவட்குமென் னோக்கம்
அத்தோழி னீர்த்தென வெய்த்தன னென்ன
உரைப்பத் தேறு வுயிர்த்துணைத் தோழரைத்

திருச்சேர் மார்பன் றேற்றுதல் வேண்டி
மலரினு மரும்பினுந் தளிரினும் வனைந்த
சந்தக் கண்ணிதன் சிந்தை யறியப்
பூக்குழை மாதர் நோக்கிடை நோக்கிப்
படுகாற் பொய்கைப் பக்க நிவந்த
நறுமலர்ப் போதும்பர் நாற்றுவனம் போகி
மறைந்தன மிருந்த காலைமற் றவளென்
கண்ணி கோள்ளிற் கலக்கு முள்ளம்
திண்ணி தாகுத றெளிமி னீரென
மன்னவ னுரைத்தனன் மற்றவர்க் கெடுத்தேன்.

உரை

அ. பாங்கர்க் குரைத்தது

அஃதாவது—உதயணகுமரன் தான் பதுமாபதி நங்கையைப் பெரிதுங் காதலித்துள்ள செய்தியை உருமண்ணுவா முதலிய தோழர்க்குணர்த்தியதனைக் கூறும் பகுதி என்றவாறு.

க - ரு : வைகிய.............கனற்ற

(பொ - ரை.) பொழுது புலர்ந்த பின்னர் வத்தவமன்னனாகிய உதயணகுமரனும் பாம்பின் படம்போன்று விரிந்த அல்குலையுடைய பதுமாபதியும் தம்முள் ஒருவரை ஒருவர் கண்ணுற்றமையாலே இருவருள்ளத்தும் விரவிய காமவேகம் ஒளியும் நிறமுமுடைய சிவந்த நெருப்பை உள்ளே நிரப்பி ஊதப்பட்ட உலைபோன்று அகஞ்சுடாநிற்ப என்க.

(வி - ம்.) கண்ணுதலாலே கலந்த காமவேகம் என்க. உண்ணிறைத் தடக்கிய உலை, ஊதுலை எனத் தனித்தனி கூட்டுக.

(பதுமாபதியின் நிலை)

சு - அ : மறுத்து.........இருந்தபின்

(பொ - ரை.) பதுமாபதி மீண்டும் அப்பார்ப்பன மகனைக் காணல் வேண்டும் என்னும் அவாவினைப் பிறர் அறியாமற் றன் மனத்தினுள்ளேயே அடக்கிக்கொண்டு யாழ்பயின்று சிறந்த தன் விரல்களாலே முகங் கழுவி இறைவணக்கஞ் செய்து மெல்லென இருந்த பின்னர் என்க.

(வி - ம்.) பதுமாபதி என்னும் எழுவாய் வருவித்தோதுக. காணும் குறிப்பு-காண்டற்கவாவும் கருத்து. பண்கெழுவிரல்-பண்ணிசைத்துப் பயின்ற விரல்கள். கழூஉச்செய்து: ஒரு சொல்; கழுவி என்க. "நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத் தானறியுமாற்றாற் றொழு தெழுக" என்பது ஆசாரக்கோவை (8).

(செவிலி முதலியோர் பதுமாபதியிடம் கூறல்)

௬ - ௧௬ : பாசிழை.........இன்றெனை

(பொ - ரை.) பசிய அணிகலனையுடைய செவிலித்தாயும் பதுமாபதியை யீன்ற தாயும் அவளுடைய உசாஅத் துணைத் தோழியாகிய யாப்பியாயினியும் அவள்பால் வந்து குழீஇ நோக்கி இவட்கு இன்று துயரம் தோன்றியுளது, அத்துயரத் திற்குக் காரணம் யாது? ஒரோ வழி இவள் நேற்று வடிவழகுடைய எருதுகளை விரைந்து செலுத்திச் சென்ற வண்டியின்கண் அமர்ந்திருந்தமையாலே இவள் இடைநொந்து போயதோ? அன்றிக் காமன் கோயிலினிடத்தே இவளைத் தெய்வந்தீண்டி வருத்தியதுண்டோ? அன்றி அணியப்பட்ட பாடகத்தைச் சுமந்த இவளது சிவந்த அடிகள் குவடுயர்ந்த மேனிலை மாடத்துச்சியின் கண் ஏறியதனால் சிவந்த கொப்புளங்களோடு வருந்ினவோ? அன்றி வண்டுகள் முரலுகின்ற மலர்களையுடை பொய்கையின்கண் இவள் குளிர்ந்த நீரிலே நெடிது ஆடியதனாலே இவளுடைய கரிய கண்கள் சிவவா நிற்பப் பெரிய தோள்களும் துன்புற்றனவோ? இவற்றுள் இத்துன்பத்திற்குக் காரணம் யாதெனை அறிகின்றிலமே என்று கவன்று என்க.

(வி - ம்.) பயந்ததாய்-உதையையோடை. நங்கை - பதுமாபதி. தவ்வை-செவிலியின் மகளாய்த் தனக்கு மூத்தவள்; யாப்பியாயினி. படி- வடிவம். உராஅய-சென்ற. கொல் அனைத்தும் ஐயப் பொருண்மைய. தெய்வத்தானம் - காமன்கோயில். தெய்வந் தீண்டியதுண்டு கொல்? என்க. பாடகம்-ஒரு காலணி. சூடுறு பாடகம் சுமந்த சேவடி என மாறுக. கோடு - உச்சி. அரத்தக் கொப்புள் - சிவந்த கொப்புளம். அசைவு-துன்பம்.

(இதுவுமது)

௨௦ - ௨௧ : செவ்வி.........உரைப்ப

(பொ - ரை.) செவ்வியறிந்து மெல்லப் பதுமாபதியை அணுகி மாறுபட்ட அழகினையுடைய விளங்காநின்ற அணிகலன் களையுடைய கோமகளே! யாம் இன்றும் வண்டியிலேறி இளமரப் பொழிலினுள்ளே ஆடற்குப் போவோமா? நின் கருத்தென்னை? என்று பதுமாபதியை வினவ என்க.

(வி - ம்.) வேறுபடுவனப்பின் விளங்கிழை என்றது, வேறு வேறு வகையான அழகுடைய விளங்கிய இழையினையுடையோய் என்றும், மெய்வேறுபட்டிருக்கின்றவளே என்றும் இரு பொருளும் தோற்று வித்தலுணர்க. சேறுமோ-செல்வோமா?

(பதுமாபதி கூற்று)

உச - கூஉ : முற்ற........தருநலின்

(பொ - ரை.) அது கேட்ட பதுமாபதி அப் பார்ப்பனமகனை இச் செலவைத் தலைக்கீடாகக் கொண்டு இன்றும் காணலாம் என்னும் அவா வுந்துதலாலே நன்று நன்று நாம் மேற்கொண்டுள்ள காமனோன்பு முழுதும் முடியுமளவும் யாம் பொழில் விளையாட்டிற்கு வெற்றி பொருந்திய மன்னவன் கட்டளை நமக்கில்லையாயினும் அம் மன்னவனைக் கேட்டு உடன்பாடு பெறுதலும் மிகையாம். யாமே செல்வேம், என்று மெல்லிய மொழிகள் பலவற்றை மிழற்றியவளாய்த் தொழின் மாட்சிமையுடைய ஏவலிளையரை நோக்கி நீயிர் சென்று ஒப்பனை மாட்சிமையுடைய நம் வண்டியை விரைந்து கொணர்க! என்று ஏவுதலாலே அவர் தாமும் அவள் நாவசைந்த மாத்திரையே விரைந்து போய்க் காவலமைந்த வண்டியை ஒப்பனை செய்து அன்புடைய பதுமாபதியின் கன்னிமாடத்தின் முன்றிலிலே கொணர்ந்து நிறுத்துதலாலே என்க.

(வி - ம்.) நோன்பு முற்ற முடியுமாத்திரம் என மாறுக. கோமான்-தருசகன். செலவிற்குக் கோமானை வினவ வேண்டா என்றவாறு. கிளவி-மொழி. பொருக்கென:விரைவுக்குறிப்பு. மாதர்-பதுமாபதி.

பதுமாபதியின் செயல்

கூகூ - கூசு : கோதை........நோக்கினள்

(பொ - ரை.) பதுமாபதி தோழியர் வாழ்த்த அவ்வண்டியிலேறிச் செல்வம் மிகாநின்ற வீதியிலே சென்று எதிரே யமைந்த பூம்பொழிலிலே ஓவியத் தொழிலமைந்த கண்ணுக்கு நிரம்பிய அழகுடைய கோயின் மாடத்தின்கண் வண்டியினின்றும் இறங்கி வண்டு முரலும் தழைவிரவிய மலர்மாலையையுடைய திருமகள் உறைகின்ற மார்பினையுடைய அப் பார்ப்பனமகனைத் தான் முதனாள் கண்ணுற்ற இடத்தே அற்றை நாளும் வேணவாவோடும் நோக்கினள் என்க.

(வி - ம்.) கோதை-பதுமாபதி. ஆலயத்திற்கு அடையாக்கினுமாம். திரு-செல்வம். ஓவம்-ஓவியம். தேன்-வண்டு. தானம்-இடம். அவாவி-விரும்பி.

உதயணன் பதுமாபதியாகிய இருவர்செயலும்

௩௪ - ௪௫ : நன்றியல்.........பின்றை

(பொ - ரை.) ஒருவரை ஒருவர் காணுதலை விரும்பி நன்கனம் வந்து கூடிய பதுமாபதியும் உதயணனும் ஆகிய இருவரும் ஓரிடத்தே பொருந்தித் தத்தம் பிரிவுத்துன்பத்தை ஒருவருக்கொருவர் உணர்த்தி அயலோர்க்குப் புலப்படாமல் தத்தம் காமக்குறிப்பைத் தத்தம் நெஞ்சினுள்ளேயே அடக்கி மறைத்துக் கொண்டு இருவருடைய கரிய விழிகளும் ஒன்றுபட்டுச் சுழல இவ்வாறே அற்றைநாள் தொடங்கி இருவரும் ஓரிடத்திற்கு வந்தும் மீண்டு சென்றும் ஒவ்வொரு நாளும் காலையும் நடும் பகலும் மாலையும் யாமமும் என்னும் எல்லாப் பொழுதுகளிலும் தவிர்த்தற்கரிய துயரத்தோடு கவலையினாலே கையறவு கொண்டு ஐந்து நாள்கள் கழிந்த பின்னர் என்க.

(வி - ம்.) பருவரல்-துன்பம், இருவர் கண்களும் என்க. அன்றைக்கொண்டு-அற்றை நாள்முதலாக. கையற்று-செயலற்று.

இதுவுமது

௪௫ - ௪௯ : தன்மேல்..... ...ஏறி

(பொ - ரை.) மறுநாள் பதுமாபதி தனக்குண்டாயிருக்கின்ற துயர் செய்யும் காமநோயைத் தன்னைப் பெரிதும் விரும்பும் உசாஅத்துணைத் தோழிக்குணர்த்தி அறத்தொடு நிற்கும் ஊக்கத்தோடு திருமகளை ஒத்த அக்கோமகள் வானைத் தீண்டு கின்ற அக்காமன் கோயில் மாடத்தே தோழியர்களோடு ஏறி என்க.

(வி - ம்.) தன்மேல் இன்னுவெங்நோய் என்றது, தான் எய்தியிருக்கிற காமநோயை. தோழிக்குரைத்தல்-அறத்தொடு நிற்றலாம். மண்டபம்-காமன்கோயில் மண்டபம்.

(இதுவுமது)

௫o - ௫௯ : தேன்.........செவ்வியுள்

(பொ - ரை.) தேனுல் நனைந்த மலர்மாலையையுடைய அப்பதுமாபதி மெல்ல மெல்லத் தோழியர் குழுவினின்றும் பெயர்ந்துபோய்ச் சுருங்கிய கண்களையும் பருத்த வளமான கவுளையும் கூனிய இடையினையும் சிறுகிய மெல்லிய முலைகளையும் நீண்ட துடைகளையும் ஒளி மணிபதித்த பலவாகிய அணிகலன்களையும், அணிந்த மெய்யினையும் அழகிய ஆடையுடுத்த அல்குலையும் உடையவளாகிய அயிராபதி யென்னும் குற்றமற்ற அக்கூனற்றோழியின்பால் அடைந்து பெரிய தோளையுடைய அப்

பதுமாபதி அவளுடைய வளைந்த கழுத்திற் கை வைத்தவளாய் நின்றபொழுது என்க.

(வி - ம்.) கோதை-பதுமாபதி. உராஅய்-பெயர்ந்து சென்று. இடுகிய-சுருங்கிய குறுகிய-கூனிய. நடு-இடை. குறங்கு-துடை. விழல்-ஒளி. செயிர்-குற்றம், மாதர்-பதுமாபதி.

(இதுவுமது)

௫௭ - ௬௬ : ஒன்றார்.........நோக்கி

(பொ - ரை.) பகைவரைக் கொன்ற வெற்றியையுடைய தாவும் குதிரைகள் பூட்டிய தேரை யுடையவனாகிய வத்தவ மன்னன் உதயணன் அற்றை நாளும் இறைமகளாகிய பதுமாபதியின்பாற் சென்ற கருத்தையுடையவனாகி விளங்குகின்ற திங்கள் போன்ற தனது அழகிய உடலின்கண் மங்கலான வெண் சந்தனத்தாலே கொடியுருவம் எழுதப்பட்ட வயந்தக குமரனுடைய மலை போன்ற மார்பின்கண்வைத்த ஒரு கையை யுடையவனாய் மற்றொரு கையாலே மலர்மாலையாற் பொதியப்பட்ட குளிர்ந்த மலராணியன்ற நறிய பந்தினை முறையறிந்துருட்டிக் கொண்டு ஒரு பக்கத்தே நின்றானாக; அப்பொழுது அப்பெருமகன் சிவந்த கைபபந்துருட்டுதலை நோக்கி என்க.

(வி - ம்.) ஒன்றார்-பகைவர். அட்ட-கொன்ற, வாமான்-தாவுங் குதிரைகள். கோமகள-தலைவியாகிய பதுமாபதி. வள்ளி-கொடி. வரைபுரை-மலையையொத்த அசைந்த-தங்கிய; வைத்த. தாரகம்-மாலையுள். பைந்து-பந்து. ஊழ்-உருட்டுமுறை. சிறை-பக்கம்.

(பதுமாபதி அயிராபதியை வினாதல்)

௬௭ - ௬௯ : அந்நண.....................உரைக்கும்

(பொ - ரை.) பதுமாபதி அயிராபதியை நோக்கிப் பார்ப்பன உருவத்தோடு அவ்விடத்தே வந்து நின்றவன் யார்? அவன் இன்னான் என நீ அறிவாயோ? என்று வினவ அயிராபதி அவளை வணங்கிக் கூறுவாள்; என்க.

(வி - ம்.) பாவை - பதுமாபதி. அவள் - அயிராபதி.

(அயிராபதியின் விடை)

௭0 - ௭௭ : அடிகள்... ....உரைப்ப

(பொ - ரை.) "பெருமாட்டியே! நாம் காமன் கோயிலுக்கு வந்த முதனாள் அடிகள் காமனை வழிபட்டு அரண்மனைக்குச் செல்லாநிற்பப் பின்தங்கி ஈண்டு நின்ற யான், அவனை யார் என்று தெரிந்துகொள்ள அவன்பால் கெடாத பேரன்பு

என் உள்ளத்தே தோன்றி மிகுதலாலே அவ்வன்புடைமை காரணமாக அவனை வினவி அறிந்துகொண்டேன். அவன் 'மாணகன்' என்னும் பெயருடையன்; நமது மகதநாட்டைக் கண்டு களித்தல் வேண்டும் என்னும் அவாவினாலே இங்கு வந்துளான்; பார்ப்பனன்; நம் நகரத்தை நன்கு மதித்தவனும் இவனும் இவன் தோழரும் பெருமாட்டி இக் காம நோன்பின் பொருட்டு வழங்கும் தானப் பொருளைப் பெற விரும்பி இருக்கின்றனர். ஆதலால் இவர்கள் நம் காமதேவன் விழா முடியுந் துணையும் இவ்விடத்தினின்றும் போவாரல்லர்" என்று பதுமாபதிக்குக் கூற என்க.

(வி - ம்.) ஒருநாள் என்றது விழவின் முதனாளை. ஆணம் - அன்பு. இந்நாடு - மகதநாடு. மறையோம்பாளன் - பார்ப்பனன். நசைஇ - விரும்பி. போகாராய் கின்றனர் என்க. அவட்கு - பதுமாபதிக்கு.

(பதுமாபதி அயிராபதியிடம் கூறல்)

எ௮ - ௮௧ : பல்வகை..............கூற

(பொ - ரை.) அதுகேட்ட பதுமாபதி "தோழி! இப் பார்ப்பன மகன் பல வேறு வகையினும் பந்துகள் செய்து பல்வேறு வகையாக உருட்டிப் பந்தாடுதலில் மிகவும் வல்லவன் போலும்! அவன் இப்பொழுது தன் கையின்கட் கொண்டு உருட்டாநின்ற அவ்வழகிய பந்தின்கண் என் அவாச் செல்கின்றது; ஆதலால் பிறர் யாரும் அறியாதபடி என் விருப்பத்தினை அவனுக்குக் குறிப்பாகக் கூறி அப்பந்தினை நமக்குத் தருமாறு அவனை வேண்டுவாயாக என்று பெண்மை நலமிக்க அப்பெருந்தகைப் பெண்ணாகிய பதுமாபதி அயிராபதிக்குக் கூறுகிற்றலாலே என்க.

(வி - ம்.) உதயணன் பலவேறு வகையாகப் பந்தினை உருட்டி ஆடுதலைக் கண்டமையால் அவன் ஆட்டத்தைப் பதுமாபதி பாராட்டுகிறாள். வாயாற் கூறாமல் கண்ணினும் கையினும் குறிப்பாலுணர்த்தி என்க. நலத்தகை - பதுமாபதி.

(அயிராபதி உதயணன்பால் பந்து வேண்டல்)

௮௨ - ௮௫ : கண்ணினும்..............என்ன

(பொ - ரை.) அயிராபதி தானும் பெருந்தகைமையுடைய தலைவனாகிய உதயணனுடைய திருத்தமுடைய முகத்தை நோக்கித் தன் கண்களாலும் கையானும் பதுமாபதி கருத்தினைக் குறிப்பாலுணர்த்தி 'ஐயனே! நின் கையிற் கொண்டுள்ள பூம் பந்தினை அழகிய வளையலணிந்த கைகளையுடைய எங்கோமகளுக்

குக் கொடுத்தற்கு என் கையிற்றருக" என்று குறிப்பிக்க என்க.

(வி - ம்.) பதுமாபதி கண்ணியதனைக் கண்ணினுங் கையினும் உணர்த்தி என்க. தோளிக்கு ஈயும் பொருட்டு என் கையீக்க என்று குறிப்பால் வேண்ட என்க. ஆய்வளைத்தோளி : பதுமாபதி.

(உதயணன் செயல்)

௪௬ - ௪௯ : அங்கை...............வேண்டி

(பொ - ரை.) தன் அழகிய கையாற் புடைத்துக் காட்டிப் பந்தினைக் குறிப்பித்து அதனைப் பதுமாபதிக்கு அளித்தருள்க என்பதனைத் தனது சிவந்த கண்ணாலே குறிப்பித்த அக்கூன் மகளின் கருத்தை உதயணன் நன்குணர்ந்துகொண்டு தன் மனத்திலடக்கியவனாய் இந்நிகழ்ச்சியினால் பதுமாபதி தன்பால் பெரிதும் விருப்பமுடையவளாயிருக்கின்ற நிலைமையை ஐயமற அறிந்துகொண்டவனாய் இந்நிலைமையைத் தன் இன்னுயிர்த் தோழராகிய உருமண்ணுவா முதலியோர்க்கு அறிவித்தலை விரும்பி என்க.

(வி - ம்.) கூன்மகள் குறிப்பு - நின் பந்தைப் பதுமாபதி விரும்புகின்றாள்; அதனை அவட்கு அளித்திடுக என்னும் வேண்டுகோள்.

(உதயணன் கூற்று)

௫0 - ௫௮ : மந்திர...............கூற

(பொ - ரை.) அவ்விடத்தினின்றும் தாபதப் பள்ளிக்குச் சென்று தன் தோழருடன் கூடிப் பல்வேறு பொருள் பற்றி ஆராய்ச்சி செய்திருந்தபொழுது வெவ்விய ஆற்றலுடைய வீரனாகிய உதயண குமரன் அத்தோழரை நோக்கி "நண்பீர்! என் காதலியாகிய பெரிய இதழ்களையுடைய மலர் மாலையணிந்த வாசவதத்தை மாறிப் பிறந்திருக்கும் இடம் யாதென்று உணர மாட்டாமையாலே சுழலா நின்ற என் நெஞ்சத்தைப் பலவாகிய இதழ்களையுடைய மலர் மாலையணிந்தவளும் பதுமாபதி என்னும் பெயரை யுடையவளும் ஆகிய மென்மைமிக்க சாயலையுடைய கோமகளொருத்தி மெல்ல என்னிடத்தினின்றும் கவர்ந்து தன்னிடத்தேயே வைத்துக்கொண்டதுமன்றித் தானும் தன்னுடைய திண்ணிய நெஞ்சினைப் பிறழாதபடி என்பால் நிறுத்தி உறுதியாக என்னோடு கலந்துவிட்ட காம வேட்கையை உடையவள் ஆயினள் கண்டீர்! என்று கூற வென்க.

(வி - ம்.) மந்திரச் சூழ்ச்சி - மறைவாகவிருந்து ஆராயும் ஆராய்ச்சி. வீரன் - உதயணன். உள்வழி - உள்ளுமிடத்தே எனினுமாம். திரிதல் - பிறழுதல். நிறீஇ - நிறுத்தி.

(இசைச்சன் மறுத்தல்)

௯௯ - ௧0௪ : ஏங்கிது................ஒழுக்கினள்

(பொ - ரை.) அதுகேட்ட இசைச்சன் என்பான் "பெருமானே! யான் கூறு மிதனைக் கேட்டருள்க!" என்று உதயணனை நோக்கிக் கூறுவான் :— "நிலைபெற்ற பெருஞ் சிறப்பினையுடைய இம்மகத நாட்டு மகளிர் எல்லாம் நல்ல நிறையினை யுடையராவர். அங்ஙனம் நிறையுடையராதற்குக் காரணந்தான் யாதெனஆராயுமிடத்து, இந்நாட்டு மன்னவனுடைய ஆணையும் அத்தகைய சிறப்பினை யுடையதென்றுதல் உணரலாம். பெருமானாற் கூறப்பட்ட கன்னியாகிய அப் பதுமாபதிதானும் மிகுந்த வரையறையையுடைய நெஞ்சினை யுடையவளாவாள். தன்னெஞ்சு விரும்பிய இடத்திலெல்லாம் தன் அவாவினைச் செல்லவிடாத திட்பமான ஒழுக்கத்தையுடையாள்" என்க.

(வி - ம்.) இசைச்சன் - உதயணனுடைய பார்ப்பனத் தோழன். விழுச்சீர்-பெருஞ்சிறப்பு. நிறை-நெஞ்சத்தைத் தீய வழியிற் செல்லாதபடி நிறுத்தும் திட்பமுடைமை. "அருந்திற லரசர் முறைசெயி னல்லது பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" சிலப். (உஅ - உ0எ, அ) எனவும், "மாதவர் நோன்பு மடவார் கற்பும் காவலன் காவல் இன்றெனி னின்றால்" (மணி உஉ - உ0அ - க) எனவும் கூறுதல் பற்றி அந்நாட்டு மகளிரெல்லாம் நிறையுடையராதற்கு "மன்னவன் ஆணையும் அன்னது" என்று காரணங் காட்டினன். கற்புடைமைக்கு மன்னனாணையே அன்றி மகளிர் காவலும் இன்றியமையாமையின் பின்னரும் கன்னிதானுங் கடிவரை நெஞ்சினள் என்றான். கன்னி - பதுமாபதி. "வேட்டுழி வேட்கை யோட்டா வொழுக்கினள்" என்றது "சென்ற விடத்தாற் செலவிடா தீதுஒரீஇ நன்றின்பால் உய்க்கும்" திண்ணிய அறிவினை யுடையாள் என்றவாறு.

(இதுவுமது)

௧0௫ - ௧௧௬ : அற்று................விட்டனளாகும்

(பொ - ரை.) "அங்ஙனமின்றி அப்பதுமாபதி பெருமான்பால் காதலுடையாள் ஆயினமைக்குக் காரணம் கண்டோர் விரும்பும் உதயணகுமரன் அரசுரிமையிற் குறைந்து தொடி பொருந்திய தோளையுடைய தேவியாகிய வாசவதத்தை சுடு தீயிற் பட்டு மாண்டமையாலே நோன்புடைய நெஞ்சத்தோடு பார்ப்பன வேடம் பூண்டு ஈண்டு வந்துளன் என்னுஞ் செய்தியை அறிந்தவர், அச்செய்தியைக் கொடுபோய் அப்பதுமாபதிக்கு உணர்த்த பின்னை அவள் உதயண குமரன் என்றே உணர்ந்தவளாய் யாம் கணவனாகப் பெறுதற்கரிய சிறப்புடைய அப்பெருமகனே இவ்விராசகிரிய நகரை அணுகினன். ஆதலால் நமது காதலை அவனுக்கு நாமே அறிவித்தல் நன்றென நினைந்து தன்

னெஞ்சின் கிறையினை விட்டு நின்னைக் காதலித்தவளாதல் வேண்டும்" என்க.

(வி - ம்.) பதுமாபதி நின்னைக் காதலியாள். நீ கூறுகிறபடி காதலித்திருத்தல் வாய்மையாயின், அவள் பார்ப்பன வேடத்தோடிருக்கும் நின்னை உதயணன் என்றே அறிந்து காதலித்திருத்தல் வேண்டும் என்றவாறு.

கொற்றம்-அரசுரிமை. தோளி-வாசவதத்தை. படிவம்-நோன்பு. அவட்கு-பதுமாபதிக்கு.

(இதுவுமது)

ககரு - ககஎ : அன்றெனின்...............மறுப்ப

(பொ - ரை.) "அங்ஙனமில்லையாயின், பேரழகுடன் விளங்கும் நின்னை அவள் ஒரு பார்ப்பன மகன் என்றே மதித்து "இத்தகைய பெருந்தகைத் தோற்றமுடைய இவர் தாமும் ஈனமுடைய இரத்தற்றொழிலை யுடையோர் போன்று நம்பால் தானமேற்றல் தகாது என்று நின்னிலைக்கு இரங்கி நின்னை ஆராயும் கருத்தோடு நின்னை நோக்கினள் ஆதல்வேண்டும். அங்ஙனமின்றி அவள் நின்னைக் காதலித்து நோக்கினள் என்பது உறுதியானதொரு கருத்தன்று" என்று கூறி அவ்விசைச்சன் உதயணனோடு மாறுபட்டு அவன் கூற்றினை மறுப்ப வென்க.

(வி - ம்.) ஈன மாந்தர் என்றது இரவலரை. நுண்மதி நாட்டம்-நுண்ணிய அறிவினது ஆராய்ச்சி. அது நீ கூறியது. அஃதாவது, பதுமாபதி என்பாற் காம வேட்கையள் என்றது. திரிந்து-மாறுபட்டு. அவன் : இசைச்சன்.

(மற்றைத் தோழரும் மறுத்துக் கூறல்)

ககஅ - க௨௦ : ஒருப்பாடு......வலிப்பனராக

(பொ - ரை.) இவ்வாறு ஏனைய உருமண்ணுவா முதலிய தோழர்கள் அனைவரும் தம்முள் ஒருமை உடையராய அப் பதுமாபதியின் நோக்கம் காமக் குறிப்பினோடு வாராத நோக்கமே என்று உதயணனை மறுக்கும் துணிவுடையர் ஆக; எனக.

(வி - ம்.) ஒருப்பாடு - ஒருமை. உற்றவர்-உருமண்ணுவா முதலியோர். வாராத என்னும் பெயரெச்சத்து ஈறு கெட்டது. குருசில் : உதயணன். வலிப்பினர் - துணிவுடையோர்.

(உதயணன் கூற்று)

க௨க - க௨கூ: உயிர்.........வேண்டி

(பொ - ரை.) திருமகள் வதியும் மார்பினையுடைய உதயணகுமரன் தான் தன்னுடைய உயிரோடு ஒன்றுபட்டுத் தன்

உள்ளத்தே கலந்துள்ள பதுமாபதியின் குற்றம் இல்லையான சிவந்த கடைக்கண்ணின் நோக்கம் எனக்குத் துன்பம் தருவ தாயிற்று. அப் பதுமாபதிக்கும் என்னுடைய நோக்கம் வருத்தம் தருவ தாயிற்று; என்று நான் நன்கு அறிந்துள்ளேன் என்று கூறு நிற்பவும், அம்மொழியினைத் தெளிந்து கொள்ளமாட்டாத தன் உயிர்க்குயிராகிய அந் நண்பர்களைத் தெளிவிக்க விரும்பி; என்க.

(வி - ம்.) "உயிர் கலந்தொன்றிய தொன்றுபடு நட்பு"— (அகநா.—உ0ரு : க.) செயிர் - குற்றம். நீர்த்து - தன்மையுடையது. எய்த்தனன் - அறிந்தேன். திரு - திருமகள். மார்பன் : உதயணன். வேண்டி - விரும்பி.

(இதுவு மது)

கஉஎ - கஙரு: மலரினும்.........எடுத்தென்

(பொ - ரை.) அம்மன்னவன் அவ்வமைச்சர்களை நோக்கித் "தோழர்காள், யாம் மலர்களானும் அரும்பானும் தளிரானும் கட்டப்பட்ட அழகுடைய மாலைகளைப் பொலிவுடைய குழையை உடைய அப் பதுமாபதி நம்மை நோக்கும் செவ்வியறிந்து அவள் காணும்படி படிக்கட்டுக்களையுடைய அப்பொய்கையின் பக்கத் திலே உயர்ந்துள்ள நறிய பூம்பொழிலின்கண் தூங்கவிட்டு அப் பாற் சென்று மறைந்து இருப்பேமாக; அங்ஙனம் இருக்கும் பொழுது அப் பதுமாபதி யான் வைத்த மலர் மாலையை எடுத்துக் கொள்வாளாயின் எங்கள் நெஞ்சம் இரண்டும் ஒன்றனோடு ஒன்று கலந்திருத்தல் உறுதியாகுதலை நீவிர் அறிந்துகொள்ளுங் கோள்" என்று எடுத்துக் கூறுவானாயினன் என்க.

(வி - ம்.) சந்தம் - அழகு; சந்தனமுமாம். கண்ணி - மாலை. பூ - பொலிவு; பூத்தொழிலுமாம். மாதர் - பதுமாபதி. நோக்கிடை நோக்கி - நோக்கும் செவ்வி யறிந்து. படுகால் - படிக்கட்டு. நிவந்த - உயர்ந்த. பொதும்பர் - பொழில். நாற்றுவனம் : முற்றெச்சம்; தூங்க விட்டு. மறைந்தனம் : முற்றெச்சம்; திண்ணிது - உறுதி. மன்னவன் : உதயணன்.

அ. பாங்கர்க்குரைத்தது முற்றிற்று.

—:—

சூ. கண்ணி தடுமாறியது

இதன்கண்: தம்முட் காதல் கொண்ட உதயணனும் பதுமாபதியும் ஒருவர் மாலையை ஒருவர் கைக்கொண்டு மகிழ்ந்த செய்தி கூறப்படும்.

மன்னவன் கூற மற்றது நன்றென
இன்னுயிர்த் தோழ ரியைந்தனர் போகித்
தண்ணரும் பினமலர் தகைபெரி துடைய
ஒண்ணிறத் தளிரோ டேழ்பட விரீஇக்
கண்விழவு தரூஉங் கண்ணி கட்டி
அன்ன மென்னடை யரிவை காணப்
புன்னையு ஞாழலு மகிழும் பொருந்திய
துன்னரும் போதும்பிற் றேத்திடைத் துளங்கத்
தளிர்தரு கண்ணி தம்மு ளறிய
ஒளிபெற வைத்தவ ணொளித்த பின்னர்
வளங்கெழு வாழை யிளஞ்சுருள் வாங்கித்
தாமரைப் பொய்கையுந் தண்பூங் கேணியும்
காமன் கோட்டமுங் கடிநகர் விழவும்
மாமலர்க் கோதை மடமொழி யூரும்
வையக் கஞ்சிகை வளிமுகந் தெடுக்கவத்
தெய்வப் பாவையைத் தேனிமிர் புன்னைத்
தான்முதல் பொருந்தித் தானவட் கண்டதும்
காமர் நெடுங்கண் கலந்த காமமும்
இன்னவை பிறவுந் தன்முத லாக
உள்ளம் பிணிப்ப வுகிரிற் பொறித்து
வள்ளிதழ்க் கண்ணி வளம்பெறச் சூட
அரும்பினும் போதினும் பெருந்தண் மலரினும்
முறியினு மிலையினுஞ் செறியக் கட்டி
ஒருங்குபுறம் புதைஇ யுதயண குமரனும்
திருந்திழைத் தோளி விரும்பு நோக்கச்
சிதர்சிறை வண்டின் செவ்வழி புணர்ந்த
ததரிதழ் ஞாழற் றாழ்சினைத் தூக்கிப்
பைந்தாட் பொருந்திச் செஞ்சாந் துதிரத்

திருமலி யகலஞ் சேர முயங்கிப்
பொருமுர ணண்ணலும் போந்த பொழுதின்
ஆடுகோம் பன்ன வம்மென் மருங்குற்
பாடகச் சீறடிப் பல்வளை மகளிரைப்
பக்க நீக்கிப் பைந்தொடிக் கோமாள்
நற்பூம் பொய்கை புக்குவிளை யாடும்
உள்ள மூர்தர வொழிநிலத் தோங்கிக்
கொடுக்குஞ் சீர்க்கமு மடுத்தூழ் வளைஇய
முத்த மாலையும் வித்தக மாகிய
உளிப்பெருங் கம்மமு முகத்துமுத வுறீஇத்
திண்டூட் சதுரங் கொண்ட வெல்லையுட்
சீயமு மேறுந் திருவும் பொய்கையும்
சேயிதழ் மலருங் காம வல்லியும்
மேயினர் விழைய மேதகப் புணர்ந்த
கோலக் கோயுட் கொண்டுநிறை யமைத்த
சூடமை சாந்து மீடறிந்து புனைந்த
மதங்கமழ் நறுமலர்ச் சதங்கைத் தாமமும்
சாலக் கொள்கெனத் தன்வயிற் றிரியாக்
கோலக் கூன்மகட் கறியக் கூறிச்
செவிலித் தாயுந் தவ்வையு மாயமும்
அகலப் போகிய வமைய நோக்கி
அன்னம் போல மென்மெல வொதுங்கி
நன்மூலைத் தீம்பா றம்மனை கொடுப்ப
ஒருங்குண் டாடிய கருங்கண் மதிமுகத்
தந்த ஞ்ஞட்டி யாப்பியா யினியெனும்
மந்திரத் தோழியோடு மணங்கமழ் காவின்
அணித்தழை மகளி ரருங்கடிக் கமைந்த
மணிச்சுதைப் படுகான் மருங்கணி பெற்ற
அளப்பருங் குட்டத் தாழ்ந்த பொய்கைத்
தாட்கோ ளெல்லையுள் வாட்கண் சிவப்பக்
குளித்துங் குடைந்துந் திளைத்து விளையாடிக்
கூட்டமை நறும்புகை யூட்டமைத் தியற்றிக்
கண்ணெழிற் கலிங்கந் திண்ணென வசைத்துப்
பார மாகி நீர்சைந் தொசிந்த

காரிருங் கூந்த னீரறப் புலர்த்தி
ஏற்ப முடித்துப் பூப்பிறி தணியாள்
முத்தப் பேரணி முழுக்கல மொழித்துச்
சிப்பப் பூணுஞ் செம்பொற் கடிப்பும்
ஏக வல்லியு மேற்பன வணிந்து
தாமரை யெதிர்போது வாங்கி மற்றுத்தன்
காமர் செவ்வியிற் காய்நலம் பெற்ற
நாம மோதிரந் தாண்முதற் செறித்துப்
புனைநறுஞ் சாந்தமுந் துணைமலர்ப் பிணையலும்
மனநிறை கலக்கிய கனல்புரை நோக்கத்துப்
பொன்வரை மார்ப னென்னோ யகலக்
கொள்ளி னன்றென வள்ளிதழ்க் கோதை
மன்னவன் வைத்த சின்மென் போதுடன்
நறுமலர் கமழ்சினை செறியச் சேர்த்தி
நெடுந்தோட் செல்ல நீரச் சிறந்தவன்
குறுந்தா ரகவயிற் கூடுபு முயங்கிக்
குவிமுலைச் சாந்த நவிர்முதற் பொறித்தே
இழுமென் காவின தியல்புஞ் செல்வமும்
கொழுமலர்த் தடங்கணிற் குலாஅய் நோக்க
நண்ணியோர் முன்னர்க் கண்ணியது மறைத்து
வண்ண முகிழு மலருந் தளிரும்
நண்ணி யீன்ற நமக்கெனக் கரையா
அரும்பெறற் றேழியு மகன்ற செவ்வியுள்
விரும்புவன ளாகி விண்ணவர் மருள
வத்தவர் கோமான் வித்தகம் புனைந்த
இலைவினைக் கம்மத்துப் பலவினை கண்டே
தன்முத லாகலிற் சின்னகை முறுவலொடு
பொற்பூண் முலைமிசை யப்புபு தடாஅக்
கண்ணி கொண்டுதன் சென்னி சேர்த்தி
ஒருங்குகலந் தனள்பொற் றிருந்தொளி திகழ்ந்து
பசப்புமீ தடர்ந்து மிகப்பொலிந் திலங்கத்
தன்னமர் தோழியும் பின்னமர்ந் தேய்தி
நீயார் நங்கை நின்னே போலுமெம்
சேயான் றங்கை செல்வப் பாவை

மாயோ டன்னை மலர்த்தகைக் காவினுள்
இன்னினிக் கெடுத்தே னன்னவள் கூறிய
துன்னருந் தோட்டத்திற் றுளங்குவன ளாகி
வேறுபட் டனளென விம்முவன ளிறைஞ்சிக்
கூறாது நாணிய குறிப்புநனி நோக்கி
நின்கட் கிடந்த நீரணி யேஎர்
என்கண் கவற்றிற் றென்றலோ டியலித்
தன்னகர் புக்க பின்னர்த் தோழரோடு
மன்ன குமரனும் வந்தவட் குறுகத்
தண்பூங் கண்ணி கொண்டதன் றுண்முதல்
ஒண்பூஞ் சாந்தி னுண்பொறி யொற்றிப்
போயினள் புரவலன் பூந்தார் மார்பிற்
காகிய பால ளிவளென் றறிந்தே
கூறிய கிளவிக் கொத்த தின்றென
உறுபுகழ் நம்பி னுருமண் ணுவாவவர்க்
கறியக் கூற வங்கை மலர்த்தா
வியந்த மனத்த ராகி நிகழ்ந்ததற்
கியாப்புறு கரும மாராய்ந் திருந்துழி
நீப்பருங் காத னிறைந்துட னுடல்
பண்புடைத் தென்றத் தண்டழை யணிந்த
காவி னத்த மேவின ளாகித்
தேர்வனன் றிரிவுழி வார்தளிர் பொதுளிய
அருகுசிறை மருங்கி னொருமகள் வைத்த
புதுமலர்ப் பிணையலும் புனைநறுஞ் சாந்தமும்
கதிர்மணி யாழியுங் கண்டன னாகி
வலிகெழு மொய்ம்பின் வயந்தக குமரன்
ஒலிகெழு தானை யுதயணற் குய்ப்ப
அரும்பெறற் சூழ்ச்சி யவனையும் பின்னிணைப்
பெருந்திற லவரையும் பெற்றேன் போல
அன்புபுரி பாவை யாடிய பொய்கையுள்
நம்புபுரி மன்னனு நயந்தன னாடி
உடையு மடிசிலு முருமண் ணுவாவிற்குக்
கடனு வைத்தலிற் கைபுனைந் தியற்றி
அகன்மடி யவன்று னமர்ந்து கொடுப்ப

வாங்கின னுடுத்துப் பூந்தண் சாந்தம்
எழுவுறழ் தோளு மகலமு மெழுதிப்
புனையிருங் குஞ்சித் தோட்டுக் கிடையே
துணைமலர்ப் பிணைய றோன்றச் சூடிச்
சுடர்மணி யாழி படைபயின்று பலித்த
செறிவிர லங்கையின் மறைவுகொள வைத்துக்
கழுநீர் நறும்போ துளர்த்துபு பிடித்து
மறங்கெழு வேந்தனு மம்மர் தீரப்
போந்த பொழுதி னேந்துநிலை மாடத்துப்
பக்க நின்ற பொற்பூங் கோதையும்
கண்ணுற நோக்கிச் சின்னகை முகத்தினள்
கண்ணிற் கூட்டமு மன்றி நம்முட்
கண்ணிய மாயினங் கவல லென்றுதன்
நெஞ்சி னகத்தே யஞ்சில மிழற்றிக்
குன்றாக் கோயில் சென்றவள் சேர்ந்தபிற்
றனக்கவ ளுரிமை பூண்டமை தமர்களைச்
சினப்போர் மதலை செவ்வன் றேற்றிப்
பள்ளி கொண்ட நள்ளிருள் யாமத்துப்
பொரடு தறுகண் பொருந்தலும் பொருக்கென,
நீருடை வரைப்பி னெடுமொழி நிறீஇய
பிரியாப் பெருக்கத்துப் பிரச்சோ தனன்மகள்
அரியார் தடங்க ணதிரா கரிகி
மணியிருங் கூந்தன் மாசுகண் புதைப்பப்
பிணியொடு பின்னி யணிபெறத் தாழ்ந்து
புல்லெனக் கிடந்த புறத்தள் பொள்ளென
நனவிற் போலக் காதலன் முகத்தே
கனவிற் றோன்றக் காளையும் விரும்பி
மாசில் கற்பின் வாசவ தத்தாய்
வன்க ணாளனேன் புன்கண் டீர
வந்தனை யோவென வாய்திறந் தரற்றப்
பைந்தளிர்க் கோதை பையென மிழற்றி
ஏதில னன்னாட் டேற்றுறந் திறந்தனை
காதலர் போலுங் கட்டுரை யொழிகெனக்
குறுகா ளகன்றேறு மறுகுபு மயங்கி

நிற்பெயர்ப் பாள னிப்பதி யுளனெனக்
கற்பயில் பழுவங் கடந்தியான் வந்தனென்
வேகுள னீயெனத் தவளையங் கிண்கிணிச்
சேவடி சேர்ந்து செறியப் பற்றி
வென்றடு குருசில் வீழ்ந்தன னிரப்ப
மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிவயிற் பசைந்தவள் வைத்த
கோதையுஞ் சாந்துங் கொண்டணிந் தனையென
மாதர்த் தேவி மறுத்து நீங்கத்
தண்மலர்ப் படலைத் தருசகன் றங்கை
பன்மலர்க் கோதைப் பதுமா பதியெனும்
பேருடை மாத ருளண்மற் றென்பது
நேரிழை யரிவை நின்வாய்க் கேட்டனென்
இன்னவும் பிறவுங் கூறி மற்றென்
நன்னர் நெஞ்ச நாடுவை நீயெனப்
பின்னரு மிக்குப் பெருமக னிரப்ப
மடங்கெழு மாதர் மறைந்தன ணீங்கக்
கடுங்கதிர்க் கனலி கால்சீத் தெழுதர
விடிந்தது மாதோ வியலிருள் விரைந்தென்.

— — —

உரை

௬. கண்ணி தடுமாறியது

அஃதாவது: உதயணனும் பதுமாபதியும் ஒருவர் மாலையை ஒருவர் கைக்கொண்ட செய்தி கூறும் பகுதி என்றவாறு.

(தோழர் கண்ணி கட்டிவைத்தல்)

க - ரு : மன்னவன்.........கட்டி.

(பொ - ரை.) *இவ்வாறு உதயணன் கூறலும் இனிய உயிர்த் தோழராகிய உருமண்ணுவா முதலிய அமைச்சர்கள் இச் சூழ்ச்சி மிகவும் நன்றே யாகும் என்று அவ்வாறு செய்வதற்கு உடன்பட்டுச் சென்று குளிர்ந்த அரும்புகளையும் பல்வேறு வகைப்பட்ட மலர்களையும் அழகுமிக்க ஒளியும் நிறமும் உடைய தளிர்களோடே முறைமை உண்டாக வைத்துக் காண்போர் கண்*

களுக்குத் திருவிழாப் போன்று இன்பம் தரும் மாலைகளாகக் கட்டி; என்க.

(வி - ம்.) மன்னவன் - உதயணன். அது - நீ கூறிய சூழ்ச்சி. போகி - சென்று. தகை - அழகு. ஊழ் - முறைமை. இரீஇ - வைத்து. விழவு - திருவிழா.

(இதுவுமது)

௬ - க௦ : அன்னம்.........பின்னர்

(பொ - ரை.) அன்னம் போலும் மெல்லிய நடையை யுடைய அப்பதுமாபதி பார்க்கும் செவ்வி தெரிந்து புன்னையும் ஞாழன் மரமும் மகிழ மரமும் பொருந்தியுள்ள பிறர் இட்டுதற் கரிய ஒரு மரச்செறிவில் பூங்கொத்துக்கள் நன்கு விளங்கும்படி தாங்கள் தளிர் விரவிப் புனைந்த மாலைகளைத் தம்முள் ஒருவர்க்கு ஒருவர் தெரியும்படி விளக்கமுண்டாகத் தனித் தனியே வைத் துப்போன பின்னர்; என்க.

(வி - ம்.) அரிவை - பதுமாபதி. ஞாழல், மகிழ் என்பன மரங்கள். பொதும்பு - மரச் செறிவு. தொத்து - பூங்கொத்து. அவண் - அவ்விடத்து.

(உதயணன் செயல்)

கக - ௨௦ : வளம்.........பொறித்து

(பொ - ரை.) இனி அவ் வுதயண குமரன் றானும் தனித் துச்சென்று வளம் பொருந்திய வாழையினது சுருண்டிருக்கும் இளங் குருத்தினைக் கைக்கொண்டு விரித்து அதன்கண், தாம ரைக் குளமும் குளிர்ந்த மலர்களையுடைய கேணியும் காமவேள் கோட்டமும் ஆங்கு நிகழும் திருவிழாக் காட்சியும் சிறந்த மலர் மாலையணிந்த மடப்பமுடைய மொழிகளையுடைய பதுமாபதி ஊர்ந்து வந்த வண்டியின் திரைச் சீலையைக் காற்றுத் தூக்கி உயர்த்துதலாலே அந்தத் தெய்வப் பெண் போன்ற பதுமாபதி யைத்தான் வண்டுகள் இசை பாடும் புன்னை மரத்தினது அடி யில் நின்று கண்ட காட்சியும், காதல் மிக்க தங்கள் இருவருடைய நெடிய கண்களும் தம்முட் கலந்தமையால் உண்டான காமத் தோற்றமும் இவை போன்ற பிற காட்சிகளும் தன் பொருட்டுக் கண்டோர் நெஞ்சத்தைக் கவரும்படி தன் நகத்தால் சித்திரித்து; என்க.

(வி - ம்.) இளஞ்சுருள் - சுருண்டிருக்கும் இளங் குருத்து. பொய்கை, கேணி முதலியன; காமன் கோட்டத்தின் பக்கத்தி லுள்ளவை. மடமொழி - பதுமாபதி. வையம் - தேர். கஞ்சிகை - திரைச் சீலை. தெய்வப் பாவை - பதுமாபதி. தேன் - வண்டு. அவள் - பதுமாபதி. காமர் - அழகு. முதல் - காரணம். உகிர் - நகம். பொறித்து - பதித்து.

(இதுவுமது)

௨௧ - ௩௦ : வள்ளிதழ்........பொழுதின்

(பொ - ரை.) பெரிய மலர் மாலையினையுடைய பதுமாபதி தன் அழகு மேலும் வளம் பெறும்பொருட்டு அணிந்துகொள்ளுதற்குச் சிற்றரும்புகளாலும் நாளரும்புகளாலும் பெரிய குளிர்ந்த மலர்களாலும் இளந் தளிர்களாலும் பச்சிலைகளாலும் நெருங்கக் கோதை புனைந்து அவ்வுதயண குமரன் இவற்றை யெல்லாம் ஒருங்கு சேர்த்துத் திருந்திய அணிகலன் அணிந்த தோள்களையுடைய பதுமாபதி விரும்பி நோக்கும் செவ்வி தேர்ந்து சிதர்ந்த சிறகுகளை யுடைய வண்டுகளின் செவ்வழிப் பண் சேர்ந்த செறிந்த மலர்களையுடைய ஒரு ஞாழன் மரத்தினது தாழ்ந்த கிளையின்கண் தூங்கவிட்டு அம் மரத்தினது பசிய அடிப்பகுதியில் பொருந்துதலாலே பூசிப் புலர்ந்த செஞ்சந்தனம் உதிரும்படி செல்வம் மிகுதற்குக் காரணமான தன்னுடைய மார்போடு அம் மரத்தை அணைத்துத் தழுவி இறங்கிப் போராற்றல் மிக்க அவ்வுதயணன் சென்றபொழுது; என்க.

(வி - ம்.) அரும்பு - சிற்றரும்பு. போது - பேரரும்பு. முறி - தளிர். தோளி : பதுமாபதி. விரும்பு - விரும்பி. சிதர் - சிதர்ந்த. செவ்வழி - ஒரு பண். ததர் - செறிவு. தாழ்சினை - தணிந்த மரக்கிளை. முரண் - வலி. அண்ணல் : உதயணன்.

(பதுமாபதியின் செயல்)

௩௧ - ௩௫ : ஆடு........ஊர்தர

(பொ - ரை) பதுமாபதி அசையாநின்ற பூங்கொம்பு போன்ற அழகிய மெல்லிய இடையினையும் பாடகம் அணிந்த சிறிய அடிகளையும் பலவாகிய வளையல்களையுமுடைய தோழிமார்களைத் தன் பக்கத்தினின்றும் போக்கி, நல்ல மலர்களையுடைய பொய்கையின்கண் இறங்கி விளையாடுதலின்கண் தன் நெஞ்சம் தன்னை ஊக்குதலால்; என்க.

(வி - ம்.) ஆடு கொம்பு : வினைத்தொகை. அம் - அழகு, மருங்குல் - இடை. பாடகம் - ஒரு வகைக் காலணி. மகளிர் - தோழிமார். கோமாள் - கோமான் என்பதன் பெண்பால்; கோமகள் என்பதன் மரூஉவுமாம். உள்ளம் - நெஞ்சம். ஊர்தர - ஊக்க.

(இதுவுமது)

௩௫ - ௪௭ : ஒழி........கூறி

(பொ - ரை.) வெளி நிலத்தில் உயர்ந்து நின்று 'கொடுக்கும் சீர்க்கமும் முதலிய சிறப்புச் சிறப்புகளுடனே அடுத்தடுத்து நிரல்

யட வளைத்த முத்துமாலைகளையும், சதுரப்பாடுடைய உளித் தொழில் திறமும், முகப்பின்கண் உடைய திண்ணிய தூண் களாலே நாற்கோணம் அமைந்த இடத்தே சிங்கமும், காளையும் திருமகளும், பொய்கையும், செந்தாமரை மலரும், காம வல்லியும், ஆகிய இத்தகைய சிற்ப உருவங்களோடு தன்னை அடைந்தோர் பெரிதும் விரும்பும்படி மேன்மை யுண்டாக இயற்றப்பட்ட அழகிய பரணியில் அகிற்றேய்வையும் நிறை தேர்ந்து கூட்டிய கத்தூரி மணங்கமழா நின்ற நறிய மலரால் இயன்ற சதங்கை மாலையும் நிரம்பக் கொண்டு வருக' என்று கூறித் தன்பால் அன்பில் திரியாத வண்ண மகளாகிய அயிராபதியைத் தன்பால் நின்றும் போக்கி; என்க.

(வி - ம்.) ஒழி நிலம் - வரு நிலம். கொடுக்கும் சீர்க்கமும் என்பன பரணியின்கண் அமைந்த சிற்ப மண்டபத்தின் உறுப்புக்கள். உளிப் பெருங்கம்மம் - உளியாற் செய்த சிறந்த தொழில். சீயம் - சிங்கம். ஏறு - காளை. திரு - திருமகள். சேயிதழ் மலர்-செந்தாமரை மலர். காம வல்லி - கற்பக மரத்தில் படரும் ஒரு வகைப் பூங்கொடி. மேதக - மேன்மையுண்டாக. கோலக் கோயுள் - அழகிய பரணியில். நிறை அமைத்த - நிறுத்துச் சேர்த்த. சூடமை சாந்து - அகிற் றேய்வை. மதம் - மான் மதம்: கத்தூரி. சதங்கைத் தாமம் - ஒரு வகை மாலை, கூன் மகள் - அயிராபதி.

(இதுவுமது)

சஅ - ருஅ : செவிலி.........எல்லையுடன்

(பொ - ரை.) பின்னர் அக்கோமகள் தன் செவிலித் தாயும் தமக்கைமாரும், தோழிமாரும் அகன்றுபோன சமயம் பார்த்து அன்னப்பறவை போல மெல்ல மெல்ல நடந்து சென்று தன் நற்றாய் தனது முலைப்பாலை ஊட்டுதலாலே தன்னோடு ஒருங்கே உண்டு தன்னோடு ஒருங்கே விளையாடிய கரிய கண்ணையும், திங்கள் மண்டிலம் போன்ற முகத்தையுமுடைய பார்ப்பனியாகிய யாப்பியாயினி என்னும் தன் உசாத் துணைத் தோழியோடு கூடி நறுமணங் கமழா நின்ற பொழிலின் இடையே அழகிய தழை யாடை யுடுத்த இள மகளிர் ஆடுதற்கு ஏற்ற அரிய காவலொடு பொருந்திய மணிகள் பதித்துச் சுதை தீற்றப்பட்ட படித்துறை யினையுடைய அளத்தற்கரிய ஆழத்தையுடைய பொய்கையின்கண் கால் நிலை கொள்ளும் அளவில் இறங்கி; என்க.

(வி - ம்.) தவ்வை - தமக்கை; என்றது தனக்கு மூத்த தோழி மாரை. ஒதுங்கி - நடந்து. தம்மனை - தாய். அந்தணாட்டி - பார்ப்பினி: யாப்பியாயினி - பதுமாபதியின் உசாத் துணைத் தோழியாகிய ஒரு பார்ப்பன மகள். இவளுக்குப் பதுமாபதியின் தாய் முலைப் பாலூட்டி வளர்த்தனள் என்பதும் இவள் பதுமாபதியுடன் ஒருங்கு உண்டு ஆடி வளர்ந்தனள் என்பதும் இங்கே குறிப்பிடப்படுகின்றன. மந்திரத்

தோழி - உசாத் துணைத் தோழி. அருங்கடி - அரிய காவல். மணிச் சுதை - மணி பதித்துத் தீற்றிய சுதை: அழகிய சுதையுமாம். படுகால் - படிக்கட்டு. குட்டம் - ஆழம். தாள்கொள் எல்லை - கால் நிலை கொள்ளுமிடம்.

(இதுவுமது)

௫௮ - ௬௭ : வாள்.........முடித்து

(பொ - ரை.) தனது வாள் போலும் கண்கள் சிவக்கும்படி குளித்தும் குடைந்தும் நீரில் திளைத்து விளையாடி மணக்கூட்டமைந்த நறிய அகிற்புகையை யூட்டிக் கைசெய்து கண்ணுக்கு அழகியதாகிய ஈரணி ஆடையைத் திண்ணெனக் கட்டி இடைக்குச் சுமையாக நீர்த்துளியோடு அசைந்து வளைந்த மழைக்கால் போலும் கருநிறமுடைய தனது கூந்தலை நீர் அற்றுப் போகும்படி உலர்த்தி அந்தச் செவ்விக்கு ஏற்ப முடியிட்டு; என்க.

(வி - ம்.) குடைதல் - நீரைக் கையால் துழாவுதல். திளைத்தல் - இடைவிடாது பயிலுதல். கூட்டமை நறும்புகை - நேர்கட்டி முதலியன சேர்தலமைந்த மணப்புகை. கலிங்கம் - ஒருவகை உடை. திண்ணென - இறுக. அசைத்து - கட்டி. பாரம் - சுமை. ஏற்ப - அச் செவ்விக்குத் தக.

(இதுவுமது)

௬௭ - ௭௬ : பூ.........நன்றென

(பொ - ரை.) அக் கூந்தலின்கண் வேறு மலர்களைச் சூடாளாய் முத்துமாலை முதலிய பேரழகுடைய அருங்கலன்களையும் அணிந்து கொள்ளாளாய்ச் சிற்பம் மிகுந்த அணிகலன்களையும், செம்பொன்னாலியன்ற கடிப்பிணை என்னும் காதணியையும், ஏகவல்லி என்னும் ஒற்றை வடத்தையும் இவை போல்வன , பிற மெல்லணிகலன்களையும் அணிந்துகொண்டு அப்பொய்கையின் கண் மலர்ந்துள்ள புது மலர்களைத் தாளோடு பறித்துப் பின்னரும் தனது விருப்பமுடைய நிறத்திற்குப் பொருந்தும் ஒளிகலன் பெற்ற தன் பெயர் பொறித்த மோதிரத்தை அத்தாமரைத் தண்டிற் செறித்துவைத்து அதனோடு பூசற்குரிய சந்தனத்தையும், இரட்டையாக வைத்துத் தொடுத்த மலர்மாலையினையும் சேர்த்து இவையிற்றை என்னுடைய மனத்திட்பத்தைக் கலக்கிவிட்ட தீப்போன்ற கொடிய பார்வையை யுடைய பொன்மலை போன்ற மார்பினையுடைய அப்பார்ப்பன மகன் என்னுடைய துயர் கெடும்படி கைக்கொள்வானாயின் மிகவும் நன்று என்று கருதி; என்க.

(வி - ம்.) உதயணன் வைத்த மலர் மாலைகளை அணிதற் பொருட்டு வேறு மலர்களை அணியாள் என்பது கருத்து. முழுக்கலம்

முதலியவற்றையும் ஒழித்தமையும் அதன் பொருட்டென்க. சிப்பம் - சிற்பம். கடிப்பு - ஒருவகைக் காதணி. ஏகவல்லி - முத்தாலியன்ற ஒற்றை வடம். எதிர்போது - மேலே எழுந்த தாமரைப் பூ; கதிரவனை எதிர்கொள்ளும் புதிய மலருமாம். நாம மோதிரம் - தன் பெயர் பொறித்த மோதிரம். துணை மலர்ப்பிணையல் - இரண்டிரண்டாக மலர்களைப் பிணைத்துக் கட்டிய கண்ணி. கனல் புரை நோக்கம் - தீப்போலச் சுடும் பார்வை; உதயணன் நோக்கம் தன் நெஞ்சத்தை இடையறாது வருத்துதலின் இங்ஙனம் கூறினள்.

(இதுவுமது)

எச - அறு : வள்ளிதழ்...............செவ்வியுள்

(பொ - ரை.) பதுமாபதி தான் புனைந்த மாலைகளை உதயணகுமரன் வைத்துச் சென்ற சிலவாகிய மெல்லிய மலர்களுடன் நறிய மலர் மணம் கமழ்கின்ற அந்த ஞாழன் மரத்தினது கிளையின் கண் செறியும்படி வைத்து, அவ்விடத்தே தன் மெய்க்காதலுக்குச் சிறந்தவனான அவ்வுதயண குமரனுடைய குறுகிய வடிவமுடைய மலர் மாலையினைத் தன் நெடிய தோள்களில் துன்பம் தீரும் பொருட்டுத் தன் மார்போடு அணைத்துத் தழுவித் தன் மாலையின்கண் குவிந்த தனது முலைக்கண் பூசப்பட்ட சந்தனத்தைத் தடவித் தனது கூந்தலை இலச்சினையாகப் பதித்து வைத்த பின், ஆங்கு ஒருசார் நின்ற யாப்பியாயினி இமூமென்னும் ஓசையுடனே வண்டுகள் இசைபாடுகின்ற அப்பூம்பொழிலினது அழகையும் வளத்தையும் கொழுவிய தாமரை மலர் போலும் அகன்ற தன் கண்ணாலே சுற்றி நோக்குவாள் போன்று தன் தோழிமாரிடத்தும் தன் கருத்தினை மறைத்தவளாய் இப்பொழில்கள் பல்வேறு வண்ணமுடைய அரும்புகளையும் தளிர்களையும் நம் பொருட்டுப் புதுவதாக ஈன்றன என்று அவற்றைக் கொய்வாள் போன்று பெறற்கரிய அத்தோழி தானும் அவ்விடத்தினின்றும் பிரிந்துபோன பொழுது; என்க.

(வி - ம்.) வள்ளிதழ்க் கோதை - பெரிய இதழ்களையுடைய மலராற் றொடுக்கப்பட்ட மாலை. மன்னவன் : உதயணன். சினை - கிளை. செல்லல் - துன்பம். சிறந்தவன் - தன் காதலுக்குச் சிறந்தவனாகிய உதயணன். நவிர் - கூந்தல். குலாஅய் - சுற்றி. நண்ணியோர் - தோழிமார்; எதிரே வந்தவருமாம். கரையா - சொல்லி. தோழி : யாப்பியாயினி.

(இதுவுமது)

அகூ - கூகூ : விரும்புவனள்.............இலங்க

(பொ - ரை.) தமியளாகிய அப்பதுமாபதி பேரார்வமுடையவளாய்த் தேவரும் வியக்கும்படி வத்தவர் மன்னனாகிய

உதயண குமரன் தன் கலைத்திறம் தோன்ற வாழைக் குருத்தின் கண் தன் நகத்தாலே பொறித்த ஓவியத் தொழிலின் பலவாகிய திறங்களைக் கண்டு கண்டு அவ்வோவியத்திற்குத் தானே காரண மாதலை நினைந்து நினைந்து புன்னகை புரிந்து அக்குருத்தினைப் பொன் அணிகலன் அணிந்த தன் முலைமேல் அப்பிக்கொண்டும் உதயணனுடைய மலர் வளையங்களை எடுத்துத் தன் தலையிலே சூட்டிக் கொண்டும் பெரிதும் மகிழ்தலாலே அவ் வுதயணனோடு கூடினவள் போன்று புத்தொளி பெற்றுப் பண்டிருந்த பசப் பினையும் வென்று மிகமிகப் பொலிவுற்று விளங்கா நிற்ப; என்க.

(வி - ம்.) விரும்புவனள் : முற்றெச்சம். வத்தவர் கோமான் : உதயணன். வித்தகம் - கலைத்திறம். இலை - வாழைக் குருத்து. கம்மம் - ஈண்டு ஓவியம். முதல் - காரணம். அப்புபு - அப்பிக் கொண்டு. தடா அக்கண்ணி - மலர் வளையம். அடர்ந்து - வென்று.

(யாப்பியாயினி ஐயுற்று வினுதல்)

கூச - கoகூ : தன்னமர்...............இயலி

(பொ - ரை.) அவ்வழி, தன்னைப் பெரிதும் விரும்பு மியல் புடைய தோழியாகிய யாப்பியாயினியும் விரும்பி வந்து அப்பது மாபதியை அடைந்து நோக்கி ஐயுற்றுள் போன்று "நங்காய் நீ யார்? பெரும்பாலும் உருவத்தாலே நின்னையே ஒத்துள்ளவளும் எம்மரசன் தங்கையும் எங்கட்கெல்லாம் செல்வம் போன்றவளும், பாவை போன்றவளும் மாமை நிறம் உடையோளும் ஆகிய என் தோழி ஒருத்தியை மலர்மிக்க அழகிய இப்பூம்பொழிலின்கண் இப்பொழுது காணுதவள் ஆயினேன். அத்தோழி என்னுற் கூறப்பட்ட கிட்டுதற்கரிய இத்தோட்டத்தின்கண் நடுங்குவாளாய் மனம் வேறுபட்டு என்னைப் பிரிந்து போயினள்" என்று கூறுநிற்ப, அதுகேட்ட பதுமாபதி மனம் விம்மி முகம் கவிழ்ந்து யாதொன் றும் கூறுமலே நாணி நின்ற குறிப்பினைக் கூர்ந்து நோக்கி "ஓ! நீ பதுமாபதியோ? நின் திருமேனியில் கிடந்த நின்னுடைய இந் நீரணிகலன்கள் என்னை மயக்கிவிட்டன காண்; ஆதலால் யான் கவலையுற்றேன்" என்று கூறப் பின்னர் அத்தோழியோடு சென்று; என்க.

(வி - ம்.) இப்பகுதி அகப்பொருள் துறையின்கண் 'நாண நாட்டம்' என்னும் துறையை நினைவூட்டுதல் உணர்க. யாப்பியாயினி பதுமாபதியின் புத்தொளி கண்டு ஐயுற்றுன் போன்று வினவியபடி யாம். சேயான் : அரசன்; தருசகன். மாயோள் - மாமை நிறமுடை யவள். தகை - அழகு. இன்னினி - இப்பொழுது. கெடுத்தேன் - காணப்படாமையால் அவளை இழந்தேன் என்றவாறு. அன்னவள் - அப்பதுமாபதி. இறைஞ்சி - கவிழ்ந்து. நீரணி யேஎர் - நீர் விளை யாட்டுக்குரிய ஒப்பனை அழகு. கவற்றிற்று - கவலைப்படச் செய்தது. இயலி - சென்று.

(உருமண்ணுவா மற்றைத் தோழர்க்குக் கூறல்)

க0சு - கககூ தன்னகர்............இருந்துழி

(பொ - ரை.) தனது மண்டபத்தை அடைந்த பின்னர் உதயண குமரனும் தன் தோழர்களோடு மீண்டு வந்து தான் மாலை வைத்துச் சென்ற இடத்தை எய்த உருமண்ணுவா அந்த உதயணன் வைத்த மாலையை அப்பதுமாபதி கைக்கொண்டு அந்த ஞாழன் மரத்தினடிப் பகுதியில் தான் வந்தமைக்கு அடையாளமாக ஒளியுடைய அழகிய சந்தனத்தைத் தடவித் தன் கூந்தலாலே நுண்ணிதின் இலச்சினை பொறித்துப் போயினள் கண்டீர்! நம் மன்னவன் வெற்றி மாலை யணிந்த மார்பிற் பொருந்துதற்குரிய ஊழினை உடையாள் இவள் என்று உணர்ந்து நமக்குக் கூறிய மொழிகளுக்கு இச்செயல் மிகவும் பொருந்திற்று, என்று ஏனையோரை நோக்கி அவர் உணரும்படி கூறுகிற்ப, அது கேட்ட தோழர்கள் வியப்பினாலே தம் அழகிய கைகளை விரித்துப் பெரிதும் மருண்ட மனத்தை உடையராய் இங்ஙனம் நிகழ்ந்துள்ள இச்செயலுக்குப் பொருத்தமான இனிச் செய்யவேண்டிய காரியங்களைத் தம்முள் ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது; என்க.

(வி - ம்.) நகர் - பதுமாபதி வந்து இறங்கிய மண்டபம். தோழர் - உரு மண்ணுவா முதலியோர். மன்னகுமரன் : உதயணன். பொறி - இலச்சினை; முத்திரை. புரவலன் : உதயணன். பாலள் - ஊழினை உடையவள். உறுபுகழ் - மிக்க புகழ். அவர்க்கு - ஏனைய தோழர்களுக்கு. மலர்த்தா - மலர்த்தி; விரித்து. யாப்புறு கருமம் - பொருத்தமான செயல்.

(பதுமாபதி வைத்த மாலை முதலியவற்றை வயந்தகன் எடுத்து வந்து கொடுத்தல்)

ககரு - கஉ௬ : நீப்பரும்............உய்ப்ப

(பொ - ரை.) பிரிதற்கரிய காதற் பண்பினாலே நிறைவுற்று இக்காதலர் இருவரும் ஒழுகும் ஒழுக்கம் பெரிதும் பண்புடையதாய் தோன்றும் என்று மகிழ்ந்து வலிமை பொருந்திய ஆற்றலுடைய வயந்தக குமரன் என்பான் குளிர்ந்த தழைகளாலே அழகுற்ற அச்சோலையின் ஊடே அமைத்த நெறிகளில் நடந்து அங்கும் இங்கும் ஆராய்ந்து சுற்றித் திரியுங்கால் நெடிய தளிர் மிக்குள்ள அண்மையிலுள்ள ஓரிடத்தே ஒப்பற்ற அப்பதுமாபதி நங்கை உதயணன் பொருட்டு வைத்துச் சென்ற புதிய மலர்மாலைகளையும் மணப் பொருள் கூட்டிச் செய்த நறிய சந்தனத்தையும் ஒளிமிக்க மணிகள் பதித்த மோதிரத்தையும் கண்டவனும் மகிழ்ந்து அவையிற்றை எடுத்துக் கொணர்ந்து ஆரவாரம்

பொருந்திய படைகளையுடைய உதயண வேந்தன்பால் கொடா நிற்ப; என்க.

(வி - ம்.) இக்காதலர் இருவரும் காதலால் நிறைந்து ஒன்று பட்டு ஒழுகும் ஒழுக்கம் பெரிதும் பண்பாடுடைத்து என்று வியந்து என்றவாறு. கா - பொழில். அத்தம் - வழி. ஒருமகள் : ஒப்பற்ற பதுமாபதி. ஆழி - மோதிரம். மொய்ம்பு - ஆற்றல். உய்ப்ப - கொடுப்ப.

(உதயணன் அவற்றை அணிந்து கொள்ளுதல்)

கஉச - கஙo : அரும்பெறல்............கொடுப்ப

(பொ - ரை.) அந்த நன்கொடைப் பொருள்களை ஏற்றுக் கொண்ட உதயணகுமரன் பெறற்கரிய ஆராய்ச்சித் திறன் உடைய யூகிமையும் தன் பின்பிறந்தோராகிய பேராற்றலுடைய பிங்கல கடகர்களையும் எய்தினவன் போன்று பெரிதும் மகிழ்ந்து தன்பால் காதல் புரிகின்ற பாவைபோல்வாளாகிய அப்பதுமாபதி நங்கை நீராடிய அந்தப் பொய்கையின்கண் அவளைப் பெரிதும் காதலிக்கின்ற தானும் நீராடுதலைப் பெரிதும் விரும்பி ஆடித் தனக்கு உடை வழங்குதலும் அடிசில் ஊட்டுதலும் உருமண்ணு வாவென்னும் அமைச்சனின் கடனாக வைத்திருத்தலாலே, அவ் வமைச்சன் உடை முதலியவற்றைக் கைசெய்து விரும்பிக் கொடுப்ப; வென்க.

(வி - ம்.) அரும்பெறற் சூழ்ச்சியவன் என்றது, யூகியை. பின் இணைப் பெருந்திறல் அவர் என்றது தம்பியராகிய பிங்கல கடகர் களை. பாவை : பதுமாபதி. நம்புபுரி - விரும்புதலைச் செய்யும். உடை உணவு முதலியவற்றை அவ்வப்போது கொடுக்கும் தொழிலை அரசர் கள் தம்பால் பேரன்புடைய உயிர்த்தோழர்களிடம் ஒப்புவித்தல் இயல்பு. அகன் மடி - அகன்ற ஆடை. அவன் : உருமண்ணுவா. அமர்ந்து - விரும்பி.

(இதுவுமது)

கஙக - கஙசு: வாங்கினன்............பொழுதின்

(பொ - ரை.) உதயண குமரன் அவ்வாடை முதலியவற்றை வாங்கிக்கொண்டு, ஆடை உடுத்தும் பதுமாபதி வழங்கிய பொலிவுடைய குளிர்ந்த சந்தனத்தைத் தனது தூண்போன்ற தோளினும் மார்பினும் அழகுற எழுதிக்கொண்டும் ஒப்பனை செய்யப் பட்ட கரிய தன் தலைமயிரின்கண் சூட்டப்பெற்ற மாலைகளுக் கிடையே அப்பதுமாபதி புனைந்த இரட்டைமலர் மாலையைச் சூட்டிக் கொண்டும், அவள் வழங்கிய சுடர்மணி யாழியைப் படைக்கலம் பயின்று பகைவரை வென்று தேர்ந்த செறிந்தவிரல் களையுடைய அழகிய கையின்கண் மறைய வைத்துக்கொண்டும்,

அவள் வழங்கிய நறுமணங் கமழும் செங்கழுநீர் மலரை நன்கு மலர்த்தித் தன் கையிற் பற்றிக்கொண்டும் இவ்வாற்றான் வீரம் பொருந்திய அவ்வுதயண மன்னனும் தனது காம மயக்கம் தீரப் பெற்று அப்பதுமாபதியைப் பெற்றான் போன்று மகிழ்ந்து வெளி வந்த பொழுதின்; என்க.

(வி - ம்.) எழு - இருப்புத் தூண்; ஒரு படைக்கலமுமாம். சாந்தம் பிணையல் ஆழி முதலியன பதுமாபதி வழங்கிய பொருள்கள். அகலம் - மார்பு. குஞ்சி:- ஆடவர் தலை மயிர். தோடு - மலர் : ஆகு பெயர். பலித்த - வெற்றி வாய்த்த. உளர்த்துபு - வலிந்து மலரச் செய்து. மறம் - வீரம். மம்மர் - மயக்கம்.

(பதுமாபதி உதயணனைக் கண்டு தன்னிடம் செல்லல்)

௧௩௬ - ௧௪௫ : ஏந்துநிலை............பின்

(பொ - ரை.) உதயணன் செயலைக் காண்டற்கு அவாவி மண்டபத்தின் மேனிலை மாடத்துப் பக்கத்தே நின்று நோக்கிக் கொண்டிருந்த பொன் மலர் மாலையையுடைய அப்பதுமாபதி தானும், உதயணன் வருகையைக் கண்களிப்ப நோக்கிப் புன் முறுவல் பூத்த முகத்தினை உடையளாய்த் தன் நெஞ்சினை நோக்கி "நெஞ்சமே அஞ்சற்க! யாம் அப்பெருந்தகையோடு உள்ளப் புணர்ச்சி எய்தியதோடு அமையாது எம்முள் ஒருவர் மாலையை ஒருவர் பெற்று மகிழ்வேம் ஆயினேம். ஆதலால் கவலாதே கொள்" என்று தன்னுள்ளேயே அழகிய சில தேற்றுரைகளைக் கூறிக்கொண்டு உயரிய தனது கன்னி மாடத்தை அடைந்த பின்னர்; என்க.

(வி - ம்.) பக்கத்தே உதயணன் செயலை ஒற்றி நின்ற பூங்கோதை என்க. கண்ணிற் கூட்டம் - உள்ளப் புணர்ச்சி. கண்ணிய மாயினம் - ஒருவர் கண்ணியை ஒருவர் உடையேமாயினேம். குன்றாக்கோயில் - இலக்கண அமைதி குன்றாத கோயில் என்க. அவள் : பதுமாபதி.

(உதயணன் செயல்)

௧௪௬ - ௧௫௬ : தனக்கு............பொருந்தலும்

(பொ - ரை.) வெகுளி மிக்க பேராற்றலையுடைய உதயண குமரன் தனக்கு அப்பதுமாபதி நங்கை கற்புக் கடம் பூண்ட செய்தியை மேலே கூறப்பட்ட நிகழ்ச்சியால் தன் தோழர்களை நன்கு தெளிவித்து அற்றை நாளிரவு பாயலின்கண் கிடந்து நள்ளியாமங்காறும் பதுமாபதியை நினைந்து நினைந்து துயில் பெறுமல் பின்னர் அரிதாகத் தன்னுடைய போரின்கண் பகை வரை அச்சுறுத்தும் தறுகண்மையுடைய விழிகளை மூடித் துயிலுமளவிலே என்க.

(வி - ம்.) அவள் : பதுமாபதி. உரிமை - கற்புரிமை. தமர் - உருமண்ணுவா முதலியோர். மதலை : உதயணன். நள்ளிருள் யாமம் வருமளவும் பதுமாபதியை நினைந்து துயிலாதிருந்து பின்னர் அரிதில் துயின்றான் என்பார் 'யாமத்துக்கண் பொருந்தலும்' என்றார். போரின் கண் பகைவரை அடுதற்குக் காரணமான கண் என்க.

(உதயணன் கனாக் காண்டல்)

கசசகூ - கருசு : பொருக்கென............தோன்ற

(பொ - ரை.) ஞெரேலெனக் கடல் சூழ்ந்த இப்பேருலகத்தே தனது புகழை நிலைநிறுத்திய நீங்காத செல்வப் பெருக்கத்தினை யுடைய பிரச்சோதனன் மகளாகிய செவ்வரியோடிய பெரிய கண்களையுடைய நனி நாகரிகமுடைய வாசவதத்தை; தனது நீலமணி போன்ற கரிய கூந்தலை அழுக்கு மூடப் பின்னிப் பிணைந்து சடையாகி அழகு பெறத் தாழ்ந்து கிடந்த பொலிவிழந்த முதுகினை உடையவளாய் ஞெரேலென நனவின்கண் காணப்படுபவள்போலே தன் காதலன் முன்னர்க் கனவின்கண் தோன்றா நிற்ப; வென்க.

(வி - ம்.) பொருக்கென : விரைவுக் குறிப்பு. நீர் உடை வரைப்பு - கடல் சூழ்ந்த உலகம். நெடுமொழி - புகழ். நிறீஇய - நிலை நிறுத்திய. பிரியாப் பெருக்கம் - நீங்காத செல்வம். அரி - செவ்வரி. அதிநாகரிகி : வாசவதத்தை. மணி - நீலமணி. மாசு - அழுக்கு. பிணி - கட்டு. புல்லெனை - பொலிவிழந்து. புறத்தள் - முதுகை உடையள். பொள்ளென - விரைந்து.

(இதுவுமது)

கருஎ - கசூ0 : காளையும்............அரற்ற

(பொ - ரை.) அதுகண்ட உதயண குமரனும் அக்கனவினிலேயே அவளைப் பெரிதும் விரும்பிக் குற்றமற்ற கற்பினையுடைய வாசவதத்தாய்! கண்ணோட்டமற்ற என்னுடைய துன்பம் தீர்தற்பொருட்டு என்பால் அருள்கொண்டு நீயே வலிய வந்தனையோ ? என்று தனது வாய் திறந்து புலம்பா நிற்ப ; என்க.

(வி - ம்.) காளை : உதயணன். மாசு - குற்றம். வன்கண் - கண்ணோட்டமில்லாதவன். புன்கண் - துன்பம். அரற்ற - புலம்ப.

(இதுவுமது)

கசூக - கசூஙு : பைந்தளிர்........என

(பொ-ரை.) அது கேட்ட வாசவதத்தை மெல்ல வாய் திறந்து குழறி "ஏடா! நீ என்னைப் பிரிந்து அயலானுடைய நல்ல நாட்டிற்குச் சென்றனை அல்லையோ? அங்ஙனமிருந்தும் பெரும்

காதலுடையார் போலப் பேசும் இப்பொய்ம் மொழியை ஒழிவாயாக" என்று கூறவென்க.

(வி - ம்.) கோதை : வாசவதத்தை. ஏதிலன் - அயலான். இறந்தனை - சென்றனை.

(இதுவுமது)

௧௬௪ - ௧௬௯ : குறுகாள்.........இரப்ப

(பொ - ரை.) பெரிதும் ஊடல் கொண்டவளாய் தன்பாலினின்றும் அகன்று அகன்று போந்தோறும் மனம் சுழன்று மயங்கி "அன்பே! உன்னை மீட்டுத் தரும் பெரியோன் ஒருவன் இந்நகரத்தே வதிகின்றான் எனக் கேள்வியுற்று நின்னை மீட்டும் பொருட்டே மலைகள் மிகுந்த காட்டைக் கடந்து யான் இந் நகரத்துக்கு வந்தேன். இதன் பொருட்டு நீ என்னைச் சினவாதே கொள்" என்று இரந்து தவளைக் கிண்கிணி அணிந்த அவ்வாசவதத்தையின் அடிகளில் வீழ்ந்து வணங்கி அவற்றைப் பற்றிக் கொண்டு பகைவரை வென்று கொல்லும் வீரமுடைய அவ்வுதயண மன்னன் பின்னரும் இரப்புரை கூறி வேண்டாநிற்ப என்க.

(வி - ம்.) மறுகுபு - சுழன்று. பெயர்ப்பாளன் - மீட்டுத் தருபவன். பதி - இராசகிரியம். தவளைக்கிண்கிணி - தவளை வாய் போன்ற வாயையுடைய கிண்கிணி. குருசில் : உதயணன்.

(இதுவுமது)

௧௭௦ - ௧௭௩ : மது............நீங்க

(பொ - ரை.) அதுகேட்ட அக்கனவு வாசவதத்தை "ஏடா! பொய் கூறுதே கொள். நீ தேன் மணக்கும் மலர்மாலை யணிந்தவளும் தருசகன் தங்கையும் ஆகிய பதுமாபதி என்பவளிடத்து அன்பு வைத்து அவள் நினக்கென வைத்துச் சென்ற மாலையையும் சாந்தையும் ஏற்றுக்கொண்டு அணிந்து கொண்டாய் அல்லையோ" என்று சினந்து கூறிக் காதல் மிக்க அக்கோப்பெருந்தேவி அவன் வேண்டுகோளை மறுத்துப் பின்னரும் நீங்கிச் செல்லாநிற்ப; என்க.

(வி - ம்.) மது - தேன். தெரியல் - மாலை. மகதவன் : தருசகன். பசைந்து - அன்பு வைத்து. அவள் : பதுமாபதி. மாதர் - காதல்.

(இதுவுமது)

௧௭௪ - ௧௮௨ : தண்மலர்........விரைந்தென்

(பொ - ரை.) அது கண்ட உதயணன் மீண்டும் அவளை அணுகி, "கேரிய அணிகலன் அணிந்த அரிவாய்! குளிர்ந்த

மலர் மாலை யணிந்த தருசகனுடைய தங்கையாகிய பலவாகிய மலரால் புனைந்த மாலையையுடைய பதுமாபதி என்னும் பெயருடைய மாதர் ஒருத்தி இருக்கின்றாள் என்பது இப்பொழுது நீ கூறத்தான் நான் கேள்வியுற்றேன். நீ என்னுடைய நல்ல நெஞ்சத்தை ஐயுற்று ஆராய்கின்றாய் போலும்" என்று இவை போல்வனவாகிய நயமொழி பலவும் பேசி மீண்டும் மீண்டும் அப் பெருமகன் இரவா நிற்கும் பொழுதே, மடப்பம் பொருந்திய அக் கனவு வாசவதத்தை நல்லாள் மறைந்து ஒழியக் கொடிய கதிரை யுடைய ஞாயிற்று மண்டிலம் இருளை அகற்றி எழுதலாலே அப் பேரிரவு விரைந்து விடிந்தது; என்க.

(வி - ம்.) படலை - தளிர் விரவிய மலர் மாலை. பேர் - பெயர். அரிவை : விளி. நன்னர் - நன்மை உடைய. பெருமகன் : உதயணன். கனலி - ஞாயிறு. கால் சீத்து - இருளை ஒழித்து. வியல் - அகன்ற.

க. கண்ணி தடுமாறியது முற்றிற்று.

௧௦. புணர்வு வலித்தது

இதன்கண் : கனவுகண்ட உதயணன் செயலும், தோழர் கூறுதலும், அவர் உடன்பாடும் உதயணன் குறை இரத்தலும் உதயணனது விடையும் கூறப்படும்.

விடிந்திரு ணீங்கலும் வடிந்த மான்றோர்
உதையண குமரன் புதையிருட் கண்ட
கனவின் விழுப்ப மனமோன் றாகிய
தோழர்க் குரைப்ப வாழ்கென வாழ்த்தி
முற்றிழை யரிவை செற்றங் கொண்டனள்
மற்றிவள் வைத்த மாலையுஞ் சாந்தமும்
அணிந்ததை பொல்லா தருளினை யினியிவட்
கனிந்த காமங் கைவிடல் பொருளென
உயிர்த்துணைத் தோழ ருரைப்பவும் விடாஅன்
செயிர்த்தொழி லியானைச் செம்ம றெளியான்
ஏற்ற பொழுதே யின்பத் தேவியோடு
வேற்றேன் போல விழைவினை யகற்றித்
தற்கா முற்ற தன்னமர் காதற்
பொற்பூண் மாதரைப் பொருந்த வலிப்ப
வாமான் றானை வத்தவ னிவனெனக்
கோமாற் குணர்த்திக் கூட்டிய வந்தேம்
ஒருவயி னோக்கி யிருவரு மியைதலின்
ஏயர் பெருங்குடிக் காதுபெய ருண்டென
ஊழ்வினை வலிப்போ டுவந்தன ராகிச்
சூழ்வினை யாளர்க்குத் தோன்றல் சொல்லும்
ஆருயி ரன்னவென் னற்புவார் கொளீஇக்
காரிகை மத்தினேன் கடுவலி கடையும்
வார்வளைத் தோளி வந்தனள் புகுதரு
மாடம் புக்கிருந் தோடுகய லன்ன
பெருங்கண் கோட்டி விரும்புவன னோக்கி

* (இக்காதையின் ௭௧ ஆம் அடிக்கு அப்பாலுள்ள பகுதிகள் இறந்தொழிந்தன ; இங்ஙனமே ௧௨ ஆம் காதையின் முற்பகுதியும் கிடைக்கவில்லை.)

நாணொடு நிற்கு நனிநா கரிகம்
காணலெ னாயிற் கலங்குமென் னுயிரென
உரப்போர் வென்றி யுதயண குமரன்
இரப்போன் போல வினியோர்க் குறைகொளக்
குன்றுபல வோங்கிய குளிர்நீர் வரைப்பில்
நன்றுணர் மாந்தர் நாளைக் காலை
இரவல ருருவொடு புரவலற் போக்கி
மாற்றோ ருட்கும் வேற்றுநாட் டகவயிற்
றாமு முன்ன ராகி மற்றவற்
கேம நன்னெறி யீத லாற்றார்
காமங் கன்றிய காவல் வேந்தனைத்
தம்மிற் றீர்த்து வெம்முரண் வென்றி
மகதவன் றங்கை மணிப்பூண் வனமுலை
நுகர விட்டனர் நுண்ணறி விலரெனின்
ஏத மதனா னிகழ்பவை யிவையென
நீதியிற் காட்ட நெடுந்தகை யண்ணல்
வேண்டா மற்றிது மாண்டகைத் தன்றென
மற்றவள் புகுதரு மாடம் புகினே
குற்றம் படுவ கூறக் கேண்மதி
காவ லாளர் கடுகுபு வந்தகத்
தாராய்ந் தெதிர்ப்ப ரருநவை யுறுது
போரார் குருசில் போதர வுண்டெனின்
உருவ மாதர் பெருநலம் பெறுதி
நன்று வெய்தும் வாயி லவருனை
என்றே யாயினு மிரவல னென்னார்
வேண்டா வதுவென விதியிற் காட்டி
மாண்ட தோழர் மன்னவன் றன்னை
மறுத்த வாயிலோடு வலிப்பனர் கூற
நிறுக்க லாற்றா நெஞ்சின னாகி
வத்தவர் பெருமக னுத்தர நாடி
அடுமுர ணீங்கி யறுபது கழிந்தோர்
கடுவெயில் வந்த காவ லாளர்கண்
மருள்படு வல்லறை மருங்கணி பெற்ற
இருள்படு மாதலி னெற்காண் குறுதல்

அரிய தவர்க்கெனத் தெரியக் காட்டி
வெற்ற வேலான் மற்றுங் கூறினன்
தனக்குநிக ரின்றித் தான்மேம் பட்ட
வனப்பின் மேலும் வனப்புடைத் தாகிக்
கலத்தொடு கவினிக் கண்கவர் வுறூஉம்
நலத்தகு தேற ஞெ டோறும்
தலைப்பெரும் புயலாத் தனக்குநசை யுடையதைக்
குலனுஞ் செல்வமு நலனு நாணும்
பயிர்ப்பு முட்கு மியற்கை யேரும்
மடனு மன்பு மாசில் சூழ்ச்சியும்
இடனுடை யறிவு மென்றிவை பிறவும்
ஒல்காப் பெரும்புகழ்ச் செல்வ முடைய.

உரை

௧௦. புணர்வு வலித்தது

அஃதாவது: பதுமாபதியை அடைதற்குரிய வழியை ஆராய்ந்து தெளிந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் செயல்)

௧ - ௪ : விடிந்து.........வாழ்த்தி

(பொ - ரை.) இவ்வாறாக இருள் நீங்கிப் பொழுது விடிந்த அளவிலே பயிற்றப்பட்ட குதிரைகளையுடைய தேரை யுடைய உதயண குமரன் தான் முதல் நாள் இரவின்கண் துயிலுங்கால் கண்ட கனவினது சிறப்பைத் தன்னோடு நெஞ்சொன்றிய உருமண்ணுவா முதலிய தோழர்க்குக் கூறா நிற்ப, அதுகேட்ட அத் தோழர்களும் "எம்பெருமான் நீடூழி வாழ்க!" என்று வாழ்த்தி என்க.

(வி - ம்.) வடிந்த மான் - பழக்கிய குதிரை. புதை இருள் - உலகை மூடிய இருள். விழுப்பம் - சிறப்பு. கனவு கண்டோர் அதனைக் கூறக் கேட்புழிக் கேட்டவர் அவரை வாழ்த்துதல் மரபு.

(தோழர் கூறுதல்)

௫ - ௯ : முற்றிழை.........விட்டாஅன்

(பொ-ரை.) "எம்பெருமானே ! நிரம்பிய அணிகள் அணிந்த எம் பெருமாட்டியா ராகிய வாசவதத்தையார் நின்பால் பெரிதுஞ்

சினங் கொண்டார் ஆதல் வேண்டும். நீதானும் இப்பதுமாபதியார் வைத்த மாலையையும் சந்தனத்தையும் அணிந்து கொண்ட செயல் மிகவும் பொல்லாங்குடைய செயல் அன்றோ? ஆகவே, இனி நீ வாசவதத்தைக்கு அருள் உடையையாய் இப்பதுமாபதியின்பால் நீ நின்நெஞ்சங் கனிந்த காமத்தைக் கைவிடுதலே நற்செயலாகும்'' என்று அந்த உயிர்த்துணைத் தோழர்கள் அறிவுறுத்து வேண்டா நிற்பவும் அக்கொள்கையை விடாதவனும்; என்க.

(வி - ம்.) முற்றிழை - தொழில் நிரம்பிய அணிகலன். அரிவை : வாசவதத்தை. செற்றம் - சினம். இவள் : பதுமாபதி. அணிந்ததை - ஐகாரம் அசை. இவள் : பதுமாபதி. பொருள் - நற்செயல்.

(உதயணன் செயல்)

கo - கச : செயிர் .... வலிப்ப

(பொ - ரை.) போர்த்தொழில் மிக்க யானைப் படைகளுக்குத் தலைவனாகிய உதயண மன்னன் அத்தோழர் அறிவுரையை ஏற்றுக் கொள்ளானாய் முதல் நாள் இரவு கனவு கலைந்து விழிப்புற்ற பொழுதே கனவிற் கண்ட இன்ப மிக்க கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தைக்கு அயலானைப் போல அவள்பால் எழுந்த விருப்பத்தினையும் துவர நீக்கித் தன்னைப் பெரிதும் காதலித்தவளும் தன்னால் பெரிதும் காதலிக்கப்பட்டவளும் ஆகிய பொன்னணிகலன் அணிந்த அப்பதுமாபதியையே அடைதற்குப் பெரிதும் துணியா நிற்ப; என்க.

(வி - ம்.) செயிர்த்தொழில் - சினந்து செய்யும் போர்த்தொழில். செம்மல் : தலைவன். ஏற்ற பொழுது - துயிலெழுந்த பொழுது. இன்பத்தேவி : வாசவதத்தை. வேற்றோன் - அயலான். மாதர் : பதுமாபதி.

(உருமண்ணுவா முதலியோர் உடன் படல்)

கரு - கக : வாமான்.........ஆகி

(பொ-ரை.) தாவுகின்ற குதிரைப் படைகளையுடைய வத்தவ நாட்டு அரசன் இவன் என்று இந் நாட்டு மன்னனாகிய தருசகனுக்கு அறிவித்து இருவரையும் நட்பாக்கி வைத்தற்கு இந்நாட்டிற்கு நம்பெருமானை அழைத்து வந்தேம். நமக்கு ஊழ்வினையும் துணை செய்வதாயிற்று. இந்நாட்டு மன்னன் தங்கை பதுமாபதியும் நம்பெருமானும் ஓரிடத்தே கூடி ஒருவரை ஒருவர் நோக்கி உள்ளத்தானும் ஒன்று பட்டனர். ஆதலின் நம்பெருமான் தோன்றிய பழம் பெருங் குடிக்கு இந் நிகழ்ச்சியாலே ஆக்கம் உண்டாதல் ஒருதலை என்று உள்ளம் உவந்தாராக; என்க.

(வி - ம்.) கோமான் : தருசகன். கூட்டிய : செய்யிய என்னும் வினையெச்சம். இருவரும் - உதயணனும் பதுமாபதியும். ஏயர் குடி - உதயணன் பிறந்த குடி. ஆகி - ஆக.

(உதயணன் குறை இரத்தல்)

௨0 - ௨௬ : சூழ்வினை.........குறைகொள

(பொ-ரை.) ஆராய்ச்சித் திறம் மிக்க அவ்வமைச்சர்க்கு உதயணன் கூறுவான், "அன்புடையீர்! என் ஆருயிர் ஒத்தவளும், தனது அன்பாகிய வாரைச் சுற்றித் தன் அழகாகிய மத்தினாலே என்னுடைய பேராற்றலாகிய தயிரை இடையறாது கடைகின்றவளும் வளையலணிந்த நெடிய தோள்களை உடையவளும் ஆகிய அப்பதுமாபதி வந்து புகுகின்ற மண்டபத்திலே யானும் புகுந்து அவள் பொருட்டுக் காத்திருந்து இயங்குகின்ற கயல்மீன் போன்ற தனது பெரிய கண்ணால் வளைத்து என்னைப் பெரிதும் விரும்பிப் பார்த்து யான் நோக்குங்காலைத் தான் நோக்காமல் நாணத்தோடு முகம் கவிழ்ந்து நிற்கும் அந்த நனி நாகரிகக்காட்சியை யான்என் கண்ணாற் காணாது அமைகுவனாயின் என் உயிர் பெரிதும் கலங்கும்; ஆதலாலே யான் அவளைக் காண்டல் இன்றியமையாததாயிற்று" என்று ஆற்றல்மிக்க போர் வென்றியையுடைய அவ்வுதயண குமரன் தனக்கினியோராகிய அவ்வமைச்சர்பால் இரந்து கேட்பான் போலக் குறை வேண்டா நிற்ப; என்க.

(வி - ம்.) சூழ்வினையாளர் - அமைச்சர். தோன்றல் : உதயணன். ஆருயிரன்ன தோளி என்க. அன்பாகிய வார் என்க. காரிகையாகிய மத்து என்க. காரிகை - அழகு. கடுவலியாகிய தயிர் என்க. ஓடு கயல் - இயங்கும் கயல் மீன். உரம் - வலிமை. இனியோர் - நண்பர்கள்.

(தோழர் கருதுதலும் சொல்லுதலும்)

௬0 - ௬௫ : குன்று.........ஆற்றார்

(பொ - ரை.) அது கேட்ட அமைச்சர்கள் உதயணனை நோக்கி, "பெருமானே! மலைகள் பலவும் உயர்ந்துள்ள குளிர்ந்த நீர் நிரம்பிய கடலால் சூழப்பட்ட இப்பேருலகத்தில் வாழும் நன்மையை உணரும் இயல்புடைய சான்றோர்கள் நாளைக்காலையிலேயே எங்களைப் பற்றி யாது கூறுவர்? 'அந்தோ இரவலர் வடுத்தோடே தம் மன்னனைப் பகைவர் அஞ்சும் வேற்று நாட்டின்கண் தாமும் உடனிருந்தே செலுத்திப் பின்னர் அம்மன்னனுக்குப் பாதுகாவலாகும் நல்ல வழியைக் காட்ட வியலாதவர் ஆயினர்" என்க.

(வி - ம்.) நன்றுணர் மாந்தர் - சான்றோர். நாளைக் காலை என்றது இச்செயலால் உனக்குத் துன்பம் உண்டாயின் அப்பொழுதே என்று காலவண்மை குறித்து நின்றது. இரவலர்-ஏற்போர். புரவலன்-

அரசன். மாற்றோர் - பகைவர். உட்கும் - அஞ்சும். அவற்கு - அவ்வரசனுக்கு. ஏம நன்னெறி - காப்புடைய நல்ல வழி. ஈதல் - ஈண்டுக் காட்டுதல் என்க.

(இதுவுமது)

௩௯ - ௪௧ : காமம்.........காட்டி

(பொ - ரை.) "கன்றிய காமமுடைய தம் வேந்தனாகிய உதயணனைத் தம்மிடத்தினின்றும் விலக்கி வெவ்விய போர்வெற்றியினையுடைய மகத நாட்டு மன்னவனாகிய தருசகனுடைய தங்கை பதுமாபதியினது மணி அணிகலன் அணிந்த அழகிய முலையினை நுகர விட்டனர். 'நுண்ணிய அறிவில்லாத எளியர்' என்று கூறின் அவ்விகழ்ச்சியால் வரும் குற்றங்கள் இன்னின்னவை ஆகு" மென்று நீதி நூற்சான்றுடனே எடுத்துக் காட்டாநிற்ப; என்க.

(வி - ம்.) தம்பாற் குறை வேண்டிய மன்னனை இவ்வமைச்சர்கள் இடித்துக் கூறும் மாண்புணர்க. சான்றோர் பழிப்பர் எனவே இதனால் தீங்குறுதல் ஒருதலை என்றதும் ஆயிற்று. காவல் வேந்தன் - தம்மாற் காக்கப்படும் மன்னன். மகதவன்: தருசகன்.

> ''ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
> சான்றோர் பழிக்கும் வினை'' (குறள் - ௬௫௬.)

என்பது பற்றிச் சான்றோர் பழிக்கும் இவ்வினைக்கு யாங்கள் உடன்படல் மிகவும் தீதாம் என்பார், 'நன்றுணர் மாந்தர்......நுண்ணறிவிலர் எனின் ஏதம்' என்றார்.

தங்கை : பதுமாபதி. ஏதம் - துன்பம். நீதி - நீதிநூல்.

(இதுவுமது)

௪௧ - ௪௬ : நெடுந்தகை.........எதிர்ப்பர்

(பொ - ரை.) அது கேட்ட உதயணன் "நுங்கள் அறிவுரை எனக்கு வேண்டா. இவ்வறிவுரை ஆண்மைத் தன்மையும் அழகும் உடையதன்று" என்று மறுத்துக் கூறாநிற்ப, அதுகேட்ட அமைச்சர்கள், "வேந்தே! அப்பதுமாபதி வந்து புகாநின்ற மாடத்திலே நீயும் சென்று புகுவாயாயின் உண்டாகும் குற்றங்களை யாங்கள் சொல்லக் கேட்டருள்க. பதுமாபதியின் காவலாளர்கள் விரைந்துவந்து அம்மாடத்தினுள் யாண்டும் ஆராய்ந்து நின்னைக் கண்டு கொள்வர்" என்க.

(வி - ம்.) நெடுந்தகை அண்ணல் : உதயணன். ஆண்டகைத்து - ஆண்மைத் தன்மை யுடையது. அவள் - அப்பதுமாபதி. புகின் - நீ புகுந்தால். கேண்மதி - மதி : முன்னிலையசை. கடுகுபு - விரைந்து.

(இதுவுமது)

சசு - ருரு : அருநவை.........கூறி

(பொ - ரை.) "அங்ஙனம் காணுமிடத்து நீ உய்தற்கரிய துன்பம் எய்துதல் கூடும். ஒரோவழி துன்பம் எய்தாமல் போர் வலிமை பொருந்திய எம்பெருமான் செல்லுதல் கூடுமாயின் அழகிய அப் பதுமாபதியின் பெண்மைப் பெரு நலத்தை நீ நுகர்தல் கூடும். நீ செல்லும் பொழுது ஆண்டுவரும் வாயில் காவலர் உன் தோற்றத்தைக் கண்டு வைத்தும் எந்தக் காலத்தும் இவனும் ஓர் இரவலன் என்று கருதி வாளாவிரார். ஆதலின் இச்செயல் செய்ய வேண்டா" என்று மாட்சிமையுடைய அத்தோழர்கள் நீதி நூற் சான்றோடு எடுத்துக் காட்டி அவ்வுதயணனை மறுத்த காரணங்களோடு வற்புறுத்திக் கூறு நிற்ப; என்க.

(வி - ம்.) அருநவை - உய்தற்கரிய துன்பம்; தண்டனையுமாம். போதரவு - செல்லுதல். உருவம் - அழகு. மாதர் - பதுமாபதி. நலம் - பெண்மை நலம். நன்று - பெரிது. வாயிலவர் - வாயில் காவலர் அது - அத்தீச்செயல். விதி - நூல் விதி. வாயில் - காரணம். வலிப்பனர் - வற்புறுத்தி; முற்றெச்சம்.

(உதயணன் விடை)

ருச - சுக : நிறுக்கல்...........கூறினன்

(பொ - ரை.) அவ்வறிவுரை கேட்ட பின்னரும் உதயணன் தன் நெஞ்சினை அப்பதுமாபதியின்பால் செல்ல ஒண்ணாது நிறுத்தும் ஆற்றலற்றவனாய், அப்பெருமகன் அவ்வமைச்சர்க்குக் கூறும் விடையை நெடிது சிந்தித் துணர்ந்து, "நண்பரீர்! கேண்மின்! போர் செய்யும் ஆற்றல் குறைந்து அறுபது வயதினைக் கடந்தவரும், கடிய வெயிலின்கண் வந்தவரும் ஆகிய அக்கிழக்காவலர்களின் கண்கள் யான் மறைந்துறையும் வலிய அழகிய அவ்வறையின்கண் ஒளி மங்கி இருண்டு போம். ஆதலின், என்னை அக்காவலர் காணுதல் இயலாது" என்று அவ்வமைச்சர்க்கு விளங்கக் காட்டி வெற்றி பொருந்திய வேலையுடைய அவ்வுதயண மன்னன் பின்னரும் கூறுவான்; என்க.

(வி - ம்.) இதன்கண், உதயணன் அக்காவலர்க்குக் கண் தெரியாது என்பதற்குக் காட்டும் காரணம் சதுரப்பாடுடையதாதல் உணர்க. அடுமுரண் - போர் செய்யும் ஆற்றல். அறுபது - அறுபது ஆண்டுகள். அணி பெற்ற வல்லறை மருங்கு என மாறுக. தெரியக் காட்டி என்றது ஆசிரியர் உதயணன் சூழ்ச்சியை இகழ்ந்து கூறிய படியாம். வெற்றம் - வெற்றி. இக்காரணம் தன் நெஞ்சிற்கு அமைதி தாராமையின் பின்னரும் கூறுவான் என்றவாறு.

(பதுமாபதியின் சிறப்பு)

சுஉ - எக : தனக்கு............உடைய

(பொ - ரை.) தனக்கு ஒப்பின்றி உலகிலுள்ள மகளிரின் அழகுக்கெல்லாம் மேம்பட்ட தனது அழகு மேலும் அழகுடைத்தாம் பொருட்டுச் சிறந்த அணிகலன்களோடு அழகுற்றுத் தன்னைக் காண்போர் கண்ணைக் கவர்ந்து கொள்ளும் பெண்மை நலம் என்னும் தேனை நாள் தோறும் பெய்கின்ற தலைப்பெரும் புயல் போல்வாளாய்த் தனக்கு விருப்பமுடையதாகிய குலமும் செல்வமும் பெண்மை நலமும் நாணமும் பயிர்ப்பும் அச்சமும் மடமும் இளமைக்கு இயற்கையாகிய எழுச்சியும் அன்பும் குற்றமற்ற ஆராய்ச்சித் திறனும் பரந்த அறிவும் என்னும் இவையும் இன்னோரன்ன பிறவும் கெடாத பெரிய புகழாகிய செல்வமும் உடைய......என்க.

(வி - ம்.) மேலுள்ள பகுதி கிடைத்திலது. வனப்பு - அழகு. கலம் -அணிகலன். கவினி-அழகுற்று. நலம் - பெண்மை நலம். தேறல்-தேன். குலன் - குலம். நாண் பயிர்ப்பு உட்கு மடன் இவை பெண்மைப் பண்புகள். சூழ்ச்சி - நன்றும் தீதும் ஆராயும் ஆராய்ச்சித்திறன். இடனுடை அறிவு - பரந்த அறிவு. புகழாகிய செல்வம் என்க.

* * * * *

* * * * *

* * * * *

* * * * *

குறிப்பு: இக்காதைச் செய்யுளின்கண் எக ஆம் அடிக்கு மேலுள்ள பகுதி கிடைத்திலது.

கஉ. அமாத்தியர் ஒடுங்கியது

இதன்கண் : *தருசகனுடைய விருப்பத்தை வாயிலோனா லறிந்த உதயணன் நன்னீரூற்றும் நிதிப் புதையலும் உள்ள இடங்களை அவனுக்குக் காட்டி அவனால் பெரிதும் மதிக்கப்பட்டு அரண்மனையிலேயே தங்கியிருந்தமையும் உருமண்ணுவா முதலிய அமைச்சர்கள் அந்நகரத்தில் வேறு வேறு தொழில் செய்வோராய்ப் பிறர் காணாதபடி அவ்வுதயணனைப் பாதுகாத்துக் கொண்டு அந்நகரின்கண் கரந்துறைந்தமையும் பிறவும் கூறப்படும்.*

.............................வணி தோங்கி
ஆரணங் காகிய வகல்விசும் புகக்கும்
தோரண வாயி றுன்னின னாகி
அருமொழி யுணரும் பெருமொழி யாளனைத்
தாக்கருந் தானைத் தருசக குமரன்
வேட்கும் விச்சை யாதென வினவப்
பயந்தோன் படைத்த படைப்பரும் வெறுக்கை
இருந்துழி யிசையா னிகந்தயர்த் தொழிந்தனன்
அன்னவை யறிந ருளரெனி னவர்கட்
கின்னுயி ராயினு மீவ னவனென
மன்னவன் மனத்ததை யெல்லா மதித்து
நன்மூ தாளன் பன்னினன் மொழிய
வாரி மருங்கற வற்றினு மகவயின்
நீர்வளஞ் சுருங்கா நெற்றித் தாரைக்
கூவலும் பொய்கையுங் கோயில் வட்டத்
தெவ்வழி வேண்டினு மவ்வழிக் காட்டும்
ஞான வல்லியத் தரும்பொரு ணுனித்தனென்
ஏனை நூற்கு மேதில னல்லேன்
கரந்துழி யறிய வருங்கல வெறுக்கை
வைத்துழிக் காட்டும் வாய்மொழி விச்சை
கற்றுக்கை போகிக் காணவும் பட்டது
கொற்றவ னிவற்றுக் குறையோன் றுடையது
காணவு மமையுங் காணா னாயினும்

குறிப்பு : *இக் காதையின் முற்பகுதி கிடைத்திலது.*

காவ லாளனைக் கட்பட லுறுவேன்
காட்டுதல் குறையெனக் கேட்டவன் விரும்பி
நல்லவை நாப்பட் செல்வனைச் சேர்ந்தவன்
வல்லவை யெல்லாம் வலிதிற் கூறக்
கற்றோர்க் காண்ட லாகுங் காவலிற்
பெற்ற பயனென வெற்ற வேந்தனும்
காண்பது விரும்பி மாண்பொடு புணர்ந்த
பேரத் தாணி பிரிந்த பின்றை
நேரத் தாணி நிறைமையிற் காட்டலிற்
பகையறு குருசிலைப் பண்டுபயின் றன்ன
உவகை யுள்ளமோ டொழுக்க மறுது
கண்ணினுங் கையினு மன்றி நாவின்
இன்னுழி யிருக்கென விருந்த பின்றைக்
கற்றவை யெல்லாந் தெற்றென வினுஅய்த்
தானே கேட்டு வியந்துதலை துளக்கி
ஆனுக் கட்டுரை கழிந்தபின் மேனுட்
டள்ளா வென்றித் தம்மிறை வைத்த
விள்ளா விழுப்பொரு ளுள்வழி யுணரா
மன்னவன் மற்றிது நின்னி னெய்துவேன்
கற்றறி விச்சையிற் காட்டுதல் குறையென
உற்றன னுரைப்ப வுள்வழித் தெரிந்து
தான்வைத் தன்னபோற் காட்டலிற் றருசகன்
ஆனுக் காதலொ டாருயி ரன்ன
தோழ னுகித் தோன்று தோற்றும்
ஞான நவின்ற நல்லோ னிவனென
எனைத்திவன் வேண்டினு மீவ னென்றுதன்
கணக்குவினை யாளரொடு கரண மொற்றி
அகத்தே யுறைகென வமைத்த பின்னர்
எப்பான் மருங்கினு மப்பா னுடி
அகத்துநீ ருடைய வதனது மாட்சி
மிகுத்தநூல் வகையின் மேவரக் காட்டக்
கன்னியங் கடிநகர் காணவா வுடைய
இளமரக் காவினுள் வளமைத் தாய
நீர்நல னுணர்ந்து சீர்நலக் குருசிற்

கெழுகோ லெல்லையு ளேழுமிது நீர்மற்
றன்றியு மதனது நன்றி நாடின்
நாவிற்கு மினிதாய்த் தீதற வெறியும்
தன்மையு நுண்மையுந் தமக்கிணை யாவன
தெண்ணீ ரெவ்வழித் தேரினு மில்லை
புகழ்வரை மார்பிற் பூந்தா ரண்ணல்
அகழும் பொழுதி னிகழ்வ கேண்மதி
இருமுழத் தெல்லையுள் வரிமுகம் பொறித்த
பொன்னிறத் தேரை போதரும் பின்னர்
மும்முழத் தெல்லையுட் டெண்ணிறங் குயின்றது
தோற்ற மினிதாய் நாற்ற மின்னுப்
பருமண லுண்டது பண்ணுநர் வீழ
உட்கா ழீன்ற வொருகோ லரையின்
எட்பூ நிறத்தொடு கட்கா முறுத்தும்
விளங்கறல் வெள்ளியின் வீசுறு மென்றதன்
அகம்புக் கனன்போ லகன்ற ஞானத்தின்
உண்ணெறிக் கருத்தி னண்ணிய தாகிய
டண்ணின் சுவையு மின்னதென் றுரேழியா
துரைப்பக் கேட்டே யோங்கிய பெரும்புகழ்த்
திரும்பே ருலகம் பெற்றேன் போல
அகழ்வினை யாளரை யவ்வயிற் றரீஇ
இகழ்வி லத்தொழி லிறைவ னேவப்
பெருமண் வேந்தனைப் பிழைப்பின் றேம்புதற்
குருமண் ணுவாவு முள்ளகத் தொடுங்க
வாய்மொழி யிசைச்சனும் வயந்தக குமரனும்
தேமொழி மாதர் தாய்முதற் கோயிலுட்
டரும நூலுந் தந்துரை கதையும்
பெருமுது கிளவியொடு பிறவும் பயிற்றி
நங்கை விழையு நாளணி கலங்கள்
கோங்கணி மலரிற் கூட்டுவன ருய்த்துச்
சென்றுவந் தாடல் செய்வது வலிப்பப்
பிறவுறு தொழிலொடு மறவோ ரெல்லாம்
ஆய்புக ழரசனை யற்றப் படாமற்
காவல்புரிந் தனராற் கடிமனைக் கரந்தென்.

உரை

கஉ. அமாத்தியர் ஒடுங்கியது

அஃதாவது, உதயணனுடைய அமைச்சர்களாகிய உருமண்ணுவா முதலியோர் இராசகிரிய நகரத்தில் கரந்துறைந்தமை கூறும் பகுதி என்றவாறு.

*　　*　　*　　*　　*

க - சு: வணிதோங்கி............வினவ

(பொ - ரை.) வணிது (?) உயர்ந்து அரிய தெய்வத்தன்மையுடைய விசும்பினளவும் உயர்ந்த தோரணங்களையுடைய பெருவாயிலை உதயணன் அடைந்து அறிதற்கரிய மொழியையும் நுண்ணிதின் உணரும் ஆற்றலுடைய பெரும் பேச்சாளனாகிய அவ்வாயில் காவலனை நோக்கிப் பகைவரால் தாக்குதற்கரிய படைகளையுடைய இத்தருசக வேந்தனுக்குப் பெரிதும் விருப்பமான வித்தை யாது? என்று வினவா நிற்ப; என்க.

(வி - ம்.) அணங்கு - தெய்வம். அகல் விசும்பு - ஏனைப் பூதங்கள் தோன்றி விரிதற்குக் காரணமான விசும்புமாம். உதயணன் வாயிலை யடைந்து என்க. அருமொழி - பொருளுணர்தற்கு அரிய மொழி; அறிதற்கரிய பிற நாட்டு மொழியுமாம். பெருமொழியாளன்-நன்கு பேசுபவன்; என்றது வாயில் காவலனை. விச்சை - வித்தை. இவ்விடத்தே ஓரடி இறந்தொழிந்தது.

(வாயிலோன் விடை)

எ - கஉ: பயந்தோன்............மொழிய

(பொ - ரை.) "ஐய! எங்கள் தருசக மன்னனை ஈன்ற தந்தை ஈட்டிய ஈட்டற்கரிய பொருள்கள் இருக்குமிடத்தைக் கூறுனாய் மறந்து இறந்தொழிந்தனன். அப்பொருள்கள் எங்கிருக்கின்றன என்று தம் வித்தையாலே அறிந்து கூறுவார் உளராயின் அவர்கட்கு எங்கள் வேந்தன் தன் இன்னுயிரேனும் வழங்குவன் காண்" என்று தருசக மன்னவனுடைய மனத்தின்கண் உள்ள கருத்தையெல்லாம் ஊகித்துணர்ந்து அறிவறிந்து மூத்தோனாகிய அவ்வாயிலோன் வகுத்துக் கூறா நிற்ப; என்க.

(வி - ம்.) பயந்தோன் - ஈன்ற தந்தை. படைத்த - ஈட்டிய. வெறுக்கை - செல்வம். அயர்த்து - மறந்துபோய். இகந்தொழிந்தனன் - இறந்து பட்டான். நன் மூதாளன் - அறிவறிந்த முதியோன். பன்னினன் - வகுத்து.

(உதயணன் கூறல்)

கரு - கஎ : வாரி............நுனித்தனென்

(பொ - ரை.) அது கேட்ட உதயணன், "வாயில் காவலனே! கடல் அடி சுடும்படி நீர் வற்றிப் போகுமிடத்தும் தன்னுள் நீர் வளம் குறைதல் இல்லாத உச்சியிலே ஊற்றுக் கண்களையுடைய நீர் ஊற்றுக்களையும் பொய்கைகளையும் இவ் வரண்மனை அகத்தின்கண் எவ்விடத்தே காட்டல் வேண்டினும் அவ்விடத்தே காட்டுதற்கு உரிய வித்தையாகிய 'ஞான வல்லியம்' என்னும் அரும் பொருளுடைய நூலை யான் கூர்ந்து பயின்றுள் ளேன்" என்க.

(வி - ம்.) வாரி - கடல். நெற்றித்தாரை - உச்சியின் கண் உள்ள நீர் ஊற்றுக் கண். கூவல் - கிணறு. கோயில் - அரண்மனை. 'ஞான வல்லியம்' - ஒரு மந்திர நூல்.

இதுவுமது

கஅ - உஎ : ஏனை............கூற

(பொ - ரை.) "அன்பனே! பிற வித்தை நூல்களுக்கும், யான் அயலேன் அல்லேன். புதைத்த பொருள் இருக்கு மிடத்தை அறியவும் பேரணிகலன்களும் பொன்மணி முதலிய செல்வங்களும் வைத்து மறக்கப்பட்டு விட்ட இடங்களையும் காட்டா நின்ற மந்திரங்களாகிய வித்தைகளை நன்கு கற்று முதிர்ந்ததோ டன்றி அவையிற்றைக் கண்டெடுத்து முளேன். நுங்கள் அரசன் கருத்திற் கொண்டுள்ள அக்குறையை யான் கண்டு காட்ட அவன் காணவும் கூடும். அங்ஙனம் காண விரும்பா துயினும் யான் நுங்கள் மன்னனைக் காணப் பெரிதும் விரும்புகின்றேன். அங்ஙனம் அப்பொருளைக் காட்டுதல் என் னுடைய காரியமே யாகும்" என்று கூறக் கேட்ட அக்காவலன் மிகவும் உதயணனை விரும்பி அவனை அழைத்துக்கொடு போய் அரசவையின் நடுவே வீற்றிருந்த தருசக மன்னனை அடைந்து உதயணன் கற்று வல்ல வித்தைகளையும் அம்மன்ன னுக்கு வலிந்து கூறுதலாலே; என்க.

(வி - ம்.) ஏனை நூல் - பிற வித்தையை யுடைய நூல்கள். ஏதி லன் - அயலான். வாய்மொழி - மந்திரம். கொற்றவன் - தருசகமன்னன் குறை - நிறைவேற்றுதற்குரிய செயல். கட்படல் - காண்டல். கேட்டவன் - காவலன். நல்லவை - சான்றோர் குழுமிய அரசவை. செல்வன் - தருசகன். அவன் - உதயணன். வலிதிற் கூற - கேளாமலே வலிந்து கூற.

(உதயணன் தருசகனைக் காணல்)

உஅ - ருசு : கற்றோர்............பின்றை

(பொ - ரை.) அது கேட்ட வெற்றி வேந்தனாகிய தருசகனும் அரசாட்சியால் யான் அடைந்த பயன் நும்போன்று கற்றுவல்ல சான்றோர்களைக் காணுதலே ஆகும் என்று முகமன் கூறி வர வேற்று அவனை அளவளாவிக் காணுதலை விரும்பி அப்பேரவை கலைந்த பின்னர்ச் சிற்றேலக்க மண்டபத்திற்குக் கூட்டிச்சென்று நிறைந்த கேண்மையோடு ஆங்குள்ள காட்சிகளைக் காட்டு தலாலே பகைக்குணமற்ற உதயணனை முன்பும் பழகினாற்போன்ற மகிழ்ச்சியை யுடைய உள்ளத்தோடு சான்றோர் ஒழுக்கத்தில் பிறழாது கண்ணாலாதல் கையாலாதலன்றி நாவாலேயே இன்ன இடத்திலே அமர்க! என்று தருசகன் உபசரிக்க அவன் காட்டிய இடத்தில் இருந்த பின்னர்; என்க.

(வி - ம்.) காவலிற் பெற்ற பயன் கற்றோர்க் காண்டல் ஆகும் என மாறுக. வெற்ற வேந்தன்-வெற்றியுடைய தருசக மன்னன். காண்பது - அவன் கற்றுள்ள வித்தைகளை அறிவது. பேரத்தாணி - பேரவை. நேரத்தாணி - சிற்றவை. நிறைமை - நிறைந்த கேண்மை. குருசில் - உதயணன். "செல்வுழிக் கண்ணொருநாட் காணினும் சான்றவர், தொல்வழிக் கேண்மையிற்றோன்றப் புரிந்தியாப்பர்" என்பது(நாலடி. கள௬) நாவின் - நாவினாலேயே. அரசர்கள் கண்ணாலும் கையாலும் குறிப்பாகச் சைகை செய்து அமர்க என்று குறிப்பித்தல் வழக்கம். உதயணனைச் சிறப்பாக உபசரித்தலான் நாவின் இன்னுழி இருக்கெனக் கூறினான் என்பது கருத்து. பின்றை - பின்பு.

(இதுவுமது)

ருஎ - சரு : கற்றவை............குறையென

(பொ - ரை.) அவ்வுதயணன் கற்றுள்ள வித்தைகளை எல்லாம் தெளிவுண்டாக வினவித் தன் செவியாலேயே கேட்டு அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்து தலையை அசைத்து அசைத்து ஒழியாத மூகமனுரைகளைக் கூறி முடித்த பின்னர்ப் பண்டைக் காலத்தே கெடாத வெற்றியை யுடைய தன் தந்தை வைத்துப்போன மாறுபடாத சிறந்த பொருள்களை அறிந்து கொள்ள மாட்டாத அம்மன்னவன் "சான்றோனே! எனது இக் குறையை நின்னால் தீர்த்துக் கொள்வேன். நீ கற்று அறிந்த வித்தையினாலே அவற்றைக் காட்டல் வேண்டுமென்பது என் வேண்டுகோள்" என்று அம்மன்னவன் வேண்டாநிற்ப; என்க.

(வி - ம்.) தெற்றென - தெளிவாக. அவற்றின் அருமை பெருமைகளை உணர்ந்து வியந்து என்க. தலை துளக்குதல் மருட்கை மெய்ப்பாடு. மேனாள் - பண்டு. தம்மிறை - தந்தை. விழுப் பொருள்- சிறந்தபொருள். மன்னவன் - தருசகன். குறை - வேண்டுகோள்.

(தருசகனுக்கு உதயணன் நிதியைக் காட்டல்)

௪௪ - ௫௧ : உற்றனன்...........பின்னர்

(பொ - ரை.) இவ்வாறு தன்னோடு உறவுடையனாகிய தருசகன் வேண்டுதலாலே அப்பொருள் இருக்குமிடத்தைத் தன் வித்தையினாலே தெரிந்து தான் வைத்த பொருளைக் காட்டுவான் போல எளிதாகக் காட்டுதலாலே அத்தருசக மன்னன் அமையாத அன்போடு ஆருயிர் போன்ற தோழனாகி அறியவியலாத பொருளையும் அறிவிக்கும் அறிவினைப் பயின்ற நல்லோன் இவன் என்று தன் நெஞ்சத்துள் நன்கு மதித்தவனாய் எத்துணைப் பொருள் இவன் வேண்டினும் யான் வழங்குவல் என்று கருதிக்கொண்டு தன் கணக்கு மாந்தரொடு அவர் காரியங்களை ஆராய்ந்து கொண்டு எம்மரண்மனைக்குள்ளேயே இனிதின் உறைவாயாக என்று அமைந்த பின்பு; என்க.

(வி - ம்.) உற்றனன்-கேண்மையாற் பொருந்தியவன். உதயணன் காட்டலின் என்க. ஆனாக் காதல் - ஒழியாத அன்பு. தோன்றாதோற்றம் - அறிதற்கியலாத பொருளை அறிவிக்கும். நவின்ற - பழகிய. எனைத்து - எவ்வளவு. கணக்கு -வினையாளர் - கணக்கெழுதும் தொழிலாளர். கரணம் - காரியம்.

(உதயணன் நீருற்றுள்ள இடத்தைக் காட்டல்)

௫௨ - ௫௮ : எப்பால்...........நீர்மற்று

(பொ - ரை.) உதயணன் அவ்வரண்மனைக்கண் எவ்வெவ்விடத்தும் ஆராய்ந்து தன்னகத்தில் நன்னீருடைய அங்கிலத்தினது மாண்பினை மிகுத்துக்கூறும் நூல்வகையினாலே தருசக மன்னனுக்கு விருப்பமுண்டாகக் காட்டக் கருதிக் கன்னிமாடத்திலுள்ளோர் காணுதற்கு விரும்புதலையுடைய ஓர் இளமரச் சோலையினுள்ளே வளமிக்க நன்னீர் நலம் உண்மையை அறிந்து புகழ்மிக்க நன்மையுடைய அத்தருசக மன்னனுக்குக் காட்டிப் "பெருமானே! இவ்விடத்து எழுகோல் தோண்டுமளவில் நீர் ஊற்று எழும்" என்று கூறி; என்க.

(வி - ம்.) எப்பால்மருங்கினும் - எவ்வெவ்விடங்களிலும். அப்பால் - அவ்வப்பக்கங்களில். அதனது - அங்கிலத்தினது. மிகுத்த நூல் - விதந்து கூறும் நூல். நீர் நலம் - நீருண்மையாகிய நலம். சீர் - புகழ். குருசில் - தருசகன். கோல் - ஒரு நீட்டலளவைக் கருவி. இது - இவ்விடம்.

(இதுவுமது)

௫௯ - ௬௪ : அன்றியும்...........கேண்மதி

(பொ - ரை.) பின்னரும் வேந்தே, "அந் நீரினது நன்மையை ஆராயுங்கால் அது நாவிற்கும் இனிபதாய் உடலிலுள்ள

பிணி அற்றுப் போம்படி தீர்க்கின்ற குளிர்ச்சி உடைமையும் நுண்மையும் உடையதாயிருக்கும். அதற்கு ஒப்பான தெளிந்த நீர் இவ்வரண்மனையகத்தில் எவ்விடத்தில் ஆராய்ந்து காணினும் இல்லையாகும். புகழ்தற்குரிய நல்லிலக்கணம் அமைந்த மார் பினையும் பொலிவுடைய மலர் மாலையையுமுடைய அண்ணலே! இக் கூவலைத் தோண்டும்பொழுது நிகழ்வனவற்றை யான் இப் பொழுதே கூறுவன் கேட்டருள்க" என்க.

(வி - ம்.) அதனது - அந்நீரினது. நன்றி - நன்மை. தீது - பிணி. நுண்மை - நுண்ணிதான தன்மை. தமக்கு : ஒருமை பன்மை மயக்கம். வரை - இரேகை; மலைபோன்ற மார்புமாம். கேண்மதி - மதிமுன்னிலையசை.

(இதுவுமது)

கூ௫ - எக : இருமுழத்து............கேட்டே

(பொ - ரை.) "பெருமானே! இவ்விடத்து இரண்டு முழம் தோண்டு மளவிலே முகத்தின்கண் வரிகளையுடைய பொன்னிற முடைய ஒரு தேரைவரும். அப்பால் மூன்று முழம் தோண்டு மளவில் தெளிந்த நிறமுடையதும் காட்சிக்கு இனியதும் தீநாற்ற முடையதும் ஆகிய பரிய மணல் உளதாகும். அதன் கீழ் ஒன்றரைக் கோலளவில் தோண்டு மளவில் எள்ளினது மலர் போன்ற நிறத்தையுடையதும் கூவல் தோண்டுபவரும் விரும்பும் படி வெள்ளிக் கோல்கள் போலக் காண்போர் கண்ணை மேலும் மேலும் காண்டற்கு விரும்பச் செய்யும் விளக்கமுடையது மாகிய நன்னீர் வீசாநிற்கும்;" என்று அந்நிலத்தின் கீழே புகுந்து அறிந்தவன் போலத் தனது பரந்த அறிவினாலே தனது உள்ளத்தே வழிபட்ட கருத்தினாலே அக் கூவலின் கண் அமைந்த மண்ணினது சுவை தானும் இங்ஙனம் இருக்குமென்று கூறி அதன் பிறவியல்புகளையும் ஒழியாமற் கூறக் கேட்டு; என்க.

(வி - ம்.) அது மும்முழத்தெல்லையுள் அகழுங்கால் அங்குப் பரு மணல் உண்டு என்க. வரி - கோடுகள். ஒரு முழம் - நீட்டலளவை. இன்னா நாற்றமுடைய மணல் என்க. பண்ணுநர் - கூவல் தோண்டுபவர். வீழ - விரும்ப. உட்காழீன்ற என்பது, கோல் என் பதற்கு வாளா அடை மாத்திரை. ஒரு கோலரை - ஒன்றரைக் கோல். அறல் - நீர். வெள்ளியின் - வெள்ளிக்கோல்கள் போன்று பண்ணு நர் வீழ வீசுறும் என்க.

(தருசகன் செயல்)

எக - எகூ : ஓங்கிய............ரவ

(பொ - ரை.) அத்தருசக மன்னன் உயர்ந்த பெரிய புகழை யுடைய மேனிலை உலகத்தை அடைந்தவன் போலப் பெரிதும்

மகிழ்ந்து அப்பொழுதே அவ்விடத்தே கூவல் தோண்டும் தொழிலாளரை வரவழைத்துத் தன்னுற் பெரிதும் பேணப்படுகின்ற அத்தொழிலின் கண் ஏவா நிற்ப; என்க.

(வி - ம்.) ஓங்கிய பெரும் புகழ்த்திருப்பேருலகம் என்றது சித்த பதவியை. அகழ்வினையாளர் - கூவல்தோண்டும் தொழிலாளர். இறைவன் - தருசகன்.

(உருமண்ணுவா முதலியோர் செயல்)

அ0 - ககக : பெருமண்............கரந்தென்

(பொ - ரை.) இனி, பெரிய நாட்டினை ஆளும் தம்மரசனைத் தவறின்றிப் பாதுகாத்தற் பொருட்டு உருமண்ணுவா என்னும் அமைச்சனும் அவ்வரண்மனையுள்ளேயே உருக்கரந்து உறையா நிற்ப, வாய்மையே மொழியும் இயல்புடைய இசைச்சனும் வயந்தக குமரனும் இனிய மொழியினையுடைய பதுமாபதியின் தாயினது அரண்மனையின்கண் சென்று அம் மகளிர்க்கு அறநூலும் தந்துரை கதைகளும் பெரிய பழமொழிகளும் கற்பிப்போராய் இருந்து கொண்டு பதுமாபதி விரும்பும் நாளணி கலன்களைத் தேன் பொருந்திய மலர் மாலைகளோடு சேர்த்து உய்ப்போராய்க் கரந்துறையா நிற்ப. ஏனைய மறவர்களும் அவ்வரண்மனைக்கட் சென்று ஒற்றுடல் செய்வதனைக் கருதித் தமக்குப் பொருந்திய வெவ்வேறு வினையுடையோராய் வதிந்து அழகிய புகழையுடைய தம்மரசனுகிய உதயணன் சோர்வுபட்டு விடாமல் பாதுகாவல் செய்தனர்; என்க.

(வி - ம்.) வேந்தன் - உதயணன். வாய்மொழி - உண்மை மொழி. மாதர் - பதுமாபதி. தருமநூல் - அறநூல். தந்துரை கதை - கட்டுக் கதை. பெருமுதுகிளவி - பெருமையையுடைய பழமொழி. பிற - பிசியும் நொடியும் போல்வன என்க. நங்கை - பதுமாபதி. நாளணிகலம் - ஒவ்வொரு நாளுக்கும் உரிய அணிகலன். ஆடல் - ஒற்றுடல். மறவோர் - உதயணன் மறவர்கள். அற்றம் - சோர்வு. கடிமனை - அரண்மனை.

கஉ அமாத்தியர் ஒடுங்கியது முற்றிற்று

கரு. கோயில் ஒடுங்கியது

இதன்கண், *பதுமாபதியின் செலவும், அவள் மன்மதன் கோயிலை யடைந்து உதயணனைக் காண்டலும், அவள் தானமளித்தலும், உதயணனைச் சிவிகையில் மறைத்துக் கன்னிமாடத்திற்குக் கொடுபோதலும், அவன் கன்னிமாடத்தில் மறைந்திருத்தலும் பிறவும் கூறப்படும்.*

கரந்த வுருவோடு காவல் புரிந்தவர்
ஒடுங்குதல் வலித்துடன் போகிய பின்றை
முனைவெந் துப்பின் மன்னனு முன்போல்
புனைவகை மாடம் புக்குமறைந் திருத்தலிற்
றண்டடு திண்டோட் குருசிலைத் தன்னொடு
கொண்டுட் போகுங் குறிப்பின ளாகித்
தீது தீண்டாத் தெரிவோடு புகுதரும்
வாயி னூடி வைய நீக்கிப்
பல்வகைத் தான நல்குக மின்றென
எல்லிற் போதர லியையு மாதலிற்
சிலத மாக்களோடு சிவிகை வருகென
அலர்ததை யைம்பா லணியிழை யேறிப்
போந்தன ளாகிப் பூந்தண் கானத்துள்
எழுதுவினை மாடத்து முழுமுத லிழிந்து
தாமகத் திருக்கு மாமணிப் பேரறை
வாயில் சேர்வுற வையம் வைக்கென
அமைத்தன ளாகி யவ்வயி னொடுங்கிடு
சினப்போ ரண்ணலோடு வளப்பா டெய்தி
அப்பகல் கழிந்த பின்றை மெய்ப்பட
மாண்டரு கிளவி பூண்ட நோன்பிற்
கன்றுகடை யாதலிற் சென்றோர் யார்க்கும்
மணியு முத்தும் பவழமு மாசையும்
அணியு மாடையு மாசி லுண்டியும்
பூவு நானமும் பூசுஞ் சாந்தமும்
யாவை யாவை யவையவை மற்றவர்
வேண்டே மெனினு மீண்ட வீசலின்

இங்கில வரைப்பிற் கன்னியர்க் கோத்த
ஆசி லாசிடை மாசில மாண்பின்
மந்திர நாவி னந்த ணாளரும்
அல்லோர் பிறருஞ் சொல்லுவனர் போயபிற்
கோலக் காமன் கோட்டத் தகவயின்
மாலை யாமத்து மணிவிளக் கிடீஇ
மோகத் தான முற்றிழை கழிந்தபின்
மரபறி மகளிர் பற்றினர் பாடக்
கரும மமைந்தபிற் கடிமனை புகீஇயர்
திருமதி முகத்தியைச் சேர்ந்து கைவிடாஅ
அருமதி நாட்டத் தந்தணி போந்து
பட்டினிப் பாவை கட்டழ லெய்தும்
நீங்குமி னீரெனத் தான்புற நீக்கிப்
பஞ்சி யுண்ட வஞ்செஞ் சீறடி
ஒதுங்க விடினும் விதும்பும் வேண்டா
வாயிலுள் வைத்த வண்ணச் சிவிகை
ஏற னன்றெனக் கூறி வைத்தலின்
மணங்கமழ் மார்பன் மாடப் பேரறை
இருந்தன னுங்குப் பொருந்துபு பொருக்கெனக்
கட்டளைச் சிவிகையுட் பட்டணைப் பொலிந்த
பூம்பட மறையப் புக்கன னொடுங்க
வண்டொடு கூம்பிய மரைமலர் போல
ஒண்டார் மார்பனை யுட்பெற் றுவகையின்
மணிவரைச் சாரன் மஞ்ஞை போல
அணிபெற வியலி யடிக்கல மார்ப்பத்
தோய்யில் வனமுலைத் தோழி மாரொடு
பையப் புக்குப் பல்வினைக் கம்மத்துச்
சுருக்குக் கஞ்சிகை விரித்தனர் மறைஇப்
பள்ளிப் பேரறைப் பாயலு ளல்லது
வள்ளிதழ்க் கோதையை வைக்கப் பெறீரென
யாப்புறக் கூறிக் காப்போர் பின்சேல
வலிகெழு மொய்ம்பிற் சிலத மாக்கள்
அதிர்ப்பி னுசும்ப மதிற்புறம் பணிந்த
காவும் வாவியுங் காமக் கோட்டமும்

பூவீழ் கொடியும் பொலிவில வாக
வாழ்த்துப்பலர் கூறப் போற்றுப்பல ருரைப்ப
வழுவில் கொள்கை வான்றோய் மூதுநகர்
மணியுமிழ் விளக்கின் மறுகுபல போகிக்
கொடியணி கோயில் குறுகலும் படியணி
பெருங்கடை காவலர் பெருமான் றங்கை
கருங்கடை மழைக்கட் கனங்குழைப் பாவை
முடித்த நோன்பி னெடித்தவகை யறியார்
இருளின் குற்றங் காட்டி நங்கைதன்
உரிமையுள் படுநரைக் கழறுவன ராகி
முழுநிலைக் கதவ மகற்றிமுன் னின்று
தொழுத கையர் புகுதுகேன் றேத்த
வாயில் புக்குக் கோயில் வரைப்பிற்
கன்னி மாடத்து முன்னறை வைத்தலின்
பகலே யாயினும் பயிலா தோர்கள்
கவலை கொள்ளுங் கடிநிழற் கவினி
மாடெழு மைந்தரு மூடு சென்றுடா
அணியிற் கெழீஇ யமர ராடும்
பனிமலர்க் காவின் படிமைத் தாகி
இருளொடு புணர்ந்த மருள்வரு மாட்சித்
தன்னகர் குறுகித் துன்னிய மகளிரை
அகல்க யாவிரு மழலு மெனக்கெனத்
திலக முகத்தி திருந்துபடந் திறந்து
கூன்மகள் வீச வானு வகத்தே
தக்க வெல்லை யிருத்தலின் மிக்க
காழகி னறும்புகை யூழ்சென் றுண்ட
மணிக்காற் கட்டிலுள் வல்லோள் படுத்த
அணிப்பூஞ் சேக்கை யறைமுத லாகப்
பக்கமுந் தெருவும் புக்கமுறை பிழைய
தாராய்ந் தந்தணி யமைத்ததன் பின்றைப்
பேரிமை யண்ணலும் பெருநல மாதரும்
ஆரிருள் போர்வை யாக யாவரும்
அறிதற் கரிய மறையரும் புணர்ச்சியொடு
கரப்பறை யமைத்துக் கைபுனைந் தோர்க்கும்

௬௫ உரைக்க லாகா வுருபொறிக் கூட்டத்துப்
புதவணி கதவிற் பொன்னிரை மாலை
மதலை மாடத்து மறைந்தொடுங் கினரேன்.

உரை

௧௩. கோயில் ஒடுங்கியது

அஃதாவது-உதயண மன்னன் பதுமாபதியின் கன்னிமாடத்தினுள் மறைந்துறைந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

௧ - ௪ : கரந்த.........இருத்தலின்

(பொ - ரை.) இவ்வாறு உதயண குமரனைப் பாதுகாத்து வந்த உருமண்ணுவா முதலியோர் அரண்மனைக்கண் மறைந்துறைதலைத் துணிந்து சென்ற பின்னர்ப் போரின்கண் வெவ்விய ஆற்றலுடைய உதயண மன்னனும் பண்டு போல ஒப்பனை செய்யப்பட்ட மன்மதன் கோயில் மாடத்தின்கண் புகுந்து மறைந்திருத்தலாலே; என்க.

(வி - ம்.) காவல்புரிந்தவர் - உருமண்ணுவா முதலியோர். முனைவெந்துப்பு - போரின்கண் வெவ்விய ஆற்றலுடைய. மன்னன் - உதயணன். மாடம் - மன்மதன் கோயின் மாடம்.

(பதுமாபதியின் செயல்)

௫ - ௧௧ : தண்டு.........வருகென

(பொ - ரை.) பதுமாபதி நங்கை தண்டெனத் திரண்ட தோளையுடைய உதயணனை மன்மதன் கோயிலிலிருந்து தன்னோடு கன்னிமாடத்திற்குக் கொண்டு போகும் ஒரு கருத்தினை உடையளாய் அங்ஙனம் கொண்டு போகும்பொழுது தமக்குத் தீங்கு நேராதபடி கன்னிமாடத்தே புகுதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்துணர்ந்து அதற்கேற்ப அற்றை நாள் தான் வண்டியிற் போதலைத் தவிர்த்துத் தன் ஆய மகளிரை நோக்கி யாம் இற்றை நாள் மன்மதன் கோயிலின்கண் பல்வேறு வகைத் தானங்களையும் வழங்குவேம். அதன்பொருட்டு பகற் பொழுதிலேயே போதல் வேண்டுமாதலின் சிவிகை சுமப்பவரோடு சிவிகையும் வருவதாக என்று வரவழைத்துக்கொண்டு என்க.

(வி - ம்.) தண்டு - ஒருவகைப் படைக்கலம். குருசில் - உதயணன். தீது - துன்பம்; அம்பலும் அலரும் ஆகிய குற்றமுமாம்

தெரிவொடு நாடி என்க. வாயில் - வழி. வையம் - வண்டி. எல் - பகல். சிலதமாக்கள் - ஈண்டுச் சிவிகைகாவும் பணிமாக்கள்.

(பதுமாபதி மன்மதன் கோயிலை யடைந்து உதயணனைக் காண்டல்)

கஉ - கக : அலர்........பின்றை

(பொ - ரை.) மலர்செறிந்த கூந்தலையும் அழகிய அணிகலன் களையுமுடைய அக்கோமகள் அச்சிவிகையின்கண் ஏறிச்சென்று மலர்மிக்க குளிர்ந்த பொழிலின்கண் அமைந்துள்ள எழுதுவினை மாடத்தின் பெரிய முகப்பின்கண் இறங்கித்தானும் உதயண னும் அகத்தில் இருப்பதற்குரிய சிறந்த மணிகள் பதித்த பெரிய அறையின் வாயிலைப் பொருந்தும்படி அச்சிவிகையை வைக் கும்படி கட்டளை இட்டவளாய் அவ்விடத்தே இறங்கி முன்னரே அப்பேரறையின்கண் மறைந்திருக்கின்ற வெகுளிமிக்க பேராற்ற லுடைய அவ்வுதயணகுமரனைக் கண்டு பெரிதும் அளவளாவி மகிழ்ந்து அந்தப் பகல் கழிந்த பின்னர்; என்க.

(வி - ம்.) அலர் - மலர். தகைஐம்பால் - வினைத்தொகை. அணியிழை - பதுமாபதி. எழுதுவினை மாடம் - ஓவியம் வரைந்துள்ள மண்டபம். தாம் - உதயணனும் தானும். வையம்-ஈண்டுச் சிவிகை. அண்ணல் - உதயணன், வளப்பாடு - மகிழ்ச்சி.

(பதுமாபதி தானமளித்தல்)

கக - உசு : மெய்ப்பட........வீசலின்

(பொ - ரை.) மெய்ப்பாடுண்டாக மாட்சிமை பொருந்திய மொழிகளையுடைய அப்பதுமாபதி மேற்கொண்டுள்ள காமவேள் நோன்பிற்கு அற்றைநாள் இறுதிநாள் ஆதலால் அங்குவந்தோர் யாவர்க்கும் மணியும் முத்தும் பவழமும் பொன்னும் அணிகலன் களும் ஆடைகளும் குற்றமற்ற நல்லுணவும் மலரும் கத்தூரியும் பூசுஞ் சந்தனமும் ஆகிய இப்பொருள்களுள் வைத்து யார் யார் எந்த எந்தப் பொருளை விரும்பினாலும் மற்று அவர்தாம் எங் கட்கு இவைபோதும் இனிவேண்டேம் என்றாலும் நிறுத்தாமல் நிரம்ப அள்ளி வழங்குதலாலே; என்க.

(வி - ம்.) மெய் - மெய்ப்பாடு. நோன்புமேற் கொண்டோர்க்குரிய மெய்ப்பாடு என்க. மாண்டகு கிளவி - பதுமாபதி. கடை - இறுதி நாள். மணி - மாணிக்கம். மாசை - பொன். நானம் - கத்தூரி. ஈண்ட - நிரம்ப. வீசலின் - வழங்குதலாலே.

(இதுவுமது)

உஎ - ருரு : இந்நிலை........கழிந்த பின்

(பொ - ரை.) அத்தானங்களை ஏற்றுக்கொண்ட மந்திரம் பயின்ற செந்நாவினையுடைய அந்தணரும் இவ்வுலகத்தின்கண்

கன்னிமகளிருக்கு ஏற்ற குற்றமற்ற வாழ்த்துக்கள் பலவும் கூறி வாழ்த்திச் செல்லாநிற்ப அவ்வந்தணரல்லாத பிற இரவலர்களும் வாழ்த்துக்கூறி மகிழ்ந்து போன பின்னர், அழகுடைய அக் காமன் கோட்டத்தினுள் முதல்யாமத்திற்கு ஏற்றும் மணி விளக்கை ஏற்றிக் காண்போர் காமுறும் தானங்களை அப்பதுமா பதி செய்து முடித்த பின்னர்; என்க.

(வி - ம்.) ஆசிடை - வாழ்த்து. கன்னியர்க்கு ஒத்தவாழ்த்தா வது - சிறந்த கணவனை எய்துக என்பதாம். மாசு இல்லாதனவும் ஆகிய மந்திரம் என்க. கோலம் - அழகு. மாலையாமம் - முதல் யாமம். இடீஇ - இட்டு; ஏற்றி என்க. மோகித்தற்குரிய தானம் என்க. சிறந்த கணவன் தன்னை மோகித்தற் பொருட்டு வழங்கும் தானம் என்றபடி. முற்றிழை - பதுமாபதி.

(பதுமாபதி உதயணனுடன் செல்லுதல்)

ருச - ருரு : மரபு.........நீக்கி

(பொ - ரை.) மரபு அறிந்த மகளிர்கள் பண்புடையோராய் காமவேளைப் பாடிப் பரவி அவ்வழி பாட்டுத் தொழில் முடிந்த பின்னர் அரண்மனைக்குச் செல்லும் பொருட்டுத் திங்கள் மண் டிலம் போன்ற முகத்தையுடைய அப்பதுமாபதியை எப்பொழு தும் அணுகியிருந்து கைவிடாமற் காப்பாற்றும் இயல்புடைய அரிய அறிவும் நோக்கமும் உடைய பார்ப்பனியாகிய யாப்பியா யினி வந்து அங்குக் குழுமியுள்ள மகளிரை நோக்கி நங்கோமகள் பட்டினி விட்டிருத்தலால் உடல் வெப்பம் எய்துகின்றனள். ஆதலின் நீவிர் எல்லீரும் புறத்தே போமின் என்று கூறி அம் மகளிரைப் போக்குவித்து: என்க.

(வி - ம்.) மரபு - பாடும் மரபு. பற்றினர் - அன்புடையோர். கருமம் - வழிபாட்டுச் செயல். புகீஇயர் - புகுவதற்கு. மதிமுகத்தி - பதுமாபதி. நாட்டம் - நோக்கம். அந்தணி - யாப்பியாயினி. பட் டினிப்பாவை - பதுமாபதி.

(இதுவுமது)

சO - சஎ : பஞ்சி.........ஒடுங்க

(பொ - ரை.) நங் கோமகளின் அலத்தக மூட்டப்பட்ட அழகிய சிவந்த சிற்றடிகள் சிறிது நடக்கவிட்டாலும் துன்பத் தால் நடுங்கும். ஆதலால் நடத்தல் வேண்டா. வண்ணச் சிவிகையை வாயிலின்கண் சேரவைத்து அவள் அதன்கண் ஏறுதல் நன்று என்று வெளிப்படையாகக் கூறிச் சிவிகையை யும் அவ்வாறே வைத்தலால் குறிப்புணர்ந்த உதயணகுமரன் மாடத்தின்கண் பெரியதோர் அறையின்கண் இருந்தவன் அப் பொழுது ஞெரேலென்று தலை அளவுடைய அந்தச் சிவிகை

யினுட் புகுந்து பட்டால் மூடிய அணையைச் சுற்றிப் பொலிவுற் றிருந்த பூத்தொழிலமைந்த திரையினூடே மறைந்துறையா நிற்ப; என்க.

(வி - ம்.) பஞ்சி - செம்பஞ்சுக் குழம்பு. ஒதுங்கவிடினும் - நடக்கவிட்டாலும். மணங்கமழ் மார்பன் - உதயணன். கட்டளை - அளவு. பட்டணை - பட்டாலியன்ற அணைகள். பூம்படம் - பூத் தொழிலமைந்த திரை.

(இதுவுமது)

சஅ - ௫௬ : வண்டொடு.........பெயரென

(பொ - ரை.) அது கண்ட பதுமாபதியும் யாப்பியாயினியும் தன்பால் தேன்பருகிய வண்டினை இதழினுள் வைத்து மூடிக் கொண்ட தாமரை மலர் போல ஒளி பொருந்திய மலர் மாலை யணிந்த மார்பையுடைய உதயணகுமரனைத் தங்கள் சிவிகை யினூடே பெற்று மூடி வைத்து அம்மகிழ்ச்சியினாலேயே மணிகளை யுடைய மலைச்சாரலிலே வாழுகின்ற மயில் போல அழகுற நடந்து தங்கள் காலணிகள் ஆரவாரிக்கும்படி தொய்யிலெழுதப் பட்ட அழகிய முலையினையுடைய தோழிமாரொடு மெல்லத் தாமும் சிவிகையுட் புகுந்து பலவாகிய தொழில் திறம் அமைந்த சுருக்குத் திரையினை விரித்துச் சிவிகையை மூடிக் கொண்டு சிவிகை சுமப்போரை நோக்கி அரண்மனைக்கண் உள்ள எமது கன்னி மாடத்தின்கண் பள்ளிப் பேரறையில் உள்ள படுக்கையின் கண் அல்லது பெரிய மலர்மாலை யணிந்த எம்பெருமாட்டியை வேறிடத்தில் வைத்தலைத் தவிர்க என்று: என்க.

(வி - ம்.) உதயணனைச் சிவிகையுள் வைத்து மூடியதற்கு வண் டொடு கூம்பிய மரை மலர் உவமை. மணி வரை - மணிகளையுடைய மலை. இயலி - நடந்து. பைய - மெல்ல. சுருக்குக் கஞ்சிகை - வேண்டிய பொழுது சுருக்கிக் கொள்ளக் கூடிய திரை. மறைஇ - மறைத்து வைத்து. பாயல் - படுக்கை. கோதை - பதுமாபதி.

(இதுவுமது)

௫எ - கூ௫ : யாப்புற.........குறுகலும்

(பொ - ரை.) பொருத்தமாகச் சொல்லிக் காவலாளர் பின் தொடர்ந்து வரவும் வலிமைமிக்க உடம்பினையுடைய சிவிகை மாக்கள் ஆரவாரத்தோடு அதட்டிக் கொண்டு சுமப்பக், காமக் கோட்டத்து மதிலின் புறத்தே அழகு செய்துள்ள பொழில்களும் வாவிகளும் அக் காமக்கோட்டமும் பூவுதிர்ந்த கொடிகள் போன்று பொலிவிழந்து போகவும் பலர் வாழ்த்தவும் பலர் போற்றவும் குற்றமற்ற அறக்கொள்கையுடைய வானளாவிய முது நக ராகிய அவ்விராசகிரிய நகரத்தினது மணி விளக்குகள் ஒலி பரப்

புகின்ற வீதிகள் பலவற்றுள்ளும் போகிக் கொடிகளால் அழகுற்ற அரண்மனை வாயிலையடைதலும்; என்க.

(வி - ம்.) சிலதமாக்கள் - சிவிகை சுமப்போர். உசும்ப-அதட்ட; தூண்ட எனினுமாம். புறம்பு - புறம். முதுநகர் - பழைய நகரம். ஒளியுமிழ் மணி விளக்கு என்க. மறுகு - வீதி. கோயில் - அரண்மனை.

(இதுவுமது)

சுறு - எஉ : படியணி .... ஏத்த

(பொ-ரை.) படிகள் அழகு செய்யும் அரண்மனை வாயிலைக் காவல் செய்வோர், தம் பெருமானுடைய தங்கையும் கரிய கடைப் பகுதியையுடைய குளிர்ந்த கண்ணையுடையவளும், கனவிய குழையை உடையவளும், திருமகளை ஒத்தவளுமாகிய பதுமாபதி அற்றைநாள் நோன்பு முடித்தமையால் காலம் தாழ்த்தமையை அறியாதாராய் இருளினால் வருங் குற்றங்களை எடுத்துக் காட்டிப் பதுமாபதியினுடைய உவளகப் பணியாளரை இடித்துரைத்துத் தலையளவுடைய நிலையினையுடைய கதவினை நன்கு திறந்து வைத்துத் தாமே முன்னின்று கைகூப்பித் தொழுதவராய் எங் கோமகள் புகுதுக! புகுதுக! என்று ஏத்தா நிற்ப; என்க.

(வி - ம்.) படி - படிக்கட்டுகள். பெருங்கடை - அரண்மனை வாயில். பாவை - பதுமாபதி. நோன்பு முடித்தமையின் என்க. நெடித்தவகை - காலம் தாழ்த்தமுறை. இருளின் குற்றம் - இருட் காலத்தே நிகழும் துன்பங்கள். உரிமையுள் படுநர் - உவளகப்பணி மாக்கள். கழறுவனர் ஆகி - இடித்துரைப்பாராகி.

இதுவுமது

எங - அக : வாயில்.........குறுகி

(பொ - ரை.) அப்பெருவாயிலுட் புகுந்து உட்சென்று அவ் வரண்மனையகத்தே உள்ள கன்னி மாடத்து முகப்புப் பேரறையின்கண் சிவிகையைச் சுமப்போர் வைத்தலாலே, அவ்விடத்தே பழகாதவர்கள் பகற் காலத்தினும் கவலை கொள்ளுவதற்குக் காரணமான இருண்ட நிழலால் அழகெய்தித் தவழ்ந்து எழுந்து நிற்கும் இளஞ் சிறுஅர்களும் உள்ளே சென்று ஆடியறியாததாய்த் தேவர்கள் விளையாடுகின்ற குளிர்ந்த கற்பகப் பூஞ் சோலையை ஒத்ததாய்க் கதிரவன் ஒளி புகாமையின் எப்பொழுதும் இருண்டிருக்கும் பூம்பொழிலினூடே கண்டோர் மருளுதற்குக் காரணமான தன்னுடைய கன்னி மாடத்தை அடைந்து; என்க.

(வி - ம்.) பயிலாதோர் - ஆங்குப் பழகியறியாதோர். கவினி - அழகெய்தி. எழுமைந்தர் - தவழ்ந்து எழுகின்ற இளஞ்சிறுர். அமரராடு பனி மலர்க்கா - கற்பகச் சோலை. நகர் - கன்னிமாடம்.

(இதுவுமது)

அக - அரு : துன்னிய.........இருத்தலின்

(பொ - ரை.) அவ்விடத்தே தன்னைச் சூழ்ந்த தோழிமார்களை நோக்கி "என் உடல் வெம்புகின்றது. எல்லீரும் அகலப் போமின் என்று கூறித் திலகமிட்ட முகத்தையுடைய அப் பதுமாபதி திரையைத் திறந்து அயிராபதி சாமரை வீசா நிற்ப அம்மகளிர் அகலுந் துணையும் தகுந்த இடத்தே இருத்தலால்; என்க.

(வி - ம்.) அழலும் - வெம்பும். திருந்து படம் - திருத்தமுடைய திரை. திலகமுகத்தி - பதுமாபதி. கூன்மகள் - அயிராபதி.

(இதுவுமது)

அரு - கூ0 : மிக்க.........பின்றை

(பொ - ரை.) பார்ப்பனத் தோழியாகிய யாப்பியாயினி பதுமாபதியினது வைர மேறிய அகிலினது நறிய புகை முறையாக ஊட்டப் பெற்ற மாணிக்கக் கால்களையுடைய கட்டிலின் அகத்தேயும் கலைவன்மையுடைய அப்பதுமாபதி படுத்த அழகிய பள்ளியறை முதலாக அதன் பக்கங்களையும் அந்தப்புரத்திலுள்ள தெருக்களையும், முறைபிறழாமல் சென்று சென்று பார்த்து ஆங்கெல்லாம் பிறர் யாரும் இன்மையறிந்து வந்த பின்னர், என்க.

(வி - ம்.) காழகில் - வயிரமேறிய அகிற்கட்டை. ஊழ் - முறைமை. வல்லோள் - பதுமாபதி. சேக்கையறை - பள்ளியறை. தெரு - அந்தப்புரத்துத் தோழியர் உறைகின்ற தெரு. அந்தணி - யாப்பியாயினி.

(இதுவுமது)

கூக - கூஎ : பேரிசை.........ஒடுங்கினரென்

(பொ - ரை.) பெரும் புகழையுடைய உதயணமன்னனும் சிறந்த பெண்மை நலமுடைய பதுமாபதியும் காண்டற்கு அரிய இருளே தம்மைப் பிறர் அறியாமல் பேணும் போர்வையாக அமைய எத்தகையோரும் அறிதற்கு அரிதாகிய களவு மணப் புணர்ச்சியோடு கரப்பறை அமைத்துக் கொண்டு செய்தவர்க்கும் சொல்லிக் காட்ட இயலாத மிக்க வியந்திரச் சேர்க்கையையுடைய வாயிலை அழகு செய்கின்ற கதவினையுடைய பொன்மாலை நிரல்படத் தொடுத்த மதலை மாடத்தினூடே பிறர் தம்மை உணராதபடி மறைந்து இருந்தார்கள்; என்க.

(வி - ம்.) அண்ணல் - உதயணன். மாதர் - பதுமாபதி. இருளில் பிறர் அறியாதபடி சென்றார் என்றபடி. மறையரும் புணர்ச்சி - களவு மணம். கரப்பறை - பிறர் அறியாதபடி மறைந்திருக்கும் அறை. பொறிக் கூட்டம் - எந்திரச் சேர்க்கை. புதவு - வாயில். மதலை - கொடுங்கை.

கரு. கோயில் ஒடுங்கியது முற்றிற்று

கச. நலனாராய்ச்சி

இதன்கண் : கன்னி மாடத்திருந்த உதயணமன்னன் தோழி எழுதித் தந்த அரண்மனை வடிவ முதலியவற்றைக் கண்டு தன்னுள் நினைத்தலும், பதுமாபதி செவ்வி அரியளாதலும், கட்டில் வருணனையும், பாக்குவகை வருணனையும், உதயணன் ஓவியத்தைக் கண்டு வியத்தலும், பதுமாபதி ஊடலும், உதயணன் ஊடல் தவிர்த்தலும், பதுமாபதியாப்பியாயினிக்குக் கூறுதலும், யாப்பியாயினி உதயணனை வினாதலும், அவன் விடையும், உதயணனும் யாப்பியாயினியும் உரையாடலும், மாலைக் கால வரவும், உதயணன் பாடிக்கொண்டு யாழ் வாசித்தலும், உதயணனுடைய இசைச் சிறப்பும், பதுமாபதி வியத்தலும் கூறப்படும்.

மதலை மாடத்து மடமொழி மாதரோ
டுதயண குமர னொடுங்கிய வுவகையன்
விண்ணுறை தேவரும் விழையும் போகத்துப்
பெண்ணுறை யுலகம் பெற்றோன் போலவும்
நோக்கருங் கதிரவ னீக்கம் பார்த்துப்
பைங்கதிர் விரிக்கும் பனிமதிக் கிழவன்
அங்கண் ஞாலத் தளவை யாகிய
பன்னாட் பக்கஞ் செல்லாது சின்னாள்
வெண்முக நிலாவொளி சுருங்க மெல்லென
உண்மகி ழுரோணியோ டொளித்தது போலவும்
திகழ்மணி மார்ப னகநக ரொடுங்கப்
பொருள்புரி யமைச்சர் புறநகர் கரப்புழி
இருளறு நுண்மதித் தோழியை யெழுதெனக்
கோயில் வட்டமுங் கோணப் புரிசையும்
வாயின் மாடமும் வஞ்சப் பூமியும்
இலவந் திகையு மிளமரக் காவும்
கலவம் புகலுங் கான்கெழு சோலையும்
உரிமைப் பள்ளியு மருமைக் காப்பிற்
படைக்கலக் கொட்டிலும் புடைக்கோட் டாரமும்
நடைப்பெரு வாயிலு முடைக்குறும் புழையும்
அவைமண் டபமு மாடம் பலமும்
வகைமாண் டெய்வம் வழிபடு தானமும்

குதிரைப் பந்தியு மதிர்த லானா
யானைத் தானமுந் தானைச் சேக்கையும்
எயில தகற்றமு மயில்விளை யாடும்
சுதைவெண் குன்றமும் புதையிருட் டானமும்
உடையன வெல்லா முள்வழி யுணர்ந்து
தெளிதல் செல்லாத் தெவ்வ னிவனெனின்
அளியியற் செங்கோ லரசுமுதல் வவ்வலும்
எளிதெனக் கென்னா மெண்ணின னாகிப்
பெண்பாற் சூழ்ச்சியிற் பிழைப்புப் பலவெனும்
நண்பா னூல்வழி நன்கன நாடின்
ஏத மில்லை யிதுவெனத் தேறி
மாதர் மாட்டு மகிழ்ச்சியொடு தெளிதல்
நீதி யன்றென நெஞ்சத் தடக்கிச்
செருக்கய னெடுங்கண் செவ்வி பெற்றாங்
குரத்தகை யண்ண லுறைவது வலிப்பத்
தவ்வை யாயினுந் தாயே யாயினும்
செவ்வி யறியார் சென்றுமெய் சாரிற்
காட்டக் காணாள் கதம்பா டேற்றி
வாட்கட் பாவை மருவற் கின்னாக்
காட்சிய ளாகிக் கருதுவ தேதுவெனின்
வீயா நண்பின் வேத மகளுழை
யாழும் பாட்டு மவைதுறை போகக்
கற்றல் வேண்டு மினியெனக் கற்பதற்
கன்புடை யருண்மொழி யடைந்தோ ருவப்ப
நன்பல பயிற்றிய நாவின ளாகி
அமிழ்தி னன்ன வறுசுவை யடிசிலும்
இவணே வருக வின்று முதலெனத்
தமர்வயி னேய தன்மைய ளாகி
மழையயா வுயிர்க்கும் வான்றோய் சென்னி
இழையணி யெழுநிலை மாடத் துயரறை
வாள்வரி வயமான் மூரி நிமிர்வின்
நிலைக்கா லமைந்த நிழறிகழ் திருமணி
யிகற்குரல் வளைஇய கழுத்திற் கவ்விய
பவழ விழிகைப் பத்திக் கட்டத்துப்

பட்டுநிணர் விசித்த கட்டமை கட்டிலுட்
பொழுதிற் கோத்த தொழில வாகி
எழுதுவினைப் பொலிந்த விழுதுறழ் மென்மைய
முறைமையி னடுத்த குறைவில் கோலமொடு
நிரப்ப மெய்திய நேர்பூம் பொங்கணைப்
பரப்பிற் கோத்த பாய்காற் பிணைஇ
அரக்குவினைக் கம்மத் தணிநிலைத் திரள்காழ்
ஒத்த லூசி குத்துமுறை கோத்த
பவழ மாலையும் பன்மணித் தாமமும்
திகழ்கதிர் முத்தின் றெரிநலக் கோவையும்
வாய்முத ரேறுந் தான்முத லணிந்த
அந்தண் மாலையு மகடுதோ றணவரப்
பைம்பொற் புளகம் பரந்துகதி ரிமைப்ப
ஐவே றுருவின் மெய்பெறப் புனைந்த
பொய்வகைப் பூவும் வையெயிற் றகல்வாய்
மகரத் தங்கண் வகைபெறப் பொழ்ந்த
காம வல்லியுங் களிறும் பிடியும்
தேமொழிச் செவ்வாய்த் திருமகள் விரும்பும்
அன்ன வீணையு மரிமா னேறும்
பன்மரக் காவும் பாவையும் பந்தியும்
பறவையும் பிறவு முறநிமிர்ந் தோவா
நுண்ணவாப் பொலிந்த கண்ணவா வுறாஉம்
மீமிசைக் கட்டின் வாய்முதற் றூழ்ந்த
வண்ணப் படாஅங் கண்ணுறக் கூட்டிப்
பைங்கருங் காலிச் செங்களி யளைஇ
நன்பகற் கமைந்த வந்துவர்க் காயும்
மிருங்கண் மாலைக்குப் பெரும்பழுக் காயும்
வைகறைக் கமையக் கைபுனைந் தியற்றிய
இன்றே னளைஇய விளம்பசுங் காயும்
பைந்தளி ரடுக்கும் பலமுத லாகிய
மன்பெரு வாசமொடு நன்பல வடக்கிய
பயில்வினை யடைப்பையொடு படியகந் திருத்தி
உருவொடு புணர்ந்த வுயரணை மீமிசை
இருபுடை மருங்கினு மெழில்பட விரீஇ

ஏமச் செவ்வி யேஎர் நுகரும்
யாமத் தெல்லையுண் மாமறைப் பேரறை
உலாவு முற்றத் தூழ்சென் றுட
நிலாவிரி கதிர்மணி நின்று விளக்கலும்
பள்ளி தன்னுள் வள்ளிதழ்க் கோதையோடு
மன்னய முரைத்து நன்னலங் கவர்ந்து
வித்தக ரெழுதிய சித்திரக் கொடியின்
மொய்த்தலர் தாரோன் வைத்துநனி நோக்கிக்
கொடியின் வகையுங் கொடுந்தாண் மறியும்
வடிவமை பார்வை வகுத்த வண்ணமும்
திருத்தகை யண்ணல் விரித்துநன் குணர்தலின்
மெய்பெறு விசேடம் வியந்தன னிருப்பக்
கைவளர் மாதர் கனன்றுகனன் றெழுதரும்
காம வேகந் தான்மிகப் பெருகப்
புலவி நெஞ்சமொடு கலவியுட் கலங்கிப்
புல்லுகை நெகிழப் புணர்வுநனி வேண்டாள்
மல்லிகைக் கோதை மறித்தன ளிருந்து
சூட்டுமுகந் திருத்தி வேட்டுநறு நீரின்
மயிரு மிறகுஞ் செயிரறக் கழீஇக்
கோனெய் பூசித் தூய்மையு ணிறீஇப்
பாலுஞ் சோறும் வாலிதி னூட்டினும்
குப்பை கிளைப்பறுக் கோழி போல்வர்
மக்க ளென்று மதியோ ருரைத்தைதைக்
கண்ணிற் கண்டே னென்று கைந்நெரித்
தொண்ணுதன் மாத ருருகெழு சினத்தள்
தம்மால் வந்த தாங்கரும் வெந்நோய்
தம்மை நோவ தல்லது பிறரை
என்னது நோவ லேத முடைத்தெனக்
கருங்கே ழுண்கண் கயலெனப் பிறழ்ந்து
பெருங்கயத் தாமரைப் பெற்றிய வாகத்
திருநுதல் வியர்ப்பெழுந் திருநிலத் திழிதர
நிலாவுறு திருமுக நிரந்துடன் மழுங்கிக்
கருமயி ரிவர்ந்து காண்டகக் குலாஅய்ப்
புருவம் பலகால் புடைபுடை பெயர

முத்துற ழாலி தத்துவன தவழ்ந்து
பொன்னிறக் குரும்பை நன்னிற மழுங்கத்
தன்னிறங் கரப்பத் தவாஅ வெம்மையொடு
வீழனல் கடுப்ப வெய்துயிர்த் தலைஇக்
காதல்செய் கலங்கள் போதொடு போக்கி
அந்தண் சாந்த மாகத்துத் திமிர்ந்து
பண்புரை கிளவி பையெனத் திரியக்
கரும்பேர் கிளவி கதிர்முகை முறுவற்
பெருந்தடங் கண்ணி பிழைப்பொன் றுணரேன்
வருந்தல் வேண்டா வாழிய நங்கையென்
றிரந்தன னாகி யேற்பக் காட்டிய
இலம்புடை நறுமல ரேழுதுகோடிக் கம்மத்துச்
சிலம்பிடைத் தங்கிய சேவடி யரத்தம்
காரிருங் குஞ்சி கவின்பெறத் திவள
அரவுவாய்க் கிடப்பினு மலர்கதிர்த் தண்மதிக்
குருவுக்கதிர் வெப்ப மொன்று மில்லை
சிறியோர் செய்த சிறுமையுண் டெனினும்
தரியாது விடாஅர் தாநனி பெரியோர்
என்பது சொல்லி யெழில்வரை மார்பன்
பொன்புனை பாவை புறக்குடை நீவிச்
செங்கையிற் றிருத்திப் பைந்தோ டணிந்து
கலம்பல திருத்தி நலம்பா ராட்டிச்
சாந்த மெழுகிச் சாயனெகிழ் பறிந்து
பூம்புறங் கவவப் புனைதா ரோதி
பூண்ட பூணொடு பொறையொன் றுற்றேன்
தீண்டன்மின் பெருமவெனத் தீரிய வுரைத்து
மாடத் தகத்தி லாடுவினைக் காவினுட்
கொம்பர் மீமிசைக் கூகைவந் துலாஅய்
வித்தகக் கைவினைச் சத்தி யேறி
உட்குத்தக வுரைத்தலுங் கட்கின் பாவை
நெஞ்சந் துட்கென நெடுவிடை நின்ற
காற்றெறி வாழையி னுற்ற நடுங்கி
அஞ்சி லோதி யாகத் தசைத்தர
அச்ச முயக்க நச்சுவனன் விரும்பி

மெல்லியன் மாதரோடு மேவன கிளந்து
புல்லியுந் தழைத்தும் புணர்ந்தும் பொருந்தியும்
அல்குலு மாகமு மாற்றநலம் புகழ்ந்தும்
அமர ராக்கிய வமிழ்தெனக் கினையோள்
தன்முலை யெயிற்றுநீர் தானெனை வயின்றும்
ஒழுகா நின்ற காலை யொருநாள்
இன்பப் பேரறை நன்பகற் பொருந்தி
அருமறை யறிதற் கமைந்த வார்வத்
தொருதுணைத் தோழியை யொன்றுவனள் கூவித்
திருவிற் கமைந்த தேந்தார் மார்பன்
உருவிற் கமைந்த வுணர்வுநன் குடைமை
அளத்து காமெனத் துளக்கிலள் சூழ்ந்து
பலர்புகழ் மார்பன் பயின்ற விச்சைகள்
வல்லவை யாய்கென வழிபா டாற்றி
நல்லவை யாவென நகைக்குறிப் பூர்தர
வினவிய மகளிர்க்குச் சினவுநர்ச் சாய்த்தவன்
வேத விழுப்பொரு ளோதின னுளரெனின்
எனைத்துங் கரவேன் காட்டுவென் யானென
எமக்கவை யென்செயு மிசையொடு சிவணிய
கருவிக் கரண மருவினை யோவென
நீத்தவர் வேண்டிய துப்புர வல்லால்
பார்ப்பன மக்கள் பரிந்துபிற பயிற்றார்
வேள்விக் குரிய கருவி யாவும்
வாளேர் கண்ணி வல்லேன் யானென
நல்லதொன் றுண்டெனிற் சொல்லலெங் குறையெனத்
தோளுறு துணைவிக்குத் துயரம் வந்தநாள்
சூளுறு கிளவியற் றெழுதனள் கேட்ப
இடவரை யருவியி னிம்மென விசைக்கும்
குடமுழ வென்பது பயிற்றினென் யானென
அவைக்குரி விச்சை வல்ல வந்தணன்
சுவைத்தொழின் மகனென நகைத்தொழி லாடி
அந்தர மருங்கி னமர ராயினும்
மந்திர மறப்ப மனநனி கலக்கும்
பைந்தொடி பயிற்றும் பண்யாழ் வருகெனத்

தந்துகைக் கொடுக்கலுந் தண்பூங் கொடிபோல்
எதிர்முகம் வாங்கி யெழினி மறைஇப்
பதுமா நங்கையும் பையெனப் புகுந்து
கொன்மணி வீணை கொண்டிவ ணியக்கத்
தான மறிந்தி யாப்பி யாயினி
நீகனி பாடென நேரிழை யருளித்
துணைவன் முன்னதன் றொன்னலந் தோன்றக்
கணைபுணர் கண்ணி காட்டுதல் விரும்பி
ஒள்ளுறை நீக்கி யொளிபெறத் துடைத்து
வன்பிணித் திவவு வழிவயி னியத்த
மெல்விர லேவப் பல்கா லேற்றி
ஆற்று ளாகி யரும்பெறற் றோழியைக்
கோற்றேன் கிளவி குறிப்பிற் காட்டக்
கொண்டவள் சென்று வண்டலர் தாரோய்
வீணைக் கேற்ப விசையொடு மற்றிவை
தானத் திரீஇத் தந்தீ கெமக்கெனக்
குலத்தொடும் வாராக் கொறகும் விச்சை
நலத்தகு மடவோய் நாடினை யாகின்
அலைத்தல் கற்றல் குறித்தேன் யானென
மற்போர் மார்பவிது கற்கல் வேண்டா
வலியி னுவது வாழ்கநின் கண்ணி
தரித்தர லின்றிய விவற்றை யிவ்விடத்
திருத்த லல்லது வேண்டலம் யாமென
அன்ன தாயி னுமெனிற் காண்கம்
பொன்னிழை மாதர் தாவெனக் கொண்டு
திண்ணிய வாகத் திவவுநிலை நிறீஇப்
பண்ணறி வுறுத்தற்குப் பையெனத் தீண்டிச்
சுவைப்பட நின்றமை யறிந்தே பொருக்கெனப்
பகைநரம் பெறிந்து மிகையுறப் படீஇம்
எள்ளற் குறிப்பினை யுள்ளகத் தடக்கிக்
கொடும் பத்தலுஞ் சேடமை போர்வையும்
மருங்குலும் புறமுந் திருந்துதுறைத் திவவும்
விசித்திரக் கம்மமு மசிப்பில னாகி
எதிர்ச்சிக் கொவ்வா முதிர்ச்சித் தாகிப்

போத்தகத் துடையதாய்ப் புனனின் றறுத்துச்
சேத்த தாருச் செய்தது போலும்
இசைத்திற னின்று தாகிய திதுவென
மனத்தி னெண்ணி மாசற நாடி
நீட்டக் கோள்ளாண் மீட்டவ ளிறைஞ்சிக்
கோண்ட வாறுமவன் கண்ட கருத்தும்
பற்றிய வுடனவ னெற்றிய வாறும்
அறியா தான்போன் மேல்ல மற்றதன்
உறுநரம் பெறீஇ யுணர்ந்த வண்ணமும்
செறிநரம் பிசைத்துச் சிதைத்த பெற்றியும்
மாழை நோக்கி மனத்தே மதித்தவன்
அகத்ததை யெல்லா முகத்தினி துணர்ந்து
புறத்தோ னன்மை திறப்படத் தேளிந்து
தாழிருங் கூந்தற் றேழியைச் சேர்ந்திவன்
யாழறி வித்தக னறிந்தரு ளென்றலின்
இன்னுஞ் சேன்றவ னன்ன னுகுதல்
நன்னுத லமர்தர நாடிக் காண்கெனப்
பின்னுஞ் சேர்ந்து பெருந்தகை யெமக்கிது
பண்ணுமை நிறீஇயோர் பாணிக் கீதம்
பாடல் வேண்டுமேன் றுடைமைத் தோளி
மறுத்துங் குறைகோள மறத்தகை மார்பன்
என்கட் கிடந்த வெல்லா மற்றிவள்
தன்கண் மதியிற் றுன்றேரிந் துணர்ந்தனள்
பேரிதிவட் கறிவேனத் தேருமந் திருந்திது
வல்லுந னல்லே னல்லோய் நானேன
ஒருமனத் தன்ன வுற்றூர்த் தேற்று
அருவினை யில்லேன வறிந்தோர் கூறிய
பேருமோழி மெய்யேனப் பிரியாக் காதலோ
டின்ப மயக்க மெய்திய வெம்மாட்
டன்புதுணை யாக யாதோன் றுயினும்
மறாஅ தருளேன வுறாஅன் போல
அலங்குகதிர் மண்டில மத்தஞ் சேரப்
புலம்புமுந் துறுத்த புன்கண் மாலைக்
கருவி வானங் கால்கிளர்ந் தேடுத்த

பருவம் பொய்யாப் பைங்கொடி முல்லை
வெண்போது கலந்த தண்கண் வாடை
பிரிவருங் காதற்குக் கரியா வதுபோல்
நுண்சா லேக நுழைந்துவந் தாட
ஆராக் காதலிற் பேரிசை கனியக்
குரலோர்த்துத் தொடுத்த குருசி றழீஇ
இசையோர் தேய வியக்கமும் பாட்டும்
நசைவித் தாக வேண்டுதிர் நயக்கெனக்
குன்று வனப்பிற் கோட பதியினை
அன்றுண்டு நினைத்தஃ தகன்ற பின்னர்
நலத்தகு பேரியாழ் நரம்புதொட் டறியா
இலக்கணச் செவ்விர லேற்றியு மிழித்தும்
தலைக்கட் டாழ்வு மிடைக்க ணெகிழ்ச்சியும்
கடைக்கண் முடுக்குங் கலந்த கரணமும்
மிடறு நரம்பு மிடைதெரி வின்றிப்
பறவை நிழலிற் பிறர்பழித் தீயாச்
செவிச்சுவை யமிர்த மிசைத்தலின் மயங்கி
மாடக் கொடுமுடி மழலையம் புறவும்
ஆடமை பயிரு மன்னமுங் கிளியும்
பிறவு மின்னன பறவையும் பறவா
ஆடுசிற கொடுக்கி மாடஞ் சோரக்
கோய்ம்மலர்க் காவிற் குறிஞ்சி முதலாப்
பன்மர மெல்லாம் பணிந்தன குரங்க
(ஐம்மலர்க் கண்ணியு மகிழ்ந்து மெய்ம்மறப்ப)
ஏனோர்க் கிசைப்பி னேதந் தருமென
மானேர் நோக்கி மனத்திற் கொண்டு
கண்கவர் வுறூஉங் காமனிற் பின்னைத்
தும்புரு வாகுமித் துறைமுறை பயின்றோன்
இவனிற் பின்னை நயனுணர் கேள்வி
வகையமை நறுந்தார் வத்தவர் பெருமகன்
உதையணன் வல்லனென் றுரைப்ப வவனினும்
மிகநனி வல்லனித் தகைமலி மார்பனென்
றுள்ளங் கொள்ளா வுவகைய ளாகி
ஒள்ளிழை தோழியொ டுதயணற் பேணிக்

௨௬௫ கழிபெருங் காமங் களவினிற் கழிப்பி
ஒழுகுவனண் மாதோ வுரிமையின் மறைந்தென்.

உரை

௧௪. நலனாய்ச்சி

அஃதாவது: பதுமாபதி உதயணனுடைய கலை நலங்களை ஆராய்ந்து அறியும் செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் நிலை)

௧ - ௪ : மதலை.........போலவும்

(பொ - ரை.) இவ்வாறு பதுமாபதியினது கன்னிமாடத் துள்ள மதலை மாடத்தின்கண் மடப்பமுடைய மொழிகளை யுடைய அப் பதுமாபதியுடன் மறைந்திருத்தலால் உண்டாகிய பெருமகிழ்ச்சியையுடைய உதயணகுமரன் வானுலகத்தில் உறை கின்ற தேவர்களும் விரும்புவதற்குக் காரணமான இன்ப நுகர்ச்சி யினையுடைய பெண்ணுறை உலகம் பெற்றவனைப் போலவும்; என்க.

(வி - ம்.) மடமொழிமாதர் - பதுமாபதி. பெண்ணுறை உலகம்- பெண்கள் மட்டுமே நிறைந்துள்ள மணித்திவம். இதனை, "பெண் ணுலகேய்ப்பக் கன்னி மகளிர்" (௧...௪௨ - ௧௮௧ - ௨) என முன்னும் கூறினமையால் உணர்க.

(இதுவுமது)

௫ - ௧௨ : நோக்கு.........காப்புழி

(பொ - ரை.) கண்ணால் நோக்குதற்கரிய கதிரவன் விலகிய செவ்வி பார்த்துப் பசிய ஒளியைப் பரப்புங் குளிர்ந்த திங்கட் கடவுள் அழகிய இடமமைந்த உலகத்திற்கு அளவைப் பொரு ளாக அமைந்த பிற விண்மீன்களிடத்துச் செல்லாமல் ஒரு சில நாள் வெள்ளிய தன்னுடைய முகத்தினது நிலாவொளி சுருங்குக் யடி மெல்ல மெல்லத் தன்னுள் மகிழ்கின்ற உரோகிணி என்னும் விண்மீனோடு சென்று மறைந்தாற் போலவும் விளங்குகின்ற மணியணி யணிந்த மார்பினையுடைய உதயணகுமரன் கன்னி மாடத்தினூடே மறைந்துறையாநிற்பப் பொருளை ஈட்டுதற்குரிய உருமண்ணுவா முதலிய அமைச்சர்கள் புறநகரத்தே மறைந்துறை யுங்கால் என்க.

(வி - ம்.) பனிமதிக் கிழவன் - திங்கள். பன்னூள் - பலவாகிய விண்மீன்கள். உரோணி - உரோகிணி. மார்பன் - உதயணகுமரன்

இவ்வுவமையோடு, "மண்ணகங் காவலின் வழுக்கி மன்னவன், பெண்ணருங் கலத்தொடு பிணங்கு பேரருள், விண்ணக மிருள் கொள விளங்கு வெண்மதி, ஒண்ணிற உரோணியோ டொளித்த தொத்ததே" (சீவக-கசுஅ) என்பதனையும் ஒப்புக் காண்க. அமைச்சர் - உருமண்ணுவா முதலியோர்.

(தோழி எழுதித்தந்த அரண்மனை வடிவம் முதலியவற்றைக் கண்டு உதயணன் நினைத்தல்)

கஈ - கசு : இருள்.........கொட்டாரமும்

(பொ - ரை.) ஒருநாள் உதயணன் மயக்கந் தீர்ந்த மதி நுட்பமுடைய தோழியாகிய யாப்பியாயினியை நோக்கித், "தோழி! நீ இவ்வரண்மனையின் அமைப்பினை ஒரு படத்தில் வரைந்து எனக்குக் காட்டுக என வேண்டுதலாலே அத்தோழி வட்டவடிவமான அவ்வரண்மனையையும் கோணங்களையுடைய மதில் அமைப்பையும் கோபுரத்தின் அமைப்பையும் அவ்வரண்மனைக்குள் உள்ள கள்ளப் பூமிகளையும் எந்திர வாவியினையும் இளமரச் சோலைகளையும் மயில்கள் விரும்பும் மணமிக்க மலர்ச் சோலையையும் உவளகவமைப்பையும் கிட்டுதற்கரிய காவலையுடைய படைக் கலக்கொட்டில் அமைப்பையும் பக்கத்தேயுள்ள கூலக் களஞ்சியங்களையும்; என்க.

(வி - ம்.) தோழி - யாப்பியாயினி. கோயில் - அரண்மனை, புரிசை மதில். வஞ்சப் பூமி - உள்ளூப் பொய்யான தரை. இலவந்திகை - எந்திர வாவி. கலவம் - மயில்; ஆகுபெயர். புகலும் - விரும்பும். கான் - மணம். உரிமைப் பள்ளி - உவளகம். படைக் கலக்கொட்டில் - படைக்கலம் வைக்கும் கொட்டில். கொட்டாரம் - நெல் முதலிய கூலம் வைக்கும் களஞ்சியம்.

இதுவுமது

உ0 - கூ0 : நடை.........ஆகி

(பொ - ரை.) நடந்து செல்லுதற்குரிய பெரிய வாயிலும் அவ் வாயிலுடைய சிறுவாயிலும், அவைமண்டபமும், கூத்தாட்டம்பலமும் பலவேறுவகைப்பட்ட தெய்வங்களை வழிபாடு செய்யும் இடங்களும், குதிரைக் கொட்டிலும், பிளிறுதல் ஒழியாத யானை கட்டுமிடங்களும், காலாட் படையினர் தங்குமிடங்களும் மதிலினுடைய அகலமும், மயில்கள் விளையாடிக்கொண்டிருக்கும் வெண்சுதை தீற்றிய செய்குன்றங்களும், பொருள்களை மறைக்கும் இருட்டறைகளும், இன்னோரன்ன அவ்வரண்மனையுடைய எல்லாப் பொருள்களும் அமைய அத்தோழி படத்தில் வரைந்து கொடுப்ப, அதனைக் கூர்ந்து நோக்கி அவ்வரண்மனையின் இயல்பெல்லாம் நன்குணர்ந்து கொண்டு உதயணகுமரன் இத்தருசக மன்னன் ஒரோவழி நம்மால் தெளிதல் கூடாத பகைவனுமிருப்

பானுயின் உலகோம்பும் இயற்கையையுடைய செங்கோலை யுடைய அவனுடைய அரசாட்சியைக் கவர்ந்து கொள்ளுதல் எனக்கு மிகவும் எளிதேயாகும் என்று தன்னுட் கருதியவனும்; என்க.

(வி - ம்.) பெருவாயிலும் அஃதுடைத்தாய குறும்புழையும் என்க. குறும்புழை - நுழைவாயில். அவைமண்டபம் - அவைகூடும் அத்தாணி மண்டபம். ஆடம்பலம் - கூத்தாட்டரங்கம். குதிரைப் பந்தி- குதிரைக் கொட்டில். அதிர்தல் - பிளிறுதல். யானைத்தானம் - யானைகட்டுமிடம். தானை - ஈண்டுக் காலாட்படை. அகற்றம் - அகற்சி. குன்றம் -செய் குன்றம். எல்லாம் தோழி எழுதிக் காட்ட உணர்ந்து என்க. தெவ்வன்- பகைவன். இவன் - தருசகன். அரசு - அரசாட்சி. வெளவல் - கவர்ந்து கொள்ளுதல்.

(இதுவுமது)

௩௧ - ௩௭ : பெண்.........வலிப்ப

(பொ - ரை.) பின்னரும் பெண்ணினது சூழ்ச்சியின்கண் அகப்படுதலால் உண்டாகும் பிழைகள் மிகவும் பலவாகும் என்று கூறுகின்ற நுண்ணிய பகுதிகளையுடைய அறநூல்வழி நின்று ஆராயுமிடத்தும், யான் இவ்வரண்மனையகத்துத் தங்கி இருத்தல் குற்றமில்லையாகும் என்று தெளிவடைந்து மேலும் மகளிரிடத்து உண்டாகும் மகிழ்ச்சியோடு காரியங்களைத் தெளிவது நீதியாகாது என்னும் அறவுரையை மறவாது தன் நெஞ்சத்தில் அடக்கிக்கொண்டு ஒன்றனோடொன்று போரிடுகின்ற கயல்மீன்களை யொத்த நெடிய கண்களையுடைய பதுமாபதியினோடு அளவளாவும் செவ்வியைப் பெற்று அக்கன்னிமாடத்திலேயே தங்குவதனைப் பேரறிவுடைய அவ்வுதயண மன்னன் தன்னுள் துணியாநிற்ப; என்க.

(வி - ம்.) பெண்பாற் சூழ்ச்சியிற் பிழைப்புப் பல என்பது அறநூற்கூற்று. அங்ஙனமாயினும் இவ்வரண்மனையினின்றும் யான்வெளியேறுதல் எளிதேயாகும் என்பது பற்றி இது ஏதமில்லை என்றான். இது- இங்குத் தங்குதல். மாதர்மாட்டு மகிழ்ச்சியொடு தெளிதல் நீதியன்று என்பதும் அறநூற்றுணிவு. நெடுங்கண் - பதுமாபதி. உரத்தகையண்ணல் - உதயணன். வலிப்ப - துணிய.

(பதுமாபதி செவ்வி அரியளாதல்)

௩௮ - ௬௨ : தவ்வை........எதுவெனின்

(பொ - ரை.) இனி வாள்போலுங் கண்களையுடைய அப் பதுமாபதி தானும் தன்னுடைய செவிலி மக்களாகிய தமக்கையர் ஆயினும் செவிலித் தாயேயாயினும் செவ்வியறியாமல் இயல்பாகவே தன்பால்வரின் அவர் அறிவிக்கும் செய்திகளை ஏற்றுக்

கொள்ளாளாய் வெகுளி உடையாள் போன்று அவர்க்குத் தன்னைக் காட்டி, யாரும் தன்னை அடைதற்கு இன்னாக்காட்சிய ளாகி, அவ்வுறவினர் நீ கருதுவது தான் யாது என்று வினவின்; என்க.

(வி - ம்.) தவ்வை - மூத்தவராகிய செவிலியின் பெண் மக்கள். தாய் - செவிலி ; நற்றாயுமாம். காணாள் - ஏற்றுக்கொள்ளாள். இன்னாக்காட்சி - காண்போர்க்குத் துன்பம் தரும் காட்சி.

இதுவுமது

சக - ௫௦ : வீயா........தன்மையாளாகி

(பொ - ரை.) கெடாத நண்பினையுடைய யாப்பியாயினியின் பால் யான் யாழும் மிடற்றுப் பாடலும் ஆகிய அக்கலைகள் முற்றுப் பெறும்படி இனிக் கற்றல் வேண்டும் என்று தான் கற்ப தற்கு அன்புடைய அருள் மொழியை அவ்வுறவினர்கள் மகிழும் படி நன்கு பல படக் கூறிய நாவினை உடையளாய்ப் பின்னரும் அவ்வுறவினர்களை நோக்கி எனக்கு அமிழ்தம் போன்ற அறு சுவை அடிசில் தானும் இன்று முதலாக இவ்விடத்திற்கே வரு மாறு செய்க என்று ஏவிய தன்மையை உடையளாகி; என்க.

(வி - ம்.) கற்பதற்கு அன்பு - கற்பதற்கு விருப்பம். இவண் - இவ்விடம். தமர் - தவ்வை தாய் முதலியோர்.

(கட்டில்)

௫க - ௬௬ : மழை.........கோவையும்

(பொ - ரை.) முகில்கள் தங்கி இளைப்பாறுதற்கு ஏற்றதாய் வானத்தைத் தீண்டி உயர்ந்த உச்சியினையுடைய மணிகளிழைத்து அழகிய எழுநிலை மாடத்தில் வைத்து மேனிலை மாடத்தின்கண் உள்ள அறையின்கண் வாள்போலும் கோடுகளையுடைய புலிமுரி நிமிர்ந்த காலத்திலுள்ள அதன்கால்களைப் போன்ற வடிவமைந்த கால்களையுடைய ஒளிதிகழ்கின்ற அழகிய மணிகளிழைத்த மூட்டுவாயமைந்த கிண்கிணிமாலை வளைத்துக் கட்டப் பட்ட கழுத்தினையும் வாயால் கவ்விய பவளத்தாலியன்ற கைச் சரிகையையும் உடைய நிரல்பட்ட கட்டங்களையுடைய பட்டாற் பின்னிக்கட்டிய கட்டமைந்த கட்டிலின்கண் பருவத்திற்கு ஏற்ற தொழிற்பாடுடையதாகி ஓவியத் தொழிலால் பொலிவுற்ற வெண்ணெய் போன்று ஊற்றினிமை உடையவுமாகிய அன்னத்தூவி முதலிய ஐந்தும் மூன்றாக முறைமையால் அடுத்த நேரிய பொலிவுடைய அணைப் பரப்பிற்குப் பொருந்திய பாய்காலை இணைத்து அரக்குத் தொழில் திறத்தால் அழகிய நிலைமையினையுடைய கொட்டைகளிடத்தே ஒன்றுபோல் ஒத்திருப்ப ஊசியாற்குத்தி

முறையே கோத்த பவழ மாலையும் பலவாகிய மணிமாலைகளும் விளங்குகின்ற ஒளிமுத்தின் ஆராய்ந்தெடுத்த அழகிய கோவையும்; என்க.

(வி - ம்.) மழை - முகில். அயாஉயிர்க்கும் - இளைப்பாறும். சென்னி - உச்சி. வயமான் - புலி. திழல் - ஒளி. கயில் - மூட்டுவாய். குரல் - கிண்கிணிமாலை. இழிகை - கைச்சுரிகை. கட்டம் - வகுப்பறை. கிணர் - பின்னல். பொழுது - கார் முதலிய பருவங்கள். இழுது - வெண்ணெய். பொங்கணை - உயர்ந்த அணை. பாய்கால் - பரப்புச்சட்டம். தெரிநலம் - ஆராய்ந்தெடுத்த அழகு.

(இதுவுமது)

௬௭ - ௮௦ : வரய் .... கூட்டி

(பொ ரை.) முகப்புக்கள்தோறும் அழகிய குளிர்ந்த மலர் மாலையும் நடுஇடந்தோறும் சேரப்பசிய பொன்னாலியன்ற கண்ணாடிகள் ஒளிபரப்பி விளங்காநிற்ப, ஐவகை நிறங்களாலும் உண்மை போலத் தோன்றும்படிசெய்த பொய்ப்பூக்களும் கூரிய பல்லையும் அகன்ற வாயையுமுடைய மகர மீனினது வாயினின்றும் முளைத்த காமவல்லியும் களிற்றியானையும் பிடியானையும் இனிய மொழியினையும், சிவந்த வாயினையுமுடைய பதுமாபதி மிகவும் விரும்பும் அன்னவீணையும் ஆண் சிங்கமும் பலவாகிய மரங்களையுடைய சோலையும் பாவையும் பறவைகளும் ஆகிய ஓவியங்கள் பெரிதும் பொலிவுடையவாய்க் கண்கள் விரும்புவதற்குக் காரணமான உச்சிக் கட்டிலினின்றும் தூங்குகின்ற ஓவியத்திரையும் பொருந்துமாறு சேர்த்து; என்க.

(வி - ம்.) புளகம் - கண்ணாடி. ஐவேறுரு - ஐந்துநிறங்கள். மெய்பெற - உண்மையாகத் தோற்றும்படி. பொய்ப்பூ - நெட்டி முதலியவற்றால் செய்தபூ. மகரமீனை ஊடுருவிச் செல்லும் காமவல்லி என்க. திருமகள் - பதுமாபதி. அன்னவீணை - அன்னப்பறவையின் வடிவமையச் செய்யப்பட்ட வீணை. பாவைப்பந்தி என்க. உம்மை - இசைநிறை.

(பாக்குவகை முதலியன)

௮௧ - ௮௮ : பைங்கருங் .... திருத்தி

(பொ - ரை.) பசிய கருங்காலிக் குழம்பில் ஊறவைக்கப்பட்ட கண்பகலுக்கு ஏற்ற அழகிய சிவந்த களிப்பாக்கும் மாலைப் பொழுதிற்கு ஏற்றகரிய கண்ணையுடைய பெரிய பழுத்த பாக்கும் வைகறைப் பொழுதிற்கு ஏற்ற கைசெய்யப்பட்ட இனிய தேன் கலந்த இளம்பசும்பாக்கும் பசிய இளவெற்றிலை யடுக்கும் சாதிக்காய் முதலிய பெரிய மணப் பொருள்கள் நல்லன பலவும் அடக்கி வைத்த தொழில் திறமமைந்த அடைப்பையொடு படிக்கங்கலையும் திருத்தி வைத்து; என்க.

(வி - ம்.) கருங்காலியினது சிவந்த குழம்பில் ஊறிய துவர்ப்பு மிக்க பாக்கும் என்க. இதனைக் களிப்பாக்கு என்று கூறுப. இது பகற் பொழுதிற்குரிய பாக்கு. இருங்கண் - பாக்கினது கரியகண். பழுக்காய் - முதிர்ந்தபாக்கு. இது மாலைக்கு உரியது. இளம்பசுங் காய் - பிஞ்சுப்பாக்கு, இதனோடு தேன்கலந்து வைகறைப் பொழுதில் தின்றால் உடலுக்கு நலம் பயக்கும் என்க. தளிரடுக்கு - இள, வெற்றிலை அடுக்கு. பலம் - சாதிக்காய். அடைப்பை - வெற்றிலைப்பை. படியகம் - தின்று உமிழ்தற்குரிய ஒருவகைக் கலம், படிக்கம் எனினுமாம்.

(இதுவுமது)

அகூ - கூகூ : உரு .... கவர்ந்து

(பொ - ரை.) அழகோடு பொருந்திய உயர்ந்த அணையின் மீது உதயணனும் பதுமாபதியும் எதிரெதிராக இரண்டு பக்கங்களிலும் அழகுற அமர்ந்திருந்து இன்பமுடைய செவ்வியையுடைய அவ்விருவரும் தம்முள் ஒருவர் அழகை ஒருவர் கூர்ந்து நோக்கி இன்பம் நுகர்ந்த பின்னர் முதல் யாமத்தின்கண் அக்கரப்பறையின் உலாவுதற்குரிய முற்றத்தின்கண் முறையே சென்று விளையாட பதுமாபதியினது மணி அணிகலன்களின் ஒளி பாய்ந்து அவ்விடமெல்லாம் விளக்கம் செய்தபின் அப்பள்ளியின் கண் அம் மன்னவன் அப் பதுமாபதியோடு நலம்பல பாராட்டி அவளது நலத்தை நுகர்ந்த பின்னர்; என்க.

(வி - ம்.) இரீஇ - இருந்து. ஏமச் செவ்வி - இன்பம் நுகர்தற்குரிய பருவம். ஏர் - அழகு. கோதை - பதுமாபதி. நய முரைத்தல் - நலம் பாராட்டுதல்.

(உதயணன் சித்திரத்தைக் கண்டு வியத்தல்)

கூஎ - க0உ : வித்தகர் .... இருப்ப

(பொ - ரை.) அந்த அறையின்கண் ஓவியத்துறை கைபோகிய புலவர்கள் வரைந்த ஓவியமாகிய பூங்கொடியின்கண் உதயணன் தன் கருத்தை வைத்துக் கூர்ந்து நோக்கி அக்கொடியின் வகைகளையும் வளைந்த கால்களையுடைய மான் குட்டியையும் அதன் அழகமைந்த பார்வையினையும் அவ்வோவியப் புலவர்கள் வகுத்து வரைந்துள்ள தன்மையையும் ஆழ்ந்து கண்டு உணர்தலானே அவ்வோவியம் உண்மைப் பொருள்கள் போன்று தோன்றுகின்ற சிறப்பினை நோக்கிப் பெரிதும் வியந்தவனும் ஆளாவிருப்ப; என்க.

(வி - ம்.) வித்தகர் - ஓவியப் புலவர். சித்திரக் கொடி-ஓவியத்தி லெழுதப்பட்ட பூங்கொடி. மொய்த்து - செறிந்து; தன் மனத்தை வைத்து என்க. கனி நோக்கி - கூர்ந்து நோக்கி. மறி - மான்

குட்டி. அண்ணல் - உதயணன். மெய்ப்பெறு விசேடம் - உண்மை போலத் தோற்றும் சிறப்பு.

(பதுமாபதி ஊடல்)

௧0௫ - ௧0எ : கை .... இருந்து

(பொ - ரை.) பதுமாபதி மிக்கு வளர்கின்ற தனது நெஞ்சிற் கனன்று கனன்று எழுகின்ற காம வேகந்தான் மிக மிகப் பெருகுதலான் உதயணனோடு ஊடல் கொண்ட நெஞ்சுடையளாய் அவனோடு புணர்தலின்கண் கலக்க மெய்தி அவனைத் தழுவுதலில் கைநெகிழ்ந்து புணர்ச்சியினை வேண்டாளாய் மல்லிகை மலர்மாலை சூடிய அந்நங்கை மற்றொரு புறத்தே தன்முகத்தைத் திருப்பிக் கொண்டு துன்பத்தோடிருந்து, என்க.

(வி - ம்.) கை வளர்தல் - மிகுந்து வளர்தல், புலவி - ஊடல். கலவி - புணர்தல், புல்லுகை - தழுவுதல். மல்லிகைக் கோதை - பதுமாபதி. மறித்தனள் - முகமாறி.

(இதுவுமது)

௧0அ - ௧௧௪ : சூட்டு.........என்று

(பொ - ரை.) கோழியானது தன்னை வளர்ப்போர் பெரிதும் விரும்பி அதன் தலையிலுள்ள சூட்டினை அழகுறத் திருத்தி கன்னீரில் அதன் மயிரையும் இறகையும் அழுக் ககலக் கழுவித் தூரியக் கோலால் நறு நெய்யைத் தடவித் தூய இடத்தில் வைத்து நாடோறும் பாலுஞ் சோறும் தூயனவாக ஊட்டி வளர்த்தாலும் தனக்கியல்பான குப்பை சீக்கும் தொழிலை விடாது. அந்தக் கோழியை ஒப்பாரும் மாந்தருட் சிலர் உளர் என்று அறிவுடையோர் கூறிய உண்மையை இன்று யான் என கண்ணாலேயே கண்டுணர்ந்தேன் என்று அவன் கேட்கும்படி கூறி, என்க.

(வி - ம்.) சூட்டு - தலையிலுள்ள கொண்டை. வேட்டு - விரும்பி. கழீஇ - கழுவி. கோல் - தூரியக்கோல்; எழுதுகோல். தூய்மை - தூய இடம். திறீஇ - நிறுத்தி. குப்பை கிளைப்பு - குப்பையைக் காலால் சீத்தல். இதனோடு,

> "கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினும்
> குப்பை கிளைப்போவாக் கோழிபோல்" (நாலடி - ௩௪௧)

என்னும் இவ்வடிகள் ஒப்பு நோக்கற் பாலன.

(இதுவுமது)

௧௧௪ - ௧௧அ : கை .... உடைத்தெனக்

(பொ - ரை.) அந்நங்கை தன் கைகளை நெரித்து அச்சமுண்டாவதற்குக் காரணமான வெகுளியை உடையளாய்த் தன்

குள்ளே ஒருவர் தாமே தேடிக் கொண்ட ஒரு கொடுந்துன்பத்திற்குத் தம்மையே நொந்து கொள்வதல்லது பிறரை நோதல் மேலுந் துன்பம் தருவதொன்றாம் என்று கூறிக்கொண்டு என்க.

(வி - ம்.) கைந்நெரித்தல் - துன்பத்தின் மெய்ப்பாடு. ஒண்ணுதல் மாதர் - பதுமாபதி. உரு - அச்சம். வெந்நோய் - வெப்பமுடைய நோய். என் நோவல் அது ஏதம் உடைத்து என்க.

(இதுவுமது)

கககூ - கஉ௪ : கருங்கேழ் .... பெயர

(பொ - ரை.) கரிய நிறமமைந்த மையுண்ட தன் கண்கள் கயல் மீன் பிறழ்வது போலப் பிறழ்ந்து பெரிய குளத்தின்கண்ணுள்ள செந்தாமரை மலர் போலச் சிவப்பாகவும், அழகிய நுதலின் கண் வியர்வை முகிழ்த்துப் பெரிய நிலத்தின்கண் வீழாநிற்பவும் ஒளி பொருந்திய தனது அழகிய முகம் ஒரு சேர ஒளி மழுங்கித் தனது கரிய புருவம் முரிந்து வளைந்து பன்முறை இடம் பெயரா நிற்பவும், என்க.

(வி - ம்.) உண்கண் - மையுண்டகண். தாமரை - ஈண்டுச் செந்தாமரை. வியர்ப்பு - வியர்வை. நிலா - திங்களுமாம். புடைபுடை - இடந்தொறும் இடந்தொறும்.

(இதுவுமது)

கஉரு - கங௧ : முத்து.........இரிய

(பொ - ரை.) முத்துக்களை ஒத்த கண்ணீர்த் துளிகள் உதிர்ந்து தவழ்தலாலே பொன்னிறக் குரும்பை போன்ற முலைகள் நல்ல நிறம் மழுங்கவும் தனது திருமேனி நிறம் மறையவும் குறையாத வெப்பத்தோடு வீழாநின்ற தீப்போன்று வெய்தாக உயிர்த்துத் தான் அணிந்துள்ளவையும் தன்னால் பெரிதும் விரும்பப்படுவனவும் ஆகிய அணிகலன்களையும் மலர்மாலைகளையும் குலைத்து எறிந்தும் மார்பின்கண் பூசப்பட்ட அழகிய குளிர்ந்த சந்தனத்தையும் தேய்த்துதிர்த்துப் பண்ணை ஒத்த மொழிகளையுடைய அப்பதுமாபதி நங்கை வேறுபடா நிற்க; என்க.

(வி - ம்.) ஆலி - கண்ணீர்த் துளிகள். குரும்பை - முலை. தவா - கெடாத. கலங்கள் - அணிகலன்கள். ஆகத்து - மார்பின்கண். பண்புரை கிளவி - பண்ணை ஒத்த மொழியையுடைய பதுமாபதி. திரிய - வேறுபட.

(உதயணன் பதுமாபதியின் ஊடலைத் தீர்த்தல்)

கங௨ - க௪0 : கரும்பு .... இல்லை

(பொ - ரை.) அதுகண்ட உதயணன், கரும்பு போன்று இனிய மொழிபேசும் நங்காய்! ஒளியுடைய முல்லை முகைக்

போன்ற பற்களையுடைய பாவாய்! பெரிய அகன்ற கண்களை யுடையோய்! யான் நின் திறத்திலே பிழையேதுஞ் செய்திலேனே! அங்ஙனமிருப்பவும் நீ முகமாறி வருந்துவானேன்? வருந்தல் வேண்டா என்று இன்மொழி பல பேசி இரப்பானுய்த் தான் தன்னைத் தூயன் என்றுணர்த்தற் பொருட்டுத் தூங்குகின்ற நறிய மலர்களோடு பொறிக்கப்பட்ட பூங்கொடியுருவத்தை யுடைய தொழிற்றிறனமைந்த சிலம்புகள் தங்கிய அவளது சிவந்த அடிகளிலே ஊட்டப்பட்டுள்ள அலத்தகக் குழம்பு தனது கரிய தலை மயிரின்கண் தோய்ந்து அழகுற்று விளங்கும்படி அவளுடைய அடிகளிலே விழுந்து, "கோமகனே! குளிர்ந்த விரிந்த ஒளியையுடைய திங்கள் மண்டிலம் பாம்பின் வாயில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதும் அதன்கண் ஊடுருவிச் செல்லுகின்ற வெப்பமுடைய கதிர் சிறிதுமில்லை," என்க.

(வி - ம்.) ஏர் - உவம உருபு. கிளவி - விளி. முகை - அரும்பு. முறுவல் - பல், நகைப்புமாம். கன்னி: விளி. பிழைப்பு - தவறு. நங்கை: விளி. ஊடல் தீர்க்க வேண்டுதலின் இவ்வாறு மும்முறை இனிதின் விளிக்கின்றான். காட்டிய - காட்ட; செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இலம்புடை - தொங்குதலையுடைய. அரத்தம் - செம்பஞ்சுக் குழம்பு. கவின் - அழகு. திவள - விளங்க. அரவு - பாம்பு. உருவுக் கதிர் - ஊடுருவிச் செல்லும் கதிர். ஒன்றும் இல்லை - சிறிதும் இல்லை.

(இதுவுமது)

கசக - கருo : சிறியோர்.........உரைத்து

(பொ - ரை.) "நங்காய் சிறியோர் செய்த பிழையினை மிகவும் சான்றோர் பொறாமல் விடார்" இம் முதுமொழியைக் கூறி அழகிய மலை போன்ற மார்பினையுடைய அம்மன்னன் பொன்னாலியன்ற பாவைபோல்வாளாகிய அப் பதுமாபதியின் முதுகைத் தடவி அவளது பசிய தோட்டினைத் தன் சிவந்த கைகளாலே திருத்தி நன்கு அணிந்து விட்டுப் பிற அணிகலன்களையும் திருத்தியிட்டு அவள் அழகினைப் பெரிதும் பாராட்டிச் சந்தனம் பூசி மென்மையுடைய அவள் நெஞ்சம் நெகிழ்தலை உணர்ந்து அவளது முதுகினை அணைத்து அவள், பெருமானே! யான் அணிந்துள்ள அணிகலன்களைச் சுமத்தலும் ஆற்றேன் என்னைத் தீண்டாதே கொண்மின்" என்று கூறுமளவிற்கு ஊடல் தீர்ந்துப் பணி மொழி பல கூறுகிற்ப, என்க.

(வி - ம்.) "சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே" எனவரும் நறுந்தொகையும் நினைக, தரியாது - பொறாமல். மார்பன் - உதயணன். பொன்புனை பாவை - பொன்னாற் செய்யப்பட்ட பாவை, பதுமாபதி. புறக்குடை - முதுகு.

நீவி - தடவி. சாயல் - மென்மை. நெகிழ்பு - நெகிழ்தல். கவவ - அணைக்க. புனை தாரோதி - பதுமாபதி. ஊடி இருந்தவள் அது தீர்ந்து தன்னோடு பேசுமளவிற்கு ஊடல் தீர்த்து என்றவாறு.

(பதுமாபதி ஊடல் தீர்தல்)

கருக - கருஎ : மாட.........அசைத்தர

(பொ - ரை.) அப்பொழுது அவர்கள் இருந்த மாடத்தின் உச்சியில் அமைத்துள்ள கலைத்திறம் அமைய இயற்றப்பட்ட சூலத்தின்மேல் அயலில் விளையாட்டயரும் சோலையின்கண் மரக் கொம்பின்மீது இருந்த கூகை ஒன்று ஏறிக் கேட்போர்க்கு அச்சம் உண்டாகும்படி குழறு நிற்ப, அதுகேட்ட காண்டற்கினிய பாவை போல்வாளாகிய பதுமாபதி அச்சத்தால் நெஞ்சம் திடுக் குற்று நெடிய வெளியின்கண் நின்ற வாழைமரம் சூறைக் காற்று வீசும் பொழுது நடுங்குதல் போன்று பெரிதும் நடுங்கி அழகிய சிலவாகிய கூந்தலையுடைய அந் நங்கை உதயணனது மார்போடு பொருந்தி அவனைக் கட்டிக்கொள்ள, என்க.

(வி - ம்.) ஆடுவினைக்கா - விளையாடுதற்குரிய சோலை. கொம்பர் - கொம்பு. உலாய் - சுற்றி. சத்தி - சூலம். உட்கு - அச்சம். கட்கின்பாவை - கண்ணுக்கு இனிதாகிய பாவைபோல்வாளாகிய பதுமாபதி. துட்கென - திடுக்கென. நெடுவிடை - நெடிய வெட்ட வெளி. ஆகம் - உதயணன் மார்பு. அசைத்தர - கட்டிக்கொள்ள.

(இதுவுமது)

கருஅ - கசுச : அச்சம்.........ஒருநாள்

(பொ - ரை.) இவ்வாறு பதுமாபதி தனது அச்சத்தினாலே தழுவிக்கொண்ட தழுவுதலைப் பெரிதும் அவாவுவானாய் விரும்பி அவ்வுதயண மன்னன் மெல்லியல்புடைய அந் நங்கையோடு அச் செவ்விக்கேற்ற இன்சொற்கள் பல கூறித் தானும் தழுவியும் கட்டியும் புணர்ந்து பொருந்தியும் அவளது அல்குலும் மார்பும் பிறவுமாகிய உறுப்புக்களின் அழகினைப் பெரிதும் புகழ்ந்து கூறியும் இந் நங்கையின் நாணன்முளை போன்ற வாலெயிற்றின் கண் ஊறுகின்ற நீர் எனக்கு அமரர் உண்டாக்கிய அமிழ்தம் ஆகும் என்று பாராட்டிப் பருகியும் இங்ஙனம் ஒழுகாநின்ற காலத்தே ஒருநாள்; என்க.

(வி - ம்.) அச்ச முயக்கம் - அச்சத்தால் தழுவும் தழுவல். மேவன - அச் செவ்விக்குப் பொருந்துவன. புல்லுதல் முதலியன; கரண வகைகள். ஆற்ற - மிகவும். இனையோள்-இவள். முளையெயிறு- வினைத் தொகையுமாம்.

(பதுமாபதி தோழிக்குச் சொல்லல்)

௧௬௫ - ௧௭௨ : இன்ப........ஆய்கென

(பொ - ரை.) இன்புறுவதற்குக் காரணமான பெரியதோர் அறையின்கண் நல்ல பகற்காலத்திலே சென்றிருந்து அறிதற்கரிய மறைச் செய்தியினை அறிந்து கோடற்குப் பொருந்திய ஆர்வத்தை யுடைய ஒப்பற்ற உசாத் துணைத் தோழியாகிய யாப்பியாயினி யுடன் கூடி ஆராயும் பொருட்டு அவளை அழைத்துத் திருமகள் வீற்றிருத்தற்கு ஏற்ற இனிய மாலையணிந்த மார்பினையுடைய உதயணனது அழகுக்குப் பொருந்திய கலையுணர்வு நன்குடை யனோ? அல்லனோ? அவனை யாம் ஆராய்ந்து அறிந்துகொள் வோம் என்று கலங்குதலில்லாத கருத்துடையளாய்த் துணிந்து யாப்பியாயினியை நோக்கித் "தோழி! மகளிர் பலரும் புகழ்தற்குக் காரணமான மார்பினையுடைய நம்பெருமான் கற்றுவல்ல வித்தை கள் யாவை என நீ சென்று அவனோடு சொல்லாடி ஆராய்ந்து காண்பாயாக," என்று பணிப்ப; என்க.

(வி - ம்.) அருமறை - அறிதற்கரிய மறைச் செய்தி. தோழி - யாப்பியாயினி. திரு - திருமகள். உணர்வு - கலையுணர்வு. அளத் தும் - அளந்தறிவோம். பயின்று வல்லவையாகிய வித்தை என்க. ஆய்க - ஆராய்க என்க.

(தோழி வினாக்களும் உதயணன் விடைகளும்)

௧௭௨ - ௧௭௬ : வழிபாடாற்றி.........யானென

(பொ - ரை.) அதுகேட்ட யாப்பியாயினி உதயணன்பாற் சென்று அவனை வணங்கி வாழ்த்திப் பெருமானே! நீ கற்றுள்ள வித்தைகளுள் வைத்து மிகவும் சிறந்த வித்தைகள் யாவை? என்று வினவினளாக; அது கேட்ட உதயணன் தன் முகத்திலே நகைத்தற்குரிய மெய்ப்பாடு மெல்லப் படரத் "தோழி! யான் கற்றுவல்ல வித்தைகளுள் வைத்துச் சிறந்த வித்தைகள் இவை எனச் சிறிதும் ஒளியாமல் வேதங்களினது சிறந்த பொருளை ஓதி உணர்ந்த சான்றோர் வினவுவராயின் நன்கு கூறுவேன்" என்று கூறா நிற்ப, என்க.

(வி - ம்.) நல்லவை - நல்லனவாகிய சிறந்த வித்தைகள். இளை யளும் பெண்ணுமாகிய உனக்கு யான் கற்று வல்ல வித்தைகள் கூறிக் காட்டுவன அல்ல என்பது கருத்து. மகளிர் - ஒருமை. ஈண்டு யாப்பியாயினி.

(நகைக்குறிப்பு.) நகைப்பிற்குரிய மெய்ப்பாடு. அவள் பேதைமை கண்டு நகைப்பு மெய்ப்பாடு உண்டாயிற்று என்பது கருத்து. சினவுநர்ச் சாய்த்தவன் - பகைவரைக் கொன்ற உதயணன். விழுப்

பொருள் - சிறந்த பொருள், எனைத்தும் - சிறிதும், கரவேன் - ஒளியேன்.

(இதுவுமது)

கஎஎ - கஅஉ : எமக்கு.........யானென

(பொ - ரை.) அதுகேட்ட யாப்பியாயினி "பெருமானே! எம்போன்ற மகளிர்க்கு அவ்வேத விழுப்பொருள் என்ன பயனைத் தரும்? அதுகிடக்க இசையோடு பொருந்திய யாழ்ப் பயிற்சி உடையையோ? என்றுதான் யான் அறிய விரும்புகின்றேன்" என்று கூற அதுகேட்ட உதயணன் "பெண்ணே! சிறந்த பார்ப்பன மக்கள் துறவோ. விரும்பிய தூய வித்தைகளாகிய அவ் வேத விழுப் பொருளையன்றி யாழ் முதலிய இசைக் கலைகளை விரும்பிப் பயிலுதல் செய்யார். யானும் வேள்வி செய்தற்குரிய அங்க நூல்கள் முழுவதும்கற்று வல்லேன் ஆயினேன் என்று கூறு நிற்ப; என்க.

(வி - ம்.) எமக்கு என்றது இளமகளிராகிய எம்போல்வார்க்கு என்றவாறு. அவை - அவ்வேத விழுப் பொருள். என்செயும் - யாது பயனைச் செய்யும்; பயன் இல்லை என்றபடி. இசையொடு சிவணிய கருவிக்கரணம் - யாழ் குழல் முதலியன வாசிக்கும் செயன்முறை. நீத்தவர் - உலகினைத் துறந்த துறவோர். துப்புரவு - தூயகலை. பரிந்து - விரும்பி. பயிற்றுர - பயிலார். வாளேர் கண்ணி - விளி, வேள்விக்குரிய கருவி; ஆறங்கங்கள்.

(இதுவுமது)

கஅங - கஅஎ : நல்லது.........யானென

(பொ - ரை.) அது கேட்ட யாப்பியாயினி இசைக் கருவிகளுள் வைத்து நல்லதாகிய யாழ்ப் பயிற்சி உனக்கு உண்டாயின் அதனைச் சொல்லவேண்டுமென்பது எங்கள் வேண்டுகோள் என்று கூற, அதுகேட்ட உதயணன் "பார்ப்பன மகளே! எனது தோளுக்குப் பொருந்திய என் வாழ்க்கைத் துணைவிக்கு என்றேனும் துன்பம் வருமாயின் அந் நாளிலே அவள் என்னைத் தொழுது ஆணையிட்டுக் கேட்குங்கால் அவள் துன்பந் தீர்த்தற் பொருட்டு இடமமைந்த மலையினின்றும் வீழும் அருவிபோல இம்மென்று ஒலிக்கும் குடமுழா என்னும் ஒரோவொரு இசைக் கருவி மட்டும் பயின்றிருக்கின்றேன் காண் என்று நகைச்சுவை படக் கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) நல்லது - இசைக் கருவிகளுள் வைத்து நல்லதாகிய யாழ் என்க. சொல்லல் - சொல்லுக. குறை - வேண்டுகோள். தோளுறு துணைவி - மனைவி. சூளுறுகிளவி - ஆணையிட்டுக் கூறும் மொழி. இம்மென - ஒலிக் குறிப்பு. குடமுழவு - ஒருவகைத் தோற் கருவி. பயிற்றினென் - பயின்றேன்.

(இதுவுமது)

கஅஅ - ககூ : அவை.........கொடுக்கலும்

(பொ - ரை.) நல்லோர் அவைக்கு உரிய வித்தைகளில் வல்ல இப் பார்ப்பன மகன் நகைச்சுவையுடைய தொழிலும் உடையன் போலும் என்று நகைத்து அவ்விடத்தினின்றும் சென்றும் விசும்பின்கண் வாழ்கின்ற தேவரும் நம்முடைய மந்திரத்தை மறக்கும்படி நெஞ்சிலே சென்று நன்கு கலக்கும் பசிய தொடியினை யுடைய பதுமாபதி நல்லாள் பயிலாநின்ற பண்ணமைந்த யாழினை எடுத்து வருக என்று பணி மகளிர்க்குக் கூற அவர் கொணர்ந்து கொடுத்தலால் யாப்பியாயினி அந்த யாழினை ஏற்றுப் பதுமாபதியின் கையிற் கொடுக்க, என்க.

(வி - ம்.) உரி - உரிய. அந்தணன் - முன்னிலைப் புறமொழி. சுவைத்தொழின் மகன் - நகைச்சுவை தரும் சொல்லும் செயலுமுடைய மகன். நகைத்தொழிலாடி - நகைத்து. அந்தரம் - வானம். மந்திரம் - வானத்தில் இயங்குதற்குரிய மந்திரம், பைந்தொடி - பதுமாபதி. உதயணன் கைக் கொடுக்கலும்; என்க.

(பதுமாபதியின் செயல்)

ககூ - உ௦௦ : தண்பூங்கொடிபோல்.........விரும்பி

(பொ - ரை.) குளிர்ந்த பூங்கொடி போன்ற பதுமாபதியும் அதனை ஏற்றுக்கொண்டு அதனைத் திரைச் சீலையில் மறைத்துக் கொண்டு போய் மெல்ல மெல்லத் தன் அறைக்குள் சென்று நரம்பினையுடைய யாழினை ஆராய்ந்து பண்ணுறுத்தி யாப்பியாயினியை நோக்கித் "தோழீ! நீ நன்கு பாடுக!" என்று பணித்துத் தன் காதலன் முன்னர் அந்த யாழினது பழைய நலம் தோன்றுமாறு அம்புபோன்ற பார்வையையுடைய அப் பதுமாபதி காட்டுதலை விரும்பி; என்க.

(வி - ம்.) எழினி - திரை. மறைஇ - மறைத்து. பதுமா - பதுமாபதி. கோல் - நரம்பு. தானம் - இசைக்குரிய தானங்கள். நேரிழை - பதுமாபதி. கணை - அம்பு.

(இதுவுமது)

உ௦க - உ௦ரு : ஒள்ளுறை.........காட்ட

(பொ - ரை.) அந்த யாழினது ஒள்ளிய போர்வையை அகற்றி ஒளி உண்டாகும்படி அந்த யாழினைத் துடைத்து வலிய பிணிப்பினையுடைய திவவினை அதன் இடத்திலே நிறுத்தி வைத்தற்குத் தனது மெல்லிய விரல்கள் சோகும்படி பலகாலும் ஏற்றி ஏற்றிப் பார்த்து இயலாதவளாய்ப் பெறற்கரிய

தோழியை நோக்கிக் கொம்புத் தேன் போன்ற இனிமையுடைய மொழியினையுடைய அப்பதுமாபதி குறிப்பாகப் பணித்தலாலே; என்க.

(வி - ம்.) உறை - போர்வை. திவவு - வார்க்கட்டு. வழிவயின் - அஃதிருக்க வேண்டிய இடத்தில். தோழி - யாப்பியாயினி. வாயினாற் சொல்லாமல் சைகையால் உணர்த்தி என்றபடி.

(உதயணனும் யாப்பியாயினியும் உரையாடல்)

உ0௬ - உ0அ : கொண்டவள்.........எமக்கென

(பொ - ரை.) அப் பணி பெற்ற தோழி அந்த யாழினைக் கைக்கொண்டு சென்று உதயணனை அடைந்து "வண்டு முரலும் மலர் மாலையினையுடையோய்! இந்த யாழின்கண் இசைக்கேற்ப இந்தத் திவவினை அதற்குரிய இடத்திலே ஏற்றி இருத்தி வைத்து எமக்குத் தந்தருள்" என்று வேண்டா நிற்ப; என்க.

(வி - ம்.) அவள் - யாப்பியாயினி. இரீஇ - இருத்தி. தந்திக - தருக

(இதுவுமது)

உ0௯ - உக௩ : குலந்தொடும்.........யாமென

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் அழகுடைய அரிவையே என்னுடைய குலத்தோடும் பொருந்தி வருதலில்லாத நரம்பு தருகின்ற இந்த யாழினது வித்தையை நீ ஆராய்தலுண்டெனின் அதன் பொருட்டு என்னை வருத்தாதே கொள்! யானும் இந்த வித்தையை இனி நும்மிடமே கற்கக் கருதியுள்ளேன்" என்றுகூற அதுகேட்ட தோழி" "மற்போரில் ஆற்றல்மிக்க, மார்பையுடைய பெருமானே! இச் செயல் கற்றுச் செய்வதொன்றில்லை. இஃது வலிமையால் செய்யற்பாலதொன்றும். வாழ்க நின் கண்ணி! தனக்குரிய இடத்தே நிற்றலில்லாத இவ் வார்க்கட்டினை இவ்விடத்திலேயே விட்டு வைப்பதல்லது இந்த யாழினை இனி யாங்கள் விரும்புதலும் இலம்," என்று வெறுப்புடன் கூற; என்க.

(வி - ம்.) உதயணன் தன்னைப் பார்ப்பனனாகக் காட்டி யாழ் வித்தை எங்குலத்திற்கு ஒத்ததன்று என்று கூறுகின்றான். கோல் தரும் வித்தை - நரம்பு தருகின்ற இசைக்கலை. அலைத்தல் - வருத்தாதே. யானும் நும்பால் இனி இவ் வித்தையைக் கற்கக் கருதியிருக்கின்றேன் என்றவாறு. கற்றல் வேண்டா, வலியினாவது என்றது, இவ் வார்க்கட்டினை ஏற்றி நிறுத்துதற்கு யாழ் கற்றிருத்தல் வேண்டா; வலியுடையோர் யாரேயாயினும் செய்தல் கூடும் என்றபடி. அவன் மனம் வருந்துகின்றான் என்று உட்கொண்டு 'வாழ்க நின் கண்ணி!'

என்று வாழ்த்தினுள். இதனை ஏற்றித் தாராயாயின் இந்த யாழினை யாங்கள் வாளாபோகட்டு விடுகின்றோம். என்பாள், வேண்டலம் யாம் என்றாள்; இது பிணங்கிக் கூறியபடியாம்.

(இதுவுமது)

௨௧௬ - ௨௨௨ : அன்னதாயின்.........அடக்கி

(பொ - ரை.) அதுகேட்ட உதயணகுமரன், "அப்படியாயின் எம்மால் இயலுமேல் ஏற்றிப் பார்ப்போம். பொன்னணி கலன் அணிந்த நங்கையே அதனை என் கையிற்கொடு" என்று கூறி ஏற்றுக்கொண்டு எளிதாகவே திவவினை ஏற்றித் திட்பமாக அதற்குரிய இடத்திலே நிறுத்தி வைத்த பின்னர் அதன் இசையினை யாப்பியாயினிக்கு அறிவுறுத்தற்பொருட்டு நரம்பினை மெல்ல வருடிப் பார்த்து அது சுவையுண்டாக நின்றமையை உணர்ந்துகொண்டு பின்னர் ஞெரேலென்று அதன் பகை நரம்பினை வருடி அதுதானும் மிகைபட ஒலித்தலால் தன் உள்ளத்தே எழும் இகழ்ச்சிக் குறிப்பினை வெளிப்படுத்தாது அடக்கிக் கொண்டெனன்க.

(வி - ம்.) காண்கம் - காண்பேம். மாதர் - விளி. தீண்டி - வருடி. சுவை - இசை யின்பம். பொருக்கென - விரைவுக் குறிப்பு. பகை நரம்பு - ஆறும் நரம்பும் மூன்றும் நரம்பும் என்னை? "நின்ற நரம்பிற் காறும் மூன்றும் சென்று பெற நிற்பது கூடமாகும்" என்பவாகலின். கூடமெனினும் பகையெனினும் ஒக்கும். (சிலப் - அ: ௩௩ - ௪ அடியார்க்கு நல்லார் உரை விளக்கம்) எள்ளற் குறிப்பு - அதனை இகழ்தற்குரிய குறிப்பு.

(இதுவுமது)

௨௨௩ - ௨௩௧ : கோடும்.........கொள்ளாள்

(பொ - ரை.) அந்த யாழினது கோடும் பத்தலும் பெருமையுடைய போர்வையும் மருங்குலும் பக்கமும் திருத்தமுடைய துறையினையுடைய வார்க்கட்டும் விசித்திரமான தொழிற்றிறமும் ஆகிய இவற்றை இகழாளுய், இந்த யாழ் எதிர்ச்சிக்குப் பொருந்தாத முதிர்ச்சியை யுடையதாய் உள்ளே பொந்துடையதாய் நீரில் நின்று அறுத்தெடுத்த பட்டமரத்தினுல் செய்யப்பட்டதுபோலும். இக் காரணத்தால் இதன் இசைத் திறம் கேள்விக்கு இன்னுதாகியது போலும் என்று தன் நெஞ்சத்தில் நினைந்து பின்னரும் அதனைக் குற்றந்தீர ஆராய்ந்து யாப்பியாயினியின்பால் நீட்ட அதனை ஏற்றுக் கொள்ளாளாய்; என்க.

(வி - ம்.) எதிர்ச்சி - வளர்ச்சி. பொத்து - பொந்து. புனல் - நீர். செத்ததாரு - பட்டமரம்.

(இதுவுமது)

உருக - உருஅ : மீட்டவள்........உணர்ந்து

(பொ - ரை.) மீண்டும் யாப்பியாயினி அவனை வணங்கியவளாய்த் தான் யாழினைக் கொடுக்கும்பொழுது அவன் அதனை ஏற்றுக்கொண்ட முறைமையினையும் அதனைப் பார்த்தமையால் அவன உள்ளத்தில் தோன்றிய கருத்தினையும் திவவினை ஏற்றி அது நிலை பெற்றவுடன் அந்த யாழின் நரம்பினை அவன் வருடிய முறைமையினையும் தனக்கு யாழ் அறியாதானபோலக் காட்டி மெல்லப் பொருந்திய அதன் நரம்பினை இசையெழுப்பிச் செவியால் ஓர்ந்த முறைமையினையும் செறிந்த பகை நரம்பினை வருடி இசையினைச் சிதைத்த தன்மையையும் அழகிய நோக்கினையுடைய அத் தோழி தன் உள்ளத்தே நன்கு ஊகித்து அறிந்து கொண்டு அவ்வுதயணனுடைய உள்ளத்திலுள்ள அந்த யாழினைப் பற்றிய கருத்துக்களையும் அவன் முகத்திற்றோன்றிய மெய்ப்பாட்டினாலேயே நன்கு உணர்ந்து கொண்டு; என்க.

(வி - ம்.) அவள் - யாப்பியாயினி. பற்றியவுடன் - திவவு நிலை பெற்ற உடன். உறு நரம்பு - பொருந்திய நரம்பு. எறீஇ - எறிந்து. பெற்றி - தன்மை. மாழை - அழகு. அவன் - உதயணன். அகத்ததையெல்லாம் முகத்தினி துணர்ந்து என்னும் இதனொடு, "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங், கடுத்தது காட்டு முகம்" "முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும், காயினுங் தான் முந்துறும்" எனவரும் குறள்களையும் நினைக.

(இதுவுமது)

உருக - உசரு : புறத்தோன்........காண்கென

(பொ - ரை.) உதயணன் யாழ் வித்தைக்கு அயலான் அல்லன் என்னும் உண்மையை நன்கு தெளிந்துகொண்டு தாழ்ந்த கூந்தலையுடைய தன் தோழியாகிய பதுமாபதியை எய்தி, "நங்காய்! நம்பெருமான் யாழறிவித்தகன் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பெருமாட்டி அறிந்தருளுக" என்று, அறிவுறுத்தவும் அப் பதுமாபதி "அன்புடையோய் நீ மீண்டும் சென்று அப் பெருமகன் அத்தகையவன் ஆதலைப் பின்னும் நன்கு ஆராய்ந்து கண்டு வருக!" என்று ஏவுதலாலே என்க.

(வி - ம்.) புறத்தோன் - யாழ் வித்தைக்கு அயலோன். புறத்தோன் அல்லன் என்றது நன்கு கற்றவன் என்பதனை வற்புறுத்தினின்றது. தாழிருங் கூந்தற் றோழி என்றது பதுமாபதியை. யாழ் வித்தையில் மிகவும் சிறந்தவன் என்பாள் யாழறிவித்தகன் என்றாள். அன்னன் - அத் தன்மையுடையான். நன்னுதல் - விளி. அமர்தர - ஆரஅமர விருந்து.

(இதுவுமது)

உசச - உசஎ : பின்னும்...........குறைகொள

(பொ - ரை.) அங்ஙனமே யாப்பியாயினி மீண்டும் உதயணன் பாற் சென்று "பெருந்தகாய்! எம்பொருட்டு இந்த யாழினைப் பண்ணுறுத்தி இதன்கண் தாளமமைந்த ஒரு பாட்டினைப் பாடிக் காட்டியருளுதல் வேண்டும்" என்று அசைகின்ற மூங்கில்போன்ற தோளையுடைய அப்பார்ப்பன மகள் மீண்டும் வேண்டிக்கொள்ள நிற்றலால்; என்க.

(வி - ம்.) பெருந்தகை - விளி. இது - இந்த யாழின்கண். பண்ணுமை நிறீஇ - பண்ணின் தன்மையை நிறுத்தி. பாணிக் கீதம் - தாளமமைந்த இசைப் பாட்டு. ஆடு அமை - அசைகின்ற மூங்கில்.

(இதுவுமது)

உசஎ - உருக : மறத்தகை...........நானென

(பொ - ரை.) அவ் வேண்டுகோளைக் கேட்ட உதயண மன்னன் நன்று நன்று என்பாலமைந்த இசைத் திறங்களையெல் லாம் இவள் நன்றாக ஆராய்ந்து அறிந்து கொண்டனள் ஆதலால் இவளறிவு சாலவும் பெரிதேயாம் என்று சிறிது பொழுது மருண்டிருந்து பின்னரும் அத் தோழியை நோக்கி "நல்லோய் இங்ஙனம் பாட யான் வல்லேன் அல்லேன்" என்று மறுத்துக் கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) மறத்தகை மார்பன் - மறப் பண்புடைய மார்பினை யுடைய உதயணன். தன்கண்மதி - தன்னுடைய அறிவு. தெருமந்து - மயங்கி, வியப்பினால் மயங்கி என்றவாறு. அறிவு இவட்குப் பெரிது என்க.

(இதுவுமது)

உருஉ - உருஎ : ஒரு...........அருளென

(பொ - ரை.) அதுகேட்ட தோழி, "ஒரு மனமுடையோர் போலக் கலந்த கேளிர்க்குத் தெளித்தற்கியலாத அருஞ் செயல் இல்லை என்று சான்றோர் உரைத்த பெருமொழி மெய்ம் மொழியன்றோ? பெருமான்பால் பிரிதலில்லாத அன்போடு இன்ப மயக்கமுமெய்திய அடிச்சியரேமாகிய எங்களிடத்து அவ் வன்பே பற்றுக்கோடாக யாதொன்றையும் மறாது அருளல் வேண்டும்" எனப் பின்னரும் இரவாநிற்ப; என்க.

(வி - ம்.) ஒரு மனத்தன்ன உற்றார் - அன்பினால் ஒன்றுபட்ட கேளிர். அருவினை - அரிய செயல். பெரு மொழி - பெருமையுடைய மொழி. இன்ப மயக்கம் - இன்பம் நுகர்தலிலுண்டாகும் மனமயக்கம். இது பதுமாபதியைக் குறித்துக் கூறியவாறு.

(மாலைக் காலம்)

உ௫ள - உ௯௪ : உருஅன்போல..........ஆட்

(பொ - ரை.) அதுகேட்ட உதயணகுமரன் அவ் வேண்டுகோட்கு இணங்காதான் போன்று சிறிதுபொழுது வாளாவிருந்தானாக; அப்பொழுது அசையாநின்ற ஒளிக்கற்றையையுடைய ஞாயிற்றுமண்டிலம் அத்தகிரியை அடையத் தனிமைத் துன்பத்தை முன்னிட்டு வருகின்ற அந்தி மாலைப்பொழுது வந்துற்றதாக; அம் மாலைப்பொழுதிலே மின் முதலிய தொகுதிகளையுடைய முகிலாலே நீரூட்டி ஊக்கத்தோடு வளர்க்கப்பட்ட தனக்குரிய கார்காலத்து அந்தி மாலையிலே மலர்தலைத் தவிராத பசிய முல்லைக் கொடியினது வெள்ளிய மலர் மணத்தை அளாவிக் கொண்டு குளிர்ந்த கண்ணோட்டமுடைய வாடைக் காற்று உலகின்கண் பிரிதலரிய சிறந்த காதலர் கூட்டுறவிற்குத் தான் ஒரு சான்றுவதே போன்று மாடந்தோறுமமைந்த நுண்ணிய தொழிற்பாடமைந்த சாளரந்தோறும் நுழைந்து இயங்காநிற்ப வென்க.

(வி - ம்.) கதிர்மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம். அத்தம் - அத்தகிரி. புலம்பு - தனிமைத் துயர். கருவி - மின் முதலிய தொகுதி. வானம் - முகில். பருவம் - கார்ப்பருவம். கரி - சான்று. பிரிந்த காதலரை வற்புறுத்திக் கூட்டுதலாலே தண்கண் வாடை யென்றார்.

(உதயணன் பாடிக்கொண்டு யாழ் வாசித்தல்)

உ௯௫ - உ௯அ : ஆரா...........நயக்கென

(பொ - ரை.) யாழின்பால் நுகர்ந்து நுகர்ந்து அமையாத காதலுடைமையாலே அந்த யாழினை ஆராய்ந்து தழீஇக் கொண்டு குரல் முதலாகவுள்ள ஏழிசையினையும் எழீஇத் தனது எஃகுச் செவியாலாராய்ந்து தொடுத்த உதயணன் யாப்பியாயினியை நோக்கி "அன்புடையீர்! நுமக்கு இசையின்பாலுள்ள அவாவே காரணமாக என்னைப் பாடுமாறு வேண்டுகின்றீர்! யானும் பாடுவல் கேட்கக் கடவீர்! என்று கூறிக் கந்தருவ மார்க்கத்தாலே யாழினை வருடிக்கொண்டு மிடற்றுப் பேரிசை கனியும்படி பாடத் தொடங்கியவன் என்க.

(வி - ம்.) யாழின்பால் தனக்குள்ள ஆராக் காதலாலே என்க. குரல் - குரல் முதலிய ஏழிசையும் என்க. குருசில் - உதயணன். இசையோர் தேயவியக்கம் - கந்தருவ மார்க்கம். அஃதாவது இடைமடக்கிவரும் ஒருவகை இசைப்பாட்டின் முறை. பாட்டு - மிடற்றுப் பாடல். நசை - அவா. நயக்க எனக் கண்ணழித்து நீயிர் கேண்மின் என்க. இனி நயக்கு எனக் கண்ணழித்து நும் வேண்டுகோளை யானும் நயப்பேன் என்று பொருள் கோடலுமாம்.

(இதுவுமது)

௨௬௬ - ௨௭௭ : குன்று............இசைத்தலின்

(பொ - ரை.) குறையாத அழகினையுடைய தனது தெய்வ யாழாகிய கோடபதி பண்டு ஒருபாலே நிலத்திலே வீழ்ந்தபொழுது இனி அதனைக் கைக்கொள்ளல் அரிதெனக் கருதி அதனைக் கை விட்டுப் பிரிந்த பின்னர் இசை நலத்தாற் றகுதிபெற்ற எந்தப் பேரியாழினது நரம்பையும் தொட்டறியாதனவும் நல்லிலக்கண முடையனவுமாகிய தனது சிவந்த விரல்களாலே அற்றை நாள் அந்த யாழினை வருடி ஆரோசைப்படுத்தும் அமரோசைப் படுத்தும் தொடக்கத்தே மந்தமாகவும் இடையிலே சமமாகவும் இறுதியிலே முடுக்காகவும் மூன்றுவகை நடையும் கலந்த இசைக் கரணத்தானும் குறைவின்றித் தனது மிடற்றுப் பாடலுக்கும் அந்த நரம்பிசைக்கும் வேற்றுமை சிறிதுமின்றிப் பறவையும் அதன் நிழலும் போல இயைந்தியங்கிப் பிறர் பழித்தலில்லாத செவிச் சுவை யமிழ்தமாகிய பண்ணினை இசைத்தலானே, என்க.

(வி - ம்.) கோடபதி - உதயணனுக்கு ஆசிரியர் வழங்கிய ஒரு தெய்வப் பேரியாழ். அன்று - அது யானையினின்றும் வீழ்ந்து மறைந்த அந்த நாள் என்க. ஆண்டு - அப்பாலை நிலத்தே. வேறு பேரியாழ் நரம்பு தொட்டறியாத விரல் என்க. ஏற்றுதல் - ஆரோசை யாக இசைத்தல். இழித்தல் - அமரோசையாகப் பாடுதல். இவற்றை ஆரோகணம் அவரோகணம் என்றும் வழங்குப. தாழ்வு நெகிழ்ச்சி முடுக்கு என்பன, வலிவு மெலிவு சமம் என்றும் கூறுப. மந்தம் - மத்திமம் தாரம் எனினுமாம். கரணம் - இசைக் கரணம். மிடறு - மிடற்றோசை. நரம்பு - நரம்போசை. பறவை நிழலில் - பருந்தும் அதன் நிழலும்போல, "பருந்து நிழலும்போற் பாட்டுமெழாலும் திருந்து தார்ச் சீவகற்கே சேர்ந்தன" (சீவக - ௭௩௦) என்பதுங் காண்க. பழித்தீயா - பழியாத, செவிச் சுவை யமிர்தம் - என்றது இசையை.

(உதயணனுடைய இசையின் சிறப்பு)

௨௭௭ - ௨௮௪ : மயங்கி............மறப்ப

(பொ - ரை.) அவ்விசை கேட்டு மாடங்களின் உச்சியிலிருந்த இனிதாகக் கூவும் புறாக்களும் கூத்தாடுதல் பொருந்திய பயிரும் அன்னமும் கிளியும் இவைபோல்வனவாகிய பிற பறவைகளும், இவ்விசையின்பத்தில் மயங்கிப் பறவாவாய் அசையும் தத்தம் சிறகுகளை ஒடுக்கிக்கொண்டு அம் மாடங்களிலேயே மெய்ம் மறந்து சோராநிற்ப. இனி, கொய்தற்குரிய மலரையுடைய பொழிலின்கண் உள்ள குறிஞ்சி முதலிய பல்வேறு மரங்களும் இவ்விசை கேட்டுத் தாழ்ந்தனவாய் வளையா நிற்பவும் மையூட்டப் பெற்ற மலர்போன்ற கண்ணையுடைய பதுமாபதி இத்தகைய இசையைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து மெய்ம் மறந்து; என்க.

(வி - ம்.) மழலை - இனிமை; ஆடமை. பயிர் - கூத்தாடுதல் பொருந்திய பயிர் என்னும் ஒருவகைப் பறவை. குரங்க - வளையம். கண்ணி - பதுமாபதி.

(பதுமாபதி வியத்தல் முதலியன)

உஅரு - உகூஉ : ஏனோர்............மார்பனென்று

(பொ - ரை.) இந் நிகழ்ச்சியினை மற்றையோர்க்குக் கூறுவேமாயின் மறை வெளிப்பட்டுத் துயரமுண்டாகும் என்று மான் போலும் பார்வையையுடைய அப் பதுமாபதி அவ்வின்பத்தைத் தன் நெஞ்சில் அடக்கிக் கொண்டவளாய் அம்மம்ம என்னே! இவன் கலைத் திறம் இருந்தவாறு! காண்போர் கண்ணைக் கவர் கின்ற அழகுடைய காமவேளே யாழ் வித்தையில் தலைசிறந்தவன் என்பர். அக் காமவேளுக்குப் பின்னர்த் தும்புரு சிறந்தோன் என்பர். இத் தும்புரு முனிவனுக்குப் பின்னர் இவ்வியாழ் வித்தையை முறையாகப் பயின்றவனும் இசை நலம் உணர்ந்தவனும் கேள்வி யறிவு பொருந்தியவனும் நறிய மலர் மாலை யணிந்தவனும் வத்தவ நாட்டு மன்னவனும் ஆகிய உதயணன் இசையிற் பெரிதும் வல்லவன் ஆவன் என்று கூறுவார்கள். அவ்வுதயணனினும் பெரிதும் வல்லவனாகக் காணப்படுகின்றான் என் காதலனாகிய அழகுமிக்க மார்பையுடைய இப் பார்ப்பன மகன் என்று நினையுந்தோறும், என்க.

(வி - ம்.) ஏனோர் - ஏனையோர்; மற்றவர். இம் மகிழ்ச்சிச் செய்தியை மற்றவர்க்குக் கூறி மகிழ்ந்தால் நம்முடைய மறை வெளிப்படும் என்பாள் ஏதம் தரும் என்றாள். நோக்கி - பதுமாபதி. யாழ் வித்தையில் ஒப்பற்ற வன்மையுடையவன் காமன். அவனை யடுத்துத் தும்புரு முனிவன். அவனை யடுத்து உதயணன் வல்லவன். இம்மூவரினும் உயர்ந்தவன் என் காதலன் என்று மகிழ்ந்தபடியாம். தகை - அழகு.

(இதுவுமது)

உகூரு - உகூகூ : உள்ளம்...........மறைந்தென்

(பொ - ரை.) தன் நெஞ்சங் கொள்ளாத பேருவகை உடையளாய் ஒளி பொருந்திய அணிகலன்களையுடைய தோழியாகிய யாப்பியாயினியோடு சேர்ந்து உதயண மன்னனை நன்கு பேணி மிகப் பெரிய காமவின்பத்தைக் களவொழுக்கத்தின் வாயிலாய் நுகர்ந்து நாட்களைக் கழித்து அப் பதுமாபதி நங்கை தன் தாய் முதலியோர்க்குந் தெரியாதபடி ஒழுகுவாளாயினள், என்க.

(வி - ம்.) தோழி - யாப்பியாயினி. கழிப்பி - நாள்களைக் கழித்து என்க, உரிமை - கோப்பெருந்தேவி முதலியோர்.

(கச. நலஞராய்ச்சி முற்றிற்று.)

௧௫. யாழ்நலந் தெரிந்தது

இதன்கண்: *பதுமாபதியும் அவள் தோழி யாப்பியாயினியும் உதயணனுக்குள்ள யாழ்ப் பயிற்சியின் சிறப்பினை அறிந்து கொண்ட செய்தி கூறப்படும்.*

மறையோம் பொழுக்கின் மதலை கேண்மதி
நிறையோம் பொழுக்கி னின்னல முணரேம்
ஒருபே ருலகம் படைத்த பெரியோன்
உருவுகரந் தொழுக லுணரா ராகக்
கொன்றையம் பசுங்காய் பெருக்கியும் பயற்றின்
நன்றுவிளை நெற்றினைச் சிறுக்கியுங் குன்று
இன்றீங் கரும்பினைச் சுருக்கியும் விண்டலைத்
துன்னரும் விசும்புற நீட்டிய நெறியும்
இன்னவை பிறவு மிசைவில வெல்லாம்
படைத்தோன் படைத்த குற்ற மிவையென
எடுத்தோத் துரையி னியம்பி யாஅங்
கியானை வணக்கு மைங்கதி யருவினை
வீணை வித்தகத் தவனினு மிக்கதன்
மாணல முணரே மடவிய னிவனென
நாணக் காட்டு நனித்தொழில் புனைந்தேம்
மாணக் காட்டுநின் மாணுக் கியரேம்
ஆயினே மினியென வசதி யாடிய
மைதவழ் கண்ணி கைதவந் திருப்பாச்
செவ்வழி நிறீஇச் செவ்விதிற் றம்மெனச்
செதுவன் மரத்திற் சேக்கை யாதலின்
உதவா திதுவென வுதயணன் மறுப்ப
யாணர்க் கூட்டத் தியவனக் கைவினை
மாணப் புணர்ந்ததோர் மகர வீணை
தரிசகன் றங்கைக் குரித்தென வருளிய
கோல நல்லியாழ் கொணர்ந்தனள் கொடுப்பத்
தினைப்பக வனைத்தும் பழிப்பதொன் றின்றி
வனப்புடைத் தம்மவிவ் வள்ளுயிர்ப் பேரியாழ்
தனக்கிணை யில்லா வனப்பின தாகியு

நிணக்கோழுங் கோல்க ளுணக்குத லின்மையின்
உறுபுரிக் கோண்டன பிறநரம்பு கோணர்கென
மதுக்கமழ் கோதை விதுப்போடு விரும்பிப்
புதுக்கோல் கோணர்ந்து போருக்கென நீட்ட
நோக்கிக் கோண்டே பூக்கமழ் தாரோன்
வகையில விவையெனத் தகைவிரல் கூப்பி
அவற்றது குற்ற மறியக் கூறினை
இவற்றது குற்றமு மெம்மனந் தெளியக்
காட்டுதல் குறையென மீட்டவ ளுரைப்ப
நன்னுதன் மடவோய் நன்றல மற்றிவை
முன்னைய போலா மூத்து......தைந்த
வாவி சா................ன வாயினும்
பண்ணறச் சுகிர்ந்து பன்னுத லின்மையும்
புகரற வுணங்கிப் புலவற லின்மையும்
குறும்புரிக் கோள்ளாது நெடும்புரித் தாதலும்
நிலமிசை விடுதலிற் றலைமயிர் தழீஇ
மணலகம் போதிந்து துகளுடைத் தாதலும்
போன்னே காணெனப் புரிமுறை நெகிழ்த்துத்
துன்னார்க் கடந்தோன் றேன்றக் காட்ட
யாழும் பாட்டும் யாவரு மறிவர்
வீழா நண்பி னிவன்போல் விரித்து
நுனித்துரை மாந்த ரில்லென நுவன்று
மன்றப் புகன்று மாமழை நோக்கி
மறித்தும் போகி நெடுத்துநீர்த் தோழுகிப்
போன்றிரித் தன்ன நிறத்தன சென்றினி
தோலித்த லோவா நலத்தகு நன்னரம்
பாவன கோடுப்ப மேவனன் விரும்பிக்
கண்டே யுவந்து கோண்டதற் கியைய
ஓர்த்தன னமைத்துப் போர்த்தனன் கோடுப்ப
வணங்குபு கோண்டு மணங்கம ழோதி
மாதர் கைவயிற் கோடுப்பக் காதல்
உள்ளங் குளிர்ப்ப வூழி னியக்கக்
கூடிய குருசில் பாடலின் மகிழ்ந்து
கோடுயர் மாடத்துத் தோடுயர் தீரக்

குறிவயிற் புணர்ந்து நெறிவயிற் றிரியார்
வாயினுஞ் செவியினுங் கண்ணினு மூக்கினும்
மேதகு மெய்யினு மோத லின்றி
உண்டுங் கேட்டுங் கண்டு நாறியும்
உற்று மற்றிவை யற்ற மின்றி
ஐம்புல வாயிலுந் தம்புலம் பெருக
வைக றேறு மெய்வகை தெரிவார்
செய்வளைத் தோளியைச் சேர்ந்துநல னுகர்வதோர்
தெய்வங் கொல்லெனத் தெளித லாற்றார்
உருவினு முணர்வினு மொப்போ ரில்லென
வரிவளைத் தோளியொடு வத்தவர் பெருமகன்
ஒழுகினன் மாதோ வொருமதி யளவென்.

உரை

௧௫. யாழ்நலந் தெரிந்தது

அஃதாவது, பதுமாபதி உதயணனுடைய யாழ்ப் பயிற்சியின் சிறப்பினை அறிந்துகொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(யாப்பியாயினியின் செயல்)

௧ - ௪ : மறை.........ஆக

(பொ - ரை.) இனி உதயணனுடைய இன்னிசைச் சிறப் புணர்ந்த பின்னர் ஒருநாள் உதயணனை நோக்கி மறை பயின்று அந் நெறியிலே ஒழுகும் பார்ப்பனச் சான்றோனே கேட்டருள்க. ஒப்பற்ற இப்பேருலகத்தைப் படைத்த கடவுளாகிய நான்முகன் தன்னை உலகத்தார் உணராதபடி தனது உருவத்தை மறைத்துக்கொண்டு ஒழுகுதல் போன்று நீ தானும் நின்னை எம்மனோர் உணர்ந்து கொள்ளாதபடி பெரிதும் அடக்கமுடைமையாலே ஒழுகுதலாலே உன்னுடைய சிறப்பினை யாங்கள் உணரேம் ஆயினேம் என்றாள்; என்க.

(வி - ம்.) மறை-வேதம். மறையோம் பொழுக்கின் மதலை-விளி, பார்ப்பனப் பிள்ளாய் என விளித்தவாறு. கேண்மதியென்புழி, மதி; முன்னிலையசை. நிறை - மனத்தை நிறுத்தும் ஆற்றல். நிறையோம் பொழுக்கம்-நெஞ்சம் பொறிகளின் வழியாய்ப் புலன்களிற் செல்லாமல் அடக்கி ஒழுகும் ஒழுக்கம். உலகம் படைத்த பெரியோன்; நான்முகன்.

(இதுவுமது)

ரு - கரு : கொன்றை.........புணர்ந்தேம்

(பொ - ரை.) பின்னரும் அத்தோழி உதயணனை நோக்கிக் கூறுபவள்" பெருமானே! உலகம் படைத்த பெரியோன் பயனற்ற அழகிய கொன்றையினது பசிய காயைப் பெரியதாகவும் பயன்மிக்க பயற்றினது பெரிதும் விளைதலையுடைய நெற்றினைச் சிறியதாகவும் குறையாத இனிமை மிக்க கரும்பினை அளவிற் சுருக்கியும், வறிய மூங்கிலைக் கிட்டுதற்கரிய வானத்தை அளாவும்படி நீட்டிய முறைமையும் இவைபோலத் தம் பிறப்பிற்கும் பயனுக்கும் பொருத்தமற்ற படைப்புக்களாய் அமைந்த பொருள்களெல்லாம் நம்மனோர்க்கு இவையெல்லாம் அப் படைப்புக் கடவுள் செய்த குற்றமேயாகுமென்று வாய்விட்டுக் கூறுவனபோல நமக்குக் குறிப்பால் உணர்த்துகின்றன அல்லவோ? அங்ஙனமே நளகிரி என்னும் யானையை அடக்கி ஐந்துவகைப் பட்ட கதியினையுடைய அருஞ் செயலையுடைய யாழினை இயக்குதலிலே வித்தகமுடைய உதயண மன்னனையும் காட்டில் மிகச் சிறந்த உன்னுடைய மாண்புமிக்க கலை நலங்களையெல்லாம் யாங்கள் உணர்ந்துகொள்ளமாட்டாது. யாதும் அறியா மடவோனே அல்லனோ என்று நின்னை அறிந்து கொள்ளற் பொருட்டு யாங்களே நாணுதற்குரிய சில சூழ்ச்சிகளை நின்மாட்டுச் செய்தேம். இக் குற்றம் நின்னை உதயணனைப் போன்று ஓர் அரசன் மகனைப் படையாமல் அடக்கமுடைய அந்தணனைப் படைத்த அக் கடவுள் குற்றமேயாகும். எம்மை மன்னித்திடுக என்று கூறி, என்க.

(வி - ம்.) நெற்று - முதிர்ந்த காய். சுருக்கி - நீளாமற் செய்து. விண்டல் - மூங்கில். எடுத்தோத்துரை - எடுத்து ஓதும் மொழி. ஐங்கதி வீணை - சச்சபுடம் முதலிய ஐவகைத் தாளகதியையுடைய யாழ். உன்னுடைய கலைத்திறத்திற்கேற்ப உதயணன் போன்று உன்னை அரசனாகப் படைக்காமல் அடக்கமுடைய அந்தணனாய்ப் படைத்தமையால் யாங்கள் உன்னை உணரமாட்டேம் ஆயினேம். எனவே இக் குற்றம் எம்முடையதன்று. படைப்புக் கடவுளின் குற்றம் ஆகும் என்றவாறு. வித்தகத்தவன் - உதயணன், மடவியன் - மடவோன். காட்டும் நனித் தொழில் - நீ உன்னை எங்களுக்குக் காட்டுதற்குரிய மிகையான சூழ்ச்சி.

(இதுவுமது)

கசு - உரு : மாண.........கொடுப்ப

(பொ - ரை.) "ஐய! பேதையரேமாகிய யாங்கள் உன்னுடைய மாணாக்கியரேம் ஆயினேம் என்று நகைமொழி கூறிய

யாப்பியாயினி உதயணனை நோக்கிப் பெருமானே! மீண்டும் எம்பால் நின்னுடைய வஞ்சனையைச் செய்யாமல் இந்த யாழினைச் செவ்விய வழியிற் பண்ணுறுத்திச் செவ்விதாக எமக்குத் தந்தருளுக என்று வேண்டாநிற்ப; அதுகேட்ட உதயணன், "தோழி! இந்த யாழ் பட்டமரங்களினது சேர்க்கை ஆதலின் இது பண்ணுறுத்தி இயக்குதற்கு உதவாது" என்று கூறி மறுப்ப, அதுகேட்ட யாப்பியாயினி இது கிடக்க என்று அழகிய நன்மரச் சேர்க்கையாலாகியதும் யவன நாட்டுத் தச்சர் தங்கள் தொழில் திறம்மாட்சிமையுறும் பொருட்டு இயற்றியதும் ஆகிய மகரவீணையாகிய தருசக மன்னன் தன் தங்கையாகிய பதுமாபதிக்குச் சிறப்பாக வழங்கிய அழகிய நல்லதொரு யாழை எடுத்துக்கொணர்ந்து உதயணன்பாற் கொடாநிற்ப; என்க.

(வி - ம்.) அசதியாடுதல்-பரிகசித்தல். கண்ணி - யாப்பியாயினி. கைதவம் - வஞ்சனை. முன்னர் யான் யாழ் வித்தை அறிகிலான் என்றனன் ஆகலின் மீண்டும் உன்னுடைய கைதவத்தைத் திருப்பாதே கொள் என்றாள். செவ்வழி - நல்வழி. தம் - தருக. செதுவன்மரம்-பட்டமரம். மேசக்கை - சேர்க்கை. யாணர் - அழகு. தரிசகன்-தருசகன், மகரவீணையாகிய யாழ் என்க,

(உதயணன் யாழ் நரம்பின் குற்றங்களைத் தெரிவித்தல்.)

௨௬ - ௩௦ : தினை...........கொணர்கென

(பொ - ரை.) அந்த யாழினை ஏற்றுக்கொண்ட உதயணகுமரன் அதைக் கூர்ந்து நோக்கித் தோழி கேள்; இந்த யாழ் ஒரு தினையிற் பாதியளவு குற்றம் தானும் இலதாகும். யாழ்க்குரிய அழகனைத்தும் உடையது. பெரிய ஓசையினையுடைய இப்பேரியாழ் தனக்கு இணையில்லாததாயிருந்தும் இதனுடைய நிணமமைந்த கொழுவிய நரம்புகள் நன்கு உலர்த்தப்படாமையின் மிக்க முறுக்கினைக் கொண்டுள்ளன ஆதலின் வேறு நரம்பு கொணர்வாயாக என்று கூற; என்க.

(வி - ம்.) தினைப்பகவு - தினையினது பிளவு; சிறுமைக்கு ஒன்று கூறிய படியாம். பழிப்பது - குற்றம். வனப்பு - அழகு. அம்ம-கேட்பித்தற்கண் வந்தது. வள் உயிர் - பெரிய ஓசை. கோல்கள் - நரம்புகள். உணக்குதல் - உலர்த்துதல். உலறுபுரி - மிகையாய முறுக்கு.

(இதுவுமது)

௩௧ - ௩௭ : மது...........உரைப்ப

(பொ - ரை.) தேன் மணங் கமழும் மலர் மாலை யணிந்த யாப்பியாயினி அதுகேட்டுவிரைந்து விருப்பத்தோடு வேறு புதிய நரம்பினைக் கொணர்ந்து விரைந்து கொடுப்பஉதயணன் அதனைத் தான் கைக் கொள்ளாமலேயே அந்நரம்பினை நோக்கிக்

கொண்டே ஈங்காய் இவைகளும் நல்லன அல்ல என்று கூறுகிற்ப. அதுகேட்ட யாப்பியாயினி தன் அழகிய கைகளைக் கூப்பித் தொழுது, "சான்றோய்! அந்த நரம்புகளின் குற்றம் இவை யென யாங்கள் தெரிந்து கொள்ளும்படி கூறினாய். அங்ஙனமே இந் நரம்புகளின் குற்றங்களையும எங்கள் மனம் தெளிந்துகொள்ளும்படி விளக்கிக் காட்டுதல் வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும்" என்று மீண்டும் அவள் வேண்டாகிற்ப என்க.

(வி - ம்.) புதுக்கோல் - புதிய நரம்பு. பொருக்கென-விரைவுக் குறிப்பு. வகை - நல்ல வகை. தகை - அழகு. குறை - வேண்டுகோள். அவள் : யாப்பியாயினி.

(இதுவுமது)

கூஅ - சஎ : நன்னுதல்............காட்ட

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் நல்ல நுதலையுடைய பேதையே இவை அந் நரம்புகளைப் போலாவாயினும் முதிர்ந்து.... ...தைந்த வாவிசா........னவாயினும் பண்படுத்துதல் முடியும்படி நன்கு சீவி ஆராயப் படாமையானும் குற்றந் தீரும்படி நன்கு காய்ந்து ஊன் அற்றுப் போகாமையானும் குறிய முறுக்குடையனவாகாமல் நெடிய முறுக்குடையனவாதலும நிலத்தின் மேற் கிடத்தினமையால் தலைமயிரைத் தழுவிக்கொண்டு தம்முள்ளே மணலையும் துகளையும் உடையனவாதலாலும் இவையும் நல்லன அல்ல என்று கூறித், 'திருமகள் போல்வாய்! உதோ காண்," என்று கூறிப பகைவரை வென்று உயர்ந்த உதயணன் அப் புதிய நரம்பினைக கையில் வாங்கி அதன் முறுக்கினை உடைத்து அம முறுக்கின் அகத்திலிருந்த தலைமயிரையும் தூசியையும, மணலையும் அத்தோழி காணும்படி காட்டா கிற்ப; என்க.

(வி - ம்.) இப் பகுதியில் சில சொற்கள் இறந்துபட்டன. சுகிர்ந்து - சீவி. பன்னுதல் - ஆராய்தல். புகர் - குற்றம். புலவு - ஊன். விடுதலின் - கிடத்துதலாலே. பொன்னே : விளி. துன்னார் - பகைவர்.

(இதுவுமது)

சஅ - ருரு : யாழும்............கொடுப்ப

(பொ - ரை) அதுகண்ட யாப்பியாயினி இவ்வுலகின் யாழின் இயலபும் பாட்டினது இயல்பும் அறிவோர் பலராவர். கெடாத நண்பினையுடைய இப் பெருமகன் போல அவற்றின் இயல்புகளை நுணுக்கமாக எடுத்துக் கூறும் மாந்தர்கள் இலர் என்று தன்னுட்கருதி முனனினும் மிகுதியாக அவன்பால்

விருப்ப முடையளாய் அழகிய நோக்குடைய அந் நங்கை மீண்டுஞ் சென்று நெறிப்புடையனவாய் நீர்மையோடு நீண்டு பொற்கம்பி யினை முறுக்கினாற் போன்ற நிறத்தினை உடையனவாய் ஒலி நீண்டு இனிதாக ஒலித்தல் ஒழியாத நன்மை மிக்க நுண்ணிய நரம்புகள் பல அந்த நல்லியாழுக்கு ஏற்பனவாகக் கொணர்ந்து கொடுப்ப, என்க.

(வி - ம்.) யாவரும் என்றது பலர் என்பதுபட நின்றது. நுனித் துறை மாந்தர் - கூரியதாக எடுத்துரைக்கும் மாந்தர். நுவன்று - கருதி, மன்ற - தேற்றமாக. புகன்று - விரும்பி. மறித்தும் - மீண்டும். நெறித்து - நெறிப்புடையனவாய். நீர்த்து - நீர்மையுடையனவாய். ஒழுகி - நீண்டு. ஓவா - ஒழியாத. ஆவன - அந்த யாழினுக்குப் பொருந்துவன.

(இதுவுமது)

ருரு - கூக : மேவனன்.........மகிழ்ந்து

(பொ - ரை.) அந் நரம்பினைக் காண்டலும் உதயணன் பெரிதும் விரும்பி மகிழ்ந்து கைக்கொண்டு அந்த யாழிற்குப் பொருந்துமாறு அவற்றைக் கட்டி இசை எழுப்பிச் செவியால் கூர்ந்து அறிந்தவனாய் மீண்டும் அத் தோழியின்பால் நீட்ட அவள் தானும் வணங்கி ஏற்றுக்கொண்டு சென்று பதுமாபதி கையின்கட் கொடுப்ப அந் நங்கை தன் காதலால் உள்ளங் குளிர்ந்து முறைப்படி அந்த யாழினை இயக்காநிற்ப அதற்கேற்ப ஆண்டுச் சென்ற உதயணன் பாடுதலாலே இருவரும் மகிழ்ந்து என்க.

(வி - ம்.) மேவனன் - விரும்பியவனாய். கண்ட துணையானே உவந்து என்க. அதற்கு - அந்த யாழினுக்கு. வணங்குபு - வணங்கி. ஓதி - யாப்பியாயினி. மாதர் - பதுமாபதி காதலை உடைய உள்ளம் என்க. ஊழ் - முறைமை. குருசில் - உதயணன். இருவரும் மகிழ்ந்து என்க.

(உதயணன் பதுமாபதியாகிய இருவர் நிலை)

கூஉ - கூஅ : நோடு.........பெருக

(பொ - ரை.) அக் காதற்றுணைவ ரிருவரும் கொடுமுடி உயர்ந்த அக் கன்னி மாடத்தின்கண் தத்தம் தோண் மெலிவு தீரும்படி காமக் குறிப்புத் தோன்றுமிடத்திலெல்லாம் புணர்ச்சி எய்தி அன்பு நெறியிற் பிறழாதவராய் வாயானும் செவியானும் கண்ணானும் மூக்கானும் மேன்மை தக்கிருக்கின்ற மெய்யானும் ஒழிதலின்றி உண்டும், கேட்டும், கண்டும், உயிர்த்தும், உற்றும் இவ்வகை இன்பங்களில் சோர்வின்றித் தத்தம் ஐம்புலக் கருவி களும் தத்தமக்குரிய உணர்ச்சிகளில் பெருகா நிற்பவும், என்க.

(வி - ம்.) தோள் துயர் - தோளின் மெலிவு. குறி - காமக் குறிப்பு. நெறி - அன்புநெறி. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுள" (குறள் - கக0க)

(இதுவுமது)

சுகக - எசு : வைகல்.........அளவென்

(பொ - ரை.) பதுமாபதியின் மெய்யின் தன்மையை நாள் தோறும் ஆராயும் செவிலி முதலியோர் அழகுறச் செய்யப்பட்ட வளையலையுடைய தோளையுடைய நம் பதுமாபதியைச் சேர்ந்து அவளது பெண்மை நலத்தை நுகராநின்ற தெய்வம் ஒன்று உண்டுகொலோ என்று ஐயுற்றுத் தெளியாதவராகத் தனது உருவாலும் உணர்வாலும் தனக்கு நிகராவார் உலகில் இல்லை என்னும்படி உடல்வளமுறுகின்ற அப் பதுமாபதியோடு வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் ஒரு திங்களளவும் இன்ப ஒழுக்கம் ஒழுகாநின்றனன், என்க.

(வி - ம்.) மெய்வகை தெரிவார் - அவள் உடலின் தன்மையை ஆராய்ந்து காணும் செவிலி முதலியோர் பதுமாபதியின் மெய் நாடோறும் புத்தழகுபெற்று வருதலால் செவிலி முதலியோர் ஐயுற்றா ரென்றபடி. ஒருமதி - ஒரு திங்கள்.

கரு. யாழ்நலந் தெரிந்தது முற்றிற்று.

க௬. பதுமாபதியைப் பிரிந்தது

இதன்கண்: பதுமாபதியினுடனிருந்த உதயணன் அவளைப் பிரிந்தமை கூறப்படும்.

ஒழுகா நின்ற வொருமதி யெல்லையுள்
வழிநா ணிகழ்வின் வண்ணங் கூறுவேன்
கலக்கமி ருனைக் காசியர் கோமான்
நலத்தகு தேவி நன்னாட் பெற்ற
மின்னுறழ் சாயற் பொன்னுறழ் சுணங்கிற்
பண்ணுறு மின்சொற் பதுமா நங்கை
ஆகந் தோய்தற் கவாஅ நெஞ்சமொடு
பாசிழை நன்கலம் பரிச முந்துறீஇக்
கேழ்கிளர் மணிமுடிக் கேகயத் தரசன்
அளவி லாற்ற லச்சுவப் பெருமகன்
மகதம் புகுந்து மன்னிய செங்கோற்
றகைவெந் துப்பிற் றருசகற் கிசைப்ப
ஏற்றெதிர் கொள்ளு மின்பக் கம்பலை
கூற்றெதிர் கொள்ளாக் கோள்கைத் தாகப்
புரவியும் யானையும் பூங்கொடித் தேரும்
விரவிய படையொடு தருசகன் போதரப்
போதுபிணைத் தன்ன மாதர் மழைக்கண்
நன்றேடு புணர்ந்த நங்கை மணமகன்
இன்றிவண் வருமென வில்லந் தோறும்
எடுத்த பூங்கொடி யிருங்கண் விசும்பகம்
துடைப்ப போல நடுக்கமொடு நுடங்கத்
தேர்செலத் தேய்ந்த தெருவுக ளெல்லாம்
நீர்செல் பேரியாறு நிரந்திழிந் தாங்குப்
பல்லோர் மொய்த்துச் செல்லிடம் பெறாஅ
தொல்லென் மாக்கட லுவாவுற் றன்ன
கல்லெ னகரங் காண்பது விரும்பி
மழைநிரைத் தன்ன மாடந் தோறும்
இழைநிரைத் தலங்க வேறி யிறைகொள

மலைத்தோகை யன்ன மாட மாநகர்
தலைத்தலைப் போந்து தலைப்பெய் தீண்டி
இடுமணி யானை யிரீஇ யிழிந்துதன்
தொடியணி தடக்கை தோன்ற வோச்சித்
தாக்கருந் தானைத் தருசகன் கழலடி
கூப்புபு பணிந்த கோடும்பூட் குருசிலை
எடுத்தவன...............................

உரை

௧௬. பதுமாபதியைப் பிரிந்தது

அஃதாவது, உதயணன் பதுமாபதியைப் பிரிந்து சென்ற செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(ஆசிரியர் கூற்று)

௧ - ௨ : ஒழுகா.........கூறுவேன்

(பொ - ரை.) இவ்வாறு உதயணன் பதுமாபதியோடு அவளது கன்னிமாடத்தின்கட் களவொழுக்கம் நிகழ்த்திய ஒரு திங்கள் கழிந்த வழிநாளிலே நிகழ்ந்த நிகழ்ச்சியினை இனிக் கூறுவேன் கேண்மின், என்க.

(வி - ம்.) இது நூலாசிரியர் கூற்று. நுதலிப்புகுதல் என்னும் தந்திரவுத்தி. ஒரு திங்கள் கழிந்த வழிநாள் என்க. வண்ணம் - தன்மை. கேண்மின் என்பது குறிப்பெச்சம்.

(அச்சுவப் பெருமகன் வரவு)

௩ - ௧௨ : கலக்கம்.........இசைப்ப

(பொ - ரை.) போர்க்களத்தே மனங் கலங்குதலில்லாத மற மிக்க படைகளையுடைய காசி நகரத்து மன்னனுடைய அழகுமிக்க கோப்பெருந்தேவி நல்லதொரு முழுத்தத்திலே ஈன்றருளிய, மின்னலையொத்த சாயலையும் பொன்னினையொத்த சுணங்கினையும் பண்போன்று இனிய மொழிகளையும் உடைய பதுமாபதி நங்கையினுடைய மெய்யுறு புணர்ச்சி பெறுதற்கு வேணவாக் கொண்ட நெஞ்சத்தோடு நன்னிறம் ஒளிர்கின்ற மணிகள் பதித்த கோமுடியினையுடையவனும் கேகய நாட்டரசனும் அளவில்லாத ஆற்றலுடையவனுமாகிய அச்சுவப் பெருமகன் என்பான் பதுமாபதிக்குப் பரிசப் பொருளாகப் பரிய

ஆடையணிகலன்களை முன்னர் உய்த்துப் பின்னர் மகத நாட்டின் தலைநகரத்தை யணுகித் தன் வரவினை நிலைபெற்ற செங்கோன்மையையும் பகைவரைத் தடை செய்தற்குரிய வெவ்விய படைவலிமையையும் உடைய தருசகனுக்குத் தன் தூதர் வாயிலாய் அறிவியா நிற்ப, என்க.

(வி - ம்.) தேவி - உதையையோடை. காசியரசன் தேவிமார் பலராகலின் கோமான் நலத்தகு தேவி பெற்ற என்றார். தேவி - ஈண்டுப் பட்டத்திற்குரிய கோப்பெருந்தேவி என்பதுபட நின்றது. சுணங்கு - தேமல். பண்ணுறு - பண்போன்ற. பதுமா - பதுமாபதி. பரிசம் - முலைவிலை. கேழ் - நிறம். கேகயம் - ஒரு நாடு. அச்சுவப் பெருமகன்: பெயர். தகை வெந்துப்பு : வினைத்தொகை.

(இதுவுமது)

கக - சு : ஏற்றெதிர்.........போதர

(பொ - ரை.) அவன் வருகையினை அறிந்த தருசக மன்னன் அந்த அச்சுவப் பெருமகனை வரவேற்று எதிர்கொள்ளும் பொருட்டு இன்னிசைக் கருவிகளின் இன்பமுடைய ஆரவாரம் ஒருவர் மொழியை ஒருவர் கேட்கவியலாதபடி பெரிதும் முழங்கா நிற்பவும், குதிரையும் யானையும் அழகிய கொடியுயர்த்தப்பட்ட தேரும் காலாளும் விரவிய தன் பெரும் படையோடு வாரா நிற்பவும் என்க.

(வி - ம்.) எதிர்கொள்ளும் பொருட்டு உண்டாகிய இன்பக் கம்பலை யென்க. கம்பலை - ஆரவாரம். இன்னிசையாரவாரமாகலின் இன்பக் கம்பலையென்றார். கூற்று - மொழி. ஒருவர் மொழியை ஒருவர் அறிந்துகொள்ளவியலாத தன்மையுடையதாக வென்க. முப்படை கூறினமையின் இனம்பற்றிக் காலாட்படையுங் கொள்க.

(இதுவுமது)

கஎ - உச : போது.........பெறுஅது

(பொ - ரை.) நெய்தன் மலரை இரட்டையாகப் பிணைத்து வைத்தாற் போன்ற அழகிய குளிர்ந்த கண்களையுடையவளும், கற்பு முதலிய பெண்மை நலத்தோடொன்றிய நம் பதுமாபதி நங்கைக்கு இற்றை நாள் இவண் மணமகன் வாரா நிற்கும் நன்றுளென்று மாந்தர் பெரிதும் மகிழ்ந்து தத்தம் மாளிகை தோறும் உயர்த்திய அழகிய கொடிகள் கரிய இடமகன்ற வானத்தைத் துடைத்துத் தூய்மை செய்வனபோல எங்கெங்கும் அசைந்து ஆடா நிற்பவும், தேர்கள் இயங்குதலாலே தேய்ந் துள்ள தெருக்களெல்லாவற்றினும், நீர் ஓடா நின்ற பேரியாறு களிலே வெள்ளம் பரவி ஓடுமாற்போலே பல மாந்தரும் நிரம்பி இயங்குதற்கிடம் பெறாமல் என்க.

(வி - ம்.) மாதர் - அழகு. மழைக்கண் - குளிர்ந்த கண். நன்று - கற்புடைமை. நங்கை - பதுமாபதி. பின்னர் அச்சுவப் பெருமகனுக்குச் சாக்காடு நேர்தற்கு உற்பாதம் போன்று. நுடங்க என்னுது, நடுக்கமொடு நுடங்க என்றார். விரந்து - பரவி.

(இதுவுமது)

௨௫ - ௨௮ : ஒல்லென்.........இறைகொள

(பொ - ரை.) ஒல்லென்று முழங்கும் பெரிய கடல் உவா நாளிலே பொங்கி ஆரவாரித்தாற் போன்று கல்லென முழங்காநின்ற அந்த இராசகிரிய நகரத்தினைக் கண்டு களித்தலை விரும்பி மைந்தரும் மகளிரும் ஆடையணிகளாலே ஒப்பனை செய்து கொண்டு தங்கள் கூந்தலானும் குஞ்சியானும் முகில்கள் குழுமினாற்போன்று தோன்றும்படி மேனிலை மாடங்களிலே விளங்கும்படி ஏறித் தங்குதலைச் செய்க; என்க.

(வி - ம்) ஒல்லென் : ஒலிக்குறிப்பு. உவா - ஈண்டுப் பூரணை. கல்லென் : ஒலிக்குறிப்பு. மைந்தரும் மகளிரும் அணிகலன்களோடே செறிதலின் அவர்தம் தலைமயிரும் அணிகலனும் முகிலும் மின்னலும் போலத் தோன்றுதலின் மழை நிரைத்தன்ன மாடம் என்றார். இறை - தங்குதல்.

(இதுவுமது)

௨௯ - ௩௫ : மலை.........எடுத்தவன

(பொ - ரை.) மலைகள் ஓரிடத்தே தொக்கிருந்தாற் போன்ற மாட மாளிகைகளையுடைய அந்தப் பெரிய நகரத்தே வலமாக வீதி தோறுஞ் சென்று தன் மகிழ்ச்சிக்கு அறிகுறியாக அச்சுவப் பெருமகன் தனது தொடியணிந்த பெரிய கையினை மக்கள் காண உயர்த்திச் சென்று அரண்மனையை எய்தி மணி கட்டிய தனது யானையை அரண்மனை முற்றத்தே நிறுத்திப் பகைவரால் தாக்குதற்கு அரிய படையினையுடைய தருசக மன்னனுடைய வீரக்கழல் அணிந்த திருவடிகளைக் கைகூப்பி வணங்கிய வளைந்த அணிகலன்களையுடைய அந்த அச்சுவப் பெருமகனைத் தருசகன் கைளால் தழீஇ எடுத்து அவன......

* * * *

* * * *

(குறிப்பு : இக் காதையில் ஒன்று முதலாக முப்பத்து நான்கு அடிகளும் நடுவும் அடியில், ''எடுத்தவன'' என்னும் ஒரு சீர் நிற்க எஞ்சிய பிற்பகுதியும் கிடைத்தில.)

பதுமாபதியைப் பிரிந்தது முற்றிற்று.

கஎ. இரவெழுந்தது

இதன்கண் மகத மன்னனாகிய தருசகனோடு போர் செய்ய வந்த பகை மன்னராகிய விரிசிகன் முதலிய எண்மரின் வரலாறும், அம் மன்னர் போருக்கு எழுதலும், தருசகன் செயலும், அயிராபதி உதயணனிடம் கூறலும், உருமண்ணுவாவின் செயலும், தோழர் செயலும், மணப் பொருள்களின் வகையும், உண் பொருள்களும், மருந்திற்குரிய பொருளும், மகளிர்க்குரிய பொருளும், பகை மன்னர் செயலும், உதயணன் முதலியோர் செயலும், உதயணன் மறவர் இரவிற் போர் புரிதலும் பிறவும் கூறப்படும்.

(குறிப்பு: இக் காதையின் முற்பகுதி கிடைத்திலது.)

* * * * *

* * * * *

* * * * *

..........................ச்

செய்வது தெரியுஞ் சித்தையோ டிருந்துழித்
தகைமலர்ப் பைந்தார்த் தருசகன் றன்னொடு
பகைகொண் டொழுகும் பற்றாக் கொடுந்தொழில்
விடுகணை விற்றொழில் விரிசிக னுள்ளிட்
டலருந் தோற்றத் தரிமா னன்னவர்
மத்தநல் யானை மதிய வெண்குடை
வித்தக நறுந்தார் விலங்குநடைப் புரவி
அத்தின புரத்தி னரசரு ளரிமான்
வேண்டியது முடிக்கும் வென்றித் தானை
ஈண்டிய வாற்ற லெலிச்செவி யரசனும்
காண்டற் காகாக் கடன்மருள் பெரும்படைத்
தீண்டற் காகாத் திருந்துமதி லணிந்த
வாரண வாசி வளந்தந் தோம்பும்
ஏரணி நெடுங்குடை யிறைமீக் கூரிய
படைநவி றடக்கைப் பைந்தார்க் கருங்கழல்
அடவி யரசனு மாண்டகை யொருவனும்
மலைத்தொகை யன்ன மையணி யானை
இலைத்தார் மார்பி னேரணி தடக்கைப்

பொருந்தா மன்னரைப் புறக்குடை கண்ட
அருந்திறற் சூழ்ச்சி யடல்வேற் றூனை
அயிர்த்துணைப் பல்படை யயோத்தி யரசனும்
மாற்றோர்த் தொலைத்த கூற்றுறழ் கொடுந்தொழில்
மிக்குயர் வென்றியொடு வேந்தரை யகப்படுத்
தக்களம் வேட்ட வடலருஞ் சீற்றத்துப்
புனைமதி லோங்கிய போதன புரத்திறை
மிலைச்ச னென்னு நலத்தகை யொருவனும்
சீற்றத் துப்பிற் செருவெனப் புகலும்
ஆற்றல் சான்ற வரசரு ளரிமாத்
துன்னரு நீண்மதிற் றுவரா பதிக்கிறை
மன்னரை முருக்கிய மதிய வெண்குடைப்
பொங்குமலர் நறுந்தார்ச் சங்கர வரசனும்
மல்ல னென்னும் வெல்போர் விடலையும்
தானை மன்னரை மானம் வாட்டிய
ஊனிவர் நெடுவே லுருவக் கழற்காற்
பொங்குமயிர் மான்றேர்த் திருநகர்க் கிறைவன்
வெந்திறற் செய்கை வேசா லியுமென
அடற்றகை மன்னர் படைத்தொகை கூட்டிச்
சங்க மாகி வெங்கணை வீக்கமொடு
பகைநமக் காகிப் பணித்துத் திறைகொளும்
மகத மன்னனை மதுகை வாட்டிப்
புரிபல வியைந்த வொருபெருங் கயிற்றினிற்
பெருவலி வேழம் பிணித்திசி னாஅங்
கிசைந்த பொழுதே யிடங்கெட மேற்சென்
றருந்திறன் மன்னனை நெருங்கின மாகித்
தன்னுடை யானையும் புரவியுந் தன்றுணைப்
பொன்னியல் பாவையும் புனைமணித் தேரும்
அணிகதிர் முத்தமு மருங்கல மாதியும்
பணிமொழிச் செவ்வாய்க் கணிகை மகளிரொடு
பிறவு மின்னவை முறைமையிற் றரினும்
இருங்கண் மாதிரத் தொருங்குகண் கூடிய
கருமுகில் கிழிக்குங் கடுவளி போலப்
பொருமுரண் மன்னர் புணர்ப்பிடைப் பிரிக்கும்

அறைபோக் கமைச்சின் முறைபோக் கெண்ணினும்
அங்கண் ஞாலத் தழகுவீற் றிருந்த
கொங்கலர் கோதை யெங்கையைப் பொருளொடு
தனக்கே தருகுவன் சினத்தி னீங்கி
ஊனங் கொள்ளாது தானவட் பெறுகெனத்
தேறு மாந்தரை வேறவண் விடுத்துத்
தனித்தர வொருவரைத் தன்பாற் றூழ்ப்பினும்
என்ன வாயினு மன்னது விழையா
தொடுங்கி யிருந்தே யுன்னியது முடிக்கும்
கொடுங்காற் கொக்கின் கோளின மாகிச்
சாய்ப்பிட மாகப் போர்ப்படை பரப்பி
வலிகெழு வேந்தனை வணக்குது மென்னத்
தெளிவுசெய் தெழுந்து திருமலி நன்னாட்
டெல்லை யிகந்து வல்லை யெழுந்து
கடுந்தொழின் மேவலொ டடங்குவந் திறுத்தலின்
அகநகர் வரைப்பி னரச னறியப்
புறநக ரெல்லாம் பூசலிற் றுவன்றி
அச்ச நிலைமை யரசற் கிசைத்தலின்
மெச்சா மன்னரை மெலிவது நாடித்
தருசகன் றமரொடு தெருமர லெய்தி
மாணகற் கண்டிந் நிலைமை கூறென
ஆண நெஞ்சத் தயிரா பதிவந்
தனங்கத் தானம் புகுந்தவற் கண்டு
கூப்பிய கையினள் கோயிலுட் பட்டதும்
கோற்றொடி மாதர் கொள்கையுங் கூற
உகவை யுள்ளமொடு பகையிவ ணியைதல்
கரும நமக்கென வுருமண் ணுவாவுரைத்
தின்ன தென்னான் பொன்னேர் தோழிக்
கிருமதி நாளகத் திலங்கிழை மாதர்
பருவரல் வெங்நோய் பசப்பொடு நீக்குவென்
என்றன னென்பதைச் சென்றனை கூறிக்
கவற்சி நீக்கெனப் பெயர்த்தவட் போக்கிக்
கடுத்த மன்னரைக் கலங்கத் தாக்கி
உடைத்த பின்றை யல்லது நங்கையை

அடுத்தல் செல்லா னரச ஞதலின்
அற்ற நோக்கி யவர்படை யணுகி
ஒற்றி மேல்வீழ்ந் துடைக்கு முபாயமா
வாணிக வுருவின மாகிமற்றவர்
ஆணைத் தானை யகம்புக் காராய்ந்
திரவிடை யெறிந்து பொருபடை யோட்டிக்
கேட்போர்க் கெல்லாம் வாட்போர் வலித்தொழில்
வளமிகு தானை வத்தவர்க் கிறைமைக்
கிளமை கூறி யுளமை கொளீஇக்
காவினு ணிகழ்ந்தது காவலற் குரைப்பின்
மன்றல் கருதி வந்த மன்னற்
கொன்றுபு கோடாமை யுண்டு மாகும்
ஒன்றின ஞயிற் போன்றுஞ் சின்முலைத்
தெரியிழை மாத ருரிமையி னேடாள்
அன்ன தாத லொருதலை யதனாற்
பின்னரு மதற்குப் பிறபிற நாடுதும்
இன்னே யெழுகென் றெழுந்தாங் கணைஇச்
சின்னச் சோலை யென்னு மலைமிசைப்
பன்னற் கேள்வி பணவரப் பாடிட
எண்ணிய கருமத் திடையூ றின்மை
திண்ணிதிற் கேட்டுத் தெளிந்தன ராகி
ஆறு வன்போடு மேனு ளன்றி
வழிவழி வந்த கழிபெருங் காதற்
பகையடு படைநரைத் தொகையவட் காண்புழி
நூற்றிற முற்றி யாற்றுளி பிழையா
தாற்றி னறிய வத்துணை யுண்மையின்
ஊறின் றினியென வுவகையிற் கழுமிக்
கரப்பில் வண்மைப் பிரச்சோ தனன்றன்
சினப்படை யழித்த செம்ம லாளர்க்குக்
கனப்படை காக்கைத் தொகையெனக் கருதும்
அத்திறத் தோன்றி யெத்திறத் தானும்
குவளை யுண்க ணிவளொடு புணர்ந்த
காலை யல்லது கோலக் குருசில்
புலம்பிற் றீரா னுதலிற் பொருபடை

கலங்கவாட் டுதலெனக் கருத்திடை வலித்து
மலையி னிழிந்து விலைவரம் பறியா
அருவிலை நன்மணி போத்தந் தவ்வழிப்
பெருவிலைப் பண்டம் பெய்வது புரிந்து
செழுமணிக் காரர் குழுவினுட் காட்டி
உறுவிலை கொண்டு பெறுவிலை பிழையா
வெண்பூந் துகிலுஞ் செம்பூங் கச்சும்
சுரிகையும் வாளு முருவொடு புணர்ந்த
அணியின ராகிப் பணிசெயற் குரிய
இளையரை யொற்றித் தளைபிணி யுறீஇப்
பல்வுறைப் பையி னுள்ளறை தோறும்
நாகத் தல்லியு நயந்தக் கோலமும்
வாசப் பளிதமுஞ் சோணப் பூவும்
குங்குமக் குற்றியுங் கொழுங்காற் கொட்டமும்
ஒண்காழ்த் துருக்கமு மொளிநா குணமும்
காழகி லாரமுங் கட்சா லேகமும்
கோழிரு வேரியும் பேரில வங்கமும்
அந்தண் டகரமு மரக்கு மகிலும்
சந்தனக் குறையொடு சாந்திற் குரியவை
பிறவு மொருவா நிறைய வடக்கி
முதிர்பழ மிளகு மெதிர்வது திகழ்ந்த
மஞ்சளு மிஞ்சியுஞ் செஞ்சிறு கடுகும்
தலைப்பெருங் காயமு நலத்தகு சிறப்பிற்
சீரகத் தரிசியு மேலமு மேனைக்
காயமு மெல்லா மாய்வன ரடக்கி
அஞ்சன மனோசிலை யணியரி தாரம்
துத்த மாஞ்சி யத்தவத் திரதம்
திப்பிலி யிந்துப் போப்புமுறை யமைத்துத்
தாழி மேதை தவாத துவர்ச்சிகை
வண்ணிகை வங்கப் பாவையோ டின்ன
மருத்துறுப் பெல்லா மொருப்படுத் தடக்கி
இலைச்சினை யொற்றிய தலைச்சுமைச் சரக்கினர்
கான மண்ணிய நீனிறக் குஞ்சியர்
மணிநிறக் குவளை யணிமலர் சேரீஇ

யாப்புற வடக்கிய வாக்கமை சிகையினர்
மல்லிகை யிரீஇ வல்லோர் புணர்ந்த
செம்பொன் மாத்திரை சேரீஇய காதினர்
அங்கதிர்ச் சுடர்மணி யணிபெற விரீஇ
மாசின் றிலங்கு மோதிர விரலினர்
வாச நறும்பொடி திமிர்ந்த மார்பினர்
மகரிகை நிறைய வேகிர்முக மாக்கிப்
பாடி மகளிர் விழையுஞ் சேடொளிப்
பத்திக் கடிப்பும் பவழத் திரியும்
முத்து வடமு முழுமணிக் காசும்
பன்மணித் தாலியு மென்முலைக கச்சும்
உத்திப் பூணு முளப்படப் பிறவும்
சித்திரக் கிழியின் வித்தக மாகத்
தோன்றத் தூக்கி யாங்கவை யமைத்து
காற்றிய கைய ரேற்றிய கோலமொடு
நுரைவிரித் தன்ன நுண்ணூற் கலிங்கம்
அரைவிரித் தசைத்த வம்பூங் கச்சொடு
போர்ப்புறு மீக்கோள் யாப்புறத் தசைஇப்
பொற்றொடி நிறைக்கோல் பற்றிய கையினர்
கழலுங் கச்சுங் கலிங்கமு மற்றவர்
விழைவன வறிந்து வேறுவே றடக்கிக்
காட்சிமுந் துறுத்த மாட்சிய ராகிப்
படைத்திற மன்னர் பாடி சார்ந்து
விடைப்பே ரமைச்சன் மேனாட் போக்கிய
அறிவொடு புணர்ந்த விசைச்சனு மவ்வழிக்
குறிவயிற் பிழையாது குதிரையொடு தோன்றலும்
அதிராத் தோழனை யவனே யொழித்துக்
குதிரை யாவன கொண்டுவிலை பகரிய
வழுவில் சூழ்ச்சி வயந்தக குமரனைக்
குழுவினோ கட்குத் தலையெனக் கூறி
வெம்முரண் வென்றியொடு மேல்வந் திறுத்த
ஒன்னா ராடற் கொருப்பா டெய்தி
வழககொடு புணர்ந்த வாசி வாணிகம்
உழப்பே மற்றிவ னென்பதிற் றியாட்டையன்

மண்டமர்த் தானை மகத மன்னனும்
பண்டையன் போலா னுதலிற் படையொடு
தொன்னகர் வரைப்பக மெங்ஙக ராக்க
இருந்தனம் வலித்தனம் யாமெனப் பலவும்
பொக்க முடையவை பொருந்தக் கூறிப்
பகைகொண் மன்ன னகநகர் வரைப்பின்
யாவ ராயினு மறிந்துவந் தடைவது
காணுங் காலைக் கரும நமக்கெனக்
கணங்கொண் மன்னரு மிணங்குவன ராகிப்
பெரும்பரி சார மொருங்குட னருளி
அற்ற மவர்மாட் டொற்றின ராகி
அருத்த மருங்கல நிரைத்தனர் தந்திட்
டின்றைக் கொண்டு மிவணி ராமினென்
றொன்றிய காதலொ டுண்ணெகிழ்ந் துரைப்ப
வத்தவ ரிறைவனொடு மொய்த்திறை கொண்டு
பாடியுட் டமக்கிடம் பாற்படுத் தமைத்து
வீட்டின தளவும் விறற்படை வீரமும்
கூட்ட மன்னர் குறித்தவும் பிறவும்
இருளும் பகலு மருவின ராராய்ந்
தருந்திற லாள ரொருங்குயி ருண்ணும்
கூற்றத் தன்ன வாற்றல ராகி
மண்டில மறைந்த மயங்கிருள் யாமத்
தெண்டிசை மருங்கினு மின்னுழி யெறிதுமென்
றறியச் சூழ்ந்த குறியின ராகி
நூலிற் பரந்த கோல வீதியுட்
படைநகர் வரைப்பகம் பறைக்க ணெருக்கிப்
பாடி காவல ரொடியாண் டெறிந்து
புறக்காப் பமைத்துத் தலைக்காப் பிருக்கும்
வல்வில் லிளையர்க் கெல்லை தோறும்
காப்புநன் கிகழன்மின் கண்படை யுறங்கென்
றியாப்புறக் கூறி யடங்கிய பொழுதிற்
கலங்கத் தாக்கலின் மெலிந்த தாகி
உடையினு முடையா தாயினும் யாவரும்
அடையுந் தான மறியக் கூறி

நாற்பால் வகுத்து மேற்பா லமைத்துக்
காவலன் றன்னையுங் காவலு ணிறீஇப்
பொற்புடைப் புரவி பொலிய வேறி
நற்படை நலியா நன்மையொடு பொலிந்த
சாலிகைக் கவயங் கோல மாகப்
புக்க மெய்யினர் பூந்தார் மார்பிற்
றுளாண் கடுந்திறல் விரிசிகன் வாழ்கென
மேலாண் மல்லன் பாடி காத்த
நீலக் கச்சை நிரைகழன் மறவரை
வேலிற் சாய்த்துங் கோல மான்றோர்
அடவி வாழ்கென வார்த்தன ருராஅய்த்
தடவரை மார்பிற் றளராச் செங்கோல்
மிலேச்சன் வாழ்கெனத் தலைக்காப் பிருந்த
தண்ட மள்ளரைத் தபுத்துயி ருண்டும்
கொண்ட வார்ப்பொடு கூட வெலிச்செவி
பண்டரும் பல்லியம் பாற்படத் துலைத்தும்
விறல்வே சாலி பாடி குறுகி
அடலருஞ் சீற்றத் தரசுபல கடந்த
விடலரும் பைந்தார் வேந்தருள் வேந்தன்
சங்கரன் வாழ்கெனத் தங்கல ரேறிந்தும்
வத்தவன் கொண்ட மாமுர சியக்கி
அயிலிற் புனைந்த வெயில்புரை யோள்வாள்
உரீஇய கைய ராகி யோரீஇக்
காவன் மறவரைக் கண்படை யகத்தே
வீழ நூறி வேழந் தொலைச்சி
மலையெனக் கவிழ மாமறித் திடாஅக்
கொலைவினைப் படைமாக் கொடியணி நெடுந்தேர்
வத்தவன் மறவர் மொய்த்தன ரேறியக்
கடுவளி யுற்ற கடலி னுராஅய்
அடலரும் பெரும்படை யார்ப்பொடு தொடங்கித்
தம்முட் டாக்கிக் கைம்மயக் கெய்தி
மதக்களி யானை வத்தவன் வாழ்கவென்
றுரைப்ப மற்றவ ரறிந்தன ராகி
எம்வயி னெம்வயி னெண்ணினர் கோளெனத்

தம்வயிற் றம்முளுந் தெளியா ராகிப்
பாடி யருங்கலம் பட்டுழிக் கிடப்ப
நீடிரு ளகத்து நீங்குதல் பொருளெனச்
செவிசெவி யறியாச் செயலின ராகித்
தவிர்வில் வேகமொடு தலைவந் திறுத்த
கடுந்தொழின் மன்ன ருடைந்தன ரோடி
அடைந்தனர் மாதோ வரணமை மலையென்.

உரை

கஎ. இரவெழுந்தது

க : செய்வது.........இருந்துழி

(பொ - ரை.) ....ச் இனிச் செய்வதற்குரிய செயல்களை ஆராய்கின்ற நெஞ்சத்தோடு இருந்த காலத்தில்; என்க.

(வி - ம்.) இதற்கு மேலுள்ள இந்தக் காதையின் பகுதிகள் கிடைத்தில.

(தருசகனுடைய பகை மன்னர்)

உ - க0 : தகை.........அரசனும்

(பொ - ரை.) அழகிய மலராற் புனைந்த பசிய மாலையை யுடைய தருசக மன்னனோடு பகைகொண்டு ஒழுகாநின்ற அன்பில்லாத கொடிய தொழில்களையும் கணைவிடும் விற்றொழிலையு முடைய விரிசிகனை உள்ளிட்ட வெல்லுதற்கரிய தோற்றத்தை யுடைய சிங்கம் போன்றவரும் அரசருள் வைத்து மத்தகத்தை யுடைய நல்ல யானையையும் திங்கள் போன்ற வெண்குடையையும் சித்திர வேலை செய்யப்பட்ட நறிய மாலையினையும் தாவிப் பாயும் நடையினையுமுடைய குதிரைகளை உடையவனும் அத்தினபுரத்தின் அரசருள் வைத்துச் சிங்கம் போன்றவனும் தான் விரும்பியதனைச் செய்து முடிக்கும் திறன் உடையவனும் வெற்றியை யுடைய படைகளால் ஈண்டிய ஆற்றலையுடையவனும் ஆகிய எலிச்செவி அரசனும்; என்க.

(வி - ம்.) தகை - அழகு. அடல் - வெல்லல். அரிமான் - சிங்கம். ஈண்டிய - செறிந்த.

(இதுவுமது)

கக - கக : காண்டற்கு.........ஒருவனும்

(பொ - ரை.) பகைவரால் காண்பதற்கு மியலாத கடல் போன்ற பெரிய படையை உடையவனும் பகைவரால் தீண்டற்கு மியலாத திருத்தமுடைய மதில் சூழ்ந்த வாரணவாசி என்னும் நகரத்தை வளம் பெருக்கிப் பாதுகாப்பவனும், அழகுடைய நெடிய குடையினையுடைய அரசருள்ளே மேம்பட்டவனும் படைக் கலம் பயின்ற பெரிய பையினையுடையவனும் பசிய மலர் மாலையி னையும் வலிய வீரக் கழலையும் அணிந்தவனும் அடவி அரசன் என்னும் பெயரையுடையவனும் ஆகிய ஆண்மைத் தன்மைமிக்க ஒருவனும்; என்க.

(வி - ம்.) கடல்மருள் பெரும்படை - கடல் போன்ற பெரிய படை; பகைவரால் தீண்டுதற்கும் ஆகா மதில் என்க. வாரணவாசி - ஒரு நகரம். ஏர் - அழகு. இறை - அரசர்கள். மீக்கூரிய - மேம்பட்ட. அடவியரசன் : பெயர். ஆண்டகை - ஆண்மைத் தன்மை மிகுந்தவன்.

(இதுவுமது)

கஎ - உக : மலை.........அரசனும்

(பொ - ரை.) மலைக் கூட்டம் போன்ற அஞ்சன மெழுதிய யானைக் கூட்டத்தையும் இலை விரவிய படலை மாலையணிந்த மார்பினையும், அழகிய அணிகலனணிந்த பெரிய கைகளையும் தன் பகை அரசர்களை முதுகுகண்ட வெல்லுதற்கரிய ஆற்றலையும், சூழ்ச்சியினையும் கொலை வேலேந்திய படையினையும் நுண்ணிய மணலின் அளவான பலவாகிய பிற படைகளையும் உடையவனும் ஆகிய அயோத்தி அரசனும்; என்க.

(வி - ம்.) மையணியானை - அஞ்சனமெழுதிய யானை. இலைத் தார் - படலை மாலை. ஏரணி - அழகிய அணிகலன். புறக்குடை - முதுகு. அயிர் - நுண்மணல்.

(இதுவுமது)

உஉ - உசு : மாற்றோர்.........ஒருவனும்

(பொ - ரை.) தன் பகைவர்களை யெல்லாம் கொன்றொழித் தவனும் கூற்றுவனை யொத்த கொலைத் தொழிலில் மிக்கு உயர்ந்த வெற்றியோடு பகை வேந்தர் பலரை அகப்படுத்து அப் போர்க் களத்திலேயே களவேள்வி செய்தவனும், பகைவரால் வெல்லுதற்கரிய வெகுளியை உடையவனும் ஆகிய ஒப்பனை செய்யப்பட்ட உயர்ந்த மதில்களையுடைய போதனபுரத்திற்கு அரசனும் 'மிலேச்சன்' என்னும் பெயருடையானும் ஆகிய அழகன ஒருவனும; என்க.

(வி - ம்.) மாற்றோர் - பகைவர். கூற்றநம் - கூற்றுவனை யொத்த. வேட்ட - வேள்வி செய்த. நலத்தகை - அழகுடையான்.

(இதுவுமது)

௨௭ - ௩௧ : சீற்ற.........அரசனும்

(பொ - ரை.) வெகுளியையுடைய வலிமை மிக்க போர் என்று கூறிய அளவிலே பெரிதும் விரும்புகின்ற போராற்றல் நிரம்பிய அரசருள் வைத்துச் சிங்கம் போன்றவனும், பகைவர் இட்டுதற்கரிய நீண்ட மதிலையுடைய துவராபதிக்கு அரசனும் பல்வேறு பகை மன்னரைக் கொன்ற கொற்றவெண்குடை உடையானும், மிக்க மலராற் புனைந்த நறிய மாலையை யணிந்த சங்கர வரசனும்; என்க.

(வி - ம்.) போர் என்று சொல்லக்கேட்ட அளவிலே அத் தொழிலை விரும்புவான் என்க. செரு - போர். புகலும் - விரும்பும். முருக்கிய - அழித்த.

(இதுவுமது)

௩௨ - ௩௭ : மல்லன்.........கூட்டி.

(பொ - ரை.) 'மல்லன்' என்னும் பெயரையுடைய, சென்ற போர்தொறும் வெல்லும் இயல்புடைய அரசனும், படைமிக்க பகை மன்னரை மானங் கெடச் செய்தவனும், ஊன் ஒழுகுகின்ற நெடிய வேலையும் அழகிய வீரக்கழல் கட்டிய கால்களையும், மிக்க பிடரி மயிரையுடைய குதிரை பூட்டிய தேரினையும் உடைய 'திரு நகர்க்கு' அரசனுமாகிய வெவ்விய ஆற்றலையும் செயலையுமுடைய 'வேசாலி' என்னும் அரசனும் ஆகிய இங்குக் கூறப்பட்ட இவ் வெற்றி மிக்க அரசர்கள் தங்கள் படைகளை யெல்லாம் ஒன்றாகக் கூட்டிக்கொண்டு; என்க.

(வி - ம்.) விடலை : அரசன். ஊனிவர் - ஊன் - ஒழுகுகின்ற. உருவக்கழல் - அழகிய வீரக்கழல். (௧) விரிசிகன்; (௨) எலிச்செவி யரசன்; (௩) அடவியரசன்; (௪) அயோத்தியரசன்; (௫) மிலைச்சன்; (௬) சங்கரவரசன்; (௭) மல்லன்; (௮) வேசாலி ஆகிய இவ் வெண்மரும் என்க.

(பகை மன்னர் ஆராய்தலும் போருக்கெழுதலும்)

௩௮ - ௪௪ : சங்கம்.........ஆகி

(பொ - ரை.) பெருங் கூட்டமாகி இருந்து வெவ்விய அம்பினது பெருமையாலே நம்மனைவர்க்கும் பகைவனாகி நம்மை வணக்கி நம்பால் திறை கொள்ளாநின்ற மகதநாட்டு மன்னனாகிய தருசகனுடைய ஆற்றலை அழித்துப் பல புரிகளால் முறுக்கிய

ஆற்றல் மிக்க ஒரு பெருங் கயிற்றாலே மிக்க வலிமையுடைய களிற்றி யானையைப் பிணித்தாற்போல நாம் அனைவரும் ஒருங்கே சேர்ந்த இப்பொழுதே அம்மன்னனுக்கு இடங் காலம் முதலியன கெடும்படி அவன்மேற் போருக்குச் சென்று வெல்லற்கரிய ஆற்றலையுடைய அத் தருசகனை யாம் அனைவரும் ஒருங்கு கூடி நெருங்கி; என்க.

(வி - ம்.) சங்கம் - கூட்டம். வீக்கம் - பெருமை. பணித்து - வணக்கி. மதுகை - வலி. பல புரிகளைக்கொண்டு திரித்த பெருங்கயிற்றால் யானையைக் கட்டினாற்போல நம்மில் தனி ஒருவனால் வெல்லப் படாத இத்தருசகனை நாம் ஒருங்கு கூடிப் பெரும்படையோடு பொருதால் வெல்லலாம் என்று துணிந்தவாறு. இடங்கெட - பகைவனுக்கு இடம் காலம் முதலியன கெடும்படி.

(இதுவுமது)

சகி - ருரு : தன்னுடை.........எண்ணினும்

(பொ - ரை.) யாம் இவ்வாறு ஒன்றுபட்ட செய்தியை யறிந்த நம் பகை மன்னன் நம்மைப் பிரித்தற் பொருட்டு நம்முள் வைத்து ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகித் தான் ஏறுகின்ற களிற்றியானையையும் தான் ஏறுகின்ற குதிரையையும் தனது எடையுள்ள பொன்னாலியன்ற பாவையையும், ஒப்பனை செய்யப்பட்ட மணி புனைந்த தேரினையும், அழகிய ஒளி முத்துக்களையும் பேரணிகலன்களையும், இன்னோரன்ன பொருள்களோடு பணிந்த மொழியினையுடைய சிவந்த வாயையுடைய கணிகை மகளிரோடு இன்னோரன்ன பிறவும் முறைமையாலே வழங்கினும், அல்லது கரிய இடமுடைய வானத்தின்கண் ஓரிடத்தே குழுமிய கரிய முகில்களைச் சிதைத்தொழிக்கும் கடிய சூறைக் காற்றுப் போலப் போராற்றல் மிக்க மன்னருடைய நட்பினைப் பிரிக்கின்ற கீழறுத்தல் செய்கின்ற அமைச்சரோடு ஆராய்ந்து நம்மைப் பிரித்துப் போக்கற்கு முறையே நினைத்தாலும்; என்க.

(வி - ம்.) தன்னுடை யானை - தான் விரும்பி ஏறும் யானை. தன்றுணைப் பொன்னியல் பாவை - தன் எடையுள்ள பொன்னாற் செய்யப்பட்ட பாவை என்க. அருங்கலம் - பெறற்கரிய பேரணிகலம். வளி - காற்று. அறைபோக்கு அமைச்சின் - கீழறுத்தல் செய்கின்ற அமைச்சரோடு.

(இதுவுமது)

ருச - ருசு : அங்கண்.........தாழ்ப்பினும்

(பொ - ரை.) அழகிய இடமமைந்த இவ்வுலகின்கண் அழகுத் தெய்வம் குடியிருந்த மணத்தோடு மலர்ந்த மாலையை யணிந்த

என் தங்கையாகிய பதுமாபதியை நிறைந்த வரிசைப் பொருள் களோடே உனக்கே மணம் செய்து தருவேன். நீ என்மேல் கொண்ட வெகுளியை விடுத்துச் சிறுமை கொள்ளாமல் அவளை வாழ்க்கைத் துணையாகப் பெறுக, என்று கூறி அவ்விடத்தே அவன் மொழியைத் தெளிகின்றவரை நம்மினின்றும் பிரித்து வேறாக்கிவிட்டு நம்முள் வைத்து யாரேனும் ஒருவரைத் தலைத்துத் தன்னோடு இருத்திக் கொள்ளினும்; என்க.

(வி - ம்) அங்கண் - அழகிய இடம். கொங்கு - மணம்; தேனு மாம். எங்கை - என் தங்கை, என்றது பதுமாபதியை. பொருள - சீதனப் பொருள். அவள் : பதுமாபதி. இத்தகைய பகைவன் மொழியை நம்மில் ஒருவரும் தெளியார். ஒரோவழி தெளிவார் உள ராயின் அன்னாரை, தெறுமாந்தரை என்றான். தனித்தர - தனிப்ப; யாரேனும் ஒருவரை என்க. தாழ்ப்பினும் - தங்கும்படி செய்யினும்.

(இதுவுமது)

கo - கஎ : என்ன.........இருந்தலின்

(பொ - ரை.) இத்தகைய சூழ்ச்சிகளுள் வைத்து எதனைச் செய்தாலும் அவன் கொடையை விரும்பாமல், ஓடுமீன ஓட உறுமீன வருமளவும் வளைந்த காலையுடைய கொக்கு ஒடுங்கி யிருந்த தான கருதியதனை முடித்துக் கொள்ளுமாப் போலே, யாம அவன போர்க்கு வருந்துணையும் பினவாங்குங் குறிப் போடே இருந்து வந்துழி நம் போர்ப் படைகளைப் பரப்பி வலிமை மிகக அத் தருசக மன்னனை வென்று நம்மை வணங் கும்படி செயவோம என்று தமக்குள் ஆராய்ந்து முடிவு செய்து கொண்டு, அம் மன்னர்கள செல்வம மலிந்த தங்கள் நாட்டினது எல்லையைக கடந்து புறப்பட்டுக் கொடிய போர் செய்தலினகண் விருப்பத்தோடு இராசகிரிய நகரத்தில் மருங்கு வந்து அந் நகரத்தை வளைத்துக் கொளளுதலாமல; என்க.

(வி - ம்.) என்னவாயினும் - எத்தகைய சூழ்ச்சியாய் இருப் பினும். கொக்கின் கோளனமாகி - கொக்கினது கொள்கையை உடையோமாய். சாய்ப்பிடமாக - பினவாங்குங்குறிப்போடு. வேந்தனை : தருசகனை. தெளிவுசெய்து - கூட்டத்தினின்றும் எழுந்து என்க. இகந்து - கடந்து. வல்லை - விரைந்து. படையொடெழுந்து என்க. கடுந்தொழில் - போர்த்தொழில். மேவல் - விரும்புதல். ஒடுங்கு - ஒடுங்கு.

(தருசகன் செயல்)

சுஅ - எங : அந்நகர்.........கூறென

(பொ - ரை) இராசகிரிய நகரத்தின் அகத்தேயுள்ள அரண் மனையிலே உண்ணிருந்த தருசக மன்னன் அறியுமபடி புறநகர்

முழுவதும் பெருமுழக்கத்துடன் காணப்படுகின்ற அஞ்சுதற்குரிய அந்த நிலைமையை ஒற்றர்கள் வந்து தருசகனுக்குக் கூறுகின்றனாலே அந் நிகழ்ச்சி கேட்ட அம்மன்னவன் தன்னை மதியாத அப் பகை மன்னர்களைத் தோற்கச் செய்யும் வழியை ஆராய்ந்து அதற்கு ஒரு முடிவு பெறாமல் தன் அமைச்சர்களோடு மனக் குழப்பமடைந்து அயிராபதி என்னும் தோழியை அழைத்து 'நீ சென்று இந் நிலைமையை மாணகனுக்கு அறிவிப்பாயாக' என்று பணிப்ப; என்க.

(வி - ம்.) அக நகர், புற நகர் என்பன, நகரகம் - நகர்ப்புறம் என்னும் ஆறும் வேற்றுமைத் தொகை முன்பின் மாறி நின்றன; அரசன் - தருசகன். பூசல் - பேராரவாரம். துவன்றி - துவன்ற என்க. அச்சநிலைமை - அஞ்சுதற்குக் காரணமான நிலைமை. மெச்சா மன்னர் - பகைவர். தமர் - அமைச்சர் முதலியோர். தெருமரல் - சுழற்சி. மாணகன் - உதயணன் மேற்கொண்டுள்ள பார்ப்பன வேடத்திற்குப் பொருந்தக் கூறிக்கொண்ட பெயர்.

(அயிராபதி உதயணனிடம் கூறல்)

எச - என : ஆணம் .... கூற

(பொ - ரை.) அன்புமிக்க நெஞ்சத்தையுடைய அவ்வயிராபதி வந்து காமக் கோட்டத்தினுட் புகுந்து அவ்விடத்தே உதயணனைக் கண்டு கைகூப்பித் தொழுது அரண்மனையின்கண் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கோற்றொடி யணிந்த பதுமாபதியினது கொள்கையையும் கூறுகின்றப; என்க.

(வி - ம்.) ஆணம் - அன்பு. அனங்கத்தானம் - காமக்கோட்டம், அவற்கண்டு - உதயணனைக் கண்டு. மாதர் : பதுமாபதி.

(உருமண்ணுவாவின் செயல்)

எஅ - அச : உகவை .... போக்கி

(பொ - ரை.) அப்பொழுது அவ்விடத்தே உதயணனுடனிருந்த உருமண்ணுவா ஊக்கத்தால் இளர்ந்த நெஞ்சத்தோடு இப்பொழுது இங்குப் பகைவர் வந்து சேர்தல் நமக்கு நல்ல காரியமேயாகும் என்று கூறி அதற்குக் காரணம் கூறுனாய்ப் பொன்போன்ற நிறமுடைய தோழியாகிய அயிராபதியை நோக்கி, "நங்காய்! மாணகன் இரண்டு திங்களுக்குள்ளே பதுமாபதியின்பால் வந்து அப்பெருமாட்டியினது பிரிவுத் துன்பமாகிய கொடிய பிணியைப் பசப்போடு நீக்குவன், என்று கூறினன் என்பதை நீ சென்று அக்கோமகட்குக் கூறி அவளுடைய கவலையை அகற்றுவாயாக" என்று பணித்து மீண்டும் அவளை அவள்பால் போக்குவித்து; என்க.

(வி - ம்.) உகவை - உயர்ச்சி; மகிழ்ச்சியுமாம். இவண் - இச் செவ்வியில். நமக்குக் கருமம் - நமக்கு நல்ல காரியமாகும். பொன் - திருமகளுமாம். இலங்கிழை மாதர் : பதுமாபதி; பருவரலாகிய வெந் நோய் என்க. கவற்சி - கவலை.

(இதுவுமது)

அ௫ - ௬௨ : கடுத்த .... ஓட்டி

(பொ-ரை.) அக் கூன்மகள் போன பின்னர் அவ்வமைச்சன் உதயணனை இனிதின் நோக்கி, "எம்பெருமானே! இப்பொழுது இராசகிரியத்தைச் சூழ்ந்துள்ள பகை மன்னர்களை மனங்கலங் கும்படி போர் செய்து அவர்களை முதுகுகண்டபின் அல்லது பதுமாபதியின் திறத்திலே தருசக மன்னன் மனம் செலுத்துதல் இலனாவான். அங்ஙனமாதலின் நாம் அப் பகை மன்னர் தம் சோர்வினை ஒற்றியறிந்து அவர் படைகளை நெருங்கிச் செவ்வி நோக்கி அவர் மேலே போர் தொடுத்து அவரை உடைந்து ஓடச் செய்தற்கு ஓர் உபாயமாக நாமெல்லாம் வணிகர் வேடந் தாங்கி அப் பகைவருடைய அன்பிற்குரிய படைக்குள்ளே புகுந்து அவர் தம் இயல்புகளை ஆராய்ந்து இரவிலேயே அவர்களைத் தாக்கி அவர்கள் போர் செய்தற்குக் கூட்டி வந்துள்ள படைகளை யெல் லாம் புறங்காட்டி ஓடச் செய்து; என்க.

(வி - ம்.) கடுத்த மன்னர் - பகை மன்னர். நங்கையை : பதுமா பதியை. அரசன் : தருசகன். தருசகமன்னன் இப்பொழுது தன்மேல் வந்துள்ள பகைமன்னரைப் புறங்கண்டன்றிப் பதுமாபதியின் திரு மணம்பற்றிப் பேச அவளை அணுகமாட்டான் என்பது கருத்து. அற்றம் - சோர்வு. உபாயமா : ஈறு கெட்டது. ஆணத்தானை - அன்பிற் குரிய படை. எறிந்து - தாக்கி.

(இதுவுமது)

௬௩ - ௭௧ : கேட்போர்க்கு .... ஆகும்

(பொ-ரை.) அப் பகைவர் புறங்காட்டி ஓடிய பின்னர் நம்மை வினவுவோர்க்கெல்லாம் வாட் போராகிய வலிமை மிக்க தொழிலை யுடைய வளமிக்க படைகளையுடைய வத்தவ நாட்டு மன்னனாகிய உனக்கும் அத் தருசகனுக்கும் பண்டுள்ள உறவு முறைமையும் எடுத்துக் கூறி அவ் வத்தவ மன்னன் இங்கிருக்கின்றான் என்னும் செய்தியையும் அவர் மனங்கொள்ளக் கூறிப் பின்னர்க் காமகோட்டத்தின் சோலையின்கண் நிகழ்ந்த உங்கள் களவொழுக்கத்தையும் அத் தருசக மன்னவனுக்குக் கூறுவிப்பே மாயின் அதுகேட்ட பின்னர் இப்பொழுது அப் பதுமாபதியை மணம் செய்துகொள்ளுதலைக் கருதி இந் நகரத்தில் வந்துள்ள அச்சுவப் பெருமகனுக்கு அத் தருசகன் மனமொன்றி அவளைக் கொடாதிருத்தலுங் கூடும்; என்க.

(வி - ம்.) வத்தவர்க்கிறையை : முன்னிலைப்புறமொழி. கிளைமை - உறவுமுறைமை. உளமை - இருக்குந்தன்மை. மன்றல் - திருமணம். வந்த மன்னற்கு - அச்சுவப் பெருமகனுக்கு. ஒன்றுபு - ஒன்றி. உண்டுமாகும் : உண்டாகும். உண்டு, உண்டும் என வருதலை, ''காரிய, மூண்டு மாங்கொல்'' (உ. கக : கசுஎ—அ) ''இல்லை என்னீருண்டு மென்னீர்'' (தேவா. சுந்தர. திருவோணகாந்தன் றளி.)

(இதுவுமது)

சுசு - கoடு : ஒன்றினன் .... பாடிட

(பொ - ரை.) ''பெருமானே! ஒரோவழி அத் தருசக மன்னன் அந்த அச்சுவப் பெருமகனுக்குப் பதுமாபதியை வழங்குதற்கு உடன்படுவானாயினும் பொற்றேமல் கிடக்கும் இள முலையினையும் ஆராய்ந்தணிந்த அணிகலன்களையுமுடைய அப்பதுமாபதி நங்கை அவ்வச்சுவப் பெருமகனோடு அவனுக்கு மனைவியாகி அவனோடு செல்லாள், அங்ஙனமாவது ஒருதலை. ஆதலால் அதன் பிற்பாடு அத் திருமணச் செய்தி பற்றி வேறு வேறு ஆராய்ச்சிகள் செய்வோம், அதுகிடக்க, இப்பொழுதே அப் பகை மன்னரை வெல்லுதற்கு எழுக'' என்று கூறி அவ்விருவரும் எழுந்து ஆங்கே சென்று அவ்விடத்தே சின்னச் சோலை என்னும் பெயரையுடைய ஒரு மலையின் மேல் ஏறி இருந்து ஆராய்ச்சியுடைய கேள்விச் செல்வமாகிய ஒரு பண்ணைத் தங்கேளிர்கள் வரும் பொருட்டுப் பாடா நிற்ப; என்க.

(வி - ம்.) ஒரோவழி ஒன்றினனாயின் என்க. பொன் - பொன் போலும் தேமல்; அழகுமாம். மாதர் : பதுமாபதி. உரிமையின் - மனைவியாக. ஓடாள் - செல்லாள். சின்னச்சோலை - ஒரு மலையின் பெயர். பன்னல் - ஆராய்தல். கேள்வியாகிய பண் என்க.

(தோழர் செயல்)

க0சு - ககக : எண்ணிய .... குழுமி

(பொ - ரை.) அப் பண்ணொலி கேட்ட உதயணனுடைய தோழர்களெல்லாம் தாங்கள் வந்துள்ள காரியத்திற்கு இடையூறு ஏதும் இல்லாமையை அப் பண்ணைத் திப்பமாகக் கேட்டலாலே தெளிந்து கொண்டவராய்க் குறையாத அன்போடும் முன்னுளி லல்லது வழி வழியாக வந்த மிகப்பெரிய அன்போடு பகைவர்களை வெல்லுகின்ற அத் தொல் படை மறவர்கள் அவ்விடத்தே வந்து குழுமியபொழுது அவர்களுடைய தொகையை எண்ணிக் காணுங்கால் அரசியல் நூலினது இயல்பினைப் பயின்று முதிர்ந்து கூறும் வழி பிழையாமல் எண்ணிக் கண்டபோது அந்த அளவு குறையாதிருத்தலாலே இனி நமக்குத் தீதொன்று மில்லை என்று மகிழ்ச்சியால் நிரம்பி; என்க.

(வி - ம்.) எண்ணிய கருமம் - தருசகனை நட்புக்கோடல். ஆறு வன்பு - குறையாத அன்பு. கழிபெருங் காதல் - மிகுபேரன்பு. படைநர் - மறவர். ஆற்றுளி - வழிப்படி. அத்துணை - அவ்வளவு. ஊறு - இடையூறு. கழுமி - நிரம்பி.

(இதுவுமது)

கக௪ - க௨க : கரப்பில் .... வலித்து

(பொ - ரை.) இரவலர்க்குக் கரவாது வழங்கும் வள்ளன்மை யுடைய பிரச்சோதன மன்னனுடைய வெகுளிமிக்க படையினை எளிதில் அழித்த தலைமைத் தன்மையுடைய நம்முடைய மறவர் களுக்கு இப்பகைவரது பெரிய படையானது காக்கைக் கூட்டமே யாகும் என்று நினைத்தற்குரிய அத்தகையதொரு சூழ்ச்சியோடே பொருந்தி எவ்வாற்றானும் குவளை மலர்போன்ற மையுண்ட கண் களையுடைய இப் பதுமாபதியோடு புணர்ந்த காலத்து அல்லது அழகுடைய நம் மன்னர் பெருமான் துன்பத்தினின்றும் அகலான் ஆதலாலே போர்க்கு வந்துள்ள இப் பகைப் படை கலங்கி ஓடும்படி நாக்குவேமாக என்று உள்ளத்திலே துணிந்து; என்க.

(வி - ம்.) செம்மலாளர் - தலைமைத் தன்மையுடைய மறவர். கனபடை - பகைவருடைய பெரிய படை. இரவிற் போர் செய்யக் கருதினமையின் பகைவர் காக்கைத்தொகை எனப்பட்டார். இதனால் இவர் தம்மைக் கூகைப் படையோடு உவமித்துக்கொண்டனர். இஃது ஏகதேச உருவகம் :

"பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது"

என்னும் திருக்குறளையும் நினைக; (குறள் - ௪௮௧). இன்னும் களப் படை காக்கைத்தொகை என்ற இஃது, "ஆயிரங் காக்கைக்கு ஒரு கல்" என்னும் பழமொழி பற்றி அப் பகைப் படையின் எளிமை குறித்து நிற்றலுங் காண்க. அத்திறத்து - அத்தகைய சூழ்ச்சியோடு. இவள் : பதுமாபதி. குருசில் : உதயணன். புலம்பு - துன்பம். வாட்டுதல் - வாட்டுவேம். வலித்து - துணிந்து.

(இதுவுமது)

க௨௨ - க௨௫ : மலை .... காட்டி

(பொ - ரை.) சின்னச் சோலை யென்னும் அந்த மலையினின் றும் கீழிறங்கி விலை வரம்பிட்டு அறிய ஒண்ணாத அரிய விலையை யுடைய நல்ல மணிகளோடு போய் அப் பகைவர் உள்ளவிடத்து அந்தப் பெரு விலைப் பண்டமாகிய மணிகளை விலைக்குக் கொடுத்தலை விரும்பிக் கொழுவிய மணி வணிகர்களின் கூட்டம் போலத் தம்மைப் பிறர்க்கு அறிவுறுத்திக் கொண்டு; என்க.

(வி - ம்.) மலை - சின்னச் சோலையென்னும் மலை. வரம்பு - எல்லை. அருவி - கொடுத்தற்கரிய விலை. மணியுடன் போதகத்தந்து என்க. அவ்வழி - அப் பகைவருள்ள இடத்தில். பெய்வது - விலைக்குக் கொடுத்தல். செழுமணி - ஒளி முதலியவற்றால் வளமுடைய மணி. பணிக்காரர் - மணி வணிகர். காட்டி - தம்மைப் பிறர் நினைக்கும்படி செய்து.

(இதுவுமது)

கஉசு - க௩௦ : உறு .... உறீஇ

(பொ - ரை) மிக்க விலையினைக் கொண்டு தாம் பெறுகின்ற விலைக்குக் குறையாத வெண்பூந்துகிலும் செம்பூங்கச்சும் உடைவாளும் பெரு வாளும் அணிந்த அழகோடு சேர்ந்த ஒப்பனையையுடையராய் அக் கூட்டத்தில் தொழில் செய்தற்குரிய இளையரை ஆராய்ந்து நியமித்துக் கொண்டு நன்கு பொருள்களைக் கட்டி; என்க.

(வி - ம்.) உறு - மிகுதி. விலைபிழையா - விலைப்பொருளுக்குக் குறையாத என்க. சுரிகை - உடைவாள். உரு - வடிவம். வெள்ளைத் துகிலும் செம்பூங்கச்சும் அணிந்துகொண்டு உடைவாளும், வாளும் கட்டிய இடையினராய் ஆகிய வடிவத்தோடு என்க. ஒற்றி - ஆராய்ந்துணர்ந்து. தளைபிணியுறீஇ - பொருட்களை நன்றாகக் கட்டி.

(மணப் பொருள்கள்)

க௩க - க௪௦ : பல் .... அடக்கி

(பொ - ரை.) பலவாகிய உறைப் பைகளில் அமைந்த உள்ளறைகளிலே நாகமலர் அகவிதழும், விரும்பப்பட்ட தக்கோலமும், மணமுடைய பச்சைக் கருப்பூரமும், சோணப்பூவும், குங்குமப் பூவும், கொழுவிய காலையுடைய கொட்டமும், ஒளிமிக்க வைரமுடைய துருக்கமும், ஒளியையுடைய நாகுணமும், வைரமேறிய அகிற் பொடியும்; கணுக்களையுடைய சாலேகமும், கொழுவிய வெட்டிவேர் விலாமிச்சை வேர் என்னும் இருவேரியும், பெரிய இலவங்கமும் அழகிய குளிர்ந்த தகாமும் அரக்கும் அகிற்குறடும் சந்தனக் குறடும் நறுமணச் சாந்திற்கு உரியனவாகிய இன்னோரன்ன பிறவும் நீங்காமல் நிறைய அடக்கி வைத்து; என்க.

(வி - ம்.) உறைப்பல் பை என மாறுக. அல்லி - அகவிதழ். தக்கோலம் - பஞ்சவாசத்தொன்று. பனிதம் - பச்சைக் கருப்பூரம். சந்தனக் குறை - சந்தனக் குறடு (கட்டை). ஒருவா - நீங்காமல்.

(உண் பொருள்கள்)

க௪க - க௪௫ : முதிர் .... அடக்கி

(பொ - ரை.) முதிர்ந்த மிளகுப் பழமும், முற்றிய ஒளி திகழ்ந்த மஞ்சளும், இஞ்சியும், சிவந்த சிறுகடுகும், சிறந்த

பெருங்காயமும், நன்மைமிக்க சிறப்பினையுடைய சீரகத்து அரிசியும், ஏலமும், பிற காயங்களும், ஆகிய எல்லாவற்றையும் ஆராய்ந்த பைகளில் அடக்கிக் கொண்டு; என்க.

(வி - ம்.) முதிர்ந்த பழமாகிய மிளகு என்க. காயம் - கறிக்கிடு பொருள்கள். ஆய்வனர் - ஆராய்ந்து.

(மருந்திற்குரியவை)

௧௪௬ - ௧௫௧ : அஞ்சனம் .... அடக்கி

(பொ - ரை) அஞ்சனம், மனோசிலை, அழகிய அரிதாரம், துத்தம், மாஞ்சி, அத்தவத்திரதம், திப்பிலி, இந்துப்பு ஆகிய இவற்றைப் பைகளில் சமமாக அமைத்துப் பின்னரும், தாழி மேதை, கெடாத துவர்ச்சிகை, வண்ணிகை, வங்கப் பாவை, என்னும் இம் மருந்துப் பொருள்களோடு பிற மருந்துப் பொருள்களையும் ஒருங்கு சேர்த்துப் பைகளில் அடக்கிக் கொண்டு; என்க.

(வி - ம்.) மாஞ்சி - சடாமாஞ்சி. அத்தவத்திரதம் - மடற்றுத்தம். தாழி - சிவதை. மேதை - பொற்றலைக்கையாந்தகரை.

(இதுவுமது)

௧௫௨ - ௧௬௦ : இலச்சினை .... மார்பினர்

(பொ - ரை.) இலச்சினை பொறித்த தலைச்சுமையாகிய இச் சரக்குகளை உடையராய்க் கத்தூரி பூசப்பட்ட நீலநிறமான தலை மயிரையுடையராய், அம் மயிரின்கண் நீலமணி போலும் நிறமுடைய குவளையினது அழகிய மலரைச் செருகிப் பொருந்தும்படி அடக்கி வைத்த வாக்குடைய சிகையினையுடையராய், மல்லிகை மலரை வைத்துத் தொழில் வல்லோர் இயற்றிய செம்பொன் மாத்திரை எனனும் அணிகலன் செருகிய காதினை யுடையராய், அழகிய ஒளிச் சுடரையுடைய மணிகளை அழகுண்டாகப் பதித்து வைத்துக் குற்றமின்றி விளங்குகின்ற மோதிரமணிந்த விரலினை யுடையராய், நறுமணப் பொடி திமிர்ந்த மார்பினையுடையராய் ; என்க.

(வி - ம்.) இலச்சினை - முத்திரை. தலைச்சுமையாகிய சரக்கு என்க. நானம் - கத்தூரி. குஞ்சி - தலைமயிர். வாக்கு - மயிர்வகிர்வு. சிகை - தலைமுடி. செம்பொன் மாத்திரை - ஒருவகைக் காதணி. இரீஇ - இருத்தி.

(மகளிர்க்குரியவை)

௧௬௧ - ௧௬௬ : மகரிகை......... கையர்

(பொ - ரை.) மகரமீன் வடிவமாகச் செய்த பேழையைத் திறந்து இரு பக்கத்து மூடிகளினும் அப்பகை மன்னர் பாசறையி

ளுள்ள மகளிர்கள் விரும்புதற்குரிய பேரொளி படைத்த பத்திக் கடிப்பும், பவழத் திரியும், முத்துவடமும், முழுமணிக் காசும், பல வாகிய மணிகள் பதிக்கப் பெற்ற தாழியும், மெல்லிய மூலைக் கச்சும் உத்தியணியும், உள்ளிட்ட இன்னோரன்ன பிற அணிகலன் களும் ஓவியப்படாத்தில் அழகாகத் தோன்றும்படி தூங்கவிட்டு அவற்றை ஏந்தித் தூங்கவிட்ட கையினை உடையராய்; என்க.

(வி - ம்.) மகரிகை - மகரமீன் வடிவமாகச் செய்யப்பட்ட ஒரு வகைப் பேழை. சமமான மூடியுள்ள அப் பேழையைத் திறந்து வெளிப்பட அம் மூடிகளின்கண் பத்திக் கடிப்பு முதலிய அணிகலன் களைத் தூக்கி இருந்தனர் என்பது கருத்து. சித்திரக்கிழி - ஓவியம் எழுதப்பட்ட படாம். அப்பேழையைத் தூங்கவிட்டுப் பற்றிய கையை யுடையர் என்க.

(இதுவுமது)

௧௬௧ - ௧௭0 : ஏற்றிய .... அடக்கி

(பொ - ரை.) நூலிழையாலே பல்வேறு வகைக் கோலம் அமைய ஏற்றப்பட்டனவும், நுரையை விரித்தாற் போன்றனவும், நுண்ணிய நூலால் செய்யப்பட்டனவும் ஆகிய ஆடைகளையும், இடையின்கண் விரித்துக் கட்டிய அழகிய பூவேலை செய்த கச்சுக் களையும் போர்த்துக் கட்டும் மேற் போர்வையினுள் வைத்துக் கட்டாகக் கட்டிக்கொண்டு, பொன்னணிகலனும் அவற்றை நிறுக் கும் துலாக்கோலும் பற்றிய கையையுடையராய், இன்னும் கழலும் கச்சும் கலிங்கமும் இன்னோரன்ன பிறவும் அம் மகளிர் விரும்பும் இயல்புடையவற்றைத் தனித்தனியாக ஆராய்ந்து அடக்கி வைத்துக் கொண்டும்; என்க.

(வி - ம்.) கோலம் - பூங்கொடி மலர் முதலியன அமையச் செய்யும் நூலாலியற்றிய பல்வகை ஓவியங்கள். நுரை - நீரின் நுரை. அரை - இடை. மீக்கோள் - போர்வை. பொற்றொடி - பொன்வளையல். நிறைக் கோல் - துலாக்கோல். அவர் : அம்மகளிர்.

(இதுவுமது)

௧௭௬ - ௧௮0 : காட்சி .... தோன்றலும்

(பொ - ரை.) தம்மைக் காண்போர் விரும்பி வந்து காணு மாறு காட்சியை முன்னிட்டுக் கொண்ட மாண்புடையராகிப் படைகளோடிருக்கும் பகை மன்னர் தம் பாசறையை எய்தினராக; அப்பொழுது இடபகன் என்னும் அமைச்சன் முன்னுள் உய்த்தி பேரறிவுடைய இசைச்சனும் தங்களுடைய குறிப்பின்கண் தவறாத பல குதிரையொடு வந்து சேர; என்க.

(வி - ம்.) மன்னர் : பகைமன்னர். பாடி - பாசறை. விடைப் பேரமைச்சன் : இடபகன். இசைச்சன் - உதயணனுடைய பார்ப்பனத் தோழன்.

(இதுவுமது)

கஅுக - கஅுக : அதிரா .... எய்தி

(பொ - ரை.) அவ்வாறு தங்கள் கருத்தின்படி குதிரைகள் பலவற்றையுங் கொணர்ந்த தோழனாகிய இசைச்சனை, அவ்விடத்திலேயே விட்டு அக் குதிரைகளைக் கைக்கொண்டு விலை கூறுதற் பொருட்டு குதிரை வணிகர்போன்று வேடங்கொண்ட ஒரு குழுவிற்குக் குற்றமற்ற சூழ்ச்சியினையுடைய வயந்தக குமரனைத் தலைவனாக அமைத்து வெவ்விய ஆற்றலோடும் வெற்றியோடும் இராசகிரிய நகரத்தின்மேல் போர்க்கு வந்து தங்கிய அப் பகை மன்னரை வெல்லுதற்குத் தம்முள் ஒற்றுமையாகக் கூடி; என்க.

(வி - ம்.) அதிராத் தோழன் - நடுக்கமில்லாத இசைச்சன், குதிரை வாணிகக் குழுவினோர்க்கு என்க. ஒன்னார்:பகைவர். அடற்கு-வெல்லுதற்கு.

(இதுவுமது)

கஅுஎ - கஅஎ : வழக்கொடு............இணங்குவனராகி

(பொ - ரை.) அப் பகைப் பாசறையினரைக் கண்டு, "ஐய! யாங்கள் எங்கள் முன்னோர் வழக்கத்திற்கு இயைய வழிவழியாகக் குதிரை வணிகம் செய்யும் வணிகராவேம். இந்த இராசகிரிய நகரத்து மன்னன் தருசகன் எமக்கு ஒன்பது ஆண்டுகளாகப் பழக்கமுள்ளவன். போரின்கண் மிக்குச் செல்லும் படைகளையுடைய இம் மகத நாட்டு மன்னன் பண்டுபோல எம்மிடத்தே அன்புடையன் அல்லன் ஆயினன். ஆதலின் யாங்கள் படை கூட்டி இந்தப் பழைய நகரத்து எல்லையெல்லாம் எங்களுக்குரிய தாக்கக் கருதி நெடுநாளாக நினைந்திருந்தோம்; அதற்குச் செவ்வி பார்த்துக் கொண்டிருக்கின்றேம்" என்று இன்னோரன்ன பல பொய்ம் மொழிகளையும் அவருக்குப் பொருந்துமாறு நன்கு கூறி, "ஐய! நீங்கள் எங்கள் கருத்தின்படி அம் மன்னனோடு போர் செய்தற்கு வந்திருத்தலால் உங்களுக்கு உதவியாக யாங்கள் இந்த நகரத்தினுள்ளே புகுந்து அங்கே நிகழ்வனவற்றை அறிந்து வந்து கூறுவது யாங்கள் செய்யத்தகுந்த உதவியாகும்" என்று கூறுதலும், அது கேட்ட அப் பகை மன்னர்களும் தம்முட் கூடி ஆராய்ந்து இவர்கள் வேண்டுகோளுக்கு இணங்குவாராய்; என்க.

(வி - ம்.) வழக்கு - முன்னோர் வழக்கம். வாசிவாணிகம்; குதிரை வாணிகம். ஒன்பதிற்றியாட்டையன் - ஒன்பது யாண்டுப் பழக்கமுடையவன். அமர் மண்டுதானை என மாறுக. மகதமன்னன்; தருசகன். பண்டையன் போலான் - முன்போல நட்புள்ளவனாக இரான். பொக்கம் - பொய். கணம் - கூட்டம்.

(பகை மன்னர் செயல்)

௧௯௮ - ௨௦௨ : பெரும்பரி .... உரைப்ப

(பொ - ரை.) அதுகேட்ட அம் மன்னர்கள் மகிழ்ந்து அவர்க்குச் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்து, "ஐய! நீவிர் அத் தருசகனுடைய நகருட் சென்று அங்கு நிகழும் சோர்வுகளை ஒற்றி வந்து எங்கட்குக் கூறுங்கள்" என்று கூறிப் பொருள்களை யும் அணிகலன்களையும் ஓரிடத்தே நிரப்பிக் கொடுத்து "இற்றை நாள் தொடங்கி நீங்கள் இவ்விடத்திருங்கள்" என்று முகமன் கூறிப் பொருந்திய அன்போடு நெஞ்சு நெகிழ்ந்து கூறா நிற்ப; என்க.

(வி - ம்.) பரிசாரம் - வழிபாடு. பரிசாரம் அருளி - வழிபாடு செய்யும் பணியாளரை வழங்கி எனினுமாம். அற்றம் - சோர்வு. இன்றைக்கொண்டு - இன்று தொடங்கி. இவணிராமின் - இவ்விடத்திருங்கள்.

(உதயணன் முதலியோர் செயல்)

௨௦௩ - ௨௦௯ : வந்தவர் .... ஆகி

(பொ - ரை.) வெல்லற்கரிய ஆற்றலுடைய உருமண்ணு வாவும் மறவரும் இவ்வாறு அப் பகைவர் பாசறையுள் இடம் பெற்றுத் தம்மரசனாகிய உதயணனோடு உட்புகுந்து அப் பாசறைக்குள் தாம் தனித்திருப்பதற்கு ஏற்ற இடத்தை வகுத்துக்கொண்டு தங்கியிருந்து அங்குத் தங்கியிருக்கும் அப் பகை மன்னர் பாசறைப் படையினது அளவும் வெற்றியுடைய அப் படையின் மறப் பண்பும் கூட்டமாகிய அப் பகை மன்னர் கருத்தும் பிறவும் இரவினும் பகலினும் அவர்களோடு ஊடாடி ஆராய்ந்து அறிந்துகொள்வாராய் அப் பகைப் படைகளை ஒரே பொழுதின்கண் உயிருண்ணுதற்குக் கருதியிருக்கும் கூற்றுவன் போன்ற ஆற்றலுடையவராய்; என்க.

(வி - ம்.) பாடியுள் - பகைவருடைய பாசறையுள். வீடு - படை வீடு. கூட்ட மன்னர் - பகை மன்னராகிய எண்மர். இவர் சங்க மன்னர் எனவும் வழங்கப்படுவர். விறல் - வெற்றி. இருள் - இரவு. ஒருங்குயிருண்ணுங் கூற்றம் என்னும் இதனோடு, "எருமைக் கடும்பரி யூர்வோ னுயிர்த்தொகை, ஒருபகல் எல்லையி னுண்ணும்" (சிலப். ௨௬ : ௨௧௫ - ௬) என்னும் இதனையும் நினைக.

(உதயணனுடைய வீரர் இரவிற் போர் புரிதல்)

உகாo - உகஉ : மண்டில் .... ஆகி

(பொ - ரை.) ஞாயிற்று மண்டிலம் மறைந்த இருள் மயங்கிய நள்ளிரவின்கண் எட்டுத் திசைகளினும் வைத்து இப் பகைவரை இன்னின்ன இடத்திலே தாக்குவேம் என்று தம்முள் எல்லோரும் அறியும்படி ஆராய்ந்து துணிந்த துணிவினை உடையவராய்; என்க.

(வி - ம்.) மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம். இருள் மயங்கு யாமம் என்றது நள்ளிரவினை. எறிதும் - தாக்குவேம்; கொல்லுவேம் எனினுமாம்.

(இதுவுமது)

உகஙு - உகசு : நூலில் .... பொழுதில்

(பொ - ரை.) அப் பாசறைக்கண் அமைந்த நூலிட்டு இயற்றிய பரவிய அழகிய வீதியின் கண்ணும் அகத்தும் பாசறைக் காவலர் பறையடித்து ஆங்காங்குப் புறக் காவலமைத்துத் தலைக் காவலாக அமைந்திருக்கும் வலிய இளமை வாய்ந்த வில் வீரர்களுக்கு எல்லை தோறும் சென்று சென்று நன்கு காவல் செய்தலின்கண் சோர்ந்து விடாதீர். நன்கு விழிப்புடன் காவல் செய்யுங்கள்! என்று பொருத்தமாகக் கூறி ஒலி அடங்கிய நள்ளிரவின்கண் என்க.

(வி - ம்.) வீதி - பாசறையிலுள்ள வீதி. பறைக்கண் எருக்கி - பறையடித்து. உறந்து - மிகுந்து. உறந்து இகழுன்மின் என்க. ஒலியுண்டாகிய பொழுதில் என்க.

(இதுவுமது)

உஉo - உஉச : கலங்க .... நிறீஇ

(பொ - ரை.) யாம் இப் பகைவர்கள் மனங் கலங்கும்படி தாக்குதலாலே இப் படை ஆற்றல் குன்றி மெலிந்து உடைந்து ஓடுவதாயினும் உடையாது எதிர்த்து நிற்பதாயினும் இப் போருக்குப் பின்னர் யாம் அனைவரும் அடைதற்குரிய இடம் இது வாகும் என்று எல்லோரும் அறியும்படி கூறிப் பின்னர்த் தம்மை நான்கு கூறாக வகுத்துக்கொண்டு அவற்றுள் மேற்குப் பகுதியில் தம்மரசனைச் சிறந்த காவலின் அகத்தே நிறுத்தி வைத்து; என்க.

(வி - ம்.) அடையும் தானம் - முடிவின்கண் வந்து கூடுதற்குரிய இடம். நாற்பால் - நான்கு பகுதி. மேற்பால் - அவற்றுள் முதற் பகுதி என்க. காவலன் - உதயணன்.

(இதுவுமது)

௨௨௫ - ௨௩௨ : பொற்புடை .... சாய்த்தும்

(பொ - ரை.) அழகினையுடைய குதிரைகளின் மேல் பொலிவுறும்படி ஏறிப் பகைப் படை தம்மைத் துன்புறுத்தாத நன்மையோடு பொலிவுடைய சாலிகையாகிய கவசத்தை அழகாக அணிந்த உடலை உடையராய், அழகிய மாலையணிந்த மார்பினையும், தாளாண்மையையும், கடிய ஆற்றலையுமுடைய விரிசிக மன்னன் வாழ்க! என்று ஆரவாரித்துக் கொண்டு, தலைவனாகிய மல்லன் என்பவனுடைய பாசறையைக் காத்திருந்த நீலக் கச்சையையணிந்த நிரல்பட்ட அணியாகி நின்ற வீரக் கழலணிந்த மறவர்களை வேலால் குத்திச் சாய்த்தும்; என்க.

(வி - ம்.) பொற்புடை - அழகுடைய கலனை. சாலிகையாகிய கவயம் என்க; இருபெயரொட்டு. விரிசிகன் வாழ்க என்று ஆரவாரித்துக் கொண்டு மல்லன் மறவரைச் சாய்த்தனர் என்க. அஃதெற்றுக்கெனின், அங்குள்ளோர் அங்குத் தாக்குபவர் விரிசிகன் மறவர் என்று நினைத்தற்கென்க. நிரை மறவர், கழன் மறவர் எனத் தனித்தனி கூட்டுக. நிரை - அணி. மேலாள் ஆகிய மல்லன் என்க. மேலாள் - அரசன்.

(இதுவுமது)

௨௩௨ - ௨௩௬ : கோலம் .... உண்டும்

(பொ - ரை.) அழகிய குதிரை பூண்ட தேரையுடைய அடவி மன்னன் வாழ்க என்று ஆரவாரித்தவராய்ச் சென்று பெரிய மலை போன்ற மார்பினையுடையவனும், தளராத செங்கோலையுடையவனும், ஆகிய மிலேச்சன் என்பான் வாழ்க! என்று, தலைக் காவலாக இருந்த அவன் படை வீரரைக் கொன்று உயிருண்டும்; என்க.

(வி - ம்.) அடவி - ஓர் அரசன். அடவி வாழ்க என்று மிலேச்சன் மல்லரை உயிருண்டு என்க. தலைக் காப்பு - முதன்மையான காவல்: மெய்க் காவலுமாம்.

(இதுவுமது)

௨௩௭ - ௨௩௮ : கொண்ட .... துவைத்தும்

(பொ - ரை.) எலிச் செவியரசன் வாழ்க! என்று மேற்கொண்ட ஆரவாரத்தோடு கூட இசை தருகின்ற பல்வேறு இசைக் கருவிகளை இசைக் கூறுகள் தோன்ற இயக்கி அயோத்தியரசன்! படைஞரைக் கொன்றும்; என்க.

(வி - ம்.) கொண்ட ஆர்ப்பு - மேற்கொண்ட ஆரவாரம். அயோத்தி யரசன் பெயர் இங்கே கூறப்படாமையின் எலிச் செவி

யரசன் வாழ்க என்று அவனது முரசினை முழக்கி அயோத்தியரசன் படைஞரைக் கொன்று; என்க. எலிச் செவி - எலிச்செவியரசன். பல்லியம் - பலவாகிய இசைக் கருவி. பால் - பகுதி; இசைப் பகுதி என்க.

(இதுவுமது)

உகக - உசஉ : விறல்.........எறிந்தும்

(பொ - ரை) வெல்லுதற்கரிய வெகுளியையுடைய பகை யரசர் பலரையும் வென்று கடந்த கேண்மை கொண்டோர் விடுதற்கரிய பண்புகளையுடைய பசிய வெற்றி மாலையணிந்த வேந்தருட் சிறந்த வேந்தனாகிய சங்கர மன்னன் வாழ்க! என்று ஆரவாரித்துக் கொண்டு போய் வெற்றி பொருந்திய வேசாலி மன்னன் பாசறையை அணுகி அங்குள்ள பகைவர்களைக் கொன்றும்; என்க.

(வி - ம்.) விறல் - வெற்றி. வேசாலி : ஓரரசன். பாடி-பாசறை. கேண்மை கொண்டார் விடலரும் வேந்தன் என்க. சங்கரன் : ஓரரசன். தங்கலர் - பகைவர். எறிந்தும் - கொன்றும்.

(இதுவுமது)

உசங - உருo : வத்தவன் .... எறிய

(பொ - ரை.) உதயணனுக்குரிய பெரிய முரசத்தை முழக்கிக் கொண்டு இரும்பாலியற்றிய வெயில் போன்று சுடர் வீசும் வாட் படையை உறையினின்றும் உருவிய கையராய்ச் சென்று ஆங்குக் காவல் செய்திருந்த மறவர்களைத் துயிலினகண் கொன்று யானைப் படைகளை வென்று மலை கவிழ்ந்தாற் போலக் கவிழ்ந்து வீழும்படி செய்து குதிரைகளைக் கொன்று, கொல்லுந் தொழிலையுடைய காலாட் படைகளையும் குதிரை பூண்ட கொடியுயர்த்திய நெடிய தேர்களையும் அவ்வுதயணனை மறவர்கள் சூழ்ந்துகொண்டு அழித்தலாலே என்க.

(வி - ம்.) வத்தவன் : உதயணன். வத்தவனுக்குரிய சங்கேத ஒலியால் முரசினை முழக்கி என்பது கருத்து. அயில் - இரும்பு. புரை; உவம உருபு. உரீஇய - உருவிய. ஓரீஇ - சென்று. மா - குதிரை. மறுத்திட - மறிக்கச் செய்து.

(இதுவுமது)

உருக - உ௬ரு : கடு .... ஆகி

(பொ - ரை.) கடிய சூறைக் காற்று மோதாநின்ற கடல் போலப் பொங்கி எழுந்து வெல்லுதற்கரிய பகைவருடைய பெரிய படைகள் ஆரவாரத்தோடு தொடங்கித் தம்முள் தாமே தாக்கி

யவராய்ப் பெரிதும் மயக்கம் எய்தா நிற்ப, உதயணன் மறவர்கள் இறுதியில் மதக் களிப்பையுடைய யானையையுடைய வத்தவ நாட்டு அரசனாகிய உதயண மன்னன் வாழ்க! என்று ஆரவாரிப்ப அதுகேட்ட அப் பகைப் படை யரசர்கள் ஒருவாறு உண்மையை உணர்ந்தவராய்; என்க.

(வி - ம்.) கடுவளி - விரைவுடைய சூறைக் காற்று. கைமயக்கு - செயலின்கண் மயக்கம். அறிந்தனர் - இங்குத் தாக்குவோர் உதயணன் மறவர் என்று அறிந்து கொண்டவர்.

(இதுவுமது)

உருச - உசரு : எம்.........என்

(பொ - ரை.) எம்முள்ளேயே எம்மிடத்து இங்ஙனம் ஒரு சூழ்ச்சியைச் செய்தார் உளர்போலும் என்று நினைத்துத் தங்களிடத்தும் அங்ஙனம் செய்வார் யார்? எனத் தெளியாதவராய்ப் பாசறையும் அரிய படைக்கலங்களும் அப்போர்க்களத்திலே கிடக்க விட்டு நீண்ட இந்த இருளினூடேயே ஓடிவிடுதல் நமக்கு உறுதியாம்என்று ஒவ்வொருவரும் தமக்குள்ளே கருதிக் கொண்டு பிறர் பிறர் செவிகளுக்கு அறியப்படாத செய்கையை உடையராய் அவ்விடத்தே முன்னர்ப் போர் செய்தற்கு வந்து தங்கிய கடுந் தொழிலையுடைய அப்பகை மன்னர் அனைவரும் தோல்வியெய்திக் குறையாத வேகத்தோடு ஓடித் தங்களுக்கு அரணாக அமைவதற்குரிய மலை முழைஞ்சுகளிலே சென்று புகுந்து மறைந்தனர் ; என்க.

(வி - ம்.) பாடியும் அருங்கலமும் என்க. அருங்கலம் - அரிய படைக் கலங்கள். பொருள் - உறுதிச் செயல்; பிறர் பிறர் செவியில் அறிவிக்கப்படாத செயல் என்க. கடுந்தொழின் மன்னர் என்றது இகழ்ச்சி. அரணாக அமைதற்குத் தகுந்த மலை முழைஞ்சு என்க.

கஎ. இரவெழுந்தது முற்றிற்று.

௧அ. தருசகனோடு கூடியது

இதன்கண் - சங்க மன்னரை உதயணன் வென்ற பின்னர் உருமண்ணுவா முதலியோர் செயலும், வயந்தகன் செயலும், தருசகன் செயலும், தருசகன் உதயணனை எதிர்கொள்ளச் செல்லுதலும், அமைச்சருட் சிலர், தருசகனைத் தடுத்தலும், அவன் அவர் அறிவுரை கேளாமல் உதயணனை எதிர்கொள்ளலும், உதயணனை முகமன் கூறி அரியணையில் இருக்கச் செய்தலும் பிறவும் கூறப்படும்.

அரணமை பெருமலை யடைவது பொருளென
முரணமை மன்னர் முடுகிய பின்னர்
ஆளுறு படாமைக் கோளுறு புரிந்த
செம்ம லாளர் தம்முட் கூடி
ஒன்னா மன்னரை யோட்டின மாதலின்
மின்னேர் சாயலை மேயநம் பெருமகற்
காக்க முண்டெனுஞ் சூழ்ச்சியோ டொருபாற்
புலர்ந்த காலை மலர்ந்தவ ணணுகிக்
களங்கரை கண்டு துளங்குபு வருவோர்
மகத மன்னற் குகவை யாகக்
கோடாச் செங்கோற் குருகுலத் தரசன்
ஓடாக் கழற்கா லுதயண குமரன்
கோயில் வேவினு ளாய்வளைப் பணைத்தோட்
டேவி வீயத் தீரா வவலமொடு
தன்னா டகன்று பன்னாடு படர்ந்து
புலம்பிவட் டீர்ந்து போகிய போந்தோன்
சலந்தீர் பெரும்புகழ்ச் சதானிக வரசனும்
மறப்பெருந் தானை மகத மன்னனும்
சிறப்புடைக் கிழமை செய்ததை யறிதலின்
அகப்பாட் டண்மைய னல்லதை யிகப்பத்
தாதலர் பைந்தார்த் தருசக னமக்கு
வேறல னவனை வென்றியி னீக்கி
மாறுசெயற் கிருந்த மன்னரை யோட்டியது
பண்ணி கார மாகக் கண்ணுற்று

முற்பாற் கிழமை முதலற வின்றி
நற்கியாப் புறீஇப் போது நாமெனச்
சிறந்த தோழர் சிலரொடு சென்று
விரவுமலர்த் தாரோ யிரவெறிந் தகற்றினன்
என்பது கூறென மன்பெருஞ் சீர்த்தி
வயந்தக குமரனை வாயி லாகப்
போக்கிய பின்றையவன் புனைநகர் வீதியுட்
கேட்போர்க் கெல்லாம் வேட்கை யுடைத்தா
மறைத்த லின்றி மறுகுதோ றறைய
அகன்பெருந் தானை யரசத் தாணியுள்
நிகழ்ந்த திற்றென நெடுந்தகை கேட்டு
நன்னுடு நடுக்க முறீஇத் தன்மேல்
ஒன்னு மன்ன ருடன்றுவரு காலை
வணக்கும் வாயில் காணுன் மம்மரொடு
நினைப்புள் ளுறுத்த நெஞ்சமொ டிருந்தோற்கு
வென்றி மாற்றஞ் சென்றுசெவிக் கிசைப்பப்
பூப்புரி முற்றம் பொலியப் புகுந்து
வாய்ப்பொரு ளாக வறிந்துவந் தோர்களைக்
காட்டுக விரைந்தெனக் காவல னருள
நகரங் காடிதோறும் பகர்வன னறையும்
வாட்டொழிற் றடக்கை வயந்தகற் காட்டி
உட்பட் டதனை யொழிவின் றுணர்ந்துநின்
கட்பட் டுணர்த்துதல் கரும மாக
வந்தனி னிவனென வேந்திறல் வேந்தன்
பருகு வன்ன பண்பின னுகி
அருகர் மாற்ற மங்கையி னவித்துக்
கேட்குஞ் செவ்வி நோக்கம் வேட்ப
இருபெரு மன்ன ரிறைவருந் தம்முள்
ஒருபெருங் கிழமை யுண்மை யுணர்த்தலும்
வயந்தகன் வாயது நிற்க வுயர்ந்த
நண்பே யன்றி நம்மொடு புணர்ந்த
கண்போற் கிழமைக் கலப்பு முண்டெனத்
தானை நாப்பட் டானெடுத் துரைத்து
வீணை நவின்ற விறல்வே லுதயணன்

இவண்வரப் பெற்றேன் றவமிக வுடையேனேன்
றேத மின்மையு நீதியும் விஞஅய்
இன்ஞ மன்ன ரிகலடு பெரும்படை
தாக்கிய வாறுந் தகர நூறிப்
போக்கிய வாறும் போந்த வண்ணமும்
முறைமையிற் கேட்டு நிறைநீர் வரைப்பிற்
கேட்ட காலையுங் கேட்டோ ருவப்ப
நட்டோர்க் காற்று நன்ன ராளன்
வரவெதிர் கொள்கென வாயிலும் வீதியும்
விரைமலர்ப் பூங்கொடி வேறுபட வுயரி
வனப்பொடு புணர்ந்த வார்கவுள் வேழம்
சினப்போ ரண்ணற்குச் செல்கெனப் போக்கிக்
குலத்திற் றன்னோடு நிகர்க்கு நனுதலிற்
கவற்சியொடு போந்த காவலன் முன்னர்ப்
புகற்சியொடு சேறல் பொருத்த மின்றெனப்
போற்றுங் கவரியுங் குடையுங் கோலமும்
மாற்றுவன னாகி மகதவர் கோமான்
இடுமணி யில்லதோர் பிடிமிசை யேறிப்
படுமணி வாயில் பலரொடும் போதர
வானுய ருலகம் வழுக்குபு வீழ்ந்த
தேனுயர் நறுந்தார்த் திறலோன் போலத்
தோழர் சூழ வேழ மேல்கொண்
டுதையண குமரன் புகுதர வோடிச்
சிதைபொரு டெரியுஞ் செங்நெறி யாளர்
கடல்கண் டன்ன வடலருந் தானையை
இனைய கூட்டமோ டெண்ணு தகம்புக்கு
வினைமேம் பட்ட வென்றி வேந்தனைத்
தெளிவது தீதெனச் சேர்ந்துசென் றிசைப்ப
நட்புவலைக் கிழமையி னம்பொருட் டாக
உட்குறு பெரும்படை யுலைத்த வொருவனை
வேறெனக் கருதுதல் விழுப்ப மன்றெனத்
தேறக் காட்டித் தெளிவு முந்துறீஇச்
சென்றுகண் ணுற்ற குன்று.........
இடத்தோ டொப்புமை நோக்கி யிருவரும்

தடக்கை பிணைஇச் சமயக் காட்சியர்
அன்பிற் கலந்த வின்பக் கட்டுரை
இருவருந் தம்மு ளேற்பவை கூறித்
திருவமர் கோயில் சென்றுபுக் கவ்வழி
உஞ்சையம் பெரும்பதி யுழக்குபு கொல்லும்
வெஞ்சின வேழத்து வெகுட்சி நீக்கிப்
பல்லுயிர்ப் பருவர லோம்பிய பெருமகன்
மல்லற் றானை வத்தவர் கோமாற்
கொன்னா மன்ன ருடல்சின முருக்கி
இன்னா நீக்கலு மேயர் குலத்தோற்
கியைந்துவந் ததுவென வியந்துவிரல் விதிர்த்துப்
பக்க மாக்க டத்தமு ளுரைக்கும்
உறுபுகழ்க் கிளவி சிறிய கேளாத்
தானு மவனுந் தானத் திழிந்தோர்
மணிக்கான் மண்டபத் தணித்தக விருந்து
தோன்றுமுதிர் தொடர்பே யன்றியுந் தோன்ற
அன்றைக் கிழமையு மாற்ற வளைஇப்
பள்ளி மாடமொடு கோயிலும் பாற்படுத்
தெள்ளி வந்த வின்னா மன்னரைப்
போரடு வருத்தந் தீரப் புகுகெனத்
தாருடை வேந்தன் றுன்பின் சென்று
கோயில் புகீஇ வாயிலு ளொழிந்து
விருப்பிற் றீரான் வேண்டுவ வமைத்து
வருத்த மோம்பினன் வத்தவற் பெற்றென்.

உரை

க௮. தருசகனொடு கூடியது

அஃதாவது உதயண மன்னன் மகத மன்னனாகிய தருசக னொடு கேண்மை கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(தோற்றுவாய்)

க - உ : அரண்.........பின்னர்

(பொ - ரை.) இவ்வாறு உதயணன் மறவரால் தாக்குண்ட பகைமை யமைந்த அச்சங்க மன்னர்கள், இனி யாம் நமக்கு அரணாக அமைதற்குரிய பெரிய மலைகளை அடைவதே நலமாம் என்று கருதி, விரைந்து ஓடிப் போன பின்னர்; என்க.

(வி - ம்.) முரண் - பகைமை. மன்னர் - சங்க மன்னர்.

(தோழர் செயல்)

௩ - ௯ : ஆள்.........வருவோர்

(பொ - ரை.) இனித் தம் மறவர்களுள் ஒருவனேனும் புண் படாதபடி பகைவர் கொள்கைக்கு இடையூறு செய்த தலைமைத் தன்மையுடைய உதயணனுடைய மறவர்கள் முன்னர்க் குறிப் பிட்ட இடத்திலே வந்து கூடித் தம்முள் யாம் பகை மன்னர்களை எளிதாக ஓட்டி விட்டேம்; ஆதலாலே மின் போன்ற சாயலை யுடைய பதுமாபதியை விரும்பிய நம் பெருமானுக்கு இனி இச் செயலால் ஆக்கமுண்டாதல் ஒருதலை என்று ஆராய்ந்து தெளிந் தவராய் அற்றை இரவு புலர்ந்த விடியற்காலத்தே முகமலர்ந்தவ ராய் அப் பாசறை இருப்பினை அணுகி அப் போர்க்களத்தின் எல்லையைக் கண்டு மனந் துணுக்குற்று வாரா நின்ற உருமண் ணுவா முதலியோர்; என்க.

(வி - ம்.) ஆள் ஊறு படாமை - ஆள் தம்முடைய மறவர்களுள் வைத்து ஓராள்தானும் புண்படாமல் என்க. இதற்கு, ''பகைவரைச் சார்ந்தவர்களுள் ஓராளும் புண்படாதபடி'' என்று உரை கூறி இதற்கு எடுத்துக் காட்டாக, ''ஆளற்றமின்றி யலர்தாரவன் றேழ ரோடும் கோளுற்ற கோவனிரை மீட்டவன்'' (சீவக. ௪௫௬) என்னும் சிந்தாமணிப் பகுதியைக் காட்டினருமுளர். இவ்வுரை பொருந்தாமை, ''மள்ளரைத்தபுத் துயிருண்டும்'' (உ௩௬) ''நங்கலரெறிந்தும்'' (உ௪உ) ''மறவரை......நூறி'' (உ௪௬-எ) எனவும் வருவனவற்றால் அறிக. செம்மலாளர் - தலைமையையுடைய மறவர். ஒன்னு மன்னர் - பகை மன்னர். சாயலை : பதுமாபதியை. முகமலர்ந்து என்க. களங் கரை கண்டு - போர்க்களத்தின் எல்லையைக் கண்டு. துளங்குபு - துளங்கி, தாம் செய்த கொலைத் தொழிலைக் கண்டு தாமே நடுங்கினர் என்பது கருத்து; வருவோர் - உருமண்ணுவா முதலியோர்.

(இதுவுமது)

௧0 - ௧௬ : மகத.........போந்தோன்

(பொ - ரை.) வயந்தகனை நோக்கி, ''அன்பனே! நீ சென்று இம் மகத நாட்டு மன்னனாகிய தருசகனுக்கு உயர்வுண்டாகும்

பொருட்டு வளையாத செங்கோலையுடைய குருகுலத்துள் தோன்றிய அரசனாகிய போர்க்களத்தே பிறக்கிடாத வீரக் கழலையுடைய காலையுடைய உதயண குமரன் தனது அரண்மனை தீப்பற்றி வெந்த காலத்தே அத் தீயினுளகப்பட்டுத் தன்னுடைய அழகிய வளையலணிந்த மூங்கில் போன்ற தோள்களையுடைய கோப்பெருந் தேவியாகிய வாசவதத்தையார் இறந்துபட்டமையாலே தீராத துன்பத்தோடு தனது வத்தவ நாட்டினின்றும் புறப்பட்டுப் பல வேறு நாடுகளிலும் யாத்திரை செய்து தனது துன்பத்தை இந் நாட்டின்கண் தீர்த்துக் கோடற்கு வந்தவன்" என்க.

(வி - ம்.) மகத மன்னன் : தருசகன். உகவை - மகிழ்ச்சியுமாம். குருகுலம் - ஐவகைக் குலத்துள் ஒன்று. உதயணன் பிறந்த குலம். கோயில் வேவு - பெயர். தேவி : வாசவதத்தை. வீய - இறந்துபட. அவலம் - துன்பம். புலம்பு; இவண் - இந்த நகரில் எனினுமாம். போந்தோன் : பெயர்.

(இதுவுமது)

கஎ -- உகூ : சலம்............நாமெனா

(பொ - ரை.) "வஞ்சகமற்ற பெரிய புகழையுடைய தன் தந்தையாகிய சதானிக மன்னனும், மறப் பண்புமிக்க பெரிய படைகளையுடைய நின் தந்தையாகிய மகத மன்னனும் பண்டு சிறப்புமிக்க நட்புக் கிழமை செய்திருந்த நிகழ்ச்சியை அவ்வுதயணன் அறிதலாலே அத்தகைய மன்னன் மகனாகிய நீ மிக நெருங்கிய கேண்மையுடையவன் அல்லனாக இருத்தலை அசற்றக் கருதி, "இத் தருசகன் நமக்கு அயலானல்லன். அவனை வெற்றியினின்றும் அகற்றி மாறுபாடு செய்து தோற்பித்தற்கு எண்ணிப் படை கூட்டி வந்திருந்த அச் சங்க மன்னரை நாமே புறங் கொடுத்தோடச் செய்து அச் செயலே அத் தருசகனுக்கு யாம் வழங்கும் காணிக்கையாகச் செய்து அவனை நேரில் கண்ணுற்றுப் பண்டைக் காலத்திலிருந்த நட்புக் கிழமை முதலற்றுப் போகாதபடி, நன்றாக மீண்டும் தொடர்புறுத்தி வைத்துப் பின்னர் நம் நாட்டுக்குப் போவோம்; என்று கருதி" என்க.

(வி - ம்.) சலம் - வஞ்சகம். சதானிகவரசன் : உதயணன் தந்தை. மகத மன்னன் : தருசகன் தந்தை. சிறப்புடைக் கிழமை - சிறப்புடைய நட்புரிமை அகப்பாட்டு அன் மையன் அல்லதை - மிக நெருங்கியவன் அல்லனாக இருத்தலை; இகப்ப - நீக்குதற்கு; அஃதாவது நண்பனாக்குதற்கு என்றவாறு. தாது - மகரந்தம். வேறலன் - அயலானல்லன், மன்னரை - சங்கமன்னரை. பண்ணிகாரமாக - காணிக்கையாக. முதலறவு - வேரற்றுப் போதல். நற்கு - நன்றாக. யாப்புறீஇ - தொடர்புபடுத்தி.

(இதுவுமது)

உசு - ௬௧ : சிறந்த .... பின்றை

(பொ - ரை.) "தனக்குச் சிறந்த நண்பர் ஒரு சிலரோடு அச்சங்க மன்னர் படைவீட்டிற்குச் சென்று நெருநல் இரவிலேயே அப் பகை மன்னர்களைத் தாக்கி ஓட்டி விட்டனன் என்னும் இச் செய்தியை அம் மன்னன் பால் கூறுவாயாக" என்று நிலைபெற்ற பெரும் புகழையுடைய அவ்வயந்தக குமரனைத் தூதாகப் போக்கிய பின்னர்; என்க.

(வி - ம்.) தோழர் சிலரொடு சென்று என்றான் உதயணனுடைய போராற்றல் தோன்றுதற்கு. விரவு மலர்த்தாரோய்! என்றது வயந்தகனை விளித்தபடியாம். சீர்த்தி - புகழ். வாயில் - தூது.

(வயந்தகன் செயல்)

௬௧ - ௬௩ : அவன் .... அறைய

(பொ - ரை.) அதுகேட்ட வயந்தகன் அங்ஙனமே ஒப்பனை செய்யப்பட்ட அவ்விராசகிரிய நகரத்தின் வீதியினுள்ளே சென்று ஆங்குக் கேட்கும் நகர மாந்தர்க்கெல்லாம் பெரிதும் வேட்கையுண்டாகும்படி இச் செய்தியை வெளிப்படையாக அவ் வீதிகளிலெல்லாம் கூறி அறிவியா நிற்ப; என்க.

(வி - ம்.) அவன் : வயந்தகன். முதல் நாள் அச்சுவப் பெரு மகனை எதிர் கொள்ளற் பொருட்டு அணி செய்யப்பட்டமையின் ஆசிரியர் அந் நினைவால் 'புனைநகர் வீதி' என்றார். மறைத்தலின்றி - வெளிப்படையாக. மறுகு - வீதி.

(தருசகன் செயல்)

௬௪ - ௭0 : அகன் .... இசைப்ப

(பொ - ரை.) பெரிய படைத் தலைவர்களையுடைய அரசத் தாணி மண்டபத்தின்கண் இருந்து முதல் நாள் நிகழ்ந்த செயல் இஃது என்று ஒற்றர்கள் கூறக் கேட்ட நெடிய புகழையுடைய அத் தருசக மன்னன் தனது நல்ல நாட்டின் கண்ணுள்ள மக்களை நடுங்கச் செய்து தன்மேல் அப் பகை மன்னர்கள் சினந்து போரிடுதற்கு வந்தபொழுது அப் பகை மன்னரை வணக்கும் வழியறியாமல் மயக்கத்தோடு பலவும் நினைந்து நினைந்து மயங்கும் நெஞ்சத்தோடு இருந்தவனுக்கு இந்த வெற்றிச் செய்தி சென்று செவியின்கண் ஒலித்தலாலே; என்க.

(வி - ம்.) இற்றெனு - இஃதென்று. ஒற்றர் கூற என்க. நெடுந் தகை : தருசகன். நன்னாடு : ஆகுபெயர். உடன்று வருகாலை - சினந்து வருகின்றபொழுது. மம்மர் - மயக்கம். வென்றி மாற்றம் - வெற்றியை யுணர்த்தும் சொல்.

(இதுவுமது)

சக - சஅ : பூ .... என

(பொ - ரை.) அதுகேட்ட தருசக மன்னன் மலர் பரப்பிய அவ்வரண்மனை முற்றம் பொலிவுறும்படி சென்று அச் செய்தியைக் கூறியவர்களைப் பார்த்து நீவிர், இச் செய்தியை உண்மையாக அறிந்து வந்து நுமக்குக் கூறியவர்களை எமக்கு விரைந்து காட்டுக என்று பணியா நிற்ப, அதுகேட்ட அம் மாந்தர்கள் அந் நகரத்தின் அங்காடித் தெருக்கள்தோறும் இச் செய்தியை விளக்கிக் கூறிக் கொண்டிருக்கும் வாட் போரில் வல்ல பெரிய கையையுடைய வயந்தகனை அரசனுக்குக் காட்டி, "அரசே! பகைவர் பாசறையகத்து நிகழ்ந்ததனை அஞ்சாமல் அறிந்து பெருமான்பால் உணர்த்துதலே தன்னுடைய காரியமாக மேற்கொண்டு ஈண்டு வந்துள்ளான் இவன்" என்று கூறா நிற்ப, அதுகேட்ட அத் தருசக மன்னன் அவ் வயந்தகனைப் பருகுபவன் போன்று பெரிதும் விரும்புவானாய்; என்க.

(வி - ம்.) பூப்புரி முற்றம் - மலரால் அழகுறுத்தப்பட்ட முற்றம். வாய்ப் பொருள் - உண்மையாய பொருள். காவலன் : தருசகன். அங்காடி - கடைத்தெரு. உட்பட்டது - பகைவர் பாசறையுள் நிகழ்ந்தது. இவன் என்றது, வயந்தகனை. பருகுவன்ன பண்பு - நீர்வேட்டோர் அந் நீரின்பாற் கொள்ளும் ஆர்வம் போன்ற பேரார்வம் என்க.

(இதுவுமது)

ருo - ருஎ : அருகர்........உரைத்து

(பொ - ரை.) அண்மையிலுள்ள மாந்தரின் பேச்சாரவாரத்தை அம் மன்னவன் தனது அழகிய கையினாலடக்கி அவ் வயந்தகனது மொழியைத் தான் கேட்கும் செவ்வியையுடைய குறிப்புடைய நோக்கத்தோடு அவ்வயந்தகனை விரும்பி நோக்கா நிற்ப, அங்ஙனம் செவ்விபெற்ற அவ் வயந்தகனும் அவ்வரசனை வணங்கி அத் தருசக மன்னனும் உதயண மன்னனுமாகிய இரு பெருவேந்தர்களுடைய தந்தைமார் இருவரும் பண்டு தம்முட் கொண்டிருந்த ஒப்பற்ற பெரிய நட்புரிமையை எடுத்துக் கூறுதலும், அதுகேட்ட அத் தருசக மன்னனும் மகிழ்ந்து ஆங்கு நின்ற தன் தானைத்தலைவரை நோக்கி, "அன்புடையீர்! இவ்வயந்தகன் ஈண்டு எடுத்துக் கூறிய மெய்ம்மொழி நிற்க, இங்ஙனம் உயர்ந்த நட்புரிமை மட்டுமேயன்றி அவ்வுதயண மன்னன் முன்னோர் நம் முன்னோரோடு கலந்த கண்போன்ற உறவுரிமையும் உண்டு" என்று அவர் நடுவே தானே எடுத்துக் காட்டி; என்க.

(வி - ம்.) அருகர் - அண்மையிலுள்ளோர். இருபெரு மன்னர் - உதயணனும் தருசகனும். இறைவர் - தந்தைமார். வாய்மொழி. கண்போற் கிழமைக் கலப்பு - கண் போன்ற காதற் கிழமையாலுண்டான தொடர்பு; என்றது, ஈண்டுத் தருசகன் உதயணன் மரபினர்க்கும் தன் மரபினர்க்கும் பண்டு திருமணத்தொடர்பும் உண்டு என்று தன் படைத் தலைவர்களுக்கு உணர்த்துகின்றான் என்க. கண்போற்கிழமை என்றது காதற்கிழமையை. நாப்பண் - நடுவில்.

(இதுவுமது)

௩௮ : ௬௪ : வீணை............கேட்டு

(பொ - ரை.) மேலும் யாழ்வித்தை பயின்று புகழ்படைத்த வெற்றிவேல் ஏந்திய அவ்வுதயண மன்னன் தானே இந்நகரத்திற்கு வரப்பெற்றேன் ஆதலால் யான் பண்டு தவம் மிகவும் செய்துடையேன் போலுமென்று கூறித் தன் மகிழ்ச்சியையும் அவ்வயந்தகனுக்கு உணர்த்தி அம்மன்னனுடைய உடல் நல முதலியவற்றையும் செங்கோல் நலத்தையும் வினவிப் பின்னர்த் தனக்கு இன்னுமை செய்தற்கு வந்த விரிசிகன் முதலிய மன்னருடைய போராற்றல் மிக்க பெரிய படையினை உதயணன் மறவர் தாக்கிய முறைமையினையும் அப்படை சிதர்ந்து போகும்படி போராற்றி ஓட்டிய முறைமையினையும் மீண்ட முறைமையினையும் முறையே கேட்டு, என்க.

(வி - ம்.) நவின்ற - பழகிய. விறல் - வெற்றி. இவண் - இந்நகரத்திற்கு. ஏதமின்மை - உடல்மனம் இவற்றிற்குத் தீங்கில்லாமை. நீதி - செங்கோல் முறைமை. இகல் - போர்.

(இதுவுமது)

௬௪ - ௭0 : நிறை..........போக்கி

(பொ - ரை.) இவ்வினவிற்கெல்லாம் அவ் வயந்தகன் விடை கூறுநிற்கக் கேட்டுத் தமரை நோக்கிக் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தே தான் கேடுற்ற பொழுதும், கேள்வியுற்றோர் பெரிதும் மகிழும்படி தன் நண்பருக்கு உதவி செய்யும் இயல்புடைய அந்த நலங்கெழுமிய உள்ளமுடைய உதயண குமரனை யாம் வரவேற்பேமாக என்று கூறி நமது கோபுர வாயிலையும், வீதிகளையும், மண மலர்களாலும் பூங்கொடிகளாலும் வெவ்வேறு வகை அழகுண்டாக ஒப்பனை செய்து அழகோடு கூடிய நெடிய கவுளையுடைய யானையோடு வெகுளி மிக்க போராற்றலுடைய அவ்வுதயணகுமரனை எதிர் கொள்ளுதற்கு நமர் செல்க! என்று போக்கி; என்க.

(வி - ம்.) நிறை நீர் - கடல். கேட்டோர் - இச் செய்தியைக் கேட்டவர்கள். நட்டோர் - நண்பர். ஆற்றும் - உதவி செய்யும்.

நன்னராளன் - நல்லுள்ளம் படைத்தவன். உயரி - உயர்த்து. வனப்பு- இலக்கணம். அண்ணல்: உதயணன்.

(தருசகன் உதயணனை எதிர்கொள்ளச் செல்லுதல்)

எக - எஎ: குலத்தில் .... போதர

(பொ - ரை.) பின்னர் அவ்வுதயண மன்னன் குலச் சிறப்பினாலே தன்னோடு ஒப்புடையன் ஆதலாலே மனக் கவலையோடு நம் நகரத்திற்கு வந்த அந்த உதயணனை எதிர்கோடற்குத் தான் விரும்பிய ஆரவார நீர்மையையுடைய பொருள்களோடே செல்லுதல் பொருத்தமற்ற செயலாம் என்று கருதி வாழ்த்துக் கூறுவோரும், சாமரையும், கொற்ற வெண் குடையும், ஒப்பனை செய்து கோடலும், இன்னோரன்ன பிறவும் மாற்றியவனாய் அந்த மகத நாட்டு மன்னன் மணி கட்டப்படாத ஒரு பிடியானையின் மேல் ஏறி அரசவைச் சுற்றத்தார் பலர் தன்னைச் சூழ்ந்து வருமாறு ஆராய்ச்சி மணி கட்டிய கோபுர வாயிலின் கட்செல்ல; என்க.

(வி - ம்.) நிகர்க்குநன் - ஒப்பானவன். கவற்சி - கவலை. காவலன் - உதயணன். புகற்சி - விரும்புதற்குரியபொருள். போற்று - வாழ்த்துக் கூறல். கோலம் - ஒப்பனை செய்து கோடல். இடுமணி - கட்டித் தூங்கவிடும் மணி. படுமணி - ஒலிபடும் ஆராய்ச்சி மணி.

(இதுவுமது)

எஅ - அக: வான் .... புகுதர

(பொ - ரை.) வானத்தின்கண் அமைந்த தேவருலகத்தினின்றும் வழுக்கி விழுந்த தேன்மிக்க நறிய மலர் மாலை யணிந்த ஒரு தேவனைப்போல உதயணகுமரன் தன் தோழராகிய உருமண்ணுவா முதலியோர் தன்னைச் சூழ்ந்துவர அத் தருசக மன்னன் உய்த்த யானையின் மேல் ஏறி வாராநிற்ப; என்க.

(வி - ம்.) வானுயருலகம் - மேனிலையுலகம். வழுக்குபு- வழுக்கி. திறலோன்: ஒரு தேவன். தோழர்: உருமண்ணுவா முதலியோர். வேழம் - தருசகன் உய்த்த யானை.

(சிலர் தருசகனைத் தடுத்தல்)

அஉ - அகூ: ஓடி.........இசைப்ப

(பொ - ரை.) அப்பொழுது உண்மை சிதைந்துபோன பொருளை ஆராய்ந்து அறியும் செவ்விய நெறியை மேற்கொண்டுள்ள தருசகன் அமைச்சர்களுள் வைத்து ஒரு சிலர் விரைந்து சென்று அம் மன்னனை எய்தி, "வேந்தே! கடல்போன்ற வெல்லு

தற்கரிய பெரும் படையினை யுடையோய்! நீ எதிர்வரும் இக் கூட்டத்தை இத்தகைய கூட்டமென்று ஆராய்ந்துணராமல் அக் கூட்டத்தினுட் புகுந்து ஆட்சித் தொழிலில் மேம்பட்டவனும் வெற்றியை யுடையவனும் ஆகிய வேற்று வேந்தனை இவ்வாறு தெளிந்துகொள்ளுதல் தீங்கு பயக்கு" மென்று கூறுமிற்ப; என்க.

(வி - ம்.) செந்நெறியாளர் ஓடிச் சென்று சேர்ந்து இசைப்ப என்க. ஓடி - விரைந்து. சிதை பொருள் - உண்மை சிதைந்து போன பொருள். செந்நெறியாளர் : அமைச்சர். தானையை - படையையுடையாய். இனைய - இத்தகைய. வேந்தன் : உதயணன்.

(தருசகன் உதயணனை எதிர்கொள்ளல்)

அள - கூசு : நட்பு.........அவ்வழி

(பொ - ரை.) அங்ஙனம் தன்னைத் தடுத்த அவ்வமைச்சர்களை நோக்கி அத்தருசகமன்னன், "பெரியீர்! வலைபோன்ற நட்புரிமையினாலே நம்பொருட்டு அஞ்சுதற்குரிய நம் பகை மன்னருடைய பெரும் படைகளைப் பொருது துரத்திய ஒப்பற்ற அம் மன்னனை நம்மில் வேறாகிய அயலான் என்று நினைத்தல் சிறப்பு அன்றாம்" என்று அவ்வமைச்சர் தெளிந்துகொள்ளும்படி எடுத்துக் காட்டி அவரைத் தெளிவுறுத்திப் பின்னர்ச் செல்லாநிற்ப இங்ஙனம் எதிரெதிர் வந்து ஒருவரை ஒருவர் கண்ணுற்ற குறையாத... ...பிறப்பிட முதலியவற்றாலுண்டான ஒப்புமை நோக்கி அவ்வுதயணனும் தருசகனும் ஆகிய தத்துவக் காட்சியையுடைய அவ்விருவரும் கைகளைக் கோத்துக்கொண்டு அன்பினாலே ஒன்றுபட்ட இன்பமுடைய மொழிகளைத் தத்தமக்கு ஏற்றவாறு கூறி அளவளாவிச் செல்வம் நிறைந்த அரண்மனைக்குட் சென்று புகுந்த பொழுது ; என்க.

(வி - ம்.) நட்புவலை - வலை போன்ற நட்பு. உட்கு - அச்சம். வேறெனை - அயலான் என்று. விழுப்பம் - சிறப்பு. கூ௯ஆம் அடியில் இறுதிச் சீர் அழிந்தது ; சமயக் காட்சி - தத்துவக் காட்சி. ஏற்பவை- தம்மியல்புக்குப் பொருந்துபவை. திரு - செல்வம் ; திருமகளுமாம்.

(தருசகன் உதயணனை உபசரித்து இருக்கச் செய்தல்)

கூள - ௧0௫ : உஞ்சை.......கேளா

(பொ - ரை.) ஆங்குக் குழுமியுள்ள மக்கள் உதயணனைக் கண்டு மகிழ்ந்து ஏயர் குலத் தோன்றலும் வளமுடைய படைகளை யுடைய வத்தவ நாட்டு மன்னனுமாகிய இப் பெருமகன் பண்டு உஞ்சை மாநகரத்தின் வீதியின்கண் வெறிகொண்டு மாந்தரைக் கொன்ற வெவ்விய சினத்தையுடைய நளகிரி என்னும் களிற்றி யானையினது சினத்தை யாழினாலே யகற்றி, அங்கு வாழுகின்ற

பல்வேறு உயிர்களினது துன்பத்தைப் போக்கிப் பாதுகாத்தருளினன். அத்தகையோனுகையாலே இற்றை நாளும் இந் நகரத்தை முற்றுகையிட்ட பகை மன்னர்களுடைய போருக்குக் காரணமான வெகுளியை அவித்து இந் நகர்வாழ் மக்களினது துயரத்தினை அகற்றுதலாகிய நற்செயலும் இவனுக்குப் பொருந்தி வந்தது; என்று கூறி வியந்து; கையை அசைத்துக்கொண்டு தமக்குள்ளே ஒருவரோடொருவர் மெல்லப் பேசிக்கொள்ளுகின்ற மிகுந்த புகழாகிய மொழியினை அவ்வுதயண மன்னன் கேட்டும் கேளாதவனும்; என்க.

(வி - ம்.) உஞ்சையம் பெரும்பதி - அவந்தி நாட்டுத் தலைநகர். உழக்குபு - உழக்கி. வெஞ்சின வேழமென்றது, நளகிரியை. பருவரல் - துன்பம். வத்தவர் கோமான்: உதயணன். ஒன்னுமன்னர்: விரிசிகன் முதலிய பகை மன்னர். உடல் சினம்: வினைத்தொகை. விரல் - கை; மகிழ்ச்சியுற்ருேர் கையை அசைத்தல் இயல்பு. பக்கமாக்கள் - பக்கத்திலிருக்கும் மக்கள். உறுபுகழ்க்கிளவி - மிக்க புகழை உணர்த்தும் சொல். சிறிய கேளா என்றது தன் புகழாதலின் கேட்க நாணிக் கேளாருயிருந்தும் அம்மொழி செவிப் புகுதலால் ஓராற்ருன் கேட்டும் என்றவாறு.

(இதுவுமது)

௧0௬ - ௧௧௬ : தானும்........பெற்றென்.

(பொ - ரை.) அவ்வுதயணனும் அத் தருசக மன்னனும் அவ்விடத்தினின்றும் சென்று மணிகள் பதித்த தூண்களையுடைய ஒரு மண்டபத்தின்கண் அழகுற அமர்ந்திருந்து பண்டைக்காலத்தே தோன்றி முதிர்ந்துள்ள நட்புரிமையையல்லாமல் அற்றை நாள் தம்முள் கொண்ட நட்புரிமையும் தோன்றும்படி மிகவும் அளவளாவிய பின்னர்த் தருசக மன்னன், அவ்வுதயணன் பயிலுதற் பொருட்டுப் பள்ளி மாடமும் மண்டபமும் அமைத்துக் கொடுத்து, "வேந்தே! என்னை எளியன் என்று இகழ்ந்து வந்த என்னுடைய பகை மன்னர்களைப் போரின்கண் வென்றருளிய மெய் வருத்தம் தீரும்பொருட்டு அப்பள்ளி மாடத்தே புகுந்தருளுக என்று கூறிப் போக்கி வெற்றி மாலையையுடைய அவ் வேந்தன் உதயணன் பின் சென்று அவன் அம் மண்டபத்துப்புக்க பின்னரும் தன் விருப்பம் காரணமாக நீங்காணுய்ப் பின்னரும் அவனுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அமைத்துக் கொடுத்து அவ் வத்தவ மன்னனைத் தன் அன்பாற் பிணித்து அவனது மெய் வருத்தத்தைத் தீர்த்தனன்; என்க.

(வி - ம்.) தானும் - அவ்வுதயணனும். அவனும் - அத்தருசகனும், வழியில் இறங்கித் தழுவிக்கொண்டு அளவளாவிய பின்னர் மீண்டும் தத்தம் ஊர்தியில் வந்தார் என்பது தோன்ற 'தானத்திழிந்து' என்ருர்.

அணித்தக - அழகுற. தொன்று - பண்டு. ஆற்ற - மிகவும். அலை இ- அளவளாவி; உதயணன் பொருட்டுப் பள்ளி மாடமொடு கோயிலும் பாற்படுத்து என்க. எள்ளி - இகழ்ந்து. வேந்தன் - தருசகன். புகீஇ- புகுந்து. விருப்பின் வாயிலுளொழிந்து தீரான் என மாறுக.

கஅ. தருசகனொடு கூடியது முற்றிற்று.

௧௧. படை தலைக்கொண்டது

இதன்கண் தருசகன் செயலும், ஓடிய பகைமன்னர் மீட்டும் போர் செய்தற்குவரலும், அவர் மகதநாட்டுச் சோலை முதலியவற்றை அழித்தலும், அஃதறிந்த தருசகன் படை திரட்டலும், உதயணன் செயலும், தான் போர் செய்யச் செல்வதாகச் சொல்லி உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் விடுத்தலும், வயந்தகன் செயலும், தருசகன் செயலும், கேகயத்தரசன் எண்ணுதலும், தெரிவித்தலும், தருசகன் எண்ணுதலும், கேகய மன்னனைத் தருசகன் போருக்கு விடுத்தலும், தருசகன் வயந்தகனுக்குக் கூறலும், அவனை விடுதலும், யானை, குதிரை முதலியவற்றின் வருணனையும், படை எழுச்சியும், உதயணன் புறம்பாடும், பகைவர் செயலும் பிறவும் கூறப்படும்.

வத்தவற் பெற்ற வலிப்பின னாகி
மத்த யானை மகத மன்னனும்
அருமுர ணடுதொழி லிளமைய னிவனொடு
தரும சாத்திரந் தலைக்கொள் கென்று
பூசனை வழக்கொடு புரையவை நடுவண்
வாசனைக் கேள்வி வழிமுறை தொடங்கலிற்
பரந்த மன்னர் நிரந்துகண் கூடிக்
கற்ற நூலிற் செற்ற வேந்தன்
வேறுபடக் காட்டிக் கூறுபட வறுப்பத்
தொலைதல் காரண மாகவது துணிந்த
நிலையி னெஞ்சினர் நம்முள் யாரெனத்
தலைக்கூட் டமைத்துத் தம்முள் வினவத்
தெய்வ மிடைநிலை யாக வதன்றிறம்
ஐயந் தீர வறிவம் யாமெனத்
தம்பாற் றெளிந்த தன்மைய ராகி
வெம்போர் நிகழ்ச்சி யென்கொன்மற் றிதுவென
வருபடை யொற்றரை வழக்கி மற்றவன்
பொருபடை போதரப் புணர்த்த தாகுமென்
றதுவும் பிறவு மாய்வுழிச் செவ்விதிற்
பேணி வாழும் பெற்றிய ராகி
வாணிக வுருவொடு வந்திடைப் புகுந்த

வீர ராகுவோர் வேறுதிரிந் தொடுங்கி
ஆரிருண் மறைஇ யருஞ்சின மழித்தோர்
போந்தில ராதலிற் பொருத்த முடைத்தென
வேந்தனில் வந்தோர் வினவுதல் வேண்டா
அமர்மேற் கொண்டோர் யாரே யாயினும்
தமராக் கருதித் தம்வயிற் றெளிதல்
ஏல்வன் றென்ன மேலவை கிளவா
இளிவஞ்சு முனிவரே யாயினு மற்றினித்
தெளிவஞ்சு தகைத்தெனத் தெளிவுமுந் துறீஇ
வஞ்சினஞ் செய்து வெஞ்சினம் பெருகக்
கெடுத்த வூற்றமொடு கடுத்தன ராகிப்
பெயர்த்தும் பெரும்படை தொகுத்தனர் கொண்டு
நன்னாடு நடுங்க நண்ணித் துன்னிய
ஈர நெஞ்சத் தார்வ லாளர்
பாரந் தாங்கும் பழமை போல
இலைக்கொடிச் செல்வமொடு தலைப்பரந் தோங்கிய
கணைக்கா லிகணையுங் கமுகும் வாழையும்
சினைப்பெரு மாவும் பணைக்காற் பலாவுங்
கொழுமுதற் றெங்கொடு முழுமுதற் றெலைச்சிக்
கழனி விளைநெற் கனையெரி கொளீஇப்
பழன நன்னாடு படியழித் துராஅய்ச்
செயிர்ப்பிற் சிறந்தவர் பெயர்ச்சி நோக்கிப்
படையோற் றாளர் கடுகுபு குறுகிக்
காவலற் கிசைத்துக் கண்டுகை கூப்பி
வேக மன்னர் மீட்டும்வந் திறுத்த
வெங்கட் செய்தொழி றன்கட் கூறலும்
மறுநோய் மக்களி னாழ்ந்த மனத்தன்
செறுவேல் வேந்தன் செய்வதை யறியான்
கூட்டம் பெருக்கி மீட்டுவந் தனரெனின்
ஆற்ற லெல்லா மளந்தபி னல்ல
தூக்க மிலரெனத் தூக்க மின்றி
மனத்தி னெண்ணி மற்றது கரந்து
சினத்த நோக்கமொடு சீறுபு வெகுண்டு
செருவுடை மன்னரைச் சென்றுமே னெருங்குதும்

பொருபடை தொகுத்துப் போதுகென் றேவலின்
விருத்தி காரரும் வேண்டியது பெறூஉம்
உரத்தகை யாளரு மொருங்குவந் தீண்டுக
செருச்செய வலித்தனன் செல்வன் சென்றெனத்
தானை யணியத் தலைத்தா ளணியுள்
யானை யேற்றி யணிமுர சறைதலும்
வணங்கார் வணக்கிய வத்தவர் பெருமகன்
நுணங்குபொரு ளமைச்சரொ டுணர்ந்தன னாகிக்
கண்ணிய பொருட்குத் திண்ணியது தெரிய
உறுப்போ ரன்ன வுள்பொரு ளமைச்சரும்
மறப்போர் மன்னனு மாணவே யிருந்து
செயற்படு கருமத் தியற்கை யிற்றெனப்
பெயர்த்தும் வருபடை யழிப்பது வலித்து
வயந்தக குமரற் கியைந்தது கூறும்
மயங்கிதழ்ப் படலை மகதவற் கண்டு
செருச்செய் தானைப் பிரச்சோ தனன்றன்
பாவையை யிழந்து பரிவு மூழ்குறீஇச்
சாவது துணிந்தியான் சேயிடைப் போந்தனென்
மன்னுயிர் ஞாலத் தின்னுயி ரன்ன
அடுத்த நண்புரைத் தெடுத்தனை யாகத்
தன்மேல் வந்த தாக்கரும் பொருபடை
என்மேற் கொண்டனை னாகி முன்னை
எறிந்தனை னகற்றி யின்பம் பெருகச்
சிறந்ததோர் செய்கை செய்தே னின்னும்
மறிந்துவந் தனரே மாற்றோ ரேன்ப
தறிந்தென னதன்மாட் டவலம் வேண்டா
என்னி னாதற் கிசைகுவ தாயிற்
பின்ன ரறிய பிறபொருள் வலித்தல்
யான்சென் றிரியினஃ தறிகுந ரில்லைத்
தான்சென் றுறுவழித் தளர்ந்த காலை
மகத மன்னனை மலைந்துவென் றனமென
மிகுதி மன்னர் மேல்வந்து நெருங்கின்
என்னா மன்ன தின்னாத் தரூஉம்
எடுத்துநிலை யரிதென வேதுக் காட்டி

என்குறை யாக வொழிக வெழுச்சி
தன்படை யெல்லாந் தருக வென்றோடும்
அடற்றொழில் யானைப் படைத்தொழில் பயின்றோர்
எனைவ ருளரவ ரனைவரும் யானும்
ஏறுதற் கமைந்த விருங்கவுள் வேழமும்
வீறுபெறப் பண்ணி விரைந்தன வருக
தன்பாற் படைக்குத் தலைவ னாகியோர்
வன்பார் மன்னன் வரினு நன்றெனக்
கூறினன் மற்றெங் கோமக னென்றவற்
றேறக் காட்டி மாறுமொழி கொண்டு
விரைந்தனை வருகெனக் கரைந்தவற் போக்க
வாயன் றாயினும் வந்துகண் ணுற்றோர்
மேவ வுரைக்கும் மேதகு வாக்கியம்
வல்ல னாகிய வயந்தக குமரன்
செல்வன் றலைத்தாட் சென்றுகண் ணெய்தி
இறைவன் மாற்றமுங் குறையுங் கூற
மகதவ ரிறைவனுந் தமர்களைத் தரீஇநமக்
குறுதி வேண்டு முதயண னுரையிது
மறுமொழி யாதென மந்திர மாக்கள்
யாதவன் வலித்த தப்பொரு ளறிதல்
தீதன் றாதலிற் றெளிந்து செய்கென
மறுத்தல் செல்லான் வாழி யவர்நிலை
அழிக்கும் வாயி லறியுந் தானென
ஒன்றின னுரைத்ததை யொன்றுவன னாகி
அருஞ்சின யானையும் புரவியு மமைந்த
இருஞ்சின விளையரும் வருகென வேவி
வலிகெழு நோன்றாள் வத்தவன் வலித்ததும்
கலிகெழு மைத்துனன் கருத்து நோக்கி
முற்கிளை வேண்டுநர் மற்றவர்க் கியைந்த
அற்றந் தீர்க்கினது பிற்பயம் பெருகும்
அற்றா மன்றிப் பற்றா மன்னர்
மேல்வந் திறுப்ப வேல்பல படையொடு
மாயா திருப்பிற் கிளையோ மற்றிவன்
வேற்றா னெனவு மாற்றா னெனவும்

போற்று மன்னர் புறஞ்சோற் படுமெனக்
கேகயத் தரசனுங் கிளந்துபல வெண்ணிக்
காவல் வேந்தனைக் கண்டுகை கூப்பி
வானோர் பெரும்படை வந்த தாயினும்
யானே யமையு மடிக ளென்னை
விடுத்தற் பாற்றென வெடுத்தவ னிசைப்பத்
தந்தை பெருங்கிளை காரண மாக
முந்து மப்படை முருங்கத் தாக்கி
வந்த வேந்தன் வலித்ததுந் தங்கைக்குச்
சென்ற குமரன் முந்தைக் கூறிய
மாற்றமு மனத்தே யாற்றுளி புடைபெயர்ந்
தொலிக்குங் கழற்கா லுதயண குமரன்
வலிக்கும் பொருண்மேல் வலித்தன னாகித்
தன்படைத் தலைவ னாக வெம்மொடே
வன்படை யாளன் வருக வென்றனன்
மாண்ட வத்தவ ராண்டகை யாதலின்
நம்மேல் வந்த வெம்முரண் வீரர்
தம்மேற் சென்று தருக்கற நூறுதல்
வத்தவ ரிறைவனும் வலித்தன னவனோ
டொத்தனை யாகி யுடன்றமர் செய்ய
வல்லை யாயிற் செல்வது தீதன்
றென்றவன் விடுப்ப நன்றென விரும்பி
ஒட்டிய குமர னுள்ள நோக்கி
மட்டலர் பைந்தார் மகதவன் வயந்தகற்
குற்ற நண்பி னுயிர்போ லுதயணற்
கிற்றிது கூறுமதி யிளையோள் பொருட்டா
வந்திவ ணிருந்த வெந்திறல் வீரன்
தன்னொடு வந்து மன்னரை யோட்டிப்
போதரத் துணிந்தன னேத மின்றி
ஆகும் வாயி லெண்ணி யப்படை
போக நூக்கல் பொருளெனக் கூறி
மீட்டவற் போக்க வேட்பனன் விரும்பியவன்
கூறிய மாற்றங் கோமான் றன்னொடு
வீறியல மைச்சர் வேறுக் கேட்டுக்

குறையின் வேண்டுங் கரும முறையிற்
றானே முடிந்ததென் றுண வுவகையன்
யானையும் புரவியு மமையப் பண்ணி
மாண்வினைப் போலிங்தோர் வருக மற்றோர்
சேனை நாப்பட் சேருக வின்றெனப்
பெயர்த்து மற்றவற் குரைத்தலிற் பெருமகன்
களிற்றுப் பாகனை விளித்தன னிறீஇ
அண்ணல் யானை பண்ணி வருகெனக்
கண்ணார் தகைய கவுளிழி கடாத்தன
மண்ணார் நுதலின மாசின் மருப்பின
ஆற்ற லமைந்தன நீற்பாற் புறத்தன
அமர்பண் டறிந்தன வச்ச மில்லன
புகரில் வனப்பின போரிற் கோத்தன
கோலங் கொளீஇச் சீலந் தேற்றின
இருபாற் பக்கமு மெய்து மெறிந்தும்
பொருவோர்ச் செருக்கப் புன்படைக் கருவி
அடக்குபு பண்ணித் துடக்குபு காட்டும்
தோட்டி கொளீஇக் கூட்டுபு நிரைத்த
வேல்வ லிளையர் கால்புடை காப்பக்
கோயின் முற்றத் துய்த்தலின் வாய்மொழி
உதயணன் றன்மாட் டுய்க்க விவற்றோடு
பொருபடைக் குதவும் புரவியும் புரவியொடு
செருவமர் மாந்தருஞ் செல்க விரைந்தென
ஒன்னா ரோட்டிய வுதயணன் கோயிற்
பொன்னார் முற்றம் புகுந்துடன் றுவன்ற
அருந்திறல் யானை யமைந்தது நாடி
இரும்பிடர்த் தலையிற் பெருந்தகை மேல்கொள
உயர்ந்த வூக்கத் துருமண் ணுவாவும்
வயந்தக குமரனும் வாய்மொழிந் தாய்ந்த
உயர்ச்சி யுள்ளத் திசைச்சனு மேனைத்
தடவரை மார்பி னிடவக னுளப்பட
எந்நூற் கண்ணு மிடம்பா டுடைய
முந்நூற் றுவர் மொய்த்தொருங் கீண்டி
வலம்படு நமக்கென வலங்கொண் டேற

ஒழிந்த மாந்தர் பொலிந்துபுறங் காப்ப
இறையுடைச் செல்வ மிளையயத் தழீஇக்
குறைபட லில்லாக் கொற்றமொடு போந்து
முரசுஞ் சங்கு முருடு மொலிப்ப
அரசப் பெருங்கொடி யொருவலத் துயரி
எழுந்த பொழுதிற் றழங்குரன் முரசிற்
றருசக குமரன் முன்பின் வந்து
கேகயத் தரசனைக் காவல் போற்றென
ஓம்படை கூறி யாங்கவ ணொழியப்
பவ்வத் தன்ன படையமை நடுவண்
வவ்வற் கெண்ணிய வத்தவ ரிறைவன்
கேடலருஞ் சிறப்பிற் கேகயத் தரசனும்
உடலுநர்க் கடந்த வுருமண் ணுவாவும்
முன்ன ராக முன்னுக வென்னொடு
பின்ன ராவோ ரின்னரென் றுரைத்துக்
கூறுபடப் போக்கி வேறுபடப் பரப்பி
எல்லை யிகந்த விருங்கடல் போலப்
புல்லார் பாடியிற் குறுகலி னெல்லென
ஒற்றர் மாற்றம் பெற்றுமுன் னிருந்தோர்
வேழமும் புரவியு மூழ்ழ் விரைஇக்
காழ்மண் டெஃகமொடு காற்படை பரப்பிப்
புண்ணிய முடையம் பொருமிவ ணின்னரை
நன்னர்ப் பெற்றே நாமெனக் கூறி
அங்கண் மாதிரத் ததிர்ச்சி யெய்த
வெங்கண் முரசொடு பல்லியங் கறங்க
அறியச் செய்த குறியுடைக் கொடியர்
கூற்றுல கின்று கொள்ளா தாமென
ஆற்றல் கலந்த வார்ப்பின ராகி
மலைத்துமேல் வந்த மகதவன் படையொடு
தலைப்பெய் தன்றாற் பகைப்படை பரந்தென்.

௧௧. படை தலைக்கொண்டது முற்றிற்று

உரை

கக. படை தலைக்கொண்டது

அஃதாவது - தருசகன் படையும் சங்க மன்னர் படையும் தம்முள் எதிர்த்துப் போரிட்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(தருசகன் செயல்)

க - சு : வந்தவன்........தொடங்கலின்

(பொ - ரை.) மதச் செருக்கினையுடைய யானைப் படைகளையுடைய மகத மன்னனாகிய தருசகன் உதயணனை நண்பனாகப் பெற்ற புதிய துணைவலியினை யுடையவனாகி வெல்லுதற்கரிய போர்கள் பலவுஞ் செய்து பகைவரை வென்று வாகைசூடும் தொழிலையுடையவனும் இளமையுடையவனுமாகிய இவ்வுதயணன்பால் யான் அறநூலைக் கற்றுக்கொள்வேன் என்று துணிந்து நூல் கற்கத் தொடங்குங்கால் செய்யும் வழிபாட்டு முறைமையோடே உயர்ந்தோர் அவை நடுவில் ஓதுதலையும், கேட்டலையும் மரபின்படி தொடங்காநிற்ப; என்க.

(வி - ம்.) வலிப்பினன் - வலியையுடையோன். மத்தம் - மதச்செருக்கு. முரண் - போர்; பகையுமாம். தருமசாத்திரம் - மன்னருக்கு இன்றியமையாத அறநூல். கொள்கு - கொள்வேன். பூசனை - வழிபாடு. புரையவை - உயர்ந்தோர் சபை. வாசனை - ஓதல்.

(ஓடிய பகை மன்னர் மீட்டும் போர் செய்தற்கு வரல்)

எ - கரு : பரந்த........தன்மையராகி

(பொ - ரை.) புறமிட்டுச் செவிச் செவியறியாது ஓடிய விரிசிகன் முதலிய அப் பகைமன்னர்கள் மீண்டும் தம்முள் ஓரிடத்தே கூடியிருந்து நம் பகைமன்னனாகிய தருசகன் தான் கற்ற அரசியல் நூல் அறிவினாலே நம்மனோர் வேறுபடும்படி பல காரணங்களைக் காட்டி யாம் தனித்தனியாகப் பிரியும்படி யாம் தோற்றல் காரணமாகக் கொண்டு கீழறுத்தல் செய்ய, அதுகேட்டு அங்ஙனமே செய்யத் துணிந்த நிலையற்ற நெஞ்சையுடைய புல்லியோர் நுங்களுள் வைத்து யாரேதாம் என்று வினவித் தெரிந்து கோடற் பொருட்டுத் தம்முள் ஒரு கூட்டமமைத்துத் தெய்வஞ் சான்றாக அச் செய்தியை யாம் ஐயமகல அறிந்துகொள்வேம் என்று தம்முள் முடிவு செய்துகொண்ட தன்மையை உடையராகி; என்க.

(வி - ம்.) விரந்து - கூடி. கண் - இடம். நூலின் - நூலறிவு காரணமாக, செற்ற வேந்தன் - பகை வேந்தன்; என்றது தருசகனை, வேறுபடக் காரணங்காட்டி என்க. கூறுபட - தனித்தனியாக. அறுப்ப - கீழறுத்தல் செய்ய. தலைக்கூட்டு - கூட்டம். இடைநிலை - சான்று.

(இதுவுமது)

கசு - கக : வெம்போர்.........ஆய்வுழி

(பொ - ரை.) இவ்வாறு வெவ்விய போர் நிகழ்தற்குக் காரணம் என்னையோ என்று வினவ ஒரோவழி அத் தருசகன் மேல் போருக்கு வந்த படை தனது ஒற்றர் மொழியிற் றவறி அவ் வுதயணனது போர்ப் படை நம்மிடத்தே புகும்படி சூழ்ச்சி செய்து அத் தருசகன் இவ்வாறு நிகழ்வித்த செயலாகும் என்று அப் போர் நிகழ்ச்சி பற்றியும் பிற நிகழ்ச்சிகள் பற்றியும் ஆராயுங் காலத்தே; என்க.

(வி - ம்.) போர் நிகழ்ச்சி - உதயணன் மறவர் இரவிற் செய்த போர். அவன் : உதயணன்; தருசகன் எனினுமாம்.

(இதுவுமது)

கக - உச: செவ்விதின்.........உடைத்தென

(பொ - ரை.) செம்மையாகத் தம்மைப் பேணி வாழுகின்ற தன்மையை யுடையோர் போல வாணிக உருவத்தோடு வந்து நங்கேளிர் போல நம்முட் புகுந்து கொண்ட மறவர்களே வேறு பட்டு மனந் திரிந்து நமக்குள் மறைந்து அரிய இருளின்கண் மறைந்து நம்முடைய அரிய வெருளியை அழித்தவர் ஆவர் என்று சிலர் கூற, ஒரு சிலர் உண்மையேயாம்! நாம் ஓடி வரும் பொழுது அவருள் ஒருவரேனும் நம்மொடு வந்திலராதலின் இம் முடிவு மிகவும் பொருத்தமுடைத்தென்று கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) பெற்றியர் - தன்மையுடையோர். மறைஇ - மறைந்து நம்மை வென்றோர் எனற்கு நாணிச் சினமழித்தோ ரென்றார்.

(இதுவுமது)

உரு - ௩௩ : வேந்தனில் .... கொண்டு

(பொ - ரை.) அதுகேட்ட வேறு சிலர் இனி நம் பகை வேந்தன் படைஞருள் வைத்து நம்பால் வந்தவர் யார் என்று வினவுதலும் வேண்டா! எற்றுக்கெனில் போரினை மேற்கொண்ட அரசர்கள் தம்பால் வருவார் யாவரேயாயினும் கேளிராகக் கருதித் தம் மனத்தே அவரைத் தெளிந்துகோடல் இயல்பன்று. யாம் அங்ஙனமின்றி அவ் வணிகரை நமராகத் தெளிந்தது நம் குற்றமே

யாகலான் என்று கூறுகிற்ப. அதுகேட்ட பின்னர் அவ்வவை யோர் தாம் கேட்டதொன்றனை வெளியிட்டுக் கூறுதவரும், பழிக்குப் பெரிதும் அஞ்சுபவரும் ஆகிய துறவோரே நம்பால் வரினும் இனியாம் அவரைத் தெளிந்து கோடல் அஞ்சுதற்குரிய தொரு செயலேயாகும், ஆதலின் இனி யாரையும் யாம் தெளிந்து கொள்வேமல்லேம் என்னும் முடிவுடன் தம்முள் ஒவ்வொருவரும் முற்பட்டு வஞ்சினங் கூறி வெவ்விய வெகுளி பெருகும்படி பகை வரைக் கெடுத்தற்குரிய ஊக்கத்தோடும் அச் செயலின்கண் மிகுவோராய் மீண்டும் பெரிய படைகளைத் திரட்டிக்கொண்டு; என்க.

(வி - ம்.) வேந்தனில் - தருசகனுடைய. யாரேயாயினும் - தம் பால் வருபவர் யாவராயினும்: தமரா - உற்றாராக. கிளவா - வாய் பேசாத எனினுமாம். இளிவு - பழிச் சொல். அஞ்சுதகைத்து - அஞ்சும் தன்மையுடைத்து. முந்துறீஇ - முற்பட்டு. வஞ்சினம் - சூண்மொழி. அஃதாவது இன்னது செய்யேனாயின் இன்னன் ஆவேன் என்பதுபடத் தெய்வச் சான்றொடு கூறல், ஊற்றம் - ஊக்கம். கடுத்தனர் - மிகுவோர்.

(பகைவர் மகதநாட்டுச் சோலை முதலியவற்றை அழித்தல்)

௩௪ - ௪௩ : நன்னாடு.........நோக்கி

(பொ - ரை.) மகத மன்னன் அந்த நல்ல நாட்டின்கண் வாழும் மாந்தர் அஞ்சி நடுங்கும்படி புகுந்து பொருந்திய அன்பு மிக்க நெஞ்சத்தையுடைய ஆர்வமுடைய நல்லோர் தமது கேளிர் களைத் தாங்குகின்றதொரு தொன்மைபோல தம்மீது படர்ந்து அடர்ந்த இலைமிக்க கொடிகளாகிய செல்வத்தோடு தலைவிரிந்து உயர்ந்துள்ள திரண்ட அடிப் பகுதியையுடைய இகணை மரங் களையும், கமுகையும், வாழையையும் கிளைகளையுடைய பெரிய மாமரங்களையும் பருத்த அடிப் பகுதியையுடைய பலா மரங்களையும் கொழுவிய அடியினையுடைய தென்னை மரங்களையும், வேருடன் வெட்டி வீழ்த்திக் கழனிகளில் விளைந்து கிடக்கும் நெற்கதிர்களில் மிக்க தீயினைக் கொளுவியும் வயல்கள் நிறைந்த அந்த நன்னாட் டினது அழகினை யழித்துவாராநின்ற சினத்திற் சிறந்த அப் பகை மன்னர்களுடைய வருகையைப் பார்த்து; என்க.

(வி - ம்.) துன்னிய - பொருந்திய. ஈரம் - அன்பு. பாரம் - சுமை, ஆர்வலாளர், ஈண்டுக் கேளிர். பழைமை என்பது பழைமையான பண்புபோல என்றவாறு. ஈண்டு அன்புடையோர் தங்கேளிரைத் தாங்குதல் போன்ற இகணை மரங்கள் தம்மேற் படர்ந்துள்ள கொடி களைத் தாங்கி நின்றன என்று உவமை கூறியவாறு. சினை-கிளை; பணை - பருத்த. முதல் - அடி. தெங்கு - தென்னை. முழுமுதல் - வேர். தொலைச்சி - அழித்து. கனை - மிகுதி. படி - அழகு; வடிவுமாம். செயிர்ப்பு - பகைத்தல்.

(பகைவர் செயலைத் தருசகன் அறிந்து படை திரட்டல்.)

சசு - சகூ : படை.........அறியான்

(பொ - ரை.) பகைவர் படைகளை ஒற்றியுணரும் ஒற்றர்கள் விரைந்து வந்து தம்மரசனைக் கண்டு கைகூப்பி வணங்கிக் கூறிப் பகை மன்னர்கள் மீண்டும் வந்து சூழ்ந்துள்ள கண்ணோட்டமில்லாத தீத்தொழிலை அவன்பால் அறிவித்தலாலே, அதுகேட்ட தருசகன் பிணியுற்றுத் தீர்ந்த மக்கள் மீண்டும் அப்பிணி வந்துற்ற காலை வருந்துமாறுபோல வருந்தித் துன்பத்தில் ஆழ்ந்த மனத்தை உடையவனும்க் கொல்லும் வேலேந்திய அம் மன்னவன் அப்பொழுது செய்வது இன்னது என்று அறியாதவனும்த் திகைத்து; என்க.

(வி - ம்.) பகைப் படையை ஒற்றியறியும் ஒற்றர் என்க. கடுகுபு-விரைந்து. காவலன் - தருசகன். வேக மன்னர் - பகை மன்னர். வெங்கண் - தறுகண். மறுநோய் மக்கள் - ஒரு நோய்பற்றித் தீர்ந்து பின்னரும் அந்த நோய் வரப் பெற்ற மனிதர். அப் பகை மன்னர் முன்னும் வந்து சூழ்ந்து புறங்கொடுத்தோடி மீண்டும் வந்து சூழ்தலாலே இங்ஙனம் உவமை தேர்ந்து கூறினர்.

(இதுவுமது)

ருo - ருசு : கூட்டம்.........ஏவலின்

(பொ - ரை.) விரிசிகன் முதலிய அப் பகை மன்னர்கள் தம் படையைப் பெருக்கிக்கொண்டு மீண்டும் வந்தனராயின் அவர் நம்முடைய படைவலி துணைவலி முதலிய வலிமையையெல்லாம் ஒற்றர் வாயிலாய் அறிந்து அளந்து அதன் எல்லையைக் கண்டு கொண்ட பின் அல்லது அங்ஙனம் வருவதற்கு ஊக்கம் உடையர் ஆகார் என்று கருதி ஊண் உறக்கமின்றித் தன் மனத்தின்கண் எண்ணி எண்ணி அக் கருத்தினை மற்றையோர் அறிந்துகொள்ளாதபடி மனத்தின்கண் அடக்கிக்கொண்டு மற்றை நாள் தன் படைத்தலைவர் முன்னிலையில் அப் பகைவரைச் சினந்த நோக்கத்தோடு பெரிதும் சீறி வெகுண்டு நம்மேல் வந்த அப் போர்த்தொழிலுடைய பகையரசர்களை யாமும் சென்று எதிர்ப்போம்! அதற்கு நம்முடைய போர்ப் படைகளை ஒரு சேரத் திரட்டிச் செல்வீராக என்று ஏவுதலாலே என்க,

(வி -ம்.) கூட்டம் - படை. ஆற்றல் - படை வலி துணைவலி முதலியன. அது - அக் கருத்தினை. நெருங்குதும் - எதிர்ப்பேம்.

(இதுவுமது)

ருஎ - கூக : விருத்தி.........அறைதலும்

(பொ - ரை.) விருத்திகாரரும் அவ்வப்போது தாம் வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்ளும் பேர் மறவரும் ஒரு சேர

ஈண்டு வந்து கூடுவீராக; நம்மரசன் பகை மன்னர் மேற்சென்று போர் செய்யத் துணிந்தனன் என்று கூறிப் படைகளை அணி வகுக்கும்படி முன்னின்ற படையணியின்கண் யானையின் மேல் வள்ளுவர் அழகிய முரசினை ஏற்றி அறைதலாலே; என்க.

(வி - ம்.) விருத்திகாரர் - போர் செய்தற் பொருட்டு அரச னளித்த சீவிதம் பெற்றிருக்கும் மறவர். வேண்டியது பெறாஉம் உரத்தகையாளரென்றது- கூலிபெறும் மறவரை. செல்வன் - அரசன். வலித்தனன் - துணிந்தனன். தலைத்தாளணி - முதல் படையணி. வள்ளுவர் அறைதலும்; என்க.

(உதயணன் செயல்)

௬௨ - ௬௬ : வணங்கார்.........கூறும்

(பொ - ரை.) தன் பகைவரை வணக்கிய வத்தவர் கோமா னாகிய உதயண மன்னன் நுணுகிய பொருளையும் ஆராய்ந்துணரும் ஆற்றலுடைய அமைச்சர்களோடு இச் செய்தியை உணர்ந் தவனாய்த் தான் கருதிய செயலுக்கு ஆக்கமாகும் செயலைத் தெரிந்துகோடற்குத் தனது உறுப்பினுள் வைத்துச் சிறந்த உறுப்பாகியகண் போன்றவரும் மெய்ப் பொருளை உணர்பவரு மாகிய தன் அமைச்சரும் மறமிக்க போராற்றலுடைய அவ் வுதயண மன்னனும் மாட்சிமையுறத் தனி இடத்தே கூடி இருந்து இப்பொழுது காரியப்படுகின்ற செயலின் இயல்பு இத் தகைத்து என்றும், மீண்டும் வருகின்ற அப் பகைப் படையை, மீண்டும் அழிப்பதனைத் துணிந்தும், வயந்தக குமரனை நோக்கி அப்பொழுதைக்கு இயைந்த செயலொன்றனைக் கூறுவான்; என்க.

(வி - ம்.) வணங்கார் - பகைவர். நுணங்கு பொருள் - நுணுகிய பொருள். கண்ணிய பொருட்குத் திண்ணியது - தாம் நினைத்த காரி யம் நிறைவேறற்குரிய உறுதியான செயல்; தாம் நினைத்த காரிய மாவது : பதுமாபதியை மணந்துகொண்டு தருசகனுடைய கேண்மை யைப் பெறுதல் என்க. உறுப்பு - ஈண்டுக் கண்ணென்க. இயைந்தது : அப்பொழுதைக்குப் பொருந்திய செயல்.

(தான் போர் செய்யச் செல்வதாகச் சொல்லி உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் விடுத்தல்.)

௭௦ - ௭௫ : மயங்கி.........ஆக

(பொ - ரை.) "நண்பனே! நீ சென்று மலர் விரவிய தளிர் மாலையையுடைய மகத மன்னனைக் கண்டு என் கூற்றாகப் பகைவ ரோடே போர் செய்து வெல்லும் படையையுடைய பிரச்சோதன மன்னனுடைய மகளாகிய வாசவதத்தையை இழந்து துன்பத்தை மேற்கொண்டு சாவுதனையே துணிந்து யான் சேய்மை

யின்கண் உள்ள இந் நகரத்திற்கு வந்தேன். மன்னுயிர் நிரம்பிய இவ்வுலகத்தின்கண் நீ எனக்கு இனிய உயிர்போன்று அணுகிய நட்புரிமையை எடுத்துக் கூறி என்னை அத் தாங்கரும் துயரத்தினின்றும் எடுத்தனை. இத்தகைய நட்புரிமை உடையை ஆதலால்"; என்க.

(வி - ம்.) இதழ் மயங்குபடலை என்ப. இதழ் - மலர். படலை தளிரும் மலரும் விரவிய மாலை. மகதவன் - தருசகன். பிரச்சோதனன் - அவந்தி நாட்டு மன்னன். பாவை - வாசவதத்தை. பரிவு - துன்பம். சேயிடை - தூரியவிடம். உயிரன்ன நண்பு, அடுத்த நண்பு என ஒட்டுக.

(இதுவுமது)

எசு - அக : தன்மேல்........வேண்டா

(பொ - ரை.) "நின் மேலே போர் செய்தற்கு வந்த தாக்குதற்கரிய போர்ப் படைகளை யானே ஏற்றுக்கொண்டேனாய் முன்னே போர் செய்து அப் பகைவரைத் தொலைத்து ஓட்டி இந் நாட்டிலே இன்பம் பெருகும்படி சிறந்ததொரு செயலைச் செய்தேன் அல்லெனோ! மீண்டும் அப் பகை மன்னர்களே நாணமின்றி நின்மேல் போராற்றுதற்குத் திரும்பி வந்தனர் என்னும் செய்தியை யான் அறிந்துள்ளேன். அந் நிகழ்ச்சி பற்றி உனக்குச் சிறிதும் கவலை வேண்டா" என்க.

(வி - ம்.) என்மேற் கொண்டனன் - யானே மேற்கொண்டனன். மறிந்து வந்தனர் - மீட்டும் வந்தனர். மாற்றோர் - பகைவர். அதன் மாட்டு - அந் நிகழ்ச்சியின்கண். அவலம் - கவலை.

(இதுவுமது)

அஉ - கூ௦ : என்னின்.........எழுச்சி

(பொ - ரை.) "இப் போர் என் பொறுப்பிலே நிகழ்தற்கு நீ இசைகுவது ஆயின், அப்போர் நிகழ்ந்த பின்னர் நீ அதுபற்றி அறிந்துகொள்க. இதுபற்றி இப்பொழுது வேறு செயல்களைச் செய்தற்குத் துணிதல் வேண்டா! இனி யான் அப்பகைவர் மேற்சென்று போர் செய்துழி அவர் தோல்வியுற்றால் அஃது என் செயலாகக் கருதுவார் இல்லை. நின் செயலே என்று உலகம் உணரும் அல்லவோ? அங்ஙனமின்றி நீயே படைகூட்டி அவர் மேற்சென்று போரிட்ட காலத்தே ஒரோவழி நீ முதுகு காட்ட நேருமாயின் அப் பகை மன்னர் யாங்கள் மகத மன்னனைப் போரின்கண் வென்றேம் என்று செருக்கி ஊக்கமுடையராய்ப் பின்னரும் படை கூட்டி நின்மேல் வந்து போர்தொடுப்பார். அங்ஙனமாயின் நின்னிலை யாதாகும். அந் நிலைமை பெரிதும்

துன்பம் தருவதொன்றும் அன்றோ? அவ் வீழ்ச்சியைப் பின்னர் எடுத்து நிறுத்துதல் அரிதாகும். அன்றோ", என்று வயந்தக, நீயே காரணங்களையும் எடுத்துக் காட்டி எனது வேண்டுகோளாகக் கூறி நீயே பகைவர் மேல் போர்க்கெழுதல் ஒழிக என்றும் கூறி, என்க.

(வி - ம்.) வலித்தல் - துணியாதே கொள்; அல் ஈற்றுவியங்கோள். தான் - நீயே. மலைந்து - போர் செய்து. மிகுதி மன்னர் - மிகைச் செயலையுடைய பகையரசர். என்னும் - யாதாகும். எடுத்து நிலை - எடுத்து நிறுத்துதல். குறை - வேண்டுகோள்.

(இதுவுமது)

கூக - க00 : தன்படை.........போக்க

(பொ - ரை.) "உன்னுடைய படைகளை யெல்லாம் தன்பால் ஒப்புவித்திடுக என்றும், ஈண்டு என்னுடன் எத்தனை மறவர் இருக்கின்றனரோ அத்தனை மறவரும், யானும் ஏறிச் செல்லுதற்கு வேண்டிய பெரிய கவுளையுடைய யானைகளும் வீறுண்டாக ஒப்பனை செய்யப்பட்டு விரைந்து ஈண்டு வருவனவாக என்றும், நின்னுடைய படைக்குத் தலைவனாக ஆற்றல் பொருந்திய யாரேனும் ஒரு மன்னன் வரினும் நன்றே என்றும் எம்மரசன் கூறினன்" என்று அத் தருசக மன்னன் தெளியும்படி எடுத்துக் காட்டி அம் மன்னவன் இவற்றிற்குக் கூறுமிற்கும் மறுமொழிகளையும் அறிந்துகொண்டு விரைந்து வருவாயாக என்று சொல்லி விடுப்ப; என்க.

(வி - ம்.) வீறு - வேறொன்றற்கில்லாத சிறப்பு. வன்பு-வலிமை. மறுமொழி - விடை. கரைந்து - சொல்லி.

(வயந்தகன் செயல்)

க0க - க0ரு : வாய்.........கூற

(பொ - ரை.) அப்பணி பெற்றவுடனே உண்மையன்றாயினும் தன்பால் வந்து கேட்போர் அம்மொழி மெய்ம்மையையே என்று விரும்பி ஏற்றுக்கொள்ளும்படி பேசுகின்ற மேம்பாடுடைய சொல் வன்மையையுடைய அவ் வயந்தக குமரன் அத் தருசகன் திருமுன்னர்ச்சென்று இடம் பெற்றுத் தன் அரசனாகிய உதயணனுடைய மொழியையும் வேண்டுகோளையும் கூறுமிற்ப; என்க.

(வி - ம்.) வாய் - உண்மை. மேவ - விரும்ப. மேதகுவாக்கியம் - மேம்பட்ட தகுதியையுடைய மொழி. செல்வன் - தருசகன். தலைத்தான் - முன்னிலை. கண்ணெய்தி - இடம்பெற்று. இறைவன் - உதயணன். குறை - வேண்டுகோள்.

(தருசகன் செயல்)

௧௦௬ - ௧௧௩ : மகதவர்.........ஆகி

(பொ - ரை.) அம்மொழி கேட்ட அம் மகத மன்னனும் தன் அமைச்சர்களை வரவழைத்து நமக்கு ஆக்கம் செய்தலை விரும்புகின்ற உதயண மன்னன் சொல்லிவிடுத்த மொழி இஃதாம். இம்மொழிக்கு யாம் கூறுதற்குரிய விடை யாது? கூறுங்கோள்; என்று அறிவிப்ப, அதுகேட்ட அவ்வமைச்சர்கள் அம் மன்னவன், எந்தப் பொருளைத் துணிந்து சொல்லி விடுத்தனனோ அந்தப் பொருளை யாமும் ஆராய்ந்து அறிதல் தீங்கன்றாதலின் அப் பொருளை ஆராய்ந்து தெளிந்து செய்க! என்று கூறுமிடத்து, அது கேட்ட அத் தருசகன் அவர் கூற்றை மறாதவனாய், அவ்வமைச்சரோடு ஆராய்ந்துழி அவருள் வைத்து ஒருவன் அவ்வுதயண மன்னன் அப் பகைவருடைய இல்லைமையை அழிக்கும் வழியினை அறிகுவன் என்று அவ்வுதயணன் வேண்டுகோட்கு இணங்கிக் கூறுதலை அத் தருசகன் மேற்கொள்வானாய்; என்க.

(வி - ம்.) தமர் - அமைச்சர். தரீஇ - வரவழைத்து. மந்திரமாக்கள் - அமைச்சர்கள். வாழி என்றது மகிழ்ச்சியால் உதயணனை வாழ்த்தியபடியாம். அவ்வமைச்சருள் ஒருவன் அவ்வுதயணன் கருத்தோடு ஒன்றினனாய் உரைத்ததனைத் தருசகன் ஒன்றுவனாகி என்க.

(இதுவுமது)

௧௧௪ - ௧௧௫ : அருஞ்சின.........ஏவி

(பொ - ரை.) அம் மன்னர் பெருமான் அப்பொழுதே கிட்டுதற்கரிய வெகுளியையுடைய நம் யானைப் படைகளும் குதிரைப் படைகளும் போர்க்குத் தகுதியான பெரிய வெகுளியையுடைய இளமையையுடைய காலாட் படைஞரும் வருக! என்று ஏவலர்களை விட; என்க.

(வி - ம்.) யானை - யானைப் படை. புரவி - குதிரைப் படை. இளையர் - காலாட்படை.

(கேகயத்தரசன் எண்ணுதலும் தெரிவித்தலும்.)

௧௧௬ - ௧௨௪ : வலிகெழு.........என

(பொ - ரை.) இனி இராசகிரிய நகரத்தின்கண் பதுமாபதியை மணந்துகோடற் பொருட்டு வந்து தங்கியிருந்த கேகயத்தரசனாகிய அச்சுவப் பெருமகன் ஆற்றலொடு புணர்ந்த வலிய முயற்சியினையுடைய வத்தவநாட்டு இறைவனாகிய உதயண குமரன் எண்ணித் துணிந்த கருத்தினையும் அறிந்து தனக்குள் நினைப்பவன், ஒருவருடைய உறவினை விரும்புபவர் அவர்க்கு உண்டான சோர்வினைத் தீர்த்து விடுவாராயின், அச் செயலால்

பின்னர்ப் பயன் பெரிதும் பெருகுவதாகும். அதுவேயுமன்றி அவர்க்குப் பகை மன்னர்கள் போர் மேற்கொண்டு வந்து சூழ்ந்து கொள்வரேல் அச்சூழப்பட்டாருடைய பலவாகிய படைகளோடும் சென்று அவர் பொருட்டு அப்போரின்கண் இறந்துபடுதலே முறை; அங்ஙனம் இறவாதிருப்பின் அப்பகை மன்னர் இவனும் ஓர் உறவினனோ? அல்லன்! இவன் அவர்க்கு ஏதிலான் என்றும், பகைவன் என்றும் பழிகூறுதல் ஒருதலை என்று கருதி ; என்க.

(வி - ம்.) நோன்முள் - வலியமுயற்சி. வலித்ததும் - துணிந்த கருத்தும். கலிகெழு மைத்துனன் - ஆரவாரமுடைய தருசகமன்னன். முற்கிளை - முற்பட்ட உறவு முறை. மற்றவர்க்கு - அவ்வுறவினர்க்கு. அற்றம் - சோர்வு. அது அச்செயலால். அற்றும் - அதுதானும். இருப்பவேல் - சூழ்ந்து கொள்வாராயின். போற்றுமன்னர், எனவும், எனவும், கூறும் புறஞ்சொல் என்க.

(இதுவுமது)

௧௨௫ - ௧௨௯ : கேகயத்.........இசைப்ப

(பொ - ரை.) அம் மன்னவன் தருசகன் பால் வந்து கை கூப்பி வணங்கிப் "பெருமானே! நினக்குப் பகையாக வந்த இச் சங்க மன்னர்கள் கிடக்க, வானுலகத்துள்ள தேவர்களினது பெரிய படையே நின்மேல் போர்க்கு வந்ததாயினும் யான் ஒருவனே அவர்களை யெல்லாம் வெல்லுதற்கு அமையும்," ஆதலால், "அடிகள், பகைவர் பால் என்னையே யேவுக!" என்று அவன் எடுத்துக் கூறுநிற்ப ; என்க.

(வி - ம்.) கிளந்து - வெளிப்படையாகச் சொல்லி. காவல் வேந்தனை - தருசகனை. அடிகள் : விளி. அவன் - அவ்வச்சுவப் பெருமகன்.

(தருசகன் எண்ணல்)

௧௩௦ - ௧௩௯ : தந்தை.........ஆகி

(பொ - ரை.) அவ்வேண்டுகோள் கேட்ட மகதமன்னன் தன் தந்தையோடு உதயணன் தந்தை கொண்டிருந்த பெரிய கேண்மையைக் காரணமாகக் கொண்டு முன்னரும் அப்பகையரசர் படைகளை அழியும்படி தாக்கித் தன்பால் வெற்றியோடு வந்தவனாகிய அவ்வுதயண மன்னன் கூறிவிடுத்த செய்தியையும், தன் தங்கையாகிய பதுமாபதியின் பொருட்டுத் தன் நகர்க்கு வந்த இளைஞனாகிய அச்சுவப் பெருமகன் தன் முன்னிலையிலே வந்து கூறிய மொழிகளையும் நெஞ்சத்துட் கொண்டு சீர்தூக்கி இடம் பெயர்ந்து ஆரவாரிக்கின்ற வீரக்கழலையுடைய காலையுடைய உதயணகுமரன் துணிந்த பொருளையே தானுந் துணிந்தவனாய் ; என்க.

(வி - ம்.) தந்தை - தன் தந்தையும் உதயணன் தந்தையும் என்க. மூந்தும் - முன்னரும். அப்படை - அப்பகைவர் படை. முருங்க - அழிய. வந்த வேந்தன் - உதயணகுமரன். சென்ற குமரன் - கேயத்தரசன். முந்தை - தன்முன்னிலையில். ஆற்றுளி - முறைப்படியே. ஆராய்ந்து என ஒரு சொல் வருவிக்க.

(தருசகன் கேகய மன்னனைப் போருக்கு விடுத்தல்)

௧௩௭ - ௧௪௪ : தன்படை .... நோக்கி

(பொ - ரை) தருசகமன்னன் அக்கேகய மன்னனை நோக்கி "மைத்துன! மாட்சிமையுடைய அவ்வத்தவ மன்னன் என்னுடைய படைத் தலைவனாகத் தன்னுடனே வலிய படையையுடைய ஒரு மன்னன் வருக! என்று அறிவித்துள்ளான். நம்மேல் படைகொண்டு வந்த வெவ்விய ஆற்றல் மிக்க அச்சங்க மன்னர் படைமறவர் மேலே சென்று அவர்தம் செருக்கற்றுப் போம்படி தாக்கு தலையே அவ்வுதயண மன்னனும் துணிந்துள்ளான். ஆதலின் அம்மன்னவனோடு கூடி நீயும் போருக்குச் சென்று அப்பகைவரைச் சினந்து போர் ஆற்றுதற்கு வல்லாய் ஆயின் நீ செல்வது நன்றேயாம். தீதன்று காண்" என்று கூறி விடுப்ப. அது கேட்ட அக் கேகய மன்னன் நன்று நன்று! என அச்செயலைப் பெரிதும் விரும்பி உடன்பட்டானாக; தருசகன் அக்கேகய மன்னனுடைய கருத்தினை அறிந்த பின்னர்; என்க.

(வி - ம்.) வன்படையாளன்-வலியபடையை யுடையோன். ஆண்டகை - ஆண்மை மிக்கவன்; உதயணன். வீரர் - பகைவீரர். உடன்று-சினந்து. வல்லையாயின் - வல்லாயானால். குமரன் - கேகயத்தரசன். உள்ளம் நோக்கி - கருத்தினையுணர்ந்து.

(தருசகன் வயந்தகனுக்குக் கூறலும் அவனை விடுத்தலும்)

௧௪௭ - ௧௫௫ : மட்டு............போக்க

(பொ - ரை.) தேனோடு மலர்ந்த பசிய மலர்மாலையையணிந்த அம் மன்னவன் வயந்தகனை நோக்கி, "நண்பனே! நீ சென்று என்னுடன் உயிர் போன்று கேண்மை கொண்டுள்ள அவ்வுதயணமன்னனுக்கு யான் கூறும் இச்செய்தியைச் சொல்லுவாயாக!" என் தங்கையாகிய பதுமாபதியை மணம் செய்து கோடற் பொருட்டு இங்கு வந்திருக்கும் வெவ்விய ஆற்றலுடைய அச்சுவப் பெருமகன் அவ்வுதயணனோடு வந்து போர்க்களத்திலே அப்பகை மன்னர்களைத் தாக்கிப் புறங்கண்டு மீள்வதற்குத் துணிந்துள்ளான் ஆதலின் அவனோடுஞ் சென்று குற்றமின்றி வெற்றியுண்டாகும் வழிகளை எண்ணித் துணிந்து அவ்வுதயணன் கருத்தின்படியே அப்பகை மன்னர் படைகள் உடைந்

தோடிப் போம்படி தாக்குதலே யான் கருதிய பொருளுமாகும்" என்று கூறி அவ்வயந்தகனை மீட்டும் விடுப்ப; என்க.

(வி - ம்.) மட்டு - தேன். மகதவன் - தருசகன். இற்றிது - இது; மதி: முன்னிலையசை, இளையோள்: பதுமாபதி. வீரன்: கேகயத்தரசன். தன்னொடு - உதயணனோடு. மன்னரை - பகை மன்னரை. ஏதம் - குற்றம்; துன்பமுமாம். வாயில் - வழி. நூக்கல்- தாக்கல். அவற்போக்க - வயந்தகனை விடுக்க.

(இதுவுமது)

க௫௬ - ௧௬௫ : வேட்பனன்.........வருகென

(பொ - ரை.) இவ்வாற்றான் அவ்வயந்தகன் கொணர்ந்த செய்தியையும், பதுமாபதியை மணம் செய்து கோடற்கு விரும்பியவனாகிய அக்கேகயத் தரசன் தருசகனுக்குக் கூறிய செய்தியையும் வத்தவமன்னன் வீறுடைய தன் அமைச்சரோடு தனி இடத்திலிருந்து கேட்டறிந்து நன்று நன்று யாம் விரும்பிய காரியம் தானே முறைமையோடே முடிந்ததென்று தன்னுட் கருதித் தணியாத மகிழ்ச்சியுடையனாய் தம் யானைகளையும் குதிரைகளையும் ஒப்பனை செய்து கொண்டு, மாட்சிமையுடைய போர்த் தொழிலில் சிறந்த மறவர்கள் புறப்பட்டு வருவாராக! கேகய மன்னன் போன்ற ஏனைய நண்பரும் அச்சேனை நடுவண் இன்றே வருக! என்று மீட்டும் அத்தருசக மன்னனுக்குச் சொல்லி விடுத்தலாலே, அப்பெருமகன்றானுந்தனது களிற்றுப் பாகர் தலைவனையழைத்து நீ சென்று நமது யானைகளை அணியாக நிறுத்திப் பண்ணுறுத்திக் கொணர்க! என்று பணித்தலாலே என்க.

(வி - ம்.) வேட்பனன் - விரும்பியவன். பதுமாபதியை மணக்க விரும்பிய கேகய மன்னன். கோமான் - உதயணன். அமைச்சர் - உரு மண்ணுவா முதலியோர், யாம் வேண்டிக் கோடற்குரிய காரியம் தானே முடிந்தது என்று மகிழ்ந்தவாறு. அஃதாவது கேகயத்தரசன் போர்க் களத்திற்கு வருதல் வேண்டும் என்பது. மாண்வினைப் பொலிந்தோர் - மாட்சிமையுடைய போர்த் தொழிலிற் சிறந்த மறவர். மற்றோரென் றது கேகயத் தரசனை உள்ளிட்டோர் என்பது படநின்றது. அவற்கு- தருசகனுக்கு. அண்ணல் - தலைமையுடைய. யானை நிரீஇப் பண்ணி வருக எனமாறுக. நிரீஇ - நிறுத்தி.

(யானைகள்)

௧௬௬ - ௧௭௭ : கண்............உய்த்தலின்

(பொ - ரை.) அப்பாகர்தலைவன் சென்று அங்ஙனமே யானைகளை அணிவகுத்து நிறுத்திப் பண்ணுறுத்திக் கண்ணி றைந்த அழகுடையனவும் கவுளின்கண் மதநீர் ஒழுகுவனவும்

தூய்மை செய்த நெற்றியையுடையனவும் குற்ற மற்ற மருப்புக்களை யுடையனவும் போராற்றல் மிக்குப் பொருந்தியனவும் நீலநிற முடைய உடம்பையுடையனவும் பண்டு போர்பல செய்து அறிந்தனவும் அச்சம் சிறிதும் இல்லனவும் குற்றமற்ற அழகுடையனவும் போர்த் தொழிலுக்கு மிகவும் தகுதி பெற்றனவும் ஒப்பனை செய்யப் பட்டுப் பாகர்களால் நல்லொழுக்கம் பயிற்றப்பட்டனவும் ஆகிய அவ்வியானைகளின் மேல் வலமும் இடமுமாகிய இரண்டு பக்கங்களிலும் எய்தும் எறிந்தும் தம்பகைவரைக் கொல்லுதற்குரிய புன்றொழிலையுடைய படைக்கலங்களை உறைகளிலடக்கித் தூங்கவிட்டு நெறிகாட்டும் தோட்டி முதலிய கருவிகளையும் மாட்டி வைத்து நிரல்படுத்த வேல் வன்மையையுடைய மறவர்கள் அவற்றின் காற்பக்கங்களிலே, காத்து வாரா நிற்ப, அரண்மனை முற்றத்தே கொண்டு வந்து நிறுத்துதலாலே ; என்க.

(வி - ம்.) தகைய - அழகுடையன. கடாம் - மதம். நீற்பால் - நீலநிறமுடைய பகுதி. புகர் - குற்றம், வனப்பு - நல்லிலக்கணம். சீலம் - நல்லொழுக்கம். பொருவோர் - பகைவர். புல்லிய தொழில் செய்தற் கருவியாகலின் புன்படைக் கருவி என்றார் போலும். கோயில் - அரண்மனை.

(குதிரை முதலியன)

௧௭௭ - ௧௮௨ : வாய்மொழி.........துவன்ற

(பொ - ரை.) அது கண்ட தருசகன் அம்மறவர்களை நோக்கி இந்த யானைப் படைகளை வாய்மையாளனாகிய உதயண மன்னன் பால் செலுத்துவீராக! இந்த யானைகளோடு போர்செய்யும் படைகளுக்கு உதவுகின்ற குதிரைகளும் குதிரையில் ஏறிப் போர் செய்யும் மறவர்களும். விரைந்து செல்க ! என்று கட்டளையிடுதலாலே அப்படைகளெல்லாம் பகைவர்களைப் புறங்கண்ட அவ்வுதயணமன்னன் எழுந்தருளியிருக்கும் அரண்மனையின் பொற்றளமிட்ட முற்றத்தின்கண் புகுந்து ஒருங்கே நெருங்காநிற்ப ; என்க.

(வி - ம்.) பொருபடை, வினைத்தொகை. புரவியொடு செருவமர் மாந்தர் - குதிரைப் படை மறவர். துவன்ற - நெருங்க.

(படைகளின் புறப்பாடு)

௧௮௩ - ௧௯௧ : அருந்திறல்.........ஏற

(பொ - ரை.) இவ்வாறு தாம் ஏறுதற்குரிய யானைகள் அமைந்ததனை ஆராய்ந்து அவற்றுள் சிறந்த தொரு பெரிய யானையினது பெரிய தலையின்கண் உதயண நம்பி ஏறுநிற்ப, உயர்ந்த ஊக்கத்தையுடைய உருமண்ணுவாவும் வயந்தக

குமரனும் எக்காலத்தும் உண்மையே பேசி நுண்பொருள்களை ஆராய்ந்தமையாலே உயர்வுடைய தாகிய உள்ளத்தையுடைய இசைச்சனும் ஏனைய பெரிய மலை போன்ற மார்பினையுடைய இடவகனும் உள்ளிட்ட எல்லா நூல்களிடத்தும் பயின்று விரிந்த உள்ளத்தையுடைய முன்னூற்றறுவரும் எழுந்து வந்து நெருங் கிய ஏனைய யானைகளின் மேல் நமக்கு வெற்றியுண்டாகும் என்று கூறிக் கொண்டு அவற்றை வலம் வந்து ஏறுகிற்ப ; என்க.

(வி - ம்.) பெருந்தகைதனக்கென அருந்திறல் யானை அமைந் தது நாடி என்க. பிடர்த்தலை - தலை; வேற்றுமையுருபு. பெருந் தகை - உதயணன். நுண் பொருளை ஆய்ந்த என்க. எந்நூற் கண்ணும் பயின்று இடம் பாடுடைய என்க. வலம் - வெற்றி. வலங்கொண்டு - வலம் வந்து. ஊர்திகளை வலங்கொண்டேறுதல் மரபு.

(இதுவுமது)

ககூஉ - உ00 : ஒழிந்த.........ஒழிய

(பொ - ரை.) எஞ்சிய மறவர்கள் அழகுற நின்று புறங் காத்து வர அவ்வரசச் செல்வத்தை நன்கு பொருந்துமாறு ஏற்றுக்கொண்டு உதயணமன்னன் குறைதலில்லாத வெற்றி யோடு வந்து முரசமும் சங்குகளும் முருடுகளும் முழங்காநிற்ப, அம்மகத மன்னனுக்குரிய அடையாளக் கொடியாகிய பெரிய கொடியைத் தனக்கு வலப்பக்கத்தே உயர்த்திக் கொண்டு புறப்பட்ட பொழுதில், முழங்காநின்ற முரசத்தோடு அத்தருசக மன்னன் அவ்வுதயணன் பின்னர் வந்து அம்மன்னனுக்குக் கேகயத்தரசனைக் காட்டி, "பெருமானே ! இம் மன்னனை நீ குறிக் கொண்டு பாதுகாத்தருளுக" என்று அடைக்கலங் கூறி அவ் விடத்தினின்றும் நகர்க்குச் செல்லாநிற்ப ; என்க.

(வி - ம்.) ஒழிந்த மாந்தர் - எஞ்சிய மறவர். இறையுடைச் செல்வம் - அரசச் செல்வம். முருடு - ஒருவகைத் தோற் கருவி. அர சப் பெருங்கொடி - அம்மகத நாட்டு அரசியலுக்குரிய அடையாளப் பெருங்கொடி. உயரி - உயர்த்து. தழங்குரன் முரசு - தழங்குகுரல் முரசு ; கெடுதல் விகாரம். ஓம்படை - அடைக்கலம்.

(உதயணன் புறப்பாடு)

உ0க - உ0கூ : பவ்வம்.........குறுகலின்

(பொ - ரை.) கடல் போன்ற பெரும் படைகளமைந்த அப் போர்க்களத்தின் நடுவே பகைவரைக் கைப்பற்றிக் கோடற்குக் கருதிய உதயண வேந்தன், போர்க்களத்தின் கண் பிறக்கிடாத சிறப்பினையுடைய கேகய மன்னனாகிய அச்சுவப் பெருமகனும் நம் பகைவரைப் போராற்றி வென்ற உருமண்ணுவாவும், நம் படைக் குத் தூசிப் படையினிடத்தே செல்வாராக என்றும், எனக்குப்

பின்னுள்ள கூழைப் படையிடத்தே நிற்றற்கு உரியார் இன்னின்னார் என்றும் வகுத்துரைத்துத் தன் படைகளைக் கூறு கூறாக வெவ்வேறிடத்திற் செலுத்திக் காண்போர்க்கு எல்லையற்ற பெருங்கடல் போல அப்படை தோன்றுமாறு பரப்பிக்கொண்டு அப்பகை மன்னருடைய பாசறையை அணுகா நிற்ப, என்க.

(வி - ம்.) பவ்வம் - கடல். வௌவற்கு - பகைவரைக் கைப்பற்றிக் கோடற்கு. கெடலரும் சிறப்பு - போர்க்களத்தில் புறங் கொடாத சிறப்பு. உடலுனர் - பகைவர். முன்னராக - தூசிப் படையிடத்தாராக; தூசிப்படை - முன்படை. முன்னுக - செல்லுக. பின்னராவோர் - கூழைப் படையிடத்து நிற்போர். இன்னர் - இன்னின்னர் ; இவர் இவர் ; கடல்போலத் தோன்றும்படி தன் படையைப் பரப்பி என்க.

" அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்" (குறள் ௭௬௮)

என்னும் திருக்குறளையும் ஈண்டு நினைக. புல்லார் - பகைவர், பாடி - பாசறை.

(பகைவர் செயல்)

௨௦௯ - ௨௧௪ : ஒல்லென.........கூறி

(பொ - ரை.) தம்முடைய ஒற்றர் வாயிலாய் உதயணன் படை எழுச்சியினை அறிந்து கொண்டு போராற்றுதற்கு முற்பட்டிருந்த பகைவர் தாமும் தம்முடைய யானைப்படைகளையும் குதிரைப் படைகளையும் முறை முறையாக விரவி நிறுத்தி வைத்துக் காம்பிலே தைக்கப்பட்ட வேற்படைகளை யேந்திய காலாட் படைகளைப் பொலிவுற யாண்டும் பரப்பி ஒல்லென்று ஆரவாரித்து இப்போர்க்களத்தே இத்தகைய சிறந்த மறவர்களை யாம் நன்கு பெற்றேம் ; யாம் மிகவும் புண்ணியம் உடையேம் என்று கூறிக் களித்து ; என்க.

(வி - ம்.) ஒல்லென - குறிப்பு மொழி. முன்னிருந்தோர் - போருக்கு முற்பட்டிருந்த பகைவர். ஊழூழ் - முறைமுறையாக. விரைஇ - விரவி, காழ்மண்டெஃகம். காம்பிலே தைத்தவேல். " காழ் மண்டெஃகம் " (மலைபடு ௧௨௯) காற்படை - காலாட்படை. அப்படை மறவர் மறச்சிறப்புடைமை பகைவரைக் கண்டுழி உவத்தலால் அறியப் படும். இன்னர் என்றது இத்தகைய சிறந்த மறவரை என்பதுபட நின்றது. இவண் - இப்போர்க்களத்தில், நன்னர் - நன்கு.

(இதுவுமது)

௨௧௫ - ௨௨௧ : அங்கண்.........பரந்தென்

(பொ - ரை.) அழகிய இடமமைந்த திசைகளிலே சென்று அதிரும்படி வெவ்வியகண்ணையுடைய போர்முரசத்தை உள்ளிட்ட பலவேறு இசைக் கருவிகள் ஆரவாரியா நிற்ப, அச்சங்க

மன்னர் தத்தம் படைகளைத் தனித் தனியாக அறிந்து கோடற்குத் தத்தம் அரசடையாளங்களையுடைய தனித்தனிக் கொடியை உயர்த்தியவர்களாய்க் கண்டோர் இற்றை நாட் போரில் இறந்து படும் உயிர்க் கூட்டங்களைக் கூற்றுலகம் கொள்ளமாட்டாது என்று வியந்து கூறும்படி, ஆற்றலோடு விரவிய ஆரவாரத்தை உடையராய்ப் போர்த் தொழிலைத் தொடங்கித் தம் மேல் வந்த அம்மகத மன்னன் படைஞரோடு பகைப் படைஞராகிய அச்சங்க மன்னர் மறவர்கள் அப்போர்க்களத்திலே யாண்டும் பரவிக்கை கலப்பாராயினர்; என்க.

(வி - ம்.) அங்கண் - அழகிய இடம். மாதிரம் - விசும்புமாம். இயம் - இசைக் கருவி. கறங்க - ஆரவாரிப்ப. கண்டோர் இன்று இறந்துபடும் உயிர்களைக் கூற்றுலகு கொள்ளாதாகும் என்று கூற என்க. ஆற்றல் - போர் செய்தல். மகதவன் படை - தருசகன் படை. பகைப்படை - சங்க மன்னர் படை. தலைப்பெய்தன்று - கலப்புற்றது.

கக. படைதலைக் கொண்டது முற்றிற்று.

௨௦. சங்க மன்னர் உடைந்தது

இதன்கண் மகத மன்னன் படைகளிடத்தும் சங்க மன்னர் படையிடத்தும் அமைந்த காலாட்படை குதிரை மறவர் யானை இவர்களின் இயல்பும், போர் நிகழ்ச்சியும், உதயணன் முதலியோர் செயலும், போரின்கண் அச்சுவப் பெருமகன் இறந்துபடுதலும், அச்செய்தியை உதயணன் தருசகனுக்குக் கூறுதலும், தருசகன் வருந்துதலும், தருசகனும் உதயணனும் நகர் புகுதலும், நகர மாந்தர் செயலும், உதயணனைப் புகழ்தலும், சிலர் வாசவதத்தையை இகழ்தலும்; சிலர் அவளைப் புகழ்தலும் பிறவும் கூறப்படும்.

பரந்த பெரும்படை யெதிர்ந்த காலை
அருங்கணை நிறைந்த வாவ நாழிகை
பெரும்புறத் திட்ட கருங்கச் சீர்ப்பினர்
பிறர்ப்பிறக் கிடீஇச் சிறப்பிகந் தெள்ளி
நகுவன போலத் தொகைகொண் டார்ப்புறும்
பைங்கழ லணிந்து பரிபசை வில்லா
இசைகோ ணேன்று ளசைவி லாண்மையர்
வணங்குசிலைச் சாபம் வார்கணை கொளீஇ
நிணம்பட நெஞ்சமு நெற்றியு மழுத்திக்
கைபுடை பரந்து கலங்கத் தாக்குநர்
புடைநிரைத் தாரைக் கடிநீர்க் கைவாள்
படையு நெருக்கிப்..........................
பாலிகை விளிக்கும் பண்ணமை பற்றினர்
மாலையும் வயிரமு முழூழ் பொங்கக்
கால்வ லிளையர் கலங்கத் தாக்கவும்
படைமிசை நிரைத்த வடிவமை வார்நூற்
சித்திரக் குரத்தின வித்தகக் கைவினைப்
புடைப்பொற் புளகமொடு பொங்குமயி ரணிந்த
அரத்தப் போர்வைய யாப்பமை கச்சின
முற்றுமறை பருமமொடு பொற்பூஞ் சிக்கத்
தாண வட்டத் தியாப்புப் பிணியுறீஇக்
கோண வட்டக் கோல முகத்த

வெண்கடற் றிரையென மிசைமிசை நிவந்தரும்
பொங்குமயி ரிட்ட பொலிவின வாகி
அரிபெய் புட்டி லார்ப்பக் கருவியொடு
மேலோ ருள்ளம் போல நூலோர்
புகழப் பட்ட போர்வல் புரவி
இகழ்த லின்றி யேறிய வீரர்
வெம்முரண் வீரமொடு தம்முட் டாக்கவும்
போர்ப்பறை முழக்கினு மார்ப்பினு மழன்று
கார்ப்பெய லருவியிற் கடாஞ்சொரி கவுள
கொலைநவில் பல்படை கொண்ட மாட்சிய
மலைநிமிர்ந் தன்ன மழகளிற் றெருத்திற்
சிலையுங் கணையுஞ் சீர்ப்பமை வட்டும்
மழுவுங் குந்தமு முழுமயிற் பீலியும்
சங்கமுங் கணையமுஞ் சத்தியும் வாளும்
பிண்டி பாலமும் பிறவு மெல்லாம்
தண்டாக் கருவி தாந்துறை போகிய
வண்டார் தெரியன் மறவர் மயங்கி
அருநில மதிரத் திரிதர லோவா
வீதி வட்டமோ டாதிய கதிவயிற்
பாழி பயிற்றி நூழி லாட்டவும்
போர்க்கள வட்டங் கார்க்கட லொலியெனக்
கடற்படைக் கம்பலை கலந்த காலை
மடற்பனை யிடைத்துணி கடுப்பப் பல்லூழ்
அடக்கரும் வேழத் தடக்கை வீழவும்
வார்ப்பண் புதைஇய போர்ப்பமை வனப்பிற்
றடித்தலை போல வடித்தலை யறவும்
சுற்றுர் கருவிற் றுணியெனத் தோன்றி
அற்ற மில்வா லற்றன கிடப்பவும்
சித்திரத் தாமரைப் பத்திரப் பரூஉத்தொடி
நுதிமுக வெண்கோடு முதலற வெறிதலிற்
செக்கர்க் குளிக்கும் வெண்பிறை போல
உட்குவரு குருதியு ளுடன்பல வீழவும்
கார்முகக் கடுமுகி லூர்தி யாக
விசும்பிடைத் திரிதரும் விஞ்சை மாந்தரைக்

கடுந்தொழில் விச்சை கற்ற மாற்றவர்
மறத்தா னெருங்கி மற்றவ ருடனே
நிறத்தே றுண்டு நிலத்துவீழ் வதுபோல்
மார்பின் வெம்படை யார மாந்தி
வீர னோக்கினர் வேழமொடு வீழவும்
பூணேற் றகன்ற புடைகிள ரகலத்துத்
தாமேற் றழுத்திய சத்தி வாங்கிப்
புரைசை யுய்த்த பொருகழற் காலினர்
வரைமிசை மறிநரின் மறப்படை திருத்தி
வெம்முரண் வேழம் வீழ்த்து மாற்றார்
தம்முயிர் நீங்கத் தாழ்ந்தனர் வீழவும்
அடுத்தெழு பெருந்திரை யகன்கட னடுவண்
உடைத்த நாவாய்க் கடைத்தொடை தழீஇ
இடைத்திரைக் கணவரூஉ மெழுச்சி யேய்ப்ப
வாக்கமை பிடிவார் வலித்த கையினர்
ஊற்றமில் புரவித் தாட்கழி வாகிய
குருதிப் புனலிடைக் கருதியது முடியார்
மாவொடு மறிந்து மயங்கி வீழவும்
அலைகடல் வெள்ள மலைய வூழி
உலக மாந்தரிற் களைகண் காணார்
ஒண்செங் குருதியிற் செங்கணிப் போரால்
நீலக் கொண்மூ நீர்த்திரைப் பெய்வதோர்
கோல மேய்ப்பக் கருந்தலை வீழவும்
கால்வல் புரவியுங் கடுங்கண் யானையும்
வேல்வ லிளையரும் விழுந்துகுழம் பாகிய
அள்ளற் செஞ்சே றுள்ளோ ருழக்கலிற்
றப்புநிலத் தெழுந்த துகளென மிக்கெழுந்
தந்தர விசும்பி னந்தியிற் பரப்பவும்
தெரிவருங் குணத்துத் திசைதொறும் பொருந்தப்
போர்வலம் வாய்த்த பொங்கம ரழுவத்து
வார்தளிர்ப் படலை வத்தவர் பெருமகன்
எலிச்செவி யரசன் றம்பி யேறிய
கோலைப்பெருங் களிற்றி னெருத்தத்துப் பாய்ந்தவன்
தம்முன் காணத் தலைதுமித் திடாது

நின்னின் முடியுமெங் கரும மீண்டெனக்
கடுத்த கட்டுரை யெடுத்தனன் கச்சிற்
றிண்டோள் கட்டிய வென்றி நோக்கி
ஒண்டார் மார்பன் கொண்டமை கண்டே
ஒருக்கி நிரல்பொரூஉ முருமண் ணுவாநம்
கருத்துவினை முடிக்குங் கால மிதுவென
வேக வெள்வேற் கேகயத் தரசனை
அடைதர்க வல்விரைந் தமரார் பெரும்படை
உடைவிடம் போல வுண்டென வுரையா
இருவருங் கூடி யெலிச்செவி யரசன்
பொருமுரட் படையொடு மயங்கிய பொழுதவன்
அரணக் கருவி யழிய வாங்கிக்
கரண வகையாற் கண்ணிமைப் பளவில்
மாசில் விழுச்சீர்க் கேகயத் தரசன்
ஆசில் பைந்தலை யரிந்துநிலஞ் சேர
வீசிய வாளினன் விறலோர்ச் சவட்டி
வென்றே னேறிய வேழஞ் சார்ந்தவன்
ஆற்றற் றன்மைய ணுதலிற் றம்பி
சிறைகொளப் பட்ட செல்ல னோக்கி
உறைகழி வாளின னுருமண் ணுவாவின்
மத்த யானை மருங்கிற் குப்புற்
றேள்வா ளோக்கி யெள்ளுந ரோட்டிய
எம்பி யுற்ற வின்னுச் சிறைவிடின்
உய்ந்தனை யாகுதி யஞ்ச னீயென
ஆர்ப்பக் கண்டே யடுதிற லுதயணன்
தாக்கருந் தானைத் தருசகன் றன்னொடு
வேற்றுமை யிலனிவன் போற்றினை யாயிற்
பெறற்கரு நம்பியைப் பெறுதி நீயெனத்
திறப்படக் கூறி மறப்படை நூறக்
கடும்புன னெருங்க வுடைந்துநிலை யாற்று
உப்புச் சிறைபோ லுண்ணெகிழ்ந் துருகி
வெப்ப மன்னர் வீக்கஞ் சாய
உடைந்துகை யகலவவ ருரிமை தழீஇக்
கடந்தலை கழித்துக் கடுவா யெஃகமோ

டிகலாட் படுகளத் தகலம ராயத்
துதயண குமர னுற்றோர் சூழ
விசய முரசோடு வியனக ரறிய
மகத மன்னற் குகவை போக்கலிற்
கேட்டுப்பொரு ணல்கி வேட்டுவிரைந் தெழுந்து
வெற்றத் தானை முற்றத்துத் தோன்றிப்
பகைக்கடன் றீர்த்த தகைப்பொலி மார்பனைப்
பல்லூழ் புல்லி வெல்போர் வேந்த
படைத்தொழின் மாற்றம் பட்டாங் குரைக்கென
எடுத்த பெரும்படை யெழுச்சியு மிறுதியும்
பரப்புஞ் சுருக்கும் பாழியு மறியான்
விலக்கவு நில்லான் றலைக்கொண் டோடித்
தமரையுந் தீர்ந்து நமரையு நண்ணான்
கேளன் மன்னன் வாள்வாய்த் துஞ்சி
மாக விசும்பி னின்றுயி லேற்றனன்
கேகயத் தரச னெனவது கேட்டே
என்கடன் றீரே ணுயி னேனவன்
தன்கடன் றீர்த்துத் தக்க தாற்றினன்
என்பது கூறி யன்புநெகிழ்ந் துருகிப்
பேரா விடும்பையு ளாராய்ந் தவனைக்
கூரெரிப் படுத்துக் குறைவினை நீக்கி
மகதவ ரிறைவனும் வத்தவ மன்னனும்
அகனகர் புகுந்த காலை முகனக
மணிச்சுதைக் குன்றமு மண்டபத் துச்சியும்
அணித்தகு மாடமு மரும்பெறற் புரிசையும்
நிலைக்கா லேணியுந் தலைச்சிறந் தேறி
இரும்பே ருலக மொருங்கியைந் ததுபோற்
றெருவு மன்றமுந் திருமணன் முற்றமும்
மலரணி முகத்து வந்திறை கொண்டு
கீழு மேலுங் கேட்புழி யெல்லாம்
வாழ்க மற்றிவ் வத்தவர் பெருமகன்
என்று டிதுவன் றென்னுன் சென்றுழி
அந்நாட் டிடுக்கணு மச்சமு மகற்றும்
தத்துவ நெஞ்சத் துத்தம னென்மரும்

வனப்பிற் கேற்ற வலியும் விச்சையும்
சினப்போ ரிவற்கே சேர்ந்தவென் போரும்
வஞ்சச் சூழ்ச்சியின் வணக்கி னல்லதை
அஞ்சா திவனை யமர்வென் றழிக்கும்
வேஞ்சின வேந்தரிங் கில்லென் போரும்
ஆசில் செங்கோ லவந்தியன் மடமகள்
வாசவ தத்தையிவன் வலியோடு புணர்ந்த
செருவடு தோண்மிசைச் சேர்ந்தனள் வைகும்
திருவில ளாதலிற் றீப்பட் டாளெனப்
படுசோன் மாற்றந் தெளிந்த பரிவினர்
தொடிகெழு தோளி திருவிழிப் போரும்
அலைகடன் ஞாலத் தாக்கையோ டாருயிர்
நிலைநின் றமையாது நிரைவளைத் தோளி
துஞ்சியுந் துஞ்சா டோணல நுகர்ந்த
வெஞ்சின வேந்தனவள் விளிவு முந்துறீஇப்
புன்கண் கூரப் புலம்புகொண் டாற்றான்
தன்னகர் துறந்து தலைமை நீக்கிப்
பின்னிவ ணிரங்கப் பெற்றன ளாதலின்
அவளே புண்ணிய முடையளென் போரும்
வலிகெழு நோன்றாள் வத்தவ மன்னற்குத்
தருசகன் றங்கை தகையேர் சாயற்
பத்திப் பைம்பூட் பதுமா நங்கை
தக்கனள் கொடுப்பின் மிக்கதென் போரும்
வேண்டி வந்த வேந்தனும் வீய்ந்தனன்
ஈண்டினி யிவற்கே யியைந்த பால்வகை
ஆவ முண்டஃ தறிவோர் யாரென
வாயின் மிகுத்து வலித்துரைப் போரும்
பொன்னணி மார்பன் முன்ன ராற்றிய
நன்னர்க் குதவும் பின்னுப காரம்
அலைதிரைப் பௌவ மாடை யாகிய
நிலமுழுது கொடுப்பினு நேரோ வென்மரும்
நகர மாக்க ளிவைபல பகர
மாசில் செங்கோன் மகத மன்னனொடு
கோயில்புக் கனனாற் கோமகன் பொலிந்தென்.

உரை

௨௰. சங்கமன்னர் உடைந்தது

அஃதாவது - மகதப் படையொடு சென்ற உதயணனோடு சங்கமன்னர் எண்மரும் தத்தம் படைகளோடு பெரும் போர் செய்து ஆற்றாராய்ப் புறமிட்டோடிய செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு. சங்க மன்னர் : விரிசிகன் முதலிய எண்மர் கூட்டம்.

(காலாட்படை)

க - எ : பரந்த.........ஆண்மையர்

(பொ - ரை.) இவ்வாறு அப்போர்க்களமெங்கும் பரவி அவ் விரு கூற்றுப் பெரும் படைகளும், தம்முள் எதிர்ந்த பொழுது, இரு படையிலுமுள்ள ஆற்றல் மிக்க காலாட்படை மறவர்கள் தடுத்தற்கரிய அம்புகள் நிறைக்கப் பட்ட அம்பறுஅத் தூணி களைத் தத்தம் பெரிய முதுகிலே தூங்கவிட்டவராய்க் கரிய கச்சைகளை இழுத்துக் கட்டிய வரும், தத்தம் பகைவரைப் புறங் கொடுக்கச் செய்தலாலே அப்பகைவருடைய மறச் சிறப்பினைப் பெரிதும் இகழ்ந்து சிரிப்பன போன்று தொகுதிகளாய்க் கிடந்து ஆரவாரியாநின்ற பசிய வீரக்கழல்களை யணிந்து துன்புறுதலும் தளர்தலும் இல்லாத புகழ் கொண்ட வலிய முயற்சியினை யுடையரும், தளராத ஆண்மையுடையரும் ஆகி ; என்க.

(வி - ம்.) அருங்கணை - தடுத்தற்கரிய அம்பு. ஆவநாழிகை - அம்பறாத்தூணி. பெரும்புறம் - பெரியமுதுகு. கச்சு ஈர்ப்பினர் - இழுத்துக் கட்டிய கச்சையுடையவர். பிறர்ப் பிறக்கிடீஇ-பகைவரைப் புறங்கொடுக்கச் செய்தலால். இகந்தெள்ளி - மிகுதியாக இகழ்ந்து. சென்ற சென்ற போர்தொறும் பகைவரை வென்று வென்று கட்டிய கழல்களும் பலவாகலின் தொகை கொண்டார்ப்பொறும் பைங்கழல் என்றார். பரிபு - வருந்தி. அசைவு - இளைத்தல். இசை - புகழ். தாள் - முயற்சி. அசைவிலாண்மை - தளராத மறம்.

(இதுவுமது)

அ - கரு : வணங்கு.........தாக்கவும்

(பொ - ரை.) இவருள் வைத்து வின்மறவர் தத்தம் வளைந்த விற்களை நாணேற்றி நெடிய அம்புகளைத் தொடுத்துத் தத்தம் பகைவர்களினது மார்பும் நெற்றியும் புண்படுமாறு அழுத்தா நிற்பவும், இனி எப்பக்கங்களிலும் பரவிப் பகைவர் மனங்கலங்கும்படி தாக்குவோராகிய நிரல் நிரலாகக் கூறிய கடிய

நீர்மையையுடைய வாளேந்திய காலாட் படைஞரும் தத்தம் பகைவரை எதிர்ந்து............தத்தம் வாளினது பிடியை முறியச் செய்கின்ற பிடிப்பினையுடையராய்த் தத்தம் மாலைகளும் மறப் பண்பும் முறையே முறையே பொங்கி ஏழா நிற்பத் தத்தம் பகைவர் மனங்கலங்கும்படி தாக்கா நிற்பவும்; என்க.

(வி - ம்.) சிலைச்சாபம் - சிலைமரத்தாற் செய்த வில். "அஞ்சிலை வல்வில்" என்றார் கலியினும் (கடு) தாரை - கூர்மை. கடிநீர் - கடிய தன்மை. பாலிகை - வாட்பிடி. விளிக்கும் - முறியச் செய்கின்ற. பற்று - பிடிப்பு. "பாலிகை இடையறப் பிடித்த பாணியர்" (சீவக. உஉகஎ) வயிரம் - வீரப்பதக்கமுமாம். வயிரமணி பதித்த பதக்கம் என்க. கால்வல் இளையர் - காலாட்படைஞராகிய வலிமையுடைய இளமையுடைய மறவர்.

(குதிரை வீரர்)

கசு - உச : படை.........ஆகி

(பொ - ரை.) இனி, இருபடையினுமுள்ள குதிரைப் படை மறவர்கள் படைக் கலங்களைத் தம்மேலே நிரப்பப்பட்டனவும் அழ கமைந்த வார்களையும் நூல்களையும் அழகிய குளம்புகளையும் உடையனவும் கலைத்தொழிலையுடைய பக்கங்களையுடைய பொன்னு லியன்ற கண்ணடிகளோடு சாமரை அணியப் பட்டனவும், சிவந்த போர்வையையுடையனவும், பொருந்த முடைய கச்சுகளை உடை யனவும், முதுகு முழுவதும் மறையா நின்ற சேணத்தையுடைய யனவும், பொன்னாலாகிய அழகிய குடுமியின் கண் ஆனவட்டத் தினை (?) ப் பொருத்த முறக் கட்டிய கோணவட்டம் என்னும் விருதினை யொத்த அழகிய முகத்தையுடையனவும், பாற் கடலி னது அலைகளைப் போன்று மேலே எழுந்து மறிகின்ற சாமரை கட்டிய பொலிவினையுடையனவும் ஆகி; என்க.

(வி - ம்.) படை - படைக்கலம். நிறைத்த : முற்று. வடிவு - அழகு. வாரும் நாலும் என்க. சித்திரக்குரத்தின - சித்திரத்தில் எழு தப்பட்டவை போன்ற அழகிய குளம்புகளையுடையன. வித்தகக் கை வினை - சிற்பத்தொழில். புளகம் - கண்ணடி. பொங்குமயிரணிந்த - சாமரையணிந்தன. அரத்தப் போர்வைய - சிவப்புப் போர்வையை யுடையன. பருமம் - சேணம். சிக்கம் - குடுமி; உச்சியுமாம். கோண வட்டம் - ஒருவகை விருது; இது கோணவட்டமெனவும் கூறப்படும். அதுபோன்ற அழகிய முகத்தையுடையன வென்பது கருத்து.

(இதுவுமது)

உரு - உசு : அரிபெய்.........தாக்கவும்

(பொ - ரை.) பரல் பெய்யப் பட்ட செச்சை முழங்கக் கடிவா ளத்தோடு தம்மேல் ஏவியுள்ள தலைவர்கள் மனம்போலக் குதிப்

புணர்ந்து இயங்குவனவும், குதிரை நூல் வல்லவரால் புகழப்பட்டனவும், போர்த் தொழிலில் வன்மையுடையனவும் ஆகிய சிறந்த குதிரைகளின் மேலே இகழ்ச்சியின்றி ஏறிய மறவர்கள் வெவ்விய வலி மிக்க வீரத்தோடு தம்முள் போராற்றாநிற்பவும்; என்க.

(வி - ம்.) அரி - பரல். புட்டில் - செச்சை. "அரிபெய் புட்டிலார்ப்ப......பாய்பரி நன்மா" (அகநா. ௧௨௨ : ௧௯—௨௦), "பொன்னரிப் புட்டிலுந் தாரும் பொங்குபு. முன்னுருத் தார்த்தெழப் புரவி மொய்த்தவே" (சீவக. ௨௧௧௯). கருவி - கடிவாளம். மேலோர் - ஏறிய வீரர், மேலோர் உள்ளம்போல என்னும் இதனோடு, "ஏவ லிளிவெனக் கண்ணிப்பாகன், மனக்க ணியக்கம் பூண்டமானத்து" (பெருங்); "உள்ளம்போற் செல்வ" (சீவக. ௧௭௭௧); "உள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற்கலிமா" (தொல். கற்பு. சூ. ௫௩).

(யானைவீரர்)

௯௦ - ௬௨ : போர்.........ஆட்டவும்

(பொ - ரை.) இனி, போர்க்களத்தின் கண் முழக்கப் படும் பறை முழக்கத்தாலும், மறவர்கள் ஆரவாரத்தாலும், சினங் கொள்வனவும், கார்காலத்து மழையினாலே மலையினின்றும் வீழும் அருவி போன்று மத நீரைச் சொரிகின்ற கவுளையுடையனவும் கொலைத் தொழில் கருதிய பல்வேறு படைக்கலங்களை மேற் கொண்ட மாண்புடையனவும், மலை நிமிர்ந்தாற் போன்றனவும் ஆகிய இளமையுடைய களிற்றி யானைகளின் பிடரின்கண் ஏறியிருந்து வில்லும் அம்புகளும், சிறப்பமைந்த வட்டும் மழுவும் குந்தமும் பெரிய மயிற் பீலியும் சங்கமும் கணையமும் வேலும் வாளும் பிண்டியும் பாலமும் பிறவும் ஆகிய குறைவில்லாத போர்க் கருவிகளைக் கொண்டு போர் செய்து பயின்று பயின்று அத் துறையில் முதிர்ந்த, வண்டுகள் ஆரவாரிக்கின்ற வாகை மாலை புனைந்த இரு படையினுமுள்ள யானை மறவர்கள் தம்முள் கை கலந்து அரிய நிலம் அதிரும்படி சுற்றுவதன் கண் ஒழியாதவராய் வீதியும் வட்டமும் உள்ளிட்ட யானையினது செலவின்கண் வலிமையுண்டாகச் செலுத்தித் தத்தம் பகைவரைக் கொன்று குவியா நிற்பவும்; என்க.

(வி - ம்.) அழல்வது கடாம் சொரிதற்கு ஏதுவன்மையின் அழல்வனவும் என ஓதுக. கார்ப்பெயல் - கார்ப்பருவ மழை. கடாம் - மதம். நவில்-நவின்ற, கருதிய என்க. சிலை - வில். சீர்ப்பு - சிறப்பு. வட்டு - ஒருவகைப் படைக்கலம். மயிற்பீலி - மயிலின் குரல் போன்ற ஒலியை யுடைய சிறு சின்னம். கணையம் - தண்டு. சக்தி - வேல். ஓவா - ஓவாமல். வீதி, வட்டம் என்பன யானையின் செலவு வகைகள். பாழி - வலிமை. நூழிலாட்ட - கொன்று குவிக்க.

(போர் நிகழ்ச்சி)

சஞ - ருo : போர்.........கிடப்பவும்

(பொ - ரை.) இவ்வாறு போர் நிகழா நின்ற அப் போர்க்கள வட்டத்தின்கண் கடல் போன்ற பெரிய அப்படைகளின் ஆரவாரம் கரிய கடல் முழக்கம் போல எங்கும் எழுந்த காலத்தே அடக்குதற்கரிய யானைகளின் பெரிய கைகள் மடலையுடைய பனை மரத்தினது நடுத்துண்டு போலப் பல்வேறிடங்களினும் துணிந்து வீழாநிற்பவும், வாராற்கட்டப்பட்டுத் தோலாற் போர்த்தப் பட்டு அழகமைந்த உடுக்கையினது தலை போன்று யானைகளின் கால்கள் அற்று வீழவும், சுற்றுதலமைந்த கரிய வில்லினது துண்டுகள் போலக் காணப்பட்டுச் சோர்வில்லாத அந்த யானைகளின் வால்கள் அங்கங்கே துணிபட்டுக் கிடவாநிற்பவும் என்க.

(வி - ம்.) களவட்டம் - களத்தினது வட்ட வடிவமான பரப்பு. கார்க்கடல் - கார்ப்பருவத்துக் கடலுமாம். கம்பலை - ஆரவாரம். மடற்பனை - மடலை யுடையபனை. இடைத்துணி - நடுத்துண்டு. கடுப்பு : உவம உருபு. தடக்கை - பெரிய துதிக்கை. வார்ப் பண்பு தைஇய. வாராற்கட்டப் பட்ட. போர்ப்பமை - தோல் போர்வையமைந்த. துடித்தலை - உடுக்கையின் கண். இது யானைக்கால்களுக்கு உவமை. விற்றுணி - வில்லினது துண்டுகள். அற்றம் - சோர்வு.

(இதுவுமது)

ருக - சுக : சித்திர.........வீழவும்

(பொ - ரை.) தாமரைமலர் போன்ற சிற்பம் செதுக்கப்பட்ட அழகிய பரிய தூணையுடைய நுனியாகிய முகத்தையுடைய வெள்ளிய மருப்பு அடியறும் படி வெட்டி வீழ்த்துதலாலே அத்தகைய மருப்புகள் செவ்வானத்திலே அழுந்துகின்ற வெள்ளிய பிறை போன்று அச்சம் வருவதற்குக் காரணமான குருதி வெள்ளத்தின் கண் ஒருங்கே பற்பல வீழ்ந்து முழுகாநிற்பவும், இந்திர வில்லையுடைய கடிய முகில்களை ஊர்தியாகக் கொண்டு வானத்தின்கண் இயங்கா நின்ற விச்சாதரர்களைக் கடிய போர்த்தொழில் வித்தையை நன்கு கற்ற அவர் தம் பகைவர் வீரத்தால் எதிர்ந்து போரிட்டு மார்பிலே படைக்கலம் ஏறுண்டு அவ்விச்சாதரரோடே நிலத்தின்கண் வீழ்வது போல யானை மறவர்கள் யானை மேலிருந்து போராற்றி தம் மார்பின் கண் வெவ்விய படைக் கலங்களை ஏற்றுக்கொண்டு வீரம் குறையாத நோக்கையுடையராய் அந்த யானைகளின் மீதிருந்து களத்தில் வீழாநிற்பவும்; என்க.

(வி - ம்.) தாமரைச் சித்திரத்தொடி, பத்திரத் தொடி பருஉத் தொடி எனத் தனித்தனி கூட்டுக. தாமரைச் சித்திரம் - தாமரைப் பூப்

போன்று செதுக்கிய சிற்பம். பத்திரம் - அழகு. நுதி முகம் - நுதியாகிய முகம் என்க. முதலற - அடி அறும்படி. செக்கர் - செவ்வானம். உட்கு - அச்சம். கார்முகம் - இந்திரவில். விஞ்சை மாந்தர் - விச்சாதரர். மாற்றவர் - பகைவர். விறம் - மார்பு. உயிர் நிலையுமாம். மாந்தி - உட்கொண்டு.

(இதுவுமது)

௬௨ - ௬௭ : பூண்........வீழவும்

(பொ - ரை.) அணிகலன்களைத் தாங்கி விரிந்த பக்கங்களுயர்ந்த தம் மார்பின் கண் தாம் தம் பகைவரை எதிர்ந்துழி அவர் எறிந்த வேலினை ஏற்றுக் கொண்டு பின்னர் அவ்வேலினைக் கையாற் பறித்துத் தாமேறிய யானையினது புரசைக் கயிற்றின் கண் செலுத்திய போர் செய்தற்கு அறிகுறியான வீரக் கழலையணிந்த காலினையுடையராய் மலையினின்றும் இறங்குவார் போலக் கீழிறங்கித் தம்முடைய கையகத்திருக்கும் அவ்வேற் படையின் வளைவை நிமிர்த்துத் தம்முடைய பகைவரது வெவ்விய வலியினையுடைய களிற்றியானையை அவ்வேலான் எறிந்து கொன்று வீழ்த்து அந்த யானையின் மேலிருந்த அம் மாற்றார் உயிர் நீங்குதலைக் காண்டற்குச் சிறிது பொழுது நின்று அவர் இறந்த பின்னர்த் தாமும் வீழ்ந்து இறவா நிற்பவும்; என்க.

(வி - ம்.) பூண் - அணிகலன். புடை - பக்கங்கள். அகலத்து - மார்பில். தாம் ஏற்றுழி பகைவர் அழுத்திய சக்தி என்க. "கைவேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்" (திருக்குறள் - ௭௭௪) என்னுந் திருக்குறளும் காண்க. புரைசை - யானைக் கழுத்திற் கட்டும் கயிறு. மறிநரின் - கவிழ்பவரைப் போல. படை திருத்தி - படையின் வளைவை நிமிர்த்து.

(இதுவுமது)

௬௮ - ௭௪ : அடுத்து........விழவும்

(பொ - ரை.) அடுத்து அடுத்து எழா நின்ற பெரிய அலைகளையுடைய அகன்ற கடலிடையே உடைபட்ட தோணியினது இறுதியிற் கட்டப்பட்டுள்ள கயிற்றைப் பற்றிக் கொண்டு இடை இடையே வருகின்ற அலைகளுக்கு அண்ணாத்தல் செய்கின்றவருடைய எழுச்சியை யொப்ப ஊக்கமில்லாத தம்முடைய குதிரைகளின் கால்களுக் கெட்டாத குருதி வெள்ளத்தின்கண் அக் குதிரைகளினது திருந்தமமைந்த கடிவாளவாரினைப் பற்றியகையையுடையராய்த் தாம் கருதிய காரியத்தைச் செய்து முடியாராய் அக்குதிரைகளோடு புரண்டு மயங்கி அக் குருதி வெள்ளத்தில் வீழாநிற்பவும்; என்க.

(வி - ம்.) அடுத்தடுத்து எழுகின்ற திரை என்க. உடைபட்ட நாவாய் என்க. நாவாய் - தோணி. கடைத்தொடை - இறுதியிற் கட்டப்பட்டுள்ள கயிறு. அணவரூஉம் - அண்ணுத்தல் செய்கின்ற. வாக்கு - திருத்தம். பிடிவார் - கடிவாள வார். ஊற்றம் - ஊக்கம். தாட்கு அழிவு ஆகிய குருதிப் புனல் - கால்களுக்கெட்டாத குருதி வெள்ளம். மா - குதிரை. மறிந்து - புரண்டு.

(இதுவுமது)

எ௫ - எகூ : அலை.........வீழவும்

(பொ - ரை.) அலையையுடைய கடலினது வெள்ளம் புகுந்து பொராநிற்ப ஊழி முடியுங் காலத்தே உலகின்கண் தமக்குப் புகலிடம் காணமாட்டாத மக்களைப் போல, அக்களத்தின்கண் சிவந்த குருதியின்கண் (செங்கணிப் போரால் ?) நீல நிறமுடைய முகில் குருதி நீரைக் கடலின்கண் பெய்வதாகிய ஒரு காலம் வந்தது போலக் கரிய தலைகள் அற்றுக் குருதி நீரைப் பொழிந்து கொண்டு அக் குருதிக் கடலில் வீழாநிற்பவும்; என்க.

(வி - ம்.) ஊழி - ஊழிமுடிவின்கண் என்க. களை கண் காணார். புகலிடம் காணாத. நீலக் கொண்மூ - நீல நிறமுடைய முகில். நீர் - குருதி நீர் என்க. கொண்மூ - குருதி பொழியும் கருந்தலைக்கு உவமை என்க.

(இதுவுமது)

அ௦ - அகூ : கால்.........அழுவத்து

(பொ - ரை.) கால் வலிமையுடைய குதிரைகளும் தறுகண் யானைகளும் வேற்படை வல்ல மறவர்களும் இறந்து வீழ்ந்து குழம்பாகிய அள்ளலாகிய சிவந்த சேறு, எஞ்சியுள்ள படைமறவோர்கள் துவைத்தலாலே செந்நிலத் தெழுந்த துகள் போன்று மிகுந்து எழுந்து அந்தரமாகிய வானத்தின்கண் அந்தி மாலைப் பொழுதின் செவ்வானம் போல யாண்டும் பரவா நிற்பவும், குணந்தெரிதற்கரிய திசைகள் தோறும் புகழ் சென்று பொருந்தும்படி போர்வெற்றி வாய்த்த சினமிக்க அப்போர்க் களத்தின் கண்; என்க.

(வி - ம்.) கால் - காற்றுமாம். கடுங்கண் - தறுகண். அள்ளல் ஆகிய செஞ்சேறு என்க. உள்ளோர் - எஞ்சியுள்ள மறவர். துப்பு நிலம் - செந்நிலம். அந்தர விசும்பு : இரு பெயரொட்டு. அந்தியில் - அந்திச் செவ்வானம் போல. குணம் தெரிவருந்திசை என்க. அமர் அழுவம் - போர்க்களப்பரப்பு.

(உதயணன் முதலியோர்செயல்)

அஎ - கூ௩ : வார்.........நோக்கி

(பொ - ரை.) நெடிய தளிராலியன்ற மாலையினையுடைய வத்தவமன்னனாகிய உதயணன் பகைமன்னருள் வைத்து எலிச்

செவியரசனுடைய தம்பி ஏறிய கொலைத் தொழிலையுடைய பெரிய களிற்றியானையின் பிடரின்கண் தாவி அவனுடைய தமையன் காணும்படி அவனுடைய தலையினை அரிந்திடாமல், "ஏடா! நின்னைக் கைப்பற்றுவதனாலே எங்கள் காரியம் இங்கு நன்கு நிறைவேறுவதாம்" என்று அச்சந்தரும் ஒரு மொழியை எடுத்துக் கூறிக் கச்சினாலே அவனது திண்ணிய தோளைப் பிணித்த வெற்றிச் செயலைக் கண்கூடாகப் பார்த்தும்; என்க.

(வி - ம்.) வார் - நெடிய. தளிர்ப்படலை - மலரோடு தளிர் விரவிப் புனைந்த மாலை. எருத்தத்து - பிடரியின்கண். தம்முன் - தமையன். துமித்திடாது - துணித்திடாமல். கடுத்த கட்டுரை - அச்சந் தரும் மொழி; நோக்கியும் என்க.

(இதுவுமது)

கூசு - கூகூ : ஒண் .... உரையா

(பொ - ரை.) ஒள்ளிய மலர்மாலையணிந்த மார்பினையுடைய உதயணன் அவனைக் கைப்பற்றிக் கொண்டமையையும் பார்த்துத் தனது படைகளை ஒருசேர ஆக்கிக் கொண்டு நிரலாகப் பகைவருடன் போராற்றுகின்ற உருமண்ணுவா நம்முடைய கருத்தின் கண்ணுறையும் காரியத்தை நன்கு நிறைவேற்றுங்காலம் இது போலும் என்று தனக்குட் கருதி அயலிலே போராற்றிய சின மிக்க வெள் வேலேந்திய கேகய மன்னனைக் கூவி "மிக விரைந்து வருக வருக! போர் செய்கின்ற பகைவருடைய பெரிய படைகள் உடைந்தோடும் செவ்வி போலத் தோன்றுகின்றது," என்று அவனுக்கு உணர்த்தி; என்க.

(வி - ம்.) ஒருக்கி - ஓரிடத்தே கூட்டி. நிரல் பொருஉம், நிரலாக நின்று போர் செய்யும். என - என்று கருதி. வேகம் - சினம். அடைதர்க - வருக. அமரார் - பகைவர். உடைவிடம் - உடைந்தோடுஞ் செவ்வி. போல உண்டு - போலக் காணப்படுகிறது.

(இதுவுமது)

க00 - க0சு : இருவரும்.........சவட்டி

(பொ - ரை.) அவ்வுருமண்ணுவாவும் கேகய மன்னனுமாகிய இருவரும் ஒன்று கூடி எலிச் செவியரசனுடைய போர் வலிமை மிக்க படையோடு கலந்த காலத்தில் அந்த எலிச் செவிமன்னன் ஒரு நொடிப் பொழுதில் குற்றமற்ற சிறப்பும் புகழும் உடைய கேகயத் தரசனுடைய கவசம் அழியும்படி தன் அம்புகளாலே அகற்றித் தனது தொழில் வன்மையால் குற்றமற்ற அக் கேகய மன்னனுடைய பசிய தலையை அரிந்து நிலத்திலே வீழ்த்தும்படி தனது வாளை வீசிப் பின்னரும், அவன் மருங்கே நின்ற மறவர்களையும் கொன்று வீழ்த்தி; என்க.

(வி - ம்.) மயங்கிய பொழுது - கலந்த காலத்தில், அவன் : எலிச் செவியரசன். அரணக் கருவி - கவசம். வாங்கி - நீக்கி. கரண வகை - போர்ச் செயல் வகை. விழுச்சீர் - சிறந்த புகழ். ஆசு - குற்றம். விறலோர் - கேகய மன்னன் மறவர். சவட்டி - கொன்று வீழ்த்தி.

(இதுவுமது)

கூ0எ - க்கரு : வென்றோன்.........ஆர்ப்ப

(பொ - ரை.) பின்னர் ஆண்டுப் பகைவர்களை வென்று வெற்றியோடு நின்ற உருமண்ணுவா ஏறிய களிற்றியானையைச் சார்ந்து அவன்றானும் பேராற்றல் படைத்த மறவனாதலின் அவனோடு போர் செய்தலை விரும்பித் தன் தம்பி உதயணனால் சிறை கொளப்பட்ட துன்ப நிகழ்ச்சியைக் கருதி அதற்கு ஈடாக உறையினின்றும் கழித்த வாளையுடையவனாய் அவ்வுருமண்ணுவாவின் மதச் செருக்குடைய யானையினது பக்கத்தே குதித்துத் தனது ஒளி வாளை உயர்த்தி அவ்வுருமண்ணுவாவைப் பற்றிக் கொண்டவனாய், “எடா! எம் பகைவர்களை யெல்லாம் புறங்கண்ட என் தம்பி அகப்பட்டுள்ள இன்னாமையுடைய சிறைவிடப்படின் நீயும் உயிர் தப்புவாய் அஞ்சேல்” என்று கூறி ஆரவாரியா நிற்ப; என்க.

(வி - ம்.) வென்றோன் : உருமண்ணுவா. அவன் : அவ்வுருமண்ணுவா. ஆற்றற்றன்மையனாதலின் அவனோடு போர் செய்தலை விரும்பி எனச் சில சொற்கள் பெய்து கொள்க. செல்லல் - துன்பம். அதற்கீடாக என வருவித் தோதுக. குப்புற்று - குதித்து ஓக்கி - உயர்த்திக் கைப்பற்றிக்கொண்டவனாய் எனச் சில சொற்கள் பெய்க. எள்ளுனர் : பகைவர். எம்பி - என் தம்பி. சிறைவிடின் உய்ந்தனை யாகுதி என்றது, விடாக்கால் கொல்லப்படுவை என்பதுபட நின்றது. உய்தற்கு வழிகாட்டினமையின் நீ அஞ்சல் என்றான்.

(இதுவுமது)

ககரு - க்ககூ : கண்டே.........நூற

(பொ - ரை.) பகைவரைக் கொல்லும் ஆற்றலுடைய உதயண மன்னன் இந்நிகழ்ச்சியினைக் கண்கூடாகக் கண்டு அந்த எலிச் செவியரசனை நோக்கி “வேந்தே! பகைவரால் தாக்குதற்கரிய பெரிய படையினையுடைய தருசக மன்னனோடு நின்னாற் பற்றப்பட்ட இம்மறவன் வேற்றுமை ஏதும் இல்லாதவன் ஆவன்; ஆதலின் இவனை நீ கொல்லாமல் பாதுகாப்பாயாயின் நீயும் பெறற்கரும் நின் தம்பியை உயிரோடு பெறுகுவை” என்று அவனுக்கு உறுதியுண்டாகக் கூறிப் பின்னர்த் தன்னெதிரே யுள்ள மறமிக்க பகைப் படையைக் கொல்லுந் தொழிலிலே புகாநிற்ப; என்க.

(வி - ம்.) தருசக மன்னனுக்கு நின்னால் கைப்பற்றப்பட்ட இவன் மிகச்சிறந்த நண்பனுவான் ஆதலின் அம்மன்னன் இவன் பொருட்டு நின்றம்பியை விடுதலை செய்வன் என்பது கருத்து. போற்றினையாயின் - கொல்லாமல் பாதுகாப்பாயாயின். போற்றினை யாயின் நும்பியைப் பெறுதி என்றது போற்ருக்கால் நும்பி கொல் லப்படுவன் என்பது தோன்ற நின்றது.

(இதுவுமது)

க௨0 - க௨அ : கடும்.........போக்கலின்

(பொ - ரை.) அப்பகைவர் படைப் பெருக்கம் மிக்க வெள்ளம் தன்னை நெருக்குதலாலே உடைந்து நிற்றலாற்ருத உப்பினுற் கட்டிய அணைபோல உள்ளம் நெகிழ்ந்து உருகி ஓடாநிற்ப, அங்ஙனம் உடைந்தோடுகின்ற அப்பகை மன்னர் கைவிட்டுப் போன பொருள்களையெல்லாம் உதயண மன்னன் கைப்பற்றிக் கொண்டு தனது கடமையிலே தலைநின்று செய்து கழித்து வடுப் பட்ட வாயையுடைய படைக்கலங்களோடே பகை மறவர்கள் இறந்துபட்ட களத்தின் கண்ணே போரொழிந்த உதயண மன்னன் மறவர்கள் வந்து தன்னைச் சூழாநிற்ப, வெற்றிமுரசம் முழக்குதலோடே அகன்ற இராசகிரிய நகரத்து வாழ்கின்ற மாந்தர் அறியும்படி அம்மகத நாட்டு மன்னனுகிய தருசகனுக்கு இவ்வெற்றிச்செய்தியைக் கூறும்படி தூது விடுதலாலே; என்க.

(வி - ம்.) உப்புச்சிறை - உப்பாலிட்ட அணை. வெப்பமன்னர் - பகைமன்னர், அவர் - அப்பகை மன்னர். உரிமை - உரிய பொருள் கள். கடம் - கடமை. கதுவாய் யெஃகம் - வடுப்பட்ட வாயையுடைய படைக் கலங்கள். இகலாள் - பகை மறவர். அமரகல் ஆயம் என மாறுக. ஆயம் - கூட்டம். விசைய முரசம் - வெற்றி முரசம். நகர் - இராசகிரியம். உகவை - மகிழ்ச்சிச் செய்தி.

(இதுவுமது)

க௨௯ - க௩௫ : கேட்டு.........உரைக்கென

(பொ - ரை.) அவ்வுவகைச் செய்தியைக் கேட்ட அம்மகத மன்னன் பெரிதும் மகிழ்ந்து அத்தூதுவர் உவக்கும்படி பொருள் பலவழங்கி உதயணனைக் காண்டற்குப் பெரிதும் விரும்பிவிரைந்து எழுந்து எதிர்வந்து வெற்றியையுடைய படைகளையுடைய அரண் மனை முற்றத்திலே வந்து ஆங்கு வருகின்ற பகையை வெல்லுத லாகிய தன் கடமையைச் செய்துமுடித்த வாகைமாலையால் அழகுற்றுப் பொலிகின்ற மார்பினையுடைய அவ்வுதயணனைப் பன்முறையும் தழுவிக்கொண்டு மகிழ்ந்த பின்னர், அவ்வுதய ணனை நோக்கி "வெல்லும் போரினையுடைய வேந்தனே! நீ நிகழ்த்திய போர்த் தொழிலின் நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறே உரைத்தருளுக" என்று வேண்டாநிற்ப; என்க.

(வி - ம்.) தூதுவர்க்குப் பொருள் நல்கி என்க. உதயணனைக் காண்டற்கு வேட்டு என்க. வெற்றம் - வெற்றி. பகைக்கடன் - பகையை வெல்லுதலாகிய கடமை. மார்பன் : உதயணன். பல்லூழ் - பன்முறையும். புல்லி - தழுவி. வேந்த : விளி. பட்டாங்கு - நிகழ்ந்த வாறே.

(உதயணன் கூறுதல்)

௧௩௪ - ௧௪௦ : எடுத்த.........கேட்டே

(பொ - ரை.) அதுகேட்ட உதயண மன்னன், "நண்பனே! நம் படைத் தலைவனாகிய கேகய மன்னன் நம்பால் போர்க்குவந்த பகைவரது பெரிய படையினது எழுச்சியையும் இறுதியையும் பரப்பையும் சுருக்கத்தையும் வலிமையையும் சிறிதும் அறியாதவனாய் யாங்கள் தடுக்கவும் நில்லாதவனாய்த் தானே போரை மேற்கொண்டு விரைந்துசென்று தன் துணை மறவர்களினின்றும் விலகி நம்படைத் தலைவர்பாலும் வாராதவனாய் அப்பகைவர் சூழலிற்பட்டு அப்பகை மன்னன் ஒருவனுடைய வாளினாலே இறந்துபோய் மேனிலை யுலகத்தே இனிய துயிலை மேற்கொள்வானாயினன்" என்று கூறுதற்க, அத்துயரச் செய்தியைக் கேட்ட மகத மன்னன்; என்க.

(வி - ம்.) எழுச்சி - தொடக்கம். பாழி - வலிமை. யாங்கள் விலக்கவும் நில்லான் என்க. தமர் என்றது. அவனுக்குத் துணையாகிய படைமறவரை. நமர் என்றது, படைத்தலைவர்களை. கேளன் மன்னன் : பகை மன்னன்; என்றது எலிச்செவியரசனை. துஞ்சி - இறந்து. மாக விசும்பு: இரு பெயரொட்டு. அது - அத்துயரச் செய்தி.

(தருசகன் கூறுதல்)

௧௪௧ - ௧௪௫ : என்........நீக்கி

(பொ - ரை.) "அந்தோ! அக் கேகய மன்னன் திறத்திலே யான் செய்தற்குரிய கடமையைச் செய்யாதொழிந்தேனே! அங்ஙனமிருப்பவும் அப்பெருமகன் என் திறத்திலே தான் செய்தற்குரிய கடமையைச் செய்துமுடித்து 'புகழத் தகுந்தொரு செயலையும் செய்தான்' என்னுமிதனை அவன்பால் பேரன்புடைய தன் நெஞ்சு நெகிழ்ந்து உருகிக் கூறி அகலாத துன்பத்தோடு சென்று அப்போர்க் களத்தின்கண் அவன் உடலை ஆராய்ந்து கண்டு எடுத்துக் கூர்த்த நெருப்பினைப் பெய்து அக்கடமையைக் கழித்து; என்க.

(வி - ம்.) என்கடன் என்றது, பதுமாபதியை அவனுக்கு வழங்குதலை. தன்கடன் தீர்த்து என்றது, உற்றுழி உதவியதனை. தக்கதாற்றி என்றது, போர்க்களத்தின்கண் தன் பொருட்டு இறந்துபட்டமையை என்க. போர்க்களத்தின்கண் அவன் உடலை ஆராய்ந்து என்க

கூரெரி - கூர்த்த நெருப்பு. குறைவினை - செய்தற்குரியதாய் எஞ்சி நிற்கும் செயல்; என்றது இறுதிக்கடனை.

(தருசகனும் உதயணனும் நகர் புகுதலும் நகரமாந்தர் செயலும்)

கசசு - கருக : மகதவர்.........கொண்டு

(பொ - ரை.) அம்மகத வேந்தனும் வத்தவ வேந்தனும் மற்றைய மறவர்களோடும் அவ்விராசகிரிய நகரத்தின்கண் புகுந்தபொழுது அந்நகரத்தின்கண் வாழும் மாந்தர்கள் மகிழ்ச்சியாலே முகம் மலர்ந்து நீலமணிபோலும் நிறமுடையனவாகச் சுதை தீற்றப்பட்ட செய்குன்றங்களின் மேலும் மண்டபங்களின் உச்சியிலும் அழகுடைய மேனிலைமாடங்களிலும் பகைவராற் பற்றுதற்கரிய மதிலுச்சியினும் நிலைத்த காலையுடைய நகர்காண் ஏணிகளிடத்தும் ஊக்கமுடையராய் ஏறி நின்றும் பேருலகத்து வாழும் மாந்தர்கள் எல்லாம் ஓரிடத்தே வந்து கூடினாற்போலக் குழுமி அந்நகரத் தெருக்களிலும் மன்றங்களிலும் அழகிய புது மணல் பரப்பப்பட்ட முற்றங்களினிடத்தும் மலர்ந்த செந்தாமரை மலர்போன்ற முகங்களையுடையவராய் வந்து நிரம்பி; என்க.

(வி - ம்.) மணி குன்ற மாகலின், நீலமணி என்க. குன்றம் - செய்குன்றம். மாடம் - மேனிலை மாடங்கள். பகைவரால் பற்றுதலரிய புரிசை என்க; புரிசை - மதில். நிலைக்காலேணி - நகர் காணேணி. உலகம் - உலகத்திலுள்ள மாந்தர்; ஆகுபெயர். மன்றம் - ஊரம்பலங்கள். மலரணி - மலர்போன்ற. அணி: உவம வுருபு. இறை கொண்டு - தங்கி இருந்து.

(உதயணனைப் புகழ்தல்)

கருசு - கசுரு : நீழும்.........இல்லென்போரும்

(பொ - ரை.) இவ்வாறு தெரு முதலிய கீழ் நிலத்தும் குன்ற முதலிய மேலிடங்களிலும் குழுமிய மாந்தர் கேட்கு மிடமெல்லாம் இவ் வத்தவ அரசனாகிய உதயண மன்னன் நீடுழி வாழ்க; என்று வாழ்த்துவோரும், இப்பெருமகன் யாங்குச் சென்றாலும் இந்நாடு என்னுடைய நாடன்று என்று நினையாதவனாய் அவ்வந் நாட்டினும் உள்ள மாந்தர்க்கெய்திய துன்பங்களையும் அச்சத்தையும் அகற்றுமொரு மேம்பட்ட நெஞ்சத்தையுடைய உத்தமன் கண்டீர்! என்று பாராட்டிப் புகழ்வாரும், இப்பெருமகன் பேரழகும் அப் பேரழகிற்கு ஏற்ற ஆற்றலும் கல்வியும் உடையவன் கண்டீர்! இவ்வுலகத்தில் வெகுளுதற்குக் காரணமான போராற்றலையுடைய இம்மன்னனுக்கே இந்நலங்களெல்லாம் ஒருங்கியைந்தன கண்டீர்! என்று வியப்போரும், இவனை வஞ்சச் சூழ்ச்சியினாலே வென்றாலல்லது நேரில் எதிர்ந்து போர்செய்து வென்று

அழிக்கத் தகுந்த வெவ்விய சினமுடைய பிறவேந்தர் இவ்வுலகத்திலே இல்லை என்பாரும் ; என்க.

(வி - ம்.) கீழ் - கீழிடம். மேல் - மேலிடம். கேட்புழி - செவி கொடுத்துக் கேட்குமிடமெல்லாம். "யாதுமூரே யாவருங் கேளிர்" என்று எண்ணும் பெருந்தகையுள்ளம் படைத்தவன் என்பார், "என்னுடிதுவன் றென்னுன், சென்றுழி அந்நாட் டிடுக்கணும் அச்சமுமகற்றும் தத்துவ நெஞ்சத் துத்தமன் " என்றூர். இத்தொடர் வினைந்து இன்புறற்பாலது. வனப்பு - அழகு. "உருவிற்கமைந்த வுணர்வு நன்குடைமை" எனப்பிறுண்டும் கூறினர் (உ. கசு : கசுக). விச்சை - கல்வி. இவர்க்கே சேர்ந்த என்புழி, ஏகாரம் ஏனையோரைப் பிரித்தலின் பிரிநிலை. வஞ்சச் சூழ்ச்சியின் வணக்கினல்லதை அஞ்சாதிவனை அமர்வென்றழிக்கும் வெஞ்சின வேந்தர் இல்லென்றது பண்டு அவனைப் பிரச்சோதனன் வஞ்சத்தாற் சிறைப்படுத்தியதைக் கருதிக் கூறியவாறு.

(வாசவதத்தையை இகழ்தல்)

கசுசு - கசுசு : ஆசில்............இழிப்போரும்

(பொ-ரை.) இனி அம்மாந்தருள் ஒருசிலர், "குற்றமற்ற செங்கோலையுடைய அவந்தி நாட்டரசனுகிய பிரச்சோதன மன்னனுடைய இளமகளாகிய வாசவதத்தை இப்பெருமானுடைய ஆற்றலொடு புணர்ந்த போரில் வல்ல தோளின் மீது சேர்ந்து நீடூழி வாழ்வதற்குரிய பாக்கியம் உடையள் அல்லளாதலின் தீயினுள்ளகப்பட்டு இறந்தாள் என்னும் அச்சொல்லின் கருத்தினைத் தெளிந்தமையால் உண்டாகிய இரக்கத்தோடு வளையலணிந்த தோளையுடைய அப் பெருந்தேவியினது செல்வத்தை இகழ்ந்து கூறுவோரும்; என்க.

(வி - ம்.) ஆசு - குற்றம். அவந்தியன் : பிரச்சோதனன். திரு - பாக்கியம். தீப்பட்டாள் - தீயின்கண் இறந்தாள். தோளி : வாசவதத்தை. இழிப்போரும் - இகழ்ந்து கூறுவோரும்.

(வாசவதத்தையைப் புகழ்தல்)

கஎ0 - கஎஎ : அலைகடன்.........என்போரும்

(பொ - ரை.) அதுகேட்டு ஒரு சிலர் "அங்ஙனம் அக்கோப் பெருந்தேவியை இகழாதே கொண்மின் ? அலையையுடைய கடல் சூழ்ந்த இவ்வுலகத்தின் கண் பிறந்தோரெல்லாம் இறத்தல் ஒருதலை. உயிர் உடலோடு எற்றைக்கும் நிலைநிற்பதொன்றன்று. நிரல் பட்ட வளையலணிந்த தோள்களையுடைய அவ்வாசவதத்தை நல்லாளே இவ்வுலகத்தே இறந்தும் இறவாதவள் கண்டீர் ! அஃதெற்றாலெனின் ? அப் பெருமகளுடைய தோளினது இன்பத்தை நுகர்ந்த வெவ்விய சினமுடைய இப்பெருமான், அப்பெரு

மாட்டியினது இறப்பினை முன்னிட்டு உண்டான துயரம் நாடோறும் மிகுதலாலே புலம்புற்று ஆற்றுதவனும்த் தன் நகரத்தைத் துறந்து தனது அரசுரிமையையும் துறந்து அவனுக்குப் பின் இந் நாட்டிற்கு வந்தும் இரங்குதற்குரிய சிறப்பினைப் பெற்றனள், ஆதலாலே, கற்புடைப் பெண்டிருள் வைத்து அப்பெரு மாட்டியே மிகப் பெரிதும் புண்ணியமுடையள் காண் !" என்று அவ்வாசவதத்தையைப் பெரிதும் பாராட்டுவோரும் ; என்க.

(வி - ம்.) உலகின்கண் பிறந்தோரெல்லாம் இறத்தல் இயல்பே ; அது பழியன்று என்பார் ஞாலத்து ஆக்கையொடு ஆருயிர் நிலை நின்றமையாது என்றார். தோளி : வாசவதத்தை. துஞ்சியுந் துஞ்சாள் - இறந்தும் இறவாதவள். விளிவு - இறப்பு, புன்கண் - துன்பம். கூர - மிக. புலம்பு - அழுகை. தலைமை - அரசுரிமை. இவண் - இவ்விராசகிரிய நகரத்தின்கண்ணும், இவணும் எனல் வேண்டிய உம்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது; வாசவதத்தை சிறிது காலமே கணவனொடு வாழ்ந்தும் அக்கணவன் நெஞ்சை இங்ஙனம் கவர்ந்துள்ளாள். ஆதலின் அவளே புண்ணிய முடையவள் என்று புகழ்ந்தபடியாம்.

(வேறு சிலர் கூற்று)

களஅ - கஅக : வலி..............என்போரும்

(பொ - ரை.) இனி, வேறுசிலர், "வலிமை பொருந்திய முயற்சியையுடைய இந்த வத்தவ மன்னனுக்கு நம் மன்னவன் தருசகனுடைய தங்கையாகிய பெருந்தகைமையும் அழகும் சாயலும் நிரல்பட்ட பசிய அணிகலன்களுமுடைய பதுமாபதி நங்கையே கோப்பெருந்தேவியார் தற்குத் தகுந்தவள் ; ஆதலின், நம்மன்னன் அவளை இவனுக்கு மணம் செய்து கொடுப்பின் மிக மிக நன்றாகும்," என்று கூறுவோரும் ; என்க.

(வி - ம்.) தாள் - முயற்சி. தகை - பெருந்தகைமை; அழகுமாம். ஏர் - அழகு ; எழுச்சியுமாம். சாயல் - மென்மை. பதுமா - பதுமை; பதுமாபதி. நங்கை - மகளிருட்சிறந்தோள். கொடுப்பின் மணம் செய்விப்பின். மிக்கது - சிறந்தது.

(இதுவுமது)

கஅஉ - கஅரு : வேண்டி..............உரைப்போரும்

(பொ - ரை.) அதுகேட்ட வேறுசிலர் " ஆம் ஆம், நுங் கருத்து நன்றே ! அப்பதுமாபதியை மணந்து கோடற்கு விரும்பி வந்த அச்சுவப்பெருமகனும் போர்க்களத்தே இறந்தொழிந்தான். இனி, இங்கு நுங்கருத்தின் படியே இப்பெருமகனுடைய ஆகூழ் இருத்தலுங்கூடும். அவ்வூழினையாரே யறிய வல்லார் !" என்று தத்தம் வாய் தந்தனவெல்லாம் வலிந்து கூறுவோரும் ; என்க.

(வி - ம்.) வேண்டிவந்த வேந்தன் : கேகய மன்னன். வீய்ந்தனன் - இறந்தனன். இவற்கு : உதயணனுக்கு. பால் - ஆகூழ். வாயடக்கமின்றி மனம் போனபடி மிகையாகப் பேசும்பொது மக்களியல்பினை எடுத்துக் காட்டுவார் 'வாயின் மிகுத்து வலித்துரைப் போரும்' என்றார்.

(இதுவுமது)

கஅ௬ - க௯உ : பொன்...........பொலிந்தென்

(பொ - ரை.) இனி, நன்றறி மாந்தர் சிலர்,"திருமகள் வீற்றிருந்து அழகு செய்யும் மார்பினையுடைய வத்தவ வேந்தன் முன்னர் யாம் யாதும் உதவி செய்யாமலேயே செய்த இவ்வுதவிக்கு யாம் இனிச் செய்யவிருக்கும் கைம்மாறாக அலைகின்ற திரைகளையுடைய கடலை ஆடையாக உடுத்த இந்நிலவுலக முழுதையும் வழங்கினும் ஒப்பாகுமோ?" என்பாரும் இவ்வாறு அந்நகர் வாழ் மாந்தர் இன்னோரன்ன பற்பல மொழிகளைக் கூறி வாழ்த்திப் பாராட்டா நிற்ப: இறைமகனாகிய உதயணகுமரன் குற்றமற்ற செங்கோலையுடைய அம்மகத மன்னனோடு வெற்றிப் பொலிவெய்தி அரண்மனையின் கண் புகுவானாயினன் ; என்க.

(வி - ம்.) பொன் - திருமகள். மார்பன் : உதயணன். "முன்னராற்றிய நன்னர்க்குதவும் பின்னுபகாரம் அலைதிரைப் பௌவமாடையாகிய நிலமுழுதும் கொடுப்பினு நேரோ," என்னுமிதனோடு, "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்ற லரிது" (குறள் க0க) என வரும் திருக்குறளையும் நோக்குக. நன்னர்க்கு - நன்றிக்கு. பின்னுபகாரம் - கைம்மாறு. பௌவம் - கடல். நேரோ - ஒப்போ. கோயில் - அரண்மனை. கோமகன் : உதயணன்.

உ0. சங்க மன்னர் உடைந்தது முற்றிற்று.

உக. மகட்கொடை வலித்தது

இதன்கண் உதயணமன்னன் பதுமாபதியைத் திருமணம் செய்துகோடற்கு உரிய வழிகளை ஆராய்தலும், தருசகன் கருதுதலும், தருசகன் அமைச்சனை உதயணன்பால் விடுத்தலும், ஒரு முதுமகள் பதுமாபதிக்கு அறிவித்தலும், பதுமாபதி தன்னுட் கருதுதலும், அமைச்சன் உதயணனையடைந்து தருசகன் கருத்தைத் தெரிவித்தலும், உதயணன் தன்னுள் எண்ணுதலும், அவன் வஞ்சகமாக மறுத்துரைத்தலும், அமைச்சன் வேண்டுகோளும், உதயணன் உடன்பாடும், அமைச்சன் தருசகன்பால் மீளலும், பிறவும் கூறப்படும்.

கோயில் புக்கபி னுய்புக ழுதயணன்
கரந்த வுருவொடு கலந்தகத் தொடுங்கிப்
பிரிந்த பொழுதி னொருங்கவட் கொழிந்த
அருந்தொழிற் றெளிவு மன்பு மென்றிவை
பெரும்புணை யாக விருந்தகத் துறையும்
பொற்றொடிப் பணைத்தோண் முற்றிழை மாதரை
இற்பெருங் கிழமையொடு கற்புக்கடம் பூட்ட
வரையும் வாயி றெரியுஞ் சூழ்ச்சியுள்
ஈரைம் பதின்மரை யிகல்கெட நூறி
வீர மிக்க விறற்றறு கண்மைக்
குருகுலத் தைவரு ளொருவன் போலத்
தனிப்படச் செய்கை தன்கட் டாங்கிய
மணிப்பூண் மார்பன் வத்தவ மன்னனொடு
சுற்றத் தாரெனுஞ் சொல்லுடை வேந்தர்
முற்றவ முடையரென் றுற்ற வுள்ளமொடு
பகைகொண் மன்னரைப் பணித்ததற் கொண்டு
தகைகொள் வேந்தன் றமரொடு சூழ்ந்து
செங்கடை வேற்கண் வெள்வளைப் பணைத்தோட்
டங்கையைப் புணர்க்குஞ் சிந்தைய னாகி
உள்பொருள் வலிக்கு முறுதிச் சூழ்ச்சியன்
மல்லற் றானை மறப்பெருஞ் சீற்றத்துச்
செல்பொறி செறித்த பல்புக ழமைச்சனை

வள்ளிதழ் நறுந்தார் வத்தவர் கோமாற்
கங்கண் விட்டு மடுக்கற் பாலதூஉம்
இங்க ணிவனே யெளிதுதரப் பெற்றும்
கோல மங்கையைக் கோடாஅ மாகுதல்
கால நோக்கிற் கரும மன்றெனக
வலித்ததை யுணர்த்தி வருதி நீயெனத்
தலைப்பெரு வேந்தன் றானவற் போக்க
மந்திர மறிந்த தந்திர முதுமகள்
செந்தளிர்க் கோதைக்குச் சேடநீட்டிப்
போலிக நங்கை போருபடை யழித்த
வலிகெழு நோன்றாள் வத்தவ ரிறைவன்
யானை வணக்கும் வீணை வித்தகன்
துதைமலர்ப் பைந்தா ருதையண குமரற்கு
நேர்ந்தன னின்னை நெடுந்தகை யின்றெனத்
தீர்ந்த கோட்டியுட் டெரிந்தன ளுணர்த்தத்
துப்புறழ் செவ்வாய் துளங்குபு நிரைத்த
முத்துறழ் முறுவன் முகிழ்த்த முகத்தள்
மந்திர நாவி னந்தணன் கேண்மை
இருநிலம் பேரினுந் திரித லின்றெனப்
பெருநல மாத ரொருமை யுள்ளமொடு
வாழ்வது வலியாள் சூழ்வன ளிருப்ப
அரும்பொரு ளுவி னமைச்சன் சேதியர்
பெரும்பெய ரண்ணலைப் பொருந்துபு வணங்கிக்
காவலன் கருதிய கட்டுரை யுணர்த்தி
பூவலர் தாரோய் புனைகழ லோன்றாள்
எம்மிறை மாற்ற மிசைப்பேன் யானெனத்
தன்னமர் தோழரொடு மன்னவன் கேட்பப்
பயங்கெழு வையத் துயர்ந்த தொல்சீர்
விழுத்திணைப் பிறந்துதம் மொழுக்கங் குன்றாப்
போரடு மன்னர் புலம்பு முந்துறீஇ
ஆரஞ ருழக்க லறிவெனப் படாது
நீர்முதன் மண்ணகஞ் சுமந்த நிறைவலி
தான்முழுது கலங்கித் தளரு மாயின்
மலைமுத லெல்லா நிலைதளர்ந் தொடுங்கும்

அலகைப் பல்லுயிர்க் கச்ச நீக்குநர்
கவலை கொண்டுதங் காவலிற் றளரின்
உலக மெல்லா நிலைதளர்ந் தழியும்
அற்றே யன்றிக் கொற்றக் கோமான்
தானுந் தனிமையோ டென்றலை வந்தனன்
ஆறு வுவகையி னமைந்தபுக ழுடையன்
மேனாட் கொண்ட மிகுதுயர் நீக்கி
மறுத்தல் செல்லாச் சிறப்பு முந்துறீஇ
அற்றமி னண்பின் யாப்பே யன்றியோர்
சுற்றப் பந்தமும் வேண்டினே னென்றனன்
கொற்றவன் வலித்த திற்றென வுரைப்பச்
செருவடு குருசி லொருபக றானும்
மறுமொழி கொடாஅன் மனத்தே நினைஇ
நறுமலர்க் கோதையை நாட்பூங் காவினுட்
கண்ணுறக் கண்டதுங் கரந்தகம் புக்கதும்
திண்ணிதி னறித்தோர் தெரிந்துதனக் குரைப்ப
ஆராய்ந் ததனை யறிந்ததை யொன்றுகொல்
கருதி வந்த காவல குமரனும்
பொருகளத் தவிந்தனன் பொருளிவற் கீதல்
பின்னன் றாகு மென்பதை நாடி
நன்னர் நோக்கி நயந்ததை யொன்றுகொல்
கோல்வளைப் பணைத்தோட் கொடுங்குழைக் காதின்
நீலத் தன்ன நெறியிருங் கூந்தலைப்
பால்வகை புணர்க்கும் படிமை கொல்லென
இனையவை பிறவு மனவயி னினைஇ
யான்குறை கொள்ளும் பொருளினை மற்றிவன்
தான்குறை கோட றவத்தது விளைவென
உவந்த வுள்ளமொடு கரந்தன னுரைக்கும்
மண்ணகத் திறைவன் மறமாச் சேனன்
ஒண்ணுதற் பாவை யொருபெருங் கிழத்தி
மண்ணக வரைப்பின் மகளிர் மற்றுத்தன்
வனப்பெடுத் துரைக்கென வயங்கழற் குளிப்ப
மனத்தெழு கவற்சியொடு மண்முத னீக்கி
நயத்தகு மாதரோ டமைச்சனை யிழந்தினி

வாழே னென்று வலித்த நெஞ்சமொடு
போகிய தெல்லாம் பொய்யே போலும்
இன்ப மெய்தலெ னன்பவட் கொழிந்தனென்
வாழ்ந்த காலை யல்ல தியாவர்க்கும்
ஆழ்ந்த காலை யன்பு மில்லெனப்
புறத்தோ ருரைக்கும் புன்சொற் கட்டுரை
நிறத்தே றெஃகி னனைய வாதலின்
ஒத்த நிலைமையே னல்லே னொழிகென
வத்தவர் கோமான் வஞ்சமொடு மறுப்ப
மிக்க பெருங்குடிப் பிறந்த மாந்தர்க்
கொப்பின் றம்மநின் னுரையென வணங்கி
மத்த யானை வணக்கு நல்லியாழ்
வித்தக வீரவது பெற்றனென் யானென
மறுத்து மந்திரி குறைக்கொண் டிரப்பத்
தெரிபொருட் கேள்வித் தெரிசக குமரன்
தானு நீயு மாகல் வேண்டலின்
மாற்று மாற்ற மில்லென மற்றவற்
கருளொடு புணர்ந்த வன்புமிகு கட்டுரை
பொருளொடு புணர்ந்தவை பொருந்தக் கூறலின்
அமைப்பருங் கரும மமைத்தனன் யானென
அமைச்சன் மீண்டன னகநனி புகன்றென்.

உக. மகட்கொடை வலித்தது முற்றிற்று.

உரை

உக. மகட்கொடை வலித்தது

அஃதாவது தருசக மன்னன் பதுமாபதியை உதயணனுக்கு மணம் செய்விக்கத் துணிந்ததனைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் சூழ்தல்)

க - ௮ : கோயில்.........சூழ்ச்சியுள்

(பொ - ரை.) இவ்வாறு உதயணமன்னன் சங்க மன்னரை வென்று பெரும் புகழுடன் அரண்மனைக்கண் புகுந்த பின்னர்,

முன்னர்த் தான் மாறு வேடத்தோடு பதுமாபதியோடு சேர்ந்து அவளது கன்னி மாடத்தின்கண் கரந்துறைந்து அப்பெருமகளைப் பிரிந்த காலத்தே ஒரு சேர அவட்குத் தான் கூறிய தன்னுடைய செயற்கருந் தொழிலினது துணிவும் தான் காட்டிய அன்பும் என்னும் இன்னோரன்ன தன் பண்புகளையே பெரிய தெப்பமாகக் கொண்டு துன்பக் கடலை நீந்திக் கன்னிமாடத்தின்கண் உறைகின்ற பொன்னுலியன்ற வளையல்களையும் பருத்த தோள்களையும் தொழிலின் முற்றுப் பெற்ற அணிகலன்களையும் உடைய அப் பதுமாபதியை, இனி இல்லறத்திற்குரிய பேருரிமையோடு கற்பொழுக்கத்தின் கடமைகளையும் ஏற்பிக்கக் காரணமான பலரறி மணம் செய்தற்குரிய வழியை ஆராய்ந்து கொண்டிருக்கும் பொழுது ; என்க.

(வி - ம்.) கரந்த உருவு - மாற்று வேடம். ஒடுங்கி - மறைந்திருந்து. அவட்கு : அப்பதுமாபதிக்கு. புணையாக - தெப்பமாக; புணையாக என்றதற்கேற்பத் துன்பக் கடலை நீந்தி இருந்து என்க. முற்றிழை - தொழிலின் முற்றுப் பெற்ற அணிகலன். இற் பெருங்கிழமை - விருந்தோம்பல் முதலிய அறச் செயல்கள் செய்யுமுரிமை. கற்புக் கடம் - கற்பொழுக்கத்தின் கடமைகள். அவை இருத்தலும் இருத்தனிமித்தமுமாம். வரையும் - பலரறி மணம் செய்து கொள்ளும். வாயில் - வழி.

(தருசகன் கருதுதல்)

௯ - ௧௬ : ஈரைம்பதின்மர்........ஆகி

(பொ - ரை) பெருந்தகைமையையுடைய தருசக மன்னன் தனக்குள் கருதுபவன், ஒரு நூற்றுவராகிய துரியோதனன் முதலியோரைத் தான் ஒருவனே கொல்லவேண்டும் என்னும் கருத்துடையவனாகி அந்நூற்றுவரையும் போரின்கண் கெடுமாறு கொன்றொழித்து அதனால் வெற்றிப் புகழ் மிக்கவனும், வெற்றியையுடைய தறுகண்மையுடையவனும், குருகுலத்துத் தோன்றிய யுதிட்டிரன் முதலிய ஐவருள் வைத்து ஒருவனுமாகிய வீமசேனன் போல நம்பகைவராகிய விரிசகன் முதலிய பகையரசர் எண்மரையும் தானே தனி நின்று வெல்லல் வேண்டுமென்னும் கருத்துடையனாகி அப் போர்ச்செயலைத் தானே மேற்கொண்ட மணிகள் பதித்த அணிகலன்களையுடைய மார்பினையுடைய இவ்வத்தவ மன்னனோடு உறவுடையார் என்னும் புகழ்ச் சொல்லுடைய வேந்தர் முற்பிறப்புக்களிலே செய்த தவத்தையுடையோர் என்று பாராட்டுதலையுடைய நெஞ்சத்தோடு தன் பகைமன்னர் எண்மரையும் வென்று அடக்கியது காரணமாக அம்மன்னன் தன் அமைச்சர்களொடு நெடிது ஆராய்ந்து துணிந்து சிவந்த கடையி

லையுடைய வேல் போன்ற கண்களையும் சங்கவளையல்களையும் பருத்த தோள்களையும் உடையவளாகிய தன் தங்கை பதுமாபதி நங்கையை அவ்வுதயணமன்னனுக்குத் திருமணம் புணர்க்குங் கருத்தையுடையவனாகி; என்க.

(வி - ம்.) ஈரைம்பதின்மர் - துரியோதனன் முதலிய நூற்றுவர். நூறி - கொன்று. ஐவர் - யுதிட்டிரன் முதலிய ஐவர். ஒருவன் - வீமசேனன்; இவன் ஒருவனே துரியோதனன் முதலிய நூற்றுவரையுங் கொன்ருன். உதயணனுடைய உறவு கிடைத்தற்குப் பழம் பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும் என்பது கருத்து. பணித்ததற் கொண்டு - பணித்ததனைக் காரணமாகக் கொண்டு. தகை கொள் வேந்தன் - தருசகன். தமர் - தன்னமைச்சர்கள். செங்கடைக்கண் - வேற்கண், எனத் தனித்தனி கூட்டுக. வெள்வளை - சங்கவளை. பணைத்தோள் - மூங்கில் போன்ற தோளுமாம். தங்கை: பதுமாபதி, உதயணனோடு புணர்க்கும் சிந்தையனாகி என்க.

(தருசகன் அமைச்சனை உதயணன்பால் விடுத்தல்)

உ௦ - உகூ உள் பொருள்.........போக்க

(பொ - ரை) இவ்வாறு உண்மைப் பொருளைத் துணிதற்குக் காரணமான ஆராய்ச்சியையுடைய அத்தருசக மன்னன் வளம் பொருந்திய படைகளையும், மறப்பண்பையும், பெரிய வெகுளியையும் உடையவனாயிருந்தும் புலன்களிற் செல்லும் தன் பொறிகளை அடக்கிக்கொண்ட பலவேறு புகழ்களையுடைய அமைச்சனொருவனைத் தனித்திருந்து வரவழைத்துக்கொண்டு அவ்வமைச்சனை நோக்கிப் "புகழமைந்த பெரியோய்! பெரிய இதழ்களையுடைய மலராற் புனைந்த நறியமாலையினையுடைய வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணனுக்குரிய ஆகூழ் அவனை அவன் நாட்டினின்றும் இவ்விடத்தே எளிதாகக் கொணர்ந்து தரப்பெற்று வைத்தும், அப்பெருமகனுக்கு அழகிய நம் பதுமாபதி நங்கையை இன்னும் வழங்காதேமாயிருத்தல் இக்காலத்தை நோக்குமிடத்து நற்செயலன்று என்று தான் கருதியதனைக் கூறி அவ்வமைச்சனை "நீ சென்று என் கருத்தினை அவ்வுதயணனுக்கு உணர்த்தி அவன் மறுமொழியினையுங் கேட்டு வருவாயாக" என்று தலைமைத் தன்மையுடைய அப்பெருவேந்தன் அவ்வமைச்சனை உதயணன் பால்விடுப்ப என்க.

(வி - ம்.) உள்பொருள் - உண்மைப் பொருள். சூழ்ச்சியன்: தருசகன். மல்லல் - வளம். சீற்றத்தையுடையவனாயிருந்தும் பொறி செறிந்த அமைச்சன் என்க. வள்பெரிதார் - மாலை. அங்கண்விட்டும் - அவனாட்டினின்றும். அடுக்கற்பாலதூழ் - ஆகூழ். கோலமங்கை - அழகிய பதுமாபதி. காலம் - இச்செவ்வி. வலித்ததை - கருதியதனை.

(ஒரு முதுமகள் பதுமாபதிக்கு அறிவித்தல்)

௬௦ - ௬எ : மந்திரம் .... உணர்த்த

(பொ - ரை.) தருசகன் தன்னமைச்சரோடு ஆராய்ந்து துணிந்த செய்தியை அறிந்த உபாயமிக்க மூதாட்டியொருத்தி சிவந்த தளிராற்புனைந்த மாலையை யணிந்த பதுமாபதியின்பாற் சென்று தான் செய்த கடவுள் வழிபாட்டுச் சேடத்தை அப்பெரு மகளுக்கு வழங்கி, "நங்காய்! நீ பொலிவுற்று வாழ்க! நம்மேல் வந்த பகைப்படைகளை அழித்த வலிமிக்க முயற்சியையுடையோனும், வத்தவநாட்டு மன்னனும், யானைகளை வணக்கும் தெய்வயாழ்ப்புலவனும், செறிந்த மலராற்புனைந்த பசிய மாலையையுடையவனும் ஆகிய உதயணகுமரனுக்கு உன்னை வழங்குதற்கு நெடிய புகழையுடைய நம் மன்னன் இற்றைநாள் துணிந்துள்ளான்" என்று அப்பெருமகள் தன் தோழியர் கூட்டத்தினின்றும் தனித்திருந்த செவ்விநோக்கி அறிவியாநிற்ப; என்க.

(வி - ம்.) மந்திரம் - சூழ்ச்சி. தந்திரம் - உபாயம். நாலுமாம் : கோதைக்கு : பதுமாபதிக்கு. சேடம் - கடவுளை வழிபட்ட மலர் முதலியன. இவற்றை நின்மாலியம் என்று கூறுப. 'பொலிக' நங்கை என்றது வாழ்த்துரை. வீணை வித்தகன் - யாழ்ப்புலவன். நெடுந்தகை : தருசகன். தீர்ந்த கோட்டியுள் : கோட்டி தீர்ந்தபொழுது என்றவாறு; அஃதாவது தோழியர் கூட்டத்தினின்றும் தனித்திருந்த செவ்வியில் என்றபடியாம்.

(பதுமாபதி எண்ணுதல்)

௬அ - ௪௬ : துப்பு..........இருப்ப

(பொ - ரை.) அது கேட்ட பவளம்போன்று சிவந்த திருவாயையுடைய அப்பதுமாபதி நங்கை உளம் நடுங்கி நிரல்பட்ட முத்துப்போன்ற தன் பற்கள் சிறிது தோன்றுமளவு புன்முறுவல் பூத்த முகத்தினையுடையவளாய்த் தன் நெஞ்சினுள்ளே "என்னே! இஃதென்னே! யான் மறைமொழி பயின்ற செந்நாவினையுடைய அந்தணனாகிய மாணகனோடு கொண்டுள்ள காதற்கேண்மை இப்பெருநிலம் பிறழ்ந்தாலும் பிறழ்வதொன்றன்று" என்று மிகப் பெரிய பெண்மை நலமுடைய அப்பதுமாபதி ஒருமை நெஞ்சத்தோடு இச்செய்தி வாய்மையாயின் யான் இறந்துபடுதலே தகுதியாம் என்னும் துணிவோடு பின்னுமிருந்து வாழ்வதனைக் கருதாளாய் அம்மாணகனோடு கூடும் வழியைத் தன்னுள் ஆராய்வாளாகி இருப்ப, என்க.

(வி - ம்.) துப்பு - பவளம். துளங்குபு - நடுங்கி. முறுவல் - பல் இகழ்ச்சியால் பதுமாபதிக்கு இப்பொழுது நகை பிறந்தது; என்னை? "எள்ளல் இளமை பேதமை மடனென்று உள்ளப்பட்ட நகை நான்

கென்ப" (தொல். மெய்ப்பாடு-ச) என்பதோத்தாகலின் என்க. மந்திரம் - மறைமொழி. அந்தணன் : மாணகன். திரிதல் - பிறழ்தல். பெருநல மாதர் : பதுமாபதி. ஒருமையுள்ளம் - கவர்த்தலில்லாது ஒருமையுற்ற நெஞ்சம். வாழ்வது வலியாள் என்றமையால் சாவதனைத் துணிந்து என்க.

(அமைச்சன் உதயணன்பாற் சென்று தருசகன் கருத்தை அறிவித்தல்)

சச - சகூ : அரும் பொருள்.......கேட்ப

(பொ-ரை.) உணர்தற்கரிய நுண்பொருள்களையும் ஆராய்ந்து உணர்த்தும் செந்நாவினையுடைய அவ்வமைச்சன் சேதிநாட்டினர் மன்னனாகிய பெரும்புகழையுடைய அவ்வுதயணனை மெய்திக் கைகூப்பி வணங்கி "மலர்விரிந்த மாலையினையுடையோய்! வீரக்கழல் கட்டிய வலிய முயற்சியினையுடைய எங்களரசன் கூறிய மொழியினைக் கொணர்ந்துள்ளேன்; அவற்றை யான் கூறுவேன்: வேந்தே! எம்மரசன் கருதிக் கூறிய பொருள் பொதிந்த மொழிகளைத் திருச்செவி ஏற்றருளுக" என்று கூறி அவ்வுதயணன் தன்னை விரும்பும் உருமண்ணுவா முதலிய தோழரோடு ஒருங்கிருந்து கேட்பக் கூறுபவன்; என்க.

(வி - ம்.) அரும்பொருள் - உணர்தற்கரிய நுண் பொருள். சேதியரண்ணல் : உதயணன். காவலன் : தருசகன். கட்டுரை - பொருள் பொதிந்த மொழி. எம்மிறை - எங்களரசன். மன்னவன் : உதயணன்.

(இதுவுமது)

ருo - ருகூ : பயம் .... ஒடுங்கும்

(பொ - ரை.) "சிறந்த பயன்கள் நிரம்பிய இவ்வுலகத்தின் கண் உயர்ந்த பழைய புகழையுடைய சிறந்த குலத்தின்கட் பிறந்து மேலும் தமக்குரிய நல்லொழுக்கங்களிலே குறைதலில்லாதவரும் தம் பகைவரைப் போரின்கண் வெல்லும் ஆற்றலுடையவரும், ஆகிய சிறந்த மன்னர்கள் துன்பமுற்றபொழுது அதனை மேற்கொண்டு தீர்தற்கரிய அத்துன்பத்திலே கிடந்துழலுதல் அறிவுடைமை என்று கருதப்படாது, நீரை முதலாகவுடைய இந்நிலவுலகத்தைத் தம் தோளிற்சுமந்த அவர்தம் நிறைந்த ஆற்றல் முழுவதும் இடுக்கணுற்றுழி, நிலை கலங்கித் தளருமாயின், இப் பேருலகத்தே நிலையிற் பொருளாகிய மலை முதலிய எல்லாப் பொருள்களும் நிலைகலங்கி மறைந்துகெடும்" என்க.

(வி - ம்.) பயம் - பயன். தொல்சீர் - பழைய புகழ். விழுத்திணை - சிறந்த குலம். ஆரஞர் - தாங்குதற்கரிய துன்பம். அறிவெனப் படாது - அறிவன்று. சுமத்தற்குக் காரணமான நிறைவலி என்க. மலை என்றது நிலையியற் பொருளாகிய மலை என்பதுபட நின்றது. ஈண்டு,

“சான்றவர் சான்றாண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை” (திருக்குறள் ௯௯0)

எனவரும் அருமைத் திருக்குறளையும் நினைக.

(இதுவுமது)

௫௭ - ௫௯ : அல்கை .... அழியும்

(பொ - ரை) “பெருமானே! அளவு கடந்த பலவாகிய உயிர்கட்கெல்லாம் துன்பத்தால் வரும் அச்சத்தைப் போக்கிப் பாதுகாப்போராகிய அரசர்களே கவலைகொண்டு தங்காவற் றொழிலிற் றளர்ந்தால் இவ்வுலகில் வாழும் மன்னுயிரெல்லாம் நிலைதளர்ந்து அழிந்துபோம் அல்லவோ” என்க.

(வி - ம்.) அலகை - அளவு, அளவிறந்த பல்லுயிரென்க. நீக்குநராகிய அரசரே என்க. காவல்-உயிர்களைக் காக்குந் தொழில். உலகம் - உயிரினங்கள் : ஆகுபெயர்.

(இதுவுமது)

௬0 - ௬௭ : அற்றே..........உரைப்ப

(பொ - ரை.) “அதுவேயுமல்லாமல், வெற்றி வேந்தனாகிய அவ்வுதயணன்றானும் தனிமைத்துன்பத்தோடே என்பால் வந்தருளினன். அதனால் யானும் கெடாத மகிழ்ச்சியோடே நன்கு பொருந்திய பெரும் புகழையுடைய அவ்வுதயணன் முன்னாளிலே கொண்டுள்ள பெருந் துயரத்தை அகற்றி அப் பெருமகன் மறுத்தற்கியலாத பெருஞ் சிறப்புக்களையுஞ்செய்து சோர்வில்லாத நட்புரிமையினாலே யான் கொண்ட தொடர்போடன்றி மேலும் அவனுக்கு மைத்துனன் என்னுமொரு உறவுத் தொடர்புங் கொள்ளப் பெரிதும் விரும்பினேன் என்று என்பால் சொல்லிவிடுத்தனன். பெருமானே! எம் மன்னவன் கருதியது இஃதாம்” என்று அவ்வமைச்சன் கூறாநிற்ப; என்க.

(வி - ம்.) அற்றே யன்றி - அங்ஙனம் நிலைதளர்ந்து அழிதலே யன்றி என்றவாறு. கோமான் : உதயணன். என்றலை - என்பால். மேனாள் - முன்னாள். மறுத்தல் செல்லா - மறாஅத. அற்றம் - சோர்வு. நண்பின்யாப்பு - நட்புத்தொடர்பு. சுற்றப்பந்தம் - உறவுத்தொடர்பு. இற்று - இது.

(உதயணன் எண்ணுதல்)

௬௮ - ௭௭ : செரு............ஒன்றுகொல்

(பொ - ரை.) பகைவரைப் போர்க்களத்திலே வெல்லுந் தலைவனாகிய அவ்வுதயணன் அவ்வமைச்சனுடைய மொழிகளைக்

கேட்டபின்னர் அவ்வமைச்சனுக்கு ஒரு முழுத்தகாலம் மறு மொழி கூறாதவனாகித் தன்னெஞ்சத்தினுள்ளே அச்செய்தியை நினைந்து ஆராய்பவன், தான் நறிய மலர்மாலையணிந்த பதுமாபதியை அன்றலர்ந்த பூங்காவினிடத்தே கண்கூடாகக் கண்டதும், பின்னர் அப்பதுமாபதியின் சிவிகையின்கண் மறைந்து அவள் கன்னிமாடத்தினூடே புகுந்ததும், ஆகிய இச்செய்திகளைத் திட்பமாக அறிந்தவர் பிறர் யாரேனும் தமக்குள் ஆராய்ந்து கூற அத்தருசகன் தனக்குள் ஆராய்ந்து அந்நிகழ்ச்சியை அறிந்து கொண்டமையாலே இவ்வாறு கருதிய தொன்றோ? அல்லது, அப்பதுமாபதியை மணங் கோடற்குக் கருதி ஈண்டுவந்த கேகய மன்னனும் போர்க்களத்தின்கண் இறந்தொழிந்தான். ஆதலின் அவளை இனி இவ்வுதயணனுக்கு வழங்குதல் தனக்குப் பின்னர் நன்மை பயக்கும என்பதை நாடி நன்கு ஆராய்ந்து இங்ஙனம் கருதியதொன்றோ; எனக.

(வி - ம்.) குருசில் - தலைவன். ஒருபகல் - ஒரு முழுத்தம். நினைஇ - நினைந்து. ஆராய்பவன் - இங்ஙனம் ஆராய்ந்தான் என்க. கோதையை - பதுமாபதியை. நாட்பூ - அன்றலர்ந்த மலர். சிவிகையுட்கரந்து என்க. அறிந்தோர் தெரிந்து தனக்குரைப்ப அதனை ஆராய்ந்து என்க. அறிந்ததையொன்று கொல் - அறிந்ததனால் உண்டான ஒரு கருத்தோ, கொல், ஐயப் பொருண்மைத்து. கருதி வந்த காவல குமரன் என்றது அச்சுவப் பெருமகனை. அவிந்தனன் - இறந்தனன். இவற்கு ஈதல் பொருள், அது பின் நன்றாகும் என மாறுக. இனி அவிந்த அவனுக்குப்பின் இவற்கு ஈதல் பொருள் எனினுமாம். நன்னர் - நன்கு. நயந்ததனால் உண்டாயதொரு கருத்தோ என்க. கொல், ஐயப் பொருண்மைத்து. அறிந்ததை - நயந்ததை என்னும் ஈரிடத்தும் ஐகாரம் சாரியை.

(இதுவுமது)

எஅ - அச : கோல்.........உரைக்கும்

(பொ- ரை.) திரண்ட வளையலையும் பணைத்த தோளினையும் வளர்ந்த குழையினையுடைய காதினையும் நீலமணி போன்ற நிறமுடைய நெறிப்புடைய கரிய கூந்தலையுமுடைய அப்பதுமாபதி வாழ்வகையாலே நம்மொடு புணர்க்கும் புண்ணியத்தினாலேயோ? இத்தருசகன் இம்முடிவினைத் தன்மனத்தே கொண்டது என்று இன்னோரன்ன பிறவற்றையும் அவ்வுதயணன் தன்னெஞ்சின்கண் நினைந்து மேலும் யான் அவன்பாற் சென்று வேண்டிக் கோடற்குரியதொரு பொருளை அவனே என்னிடம் வேண்டிக் கோடல் யாம் முற்செய்த தவத்தின் பயனேயாகும் என்று பெரிதும் மகிழ்ந்த உள்ளத்தோடு அவ்வுள்ளத்தை அவ்வமைச்சன் காணாதபடி மறைத்துக்கொண்டு உரைப்பான்; என்க.

(வி - ம்.) கோல் - திரட்சி. கொடுங்குழை - வளைந்த குழை. நீலம் - நீலமணி. நெறி - நெறிப்பு. கூந்தலை - பதுமாபதியை. பால் வகை - ஊழ்வகை. படிமை - புண்ணியம். மனவயின் - மனத்தின் கண். தவத்ததுவிளைவு - முன்செய்த தவத்தின் பயன். கரந்தனன் - அம்மகிழ்ச்சியை மறைத்தவனாய். எனவே வஞ்சகமாய் உரைக்கும் என்றார் ஆயிற்று.

(உதயணன் உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசல்)

அ௫ - ௯௨ : மண்.........போலும்

(பொ - ரை.) "அன்புடையீர்! நிலவுலகத்து மன்னர்மன்னனாகிய மறமாச்சேனன் என்னும் சிறப்புப் பெயருடைய பிரச்சோதனனுடைய மகளாகிய ஒள்ளிய நுதலையுடைய பாவையும் என் ஒப்பற்ற கோப்பெருந்தேவியும் ஆகிய வாசவதத்தை இவ்வுலகத்திலுள்ள குலமகளிர்கள் எல்லாம் தன்னுடைய பேரழகினை எக்காலத்தும் உவமையாக எடுத்துக் கூறுவாராக என்று கருதித் தான் ஒளி நெருப்பின்கண் மூழ்கி மறையாநிற்ப, யான் அவளையிழந்து மனத்தின்கண் எழுந்த துன்பத்தோடு என் நாட்டை முற்றத்துறந்து விரும்பத்தகுந்த தேவியையும் அமைச்சனாகிய யூகியையும் இழந்தும் இனி உயிர்வாழுதல் இலேன் என்று துணிந்த நெஞ்சத்தோடு சென்ற செயலெல்லாம் பொய்ச்செயலே ஆயினவோ;" என்க.

(வி - ம்.) இறைவன் - ஈண்டுச் சக்கரவர்த்தி என்பது படநின்றது. மறமாச்சேனன் என்றது பிரச்சோதன மன்னனை. இஃது அவன் மறச் சிறப்புப்பற்றி எழுந்த பெயர். பாவையாகிய கிழத்தி என்க, என்றது வாசவதத்தையை. இன்னும் உலகிலிருந்து வயது முதிர்ந்து அழகழியா முன்னர் ஒப்பற்ற இப்பேரழகு மகளிர்க்கு எக்காலத்தும் உவமையாகுக என்று கருதி வாசவதத்தை தீக்குளித்தாள் என்றவாறு. கவற்சி - துன்பம். மண் - நாடு. அமைச்சன் : யூகி. போலும் : ஒப்பில் போலி.

(இதுவுமது)

௯௩ - ௯௯ : இன்பம்.........மறுப்ப

(பொ - ரை.) 'ஐய! அப்பெருமகளின் பொருட்டு வாழ்வொழிந்த நான் இனி இன்பம் எய்துதல் என்னும் இது என்னாம்? அங்ஙனம் வாழப்புகின், வாழ்ந்தகாலை யல்லது யாவர்க்கும் ஆழ்ந்த காலை அன்பும்இல்' என்னும் பழமொழிக்கேற்ப அயலோர் உரைக்கும் புல்லிய பழிபொதிந்த உரை எனது மார்பில் பாயும் வேற்படையை ஒப்பனவாதலின், யான் நும்முடைய மன்னன் கருத்திற்கு ஒத்த நிலைமையுடையேன் அல்லேன். ஆகலின் நுங்களரசன் இக்கருத்தினை விட்டொழிக" என்று

அவ்வத்தவர் கோமான் வஞ்சத்தோடு மறுத்துக் கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) அவட்கு ஒழிந்தனன் - அன்புடைய வாசவதத்தையின் பொருட்டு வாழ்வொழிந்தேன் என்க ; அவட்கு அன்பொழிந்தனனுய் இன்ப மெய்தல் என் எனினுமாம். "வாழ்ந்த.........இல்" இத்தொடர் ஒரு பழமொழி. இதனெடு, "காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து, மேலாடு மீனிற் பலராவ - ரேலா, இடரொருவ, ருற்றக்கா லீர்ங்குன்ற நாட, தொடர்புடையே மென்பார் சிலர்," "உண்டாய போழ்தி லுடைந்துழிக் காகம்போற், றொண்டா யிரவர் தொகுபவே - வண்டாய்த், திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பா ரொருவரு மிவ் வுலகத் தில்." (நாலடி. ககரு, ருஅச.); என வருஞ் செய்யுட்களையும் நினைக. புறத்தோர் - பகைவருமாம்; புன்சொற் கட்டுரை - பழி பொதிந்த உரை. நிறத்தெறி ரெஃகின் - மார்பில் ஊடுருவும் வேல்போல. அக்கருத்தினை ஒழிக என என்க.

(அமைச்சன் கூறுதல்)

க00 - க0ச : மிக்க.........இரப்ப

(பொ - ரை.) அதுகேட்ட அவ்வமைச்சன், "அம்மவோ! பெருமானே! நின் மறுமொழி நின்னைப்போலப் புகழ்மிக்க பெருங் குடியிற் பிறந்த சான்றோர்க்கு ஒப்புடையதன்று" என்று கைகூப்பி வணங்கிச் "செருக்குடைய யானையை வணக்கும் நல்ல யாழ்ப்புலவனே! மறவர் மறவோய்! யான் எனது வேண்டு கோளை ஒருதலையாகப் பெற்றேன்காண்!" என்று கூறிமறுத்து அவ்வமைச்சன் மீண்டும் வேண்டிக்கொண்டு இரவாநிற்ப, என்க.

(வி - ம்.) புகழ்மிக்க பெருங்குடி என்க. அம்ம : கேட்பித்தற் பொருட்டு. அது - அவ்வுடன்பாட்டை, நின் உடன்பாட்டைப் பெறு வேன் என எதிர்காலத்தால் கூறற்பாலதனைப் பெற்றனென் என்று இறந்தகாலத்தாற் கூறியது, "விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும், பிறழவும் பெறூஉ முக்காலமும் ஏற்புழி" என்னும் வழு வமைதியால் தெளிவுபற்றிக் கூறப்பட்டதென்க. (நன். ருஅசு.)

(உதயணன் உடன்படல்)

க0ரு - க0கூ : தெரிபொருள்.........கூறலின்

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன், "ஐயனே! அறிதற் குரிய உறுதிப்பொருள்களின் கேள்வியில்மிக்க நும்மரசனுகிய தருசகனும், நீயும் என்னுடைய ஆக்கத்தையே பெரிதும் விரும்பு தலால் நுங்கள் வேண்டுகோளை மாற்றும் மொழி இனி எம்பா லில்லை" என்று தன் உடன்பாட்டை உணர்த்திப் பின்னரும் அத்தருசக மன்னனுக்குத் தனது அருளோடு விரவிய அன்பு மிக்க பொருளொடு புணர்ந்த கட்டுரை பலவும் பொருந்துமாறு கூறி விடுத்தலாலே; என்க.

(வி - ம்.) தெரிபொருள்: வினைத்தொகை. தெரிசக குமரன் - தருசக குமரன். ஆகல் - ஆக்கத்தை. மாற்றும் மாற்றம் - மறுக்கும் மொழி.

(அமைச்சன் தருசகன்பால் மீளல்)

கசO : கககக : அமை............புகன்றென்

(பொ - ரை.) இவ்வாறு உதயணன் உடன்பாடு பெற்ற அவ் வமைச்சன் யான் செயற்கரும் செயல் செய்தேன் என்று உள்ளத்தின்கண் மிகவும் உதயணனை விரும்பித் தன்னரசன்பால் மீண்டனன்; என்க.

(வி - ம்.) அமைப்பருங் கருமம் - செயற்கருஞ் செயல். புகன்று - விரும்பி.

உக. மகட்கொடை வலித்தது முற்றிற்று.

உஉ. பதுமாபதி வதுவை

இதன்கண் உதயணனுடைய உடன்பாடு பெற்று மீண்ட அமைச்சன் தருசகனுக்குக் கூறுதலும், அவன் மகிழ்தலும், உதயணன் எண்ணுதலும், உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் உய்த்தலும், வயந்தகன் தருசகன்பாற் சென்று கூறுதலும், தருசகன் யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் செய்விப்பதாகச் சொல்லிவிடுத்தலும், உதயணன் முதலியோர் உடன்படுதலும், தருசகன் தன்தாயின் உடன்பாட்டையறிதலும், தருசகன் செயலும், உதயணன் செயலும் யாப்பியாயினி உதயணனே மாணகன் என்றுணர்தலும், யாப்பியாயினி பதுமாபதியைக் காண்டலும், அவ்விருவர் தம் சொல்லாட்டமும், யாப்பியாயினியின் செயலும், உதயணன் செயலும், யாப்பியாயினியின் செயலும், பதுமாபதி செயலும், பதுமாபதியின் மகிழ்ச்சியும், மணவினைச் செயலும், பதுமாபதியைக் கோலம் செய்தலும், உதயணன் மணமண்டபம் புகுதலும், பதுமாபதி வருதலும், உதயணன் பதுமாபதியை மணம் புரிந்து கோடலும் கூறப்படும்.

அகநனி புகன்றாண் டமைச்சன் போகித்
தகைமிகு தானைத் தருசகற் குறுகி
மாற்றோர்ச் சாய்த்தவன் மறுத்த வண்ணமும்
ஆற்றல் சான்றவவ னன்புகந் தாகத்
தொல்லுரைக் கயிற்றிற் தொடரப் பிணிக்கொளீஇ
வல்லிதி னவனை வணக்கிய வண்ணமும்
பல்பொரு ளாளன் பணிந்தன னுரைப்ப
உவந்த மனத்தி னிகழ்ந்ததை மதியாக்
கொடுக்குங் கேண்மை கோமகன் புரிய
வடுத்தொழி லகன்ற வத்தவர் பெருமகன்
மாய வுருவொடு மாடத் தொடுங்கிய
ஆய கேண்மைய னந்தண னென்பது
சேயிழை மாதர் தேறல ளாகி
ஒன்றுபுரி யுள்ளமொ டொன்று ளாதலின்
நன்றுபுரி நாட்டத்து நானவ ளுதல்
அறியத் தேற்றுவோ ரயல்வே றில்லென
நெறியிற் கொத்த நீர்மை நாடி

வயத்தகு நோன்றாள் வயந்தகற் றழீஇ
இசைச்ச னென்னு மென்னுயிர்த் தோழன்
அருமறை நாவி னந்தண னவன்றனக்
கிருமுது குருவரு மிறந்தன ராதலின்
வேதத் தியற்கையி னேதந் தீரக்
கிரிசையின் வழாஅ வரிசை வாய்மையோர்
அந்தணன் கன்னியை மந்திர விதியின்
அவன்பாற் படுத்த பின்ன ரென்னையும்
இதன்பாற் படுக்க வேண்டுக தானென
என்கூற் றாக வியையக் கூறி
முன்கூற் றமைத்து முடித்தனின் கடனென
வயந்தக குமரனு நயந்தது நன்றென
இன்னொலிக் கழற்கான் மன்னனைக் குறுகிப்
பொருத்தம் படவவ னுரைத்ததை யுணர்த்தலின்
விருப்போடு கேட்டு விறல்கெழு வேந்தன்
நங்கை தோழி நலத்தொடு புணர்ந்த
அங்கலுழ் பணைத்தோ ளாப்பியா யினியெனும்
செழுக்கயன் மழைக்கட் சேயிழை யரிவை
ஒழுக்கினுங் குலத்தினும் விழுப்ப மிக்கமை
சென்றுரை செம்மற் கென்றவ னேருப்பட
வயந்தக குமரன் வந்து கூறத்
தோழ ரெல்லாந் தோழிச்சி யாகத்
தாழ்வ ளாமெனத் தாழாது வலிப்ப
நன்னெறி யறியுநர் நாடெரிந் துரைப்பத்
தன்னெறி வழாஅத் தருசக குமரன்
தற்பயந் தெடுத்த கற்பமை காரிகைக்
கோப்பெருந் தேவிக் கியாப்புடைத் தாகத்
தங்கை திறவயின் வலித்தது மற்றவள்
இன்பத் தோழியை யிசைச்சற் கிசைத்ததும்
தெருளக் கூறி யருள்வகை யறிந்து
வம்மி னென்று தம்மியல் வழாஅப்
பெருமு தாளரை விடுத்தலிற் கேட்டே
திருமா தேவியுந் தேன்புரை தீஞ்சொற்
கணங்குழை மகளைக் காம னனைய

வணங்குசிலைத் தடக்கை வத்தவர் பெருமகற்
கெண்ணின னெனவே யுண்மலி யுவகையள்
அதிநா கரிகத் தந்தணிக் கணியும்
முற்றணி கலங்கள் கோற்றவி கொடுப்பப்
பதுமா நங்கையு மதன்றிற மறிந்து
மாணகற் பிரிந்தவென் மம்மர் வெங்நோய்க்
காண மாகிய வாயிழை தனக்கு
நீங்குதிற னுண்டெனிற் றுங்குதிற னறியேன்
விலக்குத லியல்பு மன்றுற் கலக்கும்
வல்வினை தானே நல்வினை யெனக்கென
ஒள்ளிழை மாத ருள்வயி னினைஇ
மடுத்தணி கலனு மாலையும் பிறவும்
கொடுத்தன ளாகிக் கோமான் பணித்த
வடுத்தீர் வதுவையின் மறந்தனை யொழியாது
வல்லே வாவென மெல்லியற் புல்லிக்
கவற்சி கரந்த புகற்சிய ளாகிச்
சிறுமுதுக் குறைவி யறிவோடு புணர்ந்த
தாய ரியற்கை சேயிழைக் காற்றித்
தானுடை யுழைக்கல மெல்லாந் தரீஇச்
சேயொளிச் சிவிகையொடு சேயிழைக் கீயத்
தங்கை தலைமை தன்னையு முவந்து
கோங்கலர் கோதையைக் கொடுக்குநா ளாதலின்
இலக்கணச் செந்தீத் தலைக்கையி னிரீஇ
இழுக்கா வியல்பி னிசைச்ச குமரன்
விழுப்பெரு விதியின் வேட்டவட் புணர்கென
முழுப்பெருங் கடிநகர் முழுதுட னுணரக்
கோப்பெரு வேந்தன் யாப்புறுத் தமைத்தபின்
வதுவைச் செல்வத் தோளிநகைத் தோழனை
நீங்கல் செல்லான் பூங்கழ லுதயணன்
முதற்கோ சம்பியு மொய்புனல் யமுனையும்
சிதர்ப்பூங் காவுஞ் சேயிழை மாதர்
கண்டினி துறைவது காரண மாக
வண்டிமிர் காவின் மகதத் தகவயின்
வந்தனம் யாமென் றந்தணி கேட்ப

இன்னிசைக் கிளவி யிறைமக னிசைத்தலிற்
சின்னகை முறுவற் சேயிழை கேளா
வாணகை மாதரொடு மனைவயி னொடுங்கிய
மாணகன் வாய்மொழி யிதுவான் மற்றெனத்
தேனார் காந்தட் டிருமுகை யன்ன
கூட்டுவிர லகற்றிக் கொழுங்கயன் மழைக்கண்
கோட்டுவனண் மேலைக் குமரனை நோக்கி
ஐய மின்றி யறிந்தன ளாகி
வையங் காவலன் வத்தவர் பெருமகன்
பார்ப்பன வுருவொடு பதுமா நங்கையை
யாப்புடை நெஞ்ச மழித்தன னறிந்தேன்
ஒப்புழி யல்ல தோடா தென்பது
மிக்கதென் மனனென மெல்லிய னினைஇ
நகைத்துணைத் தோழிக்கு நன்னலத் தோன்றல்
தகைப்பெரு வேந்த னாகலின் மிகச்சிறந்
தானு நன்மொழி தானவட் கொண்டு
கோட்டிச் செவ்வியுள் வேட்டனள் விரும்பா
உரைத்த லூற்றமொடு திருத்தக விருப்ப
இயைந்த வதுவை யெழுநா ளீங்கலும்
பசும்பொற் கிண்கிணிப் பதுமா நங்கையும்
நயந்த தோழி நன்னலங் காணும்
விருப்பின ளாகி விரைந்திவண் வருகெனத்
திருக்கிளர் சிவிகையொடு சிலதரை விடுத்தலின்
ஆரா வன்பினொ டகன்ற வெழுநாள்
ஏழாண் டமைந்தன தன்மைய ளாயினும்
நலங்கவர்ந் தகன்ற நண்பனைக் கண்டனென்
புலம்பினி யொழிக புனைவளைத் தோளி
வளங்கெழு தானை வத்தவ னாமென
விளங்கக் கூறும் விருப்பு நாணும்
தேறிய தோழி யேறினள் சென்றுதன்
துணைநலத் தோழிமுன் மணநலக் கோலமொடு
நாணினின் றோளைநின் பூணிள வனமுலை
புல்லின துண்மையிற் புல்லேன் யானென
மெல்லியன் மாதர் நகுமொழி பயிற்ற

நினக்கு மொக்குமஃ தெனக்கே யன்றென
மனத்தி னன்னேண் மறுமொழி கொடுப்பச்
சின்னகை முகத்த ணன்னுதல் வாவென
நுகர்ச்சியி னுகந்த வனமுலை நோவப்
புகற்சியொடு புல்லிப் புனையிழை கேண்மதி
வண்டார் மார்பின் வடிநூல் வயவனைக்
கண்டே னன்ன தன்மைய னாகிக்
கள்ள வுருவொடு கரந்தகத் தொடுங்கிநின்
உள்ளங் கொண்ட வுறுவரை மார்பன்
வசையி லேனென்றாள் வத்தவர் பெருமகன்
உதையண குமரன் போலு முணர்கெனச்
சிதைபொரு ளில்லாச் சின்னெறிக் கேண்மை
மணங்கமழ் மாதர் துணிந்தன ளுரைப்ப
நின்னை வேட்ட வந்தண னவற்குத்
துன்னிய தொழனது முன்னே கேட்டனன்
பெருமக னுள்ளத் துரிமை பூண்டவென்
அதிரா நன்னிறை கதுவாய்ப் படீஇத்
தணத்த றகுமோ நினைக்கெனக் கலங்கித்
திருவிழை தெரியா டிட்பங் கூறப்
பின்னருங் காண்பா மன்ன னாகுதல்
பொன்னே போற்றெனத் தன்மனைப் பெயர்ந்து
நன்னுத னிலைமை யின்னதென் றுரைக்கவம்
மாற்றங் கேட்டவட் டேற்றல் வேண்டி
வத்தவர் பெருமகன் வண்ணங் கூட்டிச்
சித்திரக் கிழிமிசை வித்தக மாக
உண்கட் கிழமையுட் பண்பிற் றீராது
மறைப்பியல் வழாஅக் குறிப்புமுத றொடங்கி
ஆங்கப் பொழுதே பூங்குழை யுணர
வாக்கமை பாவை வகைபெற வெழுதி
வாணுதன் மாதரொடு மனைவயி னிருப்புழி
உருவக் கோயிலு ளிரவுக் குறிவயின்
வெருவக் குழறிய விழிகட் கூகைக்
கடுங்குர லறியாள் கதுமென நடுங்கினள்
ஒடுங்கீ ரோதி யென்பதை யுணர்த்தென

மன்னவ னுரைத்த மாற்றமு மன்னவன்
தன்னைப் பாகிய தகைநலப் பாவையும்
கொண்டனள் போகிக் கோமகட் குறுகி
வண்டலர் படலை வத்தவன் வடிவிற்
பாவை காட்டிப் பைங்கொடி யிதுநம்
ஆய்பூங் காவி னந்தண வுருவொடு
கரந்துநலங் கவர்ந்த காவலன் வடிவெனத்
திருந்திழை மாதர் திண்ணிதி னோக்கி
இன்னுயிர்க் கிழவ னெழுதிய பாவை
என்னும் வேற்றுமை யில்லை யாயினும்
ஓராங் கிதனை யாராய்ந் தல்லது
தீண்டலுந் தேறலுந் திருத்தகைத் தன்றெனப்
பூண்டயங் கிளமுலைப் புனைவளைத் தோழி
உள்ளே நினைஇக் கொள்ளா ளாக
நள்ளென் யாமத்து நன்னுதல் வெரீஇய
புள்ளி னற்குறி யுரைத்தலும் பொருக்கெனப்
பெருவிறற் கொழுந னின்னுயிர் மீட்டுப்
பெற்ற வொழுக்கிற் பெரியோள் போலச்
செங்கடை மழைக்கட் சேயிழைத் தோழியை
அங்கை யெறிந்து தங்கா விருப்பமொடு
காமக் காதலன் கைவினைப் பொலிந்த
ஓவியப் பாவையை யாகத் தொடுக்கி
நீண்ட திண்டோ டீண்டுவன ணக்கு
நெஞ்சங் கொண்ட நெடுமொழி யாள
வஞ்ச வுருவொடு வலைப்படுத் தனையெனப்
புலவி நோக்கமொடு நலமொழி நயந்து
கோமான் குறித்ததுந் தோழி கூற்றும்
தானொருப் பட்ட தன்மைய ளாகிச்
செல்லா நின்ற சின்னா ளெல்லை
நன்னாட் டலைப்பெய னன்றென வெண்ணிக்
கோட்டமி லுணர்விற் கொற்றவன் குன்றாச்
சேனைப் பெருங்கணி செப்பிய நன்னாட்
டானைத் தலைத்தாட் டானறி வுறுத்தலின்
வையக விழவிற் றானுஞ் செய்கையின்

அழுங்க னன்னக ராவணந் தோறும்
செழும்பல் யாணர்ச் சிறப்பின் வழாஅது
வண்ணப் பல்கோடி வயின்வயி னெடுத்தலின்
விண்வேய்ந் தன்ன வியப்பிற் ருகிப்
பெருமதி லணிந்த திருநகர் வரைப்பின்
ஆய்ந்த கேள்வி மாந்தரு மகளிரும்
ஆரா வுவகைய ராகிய காலைச்
சேரார்க் கடந்த சேதியர் மகனையும்
மதுநா றைம்பாற் பதுமா பதியையும்
மரபிற் கோத்த மண்ணுவினை கழிப்பிய
திருவிற் கோத்துத் தீதுபிற தீண்டா
நெய்தலைப் பெய்து மையணி யுயர்நுதல்
இருங்களிற் றியானை யெருத்திற் றந்த
பெருந்த ணறுநீர் விரும்புவன ராட்டிப்
பவழக் கோட்டைப் பொற்செருப் பேற்றித்
திகழ்செய் கோலத் திருமனை யிரீஇச்
செங்கயற் கண்ணியை நங்கை தவ்வையர்
கோல மீத்தக வாலணி கோளீஇத்
திருந்தடி வணங்கி வருந்த லோம்பிப்
பீடத் திரீஇய பாடறிந் தேற்றி
நறுநீர்த் துவர்க்கை வயின்வயி னுரீஇக்
கறைமாண் காழகிற் கொழும்புகை கொளீஇ
நெறித்து நெறிப்பட வாருநர் முடித்து
மங்கல நறுஞ்சூட்டு மரபி னணிந்து
வல்லோன் வகுத்த நல்வினைக் கூட்டத்
தியவனப் பேழையு ளடைந்தோ ரேந்திய
தமனியப் பல்கலந் தளிரியன் மாதர்
ஆற்றுந் தகையன வாற்றுளி வாங்கி
வெண்சாந்து வரித்த வஞ்சி லாகத்
திணைமுலை யிடைப்பட் டிலங்குபு பிறழும்
துணைமலர்ப் பொற்கொடி துளங்கு நுசுப்பினை
நிலைபெற விசிப்பது போல வேர்ப்ப
மேற்பாற் பிறையென விளங்க வமைந்த
தோருகா ழாரமொளிபெற வணிந்து

திருக்கேழ்க் களிகை செவ்வனஞ் சேர்த்திப்
பைம்பொற் றிலகமோடு பட்ட மணிந்த
ஒண்கதிர் மதிமுக மோளியோடு சுடரச்
செம்பொ னோலை சேடுபடச் சுருக்கி
ஐவகை வண்ணத் தந்நுண் மேகலை
பையர வல்குற் பரப்பிடை யிமைப்பக்
கொய்துகொண் டுடீஇய கோடி நுண்டுகில்
மைவளர் கண்ணி மருங்குல் வருத்தக்
கடுங்கதிர் முத்துங் கைபுனை மலரும்
தடந்தோட் கோப்ப வுடங்கண்ணிந் தொழுகிய
சின்மயிர் முன்கைப் பொன்வளை முதலாக்
கண்ணார் கடகமோடு கைபுனைந் தியற்றிய
சூடகத் தேற்ற சுடரொளிப் பவளமோடு
பாடக நூபுரம் பரட்டுமிசை யரற்ற
ஆடமைத் தோளியை யணிந்துமுறை பிறழாது
வதுவைக் கேற்ற மங்கலப் பேரணி
அதிநா கரிகியை யணிந்தன ரமைய
ஓங்கிய பெரும்புக ழுதயண குமரனைத்
தாங்கருந் தோழர் தாம்புனைந் தணியக்
கடிநாட் கோலத்துக் காம னிவனென
நெடுநகர் மாந்தர் நெஞ்சந் தெளியக்
காட்சிக் கமைந்த மாட்சி யெய்த
வெற்ற வேந்தன் கொற்றப் பெருங்கணி
கூறிய முழுத்தங் குன்றுத லின்றி
ஆர்வச் செய்தொழி லகன்பெருங் கோயிலுள்
ஆயிரம் பொற்றூ ணணிமணிப் போதிகைக்
காய்கதிர் முத்தங் கவினிய வணிமின்
அத்தூ ணடுவ ணோத்த வுருவின
சந்தனப் பெருந்தூ ணொன்பது நாட்டிய
மைந்த ரழகிற் கேற்ற ... ...
... ...
அழன்மணி நெடுமுடி யரசரு ளரசன்
நிலமமர் செங்கோ னித்தில மோர்தரத்
தலைமலை படலைத் தருசகன் புகுந்து

தீவேள் சாலை திறத்துளி மூட்டிப்
புகுதுக வத்தவ னென்றலிற் பூந்தார்
அரசிளங் குமரரோ டண்ணல் புகுதரக்
கதிர்மதி முகத்தியைக் காவல் கண்ணி
ஆயிரத் தெண்மர் பாங்கிய ரன்னோர்
பாசிழைத் தோழியர் பாடகஞ் சுடரத்
தண்பெரும் பந்தருட் கண்பிணி கொள்ள
உயர்வினு மொழுக்கினு மொத்தவழி வந்த
மங்கல மன்னற்கு மந்திர விழுநெறி
ஆசான் முன்னின் றமையக் கூட்டித்
தீமாண் புற்ற திருத்தகு பொழுதிற்
புதுமலர்க் கோதைப் பூந்தொடிப் பணைத்தோட்
பதுமா நங்கையைப் பண்புணப் பேணி
மணநல மகளிர் மரபிற் கொத்தவை
துணைநல மகளிரொடு துன்னிய காதல்
மூதறி மகளிர் முடித்த பின்றை
ஏதமில் காட்சி யேயர் பெருமகன்
நன்னுதன் மாதரை நாட்கடிச் செந்தீ
முன்முத லிரீஇ முறைமையிற் றிரியா
விழுத்தகு வேள்வி யொழுக்கிய லோம்பிச்
செம்பொற் பட்டம் பைந்தொடிப் பாவை
மதிமுகஞ் சுடர மன்னவன் சூட்டித்
திருமணிப் பந்தருட் டிருக்கடங் கழிப்பி
ஒருமைக் கொத்த வொன்றுபுரி யொழுக்கின்
வல்லோர் வகுத்த வண்ணக் கைவினைப்
பல்பூம் பட்டிற் பரூஉத்திரட் டிருமணிக்
காலொடு பொலிந்த கோலக் கட்டிற்
கடிநாட் செல்வத்துக் காவிதி மாக்கள்
படியிற் றிரியாது படுத்தனர் வணங்கப்
பட்டச் சின்னுதற் பதுமா பதியொடு
கட்டிலே றினனாற் கருதியது முடித்தேன்.

உஉ. பதுமாபதி வதுவை முற்றிற்று.

———

உரை

௨௨. பதுமாபதி வதுவை

அஃதாவது உதயணன் பதுமாபதியைத் திருமணஞ் செய்து கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(அமைச்சன் தருசகனுக்குக் கூறுதல்)

க - எ : அகம்..........உரைப்ப

(பொ - ரை.) இவ்வாறு உதயணனுடைய உடன்பாடு பெற்றுக் கொண்டு அவனைத் தன் உள்ளத்தே பெரிதும் விரும்பியவனாய், மீண்ட அவ்வமைச்சன் சென்று படைத்தகைமை மிக்க தானையையுடைய தருசக மன்னனை யணுகித் தன் பகைவரை யெல்லாம் வென்ற உதயணகுமரன் அம் மன்னவன் கருத்தினை மறுத்துக் கூறியவகையையும், சொல்லாற்றல் நிறைந்த அவ்வமைச்சன் தன் அன்பினைத் தூணாகக் கொண்டு பழைமையுடைய சொல்லாகிய கயிற்றினாலே கட்டித் தன் கூற்றை அவன் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளும்படி செய்து வன்மையோடே, அவ்வுதயணனை உடன்படுவித்த தன்மையையும் பல்வேறு பொருளையும் பயின்றுணர்ந்தவனாகிய அவ்வமைச்சன் பணிந்து கூறுகிற்ப ; என்க.

(வி - ம்.) ஆண்டு - அவ்வரண்மனைக்கு. தசை - தோற்றப் பொலிவு. மாற்றோர்ச்சாய்த்தவன் : உதயணன். அவன் : அவ்வமைச்சன். கந்து - தூண். உரையாகிய கயிறு என்க. அவனை : உதயணனை. வணக்கிய - உடன்படுவித்த. பல்பொருளாளன் : அமைச்சன்.

(தருசகன் மகிழ்தல்)

அ - கூ: உவந்த.........புரிய

(பொ - ரை.) அம் மொழி கேட்ட கோமகன் பெரிதும் மகிழ்ந்த தன் மனத்தின்கண் அந்நிகழ்ச்சியை நன்கு மதித்துப் பதுமாபதியை அவ்வுதயணனுக்கு மணம்புணர்க்கும் உறவினைப் பெரிதும் விரும்பாநிற்ப ; என்க.

(வி - ம்.) கொடுக்குங் கேண்மை - கொடுத்தலாலுண்டாகும் உறவு. கோமகன் : தருசகன். புரிய - விரும்ப.

(உதயணன் எண்ணுதல்)

௧0 - ௧௭ : வடு.........நாடி

(பொ - ரை.) இனி, பழித்தொழிலில்லாத அவ்வுதயண குமரன், தானே, வேற்றுருவத்தோடு அவளது கன்னிமாடத்தின்

கண் ஒடுங்கியவனும், அவளோடு உண்டாய காதற் கேண்மையையுடைய அந்தணனும், ஆகியவன் என்னும், இவ்வுண்மையைச் சிவந்த அணிகலன்களையுடைய அப்பதுமாபதி தெளிய மாட்டாளாய் என்னுடைய திருமணத்திற்கு ஒன்றுபட்ட நெஞ்சத்தோடு உடன்படமாட்டா ளாதலின், அவளுக்கு நன்மையே புரியும் நோக்கத்தையுடைய நானே அம்மாணகனுதலை அவள் உணரும்படி தெளிவிப்போரும் அவளயலிலே வேறில்லையென்று கருதி, இங்ஙனம் அவள் முரண்படாது ஒத்துவருதற்குரிய வழிக்குரிய தன்மையை ஆராய்ந்து; என்க.

(வி - ம்.) வடுத்தொழில் - பழிச்சொல். மாயவுரு - வேற்று வேடம். மாடம் - கன்னிமாடம். அந்தணன் - மாணகன். மாதர் : பதுமாபதி. ஒன்றுள் - உடன்படாள். நெறியிற்த - முரண்படாது வரும் வழிக்கு. ஒத்த நீர்மை - ஏற்ற தன்மை. அவள் கண்கூடாகக் கண்ட மாணகனும் கேள்வி மாத்திரையான் இப்பொழுதுணருகின்ற உதயணனும், இருவரல்லர், ஒருவரே என்று அறிதற்கு வழியின்மையால் அவ்வழியை உண்டாக்குதற்கு ஒத்த வழியை நாடி என்க.

(உதயணன் வயந்தகனைத் தருசகன்பால் அனுப்பல்)

௧௮ - ௨௮ : வய.........கடனென

(பொ - ரை.) பின்னர், வலிமையால் தகுதியுடைய முயற்சியையுடைய வயந்தகனை நோக்கி, "அன்பனே! 'இசைச்சனென்னும் என்னுயிர்த் தோழனாகிய அரிய மறையோதும் அந்தணன் ஒருவன் உளன். அவனுடைய தாயும் தந்தையும் அவனது இளமையிலேயே இறந்தனர். ஆதலின், வேதத்தினது இயல்பிற்கு ஏற்பக் குற்றம் தீரத் தமக்குரிய தொழிலினின்றும் வழுவாத மரபினையுடைய வாய்மையுடைய ஓர் அந்தணன் மகளை மந்திரவகையினாலே அவனுக்குத் திருமணம் செய்வித்தபின்னர், என்னையும் இத் திருமணத்தின்பால் ஈடுபடுத்தும் படி நீ நினைக' என்று என்மொழியாக அவன் இயையும்படி சொல்லி முன்னுரையோடு அவனை ஏற்பித்து அக் காரியத்தை முடித்தல் உன்னுடைய கடனாகும்" என்று ஏவாநிற்ப; என்க.

(வி - ம்.) "இசைச்சன்...எண்ணுக". இதுகாறும் உதயணன் தன் கூற்றாகக் கூறிக் காட்டியபடியாம். எனக்கு இசைச்சன் என்னுந் தோழன் ஒருவன் உளன். அவன் அந்தணன். அவனுக்குக் குரவரும் இறந்தனர்; ஆதலின், ஓர் அந்தணன் கன்னியை அவன் பாற்படுத்த பின்னர் என்னையும் இதன் பாற் படுக்க எண்ணுக என்று என் கூற்றாகக் கூறி என்றவாறு. அருமறை - உணர்தற்கரிய மறை. இருமுது குரவர் - தாய்தந்தையர். கிரிசை - கிரியை. வழாஅ - வழுவாத. வரிசை - சிறப்புமாம். இதன்பால் - இத்திருமணத்தின் பால். முன் கூற்றமைத்து - முன்னுரை கூறி.

(வயந்தகன் தருசகன்பாற் சென்று கூறல்)

உகூ - ௩௧ : வயந்தக.........உணர்த்தலின்

(பொ - ரை.) அப்பணி பெற்ற வயந்தக குமரனும், "இறை மகனே! நீ விரும்பியது மிகவும் நன்று" என்று உதயணனைப் பாராட்டிக் கூறி இனிய ஒலியினையுடைய வீரக்கழ லணிந்த காலையுடைய தருசகமன்னனின்பாற் சென்று உதயணன் கூறியதனை அம்மன்னன் நெஞ்சிற்கு நன்கு பொருந்தும்படி அறிவித்தலாலே; என்க.

(வி - ம்.) நயந்தது - இசைச்சனுக்கு மணம் புரிவிக்க வேண்டுமென்று விரும்பியது. மன்னன் : தருசகன். அவன் : உதயணன்.

(தருசகன் யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் செய்விப்பதாகச் சொல்லி விடுத்தல்)

௩௨ - ௩௮ : விருப்பொடு.........கூற

(பொ - ரை.) வயந்தகன் கூறியதனை வெற்றி பொருந்திய அத்தருசக மன்னன் ஆர்வத்தோடு கேட்டுப் பதுமாபதி நங்கையின் உசாஅத்துணைத் தோழியும், பெண்மை நலத்தோடு கூடிய அழகொழுகுகின்ற பணைத்த தோளையுடைய யாப்பியாயினி என்னும் பெயருடையாளும் வளவிய கயல்மீன் போன்ற குளிர்ந்த கண்களையும் சிவந்த அணிகலன்களையும் உடையவளாகிய பார்ப்பனக் கன்னி ஒருத்தி உளள். அவள் நல்லொழுக்கத்தாலும், உயர்குடிப்பிறப்பினாலும் மிகவும் சிறப்புடையளாவள். அவளை நும் மரசன் விரும்பியபடி இசைச்சனுக்கு மணம் புரிவிப்பேம். இச் செய்தியை நீ சென்று நும்மரசனுக்கு உணர்த்துக! என்று கூறி அவ்வரசன் உடன்படாநிற்ப, அச்செய்தியை வயந்தககுமரன் உதயணன்பால் வந்து கூறுநிற்றலாலே; என்க.

(வி - ம்.) வேந்தன் - தருசகன். நங்கை தோழி - பதுமாபதியின் உசாஅத்துணைத்தோழி. நலம் - பெண்மை நலம். அங்கலும் - அழகொழுகின்ற. மழைக்கண் - குளிர்ந்த கண். அரிவை - கன்னி என்பதுபட நின்றது. விழுப்பம் - சிறப்பு. செம்மல் - உதயணன். ஒருப்பட - உடன்பட; வந்து உதயணனுக்குக் கூற என்க.

(உதயணன் முதலியோர் உடன்பாடு)

௩௯ - ௪௧ : தோழர்.........உரைப்ப

(பொ - ரை.) அது கேட்ட உருமண்ணுவா முதலிய தோழர்கள் "நன்று நன்று, பதுமாபதி நங்கைக்கு இற்றை நாள் உசாஅத் துணைத்தோழியாகவிருக்கின்ற அப்பார்ப்பனி பின்னரும் நம்முடைய கொடிக் கோசம்பி நகரத்தின் கண்ணும் அக்கோமக

னுக்குத் தோழியாகவே இருப்பாளல்லளோ'' என்று மகிழ்ந்து கூறி, "காலந்தாழாமல் அங்ஙனமே செய்க!" என்று துணிந்து கூறுகிற்ப, கோள்களின் வழிகளை அறியும் கணி மாந்தர் அத்திரு மணத்திற்குரிய நல்ல நாளை ஆராய்ந்து கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) தோழர் - உருமண்ணுவா முதலியோர். தோழிச்சி - தோழி. தாழாது - காலம் தாழாமல். வலிப்ப - துணிந்து கூற. நன்னெறி - கோள்களியங்கும் நல்ல வழி. நாள் - நல்லநாள்.

(தருசகன் தன் தாயின் உடன்பாட்டை அறிதல்)

௪௨ - ௪௬ : நன்.........விடுத்தலின்

(பொ - ரை.) அஃதுணர்ந்த தனது நல்ல நெறியினின்றும் வழுவாத அத்தருசக குமரன் தன்னை ஈன்றெடுத்தவளும் கற்பென்னுந் திண்மையுடையவளும் கோப்பெருந்தேவியும் ஆகிய தன் நற்றாய்க்குத் தான் தன் தங்கையாகிய பதுமாபதியை உதயணனுக்கு மணம் செய்விக்க உறுதியாகத் துணிந்ததனையும் அப்பதுமாபதியின் இன்பத்திற்குக் காரணமான தோழியாகிய யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் செய்விக்க உடன்பட்டுக் கூறியதனையும், அப்பெருந்தேவி நன்கு தெரிந்துகொள்ளும்படி கூறி, அப்பெரியாள் அதற்குக் கூறும் மறுமொழியினையும் அறிந்து வாருங்கோள்! என்று சொல்லித் தமது சான்றாண்மையின்கண் வழுவாத மூதாளராகிய சான்றோரை ஏவாநிற்றலால்; என்க.

(வி - ம்.) நெறி - ஒழுக்கம். வழாஅ - வழுவாத. காரிகை - அழகு. யாப்பு - உறுதி. வலித்ததும் - துணிந்ததும். அவள் : பதுமாபதி. தோழி : யாப்பியாயினி. தெருள - உணர்ந்துகொள்ளும் படி. வம்மின் - வாருங்கோள். தம்மியல் - தமக்குரிய பண்பு. மூதாளர் - முதியோர்.

(இதுவுமது)

௪௬ - ௫௫ : கேட்டே.........கொடுப்ப

(பொ - ரை.) தருசக மன்னனுடைய தாயாகிய அத்திருமா தேவியாரும், அச்சான்றோர் வாயிலாய்க் கேட்டறிந்து தேன் போன்ற இனிய மொழிகளையும், வட்டமான குழையினையும் உடைய பதுமாபதியைக் காமவேளையொத்த வளைந்த வில்லை யுடைய பெரிய கையையுடைய வத்தவ மன்னனுக்குத் திருமணம் புணர்க்க நினைத்தனன் என்று கேட்டபொழுதே உள்ளத்தின்கண் மேன்மேலும் பெருகாநின்ற உவகையையுடையளாய், மிக்க நாகரீகத்தையுடைய பார்ப்பனக் கன்னியாகிய யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் செய்விப்பதற்கும் பெரிதும் உடன்பட்

வளாய் யாப்பியாயினி அணிதற்கு வேண்டிய பேரணிகலன்கள் பலவற்றையும் அவ்வரசமாதேவியார் வழங்கா நிற்ப என்க.

(வி - ம்.) திருமாதேவி : தருசகன் நற்றாய். தேன்புரை - தேனை யொத்த. கணம் - வட்டம்; திரட்சியுமாம். மகள் : பதுமாபதி. அதி நாகரீகத் தந்தணி.- பெரிதும் கண்ணோட்டமுடைய பார்ப்பனியாகிய யாப்பியாயினி. கொற்றவி - அரசமாதேவி.

(பதுமாபதியின் செயல்)

௫௯ - ௬௨ : பதுமா.........நினைஇ

(பொ - ரை.) இனி, பதுமாபதிதானும் யாப்பியாயினியின் திருமணச் செய்தியை யறிந்து "அந்தோ! என் ஆருயிர்க் காதலனாகிய அம்மாணவன் என்னைப் பிரிந்தமையாலுண்டான மயக்கமுடைய வெவ்விய என்னுடைய துன்பத்திற்குப் பாது காப்பாகிய அழகிய அணிகலன்களையுடைய யாப்பியாயினிக்கும் என்னைப் பிரிந்து செல்லும் நிகழ்ச்சி ஒன்று உண்டாகின் இனி என் காதலனைப் பிரிந்த அப்பெருந்துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருத்தற்கு வழியொன்றும் அறிகிலேனே! யான் என் செய்கோ! அவள் பிரிவினைத் தடுத்தலும் அவள்பால் அன் புடையார்க்குத் தகுதியன்றே. ஆராயின், என்னை இங்ஙனம் கலங்கச் செய்கின்ற வலிய இவ்வினையே எனக்கு நல்வினையாக வுமுளது" என்று தனக்குத் தெளிவடைந்து; என்க.

(வி - ம்.) அதன் திறம் - அத்திருமணத்தின் தன்மை. மம்மர் - மயக்கம். ஆணம் - பாதுகாப்பு. "பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவரை ஆணமென்றடைந்து வாழும் மாதர்காள்" (திவ். திருச் சந்த. ௬௯) எனவுமறிக. தனக்குத் துன்பந் தருதலால் வல்வினை என்றும், தன் தோழிக்கு ஆக்கம் தருதலால் நல்வினையென்றும் நினைத் தனள். மாதர் : பதுமாபதி.

(இதுவுமது)

௬௩ - ௭௧ : மடுத்தணி.........ஈய

(பொ - ரை.) அவ்வியாப்பியாயினிக்கு வேண்டிய அணி கலன்களும் மாலையும் பிறவும் பேழைகளில் நிறைத்து வழங்கிப் பின்னர், அத்தோழியை நோக்கி 'ஏடீ! நம்மன்னவன் பணித் தருளிய குற்றமற்ற நினது திருமணத்தின்கண் நீ பெரிதும் மகிழ்ந்து என்னை மறந்து நின் காதலனோடேயே இருந்து விடாதே கொள்! விரைந்து என்னைக் காணவும் வருவாயாக" என்று அத்தோழியை ஆர்வத்துடன் தழுவிக் கொண்டு தன் துயரத்தையும் மறைத்துக்கொண்டு அவள் நலத்தைப் பேணு வதிலேயே விருப்பமுடையவளாய் இளமையிலேயே பேரறிவு

வாய்க்கப்பெற்ற அப்பதுமாபதி நங்கை அவள்பால் தாய்மை யுணர்ச்சியோடு கூடியவளாய் அத்தாயர் செய்யும் சிறப்பெல்லாம் அவளுக்குத் தானே செய்து மேலும் தனக்குரிய உழைக்கலங்களையெல்லாம் வரவழைத்து அவற்றைச் சிவந்த ஒளியை யுடைய சிவிகையோடு சேர்த்து அத்தோழிக்கு வழங்காநிற்ப; என்க.

(வி - ம்.) கலனும் மாலையும் மடுத்து என்க. மடுத்து - நிறைத்து, பேழையில் நிறைத்தென்க. கோமான்: தருசகன். வடு - குற்றம். வதுவையினாலுண்டான மகிழ்ச்சியால் மறந்தொழியாதென்க. வல்லே - விரைந்து. மெல்லியல்: யாப்பியாயினி. கவற்சி - துன்பம். புகற்சி - விருப்பம். சிறுமுதுக் குறைவி - இளமையிலேயே பேரறிவு படைத்தவள் என்றது பதுமாபதியை. தாய்மையறிவொடு புணர்ந்த தாயர் என்க: அறிவு ஈண்டு உணர்ச்சிமேனின்றது. உழைக்கலம் - பக்கத்தில் வைத்துக்கொள்ளற்குரிய அடிசிற்கலம் முதலியன. சிவிகை - பல்லக்கு.

(தருசகன் செயல்)

எஉ - எஅ: தங்கை.........பின்

(பொ - ரை.) இவ்வாறு தன் தங்கையாகிய பதுமாபதி நங்கை தானே தாயாகும் தலைமை ஏற்று அவ்வியாப்பியாயினிக்கு வழங்கிய வரிசைகளையும் உணர்ந்து தருசகன் மகிழ்ந்து அற்றை நாள் தேன்விரிகின்ற மலர்மாலையணிந்த யாப்பியாயினியை இசைச்சனுக்கு மணம் புணர்க்கும் நன்னாளாதலின், தன்னெறியில் இழுக்குதலில்லாத நற்பண்புடைய அவ்விசைச்ச குமரன் மறை விதிப்படி வளர்த்த செந்தீயின் முன்னிலையிலே யாப்பியாயினியுடன் அமர்ந்திருந்து சிறந்த பெரிய மறை விதியினால் கரணம் நிகழ்த்தி அப்பதுமாபதியை மணம் புணர்வானாக என்று பணித்துப் பெரிய காவலையுடைய அவ்விராசகிரிய நகரத்தின்கண் வாழும் மாந்தர்களனைவரும் அறியும்படி அப்பெருமன்னன் ஆவன செய்து அமைத்தபின்னர்; என்க.

(வி - ம்.) தலைமை - தாயாகும் தலைமைபெற்று அத்தாய் செய்வன வெல்லாம் செய்தமை. இனி, பிறர் உணர்த்தாமலே தானே தலைமை செய்து வழங்கிய செயலை எனினுமாம். கோதை: யாப்பியாயினி. இலக்கணச் செந்தீ - மறை கூறும் நெறிப்படி வளர்த்த சிவந்த நெருப்பு. தீத் தலைக்கையின் - தீயின் முன்னிலையில்: கோதையை இரீஇ இசைச்சன் வேட்டு அவட்புணர்க என்றியைத்துக்கொள்க.

(உதயணன் செயல்)

எகூ - அசு: வதுவை.........இசைத்தலின்

(பொ - ரை.) இனி, இவ்வாற்றால் நிகழாநின்ற திருமணச் செல்வ நன்னாள்களிலே புத்தொளிபடைத்த புன்முறுவலை

யுடைய தோழனாகிய இசைச்சனை அழகிய வீரக்கழல் கட்டிய உதயண மன்னன் சிறிதும் அகலாதுடனிருப்பவன், ஒருநாள் மணமகளாகிய அவ்வியாப்பியாயினி கேட்கும்படி பிறருக்குக் கூறுவான்போல "யாங்கள் எம்முடைய தலைநகரமாகிய கோசம்பி நகரத்தையும், நிரம்பிய நீர்ப்பெருக்கினையுடைய யமுனைப் பேரி யாற்றினையும், அவ்வியாற்றின் இருமருங்கிலுள்ள மலர்சிந்தும் பூம்பொழில்களையும், சிவந்த அணிகலன்களையுடைய அழகியாகிய பதுமாபதி நங்கை கண்கூடாகக் கண்டு அந்நகரத்திலேயே உறைவது காரணமாக, வண்டுகள் இசைபாடும் சோலைகளை யுடைய இம்மகதநாட்டினூடே வந்தேம்! கண்டீர்" என்று கேட்போர் விரும்புகின்ற இன்னிசை போன்ற இம்மொழிகளை இறைமகனாகிய அவ்வுதயணன் கூறுதலாலே; என்க.

(வி - ம்.) வதுவைச் செல்வம் - வதுவையாகிய செல்வம் என்க. நீங்கல் செல்லான்; நீங்கான்: ஒருசொல். முதற்கோசம்பி - தலைநகர மாகிய கோசம்பி. மொய்புனல்: வினைத்தொகை. சேயிழை மாதர்: பதுமாபதி. அந்தணி - யாப்பியாயினி. இன்னிசை போன்ற கிளவி என்க. கிளவி - மொழி. இறைமகன்: உதயணன்.

யாப்பியாயினி உதயணனே மாணகனென்று உணர்தல்

அஎ - ௬௬ : சின்னகை.........ஆகி

(பொ - ரை.) புன்முறுவலையும் சிவந்த அணிகலன்களையும் உடைய மணமகளாகிய யாப்பியாயினி அவ்வுதயணன் கூறிய மொழிகளைக் கேட்டு, இவ்வாய்மொழி ஒளி பொருந்திய பற்களை யுடைய பதுமாபதியோடு கன்னிமாடத்தின்கண் கரந்துறைந்த பார்ப்பனனாகிய மாணகனுடைய மொழியேயன்றோ என்றுஐயுற் றவளாய், இங்ஙனம் மொழிந்தவன் யார் என அறிவேன் என்று தன்னுள் துணிந்து மணமகனாகிய இசைச்சன் விரலோடு சேர்க் கப்பட்டுள்ள தேன் பொருந்திய காந்தளினது அழகிய அரும்பு களை யொத்த தன் விரலை அகற்றிக்கொண்டவளாய்க் கொழு விய கயல்மீன் போன்ற குளிர்ந்த தன் கண்களை வளைத்துப் பார்ப்பவள் அவ்வுதயண குமரனைப் பார்த்து, அவன் அம்மாண கனேயாதல் கண்டு மாணகனும் உதயணனும் இருவரல்லர்; ஒருவரே என்னும் உண்மையை ஐயமின்றி உணர்ந்து கொண்ட வளாய்; என்க.

(வி - ம்.) சேயிழை: யாப்பியாயினி. மாதரொடு: பதுமாபதி யோடு. மனை - கன்னிமாடம். திருமுகை - அழகிய அரும்பு. கூட்டு விரல் - கணவன் விரலோடிணைத்தவிரல். கோட்டுவனள் - வளைத்து. மேலைக்குமரன்: முற்கூறப்பட்ட உதயணன்.

(இதுவுமது)

௩௯௪ - ௪௦௩ : வையம்........இருப்ப

(பொ - ரை.) நிலவுலகத்தைப் பாதுகாக்கும் தொழிலை யுடைய வத்தவ மன்னனாகிய உதயண நம்பியே மாணகன் என்னும் பார்ப்பனக் கோலத்தோடு வந்து எங்கோமகள் பதுமா பதி நங்கையினது நிறையுடைய நன்னர் நெஞ்சத்தை அழித்த னன். இவ்வுண்மையை யானிப்பொழுது நன்குணர்ந்து கொண் டேன். இக்காதல் நிகழ்ந்துழிக் குலப் பிறப்பாட்டியாகிய அந் நங்கையின் மனம் தன்னோடு ஒத்த இடத்திற் செல்லுதலன்றி ஒவ்வாவிடத்தே செல்லாது என்னும் கருத்தின்கண் என் நெஞ்சம் உறுதிகொண்டது என்று, அந்த மெல்லிய இயல்பை யுடைய யாப்பியாயினி தன்னுள் நினைந்து, மகிழ்ச்சியுடைய தனது உசாஅத்துணைத் தோழியாகிய பதுமாபதிக்கு ஆடவர்க் குரிய நல்ல நலங்களெல்லாம் நிரம்பிய காதலன் இப்பெருந்தகை வேந்தனே யாதல்கண்டு மிகவும் சிறப்புற்றுக் குறைதலில்லாத நன்மையைத் தன்பாற் கொண்ட இந்த மொழியைத் தானே அவள்பாற் கொண்டு சென்று கூறுமோர் ஊக்கத்தோடு பெரி தும் விரும்பியவளாய் அத் திருமணக் கூட்டத்தின்கண் இனி தாக இராநிற்ப; என்க.

(வி - ம்.) காவலனாகிய பெருமகன் என்க. மாணகனாகிய பார்ப் பன உரு என்க. குடிப்பிறந்தார் நெஞ்சம் ஒப்புழியல்ல தோடா தென்பது ஒரு கொள்கை. இதனை,

"ஏகு நல்வழி யவ்வழி யென்மனம்
ஆகு மோவதற் காகிய காரணம்
பாகு போன்மொழிப் பைந்தொடி கன்னியே
ஆகும் வேறிதற் கையுற வில்லையே" (கம்ப. மிதிலை. ௧௨௭.)

என்னும் இச்செய்யுளிடத்தும் காண்க. நன்னலத் தோன்றல் - நன் னலத்திற்குரிய தோன்றல். அவட்கொண்டு - அவ்விடத்தேயுட் கொண்டு. உறைத்தலூற்றம் - உறைத்தற்குரிய ஊற்றம்.

(பதுமாபதி யாப்பியாயினியை அழைப்பித்தல்)

௪௦௪ - ௪௦௮ : இயைந்த.........விடுத்தலின்

(பொ - ரை.) இவ்வாறு, பொருந்திய திருமணவினைக்குரிய ஏழு நாள்களும் அகன்ற பின்னர்ப் பசிய பொன்னாலியன்ற கிண் கிணியையுடைய பதுமாபதி நங்கையும், தன்னைப் பெரிதும் விரும் பிய தோழியாகிய யாப்பியாயினியினது சிறந்த நலங்களைக் காணும் பொருட்டுப் பெரிதும் விரும்பியவளாய் அவளை அழைத் துக் கொண்டு விரைவாக இங்கு வருவீராக வென்று அழகுமிக்க ஒரு சிவிகையோடு பணிமாந்தரை விடுத்தலாலே ; என்க,

(வி - ம்.) வதுவை எழுநாள் - மணச்சடங்கு நிகழ்கின்ற ஏழு நாட்கள். தன்னை நயந்த தோழி என்க. தோழி : யாப்பியாயினி. திரு - அழகு. சிலதர் - பணிமாந்தர்.

(இதுவுமது)

கூ0கூ - கககூ : ஆரா.........முன்

(பொ - ரை.) ஆரா அன்பினோடு பதுமாபதியைக் காணாது கழிந்த அவ்வேழு நாளும் ஏழு ஆண்டுகள் கழிந்தாற்போல நெடியனவாகத் தோன்றும் தன்மையை உடையவளாகி இன்னும் அப்பதுமாபதியின் பெண்மைநலத்தை நுகர்ந்து அவற்றைக் கவர்ந்துகொண்டு பிரிந்த உன்னுடைய காதலனை யான் கண் கூடாகக் கண்டேன். ஆதலால் இனி நீ துன்பம்விடுத்து ஆறுதல் எய்துவாயாக. ஒப்பனை செய்யப்பட்ட வளையலணிந்த தோளை யுடையோய்! உன்னுடைய காதலனாகிய அம்மாணகன் யாரென விருக்கின்றாய்? அவன் வளமிக்க படைகளையுடைய வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணனே காண்! என்று அவட்கு விளங்கும்படி கூறுதற்கெழுந்த விருப்பமும் நாணும் உடையளாய், அப் பதுமாபதியைத் தேற்றுதற் பொருட்டு அச் சிவிகையின்கண் ஏறித் தன் துணைநலத் தோழியாகிய அப் பதுமாபதியின் மாளிகை முன்னர் இறங்கி, என்க.

(வி - ம்.) எழு நாள் - மணம் நிகழ்ந்த ஏழு நாளும். பதுமாபதியைக் காணாது கழிந்தமையின் அந்நாட்கள் ஏழாண்டுகளாக அவளுக்குத் தோன்றின என்க. தன்மையளாய் + இனும் எனக் கண்ணழிவு செய்க. நண்பனைக் கண்டேன் - அவன் உதயணன் என்க. தேறிய - தேற்றுதற்கு. தோழி : யாப்பியாயினி.

(பதுமாபதி கூறல்)

ககக - கஉக : மணநலம்.........பயிற்ற

(பொ - ரை.) திருமணக் கோலமாகிய அழகோடு தன்னெதிர் வந்து நாணத்தால் தலைகுனிந்து நின்றவளாகிய அந்த யாப்பியாயினியைக் கண்ட பதுமாபதி, அவளெதிரே ஆர்வத்தோடு சென்று "ஏடி! அணிகலனணிந்த நின்னுடைய இளைய அழகிய முலைகள் நின் கணவனால் தழுவப்பட்டிருத்தலால் அவற்றை யான் தழுவிக்கொள்ளமாட்டேன்" என்று மெல்லியல்பு வாய்ந்த அப்பதுமாபதி நகைமொழி கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) மணக்கோலம் நலம் என மாறுக. நின்றோள் : யாப்பியாயினி. புல்லினது - தழுவியது. மாதர் : பதுமாபதி. நகுமொழி - நகைச்சுவையுடைய மொழி. பயிற்ற - கூற.

(யாப்பியாயினி கூறுதல்)

௧௨௦ - ௧௨௪ : நினக்கும்.........மதி

(பொ - ரை.) அந்நகைமொழி கேட்ட அத்தோழி, "கோமகளே! அப்பழி எனக்குமட்டும் உரியதன்று; உனக்கும் ஒக்குமே" என்று மறுமொழி கூறுகிற்ப, அதுகேட்ட பதுமாபதி மகிழ்ந்து முறுவல்பூத்த முகத்தினளாய், "நல்ல நுதலையுடையோய்! வருக! வருக!" என்று வரவேற்பாளாக, அப்பதுமாபதியின் மனத்தை யேயொத்த தோழியாகிய அவ்வியாப்பியாயினி தன் கணவனுடைய நுகர்ச்சி காரணமாகப் பூரித்துயர்ந்த தனது அழகிய முலைகள் நோவும்படி அக்கோமகளை ஆர்வத்தோடு இறுகத் தழுவிக்கொண்டு, "அணிகலனணிந்த எங்கோமகளே கேட்டருள்க"; என்க.

(வி - ம்.) இவ்விருவரும் நிகழ்த்திய நகைமொழியும் மறுமொழியும் பெரிதும் நகைச்சுவையுடையனவாதல் உணர்க. மனத்தினன்னாள் : பதுமாபதியின் மனத்தையொத்த யாப்பியாயினி. முகத்தள் : பதுமாபதி. நன்னுதல் : விளி. உகந்த - உயர்ந்த. புனையிழை : விளி. மதி : முன்னிலையசை.

(இதுவுமது)

௧௨௫ - ௧௩௨ : வண்டார்.........உரைப்ப

(பொ - ரை.) "வளவிய மாலையணிந்த மார்பினையுடைய நூலாராய்ச்சியினையுடைய நின் கணவனாகிய மாணகனை யான் கண்டேன். அங்ஙனம் வஞ்சகமாகப் பார்ப்பன வேடம் தரித்தவன் யார் தெரியுமா? அக் கள்ள வடிவத்தோடு நம் சிவிகையில் மறைந்து நம் கன்னிமாடத்துக் கரந்துறைந்து உன்னுடைய நெஞ்சங்கவர்ந்த பெரிய மலைபோன்ற மார்பினையுடைய அம் மாணகன் உண்மையில் பழியற்ற வலிய முயற்சியினையுடைய வத்தவ நாட்டு அரசனாகிய உதயண குமரனே காண்; இவ்வுண்மையை நன்கு உணர்ந்துகொள்க!" என்று பொய்ப்பொருள் மருவாத நல்ல சில வழிகளையுடைய நட்புரிமையையுடைய நறுமணங் கமழும் யாப்பியாயினி தெளிந்து கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) வடிநூல் வயவன் - அழகிய பூணூலையுடைய வலிய வனான மாணகன் என்றும், வடித்த நூலையுடைய போர்மறவனாகிய உதயணனென்றும் இருபொருளும் தோன்றுதலுணர்க. அன்ன தன்மையன் - அங்ஙனம் பார்ப்பன வேடங் கொண்டவன். கள்ள உருவு - வஞ்சக வேடம். உறுவரை - பெரிய மலை. வசை - பழி. போலும் : ஒப்பில் போலி. சிதைபொருள் - பொய்ப்பொருள். சின்னெறி - நல்லனவாகிய சில வழிகள். மாதர் - யாப்பியாயினி.

(பதுமாபதி கூறல்)

௩௩ - ௩௭ : நின்னை .... கூற

(பொ-ரை.) "யாப்பியாயினி, உன்னைத் திருமணம் புணர்ந்த இசைச்சன் என்னும் அப்பார்ப்பனன் உதயண குமரனுக்கு நெருங்கிய தோழன் என்னும் இச்செய்தியை யான் முன்னரே கேள்வியுற்றேன். ஏடி! என்னுடைய உள்ளத்தின்கண் பிரியாது உறைதற்கு உரிய காதலுரிமையை மேற்கொண்டுள்ள பெரியோனாகிய அம்மாணகன் என்னுடைய கலங்காத நல்ல நிறையை வடுப்படுத்திவிட்டுப் பின்னர் என்னைப்பிரிந்து போதல் அவ்வந்தணனுக்குத் தகுந்த செயலாகுமோ? இதனை நினைத்துப்பார்" என்று மனங்கலங்கி அழகிய அணிகலனணிந்த அப்பதுமாபதி நங்கை யாப்பியாயினியின் மொழியை நன்கு அறிந்துகொள்ளாதவளாய்த் தன்னுடைய மனத்திட்பத்தையே கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) நின்னைவேட்ட அந்தணனென்றது இசைச்சனை. இதன்கண் பதுமாபதி யாப்பியாயினியின் மொழிகளைக் கேட்டு வைத்தும், அவள் கூறிய பொருளைப் பிறழ உணர்ந்து மறுமொழி கூறுதல் இயற்கைக்கு மிகவும் பொருந்துதல் காண்க. யாப்பியாயினி, நின்னை நிறைகொண்ட பார்ப்பனன் உதயண குமரனே என்றுளாக அம்மொழிக்குப் பதுமாபதி, "என்னை மணந்த அப்பார்ப்பனன் உதயணனுக்குத் தோழன்" என்று கூறினாளாகக் கருதி அது முன்னே கேட்டனன் என்று மறுமொழி கூறுதல் உணர்க. காதலிற் கலங்கிய பதுமாபதியின் நிலைமையினை இப்புலவர்பெருமான் இத்துணை நுணுக்கமாகக் கூறுதல் நினைந்து இன்புறுக : பெருமகன் - மாணகன். உள்ளத்து உரிமை பூண்ட பெருமகன் என்று மாறுக. அதிரா - கலங்காத. தணத்தல் - பிரிதல். திருவிழை : பதுமாபதி.

(யாப்பியாயினியின் செயல்)

௩௮ - ௪௪ : பின் .... உரைக்க

(பொ - ரை.) அதுகேட்ட யாப்பியாயினி அவளுடைய கலங்கிய நிலைமை கண்டு, 'கோமகளே! கலங்காதே கொள்! இன்னுஞ் சிறிது பொறுத்துப் பார்ப்போம். அவன் அத்தன்மையன் ஆதலைத் திருமகள்போல்வாய் ஆற்றி இருந்திடுக" என்று அவளை ஒருவாறு தேற்றி அவள்பால் விடைபெற்றுத் தனது திருமண இல்லத்திற்கு மீண்டுவந்து பதுமாபதியின் நிலைமை இங்ஙனமிருக்கின்றது என்று உதயணனுக்குக் கூறுகிற்ப; என்க.

(வி - ம்.) இதன்கண் பின்னருங் காண்பாம். அவன் அன்னனாதல் என்னும் இம்மொழி பெருமகன் தணத்தல் தகுமோ என்னும் பதுமாபதியின் வினாவிற்கு விடையாகவும் தன் கூற்றிற்கு அவன் உதயணனே யாதலைப் பின்னருங் காண்பாம் எனப் பொருள்பட்டு

ஆக்கமாகவும் அமைதல் காண்க. தன்மனை என்றது, திருமண வில்லத்தை. நன்னுதல் : பதுமாபதி. உதயணனுக்கு உரைக்க என்க.

(உதயணன் செயல்)

௧௪௪ - ௧௫௫ : அம் .... உணர்த்தென

(பொ - ரை.) அம்மொழியைக் கேட்ட உதயண மன்னன் அப்பதுமாபதி நங்கையை அக்கலக்கத்தினின்றும் தெளிவித்தலை விரும்பி அப்பொழுதே பல்வேறு வண்ணங்களையும் சேர்த்து வைத்துக்கொண்டு ஓர் ஓவியப்படாஅத்தின்கண் தன்னுடைய ஓவியப்புலமை விளங்கும்படி காண்போர் நெஞ்சை உண்ணும் காதலுரிமையோடு தனக்குரிய மறப்பண்பினும் குறைவுறாமல் மறைக்கும் தன்மையை வழுவாத தன் காதற்குறிப்பு முதலிய பண்புகளோடு தொடங்கி அதனைக் கண்ட அப்பொழுதே அழகிய குழையினையுடைய அப்பதுமாபதி உணர்ந்து கொள்ளும்படி திருத்தமான ஓர் ஓவியத்தைத் தன்னைப்போன்று முறையாக வரைந்து யாப்பியாயினிக்குக் கொடுத்து, "நங்காய்! நீ இவ்வோவியத்தை அப்பதுமாபதிக்குக் கொடுத்துப் பின்னரும் யான் ஒளிபொருந்திய நெற்றியையுடைய அப்பதுமாபதியோடு கன்னிமாடத்தின்கண் இருந்தகாலத்தே ஒருநாள் அழகிய அக்கன்னிமாடத்துச்சியின்கண் நள்ளிரவிலே வந்து கேட்போர் அஞ்சும்படி ஒரு கூகை குழறிற்றாக அது விழித்த கண்களையுடைய கூகையினது கடியகுரல் என்பதனை அறியாதவளாய் அப் பதுமாபதி விரைவிலே நடுங்கினள். இந்த நிகழ்ச்சியையும் அவளுக்குச் சொல்லித் தெளிவிப்பாயாக" என்று கூறுமிற்ப; என்க.

(வி - ம்.) சித்திரக்கிழி - ஓவியம் எழுதுதற்குரிய துணி. உண்கண் - காண்போர் நெஞ்சத்தை உண்ணும் கண் என்க. பண்பு - தனக்குரிய மறப்பண்பு. அப்பொழுதே - கண்டபொழுதே. பூங்குழை : பதுமாபதி, வாக்கு - திருத்தம். மனை - கன்னிமாடம். உருவம் - அழகு. இரவுக்குறி - இரவுக்குறிக்குரிய நள்ளிரவு என்க. வெருவ - அஞ்ச. விழிகண் : வினைத்தொகை. கதுமென : விரைவுக் குறிப்பு. ஒடுங்கிரோதி : பதுமாபதி.

(யாப்பியாயினி செயல்)

௧௫௪ - ௧௬௦ : மன்னவன்.........வடிவென

(பொ - ரை) அதுகேட்ட யாப்பியாயினி அவ்வுதயணன் கூறிய மொழியையும் அவன் வரைந்துதந்த அவனைப்போன்ற அழகிய நன்மையமைந்த ஓவியத்தையும் கொண்டு சென்று அக்கோமகளையணுகி வண்டுகள் மொய்க்கின்ற மலர்ந்த படலைமாலை அணிந்த உதயணகுமரனுடைய அவ்வோவியத்தைப் பதுமாபதிக்குக் காட்டிப் "பசிய பூங்கொடிபோல்வோய்! இவ்வுருவம்

நம்முடைய அழகிய பூம்பொழிலிலே பார்ப்பன வேடத்தோடு தன் உண்மையுருவத்தை மறைத்துக்கொண்டுவந்து உன்னுடைய பெண்மை நலம் முழுவதையும் கவர்ந்துகொண்டுபோன உதயண மன்னனுடைய உருவங்காண்!" என்று உணர்த்தாளென்ப; என்க.

(வி - ம்.) மன்னவன் : உதயணன். மாற்றம் - மொழி. பாவை : ஓவியப் பாவை. கோமகள் : பதுமாபதி. படலை - தளிர் விரவித் தொடுத்த மாலை. அந்தணவுருவொடு - பார்ப்பன வடிவத்தோடு. காவலன் : உதயணன்.

(பதுமாபதி செயல்)

கசுக - கசுஎ : திருந்திழை.........ஆக

(பொ - ரை.) அதுகேட்ட திருந்திய அணிகலன்களையுடைய அப்பதுமாபதி நங்கை அவ்வோவியப் பாவையைத் திட்பமாகப் பார்த்துத் தன் இன்னுயிர்க் காதலனாகிய அம்மாணகன் என்றும், இஃது எழுதப்பட்ட ஓவியம் என்றும் வேற்றுமை சிறிதும் இல்லையாகவும் யான் என் காதலன் வந்துழி அவனோடு இவ்வோவியத்தை வைத்து ஆராய்ந்து கண்டபினல்லது இதனைத் தொழுதலும் இவ்வுதயணனே அம்மாணகன், அம் மாணகன் ஓவியமே இஃதென்று தெளிந்து கோடலும் அழகுடைய செயல்களல்ல என்று அணிகலன் விளங்குகின்ற இள முலைகளையும் புனைந்த வளையலையுடைய தோள்களையுமுடைய அப் பதுமாபதி தன் நெஞ்சினுள்ளே நினைத்து அவ்வோவியத்தைக் கையேற்றுக் கொள்ளாளாக; என்க.

(வி - ம்.) திண்ணிதின் நோக்கி - கூர்ந்து நோக்கி. அப்பாவைக்கும் தன் கணவனுக்கும் ஒருசிறிதும் வேற்றுமையில்லையாகவும் என்க. கணவனோடு ஓராங்குவைத்து ஆராய்ந்தல்லது என்க. தேறல் - தெளிதல். திருத்தகைத்தன்று : ஒருமை பன்மை மயக்கம். தயங்கு - விளங்காநின்ற. தோளி : பதுமாபதி. உள்ளே - நெஞ்சினுள். நினைஇ - நினைத்து.

(பதுமாபதியின் மகிழ்ச்சி)

கசுஅ - கஎரு : நள்ளென்........ ஒடுக்கி

(பொ - ரை.) இங்ஙனம் ஐயுறவு கொண்ட அப்பதுமாபதியின் நிலைமைகண்ட யாப்பியாயினி பின்னரும் பண்டு ஒருநாள் நள்ளிரவின்கண் நல்ல நுதலையுடைய அப்பதுமாபதி நங்கை பெரிதும் அஞ்சிய கூகையின் குழறலாகிய நல்ல அடையாளத்தை அவ்வுதயணன் உரைத்தாங்கு உரைத்துக் காட்ட, அதுகேட்டவுடன் பெரிய வெற்றியையுடைய தன் கணவனுடைய

இனிய உயிரைக் கூற்றுவனிடத்தினின்று மீட்டும் கைப்பற்றிக் கொண்ட தெய்வக் கற்பொழுக்கத்தினையுடைய சாவித்திரியைப் போல மிகமிக மகிழ்ந்து சிவந்த கடைப்பகுதியையுடைய குளிர்ந்த கண்களையும், சிவந்த அணிகலன்களையும் உடைய தோழியாகிய யாப்பியாயினியைத் தனது அழகிய கையால் பன்முறை தட்டித் தாங்குதற்கரிய ஆர்வத்தோடு தான் காமுற்ற காதலனாகிய அவ்வுதயணனுடைய கைத்தொழிலாலே பொலிவுற்ற அவ்வோவியத்தைக் கைப்பற்றிக்கொண்டு தன் மார்போடு அணைத்து; என்க.

(வி - ம்.) நள்ளென் யாமம் - நள் ளென்னும் ஓசையையுடைய யாமம்; நடுயாமமுமாம். வெரீஇய - அஞ்சிய. நற்குறி - நல்ல அடையாளம். பொருக்கென : விரைவுக் குறிப்பு. பெருவிறற்கொழுநன் : சத்தியவான், பெரியோள் : சாவித்திரி. மகிழ்ச்சியுற்றோர் : தாம் மகிழ்ச்சியுறுதற்குக் காரணமான செய்தியைக் கூறியவரைக் கையால் தட்டி மகிழ்தல் இயல்பு. தங்கா : தாங்கா என்பதன் விகாரம். ஆகத்து - மார்பின்கண்.

(இதுவுமது)

௧௪௩ - ௧௫௨ : நீண்ட........எல்லை

(பொ - ரை.) பின்னர், அவ் வோவியத்தைக் கண்முன் கொண்டு அவ்வோவியத்தினது நீண்ட திண்ணிய தோளைத் தன் விரலாலே தொட்டுச் சிரித்து, "ஏடா! என்னுடைய மனங்கவர்ந்த புகழுடையோனே! நீ வஞ்ச உருவத்தோடு என்பால்வந்து என்னை நின்வலையில் அகப்படுத்திக்கொண்டாய், அல்லையோ!" என்று கூறி ஊடிய பார்வையுடையவள் போல அவ்வோவியத்தைப் பார்த்து நலமுடைய மொழிகள் பலப்பல விரும்பிப் பேசி அவ்வுதயணன் சொல்லிவிடுத்த செய்திக்கும் அத்தோழி கூற்றிற்கும் தான் உடன்பட்டவளாகி ஒருசில நாள் கழிந்தபின்னர்; என்க.

(வி - ம்.) தீண்டுவனள் - தீண்டி. நக்கு - சிரித்து. நெடுமொழி - புகழ். கோமான் : உதயணன். தோழி : யாப்பியாயினி.

(மணத்துக்குரியன செயப்படுதல்)

௧௫௩ - ௧௬௬ : நன்னாள் .... வியப்பிற்றாகி

(பொ - ரை.) இனி, தருசக மன்னன் நல்லதொரு நாளிலே திருமணச் செயலைத் தொடங்குதல் நன்றெனக் கருதி இருந்து, பின்னர்க் குற்றமில்லாத உணர்ச்சியினையுடைய அக் கொற்றவனுடைய குன்றாத கல்வியையுடைய சேனைப் பெருங்கணியாகிய கணிவன் ஆராய்ந்து கூறிய நன்னாளிலே படைத்தலைவர் முன்

னிலையிலே இந்நிகழ்ச்சியினை அறிவுறுத்துதலாலே, உலகின்கண் நிகழும் திருவிழா நாளுக்கு அணிசெய்யுமாறு போலே ஆரவாரமுடைய அவ்விராசகிரிய நகரத்தின் அங்காடித் தெருக்கள் தோறும் செழுமையுடைய பலவாகிய புதியபுதிய சிறப்புச் செய்தலிற்றவறுமல் பல்வேறு வண்ணங்களையுடைய பலவாகிய கொடிகளை இடந்தொறும் இடந்தொறும் உயர்த்துதலாலே வானவெளியெல்லாம் துகிலால் வேய்ந்தாற்போன்ற வியப்பினைத் தருவதாய்; என்க.

(வி - ம்.) தலைப்பெயல் - தொடங்குதல். கோட்டம் - மனக்கோட்டம். கல்வி குன்றுக்கணி என்க. சேனைப் பெருங்கணி - படையெழுச்சிக்கு முரசறையும் வள்ளுவன். தலைத்தாள் : முன்னிலை. விழவிற்றுனும் - விழாநாட்போல. அழுங்கல் - ஆரவாரம். நகர் - இராசகிரியம். ஆவணம் - அங்காடி. யாணர் - புதுமை; அழகுமாம். வயின் வயின் - இடந்தோறும் இடந்தோறும்.

(இதுவுமது)

௧௬௨ - ௨௦௩ : பெருமதில் .... இரீஇ

(பொ - ரை.) பெரிய மதில்களை அணிசெய்யப்பட்ட அவ்வழகிய இராசகிரிய நகரத்தின்கண் வாழாநின்ற கற்றுக் கேட்டு ஆராய்ந்து உணர்ந்த ஆடவரும் பெண்டிரும் பெருமகிழ்ச்சியுடையவர் ஆகிய பொழுது, பகைவரை வென்று கடந்த சேதி நாட்டரசனுகிய உதயணகுமரனையும் தேன்மணங்கமழும் கூந்தலையுடைய பதுமாபதி நங்கையையும் தம் முன்னேர் மரபிற்குப் பொருந்துமாறு திருமுழுக்குச் சடங்கு செய்து கழிப்பதற்குத் தொடங்கிச் செல்வத்திற்கு மிகவும் பொருந்திப் பிறதீமைகள் தீண்டமாட்டாமைக்குக் காரணமான நறுநெய்யைப் பதுமாபதியின் தலையிலே பெய்து அஞ்சனந் தீட்டப்பட்ட உயர்ந்த நுதலையுடைய பெரிய களிற்றியானையின் பிடரியிலே ஏற்றிக் கொணர்ந்த பெரிய குளிர்ந்த நறிய நீரால் விரும்பித் திருமுழுக்குச் செய்வித்துப் பவழத்தாலாகிய கொட்டையையுடைய பொன்னுலியன்ற மிதியடியின் மேலேறுவித்து அழைத்துக் கொணர்ந்து விளங்குகின்ற ஒப்பனையையுடைய அழகிய மணைப்பலகையின்கண் இருக்கச் செய்து; என்க.

(வி - ம்.) மதிலணிந்த மாந்தரும் மகளிரும் என்க. மாந்தர் - ஈண்டுப் பெண்ணெழிந்து நின்றது. செரார் - பகைவர். சேதியர் மகன் - உதயணன். மது - தேன். மரபு - பழைய முறை. மண்ணுவினை - ஒரு சடங்கு; திருமுழுக்குச்சடங்கு. கழிப்பிய - கழித்தற்கு. நெய்தலைப் பெய்தல் - ஒரு சடங்கு. கொட்டை - குமிழ். பொற்செருப்பு - பொன்னுலியன்ற மிதியடி. கோலத்திருமணை - ஒப்பனை செய்தற்குரிய அழகிய மணைப்பலகை. இரீஇ - இருத்தி.

(பதுமாபதியைக் கோலஞ் செய்தல்)

௨0௬ - ௨௧௧ : செங்கயல்.........அணிந்து

(பொ - ரை.) சிவந்த கயல்மீன் போன்ற கண்களையுடைய பதுமாபதியை அவளுடைய தவ்வைமார் அழகு மேம்பாடுறும் பொருட்டுத் தூய அணிகலன்களைப் பூட்டித் திருந்திய அப்பெருமாட்டியின் திருவடிகளை வணங்கி அவ்வடிகள் வருந்தாத படி பாதுகாத்து அழைத்துக் கொணர்ந்து, பீடத்தின்கண் இருத்து தற்கு இடமறிந்து ஏற்றிப் பத்துவகைத் துவரும் ஊறவைத்த நறிய நீரைக் கூந்தல் நிறம் பெறற் பொருட்டு அக்கூந்தலின்கண் இடந்தொறும் இடந்தொறும் தெளித்து உருவிக் கருமையால் மாண்புடைய முதிர்ந்த அகிற்கட்டையிட்டு எழுப்பிய கொழுவிய நறுமணப் புகையை ஊட்டி நெறிப்புண்டாக நெறித்துச் சிக்கறச் சீப்பான் வாரி முடித்து மகளிர்க்கு மங்கலமாகிய நறிய முல்லைச் சூட்டினை முறையாக அக்கூந்தலிலணிந்து; என்க.

(வி - ம்.) கன்னி : பதுமாபதி. நங்கை - அவள் என்பது படநின்றது. தவ்வையர் - தமக்கைமார். ஈண்டு பதுமாபதியின் தோழிமாருள் வைத்து அவளுக்கு மூத்த தோழிமாரை உணர்த்தி நின்றது. வாலணி - தூய அணிகலன். இரீஇய - இருத்துதற்கு. பாடு - இடம். நறு நீர்த்துவர் - துவர் நறுநீர் என மாறுக. துவர் பத்து. அவையாவன : "பூவந்தி திரிபலை புணர்கருங்காலி நாவலோடு நாற்பான் மரமே" (சிலப் ௬ : ௭௬) என்பன. கைவயின் உரீஇ - கையாலள்ளிக் கூந்தலின்கண் இடந்தொறும் பெய்து உருவி என்க. உரீஇ - உருவி. கறைமாண் காழகில் - கரிய மாட்சிமையுடைய முதிர்ந்த அகிற்கட்டை, வாருநர் - சீப்பால் வாரி. மங்கலநறுஞ்சூட்டு - மங்கலமாகிய நறிய முல்லை மலராலியன்ற கொண்டைமாலை இது கற்பிற்கு அறிகுறி.

(இதுவுமது)

௨௧௨ - ௨௨௧ : வல்லோன்.........அணிந்து

(பொ - ரை.) தொழில் வல்லவன் இயற்றிய நல்ல தொழிற்றிறங்கள் கூடிய யவன நாட்டுப் பேழையுள் வைத்துத் தோழிமார்கள் கையேந்திக் கொணர்ந்த பொன்னணிகலன் பலவற்றுள்ளும் மாந்தளிர் போன்ற நிறமுடைய அப்பதுமாபதி பொறுக்கும் இயல்புடையனவாகிய மெல்லணிகலன்களை முறையே தேர்ந்தெடுத்து வெள்ளைச் சந்தனத்தால் கோலம் எழுதிய அழகிய மார்பின்கண் இரண்டு முலைகளின் இடையிலும் கிடந்து பிறழ்ந்து விளங்கும் இரட்டை மலர்ப் பிணையல் போன்று இயற்றிய பொற்கொடிகளாலே அசையும் இடையை அசையாமல் நிலைபெறும்படி கட்டுவது போலப் பூட்டி மேற்றிசையில் தோன்றும் இளம்பிறை போல விளங்கும்படி அமைந்த ஒற்றைவடமாகிய முத்து மாலை புத்தொளி பெறும்படி அணிந்து; என்க.

(வி - ம்.) வல்லோன் - தொழில் வல்லோன். யவனப் பேழை - யவன நாட்டுப் பெட்டி, தமனியக்கலம் - பொன்னணிகலம். ஆற்றும் - பொறுக்கும். வரித்த - கோலஞ் செய்த. இலங்குபு - இலங்கி. விசிப்பதுபோல - கட்டுவது போல. ஒரு காழாரம் - ஒற்றை வடமாகிய முத்து மாலை.

(இதுவுமது)

௨௨௨ - ௨௩௧ : திரு.........அணிந்து

(பொ - ரை.) அழகிய நிறமுடைய கழுத்தணியைச் செவ்வையாகப் பூட்டிப் பசிய பொற்றிலகத்தோடு நெற்றிப் பட்ட மணிந்த ஒள்ளிய கதிரையுடைய திங்கள் போன்ற திருமுகம் மேலும் ஒளியோடு விளங்கும் படி செம்பொன்னாலாகிய ஓலையை அழகுண்டாகச் சுருக்கி அணிந்து பச்சை சிவப்பு நீலம் கருப்புப் பொன்னிறம் ஆகிய ஐந்து வண்ணங்களையுடைய அழகிய நுண்ணிய மேகலையணியைப் பாம்பின் படத்தை யொத்த அல்குலின்மேற் கிடந்து விளங்கும்படி யணிந்து புதிய நுண்ணிய ஆடையைக் கொய்சகமிட்டு அழகுற உடுத்தி, மைதீட்டிய கண்ணையுடைய அப்பதுமாபதியின் இடை வருந்தும்படி பேரொளியையுடைய முத்துமாலைகளையும் அழகாகப் புனையப்பட்ட மலர்மாலைகளையும் அப்பெருமாட்டியின் பெரிய தோள்களுக்குப் பொருந்தும்படி ஒருசேர அணிந்து; என்க.

(வி - ம்.) திருக்கேழ் - அழகிய நிறம். கனிகை - கழுத்தணி. பட்டம் - நெற்றிப்பட்டம். ஓலை - பனையோலையின் வடிவிற் செய்யப்பட்ட ஒரு பொன்னணிகலம். சேடு - அழகு. சுருக்கி - சுருள் செய்து. மேகலை - ஓரணிகலம். புதிய துகில் மருங்குலை வருத்த என்க. கடுங்கதிர் - பேரொளி. உடங்கு - ஒருசேர.

(இதுவுமது)

௨௩௨ - ௨௩௮ : ஒழுகிய.........அமைய

(பொ - ரை.) ஒழுங்குபட்ட சிலவாகிய மயிரையுடைய முன்கையின்கண் பொன்வளை முதலாகக் கண்ணிறைந்த அழகுடைய கடகம் ஈறாக உள்ள அணிகளையும், சூடகம் என்னும் வளையலோடு அணிந்து மேற்கொண்ட பேரொளியையுடைய பவள வளையலையுமணிந்து, பாடகம் நூபுரம் என்னும் காலணிகள் பரட்டின்மேற் கிடந்து ஆரவாரியா நிற்ப, ஆடாநின்ற மூங்கில் போன்ற தோளையுடைய அப்பதுமாபதியை ஒப்பனை செய்து முன்னோர் முறையினின்றும் பிறழாமல் மிக்க நாகரிகத்தையுடைய அக்கோமகளைத் திருமணவினைக்கேற்ற மங்கலப் பேரணிகளாலே இவ்வாறு அணிந்து விடா நிற்ப என்க.

(வி - ம்) ஒழுகிய - ஒழுங்குபட்ட. கடகம் - ஒரு கையணிகலம். பாடகம், நூபுரம் என்பன காலணிகலன்கள்.

(உதயணனைக் கோலஞ் செய்தல்)

௨௩௧ - ௨௩௩ : ஓங்கிய.........எய்த

(பொ - ரை.) இனி, உயர்ந்த பெரிய புகழையுடைய உதயண குமரனையும் அவனுடைய தோழர்கள் தம்முடைய ஒப்பனைத் திறத்தினாலே அணிசெய்து அழகின்மேல் அழகு செய்யாநிற்ற லால் அவனைக் கண்ட மாந்தர்கள் மணக் கோலஞ் செய்து கொண்ட காமவேளே இவன் என்று துணியும்படி காட்சிக்குப் பொருந்திய மாட்சிமையுடையனாக; என்க.

(வி - ம்.) தோழர் - வயந்தகன் முதலியோர். கடிநாட்கோலத் துக் காமன் - திருமணக் கோலத்தோடு தோன்றிய காமவேள்.

(உதயணன் மணமண்டபம் புகுதல்)

௨௩௪ - ௨௫௭ : வெற்ற.........புகுதர

(பொ - ரை.) வெற்றியையுடைய தருசக மன்னனுடைய தன் தொழிலிலே வெற்றிமிக்க பெரிய கணிமகன் ஆராய்ந்து கூறிய முழுத்தங் குறையாதபடி ஆர்வத்தோடு அணிசெய்த தொழிலை யுடைய அகன்ற பெரிய அரண்மனையின்கண் உள்ள ஆயிரம் பொற்றூண்களையும் அழகிய மணிகள் பதித்த போதிகைகளையும் காய்கின்ற கதிரையுடைய முத்துக்குஞ்சங்களாலே அழகுற அணி செய்யுங்கோள்! என்றும் அத்தூண்களினிடையே தம்முள் ஒத்த உருவினையுடைய ஒன்பது சந்தன மரத்தாலியன்ற பெரிய தூண் களை நாட்டுங்கோள்! அங்ஙனம் நாட்டிய இளைஞர் அழகிற்குப் பொருந்திய......................சூடும் மணிபதித்த நெடிய முடி யினையுடைய அரசருள் வைத்துச் சிறந்த அரசனாகிய அத்தருசக மன்னன் உலகம் விரும்பும் தனது செங்கோலின்கண் அமைத்த முத்துக்கள் அழகுதரவும் தனது தலையின்கண் சூட்டிய படலை மாலையையுடையனும் அம் மண மண்டபத்தின்கண் வந்து புகுந்து வேள்விச்சாலையின்கண் முறைப்படி தீமூட்டுவித்து "இனி வத்தவ மன்னனாகிய உதயணகுமரன் இத்திருமணமண்டபத்தில் எழுந் தருளுக!" என்று கூறுதலாலே அழகிய மலர்மாலையணிந்த வேறு சில அரசிளங்குமரர்களோடு தலைமைத் தன்மையுடைய அவ்வுதயணன் திருமணமண்டபத்திற் புகாநிற்ப என்க.

(வி - ம்.) வெற்றம் - வெற்றி. அரசனுடைய கணியைப் பெருங் கணி என்றல் மரபு. "ஆசான் பெருங்கணி அருந்திற லமைச்சர்" என்றார் இளங்கோவடிகளாரும். முழுத்தம் - முகூர்த்தம். இது மூழ்த்தம் எனவும் வழங்கும். இப்பகுதியில் ௨௫௧-ஆம் அடியின் இறுதிப் பகுதியும் அதனையடுத்த அடி முழுவதும் கிடைத்தில. அதனால் பொருள் விளக்கம் இல்லை. ஞாலம் : ஆகுபெயர் : மக்கள் தலை யில் மலைந்த படலையையுடைய தருசகன் என்க. வேள் - வேட்கின்ற. அண்ணல் : உதயணன்.

(பதுமாபதி வருகை)

உ௫௮ - உ௬௫ : கதிர்........பொழுதில்

(பொ - ரை.) ஒளியுடைய திங்கள் போன்ற முகத்தையுடைய பதுமாபதியைப் பாதுகாத்தலைக் கருதிப் பக்கத்தே நிற்போரும் பண்பினாலே தோழியரை ஒத்தவரும் ஆகிய ஆயிரத்தெட்டுக் காவன்மகளிரும், பசிய அணிகலன்களையுடைய பிற தோழிமார்களும் பதுமாபதியின் பாடகம் சுடர் வீசும்படி குளிர்ந்த பெரிய மணப்பந்தலில் உள்ள மாந்தருடைய கண்களைப் பிணித்துக் கொள்ளும்படி அழைத்துவந்து உயர்குடிப் பிறப்பாலும், ஒழுக்கத்தாலும் ஒத்த வழியிலேயே வந்த ஆக்கமுடைய அவ்வுதயண மன்னனுக்கு வேள்வியாசான் மந்திரத்தையுடைய சிறந்த நெறியினை முன்னின்று காட்ட அவனோடு அப்பதுமாபதி பொருந்தும் படி கூட்டிவைப்ப, வேள்வித்தீ மாட்சிமையுற்ற அழகிய அம் மணப் பொழுதின்கண்; என்க.

(வி - ம்.) முகத்தி : பதுமாபதி. காவல்கண்ணி - காத்தலைக் கருதி. பாங்கியரன்னோராகிய ஆயிரத்தெண்மர் என்க. ஆயிரத்தெண் மரும் தோழியரும் சுடர - கொள்ள, கூட்டி என்க. ஆசான் - முன் னின்று கூட்டக்கூட்டி என்க. தீ - வேள்வித்தீ.

(இதுவுமது)

உ௬௬ - உ௭௦ : புது........பின்றை

(பொ - ரை.) புதிய மலர்மாலையையும் பொலிவுடைய தொடியினையும் பருத்த தோளையுமுடைய பதுமாபதி நங்கையைப் பழைமையை யறிந்த மங்கலமகளிர் பண்போடு பேணித்தம் மரபிற்குப் பொருந்திய செயல்களைத் தமக்குத் துணையாகிய அழகிய மகளிரோடும் செறிந்த காதலோடும் செய்து முடித்த பின்னர், என்க.

(வி - ம்.) பண்பு உணப்பேணி - அவளுடைய நற்பண்பு தம் நெஞ்சத்தைப் பருகும்படி பேணி என்க. மணநலமகளிர் - மங்கல மகளிர். மூதறிமகளிர்-பழைய வழக்கங்களை யுணர்ந்த மகளிர்கள்.

(உதயணன் பதுமாபதியை மணம்புரிந்துகொள்ளல்)

உ௭௧ - உ௭௭ : ஏதம்........கழிப்பி

(பொ - ரை.) நற்காட்சியையுடைய ஏயர்குலத் தோன்றலாகிய உதயணமன்னன் நல்ல நெற்றியையுடைய அப்பதுமாபதியை அத்திருமண வேள்விச் செந்தீமுன்னிலையிலே அமர்த்தி மறை விதி முறைமையில் பிறழாமல் சிறப்புடைய அவ்வேள்வியின்கண் செய்தற்குரிய சடங்குகளை யெல்லாம் பேணிச் செய்து

முடித்துச் செம்பொன்னுலியன்ற பட்டத்தினைப் பசிய தொடியை யுடைய அப்பதுமாபதியினது திங்கள் போன்ற திருமுகம் பின்னரும் ஒளி பெறும்படி சூட்டி அழகிய மணிகளால் அணி செய்யப்பட்ட அத்திருமணப் பந்தலிலே செய்தற்குரிய ஏனைய அழகிய சடங்குகளையும் செய்து முடித்து; என்க.

(வி - ம்.) ஏதமில் காட்சி - குற்றமற்ற நற்காட்சி. மாதரை : பதுமாபதியை. கடிநாட்சந்தி என மாறுக. முன்முதல் - முன்னிடத்தே. வேள்வி - மணவேள்வி. ஒழுக்கியல் - கரணவகைகள், பட்டம் சூட்டுதல் ஒரு சடங்கு என்க.

(இதுவுமது)

௨௭௮ - ௨௮௫ : ஒருமை.........முடித்தென்

(பொ - ரை.) நெஞ்சொருமையுற்று இருவரும் அறம் ஒன்றனையே விரும்புதற்குக் காரணமான ஒழுக்கத்தோடு தொழில் வல்லவர் இயற்றிய வண்ணங்களையுடைய தொழிற் சிறப்புடைய பல்வேறு நிறமுடைய பட்டினையுடைய பருத்துத்திரண்ட அழகிய மணிகள் பதித்த கால்களோடே பொலிவுற்ற கட்டிலின் கண் அத்திருமணநாளின்கண் செல்வமிக்க குடிப்பிறந்த காவிதிப் பட்டம் பெற்ற மகளிர் முறைமையில் பிறழாமல் மலர் முதலியவற்றைப் பரப்பிவைத்து வணங்காநிற்ப அவ்வுதயணகுமரன் பட்டம் கட்டப்பெற்ற சிறிய நுதலையுடைய அப்பதுமாபதி நங்கையோடு தான் கருதிவந்த காரியத்தை முடித்தவனாய் அக்கட்டிலின் கண் ஏறினன் என்க.

(வி - ம்.) அன்பாலே தலைவன் தலைவியர் இருவரும் ஒருமையுற்று இயற்றும் இன்ப வாழ்க்கைக்குப் பொருந்தியதும் அறத்தையே விரும்பும் ஒழுக்கத்தையும் உடைய காவிதிமாக்கள் என்க. காவிதிமாக்கள். காவிதிப்பட்டம் பெற்ற மகளிர். படுத்தனர் - மலர் முதலியவற்றைப் பரப்பினர்.

௨௨. பதுமாபதி வதுவை முற்றிற்று.

உரு. படையெழுச்சி

இதன்கண் : பதுமாபதியைத் திருமணம் செய்துகொண்ட பின்னர் உதயணன் நிலைமையும், தருசகன் நினைதலும், தருசகன் உதயணனுடன் தன் அமைச்சரையும் படைகளையும் விடுதலும், தருசகன் கூறுதலும் அப்படையோடு உதயணன் தன்னகரத் திற்குப் போதலும் கூறப்படும்.

கட்டி லேறிய காவல் வேந்தன்
ஒட்டிய நண்பி னுருமண் ணுவாவினை
விடுத்தல் வேண்டும் வல்லே விரைந்தெனத்
தடுத்த பெரும்புகழ்த் தருசகற் குணர்த்தித்
தெய்வமும் விழையு மைதவழ் கோயிலுள்
ஆடல் கண்டும் பாடல் கேட்டும்
மிசையுல கெய்திய வசைவி லாக்கத்
தண்ண னெடுமுடி யமரிறை போலப்
பண்ணொலி யரவத் துண்மகிழ் வெய்திக்
கழுமிய காதலொடு கவவுக் கைவிடா
தொழுகுங் காலை நிகழ்பொருள் கூறுவேன்
தம்முறு கருமந் தாஞ்சேர்ந் ததுவெனப்
பின்னிது முடித்தல் பெருமை யன்றால்
முன்னுப காரத்து நன்ன ராற்றிய
நட்பு மன்றி நம்மொடு கலந்த
சுற்ற மாதலிற் சுடர்ப்பூ ணுதயணன்
அற்ற மெல்லா மறிந்தன மாகிக்
கொற்றநன் றொடு கொண்டனங் கொடுத்தல்
கடனமக் கதுவென விடனுறு சூழ்ச்சியன்
தாமே சென்று தம்வினை முடிக்கும்
மாமாத் தியருண் மதிமீக் கூறிய
பகைப்புலந் தேய்க்கும் படைத்திறற் றடக்கை
வகைப்பொலி மான்றேர் வருட காரனும்
வீர வென்றி விறல்வேந் துப்பிற்
றூரணி மார்பிற் றூர காரியும்
செருமிகு சேனைச் செய்தொழி னவின்ற

பொருமா ணூக்கத்துத் தரும தத்தனும்
பத்திப் பைம்பூட் சத்திய காயனொடு
வேல்வருந் தானை நால்வரு முதலா
இருநா றானையு மிராயிரங் குதிரையும்
அறுநூற் றிரட்டி யடன்மணித் தேரும்
அறுபதி னாயிர ரேறிபடை மள்ளரும்
திருமணிச் சிவிகையும் பொருவினைப் படாகையும்
செங்காற் பாண்டிய நன்று பூண்ட
பைம்பொ னூர்தியும் பவழக் கட்டிலும்
படாஅக் கோட்டிலும் பண்டிபண் டாரமும்
கடாஅக் களியானைக் காவலற் கியைந்த
பணைத்தோட் சிலசோற் பதுமா நங்கைக்
கமைக்கப் பட்ட வகன்பரி யாளமும்
அன்னவை யெல்லா மந்நிலை நல்கி
மன்ன குமரனொடு செல்கெனச் செப்பாச்
செயற்படு கரும மெல்லா மற்றவற்
கியற்பட வீவலென் றமைச்சரோடு கிளந்து
வேறுவே றுகத் தேறக் காட்டி
நினக்கே யவனை நிறுத்துதல் கடனென
அவர்க்கே யவர்க்கே யருளுரை யளைஇ
வடுத்தொழி லகன்ற வருட கார
உடற்றுநர்க் கடந்த வுதயண குமரன்
அடைக்கல நினக்கென வவன்வயிற் கையடுத்
தோம்படைக் கிளவி பாங்குறப் பயிற்றி
நிலைமை யறிய நீட்ட மின்றி
மறைபுறப் படாமை மனத்தே யடக்கி
ஒற்றொற் றியவரை யோற்றி னாய்ந்து
முன்னங் கொள்ளு முபாய முயற்சியோடு
நாவாய் தொகுத்து நளிபுனற் பேரியாற்
றார்மடி கங்கு னீர்நெறி போகி
மலையர ணடுங்க நிலையர ணடுங்க
ஒற்றி னாய முபாயத் தானும்
ஆற்றல் சான்ற வாருணி தொலைச்சிக்
கோற்றொழிற் கொற்றங் கொடுத்துநீர் பெயர்மினென்

றேற்றுரி முரசி னிறைமகன் பணித்த
மாற்ற மெல்லா மனத்தகம் புகற்றக்
கூற்றிய றகையர் கோற்ற மாகென
ஓங்கிய தோற்றத் துதயணற் றழீஇச்
௩௫ செழுங்கோ சம்பிச் செம்முக முன்னி
எழுந்தது மாதோ பெரும்படை யிருளென்.

௨௩. படையெழுச்சி முற்றிற்று.

உரை

௨௩. படையெழுச்சி

அஃதாவது: உதயணன் தலைநகரமாகிய கோசம்பியைக் கைப்பற்றிக்கொண்ட ஆருணியரசனை வென்று மீண்டும் அந் நகரத்தைக் கைப்பற்றுதற்குப் படைகளோடு எழுந்த செய்தியைக் கூறும்பகுதி என்றவாறு.

(உதயணன் செயல்)

க - கக: கட்டில்........கூறுவேன்

(பொ - ரை.) இவ்வாறு பதுமாபதியை மணந்து கொண்டு கட்டிலேறிய காவலனாகிய உதயணன், பெரும்புகழ் பிறரிடம் செல்லாவண்ணம் தடுத்துத் தனதாக்கிக்கொண்ட தருசக மன்னனை நோக்கி, "வேந்தே! நம் உள்ளத்தோடு ஒட்டிய நண்பினையுடைய உருமண்ணுவாவை மிக விரைந்து பகைவரிடத் தினின்றும் விடுவித்தல் வேண்டும்" என்று அறிவுறுத்திப் பின்னர்த் தெய்வங்களும் விரும்புவதற்குக் காரணமான முகில்கள் தவழாநின்ற அரண்மனையினுள்ளே கூத்தாடுதலைக் கண்டும், பாடுதலைக்கேட்டும் மேனிலையுலகத்தையடைந்த தளராத ஊக்கத்தையுடைய தலைவனாகிய நீண்ட முடியையுடைய தேவேந்திரனைப்போலப் பண்பாடும் ஒலியினாலே நெஞ்சு மகிழ்ந்து தன் காதலியாகிய பதுமாபதியின்பால் நிறைந்த காதலுடையனும் அவளைத் தழுவிய கைநெகிழாதவனாய், ஒழுகாநின்ற காலத்தில் நிகழ்ந்த காரியங்களை யான் இனிக் கூறுவேன் கேண்மின்; என்க.

(வி - ம்.) காவல் வேந்தன் : உதயணன். வல்லே விரைந்து - மிகவும் விரைந்து. தடுத்த பெரும்புகழ்த் தருசகன் - பெரிய புகழ்

பிறரிடத்துச் செல்லாமல் தன்பாலே தடுத்து நிறுத்திக்கொண்ட தருசகன். ஆடல் - கூத்தாட்டம். மிசையுலகு - தேவருலகு. அமரிறை - அமரர்இறை; தேவேந்திரன். கழுமிய - நிறைந்த. கவவுக்கை - அணைத்தகை. 'நிகழ் பொருள் கூறுவேன்' என்றது நூலாசிரியர் நம்மனோர்க்கு அறிவித்த படியாம்.

(தருசகன் எண்ணுதல்)

௧௨ - ௧௯ : தம்முறு.........சூழ்ச்சியென்

(பொ - ரை.) தருசக மன்னன் தன் பேரமைச்சர்களை நோக்கி, "பெரியீர்! நமக்கு இன்றியமையாத காரியம் நாம் முயலாது வைத்தும் தானே முடிந்தது. இதனால் நாம் மகிழ்ச்சியுற்று வாளாவிருத்தல் தகுதியன்று; உதயண மன்னன் நாம் செய்யாமல் தானே முற்பட்டு நமக்குச்செய்த உபகாரமாகிய நன்றியையே யன்றி அவன் நம்மொடு கொண்டுள்ள நட்பேயுமன்றி நம்மொடு நெருங்கிய உறவினனும் ஆகிவிட்டான். மேலும், அம்மன்னனுக்கு உள்ள சோர்வுகளெல்லாம் அறிந்துகொண்ட நமக்கு அவனுடைய வெற்றியுடைய நல்ல நாட்டினை அவன் பகைவன் பானின்றும், மீட்டு அப்பெருமகன்பால் கொடுப்பது நமக்குத் தீராக் கடமையாகும். இக் கடமையை ஆற்றவும் காலம் போக்கிச் செய்தல் நமக்குப் பெருமையாகாது" என்று விரிந்த ஆராய்ச்சியையுடையனாய்; என்க.

(வி - ம்.) முன்னுபகாரம் என்றது உதயணன் சங்க மன்னரை வென்றதனை. நன்னர் - நன்றி. நம்மொடு கலந்த சுற்றம் என்றது உதயணன் தனக்கு மைத்துனனாகியதனை. அற்றம் - சோர்வு. பகைவர்பால் நாடுகொண்டு கொடுத்தல் கடன். இடனுறு சூழ்ச்சி - விரிந்த ஆராய்ச்சி.

(தருசகன் உதயணனுடன் அமைச்சர் முதலியோரை விடுத்தல்)

௨0 - ௨௯ : தாமே.......முதலா

(பொ - ரை.) அரசன் ஏவாமல் தாமே சென்று தமக்குரிய கடமைகளைச் செய்துமுடிக்கும் அமைச்சர்களுள் வைத்து அறிவினாற் புகழப்பட்ட தன் பகைவரை அழிக்கும் படை வலிமையையுடைய பெரிய கையினையும் பல்வகையானும் பொலிவுற்ற குதிரை பூட்டிய தேரையும் உடையவனாகிய 'வருடகாரன்' என்னும் அமைச்சனும் தன் வீரத்தாலே எய்திய வெற்றியினையும் அவ்வெற்றிக்குத்தக்க வெவ்விய வலியினையும் வாகைமாலை யணியப்பட்ட மார்பினையுமுடைய 'தாரகாரி' என்னும் அமைச்சனும், போரின்கண் மிக்குச் செல்லும் படைகளையும் போர்செய்யுந் தொழிற் பயிற்சியையும் போர்செய்த வன்கண் மாட்சிமையுடைய ஊக்கத்தினையும் உடைய 'தருமதத்தன்' என்னும் அமைச்சனும்

விரலாகப் பசிய வீரக்கழல்கட்டிய 'சத்தியகாயன்' என்னும் அமைச்சனும் ஆகிய வேலோடு வருகின்ற படைகளையுடைய இந்நால் வரையும் தலைமையாகக்கொண்டு; என்க.

(வி - ம்.) மாமாத்தியர் - பேரமைச்சர். பகைப்புலம் - பகைவர். மான்றேர் - குதிரை பூட்டிய தேர். நவின்ற - பயின்ற. பத்திப்பைம் பூண் - விரல்படக் கட்டிய பசிய வீரக்கழல். வேலோடு வருந் தானை என்க. முதலா - முதல்வராக.

(இதுவுமது)

கூ0 - சா0 : இருநூறு......... நல்கி

(பொ - ரை.) இருநூறு யானைகளையும், இரண்டாயிரங் குதிரைகளையும் ஆயிரத்திருநூறு வெற்றியுடைய மணிகட்டப் பட்ட தேர்களையும் அறுபதினாயிரராகிய கொல்லும் படையேந்திய காலாள் மறவர்களையும், அழகிய மணிபதித்த சிவிகைகளையும், போர்த் தொழிலில் உயர்த்தும் கொடிகளையும், சிவந்த கால்களை யுடைய எருதுகளை நன்குகப்பூட்டிய பசிய பொன்னாலியன்ற ஊர்தி களையும், பவழக் கட்டிலையும், கூடாரங்களையும், பண்டி பண்டாரங் களையும் மதக்களிப்பையுடைய யானையையுடைய உதயண மன்ன னுக்கு வேண்டியனவும் பணைத்த தோளையும் சிலவாகிய சொற் களையுமுடைய பதுமாபதி நங்கைக் கென்றமைக்கப்பட்டனவும் ஆகிய பரிவாரங்களையும், இவைபோன்ற பிற பொருள்களையும் அப்பொழுதே வழங்கி; என்க.

(வி- ம்.) இராயிரம் - இரண்டாயிரம். அறுநூற்றிரட்டி - ஆயி ரத்திருநூறு. பொருவினைப்படாகை - போர்த் தொழிலில் உயர்த்துங் கொடி. பாண்டியம் - எருது. படாஅக்கொட்டில் - கூடாரம். படாம்- ஆடை. பண்டி - வண்டி. பண்டாரம் - பல்வேறு பண்டத் தொகுதி. காவலன் : உதயணன். காவலர்க்கு இயைந்தனவும் நங்கைக்கு அமைக் கப்பட்டனவுமாகிய பரியாளம் என்க. பரியாளம் - பரிவாரம்.

(இதுவுமது)

சக - சரு : மன்ன.........கட்டுனை

(பொ - ரை.) நீவிரெல்லாம் இறைமகனாகிய இவ்வுதயண னோடு செல்வீராக! என்று சொல்லி, "அவ்வுதயணனுக்கு யான் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் யான் இயல்பாகவே செய்வேன்" என்று அவ்வமைச்சருக்குக்கூறி அவ்வமைச்சர்களைத் தனித்தனியே கண்டு அவர் தெளியும்படி கூறிக் காட்டி, அவ் வுதயணனை மீண்டும் நிலைநிறுத்துதல் நினக்கே கடன் என்று ஒவ்வொருவருக்குந் தனித்தனியே கூறி; என்க.

(வி - ம்.) மன்ன குமரன் : உதயணன். செயல்படுதற்குரிய கருமம் என்க. கிளந்து - சொல்லி.

(தருசகன் கூற்று)

௪௯ - ௫௨: அவர்க்கே.........அடக்கி

(பொ - ரை.) ஒவ்வோர் அமைச்சர்க்கும் அருளுரை வழங்கி அவருள்ளும் பழித்தொழி லில்லாத வருடகாரனை நோக்கி, "அன்பனே! தன் பகைவரையெல்லாம் வென்று கடந்த உதயண குமரன் நினக்கே அடைக்கலங்காண்!" என்று அவ்வருடகாரன் கையில் ஒப்புவித்து ஓம்படைக்கிளவியும் அழகுறப் பலகாலும் சொல்லிப் பின்னரும், அந்நால்வரையும் ஒருங்கேவைத்து "அன்புடையீர்! பகையரசனின் நிலைமையை அறியும்பொருட்டுக் காலந்தாழ்த்திருத்தலன்றியும், நம்முடைய மறைச் செய்திகள் வெளிப்படாதபடி மனத்தின்கண் அடக்கி வைத்துக்கொண்டு; என்க.

(வி - ம்.) அவர்க்கே அவர்க்கே - அவ்வவ்வமைச்சர்க்கு. உடற்றுனர் - பகைவர். அவன் வயின் - அவ்வருடகாரன் கையில். ஓம்படைக் கிளவி - பாதுகாப்புச் சொல். நிலைமை - பகைவன் நிலைமை.

(இதுவுமது)

௫௩ - ௬௧: ஒற்று.........பணித்த

(பொ - ரை.) மேலும் பகைவன்பாற் சென்று ஒற்றவேண்டிய செய்திகளை உணர்ந்துவந்த ஒற்றர்களை வேறு ஒற்றர்களாலே ஆராய்ந்துகொண்டு குறிப்பறிந்து கொள்ளுகின்ற தந்திரமுள்ள முயற்சியாலே, ஓடங்களைத் தொகுத்துக்கொண்டு செறிந்த நீரையுடைய பேரியாற்று நீர்வழியே ஊரிலுள்ள மாந்தர் துயிலுகின்ற நள்ளிரவிலே பிறர் அறியாமற் சென்று, பகையரசருடைய மலையரணும், மதிலரணும் நிலைகுலைந்து நடுங்கும்படி போர்செய்து, ஒற்றுக் கேள்வியினாலும், உபாயத்தினாலும், ஆற்றல் நிரம்பிய நம் பகையரசனாகிய ஆருணியைக் கொன்று வீழ்த்திச் செங்கோன்மையுடைய தொழிலையுடைய அரசுரிமையை உதயணனுக்குக் கொடுத்து நீயிர் மீண்டு வாருங்கோள்;" என்று ஆனேற்றின் தோல்போர்த்த வெற்றி முரசினையுடைய இறைமகனாகிய அத்தருசக மன்னன் தமக்குக் கட்டளையிட்ட; என்க.

(வி - ம்.) ஒற்றொற் றியவரை ஒற்றினுய்ந்து - பகைப் புலத்துச் சென்று அவர் உணராமல் ஒற்ற வேண்டிய செய்திகளை உணர்ந்து வந்த ஒற்றர்களை வேறு ஒற்றர்களாலே ஆராய்ந்து என்க. "ஒற்றர் தங்களை ஒற்றரி னுய்தலும்" (சீவக : ௧௧௨௧) "ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோ, ரொற்றினு லொற்றிக் கொளல்," "ஒற்றொற் றுணராமை யாள்க, உடன் மூவர், சொற்றொக்க தேறப் படும்" என வரும் பிற சான்றோர் கூற்றும் உணர்க. (திருக்குறள். ௫௮௮-௯.) உபாய முயற்சியொடு - தந்திரமுள்ள முயற்சியால். ஊர்மடிகங்குல்- ஊரிலுள்ள மக்கள் எல்லாம் உறங்கும் இரவில், "மன்பதை யெல்லா

மடிந்த விருங்கங்குல்'' (கலி. ௬௫ : ௩) ''ஊர்மடிகங்குல்'' சிலப் ௧௯: ௨0௭ ;. யாற்றின் நீர்வழியே போய் என்க. ஆருணி தொலைச்சி-பாஞ்சால ராயனைக் கொன்று ; தொலைச்சுதல் - தோல்வியடையச் செய்தலுமாம். கோற்றொழில் - செங்கோல் செலுத்தும் தொழில். கொற்றம்-அரசுரிமை. இறைமகன் : தருசகன்.

(படை எழுதல்)

௬௨ - ௬௬ : மாற்றம்.........இருளென்

(பொ - ரை.) மன்னன் மொழிகள் எல்லாம் அங்ஙனமே செய்ய வேண்டுமென்று தம் மனத்தை விரும்புவிக்கக் கூற்றுவனையொத்த அவ்வமைச்சர் ''பெருமானுக்கு வெற்றியுண்டாகுக" என்று கூறுமிற்றலாலே உயர்ந்த தோற்றத்தையுடைய உதயணனைச் சூழ்ந்து கொண்டு அம்மகத நாட்டுப் பெரும்படை செழிப்புடைய கோசம்பி நகரத்திற்கு நேர் முகமாக நோக்கி நள்ளிரவிலே எழுந்து சென்றது; என்க.

(வி - ம்.) புகற்ற - விரும்புவிக்க. கூற்றியல் தகையர் - அரசன் கூறியவற்றிலே மனமும் செவியும் சென்ற தன்மையுடையர் என்றுமாம். தழீஇ - சூழ்ந்து கொண்டு.

௨௩. படையெழுச்சி முற்றிற்று.

உச. மேல்வீழ் வலித்தது

இதன்கண் : உதயணனுக்குத் தருசகன் விடை கொடுத்தலும், உதயணன் தருசகன்பாற் கூறுதலும், உதயணன் செயலும், தம்பியருடைய வரவை வயந்தகன் கூறலும், அது கேட்ட உதயணன் செயலும், படைகள் வருதலும், தம்பியர் உதயணனை வணங்கிப் புலம்பிக் கூறுதலும், உதயணன் தம்பியரைத் தழுவிக் கூறுதலும், உதயணன் அமைச்சர்களுடன் ஆராய்தலும், வருடகாரன் கூறுதலும், பட்டத் தேவியின் கலக்கமும், குற்றேவல் மகளிரின் துயரமும், நகரத்தார் மகிழ்ச்சியும் கூறப்படும்.

இருளிடை யெழுந்த விகலடு பெரும்படை
அருளுடை வேந்தன் வழிதொடர்ந் தொழியான்
வான்றோய் பெரும்புகழ் வத்தவ ரிறைவற்குத்
தேன்றோய்த் தன்ன திருமொழி யளைஇ
இடையற வில்லா வின்பமோ டுயர்ந்த
நன்குடைக் கேள்விமுத னின்கட் டோன்றிய
கலக்கமி னிலைமையுங் கைம்மா றில்லதோர்
கிளைப்பெருந் தொடர்ச்சியும் பயந்தவின் றெமக்கென
அற்புத்தளைக் கிளவி பற்பல பயிற்றிப்
பீடுகெழு தானைப் பிரச்சோ தனற்குக்
கூடிய கிளைமைக் குணம்பல கூறி
ஓடுகா லிளையரை யோலையோடு போக்கின்
நாடுவ தல்ல தவனு நம்மோடு
தீது வேண்டா நிலைமைய னாகும்
மலைத்தலைத் தொடுத்த மல்லற் பேரியாற்றுத்
தலைப்பெயன் மாரியிற் றவிர்த லின்றி
நிலைக்களந் தோறுங் கொலைப்படை விடுத்தபின்
யானும் வேண்டின் வருகுவ னேனைச்
சேணில மன்னர் கேண்மை யுடையோர்க்
கறியப் போக்கி னவர்களும் வருவர்
செறியச் செய்த குறியினி ராமின்
நிலம்படக் கிடந்தநின் னேமியந் தடக்கை

வலம்படு வினைய வாகெனப் பல்லூழ்
பொய்யா வாய்ப்புண் மெய்பெறக் கிளந்து
திருவள ரகல மிருவருந் தழீஇப்
பிரிய லுற்ற தரிசகற் குரைக்கும்
இருமண மெய்திய வின்ப மெல்லாம்
உருமண் ணுவாவினை யுற்றதற் பின்னை
ஐம்மூந் நாளி னவனைச் சிறைவிடுத்
தெம்முன் னாகத் தருதனின் கடனென
அமைச்சன் பெருமையு மரசன தார்வமும்
மனத்தி னுவந்து மகதவர் கோமான்
அதுவோருப் பட்டாங் ககன்ற பின்னர்
உதயண குமர னுரிமை தழீஇ
அடற்பே ரியானையு மலங்குமயிர்ப் புரவியும்
படைக்கூழ்ப் பண்டியும் பள்ளி வையமும்
நடைத்தே ரொழுக்கு நற்கோட் டூர்தியும்
இடைப்படப் பிறவு மியைந்தகம் பெய்து
கோடிப்படை போக்கிப் படிப்படை நிறீஇப்
புடைப்படை புணர்த்துப் புள்ளிற் போகி
மள்ளரோடு புணர்ந்த மாண்பிற் றாகிக்
கள்ளரோடு புணர்ந்த கட்டரண் குறுகிப்
போர்மேற் கொண்ட புகற்சியன் புரவலன்
ஆர்மேற் போங்கோ லஞ்சுதக வுடைத்தெனச்
சேனை மன்னர் சிந்தையுட் டேம்ப
வலிப்பது தெரிய வோலித்துடன் குழீஇ
விட்டன னிருந்த காலை யோட்டிய
எழுச்சி வேண்டி யூகி விட்ட
அருமறை யோலை யாய்ந்தன னடக்கி
வரிமலர்ப் படலை வயந்தக னுரைக்கும்
பின்னிணைக் குமரர் பிங்கல கடகர்
இன்னாக் காலை யெள்ளி வந்த
பருமயானைப் பாஞ்சால ராயன்
அருமுர ணழிய நூறலி னவனமர்க்
காற்றா ருடைந்து நோற்றோ ரொடுங்கும்
குளிர்நீர் யமுனைக் குண்டுகயம் பாய

வளியியற் புரவி வழிச்செல விட்டவர்
பொன்னியற் புரிசையோர் பெண்ணுறை பூமி
அவணெதிர்ப் பட்டாஅங் கிவணகம் விரும்பா
தீரறு திங்க ளிருந்த பின்றை
ஆரா ணகர மாண்டன னெழுகும்
ஆருணி யரசன் வார்பிணி முரசம்
நிலனுட னதிர நெருப்பிற் காய்ந்து
தலமுதற் கெடுநோய் தரித்த லாற்றூர்
போந்தனர் போலும் புரவல மற்றுநம்
ஓங்கிய பெருங்குல முயர்தற் குரித்தென்
றூங்கவ னுரைப்ப வமர்படக் கடந்த
தடக்கை கூட்டித் தாங்கா வுவகையொடு
படைப்பெரு வேந்தன் பல்லூழ் புல்லி
இருவயி னுலக மியையப் பெற்ற
பெருமகன் போல வுவகையுட் கெழுமிப்
பொருமுர ணண்ணல் புகன்ற பொழுதிற்
பாடுபெறு சிறப்பிற் பைந்தார் மன்னன்
சேடபடு வத்தஞ் சேர்வது பொருளென
அறியக் கூறிய குறிவயிற் றிரியார்
முன்னீ ராயினு முகந்துடன் புகுவோர்
பன்னீ ராயிரம் படைத்தொழி லிளையரொ
டற்றக் காலைக் கமைக்கப் பட்ட
கொற்றத் தானையுங் குழுஉக்கொண் டீண்டத்
தப்பிலு ரென்ற தம்பியர் வந்தவன்
பொற்கழற் சேவடி பொருந்தப் புல்லி
ஓர்த்தனந் தேறி யுறுதிநோக் காது
சேர்த்தியில் செய்கையொடு சிறைகொளப் பட்டுப்
பெருங்குடி யாக்கம் பீடற வெருளி
அருங்கடம் பூண்ட வவியாக் காதலொடு
பயந்தினி தெடுத்த படைப்பருங் கற்பினம்
கொற்ற விறைவிக்குக் குற்றேல் பிழையா
தொருங்கியா முறைத லொழிந்தது மன்றி
இருங்கடல் வரைப்பி னினியோ ரெடுத்த
இறைமீக் கூறிய விராமன் றம்பி

மறுவோடு பெயரிய மதலைக் கியைந்த
ஆணுப் பெரும்புகழ் யாமு மெய்தத்
தேனூர் தாமரைத் திருந்துமலர்ச் சேவடி
வழிபா டாற்றலும் வன்கணி னீத்தனெம்
கழிபெருஞ் சிறப்பிற் காவல் வேந்தே
இம்மை யென்ப தெமக்குநெறி யின்மையின்
முன்னர்ப் பிறப்பின் மூத்தோர்ப் பிழையா
துடன்வழிப் படூஉ முறுதவ மில்லாக்
கடுவினை யாளரேம் யாமெனக் கலங்கிப்
பொள்ளெனச் சென்னி பூமி தோய
உள்ளழல் வெம்பனி யுகுத்தரு கண்ணீர்த்
துன்பமோ டிறைஞ்சிய தம்பியர்த் தழீஇ
இருபான் மருங்கினுந் திரிதருங் கண்ணின்
அழறிரண் டன்ன வாலி சோர்ந்தவர்
குழறிரண் டணவருங் கோல வெருத்திற்
பல்லூழ் தெறித்தெழப் புல்லி மற்றுநம்
அல்லல் காண்பதற் கமைச்சுவழி யோடாப்
புல்லறி வாளனேன் செய்தது நினைஇக்
கவற்சி வேண்டா காளைக ளினியென
அகத்துநின் றெழுதரு மன்பிற் பின்னிக்
குளிர்நீர் நெடுங்கடற் கொண்ட வமிழ்தென
அளிநீர்க் கட்டுரை யயனின் றேர்க்கும்
உள்ளம் பிணிப்ப வொன்ற வுரைத்தினி
எள்ளு மாந்த ரெரிவாய்ப் பட்ட
பன்னற் பஞ்சி யன்ன ராகென
வெகுளித் தீயிற் கிளையறச் சுடுதல்
முடிந்த திங்கிலை முடிந்தன ரவரெனச்
செப்பிய மாற்றம் பொய்ப்ப தன்றாற்
பொரக்குறை யிலமென விரப்ப வின்புற்
றிளையோர் தம்மோ டொன்றவட் கிரங்கிக்
கனைக ழுகிய காதலந் தோழனை
வளையெரிப் பட்ட தெளிபே ரன்பிற்
றளையவிழ் கோதையொடு தருதலும் பொருளோ
நும்மைத் தந்தென் புன்மை நீக்கிய

உம்மைச் செய்த செம்மைத் தவத்தனெனத்
தம்பியர் தாமரைத் தடங்கண் சொரியும்
வெம்பனி துடைத்துப் பண்புளி பேணிக்
கண்ணுற வெய்திய கருமம் போல
மண்ணுறு செல்வ நண்ணு நமக்கென
அன்னவை கிளந்த பின்னர்த் தன்னே
டொன்றுற் கொள்ளு முபாய நாடி
வருட காரனே டிடவகற் றழீஇ
அளப்பருங் கடுந்திற லாருணி யாருயிர்
கோளப்படு முறைமை கூறுமி னெமக்கென
வருட காரன் வணங்கினன் கூறும்
இருளிடை மருங்கின் விரைவன ரோடி
அற்ற மிதுவென வோற்றர் காட்டிய
நீணிலை நெடுமதி லேணி சாத்தி
உள்ளகம் புக்கு நள்ளிரு ணடுநாள்
முதுநீர்ப் பௌவங் கதுமெனக் கலங்கக்
கால்வீழ் வதுபோன் மேல்வீழ் மாத்திரம்
விள்ளாப் படையொடு வேறுநீ யிருப்பக்
கொள்ளா வேந்தனைக் கோயிலொடு முற்றிச்
சேவக நிலைஇக் காவ ரேறும்
ஆறீ ராயிர மறியப் பட்ட
வீரரை விடுத்துப் போர்செயப் போக்கித்
துயிலும் பொழுதிற் றுளங்கக் குப்புற்
றயிலுறு வெம்படை யழல வீசிக்
கதுவா யெஃகமொடு கடைமுத ரேறும்
பதுவாய்க் காப்புறு படைத்தொழி லிளையரைப்
பாய லகத்தே சாய நூறி
மாவும் வேழமு மாமணித் தேரும்
தானைக் கோட்டிலோ டாணக் காப்பமைத்
தோன்றார்க் கடந்த வுதயணன் வாழ்கென
இன்னுச் செய்தேம் மெழினகர் வௌவிய
குடிப்பகை யாள ரடைத்தகத் திராது
பேண்பாற் பேரணி நீக்கித் திண்பாற்
போரொடு மொன்றிற் போதுமின் விரைந்தெனக்

காரொலி முழக்கிற் கடுத்தன மார்ப்பக்
கதுமென நிகழ்ந்த கலக்கமொடு கல்லென
மதிதவழ் புரிசை வளநகர் கலங்கப்
பெருமழை நடுவ ணிருளிடை யெழுந்ததோர்
கடுவன் போலக் காவல னுரறி
மகிழ்ச்சி யெய்தி மாற்றே ரில்லெனும்
இகழ்ச்சி யேதந் தலைத்தந்தேனக் கின்றெனக்
கவலை கூராக் கலங்கின னெழவும்
எழுந்த மன்னன் செழும்பூ ணகலத்
தீர்நறுஞ் சாந்தத் தாரொடு குழையப்
பரத்தையர்த் தோய்ந்தநின் பருவரை யகலம்
திருத்தகைத் தன்றாற் றீண்டுத லெமக்கெனப்
புலவியி னடுங்கிப் பூப்புரை நெடுங்கண்
தலையளிச் செவ்வியி னமர்ப்பன விமைப்ப
ஆற்றா வனந்தரோ டசைந்த வின்றுயிற்
கூற்றாப் பிசைப்பிதென் னென்றனள் வெரீஇ
விசைப்புள் வெங்குர லிசைப்பக் கேட்ட
நாகப் பேதும்பையி னடுங்கி யாகத்
துத்தியுந் தொடரு முத்தொடு புரள
ஒளிக்கா சொருபாற் றேன்றத் துயிற்பதத்
தசைந்த வந்துகில் கையகத் தசைய
நெகிழ்ந்த நீரிற் கண்கை யாக
முகிழ்ந்த முலைமுதன் முற்றத் தியைந்த
தருப்பை போற்கோடி யாக விரக்கமோ
டோருயிர்க் கணவற்கு நீருகுப் பனள்போல்
முகங்கோள் காரிகை மயங்கல் கூராச்
சீரலங் காரச் சித்திர முடிமிசைத்
தாரணி கோதை தாழ்ந்துபுறத் தசைய
உற்றதை யறியா டேற்றென விரங்கி
ஆவி வெய்துயிர்ப் பளைஇயக முளைவனள்
தேவி திருமகன் றனை பற்றி
ஆகுலப் பூசலி னஞ்சுவன ளெழவும்
அருமணி திகழு மாய்பொன் மாடத்துத்
திருமணிக் கட்டிற் பாகத் தசைந்த

உழைக்கல மகளி ருள்ளழ லூர்தரக்
குழைக்கணி கொண்ட கோல வாண்முகத்
தரிபரந் தலமரு மச்சுறு கண்ணினர்
வெருவுறு பிணையின் விம்மாந் தேழாஅப்
பட்டதை யறியார் பகைப்புல வேந்தன்
கெட்டகன் றனனுன் மற்றி தென்னெனக்
கோயின் மகளி ராகுலப் பூசலொடு
வாயிலுந் தகைப்பு மறியார் மயங்கவும்
நகர மெல்லா முழுவது மறிந்து
திருவார் மார்பினெம் பெருமா னுதயணன்
கூற்றிடம் புக்கு மீட்டும் வந்தனன்
நம்பொருட் டாக நகர முற்றனன்
அமைச்சருந் தானு மமைத்த கருமம்
முடித்தன னாகலின் முற்றவ முடையம்
அன்றியீன் வாரா னாதலி னெங்கோன்
வென்றி யெய்துதல் வேண்டுது நாமென
வெருப்பறை கொட்டி யுருத்துவந் தீண்டி
நமக்குப்படை யாகி மிகப்புகுந்தேற்றவும்
இன்னே ரனையன வின்னா வெய்துற
ஒன்னா மன்னனை யுயிருடன் பருகுதும்
இங்கிலை யருளென வெண்ணின னுரைப்ப
அங்கிலை நோக்கி மன்னனு முவந்து
பொருத்த முடைத்தென வொருப்பா டெய்திப்
புள்ளு மில்லா வொள்ளொளி யிருக்கையுள்
மறைபுறப் படாஅச் செறிவின ராகி
உளைப்பொலி மான்றே ருதயண னொடு
வலித்தனர் மாதோ வளைத்தனர் கொளவென்.

௨௪. மேல்வீழ் வலித்தது முற்றிற்று.

உரை

௨௪. மேல் வீழ் வலித்தது

அஃதாவது: உதயணன் தன் பகையரசனாகிய ஆருணியின் மேல் போர் செய்யும் வழியை அமைச்சரொடு ஆராய்ந்து தெளிந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணனுக்குத் தருசகன் விடை கொடுத்தல்)

க - கூ: இருளிடை .... பயிற்றி

(பொ - ரை.) இவ்வாறு கள்ளிரவிலே இருளின்கண் எழுந்த போர் வெல்லும் தனது பெரும் படையை அருளுடை வேந்தனாகிய அத்தருசகன், வழிதொடர்ந்து நெடுந்தொலை வந்தும், மீளாய் வானுலகத்தே சென்று பரவும் பெரும்புகழையுடைய வத்தவ மன்னனுக்குத் தேனில் தோய்த்தாற் போன்று தித்திக்கும் அழகிய மொழிகளால் அளவளாவி யான் நின்பாற் பயின்ற இடையறவில்லாத இன்பத்தோடு உயர்ந்த நன்மையுடைய நூற் கேள்விகள் எனக்கு நின்பாலுண்டான கலங்காத நிலைமையினையும் கைம்மாறில்லாததோர் உறவுப் பெருந்தொடர்ச்சியையும் இன்று எமக்கு வழங்கின என்று அன்பாலே கேட்போரைப் பிணிக்கும் மொழிகள் பலவற்றைப் பலகாலும் கூறி; என்க.

(வி - ம்.) இகல்-போர். வேந்தன்: தருசகன். நின்பாற் பயின்ற கேள்வி என்க. கேள்வி முதல் - கேள்வியாகிய முதல். கிளைப்பெருந் தொடர்ச்சி - உறவு முறையாகிய பெருந் தொடர்பு. பயிற்றி - பலகாலுஞ் சொல்லி.

(இதுவுமது)

௧௦ - ௧௮: பீடு .... வருகுவன்

(பொ - ரை.) பின்னரும், பெருமை பொருந்திய படைகளையுடைய பிரச்சோதன மன்னனுக்கு நம்முள் பொருந்திய உறவுப் பண்புகள் பலவற்றையும் எடுத்துச் சொல்லி விரைந்து செல்லும் காலையுடைய இளந்தூதுவரை நம்முடைய ஓலையோடு அவன்பால் செலுத்தின் அம்மன்னன்றானும், நம்முடைய ஆக்கத்தையே விரும்புவதல்லாமல் நமக்குத் தீதுண்டாக விரும்பாத தன்மையையுடையன் ஆதல் ஒருதலை. மலையினது உச்சியிற் றொடங்கிக் கடலை நோக்கி ஒழுகும் வளம் பொருந்திய பேரியாற்றின்கண் கார்ப்பருவத்தின் தொடக்கத்தே பெய்யும் மழையினால் பெருகும் வெள்ளம் போன்று, நம் கொலைப் படைகளை யான்

வெற்றி நிலத்தற்குக் காரணமான போர்க்களந்தோறும் தாழா மல் செலுத்திய பின்னர் அப்பிரச்சோதன மன்னனை, யானும் வேண்டிக் கொள்வேனாயின், அவனும் ஒரு தலையாக நமக்கு உதவி செய்ய வருகுவன்; என்க.

(வி - ம்.) பீடு - பெருமை. கிளைமைக் குணம் - உறவுத் தன்மை. இளையர் - இளந்தூதர். நாடுவதல்லது - விரும்புவதல்லாமல். அவனும்: பிரச்சோதனனும். தொடுத்த - தொடங்கிய. தலைப்பெயல் - கார்ப் பருவத் தொடக்கத்தே பெய்யும் மழை. நிலைக்களம் - வெற்றி நிலைத் தற்குக் காரணமான போர்க்களம்.

(இதுவுமது)

க௮ - உ௬ : ஏனை .... உரைக்கும்

(பொ - ரை.) இன்னும் நம்பால் நட்புடைய தூரத்திலுள்ள மன்னர்கட்கும் இச்செய்தியையுணர்த்தத் தூதுவரை விடுவே மாயின், அவர்தாமும் நமக்குத் துணையாக வருவர். இனி நீயும் நம் படைத்தலைவரும் பிறர் அறியாதபடி நுமக்குள் செய்து கொண்ட சங்கேத மொழிகளையுடையீராக ஆகுங்கோள்! இறை மகனே! நிலங்கள் மேன்மேலும் வந்து கூடும்படி நல்லிலக்கணம் கிடந்த நின்னுடைய சக்கரரேகையையுடைய அழகுடைய பெரிய கைகள் வெற்றி தோற்றுவிக்கும் செயலையுடையனவாக! என்று பலகாலும் பொய்யாத நற் சொற்களை மெய்ம்மையோடு கூறி அவ்விரு வேந்தரும் ஒருவரொருவருடைய மார்பின்கட் பொருந்துமாறு ஆர்வத்துடன் தழுவிக்கொண்டு பிரிந்து போகத் தொடங்கிய பொழுது தருசக மன்னனுக்கு உதயணன் கூறு வான்; என்க.

(வி - ம்.) கேண்மையுடையோராகிய சேணில மன்னர் என்க. அவர்களும் துணையாக வருவர் என்க. செறியச் செய்த குறியினிர் ஆமின் - நீயும் அமைச்சரும் பிறருக்குத் தெரியாதபடி செய்து கொண்ட சங்கேதத்தையுடையீராக ஆமின். நிலம்பட - நிலங்கள் மேன்மேலும் கூடும்படி. நேமி - சக்கரரேகை. "சங்க லேகையும் சக்கர லேகையும், அங்கை யுள்ளன வையற்கு" (சூளா. குமார. ௬௫). வலம்படுவினைய - வெற்றியுண்டாகும் செயலையுடையன. வாய்ப்புள் - நற்சொல். அகலம் - மார்பு. இருவரும்: உதயணனும் தருசகனும். உதயணன் தருசகற்குரைக்கும் என்க.

(உதயணன் தருசகன் பாற் கூறுதல்)

உஎ - ௩௩ : இருமணம் .... பின்னர்

(பொ-ரை.) "மைத்துன! யான் பதுமாபதியின் பெரிய மண வாயிலாய் அடைந்த இன்பமெல்லாம் என் அமைச்சனாகிய உரு மண்ணுவாவைப் பகைவர் கையினின்றும் மீட்டுக் கொண்ட பின்

னரே உண்மையான இன்பம் ஆகும்; ஆதலின் இன்னும் பதி னைந்து நாள்களினுள்ளே அவ்வமைச்சனைச் சிறை வீடு செய்து என் முன்னிலையிலே கொணர்ந்து விடுதல் நினது பெருங்கடமை யாகும்" என்று கூறுகிற்ப; அது கேட்ட தருசக மன்னன் உரு மண்ணுவாவினது பெருமையினையும் அவன்பால் உதயணன் கொண்டுள்ள அன்பினையும் அறிந்து தன் நெஞ்சத்தின்கண் பெரிதும் மகிழ்ந்து, "அங்ஙனமே செய்வே"னென்று அச்செய லுக்கு உடன்பட்டுக் கூறி நீங்கிய பின்னர் ; என்க.

(வி - ம்.) இருமணம் - பெரிய மணம். உருமண்ணுவா சிறைப் பட்டிருக்கும் பொழுது யான் எய்தும் இன்பமெல்லாம் இன்பமாக மாட்டா என்று உணர்த்திய படியாம். ஐம்மூந்நாள் - பதினைந்து நாள். அவனை : உருமண்ணுவாவை. அமைச்சன் : உருமண்ணுவா. புரந்தான் கண்ணீர் மல்குதலின் அவ்வமைச்சன் பெருமை தருசக னுக்குப் புலனாயிற்று என்க. அரசன் : உதயணன். கோமான் : தரு சகன். அது - அவ்வேண்டுகோளை.

உதயணன் செயல்

௩௪ - ௪௦ : உதயணன் .... போகி

(பொ - ரை.) உதயணகுமரன் தன் பரிவாரங்கள் சூழும்படி வெற்றியுடைய பெரிய யானைப்படைகளும் அசைகின்ற பிடரிமயி ரையுடைய குதிரைப்படைகளும், படைகளுக்கு வேண்டிய உண வுப் பொருள் ஏற்றிய வண்டிகளும், படை மறவர் உறங்குதற்குரிய வண்டிகளும், இயங்கா நின்ற தேர் நிரலும், நல்ல மருப்புடைய ஊர்தியாகிய யானைகளும் பிறவும் ஆகிய இவற்றை இடை யிடையே நிறுத்தப்பட்ட கொடிப்படையை முற்படச் செலுத்திக் கூலிப் படையைப் பின்னர் நிறுத்திச் சுற்றுப்படைகளைப் பக்கங் களிலே சேர்த்துப் பறவைகளைப் போல விரைந்து செல்லாநிற்ப ; என்க.

(வி - ம்.) உரிமை-பரிவாரம். படைக் கூழ்-படைக்கு வேண்டிய உணவு. பண்டி - வண்டி. பள்ளிவையம் - உறங்குதற்குரிய வண்டி. நிலைத்தேரு முண்மையின் நடைத்தேர் என்றார். கொடிப்படை - முன் படை. படிப்படை - கூலிப்படை. புடைப்படை - சுற்றுப்படை. பறவை போல விரைந்து சென்று என்க.

(இதுவுமது)

௪௧ - ௪௭ : மன்னர் .... காலை

(பொ - ரை.) இங்ஙனமாக எழுந்து சென்ற படை மறவர்க ளோடு கூடிய மாண்புடையதாய் ஆறலை கள்வரோடு கூடிய காவலையுடைய அரண்களை எய்தி அவ்வரண்களிலுள்ள படைகளையுடைய மன்னர்கள், "இவ்வத்தவ வேந்தன் இப்

பொழுது போரை மேற்கொள்ளுதற்குக் காரணமான விருப்பத்தை யுடையவனும் இங்ஙனம் படை கூட்டிச் செல்கின்றான்; இவன் எவ்வரசன் மேலே செல்வனோ? இந்நிகழ்ச்சி நம்மால் பெரிதும் அஞ்சத் தகுந்த தொன்றாக இருக்கின்றது" என்று தம் நெஞ்சினுள்ளே தேம்பாநிற்பவும், தான் துணிந்த செயலைப் பிற மன்னர் தெளிந்து கொள்ளும்படியும் தன்படையுடன் ஆரவாரித்து ஓரிடத்தே கூடி அம்மன்னன் தங்கியிருந்தபொழுது, என்க.

(வி - ம்.) மள்ளர் - மறவர். கள்ளர் - ஆறலை கள்வர். கட்டரண் - காவலையுடைய அரண். புகற்சியன் - விருப்பமுடையன். புரவலன் : உதயணன். சேனைமன்னர் என்றது அங்குள்ள குறுநில மன்னரை. விட்டனன் - படையைத் தங்கவிட்டு.

(தம்பியருடைய வரவை வயந்தகன் கூறல்)

௪௭ - ௫0 : ஒட்டிய .... உரைக்கும்

(பொ - ரை.) தன்னோடு தொடர்புள்ள இப்படையெழுச்சியை விரும்பிய யூகி, விடுத்த அறிதற்கரிய மறையினையுடைய ஓலையை வயந்தகன் ஆராய்ந்துணர்ந்து தன்னுள் அடக்கிக் கொண்டு அழகிய மலர்விரவிய படலை மாலையையுடைய அவ் வயந்தகன் உதயணனுக்குக் கூறுவான்; என்க.

(வி - ம்) ஒட்டிய - தொடர்புடைய. எழுச்சியை விரும்பி என்க. அருமறை - அறிதற்கரிய மறைச்செய்தி. படலை - ஒருவகை மாலை.

(இதுவுமது)

௫௧ - ௬0 : பின்............பின்றை

(பொ - ரை.) 'பெருமானே! நின்னுடைய தம்பியராகிய பிங்கலகடகர் நம்முடைய இன்னாக்காலத்தே நம்மை இகழ்ந்து நமது கொடிக்கோசம்பி நகரைக் கைப்பற்றுதற்கு வந்த ஒப்பனை யுடைய யானையையுடைய பாஞ்சாலராயனாகிய ஆருணியரசன் அரிய தம்முடைய வலிமை கெடும்படி தாக்குதலாலே அவனுடைய போர்க்கு ஆற்றாராய் உடைந்து, நோன்புடையோர் அடங்கியிருக்கும் குளிர்ந்த நீரையுடைய யமுனையாற்றின்கண் ஆழ்ந்த இடத்திலே நீரின்கண் புகாநிற்ப, அவ்வாருணியரசன், போரைக் கைவிட்டபின், அப்பிங்கல கடகர்கள் குறிக்கோளின்றிக் காற்றுப் போல விரைந்து செல்லுகின்ற இயல்பை யுடைய அவர்தம் குதிரைகளில் ஏறி அவை செல்லும் வழியிலே செல்லச் சென்றவர், தம்வழியிலே பொன்னாலியன்ற மதில்களையுடைய பெண்களே உறைகின்ற நிலத்தைக் கண்டு மீண்டும் இக்கோசம்பியிலுள்ள தங்கள் வீட்டிற்கு வருதலை விரும்பாராய் ஓராண்டு அந்நிலத்திலேயிருந்த பின்னர்; என்க.

(வி - ம்.) இணைக்குமரர் - இரட்டையாகப் பிறந்த பிங்கலகடகர். இன்னுக்காலை - துன்பமுடைய பொழுது. எள்ளி - இகழ்ந்து. கோசம்பியைக் கைப்பற்றுதற்கு வந்த என்க. பருமம் - ஒப்பனை. பாஞ்சாலராயன் : ஆருணியரசன். பெண்ணுறைபூமி - மகளிர் மட்டுமே உறைகின்ற நிலம். இவணகம் - இவ்விடத்தை. ஈரறு திங்கள் - ஓராண்டு.

(இதுவுமது)

௬௬ - ௬௭ : ஆரரண்.........உரைப்ப

(பொ - ரை.) "பகைவர் கடத்தற்கரிய கோசம்பி நகரத்தைக் கைப்பற்றி ஆட்சிசெய்யாநின்ற அந்த ஆருணி மன்னன் வாராற் பிணிக்கப்பட்ட வெற்றிமுரசம் தமது நாடு முழுவதும் அதிரும்படி முழங்குதல் கேட்டு நின் தம்பியர் நெருப்பெனச் சினந்து தம் நாட்டினை இழந்ததனு லுண்டாகிய துன்பத்தைப் பொருதவராய் அவ்வாருணி மன்னனோடு யாம் போரிடுதற்குப் புறப்பட்ட செய்தி யுணர்ந்து அம்மன்னனை வெல்லுதற் பொருட்டு நமக்குத் துணையாகி வந்தனர்போலும், வேந்தே! இச்செயல் நம்முடைய உயர்ந்த பெரிய குலம் மேலும் உயர்தற்குரிய செயலாகும்" என்று அவ்வமைச்சன் கூற; என்க.

(வி - ம்.) ஆரரண் - பகைவர் கடத்தற்கரிய அரண், அரசர்கள் தங்கள் வெற்றியை மக்களுக்கு உணர்த்துவதற்கு வெற்றி முரசத்தை எங்கும் முழக்குவிப்பது மரபு. தலமுதற்கெடுநோய் - நிலத்தை இழந்த துன்பம்.

(உதயணன் செயல்)

௬௭ - ௭௨ : அமர்.........பொழுதின்

(பொ - ரை.) தன்பகைவர் போர்க்களத்தே படும்படி கொன்று வெற்றி எய்திய தன் பெரிய கைகளைச் சேர்த்துத் தாங்க ஒண்ணாத மகிழ்ச்சியோடு அப்படைப் பெருவேந்தன் பன் முறையும் தழுவிக்கொண்டு இம்மை மறுமை என்னும் ஈரிடத்தும் பெறும் இன்பத்தை இங்கு ஒருசேரப்பெற்ற ஒருவனைப்போல மகிழ்ச்சியால் நிரம்பிப் போராற்றல் மிக்க அவ்வண்ணல் தம்பியர் வரவினைப் பெரிதும் விரும்பும் பொழுதில், என்க.

(வி - ம்.) தாங்கா உவகை - பொறுக்கொணுத மகிழ்ச்சி. பல்லூழ் - பன்முறையும். இருவயினுலகம் - நிலவுலகமும் மேனிலையுலகமும். அண்ணல் : உதயணன்.

(படைகள் ஈண்டுதல்)

௭௨ - ௭௬ : பாடு.........ஈண்ட

(பொ - ரை.) பெருமையும் சிறப்புமுடைய பசிய மாலையை யணிந்த உதயண மன்னனுடைய பெருமைமிக்க வத்தவநாட்டினை

மடைவது எங்கள் குறிக்கோள் என்று தம் தலைவர் அறிவித்த குறிக்கோளினின்றும் மாறுபடாராய்க் கடலேயாயினும் அதன் நீர் முழுவதனையும் ஒருங்கே முகந்து கொண்டுவரும் ஆற்றலுடையோரும், பன்னீராயிரவரும், படைத்தொழிற் பயிற்சிமிக்கவரும் சோர்வுற்ற காலத்தில் உதவுதற்கு என்று அமைக்கப்பட்டவருமாகிய வெற்றியுடைய காலாண் மறவர்கள் கூட்டம் கூட்டமாக வந்து சேராநிற்ப ; என்க.

(வி - ம்.) பாடு - பெருமை. சேடு - பெருமை. வத்தம் - வத்தவநாடு. முன்னீர் - கடல். அற்றைக்காலை - சோர்வுற்ற பொழுது.

தம்பியர் உதயணனை இறைஞ்சிப் புலம்பிக் கூறுதல்

௮௦ - ௮௮ : தப்பினர்.........அன்றி

(பொ - ரை.) ஆருணிமன்னனின் வஞ்சகச் செயலினின்றும் ஒருவாறு உய்ந்து பிழைத்தார் என்று கூறப்பட்ட தம்பியராகிய பிங்கல கடகர் இருவரும் உதயணன் திருமுன்வந்து அவன் அடிகளிலே வீழ்ந்து அழகிய வீரக் கழலணிந்த அச்சேவடிகளைக் கைகளாற் பற்றிக் கொண்டு "பெருமானே! ஆராய்ந்து தெளிந்து எமக்கு உறுதியாவனவற்றை உணராமலும் துணையாவாரோடு சேர்ந்து வாழாமலும் பகைவனாற் சிறைகொளப்பட்டு நம்முடைய பெரிய மன்னர் குடிக்குரிய ஆக்கமும் பெருமையும் அழிந்துபோம்படி அஞ்சி மேற்கோடற்கரிய கற்புக்கடம் பூண்ட கெடாத காதலையுடையாரும் நம்மை ஈன்று இனிதே வளர்த்தவரும் பிறராற் படைத்தற்கரிய கற்பினையுடையவரும் ஆகிய வெற்றிமிக்க நம் அன்னையாகிய கோப்பெருந்தேவியாருக்கு யாங்கள் குற்றேவல் செய்தலிற் றவறுமல் அப்பெருமாட்டியாரோடு ஓரிடத்தே உறைதலையும் ஒழிந்ததல்லாமலும் என்க;

(வி - ம்.) தப்பினர் - உய்ந்தார். தம்பியர் - பிங்கலகடகர். அவன் : உதயணன். ஓர்ந்தனம் - ஆராய்ந்து. சேர்த்தியில் செய்கை - கூட்டுறவில்லாத தொழில். வெருளி - அஞ்சி. இறைவி - தாய். குற்றேல் - குற்றேவல்.

(இதுவுமது)

௮௯ - ௯௪ : இருங்கடல்.........நீத்தனெம்

(பொ - ரை.) "அண்ணலே! பெரிய கடல் சூழ்ந்த நிலவுலகின்கண் சான்றோர் புகழ்ந்து கூறிய வேந்தருள் மிக்கோனாகிய இராமனுடைய தம்பியாகிய இலக்குமணனுக்குப் பொருந்திய குறையாத பெரிய புகழை யாமும் எய்தும்படி தேன் நிரம்பிய செந்தாமரை மலர் போலும் திருந்திய சிவந்த நின்னுடைய அடிகளுக்கு வழிபாடு செய்து நின்னோடு உறைதலையும் எம்முடைய அன்பிலாமையாலே இழந்தேம்; என்க.

(வி - ம்.) இனியோர் - சான்றோர். எடுத்த - உயர்த்துக் கூறிய. இறைமீக்கூறிய - அரசரில் மேலாகக் கூறப்பட்ட. மறுவொடு பெயரிய மதலை : இலக்குமணன். மறு - சக்கரரேகை. சைன நூலான வடமொழி உத்தரபுராணத்தில் இராமாயண சரித்திரம் வருமிடத்து இராமன் தம்பி சக்கரரேகையென்ற அடையாளத்துடன் கூடியவனுதலால் லட்சுமணன் என்ற பெயருடையவனுனன் என்று கூறப்பட்டுள்ளதென்பர். ஆனுப்பெரும் புகழ் - என்றும் குறையாத பெரிய புகழ். இனி, தலைமையை நீங்காமையால் உளதாகிய மிக்க கீர்த்தி என்பாரும் உளர். வன்கணின் - கண்ணேட்டமில்லாமையினாலே.

(இதுவுமது)

௬௫ - ௧௦௨ : கழீஇ.........தழீஇ

(பொ - ரை.) மிகப்பெரிய சிறப்பினையுடைய எங்கள் காவலனாகிய வேந்தே! இப்பிறப்பின்கண் எமக்கு வாழ்க்கை நெறி நன்கு அமையாமையின் யாம் முற்பிறப்பின்கண் எமது ஐம்பெருங்குரவரையும் பிழையின்றி வழிபட்டு அவருடன் உறைதற்குக் காரணமான மிக்க தவம் சிறிதும் இல்லாமல் தீவினையே செய்துளோம் போலும், என்று கூறி நெஞ்சு கலங்கிப் பொள்ளெனத் தந்தலை நிலத்தில் தோய நெஞ்சின்கண் அழலாநின்ற துன்பத்தீயால் வெப்பமுடைய கண்ணீரை யுகுக்கின்ற துன்பத்தோடு தன்னை வணங்கிய அத்தம்பிமாரை உதயணன் கைகளாற் றழுவி எடுத்துக்கொண்டு; என்க.

(வி - ம்.) நெறியின்மையின் - நன்னெறி வாயாமையின் என்க. மூத்தோர் - ஐம்பெருங்குரவர். உறுதவம் - மிக்க தவம். கடுவினை - தீவினை. பொள்ளென: விரைவுக்குறிப்பு. இறைஞ்சிய - வணங்கிய. உதயணன் தழீஇ என்க.

(உதயணன் தம்பியரைத் தழுவிக் கூறுதல்)

௧௦௩ - ௧௦௬ : இருபால்.........இளியென

(பொ - ரை.) தன்னுடைய இருபக்கத்திலும் நிற்கின்ற தம்பியர் இருவரையும் காண்டற்கு விரும்பி, அவ்விருபக்கங்களிலும் மாறி மாறிப் பிறழுகின்ற தன்னுடைய கண்களின் தீயைத் திரட்டினுலொத்த துன்பக் கண்ணீர்த்துளி வீழ்ந்து அத் தம்பிமாருடைய குழற்சிகை திரண்டு மேல்நோக்கி யசைகின்ற அழகிய பிடரின் கண் பன்முறையும் தெறித்து எழும்படி அவரை அணைத்துக்கொண்டு, "காளையீர்! இனி நுங்களுடைய இப்பெரிய துன்பத்தை யான் காண்பதற்குக் காரணமாய் என்னுடைய நல்லமைச்சர் காட்டிய நன்னெறியின்கண் செல்லாத புல்லறிவுடையேன் செய்த காரியங்களை நினைத்து நுங்கள் கவலையை மாற்றிக் கொள்ளக் கடவீர்" என்று கூறி; என்க.

(வி - ம்.) இரண்டு தம்பிகளையும் காண்டற்கு ஒரே செவ்வியில் விருப்பம் நிகழ்தலான் கண்கள் இருமருங்கினும் மாறிமாறி ஓடின என்க. ஆலி - கண்ணீர்த்துளி. குழல் - மயிர்முடி. அணவருதல் - மேனோக்கியசைதல். எருத்து - பிடர். நுங்களுக்கு இத்தகைய துன்பம் வருதற்கு என் செயல்களே காரணமாவதன்றி நுங்கள் செயலன்று. ஆதலின் அதனை நினைத்துக் கவலையொழிக என்று தேற்றியபடியாம். காளைகள்: விளி.

(இதுவுமது)

கக0 - ககஎ : அகத்து.........இந்நிலை

(பொ - ரை.) பின்னரும் தன் உள்ளத்தினின்றும் எழாநின்ற கடலின்கண் அன்பிலே பட்டுக்குளிர்ந்த தன்மையையுடைய நெடிய பாற்கடலின்கண் கொண்ட அமிழ்தத்தையொத்த அருட்பண்புடைய பொருள் பொதிந்த மொழிகளைப் பக்கத்தில் நிற்போருடைய நெஞ்சத்தையும் பிணித்துக் கொள்ளும்படி பொருந்தக் கூறி "இனி, காளையீர்! நம்மை இகழும் நம் பகைமாந்தர் யாவரேயாயினும் தீயிற்பட்ட பன்னிய பஞ்சு போல்வார் ஆகுக" என்று நமது சினமாகிய நெருப்பின்கண் அப்பகைவரை அவர் தம் சுற்றத்தோடு சுடுவதாய் இந்நிலை நிகழ்ந்தது; இனி அப்பகைவர் அழிந்தே போயினர் காண் என்று உதயணன் கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) குளிர்நீர் - குளிர்ந்த தன்மை. அமிழ்தம் என்றமையால் பாற்கடல் என்க. அளிநீர் - அருட்பண்பு. எள்ளு மாந்தர் - இகழும் பகை மக்கள்; என்றது - ஆருணிமன்னன் முதலியோரை. எரி - நெருப்பு. பன்னற் பஞ்சி - ஆராய்ந்தெடுத்த பஞ்சு. இந்நிலை - இப்பொழுது நமக்கு உண்டாயிருக்கிற நிலைமை.

(இதுவுமது)

ககஅ - கஉசு: முடிந்தனர்.........நமக்கென

(பொ - ரை.) அது கேட்ட அத்தம்பிமார், "பெருமானே! நீ கூறியமொழி இனிப் பொய்ப்பதன்று. அப்பகைவரோடு போராற்றுதற்கு வேண்டுவனவெல்லாம் யாம் இப்பொழுது உடையேம். குறையொன்றுமிலேம்" என்று கூறுநிற்ப, அது கேட்டலும் அவ்வுதயணமன்னன், உடன் பிறப்பன்பு தன்னெஞ்சத்தைக் கவர்தலாலே இன்புற்று அத்தம்பிமாரோடு தம்மை ஈன்ற தாய்க்கு மனமிரங்கிப் பின்னர்த் தனக்குப் புகலிடமாகிய அன்பிற்குரிய தோழனாகிய யூகியையும், தன்னை வளைத்துக் கொண்ட தீயின்கண் இறந்துபட்ட தெளிந்த பேரன்பினையுடைய கட்டவிழ்ந்த மலர் மாலையினையுடைய வாசவதத்தையையும், மீட்டும் கொணர்ந்து தருதலும் நுங்களை இங்ஙனம் கொணர்ந்து தந்து என்னுடைய துன்பத்தைப் போக்கிய முற்பிறப்பில் யான்

செய்த செவ்விய தவத்திற்கு ஒரு பொருளோ? யான் அத்தவ முடையேன் அல்லெனோ என்றுக் கூறித் தம்பிமாருடைய தாமரை மலர் போன்ற பெரிய கண்கள் சொரியாநின்ற வெவ்விய கண்ணீர்த்துளிகளைத் துடைத்துப் பண்போடு அவர்களைப் பேணி "நம்பியீர்! நாம் ஒருவரை யொருவர் காண்டற்கு உண்டான ஆகூழ் போலவே இனி யாம் நம் நாட்டை எய்தும் செல்வமும் நமக்குத் தானேவரும்" என்று கூறி; என்க.

(வி - ம்.) செப்பிய............இலமென இம்மொழிகள் தம்பிமாருடைய மொழிகள். செப்பிய மாற்றம் என்றது உதயணன் அவர் முடிந்தனர் என்று கூறியதனை. விரப்ப என்றும் பாடம்; ஈர்ப்ப என்றும் பாடம். இப்பாடமே ஈண்டுக் கொள்ளப்பட்டது. தோழனை: யூகியை. கோதை: வாசவதத்தை. நும்மைக் கொணர்ந்து தருதற் குரிய தவத்தையுடையேன். அத்தவமே தோழனையும் கோதையையும் இனிக் கொணர்ந்து தருதல் ஒருதலை என்பது கருத்து.

(உதயணன் அமைச்சர்களுடன் ஆராய்தல்)

௧௩௦ - ௧௩௪ : அன்னவை.........எமக்கென

(பொ - ரை.) இன்னோரன்ன ஆறுதன் மொழிகள் பல வற்றையும் எடுத்துக் கூறிய பின்னர், வருடகாரனையும் இடபகனை யும் தனி இடத்தே வைத்து, "அன்புடையீர்! என்னோடிருந்து நம் பகைவனிடத்திருந்து நம் நாட்டைக் கைப்பற்றிக்கொள்ளும் உபாயத்தை ஆராய்ந்து அளத்தற்கரிய கடிய ஆற்றலுடைய நம் பகைவனாகிய ஆருணியினுடைய கொள்ளுதற்கரிய உயிரையும் கொள்ளுதற்கு ஏற்ற வழிகளையும் எமக்குக் கூறுவீராக" என்று வேண்டாநிற்ப; என்க.

(வி - ம்.) தன்னோடிருந்து நாடி என ஒரு சொல் வருவிக்க.

(வருடகாரன் கூற்று)

௧௩௫ - ௧௪௬ : வருடகாரன்.........முற்றி

(பொ - ரை.) அதுகேட்ட வருடகாரன் உதயணனைக் கை கூப்பி வணங்கிக் கூறுவான், "வேந்தே! இருளினூடே விரைந்து சென்று நம்மொற்றர்கள் ஒற்றிவந்து அவ்வரண்மனையின் நீண்ட நிலையினையுடைய நெடிய மதிலின்கண் சிதைந்த இடம் இதுவென நம்மொற்றர் நமக்குக் காட்டிய மதிலின்கண் நள்ளிரு ளுடைய நள்ளிரவிலே ஏணியைச் சார்த்தி நம் படைஞர் அவ்வரண்மனைக்குள்ளே புகுந்து பழைய நீரையுடைய கடல் ஞெரேலென்று கலங்குமாறு மழைக்கால் வீழ்வதுபோல நம்படை கள் அப்பகைவர்மேல் வீழ்ந்து அழிக்குமளவும், நீ நின்னுடைய நீங்காத பெரும் படையோடு தனித்து இராநிற்ப, யாங்கள் நம்

பகைவேந்தனை அரண்மனையினுள் வைத்து நாற்புறமும் சூழ்ந்து கொண்டு;" என்க.

(வி -ம்.) வீரைவனரோடி - விரைந்தோடி. அற்றம் - சிதை விடம். நள்ளிருளையுடைய நடுநாள் என்க. நடுநாள் - நள்ளிரவு. முதுநீர்ப் பௌவம் - பழைய நீரையுடைய கடல். கதுமென : குறிப்பு மொழி. மழைக்கால் வீழ்வதுபோல் என்க. விள்ளாப்படை - விலகாத படை. கொள்ளாவேந்தன் - பகைவேந்தன். கோயில் - அரண்மனை. முற்றி - சூழ்ந்துகொண்டு.

(இதுவுமது)

௧௪௪ - ௧௫௧ : சேவகம்.........நூறி

(பொ - ரை.) சேவகத்தொழிலை நிலைநிறுத்தி அவ்வரண்மனை காக்கின்ற காவலிடந்தோறும் நம்முடைய படைகளுள் வைத்துப் பன்னீராயிரம் என்று தொகையிடப்பட்ட மறவர்களை அரண் மனைக்குள் விடுத்துப் போர்செய்யும்படி ஏவாநிற்ப, அம்மறவர் தாம் அரண்மனைக்குள் புகுந்து அம்மன்னனும் பிறரும் தூங்கும் பொழுது அவர்கள் நடுங்கும்படி குதித்துக் கூரிய வெவ்விய படைக் கலங்களை மின்னும்படி வீசிப் பகைவரை வடுப்படுத்தா நின்ற வேலோடு வாயிலிடந்தோறும் நின்று காவல் செய்யும் பதுவாய்க்காவலராகிய படைத்தொழில் மறவரைப் படுக்கையி லேயே வீழ்ந்து கிடக்கும்படி கொன்று குவித்து; என்க.

(வி - ம்.) சேவகம் - சேவை. காவல் - காவலிடம். பன்னீராயிரம் வீரர் என்க. அகத்தோர் துளங்க என்க. குப்புற்று - குதித்து. அயில்- கூர்மை. பதுவாய்க்காப்பு : "எண்பதினாயிர மிளம்பது வாய்களும்" (௧.௩௭ : ௨௧௧) என்றார் முன்னும். பாயல் - படுக்கை.

(இதுவுமது)

௧௫௨ - ௧௫௫ : மரவும்.........ஆர்ப்ப.

(பொ - ரை.) ஆங்குள்ள குதிரைகளையும் யானைகளையும் சிறந்த மணித்தேர்களையும் படைக்கொட்டிலோடு அரணத்தை யுடைய காப்பினையமைத்துத் தன் பகைவரை வென்று கடந்த உதயண மன்னன் வாழ்க என்றும், எமக்குத் துன்பத்தைச் செய்து எம்முடைய அழகிய நகரத்தைக் கைப்பற்றிக்கொண்ட எங்குடிக்குப் பழம்பகையாளராகிய நீவிர் கதவினை யடைத்துக் கொண்டு அரண்மனைக்குள்ளேயே இருந்துவிடாமல் நுங்களுடைய பெண்களின் பெரும்படையை விலக்கித் திண்மையையுடைய போர் செய்தலுக்கு உடன்படுவீராயின் விரைந்து வாருங்கோள்! என்று கூறி முகில் முழங்குமாறுபோலே முழங்கி முடுகி ஆரவாரியாநிற்ப; என்க.

(வி - ம்.) தானைக்கோட்டில் - மறவர் உறையுள். ஆணம் - அரணம். குடிப்பகையாளர் - வழிவழிப்பகைவர். பெண்களின் படையை நீக்கி என்றது இகழ்ச்சிக் குறிப்பு. கடுத்தனம் ஆர்ப்ப - முடுகினேமாய் ஆரவாரியாநிற்ப.

(இதுவுமது)

௧௬௦ - ௧௬௬ : கதுமென.........எழவும்

(பொ - ரை) இவ் வாரவாரத்தாலே ஞேரேலென்று தோன்றிய மனக் கலக்கத்தோடு கல்லென்று திங்கள் தவழாநின்ற மதிலையுடைய வளமிக்க அவ்வரண்மனைக்குள் வாழ்வோரனைவரும் கலங்காநிற்ப. நள்ளிரவிலே பெய்யாநின்ற பெரிய மழையினிடையே விழிப்புற்றெழுந்ததோர் ஆண்குரங்கு போல ஆருணி மன்னன் வாய்குழறி எழுந்து "யான் பொச்சாப் பெய்தி, இனி எனக்குப் பகைவரில்லை என்று இகழ்ந்திருந்த குற்றம் இத்துன்பத்தை இப்பொழுது கொண்டு வந்தது" என்று கவலை மிக்கு மனங்கலங்கிப் படுக்கையினின்றும் எழாநிற்பவும், என்க.

(வி - ம்.) கதுமென : விரைவுக் குறிப்பு. வளநகர் - வளமுடைய அரண்மனை. கடுவன் - ஆண்குரங்கு. இஃது ஆருணிக்கு உவமை. மழைக்காலத்தில் குரங்குகள் ஏனை உயிரினுங்காட்டில் பெரிதும் துன்புறும் இயல்பினையுடையன. ஆதலின் இங்ஙனம் உவமையெடுத்து ஓதினர். இகழ்ச்சி ஏதம் தலைத்தது - பொச்சாப்புத் துன்பத்தைக் கொணர்ந்தது. "இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம், மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து" (குறள். ௫௩௯) என வருங் குறளையுங் காண்க. கூரா - மிகுந்து.

(பட்டத் தேவியின் கலக்கம்)

௧௬௭ - ௧௭௪ : எழுந்த.........வெரீஇ

(பொ - ரை.) இவ்வாறு கலங்கி எழுந்த மன்னனோடு முன்னிரவில் "செழிப்புடைய அணிகலன்களையுடைய நின் மார்பிடத்தே பூசப்பட்ட குளிர்ந்த நறிய சந்தனம் மாலையோடு குழையும்படி பரத்தையரைச் சேர்ந்த நின்னுடைய பெரிய மலை போன்ற அம்மார்பினைத் தீண்டுதல் எமக்குச் செல்வமாந் தன்மையுடைத்தன்று என்று பிணங்கித் துன்பத்தால் நடுங்கி மலரையொத்த தன் நெடிய கண்கள் அம்மன்னன் தன்னைத் தலையளி செய்யும் செவ்வியில் ஒன்றோடொன்று போர் செய்வனவாய் இமைகளை மூடி ஆற்றாத மயக்கத்தோடு கிடந்த இனிய துயிலின் கண் இவ் வாரவாரத்தைக் கேட்டு இம்முழக்கம் கூற்றுவன் ஆரவாரமோ அன்றி வேறென்னையோ? என்று வினவியவளாய் அஞ்சி; என்க.

(வி - ம்.) ஈர்சாந்தம் நறுஞ்சாந்தம் எனத் தனித் தனி கூட்டுக. நின் என்றது அரசனை நோக்கி என்க. அவன் தலையளி

செய்யும் செவ்வியில் என்க. ஆற்றுஅனந்தர் - பொறுக்கொணாத துயில் மயக்கம். வெரீஇ - அஞ்சி.

(இதுவுமது)

௧௭௫ - ௧௮௪ : விசைப்புள்.........கூரா

(பொ - ரை.) விரைந்து பறக்கும் இயல்புடைய கருடன் வெவ்விய தனது குரலாலே ஆரவாரியாநிற்ப அது கேட்ட நாக கன்னிகை நடுங்குதல் போன்று நடுங்கித் தன்னுடம்பி லணிந் திருந்த உத்தியும், சங்கிலியும் முத்துமாலையோடு புரளாநிற்பவும், ஒருபக்கத்தே ஒளியுடைய மணிமாலை தோன்றாநிற்பவும், துயிலு தலையுடைய காலத்தே தீ நிமித்தமாகத் தன்னிடையிலே உடுத் திய அழகிய ஆடை நெகிழ்ந்து தனதொரு கையினிடத்தே அசையாநிற்பவும், தன் கண்ணே மையாகவும், தன் குவிந்த முலையின் முற்றத்தே பொருந்திய பொற் கொடியே தருப்பையாக வும், அழுகையோடே தன்னுடையிரொன்றாகிய தன் கணவ னுக்கு நெஞ்சநெகிழ்ந்து வெளிப்பட்ட தன் கண்ணீரே நீராகவும் உகுப்பவள்போலப் பட்டத்துத் தேவியாகிய அக்காரிகை பெரி தும் மயங்காநிற்ப என்க.

(வி - ம்.) விசைப்புள் - கருடன். நாகப் பெதும்பை - நாக கன்னிகை. உத்தி, தொடர், முத்து இவைகள் அணிகலன்கள். காசு - மணி. துயிற்பதம் - உறங்கும் பொழுது. அசைந்த : அசைத்த - கட்டிய. முகிழ்ந்த - குவிந்த. பொற்கொடி - ஓரணிகலன். முகங் கொள் காரிகை - தலைமைத் தன்மை கொண்ட அழகுடைய நங்கை; பட்டத்தேவிக்குப் பின் வருந் தீங்குக்கு நிமித்தமாக இங்ஙனம் அத் தேவி துயிலும்பொழுது நிகழும் என்று வருடகாரன் கூறுகின்றான் என்க.

(இதுவுமது)

௧௮௫ - ௧௯௦ : சீர்.........எழவும்

(பொ - ரை.) சீரிய ஒப்பனையையுடைய சித்திரம் போன்ற தனது முடியின்மேற் சூட்டப்பட்ட தாரும் கோதையும் சரிந்து புறத்தே கிடந்து அசையாநிற்பவும், தனக்கு நிகழுந் தீங்கியா தென அறியாதவளாய் விரைந்து இரக்கமெய்தித் தன்னுயிரை வெய்யவுயிர்ப்போடு கலந்து உள்ளம் வருந்துபவ ளாகிய அத் தேவி ஞெரேலென எழுந்த நம்படைஞருடைய ஆரவாரத்தா லுண்டான துன்பத்தாலே அஞ்சித் தன் கணவன் முன்றானை யைப் பற்றியவளாய்ப் பாயலினின்றும் எழா நிற்பவும் என்க.

(வி - ம்.) தார், கோதை என்பன மலர்மாலை வகை. தெற்றென- விரைவாக. ஆவி - உயிர் : உயிரோடு வெய்துயிர்ப்பை அலைஇ என்க. திருமகன் என்றது, வேந்தனாகிய தன் கணவனை என்ற வாறு. ஆகுலப்பூசல் - துன்பந்தரும் ஆரவாரம்.

(குற்றேவல் மகளிரின் துயரம்)

கசுக - உ00 : அருமணி.........மயங்கவும்

(பொ - ரை.) பெறற்கரிய மணிகள் திகழாநின்ற அழகிய பொன் மாடத்தின்கண் அழகிய மணிகள் பதித்த கட்டிலின் பக்கத்தே இருந்த உழைக்கலமகளிர் தம்முள்ளத்தே ஞரேலென வெப்பந் தோன்றி மிகாநிற்றலாலே, குழையினோடு அழகு கொண்ட ஒப்பனையுடைய தமது ஒளி முகத்தின்கண்ணே செவ் வரிபரந்து சுழலாநின்ற அச்சமிக்க கண்ணையுடையராய்ப் புலி முழக்கங் கேட்டு அஞ்சாநின்ற பிணைமான்கள் போன்று பொருமி எழுந்து ஆங்கு நிகழ்ந்ததனை இன்னதென்றறியாராய் "நம்மன்ன னுடைய பகைவேந்தனாகிய உதயணமன்னனன்றானும் தன் வாழ்க்கை கெட்டுத் தன்னாட்டினின்றும் போய் ஒழிந்தனன். அங்ஙனமாகவும் இவ்வாறு ஆரவாரிப்போர் யார்கொலோ? என்று ஐயுற்றுத் துன்பந்தரும் அழுகையொலியோடே வெளியே செல்லுதற்குரிய வாயிலிஃது என்றும் இது சுவர் என்றும் அறியாதாராய்ப் பெரிதும் மயங்கா நிற்பவும் என்க.

(வி - ம்.) ஆய் - அழகிய. பாகத்து - பக்கத்தில். அசைந்த - தங்கியிருந்த. உழைக்கலமகளிர் - பக்கத்திலே இருத்தற்குரிய கலங் களை ஏந்தி நிற்கும் பணிமகளிர். குழைக்கு : வேற்றுமை மயக்கம். அரி- செவ்வரி. அலமரும் - சுழலும். அச்சுறும் - அஞ்சும். புலிமுழக்கங் கேட்டு வெருவுறும் பிணையென்க. விம்மாந்து - பொருமி. பட்டதை- நிகழ்ந்ததனை. பகைப்புல வேந்தன் என்றது உதயணனை. வாழ்வு கெட்டு நாட்டை விட்டகன்றனன் என்றவாறு. இது - இவ்வாரவாரம். தகைப்பு - சுவர்.

(நகரத்தார் மகிழ்ச்சி)

உ0க - உகo : நகரம்.........எற்றவும்

(பொ - ரை.) இனி, நம்படைஞர் ஆரவாரத்தைக் கோசம்பி நகரத்திலே வாழாநின்ற நம்பழங்குடி மக்கள் அனைவரும் அறிந்து "திருமகள் வதிகின்ற மார்பினையுடைய எங்கள் வேந்தனாகிய உதயணன் கூற்றுவன் கையிலகப்பட்டவன் மீண்டும் ஆகூழாலே இந்நகரத்திற்குப் பெரும்படையோடு நம்மைப் பாது காத்தற் பொருட்டாக வந்தெய்தினன். சிறந்த தன் அமைச்சரும் தானும் நெடுநாள் ஆராய்ந்து துணிந்த செயலைச் செய்து முடித் தனன். ஆகவே நாமெல்லாம் முற்பிறப்பிலே செய்தவம் பெரிதும் உடையேம் ஆதல்வேண்டும். அவ்வாறு தன் பகைவனை வென்று இந்நகரத்தைக் கைப்பற்றுதற்குச் செய்ய வேண்டிய செயலெல் லாம் செய்திராணயின் இவ்வாறு இந்நகரத்திற்குப் படையொடும் வருவானல்லன். ஆகவே யாமெல்லாம் நம்பெருமான் தன்

பகைவனை யழித்து வெற்றி கொள்வதனையே பெரிதும் விரும்பு வேம்!" என்று தம்முட் கூடித் துணிந்து ஆருணி மன்னன் அஞ்சு தற்குக் காரணமான போர்ப் பறையினை முழக்கிக் கொண்டு சினந்து வந்து நமக்குத் துணைப்படையாகி நம் பகைவன் படையைத் தாக்கி அங்கங்கே கொன்று குவியா நிற்பவும் என்க.

(வி - ம்.) நகரம் : ஆகுபெயர். திரு - திருமகள். கூற்றிடம் புக்கு மீட்டு வந்தனன் என்றது, இறந்தொழிந்தாற் போன்றதொரு நிலைமையினை எய்தி ஒருவாறு உய்ந்து வந்தனன் என்றவாறு. நம் பொருட்டாக நகரமுற்றனன் என்றது உதயணனுடைய காவற்றொழிற் சிறப்பைப் பாராட்டிக் கூறியபடியாம். அமைத்த கருமம் - தன் பகைவனை வெல்லுதற்கென ஆராய்ந்து துணிந்த செயல். ஈண் - இவ்விடம் : வெருப்பறை - அஞ்சுதற்குக் காரணமான போர்ப்பறை உருத்து - சினந்து. ஏற்றவும் - தாக்கவும்.

(இதுவுமது)

௨௧௧ - ௨௧௬ : இன்னேர்.........கோளவெண்

(பொ - ரை.) நம்பகைமன்னனுக்கு இத்தகைய இன்னல்கள் பலவும் உண்டாகவும் யாம் அவ்வாருணி மன்னன் உயிரினைக் குடிப்பேமாக! இதற்குப் பெருமான் உடன்பட்டருளுக! என்று வருடகாரன் ஆராய்ந்து கூறுகிற்ப அவ்வமைச்சன் கூறிய செய்கை முறையினை உதயண மன்னனும் கூர்ந்துணர்ந்து மகிழ்ந்து "இச்செயன் முறை பெரிதும் பொருத்தமுடையதே" என்று கூறி அங்ஙனமே செய்தற்கு உடன்பட்டவனாக, இவ்வாறு பறவையும் பயிலுதற்கியலாததொரு பளிக்கறையினுள்ளிருந்து அமைச்சர்கள் பிடரிமயிராலே பொலிவுடைய குதிரை பூண்ட தேரையுடைய அவ்வுதயணமன்னனோடே ஆராய்ந்து பகையரசன் அரண்மனையை முற்றுகையிடுதற்கு மறைபுறப்படாத அடக்கமுடையராயிருந்து துணிவாராயினர் என்க.

(வி - ம்.) வருடகாரன் உரைப்ப வென்க. மன்னன் - உதயணன். பறவைகளும் சார்தற்கியலாத ஒள்ளொளி இருக்கை என்க. ஒளியிருக்கை - பளிக்கறை. செறிவினர் - அடக்கமுடையோர். உளை - பிடரிமயிர். வளைத்துக்கொள வலித்தனர் என மாறுக.

௨௪. மேல்வீழ் வலித்தது முற்றிற்று.

உரு. அரசமைச்சு

இதன்கண் : ஆருணிமன்னன் அரண்மனைக்குப் பிறர் தம்மை அறியாதபடி சென்று ஆங்கு அறியவேண்டியவற்றை ஒற்றி அறிந்து வந்த ஒற்றர் உதயணனுக்குக் கூறுதலும், உதயணன் வருடகாரனுக்குக் கூறுதலும், வருடகாரன் செயலும், ஆருணியின் சேனாதிபதிமகன் வருடகாரனுக்குக் கூறுதலும், வருடகாரன் சேனாதிபதிக்குக் கூறலும், சேனாதிபதிமகன் ஆருணிக்கு அறிவித்தலும், ஆருணியின் செயலும், பிறவும் கூறப்படும்.

வளைத்தனர் கொள்வது வலித்தன ரிருந்துழி
ஒளித்தகத் தொடுங்கிய வொற்ற ரோடிச்
சிலைப்பொறித் தடக்கையிற் சேதியர் பெருமகற்
கிசைத்தனர் புக்குநின் றேத்தினர் கூறுவர்
தாழ்ச்சி யின்றித் தருசகன் றமரோ
டேழ்ச்சியு மெறிபடை யளவுமெம் பெருமான்
சூழ்ச்சியுஞ் சூழ்பொருட் டுணிவு மெல்லாம்
படிவ வொற்றிற் பட்டாங் குணர்ந்து
கொடியணி வீதிக் கோநகர் வரைப்பிற்
படியணி வாயிலும் பரப்பு ஞாயிலும்
அற்றம் பட்டுழித் தெற்றெனத் திருத்திக்
குறும்புழை யெல்லாங் கூடேழுக் கொளீஇச்
செறிந்த பல்படை யறிந்தவ ணடக்கி
வாயின் மாடமொடு ஞாயி லுள்வழி
இரவும் பகலு மிகழாக் காப்பொடு
முரவுந் தூம்பு முழங்குபு துவைப்ப
ஆண்டகை யமைத்துப் பாம்புரி திருத்தி
அருஞ்சுழி நீத்தத் தாறுபுக வமைத்த
சுருங்கை வாயிற் பெருங்கத வொடுக்கிக்
கொடுந்தாழ் நூக்கி நெடும்புணை களைந்து
நீணீர்க் கிடங்கிலுட் டோணி போக்கிக்
கல்லிடு கூடை பல்லிடத் தியற்றி
வில்லுடைப் பெரும்பொறி பல்வழிப் பரப்பிப்
பற்றறத் துறந்த படிவத் தோரையும்

அற்ற மின்றி யாராய்ந் தல்ல
தகம்புக விடாஅ திகந்துசே ணகற்றி
நாட்டுத் தலைவரை நகரத்து நிறீஇ
நகர மாந்தரை நாட்டிடை நிறீஇ
ஊரூர் தோறு முளப்பட் டோவா
ஆர்வ மாக்களை யருஞ்சிறைக் கோளீஇ
ஆணை கேட்ட வகலிடத் தெல்லாம்
ஓலை போக்கி யொல்லைவந் தியைகெனப்
பேணார்க் கடந்த பிரச்சோ தனற்கு
மாணாச் செய்தொழின் மனமுணக் காட்டி
அலமதித் தொழுகி யாணை யெள்ளி
மிகைசெய் திருந்ததன் மேலு மீட்டினி
மகத மன்னனு மதுகை யாகப்
பகைசெய வலித்தன னென்பது பயிற்றி
மந்திர வோலை போக்கிய வண்ணமும்
வெந்திறல் கலந்த விறல்வே சாலியொடு
சங்க மன்னர்க்குத் தம்படை கூட்டி
விரைந்தனர் வருகென நினைந்துவிட் டதுவும்
மன்னடு நெடுவேன் மகத மன்னற்
கின்னது தருவே னென்னொடும் புணர்கெனத்
தன்னொடு பழகிய தமர்களை விட்டதும்
இன்னவை பிறவும் பன்னின பயிற்றிய
அறிந்தவொற் றாளர் செறிந்தன ருரைப்ப
ஒற்று மாக்களை யொற்றறி யாமை
முற்றனக் குரைத்த மூவர் வாயவும்
ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி
இரவே றௌித்துச் செருமேந் தோன்ற
வளைத்திருந் தழிக்குவ மெனினே மற்றவன்
வலித்தது நாடி நலத்தகு நண்பின்
மிலேச்ச மன்னருங் கூடித் தலைத்தலை
வந்தவ னிதிப்பயங் கருதி முந்துற
முற்றடு விடுப்பி னற்ற மீனும்
வேண்டா வஃதிவண் மீண்டிது கேட்கென
வாங்குசிலைத் தடக்கை வருட காரற்

கோங்குபுகழ் வென்றி யுதயண னிசைக்கும்
நின்னோ டென்னிடை நீப்பில னுண்டெனத்
துன்னிய நமர்கட்குத் தோன்றக் கூறி
அவற்குப்பாங் காகிய வார்வல ருளரெனின்
மிகச்சேறி வுடையையாய் விடுமதி விடூஉம்
மாற்றந் தன்னையு மோர்த்தனை கொண்மோ
ஆசில் செங்கோ லவந்தியன் மடமகள்
வாசவ தத்தையை வலிதிற் கொண்ட
மேனாட் காலை யானே யவனைப்
பற்றுபு நம்பதி தருகுவே னென்றசொல்
முற்றில கெல்லா மொய்த்தொருங்கு தருதலின்
வத்தவ மன்னனு மெய்த்தகக் கேட்டுக்
கனலிரும் புண்ட நீரின் விடாது
மனவயி னடக்கி மறைந்தன னொழுகித்
தன்குறை முடிதுணைத் தானரு டோற்றி
நன்கினி துரைக்குமவ னுரைக்கு மாயினும்
வெஞ்சொன் மாற்றம் வேந்தரை யுரைத்தோர்
அஞ்சுக வென்னுந் தொன்மொழி யுண்மையின்
நெஞ்சுநீ நெகிழ்ந்தவற் றெளியலை செல்லென
மணித்தகைப் பைம்பூண் மகதவர் கோமான்
பணித்தது மறுமையிற் படையென வந்தனென்
மற்றது மன்னவ னுற்றிவண் செய்ததோர்
முன்னுப கார முடைமையி னாகும்
அன்னவன் மதித்துத் தன்மிகத் தருக்கும்
பெருமீக் கூற்றமும் பேணான் பிறரொடு
செருமீக் கூற்றமுஞ் செய்கையும் வேண்டாம்
ஒருதலை யாக வாற்றலன் மற்றிவண்
பழிதலை நம்மேல் வருதலு மின்றி
நாமு மெண்ணி விட்டன மாகத்
தானே சென்று தன்வலி யறியான்
அழியினு நமக்குக் கழிவதொன் றில்லை
ஆனிலைப் படாஅ தீனிலைக் கண்ணே
பற்று மன்னர் படையொடு புணரின்
அற்றப் படீஇய ரதனினு முவத்துமென்

றின்னவை யெல்லாந் திண்ணிதி னுரைத்தனன்
தன்னொடு தொடர்ந்த மன்னரைத் தொகுத்துத்
தானிவண் வாரா னாயினும் யானிவட்
செய்வதை யெல்லா மெய்யெனக் கருதுமென்
றைய மின்றி யவனுழை விட்டபின்
மெய்யெனத் தெளிந்து மீட்டவன் விட்ட
கரும மாக்களை யொருவயி னோம்பிச்
செறியச் செய்தெமக் கறிய விடுக்கபின்
பற்றிக் கொண்டு பற்று மன்னன்
ஒற்ற ரிவரென வுரைத்தறி வுறீஇக்
குற்றங் காட்டிக் கொலைக்கடம் பூட்டுதும்
தெற்றென நின்வயிற் றெளிந்தன ராகி
உறுபெரும் பகைமை யுற்றே ருணர்ந்து
செறிவுகொள் வதற்குச் சென்றன ரிசைப்ப
இதுகா ரணத்தி னிகத்தல் பொருந்தும்
அதுகா ரணத்தின் யாமுந் தெளிவேம்
பாரப் பண்டியும் பாடிக் கொட்டிலும்
ஆரெரி கொளீஇ யஞ்சினே மாகி
மலையர ணல்லது நிலையர ணில்லெனத்
தவதி சயந்தம் புகுதும் புக்கபின்
மிகுதி யச்ச மீட்டவற் குணர்த்தி
வருக வேந்தன் பெருவிறல் பீடறக்
கலக்கப் பொழுதே கடிது நாமென
விலக்க நில்லா வேட்கைய னாகித்
தான்புறப் படுதலிற் றன்னே போலும்
மாண்புறு வேந்தரை மதிலகத் தொழித்துப்
புறமதிற் கண்ணும் பொருபடை நிறீஇ
எறிபடை சிறிதினொ டணுகிய பின்றைச்
சவரர் புளினர் கவர்வுறு கடுந்தொழில்
எழுச்சி கூறி யிகலடு பெரும்படை
மாட்டல் வேண்டுமென் றேட்டியெத் திசையும்
கூட்டத் துள்ளே கூறுபடப் போக்கிச்
சிறுபடை யாகிய பொழுதிற் கதுமென
உறுபடை யழித்துமென் றுடன்றுமேல் வந்தென

முன்னும் பின்னும் பக்கமு நெருக்கியவன்
கொண்முர ணிரிப்பிற் கோளெளி தாமென
உண்முர ணுதயண னுரைத்தனன் வணங்கி
நன்றெனப் போகித் தன்றமர்த் தழீஇ
முன்ன னுரைத்த வின்ன வெவ்வுரைக்
கொன்ன ரோட்டிய வுதயண னுள்ளத்
துவர்த்த லன்றியுஞ் சிவக்கு மென்னைப்
பழியாக் கொண்டன னழியின னடையெனைப்
பகலு மிரவு மகலி ராகிக்
காப்புநன் கிகழன்மின் கரும முடிதுணை
ஒப்புற வொருவனை யுறப்பெறி னவனொடு
தீக்குழி வலித்தியாங் தீரினுந் தீர்தும்
யாதுசெய் வாங்கொலென் றஞ்சினம் பெரிதெனக்
காவ லாளர்க்குக் கவன்றன னுரைப்பப்
பலர்புகழ் விழுச்சீர்ப் பாஞ்சால ராயனொடு
செலவயர் வுடைய சேன பதிமகன்
என்னுழை விடுத்தன னிருநூ றியானையும்
பொன்னணி புனைதார்ப் புரவி பூண்ட
ஐம்பது தேரு மாயிரங் குதிரையும்
தன்பெயர் கொளீஇத் தானினி தாள்கென
மன்பெருஞ் சிறப்பிற் கொன்னூ றறுபதும்
பாவடி மடப்பிடி பதினைந் திரட்டியும்
மாவடி மடக்கண் மாதர் மென்முலை
நாடக மகளிர் நாலிரு பதின்மரும்
அடுத்து விழுநிதி பலவும் பிறவும்
ஆண முடைத்தாக் கொடுப்பன் மற்றவ்
வாண்மிகு தானை வத்தவற் கைவிட்
டென்னொடு கூடி யொருவ னாகப்
பின்னைச் செய்வ பிறவும் பலவென
அன்னவும் பிறவு மறிந்தவு மல்லவும்
ஆருணி யுரைத்தவு முரையா தனவும்
ஆராய் வாள னகமுணக் கிளந்தவன்
காரியக் கிளவியிற் காரணங் காட்டலின்
ஆய்பெருங் குருசி லதுநனி விரும்பி

நீயே சென்றவன் வாயது கேட்டு
வலிப்பதை யெல்லா மொளித்தனை யுணர்ந்து
வல்லே வருதி யாயி னெமக்கோர்
செல்சார் வாகிச் சிறந்தோய் நீயென
எல்லிருள் விடுப்ப வெழுந்தனன் போகி
வஞ்சச் சூழ்ச்சி வருட காரன்
தன்சொல் லெல்லாஞ் சென்றவ னுரைப்பக்
கேடவு மாதலிற் கேட்ட பொழுதே
அடலருஞ் சீற்றத் தாருணி தெளிந்து
முகனறிந் துரைத்து முன்னியது முடிக்கும்
சகுனி கௌசிகன் வருகெனத் தரீஇ
ஒட்டா மன்ன னுதயண குமரனை
நட்டா னாகி நாட்ட வந்த
தண்டத் தலைவன் றளர்வி லூக்கத்து
வண்டளிர்ப் படலை வருட காரன்
நம்பாற் பட்டன னவன்வலித் ததையெலாம்
திண்பாற் றாகத் தெளிந்தன னிவனெனச்
சென்றவற் காட்டி...........
ஒன்றிய கருமத் துள்பொரு ளெல்லாம்
சென்றறிந் தின்னும் வம்மி னீரென
நன்றறி வாளர் நால்வரைப் பணிப்ப
அருளிய தெல்லா மாகென வடிபணிந்
திருளிடைப் போந்தவற் குறுகினர் மறைந்தென்.

௨௫. அரசமைச்சு முற்றிற்று.

உரை

௨௫. அரசமைச்சு

அஃதாவது உதயணமன்னனும் அமைச்சரும் ஒற்றுக் கேட்டபின்னர் ஆராய்ந்து துணிந்தமையும் அவர்தம் செயலுங் கூறும் பகுதி யென்றவாறு.

(ஒற்றர் வரவு)

க - ச : வளைந்தனர்.....................கூறுவர்

(பொ - ரை) இவ்வாறு உதயணனும் அமைச்சரும் தம்முட் கூடி ஆராய்ந்து ஆருணியரசன் அரண்மனையை முற்றுகையிடத் துணிந்திருந்த பொழுது, அப்பகையரசன் அரண்மனைக்குட் கரந்துறைந்து ஆங்கறிய வேண்டியவற்றை அறிந்து கொண்ட ஒற்றர்கள் விரைந்து சென்று தம் வருகையை விற்றழும்பு கிடந்த பெரிய கையையுடைய உதயண மன்னனுக்கு வாயிலோர் வாயிலாய் உணர்த்தி அப்பெருமகன் கட்டளை பெற்றபின்னர் அவன் திருமுன் சென்று வணங்கித் தொழுது நின்று கூறுவர் என்க.

(வி - ம்.) ஆருணியரசன் அரண்மனையின்கண் ஒளித்து இருந்த ஒற்றர் என்க. ஒற்றர் : உதயணன் ஒற்றர். சிலைப்பொறி - விற்றழும்பு. சேதியர் பெருமகன்: உதயணன். தம் வரவைஇசைத்துப் புக்கு என்க.

(ஒற்றர் கூற்று)

ரு - கக : தாழ்ச்சி.........திருத்தி

(பொ - ரை.) "பெருமானே! நம்பகையரசனாகிய ஆருணி வேந்தன், பெருமான் தருசகமன்னன் அமைச்சர் முதலியோரொடு தன்மேற் படையோடு போர்க்கெழுந்ததனையும், நம்முடைய கொல்படையின் அளவையும், பெருமான் சூழ்ச்சியினையும், அச் சூழ்ச்சியின்கண் துணிந்துள்ள செயலையும், பிறவற்றையும் எஞ்சாமல் மாறுவேடங்கொண்ட தன் ஒற்றர்களாலே காலந்தாழ்க்காமல் நிகழ்ந்தவாறே அறிந்தவனாய்த் தான் அரசு வீற்றிருக்கும் கொடிகளாலே அழகெய்திய தலைநகரமாகிய கோசம்பியின்கண் படிக்கட்டுக்களாலே அழகெய்திய கோபுரவாயிலையும் செண்டு வெளியினையும் ஞாயிலையும் சீர் கெட்டிருந்த இடங்களை விரைந்து சீர்திருத்தி" என்க.

(வி - ம்.) பகைமன்னன் நம் எழுச்சியும் படை அளவும் சூழ்ச்சியும் துணிவும் ஒற்றில் தாழ்ச்சியின்றிப் பட்டாங்குணர்ந்து வாயில் முதலியவற்றை அற்றம் பட்டுழித் திருத்தி என வியைக்க. தருசகன் தமர் - அவனமைச்சரும் படைஞரும். எழ்ச்சி - எழுச்சி. துணிவு - ஆராய்ந்து துணிந்த முடிபொருள். படிவம் - மாறுவேடம். கோநகர் - தலைநகர்: கோசம்பி. பரப்பு - செண்டுவெளி. நாயில் - ஞாயில்: போலி. ஞாயிலாவது ஏப்புழைக்கு நடுவாய் எய்து மறையுஞ்சூட்டு. அற்றம் - சீர்க்கேடு. தெற்றென - விரைந்து.

(இதுவுமது)

க௨ - க௬ : குறும்புழை.........துவைப்ப

(பொ - ரை.) "குறும்புழைகட்கிடையே சுவர் எழுப்பிக் கூட்டி நிரம்பிய பலவாகிய படைக்கலன்களை யெல்லாக்

ஆராய்ந்து அவ்விடங்களிலே அடக்கி வைத்துக் கோபுரவாயிலும் ஞாயிலும் இருக்குமிடமெல்லாம் இரவும் பகலும் விழிப்புடைய காவலர்களை அமைத்து வைத்து முரசும் பெருவங்கியமும் முழங்கி ஆரவாரியாநிற்ப; என்க.

(வி - ம்.) குறும்புழை - சிறுவாயில். கூடு - இடைவெளியை மறைத்துக் கூட்டும் சுவர். பல்படை - பல்வேறு படைக்கலம். வாயின் மாடம் - கோபுரம். முரவு - முரசு. தூம்பு - பெருவங்கியம். துவைப்ப - ஆரவாரிப்ப.

(இதுவுமது)

கஎ - உகூ : ஆண்டகை ... ... பரப்பி

(பொ - ரை.) "ஆண்டகையமைத்து (?) பாம்புரியைச் சீர்திருத்திக் கடத்தற்கரிய சுழியினையுடைய வெள்ளத்தை யுடைய யாற்றிற் சென்று புகும்படி அமைத்துள்ள சுருங்கை யினது பெரிய கதவுகளைச் சாத்தி வளைவுடைய தாழக்கோலைச் செறித்திட்டு நெடிய நீரையுடைய அகழியின்கட் கிடந்த நெடிய தெப்பங்களை அகற்றிச் சிறிய தோணிகளையும் ஒழித்து எறிகல் நிரப்பிய கூடைகளைப் பல்வேறிடங்களினும் அமைத்துவைத்துப் பெரிய விற்பொறிகளைப் பலவழிகளினும் பரப்பி வைத்து" என்க.

(வி - ம்.) ஆண்டகை : இதன் பொருள் விளங்கவில்லை. ஒரு மதிலுறுப்பு என்று ஊகித்தற்கிடனுண்டு. ஆராய்ந்து கொள்க. பாம்புரி - மதிலின் புறத்தேயுள்ள ஆளோடி. ஆற்றிற் சென்று புகும்படி அமைத்த சுருங்கை என்க. சுருங்கை - நீரோடுதற்கு மறைத்தமைத்த கற்படை. புணை - தெப்பம். தோணி - ஒரு மரத் தோணி. கிடங்கில் - அகழி. நீள் கிடங்கில், நீர்க்கிடங்கில் எனத் தனித்தனி கூட்டுக. கல்விடு கூடை - பகைவரை எறிகின்ற கற்களை நிரப்பி வைத்திருக்கும் கூடை "காய் பொன்னுலையுங் கல்விடு கூடையும்", என்றார் இளங்கோவும் (சிலப். கரு : கஉ0.) வில்லுடைப் பெரும் பொறி - பெரிய விற்பொறி.

(இதுவுமது)

உச - கூ0 : பற்றற .... கொளீஇ

(பொ - ரை.) உலகப் பற்றினைத் துவரத் துறந்த தவவேட முடையோரையுஞ் சிறிதும் சோர்வின்றி ஆராய்ந்து உட்புகவிடுவ தல்லது ஆராயா வழி உட்புகவிடாது அகன்று போம்படி செய்மைக்கண் போக்கி ஊராட்சித் தலைவர்களை நகராளும்படி நிறுத்தி வைத்தும், நகரத்து வாழும் பெருங்குடி மக்களை ஊர்களை ஆளும் படி ஊர்தொறும் நிறுத்தி வைத்தும், ஊர்தோறும் ஊர் தோறும் நம்பால் உளம் வைத்து அன்பொழியாத நன்மக்களை யெல்லாம் ஆராய்ந்து அறிந்து கடத்தற்கரிய சிறைக் கோட்டத்தே இட்டு," என்க.

(வி - ம்.) பற்று - உலகப்பற்று. துறந்த படிவத்தோர் - தவ வேடம் கொண்டோர். படிவத்தோரையும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. அற்றம் - சோர்வு. நாட்டுத் தலைவரை நகரத்தும், நகர மாந்தரை நாட்டுத்தலைவராகவும் மாற்றியது. தலைவரும் குடிமக்களும் விரைந்து ஒன்றுபடாமைப் பொருட்டென்க. உளப்பட்டு - நமக்குடன் பட்டு; ஆர்வம், ஓவாமாக்களை என்க.

(இதுவுமது)

௩௪ - ௩௯ : ஆணை .... வண்ணமும்

(பொ - ரை.) தன் ஆணைக்கடங்கிய குறுநிலமன்னர் வாழாநின்ற அகன்ற நாடுகட்கெல்லாம் "நீயிர் விரைந்து எம்பால் வருக" என்று ஆணை பொறித்த திருவோலைகளைத் தூதுவர் வாயிலாய் விடுத்து, மேலும் தன் பகைவரையெல்லாம் போரின்கண் வென்று வாகை சூடிய பிரச்சோதன மன்னராகிய நின் மாமடிகளார்க்கும் மனங்கவரும்படி நின்னுடைய செயல்களாகப் பல தீச்செயல்களைப் படைத்து மொழிந்து, அவற்றின் மேலும், 'அவன் நின்னைப் பெரிதும் பழித்துத் திரிதலேயன்றி நின்னுடைய கட்டளையையும் இகழ்ந்து மிகையான செயல் பலவற்றைச் செய்துகொண்டிருப்பதோடன்றி மீண்டும் இப்பொழுது புதுவதாக உறவு பூண்ட மகத மன்னனாகிய தருசக மன்னனுடைய படைவலிமையையே தனதாகக் கொண்டு (என்னைப் பகைப்பதோடன்றி) நின்னையும் பகைத்தற்கும் துணிந்துளான்" என்றும், பல்லாற்றானும் அறிவுறுத்தி மந்திரவோலை விடுத்த செய்தியையும், என்க.

(வி - ம்.) ஆணைகேட்ட இடம் என்றது குறுநிலமன்னர் இடங்களை. ஒல்லை - விரைந்து. அவமதித்தொழுகி "ஆணையெள்ளி மிகை செய்திருந்தது" என்றது உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றி வந்ததனை மீண்டும் நினைவூட்டியவாறென்க. முன்னரே நினக்கு அவன் பகைவன் என்பான் 'மீட்டினிப் பகை செயவலித்தனன்' என்றான். மந்திரவோலை - மறைச்செய்தியையுடைய ஓலை.

(இதுவுமது)

௪௦ - ௪௭ : வெந்திறல்........உரைப்ப

(பொ - ரை.) வெவ்விய போராற்றலுடையோனும் தன்னோடு நட்புரிமை கொண்டவனுமாகிய வேசாலியுள்ளிட்ட சங்கமன்னர் எண்மரும் தத்தம் படைகளைத் திரட்டிக் கொண்டு விரைந்து வருக என்று அவர்தாம (உதயணனுக்குப்) பகைவராதலை நினைந்து தூது போக்கியதும், பகையரசர்களைக் கொல்லும் ஆற்றல் பெற்ற தருசகமன்னனுக்கும் நீ என்னோடு கேண்மை கொள்ளுவையாயின் இன்ன நாட்டினை நினக்குத் தருகுவேன்

என்று சொல்லித் தன்னோடு மிகவும் பழகிய உறவினர்களை அவன்பால் விடுத்ததும் இன்னோரன்ன தாமே ஆராய்ந்த செய்தி களையும், பிறர் தமக்குக் கூறிய செய்திகளையும் பிறவற்றையும் அறிந்து வந்த அவ்வொற்றர் நெருங்கி வந்து கூறுகிற்ப, என்க.

(வி - ம்.) வேசாலி - சங்கமன்னருட் டலைசிறந்த ஒரு மன்னன்; "தானை மன்னரை மானம் வாட்டிய ஊனிவர் நெடுவேல் உருவக் கழற்காற் பொங்கு மயிர் மான்றேர்த் திருநகர்க்கிறைவன் வெந்திறற் செய்கை வேசாலி" என முன்னும் வருதல் (௩. ௧௭ ; ௩௩ - ௬) காண்க. நினைந்து என்றது உதயணனுக்கு அவர் பகைவராதலை நினைந்து என்பதுபட நின்றது. மன் - பகை மன்னர். மகதமன்னன் என்றது தருசகனை. பன்னின - தாமே ஆராய்ந்து கண்ட செய்திகள். பயிற்றிய - பிறர் தமக்குக் கூறிய செய்திகள். செறிந்தனர் - அருகில் வந்து.

(உதயணன் வருடகாரனுக்குக் கூறுதல்)

௪௮ - ௫௬ : ஒற்று.........ஏனும்

(பொ - ரை.) இவ்வாறு, பகைப்புலத்தே சென்று ஒற்றி வந்து கூறிய அவ்வொற்றர்களை உதயணன் வேறு ஒற்றரானும் ஆராய்ந்துணர்ந்து முன்னர்த் தனக்குக் கூறிய மூன்று ஒற்றர்க ளுடைய செய்திகளும் தம்முள் முரணுதலின்றி ஒத்திருத்தலை உணர்ந்து அச்செய்திகள் வாய்மையே என்று தெளிந்து வருட காரனை நோக்கி "நண்பனே! யாம் போரின்கண் மேம்பாடுறுதற் பொருட்டு இரவின்கண் ஒளிந்து சென்று ஆருணியரண்மனையை முற்றுகையிட்டு உட்புகுந்து மாற்றலரை அழிப்பேமாயின், அம் மன்னன் துணிந்துள்ள செய்தியை அவ்வாருணியரசனுக்கு நலந் தரும் நண்பினையுடையோராகிய மிலேச்ச மன்னர் தாமும் ஆராய்ந்துணர்ந்து அம்மன்னன் தமக்கு வழங்கும் பெரும் பொருட் பொருட்டாய் ஆங்குவந்து அவனொடு கூடி நமக்கு முற்பட அவ் வரண்மனையைச் சூழ்ந்திருந்து அவ்வாருணியைப் பாதுகாத்து விடுப்பின் அந்நிகழ்ச்சி நமக்குப் பெரிதும் சோர்வு தருவதொன்றாமன்றோ" என்க.

(வி - ம்.) "ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர், சொற் றொக்க தேறப் படும்" என்பது திருக்குறள் (௫௮௯) ஆயா - ஆய்ந்து. வாயவும் - வாய் மொழிகளும். இர - இரவு. செருமேம்தோன்ற - போரில் மேம்பாடுறற் பொருட்டு. மிலேச்சமன்னர் பலராதல் தோன் றத் தலைத்தலை வந்து என்றார்.

(இதுவுமது)

௫௭ - ௬௪ : வேண்டா.........கோண்மோ

(பொ - ரை.) "ஆதலாலே அவ்வாறு நாம் ஆருணியரண் மனையை இரவிற் சூழ்ந்து கொண்டு போராற்றல் வேண்டாவாம்.

இவ்விடத்தே மீண்டும் யான் கூறுமிச்செய்தியைக் கூர்ந்து கேட்கக் கடவை காண்!" என்று கூறி வளைந்த விற்படையேந்திய அவ்வருடகாரனுக்கு உயர்ந்த புகழையுடைய வெற்றியையுடைய அவ்வுதயணமன்னன் கூறுவான் "அமைச்சனே! நீ நினக்கும் எனக்கும் உட்பகைமை உண்டென்று இவ்விடத்தே எய்தியுள்ள நம் படைஞர்க்கெல்லாம் விளங்கும்படி கூறிவிட்டு அப்பகைமை காரணமாகப் போவோய் போன்று என்னை விட்டு நம் பகைப் புலத்தே செல்லக் கடவை; சென்று அவ்விடத்தே அவ்வாருணியரசனுக்குச் சுற்றத்தாராகிய அவன் அன்பர் உளராயவிடத்தே அவரோடும் செறிந்த கேண்மையுடையையாய் விடுக! அங்ஙனம் ஆயபின்னர் அவர் வெளியிடும் மொழிகளையும் கேட்டுணர்ந்து கொள்க" என்க.

(வி - ம்.) அஃது - முன்னர் யாம் செய்திருந்த முடிவு. இது இப்பொழுது யான் ஆராய்ந்து தெளிந்த செயலை. வாங்கு - வளைந்த. நீப்பு - உட்பகை. இவண் - இவ்விடத்து. நமர் - நம்படைத்தலைவர் முதலியோர். அவற்கு: ஆருணியரசனுக்கு. பாங்காகிய ஆர்வலர் - பக்கத்தேயுள்ள அன்பர். மிகச்செறிவுடையையாய் விடு - மிகவும் நெருங்கிய நண்பனாய் விடு. மதி: முன்னிலையசை. விடூஉம் - அவர்கள் வெளியிடுகின்ற. கொண்மோ - மோ: முன்னிலையசை.

(இதுவுமது)

சூ௺ - எச: ஆசில்.........உரைக்கும்

(பொ - ரை.) "நீ அப்பகைப் புலத்தார்க்கு நின் அரசன் தருசகனுடைய வாய்மொழியாக இவ்வாறு கூறுக: மணிகள் பதித்த அழகிய பசிய அணிகலன்களையணிந்த மகத மன்னனாகிய தருசகன் (எஅ) அமைச்சனே! குற்றமற்ற செங்கோன்மையையுடைய அவந்தியரசனாகிய பிரச்சோதன மன்னனுடைய இளமகள் வாசவதத்தையை அவ்வுதயணமன்னன் வலிந்து கைப்பற்றிக் கொண்ட முன்னாளிலே அங்ஙனம் அம்மன்னனுக்குப் பழியுண்டாக்கிய உதயணனை யானே சென்று சிறைப்பிடித்துக் கொண்டு நம்முடைய இவ்விராசகிரிய நகரத்திற்குக் கொணர்வேன் என்று யான் சொல்லிய சொல் உலகமுழுவதும் பரவிய காலத்தே, அவற்றைத் தன் ஒற்றர்கள் கேட்டு ஒரு சேரக் கூறினராக அவ்வுதயணகுமரனும் அவருரையை மெய்யென்று கேட்டு உலையில் வெந்த இரும்பு தான் உண்ட நீரைப் பின் வெளிவிடாததுபோன்று அச்செய்தியைத் தன்மனத்தினுட் கொண்டு அது வெளிப்படாமல் அடக்கி நம்மிடத்து வஞ்சகமாய்த் தன் காரியம் முடியுமளவும் தனது அன்பினை வெளிப்படுத்தி ஒழுகுவானாயினன்; ஆதலின் அவன் நம்மிடத்தே பேசும் பொழுதெல்லாம் நன்கு இனிதாகவே மொழிகின்றனன்" என்க.

(வி - ம்.) ஆசு - குற்றம். அவந்தியன் - அவந்தி நாட்டரசனு இய பிரச்சோதனன். மடமகள் - இளமகள்; மடப்பமுடைய மகளுமாம். மேனுள் - அங்கிகழ்ச்சி நிகழ்ந்த முன்னுள். அவனை - அங்ஙனம் பழிச் செயல் செய்த உதயணனை என்க. பற்றுபு - பற்றி. அப்பிரச் சோதனன் நம்முறவினன் ஆதலின் அவனுக்குச் செய்த தீமை நமக்குச் செய்ததாகவே யான் கருதியதனுல், நம்பதி தருகுவேன் என்று கூறினேன் என்பது கருத்து. உலகு - உலகில் வாழ்மாந்தர். மொய்த்து - மொய்ப்ப - பரவ; ஒற்றர் தருதலின் என்க. இரும்புண்ட நீரின் - வெந்த இரும்புண்ட நீரை அவ்விரும்பு வெளிவிடாதது போல என்க. மறைந்தனன் - மறைத்தனன். தன் குறை - தன் காரியம். முடி துணை - முடியுமளவும். தான் : அசையுமாம்.

(இதுவுமது)

எச - அக : ஆயினும்.........ஆகும்

(பொ - ரை.) "அவ்வுதயணன் அங்ஙனம் இனிதாகவே பேசினும் 'வெஞ்சொன் மாற்றம் வேந்தரை யுரைத்தோர் அஞ்சுக' என்னும் ஒரு பழமொழியுண்டாகலான, அம்மொழிப்படியே நீ அவன் மொழி கேட்டுழி நெஞ்சு நெகிழ்ந்து அவற்றைத் தெளியாதே கொள்! இவ்வறிவுரையை மறந்து விடாமல் அவனேடு செல்வாயாக என்று எங்கோமகன், எனக்குக் கட்டளையிட்டமையால் அதனை மருது யானும் அவ்வுதயணனுக்குத் துணைப்படை போல வந்தேன்; அங்ஙனம் அம்மகத மன்னன் என்னை இவனேடு உய்த்ததும், இவ்வுதயண மன்னன் தானே வந்து எமக்குச் செய்த ஒரு நன்றிக் கடமை அத்தருசக மன்னன் உடையனுய் இருந்ததனுலே தான்"; என்க.

(வி - ம்.) "வெஞ்சொன்மாற்றம் வேந்தரை யுரைத்தோர் அஞ்சுக" என்னும் இத்தொடர் ஒரு பழமொழி. நாம் அவ்வுதயணனைப் பற்றி வெஞ்சொல் கூறியுள்ளேம். ஆதலின், அவனுக்கு நாம் எப்பொழுதும் அஞ்சியே இருத்தல் வேண்டும். எப்பொழுதும் அவன் செவ்வி பார்த்துத் தீங்கு இயற்ற முற்படுதல் இயல்பு என்பது கருத்து. மற்றதும் - அங்ஙனம் அம்மன்னன் ஏவியதும். அன்னவன்: அவ்வுதயணன்.

(இதுவுமது)

அ௨ - அகூ : அன்னவன்.........இல்லை

(பொ - ரை.) மீண்டும் அவ்வுதயணன் வருடகாரனை நோக்கி "நண்பனே! இன்னும் இம்மொழிகளையும் நீ நின் அரசன் கூற்றாகவே அப்பகைவரிடத்துக் கூறுக!" என்று அறிவுறுத்துபவன், "வருடகார! கேள் அவ்வுதயணன் தன்னைத்தானே பெரிதும் மதித்துக் கொண்டு மிகவும் செருக்குற்றிருக்கின்றுன். அதனுல் பெரியோருடைய மேலான மொழிகளையும் பேணுகின்றிலன்.

போர்வெல்லுதற்குக் காரணமான உறுதிமொழியினையும் அதற்கேற்ற செயல்களையும், நம்மோடிருந்து ஆராய்தலை விரும்புகின்றிலன். தானே துணிந்து செய்யும் செயல்களையும் உறுதியாகச் செய்கின்றிலன். எனவே அவன் கெடுதல் ஒருதலை. அங்ஙனம் கெட்டுழிப் பழி நம்மேல் வருதலுமில்லாமல் நாமும் ஆராய்ந்து அவன் வழியே செல்க" என்று யாமும் துணிந்து விட்டுவிட்டேம். அவன் தான் செல்லும் வழியிற்றானே சென்று தன் வலியை அறியாதவனாய்த் தன்பகைவரால் அழியுமிடத்தும் நமக்குக் கேடொன்றும் இல்லை. ஆதலின்'' என்க.

(வி - ம்.) அன்னவன் : அவ்வுதயணன். பிறர் என்றது நம்மனோராகிய பிறர் என்றவாறு, செருமீக் கூற்றம் - போர்க்குக் காரணமான மிகைச் சொற்களுமாம். ஒரு தலையாக - உறுதியாக நம்மேல் பழிவருதல் இல்லாமைப் பொருட்டு என்க. நாமும் எண்ணி அவன் வழியே விட்டனம் என்க. ஆதலின் அவன் அழியினும் நமக்கு அழிவது ஒன்றில்லை என்றவாறு.

(இதுவுமது)

௯௦ - ௯௭ : ஆனிலை.........விட்டபின்

(பொ - ரை.) "அந்த நிலையிலே அவன் அழிவுறாமல் இந்த நிலையிலேயே அவனுடைய பகை மன்னர்கள் தம் படையோடு வந்து தாக்குவாராயின் அவ்வுதயணன் சோர்வுற்றழிதல் ஒருதலை. அங்ஙனம் அழியுமிடத்தும் யாம் பெரிதும் மகிழ்வேம்' என்று இம் மொழிகளையெல்லாம் எங்களரசன் என்பால் திண்ணமாகக் கூறினன். என்றும், அம்மன்னவன் தன்னோடு கேண்மையாலே தொடர்ந்த மன்னர்களையும் கூட்டிக் கொண்டு உதயணனுக்குத் துணையாக வந்திலனேயாயினும், யான் இங்குச் செய்யும் செயலையெல்லாம் வாய்மை என்றே கருதுவான் என்று அப்பகைவர் வாயிலாகக் கூறி அவ்வாருணி மன்னன் ஐயமின்றித் தெளியும்படி அவன்பால் இச்செய்தியை விட்டபின்னர்'' என்க.

(வி - ம்.) ஆனிலை - அந்தநிலை. ஈனிலை - இந்தநிலை. பற்றாமன்னர் - அவ்வுதயணனுடைய பகை மன்னர். அற்றப்படூஉியர் - சோர்வுபடுவான். அதனினும் - அங்ஙனம் சோர்வு படுதலானும். அவனுழை - ஆருணியரசனிடத்து. விட்டபின் - செய்திகளை முடித்த பின்பு.

(இதுவுமது)

௯௮ - ௧௦௩ : மெய்.........பூட்டுதும்

(பொ - ரை.) வருடகார! அவ்வாருணி மன்னன் நீ விடுத்த செய்திகளை மெய்யென்றே தெளிந்து மீண்டும் அவன் நின்பால்

விடுத்த தொழிலாளர்களை அழைத்துக்கொண்டுவந்து ஓரிடத்தே வைத்துப் பாதுகாத்து நெருங்கியிருக்கச் செய்து அச்செயலை யாம் அறியும்படி தூதுவரை விடுப்பாயாக. யாம் அறிந்தபின் நமர்களைக்கொண்டு யாம் அவர்களைச் சிறையாகப் பிடித்துக் கொண்டுவந்து இவர் நம் பகைமன்னனாகிய ஆருணியினுடைய ஒற்றராவர் கண்டீர்! என்று கூறி நம் படைத்தலைவர் முதலியோர்க்கு அறிவுறுத்தி ஒரு குற்றத்தை அவர் மேலேற்றி அவரைக் கொலை செய்யும் கடமையை மேற்கொள்வாம்''; என்க.

(வி - ம்.) கருமமாக்கள் - வினைசெய்யும் மாக்கள். எமக்குத் தூது விடுக்க என்க. பற்றுமன்னன் : ஆருணி. நம் படைத்தலைவர் முதலியோர்க்கு அறிவுறீஇ என்க. கொலைக்கடம் - கொலைசெய்தலாகிய கடமை.

(இதுவுமது)

௧௦௪ - ௧௧௨ : தெற்றென.........புக்கபின்

(பொ - ரை.) அங்ஙனம் நின்னுடைய நண்பர்களை யாங்கள் கொண்டுழி அப்பகைப்புலத்தார் நினக்கும் எனக்கும் உள்ள பெரும் பகையை உணர்ந்து கொண்டவராய் விரைந்து நின்பால் தெளிவுடையராகி இச்செய்தியை யறிந்து நம்மோடு நெருங்கிப் போர் செய்யும் பொருட்டு தம்மரசன்பாற் சென்று கூறுகிற்பர். இக்காரியங் காரணமாக நீ எம்மினின்றும் பிரிந்திருத்தல் பெரிதும் பொருந்துவதொன்றும். மேலும் அவ்வொற்றர் காரணமாகவே யாங்களும் பகைவர் வரவினைத் தெளிந்து கொண்டேம் போலவும், சுமையேற்றப்பட்ட வண்டிகளையும் எமது பாசறைக் கொட்டில்களையும் அவித்தற்கரிய தீயினைக் கொளுவி விட்டு அப் பகையரசனுக்கு அஞ்சினேம் போல ஆகி அப் பகைவர்க்குத் தப்பி உயிர் வாழ்தற்குமலைகளே அரணுவதல்லது வேறு நிலையாய அரண்கள் இல்லையென்று அப்பகைவன் கருதும்படி யாங்கள் 'தவதிசயந்தம்' என்னும் மலைசெறிந்த இடத்திற் புகுவேம். அங்ஙனம் யாங்கள் அம்மலையரண் எய்திய பின்னர்; என்க.

(வி - ம்.) தெற்றெண - விரைய, நின்வயின் - நின்பால். உற்றோர் - ஆருணியின் நண்பராகிய அப்பகைப் புலத்தார் என்க. உற்றோர் நினக்கும் எனக்கும் உறுபெரும் பகைமையுணர்ந்து நின்வயின் தெளிந்தனராகிச் சென்றனர்; செறுவு கொள்வதற்கு இசைப்ப என மாறிக் கூட்டுக. இது - இச்செயல். இகத்தல் பொருந்தும் - நீ எம்மைப் பிரிந்திருத்தல் அப்பகைவர்க்குப் பொருத்தமாகத் தோன்றும். அதுகாரணத்தின் - அப்பகைவர் வரவு காரணமாகக்கொண்டு என்க. தெளிவேம் - தெளிவேம்போல. பாரப்பண்டி - சுமையேற்றிய வண்டி. பாடிக் கொட்டில் - பாசறை வீடு. ஆரெரி - அவித்தற்கரிய நெருப்பு.

அஞ்சினேம்போல ஆகி என்க. தவதி சயந்தம் : ஒரு குறிஞ்சி நிலப் பகுதி.

(இதுவுமது)

ககரு - கஉ0 : மிகுதி........பின்றை

(பொ - ரை.) "அப்பொழுது எங்களுடைய மிக்க அச்சத்தை மீண்டும் அவ்வாருணி மன்னனுக்கு எடுத்துக்காட்டி ஆருணி வேந்தன் இப்பொழுதே போர்க்கு எழுந்து வருக! அவ்வுதயண மன்னன் நிலை கலங்கியிருக்கின்ற இப்பொழுதே யாம் அவனைத் தூரத்திச் சென்று அவன் இதுகாறும் பெற்றுள்ள வெற்றிப் பெருமை அழிந்து போம்படி அவனை யாம் வென்று அகற்று வோம் என்று நீ கூறு மளவிலே, அதுகேட்ட அம்மன்னவன் பிறர் தடுப்பினும் தடையுண்ணாத பெரும் விருப்பத்தையுடையவ னாகித் தானே போருக்குப் புறப்படுவன். அங்ஙனம் புறப்படுங் கால் நின்னுடைய சூழ்ச்சியாலே அம்மன்னனைப் போன்ற மாண்பு மிக்க துணை வேந்தர்களை அரண்மனையைக் காத்தற்பொருட்டு மதிலினுள்ளேயே நிறுத்திவைத்துப் பின்னரும் மதிலுக்கு வெளிப்புறத்தும் அம்மன்னன் படைகளுள் வைத்துப் போர்த் திறம் மிக்க படைகள் பலவற்றை நிறுத்திவைத்த பின்னர், எஞ்சிய கொல்லும் படைகள் சிலவற்றோடு அம்மன்னனை அழைத்துக்கொண்டு எம்மை நோக்கி வந்து நெருங்கிய பின்னர்; என்க.

(வி - ம்.) மிகுதி அச்சம் - மிகையான அச்சம். அவற்கு - அவ் வாருணி மன்னனுக்கு. பெருவிறல் - பெரிய வெற்றி. பீடு - பெருமை. கலக்கப்பொழுது - நிலைகலங்கி யிருக்கும்பொழுது. விலக்கவில்லா வேட்கையன் - பிறர் தடுக்கவும் தடையுண்ணாத விருப்பத்தையுடைய வன். புறமதில் - மதிற்புறம்.

(இதுவுமது)

கஉக - கஉக : சவரர்........உரைத்தனன்

(பொ - ரை.) "நீ அவ்வாருணியை நோக்கி, 'வேந்தே! உதயண மன்னனுக்கு உதவியாக இடவகனால் செலுத்தப்பட்ட சவரரும் நம் நகரத்தைக் கொள்ளை கொள்ளுகின்ற கொடிய தொரு தொழிலை மேற்கொண்டு நம் நகர்மேல் வருகின்றனர்' என்று அவ்வமையத்தே இடவகனால் அவ்விடத்திற்குச் செலுத் தப்படுகின்ற அச்சவரர் புளிஞருடைய படையெழுச்சியைக் காட்டி 'இப்படைகளை நமமுடைய படையுள் வைத்துப் பெரும்பகுதி சென்று கொல்லுதல் வேண்டும்' என்று அறிவித்து, நுமபா லுள்ள அப்படையினும் கூறு கூறாகச் செய்து எத்திசையிலும் போக்குக! அங்ஙனம் போக்கியதனால் மிகச்சிறிய படையாகிய

பொழுது யாங்கள் அங்ஙனம் வந்த படையை அழிப்பேம் என்று துணிந்து அப்படையின் முன்புறமும் பின்புறமும் இருபக்கங்களும் ஆகிய நாற்பக்கங்களினும் வந்து அப்படையை நெருக்கி அவர்மேல் போர் தொடுத்து அவருடைய வலிமையைக் கெடுத்து ஓட்டுவேமாயின், நம் தலை நகரத்தை மீண்டும் நாம் கைக்கொள்ளுதல் நமக்கு மிக எளிதாம்" என்று உட்பகையுடைய உதயணன் அவ்வருடகாரனுக்குத் தன் துணிவினை அறிவித்தனன்; என்க.

(வி - ம்.) சவரர் புளிஞர் - இடவகனால் உதயணனுக்கு உதவியாக விடுக்கப்பட்ட சவரரும் புளிஞரும் என்க. மாட்டல் - மாள்வித்தல்; அகப்படுத்தலுமாம். கூறுபடப் போக்கியதனால் எஞ்சிச் சிறுபடையாகிய பொழுதில் என்க. யாங்கள் அழித்தும் என்று ஆரவாரித்து மேல் வந்து என்க. வந்தன - வந்து. அவன் : ஆருணி. கோள் - கைக்கொள்ளுதல். உள்முரண் - உட்பகை; உள்வலியுமாம்.

(வருடகாரன் செயல்)

கஉக - கசo : வணங்கி.........உரைப்ப

(பொ - ரை.) அது கேட்ட வருடகாரன் அவ்வுதயணனை வணங்கி "நன்று நன்று; பெருமான் சூழ்ச்சி பெரிதும் நன்று" என உதயணனைப் பாராட்டிச் சென்று, தன்னுடைய மறவர்களையடைந்து காவலராகிய படை வீரரைப் பார்த்து, "மறவர்களே! யாம் இப்பொழுது உதயணனைப் பாதுகாத்தற் பொருட்டு இங்கு வந்துள்ளேம். அவ்வுதயண மன்னன் தானும் முன்னொரு பொழுது ஒரு செவ்வியில் யான் வாய் காவாது கூறிவிட்ட ஒரு சுடுசொல்லைத் தன் மனத்தே வைத்துக் கொண்டு தன் உள்ளத்தே எப்பொழுதும் வெறுப்பதோடமையால், என்னைச் சிற்சில பொழுது சினக்கவும் சினக்கின்றான். என்னை ஒரு பழியுடையேனாய்த் தன் நெஞ்சத்தே கொண்டனன். என் திறத்தில் அவன் மாறுபட்டு நடக்கின்றான். அவன் அங்ஙனமாயினும் யாமோ ஒருவனைப் பாதுகாத்தற்கு உடன்பட்டு அத்தொழிலை மேற்கொண்டுவிட்டால் அக்காரியம் முடியுமளவும் அவனோடு காவல் செய்திருந்து அத்தொழில் இயலாதாய்விடின் யாம் அவன்பொருட்டுத் தீக்குழியின்கண் விழுந்து உயிர்விடினும் விடுவேம் அல்லமோ? அவன் நந்திறத்து இங்ஙனம் இருத்தல் கண்டு யாம் பெரிதும் அஞ்சுகின்றேம்! என் செய்வோம்! என்று திகைக்கவும் திகைக்கின்றேம். அவன் அங்ஙனமாயின் நங்கடமையை நாம் நன்கு செய்தல்வேண்டும். ஆதலின் பகலும் இரவும் அம்மன்னனை அகலாதே கொண்மின். அவனை நன்கு பாதுகாத்தலின்கண் சோர்வு கொள்ளாதிருமின்" என்று அவ்வருடகாரன் மனம் பெரிதும் வருந்தி உரையாநிற்ப; என்க.

(வி - ம்.) இது உதயணன் (௬௦) "நின்னொடென்னிடை நீப்பி வண் உண்டெனத் துன்னிய நமர்கட்குத் தோன்ற," கூறுக என்றவாறு, வருடகாரன் தன் காவலர்க்கு இவ்வாறு கூறுகின்றனன் என்று உணர்க. முன் நான் உரைத்த இன்னா வெவ்வுரைக்கு ஒன்னார் ஒட்டிய உதயணன் என்னை உவர்த்தலன்றியும் சிவக்கும். பழியாக் கொண்டனன்; நடை அழியினன்; என்னுந் துணையும் வருடகாரன் தன் பகைமைக்குக் காரணம் படைத்துக் கூறுகின்றனன். இன்னா வெவ்வுரை என்றது யான் வாய்காவாது கூறிய துன்பமுடைய சுடு சொல்லின் பொருட்டு என்பதுபட நின்றது. ஒன்னார் - பகைவர். உவர்த்தல் - வெறுத்தல். சிவக்கும் - சினப்பான். பழியாக்கொண்டனன் - பழியுடையானாகக் கருதினன். ஒப்புற - பாதுகாக்க. காக்கவியலாவிடின் தீக்குழியிற் குதித்து இறப்பேம் என்றவாறு. கவன்றனன் - பெரிதும் துன்புற்றோன் போல.

(சேனாபதி மகன் கூறுதல்)

கசுக - கருஉ : பலர்.........கொடுப்பன்

(பொ - ரை.) அம்மறவர்களுள் ஒருவனாக மாறுவேடத்தில் வந்திருந்தவனும் பலராலும் புகழப்படுகின்ற சிறந்த புகழையுடைய ஆருணி மன்னனோடு பகைமேற் செல்லுதலையுடைய சேனாபதியின் மகனும் ஆகிய ஒரு பகைமறவன் அவ்வருடகாரன் மொழியைக் கேட்டிருந்தவன் அவ்வருடகாரனுக்கு மறைவாகக் கூறுபவன் "ஐய! அவ்வாருணி மன்னன் இவ்வுதயணன் போன்று நன்றி மறப்பவனல்லன். அவன் என்பால் இருநூறு யானைகளையும், பொன் அணிகலன் அணிந்த மாலையணிந்த குதிரைகள்பூட்டிய ஐம்பது தேர்களையும், ஆயிரங் குதிரைகளையும் யான் நினக்கு வழங்குவேன் நீ உன்னுடைய பெயரைவைத்து இவற்றையெல்லாம் இனிதே யாள்க! என்று கூறி அவற்றின் மேலும் நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய அறுபது ஊர்களையும் பரவிய அடியையுடைய முப்பது இளைய பிடியானைகளையும், மாவடுப்போன்ற அழகிய கண்ணையுடைய அழகிய மெல்லிய முலையினையுடைய நாடகமகளிர் எண்பதின்மரையும், வழங்கி மேலும் சிறந்த பொருள்கள் பலவற்றையும் இன்னோரன்ன பிறவற்றையும் என்பால் வைத்துள்ளான். அவற்றையெல்லாம் நினக்குப் பாதுகாவலின் பொருட்டு யானே தருகுவன்"; என்க.

(வி - ம்.) பாஞ்சாலராயன் - ஆருணியரசன். செலவயர்வுடைய சேனாபதி மகன் - பகைமேற் செல்லுதலையுடைய சேனாபதி மகன் என்க. என்னுழை - என்பால். என்னுழைவிடுத்தனன் அவற்றை யான் நினக்குக் கொடுப்பேன் என்றான் என்க. பாவடி - பரவிய அடி. மாவடி மடக்கண் - மாவடுவின் பிளவுபோன்ற மடப்பமுடைய கண். ஆணம் - பாதுகாப்பு.

(இதுவுமது)

௧௫௨ - ௧௫௯ : மற்றவ்.........காட்டலின்

(பொ - ரை.) "நீ அந்த வாட்படைமிக்க சேனையையுடைய அவ்வுதயணனைக் கைவிட்டு என்னோடுகூடி எம்மில் ஒருவனாகக் கடவை. அங்ஙனம் ஆனபின்னர் அம்மன்னன் நினக்குச் செய்யும் சிறப்புக்கள் இவற்றில் வேறாய்ப் பலவாகவும் இருக்கும்" என்று அவற்றையும் தான் அறிந்த பிறவற்றையும் அவ்வாருணி மன்னன் தன்பாற் கூறி இருப்பனவும், கூறப்படாதனவும், ஆராய்ச்சியுடைய அவ்வருடகாரன் மனத்தைக் கவரும்படி அச் சேனாபதி மகன்கூறி அக்காரிய மொழிகளுக்கெல்லாம் காரணமாகிய மொழிகளையும் எடுத்துக்காட்டா நிற்ப; என்க.

(வி - ம்.) ஆள்மிகுதானையுமாம் - எம்மில் ஒருவனாக என்க. பின்னை அம்மன்னவன் செய்வன என்க. ஆருணி பகைவர் துணையைப் பிரித்தற் பொருட்டுத் தான் வழங்குவதாக உரைத்தவும் என்க. ஆராய்வாளன் - ஆராய்ச்சியையுடைய வருடகாரன்.

(வருடகாரன் கூற்று)

௧௬௦ - ௧௬௪ : ஆய்.........நீயென

(பா - ரை.) ஆராய்ச்சியையுடைய பெரும் படைத்தலைவனாகிய அவ்வருடகாரன் அவன் அழைப்பினைப் பெரிதும் விரும்பி, "ஐய! அங்ஙனமாயின் இவ்வுபாயத்தைச் சொன்ன நீயே என் பொருட்டு அம்மன்னனிடம் சென்று கூறி அவன் மொழியையும் கேட்டு அவன் துணிவதையெல்லாம் எளிமையுடையையாய் இருந்து அறிந்துகொண்டு விரைந்து என்பால் வந்து அறிவிப்பாயாயின் நீ எனக்கு ஒரு புகலிடமாகிச் சிறந்தோய் ஆகுவை" என்று வேண்டிக்கொண்டு; என்க.

(வி - ம்.) அவன் அழைப்பின்வாயிலாய்த் தான் மேற்கொண்டுள்ள காரியத்தைச் செய்துமுடிக்க வழிதேடுபவன் என்பது தோன்ற ஆய்பெருங் குருசில் என்றார் அது - அவ்வழைப்பினை. வாயது - மறுமொழி. வலிப்பதை-துணிவதனை. எளித்தனை-எளிமையையுடையையாய் இருந்து. செல்சார்வு - புகலிடம்.

(சேனாபதி மகன் ஆருணியிடம் சென்று அறிவித்தல்)

௧௬௫ - ௧௬௭ : எல்லிருள்.........உரைப்ப

(பொ - ரை.) அச்சேனாபதி மகனை அவ்விரவிலேயே ஏவாநிற்ப அவனும் விரைந்துபோய்த் தன்பால் வஞ்சகச் சூழ்ச்சியையுடைய அவ்வருடகாரன் கூறிய மொழியெல்லாம் வாய்மையென்றே கருதி அவ்வாருணி மன்னன்பாற் சென்று கூறாநிற்ப; என்க.

(வி - ம்.) எல்லிருள் - இரவிருள். ஆருணி மன்னன்பாற் சென்று என்க.

(ஆருணியின் செயல்)

௧௬அ - ௧௭௭ : கெடலு.........இவனென

(பொ - ரை.) வெல்லுதற்கரிய வெகுளியையுடைய அவ் வாருணி மன்னனுக்குப் போகூழ் அப்பொழுது தலைப்பட்டிருத்த லாலே, அச்சேனாபதி மகன்கூறிய சொற்களைக் கேட்டபொழுதே சிறிதும் ஆராய்ச்சியின்றி ஏற்றுக்கொண்டவனாய்ப் பகைவரது முகக்குறிப்பைப் பார்த்தே அவருக்கேற்றபடி பேசித் தான் கருதிச் சென்ற காரியங்களை முடித்துக்கொள்ளும் திறனுடைய சகுனி கௌசிகன் என்பவன் இங்குவருவானாக என்று வருவித்து அவ னுக்குச் சேனாபதி மகனைக் காட்டி இவன், நம்பகை மன்னனாகிய உதயணகுமரனுக்கு நண்புடையனாய் அவனை இக்கோசம்பியின் கண் நிலைநிறுத்தற்பொருட்டு அவன் படைத்தலைவனாக வந்தவ னும், தளர்வில்லாத ஊக்கத்தையுடையவனும் வளவிய தளிரா லியன்ற படலை மாலையணிந்தவனும் ஆகிய வருடகாரன் என்ப வன் இப்பொழுது அவ்வுதயணனுக்குப பகைவனாய் நம்முடைய நண்பனாய் மாறிவிட்டனன் என்னும் செய்தியோடு அவ்வருட காரன் கருதியதையெல்லாம் உறுதியாகத் தெளிந்துகொண்டு வந்து நமக்குக் கூறினன் என்று கூறி; என்க.

(வி - ம்.) கெடலூழ் - போகூழ்.

"ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி" (குறள். ௩௭௧)

"பேதைப்படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ ழுற்றக் கடை" (குறள். ௩௭௨)

என்னும் பொன்மொழிகட்கிணங்க ஆராய்ந்து துணியவேண்டிய அம் மன்னவன் கெடலூழ் தலைப்பட்டிருத்தலின் கேட்டபொழுதே ஆரா யாது தெளிந்தனன் என்றார். முகன் - முகக்குறிப்பு. முன்னியது - கருதிய காரியம். சகுனி கௌசிகன் : ஒரொற்றன். ஒட்டா மன்னன்- பகை மன்னன். நட்டானாகி - நண்பு செய்தவனாய். நாட்ட - நிலை நிறுத்த. இவன் - இச்சேனாபதி மகன்.

(இதுவுமது)

௧௭அ - ௧அ௫ : சென்றவன்.........மறைந்தேன்

(பொ - ரை.) தன்பால் வந்தவனாகிய அச்சேனாபதி மகனை அச்சகுனி கௌசிகனுக்குக் காட்டி.........................அச்சகுனி கௌசிகனோடு வேறு மூவரையும் சேர்த்து 'நீவிர் நால்வரும் இவ னுடன் சென்று நம் பகைவர் மேற்கொண்டுள்ள செயலின்கண்

நாம் அறிதற்கு வேண்டிய பொருளையெல்லாம் நீவிர் நம் பகைப் புலத்திற்சென்று இன்னும் நன்று அறிந்து வாருங்கோள்!" என்று பணிப்ப, அதுகேட்ட அந் நன்றறிவாளர் நால்வரும் "எம்பெருமான் அருளியதெல்லாம் ஆகுக" என்று அம்மன்னனுடைய திருவடிகளைப் பணிந்து மாறுவேடங் கொண்டு அவ்விருளினூடே சென்று அவ்வருடகாரனையடைந்தனர்; என்க.

(வி - ம்.) சென்றவன் : தன்பால் வந்த சேனாபதி. நால்வர் - சகுனி கௌசிகனும் வேறு மூவரும். அருளியதெல்லாம் - கட்டளையிட்ட காரியமெல்லாம். அவன் : வருடகாரன். மறைந்து - மாறு வேடங்கொண்டு.

உகு. அரசமைச்சு முற்றிற்று.

---

௨௬. பாஞ்சாலராயன் போதரவு

இதன்கண்: ஆருணியால் வருடகாரனோடு மறைவாகச் செலுத்தப்பட்ட தூதுவர் நால்வரையும் வருடகாரன் அழைத்துப் போய் ஒரு குகையின்கண் வைத்தலும், அவர் அறியாமல் அச்செய்தியை வருடகாரன் உதயணனுக்குக் கூறிவிடுதலும், உதயணன் தன் மறவர்களை விடுத்துப் பற்றிக்கொணர்வித்தலும், அவருட் சிலரைத் தீக்குழியிற் றள்ளிக் கொல்வித்தலும், பின்னர் உதயணன் உட்பகைக்கஞ்சி வேறிடம் புகுபவன்போலத் தானிருந்த தூம்பையையும் கொளுத்திவிட்டுப் படையாளரோடும் அடிமைத் திரளோடும் ஒரு மலையரணை யடைதலும், வருடகாரன் பகைவர்பால் நடித்தலும், ஆருணியரசன் வருடகாரன் கூறியபடி தான் அரண்மனையைக் காவலுறுத்திப் படையோடு போர்க்கெழுந்து நகர்ப்புறத்தே வருதலும், ஆருணியை வருடகாரன் காண்டலும் ஆருணி வருடகாரனுக்குச் சிறப்பு வழங்குதலும், கூறப்படும்.

மறைந்தனர் வந்து மாற்றோன் றூதுவர்
செறிந்த சூழ்ச்சியிற் செய்வது கூறலும்
உவந்த மனத்த னூன்பாற் படுவனை
ஒடுங்கிநீ ரிருக்கென வொளித்தனன் வைத்துத்
தார காரியைத் தரீஇ நீசென்
றார்கடற் றானை யுதயணற் குறுகி
எண்ணிய கரும மெல்லாந் திண்ணிதிற்
றிரித லின்றி முடிந்தன வதனால்
பரிதல் வேண்டா பகைவன் றூதுவன்
சகுனி கௌசிகன் றன்னை யன்றியும்
விசயவில் லாளரை விடுத்தனன் விரைந்தென்
றோடினை சொல்லென நீடுத லின்றி
வகைமிகு தானை வத்தவற் குறுகித்
தகைமிகு சிறப்பிற் றார காரி
உணர்த்தா மாத்திர மனத்தகம் புகன்று
பிங்கல சார மாணி முதலாப்
பைங்கழன் மறவர் பதின்மரைக் கூஉய்
ஆடியல் யானை யாருணி தூதுவர்

மாடியங் தானை வருட காரனோடு
கூடிய வந்தனர் கொணர்மின் சென்றேன
நிறைநீ ரகவயிற் பிறழுங் கெண்டையைச்
சிறுசிர லெறியுஞ் செய்கை போல
உறுபுக ழுதயணன் றறுகண் மறவர்
பற்றுபு கொண்டுதங் கொற்றவற் காட்ட
இடவகன் கையு ளிருக்க விவரெனத்
தடவரை மார்பன் றலைத்தா ளுய்ப்ப
அந்தி கூர்ந்த வந்தண் மாலைச்
செந்தீ யீமஞ் செறியக் கூட்டி
அகணி யாகிய வாய்பொருட் கேள்விச்
சகுனி கௌசிகன் றன்னொடு மூவரை
இடுமி னென்றவன் கடுகி யுரைப்ப
நொடிபல வுரைத்து நோக்குதற் காகா
அடலெரி யகவயி னார்த்தன ரிடுதலும்
உள்ளுடைக் கடும்பகை யுட்குதக் கன்றென
நள்ளிரு ளகத்தே பொள்ளென வுராஅய்
இன்கட் பம்பை யெருஉக்குர லுறீஇ
இருந்த குரம்பை யெரியுண வெடுப்பிக்
கருவியு முரிமையுங் காப்புறத் தழீஇ
அருவி மாமலை யரணென வடைதலின்
மறஞ்சால் பெரும்படை வருட காரனும்
அறஞ்சால் கேண்ணிய தவப்பட் டதுவெனக்
கைவிரல் பிசைந்து செய்வதை யறியான்
வந்தோர் தெளிய நொந்தன னுவல
உய்ந்தோ ரோடி யூரகங் குறுகிப்
பைந்தார் வேந்தனைக் கண்டுகை கூப்பி
அகலா தாகிய வரும்பெறற் சூழ்ச்சிச்
சகுனி கௌசிகன் சார்ச்சியை முன்னே
உதையண னுணர்ந்து புதைவனர்த் தம்மெனத்
தமர்களை யேவலி னவர்வந் தவரைக்
கொண்டனர் செல்ல வண்டலர் தாரோன்
விடைப்பே ரமைச்சனுழை விடுத்தலின் மற்றவன்
கண்டவர் நடுங்கத் தண்டந் தூக்கி

இன்னுயிர் தபுக்கென வெரியகத் திட்டதும்
பின்னர் மற்றவன் பெருமலை யடுத்ததும்
நம்மோடு புணர்ந்த நண்புடை யாளன்
எம்மோடு போதந் திப்பாற் பட்டதும்
இன்னவை நிகழ்ந்தவென மன்னவற் குரைப்ப
அயிர்த்தவ னகன்றன னுதலி னிவனொடு
பயிர்ப்பினி வேண்டா பற்றுத னன்றெனப்
பெயர்த்தவன் மாட்டுச் செயற்பொரு ளென்னென
அகத்தர ணிறையப் பெரும்படை நிறீஇப்
புறப்படப் போந்தெற் புணர்க புணர்ந்தபின்
செறப்படு மன்னனைச் சென்றன நெருக்குதும்
என்றனன் விடுத்தலி னன்றென விரும்பிக்
கோயிலு நகரமுங் காவலு ணிறீஇக்
காழா ரெஃகமுதல் கைவயிற் றிரீஇயர்
ஏழா யிரவ ரெறிபடை யாளரும்
ஆறா யிரவ ரடுகடு மறவரும்
வீறார் தோன்றலொடு விளங்குமணிப் பொலிந்தன
ஆயிரந் தேரு மடர்பொன் னோடையொடு
சூழியிற் பொலிந்தன பாழியிற் பயின்றன
ஐந்நூ றியானையு மகிழ றகற்சிய
ஆர்க்குந் தாரொடு போர்ப்படை பொலிந்தன
மிலேச்ச ரேறித் தலைப்படைத் தருக்குவ
ஒருபதி னாயிரம் விரைபரி மாவும்
முன்ன வாகத் தன்னொடு கொண்டு
நாவாய்ப் பெருஞ்சிறை நீர்வாய்க் கோலிச்
சாந்தார் மார்பிற் சாயனுஞ் சாயாக்
காந்தா ரகனுங் கலக்கமில் பெரும்படைச்
சுருங்காக் கடுந்திறற் சூர வரனெனும்
பெரும்பேர் மறவனும் பிரம சேனனும்
அரும்போ ரண்ணலு மவர்முத லாகப்
பெரும்படைத் தலைவரும் பிறருஞ் சூழப்
பூரண குண்டல னென்னு மமைச்சனொ
டாருணி யரசன் போதர வறிந்தபின்
அடக்கருஞ் சீற்றத் தாருணி கழலடி

வடுத்தீர் வருடகன் வணங்கினன் காண
எடுத்தனன் றழீஇ யின்னுரை யமிர்தம்
கொடித்தேர்த் தானைக் கோமான் கூறி
இருக்கென விருந்த பின்றை விருப்போ
டாய்தார் மார்ப னீர்வயி னிரைத்த
நாவாய் மிசையே மேவா ருட்கப்
பதினா றுயிர ரடுதிறன் மறவரும்
அதிராச் செலவின வாயிரங் குதிரையும்
முதிரா யானை முந்நூற் றறுபதும்
காணமும் வழங்கி நாணு டோறும்
ஊனிடை யறுமை யுணாத்தந் திடூஉம்
சேனை வாணிகஞ் செறியக் காக்கென
வல்வினைக் கடுந்தொழில் வருட காரன்
செல்படைக் குபாயஞ் செறியக் கூறி
மறுகரை மருங்கிற் செறியப் போக்கிப்
பாஞ்சால ராயனைப் பாங்குறக் கண்ணுற்
றும்பாற் கரும மாண்புறக் கூற
அருஞ்சிறைத் தானை யாருணி யரசனிற்
பெருஞ்சிறப் பெய்தி யிருந்தன னினிதென்.

௨௬ பாஞ்சாலராயன் போதரவு முற்றிற்று.

உரை

௨௬. பாஞ்சாலராயன் போதரவு

அஃதாவது: ஆருணி மன்னன் உதயணன்மேல் போர்க்கு வருதலைக் கூறும் பகுதி என்றவாறு.

(வருடகாரன் செயல்)

௧ - ௫ : மறைத்தனர் .... தரீஇ

(பொ - ரை.) ஆருணி மன்னன் விடுத்த சகுனி கௌசிகன் முதலிய நால்வரும் தம்மைப் பிறர் காணாதபடி வந்து வருடகாரனைக் கண்டு அத்தூதுவர் அடக்கமுடைய தனது சூழ்ச்சியினாலே செய்வதற்குரிய செயலை வருடகாரனுக்குக் கூறினராக, அவன்

அவர் மொழிகேட்டு மகிழ்ந்த மனத்தையுடையவனாய், "ஐயீர் நீவிர் ஊங்குள்ள இக்குகையினுள் மறைந்திருக்கக்கடவீர்" என்று கூறி அவர்களை அக்குகையினுள் மறைத்துவைத்து அவர் அறியாமல் தாரகாரி என்னும் அமைச்சனை வரவழைத்து; என்க.

(வி - ம்.) மாற்ருேன் - ஆருணி. வருடகாரனுக்குக் கூறலும் என்க. ஊன்பால் - உவ்விடத்தே. படுவளை - அமைந்துள்ள குகை. தாரகாரி - தருசகனுடைய அமைச்சன். தரீஇ - தருவித்து; அழைப்பித்து.

(இதுவுமது)

ரு - கஉ : நீசென்று .... சொல்லென

(பொ - ரை.) "ஐய! நீ சென்று இயங்குகின்ற பெரிய கடல் போன்ற படையையுடைய உதயணமன்னனையணுகி நாம் கருதிய காரியம் எல்லாம் உறுதியாகச் சிறிதும் பிறழ்தலின்றி நிறைவேறின. ஆதலாலே வருந்துதல் வேண்டா. இப்பொழுது நம் பகைவனாகிய ஆருணி தன் தூதுவனாகிய சகுனி கௌசிகன் என்பவனையும் மேலும் வெற்றியுடைய வின்மறவர் மூவரையும் நம்பால் விடுத்துள்ளான்" என்று விரைந்து ஓடிச்சென்று கூறுவாயாக என்று அவ்வருடகாரன் கூருநிற்ப; என்க.

(வி - ம்.) ஊர்கடல்: வினைத் தொகை. திரிதலின்றி - பிறழ்தலின்றி. பரிதல் வேண்டா - வருந்துதல் வேண்டா. பகைவன் - ஆருணி தூதுவனாகிய சகுனி கௌசிகன் என்க. விசய வில்லாளர் - வெற்றியையுடைய வின்மறவர்.

(தாரகாரியின் செயல்)

கஉ - கரு : நீடுதலின்றி .... மாத்திரம்

(பொ - ரை.) அதுகேட்ட பெருந்தகைமை மிக்க சிறப்பினையுடைய தாரகாரி காலந்தாழ்த்தலின்றிப் பல்வேறு வகையான் மிக்க படையினையுடைய வத்தவ மன்னனை யணுகி அச்செய்தியை உணர்த்துமளவிலே; என்க.

(வி - ம்.) நீடுதலின்றி - காலந்தாழ்த்தலின்றி. வத்தவன் - உதயணன். தகை - பெருந்தகைமை.

(உதயணன் செயல்)

கரு - உ௦ : மனத்தகம் .... சென்றன

(பொ - ரை.) அதுகேட்ட உதயண மன்னன் தன்னுள்ளுள்ளே உவந்து பிங்கலசாரமாணி என்னும் தலைவனையுள்ளிட்ட

பசிய வீரக்கழல் கட்டிய மறவர் பதின்மரை யழைத்து, "மறவர் காள்! அசையும் இயல்புடைய யானையையுடைய ஆருணி மன்னனுடைய தூதுவர் மெய்க்காப்புடைய படையையுடைய வருடகாரனோடு கேண்மை கொள்ளுதற்கு வந்துள்ளனர். அவரை நீவிர் சென்று பற்றிக்கொடு வாருங்கோள்!" என்று கட்டளை யிடா நிற்ப; என்க.

(வி - ம்.) பிங்கலசாரமாணி - ஒரு தலைவன். கூஉய்-அழைத்து. ஆடியல் - அசையுந்தன்மை. மாடியம் - மெய்க்காப்பு: கவசம். "மாடியந்தானை மன்னர்" (சீவக. ருகூஎ) என்புழியும் அஃதப் பொருட்டாதல் உணர்க. கூடிய - கூடுதற்கு.

(மறவர் செயல்)

உக - உச: நிறைநீ .... காட்ட

(பொ - ரை.) அக்கட்டளையை மேற்கொண்ட மிக்க புகழையுடைய உதயணனுடைய அஞ்சாமையையுடைய அம்மறவர்கள் அப்பொழுதே சென்று நிறைந்த வெள்ளத்தின்கண் நீரினுள்ளே பிறழாநின்ற கெண்டைமீனைச் சிறிய மீனகொத்தும் குருவி, காலால் எறிந்து எடுக்கும் செயல்போல அத்தூதுவரை எளிதாகப் பற்றிக் கொணர்ந்து தம்மரசனுக்குக் காட்டா நிற்ப; என்க.

(வி - ம்.) நிறைநீர் - வெள்ளம். சிரல் - மீன்கொத்தும் குருவி. உறுபுகழ் - மிக்கபுகழ். தறுகண் - அஞ்சாமை. பற்றுபு - பற்றி. கொற்றவன்: உதயணன்.

(உதயணன் செயல்)

உரு - உகூ: இடவகன் .... உய்ப்ப

(பொ - ரை.) அத்தூதுவரைக் கண்ட பெரியமலை போன்ற மார்பினையுடைய உதயணன் இத்தூதுவர் இடவகன் கையகத்தே இருப்பாராக என்று அம்மறவருக்குக் கூறி அவ்விடவகன் முன்னிலையில் அவரைச் செலுத்தாநிற்ப; என்க.

(வி - ம்.) கையுள் இருக்க என்றது அவன் பார்வையில் இருப்பாராக என்றவாறு. மார்பன்; உதயணன். தலைத்தாள்: முன்னிலை.

(இடவகன் செயல்)

உஎ - கூகூ: அந்தி .... இடுதலும்

(பொ - ரை.) செக்கர் வானம் மிக்க அழகிய குளிர்ந்த மாலைப் பொழுதிலே சுடுகாட்டின்கண் சிவந்த நெருப்பை நிரம்ப மூள்வித்து நம் கைப்பட்ட ஆராய்ந்த நூற்பொருட் கேள்வியை

யுடைய இந்தச் சகுனி கௌசிகன் என்பவனோடு இவருள் வைத்து மூவரை அத்தீயினுள் இட்டுக் கொல்லுங்கோள்! என்று அவ்விடவகன் என்னும் அமைச்சன் விரைந்து கட்டளையிடா நிற்ப, அது கேட்ட அம்மறவர்கள் அத்தூதுவரை நொடிச் சொல் பற்பல கூறி இகழ்ந்து பற்றிக் கொடு போய்ச் சுடுகாட்டின் கண் வளர்த்த காண்டற்கு மியலாத கொலை நெருப்புனூடே ஆரவாரித்துக் கொண்டு அவருள் மூவரைத் தள்ளிக் கொல்லாநிற்ப; என்க.

(வி - ம்.) அந்தி - செக்கர் வானம். ஈமம் - சுடுகாடு. அகணி - அகப்பட்டவன்; ககணி என்றும் பாடம். இதற்கு வானத்திலுள்ள பொருள்களின் இயக்கத்தையறிபவன் என்று பொருள் கொள்க. நால்வருள் வைத்து மூவரையிடுக என்றது ஒருவன் போய் இச் செய்தியை ஆருணிக்குக் கூறுக என்னுங் கருத்தால் என்க. கடுகி - விரைந்து நொடி - அசதி மொழி; டரிகாச மொழி. நோக்குதற்கும் ஆகா எனல் வேண்டிய உயர்வு சிறப்பும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. அடலெரி - கொல்லுதலையுடைய நெருப்பு.

(உதயணன் செயல்)

௩௪ - ௩௯ : உள்ளுடை .... அடைதலின்

(பொ - ரை.) பின்னர் உதயணன் தன் படை மறவர்களைப் பார்த்து, "மறவீர்! புறப்பகையினுங் காட்டில் உட்பகையே ஒருவனுக்குக் கடும் பகையாம். அப்பகை அஞ்சத் தக்கதே" என்று அனைவரும் உணரக் கூறி நள்ளிரவிலே ஞரேலென்று சென்று இனிய ஓசையுடைய பம்பையை முழக்கி ஓசையுண்டாக்கித் தாங்கள் தங்கியிருந்த குடிசைகளைத் தீயுண்ணும்படி கொளுத்தி விட்டுத் தம்முடைய படைக்கலன்களோடு, பரிவாரங்களையும் பாதுகாப்போடு அழைத்துக் கொண்டு அவ்விடத்தினின்றும் சென்று அருவியையுடைய பெரிய மலையாகிய 'தவதி சயந்தம்' என்னும் மலையைத் தமக்கு அரணாகக் கொண்டு எய்தாநிற்றலால்; என்க.

(வி - ம்) உள்ளுடைக் கடும்பகை - உட்பகை. உட்கு தக்கன்று - அஞ்சத் தகுந்தது. எருஉக்குரல் - தாக்குதலால் உண்டாகும் ஒலி. குரம்பை - குடிசை. எரி - நெருப்பு. எடுப்பி - வளர்த்து. கருவி - படைக்கலம். உரிமை - பரிவாரம். மலை: தவதி சயந்தம் என்னும் மலை.

(வருடகாரனது நடிப்பு)

௪௦ - ௪௩ : மறஞ்சால் .... நுவல

(பொ - ரை.) இந்நிகழ்ச்சியை உணர்ந்து கொண்டு வீரமிக்க பெரிய படையையுடைய அவ்வருடகாரனும் ஆருணிமன்னனிடத்

திலிருந்து தன் பால் வந்த பகைப் புலத்தார் தன்னை ஐயுறாமல் தெளிந்து கொள்ளும் பொருட்டு, "அந்தோ! அறம் சிறக்க; யாம் நினைத்த காரியம் கெட்டொழிந்தது" என்று கூறித் தன் கைவிரல்களைப் பிசைந்து கொண்டு இனிச் செய்வது என்ன என்று தெரியாது திகைப்பான் போன்றும் பெரிதும் மனம் நொந்தவன் போன்றும் கூறாநிற்ப; என்க.

(வி - ம்.) அறம் சால்க - தருமம் சிறக்க. என்னுமிது அப்பகைவர் தான் செய்யும் செயலெல்லாம் அறத்தின்பாற் பட்டன என்று கருதுதற் பொருட்டென்க. அவப்பட்டது - வீணாகிவிட்டது. வந்தோர் - ஆருணியினிடத்திருந்து வந்தவர். நுவல - கூறாநிற்ப.

(பிழைத்தோர் ஆருணியரசன்பாற் சென்று கூறுதல்)

௪௪ - ௫௧ : உய்ந்தோர் .... விடுத்தலின்

(பொ - ரை.) இடவகனால் தீயிலிட்டுக் கொல்லப் படாதபடி தப்பியவர் கோசம்பி நகரத்தை யணுகிப் பசிய மலர் மாலை யணிந்த ஆருணி மன்னனைக் கண்டு கை கூப்பி வணங்கித் தன்னை எக்காலும் அகலாத பெறலரிய சூழ்ச்சியினையுடைய சகுனி கௌசிகன் முதலியோருடைய வரவினை உதயணமன்னன் தம் மாற்றவரால் முற்பட உணர்ந்து குகையினுள் ஒளிந்துறையும் அத்தூதுவரைப் பிடித்துக் கொண்டு வாருங்கள் என்று தம் மறவரை ஏவுதலாலே அம்மறவர் வந்து இத்தூதுவரைப் பற்றிக் கொண்டு செல்லாநிற்ப வண்டுகள் மொய்க்கின்ற மலர்ந்த மாலையினையுடைய உதயண மன்னன் அத்தூதுவரை இடவகன்பால் செலுத்துதலாலே ; என்க.

(வி - ம்.) ஊர் : கோசம்பி நகரம். வேந்தன் : ஆருணி. சூழ்ச்சி எஞ்ஞான்றும் அகலாது தன் பாலதாகிய சகுனி கௌசிகன் என்க. சார்ச்சி - சார்வு. புதைவனர் - மறைந்திருப்போர். தாரோன் : உதயணன். விடைப் பேரமைச்சன் : இடவகன்.

(இதுவுமது)

௫௨ - ௫௭ : மற்றவன் ....உரைப்ப

(பொ - ரை.) அந்த இடவகன் கண்டோர் நடுங்கும்படி அத்தூதுவர்க்குரிய தண்டனையை ஆராய்ந்து இவரை உயிர் போக்குக எனக் கட்டளையிட்டதும், அத்தூதுவரை நெருப்பிற்றள்ளிக் கொன்றதும், பின்னர் உதயணன் அவ்விடத்தினின்றும் சென்று தவதிசயந்தம் என்னும் பெரிய மலையையடுத்ததும், நம்மோடு கூடிய நட்புடையவனாகிய வருடகாரன் செயலற்று எங்களோடு வந்து எம்மோடேயே இருப்பதும், ஆகிய இந்நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்று அவ்வாருணி மன்னனுக்குக் கூறாநிற்ப ; என்க.

(வி - ம்.) மற்றவன் : அவ்விடவகன். தண்டந்தூக்கி - தண்டனையை ஆராய்ந்து. தபுக்க - அகற்ற. நண்புடையாளன் : வருடகாரன். மன்னவன் : ஆருணி.

(ஆருணியரசன் செயல்)

ரு௮ - ௬௪ : அயிர்த்த........விடுத்தலின்

(பொ - ரை.) அது கேட்ட ஆருணி மன்னன் அவர்களை நோக்கி, "நண்பரீர்! அவ்வுதயணன் இவ்வருடகாரனைப் பெரிதும் ஐயுற்று விலகிப் போயினான். ஆதலின், இனி இவ்வருடகாரனோடு நாம் மனங் கலவாதிருத்தல் வேண்டா! அவனைப் பெரிதும் கேண்மை கொள்ளுதல் நன்றென்று கூறிவிடுப்ப". அது கேட்ட அம்மறவர் மீண்டும் அவ்வருடகாரன் பாற் சென்று, "நண்பனே! இனி யாம் செய்தற்குரிய காரியம் யாது" என்று வினவாநிற்ப, அது கேட்ட வருடகாரன் "நண்பரீர்! நம்முடைய அரண்மனையினுள்ளே நிறையப் பெரும்படைகளை நிறுத்தி வைத்து, நீங்கள் நம் மன்னனோடு எஞ்சிய படைகளையும் திரட்டிக் கொண்டு புறப்பட்டு என்பால் வருக! அங்ஙனம் வந்தவுடனே யாம் சினத்தற்குரிய பகைமன்னனாகிய உதயணன் மேல் படையோடு சென்று அவனைத் தாக்குவேம்" என அறிவித்து அம் மறவரை ஆருணியின் பால் விடுத்தலாலே ; என்க.

(வி - ம்.) அயிர்த்து - ஐயுற்று. அவன் : உதயணன். இவனொடு- வருடகாரனொடு. பயிர்ப்பு - மனங்கலவாதிருக்குந்தன்மை. பற்றுதல்- கேண்மை கொள்ளல். செயற் பொருள் - செய்தற்குரிய காரியம். அகத்தரண் - அரணகம். நிறீஇ - நிறுத்தி. எற்புணர்க - என்பால் வருக. செறப்படுமன்னனை : உதயணனை.

(இதுவுமது)

௬௪ - எ௬: நன்றென.......கொண்டு

(பொ-ரை.) அம்மொழியை அம்மறவர் வாயிலாய்க் கேட்ட ஆருணிமன்னன் "நன்று நன்று" என்று மகிழ்ந்து வருடகாரன் செயலை மிகவும் விரும்பி அரண்மனையினையும் நகரத்தையும் சிறந்த காவலுள் வைத்துக் காம்பிற்றைத்த வேற்படை முதலிய படைக்கலங்களைத் தங்கைகளிலே ஏந்திச் சுழற்றுபவராகிய படைமறவர் ஏழாயிரவரும், பகைவரைக் கொல்லுதற்கண் கடுமையுடைய மறவர் ஆறாயிரவரும், வீறுடைய தலைவர்களோடு விளங்குகின்ற மணிகளாலே பொலிவுற்றனவாகிய ஆயிரந்தேரும் பொற்றகட்டாலாகிய முகபடாத்தையுடையனவும், நெற்றிப்பட்டத்தாற் பொலிவுற்றனவும், போர்க்களத்தின்கண் நன்கு பயின்றனவுமாகிய ஐந்நூறு யானைகளும், அகில் மணங்கமழும் அகன்றனவும் ஆரவாரிப்பனவும் ஆகிய தாரோடும் படைக்கலங்

களோடும் பொலிவுற்றனவும் மிலேச்சர் ஏறுவனவும் முதற்படை யின்கண் செருக்குற்றுச் செல்வனவும் ஆகிய விரைவுடைய குதிரைகள் ஒரு பதினாயிரமும், முற்படையின் கண்ணே தன்னோடு திரட்டிக் கொண்டு ; என்க.

(வி - ம்.) கோயில் - அரண்மனை. நகரம் - கோசம்பி நகரம். காழ் - காம்பு. எஃகம் - வேல். திரீஇயர் - திரிபவர்களாகிய. எறிபடை : வினைத்தொகை. அடர் - பொற்றகடு, போர்ப்படை - படைக்கலங்கள். மிலேச்சர் : இவர் ஒரு வகை மறவர்.

(இதுவுமது)

௭௭ - அ௫ : நாவாய்.........பின்

(பொ - ரை.) ஓடங்களாகிய பெரிய பாதுகாவலை நீரினிடத்தே சூழ அமைத்துக்கொண்டு சந்தனம்பூசிய மார்பினையுடைய சாயனும் போரிற் புறங்கொடாத காந்தாரகனும், கலக்கமில்லாத பெரிய படையையும் குறையாத கடிய திறலையுமுடைய சூரவரனும், பெரிய புகழையுடைய மறவனும், பிரமசேனன் என்னும அரிய போரினையுடைய தலைவனும், அவரையுள்ளிட்ட பெரிய படைத் தலைவர்களும் ஏனையோரும் தன்னைச் சூழ்ந்து வாராநிற்பப் பூரணகுண்டலன் என்னும் சிறந்த அமைச்சனோடு அவ்வாருணி மன்னன் வாராநிற்ப, அவன் வருகையை அறிந்த பின்னர் ; என்க.

(வி - ம்.) நாவாய் - ஓடம். நீர்வாய் - நீரிடத்து. சாயன் - ஒரு மறவன் பெயர். சாயா - புறங்கொடாத. பெரும்பேர் மறவன் என்புழி மறவன் என்பது ஈண்டுப் பெயர். பிரமசேன் - பிரமசேனன் என்பதன் விகாரம்.

(வருடகாரன் செயல்)

அ௬ - அ௭ : அடக்கரும்.........காண

(பொ - ரை.) குற்றமற்ற வருடகாரன் அம்மன்னனுக்கு எதிர் சென்று அடக்குதற்கரிய சினத்தையுடைய அந்த ஆருணி மன்னனுடைய வீரக்கழல்கட்டிய அடிகளிலே வீழ்ந்துவணங்கி அம் மனனனைக் காணுகிற்ப ; என்க.

(வி - ம்.) சீற்றத்து - சினத்தையுடைய- கழலடி - கழல்கட்டிய அடி. வடு - குற்றம். வருடகன் - வருடகாரன்,

(ஆருணி வருடகாரனுக்குச் சிறப்புச் செய்தல்)

அஅ - ௯௯ : எடுத்தனன்.........வழங்கி

(பொ - ரை.) அங்ஙனம் தன் அடிகளிலே வீழ்ந்துவணங்கிய அவ்வருடகாரனைக் கொடிகட்டிய தேர்ப்படையையுடைய அக்

கோமான் தன் இரு கைகளாலும் எடுத்து மார்போடு தழுவிக் கொண்டு அமிழ்தம்போன்ற இனிய முகமன் மொழிகளைக் கூறி, ஓர் இருக்கையைக் காட்டி இதன்கண் அமர்கவென்று உபசரித்த லாலே, அவ்வருடகாரன் அவ்விருக்கையின்கண் இருந்த பின்னர் அழகிய மாலையணிந்த மார்பினையுடைய அவ்வாருணி வேந்தன் ஆர்வத்தோடே நீரின் கண் மிதக்கும் ஓடங்களின்மேல் ஏறிய பதினாறுயிரம் கொல்லுந் திறல்மிக்க மறவர்களைத் தம்பகைவர் அஞ்சும்படி அவ்வருடகாரனுக்கு வழங்கி, மேலும் நடுங்காத செலவினையுடைய ஆயிரங் குதிரைகளையும், மூந்நூற்றறுபது இள யானைகளையும், பொற்காசுகளையும் வழங்கி ; என்க.

(வி - ம்.) அமிழ்தம்போன்ற இன்னுரை என்க. கோமான் : ஆருணி மன்னன். மார்பன் : ஆருணி. நாவாய் - ஓடம். மேவார் உட்க - பகைவர் அஞ்சும்படி. அதிராச் செலவு - நடுங்காத நடை. முதிரா யானை - இளமையுடைய யானைகள். காணம் - பொற்காசு.

(இதுவுமது)

௯௯ - ௯௮ : நாளும்.........காக்கென

(பொ - ரை.) அம்மன்னவன், "அமைச்சனே ! நீ நாள் தோறும் நம்படைகளுக்கு ஊன் இடையறவின்றிச் சிறந்த உணவு களைவிலைக்குக் கொடுக்கும் தொழிலை உறுதியாகப் பேணிவருக" என்றும் அறிவுறுத்தியபின் , என்க.

(வி - ம்.) இடையறாது ஊன்விரவிய உணா என்றவாறு. உணா - உணவு. விலைக்குத் தந்திடும் என்க. காக்க - பேணுக.

(வருடகாரன் செயல்)

௯௯ - ௧௦௫ : வல்வினை.........இனிதென்

(பொ - ரை.) அந்த வலிய ஆள்வினையை மேற்கொண்டு கடிதில் முயலும் அவ்வருடகாரன் தானும் அங்குச் செல்கின்ற தன்னுடைய படைகளுக்கு மனத்திறபடும்படி எடுத்துக்கூறி அவரையெல்லாம் அம்மரக்கலங்களோடு மறுகரைக்குப் போக்கிப் பின்னர் ஆருணியரசனை நோக்கி, மேல் நிகழவேண்டிய காரியங் களை மாண்புறக் கூறுதலாலே, அரிய சிறைபோன்ற கடத்தற் கரியபடைகளையுடைய அந்த ஆருணியரசனால் மிக்க சிறப்பளிக் கப் பெற்று அவ்வருடகாரன இனிதே இருந்தனன் ; என்க.

(வி - ம்.) வல்வினை - வலிய ஆள்வினை. கடுந்தொழில் - கடிய போர்த்தொழிலுமாம் ஆம்பாற் கருமம் - இனி ஆதற்கு வேண்டிய காரியங்கள். அரிய சிறைபோன்ற தானை என்க.

௨௯. பாஞ்சாலராயன் போதரவு முற்றிற்று.

உஎ. பறை விட்டது

இதன்கண் : காவல் இளைஞர் ஆருணிக்குக் கூறுதலும், வருடகாரன் செயலும், ஆருணியின் உட்கோளும், வருடகாரன் செயலும், உதயணன் செயலும், ஆருணியின் மனநிலையும், தீய நிமித்தங்கள் தோன்றுதலும் பூரண குண்டலன் கூற்றும், வருடகாரன் கூற்றும், ஆருணியின் செயலும, போர் நிகழ்ச்சியும், உதயணன் செயலும், ஆருணியின் செயலும், கடகபிங்கலர் செயலும், ஆருணியின் கூற்றும், உதயணன் செயலும், ஆருணியின் செயலும், உதயணன் செயலும், உதயணன் தருமதத்தன் ஆருணியரசனைக் கொல்லலும், உதயணன் செயலும், வருடகாரன் செயலும், நகரமாந்தர் கூறுதலும், யாவரும் நகர்புகுதலும் விரிவாகக் கூறப்படும்.

பெருஞ்சிறப் பெய்தியவ னிருந்த சேவ்வியுள்
வண்டார் தெரியல் வருட காரனிற்
பண்டே பயிர்குறிக் கொண்டுநன் கமைந்த
காவ லிளையர் பூசல் வாயா
வேல்வல் வேந்தன் விரும்புபு கேட்ப
வடுவில் பெரும்புகழ் வத்தவன் மந்திரி
இடவகன் பணியி னேழா யிரவர்
சவரர் புளிஞருங் குவடுறை குறவரும்
குறுநில மன்னரு நிறைவன ரீண்டி
வஞ்ச காந்தையொடு கந்த வதியெனும்
குளிர்புனற் பேரியாறு கூடிய வெல்லையுள்
நளிபுன னாட்டக நடுங்கக் கவர்ந்தாண்
டொளிதரு மிருக்கையி னொடுங்கினர் தாமெனப்
பைந்தளிர்ப் படலைப் பாஞ்சால ராயற்கு
வந்துகண் கூடிய வருட காரன்
அருளிக் கேண்மெனத் தெருளக் கூறும்
மாரிப் பெரும்புனல் வருவா யடைப்பின்
ஏரிப் பெருங்குள நீர்நிறை யிலவாம்
அற்றே போலப் பற்று மன்னற்குத்
தலைவரும் பெரும்படை தோலைய நூறிற்
சுருக்க மல்லது பெருக்க மில்லை

கல்லிடை யிட்ட காட்டகங் கடந்து
வெள்ளிடைப் புகுந்த வேட்டுவப் படையினை
ஆட்டுதுஞ் சென்றென வத்திசை மருங்கினும்
வாட்படை வதுத்துச் சேட்படப் போக்கி
மறுத்து முரைத்தனன் மன்னவன் கேட்ப
வெறுத்த வேந்தனை வெற்பிடை முற்றி
நாற்பெரும் படையு நம்புறஞ் சூழ
மேற்படை நெருங்கு காலை மாற்றவன்
சில்படை யாளரொடு செல்படை யின்றிக்
கூழ்பட வறுப்பப் பாழ்படப் பாய்ந்து
பற்றிய படைஞரு மப்பாற் படர்தர
உற்றது செய்த லுறுதி யுடைத்தென
இயற்கை யாக வென்றேழின் மாட்டிவன்
முயற்சி யுடைமையின் முடிக்குவன் றனெனப்
பெயர்த்து மவற்கோர் பெருஞ்சிறப் பியற்றிச்
சொல்லிய வெல்லா நல்குவன னாகித்
தன்படை சிறிதே யாயினு மிவன்படை
என்படை யென்னு மெண்ண முண்மையின்
எழுது மென்றவன் மொழியா மாத்திரம்
கருதிய தெல்லாங் கால்வ லிளையரின்
உருவ வெண்குடை யுதயணற் குணர்த்த
அடற்கரும் பெரும்படை யற்றப் படாமைப்
படுப்பதோர் வாயில் பாங்குற நாடி
வெம்பரி மான்றேர்த் தம்பியர்த் தழீஇ
மதில்வடி வாகிய மலைப்புடை மருங்கே
அதிர்குரல் வேழமும் புரவியு மடக்கி
அவற்றுமுன் மருங்கே யகற்றுதற் கரிய
ஒள்வாட் பெரும்படை யுள்ளுற வடக்கி
அப்படை மருங்கே யயிற்படை நிரீஇத்
தரும தத்தனைப் பெருமுகம் பெய்தவற்
கெருத்துப்புடை யாக விடவகற் கொளீஇயவன்
உருத்தெழ பெரும்படைக் கோடுபுறங் காட்டிப்
படைத்தொழு வாரியி னிடைப்படப் புகுத்தி
உருள்படி போல வருட காரன்

போக்கிட மின்றி யாப்புற வடைப்ப
இருங்கணி சார னெண்ண மாக
வரம்பணி வாரியுள் வந்துடன் புகுந்த
அருந்திற லாருணி யென்னும் யானையைப்
படைக்கலப் பாரம் பற்பல சார்த்தி
இடுக்கண் யாஞ்செய வியைந்த தின்றெனா
வாரிப் பெரும்படை மற்றவண் வகுத்து
நேரா மன்னனை நீதியிற் றரீஇப்
போரிற் கோடற்குப் புரிந்துபடை புதையா
வார்கழ னோன்றாள் வத்தவ னிருப்ப
வாய்த்த சூழ்ச்சி வருட காரனொ
டியாத்த நண்பினன் யானென வாருணி
மேற்சென் றழித்தன் மேயினன் விரும்ப
அந்தமி லாற்ற லவந்தியன் யானை
வெந்திற னளகிரி தன்படி வாகும்
மந்தர மென்னு மத்த யானை
நீல நெடுவரை நெற்றித் தாகிய
கோலக் கோங்கின் கொழுமலர் கடுப்புறு
சூறைக் கடுவளி பாறப் பறந்தெனப்
பட்ட மடுத்த கோட்டையொடு பாறவும்
உருமுறழ் முரசின் கண்கிழிந் ததனொடு
சக்கர நெடுங்கொடி யற்றன வாகி
இருநில மருங்கிற் சிதைவன வீழவும்
புள்ளு நிமித்தமும் பொல்லா வாக
வில்லா நண்பின் விறலோ னமைச்சன்
பூரண குண்டலன் றூரணி மார்ப
பெயர்த்து நகரம் புகுது மிந்நாள்
அசைத்த தறிந்தனை யருண்மதி நீயென்
றடையார்க் கடந்து தடைபா டகற்றிய
அறிந்துபடை விடுப்ப தன்னது பொருளெனச்
செறிந்த தாகச் செப்பலிற் சீறிச்
சொல்லா ரழிவினைக் கூறு மிவையென
வள்ளிதழ் நறுந்தார் வருட காரன்
ஊக்கங் கொளுவ வாக்கங் கருதி

ஆருணி யரச னடற்களிறு கடாஅய்க்
காரணி முகிலிடைக் கதிரொளி கரந்து
மங்கு மருக்கனின் மழுங்குபு தோன்றச்
சங்கமு முரசுஞ் சமழ்த்தன வியம்பப்
போங்குநூற் படாகையோடு வெண்கொடி நுடங்க
நிரந்த பெரும்படை பரந்தெழுந் தோடி
மாற்றோ னிருந்த மலையக மடுத்துக்
கூற்று யெடுத்த கோல விற்படை
காற்றிசை மருங்கினுங் கார்த்துளி கடுப்பக்
கடுங்கணை சிதறிக் கலந்துடன் றலைப்பெய
நடுங்கின ராகி யுடைந்துபுறங் கொடுத்துப்
பொறிப்படை புதைந்த குறிக்களம் புகலும்
எண்டிசை மருங்கினு மியமரத் தொலியொடு
விண்டோய் வெற்பொலி விரவுபு மயங்கி
ஆர்ப்பிசை யரவமும் போர்க்களிற் றதிர்ச்சியும்
கார்க்கட லொலியெனக் கலந்துடன் கூடித்
திமிரம் பாய்ந்த வமர்மயங் கமயத்துச்
சிலைத்தன தூசி மலைத்தன யானை
ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை
விலங்கின வொள்வா ளிலங்கின குந்தம்
விட்டன தோமரம் பட்டன பாய்மாத்
துணிந்தன தடக்கை குனிந்தன குஞ்சரம்
அற்றன பைந்தலை யிற்றன பல்கொடி
சோர்ந்தன பல்குடர் வார்ந்தன குருதி
குழிந்தது போர்க்கள மெழுந்தது செந்துகள்
அழிந்தன பூழி விழுந்தனர் மேலோர்
இப்படி நிகழ்ந்த காலை வெப்பமொடு
பெரும்படைச் செற்றத் திருங்கடன் மாந்திக்
குஞ்சரக் கொண்மூக் குன்றடைந்து குழீஇக்
காலிய லிவுளிக் கடுவளி யாட்ட
வேலிடை மிடைந்து வாளிடை மின்னக்
கணைத்துளி பொழிந்த கார்வரைச் சாரல்
ஒருபெருஞ் சிறப்பி னுதயண குமரன்
பொருபடை யுருமிற் பொங்குபு தோடரத்

தாரணி மார்ப ஞருணி யரசனும்
காந்தா ரகனுங் கழற்காற் சாயனும்
தேந்தார்ச் சூரனுந் திறற்பம சேனனும்
இந்நாற் றலைவரு மெரிகான் றெதிர்ப்பச்
சென்றே ராகச் செல்வுழி யெதிரே
காந்தா ரகனைக் கடக பிங்கலர்
தேந்தார் மார்பந் திறப்ப வெய்ய
ஆழ்ந்த வம்போ டழிந்தன ஞகி
வீழ்ந்தன னவனும் வீழ்ந்த பின்னர்
....
பெய்கழ லாருணி பிறந்த நாளுட்
செவ்வாய் விருச்சிகஞ் சென்றுமே னெருங்க
ஆற்றல் சான்ற வடல்வே லாருணி
ஏற்றோர் யாவ ரீண்டுவந் தெதிர்க்கெனச்
சீற்றத் துப்பிற் சேதியர் பெருமகன்
கழலணி காலினன் கரண யாப்பினன்
நிழலணி நல்வா ளழல வீசித்
தாங்கருங் காதற் றம்பியர் சூழப்
பூங்கழற் றேழர் புடைபுடை யார்தர
ஒன்னுப் பகையா னுதயண னென்பேன்
இன்ன மன்ன நின்னுயி ருணீஇய
வந்தனே னென்றே சென்றுமே னெருங்க
இடுகளி யானை யெதிர்கண் டாங்குருத்
தடுதிற லாருணி யவனுரை பொறாஅன்
பன்மயி ரணிந்த பத்திச் சேடகம்
மின்னுளிர் வாளொடு பின்னவன் வாங்கக்
காதி வெவ்வினை கடையறு காலைப்
போதி பெற்ற புண்ணியன் போல
வீதல் சான்ற வெகுளி மூந்துறீஇ
எதிர்த்த மன்னனைச் செயிர்த்தனன் றலைப்பெய்
தியாவரும் வேண்டா விதன்பின்மற் றிவனை
வீய நூறி வெஞ்சினந் தணிகென
ஏயர் பெருமக னெதிர்வது விரும்ப
வேற்று வேந்தனை வீழ நூறுதல்

மாற்று தேனக்கு மன்ன வருளேனக்
கரும மாதல் காரணங் காட்டித்
தரும தத்த னென்னுங் கடுந்திறல்
அருமுரட் கவுழனி ஞர்த்துமே லோடிப்
பொருமுர ணழிக்கும் புனைபடை பயிற்றி
இமைப்போர் காணு விகற்றேழிற் றிரிவோடு
பலர்க்குப் பதமின்றிப் பாஞ்சால ராயனைத்
தனக்குப் பதமாகத் தலைப்பெய் தேற்றலின்
வார்கவுள் வேழமும் வசத்த தன்றியவன்
ஊர்வழிச் செல்லா தோல்குபு நிற்றரக்
கூர்கெழு வச்சிரங் கோண்டு வானவன்
கார்கெழு மாமலைக் கவினழித் ததுபோற்
றூரணி மார்பன் யானையை வீழாக்
கனல்சோரி மலையிற் கவிய நூறித்
தார்கெழு மார்புந் தலையுந் தகர
முடியணி யார முத்துநிரை துளங்கத்
தோடியணி திண்டோ டுணிந்துநிலஞ் சேரப்
பணிவில னேறிதலிற் படைக்கலஞ் சோரத்
தறுக ணிமையான் றருக்கினே டுமேதியேய்
பிறமுனை மருங்கி னேடுபடத் திருகி
மான்முதல் வகையி னுன்மறை யாளன்
மழுவே றுண்ட மன்னவன் போலக்
கோழுநிணக் குருதியுட் குஞ்சரத் தோடும்
அழிவுகோண் டாருணி யவிந்தனன் வீழ்தலிற்
கோற்றம் பெற்றனன் குருகுலத் திறையேன
வெற்றி முரசம் வேழ மேற்றி
நகரினு நாட்டினும் பகர்வன ரறைகேனப்
பின்னுரை போக்கி யோன்றுற் குறுகிப்
படைத்தோழில் வதுவை நம்மாட் டேய்த
முடித்தன னேன்று சமழ்த்தன னேக்கி
நடுக்கமில் வேந்தனை நாமு முன்னின்
றடக்கற் பாலமேன் றியாழறி வித்தகன்
அமரார் புகழத் தமரி னடக்குவித்
தீம மேற்றியவ னுரிமைச் சனத்திற்

கேம மீகேன் றிடவகற் டோக்க
வரிகழ ஞேன்றுள் வருட காரன்
இரியற் படையோ டிடைபந்தோறுங் கீண்டிக்
கோடிக்கோ சம்பிக் கோற்ற வாயில்
அடுத்தனன் குறுகி யஞ்சன்மின் யாவிரும்
வடுத்தீர் பெரும்புகழ் வத்தவர் கோமான்
படுத்தனன் கண்டீர் பாஞ்சால ராயனை
அடைத்தனிர் வையா தகற்றுமின் கதவென
நகரத் தாளர் புகரறக் கூறுவர்
தோல்வழி வந்தவெம் பெருமக னெழுதிய
வேல்போறி யோலை விடுத்தபி னல்லது
புகுதர விடோமிந் நகர்வயின் யாமென
உடனயிர்ப் பிரிய வுதயணன் மந்திரி
இடவகன் வந்தமை யிசைத்தலும் விரும்பிக்
கோடியும் படாகையும் வடிவுபட வுயரிச்
சேறிந்த கதவந் திறந்தன ரெதிர்கொள
வென்றியோடு புக்கு நின்ற மறவருட்
டலைவ னாகிய தோலைவில் விழுச்சீர்ப்
பாடுசால் சிறப்பிற் பாஞ்சால ராயன்
கண்மணி யன்ன திண்ணறி வாளன்
கும்பனேன் போனை வெம்ப நூறி
இன்று மற்றிங் கிவன்றம ருளரேனிற்
குன்று ரவரைக் கோறு நாமேனக்
கழிப்புறு வேள்வாட் டெழித்தன ரூரீஇ
ஒழுக்கஞ் சான்றோர் பிழைப்பில ரோம்ப
மலைத்தோகை யன்ன மாட வீதியுட்
சிலைப்போலி தடக்கைச் சேதியன் வாழ்கென
அலைகடல் வைய மறிய வேங்கும்
பிறைமருப் பியானைப் பிணரெருத் தேற்றிப்
பறைவிட் டன்றூற் பகைமுத லறுத்தேன்.

உஎ. பறை விட்டது முற்றிற்று.

உரை

௨௭. பறை விட்டது

அஃதாவது : ஆருணியரசனைக் கொன்று தன் அரசுரிமையைக் கைப்பற்றிய உதயண மன்னன் அவ்வெற்றிச் செய்தியை நகர்வாழ் மாந்தரும் நாட்டுமாந்தரும் உணரும்படி வெற்றி முரசத்தை யாண்டும் முழக்குவித்ததனைக் கூறும்பகுதி என்றவாறு.

(கால்வ லிளைஞர் ஆருணிக்குக் கூறுதல்)

க - ௧௩ : பெருஞ்சிறப்பு .... என

(பொ - ரை.) இவ்வாறு வருடகாரன் ஆருணி மன்னனை பெருஞ் சிறப்புப்பெற்று இருந்தபொழுது, வண்டுகள் ஆரவாரிக்கின்ற மலர்மாலையை யணிந்த வருடகாரனாலே முன்னரே சங்கேத ஒலியினாலே அழைத்தலைக் குறிப்பாகக் கொண்டிருந்த கால் வலிமைபெற்ற இளைஞர் போர்வாய்க்கப்பெறாத வேற்படைப் போரில் வலிமைமிக்க அந்த ஆருணி மன்னன் விரும்பிக் கேட்கும்படி, "பெருமானே! பழியில்லாத பெரிய புகழையுடைய உதயணனுடைய அமைச்சனாகிய இடவகனுடைய பணியினாலே சவரரும் புளிஞரும் மலைகளில் உறைகின்ற குறவரும் குறுநில மன்னர்களும் ஆகிய ஏழாயிரவர் வந்து நிறைந்து வஞ்சகாந்தை யாறும் கந்தவதியாறும் ஆகிய குளிர்ந்த நீரையுடைய பேரியாறுகளிரண்டும் கூடாநின்ற எல்லையிடத்தேயுள்ள செறிந்த நீரையுடைய நாட்டிலுள்ள மாந்தர்கள் நடுங்கும்படி கொள்ளை கொண்டு அவ்விடத்தே தாம் மறைந்திருத்தற்குரிய இடத்திலே மறைந்துறைவாராயினர்" என்று அறிவியா நிற்ப; என்க.

(வி - ம்.) அவன் : வருடகாரன். பயிர்குறி - அழைத்தற் பொருட்டுத் தம்முள் கற்பித்துக்கொண்ட சங்கேத ஒலி. கால்வல் இளையர் - விரைந்து செல்லும் வன்மையுடைய ஏவலிளையர். பூசல் வாயா - போர்வாய்க்கப் பெறாத. வேந்தன் : ஆருணி. வத்தவன் : உதயணன். சவரர், புளிஞர் என்போர் வேடர்வகையினர். குவடு - மலையுச்சி. வஞ்சகாந்தை - ஒரு யாறு. கந்தவதி - ஒரு யாறு. ஒளி தரும் இருக்கை - மறைந்திருக்குமிடம்.

(வருடகாரன் செயல்)

௧௪ - ௨௧ : பைந்தளிர் .... இல்லை

(பொ - ரை.) பசிய தளிர் விரவிய படலைமாலை யணிந்த ஆருணி மன்னனை வந்துகண்ட வருடகாரன், "அரசே! யான்

கூறும் இதனைக் கேட்டருள்க" என்று தொடங்கி அவன் உணர்ந்துகொள்ளும்படி கூறுவான்: "வேந்தே! மழையினாலே பெருகிய வெள்ளம் வருகின்ற வழியை அடைத்துவிடின் ஏரி மாகிய பெரிய குளங்கள் நீர் நிறைதல் இலவாம். அதுபோல நம் பகைமன்னனுக்குத் துணையாக வாராநின்ற பெரிய படைகளை நாம் எதிர்சென்று மறைத்து அழிந்துபோம்படி தாக்குவோமாயின், அப்பகை மன்னன் படைகட்குச் சுருக்கம் உண்டாவதல்லது பெருக்கமுண்டாதலில்லை"; என்க.

(வி - ம்.) வந்து கண்கூடிய - வந்துகூடிய. கேண்ம் - கேட்க. தெருள - தெளிவாக. மாரியினால் பெருகிய புனல் என்க. வருவாய் - வரும் வழி. ஏரியாகிய பெருங்குளம் என்க. பற்றுமன்னன்: உதயணன். நூறில் - தாக்கில்.

(இதுவுமது)

உஉ - உகூ: கல் .... கேட்ப

(பொ - ரை.) "வேந்தே! மலையிடையிட்ட காட்டினைக் கடந்து வெள்ளிடையிலே புகுந்த வேட்டுவப் படைகளுக்கு ஆற்றல் குறைதல் இயல்பாகலின் அப்படையினை நாம் சென்று அலைப்போம்" என்று கூறி அத்திசைநோக்கி ஆங்குள்ள வாட்படைகளுள் ஒருபகுதியை அணிவகுத்துத் தூரத்தே செல்லும்படி போக்கியபின்னர் அவ்வருடகாரன் ஆருணி மன்னன் கேட்கும்படி கூறினன்; என்க.

(வி - ம்.) கல் - மலை. வேடர்கள் தமக்குரிய காட்டகத்தைக் கடந்து வெள்ளிடையில் வருவாராயின் வலியற்றவர் ஆவர் என்பது கருதி இங்ஙனம் கூறினன். வெள்ளிடை - பாழ்வெளி. ஆட்டுதும் - தாக்கி அலைப்போம். மறுத்தும் - மீட்டும். மன்னவன் - ஆருணி.

(இதுவுமது)

உஎ - ௩௧: வெறுத்த .... உடைத்தென

(பொ - ரை.) "வேந்தே! நம் பகைவனாகிய அவ்வுதயணனைத் தவதிசயந்தம் என்னும் அம்மலையின் அகத்தேயே வைத்து நமது நால்வகைப் பெரும்படையும் நம் பக்கத்தே சூழ்ந்துவரும்படி வளைத்துக்கொண்டு பின்னர் நாம் அவனை நெருக்குங்காலத்தே அப்பகை மன்னன் தன்பாலுள்ள சில படையாளரோடும் தனக்குத் துணைப்படை வருதல் இல்லாமலும், இருக்கும் அச்செவ்வியில அவர்களைக் கலக்குதற்கு அவர் பாழ்பட்டுப் போகும்படி அவர்மேல் யாம் பாய்ந்தால், அவன் தான் பற்றியுள்ள சில் படையாளரும் அவனைக் கைவிட்டு அப்பாலே ஓடாநிற்பர்; இவ்வாறு அப்பகை மன்னனுக்கு இடையூறு செய்தல் நமக்கு

உறுதி தருவதாகும்" என்று வருடகாரன் ஆருணிக்குச் சொல்லா நிற்ப; என்க.

(வி - ம்.) வெறுத்த வேந்தன் : உதயணன். முற்றி - வளைத்துக் கொண்டு. கூழ்பட - கூழாகக் கலங்கும்படி. உற்றது - இடையூறு.

(ஆருணியின் உட்கோள்)

௩௪ - ௪௦ : இயற்கை .... மாத்திரம்

(பொ-ரை.) அதுகேட்ட ஆருணிமன்னன் யான் மேற்கொண்டுள்ள இப்போர்த் தொழிலின்கண் இவ்வருடகாரன் இயற்கையாகவே பெருமுயற்சி மேற்கொண்டுள்ளமையின் இத்தொழிலை இவன் நன்கு செய்து முடிப்பன் என்று கருதி மீட்டும் அவ்வருடகாரனுக்கு அவ்விடத்தே ஒருபெருஞ் சிறப்பினையுஞ் செய்து அவன் விரும்புவனவெல்லாம் அவனுக்கு வழங்குவானாய்த் தன்பாலுள்ள படை சிறிதேயாயினும் இவ்வருடகாரனிடம் உள்ள படையும் என் படையேயாகும் என்னும் துணிவிருத்தலால், "வருடகார! நீ கூறியபடியே நாம் அவ்வுதயணன்பால் போருக்குப் புறப்படுவோம்" என்று கூறுமளவிலே; என்க.

(வி - ம்.) என்றொழில் - யான் மேற்கொண்டுள்ள இப்போர்த் தொழில். இவன் : வருடகாரன். பெயர்த்தும் - மீட்டும். அவற்கு : வருடகாரனுக்கு. எழுதும் - எழுவோம்.

(வருடகாரன் செயல்)

௪௧ - ௪௨ : கருதிய .... உணர்த்த

(பொ - ரை.) இவ்வாறு ஆருணியின் உடன்பாடுணர்ந்த வருடகாரன் ஈண்டுத் தாங்கள் கருதிய செயல்களையெல்லாம் தன்னுடைய காவல் இளைஞரின் வாயிலாய் அழகிய கொற்ற வெண்குடையையுடைய உதயண மன்னனுக்கு அறிவித்துவிடுதலாலே; என்க.

(வி - ம்.) கருதியதெல்லாம் - போர்த்தொழில்பற்றி ஆருணியும் தானும் கருதியிருக்கின்ற செயல் முறைகளையெல்லாம் என்க. உருவம் - அழகு.

(உதயணன் செயல்)

௪௩ - ௫௦ : அடல் .... நிறீஇ

(பொ - ரை.) பகைவரால் வெல்லுதற்கரிய பெரிய படையைச் சோர்வுபடாமல் அகப்படுத்தும் ஒரு வழியைப் பொருத்தமுற ஆராய்ந்து கண்டு வெவ்விய செலவினையுடைய குதிரைபூண்ட தேரினையுடைய தன் தம்பியராகிய கடகபிங்கலரையும் அழைத்

துக்கொண்டு, மதில்போன்று நாற்புறமும் சூழ்ந்துள்ள தவதிசயந்தம் என்னும் அம்மலையினது பக்கத்தே அதிருகின்ற முழக்கத்தையுடைய, யானைப்படையையும், குதிரைப்படையையும் அடக்கிவைத்து, அப்படைகளின் முன்புறத்தே பகைவரால் அகற்றுதற்கரிய ஒளிவாளையுடைய பெரிய காலாட் படையை அம்மலையகத்தே அடங்கும்படி அடக்கிவைத்து அப்படையின் பக்கத்தே வேற்படை மறவரை நிறுத்திவைத்து; என்க.

(வி - ம்.) அற்றம் - சோர்வு. படுப்பது - அகப்படுத்துவது. வாயில் - வழி. தம்பியர்: கடக பிங்கலர். முன்மருங்கு - முன்பக்கத்து. அயிற்படை - வேற்படை. நிறீஇ - நிறுத்தி.

(இதுவுமது)

௫௧ - ௫௬ : தரும .... அடைப்ப

(பொ - ரை.) தருமதத்தன் என்னும் அமைச்சனைப் பெரிய படைமுகப்பிலே நிறுத்திவைத்து, அவ்வணியின் கழுத்துப் பக்கத்தே இடவகனை நிறுத்திவைத்து, அவர்களைப் பார்த்து, "அன்புடையீர்! நம் பகைவனாகிய ஆருணிமன்னன் நம்மேல் சினந்து வருதற்குக் காரணமான அவனுடைய பெரும்படை இங்குவந்து நுங்களைத் தாக்கியவுடனே நீங்கள் அப்படைக்கு ஆற்றமாட்டாததுபோலப் புறங்கொடுத்து ஓடுமின், அங்ஙனம் ஓடுங்கால் அப்படை நும்மைத் துரத்திவருமன்றோ? அங்ஙனம் வருங்கால், அப்படையை யானைபிடிக்கும் தொழுவாரிபோன்ற இம்மலைகளின் நடுவிடத்திற்கு வருமளவும் நீங்கள் ஓடக்கடவீர்! அங்ஙனம் அப்படை வந்தவுடன் அப்படையைப் பின் தொடர்ந்து வருகின்ற வருடகாரன் உருள்படிபோல அப்படை மீண்டும் ஓடிவிடாதபடி தன்படையாலே நன்கு தடுத்துவிடுவன்" என்க.

(வி - ம்.) தருமதத்தன் - தருசகனால் உதயணனுக்கு உதவியாக விட்ட நான்கு படைத்தலைவர்களுள் ஒருவன். முகம் - படை முகப்பு. எருத்துப் புடை - படையின் கழுத்துப் பக்கம். அவன் - ஆருணி. உருள்படி - ஒருவகைப்படி. உட்புகுந்தோர் மீண்டும் வெளிவராதபடி தான் உருண்டு தடைசெய்யும்படி. என்க. போக்கிடம் இன்றி - ஆருணி படை மீண்டும் போதற்கு இடமின்றி. நீவிர் இங்ஙனம் செய்தால் வருடகாரன் ஆருணிக்குப் பின்னாகவந்து அவன் படை திரும்பிப் போகாதபடி தன் படையினாலே வழியை அடைத்து விடுவன் என்பது கருத்து. இவ்வுபாயம் வருடகாரன் உதயணனுக்கு அறிவித்தபடியாம்.

(இதுவுமது)

௫௭ - ௬௫ : இருங்கணி .... இருப்ப

(பொ - ரை.) பெரிய கணிகாரனுடைய எண்ணமாக இங்ஙனம் நம்முடைய மலையாகிய வரம்புகளையுடைய அழகிய வாரியுள்

வந்து உடனே புகுந்த அரிய ஆற்றலையுடைய ஆருணி என்னும் அந்த யானையைப் படைக்கலமாகிய சுமைகளைப் பலப்பலவாக ஏற்றி இற்றை நாள் யாம் துன்புறுத்த நன்கு பொருந்தியது என்று கூறி வருவாயையுடைய தனது பெரிய படையை அவ் விடத்தே இவ்வாறு அணிவகுத்து நிறுத்தித் தன் பகை மன்னனை முறையாலே அவ்விடத்திற்கு வரவழைத்துப் போரின் கண் கைப்பற்றிக் கொள்ளுதற்குப் பெரிதும் விரும்பி நெடிய வீரக்கழலணிந்த வலிய முயற்சியையுடைய அவ்வுதயண மன்னன் தன் படைக்கலங்களை ஓரிடத்தே மறைத்துவைத்துப் பகைவர் வருகையை எதிர்பார்த்திராநிற்ப; என்க.

(வி - ம்.) இருங்கணிகாரன் - பெரிய சோதிடன். பின்நிகழப் போவதை முன்னர்க் கருதலாலே கணிகாரன் எண்ணமாக இன்று இயைந்தது என்றான். வாரி - யானை அகப்படுத்தும் இடம். ஆருணியை யானையாக உருவகப்படுத்துதலாலே அம்மலையின் நடுவிடத்தை வாரி என்றான். படைக்கலமாகிய சுமை. வாரி - வருவாய். நேரா மன்னன் : ஆருணி, நீதி - இராசதந்திரம் புரிந்து - விரும்பி. புதையா - புதைத்து; மறைத்து.

(ஆருணியின் மனநிலை)

௬௬ - ௬௮ : வாய்த்த........விரும்ப

(பொ - ரை.) சிறந்த சூழ்ச்சி வாய்ந்த வருடகாரனோடு பொருந்திய நட்புரிமையையுடையேன் யான் என்று கருதி அவ் வாருணி மன்னன் செருக்குற்று உதயணன்மேல் போருக்குச் சென்று அவனை அழித்தலைப் பெரிதும் விரும்பாநிற்க; என்க,

(வி - ம்.) மேற்சென்று - போர்மேற் சென்று. மேயினன் விரும்ப - பெரிதும் விரும்ப.

(தீய நிமித்தங்கள்)

௬௯ - எ௯ : அந்தம்........ஆக

(பொ - ரை.) முடிவில்லாத ஆற்றலையுடைய அவந்தி மன்னனாகிய பிரச்சோதனனுடைய பட்டத்தியானையாகிய வெவ்விய திறலுடைய 'நளகிரி'யை ஒத்த உருவமுடையதாகிய 'மந்தரம்' என்னும் பெயருடைய மதச் செருக்குடைய ஆருணியின் பட்டத்தி யானையினது, நீல நிறமுடைய நெடிய மலையினது உச்சியின் கண்ணதாகிய அழகிய கோங்க மரத்தினது கொழுவிய மலர் போன்று தோன்றுகின்ற பொற்பட்டமும், அதனையடுத்துள்ள பொற் கொட்டையும், அக்கோங்க மலர் சூறைக் காற்று வீசுதலாலே சிதைந்து பரந்தாற் போல அப்பட்டமும் கொட்டையும் சிதைந்து வீழாநிற்பவும், இடியையொத்த முழக்கத்தையுடைய

வெற்றி முரசம் கண் கிழிந்ததனோடல்லாமல், சக்கரம் எழுதப் பட்ட அம்மன்னனுடைய நெடிய கொடியும் அற்றுப் பெரிய நிலத்தின்கண் வீழா நிற்பவும், இங்ஙனமே அப்பொழுது அவ்விடத்தே தோன்றும் புட்குரலும் நிமித்தங்களும் தீயனவாகவே நிகழா நிற்ப; என்க.

(வி - ம்.) அந்தம் - முடிவு. அவந்தியன் : பிரச்சோதனன். நளகிரியை ஒத்த மந்தரம் என்னும் ஆருணி யானை என்க. நீலநெடு வரையின் நெற்றியிலுள்ள கோங்கின் மலர் யானையின் முகத்திலுள்ள பட்டம் கொட்டை என்னும் பொன்னணிகலன்களுக் குவமை. பாற - பாற்ற. உரும் - இடி. முரசு கண் கிழிதலும், கொடி அற்று வீழ்தலும், தீய நிமித்தங்கள். "திண் பிணி முரசம் கண் கிழிந்துருளவும்" (புறநா. ௨௨௯ : ௧௧), புள் - பறவைக்குரல்.

(பூரண குண்டலன் கூற்று)

அ௦ - அ௬ : விள்ளா.........சீறி

(பொ - ரை.) பிரிதலில்லாத நட்பினையுடைய ஆருணிமன்னனுடைய அமைச்சனாகிய பூரண குண்டலன் ஆருணியரசனை நோக்கி, "மலர் மாலையணிந்த மார்பையுடையோய்! இந்நாளில் புள் நிமித்தமும், பிற நிமித்தங்களும், தீயனவாகி நம்மைத் தடுத்ததனை நீ அறிகுவை, நாம் இன்று மீண்டும் நகரத்திற்குச் செல்வோம். சென்ற பின்னர் நம் பகைவரை எதிர்த்து வென்று தடைகளை அகற்றுவதற்கு நல்ல நாளும் நிமித்தங்களும் அறிந்து நம் படைகளைப் பகைவர் மேல் விடுக்க வேண்டும். அதுவே நல்ல காரியமாம்" என்று தனது கருத்தினைச் செறிவுடையதாகக் கூறுதலால் அது கேட்ட வருடகாரன் அவனைச் சினந்து; என்க.

(வி - ம்.) விறலோன் : ஆருணி. அகைத்தது - தடுத்தமையை. என்று - எதிர்த்து. மதி : முன்னிலைபசை. அகற்றிய - அகற்றுவதற்கு. விடுப்பது - விடுக்க. பொருள் செறிந்ததாக என்க.

(வருடகாரன் கூற்று)

அஎ - அகூ : கொள்ளார்.........கொளுவ

(பொ - ரை) அவ்வமைச்சன் நாவினையடக்கி, ஆருணி மன்னனைப் பார்த்து. "பெருமானே! இத்தீய நிமித்தங்கள் நம் பகைவரது அழிவினையே குறிப்பனவாம்" என்று பெரிய இதழை யுடைய நறிய மலர் மாலையணிந்த அவ்வருடகாரன் அம்மன்னனுக்கு ஊக்கமுண்டாக்க; என்க.

(வி - ம்.) கொள்ளார் - பகைவர். இவை - இந்நிமித்தங்கள். கொளுவ - கொள்விக்க

(ஆருணியின் செயல்)

அ௯ - ௯௬ : ஆக்கம்.........அடுத்து

(பொ - ரை.) இவ்வாறு வருடகாரனால் ஊக்குவிக்கப்பட்ட அவ்வாருணியரசன் தன்னுடைய கொலைக் களிற்றின் மேலேறி அதனைச் செலுத்தி முகிலால் மூடப்பட்டுத் தனது சுடரொளி மறைந்து மழுங்கித் தோன்றும் ஞாயிற்றைப்போல ஒளி மழுங்கித் தோன்றாநிற்பவும், சங்குகளும் முரசங்களும் ஒலி வேறுபட்டு ஒலியாநிற்பவும் மிக்க நூற்பெருங்கொடியும் வெண்கொடியும் அசையும்படி பரவிய பெரிய படை பின்னும் பரவி எழுந்து சென்று பகை மன்னனாகிய உதயணனிருந்த தவதிசயந்தம் என்னும் மலையையணுகி; என்க.

(வி - ம்.) கடாஅய் - செலுத்தி. யானைமேல் ஒளிமழுங்கித் தோன்றும் ஆருணிக்கு முகிலிடை மறைந்து ஒளி மழுங்கித் தோன்றும் ஞாயிறு உவமை. சமழ்த்தன - ஒலி குன்றினவாய். படாகை - பெருங் கொடி. மாற்றோன் : உதயணன். மலை : தவதிசயந்தம்.

(போர் நிகழ்ச்சிகள்)

௯௭ - ௧0௫ : கூற்றுறழ்.........கூடி

(பொ - ரை.) பகைவர் உயிர்க்குக் கூற்றுவனாக எடுத்த அழகிய விற்படைகள் நான்கு திசைகளிலும் மழைத் துளிகளை ஒப்பக் கடிய கணைகளைச் சிதறாநிற்ப, ஒருவரோடு ஒருவர் சேர்ந்து எதிர்ப்ப, நடுங்கினவராய் உதயணன் மறவர்கள் ஆருணி மன்னன் படைக்கு உடைந்து புறங்கொடுத்து ஓடிப் பக்கத்திலே இயந்திரங்கள் புதைத்து வைக்கப்பட்டதும் முன்னர் உதயணனால் குறிப்பிடப்பட்டதுமாகிய களத்தை அடைதலும் அப்பொழுது எட்டுத் திசைகளிலும் இயமரத்தொலியோடு வானத்தைத் தீண்டுகின்ற மலைகளில் எழும் எதிரொலியும் ஒன்றோடொன்று கலந்து மயங்காநிற்பவும், மறவர்களின் ஆரவாரத்தின் ஒலியும் போர்க்களிறுகளின் முழக்கமும் கரிய கடல் முழக்கம் போலக் கலந்து ஒன்று சேராநிற்ப; என்க.

(வி - ம்.) பகைவர் உயிர்க்குக் கூற்றுறழ் என்க. உதயணன் மறவர்கள் நடுங்கிப் புறங்கொடுத்துக் குறிக்களம் புகலும் என்க, பொறி - இயந்திரம். இயமரம் - ஒரு வகைப் பறை. வெற்பொலி - மலையினின்றும் எழும் எதிரொலி. கூடி - கூட.

(இதுவுமது)

௧0௬ - ௧௧௫ : திமிரம்.........மேலோர்

(பொ - ரை.) இருள் பரவிய போர்த்தொழில் கலந்த அப்பொழுது, தூசிப்படைகள் ஆரவாரித்தன. யானைகள் போர்

செய்தன. காலாள் மறவர்கள் ஆரவாரித்துப் பல்வேறு அம்புகளை யாண்டும் தூர்த்தனர். வாட்படைகள் ஒன்றை யொன்று தடுத்தன. ஒளி வாள்கள் மின்னின. குந்தம் எறியப் பட்டன. தோமரம் விசப்பட்டன. குதிரைகள் இறந்துபட்டன. துணிந்து வீழ்ந்த யானைகளின் பெரிய கைகள் சுருண்டு வீழ்ந்தன. யானைகளின் தலைகள் அற்றன. மறவர்களின் பசிய தலைகள் இற்றன. பல்வேறுகுடர்கள் சரிந்து சோர்ந்தன. பல் வேறு கொடிகள் அற்று வீழ்ந்தன. குருதி வெள்ளம் பாய்ந்தன. போர்க்களம் குழிந்தது. எங்கும் செந்துகள் எழுந்தது. புழுதி மிக்கன. யானை குதிரை தேர் இவற்றின் மேலுள்ள வீரர்கள் பட்டு விழுந்தனர்; என்க.

(வி - ம்.) திமிரம் - இருள். சிலைத்தன - ஆரவாரித்தன. தூசி - கொடிப்படை. மலைத்தன போர் செய்தன, விளங்கின - குறுக்கிட் டன; தடுத்தன. குந்தம் - கைவேல். தோமரம் - ஒருவகைப் படைக் கலன். குனிந்தன - சுருண்டன. குருதிபடிந்த களமாதலால் செந் துகள் என்றார். மேலோர் : குதிரை முதலியவற்றின் மேலிருந்த வீரர்கள்.

(உதயணன் செயல்)

கககூ - கஉங : இப்படி.........தொடர

(பொ - ரை.) இவ்வாறு போர் நிகழ்ந்த பொழுது வெவ்விய பெரும் படைகளாகிய சினத்தையுடைய பெரிய கடலைக் குடித்து யானையாகிய முகில்களையுடைய மலையையடைந்து கூடிக், காற்றுப் போல விரைந்து செல்லும் குதிரையாகிய கடிய காற்று அசைத்த லாலே இடையிடையே நெருங்கி வேற்படைகளும் வாட் படை களும் இடை இடையே மின்னுநிற்ப, அம்புகளாகிய மழைத்துளி பொழிந்த கரிய மலைச் சாரலின்கண் ஒப்பற்ற பெருஞ்சிறப்பினை யுடைய உதயண குமரன் தனது போர்ப்படைகளின் முழக்க மாகிய இடிகளோடு சினந்து போர்த் தொழிலைத் தொடராநிற்ப; என்க.

(வி - ம்.) காலாட்படையாகிய கடனீரைக் குடித்து : படைக்குக் கடலுவமை. யானை மை பூசப் பெற்றிருத்தலின் கொண்மூக் குன்று என்றார். கணைத்துளி - அம்பாகிய மழைத்துளி. உருமின் - இடியோடு. பொங்குபு - பொங்கி; சினந்து.

(ஆருணியின் செயல்)

கஉச - கஉஅ : தாரணி.........எதிரே

(பொ - ரை.) மாலையணிந்த மார்பினையுடைய ஆருணிமரச னும் காந்தாரகனும் வீரக் கழல் கட்டிய காலையுடையச ாயனும்

தேன் பொருந்திய மாலையணிந்த சூரனும் ஆற்றல் மிகுந்த பிரம சேனனும் என்னும் இந்த நான்கு பெருந்தலைவர்களும் கண்களில் தீக் காலும்படி வந்து எதிர்ப்ப, ஆருணியரசன் நேரே வந்த பொழுது; என்க.

(வி - ம்.) ஆருணியரசனும் காந்தாரகனும் சாயனும் சூரனும் பிரமசேனனும் ஆகிய இந்த நாலு தலைவர்களும் உதயணன் முதலி யோரை எதிர்க்க, ஆருணி உதயணனுக்கு எதிரே வரும்பொழுது என்க. பமசேனன் - பிரமசேனன்.

(கடகபிங்கலர் செயல்)

௧௨௯ - ௧௩௨ : காந்தாரகன்.........பின்னர்

(பொ - ரை.) அந்த நான்கு தலைவர்களுள் வைத்துக் காந் தாரகன் என்பவனைக் கடகபிங்கலர் எதிர்த்து அவனுடைய தேன் மணக்கும் மலர்மாலையணிந்த மார்பினைத் தம் அம்புகளாலே திறவாநிற்ப, அவனும் கொடியனவாய்த்தன் மார்பின்கண் அழுந் திய அந்த அம்புகளோடே நிலத்தில்வீழ்ந்து இறந்தான், அவன் இறந்த பின்னர்......என்க.

(வி - ம்.) மார்பத்தை அம்புகளாலே திறப்ப என்க. வெய்யன வாய் மார்பில் அழுந்திய அம்போடு என்க. ௧௩௩ ஆம் அடி அழிந் தொழிந்தது.

(ஆருணியின் கூற்று)

௧௩௩ - ௧௩௬ : பெய்........எதிர்க்கென

(பொ - ரை) வீரக்கழல் கட்டிய அந்த ஆருணி மன்னன், பிறந்தநாளும், செவ்வாய்க்கிழமையும், விரிச்சிக ஓரையும், ஒன்று கூடிச் செறிதலாலே போராற்றல் மிக்க கொல்லும் வேலையுடைய அந்த ஆருணிமன்னன் "இங்கே என்னோடு எதிர்க்கத் தகுந் தோர் யார்? • அவர் வந்து என்னோடு எதிர்த்திடுக!" என்று அறைகூவ; என்க.

(வி - ம்.) ஒருவன் பிறந்த நாண்மீனும் செவ்வாய்க்கிழமையும் விரிச்சிகஓரையும் ஒன்றுகூடின் அவன் இறந்துபடுவன் என்பது கருத்து. பிறந்த நாள்மீன் (நட்சத்திரம்). ஏற்றோர் - தகுதியுடை யோர்.

(உதயணன் செயல்)

௧௩௭ - ௧௪௨ : சீற்ற........நெருங்க

(பொ - ரை.) சினத்தையும் வலிமையையும் உடைய சேதி நாட்டினர் மன்னனாகிய உதயணன் வீரக்கழல் கட்டிய காலை யுடையனும்ப் போர்க்கவசம் பூண்டவனும் ஒளியுடைய தனது

நல்ல வாளை மின்னும்படி வீசிக்கொண்டு பொறுத்தற்கரிய அன்புடைய தம்பியர் தன்னைச் சூழ்ந்துவர அழகிய வீரக்கழல் கட்டிய காலையுடைய தோழர்கள் பக்கங்களிலே வாராநிற்ப, ஆருணி மன்னனை நோக்கி, "இன்னாமையேயுடைய அரசனே! உன்னுடைய உயிரைக் குடிப்பதற்கு நின்னோடு பொருந்தாத பகைவனாகிய உதயணன் என்னும் பெயரையுடைய யான் இதோ வந்தேன் காண்" என்று சொல்லி நெருங்கிச்சென்று அவனை எதிர்க்க; என்க.

(வி - ம்.) சேதியர் பெருமகன் : உதயணன். கரண யாப்பு - போர்க்கவசம். ஒன்னாப் பகை - பொருந்தாத பகை. விழல் - ஒளி. தம்பியர் : கடகபிங்கலர். தோழர் : இடவகன் முதலியோர்.

(ஆருணியின் செயல்)

௧௪௫ - ௧௪அ : இடுகளி..........வாங்க

(பொ - ரை.) அவ்வுதயண மன்னனைக் கண்ட போர்த்திறன் மிக்க ஆருணி மதமூட்டப்பெற்ற ஒரு களிற்றியானையைத் தன் எதிர்கண்ட மற்றொரு களிற்றியானைபோல அவ்வுதயணனுடைய மொழிகளைப் பொறாஅய்ப் பலவாகிய மயிரையுடைய தோல் போர்த்த சித்திரப்பத்தியையுடைய கேடகத்தையும், மின்னல் போல ஒளிருகின்ற வாளையும் கைகளில் பற்றுநிற்ப; என்க.

(வி - ம்.) இடுகளி யானை - அதிமதுரத்தழை முதலியவற்றை யிட்டு மதமூட்டப்பெற்ற யானை என்க. மற்றொரு யானை - எதிர்கண்டாங்கென வருவித்தோதுக. அவன் : உதயணன். மயிரையுடைய தோல் அணிந்த என்க. பத்தி - வரிசை. சித்திரப் பத்தி என்க. சேடகம் - கேடகம் ; கிடுகு. பின்னவன் - பிற்கூறப்பட்ட ஆருணி.

(உதயணன் செயல்)

௧௪௯ - ௧௫௫ : காதி.........விரும்ப

(பொ - ரை.) காதி கருமங்களாகிய வெவ்விய வினைகள் அற்றொழிந்த காலத்தே மெய்யுணர்வினைப் பெற்ற ஓர் அறவோன் போல அவ்வுதயண மன்னன் இறத்தற்குக் காரணமான சினத்தை முற்படுத்தித் தன்னை எதிர்த்த அவ்வாருணி மன்னனைச் சினந்தவனாய் எதிர்த்து இனி எமக்குத் துணையாவார் யாவரும் வேண்டா! இனிமேல் இவ்வாருணியைச் சாகும்படி தாக்கி யான் என்னுடைய வெவ்விய சினத்தை ஆற்றுவேன் என்று தன்னுட் கருதி அந்த ஏயர் பெருமகன் அவனொடு போர் செய்தலை விரும்பாநிற்ப; என்க.

(வி - ம்.) காதிவெவ்வினை - காதி கருமங்கள். அவையாவன - ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதனீயம், மோகனீயம், ஆயு

ஷியம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்னும் எட்டுவகை வினைகள், "காதி கண்ணரிந்த காசில், தனிமுதிர் கடவுள்" (சீவக. ௩௨௪0), "காதிக் கண்ணரிந்து வென்ற உலகுணர் கடவுள்" (சீவக. ௨௭௧௩), என்பவற்றாலும் அவற்றின் உரைகளாலும் உணர்க. போதி - மெய்யறிவு. "போதிச் செல்வம் பூண்டவர்" (சீவக. ௩௯௯). வீதல் சான்ற - இறத்தலமைந்த. செயிர்த்தனன் - சினந்தனன். இதன்பின் என்றது இனிமேல் என்பதுபட நின்றது. வீய - சாக. தணிகு - தணிவேன். ஏயர்பெருமகன் : உதயணன்.

(தருமதத்தன் ஆருணியரசனைக் கொல்லல்)

௧௫௯ - ௧௬௪ : வேற்று.........ஏற்றலின்

(பொ - ரை.) உதயணன் கருத்தினைக் குறிப்பாலுணர்ந்து கொண்ட கடுந்திறலையுடைய தருமதத்தன் என்னும் அமைச்சன் உதயணனை வணங்கி, "வேந்தே! நம்பகையரசனைக் கொல்லும் செயலை மருது எனக்கு அருளுக" என்று கூறி அச்செயல் தன் கடமையே யாதலுக்குக் காரணம் எடுத்துக்கூறி வெல்லுதற்கரிய வலிமையையுடைய கருடனைப்போல ஆரவாரித்து அவ்வாருணி மேலே விரைந்துசென்று பகைவனது போர்வலிமையைக் கெடுக்கும் படைக்கலங்களைக்கொண்டு கண் இமைத்துக் காண்பவர் மீண்டும் காணவொண்ணாத போர்த்தொழில் சுழற்சியோடு அவ்வாருணி மன்னன் உயிர் பிறர் மறவர்களுக்கு உணவாதலின்றித் தனக்கே உணவாகும்படி அவ்வாருணியை யணுகி அவனோடு எதிர்த்தலால்; என்க.

(வி - ம்.) வேற்று வேந்தன் - ஆருணி. மன்ன : விளி. தருசக மன்னன் தருமதத்தனை நோக்கி, "நினக்கே அவனை நிறுத்துதல் கடன்" என்று கூறினன். ஆதலின் தருமதத்தன் ஆருணியைக் கொல்லுதல் தன் கருமம் என்றான். கடுந்திறல் - அன்மொழி. கடுந்திறலையுடையோன் என்க. கலுழன் - கருடன். புனைபடை - தரித்துக்கொள்ளும் படைக்கலம். இமைப்போர் காணா என்றது சுழற்சியின் விரைவைக் குறித்து நின்றது. பதம் - உணவு.

(இதுவுமது)

௧௬௫ - ௧௭௪ : வார்கவுள்........எறிதலின்

(பொ - ரை.) போகூழ் வலைப்பட்டிருந்த அவ்வாருணி மன்னன் ஏறிவந்த நெடிய கவுளையுடைய யானையும் அவன் வயத்ததாகாமல் அவன் செலுத்தும் வழியிற் செல்லாமல் தளர்ந்து நிற்றலைச்செய்ய, அப்பொழுது மாலையணிந்த மார்பினையுடைய அத்தருமதத்தன் கூர்மைமிக்க வச்சிரப்படையைக் கொண்டு இந்திரன் முகில்கள் பொருந்திய பெரிய மலையைச் சிறகரிந்து அழகழித்ததுபோல அந்த யானையைத் தன் படைக்கலத்தால் சிதைத்து வீழ்த்தி அதன்மேலிருந்த அவ்வாருணி மன்னன் எரி

மலை புரண்டு விழுந்தாற்போலப் புரண்டு வீழும்படி தாக்கி அவனுடைய மாலை பொருந்திய மார்பும் தலையும் சிதைந்துபோகவும், முடிக்கலனிடத்து உள்ள முத்துமாலைகளின் நிரல் அசையவும் தொடியணிந்த திண்ணிய தோள்கள் துணிபட்டு நிலத்தில் வீழவும், சிறிதும் காலந்தாழ்த்தலின்றித் தன் படைக்கலங்களால் எறிதலால்; என்க.

(வி - ம்.) ஊர்வழிச் செல்லாது - செலுத்தும் வழியிலே செல்லாமல். ஒல்குபு - ஒல்கி; தளர்ந்து. நிற்ற - நிற்க. வானவன் - இந்திரன். மலையின் சிறகரிந்து கவினழித்தல்போல் என்க மார்பன் : தருமதத்தன். வீழா - வீழ்த்தி. ' கனல் சொரிமலை - எரிமலை. தகர - சிதைய. பணிவிலன் - காலம் தாழானாய்.

(இதுவுமது)

கஎ௪ - க அ0 : படைக்கலம்.........வீழ்தலின்

(பொ - ரை.) அவ்வாருணி மன்னன் தன் படைக்கலங்கள் சோர்ந்து வீழாநிற்பவும், தனது அஞ்சாமையையுடைய கண்களை இமையாதவனாய்ச் செருக்கினோடும், மன உறுதியோடும் இயைந்து சாதற்குக் காரணமான அப்போர்க்களத்தின்கண் ஏக்கழுத்தம் படப் புரண்டு திருமாலை முதலாகவுடைய பிறப்பு வகைகளுள் வைத்து நான்மறையாளனாகிய பரசுராமன் மழுப் படையால் ஏறுண்ட கார்த்தவீரியன்போலக் கொழுவிய நிணத்தையுடைய குருதி வெள்ளத்தில் தனது யானையோடும் அழிவெய்தி இறந்து வீழ்தலாலே; என்க.

(வி - ம்.) தறுகணிமையான் என்றது. படைக்கலம் ஏறுண்டுழியும் கண்ணிமையானாய் என்று அவன் மறச்சிறப்புரைத்தவாறு. "விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பின், ஓட்டன்றோ வன்கணவர்க்கு" (திருக்குறள், எஎரு) என்பது காண்க. ஏடு-எடுப்பு; ஏக்கழுத்தம் திருகி - புரண்டு. மான் முதல் வகையின் நான் மறையாளன் - திருமாலை முதலாக உடைய பிறப்பு வகையின் வைத்துப் பரசுராமன் என்க. மன்னவன் : கார்த்தவீரியன். அவிந்தனன் - அவிந்து; இறந்து.

(உதயணன் செயல்)

க அக - க கூக : கொற்றம்.........போக்க

(பொ - ரை.) அது கண்ட உதயணன் முற்படக் கோசம்பி நகரத்தினும், நாட்டினும், வள்ளுவர் வெற்றி முரசத்தை யானையின் மேலேற்றிக் "குருகுலத்து மன்னனாகிய உதயணன் வெற்றி பெற்றான்" என்று கூறி முரசறைவாராக! என்று கட்டளையிட்டுப் பெருமை பொருந்திய தன் வீரப் புகழை யாண்டும் பரப்பிப் பின்னர்ப் பகைவரை யடைந்து போர்க்களத்தின்கண் கிடந்த

ஆருணிமன்னனுடலை இரக்கத்தோடு நோக்கி இம் மன்னவன் போர்த் தொழிலால் கிகழும் வீரமகளை நம்மால் வதுவை செய்து கொண்டனன். நடுக்கமில்லாத இவ்வாருணி வேந்தனை நாமும் முன்னின்று அடக்கம் செய்வோம் என்று யாழறி வித்தகனாகிய அவ்வுதயணன் தன் பகைவரும் தன்னைப் புகழும்படி தன் சுற்றத்தார்களைக் கொண்டு அம்மன்னனுடலைத் தீப்பெய்து அடக்கம் செய்வித்த பின்னர், அம்மன்னனுடைய உரிமைச் சுற்றத்தார்க்குச் சீவிதம் கொடுத்திடுக என்று இடவகனை விடுக்க; என்க.

(வி - ம்.) வெற்றம் - வெற்றி. பின்னுரை போக்கி - பெருமை பொருந்திய தன் வீரப் புகழை யாண்டும் பரப்பி. ஒன்னான்: ஆருணி மன்னன். படைத் தொழில் வதுவை - படைத் தொழிலால் செய்து கொள்ளும் திருமணம். அஃதாவது வீரமகளை மணத்தல். சமழ்த்தனன் - இரங்கினள். யாழறி வித்தகன் - உதயணன். அமரார் - பகைவர். ஈமம் - ஈமத்தீ. உரிமைச் சனம் - கோப்பெருந்தேவி முதலிய மகளிரும் பரிவாரங்களுமாம். ஏமம் - பொருள்; சீவிதம்; பாதுகாப்பு மாம்.

(வருடகாரன் செயல்)

௧௬௨ - ௧௬௮ : வரிகழ.........என

(பொ - ரை.) வரிந்து கட்டிய வீரக் கழலையுடைய வலிய முயற்சியையுடைய வருடகாரன் உதயணன் படைக்கு உடைந்தோடிய ஆருணியின் படைமறவரோடு கூடிக் கொடியையுடைய கோசம்பி நகரத்தின் வெற்றி பொருந்திய கோபுர வாயிலை எய்தி, ஆங்குள்ள மாந்தர்களை யணுகி, "நகர் வாழ் மக்களே! நீவிரெல்லாம் அஞ்சாதே கொண்மின்! குற்றமற்ற பெரும்புகழையுடைய இவ்வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணன் நம்பகை மன்னனாகிய ஆருணியைக் கொன்றனன். ஆதலின் அவ்வுதயண மன்னனுடைய மறவரும் பிறரும் நுழைதற்பொருட்டு இக்கோபுர வாயிற் கதவுகளை அடைத்து வையாதேயுங்கள்; திறந்து விடுமின்" என்று கூறுகிற்ப, என்க.

(வி - ம்.) வரிகழல்: வினைத்தொகை. இரியற் படை - உடைந்தோடிய படை. இஃது ஆருணியின் படை. வடு - குற்றம். கோமான்: உதயணன். படுத்தனன் - கொன்றனன். கதவை யடைத்து வையாது அகற்றுமின் என்க.

(நகர மாந்தர் கூறுதல்)

௧௬௯ - ௨0௨ : நகர.........என

(பொ - ரை.) அது கேட்ட அந் நகரப் பெருங்குடி மக்கள் குற்றமறக் கூறுபவர், "ஐய! தொன்று தொட்டு வழி வழி வந்த

எம்மரசனாகிய உதயண மன்னன் எழுதிய வெற்றியையுடைய இலச்சினையையுடைய ஓலையை எமக்கு விடுத்த பின் திறப்ப தல்லது இப்பொழுது யாங்கள் இந்நகரத்தினுள்ளே பிறர் புகுதற்குக் கதவினைத் திறந்துவிடேம்" என்று கூறுகிற்ப ; என்க.

(வி - ம்.) நகரத்தாளர் - நகராட்சித் தலைவர்களுமாம். புகர் - குற்றம். நன்கு தெரிந்து கொள்ளாமல் திறந்து விடுதல் குற்றமாக லின் அக்குற்றம் வாராமைப் பொருட்டுக் கூறுவர் என்பார், புகரறக் கூறுவர் என்றார். தொல் வழி - தொன்று தொட்டுத் தொடர்ந்து வருகின்ற மரபு. எம் பெருமகன் என்றது உதயணனை. வெல்லோலை - வெற்றியை யுணர்த்தும் ஓலை. பொறியோலை - இலச்சினையிட்ட ஓலை.

(யாவரும் நகர் புகுதல்)

௨0௩ - ௨0௬ : உடன்.........கொள

(பொ -ரை.) நகர மாந்தர் இவ்வாறு கூறிய உடனே அவர்களுடைய ஐயந் தீரும்படி உதயணனுடைய அமைச்சர்களுள் ஒருவனாகிய இடவகன் ஆங்கு வந்தமையை வருடகாரன் கூறுதலும், அந்நகர மாந்தர் இடவகனின் வருகையைப் பெரிதும் விரும்பிக் கொடியும் படாகையும் அழகுண்டாக உயர்த்தி மூடப் பட்ட கதவங்களைத் திறந்து இடவகன் வருடகாரன் முதலி யோரை எதிர்கொள்ளாநிற்ப ; என்க.

(வி - ம்.) உடன் - கூறிய உடன். அயிர்ப்பிரிய - ஐயந்திர வருடகாரன் இசைத்தலும் என்க. படாகை - பெருங் கொடி. வடிவு. அழகு. உயரி - உயர்த்தி.

(இதுவுமது)

௨0௭ - ௨௧௧ : வென்றி.........நூறி

(பொ - ரை.) இவ்வாறு வெற்றியோடு நகரத்திற்குள் புகுந்து நின்ற மறவருள் வைத்து அழியாத பெரும் புகழையும் பெருமை பொருந்திய சிறப்பையும் உடைய ஆருணி மன்னனுடைய கண் மணி போன்ற நட்புடையவனும், திண்ணிய அறிவாளனும், ஆகிய கும்பன் என்னும் படைத்தலைவனைக் கண்டு அவன் மனம் வெம்பும்படி கொன்று ; என்க.

(வி - ம்.) வென்றியோடு புக்கு நின்ற மறவர் என்றது உதய ணன் மறவர்களை. கும்பன் என்பவன் ஆருணியின் படைத் தலைவன். இவன் புறங்கொடுத்தோடி உதயணன் படை மறவர்களுள் புகுந்து கொண்டு நின்றான் என்பதும், அவனை உதயணன் மறவர் கண்டு பிடித்துக் கொன்றனர் என்பதும் இதன்கண் கூறப்பட்டன.

(இதுவுமது)

௨௧௨ - ௨௨0 : இன்று.........அறுத்தென்

(பொ - ரை.) பின்னரும் இன்றே இக் கும்பனுடைய உறவினர் இந்நகரத்தில் இருப்பாராயின், அவர் நம்பால் பகைமையிற் குறையார். அதலின், அவர்களையுந் தேடி யாம் கொன்று தீர்ப்பேம்! என்று ஆரவாரித்து உறையினின்றும் உருவிய வெள்ளிய வாளை உடையவராய்ப் புறப்படாநிற்ப. அங்குள்ள நல்லொழுக்கம் நிரம்பிய சான்றோர் அம்மறவர்கள் அத்தகைய பிழையைச் செய்யாமல் அவரைப் பாதுகாவாநிற்ப, இவ்வாறு உதயணன் தன் பகைவனை வேரோடு களைந்து ஒழிப்ப, மலையின் தொகுதிகளைப் போன்று வானுற உயர்ந்து நிற்கும் மாடமாளிகைகளையுடைய அக் 'கொடிக் கோசம்பிக் கோநகரத்தின் வீதிகளில்' விற்றழும்பு கிடந்த பொலிவுடைய பெரிய கைகளையுடைய சேதியர் மன்னனாகிய உதயணன் நீடுழி வாழ்க! என்று கூறி அலையையுடைய கடல் சூழ்ந்த இவ்வுலகமெல்லாம் அறியும்படி எங்கெங்கும் பிறை போன்ற மருப்பினையுடைய யானையினது சருச்சரையுடைய எருத்தத்தின் மேல் வெற்றிப் பறையை ஏற்றி, அறைவித்தனர் ; என்க.

(வி - ம்.) இவன் : இக்கும்பன். குன்றுர் - பகைமை குறையார். அவரை - அவ்வுறவினரை. கோறும் - கொல்வேம். தெழித்தனர் - ஆரவாரித்து. உரீஇ - உருவி. பிழைப்பிலராய் ஓம்ப என்க. சிலை - விற்றழும்பு. சேதியன் : உதயணன். வையம் - வையகமாந்தர் : ஆகு பெயர். பிணர் - சருச்சரை. பறை - வெற்றிப்பறை. விட்டன்று - விடப்பட்டது.

௨௭. பறை விட்டது முற்றிற்று.

மூன்றுவது மகத காண்டம் முற்றுப் பெற்றது.

பெருங்கதையில் மூன்றுவது மகதகாண்டத்திற்குப்
பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனுர் வகுத்த
உரையும் விளக்கமும் முற்றுப் பெற்றன.

ஆகக் காண்டம்

மூன்றிற்குக் கூடிய காதை ௩௦௫

அருஞ்சொற்றொடர் அகரவரிசை

[எண்கள் : காதை எண்ணும் அடி எண்ணும்]

பெருங்கதை

௪. வத்தவ காண்டம்

௫. நரவாண காண்டம்

கழக வெளியீடு, ககஉ0

கொங்குவேளிர்

இயற்றிய

பெருங்கதை

௪. வத்தவ காண்டம்

௫. நரவாண காண்டம்

பெருமழைப்புலவர்,

திரு பொ வே சோமசுந்தரனார்

எழுதிய

விளக்கவுரையுடன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1963

பொன்னுசாமி வேலுத்தேவர் சோமசுந்தரனார் (1909)

Ed 1 Feb 1963

O31,1DK,1
J6·4

PERUNKATHAI

IV. VATTHAVA KAANDAM

&

V. NARAVAANA KAANDAM

Forms 1-25 Printed at Vinodhan Press, Madras-1.
Title Form (Pages 1-8) & Forms 26, 27 Printed at
Appar Achakam, Madras-1.

பதிப்புரை

"ஓங்கலிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி, யேங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்" எனப் புலவராற் புகழப்பட்ட இருசுடரில் ஒருசுடராய், மாந்தர் சிந்தை மருளிருளகற்றி வந்துலவுஞ் செந்தமிழ் மொழியின் பல்கதிர்களாகப் பரவும் நல்லிலக்கிய நூல்களிற் சிறந்ததொன்றாகத் திகழ்வது பெருங்கதையாம். இதனைக் கொங்குவேண் மாக்கதை என்றுங் கூறுப. பெயர்க்கேற்ற சொற்பரப்பும் கதைப்பரப்பும் அந்நூலுட் காணலாம். உலகியலில் நிகழுஞ் செயல்கள் அனைத்தும் ஒருங்கு காட்டுங் கண்ணாடி யென்னலாம் இதனை. பிற்காலப் பெருங்காவியங்களிற் கம்பர் பாடிய இராமாவதாரமே விரிந்த நூலாகக் காணப்படுவது போல முற்காலக் கதைகளிற் பெருங்கதையே விரிந்த நூலாகும் என அறிந்து கொள்க.

இப் பெருங்கதையை ஒப்புடன் நாடி ஓடித்தேடி ஏட்டுச் சுவடியில் இருந்து பெயர்த்துத் தாளிற்றீட்டி யச்சிற்பதித்து ஆதியில் உதவியவர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களே! 1925, 1935 என்ற ஆண்டுகளில் இருபதிப்பு வெளிவந்தன. அப் பதிப்புக்களிற் குறிப்புரையும், கதைச் சுருக்கமும், நூலாசிரியர் வரலாறும் காணப்படுகின்றன. அந்நூலுள் அமைந்த காண்டங்கள் ஆறு. அவற்றுள் இறுதிக் காண்டம் ஆகிய துறவுக் காண்டம் கிடைத்திலது. முதற் காண்டத்தின் உட்பிரிவு ஆகிய ஐம்பத் தெட்டுள் முதல் முப்பத்தொன்று வரையுள்ள பிரிவுகளும் கிடைத்தில. ஐந்தாவது காண்டம் ஆகிய நரவாண காண்டத்தின் இறுதியிற் சில பிரிவுகளும் கிடைத்தில.

இலாவாண காண்டம் என்ற இரண்டாங் காண்டம் வித்துவான் வகுப்புக்குப் பாடமாக அரசியலார் அமைத்தது குறித்து 1956 ஆம் ஆண்டின் முதற் பதிப்பாக வெளியிட்டோம். அப்பதிப்பில் மாணவர் எளிதாகக் கற்றுப் பயன்பெறும் பொருட்டுத் தெளிந்த பொழிப்புரையும், விரிந்த விளக்கமும், இன்றியமையா இலக்கணக் குறிப்பும், தக்க மேற்கோளும் பெருமழைப் புலவர் திரு பொ. வே. சோமசுந்தரனார் அவர்களால் வரைவித்துப் புதிய பதிப்பாகத் தோற்றுவித்தோம்.

பெருங்கதையின் மற்றைக் காண்டங்களும் இம்முறையே வெளி வரும் எனவும் அறிவித்தோம். இலாவாண காண்டத்தின் முன்னுரை மிகவும் விரிவானது. அதனை அப்படியே முதற் காண்டமாகிய உஞ்சைக் காண்டத்தின்கண் சேர்த்துள்ளோம் பெருங்கதையை விளக்க இனி முன்னுரை வரைவது மிகையென மற்றைக் காண்டங்களிற் சேர்க்காது பதித்தனம்.

உஞ்சைக் காண்டம் தனியாக வெளிவந்துலவுகின்றது. மகத காண்டமும் அடுத்து வெளிவந்ததைத் தமிழன்பர்கள் பலரும் அறிவர். நான்காவது பகுதியாக வத்தவ காண்டமும், நரவாண காண்டமும் இயைத்துப் பதிப்பித்து இந்நாளில் வெளியிடுகின் றனம். வத்தவ காண்டம் பதினேழு உட்பிரிவுடையது: நரவாண காண்டத்தின் இறுதியகப்படாததால் ஒன்பது உட்பிரி வுடையதாய் நின்றது. ஆதலால் இவ்விரு பகுதிகளும் இயைத்துப் பதிப்பித்தல் நலமாம் என எண்ணினம். முன்னர்ப் பதிப்பித்த முறைபோலவே இப்பதிப்பும் அமைத்தனம்.

உரையாசிரியர் திரு. பொ. வே. சோமசுந்தரனார் பெருமையைத் தமிழ் உலகுக்கு எடுத்துக் காட்டவேண்டுவதின்று; பத்துப்பாட்டு, எட்டுத் தொகையுட் பல நூல்களுக்கு அன்னார் வரைந்தவுரையே நன்கு விளக்கும். பொழிப்புரையும், விளக்க மும், இலக்கணக் குறிப்பும், மேற்கோளும் வரைந்து காட்டி யிருப்பது புலவர் பலரும் வியந்து பாராட்டற்பாலதென மதிக்கின்றோம். அன்னார்க்கு என்றும் நன்றி பாராட்டுங் கடமையுடையது கழகம்.

பெருங்கதை நான்காவது பகுதியாகிய வத்தவ காண்டத்தில் "கொற்றங் கொண்டது" முதல் "விரிசிகை வதுவை" இறுதி யாகப் பதினேழு பகுதிகளும் நரவாண காண்டத்தில் "வயாக் கேட்டது" முதல் "மதனமஞ்சிகை பிரிவு" இறுதியாக ஒன்பது பகுதிகளும் உட்பிரிவுகளாக அமைந்து கிடக்கின்றன. வத்தவ காண்டத்திற் 'பந்தடி கண்டது' என்ற பகுதி எந்நூலினும் காணப் படாத புதிய விளையாடலை எடுத்துக் காட்டிய இன்பத் தொகுதியாம். உதயணன் தன்னுருவை மறைத்துப் பெண்ணுரு வாகப் பிடிமேலேறிச் சென்று பந்தடி காண்பதும், பந்தடித்த பைந்தொடிகளிற் சிறந்தாளொருத்தியைக் கண்டு பணிப்பெண்

எனத் தெரிந்தும் காதல் கொள்வதும், தேவியர் இருவர்க்கும் தெரியாத வகையில் அப்பணிப் பெண்ணைக் கூடிக் கலந்து இன்பந் துய்ப்பதும், தேவி கண்டு அவளைக் கட்டி வைத்துக் கூந்தலைக் கத்தரிகையாற் குறைக்கத் துணிவதும், பின்னர் அவளைத் தங்கையென் றறிந்து தானே மணமுடித்துக் கூட்டுவிப்பதும் ஆகிய கதைப் பகுதிகள் கண்டு களிப்புறற்பாலன.

நரவாண காண்டத்தில் உதயண மன்னன் மைந்தனாகிய நரவாணதத்தன் கணிகையர் குலமகளாகிய மதனமஞ்சிகையைக் கண்டு காதலித்து மன்றல் முடித்து மகிழ்வதும் மானசவேகன் அவளை வானுலகம் கொண்டு செல்வதும் வியக்கத்தக்க செய்தியாகும். பெருங்கதையின் பெருமையருமை எவராலும் எடுத்துரைக்க வியலாது.

பெருங்கதை நூலாசிரியர் பாவலரும் காவலரும் ஆவர். உலகியலறிவும் உண்மை நூலறிவும் ஒருங்கு பதிந்த உள்ளத்தினர். ஆதலால் இந் நூலைக் கற்பவர் எவரும் உலகியலறிவும் அரசியலறிவும் ஆகிய பலவகையறிவும் வாய்ந்து வாழும் வழி கண்டு நல்வாழ்வு பெற்றுயர்வர் என்பது ஒருதலை. தமிழன்பர் பலரும் கற்றும் கற்பித்தும் நற்பயன் பெறுவர் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

உள்ளுறை

பெருங்கதை

நான்காவது

வத்தவ காண்டம்

அஃதாவது :—உதயண மன்னன் வத்தவ நாட்டிலிருந்தபொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் பகுதி என்றவாறு.

இதன்கண் : உதயணன் வருடகாலன் முதலியோர்க்குச் சிறப்புச் செய்தலும், அவன் அரசு கட்டில் ஏறுதலும், உதயணன் செங்கோற் சிறப்பும், அவன்தன் நாட்டைப் பரப்புதலும், பத்திராபதியின் என்பு முதலியவற்றைக் கொணரும்படி சிலரை விடுதலும், பத்திராபதி வீழ்ந்த இடத்தில் அதற்கு உருவச்சிலை எடுத்தலும், பூசனை நிகழ்வித்தலும், அவன் இழந்த யாழைப் பெறுதலும், உதயணன் நிலையும், தருசகன் உருமண்ணுவாவைச் சிறைவீடு செய்தலும், யூகி சாதகனை உருமண்ணுவாவிடம் விடுத்தலும், உருமண்ணுவா நகரையடைதலும், உதயணன் வாசவதத்தையை நினைந்து வருந்தித் துயிலலும், விழித்தபின் முனிவரைக் கண்டு வினுதலும், முனிவர் கனுப்பயன் உரைத்தலும், உதயணன் பதுமாபதி முதலியோரை வஞ்சித்துத் தனி இடத்தே சென்று துயிலுதலும், அமைச்சர் வாசவதத்தையை உதயணன் பால் விடுதலும், வாசவதத்தை செயலும், உதயணன் செயலும், யூகியின் நிலைமையும், வாசவதத்தையின் நிலைமையும், உதய்ணன் யூகியைக் காண்டலும், வாசவதத்தை வருதலும், உதயணன் சாங்கியத் தாயை நோக்கிக் கூறுதலும், அனைவரும் நகர்க்குச் செல்லுதலும், பதுமாபதி வாசவதத்தையைக் காண்டலும், வாசவதத்தை சினத்தலும், அவளை உதயணன் தெருட்டலும், உதயணன் அமைச்சர் முதலியோர்க்கு விருத்தியளித்தலும், தேவிமார் விருத்தி பெறுதலும், பிரச்சோதனன் தூதுவிடுதலும், உதயணன் பிரச்சோதனனுக்கு ஓலை விடுதலும், வாசவதத்தையும் பதுமாபதியும் பந்தடி காணுத

னும், உதயணன் பந்தடி காண்டலும், அவன் மானனீகையைக் காதலித்தலும், வாசவதத்தையின் நெற்றியில் யவனவெழுத்தால் காதற்றிருமுகம் வரைந்து அவன் மானனீகைக்குத் தன் காதலை யுணர்த்துதலும், அவள் அவ்வாறே வாசவதத்தையின் நெற்றியில் தன் மறுமொழியை வரைந்து உதயணன்பால் விடுதலும், வாசவதத்தை உதயணனை ஐயுறுதலும், அவன் செயலை ஒற்றி யுணர்தலும், வாசவதத்தை மானனீகையிடத்தில் மறைந்திருத்தலும், உதயணன் அவளை மானனீகை யென்று கருதி மனங் கனிந்து காதன் மொழி பலப்பல கூறுதலும், வாசவதத்தை சினத்தலும், உதயணன் வெருவுதலும், வாசவதத்தை மானனீகையின் கூந்தலைக் குறைக்க முயலுதலும், வயந்தகன் உதயணனைத் தேடிக் காண்டலும், அவன் வாசவதத்தையைக் காணலும், வாசவதத்தை கூற்றும், வயந்தகன் கூறலும், உதயணன் யூகியை வருவித்துக் கூறலும், யூகியின் விடையும், யூகி பித்தர் வேடந் தரித்தலும், தோழியர் யூகியின் வேடத்தைக் கண்டு ஓடலும், வயந்தகன் சிலதியை விடுத்தலும், உதயணன் பதுமாபதியை வருவித்தலும், பதுமாபதி உதயணனை வினவுதலும், உதயணன் பதுமாபதியை விடுத்தலும், பதுமாபதி வேண்டிக்கொள்ளுதலும், கோசலத்தரசன் தூதுவர் வரவைக் காவலர் உரைத்தலும், அவரை உதயணன் வருவித்தலும், தூதுவர் ஓலையை அளித்தலும், ஓலையை வாசவதத்தைக்கு உதயணன் விடுத்தலும், அவளுக்கு ஓலையைப் பதுமாபதி படித்துக் காட்டலும், ஓலையின் செய்தியும், பதுமாபதி ஓலையை வாசவதத்தையிடம் கொடுத்தலும், வாசவதத்தை ஓலையைப் படித்து வருந்துதலும், வாசவதத்தை மானனீகையின் கட்டை அவிழ்த்து இரங்கலும், மானனீகையை வாசவதத்தை அலங்கரித்தலும், வயந்தகன் உதயணனுக்குத் தெரிவித்தலும், உதயணன் மகிழ்தலும், மானனீகையை மணஞ்செய்து கொள்ளலும், விரிசிகையின் இயல்பும், அவள் தந்தை உதயணனை அடைதலும், முனிவர் கூற்றும், உதயணன் விரிசிகைக்கு மாலை சூட்டியதும், விரிசிகையின் முதுக்குறைவும், அவள் தந்தை தன் மகளை மணஞ்செய்து கொள்ளும்படி உதயணனுக்குக் கூறலும், விரிசிகையின் வதுவையை வாசவதத்தைக்கு உணர்த்தலும், வாசவதத்தை உடன்படலும், உதயணன் விரிசிகையை மணஞ்செய்துகொள்ள விரும்பலும், நகர மாந்தர் விரிசிகை வரவு காண விரும்பலும், விரிசிகையின் தமர் அவளைக் கொணர்தலும், விரிசிகையைப் புனைதலும், அவளை விடுத்தலும், விரிசிகையின் தந்தை தவம்புரியச் செல்லலும், அவள் தமர் அவள் விளையாடிய பொருள்களைக் கொண்டு உடன் செல்லலும், கண்டோர் கூற்றும், விரிசிகை அரண்மனையை அடைதலும், உதயணன் அவளை மணந்து இன்புறலும், பிறவும் கூறப்படும்.

க. கொற்றங்கொண்டது

இதன்கண் : *பகைவனைக் கொன்று வெற்றிப் பறைவிட்ட வத்தவ வேந்தன் உதயணன் வருடகாரன் முதலிய அமைச்சர்க்குச் சிறப்புச் செய்தலும், அவன் அரசுகட்டி லேறுதலும் கூறப்படும்.*

பகைமுத லறுத்துப் பைங்கழ னோன்றாள்
வகைமிகு மான்றேர் வத்தவர் கோமான்
வருட காரன் பொருடேரி சூழ்ச்சி
பொய்யாது முடித்தலின் மெய்புறத் தழீஇ
ஏறிய யானையுந் தன்மெய்க் கலனும்
கூறுபட லின்றிக் கொடுத்தனன் கூறி
அறைபோ மிவனென வாருணி யுரைத்த
குறையா விழுப்பொரு ளன்றே கொடுத்துத்
தரும தத்தனைத் தோண்முதல் பற்றிப்
பரும யானையொடு பாஞ்சால ராயனை
வெங்களத் தட்ட வென்றி யிவையென
நெய்த்தோர்ப் பட்டிகை யாக வைத்துப்
பத்தூர் கொள்கெனப் பட்டிகை கொடுத்து
நன்னாட் கொண்டு துன்னினர் சூழ
வெங்கண் யானைமிசை வெண்குடை கவிப்பப்
பொங்குமயிர்க் கவரி புடைபுடை வீசக்
கங்கை நீர்த்தங் கடன்மடுத் தாங்குச்
சங்கமுந்தூரமு முரசினோ டியம்ப
மன்பெரு மூதூர் மாசன மகிழ்ந்து
வாழ்த்து மோசை மறுமொழி யார்க்கும்
கேட்பதை யரிதாய்ச் சீர்த்தகச் சிறப்ப
ஊழி தோறு முலகுபுறங் காத்து
வாழிய நெடுந்தகை யெம்மிடர் தீர்க்கெனக்
கோபுரந் தோறும் பூமழை பொழியச்
சேயுயர் மாடத்து வாயில் புக்குத்
தாம மார்ப னாருணி தன்னோ
டேம மேரு வியல்புடை யமைதியர்க்

கேம மீத்த வியல்பின னாகிக்
கழிந்தோர்க் கோத்த கடந்தலை கழிக்கென
ஒழிந்தோர்க் கெல்லா மோம்படை சொல்லி
வேறிடங் காட்டி யாறறிந் தோம்பி
வியலக வரைப்பிற் கேட்டோர் புகழ
உயர்பெருந் தானை யுதயண குமரன்
அமைச்சினு நண்பினுங் குலத்தினு மமைதியிற்
பெயர்த்துநிலை யெய்திப் பெருந் தழீஇ
....
முதற்பெருங் கோயின் முந்துதனக் கியற்றி
மணிப்பூண் கண்ணியர் மரபறி மாந்தர்
முட்டில் கோலமொடு கட்டில் படுப்ப
நோற்றார் விழையு நாற்பான் மருங்கினும்
முழவொலிச் சும்மையொடு முரசங் கறங்க
விழவியல் சும்மையொடு வியனகர் துவன்றிக்
குடியுங் குழுவு மடியுறை செய்ய
ஏவல் கேட்குங் காவல ரெல்லாம்
பெருந்திறைச் செல்வமொ டொருங்குவந் திறுப்பக்
களம்படக் கடந்து கடும்பகை யின்றி
வளம்படு தானை வத்தவர் பெருமகன்
மாற்றார்த் தொலைத்த மகிழ்ச்சியொடு மறுத்தும்
வீற்றிருந் தனனால் விளங்கவை யிடையென்.

உரை

௧. கொற்றங்கொண்டது

அஃதாவது—உதயணன் கோசம்பி நகரைக் கைப்பற்றி அரசு கட்டிலேறி அரசுரிமையை மேற்கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் வருடகாரன் முதலியோர்க்குச் சிறப்புச் செய்தல்)

௧ - ௮ : பகை...............கொடுத்து

(பொழிப்புரை.) *சிலைப் பொறித்தடக்கைச் சேதியன் அலை* கடல் வையம் *அறியத் தன் பகைவனை வென்று யானையின் எருத்*

தத்தில் வெற்றி முரசத்தை ஏற்றி, நகரினும், நாட்டினும் வெற்றிச் செய்தியை அறைவித்தபின் பசிய வீரக் கழல் கட்டிய ஆற்றன் மிக்க திருவடிகளையுடைய உயர் பிறப்புடைய குதிரை பூட்டிய தேரையுடைய அவ்வத்தவர் கோமான், உறுதிப் பொருள்களை ஆராய்ந்து அறிதற்குக் காரணமான தன்னுடைய சூழ்ச்சியினைப் பொய்யாது முடித்தலாலே, அவனை நன்கு மதித்து மார்போடணைத்துக்கொண்டு முகமன் பல கூறித் தான் ஏறுதற்குரிய யானையையும் தன் உடம்பில் அணிந்திருந்த அணிகலன்களையும் ஒரு சேர வழங்கிப் பின்னரும் தன் பகைவனாகிய ஆருணி மன்னன் இவ்வருடகாரன் என்னிடத்தினின்றும் பிரிந்து தன்னிடத்தே வந்து கேண்மை கொள்ளுவன் என்று கருதி இங்ஙனம் கீழறுத்தற் பொருட்டாக வழங்குவதாகக் கூறியிருந்த சிறந்த பொருள்களை யெல்லாம் அற்றை நாளிலேயே வழங்கி; என்க.

(விளக்கம்) பகைமுதல் - பகையாகிய முதல் என்க; என்றது ஆருணியை. வகை - பிறப்புவகை. மான் - குதிரை. வத்தவர் கோமான் : உதயணன். வருடகாரன் : தருசகன் அமைச்சர்களுள் ஒருவன். சூழ்ச்சி - துணிந்த காரியம் : ஆகுபெயர். தழீஇ - தழுவி. கூறுபடலின்றி - ஒரு சேர. முகமன்கூறி என்க. ஆருணி மன்னன் இப்பொருளை இவனுக்கே வழங்கினால் இவன் உதயணனை வஞ்சித்து என்பால் வருகுவன் என்று கருதி வழங்குவதாகக் கூறியிருந்த சிறந்த பொருள்களையெல்லாம் என்க. அறைபோதல் - வஞ்சித்துப் பிரிந்து போதல்.

(இதுவுமது)

௬௰ - ௬௰௫ : தரும..................கொடுத்து

(பொ - ரை.) பின்னர்த் தருமதத்தன் என்னும் அமைச்சனை, மகிழ்ந்து நோக்கி அவனுடைய தோள்களைப் பற்றிக் கொண்டு, " அன்பனே! நீ ஒப்பனையுடைய யானையோடு என் பகைவனாகிய ஆருணிமன்னனை வெவ்விய போர்க்களத்திலே கொன்று வீழ்த்திய வெற்றியின் பொருட்டு நினக்கு யான் வழங்கும் பொருள் இவைகாண் " என்று கூறி குருதிப்பட்டிகையாக இந்தப் பத்தூர்களையும் நீ ஏற்றுக்கொள்க என்று கூறிப் பட்டிகையும் எழுதிக்கொடுத்து ; என்க.

(வி - ம்.) தருமதத்தன் : தருசகன் அமைச்சருள் ஒருவன். பாஞ்சாலராயன்-ஆருணிமன்னன். வென்றிக்கு இவை கைம்மாறு என்று என்க. நெய்த்தோர்ப் பட்டிகை - போர்க்களத்தே பகைவரை எதிர்த்து நின்று தங்குருதியை சிந்திக்கொள்ளும் வெற்றிக்குக் கைம்மாறாகச் செப்புப் பட்டயத்தில் எழுதி வழங்கும் முற்றூட்டு என்க. பட்டிகை - பட்டயம்.

(இதுவுமது)

கச – உக : நன்னாள்................ .....சிறப்ப

(பொ - ரை.) நல்லதொரு முழுத்தத்திலே தன்னுடைய ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் தன்னைச் சூழ்ந்து வாராநிற்ப, வெவ்விய கண்ணையுடைய களிற்றியானையின் எருத்தத்திலேறி இருந்து, கொற்றவெண்குடை நிழற்றா நிற்பவும், மிக்க கவரிமான் மயிராலாகிய சாமரைகள் இருமருங்கும் வீசவும், கங்கைப் பேரியாற்றின் வெள்ளம் கடலிலே புகுந்தாற்போல, சங்குகளும் தூரங்களும் (?) முரசங்களும் முழங்கா நிற்பவும், தலைநகரமாகிய பழைய அக்கோசம்பி நகரத்துப் பெருமக்கள் உளமகிழ்ந்து தன்னை வாழ்த்துகின்ற ஆரவாரம், அங்குப் பிறர் கூறுகின்ற மறுமொழியை யாரும் கேட்டற்கியலாதபடி புகழோடு சிறவா நிற்பவும்; என்க.

(வி - ம்.) நன்னாள் - அரசுகட்டில் ஏறுதற்குரிய நல்ல முழுத்தம். துன்னினர் - ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் ஆகிய அரசியற் சுற்றத்தார். வெங்கண்யானை - ஈண்டு அரசயானை. நீத்தம் - வெள்ளம். தூரம் - ஒருவகை இசைக்கருவிபோலும். இயம்ப - முழங்க. மன்மூதூர், பெருமூதூர் எனத் தனித்தனி இயைத்துக்கொள்க. மாசனம்-பெருமக்கள். மறுமொழி - ஒருவர்க்கொருவர் கூறும் மொழி. கேட்பதை - கேட்பது; கேட்டல்: ஐகாரம் சாரியை.

(இதுவுமது)

உஉ - ரு : ஊழி..................புக்கு

(பொ - ரை.) வாயில் மாடந்தோறும் மாந்தர் மேனின்று எம்பெருமான் ஊழி தோறு ஊழி இவ்வுலகத்தைக் காத்து வாழ்க! எம்முடைய இடர் களைந்து எம்மைப் பாதுகாத்தருளுக! என்று கூறி மலர்மழை பொழியா நிற்பவும் மிகஉயர்ந்த கோபுரத்தினையுடைய பெருவாயிலிலே நுழைந்து; என்க.

(வி - ம்.) நெடுந்தகை : நெடிய புகழையுடைய உதயணன். கோபுரம் - வெளிக்கோபுரமும் உட்கோபுரமும் எனப் பலவாகலின் கோபுரந்தோறும் பூமழை பொழிய என்றார். சேயுயர்மாடம் - மிக உயர்ந்த கோபுரம். அத்தாணி மண்டபமுமாம்.

(இதுவுமது)

உசூ - ௩க : தாமம்..................ஓம்பி

(பொ - ரை.) வாகைமாலை புரளுகின்ற அவ்வுதயண மன்னன் தன் பகைவனாகிய ஆருணிமன்னன் தேவிமாருள் வைத்து உடன்கட்டை ஏறாமல் கைம்மை நோன்பினை மேற்கொண்ட தன்மையுடைய தேவிமார்களுக்கெல்லாம் சீவிதம் வழங்கும் கடமையை மேற்கொண்டவனாய்ப் பின்னரும் தன்

சுற்றத்தாரை நோக்கி நம்போர்க்களத்திலே இறந்தொழிந்த மறவர்கட்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ப இறுதிக்கடன் செய்து முடிப்பீராக என்று கட்டளையிட்டு ஆருணியின் ஏனைய பரிசனங்கட்கெல்லாம் ஓம்படை மொழிகூறி, அவர் இனிது வாழ்தற்கு வெவ்வேறு இடங்களைக் காட்டி இவ்வாறு முறைமையறிந்து அவ்வாருணியின் உறவினர்களையும் பரிவாரங்களையும் பாதுகாத்தருளியபின் ; என்க.

(**வி - ம்.**) மார்பன் : உதயணன். ஆருணிதன்னோடு ஈமம் ஏரு இயற்படை அமைதியர் என்றது, அவனோடு உயிர்விடாமல் கைம்மை நோன்பினை மேற்கொண்ட அவன் தேவிமாரை. ஈமம் ஏறுதல் - உடன் கட்டை ஏறுதல். ஈமமேரு இயல்புடையமைதி என்றது, தாபத நிலையினை. இதனால் ஆருணிமன்னன் தேவியருள் சிலர் உடன்கட்டை ஏறினரும் உளர் என்பது பெற்றாம். ஏமம் - பாதுகாப்பு என்றது, சீவிதப்பொருள் வழங்குதலை. கழித்தோர் - போரில் இறந்துபட்டவர். ஆறு - அரசியல் நெறி.

(உதயணன் அரசுகட்டிலேறுதல்)

௩௨ - ௫௦ : வியல்...............கறங்க

(**பொ - ரை.**) அகன்ற இடத்தையுடைய இந்நில உலகத்தின்கண் தன் செயலைக் கேள்வியுற்றோரனைவரும் தன்னைப் புகழ்ந்து பாராட்டும்படி, உயர்ந்த பண்புடைய பெரிய படைகளையுடைய உதயணகுமரன் தனக்குச் சிறந்த அமைச்சர்கள் வாய்த்தமையானும் சிறந்த நண்பர்களின் கூட்டுறவு கிடைத்தமையானும் தனக்கியல்பாக உள்ள உயர்குலத்துப் பண்பினானும் மீண்டும் அமைதியிலே நிலைபெற்று வாழ்க்கைப்பயனாகிய சிறந்த புகழையும் தன்னோடு இழைத்துக்கொண்டு................................ தான் வீற்றிருத்தற் பொருட்டு அவ்வரண்மனைக்கண் முதன்மையுடைய பேரத்தாணிமண்டபம் ஒன்றனையும் இயற்றாநிற்ப, வரலாற்று முறைமையறிந்தவரும் மணியணிகலன் உடையவரும், ஏனாதி, காவிதி என்னும் பட்டங்களைப் பெற்று அவற்றிற்கு அறிகுறியாகப் பொற்பூங்கண்ணி அணிந்தவரும் ஆகிய நகர நம்பியருள் வைத்து முட்டில்லாத ஒப்பனையோடு அரசுகட்டிலை முறைமையறிந்து இடாநிற்ப, உலகினைத் துறந்து நோற்கும் துறவோர் தாமும் விரும்புதற்குக் காரணமான அவ்வரண்மனையின் நான்கு பக்கங்களினும், மத்தளத்தை யுள்ளிட்ட இன்னிசைக் கருவிகளின் முழக்கத்தோடே வெற்றி முரசங்களும் முழங்காநிற்ப ; என்க.

(**வி - ம்.**) படைகளுக்குள்ள நல்லிலக்கணங்களால் உயர்ந்த பெருந்தானை என்க. அவையாவன: நான்குறுப்பானும் நிறைதல், ஊறஞ்சாமை, அறைபோகாமை, புறமிடாமை, மறம், மானம், மாண்டவழிச்

செலவு, சிறுமையின்மை, துனியின்மை, வறுமையின்மை முதலியன. பேர் - புகழ். வாழ்க்கைப்பயன் அதுவேயாகலின் பேருந்தழீஇ என்றார். மணிப்பூண் கண்ணியர் என்றது காவிதி முதலிய பட்டங்களுக்கு உரிய மாலைகளையணிந்த நகர நம்பியரை. மரபு - கட்டிலிடும் முறைமை. சும்மை - ஆரவாரம். கறங்க - முழங்க.

(இதுவுமது)

சக - அ: விழவு..................இடையென்

(பொ - ரை.) இவ்வாறு அரசு கட்டிலேறும் விழாவிற்குரிய ஆரவாரங்களோடு அகன்ற அந்நகரத்தின் கண்ணுள்ள மாந்தர் எல்லோருங்கூடி மகிழாநிற்ப குடிமக்களும் ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் அடியின்கண் உறையாநிற்பவும், தான் ஏவியவற்றைக் கேட்கும் ஏனைய மன்னர்களெல்லாம் மிக்க செல்வமாகிய திறைப் பொருளோடே தன் முற்றத்திலே வந்து குழுமி, செவ்வி பெறாமல் தங்கி இருப்பவும், தன் மாற்றாரையெல்லாம் போர்க்களத்திலே கொன்று அழித்தமையால் இனிக் கடும்பகைவர் யாருமில்லாத வளமிக்க படையையுடைய அவ்வத்தவர் வேந்தன், பகைவரை அழித்தொழித்த வெற்றி மகிழ்ச்சியோடு மீட்டும், அரசு கட்டிலேறி விளக்கமுடைய சான்றோர் அவையின் நடுவே வீற்றிருப்பானாயினன்; என்க.

(வி - ம்.) விழவு - முடிசூட்டுவிழவு. துவன்றி - செறிந்து; செறிய என்க. குடி - ஆறங்கங்களுள் ஒன்று. குழூ - ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும். அடியுறைசெய்ய - திருவடியின்கண் உறைய. இடம்பெறாமையால் ஒருங்கு வந்து இருப்ப என்றார். முன்பு வீற்றிருந்த அரசு கட்டிலே என்பது தோன்ற மறுத்தும் வீற்றிருந்தனன் என்றார்.

க கொற்றங்கொண்டது முற்றிற்று.

உ. நாடு பாயிற்று

இதன்கண் : உதயணமன்னன் அரசுகட்டிலேறியபின்னர்க் குடிமக்களுக்கிருந்த குறைகளைப் போக்கித் தன் ஆட்சியைப் பரப்பியது கூறப்படும்.

விளங்கவை நடுவண் வீற்றினி திருந்த
வளங்கெழு தானை வத்தவர் பெருமகன்
வெங்கோல் வேந்தன் வேற்றுநா டிதுவெனத்
தன்கோ லோட்டித் தவற்றி னட்டிய
புன்சொற் படுநுகம் புதியவை நீக்கிச்
செங்கோற் செல்வஞ் சிறப்ப வோச்சி
நன்னக ரகத்து நாட்டக வரைப்பினும்
தொன்மையின் வந்த தொல்குடி யெடுப்பிப்
படிறு நீக்கும் படுநுகம் பூண்ட
குடிகட் கெல்லாங் குளிர்ப்பக் கூறித்
திருந்திய சிறப்பிற் றேவ தானமும்
அருந்தவர் பள்ளியு மருகத் தானமும்
திருந்துதொழி லந்தண ரிருந்த விடனும்
தோட்டமும் வாவியுங் கூட்டிய நல்வினை
ஆவணக் கடையு மந்தியுந் தெருவும்
தேவ குலனும் யாவையும் மற்றவை
சிதைந்தவை யெல்லாம் புதைந்தவை புதுக்கென்
றிழந்த மாந்தரு மெய்துக தமவெனத்
தழங்குரன் முரசந் தலைத்தலை யறைகெனச்
செல்வப் பெரும்புனன் மருங்கற வைகலும்
நல்கூர் கட்டழ னலிந்துகை யறுப்ப
மானம் வீட லஞ்சித் தானம்
தளராக் கோள்கையொடு சால்பகத் தடக்கிக்
கன்னி காமம் போல வுள்ள
இன்மை யுரையா விடுக்க ணுளிரும்
ஊக்கமும் வலியும் வேட்கையும் விழைவும்
முப்படர்ந் துழக்க முடங்கி னீரும்

யாப்பணி நன்னலந் தொலைய வசாஅய்த்
தீப்பிணி யுற்றுத் தீரா தீரும்
இடுமணன் முற்றத் தின்னியங் கறங்கக்
குடுமிக் கூந்தலு ணறுநெய் நீவி
நல்லவை நாப்பட் பல்சிறப் பயர்ந்து
கொண்டோன் றுறந்து கண்கவிழ்ந் தொழுக
வாழ்த லாற்றாச் சால்பணி மகளிரும்
நிறைப்பெருங் கோலத்து நெறிமையின் வழாஅ
உறுப்புக்குறை பட்டீ ருட்படப் பிறரும்
வந்தனிர் குறுகி நுங்குறை யுரைத்துத்
துன்ப நீங்க வின்பம் பயப்ப
வேண்டின கொள்ளப் பெறுதிர் நீரென
மாண்ட வீதியொடு மன்ற மெல்லாம்
ஆர்குரன் முரச மோவா ததிரக்
கோடி முற்றி நாடொறும் வருவன
நாடு நகரமு நளிமலை முட்டமும்
உள்கண் டமைந்த கோள்குறி நுகும்பிற்
கணக்கருந் திணைகளு மமைக்குமுறை பிழையாது
வாயிற் செல்வங் கோயிலுட் கொணரப்
போரின் வாழ்நரும் புலத்தின் வாழ்நரும்
தாரின் வாழ்நருந் தவாஅப் பண்டத்துப்
பயத்தின் வாழ்நரும் படியிற் றிரியா
ஓத்தின் வாழ்நரு மொழுக்கின் வாழ்நரும்
யாத்த சிறப்பக் கயிற்றின் வாழ்நரும்
உயர்ந்தோர் தலையா விழிந்தோ ரீறா
யாவர்க் காயினுந் தீதோன் றின்றி
மறனி னெருங்கி நெறிமையி னோரீஇக்
கூற்றுயிர் கோடலு மாற்றா தாக
உட்குறு செங்கோ லூறின்று நடப்ப
யாறுந் தொட்டவு முறுவன வொழுகக்
காடும் புறவுங் கவின்றுவளஞ் சிறப்பப்
பொய்யா மாரித் தாகி வைகலும்
தண்டா வின்பந் தலைத்தலை சிறப்ப
விண்டோய் வெற்பின் விளைகுர லேனற்

குறவ ரெறிந்த கோலக் குளிர்மணி
முல்லை தலையணிந்த முஞ்ஞை வேலிக்
கோல்லை வாயிற் குப்பையுள் வீழவும்
புன்புல வுழவர் படைமிளிர்த் திட்ட
ஒண்கதிர்த் திருமணி யங்கண் யாணர்
மருத மகளிர் வண்டலுள் வீழவும்
வயலோ ரேடுத்த கெளவைக் கிருங்கழிக்
கயல்கோள் போலம்புள் கதுமேன வெருவவும்
திணைவிராய் மணந்து திருவிழை தகைத்தாக்
களவு மரம்புங் கனவினு மின்றி
விளைத லோவா வியன்பெரு நாட்டோடு
பட்டி நியமம் பதிமுறை யிரீஇ
முட்டின்று நிரம்பிய காலை யொட்டாப்
பகைப்புலந் தேயப் பல்களிற் றியானையோடு
தகைப்பெருந் தம்பியர் தலைச்சென் றகற்ற
ஆணை கேட்ட வகலிடத் துயிர்கட்
கேம வெண்குடை யின்னிழற் பரப்பி
வீணை வேந்தன் வியனுடு கெழீஇ
மகத மன்னவன் றனையோடு வந்த
பகையடு மறவரைப் பதிவயிற் போக்கி
அருவிலை நன்கல மமைந்தவை பிறவும்
தருசகன் கோள்கெனத் தமரோடு போக்கிப்
பட்ட மேய்திய பதுமா பதியோடு
முட்டில் செல்வத்து முனிதல் செல்லான்
மட்டுவிளை கோதையொடு மகிழ்ந்துவிளை யாடிச்
செங்கதிர்ச் செல்வ னெழூச்சியும் பாடும்
திங்களு நாளுந் தெளிதல் செல்லான்
அந்தளிர்க் கோதையை முந்துதா னெய்திய
இன்பக் கிழவ னிடவகை யன்றி
மன்பெரு மகதன் கோயிலுள் வான்றேய்
கன்னி மாடத்துப் பன்முறை யவளோடு
கழிந்தவும் பிறவுங் கட்டுரை மோழிந்து
பொன்னிழை மாதரோ டின்மகிழ் வெய்திப்

கூறு பெருநகர் வரைப்பிற் றிருமனை யிருந்து
தீயன நீக்கித் திருவிழை தகைத்தாப்
பாயினன் மாதோ பயந்தநன் ஞடேன்.

உரை

உ. நாடு பாயிற்று

அஃதாவது - உதயணன் வத்தவ நாட்டினைச் சீர்திருத்திப் பரப்பிய செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் செங்கோற் சிறப்பு

க - அ: விளங்கவை.....................எடுப்பி

(பொ - ரை.) இவ்வாறு சான்றோர் அவை நடுவண் அரசு கட்டிலேறி இனிதே வீற்றிருந்த வளமிக்க படையினையுடைய அவ்வத்தவர் வேந்தன் முன்னர்க் கொடுங்கோலனாகிய ஆருணி வேந்தன் இந்நாடு எனக்கு வேற்று நாடேயாகும் என்னும் கருத்தாலே நாட்டன்பு சிறிதுமின்றித் தன்னுடைய கொடுங்கோன்மையைச் செலுத்தித் தீய நெறிகளிலே நிலைநிறுத்திவைத்த பழிக்குக் காரணமான புதிய வரிச்சுமைகள் பலவற்றையும் நீக்கித் தனக்கியல்பான செங்கோன்மையை அந் நாட்டிலே செல்வந் தழைக்கும்படி நடாத்தி நல்ல நகரங்களிடத்தும் ஊர்களிடத்தும் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த பழங்குடி மக்களை உயர்த்தி; என்க.

(வி - ம்) பெருமகன்: உதயணன். வெங்கோல் வேந்தன் என்றது ஆருணியை. வேற்று நாடு இஃது என்னுங் கருத்தால் நாட்டன்பின்றி என்றவாறு. தன்கோல் என்றது தனக்கியல்பான கொடுங்கோல் என்பதுபட நின்றது. தவற்றின் - தவறான வழிகளில். புன்சொல் - பழிச்சொல். படுநுகம் - பெரிய அரசியற் சுமை; என்றது வரிச்சுமையை. செங்கோல் ஓச்சி என்க. செங்கோலாவது - அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை. அம்முறை ஒருபாற்கோடாது செவ்விய கோல் போறலின் செங்கோலெனப்படும்.

"இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு" —குறள், ருசரு

என்னும் பொன்மொழி பற்றிச் செல்வம் சிறப்பச் செங்கோலோச்சி என்றார். எடுப்பி - உயர்த்தி. புதுவாழ்வளித்து என்றவாறு.

(இதுவுமது)

கூ - கககூ : படிறு..................அறைகென

(பொ - ரை.) நாட்டின்கண் பொய், கொலை, களவு, வஞ்சம் முதலிய தீமைகளை நீக்குகின்ற தனது அரசியற் சுமையைத் தாங்காநின்ற தன்குடி மக்கட்கெல்லாம் உள்ளம் குளிர முகமன் கூறி, திருத்தமுடைய சிறப்பினையுடைய தேவாலயங்களையும் செயற்கரிய தவம் செய்யும் துறவோர் பள்ளிகளையும் அருகன் கோயில்களையும் திருந்திய நற்றொழிலையுடைய அந்தணர் வாழ்கின்ற சேரிகளையும் தோட்டங்களையும் குளங்களையும் பற்பலவிடங்களினின்றும் கலத்தினும் காலினும் கொணர்ந்து ஒருங்கு சேர்த்த பண்டங்களையும் கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது பிறவும் தமபோல் நாடி வாணிகம் செய்யும் நல்ல தொழிலையுடைய கடைத் தெருக்களையும் சந்திகளையும் தெருக்களையும் தேவகோட்டங்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் அவற்றுள் சிதைந்து போனவைகளையும் புதைந்து போனவைகளையும் புதுப்பித்திடுக என்று பகைமன்னனாலே பொருள் இழக்கப்பட்ட நங்குடிமக்கள் மீண்டும் அப்பொருளைப் பெற்றுக்கொள்க என்றும் கூறி முழங்காநின்ற ஓசையினையுடைய முரசங்களை இடந்தொறும் இடந்தொறும் அறைந்து அறிவுறுத்துவீராக என்று கட்டளையிடாநிற்ப ; என்க.

(வி - ம்) படிறு - பொய் முதலிய தீங்குகள். அரசியற் சுமையைத் தாங்குபவர் குடிகளேயாதலின் படுநுகம் பூண்ட குடி என்றார். குளிர்ப்பக் கூறி என்றது, கடுஞ்சொலன் அன்மையை விளக்கி நின்றது. தேவதானம் - தேவாலயம். அருகத்தானம் - அருகன்கோயில். உலகம் திருந்துதற்குரிய தொழிலையுடைய அந்தணர் என்க. அவை ஓதலும் ஓதுவித்தலும் வேட்டலும் வேட்பித்தலும் ஈதலும் ஏற்றலும் என்னும் இவ்வாறு தொழிலுமாம். ஆவணமாகிய கடை என்க. அந்தி - சந்தி. தெரு - மாந்தர்வாழும் தெரு. குலன் : குலம் - கோயில். புதைந்தவை தூர்ந்தவையுமாம். நிலத்துள் புதையுண்டனவுமாம். தம - தம்முடையன. தழங்குரல் - தழங்குகுரல் : விகாரம்.

(இதுவுமது)

உ௦ - ரு : செல்வ.....................இடுக்கணுளிரும்

(பொ - ரை.) தம்மிடத்தினின்றும் செல்வமாகிய வெள்ளம் வடிந்து விட்டமையாலே நாள்தோறும் வறுமையென்னும் பெருநெருப்புத் தம்மை வருத்திச் செயலறவு செய்தலாலே தம் மானத்தை அழித்தற்கஞ்சித் தந்நிலையினின்றும் தளராத கொள்கையுடனே தம் சான்றாண்மையாலே அத்துன்பத்தைத் தமக்குள்ளேயே அடக்கிக்கொண்டு காமம் மீதூர்ந்த விடத்தும் அதனைப் பிறர்க்குக் கூறாத கன்னியர் போல, இன்மை மிக்க

விடத்தும் அதனைப் பிறர்க்குக் கூறாத பெருந்தகைமையுடைய இடுக்கணை மேற்கொண்ட வறுமையுடையீரும் ; என்க.

(வி - ம்.) செல்வமாகிய புனல் என்க. வறுமையை நெருப்போடுவமித்தலின் செல்வத்தைப் புனல் என்றார். மருங்கறுதல்-தம்மிடத்தினின்றும் அற்றுப்போதல். நல்கூர் - நல்குரவு ; வறுமை.

"நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றுங் கண்பா டரிது" —குறள், ௧0௪௯

எனத் திருவள்ளுவனாரும் நல் குரவு நெருப்பினுங் கொடியது எனல் காண்க. கையறுப்ப - கையறவுசெய்க. வீடல் - அழிதல். தானம் - தமக்குரிய நிலை. தளராக் கொள்கை - இடுக்கணழியாத் திட்பம். அக் கையறவினை அகத்தடக்கி என்க. காமம் மீக்கூர்ந்த விடத்தும் உரையாத கன்னிபோல நல்குரவு மீக் கூர்ந்தவிடத்தும் உரையா இடுக்கணாளர் என்க. இடுக்கணாளிர் ; முன்னிலைப் பன்மை.

(இதுவுமது)

உசு - கூ : ஊக்கமும்.......................தீராதீரும்

(பொ - ரை.) மனக் கிளர்ச்சியும் வலிமையும் அவாவும் விருப்பமும் என்னும் இவையெல்லாம் கிழப்பருவம் மேலிட்டு உழக்குதலாலே கெட்டு உடல் வளைந்துபோன முதுமையுடையீரும், உடற்கட்டும் அழகும் நல்ல இளமை நலமும் தொலைந்து போம்படி தொழு நோய் முதலிய தீப்பிணியுற்று அப்பிணி தீரப் பெறாமல் மெலிந்தீரும் ; என்க.

(வி - ம்.) ஊக்கம் - மனக்கிளர்ச்சி. வலி - உடல் வலியும் மன வலியும் ஆம். வேட்கை - அவா. விழைவு - விருப்பம். இவை இரண்டும் காரணமும் காரியமும் ஆம். மூப்பு - முதுமை. உடல் முடங்கினீர் என்க. வீட்டினுள்ளே முடங்கிக் கிடந்தீரும் எனினுமாம். யாப்பு - உடற்கட்டு. அணி - உடலழகு. நன்னலம் என்றது இளமையின் நலத்தை. தீப்பிணி - தொழு நோய் முதலியன. அசாஅய் - மெலிந்து.

(இதுவுமது)

௩0 - ௪ : இடு...................மகளிரும்

(பொ - ரை.) புதுவதாகக் கொணர்ந்து மணல் பரப்பிய முற்றத்திலே பந்தலின்கண் இன்னிசைக் கருவிகள் ஆரவாரிப்ப நல்ல சான்றோர் அவை நடுவண் குடுமியினும் கூந்தலினும் நறிய நெய்யை ஏற்றிப் பல்வேறு சிறப்புக்களையுஞ் செய்து தம்மை மணந்து கொண்ட கணவன் தம்மைக் கைவிட்டுப் பின்னர்த் தம்மை நிமிர்ந்து பாராமல் ஒழுகாநிற்றலால் வாழ்விழந்து போய்த் தமது சான்றாண்மையையே அணிகலனாகக்கொண்டு உயிர்த்திருக்கின்ற குலமகளிரும் ; என்க.

(வி - ம்.) இடுமணல் - கொணர்ந்து பரப்பிய புது மணல். இன்னியம் - இனிய இசைக்கருவி. குடுமி - மணமகன் குடுமி. கூந்தல் - மணமகள் கூந்தல். இனி, குடுமி உச்சி எனினுமாம். அவை - திருமண அவை. சிறப்பு - கரணங்கள். கொண்டோன் - மணந்துகொண்டோன். கண்கவிழ்ந்தொழுகுதல் - நிமிர்ந்து பாராமல் ஒழுகுதல். சால்பு - சான்றாண்மை.

(இதுவுமது)

நரு - சுக : நிறை................அதிர

(பொ - ரை.) நிறைந்த பேரழகினையுடைய வீதிகளிலே செல்லுங்கால் வழுவித் தேர் முதலிய ஊர்திகளால் உறுப்புக ளிழந்து குறையப்பட்டோரும், இன்னோரன்ன பிறரும் வந்து அணுகி உங்கள் துன்பம் நீங்கவும் நுங்கள் வாழ்க்கை நுமக்கு இன்பம் உண்டாக்கவும் நுமக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களையெல்லாம் பெற்றுக்கொள்ளக் கடவீர்! என்று அறிவியாநின்ற ஆரவாரமுடைய ஓசையையுடைய அறமுரசங்கள் மாட்சிமையுடைய தெருக்களிலும், மன்றங்களிலும் இடையறாது முழங்காநிற்பவும், என்க.

(வி - ம்.) நிறைப்பெருங்கோலத்து நெறிமை என்றது, ஒப்பனையையுடைய வீதிகளில் செல்லும் முறைமையை. வழுவுதல் - அறியாமையால் தவறி நடத்தல். வழாஅ உறுப்புக் குறைபட்டோர் எனவே தேர் முதலியவற்றிற் றாக்குண்டு உறுப்புக்களையிழந்தவர்களை அரசியலார் பாதுகாத்தல் வேண்டும் என்பது பண்டைக் காலத்து அரசியல் நீதிஎன்பது உணரப்படும். குறை - இன்றியமையாத வேண்டுகோள். வேண்டின - வேண்டப்படும் பொருள். மாண்ட விதி - சிறப்பான வீதிகள். மன்றம் - நகரான் மன்றம்; அறவோர்மன்றம் இன்னோரன்ன. ஆர்குரல்: வினைத்தொகை. முரசம் - அறமுரசம். ஓவாது - ஒழியாமல்.

(இதுவுமது)

சஉ - சுா : கோடி....................கொணர

(பொ - ரை.) கோடியென்னும் பேரெண்ணின் மேலும் பெருகி ஒவ்வொரு நாளும் வாராநின்ற வருவாய்ப் பொருள்களை நாட்டினும் நகரங்களினும் செறிந்த மலைப்பக்கங்களில் வழிமுட்டாயிருக்கும் இடங்களில் உள்ள சுங்கச்சாவடிகளிலும் உட்சென்று பார்வையிட்டுக் கொள்ளும் கணக்குகளை எழுதிய பனையோலைகளையுடைய கணக்க மாந்தரும், திணைமாந்தரும் அப்பொருள்களைக் கொணர்ந்து வாயிலில் குவித்த அச் செல்வங்களை நாள்தோறும் அரண்மனைக்குள் கொணராநிற்பவும்; என்க.

(வி - ம்.) கோடி - ஒரு பேரெண். கோடியென்னும் பேரெண்ணும் நிரம்பி மேலும் பெருகி நாடோறும் வரும் வருவாய் என்க.

நளிமலை முட்டம் - செறிந்த மலைப்பக்கங்களில் வழி முட்டாயிருக்கும் இடங்கள். இவை சுங்கங் கொள்ளும் இடங்கள் என்க. பொருள்களை ஆராய்ந்து கண்டு அவற்றிற்கு விதிக்கும் இறைப் பொருள் கொள்ளும் குறிப்பமைந்த நுகும்பு என்க. நுகும்பு - பனையோலை. அமைக்கும் முறை - அப்பொருள்களை இனம் இனமாகப் பிரித்து இலச்சினையிட்டு வைக்கும் முறை. வாயிலில் வந்து குவிந்த செல்வங்களைக் கோயிலுள் கொணர என்க. இது வருவாய் கூறிற்று.

(இதுவுமது)

சஎ - ருரு : போரின்....................இன்றி

(பொ - ரை.) தன் நாட்டின்கண் போர்த் தொழில் பற்றி வாழும் மறவர்களும், கழனிகளை உழுதுவாழும் உழவர்களும், ஆடை நெய்து வாழ்வோரும், கெடாத பண்டங்களை விற்று வரும் ஊதியத்தால் வாழும் வணிகர்களும், உலகின்கண் தம்மொழுக்கத் தினின்றும் பிறழாதவரும், மறையோதி வாழுநரும் ஆகிய பார்ப் பனரும் இல்லறமும் துறவறமும் ஆகிய நெறிகளிலே பிறழாது நின்று ஒழுகும் இருவகை அறவோரும் கட்டிய அளவு கயிற் றிணையுடைய சிற்பத் தொழிலால் வாழ்வோரும் இங்குக் கூறப் பட்ட இவர்களுள் வைத்துச் சிறந்தோர் முதலாகத் தாழ்ந்தோர் ஈறாக உள்ள எந்நிலையரேனும் ஒருசிறிதும் தீதின்றி வாழாநிற் பவும்; என்க.

(வி - ம்.) போரின் வாழ்நர் - மறவர் முதலியோர். புலத்தின் வாழ்நர் - உழவரும் உழுவிப்போரும் என்க. தாரின் வாழ்நர் - நெய்தற் றொழிலாளர். தார் - ஒரு நெய்தற்கருவி. தவா - கெடாத. பண்டத்துப் பயம் - பண்டத்தை விற்பதனால் வரும் ஊதியம். படி - உலகம்; தன் தன்மை யெனினுமாம். ஓத்து - நூலோதுதல். ஒழுக்கின் வாழ்நர் - அறவோர். தீதொன்றின்றி இனிதே வாழா நிற்பவும் என வருவித் தோதுக.

(இதுவுமது)

ருச - சுo: மறனின்..............சிறப்ப

(பொ - ரை.) கூற்றுவன்றானும் தன்னுடைய வீரத்தால் நெருங்கிவந்து முறைமையிற் பிறழ்ந்து உயிர்களைக் கவர்தல் இய லாதவனாகவும், பகைமன்னர் அஞ்சுதற்குக் காரணமாகத் தனது செங்கோல் இடையூறின்றி நடவாநிற்பவும், யாறுகளும் கிணறு முதலியனவும் நீர் பெருகி ஒழுகாநிற்பவும், பெருங்காடும் சிறு காடுகளும் அழகுற்று வளத்தால் மிகும்படி பருவம் பொய்யாமல் பெய்கின்ற மழையையுடைத்தாய் நாள்தோறும் இடந்தோறும் இடந்தோறும் குறையாத இன்பம் சிறவாநிற்பவும்; என்க.

(வி - ம்.) கூற்றுவன் உயிர்களை அவ்வவற்றிற்கு அமைந்த வயது முதிர்ந்த பின்னர்க் கவர்வதன்றி அம்முறை கெடக் கவராதிருக்கும்படி என்றவாறு. எனவே அந்நாட்டின்கண் வறுமையானும் பிணிகளானும் உயிரினங்கள் சாதலில்லை என்றாயிற்று. உட்குறு - பகைவர் அஞ்சுதற்குக் காரணமான. ஊறு - இடையூறு. தொட்டவும் - கிணறு முதலியனவும். யாறுகள் நீர் வறந்த கோடையினும் ஊற்று நீரால் உலகளிக்கும் என்பார் யாறும் ஊறுவன ஒழுக என்றார். காடு - புறவு என்பன பெருங்காடும் சிறுகாடும் என்னும் பொருளன. கவின்று - அழகெய்தி. மாரித்து - மாரியையுடையது. வைகலும் - நாள்தோறும். தண்டா - குறையாத. தலைத்தலை - இடந்தொறும் இடந்தொறும். சிறப்ப - பெருகா நிற்ப.

(இதுவுமது)

கூக - எ0: விண்......................நகைத்தா

(பொ - ரை.) வானுற உயர்ந்த மலைகளின்கண் விளைகின்ற தினைக்கதிரைக் காக்குங் குறவர்கள் எறிந்த அழகிய குளிர்ந்த மணிகள் முல்லை மலர்களை உச்சியிலே அணிந்துகொண்டுள்ள முன்னை மரங்களை வேலியாக உடைய முல்லைநிலக் கொல்லையில் வாழ்கின்ற இடையர்களின் முன்றிலின்கண் கிடக்கும் குப்பையுள் வீழா நிற்பவும், அந்த முல்லை நிலத்தை உழா நின்ற உழவருடைய கலப்பை புரட்டிவிட்ட ஒள்ளிய ஒளியையுடைய அழகிய மணிகள் அழகிய கண்களையும் அழகினையும் உடைய மருத நிலத்துச் சிறுமியர் விளையாடும் இடங்களிலே வீழாநிற்பவும், அம்மருத நிலத்தின்கண் நாறுநடும் உழத்தியர் பாடும் பாட்டின் ஆரவாரத்திற்கு நெய்தல் நிலத்தின்கண் உள்ள கரிய கழியின்கண் கயல் மீன்களை எறியா நின்ற பொன்வாய்ப்புள் ஞெரேலென அஞ்சா நிற்பவும், இவ்வாறு குறிஞ்சி முதலிய நானிலங்களும் தம்முள் மயங்கா நிற்பவும் திருமகளை விரும்புதற்குக் காரணமான தன்மையை உடையதாக; என்க.

(வி - ம்.) குளிர்மணி - முத்து. ஏனல் காக்கும் குறவர் எறிந்த மணி என்க. முல்லை - முல்லைமலர். முஞ்ஞை - முன்னை. முன்னை மரத்தின் உச்சியில் முல்லைபடர்ந்து மலர்ந்திருக்கும் கொல்லை என்றவாறு. கொல்லை - முல்லை நிலம். புன்புலம் - முல்லை நிலம். படை - கலப்பை. மிளிர்த்திட்ட - புரட்டிவிட்ட. திருமணி - மாணிக்கமணி. அங்கண் - அழகிய கண். யாணர் - அழகு. இனி, அங்கண் யாணர் மருதம் எனக்கொண்டு அழகிய இடத்தையும் புதுவருவாயையுமுடைய மருத நிலம் எனினுமாம். "ஐம்பாற்றிணையுங் கவினி" என்றார் மதுரைக் காஞ்சியினும். திருவிழை தகைத்தா - திருமகளும் விரும்பும் தன்மையை உடையதாக.

(இதுவுமது)

எக - அ: களவும்..............பரப்பி

(பொ. - ரை.) கள்வோரையும் அரசலைக்கும் குறும்பரையும் கனவினும் இல்லாததாய், விளைதல் ஒழியாத பெரிய மாவட்டத்

தோடு பட்டிகளும் நியமமும் ஆகிய நில வேற்றுமைகளை வரை யறுத்து இறைமுறைமையில் இருத்தி இங்ஙனமாகத் தன் நாட்டின்கண் ஒரு சிறிதும் முட்டுப்பாடின்றி எல்லா நலங்களும் நிரம்பிய காலத்தே அவ்வுதயண மன்னனுடைய பெருந்தகைத் தம்பியராகிய கடகபிங்கலர்கள் அந் நாட்டின் புறத்தேயுள்ள பகைப்புலங்கள் தேய்ந்தொழியும்படி பலவாகிய களிற்றியானைப் படை முதலிய நால்வகைப் படைகளுடன் அவ்வவ் விடங்களுக் குச் சென்று போரிட்டு வென்று பகைவர் யாருமில்லாமல் அகற்றுநிற்ப அவ்வுதயண மன்னன் தனது அகன்ற நாட்டின்கண் தன் ஆணைவழி நின்று வாழாநின்ற உயிர்கட்கெல்லாம் பாதுகாவலாகத் தன்னுடைய கொற்றவெண்குடையினது இனிய நிழலை யாண்டும் பரப்பி ; என்க.

(வி - ம்) களவு - கள்வோர். அரம்பு - குறும்பு. பெருநாடு, பட்டி, நியமம் என்பன மாவட்டம் வட்டம் கோட்டம் கூற்றம் என் பன போன்ற இடப்பெயர்கள். இவை இறைமுறைமைக்காக வகுக்கப் படுதலின் 'பதிமுறை' என்றார். ஒட்டாப்பகைப் புலம் - தன்னொடிணை யாத பகைவர் நாடு. பெருந்தகைத் தம்பியர் என்க. ஏமம்-பாதுகாப்பு.

(உதயணன் செயல்)

எகூ - அகூ : வீணை..................விளையாடி

(பொ – ரை.) யாழ்ப்புலவனாகிய அவ்வுதயணவேந்தன் இவ் வாறு பரப்பிய தன் நாட்டிற் பொருந்தித் தன்பொருட்டு மகதமன் னவனாகிய தருசகனுடைய படையொடு வந்தவரும் பகைவரைக் கொல்லுந்திறல் படைத்தவருமாகிய தண்டத்தலைவர்களுக்கு வரிசை பல வழங்கி மகத நாட்டிற்கு விடுத்துப் பின்னரும் அத் தருசக மன்னன் ஏற்றுக்கொள்க என்று அரிய விலையினையுடைய பேரணிகலன்களையும் அத்தருசக மன்னன் மாண்பிற்கேற்ற பிற பொருள்களையும் அவனுக்கு வழங்கும்படி தன் சுற்றத்தார்பால் கொடுத்து அம் மகத நாட்டிற்குச் செலுத்திய பின்னர்க் கோப் பெருந்தேவி என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற பதுமாபதியோடு முட்டுப்பாடில்லாத செல்வ நுகர்ச்சியின் கண்ணே சிறிதும் வெறுப்பின்றித் தேனொழுகுகின்ற மலர்மாலையையுடைய அக் கோமகளோடு மகிழ்ந்து விளையாடி ; என்க.

(வி - ம்.) வீணைவேந்தன் : உதயணன். நாடு : வத்தவநாடு. மகதமன்னவன் : தருசகன். மறவர் - ஈண்டு தண்டத்தலைவர். பதி : மகதநாடு. தமர் - தன்சுற்றத்தார். பட்டம் - கோப்பெருந்தேவி என் னும் பட்டம். முனிதல் செல்லான் : ஒருசொல். முனியான் ; வெறுன் மட்டு - தேன். கோதை : பதுமாபதி.

(இதுவுமது)

அள - கஊள: செங்கதிர்...............நாடென்

(பொ - ரை.) ஞாயிற்றினது தோற்றத்தையும் மறைவினையும் திங்களையும் நாளையும் சிறிதும் அறிதல் இல்லானாய்ப் பதுமாபதியின் போகத்தின்கண் அழுந்தி அழகிய தளிர்மாலை புனைந்த அக் கோமகளை முற்படத் தான் கண்டு எய்திய மன்மதன் கோயிலுக்குள் குறியிடம்பெற்றுக் கூடிய செய்திகளையல்லாமலும், அரசனாகிய மகதனுடைய அரண்மனையுள் அமைந்த வானுற உயர்ந்த கன்னிமாடத்தே அவளோடு பன்முறை கூடியும் ஊடியும் கழிந்த இன்ப நினைவுகளையுடைய கட்டுரை பலவற்றையும் நினைந்து கூறிக்கூறி மகிழ்ந்து, பொன்னணிகலன்களையுடைய அப்பதுமாபதியோடு இனிய மகிழ்ச்சியை யடைந்து தனது பெரிய கோசம்பி நகரத்தின்கண் அழகிய தனது அரண்மனைக்கண் அரசுவீற்றிருந்து தன் நாட்டின்கண்ணிருந்த தீயன பலவற்றையும் அகற்றி அந்நாட்டினைத் திருமகளும் விரும்புந் தன்மையுடையதாக வளம் பலவும் பெருகச் செய்தான்; என்க.

(வி - ம்.) செங்கதிர்ச் செல்வன் - ஞாயிறு. எழுச்சி - தோற்றம். பாடு - மறைவு. திங்கள் - மாதம். நாள் - விண்மீன். ஞாயிறு எழுதலையும் இஃதின்ன திங்கள் இஃது இன்ன நாள் என்னும் வேற்றுமையைத் தானும் தெளியாதவனாய் இருந்தான் என்பது கருத்து. இங்ஙனமே,

"போகப் பெருநுகம் பூட்டியகாலை,
மாக விசும்பின் மதியமு ஞாயிறும்
எழுதலும் படுதலும் அறியா இன்பமொடு" உ. கூ: கஅங-டு

என முன்னும் வந்தமையுணர்க. இன்பக்கிழவன் : காமவேள். மகதன் : தருசகன். அவளொடு - அப்பதுமாபதியோடு. மாதரொடு - அப்பதுமாபதியோடு பயந்த - பயன் தந்த. பாயினன் - பரப்பினன். வள்முறச் செய்தான் என்றவாறு.

உ. நாடு பாயிற்று முற்றிற்று.

௩. யாழ் பெற்றது

இதன்கண் : *பத்திராபதியின் என்பு முதலியவற்றைக் கொணரும்படி உதயணன் ஒருசிலரை விடுத்தலும், பத்திராபதி வீழ்ந்த இடத்தில் அதற்கு உருவச் சிற்பம் செய்வித்து அதற்குப் பூசை முதலியவற்றை நிகழ்த்துவித்தற்கு முயலலும், அவன் பத்திராபதியின் என்பு முதலியவற்றைக் கொணர்ந்தார்க்குப் பொருள் வழங்குதலும், அருஞ்சுகன் என்னும் அந்தணாளன் இயல்பும், அவன் வேங்கை மரத்திலேறி நோக்குதலும், அவன் உதயணனது கோடபதி என்னும் யாழினைக் காண்டலும், அவன் அந்த யாழினை எடுத்துவந்து தன்தமர் இல்லத்தில் இயக்குதலும், அவ் வொலியைக் கேட்ட உதயணன் ஆராய்ந்து துணிதலும், அவன் அந்த யாழினை இயக்குபவனை அழைப்பித்தலும், வயந்தகன் செயலும் உதயணன் செயலும் கூறப்படும்.*

பாயநன் ஞடு பைத றீர்ந்தபின்
ஏயர் பெருமகன் சேயது நோக்கி
விசையுடை யிரும்பிடி வீழ்ந்த தானம்
அசைவி லாளர்க் கறியக் கூறி
என்புந் தோலு முள்ளவை யெல்லாம்
நன்கன நாடிக் கொண்டனிர் வம்மினென்
றங்கவர்ப் போக்கிய பின்றை யப்பால்
வெங்கட் செய்தொழில் வேட்டுவத் தலைவரொடு
குன்றச் சாரற் குறும்பரைக் கூஉய்
அடவியுள் வீழ்ந்த கடுநடை யிரும்பிடி
நம்மாட் டுதவிய நன்னர்க் கீண்டொரு
கைம்மா றுற்றுத லென்று மின்மையின்
உதவி செய்தோர்க் குதவா ராயினும்
மறவி யின்மை மாண்புடைத் ததனாற்
கோடுயர் வரைப்பினோர் மாட மெடுப்பித்
தீடமை படிவ மிரும்பிடி யளவா
ஏற்ப வெடுப்பித் தெல்லியுங் காலையும்
பாற்படல் பரப்பிப் பணிந்துகை கூப்பி
வழிபா டாற்றி வழிச்செல் வோர்கட்

கழிவுநன் ககல வரும்பத மூட்டாத்
தலைநீர்ப் பெருந்தளி நலனணி கொளீஇ
எனைவ ராயினு மினைவோர்க் கெல்லாம்
முனைவேந் துப்பின முன்னவ னீகென
விருத்தி கொடுத்துத் திருத்தகு செய்தொழிற்
றச்ச மாக்களொடு தலைநின்று நடாஅம்
அச்ச மாக்களை யடையப் போக்கிப்
பத்திரா பதியின் படிம மிடூஉஞ்
சித்திர காரருஞ் செல்கெனச் சொல்லி
ஆராக் கவலையி னதுபணித் ததற்பின்
ஊரக வரைப்பி னுள்ளவை கொணர்ந்தார்க்
கின்னுரை யமிழ்தமொடு மன்னவ னீத்துக்
கோப்புக வமைத்த கொற்ற வாயிலும்
யாப்புற வதன்பெயர் பாற்படக் கொளீஇ
வாயின் முன்றி லவைப்புற மாகச்
சேயுயர் மாடஞ் சித்திரத் தியற்றி
உயிர்பெற வுருவ மிடீஇ யதனைச்
செயிர்தீர் சிறப்போடு சேர்ந்தவண் வழிபடு
....
நான்மறை யாளர் நன்றுண் டாகெனத்
தாமுறை பிழையார் தலைநின் றுண்ணும்
சாலையுந் தளியும் பாலமைத் தியற்றிக்
கூத்திய ரிருக்கையுஞ் சுற்றிய தாகக்
காப்பிய வாசனை கலந்தவை சொல்லி
எண்ணிய துண்ணு மேண்டொழி லறுஅக்
குழாஅ மக்களொடு திங்க டோறும்
விழாஅக் கொள்கென வேண்டுவ கொடுத்துத்
தன்னகர்க் கடப்பா டாற்றிய பின்னர்
மதிலுஞ் சேனையுண் மாணி யாகிய
அதிர்வில் கேள்வி யருஞ்சுக னென்னும்
அந்த ணாளன் மந்திரம் பயின்றநல்
வகையமை நன்னூற் பயனனி பயிற்றித்
தலமுத லூழியிற் றனவர் தருக்கறப்
புலமக ளாளர் புரிநரப் பாயிரம்

வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்ச்
செலவுமுறை யெல்லாஞ் செய்கையிற் றெரிந்து
மற்றை யாழுங் கற்றுமுறை பிழையான்
பண்ணுந் திறனுந் திண்ணிதிற் சிவணி
வகைநயக் கரணத்துத் தகைநய நவின்று
நாரத கீதக் கேள்வி நுனித்துப்
பரந்தவெந் நூற்கும் விருந்தின னன்றித்
தண்கோ சம்பிதன் றமர்நக ராதலிற்
கண்போற் காதலர்க் காணிய வருவோன்
சதுவகை வேதமு மறுவகை யங்கமும்
விதியமை நெறியிற் பதினெட் டாகிய
தான விச்சையுந் தான்றுறை போகி
ஏனைக் கேள்வியு மிணைதனக் கில்லவன்
கார்வளி முழக்கி னீர்நசைக் கெழுந்த
யானைப் பேரினத் திடைப்பட் டயலதோர்

....

இமையோ ருலகிற் கேணி யாகிய
கான வேங்கைக் கவர்சினை யேறி
அச்ச மெய்தி யெத்திசை மருங்கினும்
நோக்கின னருகே யாக்க மின்றி
இறைவற் பிரிந்த வில்லோள் போலவும்
சுருங்கக ஞெகிழ்ந்து................

....

பத்தற் கேற்ற பசையமை போர்வை
செத்துநிறங் கரப்பச் செழுவளங் கவினிய
கோய்தகை கோடியோடு மெய்யுற நீடிய
கரப்பமை நெடுவேய் நரப்புப்புறம் வருடத்
தாஅந் தீமெனத் தண்ணிசை முரலத்
தீந்தொடைத் தேனினஞ் செற்றி யசைதர
வடிவேற் றானை வத்தவர் பெருமகன்
படிவ விரதமொடு பயிற்றிய நல்லியாழ்
கடிமிகு கானத்துப் பிடிமிசை வழுக்கி
வீழ்ந்த வெல்லை முதலா வென்றும்
தாழ்ந்த தண்வளி யெறிதொறும் போகா

அந்தர மருங்கி னமரர் கூறும்
மந்திரங் கேட்குஞ் செவிய போலக்
கையுங் காலு மாட்டுதல் செய்யா
மெய்யோடு மெய்புறக் குழீஇ மற்றவை
பிறப்புணர் பவைபோ லிறப்பவு நிற்ப
…………… வேழ மெல்லாம்
சோர்ந்து கடுங்கதஞ் சுருங்குபு நீங்கக்
கிடந்தது கண்டே நடுங்குவ னாகி
யானை நீங்கலுந் தானவட் குறுகிக்
கின்னர ரிட்டன ராயினு மியக்கர்
மெய்ம்மறந் தொழிந்தன ராயினு மேலைத்
தேவ ருலகத் திழிந்த தாயினும்
யாவ தாயினும் யான்கோள னணிந்தனேன்
வலியா தேனக்கு வம்மி னீரேனப்
பலியார் நறுமலர் பற்பல தூஉய்
வழுக்கா மரபின் வழுத்தினன் கொண்டு
கான நீந்திச் சேனை வேந்தன்
அழுங்கலி லாவணச் செழுங்கோ சம்பி
மன்னவன் கோயி றுன்னிய வொருசிறை
இன்பல சுற்றமொடு நன்கனங் கெழீஇத்
தண்கெழு மாலைத் தன்மனை வரைப்பில்
இன்ப விருக்கையுள் யாழிடங் தழீஇ
மெய்வழி வெந்நோய் நீங்கப் பையெனச்
செவ்வழி யியக்கலிற் சேதியர் பெருமகன்
வழிப்பெருந் தேவியோடு வான்றோய் கோயிற்
பழிப்பில் பள்ளியுட் பயின்றவினை யாடி
அரிச்சா லேக மகற்றின னிருந்துழி
ஈண்டையெம் பெருமகன் வேண்டா யாகி
மறந்தனை யெம்வயின் வலிதுநின் மனனென
இறந்தவை கூறி யிரங்குவ தொப்பத்
தொடைப்பெரும் பண்ணொலி துவைத்துச்செவிக் கிசைப்பக்
கோடைப்பெரு வேந்தன் குளிர்ந்தன னாகியென்
படைப்பரும் பேரியாழ்ப் பண்ணொலி யிதுவென

ஓர்த்த செவியன் றேர்ச்சியிற் றெளிந்து
மெய்காப் பாளனை யவ்வழி யாய்வோன்
மருங்கறைக் கிடந்த வயந்தக குமரன்
விரைந்தனன் புக்கு நிகழ்ந்ததை யென்னெனக்
கூட்டமை வனப்பிற் கோட பதிக்குரல்
கேட்டனன் யானுங் கேண்மதி நீயும்
விரைந்தனை சென்றுநம் மரும்பெறற் பேரியாழ்
இயக்கு மொருவனை யிவட்டர னீயென
மயக்கமில் கேள்வி வயந்தக னிழிந்து
புதிதின் வந்த புரிநூ லாளன்
எதிர்மனை வரைப்பக மியைந்தனன் புக்கு
வீறமை வீணைப் பேறவன் வினவ
நருமதை கடந்தோர் பெருமலைச் சாரற்
பெற்ற வண்ண மற்றவ னுரைப்பக்
கோற்றவன் றலைத்தாட் கொண்டவன் குறுகி
வேற்றேன் பதிநின் றூற்றலிற் போந்த
அன்றை நள்ளிரு ளரும்பிடி முறுகக்
குன்றகச் சாரற் றென்றிசை வீழ்ந்த
பேரியா ழிதுவெனப் பெருமகற் குரைப்பத்
தாரார் மார்பன் றுங்கா வுவகையன்
வருகவெ னல்லியாழ் வத்தவ னமுதம்
தருகவென் றனித்துணை தந்தோய் நீயிவண்
வேண்டுவ துரையென் றுண்டவன் வேண்டும்
அருங்கல வெறுக்கையொடு பெரும்பதி நல்கி
அங்நக ரிருக்கப் பெறுஅய் நீயெனத்
தன்னக ரகத்தே தக்கவை நல்கி
உலவா விருப்போடு புலர்தலை காறும்
உள்ளியு முருகியும் புல்லியும் புணர்ந்தும்
பள்ளிகொண் டனனாற் பாவையை நினைந்தேன்.

உரை

௩. யாழ் பெற்றது

அஃதாவது - உதயணன் பண்டு தானிழந்த கோடவதி என்னும் தெய்வயாழினை மீண்டும் பெற்ற செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு

(உதயணன் பத்திராபதியின் என்பு முதலியவற்றைக் கொணரும்படி ஒருசிலரை விடுத்தல்)

க - எ : பாய............அப்பால்

(பொ - ரை.) இவ்வாறு உதயணமன்னனால் வளம் பெருக்கப்பட்ட நன்மையையுடைய அந்த வத்தவநாடு பகைமன்னன் ஆட்சிக்காலத்தே எய்தியிருந்த துயரமெல்லாம் அகன்று இன்புற்றிருந்த பின்னர், ஏயர் குலத்தோன்றலாகிய அவ்வுதயண மன்னன், நெடுங்காலத்திற்கு முன்னர் நிகழ்ந்ததொரு செய்தியினை நினைத்தவனாய்ச் செயலின்கண் தளர்தலில்லாத சில வினையாளரை யழைத்து அவர்களுக்குப் பண்டொரு காலத்தே வாசவதத்தையோடு தான் ஊர்ந்துவந்த பத்திராபதி என்னும் பெயருடைய விரைவுடைய அப்பெரிய பிடியானை பிணிப்பட்டு வீழ்ந்து இறந்த அவ்விடத்தின் அடையாளங்களை அவர் அறிந்துகொள்ளும்படி கூறி நீவிரெல்லாம் அங்குச் சென்று நன்றாகத் தேடி அப்பிடியானையின் என்பும்தோலும் பிறவும் ஆக ஆங்குக் கிடைப்பனவற்றையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு வாருங்கோள் என்று கட்டளையிட்டு அவ்விடத்திற்கு அவ்வினையாளரைப் போக்கிய பின்னர்; என்க.

(வி - ம்.) பைதல் - துன்பம். ஏயர் பெருமகன் : உதயணன் சேயது நோக்கி - நெடுங்காலத்திற்கு முன்பு நிகழ்ந்ததொரு செய்தியை நினைத்து. சேய்மை, ஈண்டுக் காலத்தின் மேற்று. அசைவிலாளர் - ஆள்வினையில் தளர் விலாதவர். நன்கனம் - நன்கு. அப்பால் நன்கனம் நாடி என ஒட்டுக. அப்பால் - அவ்விடத்தே.

(பத்திராபதி வீழ்ந்த இடத்தில் அதன் வடிவச் சிற்பம் அமைத்து அதற்குப் பூசை முதலியவற்றை நிகழ்வித்தற்கு உதயணன் முயலுதல்)

அ - கச : வெங்கண்.............மாண்புடைத்து

(பொ - ரை.) இரக்கமின்றிச் செய்யும் கொடுந் தொழிலையுடைய வேட்டுவத் தலைவர்களையும், மலையும் மலைசார்ந்த இடமும் ஆகிய குறிஞ்சி நிலத்தின்கண் வாழும் குறுநில மன்னர்களையும், வருவித்து அவர்களை நோக்கி, "அன்புடையீர்! பண்டொரு காலத்தே காட்டினூடே யாம் ஊர்ந்து வருங்கால் பிணிப்பட்டு இறந்து வீழ்ந்த விரைந்த நடையினையுடைய பெரிய பிடியானையாகிய பத்திராபதி நமக்குச் செய்த நன்றிக்கு இவ்வுலகத்தே கைம்மாறு செய்தல் என்பது எக்காலத்தும் இயலாமையினால் செய்யாமல் செய்த உதவிக்குக் கைம்மாறு செய்யவியலாமையின் செய்யாதொழியினும் அந்நன்றியை என்றென்றும் மறவாதிருத்தலும் கைம்மாறு செய்தாற்போன்றதொரு சிறப்பினையுடைத்தாங் கண்டீர்"; என்க.

(வி - ம்.) வெங்கண் - கண்ணோட்டமில்லாத கண். குறும்பர் - குறுநிலமன்னர். கூஉய் - கூவி; அழைத்து. கடுநடை - விரைந்த நடை. நன்னர் - நன்றி. "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங் கொல்லோ வுலகு" (குறள். உ௧௧) எனவும், "நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல தன்றே மறப்பது நன்று" (குறள். ௧0௮) எனவும், "நன்றி மறவேல்" (ஆத்திசூடி) எனவும் வரும் சான்றோர் பொன்மொழிகளை ஈண்டு நினைக. மறவியின்மை - மறவாமை. கைம்மாறு செய்தாற்போன்றதொரு மாண்புடைத்து என்க.

(இதுவுமது)

௧௪ - உ௪ : அதனல்......................கொடுத்து

(பொ - ரை.) ஆதலாலே குவடு உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தின்கண்ணே ஒரு மண்டபம் எடுத்து அதன்கண் அப்பத்திராபதியின் அளவாக அதற்கீடாக அமையும் ஓர் உருவச்சிற்பத்தைப் பொருந்த எடுப்பித்து இரவும் பகலும் வழிபாட்டுப் பகுதிக்குப் பொருந்துவனவற்றை அதன்முன் பரப்பி வைத்து வணங்கிக் கைகுவித்து வழிபாடு செய்வதோடு மேலும் அவ்வழியே செல்லும் வழிப்போக்கர்களுக்கெல்லாம் பசிப்பிணி நன்கு அகன்று போகும்படி அரிய உணவும் ஊட்டித் தண்ணீர்ப் பந்தலும் வைத்து இங்ஙனம் யாவராயினும் வருந்தி வருவோர்க்கெல்லாம் அவரவர் விரும்பத்தக்க உணவுவகைகளை அவ்விடத்தே முற்பட வழங்குவீராக! என்று கட்டளையிட்டு அதற்குவேண்டிய நிலங்களையும் இறையிலியாக வழங்கி; என்க.

(வி - ம்.) கோடு - உச்சி. மாடம் - மண்டபம். எடுப்பி - எடுத்து. ஈடு அமை படிவம் - ஈடாக அமையும் உருவம். எல்லி - இரவு. காலை - பகல். பாற்படல் - வழிபாட்டுப் பகுதிக்குப் பொருந்தும் பொருள்கள். அழிவு - பசியாலுண்டாகும் மெலிவு. அரும்பதம் - பெறற்கரிய உணவு. தலைநீர்ப்பெருந்தளி - தண்ணீர்ப்பந்தர். தளியின் நலனை அணியுறக்கொளுவி என்க. எனைவர் - யாவர். முனை - விரும்புகின்ற. வெந்துப்பு இனம் - வெவ்விய உணவுவகை. முன் - அம் மண்டபத்தின் முன். விருத்தி - இத்தகைய அறம் நிகழ்தற்பொருட்டு இறையிலியாக விடப்படும் நிலம் முதலியன.

(இதுவுமது)

உ௪ - ௬ : திருந்தகு...........................பின்

(பொ - ரை.) அழகு தக்கிருக்கின்ற செய்தொழிலையுடைய தச்சர்களையும், அவ்விடத்தே நின்று வினையை நடத்தும் தன்பால் அச்சமுடைய பிற தொழிலாளர்களையும் நிரம்ப விடுத்துப் பின்னரும் அப்பத்திராபதியின் உருவத்தை எழுதுகின்ற ஓவியப் புலவர்களையும் செல்லுங்கோள் என்று விடுத்து முற்றாத கவலையினாலே அச்செயலைப் பணித்ததன் பின்னர்; என்க.

(வி - ம்.) திருத்தகு செய்தொழில் - அழகால் தகுதிபெற்ற செயலையுடைய தொழில் என்றவாறு. எனவே கலைத்தொழில் என்றாயிற்று. தச்சமாக்கள் - தச்சர். நடாஅம் - நடத்துகின்ற. அச்சமாக்கள் - தன்பால் அச்சமுடைய தொழிலாளர். அடைய - நிரம்ப. படிமம் இடூஉம் - வடிவத்தை எழுதும். ஆராக்கவலை - நுகர்ந்து முற்றாத கவலை. அது - அச்செயலை.

(பத்திராபதியின் என்பு முதலியன கொணர்ந்தார்க்கு உதயணன் பொருள் வழங்குதல்)

ங௦ - சு : ஊரக......................இடீஇ

(பொ - ரை.) முன்னர்த் தான் கட்டளையிட்டபடி பத்திராபதி வீழ்ந்த இடத்திற்குச் சென்று தேடி ஆங்குக் கிடைத்த அப் பிடியானையினது என்பு முதலியவற்றைக் கொணர்ந்து தந்நகரத்திலே தந்த அவ்வினையாளர்க்கு அவ்வுதயணமன்னவன் அமிழ்தம்போன்ற இனிய முகமன்கூறுதலோடன்றிச் சிறந்த பொருள்களையும் வழங்கிப் பின்னர் வாகைசூடிவரும் மன்னர் புகும்பொருட்டு அமைக்கப்பட்ட கொற்றவாயிலுக்குப் பொருத்தமுண்டாக அப்பத்திராபதியின் பெயரை வகைப்படுத்தியிட்டு அவ்வாயிலின் முன்றிலுள்ள அம்பலத்தின் பக்கத்தே மிகவும் உயர்ந்ததொரு மாடத்தைச் சித்திரங்களோடு இயற்றி அதன்கண் பத்திராபதியின் உருவத்தை உயிருடையது போல அமைத்து; என்க.

(வி - ம்.) ஊரகம் - கோசம்பி நகரம். உள்ளவை - பத்திராபதியின் உறுப்புக்களுள் எஞ்சியுள்ளவை. உரையமிழ்தமொடு பொருளும் ஈத்து என்க. கோப்புக - வெற்றியுடன் வரும் அரசர்கள் புகும் பொருட்டு. கொற்றவாயில் - ஒருவகை வாயில். அதன் பெயர் பாற்படக் கொளீஇ - அப்பத்திராபதியின் பெயர்ப்பகுதியில் அவ்வாயில் வழங்கும்படி பெயரிட்டு என்றபடி. எனவே அவ்வாயிலுக்குப் பத்திராபதி வாயில் என்று பெயரிட்டு என்றாயிற்று. அவை - அம்பலம். சித்திரங்களோடு இயற்றி என்க. இடீஇ - இடுவித்து.

(இதுவுமது)

ங௬ - ௪௬ : அதனை..................பின்னர்

(பொ - ரை.) அக்கோயிலைக் குற்றம் அறுதற்குக் காரணமான விழாவோடு சேர்ந்து அவ்விடத்தே வழிபாடு.................. நான்கு மறைகளையும் ஓதியுணர்ந்த வேதியர் நாட்டிற்கு நன்மையுண்டாகுக என்று வாழ்த்தித் தாம் தமக்குரிய ஒழுக்க முறைகளில் பிறழாமல் நின்று வந்து உண்ணுதற்குரிய அறச்சாலைகளும், தண்ணீர்ப்பந்தரும், அக்கோயிலின் பக்கத்தே இயற்றி மேலும் தனிப் பெண்டுகளின் தெருவும் அக்கோயிலைச் சுற்றியதாக இயற்றிச் சிறந்த காப்பியங்களை ஓதியும் அறங்கலந்த மொழி

களைக் கூறியும் பிறர் கருதிய கருத்துக்களைத் தம்முள் நினைந்து கூறும் நிலைபெற்ற தொழில் செய்தலும் அருத கலைமாந்தர் குழுக்களோடு இக்கோயிலுக்குத் திங்கள்தோறும் திருவிழா எடுப்பீராக என்று அதற்கு வேண்டிய நிலமும் பொருளும் நிரம்ப வழங்கித் தன் நகரத்தின்கண் அப்பத்திராபதியின் திறத்திலே தான் செய்தற்கியன்ற கடமையைச் செய்து முடித்த பின்னர்; என்க.

(வி - ம்.) அதனை - அக்கோயிலை. தாமுறை பிழையார் - தாம் தமக்குரிய ஒழுக்கமுறையில் பிழையாதவர். சாலையுந்தளியும் - அடிசிற் சாலையும் தண்ணீர்ப்பந்தரும். கூத்தியரிருக்கை - தளிப்பெண்டுகளின் தெரு. காப்பிய வாசனை - காப்பியங்களைப் படித்தலோடு அறங்களைக் கலந்து அவையிடத்தே சொல்லி என்க. ஏண்தொழில் - நிலைபெற்ற தொழில். எண்ணிய துண்ணும் என்றும் பாடம். வேண்டுவ - வேண்டும் நிலம் பொருள் முதலியன.

(அருஞ்சுகன் இயல்பு)

சஎ - ௫ச: மதில்..........................தெரிந்து

(பொ - ரை.) மதிலையுடைய உஞ்சை நகரத்தின்கண் பிரமசாரியாகிய நடுக்கமில்லாத நூற்கேள்வியினையுடைய அருஞ்சுகன் என்னும் பார்ப்பனன் ஒருவன் மந்திரங்கள் பயிலுதற்குக் காரணமான நல்ல முறையமைந்த நல்ல நூல்கள் பலவற்றையும் பயனுண்டாக நன்கு பயின்று உலகின்கண் முதலூழியின்கண் வித்தியாதரர் செருக்கற்றுப்போம்படி கலைத்தெய்வத்தின் அருளுடைய சான்றோர் முறுக்குடைய ஆயிரம் நரம்புகளை வன்மையுண்டாகத் தொடுத்தியற்றிய திருத்தமமைந்த பேரியாழினது இயக்கமுறையையெல்லாம் கரண வகைகளால் கற்றுத் தெரிந்து கொண்டு; என்க.

(வி - ம்.) உஞ்சேனை - உஞ்சை நகரம். மாணி - பிரமசாரி. அதிர்வு - நடுக்கம். மந்திரம் பயின்ற - மந்திரங்கள் வழங்கா நின்ற. தலம் - உலகின்கண். புலமகளாளர் - கலைத்தெய்வத்தின் அருள்பெற்ற சான்றோர், தானவர் தருக்கறப் புலமகளாளர் தொடுத்த பேரியாழ் என்க. தானவர் - ஈண்டு வித்தியாதரர். வாக்கு - திருத்தம். பேரியாழ் - ஆதியாழ். "ஆயிர நரம்பிற் றாதியாழாகும்" (நூல்)

(இதுவுமது)

௫௫ - ௬௪: மற்றை...............வருவோன்

(பொ - ரை.) ஏனைய யாழ்களையும் நன்கு கற்று அக்கல்வி முறையில் பிழைபடானாய்ப் பண்களின் இயல்பும் திறங்களின் இயல்பும் திட்பமுறப் பொருந்திப் பல்வேறு வகைப்பட்ட இனிய யாழ்க் கரணங்களின் அழகிய நயங்களையும் நன்குபயின்று

'நாரத கீதம்' என்னும் நூற்கேள்வியினையும் நுணுக்கமாகக் கேட்டுணர்ந்து பரந்துபட்ட ஏனைய எந்த இசை நூல்களுக்கும் புதியனுதலன்றி அவற்றையும் பயின்று குளிர்ந்த கோசம்பி நகரம் தன்னுடைய சுற்றத்தார் வாழும் நகரமாதலின் ஆங்கு வாழ்கின்ற தன் கண்ணைப் போன்று சிறந்த அன்புடைய அவ்வுற வினரைக் காணும்பொருட்டு உஞ்சை நகரத்தினின்றும் கோசம்பி நகரத்திற்கு வருபவனும்; என்க.

(வி - ம்.) மற்றையாழ் - பேரியாழ், மகரயாழ், சகோடயாழ் செங்கோட்டியாழ் முதலியன. முற்கூறப்பட்ட பேரியாழ் ஈண்டுக் கூறப்பட்ட பேரியாழிற்கு வேருகும். அதனை ஆதியாழ் என்று கூறுவர். ஆதியாழிற்கு ஆயிரம் நரம்பும், பேரியாழிற்கு இருபத்தொன்றும் மகர யாழிற்குப் பத்தொன்பதும் சகோடயாழிற்குப் பதினன்கும் செங்கோட் டியாழிற்கு ஏழும் என்ப. பண் - நிறை நரம்புடையது. திறன் - குறை நரம்புடையது. கரணம் - யாழ்க்கரணம். அவை எட்டு: "பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவரல் செலவு விளையாட்டு, கையூழ் குறும் போக்கு" எனவரும். நாரதகீதம் - ஓரிசைநூல். ஏனை நூற்கும்-ஏனைய எந்த இசை நூலுக்கும். விருந்தினனன்றி-புதியனுதலன்றி. தமர்நகர்-உறவினர் வாழும் நகரம். கண்போற் காதலர் - கண்போன்ற அன் புடைய உறவினர். காணிய - காண.

(இதுவுமது)

சூஉ - எ : சதுவகை..............இடைப்பட்டு

(பொ - ரை.) நான்குவகை வேதங்களையும் ஆறுவகை அங் கங்களையும் விதிகள் அமைந்த முறைமையினையுடைய பதினெட் டிடங்களையுடைய வித்தைகளையும் பயின்று முதிர்ந்து ஏனைய நூற் கேள்வியினும் தனக்கு நிகரற்றவனும் ஆகிய அவ்வருஞ்சு கன் வரும்வழியிலே நீர்வேட்டு எழுந்த முகிலும் காற்றும் போல முழங்கா நின்ற ஒரு பெரிய யானைக்கூட்டத்தினகப்பட்டுக் கொண்டு; என்க.

(வி - ம்.) சதுவகை - நால்வகை. துறைபோகி-கற்று முதிர்ந்து. அங்கம் - உறுப்பு நூல்கள். அவை, சிக்கை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம் என்பன. விச்சை - வித்தை. வித்தைத் தானம் பதினெட்டென்பர் வடநூலார். நீர் நசைக்கு - நீர் வேட்கை காரணமாக.

(அருஞ்சுகன் வேங்கை மரத்திலேறி நோக்குதல்)

சூஎ - எக : அயலது.........நோக்கினன்

(பொ - ரை.) பக்கத்திலே நின்ற (............) வானுலகத் திற்கு வைத்த ஓர் ஏணி போன்று உயர்ந்த வேங்கை என்னும் காட்டுமரத்தினது கவர்த்த கிளையின் கண் ஏறிப் பெரிதும் அச்ச மெய்தி நான்கு திசைகளினும் நோக்கினனுக; என்க.

(வி - ம்.) இமையோர்-தேவர். இமையோருலகிற்கு ஏணியாகிய என்றது வானுற உயர்ந்து நின்ற என்றவாறு. கவர்சினை. வினைத்தொகை.

(உதயணனது யாழின் நிலை)

௭௧ - ௮௧ : அருகே............யாழ்

(பொ - ரை.) அவ்வேங்கை மரத்தின் பக்கத்தே தனக்கு மங்கலம் சிறிதும் இல்லாமல் தன் கணவனைப் பிரிந்து தனித்திருக்கும் மனைவி போலவும் சுருங்கிய உள்ளிடம் நெகிழ்ந்து....... ....பத்தலின் தன்மைக்கிசைந்த பசையால் ஒட்டப்பட்ட போர்வை மக்கி நிறங்கெடவும் மிக்க வளத்தோடு அழகுற்ற கொய்தற்குத்தகுந்த தளிர் மலர் முதலியவற்றையுடைய கொடிகள் படரப்பெற்றுத் தன் உடலை மறைத்த வளர்ந்த நெடிய மூங்கிற் கிளை தன் நரம்பினை வருடாநிற்றலால் அந் நரம்புகள் தாஅம் தீஇம் எனக் குளிர்ந்த இன்னிசையை முரலா நிற்பவும், தேனடையைச் செய்யும் வண்டினங்கள் செறிந்து தன் மேல் பரவா நிற்பவும் வடித்த வேலேந்தும் படைகளையுடைய வத்தவ மன்னனாகிய உதயணன் பண்டு பிரமசரிய விரதத்தோடிருந்து பயின்ற நல்ல கோடவதி என்னும் அத் தெய்வ யாழ்; என்க.

(வி - ம்.) ஆக்கம் - மங்கலம். இறைவன் - கணவன். இல்லோள் - மனைவி. ஞெகிழ்ந்து. நெகிழ்ந்து; போலி. இவ்விடத்தே ௭௫-ஆம் அடியில் இரண்டு சீரும் அழிந்து ஒரு முழு அடியும் சிதைந்தன. பத்தல், போர்வை என்பன யாழுறுப்புக்கள். போர்வை செத்து என்றது போர்வை மக்கி என்றவாறு. வேய் - மூங்கில். வேயின் சினை வருட என்க. தாஅம் தீஇம்: ஒலிக்குறிப்புமொழி. தீந்தொடை - தேனடை. தேனினம் - வண்டினம். செற்றி - நெருங்கி, பெருமகன் - உதயணன். படிவவிரதம் - பிரமசரிய விரதம். யாழ் - கோடபதி என்னும் யாழ்.

(இதுவுமது)

௮௨ — ௯௧ : கடி....................நீங்க

(பொ - ரை.) பண்டு அச்சம் மிகுதற்குக் காரணமான காட்டின் கண்ணே பத்திராபதி என்னும் பிடியின் மேனின்றும் வழுக்கி வீழ்ந்த நாள் முதலாக என்றென்றும் தாழ்ந்த செலவினையுடைய குளிர்ந்த காற்று வீசுந்தோறும் அம்மூங்கிற்கிளை வருடுதலால் எழா நின்ற தன்னின்னிசையைக் கேட்டு வந்து கூடுகின்ற யானைகள் அவ்விடத்தினின்று மகலாவாய் தம்முடலோடு உடல் நெருங்கக் குழுமி வானுலகத்துத் தேவர்கள் ஓதுகின்ற மந்திரத்தைக் கேட்கும் செவியையுடையன போலக் கேட்டுத் தம் கையுங்காலும் ஆட்டுதல் செய்யாவாய்த் தம் பிறப்பிற்குக் காரணமான அவ்வின்னிசையை முற்றும் கேட்பன

போன்று அந்த யானைகள் நெடும்பொழுது தன்னைச் சூழ்ந்து நிற்ப..........................யானைகளெல்லாம் சோர்ந்து தம்முடைய கடுஞ்சினம் குறைந்து அவ்விடத்தினின்றும் நீங்கா நிற்ப; என்க.

(வி - ம்.) யானைகள் குழீஇப் போகாவாய் மந்திரங்கேட்கும் செவிய போலவும் பிறப்புணர்பவை போலவும் தன்னிசையைக் கேட்டு நிற்ப, அவ் வேழமெல்லாம் பின்னர் நீங்க என இயைபு காண்க. கடி - அச்சம்; மணம் எனினுமாம். பிடி - பத்திராபதி. எல்லை முதலா - காலமுதலாக. என்றும் - நாள் தோறும், வளிஎறி தொறும்-நரம்பு வருடப் படுதலால் எழும் இசையைக் கேட்டு; என்க. அந்தரம் - வானம். மெய்யொடு மெய்யுறக்குழீஇ - உடலொடு உடல் பொருந்தக் கூடி. அவை - அந்த யானைகள். யானை இசையில் தோன்றியது என்பது இசை நூற்றுணிபு. இதனை, "யானை நாதத்திற் றோற்றுதலான் அதற்கு வணங்குதலியல்பு" எனவரும் (சிவக. ௪௭௮) நச்சினார்க்கினியர் நல்லுரையானும் உணர்க. இப்பகுதியில் ௧௧ ஆம் அடியின் முற்பகுதி யழிந்தது. கடுங்கதம் - கடிய சினம். சுருங்குபு - சுருங்கி.

(அருஞ்சுகன் செயல்)

௩௨ - ௪௦௦ : கிடந்தது..............கொண்டு

(பொ - ரை.) ஆங்குக் கிடந்ததனை அவ்வருஞ்சுகன் அம் மரத்திலிருந்தவாறே கண்டு அந்த யானைகளுக்கு அஞ்சுவானாய் நடுங்கி நெடும்பொழுதிருந்து அந்த யானைகள் அவ்விடத்தினின் றும் போனபின்னர் ஒருவாறு துணிந்து மரத்தினின்றும் இறங்கி அந்தயாழ் கிடந்த இடத்தையணுகி அதனைநோக்கி, "அந்தோ! இவ்விடத்தே இந்த யாழினை இட்டுப்போனவர் கின்னரரோ? இயக்கரோ யாரேயாயினும் ஆகுக. இன்னவர் இதனை இவ்விடத் திட்டுத் தம் மெய்ம்மறந்து போயினர்போலும்; அல்லது இந்த யாழ் தேவருலகத்தினின்றும் இவ்விடத்தே வீழ்ந்ததோ? யாவதாயினும் ஆகுக! யான் இதனை எடுத்துக் கொள்ளத் துணிந்து விட்டேன்" என்று கூறி அவ்யாழிற்குப் பலியாக நறிய மலர் பலவற்றை அதன்மேற் றூவி வணங்கியவனாய் அவ் யாழைத் தன் கைகளாற் பற்றி, "யாழீரே! யாதும் கருதாமல் எம்பால் வருவீராக" என்று கூறி அதனைக் கையிலெடுத்துக் கொண்டு; என்க.

(வி - ம்.) கிடந்தது கண்டுவைத்தும் யானைக்கு அஞ்சி நடுங்கு வானாக என்க. அவண் - அந்தயாழ் கிடந்த இடத்தை. அந்தயாழ் நிலஉலகத்து யாழ்போலாது மிகவும் சிறந்திருத்தலின் கின்னர ருடையதோ இயக்கருடையதோ தேவருலகத்தினின்றும் இழிந்ததோ என்று ஐயுறுவானாயினன். வலியாதெனக்கு வம்மின் நீர்என்றது அருஞ்சுகன் யாழை நோக்கிக் கூறியதாம். பலி-வழிபாட்டுப் பொருள். வழுக்காமரபு என்றது யாழ் எடுக்கும் மரபினை.

(இதுவுமது)

கoக : அ : கானம்................இயக்கலின்

(பொ - ரை.) அக்காட்டகத்தைக் கடந்து படைப்பெருக்க முடைய உதயண மன்னனுடைய கேடில்லாத அங்காடித் தெருக்களையுடைய வளவிய கோசம்பி நகரத்தை எய்தி ஆங்கு அரசனுடைய அரண்மனைக்கு அண்மையிலுள்ள ஒருபக்கத்தில் வாழாநின்ற பலராகிய இனிய சுற்றத்தாரோடு நன்கு கூடி அளவளாவி இருந்து குளிர்ச்சி பொருந்திய அற்றை நாள் மாலைப் பொழுதிலே தான் இருக்கின்ற இல்லத்தின்கண் ஓரிடத்தே யாழ் வாசித்தற்குரிய இருக்கைகளுள் வைத்துத் தனக்கின்பமான ஓர் இருக்கையிலிருந்து அக்கோடவதியினை இடப்பக்கத்தே தழுவித் தன் உடம்பின்கண் வழிநடந்த வருத்தம் நீங்குவதற்பொருட்டு மெல்ல 'செவ்வழி' என்னும் ஒரு சிறந்த பண்ணை அந்த யாழ் நரம்புகளை வருடி வாசித்தலாலே; என்க.

(வி - ம்.) கானம் - காடு. நீந்தி - கடந்து. வேந்தன் : உதயணன். அழுங்கல் - கேடு. ஆவணம் - அங்காடி. கோயில் - அரண்மனை. ஒருசிறை – ஒருபக்கம். பல இன்சுற்றம் என்க, தன் மனை என்றது தான் இருக்கும் இல்லம் என்றவாறு. இருக்கை - யாழ்வாசித்தற்குரிய இருக்கை. அவை பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவாத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் என ஒன்பதாம். இன்பஇருக்கை என்றது அவ்விருக்கையுள் வைத்துத் தனக்கின்பமான ஓர் இருக்கையில் என்றவாறு. யாழினை இடப்பக்கத்தே கொண்டு வாசிப்பது முறைமை. வழிவெந்நோய் - வழி நடந்ததனால் உண்டான வெவ்விய வருத்தம். பையென - மெல்ல. செவ்வழி - ஒருபண்.

(உதயணன் அவ்விசை கேட்டு ஆராய்ந்து துணிதல்)

கoஅ - கரு : சேதியர்................இசைப்ப

(பொ - ரை.) அப்பொழுது உதயணமன்னன் வானுற உயர்ந்த தன் அரண்மனையின்கண் குற்றமற்ற பள்ளியம்பலத்திலே வழிக் கோப்பெருந்தேவியாகிய பதுமாபதியாரோடு விளையாடி மான்கட் காலதர் திறந்து இருந்தவனுக்கு அவ்வருஞ்சுகன் வாசியாநின்ற யாழொலி, "ஈண்டிருக்கின்ற எம்பெருமானே! நீ எம்மை விரும்பாமல் மறந்தனை. எம்பால் நின்மனம் மிகவும் வன்மையுடையதாயிற்று" என்று இறந்த காலத்தில் நிகழ்ந்த அவன் செயல்களை எடுத்துக் கூறி அழுவதுபோல அவன் செவியிற் படாநிற்ப; என்க.

(வி - ம்.) வழிப்பெருந்தேவி - இரண்டாம் கோப்பெருந்தேவி. பள்ளி - பள்ளியம்பலம். அரிச்சாலேகம் - மான்கண் போன்ற சாளரம் அரி - மான் : ஆகுபெயர். "மான்கட் காலதர் மாளிகையிடங்களும்". (சிலப். ௫ ; அ.) இறந்தவை-இறந்தகால நிகழ்ச்சிகள். தொடை-யாழ்.

(இதுவுமது)

கககசு — ககூ: கொடை...............ஆய்வோன்

(பொ - ரை.) அதுகேட்ட வள்ளற் பெருமானாகிய அவ்வுதயணவேந்தன் பிறரால் இயற்றுதற்கரிய என்னுடைய பேரியாழாகிய கோடபதியினது பண்ணொலியே இஃது என்றுதன் எஃகுச் செவியால் ஓர்ந்து தன் தேர்ச்சியினாலே அதுவே என்றுதுணிந்து அவ்வுண்மையை ஆராய்ந்தறிந்துகொள்ளும் பொருட்டுத் தன் மெய்காப்பாளனை அவ்விடத்தே ஆராய்கின்றவனை; என்க.

(வி - ம்.) கொடை - வண்மை. வேந்தன்: உதயணன். படைப்பரும்யாழ் - இயற்றுதற்கரிய யாழ். தெய்வயாழாகலின் இங்ஙனம் கூறினன். மெய்காப்பாளன்-தன் உடம்பைப் பாதுகாக்கும் இளைஞன்.

(இதுவுமது)

கஉ0 - ரு: மருங்கு...............என

(பொ - ரை.) அப்பொழுது பக்கத்தேயுள்ள அறையில் பள்ளி கொண்டிருந்த வயந்தககுமரன் எழுந்து விரைந்து வந்து உதயணன் அறையில் புகுந்து, "பெருமானே! இப்பொழுது இங்கு நிகழ்ந்தது யாது?" என்று வினவாநிற்ப, அவனைக்கண்ட உதயணன், "நண்ப! இங்கு இசைக்கும் இந்த யாழிசையைக் கேள். இவ்விசை பல்வகை உறுப்புக்களும் சேர்ந்தமைந்த அழகினையுடைய நமது கோடவதியின் இன்னிசையே காண். யான் அதனைக் கேட்டு நன்கு அறிந்து கொண்டேன். நீயும் கேட்டு அறிந்துகொள்! நீ இப்பொழுதே விரைந்து சென்று நமது அரும் பெறல் பேரியாழினை இயக்குபவனை இங்கு அழைத்து வருவாயாக" என்றுகூற; என்க.

(வி - ம்.) உதயணன் மெய்காப்பாளன் எங்குளன் என்று ஆங்குள்ள பணியாளரை வினவி ஆராயும் அரவங்கேட்டு வயந்தகன் விரைந்துவந்து இங்கு நிகழ்ந்தது என்ன என்று வினவுகின்றான் என்பது கருத்து. மருங்கறை - பக்கத்தேயுள்ள அறை. கூட்டமை — பலவகை உறுப்புக்களும் சேர்தலமைந்த. வனப்பு — அழகு. கேண்மதி - மதி: முன்னிலையசை. இயக்குமொருவனை என்றது இயக்குபவனை என்றவாறு. தரல் - அழைத்து வருக.

(வயந்தகன் செயல்)

கஉசு — ருசு: மயக்கம்...............உரைப்ப

(பொ - ரை.) மயக்கற்ற நூற்கேள்வியையுடைய அவ்வயந்தககுமரன் அம்மாளிகையினின்றும் இறங்கிப் புதுவோனாகி அந்நகரத்திற்கு வந்த அவ்வருஞ்சுகன் இருந்த எதிரில்லத்தின்கட் சென்றுபுகுந்து வீறுடைய அவ்வீணையை அப்பார்ப்பனன் பெற்ற

வரலாற்றினை அவனையே வினவ அதுகேட்ட அவ்வருஞ்சுகன் அந்த யாழினைத் தான் நருமதைப் பேரியாற்றைக் கடந்து இப்பால் வருகின்ற வழியிலே பெரிய மலைச்சாரலின்கண் கண்டு எடுத்துக்கொண்டு வந்த செய்தியைக் கூறுநிற்ப, அதுகேட்ட வயந்தகன் அப்பார்ப்பனனை அழைத்துக்கொண்டு உதயணன் பாற்சென்று, "வேந்தே! இந்த யாழ் பண்டு யாம் பிரச்சோதன னுடைய உஞ்சை நகரத்தினின்றும் நமது ஆற்றலாலே வந்த அற்றை நள்ளிரவின்கண் யாமூர்ந்துவந்த பெரிய பிடியானையாகிய பத்திராபதி பெரிதும் விரைந்து ஓடினமையால் மலைச்சாரலிலே அப்பிடியின் மேலிருந்து தென்பக்கத்தில் நழுவிவிழுந்த அக்கோட வதியே" என்று அந்த யாழினை உதயணனுக்குக் காட்டிக் கூறு நிற்ப; என்க.

(வி - ம்.) இழிந்து - இறங்கி. புரிநூலாளன் - பார்ப்பனனாகிய அருஞ்சுகன். வீறு - வேறொன்றற் கில்லாத அழகு. வீணைப்பேறு - அவ்வீணையைப் பெற்ற வரலாறு. பெற்றவண்ணம் - பெற்ற வரலாறு. கொற்றவன் : உதயணன். தலைத்தாள் : முன்னிலை. வேற்றான் - பிரச் சோதனன். பதி - உஞ்சை நகரம்: பிடி - பத்திராபதி. முறுக - விரைய. பெருமகற்கு : உதயணனுக்கு.

(உதயணன் செயல்)

௧௩எ - ௪௬ : தாரார்..........நினைந்தென்

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் ஆற்றொணாத மகிழ்ச்சி யுடையனாய் "வருக! வருக! என் நல்ல யாழ்வருக! வத்தவன் அமுதம் வருக! அந்தணனே! அதனை என்பால் தருக! ஒப்பற்ற எனது துணையாகிய இக்கோடவதியினை எனக்கு மீண்டும் கொணர்ந்துதந்த அந்தணனே! நீ இவ்விடத்தே விரும் பும் பொருள்களையெல்லாம் சொல்லுக! யாம் அவற்றைத் தருவேம்!" என்று கூறி அவ்விடத்தே அப்பார்ப்பனன் வேண்டாநின்ற பெறுதற்கரிய பேரணிகலன்களோடு நிதிபலவும் பெரிய ஊரும் வழங்கி, "அருஞ்சுகனே! நீ இப்பொழுதிருந்த அந்தச் சிறிய வீட்டில் இருத்தல் வேண்டா!" என்று கூறித் தன் அரண்மனையின் அகத்தே தகுந்த இல்லங்கள் சிலவற்றை அவ னுக்கு வழங்கிய பின்னர்த் தான்பெற்ற அக் கோடவதியின்பால் குறையாத விருப்பத்தோடு அற்றை இரவு விடியுந்துணையும் அக்கோடவதியினை நினைந்தும் நெஞ்ச முருகியும் தழுவிக் கொண்டும் அதன் இசையொடு மனம் புணர்ந்தும் அக்கோடவதி வாயிலாக வாசவதத்தையை நினைந்து வருந்தியும் பாயலில் உறங்காமற் கிடந்தனன்; என்க.

(வி - ம்.) தார் - மாலை. மார்பன் : உதயணன், வத்தவன் அமுதம் என்றது, தன்னைப் பிறன் போற் கூறியபடியாம். ஆண்டு – அவ்

விடத்தே. அவன் : அவ்வாருஞ்சுகன். அருங்கலன்களை வெறுக்கையொடு நல்கிப் பெரும்பதிநல்கி என முன்னும் ஒட்டுக. பெரும்பதி - பெரிய ஊர். அந்நகர் - அவ்வுஞ்சை நகரம் எனினுமாம். தன்நகர் - தன்னுடைய கோசம்பி நகரம் எனினுமாம். புலர்தலைகாறும் - விடியுமளவும். பள்ளி கொண்டனனுல் என்றது, உறங்காமல் பாயலிற் கிடந்தான் என்பதுபட நின்றது. பாவை : வாசவதத்தை. பாவையை நினைந்து என்றது, அக்கோடவதிவாயிலாகப் பாவையை நினைந்து என்பதுபட நின்றது.

௩. யாழ் பெற்றது முற்றிற்று.

ச உருமண்ணுவா வந்தது

இதன்கண் : கோடவதி காரணமாக வாசவதத்தையை நினைந்த உதயணன் நிலையும், தருசகமன்னன் உருமண்ணுவாவைச் சிறைவீடு செய்ய முயலுதலும், சங்கமன்னர் உருமண்ணுவாவைச் சிறைவிடுத்தலும், உருமண்ணுவாவின் செயலும், சாதகன் செயலும், யூகி சாதகனை உருமண்ணுவாவிடம் விடுத்தலும், சாதகன் செயலும், உருமண்ணுவா சாதகனை வினவுதலும், சாதகன் கூற்றும், உருமண்ணுவாவின் செயலும் கூறப்படும்.

பள்ளி யெய்திய நள்ளிரு ணீங்கலும்
விளியா விருப்பினோ டொளிபெறப் புதுக்கி
மாசில் கற்பின் மருந்தேர் கிளவி
வாசவ தத்தையை வாய்மிக் கரற்றி
எனக்கணங் காகி நின்றநீ பயிற்றிய
வனப்பமை வீணை வந்தது வாராய்
நீயே யென்வயி னினைந்திலை யோவென
வகைத்தார் மார்ப னகத்தே யழல்சுடத்
தம்பியர்ப் பெற்றுந் தனியாழ் வந்தும்
இன்பம் பெருக வியைந்துண் டாடான்
செல்லுங் காலை மல்லன் மகதத்துச்
செருமுன் செய்துழிச் சிறைகோளப் பட்ட
உருமண் ணுவாவிற் குற்றது கூறுவென்
சங்க மன்னர் தந்த முரிமை
புன்கண் டீரப் புறந்தந் தோம்பி
வாட்டொழிற் றருசகன் மீட்டனன் போக்கி
மன்னர் சிறையும் பின்னர்ப் போக்குதும்
உருமண் ணுவாவை விடுக விரைந்தெனக்
கரும மாக்களைப் பெருமகன் விடுத்தலிற்
பகைகொண் மன்னர் மிகவுவந்தோன்றி
இழிந்த மாக்களோ டின்ப மார்தலின்
உயர்ந்த மாக்களோ டுறுபகை யினிதென
மகிழ்ந்த நெஞ்சமொடு மன்னவற் புகழ்ந்து
செயப்படு கருமஞ் செறியச் செய்ய

மயக்கமி லமைச்சனை மன்னர் விட்டபின்
திருவலக் கருமந் திண்ணிதிற் செய்துவந்
துருமண் ணுவாவுந் தருசகற் கண்டு
சிறைநனி யிருந்த சித்திராங் கதனைப்
பொறைமலி வெங்நோய் புறந்தந் தோம்பிப்
போக்கிய பின்றை வீக்கங் குன்றாத்
தலைப்பெருந் தானைத் தம்மிறைக் கியன்ற
நிலைப்பா டெல்லா நெஞ்சுணக் கேட்டு
வரம்பி லுவகையோ டிருந்த பொழுதின்
இயைந்த நண்பி னியூகியோ டிருந்த
பயன்றெரி சூழ்ச்சிப் பதின்ம ரிளையருட்
டீதில் கேள்விச் சாதக னென்போன்
உருமண் ணுவாவும் யூகியுந் தறியாக்
கரும மேற்கோ டெரிநூ லாகப்
பாவிடு குழலி னாயிடைத் திரிதர
முனிவில னாதலின் முன்னா ளெண்ணிய
செய்வினை முடித னோக்கித் தேவியைக்
கைவயிற் கொடுத்தல் கரும மென்றுதன்
அருமறை யோலை யரும்பொறி யொற்றி
உருமண் ணுவாவினைக் கண்டிது காட்டென
விரைவனன் போந்து தருசகன் காக்கும்
இஞ்சி யோங்கிய விராச கிரியத்து
வெஞ்சின வேந்தன் கோயின்முற் றத்துக்
குஞ்சரத் தானத்து நின்றோற் குறுகிக்
குறியிற் பயிர்ந்து மறையிற் போகி
ஓலை காட்ட வுள்ளம் புகன்று
மேலை பட்டவுந் தேவி நிலைமையும்
வாசனை யகத்தே மாசற வுணர்ந்தும்
எம்வயிற் றீர்ந்தபிற் செய்வகை யெல்லாம்
வாயி னுரைக்கெனச் சாதகன் கூறும்
அற்பழ லார்தர வடல்வே லுதயணன்
ஒற்கம் படாமை யுணர்ந்தன னாகி
அரும்பெறற் றேழி யாற்றும் வகையிற்
பெருந்தண் கானம் பிற்படப் போகிப்
பற்றின் மாதவர் பள்ளியு ளிருப்பின்

அற்றந் தருமென வதுநனி வலீஇத்
தண்புனற் படப்பைச் சண்பைப் பெரும்பதி
மித்திர காம னற்பெருங் கிழத்தியோ
டாப்புற விரீஇய பிற்றை யாருணி
காப்புறு நகர்வயிற் கரந்துசென் றேழுகும்
கழிபெரு நண்பிற் காள மயிடனென்
றழிவி லந்தண னவ்விடத் துண்மையிற்
புறப்படு மிதுவெனத் திறப்படத் தெரிந்து
செட்டி மகனே டொட்டினம் போகிப்
பண்டம் பகரும் பட்டினம் பயின்ற
புண்டரம் புகீஇப் புதைத்த வுருவொடு
பொருத்தஞ் சான்ற புரைதபு நண்பின்
வருத்த மானன் மனைவயின் வைத்தபின்
வருத்த மானற் கோத்த தம்முன்
இரவி தத்த னென்னு முரவோன்
பெரும்படை தொகுத்துவந் தரம்புசெய் தலைத்தலின்
இருந்த நகரமுங் கலங்க மற்றவன்
அருந்தொழின் மலையர ணடைந்தன மாகி
இருந்த பொழுதி லிப்பா லரசற்கு
நிகழ்ந்ததை யெல்லா நெறிமையிற் கேட்டுப்
பொன்னிழை மாதரைப் புணர்த்தல் வேண்டும்
இன்னே வருகென நின்னுழைப் பெயர்த்தந்
தாங்கவ ணிருந்தன ராதலி னீங்கினிச்
செய்வதை யெல்லா மெய்பெற நாடெனத்
தூதுசெல் லொழுக்கிற் சாதக னுரைப்ப
ஆற்றல் சான்ற தருசகற் கண்டவன்
மாற்ற மெல்லா மாற்றுளிக் கூறி
அவனுழைப் பாட்டகத் ததிபதி யாகிய
தவறில் செய்தொழிற் சத்தி யூதியை
வேண்டிக் கொண்டு மீண்டனன் போந்துழி
அப்பா னின்று முற்பால் விருந்தாய்ப்
புண்டர நகரம் புகுந்தன னிருந்த
மண்டமர்க் கடந்தோன் விரைந்தனன் வருகென
எதிர்வரு தூதனொ டதிரக் கூடிச்
சத்தி யூதி முதலாச் சண்பையுள்

மித்திர காமனைக் கண்டுமெலி வோம்பி
வருத்தந் தீர்ந்தபின் வருத்த மானன்
பூமலி புறவிற் புண்டரங் குறுகித்
தேமொழித் தேவியொடு தோழனைக் கண்டு
தலைப்பா டெய்தித் தாங்கா வுவகையொடு
நலத்தகு நாகத் துறைவோர் போல
இன்ப மகிழ்ச்சியொடு நன்கனம் போந்து
புகழ்க்கோ சம்பிப் புறத்துவந் தயர்வறும்
மகிழ்ச்சி யெய்தி மனம்பிணி வுறாஉம்
மதுகாம் பீர வனமெனுங் காவினுட்
புகுதந் தவ்வழிப் புதுவதின் வந்த
விருந்தின் மன்ன ரிருந்துபயன் கொள்ள
இயற்றப் பட்ட செயற்கருங் காவினுள்
மறைத்தன னவர்களைத் திறப்பட விரீஇயபின்
உவந்த வுள்ளமோ டுருமண் ணுவாவும்
புகுந்தனன் மாதோ பொலிவுடை நகரேன்.

உரை

ச. உருமண்ணுவா வந்தது

அஃதாவது:—உருமண்ணுவா சிறைவீடுபெற்று உதயணன்பால் வந்து சேர்ந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் நிலை)

க - எ : பள்ளி..........................என

(பொ - ரை.) இவ்வாறு கோடவதி வாயிலாய் வாசவதத்தையை நினைந்து வருந்தி உறங்காமல் பாயலிற் கிடந்த அந் நள்ளிருள் நீங்குதலும், அம்மன்னவன் கோடவதியை நோக்கி "என் தெய்வ யாழே!" என்று அதனை விளித்து ஆர்வத்தோடே அதனை மீண்டும் ஒளிபெறுமாறு புதுக்கியவனுக்குக் குற்றமற்ற கற்புடைய அமிழ்தத்தையொத்த மொழியினையுடைய வாசவதத்தையை நினைந்து வாயால் மிகவும் புலம்பி, "வாசவதத்தாய்! எனக்குக் கண்கண்ட தெய்வமேயாகி நின்ற நீ வருடிய அழகமைந்த தெய்வயாழ் என்பால் மீட்டும் வந்தது. அன்புடைய நீயோ வந்தாயில்லை. என்னை நினைந்திலையோ," என்று புலம்பி ; என்க.

(வி - ம்.) விளியா விருப்பினொடு - பண்ணிசைக்கும் விருப்பத்தோடு எனினுமாம். விளியா - விளிக்கும்; பண்ணிசைக்கும் என்றவாறு. மருந்து : அமிழ்தம். ஏர் : உவம உருபு. கிளவி - மொழி. வாய்மிக்கு - வாய்விட்டு. அணங்காகின்ற நீ - தெய்வமாகி நின்ற நீ. என்னுல் இழக்கப்பட்ட வீணை வந்தது : என்னுல் இழக்கப்பட்ட நீ இன்னும் வந்திலை என்றவாறு.

(இதுவுமது)

அ - கஙு : வகை..................கூறுவென்

(பொ - ரை.) பல்வேறு வகைப்பட்ட மாலைகளையணிந்த உதயணமன்னன் தன் நெஞ்சத்தே வாசவதத்தையின் பிரிவு என்னும் தீச்சுடுதலாலே தன் தம்பியராகிய கடகபிங்கலரை மீண்டும் பெற்றும், ஒப்பற்ற பேரியாழாகிய கோடவதி மீண்டும் தன்பால் வந்தும் இவற்ருலெல்லாம் இன்பம் பெருகப் பெருனாய் மனம்பொருந்த உண்ணலும் உண்ணுன், ஆடலும் ஆடானுய்க் காலங்கழித்து வருமளவிலே, வளமிக்க மகதநாட்டிலே முன்னர்ச் சங்க மன்னரொடு போர்செய்த காலத்தே எலிச்செவியரசனுல் சிறைகொளப்பட்ட உருமண்ணுவா என்னும் அமைச்சனுக்கு நிகழ்ந்த செய்தியை இனிக் கூறுவேன், கேண்மின் ; என்க.

(வி - ம்.) மார்பன் : உதயணன். அழல் - பிரிவுத்துன்பமாகிய நெருப்பு. தம்பியர் - கடகபிங்கலர். யாழ் - கோடவதி. மனமியைந்து உண்டாடான் என்க. மல்லல் - வளம். சங்கமன்னரொடு முன் செருச் செய்துழி என்க. செரு - போர். எலிச்செவியரசனுல் சிறைகொளப் பட்ட என்க. கூறுவென் என்றது நூலாசிரியர் கூற்று.

(தருசகன் செயல்)

கச - கூ : சங்க ....விடுத்தலின்

(பொ - ரை.) விரிசிகன் முதலிய சங்க மன்னர்கள் போரின் கண் விட்டுப்போன அவர்தம் பொருள்களையெல்லாம் அவர்கள் துன்பம் தீர்தற்பொருட்டு நன்கு பாதுகாத்து வாட்போரின்கண் ஆற்றல்மிக்க தருசக மன்னன் அப்பொருள்களை மீட்டும் அவர்கள்பால் விடுத்து யாங்கள் சிறைபற்றியுள்ள எலிச்செவியரசன் தம்பியையுள்ளிட்ட அரசர்களைச் சிறைவீடுசெய்து நம்பால் பின்னர் உய்ப்பேம், இப்பொழுது நீவிர் விரைந்து நம்மால் சிறை கொளப்பட்ட உருமண்ணுவா என்னும் அமைச்சனைச் சிறைவீடு செய்து எம்பால் வரவிடுக! என்று சொல்லித் தூதர்களை அத் தருசக மன்னன் அப்பகைமன்னர்பால் விடுத்தலாலே ; என்க.

(வி - ம்.) சங்கமன்னர் - விரிசிகன் முதலிய எண்மரும். தந்தம்: அசை. புன்கண் - துன்பம். புறந்தந்தோம்பி - நன்கு பாதுகாத்து; அவர்பால் போக்கி என்க. மன்னர் : எலிச்செவியரசன் தம்பி முதலியோர். உருமண்ணுவா எம்பால் வந்தபின்னர்ப் போக்குதும் என்றவாறு. கருமமாக்கள் - தூதுவர். பெருமகன் : தருசகன்.

(சங்கமன்னர் உருமண்ணுவாவைச் சிறைவிடுத்தல்)

உ0 - ரு: பகை................பின்

(பொ - ரை.) அத்தூதுவர் மொழிகேட்ட பகைமன்னரா கிய விரிசிகன் முதலியோர் மிகமிக மகிழ்ந்து அத்தருசக மன்னன் கருத்தோடியைந்து கீழ்மக்களோடு கூடி இன்பமெய்து தலினும் காட்டில் மேன்மக்களோடு மிக்க பகைகோடல் இனி தாங்கண்டீர் என்று மகிழ்ந்த நெஞ்சத்தோடு அத்தருசக மன்னன் பண்பினைப் பாராட்டிப் புகழ்ந்து மேலே செய்தற்குரிய செயல்களைச் செறிவுறச் செய்யும்பொருட்டு மயக்கமில்லாத அறி வுடை அமைச்சனாகிய உருமண்ணுவாவை அச்சங்கமன்னர் சிறைவீடு செய்துவிட்ட பின்னர்; என்க.

(வி - ம்.) பகைகொள் மன்னர் - விரிசிகன் முதலிய சங்கமன்னர் என்மரும். ஒன்றி - தம்முட் கூடி எனினுமாம். "இழிந்த மாக்களொ டின்ப மார்தலின் உயர்ந்த மாக்களொ டுறுபகை இனிது" என்னும் இத்தொடரொடு,

"பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்" (குறள். அகசு)

எனவும்,

"நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்" (குறள். அகஎ.)

எனவும்,

"இசைந்த சிறுமை இயல்பிலா தார்கட்
பசைந்த துணையும் பரிவாம்—அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கட்
பகையேயும் பாடு பெறும்" (நாலடி. கஅஎ)

எனவும்வரும் ஆன்றோர் பொன்மொழிகளையும் நினைக. மன்னவற் புகழ்ந்து - தருசகனைப் புகழ்ந்து. மன்னர் : அச்சங்க மன்னர்.

(உருமண்ணுவாவின் செயல்)

உசு - ருரு: திருவலக்..................பொழுதின்

(பொ - ரை.) இங்ஙனம் சங்கமன்னரால் சிறைவீடுபெற்ற அவ்வுருமண்ணுவா தன் மன்னனுக்குச் செல்வமும் ஆற்றலும் தருதற்குரிய செயல்களை அப்பகை மன்னர்பால் திட்பமுறச் செய்து அங்கிருந்து இராசகிரிய நகரத்திற்கு வந்து தருசக மன்னனையுங் கண்டு அந்நகரத்தில் நன்கு சிறைவைக்கப்பட் டிருந்த சித்திராங்கதன் என்னும் எலிச்செவியரசன் தம்பியை அவனுடைய பொறை மிக்க வெவ்விய நோய்களையும் தீர்த்து நன்கு பேணி அப்பகைமன்னர்பால் போக்கியபின்னர்ப் பெருமை

குறையாத தலைமைத்தன்மையையுடைய பெரிய படைகளை யுடைய தம்மரசனாகிய உதயணனுக்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் நெஞ்சு கவரும்படி கேட்டுணர்ந்து எல்லையற்ற மகிழ்ச் சியோடே அவ்வமைச்சன் இராசகிரிய நகரத்தே இருந்தபொழுது; என்க.

(வி - ம்.) திருவும் வலமும் தரும் கருமம் என்க. திரு - செல்வம். வலம் - ஆற்றல். இவற்றை உதயணனுக்குத் தரும் செயல்களை என்றவாறு. எனவே உருமண்ணுவா சிறைவீடு பெற்றதும் அச்சங்கமன்னரை உதயணனுக்கு நட்பாக்கும் செயல்களைச் செய்துவந்தனன் என்றார் ஆயிற்று. சித்திராங்கதன் - எலிச்செவியரசன் தம்பி. அவன் சிறையிருக்குங்கால் பொறை மிகுதலால் உண்டாகும் வெங்நோய் என்றவாறு. வீக்கம் - பெருமை. தம்மிறை: உதயணன். அவனுக் கியன்ற நிலைப்பாடு என்றது, பகைவனைக் கொன்று கொற்றங் கொண்டதனை.

(சாதகன் செயல்)

நஉ - கூ: இயைந்த......................திரிதர

(பொ - ரை.) இனி, யூகி என்னும் அமைச்சனோடு மனம் பொருந்திய நட்புரிமையோடு தங்கி இருந்த பயன் தெரிதற்குக் காரணமான ஆராய்ச்சியினையுடைய இளைஞர் பதின்மருள் வைத்துக் குற்றமற்ற நூற்கேள்வியையுடைய சாதகன் என்னும் இளைஞன் உருமண்ணுவா என்னும் அமைச்சனும் யூகி என்னும் அமைச்சனும் நெய்வோர் தம்மிருபாலும் அமைத்துக்கொண்ட தறி ஆகவும் தான் தன்னுள் அடக்கியிருக்கின்ற ஆள்வினைக் கொள்கையே ஆராய்ந்தமைத்த நூலாகவும் தான் அந்நூற்பாவி விட்ட குழலாகவும் அவ்விரு அமைச்சர்பாலும் சென்றும் வந்தும் திரிதலைச் செய்ய; என்க.

(வி - ம்.) இதன்கண் மறைந்திருந்த யூகியின் மொழியைக் கொண்டு உருமண்ணுவாவினிடமும் உருமண்ணுவா கூறும் மொழியைக் கொண்டு யூகியினிடமும் பன்முறை தூது செல்லுந் தொழிலைச் சாதகன் என்னும் இளையன் செய்து வந்தனன் என்பதுணர்த்தப்பட்டது. இதன்கண் இருமருங்குமுள்ள யூகியும் உருமண்ணுவாவும் இருமருங்குமுள்ள தறிகளாகவும் அவர்பால் சாதகன் கேட்டுக் கொண்ட மொழி நூலாகவும் அச்சாதகனே நூலை உட்கொண்டு அங்குமிங்கும் ஓடா நின்ற குழலாகவும் கூறி இருக்கும் உவமை நயம் நினைந்து நினைந்து இன்புறற்பாலது. இப்பகுதியால் யூகியோடு ஏவலிளைஞர் ஒருபதின்மர் இருந்தனர் என்பதும் பெற்றாம்.

(யூகி சாதகனை உருமண்ணுவாவிடம் விடுத்தல்)

சO - ச: முனிவு.................காட்டென

(பொ - ரை.) யூகி இப்பொழுது உதயணமன்னன் இன்பத்திலே அழுந்தி அரசாட்சியின்கண் வெறுப்புடையன் ஆகாமை

யினும் முன்காலத்தே தாம் எண்ணிய கருமம் இப்பொழுது நிறைவேறிவிட்டமையை நினைத்தும் யாம் இப்பொழுது கோப் பெருந்தேவியாகிய வாசவதத்தையை அவன்பால் ஒப்புவித்து விடுதலே தான் செய்தற்குரிய செயல் என்று கருதி அரிய மறைச் செய்தியாகிய இச்செய்தியை ஓரோலையின்கண் வரைந்து பிறர் அறிதற்கரிய தனது இலச்சினையையிட்டு அச்சாதகன் பாற் கொடுத்து, "இளைஞனே! நீ இவ்வோலையைக் கொண்டு சென்று உருமண்ணுவாவினைக் கண்டு காட்டுக" என்று கூறி விடுத்தலாலே என்க.

(வி - ம்.) யூகி பண்டு உதயணமன்னன் இன்ப நுகர்ச்சியில் அழுந்தி ஆட்சியை வெறுத்தான் ஆதலின் அந்நிலையை மாற்றி அவனை அத்தொழிலில் ஈடுபடுத்தற் பொருட்டே வாசவதத்தையை அவன்பானின்றும் பிரித்தனன். இற்றைநாள் அவன் ஆட்சித் தொழிலில் வெறுப்பின்றி ஈடுபட்டிருக்கின்றனன். ஆதலால் இப்பொழுது வாசவதத்தையை அவனொடு கூட்டி விடுதலே நற்செயல் என்று யூகி கருதுகின்றான் என்றவாறு. முனிவிலன் என்றது, பண்டுபோல ஆட்சித் தொழிலில் வெறுப்பிலன் என்றவாறு. முன்னாள் எண்ணிய செய்வினை முடிதல் என்றது, உதயணன் ஆருணியைக் கொன்று கொற்றங் கொண்டதனை. அருமறையோலை - பிறர் அறிதற்கரிய மறைச் செய்தி வரைந்த ஓலை. பொறி - இலச்சினை; முத்திரை. காட்டென்று சாதகனுக்குக் கூறி விடுக்க என்க.

(சாதகன் செயல்)

சரு - ருo : விரைவனன்...............காட்ட

(பொ - ரை.) அத்தூதோலை பெற்ற சாதகன் விரைந்து சென்று தருசக மன்னனால் பாதுகாக்கப்படுகின்ற உயரிய மதில்களையுடைய இராசகிரிய நகரத்திற் புகுந்து வெவ்விய வெகுளியையுடைய அத்தருசக மன்னன் அரண்மனை முற்றத்தின்கண் யானைச் செண்டு வெளியிலே நின்ற அவ்வுருமண்ணுவாவைக் கண்டு அணுகிச் சங்கேத ஒலியால் பிறர் அறியாமல் அவனை அழைத்துக் கொண்டு மறைவிடத்தே சென்று அவ்வோலையைக் காட்டா நிற்ப; என்க.

(வி - ம்.) விரைவனன்: முற்றெச்சம். இஞ்சி - மதில். வேந்தன்: தருசகன். கோயில் - அரண்மனை. குஞ்சரத்தானம் - யானைச் செண்டு வெளி. நின்றோன்: உருமண்ணுவா. குறியில் - சங்கேத ஒலியால் பயிர்ந்து - அழைத்து. மறையில் - மறைவிடத்தே.

(உருமண்ணுவா சாதகனை வினவல்)

ருo - ச : உள்ளம்...............கூறும்

(பொ - ரை.) அவ்வோலையைக் கண்ட அவ்வுருமண்ணுவா நெஞ்சத்தே பெரிதும் விரும்பி அதனை ஓதுதல் வாயிலாய் அதன்

கண் அமைந்த செய்திகளைக் குற்றமற உணர்ந்த பின்னரும் அச் சாதகனை நோக்கி, "நண்பனே ! நீ முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கோப்பெருந்தேவி நிலைமையினையும் எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து போன பின்னர் நீங்கள் செய்த செயல் வகைகளையெல்லாம் நின் வாயாலேயே கூறுக" என்று வேண்டாநிற்ப அச் சாதகன் கூறுவான் ; என்க.

(வி - ம்.) புகன்று - விரும்பி. மேலைபட்டவும் - முன்பு நிகழ்ந்தவற்றையும். தேவி : வாசவதத்தை. வாசனை - வாசித்தல். எம்வயிற் றீர்ந்தபின் - எம்மைவிட்டு நீங்கள் பிரிந்துபோன பின்னர். அவற்றையெல்லாம் ஓலையின்கண் வரையவில்லையாகலின் நின் வாயாற் கூறுக என்றவாறு. கூறும் - கூறுவான்.

(சாதகன் கூற்று)

ருரு - சுo : அற்பழல்...............வலீஇ

(பொ - ரை.) "பெருமானே ! நம் சூழ்ச்சியால் கோப்பெருந்தேவியாரை யாங்கள் அரண்மனையினின்றும் பிரித்துக் கொடுபோயபின்னர்க் காட்டினின்றும் அரண்மனைக்கு வந்த வெற்றிவேலையுடைய உதயணமன்னன் வாசவதத்தை இறந்தாள் என்று கருதிய பின்னரும் அவன் அன்புத்தீ மிகுதலாலே இறந்துபடாமல் ஒருவாறு உய்ந்திருந்தமையை அறிந்துகொண்ட பின்னர்ப் பெறற்கரிய அம்மன்னன் தோழியாகிய அவ்வாசவதத்தை ஆற்றி எம்மோடு வருதற்குரிய ஒரு முறைமையினாலே பெரிய குளிர்ந்த காட்டினூடே அப்பெருமாட்டியோடு சென்று அக்காட்டையுங் கடந்து அப்பாற் சென்று ஆங்குப் பற்றற்ற துறவோர் உறையா நின்ற பள்ளியுள் சின்னாள் இருந்தேமாக; துறவோர் பலரும் வந்துபோகும் அப்பள்ளியுள் யாங்கள் நெடிதிருப்பின் எங்கள் மறை வெளிப்பட்டு எமக்குப் பெரிதும் சோர்வுண்டாக்கும் என்னும் உண்மையை நன்கு நினைந்து" என்க.

(வி - ம்.) அற்பழல் - அன்பாகிய நெருப்பு. ஒற்கம் - தளர்ச்சி. ஈண்டுச் சாதன் மேனின்றது. உதயணன் நிலைமையை அறியுந்துணையும் யாங்கள் அங்கேயே கரந்துறைந்தேம் என்றுனுமாயிற்று. தோழி - உதயணன் தோழி என்றது வாசவதத்தையை. வாசவதத்தை ஆற்றும் வகையில் குளிர்ந்த கானத்தினூடே சென்று என்றவாறு. பற்று - யான் எனது என்னும் இருவகைப் பற்றும். அற்றம் - சோர்வு. அஃதாவது மறைவெளிப்படல். வலீஇ - வலிந்து ; நினைந்து.

(இதுவுமது)

சுக – எ : தண்...............தெரிந்து

(பொ - ரை.) அவ்விடத்தினின்றும் சென்று நல்ல நீரையும் தோட்டங்களையும் உடைய 'சண்பை' என்னும் பெரிய நகரத்

தின்கண் உள்ள 'மித்திரகாமன்' என்னும் வணிகனுடைய பெரு மனைக் கிழத்தியோடு நங்கோப்பெருந்தேவி வாசவதத்தையார் கேண்மை கொள்ளும்படி அம்மனையின்கண் இருத்திய பின்னர், ஆருணிமன்னன் காத்தலையுடைய கோசம்பி நகரத்தின்கண் மாறுவேடங் கொண்டு சென்று ஒழுகுபவனும் அம்மன்னனோடு மிகப் பெரிய நட்புரிமையுடையவனும் 'காளமயிடன்' என்னும் பெயரையுடையவனும் செயலின்கண் மனத் தளர்ச்சி இல்லாத வனும் ஆகிய ஓர் அந்தணன் அச்சண்பை நகரத்தில் இருந்தமை யால் யாங்கள் கரந்துறைகின்ற இச்செய்தி வெளிப்பட்டுவிடும் என்று நன்கு தெரிந்து கொண்டு; என்க.

(வி - ம்.) படப்பை - தோட்டம். சண்பைப் பெரும்பதி - சண்பை மாநகரம். மித்திரகாமனுடைய நல்ல பெரிய மனைக்கிழத்தி என்க. ஆப்புற யாப்புற, கேண்மையுற. இரீஇயபிற்றை - இருத்திய பின்னர். ஆருணிகாப்புறு நகர் என்றது, கோசம்பியை. காளமயிடன் என்னும் பெயரையுடைய ஆருணியின் ஒற்றனொருவன் அச்சண்பையில் இருந்த தனால் யாங்கள் மறைவெளிப்படும் என்று தெரிந்து கொண்டோம் என்றவாறு. ஆருணியோடு நண்பினையுடைய காளமயிடன் என்க. செய லின்கண் அழிவில்லாத அந்தணன் என்க. இது - கரந்துறையும் இச்செய்தி.

(இதுவுமது)

சுஅ - எஅ : செட்டி...............பொழுதில்

(பொ - ரை.) மித்திரகாமன் என்னும் அச்செட்டி மக னோடு சேர்ந்து சென்று பல்வேறு பண்டங்களும் விற்றற்குரிய பட்டினத்தை ஒருபாலுடைய புண்டர நகரத்துட் புகுந்து அவ் விடத்தே மாறுவேடத்தோடு யாமுறைதற்குப் பொருத்தமான குற்றமற்ற நண்பினையுடைய வருத்தமானன் என்னும் ஒரு குறு நிலமன்னன் மனையிடத்தே தேவியை மறைத்துவைத்த பின்னர் அந்த வருத்தமானனுடைய மனதிற்கொத்த தமையன் இரவிதத் தன் என்னும் வலிமைமிக்க அரசன் பெரும்படையைத் திரட்டிக் கொண்டு வந்து குறும்பு செய்து அவ்வருத்தமானனை அலைத் தலாலே யாங்கள் மறைந்திருந்த நகர முழுவதும் கலங்குதலாலே அவ்வருத்தமானனுடைய பகைவர் அணுகுதற்கரிய தொழிற் சிறப்பையுடைய மலையரணை அடைந்து இருந்த காலத்தில்; என்க.

(வி - ம்.) செட்டி மகன் : மித்திரகாமன். ஓட்டினம் - சேர்ந்து. பண்டம் - பொருள்கள். பட்டினம் - துறைமுகமுடைய பகுதி. புண் டரம் - ஒரு நகரம். புகீஇ - புகுந்து. புதைத்த உருவொடு - மாறு வேடத்தோடு. பொருத்தம் சான்ற மனை - வருத்தமானன் மனை எனத் தனித்தனி கூட்டுக. தம்முன் - தமையன். ஒத்த - பிறப்பொத்த எனினு மாம். அரம்பு - குறும்பு. மற்றவன் : வருத்தமானன்.

(இதுவுமது)

எஅ - அச : இப்பால்................உரைப்ப

(பொ - ரை.) "பெருமானே! இங்கு நம்மரசனுக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியையெல்லாம் முறையாகக் கேட்டுணர்ந்து இனிப் பொன்னணிகலன் அணிந்த நங்கோப் பெருந்தேவியாரை நங்கோமகனோடு கூட்டுதல் வேண்டும். அதன் பொருட்டு நின்னை இப்பொழுதே அழைத்து வருக என்று நின்னிடத்தே என்னை விட்டு அம்மலையரணிடத்தேயே அத்தேவி முதலியோர் இருக்கின்றனர்; ஆதலால் இவ்விடத்தே நீ செய்தற்குரிய செயல்களையெல்லாம் உருப்பெற ஆராய்வாயாக" என்று தூது சொல்லுகின்ற முறைமைப்படி அச்சாதகன் உருமண்ணுவாவுக்குக் கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) அரசற்கு : உதயணனுக்கு. நெறிமை - முறைமை. மாதரை : வாசவதத்தையை. இன்னே - இப்பொழுதே. பெயர்த்தந்து - விட்டு. அவர் : வாசவதத்தை முதலியோர். மெய்பெற - உருப்பெற.

(உருமண்ணுவாவின் செயல்)

அரு - கூ : ஆற்றல்...........போந்துழி

(பொ - ரை.) அது கேட்ட உருமண்ணுவா ஆற்றல் மிக்க தருசக மன்னனைக் கண்டு அச்சாதகன் கூறிய மொழிகளையெல்லாம் முறைப்படி எடுத்துக்கூறி அம் மன்னனிடத்துப் 'பாட்டக நகரத்துத் தலைவனும்' தவறில்லாத செய்தொழிலையுடையவனும் ஆகிய 'சத்தியூதி' என்பவனைத் தன்னோடுய்க்கும்படி வேண்டிப் பெற்றுக்கொண்டு அவ்விடத்தினின்றும் மீண்டும் போம் பொழுது ; என்க.

(வி - ம்.) அவன் மாற்றம் - சாதகன் கூறிய மொழிகளை. அவனுழை - தருசகன்பால், பாட்டகம் - ஒருநகரம். சத்தியூதி - அந்நகரத்துத்தலைவன். சத்தியூதியைத் தருசகன் பால் வேண்டி அழைத்துக் கொண்டு என்க.

(இதுவுமது)

கூ0 - சா : அப்பால்.............பின்

(பொ - ரை.) வருத்தமானனுடைய மலையரணின் நின்றும் அவ் வருத்தமானனுடைய முற்பட்ட புண்டர நகரத்தே அவனுடைய விருந்தாகி வாசவதத்தை முதலியோரோடு புகுந்து இருந்த பகைவர், மண்டிய போரினை வென்று கடந்த யூகி விரைந்து வருவானாக என்று சொல்லி விடுத்தமையால் தன் எதிரே வந்த தூதனாகிய அச்சாதகனொடு நெஞ்சதிரும்படி கூடி அச்சத்தியூதியை முன்னிட்டுச் சண்பைமா நகரத்தினூடே

சென்று ஆண்டு மித்திரகாமன் என்னும் செட்டிமகனைக் கண்டு அளவளாவி அவன் மனையிலே தனது வழி நடை வருத்தத்தைப் பரிகரித்துக் கொண்டு அவ்வருத்தம் தீர்ந்த பின்னர்; என்க.

(வி - ம்.) அப்பால் - அந்த் மலையரணினின்றும் என்க. முற்பால் புண்டர நகரம் - முன்னிருந்த பகுதியையுடைய புண்டர நகரம் என்க. வருத்தமானனுக்கு விருந்தாய்ப் புகுந்து என்க. அமர்க்கடந்தோன் என்றது யூகியை. எதிர்வருதூதன் - தூதனைக் காண்டலும் என் நிகழ்ந்தது என்று நெஞ்சு விதுப்புறுதலால் தூதனொடு அதிரக்கூடி என்றார். வழிநடை வருத்தந் தீர்ந்த பின்னர் என்க.

(இதுவுமது)

கூசு - கடு : வருத்த மானன்............புகுதந்து

(பொ - ரை.) வருத்தமானன் என்னும் அக்குறுநில மன்னனுடைய மலர்கள் மிகுந்த முல்லைநிலப் பகுதியின்கண்ணுள்ள புண்டர நகரத்தை யணுகி அங்குத் தேன் போன்ற மொழியினையுடைய கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையையும் ஆருயிர்த் தோழனாகிய யூகியையும் கண்டு அளவளாவி ஆற்றொணாத மகிழ்ச்சியோடு நன்மையால் தகுதி பெற்ற நாகர் நாட்டில் வாழும் நாகர்களைப் போன்று இன்பத்தாலுண்டாய மகிழ்ச்சியோடே அப்புண்டர நகரத்தினின்றும் புறப்பட்டு நன்றாக வந்து புகழையுடைய கோசம்பி நகரத்தின் புறத்தே எய்தி அயர்தலில்லாத மகிழ்ச்சியை யடைந்து கண்டோர் மனத்தைப் பிணித்துக் கொள்ளும் 'மது காம்பீர வனம்' என்னும் பெயரையுடைய பூம்பொழிலிலே புகுந்து; என்க.

(வி - ம்.) புறவு - முல்லைநிலம். தேமொழித்தேவி : வாசவதத்தை. தோழன் : யூகி. தலைப்பாடெய்தி - அளவளாவி. நாகம் - பவணலோகம். இது பலவகைப் போகங்களினும் சிறப்புற்றதென்பது சைனர் கொள்கை. இக்கொள்கையை,

"நாக நீணகரொடு நாகநா டதனொடு
போக நீள் புகழ் மன்னும் புகார் நகர் ("சிலப் க : உக-உ)

எனவரும் சிலப்பதிகாரத்தானும் உணர்க.

(இதுவுமது)

கடு - க0 : அவ்வழி............நகரேன்

(பொ - ரை.) அம் மதுகாம்பீரவனம் என்னும் அச்சோலையினூடேயும் புதுவதாக வந்த விருந்தினராகிய மன்னர்கள் தங்கி இருந்து இன்பம் நுகர்தற்பொருட்டு இயற்றப்பட்ட பிறர் யாரானும் செய்தற்கரிய பூங்காவின்கண் யூகி வாசவதத்தை முதலியோரை மறைத்துத் திறப்பட வைத்தபின்னர் அவ்வுரு

மண்ணுவா பெரிதும் மகிழ்ந்த நெஞ்சத்தோடே பொலிவுற்றுத் திகழும் அக்கோசம்பி நகரத்தின்கண் புகுந்தனன்; என்க.

(வி - ம்.) அவ்வழி - அம்மதுகாம்பீரவனத்தினுள். விருந்தின் மன்னர் - புதிய அரசர். பிறராற் செயற்கரும் கா என்க. அவர்களை - யூகிமுதலியவர்களை. திறப்பட - உறுதியுற. இரீஇய - இருத்திய. பொலிவுடை நகர் புகுந்தனன் என்க. நகர் - கோசம்பி.

ச. உருமண்ணுவா வந்தது முற்றிற்று.

ரு. கனாவிறுத்தது

இதன்கண் : *உதயண மன்னன் பதுமாபதியுடன் மகிழ்ந்திருத்தலும், அவள் தனக்கு யாழ் வித்தை கற்பிக்க வேண்டுதலும், அப்பதுமாபதி வாசவதத்தையைப் போல யானும் நின் மாணவியாயிருந்து யாழ் கற்பேன் என்றமையால் அவன் வாசவதத்தையை நினைந்து வருந்துதலும், அவள் அக்குறிப்பறிந்து தன்னிடம் செல்லுதலும், வயந்தகன் உதயணனிடம் வந்து கூறுதலும், உதயணன் வாசவதத்தையை நினைந்து நினைந்து வருந்தித் துயில் கோடலும், அவன் கனவு காண்டலும், எழுதலும், முனிவரைக் கண்டு வினாதலும், ஒரு முனிவன் கனாப்பயன் உரைத்தலும், அது கேட்ட உதயணன் செயலும் கூறப்படும்.*

போலிவுடை நகர்வயிற் புகலருங் கோயிலுள்
வலிகெழு நோன்றாள் வத்தவர் பெருமகன்
புதுமணக் காரிகை பூங்குழை மாதர்
பதுமா தேவியொடு பசைந்துகண் கூடி
அசையுஞ் சீரு மளந்துநொடி போக்கி
இசைகோள் பாடலி னிசைந்துட னெழுக
விசைகோள் வீணை விருந்துபடப் பண்ணி
வசைதீ ருதயணன் மகிழ்ந்துட னிருந்துழி
நேடியோ னன்ன நெடுந்தகை மற்றுநின்
கடியார் மார்பங் கலந்துண் டாடிய
வடிவேற் றடங்கண் வாசவ தத்தை
வழிபா டாற்றி வல்ல ளாகிய
அழிகவுள் வேழ மடக்கு நல்லியாழ்
யானும் வழிபட் டம்முறை பிழையேன்
காண லுறுவேன் காட்டி யருளென
முள்ளெயி றிலங்கச் சேவ்வாய் திறந்து
சில்லேன் கிளவி மெல்லென மிழற்றி
நகைநயக் குறிப்போடு தகைவிரல் கூப்ப
முற்றிழை பயிற்றிய முற்பெரு நல்லியாழ்
கற்பே னென்றசொற் கட்டழ லுறீஇ
வேலெறிந் தன்ன வெம்மைத் தாகிக்
காவல குமரற்குக் கதுமேன் விசைப்ப

மாசி ருமரை மலர்கண் டன்ன
ஆசில் சிறப்பி னமரடு தறுகண்
இளநல முண்ட விணையி ரேகை
வளமயிற் சாயல் வாசவ தத்தையை
நினைப்பி னெகிழ்ந்து நீர்கொள விறைஞ்சிச்
சினப்போ ரண்ணல் சேயிழை மாதர்க்கு
மனத்தது வெளிப்பட மறுமொழி கொடாஅன்
கலக்க மறிந்த கனங்குழை மாதர்
புலத்தல் யாவதும் பொருத்த மின்றெனை
எனக்கு மொக்கு மெம்பெரு மான்றன்
மனத்தகத் துள்ளோ ளின்னும் விள்ளாள்
விழுத்தவ முடையள் விளங்கிழை பெரிதென
ஒழுக்க மதுவா முயர்ந்தோர் மாட்டே
என்றுதன் மனத்தே நின்றுசில நினையா
அறியாள் போலப் பிறிதுநயந் தெழுந்துதன்
ஆயஞ் சூழ வரசனை வணங்கி
மாவீ ழோதிதன் கோயில் புக்கபின்
கவன்றன னிருந்த காவன் மன்னற்கு
வயந்தக குமரன் வந்து கூறும்
வாலிழைப் பணைத்தோள் வாசவ தத்தைக்கும்
பாசிழை யல்குற் பதுமா பதிக்கும்
சீர்நிறை கோல்போற் றுனடு வாகி
நின்றி பேரன் பின்றிவட் டாழ்த்து
நீங்கிற் றம்ம நீத்தோ ணினைந்தென
ஆங்கவ னுரைப்ப வதுவுங் கேளான்
முதிர்மலர்த் தாமமொடு முத்துப்புரி நாற்றிக்
கதிர்மணி விளக்கங் கான்றுதிசை யழல
விதியிற் புனைந்த வித்தகக் கைவினைப்
பதினைந் தமைந்த படையமை சேக்கையுட்
புதுநலத் தேவியொடு புணர்தல் செல்லான்
நறுந்த ணிருங்கவு ணளகிரி வணக்கியதன்
இறும்புபுரை யெருத்த மேறிய ஞான்று
கண்டது முதலாக் கான நீங்கிக்
கொண்டனன் போந்தது நடுவாப் பொங்கழல்

விளிந்தன ளென்ப திறுதி யாக
அழிந்த நெஞ்சமொ டலமர லெய்தி
மேனு ணிகழ்ந்ததை யானு தரற்றி
இகலிடை யிமையா வேரிமலர்த் தடங்கண்
புகழ்வரை மார்பன் பொருந்திய பொழுதிற்
கோள்ளென் குரலொடு கோட்பறை கொளீஇ
உள்ளெயிற் புரிசை யுள்வழி யுலாவும்
யாமங் காவல ரசைய வேமம்
வாய்ந்த வைகறை வையக வரைப்பின்
நாற்கட லும்பர் நாக வேதிகைப்
பாற்கடற் பரப்பிற் பனித்திரை நடுவண்
வாயுங் கண்ணுங் குளம்பும் பவளத்
தாயொளி பழித்த வழகிற் ருகி
விரிகதிர்த் திங்களொடு வெண்பளிங் குமிழும்
உருவொளி யுடைத்தா யுட்குவரத் தோன்றி
வயிரத் தன்ன வைந்நுனை மருப்பிற்
செயிர்படு நோக்கமொடு சிறப்பிற் கமைந்ததோர்
வெண்டா ரணிந்த வெள்ளேறு கிடந்த
வண்டார் தாதின் வெண்டா மரைப்பூ
அங்கண் வரைப்பி னமரிறை யருள்வகைப்
பொங்குநிதிக் கிழவன் போற்றவு மணப்ப
மங்கலங் கதிர்த்த வங்கலு ழாகத்துத்
தெய்வ மகடூஉ மெய்வயிற் பணித்துப்
பையு டீரக் கைவயிற் கொடுத்தலும்
பயில்பூம் பள்ளித் துயிலெடை மாக்கள்
இசைகோள் ளோசையி னின்றுயி லேற்று
விசைகொண் மான்றேர் வியல்கெழு வேந்தன்
கனவின் விழுப்ப மனவயி னடக்கி
அளப்பரும் படிவத் தறிவர் தானத்துச்
சிறப்பொடு சென்று சேதியம் வணங்கிக்
கடவது திரியாக் கடவுளர்க் கண்டு
நின்றிடை யிருள்யாம நீங்கிய வைகறை
இன்றியான் கண்ட தின்னது மற்றதை
என்கொ ளுனென நன்கவர் கேட்ப
உருத்தகு வேந்த னுரைத்ததன் பின்றைத்

திருத்தகு முனிவன் றிண்ணிதி னுடி
ஒலிகடற் றானை யுஞ்சையர் பெருமகன்
மலிபெருங் காதன் மடமொழிப் பாவை
இலங்குகதி ரிலைப்பூ ணேந்துமுலை யாகத்து
நலங்கிளர் நறுநுத னறிருங் கூந்தல்
மாசில் கற்பின் வாசவ தத்தை
முழங்கழன் மூழ்கி முடிந்தன ளென்பது
மெய்யெனக் கொண்டனை யாயின் மற்றது
பொய்யெனக் கருது புரவ லாள
இந்நா ளகத்தே சின்மொழிச் செவ்வாய்
நன்னுதன் மாதரை நண்ணப் பெறுகுவை
பெற்ற பின்றைப் பெய்வளைத் தோளியும்
கொற்றக் குடிமையுட் குணத்தொடும் விளங்கிய
விழுப்பெருஞ் சிறப்பின் விஞ்சைய ருலகின்
வழுக்கில் சக்கரம் வலவயி னுய்க்கும்
திருமகற் பெறுதலுந் திண்ணிது திரியா
காரணங் கேண்மதி தாரணி மார்ப
ஆயிர நிரைத்த வாலிதழ்த் தாமரைப்
பூவெனப் படுவது பொருந்திய புணர்ச்சிநின்
தேவி யாகுமதன் றுதக டிரிஞ்சி
முன்றூண் முடக்கிப் பின்று ணிமிர்த்துக்
கொட்டை மீமிசைக் குளிர்மதி விசும்பிடை
எட்டு மெய்யோ டிசைபெறக் கிடந்த
விள்ளா விழுப்புகழ் வெள்ளே றென்பதை
முகனமர் காதனின் மகனெனப் படுமது
பரந்த வெண்டிரைப் பாற்கட லாகி
விரும்பப் படுமது வெள்ளியம் பெருமலை
வெண்மை மூன்றுடன் கண்டதன் பயத்தாற்
றிண்மை யாழி திருத்தக வுருட்டலும்
வாய்மை யாக வலிக்கற் பாற்றென
நோன்மை மாதவ னுண்ணிதி னுரைப்ப
அன்று மின்று மறிவோ ருரைப்பதை
என்றுந் திரியா தொன்றே யாதலின்

உண்டுகோ லெதிர்தலென் றுள்ளே நினையாப்
பெருந்தண் கோயிலு ளிருந்த பொழுதில்
உருகெழு மந்திரி வரவதை யுணர்த்தலிற்
புகுதக வென்றுதன் புலம்பகன் றேழிய
இகல்வேல் வேந்த னிருத்த லாற்றான்
ஆனா வுவகையொடு தானெதிர் செல்லத்
தேனார் தாமரைச் சேவடி வீழ்தலிற்
றிருமுயங்கு தடக்கையிற் றிண்ணிதிற் பற்றி
உரிமைப் பள்ளி புக்கனன் மாதோ
பெருமதி யமைச்சனைப் பிரிந்துபெற் றனனென்.

உரை

ரு. கனவிறுத்தது

அஃதாவது-உதயணன் கனாக்கண்டு ஒரு முனிவனைப் பயன் வினாய தும், அம்முனிவன் அதன் பயனைக் கூறியதும் ஆகிய செய்திகளைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் நிலை)

க - அ : பொலிவுடை............இருந்துழி

(பொ-ரை.) *அழகுமிக்க கோசம்பி நகரிடத்தே பகைவர் புகுதல் அரிய தனது அரண்மனையின்கண் போர்வலிமை மிக்க வலிய முயற்சியையுடைய வத்தவநாட்டுமன்னனாகிய உதயண மன்னவன் புதுமணப் பேரழகியாகிய பொலிவுடைய பதுமாபதி என்னும் காதல் மிக்க கோப்பெருந்தேவியோடு அன்பால் பெரிதும் ஒன்றுபட்டு அசையும் சீரும் அளந்து கையை நொடித்துத் தாளமிடும் இசையும் அதனைக் கொள்ளும் பண்ணும் பாடலும் போல இயைந்து ஒழுகுங்கால் தன் வசையைத் தீர்த்துக் கொற்றங் கொண்ட அவ்வுதயணமன்னன் நல்லிசை கொண்ட தன் கோடவதி யாழினைப் புதுமையுண்டாக இசைத்து அப்பதுமாபதி நங்கையோடு மகிழ்ந்திருந்த காலத்தே; என்க.*

(வி - ம்.) *நகர் - கோசம்பி. கோயில் - அரண்மனை. வலிகெழு நோன்றாள் - மிக்க வலிமையுடைய முயற்சி. புதுமணக்காரிகை - புது மணப்பெண்ணாகிய அழகி. மாதர் - நங்கை என்பது பட நின்றது. பசைந்து - பற்றுற்று. இசையும் - அதனைக்கொண்ட பாடலும் போல இசைந்து என்க. இசை பதுமாபதிக் குவமை. பாடல் உதயணனுக் குவமை. விருந்து - புதுமை. ஆருணிமன்னனைக் கொன்று கொற்றங்*

கொண்டமை தோன்ற வசைதீருதயணன் என்றார். மகிழ்ந்து-பதுமாபதியுடன் இருந்துழி என்க.

(பதுமாபதியின் கூற்று.)

கூ - கஅ : நெடியோன்......................கூப்ப

(பொ - ரை.) பதுமாபதி தனது கூர்த்த பற்கள் விளங்கும்படி தனது சிவந்த வாயைத் திறந்து சில்வாகிய மொழிகளால் மெல்ல மிழற்றுவாளாய்த் "திருமால் போன்ற பெரும் புகழையுடையோய்! நின்னுடைய மணங்கமழா நின்ற மார்பிலே சேர்ந்து இன்பங் கூட்டுண்டு நின்னோடு விளையாடிய வடித்த வேல் போன்ற பெரிய கண்களையுடைய வாசவதத்தை நல்லாள் நினக்கு வழிபாடு செய்து நின்பால் கற்றுத் துறைபோகியதும், மதமொழுகா நின்ற யானைகளையும் தன் இன்னிசையால் அடக்கும் சிறப்புடையதுமாகிய நன்மைமிக்க நல்ல கோடவதி என்னும் யாழினை யானும் நின்னை வழிபட்டு அந்த முறைமையிலே பிழையேனாய்ப் பயிலுவேன். அவ்வித்தையினை எனக்கும் கற்பித்தருளுக!" என்று நகை இன்பம் தோன்றும் குறிப்போடே கூறி அழகிய தன் கைகளைக் கூப்பி வேண்டா நிற்ப; என்க.

(வி - ம்.) நெடியோன் - திருமால். நெடுந்தகை : விளி. கடி - விளக்கமுமாம். நினக்கு வழிபாடாற்றிக் கற்று வல்லளாகிய யாழ், வேழமடக்கும் யாழ், நல்லியாழ் எனத் தனித்தனி கூட்டுக. அம்முறை - அவ்வாசவதத்தை பயின்ற முறைமை. காணலுறுவேன் - பயின்றறிவேன். காட்டியருள் - கற்பித்தருள். முள்ளெயிறு - முள்போன்று கூர்த்த பல். சில்லென் கிளவி - சிலமொழி. தகைவிரல் - அழகிய விரலையுடைய கை.

(வாசவதத்தையை நினைந்து உதயணன் கலங்கல்.)

கக - உக : முற்றிழை......................கோடாஅன்

(பொ - ரை.) அப் பதுமாபதி நிரம்பிய அணிகலனணிந்த வாசவதத்தை நல்லாள் நின்பாற் பயின்ற பேரியாழாகிய நல்ல கோடவதியினை யானும் நின்பால் பயில்வேன் என்று கூறிய சொல், மிக்க தீயிலிட்டு வெந்த வேலால் மார்பிலே எறிந்தாற்போன்ற வெம்மையையுடையதாகி இறைமகனாகிய அவ் வுதயணன் செவியில் ஞெரேலென்று புகாநிற்றலால் குற்றமற்ற செந்தாமரை மலரையொத்த நல்ல அளிச் சிறப்போடு பகைவரைப் போரின்கண் கொல்லும் மறப்பண்புமிக்க அம்மன்னவன் கண்களிலே தான் இளநலங் கூட்டுண்ட ஒப்பற்ற தோகையையுடைய வளவிய மயில் போன்ற சாயலையுடைய அவ்வாசவதத்தையை நினைத்தலாலே மனம் நெகிழ்ந்து நீர் நிறையா நிற்பத் தலை கவிழ்ந்து வெகுளிமிக்க போராற்றலுடைய அவ்வண்ணல் சிவந்த

அணிகலனணிந்த அப்பதுமாபதி நங்கைக்கு தன் மனத்தின் கண்ணுள்ள கருத்து வெளிப்படும்படி யாதும் மறுமொழி கொடான் ஆக; என்க.

(வி – ம்.) முற்றிழை - தொழிற்றிறம் முற்றிய இழையுமாம்; அன்மொழி: வாசவதத்தை. முற்பெறு நல்லி யாழ் என்றது, நால்வகை யாழினுள் வைத்து முதலாவதாகிய பேரியாழ் என்றவாறு. வாசவதத்தை பயின்ற யாழ் என்று பதுமாபதி கூறியதனுல் வாசவதத்தையின் நினைவு உதயணன் நெஞ்சத்தே தோன்றியது என்பது கருத்து. சொல் வெம்மைத்தாகி இசைப்ப என்க. இளநலம் - இளமைக்குரிய காம இன்பம். நினைப்பின்-நினைத்தலாலே. தறுகண் நீர் கொள என்க. இறைஞ்சி - தலைகுனிந்து.

(உதயணனுடைய குறிப்பறிந்து பதுமாபதி தன்னிடம் செல்லுதல்.)

௩௦ - ௩௪ : கலக்கம்......................பெரிதென

(பொ - ரை.) அவ்வுதயணனுடைய மனக் கலக்கத்தைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட கனவிய குழையினையுடைய அப் பதுமாபதி இச்செவ்வியில் எம்பெருமானொடு யான் ஊடுதல் ஒரு சிறிதும் பொருத்தமிலதாம் என்றும் இவ்வருத்தம் யானும் வருந்துதற்குரிய ஒன்றேயாகலின் எனக்கும் ஒக்கும். என்னே! விளங்கிய அணிகலன்களையுடைய வாசவதத்தை நல்லாள் இன்னும் எம்பெருமானுடைய நெஞ்சினுள்ளே சிறிதும் அகலாளாய் வீற்றிரா நின்றாள்! இங்ஙனம் இவன் நெஞ்சிலிடம் பெறுதற்கு அந்நங்கை பெரிதும் சிறந்த தவமுடையள் ஆதல் ஒருதலை என்றும்; என்க.

(வி - ம்.) கலக்கம் - உதயணனுடைய மனக்கலக்கம். மாதர்: பதுமாபதி. யாவதும் - ஒரு சிறிதும். அவ்வருத்தம் எனக்கும் உரிய வருத்தமே என்றவாறு. இன்னும் என்றது, இத்தனை காலம் சென்றும் என்னை மணந்த பின்னரும் என இருபொருளும் தோற்றுவித்தது. விள்ளாள் - நீங்காள். விழுத்தவம் - சிறந்த தவம். விளங்கிழை: வாசவதத்தை.

(இதுவுமது)

௩௫ - ௩௯ : ஒழுக்கம்......................புக்கபின்

(பொ - ரை.) உயர்ந்தோர்கண் தோன்றும் சிறந்த ஒழுக்கமே அஃதாம் என்றும், தன் மனத்தில் சில நினைவுகளை அவ்விடத்தே சிறிது பொழுது நின்று நினைத்துப் பின் அவ்வுதயணனுடைய நிலைமையைத் தான் அறிந்து கொள்ளாதாள்போன்றும் தான் வேறொன்றனை விரும்பி அவ்விடத்தினின்றும் போவாள் போன்றுங்காட்டி, அம்மன்னனை மீண்டும் வணங்கித் தன் தோழி

மார் தன்னைச் சூழ்ந்து வரும்படி வண்டுகள் மொய்க்கும் கூந்தலை யுடைய அப் பதுமாபதி தன் மண்டபத்திற்குச் சென்று புகுந்த பின்னர்; என்க.

(வி . ம்.) (௩௧) பொருத்த மின்றெனவும் (௩௪) தவமுடையள் எனவும் ஒழுக்கம் அதுவாம் எனவும் சிலவினைத்து என்க. உதயணனின் மனக்கலக்கத்தை அறியாள் போல என்க. தான் அவ்விடத்துநின்றும் போதற்கு ஓர் ஏதுக் காட்டுவாள் பிறிது நயந்து எழுவாள்போலப் போனுன் என்க. ஆயம் - தோழியர் கூட்டம். மா வண்டு ஓதி: பதுமாபதி.

(வயந்தகன் உதயணனிடம் கூறுதல்.)

௪௦ - ௪௭ : கவன்றனன்......................கேளான்

(பொ - ரை.) இவ்வாறு பெரிதும் வருந்தி இருந்த உதயணன் பால் வயந்தக குமரன் வந்து கூறுவான், "அரசே! நீ தூய அணிகலனணிந்த மூங்கில்போன்ற தோள்களையுடைய வாசவதத்தைக்கும் பசிய அணிகலனணிந்த அல்குலினையுடைய பதுமாபதிக்கும் பொருள்களைச் சீர்தூக்கி நிறுக்கும் துலையினைப் போன்று நடுநிலைமையுடையையாய் இருக்கின்றனை; அத்தகைய நீ இப்பொழுது நின்னைப் பிரிந்த வாசவதத்தையையே நினைந்து இப்பதுமாபதியின்பால் பேரன்பின்றி இகழ்ந்தமையால் அந்நடு நிலைமை நின்னைவிட்டு நீங்கிற்று" என்று அவ்வயந்தக குமரன் கூறு நிற்பவும் அக்கூற்றையுங் கேளானாய்; என்க.

(வி - ம்.) மன்னற்கு : உதயணனுக்கு. சீர் - கனம். நிறைகோல்- துலைநா. நின்றி - நின்றாய். இவட்டாழ்த்து - இப்பதுமாபதியை இகழ்ந்து. தாழ்த்து - தாழ்த்தமையால் என்க. அந்நடு இப்பொழுது நீங்கிற்று என்றான் என்க. அதுவும் - அக்கூற்றையும்.

(உதயணன் வாசவதத்தையை நினைந்து வருந்தித் துயிலல்)

௪அ - ருஉ : முதிர்.....................செல்லான்

(பொ - ரை.) வளைந்த மலர்மாலையோடே முத்துவடங் களையும் தூங்கவிட்டு ஒளிமிக்க மணிவிளக்கங்கள் ஒளிகான்று நாற்றிசையினும் விளங்கா நிற்ப, நூல்முறைமையினாலே இயற்றப்பட்ட வித்தகமிக்க தொழிற் சிறப்பையுடைய பதினைந்தாகப் படுத்த படைகள் அமைந்த படுக்கையின்கண் புதிய இன்பத்தை யுடைய தேவியாகிய அப்பதுமாபதியோடு இன்றுயில் கோடலும் செய்யானாய்; என்க.

(வி - ம்.) முதிர் மலர்த்தாமம் - வளைந்த மலர்மாலை. முதிர்தல்- வளைதல். முத்துப்புரி - முத்துவடம். ஒளிகான்று - அழல என்க. விதி - நூல்விதி. வித்தகம் - சதுரப்பாடு. பதினைந்தமைந்த படை

யமை சேர்க்கை - பதினைந்து அடுக்கினையுடைய படுக்கை. அஃதாவது சிறு பூளை, செம்பஞ்சு, வெண்பஞ்சு, சேணம், உறுதூவி, சேக்கை ஓர் ஐந்து என்னும் இவ்வைந்தினையும் அடுக்கிய ஒன்று மும்மூன்ருகப் படுத்த பதினைந்து படையையுடைய படுக்கை என்க. ஐந்து மூன் றடுத்த அமளி எனக் கலியினும் (௧0 : ௧0), ஐந்து மூன் றடுத்த செல்வத் தமளி எனச் சிந்தாமணியினும் (அ௩அ) வருதல் காண்க. புதுநலத் தேவி : பதுமாபதி. புணர்தல் செல்லான் : ஒருசொல்.

(இதுவுமது)

௫௩ - ௫௬ : நறுந்தண்....................அரற்றி

(பொ - ரை.) நறிய குளிர்ந்த பெரிய கவுளையுடைய நளகிரி என்னும் களிற்றியானையைத் தனது யாழினாலே வணக்கி அதன் மலையையொத்த பிடரிலே ஏறிச் சென்றபொழுது அவ் வாசவதத் தையைத் தான் முதன்முதலாகக் கண்ட காட்சி முதலாகவும், அவளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டினைக் கடந்து தன் நாட்டிற்கு வந்தது நடுவாகவும் மிக்க நெருப்பின்கண் அவ்வாசவதத்தை இறந்துபட்டாள் என்பது இறுதியாகவும் முன்னாளிலே நிகழ்ந்த வற்றையெல்லாம் எடுத்தெடுத்துச் சொல்லி அழுது அழிந்த நெஞ்சத்தோடே சுழன்று; என்க.

(வி - ம்.) நளகிரி - பிரச்சோதனன் பட்டத்து யானை. இறும்பு - மலை. ஞான்று - பொழுது. வாசவதத்தையைக் கண்டது முதலாக என்க. விளிந்தனள் - இறந்துபட்டாள். அலமரல் - மனச்சுழற்சி. மேனாள் - முன்னாள். ஆனாது - அமையாது. அரற்றி - புலம்பி.

(இதுவுமது)

௬0 - ௬௫ : இகலிடை....................வைகறை

(பொ - ரை.) போர்க்களத்தின்கண் பகைவர் வேல்கொண் டெறியுமிடத்தும் இமைத்தலில்லாத தாமரைமலர் போன்ற தன் பெரிய கண்களைச் சான்றோர் புகழ்கின்ற இரேகைகளையுடைய மார்பினையுடைய அவ்வுதயண மன்னன் சிறிது மூடி அரிதின் துயின்ற பொழுதில் யாமம் காவலர் "கொள் கொள்" என்னும் ஓசையோடு முழங்கும் ஆகோட்பறையினை முழக்கிக்கொண்டு அகமதிலின் உள்ளிடத்தே துயில் மயக்கத்தால் தளர்ந்து நடவா நிற்கும் பாதுகாவலமைந்த வைகறை யாமத்தே, என்க.

(வி - ம்.) கொள்ளென் குரல் - கொள் கொள் என்று ஒலிக்கும் ஓசை. கோட்பறை - காவல் கொள்ளும் பறையுமாம். யாமம் காவலர் இரவு முழுதும் விழித்தமையின் வைகறையில் துயில் மயக்கத்தால் தளர்ந்து நடத்தலின் யாமம் காவலர் அசைய என்றார். ஏமம் - இன்பமு மாம். வைகறையில் துயில் இனிதாகலின் ஏமம் வாய்ந்த வைகறை என்றார் எனினுமாம்.

(உதயணன் கனவு காண்டல்)

சுறு - அ௦ : வையகம்..................கொடுத்தலும்

(பொ - ரை.) அவ்வுதயணமன்னன் ஒரு கனுக்கண்டானுக, அது வருமாறு: இவ்வுலகத்தின்கண் நான்கு கடல்களுக்கப்பால் உள்ள ஆதிசேடன் என்னும் பாம்பாகிய மேடையினையுடைய திருப்பாற்கடல் பரப்பிலே, குளிர்ந்த அலைகளின் நடுவே வாயா னும் கண்களானும் குளம்புகளானும் பவளத்தினது அழகிய ஒளியினும் சிறந்த செவ்வொளி படைத்ததாகித் தன் திருமேனி விரிந்த கதிரையுடைய திங்களையும் வெள்ளிய பளிங்கையும் போன்று வெள்ளொளியை வீசாநிற்பக் காண்போர்க்கு அச்சம் வருமாறு முளைத்து வச்சிரப்படை போன்ற கூர்த்த நுனிகளை யுடைய கொம்புகளையும் சினமிக்க நோக்கத்தையும் தனது சிறப் பினுக்குப் பொருந்திய ஒரு வெண்மலர் மாலையினையும் அணிந்த வெள்ளிய ஆனேறு படுத்துக்கிடந்த வண்டுகள் மொய்க்கின்ற பூந் தாதுகளையுடைய வெண்டாமரைப் பூ ஒன்றனை அழகிய இட மமைந்த வானுலகத்தின்கண் வாழும் தேவர் கோமானுகிய சௌதருமேந்திரன் அருளிச் செய்தமையால் மிக்க நிதிக்கிழவ னுகிய குபேரன் பாராட்டா நிற்பவும் எங்கும் மணம் கமழா நிற்பவும் மங்கலம் தோன்றி அழகொழுகுகின்ற தெய்வப் பெண் ணொருத்தி அம்மலரின் வரலாற்றைத் தன்பாற் கூறித்தன் துன்ப மெல்லாந் தீரும்படி தன் கையிலே கொடாநிற்ப; என்க.

(வி - ம்.) நான்கு கடல்களுக்கும் அப்பாலுள்ளது பாற்கடல் என்பது சைனர் கொள்கை. நாக வேதிகை - ஆதிசேடனுகிய மேடை. வாயாலும் கண்ணாலும் குளம்பாலும் பவழத்து ஒளியைப் பழித்த அழகு என்க. திங்களையும் பளிங்கையும் ஒத்த உருவொளி என்க. வைரம் - வச்சிராயுதம். உட்குவரத் தோன்றி என்றது, மருப்பிற்கு அடை. வை - கூர்மை. மருப்பு - கொம்பு. செயிர் - சினம். வெண் டார் - வெண்ணிற மலர் மாலை; வெள்ளிய கோடுமாம். வெள்ளேறு - வெள்ளைக் காளை. தாமரைப் பூவினைக் கொடுத்தலும் என்க. அமர் இறை - அமரர் இறை; என்றது சௌதருமேந்திரனை. நிதிக்கிழவன் - குபேரன். அங்கலுழ் ஆகம் - அழகொழுகும் உடம்பு. தெய்வமகடூஉ - தெய்வப் பெண். மெய்வயிற் பணித்து - வரலாற்றுண்மையைக் கூறி. பையுள் - துன்பம்.

(உதயணன் துயிலெழுதல்)

அக - அச : பயில்..................அடக்கி

(பொ - ரை.) மலர் மிகுந்த பள்ளியின்கண் துயிலா நின்ற அரசனைத் துயிலினின்றும் எழுப்புகின்ற பணியாளர்களாகிய துயிலெடை மாக்கள் இசைக்கின்ற இன்னிசையையுடைய பண் ணெலியினுலே அக் கனு நிலையினின்றும் துயிலுணர்ந்து எழுந்த

விரைவுமிக்க குதிரைபூண்ட தேரினையுடைய பெருமை பொருந்திய அவ்வுதயண வேந்தன் தான் கண்ட கனவின் சிறப்பினைத் தன் நெஞ்சத்துள் அடக்கி வைத்துக்கொண்டு; என்க.

(வி - ம்.) பயில் பள்ளி : வினைத்தொகையாகக்கொண்டு பயிலும் பள்ளி எனினுமாம். துயிலெடை மாக்கள் - மன்னரைத் துயிலெழுப்பும் பணியாளர். இவரைச் சூதர் என்றும் கூறுப. "சூத ரேத்திய துயிலெடை நிலை" என்பது தொல்காப்பியம் (புறத்திணை. சூ. ௩௬.) வியல் - பெருமை. விழுப்பம் - சிறப்பு,

(முனிவரைக் கண்டு உதயணன் வினுதல்)

அரு - கூக : அளப்பரும்..................பின்றை

(பொ - ரை.) அழகுமிக்க அவ்வேந்தர் பெருமான் அளத்தற்கரிய தவ ஒழுக்கத்தை மேற்கொண்டுள்ள துறவோர் பள்ளியின்கண் அவர்க்குரிய கையுறையோடு சென்று ஆங்குள்ள அருகன் கோயிலை வழிபட்டுத் தாம் செய்யக்கடவதாகிய அறத்திற் பிறழ்தலில்லாத முனிவர்களைக் கண்டு வணங்கி நின்று "அடிகளே! சென்ற இரவின்கண் இருள்மிக்க இடையாமம் கழிந்த வைகறை யாமத்தே யான் கண்ட கனு இஃதாகும். அக்கனவின் பயன்றான் என்கொலோ?" என்று அம் முனிவர் நன்கு கேட்கும்படி தான் கண்ட கனவினை அவர்க்குக் கூறியபின்னர்; என்க.

(வி - ம்.) படிவம் - தவ ஒழுக்கம். அறிவர்தானம் - துறவோர் பள்ளி. சிறப்பு - கையுறைப் பொருள். சேதியம் - (ஈண்டு அருகன் கோயில்). கடவது - செய்யக் கடவதாகிய அறம். இன்று என்றது, நெருநல் இரவினை. உரு - அழகு; வடிவமுமாம்.

(ஒரு முனிவன் கனுப்பயன் உரைத்தல்)

கூஉ - ௧00 : திருத்தகு..................புரவலாள

(பொ - ரை.) அத்துறவோருள் வைத்து மேம்பாடுமிக்க ஒரு துறவி அக்கனவினை ஆராய்ந்து உதயணனை நோக்கி, "வேந்தே! முழங்காநின்ற கடலையொத்த பெரிய படையினையுடைய உஞ்சை வேந்தனாகிய பிரச்சோதன மன்னனுடைய மிக்க பேரன்பினையுடைய மடப்பமுடைய மொழிகளையுடைய மகளாகிய விளங்காநின்ற ஒளியுடைய இலை வடிவமாகச் செய்யப்பட்ட அணிகலன்களை யணிந்த ஏந்திய முலைகளையுடைய மார்பினையும் அழகுமிக்க நுதலையும் மணங்கமழும் கரிய கூந்தலையும் குற்றமற்ற கற்பினையும் உடைய வாசவதத்தை என்னும் நின்தேவி ஆரவாரிக்கின்ற தீயிலே முழுகி இறந்துபட்டாள் என்னும் அச் செய்தியை உண்மையே என்று நீ இதுகாறும் கருதினை; ஆயினும் அச் செய்தி பொய்யேயாகும் என்று இப்பொழுது எண்ணுவாயாக!" என்க.

(வி - ம்.) திருத்தகு முனிவன் - மேன்மை தக்கிருக்கின்ற துற வோன். முடிந்தனள் - இறந்துபட்டாள். மற்றது - அச்செய்தி. கருது - கருதுக. புரவலாள : விளி.

(இதுவுமது)

க0க - க0எ : இந்நாள்...................திரியா

(பொ – ரை.) "மன்ன! நீ இன்றைக்கே சிலவாகிய மொழி பேசுதலையும் சிவந்த வாயையும் நல்ல நெற்றியையும் உடைய அவ் வாசவதத்தையை அடைகுவை ! அவளை அடைந்த பின்னர் வளையலணிந்த தோள்களையுடைய அத்தேவிதானும், வெற்றி யுடைய உயர்குடியின்கண் தோன்றியதனாலுண்டாகும் நற்பண்பு களோடும் விளங்கிய மிகப்பெருஞ் சிறப்பினையுடைய விச்சாதரர் உலகத்தின்கண்ணும் குற்றமற்ற தனது ஆணைச் சக்கரத்தைத் தனது ஆற்றலாலே செலுத்தும் திருமகன் ஒருவனைப் பெறுத லும் உறுதி; இவ்விரண்டும் பிறழமாட்டா"; என்க.

(வி - ம்.) இந்நாளகத்தே - இன்றே. மாதரை : வாசவதத் தையை. தோளி : வாசவதத்தை. வழுக்கு - குற்றம். சக்கரம் - ஆணை. திண்ணிது : ஒருமை பன்மை மயக்கம்: மாதரைப் பெறுதலும் அவள் மகப் பெறுதலும் ஆகிய இரண்டும் திரியா என்க.

(இதுவுமது)

க0அ - ககசு : காரணம்..................எனப்படும்

(பொ-ரை.) அவ்வாறு யான் கூறுதற்கியன்ற காரணந்தான் யாதெனின் கூறுவேன் கேள். மலர்மாலையணிந்த மார்பனே ! நின் கனவின்கண் நிரல்பட்ட ஆயிரம் வெள்ளிய இதழ்களை யுடைய வெண்டாமரைப்பூ என்று நின்னால் கூறப்படுமது நின் னோடு உளம்பொருந்திய நின் கோப்பெருந்தேவியாகிய வாசவதத் தையைக் குறிக்கும். இனி அத் தாமரைப்பூவின் துகள் தன் வயிற்றிலே படும்படி முன்கால்களை முடக்கிக்கொண்டு அந்தத் தாமரைப் பொகுட்டின்மேலே குளிர்ந்த திங்களையுடைய வானத் தினைத் தீண்டாநின்ற உடம்போடு புகழ்பெறக் கிடந்த நீங்காத சிறந்த புகழையுடைய வெள்ளைக்காளை என்று உன்னால் கூறப் படுமது நீ நின்முகத்தால் விரும்பி இனிது நோக்குதற்குக் காரணமான அன்புடைய நின் மகனைக் குறிக்கும்; என்க.

(வி - ம்.) வாலிதழ் - வெள்ளை இதழ். தாமரை தேவியாகும்; காளை நின்மகனாகும் என்க. தாது - பூந்துகள். உரிஞ்சி – உரிஞ்ச. கொட்டை - பொகுட்டு. விசும்பிடை எட்டும் மெய் - வானைத் தீண்டும் உடல். இசை – புகழ். வெள்ளேறு - வெள்ளை விடை. என்பதை : ஐகாரம் சாரியை.

(இதுவுமது)

கககூ - கஉஉ : அறு.................உரைப்ப

(பொ - ரை.) அக்கனவின்கண் பரவிய வெள்ளிய அலைகளை யுடைய திருப்பாற் கடலாகி நின்றால் பெரிதும் விரும்பப்படும் அக்குறிப்பும் வெள்ளிப்பெருமலைபோன்ற அவ்வெள்ளேறும் வெண்டாமரைப் பூவும் ஆகிய மூன்று வெண்மைகளையும் நீ ஒரு சேரக் கண்டதன் பயனாக அத்திருமகன் திண்ணிய ஆணைச் சக்க ரத்தைத் திருப்பெருகும்படி உருட்டுதலும் வாய்மையே என்று கருதும் தன்மையுடைத்து; என்று பொறுமைமிக்க அத்துறவி அக்கனவின் பயனை நுணுக்கமாக விரித்துக் கூறுதலாலே; என்க.

(வி - ம்.) பாற்கடலும் வெள்ளிப் பெருமலைபோன்ற விடையும் வெண்டாமரையும் என மூன்று வெண்மைகளை ஒருசேரக் கண்டதன் பயன் என்க. வலிக்கற்பாற்று - துணியும் பகுதியையுடையது. நோன்மை - பொறுமை; வலிமையுமாம்.

(உதயணன் செயல்)

கஉங - கஉகூ : அன்றும்.................ஆற்றுன்

(பொ - ரை.) அது கேட்ட உதயணன் பண்டை நாள் தொடங்கி இற்றைநாள் வரையில் அறிவுடையோர் கூறும் மொழி வாய்மையேயாதலன்றி ஒருநாளும் பிறழ்தல் இல்லை; ஆதலாலே யாம் நம் ஆருயிர்க் காதலியாகிய வாசவதத்தையை மீண்டும் காணுதல் உண்டாகுமோ என்று தன் நெஞ்சினுள்ளே நினைத்து அப்பெருமகன் பெரிய குளிர்ந்த தன் அரண்மனைக்குட் சென்று இருந்தபொழுது சிறந்த தோற்றமுடைய தன் அமைச்சனாகிய உருமண்ணுவாவின் வருகையை வாயிலோர் சென்று உணர்த்து தலாலே அங்ஙனமாயின் அவ்வமைச்சனை இங்கு அழைத்து வருக என்று வாயிலோர்க்குக் கூறி அச்செய்தி காரணமாக அவ் வுதயணன் தன் வருத்தம் தீர்ந்தொழிய அவன் வருந்துணையும் வாளாவிருக்க இயலாதவனாய்; என்க.

(வி - ம்.) அன்றும் இன்றும் என்றது, பழங்காலத்தும் இப் பொழுதும் என்றவாறு. அறிவோர் உரைப்பது என்றும் திரியாதென் பதனை. "அம்மூன்று மூற்ற வரிதலால் தம்மின் உறழா மயங்கி உறழினும் என்றும் பிறழா பெரியார் வாய்ச்சொல்" (பு. வெ. கசுஎ குறிப்புரை) ஒன்றேயாதலின் - உண்மையேயாதலின். வாசவதத் தையை எதிர்தல் உண்டுகொல் என்று நினையா என்க. உரு-தோற்றம். வாயிலோர் உணர்த்தலின் என்க. இகல்வேல் வேந்தன் - போர் வேலினை உடைய உதயணமன்னன். அவன் வருந்துணையும் இருத்த லாற்றுன் என்க.

(இதுவுமது)

௧௩௦ - ௧௩௪ : ஆறு..............பெற்றுனென்

(பொ - ரை.) அமையாத மகிழ்ச்சியோடே தானே எழுந்து அவ்வமைச்சன் எதிரே செல்லுதலாலே, அரசன் வருகை கண்ட அவ்வமைச்சன் தானும் தேன்பொருந்திய செந்தாமரை மலர் போன்ற சிவந்த அவன் திருவடிகளிலே வீழ்ந்து வணங்குதலாலே பேரறிவுடைய அவ்வமைச்சனைப் பிரிந்து பின் கூடிய பெரு மகிழ்ச்சியோடே அவ்வுதயண மன்னன் திருமகளைத் தழுவும் தன் பெரிய கைகளாலே அவ்வமைச்சனைத் தழுவி எடுத்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டு உவளக மருங்கில் தனது பள்ளியம்பலத்தின்கண் அவனோடு சென்று புகுந்தான்; என்க.

(வி - ம்.) ஆறு - அமையாத. திரு - திருமகள். உரிமைப் பள்ளி - உவளக மருங்கிற் பள்ளியம்பலம்; பெருமதியமைச்சன் : உருமண்ணுவா. "பிரிந்தவர் கூடினல் பேசல் வேண்டுமோ" என்பது கம்பர் வாக்கு.

௫. கனவிறுத்தது முற்றிற்று.

சா. பதுமாபதியை வஞ்சித்தது

இதன்கண் : *உதயணன் உருமண்ணுவாவை வினவுதலும், அவன் உதயணனுக்கு உற்றதுரைத்தலும், உருமண்ணுவா வயந்தகனிடம் கூறலும், உதயணன் செயலும், வயந்தகன் உதயணனை வினவுதலும், உதயணன் விடை கூறுதலும், வயந்தகனும் உதயணனும் சொல்லாடுதலும், உதயணன் பதுமாபதியை வஞ்சித்து அகற்றுதலும் கூறப்படும்.*

பிரிந்துபின் வந்த பெருந்திற லமைச்சனோ
டருந்திறல் வேந்த னமைவரக் கூடி
இருந்த பின்றை நிகழ்ந்தது கூறெனச்
செருச்செய் மன்னன் சிறையிடைச் செய்தலும்
தருசகன் றன்வயின் விடுத்த தன்மையும்
பொருவகை புரிந்தவர் புணர்ந்த நீதியும்
தெரிய வெல்லாம் விரியக் கூறி
அந்நிலை கழிந்த பின்னிலைப் பொழுதின்
இன்புறு சேவ்வியு ளின்னது கூறென
வன்புறை யாகிய வயந்தகற் குணர்த்த
உருமண் ணுவாவினோ டொருங்குகண் கூடித்
தருமணன் ஞெமரிய தண்பூம் பந்தருட்
டிருமலி மார்பன் றேவி பயிற்றிய
வீணை பெற்றது விரித்தவற் குரைத்துத்
தேனேர் கிளவியைத் தேடி யரற்ற
மானங் குன்று வயந்தகன் கூறும்
நயந்துநீ யரற்று நன்னுத லரிவையும்
பயந்த கற்பிற் பதுமா பதியுமென்
றிருவ ருள்ளுந் தெரியுங் காலை
யாவர் நல்லவ ரறிவினு மொழுக்கினும்
யாவரை யுவத்தி யாவதை யுணரக்
காவ லாளா கரவா துரையென
முறுவல் கொண்டவ னறியு மாயினும்
பல்பூட் சில்சொற் பட்டத் தேவியைச்
சொல்லாட் டிடையுஞ் செல்ல நீர்தலிற்
பீடுடை யொழுக்கிற் பிரச்சோ தனன்மகள்

வாடிடை மழைக்கண் வாசவ தத்தை
கண்ணகன் ஞாலத்துப் பெண்ணருங் கலமவள்
சேறுந ருவப்பச் செந்தீ யகவயின்
உறுதவ மில்லேற் கொளித்தன டானென
மறுகுஞ் சிந்தை மன்னனை நோக்கி
மேங்கண் வேந்தர் தங்கட் குற்ற
தங்கண் ஞாலத் தாரே யாயினும்
அகலிடத் துரைப்பி னற்றம் பயத்தலின்
அவரின் வாழ்வோ ரவர்முன் னின்றவர்
இயல்பி னீர்மை யிற்றென வுரைப்பின்
விம்ம முறுதல் வினுவது முடைத்தோ
அற்றே யாயினு மிற்றுங் கூறுவேன்
நயக்குங் காத னல்வளைத் தோளியைப்
பெயர்க்கும் விச்சையிற் பெரியோற் கண்டவன்
உவக்கு முபாய மொருங்குடன் விடாது
வழிபா டாற்றி வல்லிதிற் பெறீஇய
கழிபெருங் காதலொடு சென்றபி னவ்வழிக்
காசி யரசன் பாவையைக் கண்டே
வாசவ தத்தையை மறந்தனை யாகிப்
பரவை யல்குற் பதுமா பதியோ
டிரவும் பகலு மறியா வின்புற்
றுட்குவரு கோயிலு ளொடுங்குவனை யுறைந்தது
மற்போர் மார்ப மாண்புமற் றுடைத்தோ
அன்னது மாக வதுவே யாயினும்
திண்ணிதி னதனையுந் திறப்படப் பற்றாய்
பின்னிது நினைக்கும் பெற்றியை யாதலின்
ஒருபாற் பட்ட தன்றுநின் மனனெனத்
திருவார் மார்பன் தெரிந்தவற் குரைக்கும்
வடுவோழ் கூந்தல் வாசவ தத்தையோ
டிடைதெரி வின்மையி னவளே யிவளென
நயந்தது நெஞ்ச நயவா தாயினும்
பால்வகை வினையிற் படர்ந்த வேட்கையை
மால்கடல் வரைப்பின் மறுத்தன ரொழுகுதல்
யாவர்க் காயினு மாகா ததுவென
மேவரக் காட்டலு மீட்டுங் கூறுவன்

அறியா னிவனென னெறியிற் கேண்மதி
அன்றுநாங் கண்ட வரும்பெற லந்தணன்
இன்றுநாங் காண விந்நகர் வந்தனன்
மானேர் நோக்கி மாறிப் பிறந்துழித்
தானே யாகத் தருகுவெ னென்றனன்
பனிமலர்க் கோதைப் பதுமையை நீங்கித்
தனியை யாகித் தங்குதல் பொருளெனக்
கேட்டே யுவந்து வேட்டவன் விரும்பி
மாற்று மன்னரை மருங்கறக் கெடுப்பதோர்
ஆற்றற் சூழ்ச்சி யருமறை யுண்டெனத்
தேவி முதலா யாவிரு மகன்மினென்
றுய்மணி மாடத் தவ்விடத் தகன்று
திருமணக் கிழமைப் பெருமக ளுறையும்
பள்ளிப் பேரறை யுள்விளக் குறீஇ
மயிரினுந் தோலினு நூலினு மியன்ற
பயில்பூஞ் சேக்கையுட் பலரறி வின்றி
உழைக்கலச் சுற்றமு மொழித்தன னாகி
விழுத்தகு வெண்டுகில் விரித்தன னுடுத்துத்
தூய னாகி வாய்மொழி பயிற்றித்
தோட்டுணை மாதரை மீட்டனை பணியென
வாட்படை மறவன் காட்டிய வகைமேற்
சேட்புலம் பகலச் சிந்தை நீக்கி
வீணை கைவலத் திரீஇ விதியுளி
ஆணை வேந்த னமர்ந்தனன் றுயிலென்.

உரை

௬. பதுமாபதியை வஞ்சித்தது

அஃதாவது : உதயணன் பதுமாபதியை வஞ்சித்து அகற்றித் தனித்துத் துயில்கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் உருமண்ணுவாவை வினுதல்)

க - ௬ : பிரிந்து..................கூறென

(பொ - ரை.) *அவ்வுதயண வேந்தன் தன்னைப் பிரிந்து பகைவர்பால் சிறையிருந்து பின் வந்துகூடிய பேராற்றல் வாய்ந்த அவ்*

வாடிடை மழைக்கண் வாசவ தத்தை
கண்ணகன் ஞாலத்துப் பெண்ணருங் கலமவள்
சேறுக ருவப்பச் செந்தீ யகவயின்
உறுதவ மில்லேற் கோளித்தன டானேன
மறுகுஞ் சிந்தை மன்னனை நோக்கி
மேங்கண் வேந்தர் தங்கட் குற்ற
தங்கண் ஞாலத் தாரே யாயினும்
அகலிடத் துரைப்பி னற்றம் பயத்தலின்
அவரின் வாழ்வோ ரவர்முன் னின்றவர்
இயல்பி னீர்மை யிற்றேன வுரைப்பின்
விம்ம முறுதல் விளுவது முடைத்தோ
அற்றே யாயினு மிற்றுங் கூறுவேன்
நயக்குங் காத னல்வளைத் தோளியைப்
பெயர்க்கும் விச்சையிற் பெரியோற் கண்டவன்
உவக்கு முபாய மொருங்குடன் விடாது
வழிபா டாற்றி வல்லிதிற் பெறீஇய
கழிபெருங் காதலோடு சென்றபி னவ்வழிக்
காசி யரசன் பாவையைக் கண்டே
வாசவ தத்தையை மறந்தனை யாகிப்
பரவை யல்குற் பதுமா பதியோ
டிரவும் பகலு மறியா வின்புற்
றுட்குவரு கோயிலு ளொடுங்குவனை யுறைந்தது
மற்போர் மார்ப மாண்புமற் றுடைத்தோ
அன்னது மாக வதுவே யாயினும்
திண்ணிதி னதனையுந் திறப்படப் பற்றுய்
பின்னிது நினைக்கும் பெற்றியை யாதலின்
ஒருபாற் பட்ட தன்றுநின் மனனெனத்
திருவார் மார்பன் தெரிந்தவற் குரைக்கும்
வடுவாழ் கூந்தல் வாசவ தத்தையோ
டிடைதெரி வின்மையி னவளே யிவளேன
நயந்தது நெஞ்ச நயவா தாயினும்
பால்வகை வினையிற் படர்ந்த வேட்கையை
மால்கடல் வரைப்பின் மறுத்தன ரோழுகுதல்
யாவர்க் காயினு மாகா தததுவேன
மேவரக் காட்டலு மீட்டுங் கூறுவன்

அறியா னிவனென னெறியிற் கேண்மதி
அன்றுநாங் கண்ட வரும்பெற லந்தணன்
இன்றுநாங் காண விந்நகர் வந்தனன்
மானேர் நோக்கி மாறிப் பிறந்துழித்
தானே யாகத் தருகுவே னென்றனன்
பனிமலர்க் கோதைப் பதுமையை நீங்கித்
தனியை யாகித் தங்குதல் பொருளெனக்
கேட்டே யுவந்து வேட்டவன் விரும்பி
மாற்று மன்னரை மருங்கறக் கெடுப்பதோர்
ஆற்றற் சூழ்ச்சி யருமறை யுண்டெனத்
தேவி முதலா யாவிரு மகன்மீனென்
றுய்மணி மாடத் தவ்விடத் தகன்று
திருமணக் கிழமைப் பெருமக ளுறையும்
பள்ளிப் பேரறை யுள்விளக் குறீஇ
மயிரினுந் தோலினு நூலினு மியன்ற
பயில்பூஞ் சேக்கையுட் பலரறி வின்றி
உழைக்கலச் சுற்றமு மொழித்தன னாகி
விழுத்தகு வெண்டுகில் விரித்தன னுடுத்துத்
தூய னாகி வாய்மொழி பயிற்றித்
தோட்டுணை மாதரை மீட்டணை பணியென
வாட்படை மறவன் காட்டிய வகைமேற்
சேட்புலம் பகலச் சிந்தை நீக்கி
வீணை கைவலத் திரீஇ விதியுளி
ஆணை வேந்த னமர்ந்தனன் றுயிலென்.

உரை

௬. பதுமாபதியை வஞ்சித்தது

அஃதாவது : உதயணன் பதுமாபதியை வஞ்சித்து அகற்றித் தனித்துத் துயில்கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் உருமண்ணுவாவை வினுதல்)

க - ௩ : பிரிந்து..................கூறெனை

(பொ - ரை.) *அவ்வுதயண வேந்தன் தன்னைப் பிரிந்து பகைவர்பால் சிறையிருந்து பின் வந்துகூடிய பேராற்றல் வாய்ந்த அவ்*

வமைச்சனோடு நெஞ்சு பொருந்தக் கூடி அளவளாவி இருந்த பின்னர், "அன்பனே! நீ என்னைப் பிரிந்த பின்னர் நினக்கு நிகழ்ந்ததனைக் கூறுக" என்று அவ்வமைச்சனை வினவா நிற்ற லின்; என்க.

(வி - ம்.) அமைச்சன் : உருமண்ணுவா. வேந்தன் : உதயணன். அமைவர - அமைதல் வர. அமைச்சனை வினவ என்க.

(உருமண்ணுவா நிகழ்ந்தவற்றை உதயணனுக்குக் கூறல்)

௬ - ௭ : செரு..................கூறி

(பொ - ரை.) அதுகேட்ட உருமண்ணுவா தன்னோடு போர் செய்த எலிச்செவியரசன் சிறையிடைச் செய்த செயல்களையும், தருசகமன்னன் தன்னைச் சிறைவீடு செய்த தன்மையையும் போர் புரியும் வகையைச் செய்த அப் பகைமன்னர் நீதியோடு கூடி இருந்த செயலையும், பிறவற்றையும் விளங்கும்படி விரிவாகக் கூறி; என்க.

(வி - ம்.) மன்னன் : எலிச்செவியரசன். தன்வயின் - தன்னை. பொருவகை - போர் புரியும் முறை. புணர்ந்த நீதி - மேற்கொண்ட நீதி. நீதி தன்னைக் கொல்லாதிருந்தமையும் தன்னைப் பேணியதும் சிறைவீடு செய்ததும் பிறவும் என்க.

(உருமண்ணுவா வயந்தகனிடம் கூறல்)

அ - ௧௦ : அந்நிலை..................உணர்த்த

(பொ - ரை.) அங்ஙனம் உருமண்ணுவா உதயணன் வினு விற்கு விடை கூறிய அந்நிலை கழிந்த பின்னர் வற்புறுத்துபவ னாகிய வயந்தகனைநோக்கி 'நம் மன்னன் இன்புற்றிருக்கும் செவ்வி பார்த்து நீ இச் செய்தியை கூறுவாயாக!' என்று தனி இடத்தே வயந்தகனுக்குக் கூறா நிற்ப; என்க.

(வி - ம்.) உதயணன் இன்புறு செவ்வியுள் என்க. வன்புறை - வற்புறுத்துபவன்; வற்புறுத்தும் இயல்பினையுடைய வயந்தகனுக்கு என்க.

(உதயணன் செயல்)

௧௧ - ௧௫ : உருமண்ணுவா..................அரற்ற

(பொ - ரை.) பின்னர் அழகுமிக்க மார்பினையுடைய அவ் வுதயண மன்னன் புதுவதாகக் கொணர்ந்து பரப்பிய மணல் பரந்த குளிர்ந்த மலர்ப் பந்தலின்கீழ் உருமண்ணுவாவோடு கூடி அளவளாவி இருந்தபொழுது தான் வாசவதத்தைக்குக் கற்பித்த கோடவதி என்னும் அத் தெய்வயாழினை அருஞ்சுகன் வாயி லாய் மீண்டும் பெற்ற வரலாற்றினை அவ்வமைச்சனுக்குக் கூறி

அக் கூற்றின் வாயிலாய்த் தேன்போன்ற மொழியினையுடைய வாசவதத்தையை நினைந்தவனாய் அவளைத் தேடிப் புலம்பா நிற்ப; என்க.

(வி - ம்.) மார்பன் பந்தலின்கண் அமைச்சரோடு கூடி உரைத்து அரற்ற என்க. தருமணல் - புதுவதாகக் கொணர்ந்து பரப்பிய மணல். ஞெமிரிய - பரவிய. மார்பன் : உதயணன். தேவி : வாசவதத்தை. வீணை - கோடவதி. அவற்கு - உருமண்ணுவாவுக்கு. தேனேர் கிளவி : வாசவதத்தை.

(வயந்தகன் உதயணனை வினாதல்)

கசு - உஉ : மானம்..............உரையென

(பொ-ரை.) மானம் குறையாத வயந்தக குமரன் உதயணனை நோக்கி அவன் மன நிலையை மாற்றும்பொருட்டு, "பெருமானே! நீ இப்பொழுது பெரிதும் விரும்பிப் புலம்புவதற்குக் காரணமான அழகிய நெற்றியையுடைய வாசவதத்தையும் பயன்மிக்க கற்பினையுடைய பதுமாபதியும் என்னும் இவ்விரு நங்கையருள்ளும் ஆராயுங்கால் நினக்குச் சிறந்தவர் யார்? நல்லறிவினாலும் நல்லொழுக்கத்தினாலும் மிகச் சிறந்தவர் என்று நீ இவருள் யாரைப் பெரிதும் விரும்புகின்றனை? உலகங் காவலனே! யான் உணரும் படி மறையாமல் உரைத்தருளுக" என்று வேண்டாநிற்ப; என்க.

(வி - ம்.) கூறும் - கூறுவான். அரிவை : வாசவதத்தை. பயந்த - பயன்பட்ட. கற்புடைமை மகளிர்க்குப் பெரும்பயன் நல்குமாகலின் பயந்த கற்பு என்றார். தெரியுங்காலை - ஆராயுங்கால். உவத்தி - விரும்புவாய். ஆவதை - அதனை. காவலாள : விளி. கரவாது - மறையாமல்.

(உதயணன் விடை கூறுதல்)

உங - ங௧ : முறுவல்..................நோக்கி

(பொ-ரை.) வயந்தகன் வினாவினைக் கேட்டுப் புன்முறுவல் பூத்த உதயணமன்னன் இவ் வினாவிற்குரிய விடையினை அவ் வயந்தகன் அறிவான் என்பது தனக்குத் தெரிந்திருந்தேயும், பல வேறு அணிகலன்களையும் ஒரு சில மொழிகளையே பேசுதலையுமுடைய ட ··பெருந் தேவியாகிய அவ் வாசவதத்தையைப் பற்றித் தான் பிறரோடு சொல்லாட்டம் நிகழ்த்தும்பொழுது தன் பிரிவுத் துன்பம் அகலுதலின் அவ்வினாவிற்கு விடை கூறத் தொடங்கி, "நண்பனே! பெருமைமிக்க நல்லொழுக்கினையுடைய பிரச்சோதன மன்னன் மகளும் மெலிந்த இடையையும் குளிர்ந்த கண்களையுடையவளும் ஆகிய வாசவதத்தை ஒருத்தியே இடமகன்ற இந் நிலவுலகத்தின்கண் வாழ்கின்ற பெண்டிர்க்கெல்லாம் பேரணிகலம் போன்றவள் ஆவள். அந்தோ! அத்தகைய

நங்கை என் பகைவர் உவக்கும்படி சிவந்த தீயினுள் மூழ்கி மிக்க தவமில்லாத என்னிடத்தினின்றும் மறைந்தொழிந்தனளே" என்று கூறிச் சுழலாநின்ற நெஞ்சினையுடைய அம் மன்னனை நோக்கி; என்க.

(வி - ம்.) அவன் : அவ்வயந்தகன். தேவி : வாசவதத்தை. செல்லல் - துன்பம். பீடு - பெருமை. ஒழுக்கின் வாசவதத்தை, மகள் வாசவதத்தை, கண் வாசவதத்தை எனத் தனித்தனிக் கூட்டுக. பெண்ணருங்கலம் - பெண்டிர்க்கெல்லாம் பேரணிகலம் போன்றவள்.

"மண்ணருங் கலமெலாம் வலித்தின் வவ்வினும்
விண்ணருங் கலமெலாம் விதியி னெய்தினும்
பெண்ணருங் கலமிது பெறுதன் மாணிடர்க்
கெண்ணருந் தகைத்தென விறைவ னெண்ணினான்."
(சூளா. இரதநூபுரச். ௧௧0)

எனவரும் தோலாமொழியையும் நினைக. செறுநர் - பகைவர். உறு தவம் - மிக்க தவம். மறுகும் - சுழலாநிற்கும்.

(வயந்தகன் கூற்று)

௩௨ - ௩அ : வெங்கண்..............கூறுவென்

(பொ - ரை.) "இறைமகனே ! கண்ணோடாமையையுடைய அரசர்களுக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியை அகன்ற இவ்வுலகத்தின்கண் எத்தகையரேயாயினும் உலகின்கண் எடுத்துக்கூறின் அச் செயல் அவர்க்குக் கேடு பயத்தல் ஒருதலையாகலின் அவ்வரசரின் குடை நிழலிருந்து வாழுவோரே அவ்வரசர் முன்னிலையினின்று அவரது பண்பின்மையை இஃதென்று எடுத்துக் கூறின் அங்ஙனம் கூறியவர் பெரிதும் துன்புறுதல் கேட்டறிய வேண்டுமொரு செயலன்று; அங்ஙன மிருப்பினும் பெருமானே, யான் இன்னும் கூறத்துணிகின்றேன். கேட்டருள்க" என்க.

(வி - ம்.) வெங்கண் - கண்ணோட்டமில்லாத கண். உற்றது - நேர்ந்த பழியை. அற்றம் - கேடு, சாவுமாம். இயல்பு இல் நீர்மை - பண்பற்ற தன்மை. விம்மம் - துன்பம்; ஆகுபெயர். வினவதும் உடைத்தோ - கேட்கவேண்டுமோ. அற்றேயாயினும் - அத்தன்மைத்தாயினும். இற்றும் - இன்னும்.

(இதுவுமது)

௩௯ - ௪௩ : நயக்கும்...............சென்றபின்

(பொ - ரை.) "வேந்தே ! நீ இத்துணை விரும்புதற்குக் காரணமான காதலையுடைய அழகிய வளையலணிந்த தோள்களையுடைய அவ்வாசவதத்தையை மீட்டுத்தரும் வித்தையிலே பெரியோனாகிய ஒரு முனிவனைக் கண்டு அவன் விரும்புகின்ற உபாயங்களை ஒருங்கே மேற்கொண்டு கடைப்பிடியாக அம்

முனிவனுக்கு வழிபாடுசெய்து வன்மையோடு அவ்வாசவதத்தையைப் பெறும் பொருட்டு மிகவும் பெரிய காதலோடு நம் நாட்டினை அகன்று வேற்று நாட்டிற்குச் சென்றபின்னர்" என்க.

(வி - ம்.) தோளி : வாசவதத்தை. பெயர்க்கும் விச்சை - மீட்டற்குரிய வித்தை. பெரியோன் : முனிவன். உவக்கும் உபாயம் - உவத்தற்குக் காரணமான உபாயம். கழிபெருங் காதல் - மிகவும் பெரிய காதல். வேற்று நாட்டிற்குச் சென்ற பின்னர் என்க.

(இதுவுமது)

சஅ - சகூ : அவ்வழி...............உடைத்தோ

(பொ - ரை.) "அவ்வேற்று நாட்டின்கண் காசி அரசன் மகளாகிய பதுமாபதியைக் கண்டு நின் மனத்தில் குடிகொண்டிருந்த பழைய கோப்பெருந்தேவி வாசவதத்தையைத் துவர மறந்தனையாகிப் பரந்த அல்குலினையுடைய அப் பதுமாபதியோடு இரவிது பகலிது என்று அறிந்து கொள்ளாதபடி, காமவின்பத்திலே அழுந்தி அச்சம் வருதற்குக் காரணமான அக் கோமகளின் கன்னி மாடத்தின்கண் பிறர் அறியாமல் மறைந்துறைந்த செயல் மற்போர் வன்மையுடைய மார்பையுடையோயே! மாண்புடைய செயலாகுமோ" என்று கூறி; என்க.

(வி - ம்.) அவ்வழி - அவ்வேற்று நாட்டின்கண். காசியரசன் பாவை : பதுமாபதி. வாசவதத்தை என்றது, நின்னெஞ்சிற் குடி கொண்டிருந்த வாசவதத்தை என்பது பட நின்றது. மறந்தனை என்றது, துவர மறந்தனை என்பது பட நின்றது. பரவை - பரப்பு. இரவென்றும் பகலென்றும் அறியாமல் என்க. கன்னிமாடம் ஆகலின் உட்கு வருகோயில் என்றான். உட்கு - அச்சம். ஒடுங்குவனை - ஒடுங்கினையாய்.

(இதுவுமது)

ருo - ருஅ : அன்னதும்.............மனனென

(பொ - ரை.) "வேந்தே! அச் செயல் நேரிய செயலாகவே ஆக! அச் செயலைத்தானும் திட்பமாக ஆற்றலொடு பற்றி நிற்பாயும் அல்லை. அதனையுந் துவர மறந்து பின்னர் இதனை நினைக்கின்ற தன்மையை யுடையை ஆகின்றாய். இங்ஙனமாகலின் நின்னெஞ்சம் ஒரு கூற்றிலேயே நிலைத்து நிற்கும் உறுதியுடைய தொன்றன்று காண்!" என்று இடித்துரையா நிற்ப; என்க.

(வி - ம்.) இப்பகுதியின்கண் அமைச்சனும் நண்பனுமாகிய வயந்தக குமரன் மன்னனை மேற்சென்றிடிக்கும் செயலை நினைந்து மகிழ்க.

"நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு" (குறள். எஅச)

என வரும் குறளையும், "தம்முயிர்க் குறுதியெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்" (கம்ப. மந்திர. கூ) எனவரும் கம்பநாடர் மொழியையும் நினைக. அன்னதும் ஆக - வாசவதத்தையை மறந்து பதுமாபதியைக் காமுற்றது முறையே என்று நீ கொள்ளுமிடத்து அது முறையேயாயினும் ஆகுக என்றவாறு. அதனையும் - அக்காதலையும். திறப்பட - உறுதியாக. இது - இவ்வாசவதத்தைக் காதலை.

(உதயணன் கூற்று)

௫௪ - ௬௧ : திரு ....கூறுவன்

(பொ - ரை.) திருமகள் வீற்றிருக்கும் மார்பினையுடைய உதயண மன்னன் அவ் வயந்தகன் கூற்றிற்குத் தகுந்த மறுமொழியினை நன்கு ஆராய்ந்து கூறுவான், "நண்பனே! வகிர்வு ஆழ்ந்து கிடக்கும் கூந்தலையுடைய வாசவதத்தைக்கும் இப் பதுமாபதிக்கும் வேற்றுமை தெரிந்துகோடல் இயலாமையின் அவ்வாசவதத்தையே அம் முனிவன் வித்தையினாலே உயிர் பெற்று வருகின்றாள் என்று கருதி இப் பதுமாபதியை என் னெஞ்சம் பெரிதும் விரும்புவதாயிற்று; 'அங்ஙனமில்லை, நின் மனம் இவளை வேறொருத்தி என்று அறிந்தே விரும்பிற்றுக் காண்' என்று நீ கூறுவையாயினும் அதுவும் என் குற்றமன்று. ஊழ்வினையினாலே பண்டும் பண்டும் பற்பல பிறப்புக்களினும் அடிப்பட்டுவருகின்றதாய் ஒருத்தியின்மேல் செல்லாநின்ற விருப்பத்தைப் பெரிய கடல் சூழ்ந்த இப் பேருலகத்தின்கண் மாற்றியொழுகும் ஒழுக்கம் எத்தகையோர்க்கும் இயலாத தொன்றாம்" என்று அவன் கூற்றிற்குப் பொருத்தமாக அப் பெருந்தகை மறுமொழி கூறிய உடன் அவ்வயந்தகன் அம் மன்னனைப் பாராட்டி மீண்டும் கூறுவான்; என்க.

(வி - ம்.) இப்பகுதியில் உதயணன் தன்னை இடித்துரைக்கும் வயந்தகன் சுடுசொல்லைப் பொறுத்துக் கோடலும், ஒருவாறு தன் தோல்வியை ஒப்புக்கொண்டு பொருத்தமாக மறுமொழி கூறுதலும் அம்மன்னன் மாண்பினைப் பலபடி உயர்த்திக் காட்டுதல் காண்க. ஈண்டு,

"இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்"

என்றற்றொடக்கத்துத் திருக்குறள்களும்,

"செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

என்னும் குறளும் நினைவிற்கு வருகின்றன. திரு - திருமகள். தெரிந்து - ஆராய்ந்து. வடுஆழ் கூந்தல் - வகிர்ந்த கோடு ஆழ்ந்து கிடக்குங் கூந்தல். இடை: வேற்றுமை. அவளே இவள் - அவ்வாசவதத்தையே பதுமாபதி. பால் வகைவினை - ஊழ்வினை. யாவர்க்காயினும் - எத்தகைய சான்றோர்க்கும். மேவர - பொருத்தமுண்டாக. மீட்டும் வயந்தகன் கூறுவான் என்க.

(வயந்தகன் கூற்று)

௬௨ - ௬௮ : அறியான்...........பொருளென

(பொ - ரை.) "வேந்தே! இவன் அறிந்திலன் என்று நினையாதே கொள்! முறைமையாக யான் கூறுமிதனைக் கேட்டருளுக! பண்டு நாம் இராசகிரிய நகரத்தின் புறத்தே கண்ட பெறுதற்கரிய அந்தணனாகிய காகதுண்டக முனிவன் இற்றை நாள் யாமெல்லாம் எளிதிற் காணும்படி இந்தக் கோசம்பி நகரத்தின்கண் வந்திருக்கின்றனன். மான்போலும் பார்வையையுடைய வாசவதத்தையார் மாறிப் பிறந்த இடத்தினின்றும் மீட்டு அவ்வாசவதத்தை வடிவத்தோடேயே வழங்குவேன் என்று கூறினன். ஆதலால் அக் கோப்பெருந்தேவியை நீ பெறுந்துணையும் குளிர்ந்த மலர்மாலையை யணிந்த பதுமாபதியாரைப் பிரிந்து தனித்துத் தங்குதல் இப்பொழுது நீ செய்யத் தகுந்த காரியமாகும்" என்று கூறுநிற்ப; என்க.

(வி - ம்.) இவன் அறிவில்லாமல் பிதற்றுகின்றான் என்று நினைத்துக் கேளாது விடல் வேண்டா என்பான் அறியான் இவன் எனல் என்றான். எனல் : அல் ஈற்று வியங்கோள்; என்று நினையாதே கொள் என்க. கேண்மதி : மதி : முன்னிலையசை, அன்று என்றது முன்பு இராசகிரியத்தில் இருந்த காலத்தை. அந்தணன் : காக துண்டக முனிவன். இந்நகர் - இக்கோசம்பி நகரத்தில். தானேயாக - அவ்வாசவதத்தை வடிவத்தோடேயே. பதுமை : பதுமாபதி. பொருள் - செய்தற்குரிய காரியம்.

(உதயணன் பதுமாபதி முதலியோரை வஞ்சகமாகப் பேசித் தன்பால் நின்றும் போக்கித் தனியே சென்று துயிலுதல்)

௬௯ - ௭௫ : கேட்டே...............உறீஇ

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் மகிழ்ந்து பெரிதும் விருப்பமுடையனாய் வாசவதத்தையைக் காண்டற்கு அவாவிப் பதுமாபதியை நோக்கி, "தேவீ! யான் நம் பகைமன்னர்களைக் குலத்தோடு அழித்தற்குரிய போராற்றலையுடைய ஆராய்ச்சியையுடைய அரிய மறைச்செய்தி ஒன்றனை இவ்விடத்தே அமைச்சரோடிருந்து ஆராய்ந்தறிதல் வேண்டும். ஆதலின் நின்னை உள்ளிட்ட மகளிர் எல்லீரும் என்னைத் தனியே விட்டு நுங்கள் உறைவிடம் சேருங்கோள்" என்று அழகிய மணிமாடத்தையுடைய அவ்விடத்தினின்றும் தான் தனியே சென்று திருமணவுரிமையையுடைய பெருமகளாகிய அப்பதுமாபதி தன்னோடு உறைதற்குரிய பள்ளிப் பேரவையினுள் மெழுகித் தூய்தாக்குவித்து; என்க.

(வி - ம்.) வேட்டவன் - அவாவியவனாய். மாற்றுமன்னர் - பகைமன்னர். மருங்கு - குலம். ஆற்றல் - வலிமையுமாம். மறை - மறைச்

செய்தி. உண்டு - ஆராய்தற்கிருக்கின்றது. தேவி : முன்னிலைப்புற மொழி. ஆய்மணி - அழகியமணி. திருமணக்கிழமை - மணத்தலாலுண் டாகும் உரிமை. பெருமகள் - பதுமாபதி. விளக்குநீஇ - மெழுகித் தூய்தாக்கி. இனி விளக்கேற்றி வைத்து எனினுமாம்.

(இதுவுமது)

எசு - அறு : மயிரினும்...............துயிலென்

(பொ - ரை.) மயிரானும் தோலானும் நூலானும் இயற் றப்பட்டு மிக்க மலர் பரப்பப்பட்ட படுக்கையின்கண் பலரும் அறியாதபடி உழைக்கலமகளிரையும் போக்கியவனாய்ச் சிறப் புடைய வெள்ளாடையை விரித்துடுத்துக் கொண்டு தூயனாய் வயந்தகனை நோக்கி, "நண்பனே! இனி நீ என் தோள் துணைவி யாகிய வாசவதத்தையை மீட்டுக் கொணர்ந்து தருக" என்று திருவாய் மலர்ந்தருளி வாட்படையையுடைய சிறந்த வீரனாகிய அவ்வயந்தகன் கூறிய முறைப்படி தான் நெடுநாள் உழக்கும் தனிமைத்துயர் அகலும்படி சிந்தனையை விலக்கிக் கோடவதி யினைக் கையிடத்தே வைத்துக்கொண்டு முறைப்படியே ஆணையை யுடைய அவ்வேந்தர் பெருமான் தனித்துயில் கொள்வானா யினன் ; என்க.

(வி - ம்.) மயிர் - அன்னத்தூவி முதலியன. பூஞ்சேக்கை - மலர்ப்படுக்கை. உழைக்கலச் சுற்றம் - உழைக்கல மகளிர். தூயன் - மனம் மொழி மெய் ஆகிய முக்கருவிகளாலும் தூயன் என்க. மாதரை: வாசவதத்தையை. மீட்டனை பணியென - வயந்தகனுக்கு வாய்மொழி பயிற்றி என்க. மறவன் : வயந்தகன். சேட்புலம்பு - நீண்டகாலம் பிரிந் தமையாலிருந்த வருத்தம். கைவலத்து - கையின்கண். இரீஇ - வைத்து. விதியுளி - முறைப்படி. துயிலமர்ந்தனன் : ஒருசொல் ; துயின்றான்.

சு. பதுமாபதியை வஞ்சித்தது முற்றிற்று.

எ. வாசவதத்தை வந்தது

இதன்கண்: *அமைச்சர் தனித்துத் துயிலா நின்ற உதயணன் பால் வாசவதத்தையைக் கொணர்ந்து விடுத்தலும், உதயணனுடைய நிலையும், வாசவதத்தை செயலும், உறங்கும் உதயணனுடைய செயலும், வாசவதத்தை வாளாவிருத்தலும், உதயணன் அரற்றலும், அமைச்சர் வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்தலும், உதயணன் விழித்து அரற்றலும், வயந்தகன் உதயணனிடம் கூறலும், உதயணன் கூற்றும், வயந்தகன் கூற்றும், உதயணன் செயலும், அவன் வயந்தகனுக்குக் கூறலும், யூகியின் நிலைமையும், வாசவதத்தையின் நிலைமையும், உதயணன் யூகியை அறிந்து கொண்டு தழுவலும், வாசவதத்தை வருகையும் அவள் செயலும், உதயணன் சாங்கியத் தாயை நோக்கிக் கூறலும், யாவரும் நகர் செல்லுதலும் கூறப்படும்.*

ஆணை வேந்த னமர்ந்துதுயில் பொழுதின்
வாணுதன் மாதரை மதியுடை யமைச்சர்
அன்பியாத் தியன்ற தன்பாற் கணவன்
மண்பாற் செல்வ மாற்றி மற்றோர்
பெண்பாற் செல்வம் பேணுத லின்மையும்
எரிசின மொய்ம்பிற் றரிசகன் றங்கை
பண்பொடு புணர்ந்த பதுமா பதியையும்
பொருபடை வேந்தனை வெரீஇப் புணர்த்த
கருமக் காம மல்ல தவண்மாட்
டொருமையி னோடாது புலம்பு முள்ளமும்
இரவும் பகலு மவண்மாட் டியன்ற
பருவர னோயோ டரற்றும் படியும்
இன்னவை பிறவு நன்னுத றேற
மறப்பிடைக் காட்டுதல் வலித்தன ராகிச்
சிறப்புடை மாதரைச் சிவிகையிற் றரீஇப்
பெறற்கருங் கொழுநன் பெற்றி காண்கென
ஆய்மணி விளக்கத் தறையகம் புகுத்தலின்
மாமணித் தடக்கை மருங்கிற் றூழ்தரத்
தன்பாற் பட்ட வன்பின னாகிக்
கரண நல்லியாழ் காட்டுங் காலை
மரணம் பயக்கு மதர்வைத் தாயநின்

கடைக்க ணோக்கம் படைப்புண் ணகவயின்
அழனெய் பெய்தென் றுற்றே னென்னை
மழலையங் கிளவி மறந்தனை யோவென
வாய்சோர்ந் தரற்று வாசங் கமழும்
ஆய்பூந் தட்டத் தகத்தோடு தெற்றிய
தாமம் வாட்டுங் காம வுயிர்ப்பினன்
கனவி னினையுங் கணவனைக் கண்டே
நனவினு மிதுவோ நறுந்தார் மார்பன்
தன்னல தில்லா நன்னுதன் மகளிரை
மறுதர வில்லாப் பிரிவிடை யரற்றுதல்
உறுகடல் வரைப்பி னுயர்ந்தோற் கியல்பெனக்
கண்டனே னென்னுந் தண்டா வுவகையள்
நூனெறி வழாஅ நுனிப்பொழுக் குண்மையின்
ஏனை யுலகமு மிவற்கே யியைகெனக்
கணவனை நோக்கி யிணைவிரல் கூப்பி
மழுகிய வொளியின ளாகிப் பையெனக்
கழுமிய காதலொடு கைவலத் திருந்த
கோட பதியின் சேடணி கண்டே
மகக்காண் டாயின் மிகப்பெரிது விதும்பிச்
சார்ந்தன ளிருந்து வாங்குபு கொண்டு
கிள்ளை வாயி னன்ன வள்ளுகிர்
நுதிவிரல் சிவப்பக் கதியறிந் தியக்கலிற்
காதலி கைந்நயக் கரணங் காதலன்
ஏதமில் செவிமுத லினிதி னிசைப்ப
வாசவ தத்தாய் வந்தனை யோவெனக்
கூந்தன் முதலாப் பூம்புற நீவி
ஆய்ந்த திண்டோ ளாகத் தசைஇ
என்வயி னினையா தேதிலை போல
நன்னுதன் மடவோய் நாள்பல கழிய
ஆற்றிய வாறெனக் கறியக் கூறென
மாற்றுரை கொடாஅண் மனத்தோ டலமரீஇக்
கோட்டுவன ளிறைஞ்சிக் கொடுங்குழை யிருப்ப
மயங்குபூஞ் சோலை மலைவயி னுடைப்

பெயர்ந்த காலை நயந்தனை யொருநாள்
தழையுங் கண்ணியும் விழைவன தம்மென
வேட்டம் போகிய போழ்திற் கோட்டம்
கூரெரி கொளுவ வாரஞ ரெய்தி
இன்னுயிர் நீத்த விலங்கிழை மடவோய்
நின்னணி யெல்லா நீக்கி யோராப்
பின்னணி கொண்டு பிறளே போன்றனை
எரியகப் பட்டோ ரியற்கை யிதுவோ
தெரியே னெனக்கிது தெரியக் கூறென
ஆற வுவகையோ டவண்மெய் தீண்டியும்
தேனார் படலைத் திருவளர் மார்பன்
கனவென வறியான் காதலின் மறுத்தும்
சினமலி நெடுங்கண் சேர்த்திய பொழுதின்
வழுக்கில் சீர்த்தி வயந்தக னடைஇ
ஒழுக்கிய றிரியா யூகியோ டடனே
நாளை யாகு நண்ணுவ தின்றுநின்
கேள்வ னன்பு கெடாஅ தாகுதல்
துயிலுறு பொழுதிற் றோன்றக் காட்டுதல்
அயில்வேற் கண்ணி யதுநனி வேண்டித்
தந்தே மென்பது கேளெனப் பைந்தொடி
புனைகோல் கரையி னினைவனள் விம்மி
நிறையில ளிவளென வறையுநன் கொல்லென
நடுங்கிய நெஞ்சமோ டொடுங்கீ ரோதி
வெம்முலை யாகத்துத் தண்ணெனக் கிடந்த
எழுப்புரை நெடுந்தோண் மெல்லென வெடுத்து
வழுக்கில் சேக்கையுள் வைத்தனள் வணங்கி
அரும்பெறல் யாக்கையி னகலு முயிர்போற்
பெரும்பெயர்த் தேவி பிரிந்தனள் போந்துதன்
ஈனாத் தாயோ டியூகியை யெய்தப்
போரார் குருசில் புடைபெயர்ந் துராஅய்
மறுமொழி தாராய் மடவோ யெனக்கென
உறுவரை மார்பத் தொடுக்கிய புகுவோன்
காணா னாகிக் கையற வெய்தி
ஆனா வின்றுயி லனந்தர் தேறிப்
பெருமணி பெற்ற நல்குர வாளன்

அருமணி குண்டு கயத்திட் டாங்குத்
துயிலிடைக் கண்ட துணைநலத் தேவியை
இயல்புடை யங்க ணேற்றபிற் காணு
தரற்று மன்னனை யருமறை நாவின்
வயத்தகு வயந்தகன் வல்விரைந் தெய்தி
இருளும் பகலு மெவ்வமோ டிரங்குதல்
பொருளஃ தன்றே புரவலர் மாட்டெனக்
காரணக் கிளவி கழறுவனன் காட்டத்
தேரணி சேனைத் திறன்மீக் கூரிய
பிடிமகிழ் யானைப் பிரச்சோ தனன்மகள்
வடிமலர்த் தடங்கண் வாசவ தத்தையென்
பள்ளிப் பேரறை பையெனப் புகுந்து
நல்லியா ழெழீஇ நண்ணுவன ளிருப்ப
வாச வெண்ணெ யின்றி மாசொடு
பிணங்குபு கிடந்த பின்னுச்சேர் புறத்தொடு
மணங்கமழ் நுதலு மருங்குலு நீவி
அழிவுநனி தீர்ந்த யாக்கையே னாகிக்
கழிபே ருவகையொடு கண்படை கோளலும்
மறுத்தே நீங்கினள் வயந்தக வாராய்
நிறுத்த லாற்றே னெஞ்ச மினியெனக்
கனவிற் கண்டது நனவி னெய்துதல்
தேவர் வேண்டினு மிசைதல் செல்லாது
காவ லாள கற்றோர் கேட்பிற்
பெருநகை யிதுவெனப் பேர்த்துரை கோடாஅ
ஆடலு நகையும் பாடலும் விரைஇ
மயக்கமி றேவி வண்ணங் கொண்டோர்
இயக்கி யுண்டீண் டுறைவதை யதற்கோர்
காப்பமை மந்திரங் கற்றனென் யானென
வாய்ப்பறை யறைந்து வாழ்த்துப்பல கூறி
ஒருதலைக் கூற்றேடு திரிவில னிருப்பப்
பண்டே போலக் கண்படை மம்மருட்
கண்டே னானே கனவன் றுயின்
மாறி நீங்குமோ மடமொழி தானெனத்
தேறியுந் தேறான் றிருவமர் மார்பன்
நள்ளிரு ணிங்கலும் பள்ளி யெழுந்து

காமர் சுற்றங் கைதொழு தேத்தத்
தாமரைச் செங்கண் டகைபெறக் கழீஇக்
குளம்புங் கோடும் விளங்குபொன் னழுத்திச்
சேடணி சேதா வினையன வின்னே
கோடி முற்றிக் கொண்டனிர் வருகெனத்
தெரிமலர்க் கோதைத் தேவியை யுள்ளி
அருமறை யாளர்க் கெழுமுறை வீசி
நனவிற் கண்ட நன்னுதன் மாதரைக்
கனவெனக் கொண்டலி னினியோர்க்கு முரையான்
காமுறு நெஞ்சிற் காதலர்ப் பிரிந்தோர்க்
கேமுறு வேட்கை யாகு மென்ப
தீதுகொ லென்னப் பற்பல நினைஇ
இருந்த செவ்வியுள் வயந்தகன் குறுகி
ஆனுச் செல்வத் தந்தணன் மற்றுநாம்
மேனு ணிகழ்ந்த மேதகு விழுமத்
தறம்பொரு ளின்ப மென்ற மூன்றினும்
சிறந்த காதலி சென்றுழித் தரூஉம்
மகதத் தெதிர்ந்த தகுதி யாளன்
மதுகாம் பீர வனமெனுங் காவினுட்
புகுதந் திருந்து புணர்க்கு மின்றவட்
சேறு மெழுகெனச் சிறந்தன னாகி
மாறு மகிழ்ச்சியொடு மன்னவன் விரும்பிக்
கொடுஞ்சி நெடுந்தேர் கோல்கொள வேறி
நெடுங்கொடி வீதி நீந்துபு போகி
வித்தக வினைஞர் சித்திர மாக
உறழ்படச் செய்த வொண்பூங் காவின்
எறுழ்மிகு மொய்ம்ப னிழிந்தகம் புகவே
நோயற வெறியு மருந்தோ ரன்ன
வாய்மொழிச் சூழ்ச்சித் தோழற் குணர்த்தலிற்
குழன்ற குஞ்சி நிழன்றெருத் தலைத்தரக்
கழுவாது பிணங்கிய வழுவாச் சடையினன்
மறப்போ ரானையின் மதந்தவ நெருக்கி
அறப்பே ராண்மையி னடக்கிய யாக்கையன்
கல்லுண் கலிங்கங் கட்டிய வரையினன்
அல்லூ ணீத்தலி னஃகிய வுடம்பினன்

வெற்ற வேந்தன் கோற்றங் கோள்கெனச்
செற்றந் தீர்ந்த செய்தவச் சிந்தையன்
நன்னுத லரிவையும் பொன்னெனப் போர்த்த
பசலை யாக்கையொடு பையு ளெய்தி
உருப்பவிர் மண்டிலத் தொருவயி னேடும்
மருப்புப் பிறையின் மிகச்சுடர்ந் திலங்காது
புல்லெனக் கிடந்த நுதலினோ டலமந்
தியல்பிற் றிரியா வின்பெருங் கிழவனை
வியலக வரைப்பின் மேவர வேண்டி
விரத விழுக்கலம் விதியுளி யணிந்து
திரித லில்லாச் செந்நெறிக் கொள்கையள்
பொன்னிறை சுருங்கா மண்டிலம் போல
நன்னிறை சுருங்கா ளுடோறும் புறந்தரூஉத்
தன்னெறி திரியாத் தவமுது தாயொடும்
விருத்துக் கோயிலுட் கரப்பறை யிருப்ப
யாப்புடைத் தோழ னரசனோ டணுகிக்
காப்புடை முனிவனைக் காட்டின னாக
மாசின் மகதத்துக் கண்டோ னல்லன்
யூகி மற்றிவ னெளியல தெல்லாம்
ஆகா னாகலு மரிதே மற்றிவன்
மார்புற முயங்கலும் வேண்டுமென் மனனென
ஆராய் கின்றோற் ககலத்துக் கிடந்த
பூந்தண் மாலையொடு பொங்குநூல் புரள
இதுகுறி காணென விசைப்பது போல
நுதிமருப் பிலேகை நுண்ணிது தோன்ற
ஐயந் தீர்ந்து வெய்துயிர்த் தெழுந்துநின்
றூறில் சூழ்ச்சி யூகந்த ராய
நாறிருங் கூந்தலை மாறிப் பிறந்துழிக்
காணத் தருகுறு முனிவனை நீயினி
யாணர்ச் செய்கை யுடைத்தது தெளிந்தேன்
வந்தனை யென்றுதன் சந்தன மார்பிற்
பூந்தார் குழையப் புல்லினன் பொருக்கெனத்
தீந்தேன் கலந்த தேம்பால் போல
நகையுருத் தெழுதரு முகத்த னாகித்
துறந்தோர்க் கோத்த தன்றுநின் சிறந்த

அருள்வகை யென்று வகலுந் தோழனைப்
பொருள்வகை யாயினும் புகழோய் நீயினி
நீங்குவை யாயி னீங்குமென் னுயிரெனப்
பூங்குழை மாதரைப் பொருக்கெனத் தம்மென்
றுங்கவன் மொழிந்த வல்ல னோக்கி
நன்னுதன் மாதரைத் தாயொடு வைத்த
பொன்னணி கோயில் கொண்டனர் புகவே
காரிய மிதுவெனச் சீரிய காட்டி
அமைச்ச ருரைத்த திகத்த லின்றி
மணிப்பூண் மார்பன் பணித்தொழி லன்மை
நல்லா சார மல்லது புரிந்த
கல்லாக் கற்பிற் கயத்தியேன் யானென
நாண்மீ தூர நடுங்குவன ளெழுந்து
தோண்மீ தூர்ந்த துயர நீங்கக்
காந்த ணறுமுகை கவற்று மெல்விரல்
பூண்கல மின்மையிற் புல்லெனக் கூப்பிப்
பிரிவிடைக் கொண்ட பின்னணி கூந்தல்
செருவடு குருசி றூண்முதற் றிவள
உவகைக் கண்ணீர் புறவடி நனைப்பக்
கருவி வானிற் கார்த்துளிக் கேற்ற
அருவி வள்ளியி னணிபெறு மருங்குலள்
இறைஞ்சுபு கிடந்த சிறந்தோட் டழீஇச்
செல்ல றீரப் பல்லூழ் முயங்கி
அகல நின்ற செவிலியை நோக்கித்
துன்பக் காலத்துத் துணையெமக் காகி
இன்ப மீதற் கியைந்துகை விடாது
பெருமுது தலைமையி னொருமீக் கூறிய
உயர்தவக் கிழமைநம் முடம்பி னாகிய
சிற்றுப காரம் வற்றல் செல்லா
தால வித்திற் பெருகி ஞாலத்து
நன்றி யீன்ற தென்றவட் கோத்த
சலமி லருண்மொழி சாலக் கூறி
இரவிடைக் கண்ட வண்ணமொ டிலங்கிழை
உருவ மொத்தமை யுணர்ந்தன னாகி
ஆய்பெருங் கடிநக ரறிபக் கோயிலுள்

தேவியை யெய்திச் சிறப்புரை பரப்ப
இருங்கண் முரசம் பெருந்தெரு வறைதலின்
மாணக ருவந்து மழைதோட நிவந்த
சேணுயர் மாடத்து மிமிசை யெடுத்த
விரிப்பூங் கோடியோடு விழவயர்ந் தியற்றி
அமைச்ச ரற்றலு நண்பின தமைதியும்
நயத்தகு நன்னுத லியற்பெரு நிறையும்
வியத்தன ராகி மதித்தனர் பகரப்
பஞ்ச வண்ணத்துப் படாகை நுடங்கக்
குஞ்சர வெருத்திற் குடைநிழற் றந்த
புண்ணிய நறுநீர் துன்னினர் சூழ்இ
அரசனுந் தேவியுந் தோழனு மாடி
விலைவரம் பறியா விழுத்தகு பேரணி
தலைவரம் பானவை தகைபெற வணிந்து
கூறுதற் காகாக் குறைவி லின்பமொடு
வீறுபெற் றனரான் மீட்டுத்தலைப் புணர்ந்தேன்.

உரை

எ. வாசவதத்தை வந்தது

அஃதாவது நெடுங்காலம் உதயணனைப் பிரிந்து கரந்துறைந்த வாசவதத்தை மீண்டும் அவன்பால் வந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(அமைச்சர் உதயணன்பால் வாசவதத்தையை விடுத்தல்)

க - ரு : ஆணை...............இன்மையும்

(பொ - ரை.) *இவ்வாறு ஆணையையுடைய உதயண வேந்தன் தனித்துயில் கொண்டகாலத்தே அறிவுமிக்க உருமண்ணுவா முதலிய அமைச்சர்கள் ஒளி பொருந்திய நெற்றியையுடைய அவ்வாசவதத்தை தன்னோடு அன்புத் தொடர்புபெற்று ஆகூழால் இயன்ற தன் பகுதியிற்பட்ட கணவனாகிய உதயண மன்னன் நிலஉலகை ஆளும் இன்பத்தை நுகர்தலன்றி வேறொரு பெண்ணின்பத்தைப் பேணாதிருத்தலும்; என்க.*

(வி - ம்.) ஆணை - கட்டளையிடுதல். வேந்தன் : உதயணன். மாதர் : வாசவதத்தை. அமைச்சர் : உருமண்ணுவா முதலியோர். உழுவலன்பினுல் தொடர்பு படுத்தி ஆகூழால் கூட்டப்பட்ட தன்னுடைய பகுதியிற்பட்ட கணவன் என்க. மண்பால் செல்வம் - மண்ணுலகத்தை ஆளும் இன்பம். பெண்பாற் செல்வம் - பெண்ணிடத்து நுகரும் இன்பம்.

(இதுவுமது)

கூ - கரு : எரி................தேற

(பொ - ரை.) தீப்போன்று எரிகின்ற சினத்தையும் ஆற்றலையுமுடைய தருசக மன்னனுடைய தங்கையும், நற்பண்புகளோடு பொருந்தியவளும் ஆகிய பதுமாபதி நங்கையைத் தானும் அவ்வுதயணன் காமுற்றது போர்செய்கின்ற படைமிக்க பகைமன்னனாகிய ஆருணிக்கு அஞ்சித் துணைவலி பெறுதற் பொருட்டுத் தருசக மன்னனோடு கேண்மை கொள்ளுதற்குக் கருதி மேற்கொண்ட கருமநுதலிய கள்ளக் காமம் ஆதலன்றி அவளிடத்தும் ஒருமுனைப்பட்டுச் செல்லாமல் தன்னையே நினைந்து புலம்பாநின்ற நெஞ்சமுடைமையும் இரவும் பகலும் அவ்வாசவதத்தையின்பால் உண்டான பிரிவுத் துன்பத்தாலே வருந்திப் புலம்பாநின்ற தன்மையையும் இவைபோன்ற பிற நிகழ்ச்சிகளையும் நல்ல நெற்றியையுடைய அவ்வாசவதத்தை தானே கண்கூடாகக் கண்டு தெளிந்துகொள்ளும் பொருட்டு; என்க.

(வி - ம்.) எரிசினம் : வினைத்தொகை; உவமத்தொகையுமாம். மொய்ம்பு - வலிமை. பண்பு - குலமகளிர்க்குரிய நற்குணங்கள். வேந்தனை - ஆருணியை. கருமக் காமம் - காரியத்தின் பொருட்டு மேற்கொண்ட பொய்க்காமம். "கருமநுதலிய கள்ளக்காமம்" (க. ௩௫ : ௨௨அ.) என்றார் முன்னும். அவள்மாட்டு (௬) - பதுமாபதியின்பால். அவன் மாட்டு (கக) - வாசவதத்தையின்பால். பருவரல் நோய் - துன்பமாகிய காமப்பிணி. படி - தன்மை. நன்னுதல் : வாசவதத்தை.

(இதுவுமது)

கச - எ : மறப்பு................புகுத்தலின்

(பொ - ரை.) அவ்வுதயண மன்னன் மெய்ம்மறந்திருக்கும் செவ்வியில் அப்பண்புகளை அவளுக்குக் காட்டுதலைத் துணிந்தவராய்ப் பெருஞ்சிறப்புடைய அவ்வாசவதத்தையைச் சிவிகையில் ஏற்றிக் கொணர்ந்து, "தேவீ! பெறுதற்கரிய நின் கணவனுடைய தன்மையைக் கண்டருளுக" என்று கூறி அழகிய மணிவிளக்கங்களையுடைய அப்பள்ளிப் பேரறையினூடே விடுத்தலாலே; என்க.

(வி - ம்.) மறப்பிடை - மெய்ம்மறந்திருக்கும் செவ்வியில். சிறப்புடை மாதர் : பட்டத்துத் தேவியாகிய வாசவதத்தை. கொழுநன் - கணவன். ஆய் - அழகு. அறை - பள்ளிப்பேரறை.

(உதயணனுடைய நிலை)

கஅ - உஅ : மாமணி..............கண்டே

(பொ - ரை.) அவ்வறையின்கண் சிறந்த அழகுடைய பெரிய தன் கைகள் பக்கத்தே வாளா தாழ்ந்து கிடப்பத் தன்பால் பொருந்திய அன்பையுடையனுகித் திருவாய் திறந்து, "கரணங்களையுடைய நல்ல யாழினை, வாசவதத்தாய்! யான் நினக்குக் கற்பிக்குங் காலத்தே எனக்குச் சாக்காட்டைத் தருதற்குக் காரணமான மதர்ப்பினையுடையதாய நின்னுடைய கடைக்கண் நோக்கம் எனக்குப் படைக்கலம்பட்ட பழம்புண்ணினூடே சுடுகின்ற மருந்தெண்ணெயைப் பெய்ததுபோல வருத்தா நிற்றலால் ஆற்ருது வருந்தினேன், நீ உடனிருக்கவும் அங்ஙனம் வருந்துகின்ற என்னை மழலைமாருத அழகிய மொழிகளையுடைய நங்காய்! நீ மறந்தொழிந்தாயோ" என்று வாய்விட்டுக் கூறிப் புலம்பா நின்ற அழகிய பூந்தட்டின்கண் தன் பக்கத்தே வைக்கப் பட்ட அகவிதழால் புனைந்த மலர்மாலையைக் கரியச் செய்கின்ற வெப்பமுடைய காம உயிர்ப்பினை உடையனுய்க் கனவினிடத்தும் தன்னையே நினைந்து அரற்ரு நின்ற அக்கணவனை அந்நங்கை கண்கூடாகக் கண்டு; என்க.

(வி - ம்.) மாமணி - சிறந்த மணியாழியுமாம். தடக்கை - பெரிய கை. கரணம் - யாழ்க்கரணம். யாழ் - கோடவதி. மதர் வைத்து - மதர்ப்பினையுடையது. படைப்புண் - படைக்கலம் பட்டதனுலாய புண். அழல் நெய் : வினைத்தொகை; சுடுகின்ற மருந்து நெய். வாய் சோர்ந்து - வாய்விட்டுப் பிதற்றி. பூந்தட்டத்து - மலர்வைக்கப்பட்ட தட்டங்களில். தெற்றிய - புனைந்த. தாமம் - மாலை. காம உயிர்ப்பு - காமப்பிணியாலுண்டாகிய வெய்துயிர்ப்பு.

(வாசவதத்தையின் செயல்)

௨௯ - ௩௩ : நனவினும்..........உவகையள்

(பொ - ரை.) "நறிய மலர்மாலையினையுடைய மார்பினையுடைய எம்பெருமானுடைய நிலைமை இக்கனவினன்றி நனவிடத்தும் இத்தன்மையதோ? என்னே! என்னே! தன்னை அல்லது பற்றுக்கோடில்லாத நல்லநுதலையுடைய தன்காதலியை மீட்சியில்லாத பிரிவுக் காலத்தே இங்ஙனம், நினைந்து அரற்றுதல் பெரிய கடலையுடைய இந்நில உலகத்தின்கண் உயர்குடிப்பிறந்த நம்பிக்கு இயல்பு" என்று கூறும் சான்ருேர் மொழி மெய்யாதலை யான் எம்பெருமான்பாற் கண்டேன் என்னும் குறையாத மகிழ்ச்சியை உடையளாய்; என்க.

(வி - ம்.) நனவினும் இதுவோ என்றது இக் கனவின்கண் அல்லது நனவு நிலையினும் இத்தன்மைத்தோ என்பதுபடநின்றது.

தன்னலதில்லா என்றது, தன்னையன்றிப் பற்றுக் கோடு இல்லாத. மறுதரவு - மீட்சி. கடல்வரைப்பு - கடல் சூழ்ந்த நிலஉலகம். உயர்ந்தோன் - உயர்குடிப்பிறந்தோன். கண்டனென் - வாய்மையாதலைக் கண்டேன்.

(இதுவுமது)

நஅ - சு0 : நூல்...........விதும்பி

(பொ - ரை.) மெய்ந்நூல் கூறிய நெறியில் வழுவாத நுணுக்கமான நல்லொழுக்கம் இந்நம்பிபால் இருத்தலாலே இம்மை மாறிச் செல்லும் மேனிலையுலகத்தும் யானே இவனுக்குக் காதலியாகுக! என்று விரும்பி அக் கணவனைக் கூர்ந்து பார்த்துக் கைகூப்பித் தொழுது ஒளி மழுங்கியவளாய் மெல்ல அணுகி நிறைந்த காதலோடே அவன் கையின் பக்கத்தே இருந்த கோடவதி என்னும் தெய்வ யாழினது பெருமை மிக்க அழகினைக் கண்டு தன் மகவினைக் காணுகின்ற தாயைப்போல மிகவும் விதுப்புற்று; என்க.

(வி - ம்.) நூல் - அற நூல். நுனிப்பொழுக்கு - நுணுகிய ஒழுக்கம். ஏனையுலகம் - இம்மை மாறுங்கால் புகும் மேனிலையுலகம். காதலியாக இயைக என்க. இணை விரல் - கை; ஆகுபெயர். மழுகிய - மழுங்கிய. கைவலத்து - கையின் பக்கத்தே. ச்சேடணி - பெருமை மிக்க அழகு. விதும்பி - விரைதலுற்று; பரபரப்புற்று.

(இதுவுமது)

சக - சரு : சார்ந்தனள்.............இசைப்ப

(பொ - ரை.) அக்கோடவதியினை அணுகிச் சென்று அமர்ந்து அதனைக் கையிலெடுத்துக் கிளியின் அலகு போன்ற கூர்த்த நகத்தினையுடைய தன் விரலின் நுனி சிவக்கும்படி அவ்வியாழின் இசை நடையைச் செவியா லோர்ந்து நரம்புகளை வருடாநிற்றலாலே அக் காதலியினது கைத்தொழில் நயத்தையுடைய அவ்விசை அக் காதலனுடைய குற்றமற்ற செவியினூடே இனிதாகப் புகுந்து ஒலியாநிற்ப; என்க.

(வி - ம்.) சார்ந்தனளிருந்து - அணுகி வந்திருந்து. கிள்ளை வாயின் அன்ன வள்ளுகிர் - கிளியினது அலகை யொத்த கூரிய நகம். நுதிவிரல் - விரல்நுனி. கதி - இசை நடை. அது மூவகைப்படும். கைநயம் - கைத்தொழிலின் நயம். கரணம் - இசை : ஆகு பெயர். செவிமுதல்; முதல். ஏழாவதனுருபு.

(உதயணனுடைய செயல்)

சசு - ருக : வாசவ..............கூறெனு

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் துயில் மயக்கத்தோடே, "வாசவதத்தாய்! நீ வந்து விட்டாயோ" என்று

கூறிக்கொண்டு அவளுடைய கூந்தலையும் அழகிய முதுகையும் கையாற்றடவி மெலிந்த தனது திண்ணிய தோளை அவள் மார்பிற் சாத்தி, "நல்ல நெற்றியையுடைய நங்காய்! நீ என்னைப் பிரிந்து நாள்கள் பல கழியாநிற்பவும் என்னை நினையாமல் அயலாள் போன்று பிரிவுத் துன்பத்தை எவ்வாறு ஆற்றி யிருந்தனை? அதனை யான் அறியும்படி கூறுவாயாக" என்று வினவாநிற்ப; என்க.

(வி - ம்.) பூம்புறம் - அழகிய முதுகு. ஆய்ந்த - மெலிந்த. ஆகம் - மார்பு. அசைஇ - சாத்தி. என்வயின் - என்னை. ஏதிலை போல - அயலாள் போல.

(வாசவதத்தை வாளாவிருத்தல்)

ருஉ - ருங : மாற்றுரை..............இருப்ப

(பொ - ரை.) அம்மொழிகேட்ட வளைந்த குழையினையுடைய அவ்வாசவதத்தை தன் நெஞ்சினுள் சுழற்சி எய்தி மறுமொழி கொடாளாய்த் தலைகுனிந்து வாளாவிருப்ப;- என்க.

(வி - ம்.) மாற்றுரை - மறுமொழி. அலமரீஇ - சுழன்று. கோட்டுவனள் - குனிந்து. கொடுங்குழை : அன்மொழித்தொகை; வாசவதத்தை.

(மீண்டும் உதயணன் அரற்றல்)

ருச - சுக : மயங்கு.....................போன்றனை

(பொ - ரை.) "நங்காய்! கண்டோர் மயங்குதற்குக் காரணமான பூஞ்சோலையையுடைய மலைச்சாரலில் யாம் உண்டாடி மீண்டும் அரண்மனைக்கு வந்த காலத்தே ஒரு நாள் நீ என்னை நோக்கிப் பெரிதும் விருப்பம் உடையையாய் 'எனக்கு அப்பூஞ்சோலையின்கண் உள்ள தழையையும் கண்ணிகளையும் கொணர்ந்து தருக. அவை என்னால் பெரிதும் விரும்பப்படுவனவாம்' என்று வேண்டா நிற்றலால் யான் நின் வேண்டுகோட்கிணங்கி மீண்டும் அம் மலைச் சாரலுக்கு வேட்டையாடப் போன பொழுது வேடர் அரண்மனையின்கண் வெம்மை மிக்க நெருப்பை மூட்டுதலால் பொறுத்தற்கரிய துன்பத்தை யடைந்து இனிய உயிரைவிட்ட விளங்கா நின்ற அணிகலன்களையுடைய மடந்தாய்! நீ இப்பொழுது நின்னுடைய அணிகலன்களையெல்லாம் அகற்றி யான் அறிதற்கியலாதபடி பின்னுதலுடைய சடையை மட்டுமே அணியாகக் கொண்டு பிறள் ஒருத்தியைப் போன்று தோன்றா நின்றனை; என்க.

(வி - ம்.) சோலைமபங்கு மலை எனினுமாம். இச்சோலை இலாவாணக நகரத்தின் அருகிலுள்ள சோலை. ஆடி - உண்டாடி. கண்ணி - மாலை. தம் - தருக. வேட்டம் - வேட்டை. கோட்டம் - கோயில்; என்றது அரண்மனையை. கூரெரி : வினைத்தொகை. ஆரஞர் - பொறுத்தற்கரிய துன்பம். ஓரா - உணர்ந்துகொள்ள மாட்டாதபடி. பின் - சடை. பின்னாகிய அணி. பிறள் - அயலாள்.

(இதுவுமது)

௬௨ - ௬௭ : எரி............பொழுதின்

(பொ - ரை.) "தீயின்கண் முழுகி இறந்தவர்களின் தன்மை இங்ஙனந்தான் இருக்குங்கொல் யான் அறிகின்றிலேன்! நீ இங்ஙனமிருத்தற்குரிய காரணத்தை யான் அறிந்து கொள்ளும்படி கூறுவாயாக!" என்று கூறி அமையாத மகிழ்ச்சியோடே அவளது உடம்பினைக் கையால் தீண்டியறிந்தும் தேன் பொருந்திய படலைமாலையையுடைய திருமகள் வீற்றிருக்கின்ற மார்பினையுடைய அவ்வுதயண மன்னன் கனா நிகழ்ச்சி போல நன்கு அறியாதவனாய் அக் காதல் மொழியோடே மீண்டும் சினமிக்க தன் நெடுங் கண்களை மூடித் துயில் கொள்ளா நிற்கும் பொழுது; என்க.

(வி - ம்.) எரி - நெருப்பு. இது - இந்நிலைமைக்குற்ற காரணம். அவள் ; வாசவதத்தை. படலை - மலருந்தளிரும் விரவிய மாலை. திரு - திருமகள். கனா நிகழ்ச்சியைக் காண்பவன் நன்கு அறியாதது போல இந்நிகழ்ச்சியையும் அறியாதவனாய் என்க. காதலின் - காதலோடே. மறுத்தும் - மீண்டும்.

(அமைச்சர் வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்தல்)

௬௮ - ௭௪ : வழுக்கில்..............கேளென

(பொ - ரை.) குற்றமற்ற பெரிய புகழையுடைய வயந்தகன் அங்குச் சென்று வாசவதத்தையை நோக்கி, "பெருமாட்டி! கேட்டருள்க! நீ நல்லொழுக்கின்கட் பிறழாதயூகி உடனிருப்பவே எம்பெருமானை நாளைக்கு எய்துவதே தகுதியாம்; இற்றை நாள் நின்னை யாங்கள் இங்கே கொணர்ந்தது எற்றுக் கென்பாயாயின் கூரிய வேல் போலுங் கண்ணையுடையோய்! நின்னுடைய கணவன் நின்பால் அன்பு அறாதவனாய் இருக்கும் உண்மையை அவன் துயிலுங் காலத்தே நினக்குத் தோன்றும்படி காட்டுதலாகிய அதனை யாங்கள் மிக விரும்புதலாலேயாம்" என்று அறிவியா நிற்ப; என்க.

(வி - ம்.) வழுக்கு - குற்றம். சீர்த்தி - மிகுபுகழ். நீ நின் கணவனை அடையும்பொழுது யூகியும் நின்னுடன் இருத்தல் வேண்டும் என்பது கருத்து. இன்று - காட்டுதல்வேண்டி நின்னை ஈண்டுத் தந்தேம் என்க. துயிலுங்கால் தோன்றும் மொழிகளாலும் இங்கிதங்களாலும்

நின்பால் அன்பு குறையாதிருத்தலைக் காட்டக் கருதி என்க. கண்ணி : விளி. அது - காட்டுதலாகிய அதனை. தந்தேம் - கொணர்ந்துவிட்டேம்.

(இதுவுமது)

எசு - அரு : பைந்தொடி..............எய்த

(பொ - ரை.) அதுகேட்ட வாசவதத்தை அவ் வயந்தகன் கூற்றினை நினைபவள் ஒரோவழி, எம்பெருமான் யான் யூகி என்னும் சான்ருவானேடு தன்னை எய்தாமல் இங்ஙனம் தனித் தெய்திய வழி இவள் நிறையிலாள் என்று கூறுவன் என்னுங் கருத்தால் இவ்வமைச்சன் இங்ஙனம் கூறினனே என்று கருதி நடுங்கிய நெஞ்சத்தோடு வெள்ளத்தால் இடிக்கப்படுகின்ற கரை போன்று தன் நெஞ்சழியாநிற்ப விம்முதலுற்றுச் சடையாக அடங்கிய நெய்ப்புடைய கூந்தலையுடைய அம் மடந்தை வெவ்விய முலையினையுடைய தன் மார்பின்கண் தண்ணென்று கிடந்த உதயணனுடைய இருப்புத்தூண் போன்ற நெடிய கையை மெல்ல எடுத்துத் தூய அப் படுக்கையிற் கிடத்தித் தன் கணவனைக் கை கூப்பி வணங்கிப் பெறுதற்கரிய உடலினின்றும் பிரியா நின்ற உயிர்போலப் பெரிதும் துன்புற்றுப் பெரும் புகழையுடைய அத் தேவி அவனைப் பிரிந்துபோய்த் தன் செவிலித்தாயும் யூகியும் இருந்த இடத்தை எய்தாநிற்ப; என்க.

(வி - ம்.) புனை - புனல் ; நீர். வயந்தகன் நீ உன் கணவனை எய்துங்கால் யூகியும் உடனிருத்தல் வேண்டும் என்பதற்குக் காரணம் நற்சான்ருகிய அவ்வமைச்சன் உடனில்லாமல் யான் தனியே எம்பெருமானை எய்துமிடத்தே எம்பெருமான் இவள் நிறையிலள் என்று கூறுவான் என்னும் கருத்தோ என்று ஐயுற்று அதனை நினையுந்தோறும் நெஞ்சழிந்து விம்மினுள் என்பது கருத்தாகக் கொள்க. எழு - இருப்புத் தூண். சேக்கை - படுக்கை. பெரும்பெயர் - பெரும்புகழ். ஈனுத் தாய் - செவிலி; ஈண்டுச் சாங்கியத் தாய்.

(உதயணன் விழித்து அரற்றல்)

அச - கூரு : போரார்..............மன்னனை

(பொ - ரை.) போராற்றல்மிக்க உதயணமன்னன் உறங்கியவன் புரண்டு நகர்ந்து "மடப்பமுடையநங்காய்! நீ என் வினவிற்கு ஏதும் மறுமொழி தருகின்றிலை" என்று கூறிக்கொண்டே அவளைத் தனது பெரிய மலைபோலும் மார்பின்கண் அடங்குமாறு தழுவ முயல்பவன் அங்கு அவளைக் காணுனய்க் கையறவு கொண்டு அமையாத இனிய துயில் மயக்கம் தெளியப்பெற்று, உயரிய மணியைப்பெற்ற ஒரு வறியோன் பெறுதற்கரிய அம் மணியை மிகவும் ஆழ்ந்த நீரையுடைய மடுவின்கண் வீழ்த்தி விட்டாற்போன்று, தான் உறங்கும்பொழுது கண்ட வாழ்க்கைத் துணைவியாகிய இன்பத்தேவியை நல்லிலக்கணம் உடைய அழகிய

கண்களை விழித்துப் பார்க்கும்பொழுது காணுனுயப் புலம்பா நின்றான். அங்ஙனம் புலம்பும் அவ்வேந்தனை; என்க.

(வி - ம்.) குருசில் : உதயணன். கையறவு - செயலறுதல். அனந்தர் - மயக்கம். பெருமணி - விலைமிகுந்த மணி. நல்குரவாளன் - வறியவன். அருமணி - பெறற்கரிய மணி. குண்டுகயம் - ஆழமான நீர் நிலை. உதயணன் வாசவதத்தையைக் கண்டு பின் காணுனமைக்கு வறியவன் மணிபெற்று அதனை நீர்நிலையில் வீழ்த்திவிட்டமை யுவமை. நலம் - இன்பம்; அழகுமாம். இயல்பு - நல்லிலக்கணம். மன்னன் : உதயணன்.

(வயந்தகன் உதயணனிடம் கூறல்)

கூரு - எ : அருமறை............காட்ட

(பொ - ரை.) அங்ஙனம் புலம்பாநின்ற அம் மன்னன்பால் உணர்தற்கரிய மறைகளைப் பயின்ற செந்நாவினையுடைய வலிமையுடைய வயந்தகன் மிக விரைந்துவந்து "அரசே! உலகாள் வேந்தர் இரவும் பகலும் துன்பத்தோடே புலம்பிக்கொண்டிருத்தல் நற்செயலாகாது" என்று காரணங்களைக் காட்டும் சொற்கள் பலவும் எடுத்துக்காட்டி இடித்துரையா நிற்ப என்க.

(வி - ம்.) வய - வலி. வல்விரைந்து - மிக விரைந்து. இருள் - இரவு; ஆகுபெயர். எவ்வம் - துன்பம். பொருள்-நற்செயல். புரவலர் - அரசர். காரணக்கிளவி - காரணத்தைக் காட்டு மொழி. கழறுவனன் - இடித்துரைப்ப.

(உதயணன் கூற்று)

கூஅ - க0உ : தேர்............இருப்ப

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் "வருக! வருக! வயந்தக! யான் என் செய்கோ? தேரின் அணிகளைக்கொண்ட படைகளையும் போராற்றும் திறத்தையும் மிகுதியாகப் பெற்றவனும் பிடியானைகளோடு கூடிக் களியாநின்ற யானையையுடையவனும் ஆகிய பிரச்சோதன மன்னனுடைய மகளாகிய தேன் றுளும்பும் செந்தாமரை மலர்போன்ற பெரிய கண்களையுடைய வாசவதத்தை எனது பள்ளிப் பேரறையின்கண் யானறியா வண்ணம் மெல்லவந்து புகுந்து நல்ல கோடவதி யாழின் நரம்பினை வருடி இன்னிசை எழுப்பியவளாய் என்னை அணுகி இரா நிற்ப" என்க.

(வி - ம்.) தேரால் அழகுற்ற சேனையுமாம். மீக்கூரிய - மிகுந்த. வடி - தேன். பையென - மெல்ல.

(இதுவுமது)

க0ரு - கூ : வாச............என

(பொ - ரை.) "யான் அவளுடைய நறுமண வெண்ணெயிடாமல் அழுக்கோடு பின்னிக்கிடந்த சடையினையுடைய முதுகி

ளேடு நறுமணங் கமழும் நுதலேயும் இடையையும் என் கைக ளாலே தடவி நன்கு மெலிவகன்ற உடம்பினேயுடையேனுகிப் பெரிதும் மகிழ்ச்சியோடு மீண்டும் துயில்கொண்டேனுக! அவள் மீண்டும் அந்தோ! என்னைப் பிரிந்து போயினள் காண்! யான் என் னெஞ்சத்தை இப்பொழுது அமைதியின்கண் நிறுத்த வியலாதேன் ஆயினேன்." என்று வருந்திக் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) பிணங்குபு - பின்னலுற்று. பின்னு - சடை. புறம்- முதுகு. மருங்குல் - இடை. அழிவு - மெலிவு. ஆக்கை - உடம்பு. கழிபேருவகை - மிகவும் பெரிய மகிழ்ச்சி. கண்படை - துயில். முன்னர் வயந்தகன் கூறியபடி மனத்தை ஒருநிலேயில் நிறுத்தித் துயின்றுனுகலின், இனி அவ்வாறு நிறுத்திவைத்தல் இயலாது என்பான் இனி நெஞ்சம் நிறுத்தல் ஆற்றேன் என்றுன்.

(வயந்தகன் கூற்று)

கக௦ - கக௧ : கனவில்..............இருப்ப

(பொ - ரை.) அது கேட்ட வயந்தகன் "காவல் வேந்தே! தேவரே விரும்பினும் அவர் கனவிற் கண்டதொன்றனை நன விடத்தே பெறுதல் இயலாது காண்! நின் கூற்றினைச் சான்ருேர் கேட்பினும் பெரிய நகைப்பினை உண்டாக்குமே. அது கிடக்க, அரசே கேட்டருள்க! இப் பள்ளியறையின்கண் வினவுவார்க்கு மறுமொழி கொடாமல் ஓரியக்கி மயக்கற்ற நங் கோப்பெருந்தேவி வாசவதத்தையாரின் வடிவினை மேற்கொண்டு ஆடலும் பாடலும் கலந்தியற்றி உறையாநின்றதுகாண், அவ்வியக்கி நம்மனேரை மயக்கி இன்னு செய்யாமல் பாதுகாப்பாக அமைவதொரு மந்தி ரத்தை யான் ஓதியுள்ளேன்காண்" என்று தனது வாயே பறை யாகக்கொண்டு நாக்கடிப்பாக உரத்து வாழ்த்துரை பற்பல கூறி அவன் மறுமொழியை எதிர்பாராமல் தான் ஒருவனே பேசுவா னுய் அப் பேச்சினின்றும் மாறுபடானுய் அவ்வயந்தகன் இருந்த பொழுதில் என்க.

(வி - ம்.) இசைதல் செல்லாது : ஒரு சொல்; இயையாது என்ற வாறு. காவலாள! : விளி. கற்ருேர் என்றது - சான்ருேர் என்பதுபட நின்றது. கேட்பினும் எனல் வேண்டிய சிறப்பும்மை செய்யுள் விகாரத் தால் தொக்கது. சான்ருேர் நகைத்தல் அரிதாகலின் கற்ருேர் கேட் பினும் இது நகையாம் என்ருன். விரை இ-கலந்து. தேவி:வாசவதத்தை. ஈண்டு - இப் பள்ளியறையின்கண், அவ்வியக்கியே நின்னை இவ்வாறு மயக்கிற்று என்பது குறிப்பெச்சம். இயக்கி மயக்குதலுண்டென்பதனை "மயக்குந் தெய்வம் இவ்வன் காட்டுண்டென வியத்தகு மறையோன் விளம்பினன் ஆதலின் வஞ்சம் பெயர்க்கும் மந்திரத் தாலிவ் வஞ்சி லோதியை அறிகுவன் யானெனக் கோவலனுவிற் கூறிய மந்திரம்" எனவரும் சிலப்பதிகாரத்துங் காண்க. (கக ; கக௨ - கூ) ஒருதலேக் கூற்று - மறுமொழி பெருமல் ஒருவனே கூறும் கூற்று. துணிவான சொல் என்பாருமுளர். தான் பேசும் நெறியிற் றிரிவிலனுய் என்க.

(உதயணன் செயல்)

கஉ0 - உக : பண்டே............கழிஇ

(பொ - ரை.) இவ்வாறு வயந்தகன் வாய்ப்பறை யறைந்து கொண்டிருந்த பொழுதின் உதயண மன்னன் மெய்யே இது கனவேபோலும். பண்டுபோலவே இன்றும் யான் துயில் மயக்கத்தே இக் காட்சியைக் கண்டேன் ஆகலின், இது கனவே ஆதல் வேண்டும்; கனவன்றாயின் அவள் இங்ஙனம் மனமாறி என்னை விட்டுப் பிரிந்து போவளோ? என்று தன் னெஞ்சத்தே தெளிந்தும் தெளியானாய் மயங்கியிருந்து திருமகள் வீற்றிருக்கும் மார்பினையுடைய அவ்வுதயணன் அவ்விரவு கழிதலும் பள்ளியினின் றெழுந்து அன்புடைய சூதர் முதலிய சுற்றத்தார் கை தொழுது வாழ்த்தாநிற்பத் தனது செந்தாமரை மலர்போன்ற சிவந்த கண்களை அழகுறக் கழுவிக் காலைக்கடன் முடித்துப் பின்னர் என்க.

(வி - ம்.) பண்டும் யான் அவளைத் துயிலிடத்தே கனவிற் காண்டல் போன்று இன்றும் கண்படை மம்மருட் கண்டேன் என்றவாறு. மடமொழி : வாசவதத்தை. மார்பன் : உதயணன்.

(இதுவுமது)

கஉஎ — ௩க : குளம்பும்...........வீசி

(பொ - ரை.) ஆங்குநின்ற பணியாளரை நோக்கி "நீவிர் சென்று குளம்புகளினும் கொம்புகளினும் பொன்னழுத்திப் பெருமையுண்டாக அணிசெய்யப்பட்ட இளமையுடைய சிவப்புப் பசு பலவற்றைக் கழுத்திற் புத்தாடை சுற்றி இப்பொழுதே ஈண்டுக் கொணர்க" என்று கட்டளையிடா நிற்ப. அங்ஙனமே அப் பணியாளர் கொணர்ந்த அச்சேதாக்களை வாசவதத்தையை நினைந்து அவள்பொருட்டு அரிய மறையோதிய அந்தணாளர்க்கு ஏழு முறை வழங்கி என்க.

(வி - ம்.) "பொன்னிறைந்த பொற்கோட்டுப் பொற்குளம்பிற் [கற்றாதந்

தின்மகிழா னந்தணரை யின்புறுப்பச்—சென்னிதன்
மானிலமே யானுலகம் போன்றது வான்றுகள்போர்த்
தானுலக மண்ணுலகா மன்று"

எனவரும் (தொல் – புறத் - சூ. ௩டு, நச். மேற்.) பழம்பாடலான் அந்தணர்க்கு ஆன் வழங்கும் வழக்கத்தை யுணர்க.

சேடு - பெருமை. சேதா - சிவப்புப் பசு. கோடி - புத்தாடை முற்றி – சுற்றி. தேவி : வாசவதத்தை. வீசி - வழங்கி.

(இதுவுமது)

கங உ - ங எ : நனவில்.......... செவ்வியுள்

(பொ - ரை.) நனவிலே தான் கண்ட நல்ல நெற்றியையுடைய வாசவதத்தையை அவ்வுதயணன் கனவென்றே கொள்ளுதலாலே தன் நண்பர்களுக்கும் கூறுனுய்க் காமமுற்ற நெஞ்சினையுடைய காதலரைப் பிரிந்துறைவோருக்கு இன்பமுறுதற்குக் காரணமான அவாவினலே நிகழுங் காரியம் இத்தகையதுபோலும் என்று தன்னெஞ்சினுள்ளே இன்னோரன்ன பற்பலவற்றை நினைத்து இருந்த பொழுதின் என்க.

(வி - ம்.) மாதர் : வாசவதத்தை. இனியோர் - நண்பர். ஏம் - ஏமம் ; இன்பம். வேட்கையானிகழும் செயல் ஈது கொல் என்க. நினைஇ - நினைத்து.

(வயந்தகன் உதயணனிடம் கூறுதல்)

கங எ - சரு : வயந்தகன்............எழுகென

(பொ - ரை.) வயந்தகன் உதயண குமரனை அணுகி "வேந்தே ! நாம் பண்டு வாசவதத்தை தீயில் வெந்தாளென்ற துன்பத்தாலே மகத நாட்டிலே சென்று அங்கு அறம் பொருள் இன்பம் என்னும் மூன்று உறுதிப் பொருளினும் சிறந்த நின் காதலியாகிய வாசவதத்தை மாறிப் பிறந்த இடத்தினின்றும் மீட்டுத்தரும் வித்தையினையுடையவன் என்று கேள்வியுற்றுச் சென்று காணப்பட்ட குறையாத அருட்செல்வத்தையுடைய அந்தணனாகிய தகுதிமிக்க காகதுண்டக முனிவன் நம் பொருட்டு இற்றை நாள் நமது மதுகாம்பீரவனமென்னும் சோலையின்கண்வந்திருந்து அத்தேவியை நினக்கு வழங்காநிற்பன் ஆதலின் யாம் அச்சோலைக்குச் செல்வேம் எழுந்தருளுக !" என்று வேண்டாநிற்ப என்க.

(வி - ம்.) செல்வம் - அருட்செல்வம். அந்தணன் - காகதுண்டக முனிவன். மேனாள் என்றது, அரண்மனை தீப்பற்றிய காலத்தை. விழுமம் - துன்பம். அறம் பொருள் இன்பம் மூன்றிற்கும் காரணமாய்ச் சிறத்தலால் மூன்றினுஞ் சிறந்த காதலி என்றான். சென்றுழி - மாறிப் பிறந்த விடத்தினின்றும். சேறும் - செல்வேம்.

(உதயணன் செயல்)

கசரு - ருக : சிறந்தனனுகி...........புகவே

(பொ - ரை.) அச்செய்திகேட்ட உதயணமன்னன் உளஞ் சிறந்தவனாகி மாறாத மகிழ்ச்சியோடே வாசவதத்தையை அடைதலைப் பெரிதும் விரும்பிக் கொடிஞ்சியையுடைய நெடிய தேரினைப் பூட்டி வலவன் கோல் கொண்டு சமைய அத்தேரின்கண் ஏறிக்

கொடியுயர்த்தப்பட்ட நெடிய வீதியினைக் கடந்து சென்று வித்தகமுடைய கலைத்தொழிலாளர் ஓவியம்போன்று தோன்றும்படி இயற்றிய ஒள்ளிய அம்மதுகாம்பீரவனம் என்னும் மலர்ச் சோலையிலே இறங்கி வலிமைமிக்க தோளையுடைய அவ்வேந்தன் அகத்தே புகாநிற்ப என்க.

(வி - ம்.) உளஞ்சிறந்தனனாகி என்க. உளம் - ஊக்கமென்க. கொடுஞ்சி - தேர் உறுப்பிலொன்று. பாகன் கோல்கொள என்க. நெடுவீதி என்க. நீந்துபு - நீந்தி; கடந்து. வித்தக வினைஞர் - கலைவாணர். உறழ்பட - ஒப்புமையுண்டாக. "சித்திரச் செய்கை படாம் போர்த்ததுவே ஒப்பத் தோன்றிய உவவனம்" என்றார் மணிமேகலையினும் (ந. கசு அ - கூ.) எறுழ் - வலிமை. மொய்ம்பன் - தோளையுடையோன்.

(யூகியின் நிலைமை)

கருஉ - சுக : நோயற............சிந்தையன்

(பொ - ரை.) வயந்தகன் மன்னவன் வருகையை, உற்ற நோயினைத் துவரத் தீர்க்குமொரு மருந்தையே ஒத்த வாய்மொழியையும் சூழ்ச்சியையும் உடைய யூகிக்கு அறிவியாநிற்றலாலே அவ்வமைச்சன், நுனிகுழன்ற தன் தலைமயிர் நீழலிட்டுத் தன் பிடரிலே கிடந்து புரளா நிற்பவும், கழுவிக் கைசெய்யாமையாலே பின்னிக்கிடக்கின்ற குற்றமற்ற சடையையுடையனாகவும், தீவினையென்னும் போரினையுடைய யானையினது செருக்கறும்படி ஒடுக்கித் தனது அறவொழுக்கமாகிய பேராற்றலாலே அடக்கி வைத்த கொட்டிலாகிய உடம்பினையுடையனாகவும் காவிக்கற் குழம்பிற் றோய்த்த ஆடையை உடுத்த அரையினையுடையனாகவும் இரவுணவொழித்தலாலே இளைத்த உடலினையுடையனாகவும் வெற்றியுடைய வேந்தன் கொற்றம் கொள்வானாக என்று வாழ்த்தும் நெஞ்சினையுடையனாகவும் வெகுளிதீர்ந்த செய்தவச் சிந்தையையுடையனாகவும் இராநிற்ப வென்க.

(வி - ம்.) தன்னரசனுக்குற்ற துன்பத்தைத் தீர்த்தற் குவமையாக யூகிக்கு நோயற வெறியும் மருந்தினை எடுத்தார். தோழன் : யூகி. வயந்தகன் தோழற் குணர்த்தலின் என்க. குழன்ற - கடைசுருண்ட. குஞ்சி - ஆண்மயிர். நிழன்று - நீழலிட்டு. மறமாகிய யானையை என்க. அடக்கிக் கட்டிய கொட்டிலாகிய யாக்கையன் என்க. கல்லுண் கலிங்கம் - காவிக்கற்குழம்பிற் றோய்த்த ஆடை.

அல்லூண் நீத்தல் - சைனர் விரதங்களுள் ஒன்று. அஃகிய - இளைத்த. வெற்றம் - வெற்றி. செற்றம் - சினம். சிந்தையனாக இராநிற்ப என ஒருசொல் வருவித்தோதுக.

(வாசவதத்தையினியல்பு)

கசூஉ - சுகூ : நன்னுதல்...........அணிந்து

(பொ - ரை.) இனி நல்ல நுதலையுடைய வாசவதத்தை தானும் பொன்னிறங்கொண்டு மூடிய பசலையையுடைய யாக்கை

யோடு பிரிவுத் துன்பத்தைப் பெரிதும் உடையளாய் வெப்பத்தைப் பரப்புகின்ற ஞாயிற்று மண்டிலத்தை அணுகி ஒரு பக்கத்தே இயங்காநின்ற இரு கோடுகளையுடைய இளம்பிறை போன்று மிகுதியாக ஒளிவிட்டு விளங்குதலின்றிப் பொலிவிழந்து கிடந்த நுதலோடும் மனஞ் சுழன்று நல்லியல்பிலே மாறுபடாத இனிய பெருமைமிக்க தன் கேள்வனை மீண்டும் இப்பேருலகத்தே தான் பொருந்துதலை விரும்பி மேற்கொண்ட விரதத்தின் சிறந்த அணிகள் மட்டும் முறைப்படியே அணிந்தவளாகவும் என்க.

(வி - ம்.) அரிவை : வாசவதத்தை. பையுள் - துன்பம். உருப்பு - வெப்பம். மண்டிலம் - ஞாயிற்று மண்டிலம். மருப்பு - இரு நுனி. ஞாயிற்றுமண்டிலத்தை அணுகி இயங்குதலாலே இளம்பிறை ஒளிமழுங்கித் தோன்றுதலியல்பு. அலமந்து - சுழன்று. இயல்பு - நற்பண்பு. கிழவன் : உதயணன். மேவர - பொருந்துதல் உண்டாக. விரதவிழுக்கலம் - நோன்பின்பொருட்டு அணிகின்ற சிறந்த அணிகலன். அஃதாவது கடிகை நூல். இதனை "பொலங்தொடி தின்ற மயிர்வார் முன்கை வலம்புரி வளையொடு கடிகைநூல்யாத்து" எனவரும் நெடுநல் வாடையினும் (கசக-உ) காண்க. விதியுள் - முறைப்படி.

(இதுவுமது)

களo - எச : திரிதல்...........இருப்ப

(பொ - ரை.) பிறழ்தலில்லாத செவ்விய கற்பு நெறியை மேற்கொண்ட கோட்பாடுடையளாகவும், ஒளி குன்றினும் தன் பெருமையிற் குறையாத ஞாயிற்று மண்டிலம் போன்று துன்பத்தாலே தனது ஒளி மழுங்கினும் தன் நெஞ்சின்கண்ணே நல்ல நிறைப்பண்பு குறையாதவளாகவும், நாள்தோறும் தன்னோடிருந்து தன்னைப் பாதுகாத்து வருகின்றவளும், தனது நெறியிலே பிறழ்தலில்லாதவளும் ஆகிய தவச் செல்வியாகிய சாங்கியத் தாயோடு விருந்தினர்க்கென்றமைக்கப்பட்ட மாளிகையின் கண்ணே ஒரு கரப்பறையின்கண் இராநிற்ப வென்க.

(வி - ம்.) தவமுதுதாய் : சாங்கியத்தாய். விருத்துக் கோயில் - விருந்தின் மன்னன் இருந்து இன்பம் நுகர்தற்கென அமைத்த மாளிகை. "புதுவதின் வந்த விருந்தின் மன்னர் இருந்து பயன் கொள்ள இயற்றப் பட்ட செயற்கருங் கா" என்று முன்னரும் (ச - ச : க0டு - கூ) வந்தமை காண்க.

கரப்பறை - ஒளித்தற்குரிய அறை.

(உதயணன் யூகியை அறிந்துகொண்டு தழுவுதல்)

களடு - அச : யாப்புடை...........தோன்ற

(பொ - ரை.) அன்புத் தொடர்புடைய வயந்தகன் பின்னர் அரசனோடு சென்று பொறிகள் புலனிற் செல்லாது காத்தலை

யுடைய முனிவணுகிய யூகியைக் காகதுண்டக முனிவர் உதோ வீற்றிருக்கின்றார் என்று காட்டினனாக; அவனைக் கண்ட உதயண குமரன் 'இவன் குற்றமற்ற மகததாட்டிலே நம்மாற் காணப்பட்ட காகதுண்டகமுனிவனல்லன். இவன் யூகியே; இவன் யாக்கை ஒளி ஒன்றுமலன்றி ஏனைய அடையாளங்கள் அனைத்தினும் அம் முனிவனை ஒத்திலன்; அங்ஙனம் ஒத்திருத்தலும் மிகவும் அரிதே யன்றோ? மேலும் இவனைக் கண்டபொழுதே இவனை என் மார்போடு பொருந்தத் தழுவவேண்டும் என்று என் மனம் பெரிதும் விரும்பாநின்றது' என்று தனக்குட் கருதிப் பின்னரும் அவனைக் கூர்ந்து நோக்கி ஆராய்பவனுக்கு அவ்வியூகியின் மார்பிலே கிடந்த குளிர்ந்த மலர் மாலையும் புரிமிக்க பூணூலும் புரளாநிற்றலாலே அவ்வமைச்சன் மார்பிலே கிடந்த பண்டொரு காலத்தே யானைமருப்பழுந்தியமையாலுண்டான தழும்பு உதயணனை நோக்கி 'இதோ யூகிக்கான அடையாள முளது; கண்டுகொள்வாயாக' வென்று அறிவிப்பது போன்று நுண்ணிதாகத் தோன்றா நிற்ப என்க.

(வி - ம்.) தோழன் : வயந்தகன். காப்பு - பொறியடக்கம். கண்டோன் - காணப்பட்டவன். ஒளிமட்டும் இருவருக்கும் ஒத்துளது என்றவாறு. உழுவலன்புண்மையாலே மனம் தழுவ விரும்பிற்று என்பது கருத்து. ஆராய்கின்றோன் : பெயர். அகலம் - மார்பு. நூல் - பூணூல். மருப்பு நுதி சிலேகை - கொம்பின் நுனியழுத்திய கோடாகிய தழும்பு. யூகிக்கு மார்பின்கண் இங்ஙனமொரு தழும்புண்டென்பதனை,

> " வலிந்துமேற் சென்ற கலிங்கத் தரசன்
> குஞ்சர மருப்பிற் குறியிடப் பட்டுச்
> செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து
> மார்பினது வனப்பும் " (க. ௫௫ : ௨0-௩)

என முன்னும் வந்தமையாலுணர்க.

(இதுவுமது)

௧௮௫ - ௬௬ : ஐயம்...........புல்லினன்

(பொ - ரை.) அதுகண்ட அரசன் ஐயந் தீரப்பெற்றவனாய் வெய்தாக மூச்செறிந்து எழுந்து நின்று இடையூறு சிறிதுமில்லாத நல்ல சூழ்ச்சியினையுடைய யூகந்தராயனே! — நறுமணங் கமழும் கூந்தலையுடைய வாசவதத்தை மாறிப் பிறந்தவிடத்தினின்றும் மீட்டுக் கொணர்ந்து யான் காணும்படி தாராநின்ற முனிவர் பெருமானே!—இப்பொழுது நீயே ஈண்டு வந்தனைகாண்! அங்ஙனம் வந்தமையாலே ஒரு புதிய செயலும் நிகழவிருக்கின்றது என்றும் யான் தெளிந்து கொண்டேன் காண்! என்று கூறி அந்த யூகியை இரு கைகளாலும் அணைத்துச் சந்தனந் திமிர்ந்த தன் மார்பிலணிந்த மலர்மாலை குழையும்படி தழுவிக் கொள்வானாயினன் என்க.

(வி - ம்.) ஐயம்-இவன் யூகியோ? அல்லனோ? என்னும் ஐயம். ஊறு-இடையூறு. பிறர் உற்றறிதலுமாம். யூகந்தராயன் - யூகியின் முழுப் பெயர். நாறிருங் கூந்தல் : வாசவதத்தை. தருகுறும் - தரும். இனி - இப்பொழுது. நீ வந்தமையால் புதிய நிகழ்ச்சி ஒன்று நிகழவிருக்கின்றது, என்றது யான், வாசவதத்தையை மீண்டும் எய்துவேன் என்னும் குறிப்புடையது. யாணர்ச் செய்கை - புதுச் செயல். புல்லினன் - தழுவினன்.

(இதுவுமது)

ககூக - கூஎ : பொருக்கென............உயிரென

(பொ - ரை.) அங்ஙனம் அரசன் தழுவியவுடன் யூகி பொருக்கென இனிய தேன் கலந்த இனிய பால்போலும் இனிதாகப் புன்னகை முகிழ்த்துத் தவழும் முகத்தையுடையவனாய் 'வேந்தே! நீ இங்ஙனம் மார்புறத் தழுவிச் செய்யும் இவ் வருண் முறை சிறந்ததேயாயினும், துறந்தோர்க்குப் பொருந்துவதொன்றன்று காண்!' என்று கூறி அகலாநிற்ப, அங்ஙனம் அகலாநின்ற அத் தோழனை நோக்கி உதயணன், "புகழுடையோய்! நீ இனிச் செயத்தக்க காரிய வகையாலே என்னைப் பிரிந்து போவாயேனும் என் உயிரும் என்னைப் பிரிந்துபோதல் ஒருதலைகாண்! ஆதலாலே போகாதே கொள்!" என்று கூறி என்க.

(வி - ம்.) உருத்து - உருக்கொண்டு. அரசர் முனிவரைத் தழுவிக் கோடல் மரபன்மையின் துறந்தோர்க் கொத்ததன்று என்றான். நின் அருள்வகை சிறப்புடையதே என்பான் "நின் சிறந்த அருள்வகை" என்றான். பொருள்வகையாயினும் - செய்யத் தகுந்த காரியங்களின் பொருட்டே ஆயினும்.

(வாசவதத்தை வருகை)

ககூஅ - உ0க : பூங்குழை............புகவே

(பொ - ரை.) பின்னரும் அம் மன்னவன் "நண்பனே! பூங்குழையணிந்த என் காதலி வாசவதத்தையை விரைந்து அழைத்திடுக!" என்று கூறிப் படாநின்ற அல்லலைக் கண்டு அம் மன்னனை அத்தோழர்கள் வாசவதத்தையைச் சாங்கியத்தாயோடு வைத்திருந்த பொன்னால் அழகு செய்யப்பட்ட அவ்விருந்து மாளிகைக்கு அழைத்துப் போய்ப் புகாநிற்பவென்க.

(வி - ம்.) பொருக்கென : விரைவுக் குறிப்பு. தம் - தாரும். அவன் : உதயணன். நன்னுதன் மாதர் : வாசவதத்தை. தாய் - செவிலி, சாங்கியத்தாய்.

(வாசவதத்தையின் செயல்)

உ0உ — எ : காரியம்............எழுந்து

(பொ - ரை.) உதயணன் முதலியோர் வரவு கண்ட வாசவதத்தை, இஃது இப்பொழுதைக்குச் செய்யவேண்டிய செயல்

என்று சிறந்த கருத்துக்களையும் எடுத்துக்காட்டி நல்லமைச்சராகிய யூகியந்தணர் கூறிய நெறியினைக் கடத்தலன்றிச் செய்தேனாயினும் அச்செயல் மணியணிகலன் அணிந்த மார்பினையுடைய என் கணவன் பணித்த செயல் அன்மையாலே ஒரோவழி அங்ஙனம் ஒழுகியது கற்புடை மகளிர்க்குப் பொருந்தும் நல்லொழுக்கமல்லாத தீயொழுக்கமும் ஆகுமோ? ஆயின் யான் நல்லாசாரம் அல்லது புரிந்த கல்லாமையுடைய கயத்தியேனே அல்லெனோ? என்று எண்ணி நாணம் மிகுதலாலே மெய் நடுங்கி எழுந்து என்க.

(வி - ம்.) காரியம் - செய்யத்தக்க செயல். சீரிய - சிறந்த கருத்துகள். நல்லாசாரமல்லது - தீயொழுக்கம். கயத்தி - கயமையுடையோள்.

(இதுவுமது)

உ0அ - ௧0 : தோள்............கூப்பி

(பொ - ரை.) தன் கைகடந்து பெருகிய துன்பமெல்லாம் அகலும்படி காந்தளினது நறிய அரும்பினைப் பழிக்கும் அழகிய மெல்லிய விரல்களையுடைய தன் கைகளை அணிகலன் ஏதுமின்மையால் பொலிவிழப்பக் குவித்துத் தொழுது என்க.

(வி - ம்.) தோண் மீதூர்ந்த - கைகடந்து பெருகிய. புல்லெனபொலிவின்றித் தோன்றுநிற்ப.

(இதுவுமது)

உ௧௧ - ௧௭ : பிரிவிடை............முயங்கி

(பொ - ரை.) தன் பிரிவுக்காலத்தே மேற்கொண்ட பின்னுதல் கொண்டு சடையாகத் திரண்ட தனது அழகிய கூந்தல் பகைவரைக் கொல்லும் ஆற்றல்மிக்க தன் தலைவனுடைய திருவடிகளிலே கிடந்து துவளா நிற்பவும், கணவனைக் கண்டமையாலுண்டான மகிழ்ச்சியாலே பெருகிய இன்பக் கண்ணீர் அக்கணவனுடைய புறவடிகளை நனையா நிற்பவும், மின் முதலிய தொகுதியையுடைய முகில் கார்ப்பருவத்தே பெய்யும் மழையினை எதிர்ந்த அருவி வீழப்பெற்ற பூங்கொடிபோன்று தன் கண்ணீர் வீழ்ந்து பொலிவுற்ற இடையினையுடையபளாய் வீழ்ந்து வணங்கிக் கிடந்த அந்நங்கையை உதயணன் தன் கைகளால் எடுத்துத் தழுவித் தன் துன்பமெல்லாம் அகன்றொழியும்படி மீண்டும் மீண்டும் தழுவிய பின்னர் என்க.

(வி - ம்.) பிரிவுக் காலத்தே கைசெய்யாது விடப்பட்டமையால் உண்டாகிய சடையாகிய கூந்தல் என்க. குருசில் : உதயணன். திவள - துவள. கருவி - மின் முதலிய தொகுதி. வான் - முகில். கார் - கார்ப்பருவம். ஏற்ற - எதிர்ந்த. அருவி வீழப்பெற்ற வள்ளி என்க. வள்ளி - கொடி. சிறந்தோள் : வாசவதத்தை. செல்லல் - துன்பம்; பல்லூழ் - பலகாலும்.

(உதயணன் சாங்கியத்தாயை நோக்கிக் கூறல்)

உ௧அ - உ௬ : அகல .... கூறி

(பொ - ரை.) இச் செவ்வியில் ஒருசார் ஒதுங்கி நின்ற சாங்கியத் தாயை உதயணன் நோக்கிப் பெரிதும் நன்றியுடையனாய், "பெரியீர்! நீயிர் எமது துன்பக் காலத்திலே எமக்கின்றியமையாத துணையாகி அத் துன்பந் தீர்த்து எமக்கு இன்பமீதற் பொருட்டுப் பொருந்தி எந்நிலையினும் கைவிடாமல் நுமது பெரிய முதுமையுடைய தலைமைத் தன்மை பொருந்திய ஒப்பற்ற புகழையுடைய உயர்ந்த தவவொழுக்கத்தையுடைய நும்முடைய உடலாலே பண்டு செய்த சிறியதோர் உதவி குன்றிவிடாமல் இற்றைநாள் ஆலமரத்தின் விதையினின்றும் பெரிய மரம் தோன்றினாற்போலப் பெருகி இவ்வுலகத்தில் எமக்குப் பேரின்பத்தை வழங்கியதுகாண்! நீயிர் ஊழிபல வாழ்க!" என்று, வஞ்சம் சிறிதுமில்லாத தன் அருண்மொழி பலவற்றை அத் தவமூதாட்டி பண்பிற்கேற்ப மொழிந்து என்க.

(வி - ம்.) செவிலி : சாங்கியத்தாய். "உறக்குந் துணையதோர் ஆலம் வித்தீண்டி இறப்ப நிழற் பயந்தாங்கு" எனவரும் நாலடியை (௩அ) ஈண்டு நினைக. நன்றி - இன்பம். சலம் - வஞ்சம். சால - மிக.

(யாவரும் நகர் செல்லல்)

உ௭ - ௩௧ : இரவிடை........... அறைதலின்

(பொ - ரை.) தான் இரவின்கண் கண்ட வடிவத்தோடு ஈண்டுக் கண்ட வாசவதத்தையின் உருவம் ஒத்தமையாலே இக் காட்சி மாயக்காட்சியன்று மெய்க்காட்சியே என்றுணர்ந்தவனாய் ஏவலர் சென்று அழகிய காவலையுடைய அரண்மனையிடத்தே வாழ்வோர் அறியவும் பதுமாபதிபாற் சென்று அவள் அறியவும் சிறப்புடைய வாசவதத்தை வரவினை அறிவுறுத்திப் பரப்பா நிற்பவும், வள்ளுவர் இச் சிறப்புரையைக் கூறிப் பெரிய கண்ணையுடைய முரசத்தைப் பெரிய தெருக்களிலே முழக்குதலாலே, என்க.

(வி - ம்.) இலங்கிழை : வாசவதத்தை. ஆய் - அழகிய. கடிநகர் - காவலையுடைய அரண்மனை; ஆகுபெயர்; ஆங்குவாழும் மாந்தர். கோயில் - பதுமாபதி மாளிகை. தேவி : பதுமாபதி. இருங்கண் - கரியகண்ணுமாம். பெருந்தெரு: அரசவீதி.

(இதுவுமது)

உ௩உ - ௩௭ : மாணகர்........... பகர

(பொ - ரை.) பெரிய அக்கோசம்பி நகரத்தே வாழும் மாந்தர்கள் அச் செய்தியறிந்து பெரிதும் மகிழ்ந்து வான்முகிலைத்

தீண்டும்படி மிகவும் உயர்ந்த தத்தம் மாடங்களின் உச்சிமேல் உயர்த்திய விரிந்த அழகிய கொடிகளோடே திருவிழாவியற்றி யூகியினது சூழ்ச்சித்திறத்தையும் அவன் நண்பினது அமைதியையும் எல்லோராலும் விரும்பத்தகுந்த நல்ல நுதலையுடைய வாசவதத்தையின் இயல்பான பெரிய கடவுட் கற்பின் சிறப்பினையும் வியந்து வியந்து நன்கு மதித்துப் பாராட்டிப் புகழாநிற்பவும் நகரத்தே புகுந்து என்க.

(வி - ம்.) மாணகர் - கோசம்பி: ஆகுபெயர்; மழை - முகில். முகில் தவழும்படி நிவந்த எனினுமாம். மீமிசை - உச்சிமேல். அமைச்சன் : யூகி. நன்னுதல் : வாசவதத்தை. வியத்தனர் - விகாரம். நகரத்தே புகுந்து என வருவித்துக் கொள்க.

(இதுவுமது)

உகூ அ - சுறு : பஞ்ச............புணர்ந்தென்

(பொ - ரை.) அந்நகரப் பெருங்குடி மாந்தர் வந்து குழூமி ஐவண்ணம் உடைய அரசியற் பெருங்கொடி ஆடாநிற்ப யானையின் பிடரிலேற்றிக் குடைநீழலிற் கொணர்ந்த புண்ணிய நறுநீரின்கண் உதயண மன்னனும் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையும் யூகியும் மங்கலமுழுக்குக் கொண்டவராய் விலைக்கு எல்லை காணமாட்டாத பேரணிகலன்களாகிய முதன்மையுடையவற்றை அழகுற அணிந்து கொண்டு மீண்டும் ஒருங்கே கூடிக் கூறுதற்கியலாத குறைவற்ற பேரின்பத்தோடே வீறு பெற்றுத் திகழா நின்றனர் என்க.

(வி - ம்.) பஞ்சவண்ணம் - ஐந்துவகை நிறம். படாகை - கொடி. நகரமாந்தர் துன்னினர் குழீஇத் தந்த நீர் என்க. அணிகலன்கட்குத் தலைவரம்பானவை என்க. தகை, அவ்வணிகலன் அழகுபெற அணிந்து எனினுமாம். வீறு - வேறொருவர்க்கும் இல்லாத அழகு.

எ. வாசவதத்தை வந்தது முற்றிற்று

அ. தேவியைத் தெருட்டியது

இதன்கண்: உதயணன் பதுமாபதியை வாசவதத்தையைச் சென்று காணும்படி கூறுதலும், அவள் சென்று வாசவதத்தையைக் காண்டலும், உதயணன் யூகியை வினுதலும், அவன் கூறும் விடையும், உதயணன் யூகியைப் பாராட்டுதலும், வாசவதத்தையும் பதுமாபதியுமாகிய தேவியரிருவர் செயலும், உதயணன் வாசவதத்தைக்குக் கூறுதலும், அவள் சினத்தலும், உதயணன் வாசவதத்தையைத் தெருட்டலும் கூறப்படும்.

மீட்டுத்தலைப் புணர்ந்த காலை மேவார்
கூட்டம் வௌவிய கொடுஞ்சி நெடுந்தேர்
உருவ வெண்குடை யுதயண குமரன்
ஒருநலத் தோழன் யூகந்த ராயற்
கருளறம் படாஅ னகத்தே யடக்கி
முகனமர் கிளவி முன்னின் றுரைப்பின்
ஏதின்மை யீனு மேனோர் மாட்டெனக்
காதற் றேவிக்குக் கண்ணா யொழுகும்
தவமுது மகட்குத் தாழ்ந்தருள் கூறிப்
பயனுணர் கேள்விப் பதுமா பதியைத்
தாங்கருங் காதற் றவ்வையை வந்து
காண்க வென்றலுங் கணங்குழை மாதரும்
அரியார் தடங்க ணவந்திகை யவன்றனக்
குயிரேர் கிழத்தி யாகலி னுள்ளகத்
தழிதல் செல்லாண் மொழியெதிர் விரும்பிப்
பல்வகை யணிகளு ணல்லவை கொண்டு
தோழிய ரெல்லாஞ் சூழ்வன ரேந்தச்
சூடுறு கிண்கிணி பாடுபெயர்ந் தரற்றக்
காவல னீக்க நோக்கி வந்து
தாதலர் கோதைத் தையலுக் கிசைத்தவள்
அணங்கருஞ் சீறடி வணங்கலின் வாங்கிப்
பொற்பூண் வனமுலை பொருந்தப் புல்லிக்
கற்புமேம் படீஇயர் கணங்குழை நீயென
ஆசிடைக் கிளவி பாசிழை பயிற்றி
இன்பஞ் சிறந்த பின்றை யிருவரும்
விரித்தரி தியற்றிய வெண்கா லமளிப்

பழிப்பில் பள்ளி பலர்தொழ வேறித்
திருவிரண் டொருமலர் சேர்ந்தவ னுறையும்
பொருவரு முருவம் பொற்பத் தோன்றி
....
பேரத் தாணியுட் பெரியோர் கேட்ப
ஒன்ஞர்க் கடந்த யூகியை நோக்கி
வேன்வே லுதயணன் விதியுளி வினவும்
முன்ன னெய்திய முழுச்சிறைப் பள்ளியுள்
இன்ன வெந்துய ரேன்க ணீக்கிய
பின்னட் பெயர்த்துநின் னிறுதியும் பிறைநுதற்
றேவியைத் தீயினுண் மாயையின் மறைத்ததும்
ஆய காரண மறியக் கூறெனக்
கோற்றவன் கூற மற்றவ னுரைக்கும்
செங்கா ஞரையோடு குருகுவந் திறைகொளப்
பைங்காற் கமுகின் குலையுதிர் படுபழம்
கழனிக் காய்நெற் கவர்கிளி கடியும்
பழன வைப்பிற் பாஞ்சால ராயன்
ஆற்றலின் மிக்க வாருணி மற்றும்
ஏற்றலர் பைந்தா ரேயர்க் கென்றும்
நிலத்தொடு தொடர்ந்த குலப்பகை யன்றியும்
தலைப்பெரு நகரமுந் தனக்குரித் தாக்கி
இருந்தனன் மேலு மிகழ்ச்சியோன் றிலனப்
பிரச்சோ தனனே டொருப்பா டெய்தும்
ஓலை மாற்றமுஞ் சூழ்ச்சியுந் துணிவும்
காலம் பார்க்குங் கருமமு மெல்லாம்
அகத்தோற் றாளரி னகப்பட வறிந்தவன்
மிகப்பெரு முரட்சியை முருக்கு முபாயம்
மற்றிக் காலத் தல்லது மேற்சென்று
வெற்றிக் காலத்து வீட்டுத லரிதென
அற்புப் பாச மகற்றி மற்றுநின்
ஒட்ப விறைவியை யொழித்தன் மரீஇக்
கருமக் கட்டுரை காணக் காட்டி
உருமண் ணுவாவோ டொழிந்தோர் பிறரும்
மகதநன் ஞடு கொண்டுபுக் கவ்வழி

இகலடு நோன்ற ளிறைமகற் கிளைய
பதுமா பதியோடு வதுவை கூட்டிப்
படைத்துணை யவனுப் பதிவயிற் பெயர்ந்தபின்
கொடைத்தகு குமரரைக் கூட்டினே னிசையக்
கோடித்தலை மூதெயில் கொள்வது வலித்தனென்
மற்றவை யெல்லா மற்ற மின்றிப்
பொய்ப்பொருள் பொருந்தக் கூறினு மப்பொருள்
தெய்வ வுணர்விற் றெரிந்துமா றுரையா
தைய நீங்கியெம் மறிவுமதித் தொழுகிய
பெருமட மகடூஉப் பெருந்தகை மாதால்
நின்னினு நின்மாட்டுப் பின்னிய காதற்
றுன்னிய கற்பிற் றேவி தன்னினும்
எண்ணிய வெல்லாந் திண்ணிய வாயின
இருநிலம் விண்ணோ டியைந்தனர் கொடுப்பினும்
பெருநில மன்ன ரேயதை யல்லது
பழமையிற் றிரியார் பயன்றெரி மாக்கள்
கிழமையிற் செய்தனன் கெழுதகை தருமெனக்
கோனெறி வேந்தே கூறுங் காலை
நூனெறி யென்றியா னுன்னிடைத் துணிந்தது
பொறுத்தனை யருளென நெறிப்படுத் துரைப்ப
வழுக்கிய தலைமையை யிழுக்க மின்றி
அமைத்தனை நீயென வவையது நடுவண்
ஆற்றுளிக் கூற வத்துணை யாயினும்
வேற்றுமைப் படுமது வேண்டா வொழிகென
உயிரோரன் றுதல் செயிரறக் கூறி
இருவரு மவ்வழித் தழீஇயின ரெழுந்துவந்
தொருபெருங் கோயில் புகுந்த பின்னர்
வாசவ தத்தையொடு பதுமா பதியை
ஆசி லயினி மேவரத் தரீஇ
ஒருகலத் தயில்கென வருடலை நிறீஇயபின்
வளங்கெழு செல்வத் திளம்பெருந் தேவி
அரும்பெறற் காதலன் றிருந்தடி வணங்கியப்
பெருந்தகு கற்பினெம் பெருமக டன்னொடு

பிரிந்த திங்க ளெல்லாம் பிரியா
தொருங்கவ ணுறைதல் வேண்டுவ லடிகள்
அவ்வர மருளித் தருதலேன் குறையெனத்
திருமா தேவியொடுந் தீவிய மொழிந்துதன்
முதற்பெருங் கோயிற்கு விடுப்பப் போயபின்
பாடகச் சீறடிப் பதுமா பதியொடு
கூடிய கூட்டக் குணந்தனை நாடி
ஊடிய தேவியை யுணர்வினு மொளியினும்
நாடுங் காலை நன்னுதன் மடவோய்
நின்னொ டொத்தமை நோக்கி மற்றவள்
தன்னொடு புணர்ந்தேன் றளரியல் யானென
ஒக்கு மென்றசொ லுள்ளே நின்று
மிக்குநன் குடற்ற மேவல ளாகிக்
கடைக்கண் சிவப்ப வெடுத்தெதிர் நோக்கி
என்னே ரென்ற மின்னேர் சாயலைப்
பருகுவனன் போலப் பல்லூழ் முயங்கி
உருவி னல்லது பெண்மையி னின்னொடு
திருநுதன் மடவோய் தினையனைத் தாயினும்
வெள்வேற் கண்ணி யொவ்வா ளென்றவள்
உவக்கும் வாயி னயத்தகக் கூறித்
தெருட்டியுந் தெளித்து மருட்டியு மகிழ்ந்தும்
இடையற வில்லா வின்பப் புணர்ச்சியர்
தொடை மலர்க் காவிற் படையமை கோயிலுள்
ஆனாச் சிறப்பி னமைதி யெல்லாம்
ஏனோர்க் கின்றென வெய்திய வுவகையர்
அறைகடல் வையத் தான்றோர் புகழ
உறைகுவனர் மாதோ வுவகையின் மகிழ்ந்தேன்.

உரை

அ. தேவியைத் தெருட்டியது

அஃதாவது : உதயணன் தன்பால் ஊடல் கொண்ட வாசவதத்தையைத் தெருட்டி ஊடல் நீக்கிய செய்தியைக் கூறும் பகுதி யென்றவாறு.

(உதயணன் செயல்)

க - எ : மீட்டு..............என

(பொ - ரை.) இவ்வாறு உதயணனும் வாசவதத்தையும் யூகியும் மீண்டும் கூடி மகிழ்ந்திருந்த காலத்தே பகைவர் படையினைச் சிறை கொண்ட கொடுஞ்சியினையுடைய நெடிய தேரினையும், அழகிய ஒளியுடைய கொற்ற வெண்குடையினையும், உடைய உதயண குமரன் தன் ஒப்பற்ற நலமிக்க தோழனாகிய யூகியந்தணனுக்குப் பரிசில் வழங்கும் அரசியலறத்தை மேற்கொள்ளானாய் அவன்றனக் காற்றிய நன்றியையும் வெளிப்படுத்துரையானாய் மனத்தின்கண் அடக்கி அவன் முன்னின்று முகமன் கூறிப் பாராட்டினும் மற்றையோர்க்கு அச் செயல் ஏதின்மையைக் காட்டுவதாகவே முடியும் என்று கருதி அவன் திறத்தே யாதும் கூறுதலிலனாய் என்க.

(வி - ம்.) மேவார் - பகைவர். கூட்டம் - படை. வெளவிய - சிறை கொண்ட. கொடுஞ்சி - ஒரு தேர் உறுப்பு. உருவம் - அழகு. அருள் அறம் - பரிசில் வழங்கும் அரசியலறம். படான் - மேற்கொள்ளானாய். முகனமர் கிளவி - முகமன் மொழி. ஏதின்மை - அயலாந்தன்மை; நட்பின்மை. "முகனமர்கிளவி முன்னின்றுரைப்பின் ஏதின்மை யீனும்" என்னுமிதனோடு "இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று புனையினும் புல்லென்னும் நட்பு" எனவரும் அருமைத் திருக்குறளையும் நினைக. ஏனோர் - மற்றையோர்.

(இதுவுமது)

அ - கஉ : காதல்............என்றலும்

(பொ - ரை.) தன் காதலியாகிய வாசவதத்தைக்குக் கண் போன்றிருந்து அவளைப் பாதுகாவாநின்ற தவமுதுமகளாகிய சாங்கியத் தாய்க்குத் தன்னன்றியுணர்வினை நெஞ்சால் வணங்கி அருள் மொழி பல கூறிப் பாராட்டுமாற்றால் உணர்த்திப் பின்னர்ப் பயன் உணர்தற்குக் காரணமான நூற் கேள்வியையுடைய பதுமாபதியை நோக்கி "நீ நின்பால் தாங்கொணாத அன்பினையுடைய நின் தமக்கையாகிய வாசவதத்தையை அவள் மனைக்கு வந்து காண்பாயாக!" என்று கூறுநிற்றலாலே என்க.

(வி - ம்.) தேவி: வாசவதத்தை. கண் போன்று பாதுகாத்தொழுகும் தவமுது மகள் என்க. தவமுது மகள்: சாங்கியத்தாய். நெஞ்சாற்றாழ்ந்து. பயன் - நூற்பயன். அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பன. தவ்வை - தமக்கை; என்றது வாசவதத்தையைக் காண்டற்கு ஏதுக் கூறுவான் தாங்கருங் காதற்றவ்வை என்றான்.

(பதுமாபதி வாசவதத்தையைக் காணல்)

கஉ - ககூ; கணங்குழை.....................வந்து

(பொ - ரை.) வட்டமான குழையணிந்த அப் பதுமாபதி நங்கை தானும் செவ்வரி யோடிய பெரிய கண்களையுடைய அவந்திகை தன் கொழுநனுக்கு உயிர்போன்ற உரிமையுடையோள் ஆகலானும், கணவனுவப்பது தானும் உவத்தல் கடமையேயாகலானும், இக் கட்டளை கேட்டுத் தன்னெஞ்சிலே சிறிதும் வெறுப்பிலளாய் அம் மொழியை விரும்பி ஏற்றுக் கொண்டு வாசவதத்தைக்குக் கையுறையாகச் சிறந்தனவாகிய பல்வேறு அணிகலன்களையும் ஏந்தித் தோழிமார் தன்னைச் சூழ்ந்து வாரா நிற்பவும், தன் சேவடியிலணிந்த கிண்கிணி அடியிடுந்தோறும் இடம் பெயர்ந்து முரலாநிற்பவும், உதயணன் இல்லாத செவ்வி தேர்ந்து வாசவதத்தையின் மாளிகை முன்றிலிலே வந்து என்க.

(வி - ம்.) "அவந்திகை தன் கணவனுக்கு உயிரோர் கிழத்தியாகலின் உள்ளகத்தழிதல் செல்லாள்'' என்னுமிதனோடு, "மாற்றமஃதுரை செய மங்கையுள்ளமும், ஆற்றல்சால் கோசலை அறிவு மொத்தவால், வேற்றுமை யுற்றிலள் வீரன்முதைபுக், கேற்றவ ளிருதயத்திருக்க வேகொலாம்'' எனவரும் கம்பநாடர் வாக்கினையும் (மந்தரைசூழ்ச்-நுக.) கருதுக.

அழிதல் செல்லாள்: ஒருசொல். நல்லவை கையுறையாகக் கொண்டு என்க. சூடுறும் - அணியும். பாடு - இடம். காவலன்: உதயணன். வாசவதத்தை முன்றிலின் கண் வந்து என்க.

(இதுவுமது)

உo - உரு: தாதலர்.....................பின்றை

(பொ - ரை.) பூந்துகள் விரியும் மலர்மாலை யணிந்த அப் பதுமாபதி தன் வரவினை வாசவதத்தைக்கு அறிவித்து உட்சென்று அப் பெருமகளின் அழகிய பெறற்கரிய சிற்றடிகளிலே வீழ்ந்து வணங்காநிற்ப, அது கண்ட அக் கோமகள் அப் பதுமாபதியைத் தன்னிருகைகளானும் எடுத்துத் தன் பொன்னணிகலன் அணிந்த அழகிய முலைகளோடு பொருந்தத் தழுவிக் கொண்டு "கணங்குழையினையுடைய நங்கையே! நீ கற்புடைமையாலே மேம்பாடுறக் கடவை!'' என்று வாழ்த்துமொழி பன்முறையும் கூறி இருவரும் அளவளாவி இன்பத்தாலே சிறப்புற்ற பின்னர் என்க.

(வி - ம்.) தாது - மகரந்தம்; தேனுமாம். கோதை: பதுமாபதி. தையல்: வாசவதத்தை. அணங்கு சீறடி அருஞ்சீறடி எனத் தனித்தனி கூட்டுக. வாங்கி - எடுத்து. புல்லி - தழுவி. படீஇயர் - படுக. ஆசிடைக் கிளவி - வாழ்த்து மொழி.

(இதுவுமது)

உரு - உகூ : இருவரும்............தோன்றி

(பொ - ரை.) அவ்விருவரும் அருமை தோன்ற விரித்துச் செய்யப்பட்ட யானை மருப்பினாலியன்ற வெள்ளிய காலையுடைய கட்டிலையுடைய குற்றமற்ற படுக்கையின்கண் தோழிமார் பலரும் கைதொழுது வணங்க ஏறி இரண்டு திருமகளிர் ஒரு செந்தாமரை மலரின்கண் சேர்ந்து உறையுமாப்போலே தம் ஒப்பற்ற உருவம் பொலிவுறத்தோன்றி என்க.

(வி - ம்.) இருவரும் : வாசவதத்தையும் பதுமாபதியும். வெண் கால் - யானை மருப்பினாலியன்ற கால். திரு - திருமகள். மலர் - செந் தாமரை மலர். இஃது இல்பொருள் உவமை. இப் பகுதியில் ஙo ஆம் எண்ணில் நிற்க வேண்டிய அடி அழிந்தொழிந்தது. பொற்ப - பொலிய.

(உதயணன் யூகியை வினவுதல்)

ஙo - ஙஅ : பேரத்தாணி............உரைக்கும்

(பொ - ரை.) உதயணன் பேரத்தாணியின்கண் பெரியோர் அவை நடுவின்கண் அரசு வீற்றிருக்கும்பொழுது அச்சான்றோர் கேட்கும்படி பகைவென்று கடந்த யூகியை நோக்கி முறைப்படி வினவுவான் "அமைச்சனே! முன்னர் யான் உஞ்சை மாநகரத் தின்கண் பிரச்சோதன மன்னனுடைய பெரிய சிறைக்கோட் டத்தினூடே கிடந்து உழன்ற பெரிய என்னுடைய துன்பத்தை நீ போக்கிய பின்னர் மீண்டும் நீ இறந்துபோனதாக நடித்த நினது பொய்ச் சாவிற்கும், பிறைபோன்ற நுதலையுடைய வாசவ தத்தையை நீ வஞ்சகமாகத் தீயிலகப்பட்டு இறந்தாள்போல எனக்குக் காட்டி இதுகாறும் மறைத்து வைத்தமைக்கும் உண் டாய காரணங்களை யான் தெரிந்துகொள்ளும்படி கூறுக!" என்று அக் கொற்றவன் வினவாநிற்ப அதுகேட்ட யூகி உதயண னுக்குக் கூறுவான் ; என்க.

(வி - ம்.) அத்தாணி - அரசிருத்தற்குரிய மண்டபம். ஒன்னார் - பகைவர். வென்வேல் - வென்றியையுடைய வேல். விதியுளி - முறைப் படி. முழுச்சிறை - பெரிய சிறைக்கோட்டம். நின்இறுதி - நின்சாக் காடு. தேவி : வாசவதத்தை. மாயை - வஞ்சம். கொற்றவன் : உதயணன். மற்றவன் : யூகி. உரைக்கும் - உரைப்பான்.

(யூகி கூற்று)

ஙகூ - சஎ : செங்கால்............இருந்தனன்

(பொ - ரை.) "வேந்தே! அச்செயல்களுக்குரிய காரணங் களைத் தெளிவுறக் கூறுவேன் கேட்டருள்க! செங்கால் நாரை

களும் குருகும் வந்து தங்குதலாலே பசிய அடிப்பகுதியை யுடைய கமுகினது குலையினின்றும் உதிராநின்ற பழங்கள் கழனி களின்கண் காய்த்துள்ள நெற்கதிரைக் கவர்ந்துகொண்டுபோகும் கிளிகளை ஓட்டாநின்ற, வளமிக்க மருதநிலஞ்சூழ்ந்த பாஞ்சால நாட்டு மன்னனும் போராற்றலில் மிக்கோனும் ஆகிய ஆருணி வேந்தன் பருவமேற்று மலர்கின்ற பசிய மலர்மாலையணிந்த ஏயர் குலத்தரசர்க்கு என்றென்றும் நிலத்தோடு தொடர்புபட்ட குலப்பகைமையுடையோன் ஆவன். அதுவேயுமன்றி நமது பெரிய தலைநகரமாகிய இக்கோசம்பியையும் அற்றம் பார்த்துக் கைப் பற்றிக்கொண்டு தனக்குரியதாக்கி ஈண்டு அரசுவீற்றிருந்தனன்;" என்க.

(வி - ம்.) குருகு - கொக்கு. செங்கால் பைங்கால் என்புழி முரண் தோன்றிச் செய்யுளின்பம் மிகுதலுணர்க. இறைகொள - தங்கா நிற்ப. உதிர்படுபழம் - உதிர்கின்ற பழம். காய்நெல் : வினைத்தொகை. பழனவைப்பு - மருதநிலம். ஏற்று - பருவத்தை எதிர்ந்து. நிலத்தொடு தொடர்ந்த - நிலத்தோடு தொடர்புடைய. இருந்தனன் - அரசு வீற் றிருந்தனன்.

(இதுவுமது)

சஎ - ௩௪ : மேலும்..............அரிதென

(பொ - ரை.) மேலும் தனது ஆள்வினையின்கண் சோர்வு சிறிதும் இல்லைய், அவ்வாருணிமன்னன் நம் பகைவனாகிய பிரச்சோதனமன்னனோடு கேண்மைகொள்ள விடுத்த தூதோ லைச் செய்தியும் சூழ்ச்சிகளும் முடிவும், முடிவுகொண்ட பின்னர் நம்மை அழித்தற்குத் தகுந்த காலம் பார்க்கும் செயலும், இன்னோரன்ன பிறவும் யான் என்னுடைய அக ஒற்றர்களை ஏவி அவன் அரண்மனையினுள்ளே சென்று ஒற்றிவரும்படி செய்து தெரிந்துகொண்டு அப்பகை மன்னனது மிகவும் பெரிய பகை மையை அழித்தற்குரிய உபாயம் இக்காலத்திலே கைகூடுவ தல்லது அவனுடைய வெற்றிமிக்க பிற்காலத்தே யாம் அவன் மேல் படைகொண்டு சென்று அவனை அழித்தல் அரிதாகும் என்று கருதி; என்க.

(வி - ம்.) இகழ்ச்சி - உவகை மகிழ்ச்சியால் எய்தும் சோர்வு. ஒருப்பாடு - ஒற்றுமைப்படுதல். ஓலைமாற்றம் - தூதோலை விடுத்த செய்தி. காலம் - பகை வெல்லுதற்கேற்ற காலம். அகத்தொற்றாளர் - பகைவர் அரண்மனையினூடும் சென்று ஒற்றிவரும் ஒற்றர். அவன் - ஆருணிமன்னன். முரட்சி - பகைமை ; வலிமையுமாம். முருக்கும் - அழிக்கும். மேற்சென்று வீட்டுதல் அரிது என இயைத்துக்கொள்க- வீட்டுதல் - கொல்லுதல்.

(இதுவுமது)

ருரு - சுஉ : அற்பு..............பெயர்ந்தபின்

(பொ - ரை.) "அச்செயலைக் காலந்தாழ்த்தலின்றி மேற்கொள்ளத் துணிந்து நின்னுடைய அன்புப் பிணிப்பினை அகற்றி நினது ஒள்ளிய அறிவுடைய கோப்பெருந்தேவியை நின்னிடத்தினின்றும் ஒழித்தலை அரண்மனை தீக்கொளுவுமாற்றால் செய்து முடித்து, அத்துன்பத்தால் கலக்கமெய்திய நினக்கு ஆள்வினைக்குரிய கட்டுரை பலவற்றை நீ உணரும்படி எடுத்துக் காட்டி உருமண்ணுவாவும் ஏனையோரும் யான் ஏவியபடி நின்னை நல்ல மகத நாட்டிற்கு அழைத்துச் சென்று அந்நாட்டின் தலைநகரத்தே புகுந்து அவ்விடத்தே பகைவரை வெல்லும் வலிய முயற்சியினையுடைய கோமகனாகிய தருசகன் தங்கை பதுமாபதியோடு நின்னைத் திருமணம் புணர்த்தி அம்மன்னவன் கேண்மைகொண்டு அவன் படையையே துணையாகக் கூட்டிக்கொண்டு நீ இவ்வத்தவ நாட்டிற்கு மீண்டபின்னர் ;" என்க.

(வி - ம்.) அற்பு - அன்பு. ஒட்பம் - அறிவுடைமை. இறைவி - கோப்பெருந்தேவி; வாசவதத்தை இச்செயலில் நின்னை ஈடுபடுத்துவதற்கு இறைவியை ஒழித்தேன் என்பது கருத்து. கருமக் கட்டுரை - காரியங்களைப்பற்றிய பொருள் பொதிந்த மொழிகள். நோன்றாள் - வலிய முயற்சி. இறைமகன் : தருசகன். வதுவை - திருமணம். அவன் படைத்துணை ஆக என்க. பதி - வத்தவநாடு.

(இதுவுமது)

சுரு - எஉ : கோடை..........ஆயின

(பொ - ரை.) "வேந்தே! நின்பால் கொடுக்கத்தகுந்த நின் தம்பிமாரை நின்னொடுவந்து கூடும்படி கூட்டினேன். இச்செயலெல்லாம் யான் நீ இக்கொடிக் கோசம்பியின் பழைய மதிலைப் பகைவனிடத்திருந்து கைப்பற்றிக் கொள்ளுவதனையே கருதிச் செய்தனவாம். இக்காரியமெல்லாம் சோர்வின்றி நிறைவேறின; யான் ஆள்வினைகருதிப் பொய்யையே பொருந்துமாறு கூறுமிடத்தும் அப்பொருளைத் தனது தெய்வத்தன்மையுடைய உணர்ச்சியினாலே அறிந்துகொண்டு எனக்கு முரணாக ஏதுங் கூறாமல் தானும் ஐயம் விடுத்து என் அறிவினையே நன்கு மதித்து யான் கூறிய நெறியிலே நின்று ஒழுகிய பெரிய மடத்தையுடைய மகளாகிய சாங்கியத் தாயாலேயே யான் நின்பொருட்டும் நின்னிடத்தே பின்னிய காதலையும் செறிந்த கற்பினையும் உடைய அத்தேவிபொருட்டும் நினைத்த எல்லாம் உறுதியாக நிறைவேறின"; என்க.

(வி - ம்.) மற்றவை - மேலே கூறப்பட்ட செயல்கள். அற்றம் - சோர்வு. தெய்வவுணர்வு - காமவெகுளி மயக்கமற்ற உணர்வு. பெருந்

தகைமாது என்றது சாங்கியத்தாயை. நின்னினும் - நின்பொருட்டும், தேவிதன்னினும் - தேவிபொருட்டும்.

(இதுவுமது)

எங - எகூ : இருநிலம்.............உரைப்ப

(பொ - ரை.) "செங்கோல் நெறிபிறழாத வேந்தே! பயனை ஆராய்ந்து கூறும் பழமையில் திரியாராகிய அமைச்சர்கள் பிறர் தமக்குப் பெரிய இந்நில உலகத்தோடு மேனிலையுலகத்தையும் பொருந்தக் கொடுத்தாலும் தம் பெருநில மன்னர் ஏவிய காரியத்தைச் செய்வதே யல்லது அவரை வஞ்சித்துத் தாமாக ஒன்றும் செய்யார். அங்ஙனமிருப்பவும் யான் எனது நட்புரிமை இச்செயலைச் செய்ய இடந்தரும் எனத் துணிந்து அவ்வுரிமை காரணமாகவே செய்தேன். ஆராயுமிடத்து யான் நின்பால் செய்யத் துணிந்த இச்செயல் அமைச்சர் நூல்நெறி என்று கருதி யான் துணிந்த இச்செயலைப் பொறுத்தருளல் வேண்டும்" என்று முறைப்படுத்திக் கூறாநிற்ப; என்க.

(வி - ம்.) இருநிலம் - பெரிய நிலஉலகம். விண் - மேனிலையுலகம். ஏயதை - ஏவியதனை. பயன்தெரிமாக்கள் - அமைச்சர். கிழமை - உரிமை. கெழுதகை - உரிமை. கெழுதகை இடந்தரும் என அக்கிழமையிற் செய்தேன் என்றான் என்க. இதனோடு, "விழைதகையான் வேண்டி இருப்பர்: கெழுதகையாற் கேளாது நட்டார் செயின்" எனவும், "பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க, நோதக்க நட்டார் செயின்" எனவும் வரும் (அOச, அOரு) திருக்குறள்களையும் ஒப்பு நோக்குக.

(உதயணன் கூற்று)

அO - அச : வழுக்கிய...............கூறி

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் அப்பேரவையின் நடுவே தன் மகிழ்ச்சி மிகுதியால் யூகியை நோக்கி "அமைச்சனே! யான் தவறுசெய்து இழந்துவிட்ட அரசுரிமையை நீ மீண்டும் குறைசிறிதுமின்றி அமைத்துத் தந்தனை" என்று அவ்வவை நடுவே முறையே கூறாநிற்ப, அதுகேட்ட அமைச்சன் அவ்வளவேனும் நின்னால் கூறப்படும் முகமனுரையால் நம் பண்பு வேற்றுமைப்படும். ஆதலின் அச்செயல் வேண்டா ஒழிக! என்று கூறித் தாம் இருவேறுடம்புடையர் ஆயினும் இருவர்க்கும் உயிர் ஒன்றேயாதலைக் குற்றமறக் கூறி அளவளாவி; என்க.

(வி - ம்.) நான் நீ என்னும் சொற்களே நம்மை வேற்றுமைப் படுத்துகின்றன. உடலால் நீயும் நானுமாக வேற்றுமைப்பட்டிருப்பினும் உயிரால் நோக்குமிடத்து யாம் ஒருவரே என்பது கருத்து.

(வாசவதத்தை பதுமாபதி ஆகிய இருவர் செயல்)

அ௫ - அ௯ : இருவரும்..............பின்

(பொ - ரை.) உதயணனும் யூகியும் ஆகிய இருவரும் அவ்விடத்தே ஒருவரையொருவர் தழுவிக் கொண்டவராய் அவ்விடத்தினின்றும் எழுந்து ஒப்பற்ற பெரிய அரண்மனைக்குட் புகுந்த பின்னர் உதயணன் உவளகத்தில் வாசவதத்தையோடு பதுமாபதி அளவளாவி இருத்தலைக் கண்டு மகிழ்ந்து குற்றமற்ற உணவினை அவ்விடத்தே கொண்டுவரும்படி செய்து நீவிர் இருவீரும் ஒருவீர் போல ஒருகலத்தே உண்ணுக! என அவ்விருவரையும் தனதருளின்கண்ணே சமமாக வைத்த பின்னர்; என்க.

(வி - ம்.) இருவரும் - உதயணனும் யூகியும். ஆசில் குற்றமற்ற. அயினி - உணவு. தரீஇ - கொணர்வித்து. ஒருகலத்து - ஓர் உண்கலத்தில். அயில்க - உண்ணுக.

(இதுவுமது)

௯௦ - ௯௭ : வளம்..............பின்

(பொ - ரை.) வளம் பொருந்திய செல்வத்தையுடைய இளங்தேவியாகிய பதுமாபதி பெறலரிய தன் காதலனுடைய அழகிய அடிகளிலே வீழ்ந்து வணங்கி "அடிகளே! யான் ஒரு வரம் வேண்டுவல்; அஃதாவது - அப்பெருந்தகைமையுடைய கற்பினையுடைய எம்பெருமாட்டி வாசவதத்தையாரோடு எம்பெருமான் பிரிந்திருந்த திங்கள் எத்துணையோ அத்துணைத் திங்கள் இனி அவரைப் பிரியாமல் அவரோடு ஒருங்கே உறைவதனை வேண்டுகின்றேன். அந்த வரத்தை அடியேனுக்கு அருளுதலே என் வேண்டுகோளாம்" என்று அவ்வரத்தையும் பெற்றுப் பின்னர் வாசவதத்தையோடும் இனியமொழிகள் பல பேசி அவள்பால் விடைபெற்றுத் தனது மாளிகைக்குப் போன பின்னர்; என்க.

(வி - ம்.) இளம் பெருந்தேவி; பதுமாபதி. காதலன் : உதயணன். எம்பெருமகள் - எம்பெருமாட்டியாகிய வாசவதத்தை. அவண் - அப்பெருமாட்டியார் மாளிகையில். அடிகள் : விளி. அருளித் தருதல் - அருள்புரிக. என் குறை - என் வேண்டுகோள். திருமாதேவி : வாசவதத்தை. தீவிய - இனிய. விடுப்ப - விடை கொடுப்ப.

(உதயணன் கூறுதல்)

௯அ - ௧௦௩ : பாடக..............யானென

(பொ - ரை.) பாடகமணிந்த சிற்றடிகளையுடைய அப் பதுமாபதியோடு உதயணன் கூடிய கூட்டத்திற்குக் காரணமான

அவன் பண்பினை எண்ணி அவனோடு ஊடுதல் கொண்ட வாசவ தத்தையை நோக்கி உதயணமன்னன், "நல்ல நெற்றியினை யுடைய மடந்தாய்! கேள், உன்னை மீட்டுப் பெறுதற்கு மகதத் திலே சென்று யாங்கள் இருந்த பொழுது இப் பதுமாபதியை யான் கண்டுழி இவளுடைய உணர்ச்சியும் ஒளியும் பிறவும் ஆராயுங்கால் நின்னைப் போலவே தோன்றினமையால் இவளை நீ என்றே கருதி இவளொடு கூடினேன் காண். தளர்ந்த நடையை யுடையோய்! என்னைச் சினவாதே கொள்" என்று வேண்டா நிற்க; என்க.

(வி - ம்.) பாடகம் - ஒருவகைக் காலணி. கூட்டக்குணம் - கூடுதற்குக் காரணமான பரத்தமைப்பண்பு. தேவி : வாசவதத்தை. தளரியல் : விளி.

(வாசவதத்தை சினத்தல்)

௧0௪ - ௧0௮ : ஒக்கும்..............முயங்கி

(பொ - ரை.) உதயணன் அவள் நின்னை ஒத்துத் தோன்றுதலால் என்ற சொல் தன்னுள்ளே நிலைத்து நின்று மிகவும் பெரிது வருத்துதலாலே அவனொடு பொருந்தாளாய்த் தன் கடைக்கண் சிவக்கத் தலையை நிமிர்த்து உதயணனைச் சினந்து நோக்கி, 'என்னோர்!' என்று வினவிய மின்போன்ற சாயலையுடைய அவ்வாசவதத்தைக்குப் பின்னரும் பணி மொழி பல கூறி அவளைப் பருகுவான் போல நோக்கிப் பலகாலும் தழுவி; என்க.

(வி - ம்.) உதயணன் "பதுமாபதி நின்னைப் போலத் தோன்றி னாள்" என்ற சொல் வாசவதத்தையைப் பெரிதும் துன்புறுத்தியது என்பது கருத்து. எதிர் சினந்து நோக்கி என்க. என்னோர் என்பது வினா. ஓகோ அவள் எனக்கு நிகராவளோ? என்று சினந்தபடி. பல்லூழ் -பன் முறையும்.

(உதயணன் வாசவதத்தையைத் தெருட்டி மகிழ்தல்)

௧0௯ - ௧௧௨ : உருவின்.............கூறி

(பொ - ரை.) மீண்டும் அவளை இனிதின் நோக்கி, "திரு நுதல் மடவோய்! அப்பதுமாபதி வெளித் தோற்றத்தினாலல்லது பெண்மை நலத்தில் நின்னை ஒரு தினைத்துணையும் ஒவ்வாள் காண்" என்று அவ்வாசவதத்தை நெஞ்சம் மகிழும் வழியை ஆராய்ந்து அவள் பெரிதும் விரும்பும்படி கூறி; என்க.

(வி - ம்.) உருவம் என்றது புறத் தோற்றத்தை. பெண்மை - பெண்மைத் தன்மை. தினை - ஓர் அளவு. வெள்வேற் கண்ணி - வெள்ளிய வேல்போன்ற கண்ணையுடைய பதுமாபதி. அவள் - வாசவதத்தை. வாயில் - வழி. நயத்தக - விரும்பும்படி.

(இதுவுமது)

ககந - ககக : தெருட்டியும்..............மகிழ்ந்தென்

(பொ - ரை.) இவ்வாறு ஊடலுணர்த்தியும், தெளிவித்தும், மருட்டியும், வாசவதத்தையும் உதயணனும் ஆகிய இருவரும் இடையீடில்லாத இன்பக் கூட்டத்தினையுடையராய்த் தொடுத்தற் கமைந்த மலரையுடைய பூம்பொழிலிலும், தளமிட்ட உவளக மருங்கினும், நுகர்கின்ற அமையாத சிறப்பினையுடைய இன்ப அமைதி யெல்லாம் இவ்வுலகின்கண் இவர்க்கேயன்றி மற்றை யோர்க்கு எய்திற்றில்லை என்னும்படி எய்திய மகிழ்ச்சியை யுடையராய்ப் பேரின்ப உவகையிலே பெரிதும் மகிழ்ந்து முழங்கு கின்ற கடல் சூழ்ந்த உலகின்கண் வாழ்கின்ற சான்றோர்கள் புகழும்படி இனிதே ஒருங்குடன் உறைவாராயினர்; என்க.

(வி - ம்.) தெருட்டல் - உணர்வித்தல். தெளித்தல் - தெளியும்படி செய்தல். மருட்டல் - வியப்பித்தல். தொடை - தொடுத்தல். படை - தளம்; சுவருமாம்; காவற்படையுமாம். அமைதி - இன்ப அமைதி. ஆன்றோர் - சான்றோர்.

அ. தேவியைத் தெருட்டியது முற்றிற்று.

கூ. விருத்தி வகுத்தது

இதன்கண் : *உதயணமன்னன் உருமண்ணுவா முதலியோர்க்குச் சீவிதம் நல்கியதும், யூகியின் சீவிதமும் இடவகன் சீவிதமும் வயந்தகன் சீவிதமும் இசைச்சன் முதலாயினோர் சீவிதமும் தேவிமார் சீவிதமும் கூறப்படும்.*

உவகையின் மகிழ்ந்தாண் டுறையுங் காலை
உயர்பெருந் தோல்சீ ருருமண் ணுவாவிற்
கேழுநா டோறு முழுநகர் புகழப்
படிவ முத்தீக் கடிகைக் கணனும்
ஐம்பெருங் குழுவு மத்தி கோசமும்
மன்பெருஞ் சிறப்பின் மனைப்பெருஞ் சனமும்
தேனேர் தீஞ்சொற் றேவி மார்களும்
தானையுஞ் சூழத் தானே யணிந்துதன்
நாம மோதிர நன்னாட் கொண்டு
சேனா பதியிவ னாகெனச் செறித்துப்
பன்னூ றாயிரம் பழுதின்று வருவன
மன்னூர் வேண்டுவ மற்றவற் கீத்துக்
குதிரையுந் தேருங் கோலமருப் பியானையும்
எதிரிய சிறப்போ டெனைப்பல நல்கிப்
பண்பார் சாயற் பதுமா பதிதன்
கண்போ றோழி காண்டகு காரிகை
இணையந்த வேற்க ணிராசனை யென்னும்
வயங்கிழை மாதரோடு வதுவை கூட்டிப்
பெருங்கடிச் சிறப்பும் பெயர்த்தொருங் கருளி
இருங்கடல் வரைப்பி னிசையொடு விளங்கிய
சயந்தியம் பதியும் பயம்படு சாரல்
இலாவா ணகமு நிலவ நிறீஇக்
குரவரைக் கண்டவர் பருவர றீர
ஆண்டினி திருந்தியாம் வேண்ட வருகென
விடுத்தவற் போக்கிய பின்றை யடுத்த
ஆதி யாகிய சேதிநன் னாடு
யூகிக் காகென வோலை போக்கி

இடவகற் கிருந்த முனையூ ருள்ளிட்
டடவி நன்னா டைம்பது கொடுத்து
விறற்போர் மன்ன ரிறுக்குந் துறைதோறும்
புறப்பது வாரமோடு சிறப்புப்பல செய்து
புட்பகம் புக்குநின் னட்புட னிருந்து
விளித்தபின் வாவென வளித்தவற் போக்கி
வயந்தகன் றனக்கு வழக்குப்புற மாகெனப்
பயம்படு நன்னகர் பதினான் றீத்து
வைக லாயிரங் கைவயிற் கொடுத்துப்
பிரியா துறைகென வருடலை நிறீஇ
இசைச்சன் முதலா வேனோர் பிறர்க்கும்
பயத்தின் வழாஅப் பதிபல கொடுத்துப்
பெயர்த்தனன் போக்கிப் பிரச்சோ தனனுட்
டருஞ்சிறைக் கோட்டத் திருந்த காலைப்
பாசறை யுழந்த படைத்தொழி லாளரை
ஓசை முரசி னொல்லெனத் தரூஉ
....
னெச்சத் தோர்கட் கியன்றவை யீத்து
நிச்ச மாயிர முற்றவை நல்கிப்
பக்கற் கொண்டு பாற்படுத் தோம்பி
இலாவா ணகவழிச் சாதக னென்னும்
குலாலற் கேற்பப் பெருங்குய மருளி
இருந்தினி துறைகென விரண்டூ ரீத்து
மகதத் துழந்த மாந்தர்க் கெல்லாம்
தகுநல் விருத்தி தான்பாற் படுத்துத்
தத்த மூர்வயிற் சென்றுவரப் போக்கி
ஆய்ந்த சிறப்பி னுதித்திய தருமற்
கோங்கிய சிறப்பி னோரூர் நல்கி
அத்தறு வாயி லாருயிர் வழங்கிய
சத்திய காயன் மக்களைக் கூஉய்த்
தந்நிலைக் கெல்லாந் தலைமை யியற்றித்
தோன்றிற் கொண்டு தொடர்ச்சியிற் பழையோர்
ஒன்றிற் குதவா ரென்றுபுறத் திடாது
நன்றி தூக்கி நாடிய பின்றை
யூகி தன்னோ டொழிய வேனைப்

பாகியல் படைஞர் பலரையும் விடுத்து
மாசின் மாணகக் கோயில் குறுகிக்
குடிப்பெருங் கிழத்திக்குத் தானஞ் செய்கென
நடுக்கமில் சேம நன்னா டருளி
வாசவ தத்தைக்கும் பதுமா பதிக்கும்
தேவி விருத்தி யாவன வருளி
ஆடலும் பாடலு மணியினு மிக்கோர்
சேடி மாரையு மிருநூ றாக்கிக்
கோள்கென வருளிக் குறைபா டின்றி
நாணா டோறு மாணா வுவகையொடு
காட்சி பெருமுத லாகக் கவினிய
மாட்சி நீரின் மாண்சினை பல்கிய
வேட்கை யென்னும் விழுத்தகு பெருமரம்
புணர்ச்சிப் பல்பூ விணர்த்தொகை யீன்று
நோயி லின்பக் காய்பல தூங்கி
யாழ வற்புக்கனி யூழறிந் தேந்த
ஓவாது நுகர்ந்து தாவாச் செல்வமோ
டொழிவின் மாநக ரறக்கடந் தாங்கி
ஒழுகுப மாதோ வொருங்குடன் கியைந்தென்.

உரை

கூ. விருத்தி வகுத்தது

அஃதாவது - உதயணன் அமைச்சர் முதலியோர்க்குச் சீவிதம் வழங்கிய செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் உருமண்ணுவாவுக்கு விருத்தி அளித்தல்)

க - கo : உவகை................செறித்து

(பொ - ரை.) இவ்வாறு உதயண நம்பியும் வாசவதத்தையும் உடனுறை உவகையினாலே பெரிதும் மகிழ்ந்து அரண்மனையின்கண் உறையாநின்ற காலத்தே உதயண மன்னன் உயர்ந்த பெரிய பழம்புகழையுடைய உருமண்ணுவா என்னும் அமைச்சனுக்குச் சிறப்புச் செய்வான், அக்கோ நகரம் முழுவதும் புகழும்படி ஏழு நாள் விழாவெடுத்து விரத ஒழுக்கினையுடைய மூன்று வகை வேள்வித் தீயினையுமுடைய முகூர்த்த

விதானிகள் கூட்டமும் ஐம்பெருங் குழுவினரும் அத்திகோசக் கூட்டத்தாரும் நிலைபெற்ற பெருஞ்சிறப்பினையுடைய பெருங்குடி மாந்தரும் தேனை யொத்த இனிய சொல்லையுடைய வாசவதத்தையும் பதுமாபதியுமாகிய தேவிமார்களும் படைத்தலைவர்களும் தன்னைச் சூழ்ந்து நிற்பத் தான் அணிந்துள்ள தன் பெயர் பொறித்த மோதிரத்தை நல்லதொரு முழுத்தத்திலே "இப்பெருமகன் நம் படைத்தலைவன் ஆகுக!" என்று கூறித் தானே அவ்வுருமண்ணுவாவின் விரலிலே செறித்து என்க.

(வி - ம்.) தொல்சீர் - வழிவழி வந்த பெரும்புகழ். நகர் முழுதும் புகழ என்க. நகர் : ஆகுபெயர். ஏழுநாள் விழா வெடுத்து என்க. படிவம் - விரத ஒழுக்கம். முத்தீ - மூன்று வகைப்பட்ட வேள்வித்தீ. அவை : ஆகவனீயம், தக்கணாக்கினி, காருக பத்தியம் என்பன. கடிகைக் கணன் - முகூர்த்த விதானிகளின் கூட்டம். இதனைச் சீவக சிந்தாமணியில் (உ௲உ) "எண்ண மென்னினி" எனவரும் செய்யுளில் கடிகையும் வருகென என்புழி, "கடிகை - முகூர்த்த விதானி" என்னும் நச்சினார்க்கினியர் உரையாலும் உணர்க. கணன் - கணம்; கூட்டம். ஐப்பெருங்குழு - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர். அத்தி கோம் - யானை எடுத்தற்குரிய செல்வமுடையவரென்ப. அத்தி கோசத்தாரை அத்தி கோசம் என்றது ஆகுபெயர். இவர் கூட்டமாக வாழ்பவர் என்பது தொல். பெயர். சூ. கக. நன். சூ. உ௭௫, இவற்றினுரைகளில் குழுவின் பெய்ர்க்கு அத்திகோசத்தார் என்று மேற்கோள் காட்டப் பட்டிருத்தலால் விளங்கும். தன் நாம மோதிரம் - தன் பெயரெழுதிய மோதிரம். "ஆம்பான் மணி நாம மோதிரந் தொட்டையென்ன" (சீவக க௦௪௦); "போர்க்கெல்லாந், தானுதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சேர், ஏனாதிப் பட்டத்திவன்" தொல். புறத். சூ. அ, எ, "செம்போ னீண்முடித் தேர்மன்னர் மன்னற்குப், பைம்பொ னுழிதொட் டான்படை காட்டினன்" சீவக. (உகக௭.) என வருவனவுங் காண்க. சேனாபதிப் பதவி அமைச்சர் பதவியினும் சிறந்தது என்ப.

(இதுவுமது)

கக - ககூ : பன்னூறு..............அருளி

(பொ - ரை.) பின்னரும் ஆண்டொன்றில் பன்னூறாயிரம் பொன்கள் குறைவின்றி வருவாய் வருவனவாகிய நிலைபெற்ற ஊர்களையும், அவற்றிற்கு வேண்டுவனவற்றையும் அவ்வுருமண்ணுவாவிற்கு வழங்கிக் குதிரையும் தேரும் கொலை செய்யும் இயல்புடைய மருப்பினையுடைய யானையும் பிறவுமாகிய அவன் தகுதிக்கேற்ற சிறப்போடு ஏனைய பல பொருள்களையும் வழங்கிப் பண்புமிக்க சாயலையுடையவளும் பதுமாபதிக்குக் கண்போன்ற தோழியும் விரும்பிக் காணத் தகுந்த அழகுடையவளும் வேல்போன்ற கண்ணையுடையவளும் இராசனை என்னும் பெயரையுடையாளும் விளங்காநின்ற அணிகலன்களை யுடையவளும் ஆகிய கன்னியினை அவ்வமைச்சனுக்குத் திருமணம் புணர்வித்துப் பெரிய அத்திருமண வரிசைகளும் மீண்டும் ஒருங்கே வழங்கி; என்க.

(வி - ம்.) பன்னூருயிரம் பொன் என்க. மன்னூரும். வேண்டுபவும் என்க. மற்றவற்கு : உருமண்ணுவாவிற்கு. எதிரிய - ஏற்ற. காரிகை - அழகு. வதுவை - திருமணம். கடிச் சிறப்பு — மணச் சிறப்பு.

(இதுவுமது)

உ0 - உரு: இருங்கடல்...............பின்றை

(பொ - ரை.) பெரிய கடல் சூழ்ந்த இந்நில உலகத்தின்கண் புகழோடு விளங்கிய சயந்தி மாநகரத்தையும், பயன்றரும் மலைச் சாரலையுடைய இலாவாணக நகரத்தையும் அவன் ஆட்சியின்கண் நின்று நிலவும்படி அவனை அவற்றிற்கு மன்னனாய் நிறுத்தி, "அன்பனே! நீ சென்று நின்னுடைய இருமுதுகுரவர்களையும் கண்டு மகிழ்ந்து அவர் துன்பம் தீரும்படி அந்நாட்டின்கண் இனிதே இருந்து யாம் அழைக்கும்பொழுது ஈங்கு வருவாயாக" என்று கூறி அவ்வுருமண்ணுவாவிற்கு விடைஈந்து போக்கிய பின்னர்; என்க.

(வி - ம்.) சயந்தியம்பதி - வத்தவ நாட்டின்கண் ஒரு சிறந்த நகரம். இலாவாணக நகரம் குறிஞ்சி நிலத்தின் கண்ணது என்பது தோன்றப் பயம்படு சாரல் இலாவாணகம் என்ருர். குரவர் - தாயும் தந்தையும். பருவரல் - துன்பம்.

(யூகியின் பேறு)

உரு - உஎ: அடுத்த...............போக்கி

(பொ - ரை.) தன் நாட்டினை அடுத்ததும் தனக்கு முதலில் ஆட்சி செய்ய அமைந்ததும் ஆகிய சேதி என்னும் நல்ல நாடு யூகிக்குச் சீவிதம் ஆகுக என்று அந்நாட்டிற்கு ஓலைவிடுத்த பின்னர்; என்க.

(வி - ம்.) வத்தவநாட்டினை அடுத்ததும் தன் ஆட்சிக்கு முதலாயதும் ஆகிய சேதிநாடு என்க. யூகிக்குச் சீவிதம் ஆகுக என்று என்க.

(இடவகன் பெற்றவை)

உஅ — ௩௩: இடவகன்...............போக்கி

(பொ - ரை.) பின்னர் இடவகன் என்னும் அமைச்சனுக்கு அவன் முன்பிருந்த முனையூர் உள்ளிட்ட குறிஞ்சி நிலப் பகுதியாகிய நல்ல ஐம்பது ஊர்களைக் கொடுத்து வெற்றியையுடைய போரினையுடைய மன்னர் திறைப்பொருள் கொணர்ந்து அளக்கும் இடந்தொறும் உள்ள இறையிலி நிலங்களோடே பிறவும் பல சிறப்புகளைச் செய்து, "நண்பனே! நீ புட்பக நகரத்திற்குச் சென்று உன்னுடைய கேளிரோடு இருந்து வாழ்க. யான் அழைத்தபொழுது ஈண்டு வருவாயாக" என்று அவ்விடவகனுக்கும் விருத்தி வழங்கிச் செலுத்திய பின்; என்க.

(வி - ம்.) முனையூர் - எல்லைப்புறப் பகுதி. அடவிநாடு - குறிஞ்சி நிலத்தூர்கள். புறப் பதுவாரம் - இறையிலி நிலவருவாய் போலும்(?) புட்பகம் - ஒரு நகரம். விளித்தபின் - அழைத்தபின்.

(வயந்தகனுக்கு அளித்தவை)

௯௪ - ௭ : வயந்தகன்..............நிறீஇ

(பொ - ரை.) பின்னர் வயந்தக குமரனுக்குச் சீவிதப் பொருளாருக என்று பயன்மிக்க பதினொரு நகரங்களை வழங்கி நாளொன்றிற்கு ஆயிரம் பொன் ஊதியமாகக் கையிற்கொடுத்து, நீ என்னைப் பிரியாமல் ஈண்டே இருப்பாயாக என்று அருளித் தன்பால் நிறுத்திக்கொண்டு; என்க.

(வி - ம்.) வழக்குப் புறம் - சீவிதத்தின் பொருட்டு இறையிலியாக விடப்படும் நிலம். வைகல் ஆயிரங் கொடுத்து - ஒவ்வொரு நாளும் ஆயிரம் ஆயிரம் பொன் ஊதியமாக அளித்து.

(இசைச்சன் முதலாயினோர் பெற்றவை)

௯௮ – ௬௯ : இசைச்சன்...............தரூஉ

(பொ - ரை.) இசைச்சன் முதலிய மற்றைத் தோழர்களுக்கும் வருவாயில் குறைதலில்லாத ஊர்கள் பலவற்றை வழக்குப் புறமாக வழங்கித் தன் நகரத்தினின்றும் அவ்வவர் ஊர்க்குச் செலுத்திப் பின்னர்த் தான் பிரச்சோதன மன்னனுடைய நாட்டின்கண் தப்புதற்கரிய சிறைக்கோட்டத்திலிருந்த காலத்தே தன் பொருட்டு மாறுவேடமுடையாய்ப் பாசறையின்கண் போர்த் தொழில் செய்த படைத் தொழிலாளரை எல்லாம் ஓசையையுடைய முரசறைந்து ஆரவாரத்தோடு வரவழைத்து...........; என்க.

(வி - ம்.) ஏனோர் – மற்றைத் தோழர்கள். பயம் - பயன். பதி - ஊர். பிரச்சோதனன் நாடு - அவந்தி நாடு. பாசறை - படைவீடு. ஒல்லென : ஒலிக்குறிப்பு. தரூஉ - வரவழைத்து. ௬௧ ஆம் எண்ணில் நிற்றல் வேண்டிய ஓரடி அழிந்தொழிந்தது.

(இதுவுமது)

௬௪ - ௬௬ : எச்சத்தோர்.............ஈத்து

(பொ - ரை.) (அப்போரின்கண் இறந்தோர்) மக்கள் முதலியோர்க்கு வழங்கும் மரபினவாகிய பொருள்களையும் வழங்கி அவர்கட்கு நாள்தோறும் ஆயிரம் பொன் ஊதியமாகப் பொருந்தியவற்றை வழங்கி அப்படை மறவர்களைத் தன் பக்கத்திலே அமைந்த படைச் சேரியின்பால் இருத்திப் பாதுகாத்து மேலும் இலாவாணக நகரத்தினனாகிய சாதகன் என்னும் நண்பனாகிய குயவன் தகுதிக்கேற்பப் 'பெருங்குயம்' என்னும் சிறப்புப் பட்டப்

பெயரையும் வழங்கி மேலும் நீ இனிதிருந்து வாழ்வாயாக என்று இரண்டூர்களையும் வழங்கி; என்க.

(வி - ம்.) எச்சத்தோர் - மக்கள் பெயரர் முதலியோர். இயன்றவை - போரிற்பட்டோர் மக்களுக்கு இத்துணை வழங்குதல் வேண்டும் என்று நூலின்கண் கூறப்பட்டவை. நிச்சம் - நாள் தோறும். உற்றவை- ஊதியமாகப் பொருந்தியவை. இலாவாணக வழிச்சாதகன் - இலாவாணகத்தின்கண் உள்ள சாதகன். சாதகன் : இவனுடைய ஊர் கோசம்பி நகரம். குயவன் : உதயணன் சிறைப்பட்ட பொழுது அது பொறாமல் வேறு வடிவங்கொண்டு தானும் உடன் சென்று உஞ்சை நகரின் பக்கத்திலுள்ள தோர் ஊரின் ஒரு வீட்டிலிருந்து உதயணனுக்கு உதவி செய்தவன் யூகிக்கு உயிர்த்தோழன், அரசன் பால் அன்புமிக்கவன், யூகிக்கும் உருமண்ணுவாவுக்கும் இடையே பிறர் அறியாமல் தூதுத் தொழில் மேற்கொண்டவன். உதயணன் இலாவாணக நகரம் வந்த பின்னர் அங்குக் குடியேறினன். ஆதலின் ஈண்டு இலாவாணக வழிச் சாதகன் என்று கூறப்படுகின்றான்.

(இதுவுமது)

ருo - ருஎ : மகதத்து..............இயற்றி

(பொ - ரை.) பின்னரும் தான் மகதநாட்டிற்குச் சென்றுழித் தன்னோடு வாணிகர் வடிவாய் வந்து வருந்திய மறவர்கட்கெல்லாம் அவரவர் தகுதிக்கேற்ற சீவிதப்பொருள்களைத் தானே கூறுபடுத்திக் கொடுத்து அவரவர் ஊர்க்குச் சென்று தான் வேண்டும்போது வருமாறு பணித்துச் செலுத்தி ஆராய்ந்த சிறப்பினையுடைய 'ஆதித்திய தருமன்' என்னும் சிறந்த மறவனுக்கு உயர்ந்த சிறப்பினையுடைய ஓர் ஊரை விருத்தியாக வழங்கி இன்னும் ஆருணியோடு போர் நிகழ்ந்துழி அப் போர்க்களத்தின் கண் உயிர் வழங்கிய சத்திய காயன் என்னும் மறவன் மக்களை அழைத்து அவர்தம் மறவர் கூட்டத்திற்கெல்லாம் தலைமை வழங்கி; என்க.

(வி - ம்.) மகதத்துழந்த மாந்தர் - மகத நாட்டுக்குத் தன்னோடு வாணிகர் வடிவாய் வந்து உதவி செய்த மறவர் முதலியோர். ஆதித்திய தருமன் : ஒரு சிறந்த மறவன். தருவாய் - செவ்வி. களத்தின்கண் உயிர் வழங்கிய சத்திய காயன் என்க. கூஉய் - அழைத்து.

(இதுவுமது)

ருஅ - கூ௫ : தொன்றில்..............அருளி

(பொ - ரை.) பழங்காலந் தொட்டுத் தங்குலத்தாரைத் தொடர்ந்து வருகின்ற பழமையுடைய மறக்குடி மாந்தரை இவர் நமக்கு ஒரு காரியத்திற்கும் உதவுவாரல்லர் என்று புறத்தே தள்ளிவிடாமல் அவர் பண்டுசெய்த நன்றியைச் சீர்தூக்கி உணர்ந்து அவர்கட்கும் சீவிதமருளிய பின்னர் யூகியைத்

தன்னோடு இருக்கும்படி செய்து பாகரும் படை மறவரும் ஆகிய ஏனையோர் பலரையும் இங்ஙனமே விருத்தி வழங்கி அவரவர் ஊர்க்குப் போக்கிய பின்னர்க் குற்றமற்ற அரண்மனைக்குட் சென்று ஆங்கு வாழுகின்ற தன் குடிப்பெருங் கிழத்தியாகிய நற்றாய் தானம் செய்தற்பொருட்டு வற்கடத்தால் நடுங்குதலில்லாத பாதுகாப்பமைந்த நல்ல நாட்டினை வழங்கி; என்க.

(வி - ம்.) தொன்றிற்கொண்டு - பழங்காலத்திலிருந்து. ஒன்றிற்கு - ஒரு காரியத்திற்கும். நாடி - அவரவர்க்கு ஏற்ற சீவிதம் வழங்கிய பின்னர் என்க. பாகியல் - பாகியலினர். யானை தேர் முதலியவற்றின் பாகர்கள் என்க. மாசில்கோயில் - மாண்கோயில், அகக்கோயில் எனத் தனித்தனி கூட்டுக. நடுக்கம்-வற்கடத்தால் உயிர்கள் நடுங்குதல். சேமம் - பாதுகாப்பு.

(உதயணன் தன் தேவிமார்க்கு விருத்தியளித்தல்)

கூகூ - எ0 : வாசவதத்தை..............அருவி

(பொ - ரை.) இன்னும், வாசவதத்தையும் பதுமாபதியும் ஆகிய கோப்பெருந்தேவிமார் இருவர்க்கும் தேவி விருத்தி என்னும் சிறப்புச் சீவிதப் பொருள்களை அவர் பெருமைக்கு ஏற்பனவாக வழங்கி ஆடுதலினும் பாடுதலினும் அழகினும் சிறந்தோர்களாகிய தோழிமார்களையும் இருகூறாக வகுத்து இருவர்க்கும் வழங்கி; என்க.

(வி - ம்.) தேவி விருத்தி - தேவிமார்க்கு வழங்கும் சீவிதம். ஆடலும் பாடலும் அணியினு மிக்கோர் சேடி மாரையும் என்னும் இத்தொடர், "ஆடலும் பாடலும் அழகுங்காட்டி" எனவரும் மணிமேகலையினையும் (கஅ - க0ச) "ஆடலும் பாடலும் அழகுமென்றிக் கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்" எனவரும் சிலப்பதிகாரத்தையும் (ங : அ - க) நினைவூட்டுகின்றது.

(இதுவுமது)

எ0 - அ0 : குறை..............இயைந்தென்

(பொ - ரை.) குறைபாடு சிறிதுமின்றி நாள்தோறும் அமையாத மகிழ்ச்சியோடே காட்சி என்னும் அடிப் பகுதியினையும் அழகிய பண்புகளாகிய மாட்சிமையுடைய மிக்க கிளைகளையும் கொண்டு அழகுற்ற வேட்கை என்னும் சிறப்புடையதொரு பெரிய மரம் புணர்ச்சி என்னும் பல பூக்களையுடைய கொத்துக்களை ஈன்று துன்பமில்லாத இன்பமாகிய பல காய்களைக் காய்த்துத் தூங்கவிட்டு அன்பாகிய கனிகளை முறையறிந்து ஏந்தி நிற்றலாலே அக்கனிகளை உதயணனும் தேவிமாரும் கூடி இடையீடின்றி நுகர்ந்து கெடாத செல்வப் பெருக்கத்தோடு அழிதலில்லாத பெரிய நகரமாகிய கோசம்பியின்கண் தத்தமக்குரிய அறக்

கடமைகளை மனம் பொருந்தி மேற்கொண்டு ஒழுகாநின்றனர் என்க.

(வி - ம்.) காட்சி - ஊழினால் தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் ஓரிடத்தே தலைப்பட்டு ஒருவரையொருவர் காண்டல். இன்ப வாழ்க்கைக்கு இக்காட்சியே முதலாகலின் அதனை அடிமரமாக உருவகித்தார். இதனை,

"ஒன்றே வேறே யென்றிரு பால்வயி
னொன்றி யுயர்ந்த பால தாணையி
னொத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப
மிக்கோ னாயினுங் கடிவரை இன்றே" (தொல். கள. சூ. உ)

எனவரும் தொல்காப்பியத்தானும் உணர்க. காட்சி - பெருமுதலாக என்றமையால் ஏனைய அகத்துறைகள் ஆகிய மாண் கிளைபல்கிய மரம் என்க. வேட்கை என்னும் மரம். புணர்ச்சி - இன்பத்திற்குக் காரணமாகலின் அதனைப் பூ என்றார். இன்பம் - காய் என்க. இம் மரத்தின் பயன் அன்பு ஆகலின் அற்புக் கனி ஏந்த என்றார். இப்பகுதியோடு,

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி யருந்த வத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்த ருமம்ம லர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே"
(கம்ப. நகர. எரு)

என்றகம்ப நாடர் வாக்கினையும் காண்க.

க. விருத்தி வகுத்தது முற்றிற்று.

க௯. பிரச்சோதனன் தூதுவிட்டது

இதன்கண் : வாயிலோன் பிரச்சோதனன் தூதர் வந்தமையை உதயணனுக்குத் தெரிவித்தலும், பதுமை என்னும் தூதியின் இயல்பும், வாசவதத்தைக்குப் பிரச்சோதனன் அளித்த பொருள்களும், பதுமை பிரச்சோதனன் ஓலையை உதயணனிடம் அளித்தலும், அவன் அதனை வாங்குதலும், அவ்வோலையில் எழுதிய செய்தியும், உதயணன் பதுமையை வினவுதலும், பதுமை விடையளித்தலும், உதயணன் கூற்றும், அவன் பண்ணிகாரங்களைக் காணுதலும், வந்தோரை உபசரித்தலும், யூகிக்குக் கூறுதலும் கூறப்படும்.

ஒருங்குநன் கியைந்தவ ருறைவுழி யொருநாள்
திருந்துநிலைப் புதவிற் பெருங்கத வணிந்த
வாயில் காவலன் வந்தடி வணங்கி
ஆய்கழற் காலோ யருளிக் கேண்மதி
உயர்மதி லணிந்த வுஞ்சையம் பெருநகர்ப்
பெயர்வில் வென்றிப் பிரச்சோ தனனெனும்
கோற்ற வேந்தன் றூதுவர் வந்துநம்
முற்றம் புகுந்து முன்கடை யாரென
அந்தளிர்க் கோதையைப் பெற்றது மற்றவள்
தந்தை தந்த மாற்றமுந் தலைத்தாள்
இன்பம் பெருக வெதிர்வனன் விரும்பி
வல்லே வருக வென்றலின் மல்கிய
மண்ணியன் மன்னர்க்குக் கண்ணென வகுத்த
நீதி நன்னூ லோதிய நாவினள்
கற்றுநன் கடங்கிச் செற்றமு மார்வமும்
முற்ற நீங்கித் தத்துவ வகையினும்
கண்ணினு முள்ளே.............
குறிப்பி னெச்ச நெறிப்பட நாடித்
தேன்றோய்த் தன்ன கிளவியிற் றெளிபடத்
தான்றெரிந் துணருந் தன்மை யறிவினள்
உறுப்புப்பல வறுப்பினு முயிர்முத றிருக்கினும்
நிறுத்துப்பல வூசி நெருங்க வூன்றினும்
கறுத்துப்பல கடிய காட்டினுங் காட்டாது

சிறப்புப்பல செயினுந் திரிந்துபிறி துரையாள்
பிறைப்பூ ணகலத்துப் பெருமக னவன்மாட்டுக்
குறித்தது கூறுதல் செல்லாக் கொள்கையள்
இன்னது செய்கென வேவ லின்றியும்
மன்னிய கோமான் மனத்ததை யுணர்ந்து
முன்னியது முடிக்கு முயற்சிய ளொன்னுர்
சிறந்தன பின்னுஞ் செயினு மறியினும்
புறஞ்சொ றூற்ருது புகழுந் தன்மையள்
புல்லோர் வாய்மொழி யோரீஇ நல்லோர்
துணிந்த நூற்பொருள் செவியுளங் கெழீஇப்
பணிந்த தீஞ்சொற் பதுமை யென்னும்
கட்டுரை மகளோடு கரும நுனித்து
விட்டுரை விளங்கிய விழுப்புக ழாளரும்
கற்ற நுண்டொழிற் கணக்கருந் திணைகளும்
காய்ந்த நோக்கிற் காவ லாளரும்
தேன்ருர் மார்பன் றிருநகர் முற்றத்துக்
கைபுனைந் தோருங் கண்டு காணுர்
ஐயைந் திரட்டி யவன வையமும்
ஒள்ளிழைத் தோழிய ரோரா யிரவரும்
செயிழை யாடிய சிற்றிற் கலங்களும்
பாசிழை யல்குற் ருய ரெல்லாம்
தம்பொறி யொற்றிய தச்சுவினைக் கூட்டத்துச்
செம்பொ னணிகலஞ் செய்த செப்பும்
தாயுந் தோழியுந் தவ்வையு மூட்டுதல்
மேயல ளாகி மேதகு வள்ளத்துச்
சுரைபொழி தீம்பா லுரைதெளித் தாற்றித்
தன்கை சிவப்பப் பற்றித் தாங்காது
மகப்பா ராட்டுந் தாயரின் மருட்டி
முகைப்புரை மெல்விரல் பானய மெய்த
ஒளியுகிர் கொண்டு வளைவா யுறீஇச்
சிறகர் விரித்து மெல்லென நீவிப்
பறவை கொளீஇப் பல்லூழ் நடாஅய்த்
தன்வாய் மழலை கற்பித் ததன்வாய்ப்
பரத கீதம் பாடுவித் தெடுத்த

மேதகு கிளியு மென்னடை யன்னமும்
அடுதிரை முந்நீர் யவனத் தரசன்
விடுநடைப் புரவியும் விசும்பிவர்ந் தூரும்
கேடில் விமானமு நீரியங்கு புரவியும்
கோடி வயிரமுங் கொடுப்புழிக் கொள்ளான்
சேடிள வனமுலைத் தன்மக ளாடும்
பாவை யணிதிறை தருகெனக் கொண்டுதன்
பட்டத் தேவிப் பெயர்நனி போக்கி
எட்டி னிரட்டி யாயிர மகளிரும்
அணங்கி னிழையவு மருளான் மற்றென்
வணங்கிறைப் பணைத்தோள் வாசவ தத்தைக்
கோருமக ளாகெனப் பெருமகன் பணித்த
பாவையு மற்றதன் கோயிலுஞ் சுமக்கும்
கூனுங் குறளு மேனுங் கூறிய
நருமதை முதலா நாடக மகளிரும்
ஆன்வீற் றிருந்த வரும்பெற லணிகலம்
தான்வீற் றிருத்தற்குத் தக்கன விவையென
முடியுங் கடகமு முத்தணி யாரமும்
தோடியும் பிறவுந் தொக்கவை நிறைந்த
முடிவாய்ப் பேழையு முரசுங் கட்டிலும்
தவிசுங் கவரியுந் தன்கை வாளும்
குடையுந் தேரு மிடையற வில்லா
இருங்களி யானை யினமும் புரவியும்
வேறுவே றாகக் கூறுகூ றமைத்துக்
காவ லோம்பிக் காட்டினிர் கொடுமினென்
றாணை வைத்த வன்னோர் பிறரும்
நெருங்கிமேற் சென்றி யொருங்குவந் திறுப்பப்
பழியி லொழுக்கிற் பதுமை யென்னும்
கழிமதி மகளொடு கற்றோர் தெரிந்த
கோல்வ லாளர் கொண்டனர் புக்குத்தம்
கால் வல்லிவுளிக் காவலற் காட்டத்
தொடித்தோள் வேந்தன்முன் றுட்கென் றிறைஞ்சினள்
வடிக்கே முண்கண் வயங்கிழை குறுகி
முகிழ்விரல் கூப்பி யிகழ்வில ளிறைஞ்சி

உட்குறு முவண முச்சியிற் சுமந்த
சக்கர வட்டமொடு சங்குபல பொறித்த
தோட்டுவினை வட்டித்துக் கூட்டரக் குருக்கி
ஏட்டுவினைக் கணக்க னீடறிந் தோற்றிய
முடக்கமை யோலை மடத்தகை நீட்டி
மூப்பினு முறையினும் யாப்பமை குலத்தினும்
அன்பினுங் கேளினு மென்றிவை பிறவினும்
....
மாசனம் புகழு மணிபுனைந் தியற்றிய
ஆசனத் திழிந்த வமைதிகொ ளிருக்கையன்
சினைக்கெடிற் றன்ன செங்கேழ்ச் செறிவிரல்
தனிக்கவின் கொண்ட தகைய வாக
அருமறை தாங்கிய வந்த ணாளரொடு
பொருணிறை செந்நாப் புலவ ருளப்பட
ஏனோர் பிறர்க்கு நாணு டோறும்
கலனிறை பொழியக் கவியி னல்லதை
இலமென மலரா வெழுத்துடை யங்கையின்
ஏற்றனன் கொண்டு வேற்றுமை யின்றிக்
கோட்டிய முடிய னேட்டுப்பொறி நீக்கி
மெல்லென விரித்து வல்லிதி னோக்கிப்
பிரச்சோ தனனெனும் பெருமக னோலை
உரைச்சேர் கழற்கா லுதயணன் காண்க
இருகுல மல்ல திவணகத் தின்மையிற்
குருகுலக் கிளைமை கோடல் வேண்டிச்
சேனையொடு சென்று செங்களம் படுத்துத்
தானையொடு தருத லானெனக் கருமையிற்
பொச்சாப் பொம்பிப் பொய்க்களிறு புதைஇ
இப்படித் தருகென வேவினே னமர்களை
அன்றைக் காலத் தந்நிலை நினையா
தின்றைக் காலத் தெற்பயந் தெடுத்த
கோமா னெனவே கோடல் வேண்டினேன்
ஆமா னோக்கி யாயிழை தன்னொடு
மகப்பெறு தாயோ டியானு முவப்பப்
பெயர்த்தென் னகரி யியற்பட வேண்ணுக

தன்னல திலளே தையலுந் தானும்
என்னல திலனே யினிப்பிற னாகலென்
பற்றா மன்னனைப் பணிய நூறிக்
கொற்றங் கொண்டதுங் கேட்டனென் றெற்றென
யான்செயப் படுவது தான்செய் தனனினிப்
பாம்பு மரசும் பகையுஞ் சிறிதென
ஆம்பொரு ளோதின ரிகழா ரதனாற்
றேம்படு தாரோன் றெளிதலோன் றிலனாய்
ஓங்குகுடை நீழ லுலகுதுயின் மடியக்
குழவிகொள் பவரி னிகழா தோம்பிப்
புகழ்பட வாழ்க புகழ்பிறி தில்லை
ஆகிய விழுச்சீ ரரும்பெற லமைச்சன்
யூகியை யெமரொடு முடனே விடுக்க
கரும முண்டவற் காணலுற் றனெனென
ஒருமையிற் பிறவு முரைத்தவை யெல்லாம்
பெருமையிற் கொள்கெனப் பிரியாது புணர்த்த
மந்திர விழுப்பொருண் மனத்தே யடக்கி
வெந்திறல் வீரன் விளங்கிய முறுவலன்
ஆனாக் காத லவந்திகை தன்னகர்
மேனாட் காலை வெவ்வழற் பட்ட
தீயுண் மாற்றம் வாயல வெனினும்
உரையெழுதி வந்தவிவ் வோலையு ளொருக்குறை
பழுதா லென்று பதுமையை நோக்கப்
பவழச் செவ்வாய் படிமையிற் றிறந்து
முகிழ்விரல் கூப்பி முற்றிழை யுரைக்கும்
பரும யானையிற் பற்றா ரோட்டிய
பெருமையின் மிக்கவெம் பெருமகன் றன்னோ
டொருநாட்டுப் பிறந்த வுயிர்புரை காதற்
கண்ணுறு கடவுண் முன்னர் நின்றேன்
ஒண்ணுதற் குற்றது மெய்கொலென் றுள்ளிப்
படுசோன் மாற்றத்துச் சுடர்முகம் புல்லெனக்
குடைகெழு வேந்தன் கூறுது நிற்பச்
சினப்போர்ச் செல்வ முன்ன மற்றுநின்
அமைச்சரோ டதனை யாராய்ந் தனன்போல்
நூனெறி மரபிற் றுனறிவு தளரான்

தொடுத்த மாலை யெடுத்தது போல
முறைமையின் முன்னே தெரிய வவனெம்
இறைமகற் குரைத்தன னித்துணை யளவவள்
மாய விருக்கைய ளாய்வ தாமென
நீட்ட மின்றவ ணீயள விடினே
கூட்ட மெய்து நாளு மிதுவென
இன்றை நாளே யெல்லை யாகச்
சென்ற திங்கட் செய்தவ னுரைத்தனன்
ஆண மாகிய வருந்தவன் வாய்மொழி
பேணு மாதலிற் பெருமகன் றெளிந்தனன்
ஒத்த தோவது வத்தவ வந்தென
வாழ்த்துபு வணங்கிய வயங்கிழை கேட்பத்
தாழ்த்துணைத் தலைப்பொறிக் கூட்டம் போலப்
போய்ப்பின் றுரைத்தது செப்பிய பொருளென
உறுதவற் புகழ்ந்து மறுவில் வாய்மொழி
மனத்தமர் தோழரொடு மன்னவன் போந்து
திருக்கிளர் முற்றம் விருப்பொடு புகுந்து
பல்வகை மரபிற் பண்ணி காரம்
செல்வன வெல்லாஞ் செவ்விதிற் கண்டு
வந்தோர்க் கோத்த வின்புறு கிளவி
அமிர்துகலந் தளித்த வருளின னாகித்
தமர்திறந் தேவி தானுங் கேட்கென
வேறிடம் பணித்தவர் வேண்டுவ நல்கி
யாறுசெல் வருத்த மூறின் றோம்பி
அவந்தியர் கோமா னருளிட நூனெறி
இகழ்ந்துபிழைப் பில்லா வியூகி செனறிவண்
நிகழ்ந்ததுங் கூறிநின் னீதியும் விளக்கி
நெடித்தல் செல்லாது வாவென வழிநாள்
விடுத்தன னவரொடு விளங்கிழை நகர்க்கென்.

உரை

கo. பிரச்சோதனன் தூதுவிட்டது

அஃதாவது—பிரச்சோதன மன்னன் உதயணன்பால் தூதுவிட்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(வாயில் காவலன் தூதர் வரவு கூறுதல்)

க - அ : ஒருங்கு..............என

(பொ - ரை.) இவ்வாறு உதயணனும் தேவிமார் இருவரும் தமக்குள் அன்பினால் மனம் இயைந்து வாழுகின்ற நாள்களுள் வைத்து ஒருநாள் திருந்திய நிலையினையுடைய வாயிலின்கண் பெரிய கதவுகளால் அணிசெய்யப்பட்ட வாயிலைக் காக்கும் காவலன் உதயணன் திருமுன்வந்து திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி, "அழகிய வீரக் கழலையணிந்த திருவடிகளையுடைய பெருமானே! அருள்கூர்ந்து கேட்டருள்க! உயர்ந்த மதில்களால் அழகுற்ற உஞ்சையம் பெருநகரத்தின் வேந்தனாகிய போரின்கண் பிறக்கிடாத வென்றியையுடைய பிரச்சோதனன் என்னும் கொற்றவேந்தனுடைய தூதுவர்கள் வந்து நம் அரண்மனை முற்றத்திலே புகுந்து தலைவாயிலின்கண் இருக்கின்றனர்" என்று கூறாநிற்ப; என்க.

(வி - ம்.) ஆய் - அழகு. மதி : முன்னிலையசை. முன் கடையார் - தலைவாயிலினிடத்துள்ளார்.

(உதயணன் கூற்று)

கூ - ௧௨ : அந்தளிர்...........என்றலின்

(பொ - ரை.) அது கேட்ட உதயண மன்னன் இறந்தொழிந்தாளெனக் கருதப்பட்ட அழகிய தளிர்மாலையை யணிந்த வாசவதத்தை நல்லாளை மீண்டும் பெற்ற மகிழ்ச்சியும் அத்தத்தையின் தந்தையாகிய பிரச்சோதன மன்னன் தன் முன்னிலையிலே விடுத்த தூதுவர் வரவு கேட்டமையாலுண்டான மகிழ்ச்சியும் ஆகிய இருவேறு மகிழ்ச்சிகளாலே தன் நெஞ்சத்தே இன்பம் பெருகாநிற்ப, அத்தூதுவரை எதிர் கொள்ளற்கு விரும்பி அவர் ஈண்டு விரைந்து வருவாராக என்று அவ்வாயிலோனுக்குக் கூறாநிற்றலால்; என்க.

(வி - ம்.) கோதை : வாசவதத்தை. தந்தை : பிரச்சோதனன். தலைத்தாள் தந்த மாற்றம் என மாறுக. தலைத்தாள் - முன்னிலை. கோதையைப் பெற்றதும் மாற்றம் பெற்றதுமாகிய இரண்டானும் இன்பம் பெருக என்க. எதிர்வனன் - எதிர் கொள்ளுதற்கு. வல்லே - விரைந்து.

(பதுமை என்னும் தூதியின் இயல்பு)

௧௨ - ௨௦ : மல்கிய...........அறிவினள்

(பொ - ரை.) மன்னவன் அருள் பெற்றபின் வளம் பெருகிய நில உலகத்தை ஆளும் இயல்புடைய அரசர்களுக்குக் கண்கள் என்று சான்றோர்களால் வகுத்து வைக்கப்பட்ட நல்ல

நீதி நூல்களை ஓதிமுதிர்ந்த செங்காவினையுடையவனும் அங்ஙனம் ஓதிய நூல் வகுத்த நெறியில் நின்று பொறிபுலன்கள் நன்கு அடங்கப் பெற்று வெறுப்பும் விருப்பமும் முழுமுற்றும் நீங்கப் பெற்றுத் தத்துவ முறையாலும் கண்களாலும் அரசர்கள் நெஞ்சத்துள்ளே......................குறிப்பினாலும் அவர் கூறாது விட்ட செய்திகளையும் முறைப்பட ஆராய்ந்து அறிந்து உணரும் தன்மையுடைய அறிவினையுடையவனும் நூல்களிடத்தே அமைந்த தேனில் தோய்த்தாற்போன்ற சொற்களின் பொருளைத் தானே தெளிவுண்டாக ஆராய்ந்து உணரும் தன்மையுடைய நுட்ப அறிவினையுடையவனும்; என்க.

(வி - ம்.) மல்கிய - வளம் மல்கிய என்க. எண்ணினை ஆளும் இயல்புடைய மன்னர்க்கு என்க. நீதி நூல் மன்னர்க்குக் கண்ணென வகுத்துள்ளமையை, "ஒற்று முரைசான்ற நூலு மிவைஇரண்டுந், தெற்றென்க மன்னவன் கண்" எனவரும் திருக்குறளைக் காண்க (௫அக). "காதிவேன் மன்னர் தங்கள் கண்ணென வைக்கப்பட்ட நீதி" என்பது சிந்தாமணி (உ௩௩). தத்துவவகை - மனம் முதலிய அகக் கருவிகளின் தன்மையாலும் என்க. கஎ ஆம் அடியின் இறுதியிலுள்ள இரண்டுசீர்கள் அழிந்தன. எச்சம் - கூறாதுவிட்ட செய்தி. நெறிப்பட நாடித் தெரிந்துணருந்தன்மை அறிவினள் என முன்னுங் கூட்டுக. தேன் றோய்த்தன்ன கிளவி என்றது நூல்களிடத்தமைந்த மொழிகளை. எனவே, "மதி நுட்பம் நூலோடு"டையாள் என்றாராயிற்று.

(இதுவுமது)

உக - கூ : உறுப்பு............கொள்கையள்

(பொ - ரை.) வேற்று மன்னர் தன் உடல் உறுப்புக்கள் பலவற்றையும் அரியுமிடத்தும் அன்றி உயிர்க்கு முதலாகிய தலையைத் திருகிக் கொல்லுமிடத்தும் அன்றித் தன்னை நிறுத்தி உடலின்மேல் ஊசிகள் பலவற்றை நெருங்கக் குத்திய விடத்தும் அன்றிச், சினந்து பற்பல கொடுஞ்சொற்களைக் கூறி அச்சுறுத்திக் காட்டுமிடத்தும் தன் னெஞ்சிலுள்ள மறைச்செய்தியைக் கூறாதவனும் அன்றித் தான் பெரிதும் மகிழும்படி தனக்கு அவர் பல வேறு சிறப்புக்களைச் செய்யுமிடத்தும் அவற்றால் மனம் பிறழ்ந்து தன் கொள்கைக்கு மாறாய தொன்றனைக் கூறாதவனும் பிறைவடிவாகிய அணிகலனை உடைய தன் அரசன்பால் தான், நெஞ்சில் பதித்துள்ள குறைச் செய்தியைக் கூறாத திட்பமான கொள்கையுடையவனும்; என்க.

(வி - ம்.) உறுப்பு - கை கால் முதலியன. தலையைத் திருகுமிடத்து உயிர் போதலின் அதனை உயிர்முதல் என்றார். திருக்குதல் - திருகுதல். நிறுத்து - தன்னை நிறுத்தி. கறுத்து - சினந்து. மறைச் செய்தியைக் காட்டாது என்க. திட்பத்தில் திரிந்து என்க. பெருமகன் என்றது தன்னரசனை. தன் அரசன்பாற் கண்டு நெஞ்சிற் குறித்து

வைத்ததனைக் கூருதவள் என்க. கூறுதல் செல்லா - கூருத. இஃதென் சொல்லிய வாறோ எனின்? "வெங்கண் வேந்தர் தங்கட்குற்றது அங்கண் ஞாலத்தாரே யாயினும் அகலிடத்துரைக்கின் அற்றம் பயத்தலின் அவரின் வாழ்வோர் அவர்முன் நின்று அவர் இயல்பு இல் நீர்மை இற்றென உரைப்பின் விம்மமுறுதல்" என்பது பற்றிக் கூறியவாறு. இதனுல் அவளடக்க முடைமை சிறப்பிக்கப்பட்டது.

(இதுவுமது)

உஎ - ௬டு : இன்னது............மகளொடு

(பொ - ரை.) தன்னரசன் நீ இன்ன காரியத்தைச் செய்க என்று வெளிப்படக் கூறி ஏவிய காரிய மன்றியும், நிலைபெற்ற அவ்வரசன் மனத்தின்கண் கருதிய காரியங்களையும் குறிப்பினு லுணர்ந்து அவன் ஏவாமலே தானே முற்பட்டுச் செய்து முடிக்கும் அரிய முயற்சியை யுடையவளும், பகை மன்னர் தனக்குச் சிறந்த நன்மைகளைச் செய்யினும் அல்லது செய்வதாகச் சொல்லிப் பின்னர் முகமாறியவிடத்தும் பிறர்பால் அவர் பழிச்சொல்லை எடுத்துக் கூருது புகழ்ந்தே பேசும் நற்பண் புடையவளும், கல்லாப்புல்லோர் வறிய வாய்மொழியைக் கேளாது விட்டுச் சான்றோர் துணிந்து கூறிய நூற்பொருளைச் செவிவாயாக நெஞ்சிற் கொண்டு யாவர் மாட்டும் தன் பணிவுடை மையைக் காட்டும் இனிய சொற்களையுடையவளும், பதுமை என்னும் பெயரையுடையவளும் பொருள் பொதிந்த மொழி பேசுதலையுடையவளும் ஆகிய தூதியோடு; என்க.

(வி - ம்.) ஏவல் - ஏவிய காரியம். மன்னிய - நிலைபெற்ற. மனத்ததை - மனத்தின்கட் கருதிய காரியத்தை. முன்னி - முற்பட்டு. ஒன்னுர் - பகைவர். சிறந்தன செயினும் பின்னும் மறியினும் என மாறுக. பின்னும் என்புழி உம்மை அசைநிலை. மறியினும் - மாறுபடி னும். புல்லோர் - கல்லாக் கயவர். பணிந்த சொல் - பணிவுடைமை யைப் புலப்படுத்துஞ் சொல். கட்டுரை - பொருள் பொதிந்த சொல்.

(இதுவுமது)

௬டு - ௬௯ : கருமம்..............முற்றத்து

(பொ — ரை.) காரியங்களைக் கூர்ந்தறிந்து பின்னர் வெளிப் படுத்துக் கூறுவதன்கண் விளங்கிய சிறந்த புகழையுடை யோரும் நுணுகிய கணிதத் தொழில் கற்ற கணக்கர்களுஞ் அதிகாரிகளும் சினந்த நோக்கினையுடைய காவலர்களும் தேன் துளும்பும் மாலையணிந்த உதயணனுடைய அழகிய அரண்மனை முற்றத்தின்கண்; என்க.

(வி - ம்.) நுனித்து - கூர்ந்துணர்ந்து. விட்டுரை - பிறர் வெளிப் படுத்திக் கூறும் புகழுமாம். நுண்தொழில் கற்ற கணக்கர் என்க. திணைகள் - அதிகாரிகள். காய்ந்த - சினந்த. மார்பன் : உதயணன். நகர் - அரண்மனை.

(வாசவதத்தைக்குப் பிரச்சோதனன் அளித்த பொருள்கள்)

சூ0 — கூ : கை............செப்பும்

(பொ - ரை.) இயற்றிய கம்மியர் தாமும் நோக்கி எளிதில் அறிந்து கொள்ளாராம்படி நுணுகிய தொழிற்றிறம் அமைந்த ஐம்பது யவனத்தேர்களும் ஒள்ளிய அணிகலன்களையுடைய ஆயிரந் தோழிமாரும் வாசவதத்தை பேதைப் பருவத்தே சிற்றில் இழைத்தும் சிறுசோ றட்டும் விளையாடிய கலங்களும் அவ்வாசவதத்தையின் பசிய அணிகலனணிந்த அல்குலையுடைய தாய்மார்கள் தத்தம் இலச்சினையிடப்பட்ட தச்சர் தொழிலால் இயற்றப்பட்ட விளையாட்டுப் பொருள்களும் செம்பொன்னு லியன்ற அணிகலங்கள் இட்டு வைத்தற்குச் செய்த செப்பும்; என்க.

(வி - ம்.) கைபுனைந்தோர் - செய்தோர். ஐயைந்திரட்டி - ஐம்பது. யவனவையம்-யவன நாட்டுத் தச்சர் செய்த தேர். சேயிழை: வாசவதத்தை. சிற்றில் - மணலால் இயற்றும் விளையாட்டு வீடு. அடிசில் கலங்களும் என்க. தாயர் - பதினுயிரவர். ஆகலின் தாயர் எனப் பன்மை கூறினர். தச்சுவினைக் கூட்டம் - தச்சர் தொழிலாலாய சிறுதேர் முதலிய விளையாட்டுப் பொருட்குவியல் என்க. அணிகலம் இட்டுவைத்தற்குச் செய்த செப்பும் என்க.

(இதுவுமது)

சுஎ — ருஅ : தாயும்..........அன்னமும்

(பொ - ரை.) தன் தாயாதல் தோழிமாராதல் தவ்வையராதல் ஊட்டுதலை விரும்பாளாய் மேன்மையுடைய பொற் கிண்ணத்தின்கண் நல்லாவின் மடிசுரந்து பொழிந்த இனிய பாலை நுரை தெளியுமாறு ஆற்றித் தன் கைசிவக்கும்படி பற்றிக் கொண்டு காலந் தாழ்த்தலின்றி மகவினைப் பாராட்டும் தாயர் போன்று பாராட்டி மருட்டிக் காந்தள் முகையினையொத்த தன் மெல்லிய விரல்கள் பாலினது நிறத்தையடைய தனது ஒளி யுடைய நகத்தால் வளைந்த அலகின்கண் பாலை ஊட்டிப் பின்னர் அதன் சிறகினைத் தன் கையால் விரித்து மெல்லத்தடவிப் பறக்க விடுத்துப் பன்முறையும் நடக்க விடுத்துத் தன் வாய் மழலைச் சொற்களைக் கற்பித்து அதன் வாயினாலே பரதகீதம் பாடுவித்து வளர்த்தெடுத்த மேன்மையுடைய கிளியும் மெல்லிய நடையினை யுடைய அன்னமும்; என்க.

(வி - ம்.) இப்பகுதியின்கண் வாசவதத்தை கிளிவளர்த்த முறை மிக அழகாகக் கூறப்பட்டிருத்தல் காண்க. தாய் - செவிலி. தவ்வை - செவிலியின் மகளாய்த் தனக்கு மூத்தவள். கிளிக்குத் தாய் முதலி யோர் பாலூட்டுதலை விரும்பாளாய்த் தானே இவ்வாறு ஊட்டுவாள் என்பது கருத்து. மேயலள் - விரும்பாதவள். மேதகு வள்ளம் என்றது

னுல் பொற்கிண்ணம் என்க. சுரை - முலைக்காம்பு. பாலை ஆற்றிக் கிளியைப் பற்றி என்க. தாங்காது - காலந் தாழ்த்தாமல். மக - மகவு. முகை - காந்தள் முகை. பால் நயம் - பாலின் நிறம். வளைவாய் - வளைந்த அலகு. உறீஇ - புகட்டி. பறவை கொளீஇ - பறக்கவிட்டு. நடாஅய் - நடத்தி. அதன் வாய் - அக் கிளியின் வாயினின்றும். பரத கீதம் - கூத்திற்கியன்ற இசை.

(இதுவுமது)

ருகூ - எக: அடுதிரை....................குறளும்

(பொ - ரை.) மோதுகின்ற அலைகளையுடைய கடலிடையே அமைந்த யவன நாட்டரசன் ஒரு காலத்தே பிரச்சோதன மன்னனுக்குத் திறைப்பொருளாக விரைந்த நடையினையுடைய குதிரைகளும், வானிற் பறந்து செல்லும் கேடில்லாத விமானமும் நீரினும் நீந்திச் செல்லும் குதிரைகளும் ஒரு கோடி வயிரமணிகளும் கொடுத்தானாக; அம் மன்னன் அவற்றைக் கொள்ளானாய் அழகிய இளமையுடைய பெரிய முலையினையுடைய மகளாகிய அந்த யவன மன்னன் மகள் விளையாடா நின்ற அழகிய பாவையைத் திறைப் பொருளாகத் தருக என்று அதனைக் கொண்டு அப் பாவைக்குத் தன் பட்டத்தேவியின் பெயரையிட்டு அதனைத் தன்னுடைய பதினாறாயிரம் புதல்வியரும் வருந்தி விரும்பித் தன்னைக் கேட்கவும் கொடானாய், இஃது என்னுடைய வளைந்த முன் கையினையும் பருத்த தோள்களையும் உடைய வாசவதத்தைக்கு விளையாட்டுக் குழந்தை யாகுக என்று கூறி அவ்வரசன் வழங்கிய அந்த யவனப் பாவையும், அதற்குரிய சிற்றிலும் இவற்றைச் சுமந்து வருகின்ற கூனரும் குறளரும்; என்க.

(வி - ம்.) விடுநடை : வினைத்தொகை. விசும்பிவர்ந்தூரும் விமானம் - வானவூர்தி. வயிரம் - ஒரு மணி. சேடு - பெருமை. தன் மகள் : யவனத்தரசன் மகள். அணிபாவை என மாறுக. பட்டத் தேவி என்றது வாசவதத்தையின் தாயை. எட்டினிரட்டியாயிரம் - பதினாறாயிரம். அணங்கி - வருந்தி. ஒருமகள் - விளையாட்டுப்பாவையை மகவாகக் கொள்ளுதல் இயல்பு. இறை - முன்கை. பணை - மூங்கிலுமாம். கோயில் - மாளிகை வடிவில் செய்த பாவை வைக்கும் பேழை. கூன் - கூனர். குறள் - குறளர்.

(உதயணனுக்கு வழங்கிய பொருள்கள்)

எக - அச: மேல்....................இருப்ப

(பொ - ரை.) உதயணனுக்கு வழங்கும் பொருட்டுப் பிரச்சோதன மன்னன் தனது கருவூலத்தின்கண் நெடிது வைத்துப் போற்றப்பட்ட பெறுதற்கரிய பேரணிகலன்களும் முன்னர் எம்மால் கூறப்பட்ட நருமதை முதலிய ஆடல்மகளிரும் அவ்வுதயணன் அரசு வீற்றிருக்குங்கால் அணிந்து கோடற்குத் தகுந்தன

இவை என்று கருதப்பட்ட முடிக்கலனும் கடகமும் முத்தாலியன்ற அழகிய மாலையும் தொடியும் இன்னோரன்ன பிறவும் தொகுத்து வைக்கப்பட்டு நிறைந்த மூடியாகிய வாயையுடைய பேழையும், முரசும் கட்டிலும் இருக்கைகளும் சாமரைகளும் தன்னுடைய கைவாளும் குடையும் தேரும் இடையீடின்றிச் செறிந்த பெரிய மதமிக்க யானைத் திரளும் குதிரைத் திரளும் ஆகிய இப்பொருள்களைத் தனித் தனியே கூறு கூறாக அமைத்து இவற்றையெல்லாம் பாதுகாத்துப் பேணிக் கொண்டுசென்று உதயண மன்னனுக்குக் காட்டி வழங்குமின்! என்று கட்டளையிடப்பட்ட மறவர்களும், பிறரும் நெருங்கி ஒருங்கே திரண்டு வந்து தங்காநிற்ப; என்க.

(வி - ம்.) நருமதை - முன்னர் உஞ்சைக்காண்டத்தே கூறப்பட்டவள் ஆகலின் மேல் நாங் கூறிய என்றார். ஆன் - அவ்விடம். வீற்றிருந்த - பேணப்பட்டு நெடிது இருந்த என்க. ஆன் என்றது பிரச்சோதனன் கருவூலத்தை. தான் : உதயணன். அரசு வீற்றிருக்குங்கால் அணிந்து கோடற்குத் தகுந்தன இவை என்று கருதி என்க. முடி - மூடி; உச்சியுமாம். கட்டில் - அரியணை. தவிசு - இருக்கைகள். ஆணை - கட்டளை. ஒருவர்மேல் ஒருவர் செற்றி என்க. செற்றுதல் - இடித்தல். இறுப்ப - தங்க.

(இதுவுமது)

அ௱ - அ : பழி...................காட்ட

(பொ - ரை.) உதயணனுடைய கற்றோரால் ஆராய்ந்தெடுக்கப்பட்ட பிரப்பங்கோல் ஏந்தும் காவலாளர் வசையில்லாத ஒழுக்கத்தையுடைய பதுமை என்னும் பேரறிவுடைய தூதியை அழைத்துக் கொடு போய் மாளிகையுட் புகுந்து காற்றுப்போல விரைந்து செல்லும் குதிரையையுடைய தம்மரசனை அவட்குக் காட்டா நிற்ப; என்க.

(வி - ம்.) பழி - வசை. கழிமதி - பேரறிவு. மகளொடு - மகளை; உருபு மயக்கம். கற்றோர் தெரிந்த - கற்றோரால் ஆராய்ந்தெடுக்கப்பட்ட. இவுளி - குதிரை. காவலன் : உதயணன்.

(பதுமை ஓலையை உதயணனிடம் வழங்குதல்)

அகூ - கூசு : தொடி.....................நீட்டி

(பொ - ரை.) தொடியணிந்த உதயணன் திருமுன் சென்ற பதுமை அவன் தோற்றத்தால் மருண்டு தன் கைகள் தாமே குவியாநிற்பத் தன் வயமின்றியே அவனை வணங்கியவளாய் மாவடுப்பிளவு போன்றனவும் நிறமிக்கனவும் காண்போர் உள்ளத்தை உண்பனவும் ஆகிய கண்களையும் விளங்கிய அணிகலனையுமுடைய அப்பதுமை அவ்வேந்தனை அணுகிச் சென்று மீண்டும்

கைகூப்பி வணங்கி வழிபாட்டின்கண் குறையிலளாய் மீண்டும் வணங்கி அஞ்சுதற்குரிய கருட உருவினை உச்சியிலே சுமந்த சக்கர வட்டத்தோடு பற்பல சங்கு வடிவங்களும் பொறிக்கப் பட்ட ஓலைத் தொழிற்றிறம் அமைந்ததும் சுருட்டி மணப் பொருள் கூட்டிய அரக்கினை உருக்கி ஏடெழுதும் தொழிலாளர் இடுமிடமறிந்து ஒற்றிய இலச்சினையோடு சுருளமைந்ததும் ஆகிய திருவோலையினை மடப்பமுடைய அத்தூதி அம்மன்னனுக்கு அளியா நிற்ப; என்க.

(வி - ம்.) வேந்தன் : உதயணன். காண்டலும் கைகள் தாமே குவிதலின் துட்கென்று இறைஞ்சினள் என்றார். துட்கென்று - துணுக் கென்று. வடி - மாவடுப்பிளவு. உண்கண் - காண்போர் மனத்தை உண்ணும் கண் என்க. வயங்கிழை : பதுமை. முகிழ்விரல் - கை. வழிபாட்டு முறையை இகழ்விலளாய் என்க. உட்கு - அச்சம். உவ ணம் - கருடன். சக்கரவட்டம் - சக்கரமாகிய வட்ட வடிவம். சங்கு வடிவம் என்க. வட்டித்து - சுற்றி. மணங்கூட்டிய அரக் கென்க. கணக்கன் - எழுத்தாளன். ஈடு - இடுதல். முடக்கு - சுருள். ஓலை : பிரச்சோதனன் திருவோலை. மடத்தகை : பதுமை. நீட்டி - நீட்ட.

(உதயணன் ஓலை பெறுதல்)

கூஎ - க00 : மூப்பினும்...............இருக்கையன்

(பொ - ரை.) மூப்பானும் முறைமையானும் தொடர் பமைந்த குலத்தானும் அன்பானும் கேண்மையானும் இவை போன்ற பிற பண்புகளானும்.... பெருமக்கள் புகழுதற்குக் காரணமான மணிகள் பதித்து இயற்றப்பட்ட ஆசனத்தினின் றும் இறங்கி அமைதி கொள்ளுதற்குக் காரணமான மற்றோர் இருக்கையின்கண் இருந்து; என்க.

(வி - ம்.) மூப்பு முதலியன அவ்வவையோர்க்கு அடைமொழிக ளாதல் வேண்டும். இவை பிரச்சோதனனுக்குரிய அடைமொழிகள் என்பாருமுளர். கூகூஆம் அடி அழிந்தொழிந்தது. மாசனம் - பெரு மக்கள்.

(இதுவுமது)

க0க - க0 : சினை..................நோக்கி

(பொ - ரை.) கருக்கொண்டுள்ள கெளிற்றுமீனையொத்த செந்நிறமுடைய செறிந்த விரல்கள் ஒப்பற்ற அழகு கொண்ட தன்மையுடையனவாக உணர்தற்கரிய மறைகளை உணர்ந்த அந்தணரோடு உறுதிப் பொருளை ஓதி நிறைதற்குக் காரணமான செந்நாவினையுடைய புலவர்க்கும் ஏனையோர்க்கும் நாள்தோறும் அணிகலன் முதலிய பொருள்களை நிரம்ப வழங்குதற்குக் கவிதலல்லது ஏற்போர்க்கு யாம் கொடேம் என்று குறித்தற்கு

விரிதலில்லாத நல்லிலக்கணக் கோடுகளமைந்த தனது அழகிய கையின்கண் ஏற்றுக்கொண்டு மனத்தின்கண் வேற்றுமை சிறிதுமின்றி முடிதாழ்ந்து அவ்வோலையின் இலச்சினையையகற்றி மெல்லவிரித்து அதனைக் கூர்ந்து நோக்கி; என்க.

(வி - ம்.) சினைக் கெடிறு - கருக்கொண்ட கெடிற்று மீன். இதனை, கெளிற்று மீன் எனவும் கெளித்திமீன் எனவும் கூறுப. இது விரல்களுக்கு உவமை. விரல் கவின் கொள்வனவாகக் கையின் ஏற்று என்க. மறைப்பொருளை உள்ளத்தே தாங்கிய அந்தணாளர் என்க. பொருள் - அறம்பொருளின்பம். ஏனோர் பிறர் என்பது பாணர் கூத்தர் முதலிய இரவலரை. "இலம்படு புலவர்'ஏற்ற கைந் நிறையக் கலம் பெயக் கவிந்த கழறொடித் தடக்கை" - மலைபடு.௫௬-எ. இலம் - யாம் வழங்குதலிலேம். எழுத்து - நல்லிலக்கணக் கோடு. வேற்றுமை - ஈண்டுப் பகை யுணர்ச்சி.

(அவ்வோலையில் எழுதப்பட்ட செய்தி)

ககக - உக : பிரச்சோதனன்..............வேண்டினேன்

(பொ - ரை.) அதன்கண் வரையப்பட்டுள்ள, "பிரச்சோதனன் என்னும் அரசன் வரைந்து விடுத்த திருவோலை. இதனைப் பல்வேறு புகழ்களும் சேர்ந்த வீரக் கழலணிந்த காலையுடைய உதயண மன்னன் காண்க! வேந்தே! நின்குலமும் என்குலமும் அல்லது இப்பேருலகத்தில் மிக உயர்ந்த குலம் பிறிதொன்றில்லாமையால் நின்னுடைய குருகுலத்தின் உறவினைக் கொள்ளுதலை யான் பெரிதும் விரும்பி அக்காலத்தே நம்முட் பகைமை இருந்தமையால் படையோடு சென்று குருதியாற் சிவந்து போர்க்களத்தின்கண் நின்னைச் சிறைப்படுத்தி, நின் படையோடு என் நகரத்திற்குக் கொணர்தலும் எனக்கு அருஞ்செயலாயிருந்தமையால் உன்னுடைய சோர்வினை ஒற்றராலறிந்து அதனை ஏதுவாகக் கொண்டு மாயயானையினுள்ளேம் மறவர்களையு படைக்கலங்களையும் மறைத்துவைத்து இவ்வஞ்சனையாலே நின்னைப் பற்றி என்பால் கொணர்க! என்று என் மறவர்களை நின்பால் ஏவினேன். அக்காலத்திற்குப் பொருந்தியதாக என்னாற் கருதப்பட்ட அந்த நிலைமையை நீ இப்பொழுது நினையாமல் இப்பொழுது நின்னை ஈன்ற தந்தையாகவே என்னைக் கொள்ளுதலைப் பெரிதும் விரும்பினேன்" என்க.

(வி - ம்.) பெருமகன் - அரசன். உரை - புகழ். இருகுலம் என்றது தன் குலத்தையும் உதயணன் குலத்தையும். இவணகத்து - இவ்வுலகத்தில். குருகுலம் - உதயணன் குலம். கிளைமை - உறவுமுறைமை. தருதல் - கொணர்தல். அருமை - ஈண்டு இயலாமை மேனின்றது. பொச்சாப்பு - சோர்வு. பொய்க்களிறு - மாய யானை. இப்படி - இங்ஙனம் ஒருவழியால். எமர் - என் மறவர். யாம் பகைமைகொண்டிருந்த அந்தக் காலத்தே யான் நின்னைக் காண்டற்கும் உறவு பூணற்

கூம் இங்ஙனம் நின்னைச் சிறைக்கொண்டு காணுதலும் பின்னர் உறவு பூணலும் நன்றென்று எனக்குத் தோன்றிற்று. ஆதலின் அங்ஙனம் செய்தேன். அது தவறேயாயினும் பொறுத்தருளல் வேண்டும் என்பது கருத்து. இப்பொழுது யான்செய்த தவற்றினை யானே அறிந்து வருந்துகின்றேன் ஆகலின் என்னை மன்னித்து இப்பொழுது நின் தந்தைபோல மதிக்கவேண்டும் என்று வேண்டியபடியாம்.

(இதுவுமது)

கஉஉ - கூ : ஆமான்..................செய்தனன்

(பொ - ரை.) "ஆமான் போன்ற நோக்கினையுடைய வாசவதத்தையோடு நீ, அவளை ஈன்ற தாயும் யானும் மகிழும்படி மீண்டும் இந்நகரத்திற்குப் பகையின்றி இயல்பாகவே வருதலை எண்ணுவாயாக. என் மகளாகிய வாசவதத்தைக்கு நின்னையன்றிச் சிறந்த கேளாவார் பிறர் இல்லை. நினக்கும் சிறந்த கேள் என்னையன்றிப் பிறரில்லை. இங்ஙனமாகலின் நீ இன்னும் என்க்குப் பிறனுதல் எங்ஙனம்? நின் பகை மன்னன் ஆகிய ஆருணி தாழக் கொன்று நீ அரசுரிமை கைக்கொண்டதனை யான் கேள்வியுற்றேன். விரைந்து என்னால் செய்யப்படும் செயலொன்றனை நீயே செய்துகொண்டனை;" என்க.

(வி - ம்.) ஆமான் - காட்டுப்பசு, இதன் கண்களை மகளிர் கண்ணுக்கு உவமித்தல் மரபு. இதனை, "ஆமான் அனைய மென் னோக்கி" எனவரும் பிறர் கூற்றானும் உணர்க; (இறை. சூ. நள. மேற்.) தாயென்றது - வாசவதத்தையின் தாயை. நகரி - உஞ்சை நகரம். பற்றுமன்னன் - ஆருணி. கொற்றம் - அரசுரிமை. தான் என்றது உதயணனை.

(இதுவுமது)

கஉகூ - ௩ரு : இனி...............இல்லை

(பொ - ரை.) "இனித் தமக்கு ஆக்கமாகும் பொருள் நூலை நன்கு ஓதியுணர்ந்தவர்கள் பாம்பும் அரசும் பகையும் சிறிதென்று கருதி இகழ்வாரல்லர். அதனால் தேன் துளிக்கும் மலர் மாலையை யணிந்த அரசனாகிய நீ பகைவர் சிறியர் என்று இகழாதே கொள்; அவரை ஆராய்ந்து தெளியாமலும் இராதே விழிப்புடன் இருந்து நினது ஓங்கிய கொற்றவெண்குடை நீழலின் கண் இவ்வுலகில் வாழும் உயிரெல்லாம் இனிதே இன்புற்றிருக்கும் படி தம் மகவினைப் பாதுகாக்கும் நற்றாயர்போலச் சோர்வின்றி நின் குடிமக்களைப் பாதுகாத்துப் புகழுண்டாக வாழ்வாயாக! இதனினுங் காட்டில் நினக்குச் சிறந்த புகழ் பிறிதில்லை"; என்க.

(வி - ம்.) "பாம்பும் அரசும் பகையுஞ் சிறிதென ஆம் பொருளோதின ரிகழார்" என்னும் இதனொடு, "அளையுறைபாம்பு மரசு நெருப்பு, முழையுறை சீயமு மென்றிவை நான்கு. மிளைய வெளிய பயின்றன

வென் றெண்ணி, இகழி னிழுக்கந் தரும்'' எனவரும் ஆசாரக்கோவை யையும் (அச) ஒப்புக்காண்க. உலகு - உலகில் வாழும் உயிர்கள்; ஆகுபெயர். குழவிகொள்பவரின் இகழாதோம்பி என்னும் இதனோடு, "காவல், குழவி கொள்பவரி னோம்பு மதி'' (புறநா. ரு); எனவும், "குழவி கொள் வாரிற் குடிபுறந்தந்து'' (பதிற். சுஆம் பதிகம்) எனவும் பிற சான்றோர் கூறுதலும் நினைக.

(இதுவுமது)

கஙசு - சஉ : ஆகிய............முறுவலன்

(பொ - ரை.) "நினக்கு உயிரொன்றாகிய மிக்க புகழை யுடைய பெறுதற்கரிய அமைச்சனாகிய யூகியை எந்தூதுவரொடும் உடனே எம்பால் விடுத்திடுக. அவ்வமைச்சன்பால் எனக்குக் காரிய மிருத்தலின் அவனைக் காண விரும்புகின்றேன்,'' எனவும், "ஒற்றுமையுண்டாக யான் ஈண்டுக் கூறியவற்றை யெல்லாம் நின் பெருந்தகைமையால் உளங்கொள்க!'' எனவும் வரைந்து தன்னை மனம் பிரியாமல் கூட்டிவைத்த சூழ்ச்சியினையுடைய சிறந்த அவ் வோலையின்கண் அமைந்த பொருளையெல்லாம் வெவ்விய ஆற்றலை யுடைய அவ்வீரமன்னன் ஓதியுணர்ந்து தன் திரு உளத்தடைத்து விளங்கிய புன்னகையுடையனாய், என்க.

(வி - ம்.) விழுச்சீர் - சிறந்த புகழ். எமர் - எந்தூதுவர். கருமம்- காரியம். அவன் - அந்த யூகி. பெருமை - பெருந்தகைமை. வீரன் - உதயணன்.

(உதயணன் பதுமையை வினாதல்)

கசங - எ : ஆனு..........நோக்க

(பொ - ரை.) "குறையாத காதலையுடைய வாசவதத்தையி னுடைய மாளிகையின்கண் பண்டு வெவ்விய தீப்பற்றிய காலத்தே அவள் தீயுள் இறந்த செய்தி உண்மையன்றெனினும், நம் மன்ன னால் செய்தி எழுதப்பட்டுவந்த இந்த மந்திரவோலையின்கண் அச் செய்தி எழுதாது விடப்பட்ட செயல் குற்றமாகாதோ'' என்று கூறி அத்தூதியை நோக்கா நிற்ப; என்க.

(வி - ம்.) ஆனு - அமையாத. அவந்திகை : வாசவதத்தை. மேனாள் வெவ்வழற்பட்ட காலை என மாறுக. மாற்றம் - செய்தி. வாயல - உண்மையல்ல. உறுக்குறை - எழுதாது விடப்பட்ட காரியம். பதுமையை அதற்கு விடை வேண்டி நோக்கா நிற்ப என்க.

(பதுமை விடையளித்தல்)

கசஅ - ருசு : பவழ...........நிற்ப

(பொ - ரை.) அம்மன்னவன் கருத்துணர்ந்த அப்பதுமை தனது பவழம்போன்று சிவந்த வாயைப் பாவை திறக்குமாறே

போலத் திறந்து கைகுவித்துக் கூறுவாள், "வேந்தே! பண்ணுறுத்தப்பட்ட யானைப்படைகளையுடைய பகைவர்களை வென்று துரத்திய பெருமையினாலே மிக்க எம்பெருமானாகிய பிரச்சோதன மன்னன் தன்னோடே ஒரு நாட்டிற் பிறந்தவனும் தனக்கு உயிர் போன்ற அன்புடையோனும் அகக்கண்ணுடையவனும் ஆகிய ஒரு முனிவன்பாற் சென்று நின்று ஒள்ளிய நுதலையுடைய தன் மகளாகிய வாசவதத்தைக்கு நிகழ்ந்ததாகக் கூறப்படும் செய்தியால் நெஞ்சம் வருந்தித் தன் முகம் பொலிவிழப்ப, அச்சொல் மெய்யோ? பொய்யோ? என்று ஐயுற்ற நினைவினையுடையனாய், வெற்றிக்குடை பொருந்திய அவ்வேந்தன் தான்வந்த காரியத்தை அம் முனிவனுக்குக் கூறாமல் வாளா நிற்ப;" என்க.

(வி - ம்.) படிமை - பாவை; பண்புமாம். முற்றிழை : அன்மொழி; பதுமை. பருமம் - பண்ணுறுத்துதல்; யானை மேலிடுந்தவிசுமாம். பற்றார் - பகைவர். பெருமகன் : பிரச்சோதனன். கண் - அறிவுக்கண். கடவுள் - முனிவன். ஒண்ணுதல் : வாசவதத்தை. உற்றது - தீயுள் மூழ்கி இறந்த செய்தி. வேந்தன் : பிரச்சோதனன். முனிவன் - முக்காலமும் உணர்பவனாகலின் தான் வந்த காரியத்தைஉணர்ந்து கூறுக என்று கருதிக் கூறா நின்றான் என்பது கருத்து.

(இதுவுமது)

கடுஎ - கூஎ : சினம்............உரைத்தனன்

(பொ - ரை.) "வெகுளிமிக்க போராற்றலையுடைய வேந்தனே! அம் முனிவன்றானும் தன் ஓதி ஞானத்தால் உணர்ந்தவனாய் நின்னுடைய அமைச்சரோடே இருந்து அந்நிகழ்ச்சியை ஆராய்ந்தறிந்தவன்போலே நூல் கூறும் முறைமையோடே தான் சிறிதும் அறிவு தளராதவனாய்த் தொடுத்து வைத்த மாலைகளை எடுத்து எடுத்துக் காட்டுமாறு போலே நிகழ்ந்த முறைப்படி எம்மரசன் முன்னரே தெரிந்துகொள்ளும்படி கூறினன். பின்னரும் 'அவ்வாசவதத்தை இவ்வளவு காலம் பிறர் உணராமல் கரந்துறைதலை யுடையாள். நின்னுள் ஆராய்கின்ற காரியமும் இனி நிகழ்வதாம்' என்றும், 'அக்காரியம் நிகழுங்காலந் தானும் நீளியதன்று. அவ்விடத்திற்கு நீ நின் தூதரைக் கொண்டு அளவளாவுமிடத்து அவளைக் காண்டல் கூடும். அக் காட்சி கிடைக்கும் நாளும் இந்த நாளாம்' என்றும் இற்றை நாளையே அந்நாளாகவும் குறிப்பிட்டு அத்தவமுனிவன் கழிந்த திங்களிலேயே எம்பெருமானுக்குக் கூறினன்"; என்க.

(வி - ம்.) சினப்போர்ச் செல்வ என்றது பதுமை உதயணனை விளித்தபடியாம். நின் அமைச்சர் என்றது யூகிமுதலியோரை. தொடுத்து வைத்த மாலைகளை இன்னின்ன மாலை என்று எடுத்து எடுத்துக் காட்டுவதுபோல என்க. அவன் - அம்முனிவன். எம்மிறை மகன் : பிரச்சோதனன். அவள் : வாசவதத்தை. மாய இருக்கையள் - மறைந்திருத்

தலையுடையாள். ஆய்வது - நீ நின் நெஞ்சினுள் ஆராய்வது: அஃதாவது - பிரச்சோதனன் வாசவதத்தையை எப்பொழுது காணல்கூடும் என்று நினையும் நினைப்பு. முனிவன் கூறி வருங்கால் எம்மரசன் இங்ஙனம் நினைத்தான். அதனையும் அம்முனிவன் உணர்ந்து கூறினன் என்பது கருத்து. ஆய்வதுஆம் - நீ நினைவதும் கைகூடும். அக்காலமும் நீட்டமின்று என்றவாறு. அவண் - அந்நாட்டிற்கு, அளவிடின் - அளவளாவுதல் செய்யின். செய் தவன் - மிகச் செய்த தவத்தையுடையவன். சென்ற திங்கள் - கழிந்த திங்கள்.

(இதுவுமது)

கசுஅ - எக　ஆணம்...........கேட்ப

(பொ - ரை.) "அன்புருவாகிய அத்தவமுனிவனுடைய வாய்மொழியினை எம்மரசன் பெரிதும் பேணும் இயல்புடையன் ஆதலின், 'வாசவதத்தை இறந்துபட்டாள்' என்னும் அச்செய்தி பொய்யென்று தெளிந்து கொண்டனன். வத்தவ வேந்தனே! அம்முனிவன் முற்படத் தன் ஓதி ஞானத்தால் அறிந்து கூறிய அச்செய்தி இப்பொழுது நடை முறையில் வந்து பொருந்திற்றன்றோ?" என்று விளங்கிய அணிகலன்களையுடைய அப்பதுமை அச்செய்தி ஓலையின்கண் விடப்பட்டமைக்குக் காரணங் காட்டி மீண்டும் வாழ்த்தி வணங்கினளாக; அப்பதுமை கேட்கும்படி; என்க.

(வி - ம்.) ஆணம் - அன்பு. அன்புருவமாகிய என்க. அருந்தவன் - செயற்கரிய தவத்தையுடைய முனிவன். பேணுமாதலின் - போற்றிக் கேட்கும் இயல்புடையனுதலின். பெருமகன்: பிரச்சோதனன். அது - அவன் கூறிய மொழி. வந்து ஒத்ததோ என மாறுக. வாழ்த்துபு - வாழ்த்தி. வயங்கிழை: பதுமை.

(உதயணன் கூறுதல்)

கஎஉ - சுூ: தாழ்.........புகுந்து

(பொ - ரை.) "தாழக் கோலையுடைய இரட்டையாகிய கதவின் இயந்திரங்கள் பொருந்தும் பொருத்தம் போல அம்முனிவன் கூறிய செய்தியும் பொய்ப்படுதலின்றி நிகழ்ச்சியோடு வந்து ஒத்தது" என்று மிக்க தவத்தினையுடைய அம்முனிவனை உதயணன் பெரிதும் புகழ்ந்து குற்றமற்ற மெய்ம்மொழியினையுடையவரும் தன் நெஞ்சின்கண் உறைபவருமாகிய தன் தோழரோடு அம்மன்னவன் சென்று செல்வ மிகாநின்ற அரண்மனை முற்றத்தே விருப்பத்தோடு புகுந்து; என்க.

(வி - ம்.) தாழ் - தாழக்கோல். துணை - இரட்டை. தாழக்கோல் கூறியதனால் இரட்டைக் கதவு என்க. பொறிக் கூட்டம் - பொறிகள் புணரும் புணர்ச்சி. உறுதவன் - மிக்க தவத்தையுடைய முனிவன். மறு - குற்றம். மனத்தமர் தோழர் - மனத்தின்கண் உறையும் தோழர். மனத்தின்கண் பெரிதும் விரும்புந் தோழர் எனினுமாம். திருக்கிளர் முற்றம் - செல்வம் பெருகும் முற்றம்.

(உதயணன் பண்ணிகாரங்களைக் காணுதல்)

கஎஎ - ௮ : பல்............கண்டு

(பொ - ரை.) உதயண மன்னன் தன் மாமடிகளாகிய பிரச்சோதன மன்னன் வரிசையாகத் தமக்கு விடுத்த பலவேறு வகைப்பட்ட பொருள்கள் அரண்மனைக்குள் கொண்டு செல்வன வற்றை எல்லாம் நன்கு கண்கூடாகப் பார்வையிட்டு; என்க.

(வி - ம்.) பண்ணிகரரம் - பலவகைப் பொருள். செவ்விதின் - நன்கு.

(உதயணன் வந்தோரை உபசரித்தல்)

கஎக - ௮௩ : வந்தோர்க்கு..............ஓம்பி

(பொ - ரை.) மேலும் அப் பொருள்களைக் கொணர்ந்து வந்தவர்களுக்கும் அவரவர் தகுதிக்கு ஏற்ற இன்புறுதற்குக் காரணமான மொழிகளிலே அன்பாகிய அமிழ்தத்தையும் கலந்து வழங்கியவனுய்க் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தை தானும் தன் சுற்றத்தார் நலனைக் கேட்கக்கடவாள் என அதற்கு வேண்டு வன செய்து, அத் தூதர் முதலியோர் இனிதுறைதற்கு வேறு வேறு இடங்களையும் வழங்கி அவர்க்கு வேண்டுவனவாகிய உண்டி உடை முதலியனவும் வழங்கி அவர் வழி நடந்த வருத் தத்தை இடையூறின்றிப் பரிகரித்து; என்க.

(வி - ம்.) வந்தோர் : உஞ்சையினின்றும் வந்த தூதர் முதலி யோர். தமர் : பிரச்சோதனன் முதலியோர். கேட்கென : அதற்கு ஆவன செய்து என்க. அவர் : அத்தூதர் முதலியோர். ஆறு செல் வருத்தம் - வழி நடந்த வருத்தம்.

(உதயணன் யூகிக்குக் கூறுதல்)

கஅச – ௮ : அவந்தியர்............நகர்க்கென்

(பொ – ரை.) பின்னர் நூல்நெறியினை இகழ்ந்து பிழைத் தல் இல்லாத யூகி கேள்! அவந்தி நாட்டரசன் நின்னை 'வருக!' என்று அருளிச் செய்தமையாலே நீ அம் மன்னன் தூதரொடு வாசவதத்தையின் பிறந்தையாகிய உஞ்சை நகரத்திற்குச் சென்று இங்கு நிகழ்ந்ததனையும் சொல்லி நின்னுடைய நீதிகளையும் விளக்கி அந்நகரத்தின்கண் நெடிது தாமதியாமல் மீண்டு வருக என்று கூறி மறுநாள் அத் தூதுவரொடு அவனையும் உஞ்சை நகரத்திற்குப் போக்கினன்; என்க.

(வி - ம்.) அவந்தியர் கோமான் : பிரச்சோதனன். அருளிட - அருளிச் செய்தமையால். யூகி : அண்மைவிளி. நெடித்தல் செல்லாது - நெடிது தாமதியாமல். வழிநாள் - மறுநாள். அவரொடு - அத்தூதுவ ரொடு. நகர் - உஞ்சை.

கo. பிரச்சோதனன் தூதுவிட்டது முற்றிற்று.

௧௧. பிரச்சோதனற்குப் பண்ணிகாரம் விட்டது

இதன்கண் :—*உதயணன் பிரச்சோதனனுக்கு ஓலை விடுத்தலும், யூகிக்குக் கூறியனவும், உதயணன் பிரச்சோதனனுக்கு விடுத்த பொருள்களும், அவன் வாசவதத்தையின் தாய்க்கு வழங்கிய மகளிரும், அவன் கோபாலகன் தாய்க்கு வழங்கிய மகளிரும், கோபாலகற்கும் பாலகுமரற்கும் வழங்கிய மகளிரும், பரதகற்கு அளித்த பொருள்களும், மற்றைத் தம்பியர்க்கு அளித்தனவும், சிவேதனுக்கு அளித்த பொருள்களும், யூகியின் புறப்பாடும், யூகி முதலியோரை விடுத்தலும், வாசவதத்தையின் வருணனையும், உதயணன் தேவிமாரோடு இனிது பொழுதுபோக்கலும் கூறப்படும்.*

விளங்கிழை பயந்த வேந்துபுறங் காக்கும்
வளங்கெழு திருநகர் வல்லே செல்கென
நாடுதலை மணந்து நாமுன் னுண்ட
காடுகெழு குறும்புங் கனமலை வட்டமும்
எல்லை யிறந்து வல்லை நீங்கி
அழிந்த காலை யானை யோட்டி
நெருங்கிக் கொண்ட நீர்கெழு நிலனும்
இவையினி யெங்கோ லோட்டி னல்லதை
தமர்புகத் தரியா வென்றுதா னெழுதிய
வழிபாட் டோலையொடு வயவரை விடுத்துக்
கரும மெல்லா மவனொடு நம்மிடை
ஒருமையி னொழியா துரைக்கென வுணர்த்தி
ஏற்றோர்ச் சாய்த்தவிக் குருகுலத் தகத்தோர்
ஆற்றலி லாளன் றோற்றினு மவந்தியர்
ஏழ்ச்சி யின்றிக் கீழ்ப்பட் டொழுகினும்
இகத்த லில்லை யிருதிறத் தார்க்கெனப்
பயத்தொடு புணர்ந்த பழிப்பில் செய்கையின்
நளிபுன னாட்டொடு நகர மறியத்
தெளிவிடை யிட்ட திண்ணிதிற் செய்கெனப்
பல்பொருட் கருமஞ் சொல்லிய பின்னர்
அருமலை யடுக்கத் தயிரா பதமெனும்

பெருமலைப் பிறந்து பெறுதற் கரிய
தீதுதீர் சிறப்பிற் சிங்கச் சுவணமென்
றேசை போகிய வொண்பொற் கலங்களும்
கலக்கமில் சிறப்பிற் காம்போ சத்தொடு
நலக்காந் தாரமென் ஞட்டுப் பிறந்த
இலக்கணக் குதிரை யிராயிரத் திரட்டியும்
ஆருணி வேந்தை வென்றுகைப் படுத்தின
தாரணி புரவி தகைபெறப் பூண்டன
இருநூற் றைம்பதிற் றிரட்டி தேரும்
ஒருநூ றாகிய வுயர்நிலை வேழமும்
கோல மான கோபத்திற் பிறந்தன
பாலவா வேறேடு பதினா றுயிரம்
காவல் வேந்தற்குக் காட்டுபு கொடுக்கெனப்
பாய்புனற் படப்பைப் பாஞ்சா லரசன்
உரிமைப் பள்ளியுட் டெரிவனன் கொண்ட
ஏற்ற கோலத் திளமையொடு புணர்ந்தோர்
நூற்றேரு பதின்மர் கோற்றேடி மகளிருட்
..........................ட் பணைமுலை மகளிரைப்
பாசிழை யாயத்து வாசவ தத்தையைப்
பயந்தினி தெடுத்த வயங்கிழைப் பணைத்தோட்
கோப்பெருந் தேவிக்குக் கொடுக்கெனப் பணித்தே
ஓரிரு பதின்மரை யாரமர்க் கடந்து
கோல்கொள வென்ற கோபா லகனைச்
சால்புளிப் பயந்த சாயாக் கற்பின்
நீல வேற்க ணிரைதொடிக் கீகெனப்
பொற்கோங் கேய்ப்ப நற்கல னணிந்த
முப்பதி னிரட்டி முற்றிழை மகளிரைப்
பால குமரற்குங் கோபா லகற்கும்
பால்வே றிவர்களைக் கொடுக்கெனப் பணித்து
முற்பாற் கூறிய வெற்பினுட் பிறந்த
எட்டுநூ றுயிர மெரிபுரை சுவணம்
பட்டாங் கிவற்றைப் பரதகற் கீகென
மற்றவன் றம்பியர்க் கத்துணைப் போக்கிப்
பதினு றுயிரஞ் சிவேதற் கீத்துப்
பிறவு மின்னவை பெறுவோர்க் கருளி

வனப்போடு புணர்ந்த வையாக் கிரமேனும்
சிலைப்பொலி நெடுந்தேர் செவ்வி தி னல்கி
வீயா வென்றி விண்ணுத் தராயனே
டேகியுஞ் செல்கென வோம்படுத் துரைத்து
வினைமேம் படூஉ மேற்றசை நாளுள்
நிகழ்ந்த நன்னு ளறிந்தனர் கொடுப்ப
அப்பா லவர்களைப் போக்கி யிப்பால்
யாற்றற லன்ன கூந்தல் யாற்றுச்
சுழியெனக் கிடந்த குழிநவில் கொப்பூழ்
வில்லெனக் கிடந்த புருவம் வில்லின்
அம்பெனக் கிடந்த செங்கடை மழைக்கண்
பிறையெனச் சுடருஞ் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றுங் கறையில் வாண்முகம்
அரவென நுடங்கு மருங்கு லரவின்
பையெனக் கிடந்த வைதேந் தல்குல்
கிளியென மிழற்றுங் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயி னன்ன வொள்ளுகிர்
வாழையந் தாளுறழ் குறங்கின் வாழைக்
கூம்புமுகி ழன்ன வீங்கிள வனமுலை
வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவற்
காந்தண்முகி ழன்ன மெல்விரல் காந்தட்
பூந்துடுப் பன்ன புனைவளை முன்கை
அன்னத் தன்ன மென்னடை யன்னத்துப்
புணர்வி னன்ன தண்டாக் காதல்
அணிக்கவின் கொண்ட வதிநா கரிகத்து
வனப்புவீற் றிருந்த வாசவ தத்தையும்
பழிப்பில் காரிகைப் பதுமா பதியுமென்
றிரண்டுணைக் காத லொருதுணைத் தேவியர்
முட்டில் செல்வமொடு முறைமையின் வழிபட
மதுக மதிர முதலாக் கூறும்
பதனுறு நறுங்கள் பட்டாங்கு மடுப்ப
உண்டுமகிழ் தூங்கித் தண்டா வின்பமொடு
பண்கெழு முழவின் கண்கெழு பாணியிற்
கண்கவ ராடல் பண்புளிக் கண்டும்

எல்லெனக் கோயிலுள் வல்லோன் வகுத்த
சுதைவெண் குன்றச் சிமைபரந் திழிதரும்
அந்தர வருவி வந்துவழி நிறையும்
பொற்சுனை தோறும் புக்குவிளை யாடியும்
அந்தர மருங்கி னிந்திரன் போலப்
புலந்தும் புணர்ந்துங் கலந்துவிளை யாடியும்
நாளு டோறும் நாள்கழிப் புணரா
தானது நுகர்பவா லன்புமிகச் சிறந்தேன்.

உரை

கக. பிரச்சோதனற்குப் பண்ணிகாரம்விட்டது

அஃதாவது: உதயணன் பிரச்சோதனனுக்குப் பல பொருள்களையும் விடுத்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் பிரச்சோதனனுக்கு ஓலை விடுதல்)

க - கo: விளங்கிழை.............விடுத்து

(பொ - ரை.) வாசவதத்தையையீன்ற பிரச்சோதன மன்னனாற் பாதுகாக்கப்படுகின்ற வளம் பொருந்திய அழகிய உஞ்சை நகரத்திற்கு விரைந்து செல்வீராகவென்று அம் மன்னன் தூதர்களுக்கு விடையீந்து அப் பிரச்சோதன மன்னனுக்கு எம்மால் முன்பு ஆளப்பட்டுப் பின்னர் "எம்முடைய அழிவுக்காலத்தே யாம் எம் நாட்டின் எல்லையைக் கடந்து விரைந்து காட்டகத்தே சென்றபொழுது தாங்கள் நும்முடைய ஆணையை எம்முடைய நாட்டினுஞ் செலுத்தி எம் மக்களை நலிந்து கைப்பற்றிக்கொண்ட காடுகள் பொருந்திய முல்லை நிலமும் கனவிய மலைகளையுடைய குறிஞ்சி நிலவட்டமும் நீர் பொருந்திய மருத நிலமும் நெய்தனிலமும் மீண்டும் எம் மாட்சியின்கீழ் வந்தாலன்றி அப் பகுதிகளிலே நுங்கள் மக்கள் புகுதலை எங்கோல் பொறுக்கமாட்டாது என்று தான் எழுதிய வழிபாட்டுத் திருமந்திரவோலையோடே மறவர்களை முற்படச் செலுத்தி; என்க.

(வி - ம்.) விளங்கிழை : வாசவதத்தை. வேந்து : பிரச்சோதனன். நகர் : விஞ்சை நகரம். வல்லே — விரைந்து. நாம் முன்னுண்ட குறும்பும் வட்டமும் நீர்கெழுநிலனும் என்க. நம் நாட்டோடு இயைந்து எம்மால் முன்பு ஆளப்பட்ட என்க. யாம் அழிந்தகாலை என்க. அழிவு — தெய்வயானையை மீட்கக் காட்டகம் புக்கமை. ஆணையோட்டி — ஆணை செலுத்தி. காடுகெழு குறும்பு - முல்லைநிலம். மலைவட்டம் — குறிஞ்சி. நீர்கெழு நிலன் - மருதமும் நெய்தலும் என்க. எனவே இப்பகுதியால்

உதயணனுடைய அல்லற்காலத்தே வத்தவ நாட்டின் எல்லைகள் சிதைந்தன என்பதும் அந்நாட்டின்கண் முல்லை முதலிய நானிலத்திலும் சிற்சில பகுதிகளைப் பிரச்சோதனன் கைப்பற்றி ஆண்டுவந்தனன் என்பதும் உணரப்படும். தமர் - நுஞ்சுற்றம். என் தரியாது எனற்பாலது ஈறு கெட்டுத் தரியா என நின்றது. எங்கோல் தரியாது என்க. தரியாது - பொறுது. மாமனுர் ஆகலின் வழிபாட்டோலை என்ருர்.

(உதயணன் யூகிக்குக் கூறியன)

கக - உ௦ : கருமம்...............பின்னர்

(பொ - ரை.) பின்னர் அம்மன்னவன் யூகியை நோக்கி, "நண்பனே ! நீ ஆண்டுச் சென்று அப் பிரச்சோதன மன்னனுக்கும் நமக்கும் ஒருமையுண்டாதற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் கூறுவாயாக" என்று அறிவித்து மேலும் "பகை மன்னரை அழித்த வெற்றியினையுடைய இந்தக் குருகுலத்தின்கண் பிற்காலத்தே அரசாளும் ஆற்றலில்லாதவன் ஒருவன் பிறந்தவிடத்தும் அங்ஙனமே அந்த அவந்திநாட்டு மன்னர் குடிப்பிறந்தோர் பிற்காலத்தே எழுச்சியில்லாமல் கீழ்ப்பட்டு நடந்தவிடத்தும் இவ்விருகுலத்தாரும் ஒருவரையொருவர் விட்டு நீங்குதலில்லை" என்று ஊதியத்தோடுகூடிய வசையில்லாத நற்செயலை மேற்கொண்டுள்ள குளிர்ந்த நீரையுடைய அவன் நாடும் நகரங்களும் அறியும்படி தெளிவு விரவிய செயல்களைத் திட்பமாகச் செய்வாயாக!" என்று இங்ஙனம் பலவேறு பொருள்களையுடைய காரியங்களையும் அந்த யூகிக்குச் சொல்லிய பின்னர்; என்க.

(வி - ம்.) அவனெடு : பிரச்சோதனனேடு. அவனும் நாமும் ஒருமையின் ஒழியாமைக்குக் காரணமான கருமம் எல்லாம் என்பது கருத்து. ஏற்ருேர் - பகைவர். ஆற்றலிலாளன் - வலிமையில்லாதவன். அவந்தியர் - பிரச்சோதனன் குலத்தினர். ஏழ்ச்சி - எழுச்சி. இகத்தல் - நீங்குதல். இருதிறத்தார்க்கும் எனல் வேண்டிய முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது. பயம் - ஊதியம். நளி - குளிர்ந்த. நாடு - ஈண்டு ஊர்கள். இட்ட : பெயர்.

(பிரச்சோதனனுக்கு உதயணன் விடுத்த பொருள்)

உக - ௩க : அருமலை...........வேழமும்

(பொ - ரை.) ஏறுதற்கரிய பக்கமலைகளையுடைய '**அயிராபதம்**' என்னும் பெரிய மலையிலே பிறந்து பெறுதற்கரிய குற்றமற்ற சிறப்பினையுடைய '**சிங்கச் சுவணம்**' என்னும் புகழ் பரந்த ஒள்ளிய பொன்னுலியன்ற அணிகலன்களும் வற்கடம் முதலிய வற்ருல் கலங்குதலில்லாத சிறப்பினையுடைய காம்போசம் என்னும் நாட்டினும் அழகிய காந்தாரம் என்னும் நாட்டினும் பிறந்த நல்லிலக்கணம் பொருந்திய நாலாயிரம் குதிரைகளும் ஆருணி

மன்னனைக் கொன்று கைப்பற்றப்பட்ட மாலையணிந்த குதிரைகள் அழகுண்டாகப் பூட்டப்பட்டனவாகிய ஐந்நூறு தேரும் நூறு உயரிய நிலைமையினையுடைய யானைகளும்; என்க.

(வி - ம்.) அயிராபதம் - ஒரு மலை. ஓசை - புகழ். பொற்கலன்கள் - பொன்னாலியன்ற அணிகலன்கள். கலக்கம் - பகைவர் முதலியோரால் உண்டாகும் மனக்குழப்பம். நலக்காந்தாரம் - அழகிய காந்தாரம். இலக்கணம் - குதிரையிலக்கணம். இராயிரத்திரட்டி - நான்காயிரம். தார் - மாலை. தகை - அழகு. இருநூற்றைம்பதிற்றிரட்டி - ஐந்நூறு.

(இதுவுமது)

௩௨ - ச : கோலம்...............கொடுக்கென

(பொ - ரை.) அழகான கோபங்களில் தோன்றிய மிக்க பாலையுடைய பதினாறாயிரம் ஆக்களும் காளைகளும் வழங்கி "இவையிற்றை அந்நாட்டினைப் பாதுகாக்கும் பிரச்சோதன மன்னனுக்குக் கண்கூடாகக் காட்டி அளித்திடுக!" என்று கூறி; என்க..

(வி - ம்.) கோலம் - அழகு. கோபம் - ஆக்கள் பல்குமிடம். பாலவா - பாலையுடைய ஆ. ஏறு - காளை. வேந்தன் : பிரச்சோதனன். காட்டுபு - காட்டி.

(வாசவதத்தையின் தாய்க்கு விடுத்த மகளிர்)

௩௫ - சஉ : பாய்...........பணித்தே

(பொ - ரை.) பாயாநின்ற நீரையுடைய தோட்டங்களையுடைய பாஞ்சால நாட்டு மன்னனாகிய ஆருணியின் உவளகப் பள்ளியில் அவ்வுதயணன் ஆராய்ந்தெடுத்த பருவம் எய்திய அழகும் இளமையும் பொருந்திய திரண்ட வளையலணிந்த நூற்றுப்பத்து மகளிருள் வைத்து,........... பணைத்த முலையினையுடைய மகளிரைப் பசிய அணிகலனணிந்த தோழிமாரையுடைய வாசவதத்தை நல்லாளை ஈன்று இனிதே வளர்த்தவளும், விளங்கா நின்ற அணிகலன்களையுடையவளும் மூங்கில் போன்ற தோள்களையுடையவளும் ஆகிய கோப்பெருந்தேவிக்குக் கொடுத்திடுக! என்று கட்டளையிட்டு; என்க.

(வி - ம்.) படப்பை - தோட்டம். பாஞ்சால் - பாஞ்சாலம்: விகாரம். அரசன் - ஆருணி. உரிமைப்பள்ளி - உவளகம் (அந்தப்புரம்). கோற்றொடி - திரண்ட வளையல். ௩௯ ஆம் அடியின் முற்பகுதி அழிந்தது. பயந்து - ஈன்று. பணைத்தோள் — மூங்கில் போன்ற தோள்.

(கோபாலகன் தாய்க்கு விடுத்த மகளிர்)

௪௬ - ௯ : ஓரிரு..............ஈகென

(பொ - ரை.) அம்மகளிருள் இருபதின்மரைத்தான் கடத்தற்கரிய போரினைக் கடந்து செங்கோல் கைக்கொள்ளும்படி வென்றுதவிய கோபாலகனை மாண்போடு ஈன்ற பிறழாத கற்பினையுடைய கரிய வேல் போன்ற கண்ணை உடைய நிரல்பட்ட வளையலணிந்த தேவிக்கு அளித்திடுக! என்று கூறி; என்க.

(வி - ம்.) கோல் - செங்கோல். கோபாலகன் : பிரச்சோதனன் பட்டத்தேவியருள் ஒருத்தி மகன். சால்புளி - சால்போடு. இதன்கண் உளி ஏழாவதன் சொல்லுருபு. அது, மூன்றுவதன் பொருளில் மயங்கிற்று. நிரைதொடி : கோபாலகன் தாய்.

(கோபாலகற்கும் பாலகுமரற்கும் விடுத்த மகளிர்)

௪௭ - ௫0 : பொன்................பணித்து

(பொ - ரை.) பொன்னிறப் பூக்களை நிரம்ப மலர்ந்த கோங்கமரம் போன்று நல்ல பொன்னணிகலன்களை நிரம்ப அணிந்த அறுபது மகளிரைக் காட்டிப் பாலகுமரனுக்கும் கோபாலகனுக்கும் இவர்களைக் கூறுபடுத்தி வழங்கிடுக! என்று கட்டளையிட்டு; என்க.

(வி - ம்.) பொற்கோங்கு - பொன்னிறப்பூப் பூத்த கோங்கமரம். இது பொன்னணிகலன்களை நிரம்ப அணிந்த மகளிர்க்கு உவமை. "பூத்த கோங்குபோல் பொன்சுமந்துளார்" எனவரும் சீவகசிந்தாமணியும் (௪௪௯) காண்க. பாலகுமரன் : பிரச்சோதனன் மகன். பால் வேறுபடுத்தி என்க. பால் — கூறு.

(பரதகனுக்கு அளித்த பொருள்கள்)

௫௧ - ௩ : முன்பாற்................என

(பொ - ரை.) முன்னே கூறப்பட்ட அயிராவத மலையில் தோன்றிய தீப்பிழம்பு போன்ற எண்ணூறாயிரம் பொன்னைச் சுட்டி இவற்றை இயல்பாகவே பரதகனுக்கு அளித்துவிடுக என்று கூறி; என்க.

(வி - ம்.) முற்பாற் கூறிய என்றது இக்காதையில் முன்னே கூறிய அயிராவதமலை என்றவாறு. ௨௧ ஆம் அடியைக் காண்க. சுவணம் - சிங்கச் சுவணம் என்னும் பொன். எரி - தீ. பட்டாங்கு - இயல்பாக. பரதகன் : பிரச்சோதனன் அமைச்சருள் ஒருவன்.

(அவன் தம்பிக்கும் சிவேதனுக்கும் அளித்த பொருள்கள்)

௫௪ - ௯ : மற்றவன்..............அருவி

(பொ - ரை.) பின்னரும் அப்பரதகன் தம்பிமாருக்கும் எண்ணூறாயிரம் பொன்களைப் பகுத்து வழங்குக! என்று சொல்லி

பெ.—10

விடுத்துச் சிவேதன் என்னும் அமைச்சனுக்குப் பதினாறாயிரம் பொன்களை வழங்கி மேலும் இத்தகைய பொருள்களைப் பெறத் தகுந்தோர் பிறர்க்கும் வழங்கி; என்க.

(வி - ம்.) மற்றவன் : பரதகன். அத்துணை - அவ்வளவு. எண்ணாறாயிரம் பொன் - பதினாறாயிரம் சிங்கச் சுவணப் பொன் என்க. சிவேதன் : பிரச்சோதனன் முதலமைச்சன். பெறுவோர் பிறர்க்கும் அருளி என்க.

(யூகியின் புறப்பாடு)

ருள - சுo : வனப்பொடு................உரைத்து

(பொ - ரை.) பின்னர் இவற்றையெல்லாம் யூகியின்பால் ஒப்படைத்து அவனுக்கு அழகோடு கூடிய வையாக்கிரம் என்னும் பெயரையுடைய மலைபோன்று விளங்குகின்ற நெடிய தேரொன்றனைச் செம்மையுடையதாக வழங்கிக் கெடாத வெற்றியினையுடைய **'விண்ணுத்தராயன்'** என்னும் போர்மறவனோடு அந்த யூகியும் செல்வானாக என்று கூறி; என்க.

(வி - ம்.) வனப்பு - தேரிலக்கணம். சிலை - மலை. செவ்விதின் என்புழிச் செம்மை - செப்பம்; செப்பமுடையதாக என்க. விண்ணுத்தராயன் இவனுக்கு வீயாவென்றி என்னும் அடைபுணர்த்தமையால் இவன் போர் மறவன் என்பது பெற்றாம். யூகியை விண்ணுத்தராயன்பால் ஓம்படுத்து எனினுமாம். விண்ணுதிதராயன் யூகியின் மெய்காப்பாளனாக விடப்பட்டான் என்று கொள்க.

(யூகி முதலியோரை விடுத்தல்)

சுக - ௩ : வினைமேம்.............இப்பால்

(பொ - ரை.) மேற்கொண்டு செல்லும் காரியம் நன்கு நிறைவேறி மேம்பாடுறுதற்குக் காரணமான மேலான கோளியக்கமுடைய நாள்களுள் வைத்து அப்பொழுது நிகழ்ந்த நல்லதொரு நாளினைக் கணிகள் ஆராய்ந்தறிந்து குறித்துக் கொடுப்ப அந்த நாளிலே யூகி முதலியோரை உஞ்சை நகரத்திற்குப் புறப்படச் செய்த பின்னர்; என்க.

(வி - ம்.) வினை - எடுத்துக் கொண்ட காரியம். மேற்றசை - மேலான கோளியக்கம். அவை சோதிட நூலுள் சூரியதசை, சந்திரதசை என்பன முதலாகக் கூறப்படுவன. நாளுள் நிகழ்ந்த நல்நாள் என்பதற்கு நாளில் நிகழ்ந்த நன்முழுத்தம் எனினுமாம். அப்பால் இப்பால் என்பன அங்கு இங்கு என்று இடஞ்சுட்டி நின்றன.

(வாசவதத்தை வண்ணனை)

சுச - அ௩ : யாற்றறல்...............வாசவ தத்தையும்

(பொ - ரை.) யாற்றின்கண் அறல்பட்டுக் கிடக்கும் கருமணலை ஒத்த கூந்தலையும் அந்த யாற்று நீரின்கண் தோன்றும்

சுழியை ஒத்திருந்த குழிபோன்ற கொப்பூழையும் வில்போலக் கிடந்த புருவங்களையும் வில்லினது அம்புபோன்று கிடந்த சிவந்த கடையினையுடைய குளிர்ந்த கண்ணையும் பிறைபோலச் சுடரா நின்ற சிறிய நெற்றியையும் அப்பிறை வளர்ந்து நிறைந்த திங்களை ஒத்துத் தோன்றுநின்ற மறுவற்ற ஒளியையுடைய முகத்தையும் பாம்புபோல் வளைகின்ற இடையினையும் அப் பாம்பின் படம் போலக் கிடந்த அழகிய உயர்ந்த அல்குலையும் கிளிபோன்று மிழற்றுகின்ற மொழியினையும் கிளியினது ஒளியுடைய அலகை யொத்த ஒளியுடைய நகத்தினையும் வாழையினது அழகிய தண்டினையொத்த தொடையினையும் வாழையினது குவிந்த அரும்பையொத்த பருத்த இளமையுடைய அழகிய முலையினையும் மூங்கில்போலத் திரண்ட மெல்லிய தோளையும் அம் மூங்கிலின் கண் உண்டாகும் விளங்காநின்ற முத்தைப்போன்று விளங்கு கின்ற ஒளியினையுடைய பல்லினையும் காந்தள் அரும்பு போன்ற மெல்லிய விரல்களையும் அக் காந்தட் பூங்குலையையொத்த வளைய லணிந்த முன்கையினையும் அன்னம்போன்ற மெல்லிய நடையினை யும் அன்னப் பறவைகளின் புணர்ச்சியையொத்த குறையாத காதலையும் இவற்றோடு அணிகலன்களின் அழகினையுங்கொண்ட மிக்க நாகரிகத்தையுடைய அழகே குடிகொண்டிருந்த வாசவதத் தையும்; என்க.

(வி - ம்.) அறல் - நீரோட்டத்தால் அல்லது காற்றியக்கத்தால் அற்றற்றுக் கிடந்த கருமணல். சுழி - நீர்ச்சுழி. மழைக்கண் - குளிர்ந்த கண். பிறையின் நிறை - முழுத்திங்கள். கறை - மறு; களங்கம். வாள் - ஒளி. பை - பாம்பின் படம். ஐது - அழகிதாகிய; மெல்லி தாகியவும் ஆம். கிளவி - மொழி. வாயினன்ன - வாய்போன்ற. வாய்- ஈண்டு அலகு. உகிர் - நகம். வாழையந்தாள் - வாழையின் அழகிய தண்டு. கூம்புமுகிழ் - குவிந்த அரும்பு. வேய் - முகில். பூந்துடுப்பு- பூங்குலை. அன்னத்துப் புணர்வு - அன்னப் பறவைகளின் அன்புக் கேண்மை. அணிக்கவின் - அணிகலன்களாலுண்டாய அழகு. அதி நாகரிகம் - மிக்க நாகரிகம். நாகரிகம் - கண்ணோட்டம். வனப்பு - அழகு.

(பதுமாபதி)

அசு - சூ : பழிப்பில்..............வழிபட

(பொ - ரை.) குற்றமற்ற அழகினையுடைய பதுமாபதியும் என்று கூறப்பட்ட ஒள்ளிய காதன்மிக்க ஒப்பற்ற வாழ்க்கைத் துணைவியராகிய கோப்பெருந்தேவியர் இருவரும் முட்டுப்பாடில் லாத செல்வத்தோடிருந்து தத்தமக்குரிய முறைமையினாலே தனக்கு வழிபாடு செய்யாநிற்ப; என்க.

(வி - ம்.) பழிப்பு - குற்றம். காரிகை - அழகு. துணை - வாழ்க் கைத்துணை.

(உதயணன் வாசவதத்தையோடும் பதுமாபதியோடும் இன்புற்றமர்ந்து வாழ்தல்)

அஎ - கூ௫ : மதுகமதிர..............ஆடியும்

(பொ - ரை.) உதயணமன்னன் அத்தேவிமார் இருவரோடும் மதுகமதிரம் முதலாகக் கூறப்படும் பதமான நறிய கள்வகைகளைத் தூயனவாக வாக்கிக்கொடுப்பப் பருகிக் களிப்புற்றுக் குறையாத இன்பத்தோடே பண்ணமைந்த முழவினது கண்ணில் பொருந்திய தாளத்தோடே காண்போர் கண்ணைக் கவருமியல்புடைய கூத்தினைப் பண்போடு கண்டும் தொழில் வல்லவன் ஞாயிற்று மண்டிலம்போல ஒளிவிடும்படி அரண்மனைக்குள் இயற்றிச் சுதை தீற்றிய வெள்ளிமலையினது உச்சியினின்றும் பாவி வீழ்கின்ற வானருவிநீர் வந்து நிறைந்து வழிகின்ற பொன்னாலியன்ற செய்சுனைதோறும் புகுந்து நீர்விளையாடியும்; என்க.

(வி - ம்.) மதுகமதிரம் : பண்புத்தொகை : உம்மைத் தொகையுமாம். பதன் - பதம். பட்டாங்கு - தூயனவாக. மடுப்ப - வாக்கிக் கொடுப்ப. மகிழ்தூங்கி - களித்து. பாணி - தாளம். ஆடல்-கூத்து. வல்லோன் எல்லென வகுத்த குன்றம் என்க. எல் - ஞாயிற்றுமண்டிலம். குன்றம் - செய்குன்றம். சிமை - உச்சி. அந்தர அருவி - வான அருவி. வந்து நிறைந்துவழியும் என்க. சுனை - செய்சுனை. பொன்னாற் செய்த சுனை என்க. நீர் விளையாடியும் என்க.

(இதுவுமது)

கூகூ - கூ : அந்தரம்............சிறந்தென்

(பொ - ரை.) வானுலகத்தின்கண் இந்திராணி முதலிய தேவிமாரோடே இன்புற்று வாழும் இந்திரன்போல அம்மன்னவன் அத்தேவிமாரோடு நாள்தோறும் நாள்தோறும் ஊடியும் கூடியும் சேர்ந்து விளையாடியும் நாள் கழிதலை உணராது ஒழிவின்றி அன்பு மிகவும் பெருகாநிற்ப இன்பம் நுகர்ந்து வாழ்வாராயினர்; என்க.

(வி - ம்.) அந்தரம் - வானுலகம். தேவிமாரோடும் இன்புறும் இந்திரன்போல என்க. புலந்தும் - ஊடியும்.

" ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் " (குறள். கங௩0)

என்பவாகலின் புலந்தும் புணர்ந்தும் என்றார். கழிப்பு - கழிதலை. ஆறுது - ஒழியாது. நுகர்ப - நுகர்பவர். அரசனும் தேவிமாரும் இங்ஙனம் நுகர்ப என்க.

கக. பிரச்சோதனற்குப் பண்ணிகாரம்விட்டது முற்றிற்று.

௧௨. பந்தடி கண்டது

இதன்கண் :—வாசவதத்தையும் பதுமாபதியும் பந்தடி காணுதலும், வயந்தகன் உதயணனுக்குக் கூறுதலும், உதயணன் மறைந்து சென்று பந்தடி காணுதலும், இராசனை இயல்பும், பந்து வண்ணனையும், இராசனை பந்தடித்தலும், காஞ்சனமாலை பந்தடித்தலும், அயிராபதி பந்தடித்தலும், விச்சுவலேகை பந்தடித்தலும், ஆரியை பந்தடித்தலும், வாசவதத்தை தன் தோழியரை நோக்கலும், கோசல நாட்டின் பெருமையும், கோசலத்தரசன் மகள் வண்ணனையும், கோசலத்தரசன் மகள் பந்தடித்தலும், வாசவதத்தை தன்னுள் நினைதலும் உதயணன் கோசலத்தரசன் மகளை விரும்பலும் கூறப்படும்.

அன்புமிகச் சிறந்தாண் டமருங் காலை
மன்பெருஞ் சிறப்பின் மறப்போ ருதயணன்
அருமை சான்ற வாருணி யரசன்
உரிமைப் பள்ளியுட் டேரிவனன் கொண்ட
ஆயிரத் தெண்ம ரரங்கியன் மகளிர்
மாசி ருமரை மலர்மக ளனையோர்
ஆடலும் பாடலு நாடோறு நவின்ற
நன்னுதன் மகளிரை மின்னேர் நுண்ணிடை
வாசவ தத்தைக்கும் பதுமா பதிக்கும்
கூறுநனி செய்து வீறுயர் நெடுந்தகை
கொடுத்த காலை யடுத்த வன்போ
டரச னுலாவெழு மற்ற நோக்கித்
தேவிய ரிருவரு மோவியச் செய்கையின்
நிலாவிரி முற்றத்துக குலாவோ டேறிப்
பந்தடி காணிய நிற்ப விப்பால்
வெங்கோ லகற்றிய வென்றித் தானைச்
செங்கோற் சேதிபன் செவிமுதற் சென்று
வயந்தக னுரைக்கு நயந்தனை யருளின்
மற்றுநின் றேழியர் பொற்றேடிப் பணைத்தோட்
டோழியர் தம்மோ டேழு ழிகலிப்
பந்துவிளை யாட்டுப் பரிந்தன ரதனாற்
சிறப்பின் றுலாப்போக் கறத்தகை யண்ணனின்

மாண்குழைத் தேவிய ரிருவரு மிகறலிற்
காண்டகை யுடைத்தது கரந்தனை யாகி
வடிவேற் றடக்கை வத்தவ ரிறைவ
பிடிமிசை வந்து பிணவுரு வாகிச்
சென்றனை காண்கென நன்றென விரும்பிப்
படையுலாப் போக்கி யிடைதெரிந் திருந்தாங்
கியாவரு மறியா வியல்பிற் கரந்து
காவலன் பிடிமிசைக் காண்டக வேறிப்
பல்வகை மகளிரோடு பையெனச் சென்றுதன்
இல்லணி மகளிரோ டியைந்தன னிருப்ப
இகலும் பந்தி னிருவரும் விகற்பித்
தடிநனி காண்புழி யணங்கேர் சாயற்
கொடிபுரை நுண்ணிடைக் கோவ்வைச் செவ்வாய்
மதுநாறு தெரியன் மகதவன் றங்கை
பதுமா பதிதன் பணியெதிர் விரும்பி
விராய்மலர்க் கோதை யிராசனை யென்போள்
கணங்குழை முகத்தியை வணங்கினள் புகுந்து
மணங்கமழ் கூந்தலும் பிறவுந் திருத்தி
அணங்கெனக் குலாஅ யறிவோர் புனைந்த
கிடையும் பூளையு மிடைவரி யுலண்டும்
அடையப் பிடித்தவை யமைதியிற் றிரட்டிப்
பீலியு மயிரும் வாலிதின் வலந்து
நூலினுங் கயிற்றினு நுண்ணிதிற் சுற்றிக்
கோல மாகக் கொண்டனர் பிடித்துப்
பாம்பின் றேலும் பீலிக் கண்ணும்
பூம்புன னுரையும் புரையக் குத்திப்
பற்றிய நோய்ம்மையிற் பல்வினைப் பந்துகள்
வேறுவே றியற்கைய கூறுகூ றமைத்த
வெண்மையுஞ் செம்மையுங் கருமையு முடையன
தண்வளி யெறியினுந் தாமெழுந் தாடுவ
கண்கவ ரழகொடு நெஞ்சக லாதன
ஒண்பந் தோரேழ் கொண்டன ளாகி
ஒன்றென் றேற்றி யுயரச் சென்றது
பின்பின் பந்தொடு வந்ததலை சிறப்பக்

கண்ணிமை யாம லெண்ணுமி னென்று
வண்ண மேகலை வளையொடு சிலம்பப்
பாடகக் கான்மிசைப் பரிந்தவை விடுத்தும்
சூடக முன்கையிற் சுழன்றுமா றடித்தும்
அடித்த பந்துக ளங்கையி னடக்கியும்
மறித்துத் தட்டியுந் தனித்தனி போக்கியும்
பாயிர மின்றிப் பல்கல னொலிப்ப
ஆயிரங் கைநனி யடித்தவ ளகல
அன்ன மென்னடை யவந்திகை யுவந்தவள்
கண்மணி யனைய வொண்ணுதற் பாவை
காஞ்சன மாலை வாங்குபு கொண்டு
பிடித்த பூம்பந் தடித்துவிசும் பேற்றியும்
அடித்த பந்தால் விடுத்தவை யோட்டியும்
குழன்மேல் வந்தவை குவிவிரற் கொளுத்தியும்
நிழன்மணி மேகலை நேர்முகத் தடித்தும்
கண்ணியிற் சார்த்தியுங் கைக்குட் போக்கியும்
உண்ணின்று திருத்தியும் விண்ணுறச் செலுத்தியும்
வேயிருந் தடந்தோள் வெள்வளை யார்ப்ப
ஆயிரத் தைந்நூ றடித்தன ளகலச்
செயிர்தீர் பதுமைதன் செவிலித் தாய்மகள்
அயிரா பதியெனு மம்பணைத் தோளி
மானேர் நோக்கிற் கூனி மற்றவள்
தானேர் வாங்கித் தனித்தனி போக்கி
நாற்றிசைப் பக்கமு நான்கு கோணமும்
காற்றினுங் கடிதாக் கலந்தன ளாகி
அடித்தகைத் தட்டியுங் குதித்துமுன் புரியா
அகங்கை யோட்டியும் புறங்கையிற் புகுத்தியும்
தோண்மேற் பாய்ச்சியு மேன்மேற் சுழன்றும்
கூன்மேற் புரட்டியுங் குயநடு வோட்டியும்
வாக்குறப் பாடியு மேற்படக் கிடத்தியும்
நோக்குநர் மகிழப் பூக்குழன் முடித்தும்
பட்ட நெற்றியிற் பொட்டிடை யேற்றும்
மற்றது புறங்கையிற் றட்டின ளேற்றியும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரங்
கைந்நனி யடித்துக் கையவள் விடலும்

பேசிய முறைமையி னேசா நல்லெழில்
வாசவ தத்தைக்கு வலத்தோ ளனைய
அச்சமில் காரிகை விச்சுவ லேகையென்
றுற்ற நாமப் பொற்றொடிக் குறளி
யானிவ ணிற்பக் கூனியைப் புகழ்தல்
ஏலா தென்றவள் சேலந் திருத்திக்
கருவிக் கோனனி கைப்பற் றினளாய்
முரியுங் காலைத் தெரிய மற்றதிற்
றட்டின ளொன்றேன் றுற்றன ளெழுப்பிப்
பத்தியிற் குதித்துப் பறப்பன ளாகியும்
வாங்குபு கோண்டு வானவிற் போல
நீங்கிப் புருவ நெரிவுட னெற்றியும்
முடக்குவிர லெற்றியும் பரப்புவிரற் பாய்ச்சியும்
தனித்துவிரற் றரித்து மறித்தெதி ரடித்தும்
குருவிக் கவர்ச்சியி னதிரப் போக்கியும்
அருவிப் பரப்பின் முரியத் தாழ்த்தியும்
ஒருபாற் பந்தி னொருபாற் பந்துற
இருபாற் றிசையு மியைவன ளாகிப்
பாம்பொழுக் காக வோங்கின வோட்டியும்
காம்பிலை வீழ்ச்சியி னுங்கிழித் திட்டும்
முன்னிய வகையான் முன்னீ ராயிரத்
தைந்நூ றடித்துப் பின்னவள் விடவும்
சீரியல் பதுமைதன் சிந்தைக் கோப்பெனும்
காரியை மயிலன வாரியை புகுதா
நுணங்குகொடி மருங்கு நோவ வசைஇ
மணங்கமழ் கூந்தல் வகைபெற முடித்தும்
சூடக மேற்றியும் பாடகந் திருத்தியும்
நாடக மகளிரி னன்கன முலாவியும்
இருகையு மடிப்ப விசும்பொடு நிலத்திடை
திரிபுவீழ் புட்போ லொருவயி னில்லா
தெழுந்துவீழ் பந்தோ டெழுந்துசெல் வனள்போற்
கருதரு முரிவொடு புருவமுங் கண்ணும்
வரிவளைக் கையு மனமு மோட
அரியார் மேகலை யார்ப்பொடு துளங்கவும்
வருமுலை துளும்பவுங் கூந்த லவிழவும்

அரிமலர்க் கோதையோ டணிகலஞ் சிதறவும்
இருந்தன ணின்றன ளென்பதை யறியார்
பரந்த பஃறேள் வடிவின ளாகித்
திரிந்தன ளடித்துத் திறத்துளி மறித்தும்
முரியுந் தொழிலொடு மூவாயி ரங்கை
முறையி னேற்றிப் பந்துநிலத் திடலும்
வரிநெடும் பந்து வந்தெதிர் கொள்ளுநர்
ஒருவரு மின்றி நின்றுழிப் பொருவரும்
வாளேர் தடங்கண் வாசவ தத்தை
கோளேர் மதிமுகங் கோட்டி நோக்கக்
கிடையோர் போலக் காமத்திற் கழுமா
திடையோ ரியல்பின தாகி யில்ல
துடையோர்க் குரிய வுதவி நாடி
ஆனச் சிறப்பின் யாவர்க் காயினும்
தானப் பெரும்பயந் தப்புத லின்றி
ஓசை யோடிய வுலவாச் செல்வத்துக்
கோசல வளநாட்டுக் கோமாற் பிழையாத்
தேவியர்க் கெல்லாந் தேவி யாகிய
திருத்தகு கற்பிற் றீங்குயிற் கிளவி
வரிக்குழற் கூந்தல் வசுந்தரி தன்மகள்
மானே யன்ன மயிலே மால்வரைத்
தேனே பவளந் தெண்கட னித்திலம்
கயலே காந்தள் புயலே பொருவிற்
பையே பொற்றுடி படைநவில் யானைக்
கையே குரும்பை கதிர்மதி வேயே
நோக்கினு மொதுக்கினு மாக்கே ழணிந்த
சாயல் வகையினுஞ் சால்புடை மொழியினும்
ஆசில் வாயினு மணிபெற நிரைத்த
பல்லினுங் கண்ணினு மெல்விரல் வகையினும்
நறுமென் குழலினுஞ் செறிநுண் புருவத்
தொழுக்கினு மிழுக்கா வல்குற் றடத்தினும்
மெல்லிய விடையினு நல்லணி குறங்கினும்
குற்றமின் முலையினு முகத்தினுந் தோளினும்
மற்றவை தொலையச் செற்றேளி திகழத்
தனக்கமை வெய்திய தவளையங் கிண்கிணி

வனப்பெடுத் துரைஇ வையகம் புகழினும்
புகழ்ச்சி முற்றாப் பொருவரு வனப்பிற்
றிருக்கண் டன்ன வுருக்கிளர் கண்ணி
கோசலத் தரசன் கோமகட் பூவணி
வாசச் சுரிகுழன் மாணிழை யொருத்தியென்
றாங்கொரு காரணத் தவள்வயி னிருந்தோள்
பூங்குழை தோற்றது பொறாஅ நிலைமையள்
எழுந்தன டேவியைப் பணிந்தனள் புகுந்து
மடந்தைய ராடலை யிகழ்ந்தன ணகையா
வந்தரி வையரெதிர் வரசதி வகையாற்
பந்தா டிலக்கண நின்றுபல பேசி
இளம்பிறைக் கோடெனக் குறங்கிரு பக்கமும்
விளங்கியோர் பிறழ வேற்கணி யிருந்து
முரண்டெழு வனப்பின் மூவே ழாகிய
திரண்டவொண் பந்து தெரிவன ளாகி
ஓங்கிய வாடலி னொன்றிது வாகலிற்
றான்சம் நின்று பாங்குறப் பகுந்து
மண்டல மாக்கி வட்டணை முகத்தே
கொண்டனள் போக்கிக் குறிவயிற் பெயர்த்துப்
பூவீழ்த் தெழுப்பிப் புறங்கையின் மற்றவை
தான்மறித் தடித்துத் தகுதியி னெழவெழக்
காம தேவியர் காண்பன ருவப்பப்
பூமி தேவியிற் புறம்போ வனள்போற்
பைய வெழுவோள் செய்தொழிற் கீடாக்
கையுங் காலு மெய்யு மியையக்
கூடுமதி முகத்திடைப் புருவமுங் கண்ணும்

....

ஆடன் மகளி ரவிநயம் வியப்பவும்
பேசிய விலயம் பிழையா மரபிற்
பாடன் மகளிர் பாணி யளப்பவும்
மருவிய கதியிற் கருவிக் கூற்றோர்
இருபதம் பெயர்க்கு மியல்கொண் டாடவும்
சிந்தை பெயராத் திறத்திற மவையவை
பந்தாட் டியலோர் தந்தமி லுவப்பவும்

ஓதிய முறைமையின் யாதுங் காணார்
தேவிய ரிருவருந் திகைத்தன ரிருப்பவும்
காந்தண் முகிழ்நனி கவற்றுமேல் விரலின்
ஏந்தின ளெடுத்திட் டேறிவுழி முன்கையிற்
பாய்ந்தவை நிலத்தினும் விசும்பினு மோங்கிச்
சூறை வளியிடைச் சுழலிலை போல
மாறுமா றெழுந்து மறிய மறுகி
ஏறுப விழிபவா காய நிற்பன
வேறுபடு வனப்பின் மும்மைய வானவை
ஏர்ப்போலி வளைக்கை யிரண்டே யாயினும்
தேர்க்கா லாழியிற் சுழன்றவை தொழில்கோள
ஓடா நடவா வொசியா வோல்காப்
பாடாப் பாணியி னீடுயிர்ப் பினளாய்க்
கண்ணின் செயலினுங் கையின் றொழிலினும்
விண்ணவர் காணினும் வீழ்வர்கோல் வியந்தேனப்
பாடகத் தரவமுஞ் சூடகத் தோசையும்
ஆடுபங் தொலியுங் கேட்பி னல்லதை
ஐயபங் தெழவெழ வதனுட னெழுதலிற்
கையுங் காலு மெய்யுங் காணார்
மண்ணினள் விண்ணின ளென்றறி யாமை
ஒண்ணுதன் மாதரை யுள்ளுழி யுணரும்
தன்மையு மரிதெனத் தனித்தனி மயங்கி
மாயங் கொல்லிது மற்றென் றில்லென
ஆய நவின்றமை யறிந்தன ளாகிச்
சொல்லிய மகளி ரெல்லாங் காணச்
சில்லரிக் கண்ணி மெல்லென முரியாச்
செந்தளிர் பொருவச் சிவந்த கையாற்
கந்துக மேந்திக் கசிந்த கோதைக்கு
மிகைக்கை காணார் நகைப்படு மவளென
உகைத்தெழு பந்தி னுடனெழு வனபோற்
சுழன்றன தாமங் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி யவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவிய ரிழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்

அங்கையி னேற்றும் புறங்கையி னேட்டியும்
தங்குற வளைத்துத் தான்புரிந் தடித்தும்
இடையிடை யிருகா றெரிதர மடித்தும்
அரவணி யல்குற் றுகினெறி திருத்தியும்
நித்திலக் குறுவியர் பத்தியிற் றுடைத்தும்
பற்றிய கந்துகஞ் சுற்றுமுறை யுரைத்தும்
தோடையுங் கண்ணியு முறைமுறை யியற்றியும்
அடிமுதன் முடிவரை யிழைபல திருத்தியும்
படிந்தவண் டெழுப்பியுங் கிடந்தபந் தெண்ணியும்
தேமலர்த் தோடைய றிறத்திறம் பிணைத்தும்
பந்து வர னேக்கியும் பாணிவர நொடித்தும்
சிம்புளித் தடித்துங் கம்பிதம் பாடியும்
ஆழியென வுருட்டியுந் தோழியொடு பேசியும்
சாரிபல வோட்டியும் வாழியென வாழ்த்தியும்
அந்தளிர்க் கண்ணி யவந்திகை வெல்கெனப்
பைந்தொடி மாதர் பற்பல வகையால்
எண்ணு யிரங்கை யேற்றின ளேற்றலும்
கண்ணுர் மாதர் மதிமுகங் காணிற்
காவன் மன்னன் கலங்கலு முண்டெனத்
தேவியு முணர்வா டீதென நினைஇ
நின்ற வளவிற் சென்றவண் முகத்தே
ஒன்றிய வியல்போ டொன்றுக் கொன்றவை
ஒளித்தவும் போலுங் களித்தவும் போலும்
களித்தவு மன்றி விளித்தவும் போலும்
வேலென விலங்குஞ் சேலென மிளிரும்
மாலென நிமிருங் காலனைக் கடுக்கும்
குழைமே லெறியுங் குமிழ்மேன் மறியும்
மலருங் குவியுங் கடைசேல வளரும்
சுழலு நிற்குஞ் சொல்வன போலும்
கழுநீர் பொருவிச் செழுநீர்க் கயல்போல்
மதர்க்குந் தவிர்க்குஞ் சுருக்கும் பெருக்கும்
இவைமுத லினியன வவிநயப் பல்குறி
நவையற விருகண் சுவையொடு தோன்ற
நீலப் பட்டுடை நிரைமணி மேகலை

கோலமோ டிலங்கத் தானுயிர்ப் பாற்றி
ஓடரிக் கண்ணி யுலாவர நோக்கிப்
பூண்டிகழ் கோங்கைப் புயலேர் கூந்தல்
மாண்குழை புதுநலங் காண்டகச் சென்ற
உள்ளந் தன்னை யொருப்படுக் கல்லா
வெள்ளத் தானை வேந்தன் பெயர்ந்து
பிடிமிசைத் தோன்றலும் பேதையர் தத்தம்
இடவயிற் பெயர்ந்தன ரேழுந்தனர் விரைந்தேன்.

உரை

கஉ. பந்தடி கண்டது

அஃதாவது : வாசவதத்தையும் பதுமாபதியும் (மறைந்திருந்து **உதயணனும்**) *தோழிமார் பந்தடித்தலைக் கண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.*

(வாசவதத்தையும் பதுமாபதியும்)

த - அ : **அன்பு..................மகளிரை**

(பொ - ரை.) *அரசனும் தேவிமாரும் நாள்தோறும் அன்பு பெருக இன்புற்று அமருங்காலத்தே நிலைபெற்ற பெரிய சிறப்பினையும் வீரமிக்க போராற்றலையுமுடைய வீறுபெற்றுயர்ந்த நெடிய புகழையுடைய அவ்வுதயணமன்னன் தன் பகைவனாகிய ஆருணியரசனைக் கொன்று அவனது உவளகத்தைக் கைப்பற்றிய காலத்தே அவ்வுவளகத்தின்கண் ஆராய்ந்து கைப்பற்றிய அரிய கலைத்திறம் நிறைந்தவரும் குற்றமற்ற செந்தாமரை மலரில் வாழுகின்ற திருமகளை ஒத்த அழகுடையோரும் கூத்தாடுங் கலைத்திறமுடையோரும் நாள்தோறும் ஆடுதலும் பாடுதலும் பயின்றவரும் நல்ல நுதலுடையோரும் ஆகிய தோழிமார் ஆயிரத்தெண்மரை; என்க.*

(வி - ம்.) *ஆண்டு - அவ்வரண்மனைக்கண். இன்புற்று அமருங்காலை என்க. அருமைசான்ற மகளிர் என்க. உரிமைப்பள்ளி - உவளகம். நவின்ற - பயின்ற. மகளிர் - தோழியர்.*

(இதுவுமது)

அ - கரு : **மின்னேர்..........நிற்ப**

(பொ - ரை.) *மின்னலைஒத்த நுண்ணிய இடையினையுடைய வாசவதத்தைக்கும் பதுமாபதிக்கும் நன்கு கூறுசெய்து வழங்கிய பொழுது அத் தேவிமார் இருவரும் அத் தோழிமாரிடத்தே பொருந்திய அன்புடையோராய் அம் மன்னன் உலாப்போகும் செவ்விபார்த்து ஓவியம்போன்று இயற்றப்பட்ட நிலாமுற்றத்தின்*

கண் ஒருவரோடொருவர் குலாவி ஏறி அத்தோழிமாரை இரு கூறாக நிறுத்திப் பந்தடிக்கச்செய்து அப் பந்தாட்டத்தினைக் காண்டற்கு ஒருப்பட்டு நிற்குங் காலத்தே; என்க.

(வி - ம்.) கூறு - பங்கு. நெடுந்தகை : உதயணன். வீறு - வேறொன்றிற்கில்லாத அழகு. அத்தோழிமாரிடத்து அடுத்த அன்போடு என்க. அரசன் : உதயணன். அற்றம் - செவ்வி. நிலாவிரி முற்றம் - நிலாமுற்றம். உலாவு - உலாவுதல். காணிய - காண.

(வயந்தகன் உதயணனுக்குக் கூறுதல்)

கரு - உக : இப்பால்..............பரிந்தனர்

(பொ - ரை.) இனி, இவ்விடத்தே ஆருணியைக் கொன்று அவனது கொடுங்கோலை அகற்றிய வெற்றியுடைய படைகளையும் செங்கோலையும் உடைய உதயணமன்னன்பால் வயந்தகன் சென்று அவன் செவியின்கண் கூறுவான்—"வேந்தே! நீ விரும்புவதுண்டாயின் கேட்டருள்க! நின்னுடைய வாழ்க்கைத் துணைவியராகிய தேவிமார் இருவரும் பொன்னாலியன்ற வளையலையும் மூங்கில்போன்ற தோள்களையுமுடைய தத்தம் தோழிமாரோடு சென்று அத்தோழிமாரை இருகூறுபடுத்தி அவர், மாறுபட்டு முறை முறையாகப் பந்து விளையாடுதலைக் காண்டற்கு விரும்பினர்;" என்க.

(வி - ம்.) வெங்கோலகற்றிய என்றது ஆருணியைக் கொன்று அவனது கொடுங்கோலை அகற்றிய என்பதுபட நின்றது. சேதிபன் : உதயணன். மறைச் செய்தி யாதலின் செவியின்கண் உரைத்தல் வேண்டிற்று. தோழியர் - வாழ்க்கைத் துணைவியர் என்பதுபட நின்றது. ஊழூழ் - முறையே முறையே. பரிந்தனர் - விரும்பினர்.

(இதுவுமது)

உக - எ : அதனால்...............காண்கென

(பொ - ரை.) "ஆதலாலே அறத்தகுதியையுடைய பெருமானே! வடித்த வேலையுடைய பெரிய கையையுடைய வத்தவர் வேந்தனே! இன்று யாம் உலாப் போதல் அத்துணைச் சிறப்புடைத்தன்று, என்னலெனின் நின் மாண்பமைந்த குழையணிந்த தேவிமாரிருவரும் தம்முள் மாறுபட்டு இயற்றுகின்ற இப்பந்தாட்டம் காணத்தகுந்த அழகுடையதாகுமன்றோ? எனவே நீ இன்று உலாப் போதலைத் தவிர்ந்து பெண்ணுக மாறுவேடங் கொண்டு பிடியானையில் ஏறி ஆங்குச் சென்று, கண்டருளுக!" என்று கூறி நிற்ப; என்க.

(வி - ம்.) உலாப் போக்கு - உலாவப் போதல். அண்ணல், இறைவ இரண்டும் விளிகள். அது - அவ்விளையாட்டு. கரந்தனை - உன்னுருவை மறைத்து. பிணவுரு - பெண் வேடம்; "பெண்ணும்

பிணுவும் மக்கட்குரிய'' (தொல் - மரபு. சூ - கூக.) சென்றனே - சென்று.

(உதயணன் மறைந்து சென்று பந்தடி காணல்)

உஎ - கூஉ : நன்றென...............இருப்ப

(பொ - ரை.) அது கேட்ட உதயணன் நன்று! நன்று! என்று மகிழ்ந்து அப்பந்தாட்டத்தைக் காண்டற்குப் பெரிதும் விரும்பித் தான் திருவுலாப் போவான்போலக் காட்டிற்குப் படைகளை மட்டும் உலாவின்கட் போக்கித் தான் தனித்திருந்து செவ்வி தெரிந்து அவ்விடத்தே தன்னை யாவரும் அறியாதபடி பெண் வேடத்தில் மறைத்து அக்காவலன் ஒரு பிடியானையின் மேலேறி ஊர்திகளின்கண் அவ்வாடலைக் காணச் செல்லும் பல்வேறுவகைப்பட்ட மகளிர் குழாத்தினூடே புகுந்து மெல்ல அவரோடு சென்று தன் இல்லத்திற்கு அணியாகிய மகளிரின் கூட்டத்தோடு பொருந்தி இரா நிற்ப; என்க.

(வி - ம்.) நன்றென மகிழ்ந்து, அவ்வாட்டங் காண்டலை விரும்பி என்க. தான் திருவுலாப் போந்ததாக அம்மகளிர் கருதும் பொருட்டுப் படையை மட்டும் உலாப்போக்கினன் என்பது கருத்து. பெண் வேடத்தில் கரந்து என்க. காவலன் : உதயணன். காண்டக - அழகாக. பல்வகை மகளிர் என்றது ஆட்டங்காண வருகின்ற நகர் வாழ் நங்கையர் என்க. அவர் பிடி முதலிய ஊர்திகளில் வருதலால் இவனும் பிடியேறி அவருடன் சென்றான் என்பது கருத்து.

(இராசனை)

கூகூ - சக : இகலும்..............உலாஅய்

(பொ - ரை.) ஒருவரோடொருவர் மாறுபடுதற்குக் காரணமான பந்தடி காண முற்பட்ட வாசவதத்தையும் பதுமாபதியும் தத்தம் தோழியரைக் கூறுபடுத்தி எதிர் எதிர் நிறுத்தி அத் தோழிமாருடைய பந்தாட்டத்தினைக் கூர்ந்து காணுங்கால், தெய்வ மகள்போன்ற சாயலையும் பூங்கொடியை யொத்த நுண்ணிய இடையினையும், கொவ்வைக் கனிபோன்ற சிவந்த வாயினையும் தேன்மணங்கமழும் மாலையினையுமுடையவளும் மகத மன்னன் தங்கையுமாகிய பதுமாபதியினுடைய கட்டளையைப் பெறுதற்கு விரும்பி அவ்வரசியின் தோழியாகிய விரை மலர் மாலையணிந்த இராசனை என்பவள் வட்டமான குழையையணிந்த முகத்தினையுடைய அப்பதுமாபதியைக் கைகூப்பி வணங்கியவளாய்ப் பந்தாடு களத்தின்கண் சென்று, நறுமணங்கமழும் கூந்தலையும், ஆடை அணிகலன்களையும் ஆடுதற்கேற்பத் திருத்திக்கொண்டவளாய் அக்களத்தின்கண் திரியுமொரு தெய்வப் பெண் என்று கூறும்படி இயங்கி; என்க.

(வி - ம்) இகலுதல் - மாறுபடுதல். இருவரும் - வாசவதத்தையும் பதுமாபதியும். விகற்பித்தல் - இரு கூறு படுத்து நிறுத்துதல். அடி - பந்தடி. அணங்கு - தெய்வப்பெண். மகதவன் - தருசகமன்னன். பணி - கட்டளை. விராய் மலர் - ஒருவகை மலர். இராசனை - பதுமாபதியின் தோழி. முகத்தி : பதுமாபதி. பிறவும் என்றது ஆடைஅணிகலன்களை. குலாஅய் - திரிந்து.

(பந்து வண்ணனை)

௪௧ - ௪௯ : அறிவோர்...............பந்துகள்

(பொ - ரை.) தொழில் நுணுக்கம் அறிவோரால் இயற்றப்பட்டனவாகிய நெட்டியும் பஞ்சும் இடையிடையே வரிகின்ற உலண்டு நூலும் சேர்த்து அழுத்தி அவைவிற்றை அமைவாக உருட்டி மேலே மயிற்பீலியும் மயிருங்கொண்டு நன்றாகப் பின்னி அவற்றின்மேல் நூலாலும் கயிற்றாலும் நுண்ணிதாகச் சுற்றி அழகாகக் கையிற்கொண்டு அழுத்தி அதன்மேல் பாம்புத்தோல் போலவும் மயில் தோகையின் கண் போலவும் அழகிய நீர் துரை போலவும் தோன்றும்படி தைத்துப் பிடித்த நொய்ம்மையினை யுடைய பல்வேறு தொழில் திறம் அமைந்த பந்துகளுள் வைத்து; என்க.

(வி - ம்.) அறிவோர் - தொழில் நுணுக்கமறிவோர். கிடை - நெட்டி. பூளை - பூளைப்பூவாகிய பஞ்சு. உலண்டு - பட்டுநூல்; பட்டுமாம். அடைய - நெருங்க. அமைதியில் - அமைவாக. வாலிதின் - நன்றாக. வலந்து - பின்னி. பிடித்து - அழுத்தி. புரைய - போல. குத்தி - தைத்து. நொய்ம்மை - கனமின்மை.

(இராசனை பந்தடித்தல்)

௫௦ - ௬௯ : வேறு.............விடுத்தும்

(பொ - ரை.) வேறு வேறு தன்மையையுடைய கூறு கூறாகக் குவிக்கப்பட்டனவும் வெண்மையும் செம்மையும் கருமையும் உடையனவும் குளிர்ந்த காற்று வீசுமிடத்தும் தாமே எழுந்து ஆடுவனவும் காண்போர் கண்ணைக் கவரும் அழகோடே அவர் தம் நெஞ்சைவிட்டு அகலாதனவும் ஆகிய ஒளியுடைய ஏழு பந்துகளை அவ்விராசனை தேர்ந்து எடுத்துக் கொண்டவளாய் முன் எறிந்த ஒரு பந்து மற்றொரு பந்தால் புடைக்கப்பட்டு உயரச் சென்று மீண்டு வருங்கால், பின்னே பின்னே அடித்த பந்துகளோடே மாலைபோல வந்து சிறவா நிற்பவும், பந்தடி காண்பவரை நோக்கி "நீவிர் கண்ணிமையாமல் விழிப்புடனிருந்து எண்ணிக் கொள்ளுங்கோள்!" என்று கூறித் தனது பன்னிற மணிகளாற்புனைந்த மேகலையும் வளையலும் ஆரவாரிக்கும்படி பாடகமணிந்த காலின்மேல் அவைவிற்றை ஏற்றுக் கொண்டு விண்ணில் செல்லவிடுத்தும்; என்க.

(வி - ம்.) இயற்கைய - தன்மையுடையன. தண்வளி - குளிர்ந்த மென்காற்று. ஒற்றி - புடைத்து. எண்ணுமின் என்றது தன் மாற்றுரை நோக்கிக் கூறியபடியாம். சிலம்ப - ஆரவாரிப்ப. பாடகம் - ஒருவகைக் காலணி. பரிந்து - ஏற்றுக்கொண்டு.

(இதுவுமது)

சுo - சு : சூடகம்...............அகல

(பொ - ரை.) சூடகமணிந்த தன் முன் கையாலே சுழன்று சுழன்று மாறுபட அடித்தும், அடித்த பந்துகளை அழகிய கையால் தடுத்தும், மீண்டும் தட்டியும் அவற்றைத் தனித்தனியாகச் செலுத்தியும் பந்தடித்தற்குரிய முன்னுரை ஏதும் மொழியாமல் அவ்விராசனை தன்னுடைய பல்வேறு அணிகலன்களும் ஒலிக்கும்படி இடையறாமல் நன்கு ஆயிரங்கை அடித்து நிறுத்தி அவ்விடத்தினின்றும் அகலாநிற்ப; என்க.

(வி - ம்.) அங்கை - உள்ளங்கையுமாம். மறித்து - தடுத்து. பாயிரம் - முன்னுரை. ஆயிரங்கை - ஆயிரம் முறை. அவள் : அவ்விராசனை.

(காஞ்சன மாலையின் பந்தடி)

சுரு - எரு : அன்னம்..............அகல

(பொ - ரை.) இராசனை அகன்ற பின்னர் அன்னம் போன்ற மெல்லிய நடையினையுடைய வாசவதத்தையால் பெரிதும் விரும்பப்பட்டவளும் அவள் கண்ணின் மணிபோன்ற தோழியும் ஒள்ளிய நெற்றியினையுடைய பாவை போல்பவளும் ஆகிய காஞ்சனமாலை என்பவள் களத்திற்சென்று பந்துகளை எடுத்துக்கொண்டு கையிற்பிடித்த அழகிய பந்தினை அடித்து வானத்தே ஏற்றியும், அடித்த பந்தால் முன்பு அடித்துவிட்ட பந்துகளைப் பின்னரும் அடித்து விண்ணிற் செலுத்தியும் தனது கூந்தலின்மேல் வீழவருமவற்றைத் தனது விரலால் அடித்தும் ஒளியுடைய தனது மணிமேகலையால் நேர்முகமாக அடித்தும் பந்துகளை மாலையிலே சேர்த்தும் இரு கைக்குள்ளும் செலுத்தியும் வீழும் பந்துகளின் இடைநின்று அவற்றைத் திருத்தியும் மீண்டும் வானத்தே போக்கியும் இவ்வாறாக அக்காஞ்சனமாலை தன் மூங்கில்போன்ற பருத்து வளைந்த கைகளினிடப்பட்ட சங்க வளையல்கள் ஆரவாரிக்கும்படி ஆயிரத்தைந்நூறு கை அடித்துக் களத்தினின்றும் சென்ற பின்னர்; என்க.

(வி - ம்.) அவந்திகை : வாசவதத்தை. உவந்தவள் - விரும்பப்பட்டவள். பாவையாகிய காஞ்சன மாலை என்க. விடுத்தவை - முன்பு அடித்துவிடப்பட்டவை. கண்ணி - தலைமாலை. வெள்வளை - சங்கு வளையல்.

(அயிராபதியின் பந்தடி)

எசு - அச : செயிர்...........சுழன்றும்

(பொ - ரை.) இனி, குற்றந்தீர்ந்த பதுமாபதியினுடைய செவிலித் தாயின் மகளாகிய அயிராபதி என்னும் அழகிய மூங்கில் போன்ற தோளையுடையவளும் மான்போன்ற பார்வையினையுடையவளுமாகிய கூன்மகள் அக்காஞ்சனமாலையின் முன்னே சென்று அப்பந்துகளைத் தானே நேராக வாங்கித் தனித் தனியாக நான்கு திசைகளிலும் நான்கு மூலைகளிலும் காற்றினும் விரைவாகச் சுழன்று திரிவாளாய் அடித்த கையாலே தட்டியும் முன்பக்கத்தே குதித்தும் விரும்பி உள்ளங்கையால் தாக்கியும் புறங்கையால் செலுத்தியும் தன் தோள் மேல் செலுத்தியும் மேலே மேலே சுழன்றடித்தும்; என்க.

(வி - ம்.) செயிர் - குற்றம். பதுமை: பதுமாபதி. அயிராபதி: பதுமாபதியின் தோழி. நான்கு கோணமும் - தென் கிழக்கு, தென் மேற்கு, வட மேற்கு, வட கிழக்கு ஆகிய நான்கு மூலைகளும். புரியா - விரும்பி. அகங்கை - உள்ளங்கை. இஃது அங்கை எனவும் வரும்.

(இதுவுமது)

அரு - கூக : கூன்...............விடலும்

(பொ - ரை.) அப்பந்துகளைத் தன் கூனலின் மேல் புரளச் செய்தும், முலைகளினிடையே படுவித்தும், திருத்தமுறப் பாடியும் தன்மேலே கிடக்கச் செய்தும் நோக்குவார் மகிழும் பொருட்டு இங்ஙனம் பந்தாடுங் காலத்திலேயே, மலருடைய தனது கூந்தலை முடியிட்டும், பட்டமணிந்த நெற்றியின்கண் தீட்டிய பொட்டிலே பந்தினை ஏற்றும், மீண்டுவரும் அப்பந்தினைத் தன் புறங்கையால் தடுத்து அடித்தும் இங்ஙனமாகத் தான் நினைத்தபடியே முற்பட்டு இரண்டாயிரங் கை நன்கு அடித்துப் பின்னர் அவள் அப்பந்தாட்டத்தினைக் கைவிடாநிற்ப; என்க.

(வி - ம்.) புரட்டி - புரளச் செய்து. குயம் - முலை. வாக்கு - திருத்தம். முன்னிய வகை - நினைத்த வகை. அவள்: அயிராபதி.

(விச்சுவலேகையின் பந்தடி)

கூஉ - கoச : பேசிய...............எற்றியும்

(பொ - ரை.) முன்பு கூறப்பட்ட முறைப்படியே பழிப்பில்லாத சிறந்த அழகினையுடைய வாசவதத்தைக்கு வலத்தோள் போன்றவளும் அச்சமில்லாதவளும் அழகுடையவளும் விச்சுவலேகை என்றிடப்பட்ட பெயரையுடையவளும் பொன்வளையலணிந்தவளும் ஆகிய ஒரு குறளி களத்தில் தோன்றிப் பந்தாடுதலிலே மிகவும் வல்லவளாகிய யான் இக்களத்தில் நிற்கும்

பொழுதே இரண்டாயிரங் கையடித்த இக் கூனியைப் புகழ்தல் பொருந்தாது! என்று கூறித் தனது ஆடையை வரிந்து கட்டிக் கொண்டு, பந்தடிக்குங் கோலைக் கையுள் நன்கு பற்றியவளாய் அப்பந்தடிகோல் வளையும் இடத்தை அறியும் பொருட்டு அதன் கண் தட்டிப் பந்தினை நெருங்கி அக்கோலால் அவற்றை ஒன்றொன்றாக எழுப்பி வரிசையாக அடியிட்டுக் குதித்துப் பறப்பாள் போல அப்பந்துகளைக் கையில் பற்றிக்கொண்டு அப்பந்துகள் இந்திர வில்போல வானத்திலே தோன்றும்படி தன் புருவங்கள் தம்மிடத்தினின்றும் நெற்றியிலேறி வளையாநிற்ப அடித்தும்; என்க.

(வி - ம்.) ஏசா - பழிக்கப்படாத. அச்சம் - ஈண்டுக் களத்தில் நின்று ஆடும்பொழுது உண்டாகும் அச்சம். காரிகை - அழகு. நாமம் - பெயர். குறளி - குறுகிய உருவமுடையவள். யான் என்றது பந்தாடுதலில் வல்லவளாகிய யான் என்பதுபட நின்றது. கூனி என்றது வல்லவளல்லளாகிய கூனியை என்பதுபட நின்றது. ஏலாது - பொருந்தாது. சேலம் - சேலை; ஆடை. கருவிக் கோல் - பந்தடிக்குங் கோல். முரியுங் காலை - வளையுமிடத்தை. முரிதல் - வளைதல். கால் - இடம். ஒன்றொன்றாக எழுப்பி என்க. பத்தி - வரிசை. பல் வேறு நிறமுடைய பந்துகளை எழுப்பி அவை வானிற் செல்லுங்கால் இந்திரவிற்போலத் தோன்றும் படி செய்தனள் என்பது கருத்து.

(இதுவுமது)

கoச - கரு : முடக்கு................விட்லும்

(பொ - ரை.) விரல் முடக்கிப் புறங்கையாற் புடைத்தும் விரல் பரப்பி அங்கையாலடித்தும் ஒற்றை விரலில் தடுத்தும் மீண்டும் எதிரே அடித்தும் குருவிகள் சிதறிப் பறப்பனபோல விண் அதிரச் சிதறிச் செல்லும்படி செலுத்தியும் அருவி பரந்து வீழுமாறு போல வளைந்து வீழ வீழ்த்தியும் ஒரு பக்கத்து அடித்த பந்தை மற்றொரு பக்கத்து அடித்த பந்து சென்று தாக்கும்படி அத்துணை விரைவாக இரு பக்கங்களினும் பொருந்தி அடிப்பாளாய்ப் பாம்பு வளைந்து வளைந்து இயங்குமாறு போலே உயர்ந்து வளைந்து ஓடச் செலுத்தியும் அவையிற்றைக் காம்பினின்றும் இலைகள் நிரல்பட உதிருமாறு போலே அவ்விடத்தே நிரலாக வீழும்படி செய்தும், இவ்வாறு அவள் தான் கருதிய முறையால் முற்பட இடையறவின்றி இரண்டாயிரத்தைந்நூறு கை அடித்தபின்னர் ஆட்டத்தைக் கைவிட்டுப் போகாநிற்ப; என்க.

(வி - ம்.) முடக்கு விரல் எற்றியும் என்றது முடக்கிய விரலையுடைய புறங்கையால் புடைத்தும் என்றவாறு. தனித்து: தனியான. குருவிக் கவர்ச்சியின் - குருவிகள் பறக்கும்பொழுது பல திசையினும் சிதறிப் பறப்பதுபோல என்க. 'சிவ்வென்று' பாய்தலின் அதிரப்

போக்கி என்றார். ஒரு பக்கத்திலடித்த பந்தும் அப்பொழுதே மறு பக்கத்திற் பாய்ந்தடித்த பந்தும் வானவெளியில் மோதி மீளும்படி அடித்தும் என்க. பாம்பொழுக்கு - பாம்புபோல வளைந்து செல்லும் செலவு. முன் - முற்பட்டு. அவள் : விச்சுவலேகை.

(ஆரியையின் பந்தடி)

கககச - உஉ : சீர்.............போல்

(பொ - ரை.) பெரும்புகழையுடைய பதுமாபதிக்கு இவள் நெஞ்சம் போன்றவள் என்று கூறப்படும் தோழியும் கார்காலத்தில் களிப்புற்று ஆடும் தோகைமயில் போன்றவளுமாகிய ஆரியை என்பாள் களத்திற் புகுந்து நுணுகிய கொடிபோலும் தனது இடை நோகும்படி நடந்து நறுமணங்கமழும் தனது கூந்தலை வகுத்து முடித்தும் சூடகமென்னும் கையணியை ஏறச் செறித்தும் பாடகமென்னும் காலணியைச் சீர்திருத்தியிட்டும் கூத்தியல் மகளிர்போல நன்கு உலாவியும் தன் இரு கைகளும் பந்துகளை மாறி மாறி அடியாநிற்ப வானினும் நிலத்தினும் ஏறியும் இறங்கியும் வீழாநின்ற பறவைபோல ஓரிடத்தே நில்லாது வானிலெழுந்து வீழ்கின்ற பந்தோடு பறந்து செல்வாள் போல ; என்க.

(வி - ம்.) சீர் - பெரும்புகழ். பதுமை : பதுமாபதி. சிந்தை - மனம். காரியை மயில் - கார்காலம் பொருந்தப் பெற்றுக் களிப்புற்ற மயில். நாடக மகளிர் - கூத்தாடு மகளிர்.

(இதுவுமது)

கஉந - நஉ : கருதரும்................இடலும்

(பொ - ரை.) நினைத்தற்கரிய நெளிவுகளுடனே புருவமும் கண்களும் வரிவரியான வளையலையணிந்த கைகளும் நெஞ்சமும் ஓடாநிற்பவும் அழகமைந்த மேகலையணி ஆரவாரத்தோடு அசையாநிற்பவும் இளமுலைகள் துளும்பா நிற்பவும் கூந்தல் அவிழாநிற்பவும் அழகிய மலர்மாலையோடே அணிகலங்கள் சிதறாநிற்பவும் காண்போர் இவள் இருந்தனளோ? நின்றனளோ? என்று அறியாராகும்படி பரவிய பற்பல கைகளை உடைய உருவம் படைத்தவள் போன்று காணப்பட்டு விரைந்து சுழன்று அடித்துப் திறலுண்டாகத் தடுத்தும் வளையும் தொழிலோடே முறைமையாக மூவாயிரங் கையாக அடித்துயர்த்திப் பந்தினை நிலத்திலே இடுதலும் ; என்க.

(வி - ம்.) முரிவு - நெளிவு. அரி - அழகு. வருமுலை : வினைத்தொகை. விரைந்து சுழன்றடித்தலின் காண்போர்க்கு நான்கு திசையினும் பரவிய பற்பல கைகளுடையாள் போன்று தோன்றினள் என்பது கருத்து.

(வாசவதத்தை தன் தோழியரை நோக்கல்)

கங-ங - சு : வரி.............நோக்க

(பொ - ரை.) ஆரியை மூவாயிரங்கை அடித்து நிறுத்திய பின்னர் அக்களத்தின்கண் ஆடுதற்குத் துணிந்துவந்து நெடிய வரிகளமைந்த பந்தினை ஏற்றுக்கொள்ளுவோர் யாருமின்றி ஆடல் நின்றதாக, அப்பொழுது போர் வருதற்குக் காரணமான வாளை யொத்த பெரிய கண்ணையுடைய வாசவதத்தை திங்கட்கோள் போன்ற தன் முகத்தை வளைத்துத் தன் தோழிமார் குழுவினை நோக்காநிற்றலால்; என்க.

(வி - ம்.) நெடுவரிபந்து என மாற்றுக. நெடிதாக வரிந்த பந்து என்க. எதிர் கொள்ளுநர் - ஏற்றுக் கொள்வோர். ஏர்: உவமஉருபு. மதிக்கோள் ஏர்முகம் என மாறுக. மதியாகிய கோள் என்க. தோழி மாரை நோக்க என்க.

(கோசல நாட்டின் பெருமை)

கஙஎ - சங : கடையோர்.............கோமான்

(பொ - ரை.) கடையாய மாந்தர் போன்று அவாவினாலே உழலாததும், தம் சுற்றத்தார்க்குத் தம்பால் அமைந்த வளத்தைப் பகிர்ந்தளிக்கும் இடையாய மாந்தர் போன்று தன்கட் டோன்றும் செல்வத்தைத் தன்பால் வாழும் மக்கட்கு பகிர்ந்தளிப்பதும், தன்னை நாடிவருபவர் யாவரேயாயினும் அமையாத சிறப்போடு தானமும் வழங்கும் பேரறத்தின்கண் பிறழ்தலின்றி உலகெல்லாம் தன்புகழ் பரவப்பட்ட கெடாத செல்வத்தினையுடைய கோசலம் என்னும் வளநாட்டு மன்னனுடைய; என்க.

(வி - ம்.) கடையோர் - கீழ்மக்கள். இடையோர் - இடையாய மாந்தர். இடையோரியல்பு என்றது தம் சுற்றத்தாரைப் பேணுதலை. எனவே கோசல நாடு தன்கண் தோன்றிய உயிரினங்களை நன்கு பேணும் இயல்புடையது என்றாராயிற்று. இல்லதுடையோர் - வறுமை யுடையோர். எனவே தலையாய மாந்தர்போல வறியோரை நாடி அவர்க்குரிய உதவியைச் செய்யும் நாடு என்க. தானப் பெரும்பயன் - தானமாகிய பேரறம். பயம் - ஈண்டு அறம். என்னை? "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனு மது" என்பவாக லின். ஓசை - புகழ். உலவா - கெடாத.

(கோசலத்தரசன் மகள் வண்ணனை)

கசங - ருக : பிழையா............வேயே

(பொ - ரை.) சொல் திறம்பாதவளும் தேவிமார்க்கெல் லாம் தலைவியாகிய கோப்பெருந்தேவியும் அழகால் திருமகளை ஒத்தவளும் கற்புடையவளும் இனிய குயிலின் குரல்போன்ற இனிய மொழியையுடையவளும் அறலையும் சுருளையும் உடைய

கூந்தலையுடையவளும் ஆகிய வசுந்தரியின் மகளும் மான் அன்னம் மயில் பெரிய மலைத்தேன் பவளம் தெளிந்த கடலிற் றோன்றும் முத்து கயல்மீன் காந்தள்முகை முகில் போர் செய்யும் வில் பாம்பின் படம் பொன்னாலியன்ற உடுக்கை படையிற் பயின்ற யானைக் கை குரும்பை ஒளியுடைய திங்கள்மண்டிலம் மூங்கில் என்னும் இப் பொருள்கள்; என்க.

(வி - ம்.) கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை என்பதுபற்றிக் கோமாற் பிழையாத் தேவியர் என்றார். தேவியர்க்கெல்லாம் தேவி கோப்பெருந்தேவி. திரு - திருமகள். வரி - அறல். குழற் கூந்தல் - குழலுதலையுடைய கூந்தல் என்க. வசுந்தரி - அத் தேவியின் பெயர். ஈண்டுக் கூறப்பட்ட மானே..............வேயே என்னும் பொருள்கள் அக் கோசலத்தரசன் மகள் உறுப்புகட்கு நிரலே உவமையாகக் கூறப் பட்டன. அவை மேலே கூறப்படும். நித்திலம் - முத்து. கயல் - ஒருவகை மீன். காந்தள் : அதன் மலர்க்கு ஆகுபெயர். புயல் - முகில். பை - பாம்பின் படம். துடி - உடுக்கை. குரும்பை - தெங்கிளங்காய். பனையின் குரும்பையுமாம். மதி - முழுமதி என்பது தோன்றக் கதிர்மதி என்றார். வேய் - மூங்கில்.

(இதுவுமது)

கருஉ - சுo : நோக்கினும்............திகழ

(பொ - ரை.) தன்னுடைய நோக்கத்தாலும் நடையினாலும் சிறந்த நிறத்தால் அழகுற்ற சாயல் வகையாலும் சால்புமிக்க மொழியாலும் குற்றமற்ற வாயினாலும் அழகுண்டாக நிரல்பட்ட பல்லாலும் கண்ணாலும் மெல்லிய விரல் வகையினாலும் நறிய மெல்லிய கூந்தலாலும் செறிந்த நுண்ணிய புருவத்து மயி ரொழுக்காலும் காவல் வழுவாத அல்குலாலும் மெல்லிய இடையி னாலும் நல்ல அழகிய தொடையினாலும் குற்றமற்ற முலையினாலும் முகத்தாலும் தோளாலும் தோல்வியுறும்படி வென்றவளும் என்க.

(வி - ம்.) நோக்கிற்கு மானும் நடைக்கு அன்னமும் சாயலுக்கு மயிலும் மொழிக்கு மலைத்தேனும் வாய்க்குப் பவளமும் பல்லிற்கு நித்திலமும் கண்ணுக்குக் கயலும் விரலுக்குக் காந்தட்பூவும் கூந்தலுக்கு முகிலும் புருவத்திற்கு வில்லும் அல்குலுக்குப் பையும் இடைக்குத் துடியும் தொடைக்கு யானைக் கையும் முலைக்குக் குரும்பையும் முகத் திற்குக் கதிர்மதியும் தோளுக்கு மூங்கிலும் உவமைகள் என்க. இஃது முறை நிரனிறை அணி. ஒதுக்கு - நடை. கேழ் - நிறம். ஆசு - குற்றம். நிரைத்த - நிரல்பட்ட. காவல் இழுக்கா அல்குற்றடம் என்க. குறங்கு - தொடை. மற்றவை - முன் கூறப்பட்ட மான் முதலியவை.

(இதுவுமது)

கசுo - எ : ஒளி.............இருந்தோள்

(பொ - ரை.) ஒளி திகழும்படி தன் அழகுக்குப் பொருந் திய தன் காலணியாகிய அழகிய தவளைக் கிண்கிணி தன்னுடைய

அழகை எடுத்துக் கூறுதலாலே இவ்வுலக முழுதும் புகழ்ந்தாலும் புகழுதல் முற்றுப்பெறுமைக்குக் காரணமான ஒப்பற்ற அழகோடே திருமகளைக் கண்ணுற் கண்டாற்போன்ற அழகுமிகா நின்ற கண்ணையுடையவளும் கோசலமன்னன் மகளும் ஆகிய மானனீகை என்பாள் மலரணிந்த மணமுடைய சுரிந்த குழலை யுடையவளும் மாட்சிமையுடைய அணிகலன்கள் அணிந்தவளும் ஆகிய ஒரு தோழிபோல அவ்வரண்மனைக்கண் ஒரு காரணத் தினாலே அவ் வாசவதத்தையின்பால் இருந்தவள்; என்க.

(வி - ம்.) தவளைக் கிண்கிணி - தவளைவாய் போன்ற வாயை யுடைய கிண்கிணி. உறைஇ - உறைத்து; உறைத்தலால் என்க. திரு - திருமகள். உரு - அழகு. அரசன் மகள் தோழியுள் ஒருத்தி என்று ஒரு காரணத்தால் வாசவதத்தையின்பால் இருந்தவள் என்க. காரணம் பின்னர் உணரப்படும். அவள் : வாசவதத்தை.

(மானனீகை பந்தடித்தல்)

கசுஅ - எசு : பூங்குழை..............ஆக்கி

(பொ - ரை.) அழகிய குழைபணிந்த வாசவதத்தை அவ் வாட்டத்தின்கண் தோல்வியுற்றதனைப் பொறுக்கமாட்டாத நெஞ்சினையுடையளாய் எழுந்து அக் கோப்பெருந்தேவியைப் பணிந்து களத்திலே சென்று அதுகாறும் ஆடிய அம் மகளிரின் ஆட்டத்தை இகழ்ந்து நகைத்து அத் தோழிமாரெதிரே வந்து நின்று சதி வகையினால் பந்தாடுகின்ற இலக்கணம் பலவற்றைப் பேசி வேல்போலும் கண்ணையுடைய அம்மானனீகை அக் களத் தின்கண்ணே இளம்பிறையினது கோடுகள்போலத் தன் தொடை இரண்டு பக்கங்களிலும் விளங்கி அழகு மிளிரும்படி இருந்து ஒன்றற்கொன்று முரண்பட்டுத் தோன்றுநின்ற அழகினையுடைய திரண்ட ஒள்ளிய இருபத்தொரு பந்துகளை ஆராய்ந்து எடுத்து உயர்ந்த பந்தாடல் முறைகளுள் இம்முறை ஒன்றுதலால் தான் நடுநின்று அப் பந்துகளைப் பகிர்ந்து தன்னைச்சூழ வட்டமாக வைத்து; என்க.

(வி - ம்.) பூங்குழை : வாசவதத்தை. தேவி : வாசவதத்தை. மடந்தையர் - முன்னர் ஆடிய மகளிர். நகையா - நகைத்து. வரசதி (?) சதி - தாள ஒற்று. வாசந்திவகை என்றும் பாடம். முரண்டு - முரண்; மாறுபாடு. பந்தாடல் முறைகளுள் இஃது ஒன்றுதலால் என்க. சமம் - நடு. பாங்குற - அழகுற. பகுந்து - வகுத்து. மண்டலம் - வட்டம்.

(இதுவுமது)

களகூ - அஎ : வட்டணை..............கண்ணும்

(பொ - ரை.) தன்முன்னே அவ்வட்டத்தின்கண் பந்தினைக் கைக்கொண்டு வானத்தே எறிந்து மீட்டும் அவற்றைப் பிடித்து

நிலத்தின்கண் குறிப்பிட்ட ஓரிடத்தே அடித்தடித்து எழுப்பி மீண்டுவரும் அப் பந்துகளைப் புறங்கையால் தடுத்துத் தடுத்து அடித்து அவை நிரலாக வானில் எழுந்தோறும் எழுந்தோறும் விருப்பமுடைய அப் பெருந்தேவியர் கண்டு உவக்கும்படி நிலமகளாகிய தோழியைவிட்டு அகன்று போவாள்போல மெல்ல எழுகின்றவள், தான் செய்யும் தொழிலுக்கு ஈடாகத் தனது கையும் காலும் உடம்பும் பொருந்தாநிற்ப எல்லாக் கலைகளும் கூடிய திங்கள்போன்ற தன் முகத்தின்கண் புருவங்களும் கண்களும்; என்க.

(வி - ம்.) வட்டணை - வட்டம். பூ - பூமி. மறித்து - தடுத்து. காம தேவியர் - விருப்பமுடைய தேவிமார். பூமிதேவி - நிலமகள். கூடுமதி : வினைத்தொகை. அஅ ஆம் எண்ணில் நிற்றற்குரிய ஓரடி முழுதும் சிதைவுற்றது.

(இதுவுமது)

கஅஅ — கூசு : ஆடல்...............இருப்பவும்

(பொ - ரை.) அத் தோழிமாருள் வைத்துக் கூத்தாடும் மகளிர் அம் மானனீகையின் அபிநயங்களைக் கண்டு வியவாநிற்பவும் பாடும் மகளிர்கள் நூல்களிற் கூறப்பட்ட தாளத்தினைத் தவறாமுறைமையினாலே கையால் அளவாநிற்பவும், பொருந்திய அவளுடைய இயக்கத்தின்கண் இரண்டு அடிகளையும் பெயர்க்கின்ற அழகினை இசைக்கருவிக் குழுவினர் கொண்டாடாநிற்பவும் தமது நெஞ்சத்தினின்றும் அகலாத பல்வேறு வகைப்பட்ட செயல்திறங்களைக் கண்டு அவற்றைப் பந்தாடும் ஏனைமகளிர் தங்களுக்குள் பாராட்டி மகிழாநிற்பவும் ஈண்டுக் கூறிய முறைமையில் யாதொன்றனையும் நன்கு காணமாட்டாராய்க் கோப்பெருந்தேவியர் இருவரும் திகைத்திராநிற்பவும்; என்க.

(வி - ம்.) ஆடல் மகளிர் - கூத்தாடு மகளிர். இலயம் - தாளம். பாணி - கை. கருவிக் கூற்றோர் - இசைக் கருவிக் குழுவினர். இருவரும் - வாசவதத்தையும் பதுமாபதியும்.

(இதுவுமது)

ககூள — உ0ரு : காந்தள்...............கொள

(பொ - ரை.) காந்தள் அரும்பினை மிகவும் தோற்பிக்கும் தனது மெல்லிய விரலால் பந்தினை ஏந்தி எடுத்து எறியுங்கால் தன் முன் கையினின்றும் பாய்ந்த அப் பந்துகள் நிலத்தினும் விசும்பினுமாக உயர்ந்து சூறைக் காற்றினிடையே சுழலாநின்ற இலைகள்போல மாறுமாறாக எழுந்து வீழவும் சுழன்று வானின்கண் ஏறுவனவும் இறங்குவனவும் நிற்பனவுமாய் ஒன்றனோடு ஒன்று மாறுபட்ட அழகையும் முக்கூறுபட்ட நிறத்தையுமுடைய

அப் பந்துகளை அவளது அழகு பொலிகின்ற வளையலணிந்த கைகள் இரண்டேயாகவும் அவை தேர்ச் சக்கரம்போன்று சுழன்று சுழன்று தொழில் செய்யாநிற்ப; என்க.

(வி - ம்.) எறிவுழி - எறியுங்கால். சூறைவளி - சுழல்காற்று. வானின்கண் எறியப்பட்ட பந்துகள் நிலத்தில் வீழா வண்ணம் தடுத்து வானத்தே மீண்டும் ஏற்றிவிடுதலின் ஆகாயம் நிற்பன என்றார். மும்மைய - ஏழு ஏழாய் மூன்று கூறுபட்டவை எனினுமாம். ஏர் - அழகு. காலாழி : இருபெயரொட்டு.

(இதுவுமது)

உ௦சு - கஙு : ஓடா............காணார்

(பொ - ரை.) ஓடியும் நடந்தும் ஒசிந்தும் ஒல்கியும் பாடியும் தாளத்திற்கேற்ப விடும் உயிர்ப்பினளாய்க் கண்ணின் செயலாலும் கையின் செயலாலும் இப்பொழுது இவளைத் தேவர்கள் காணினும் வியந்து பெரிதும் விரும்புவர் என்று கண்டோர் வியக்கவும் பாடகத்தின் ஒலியும் சூடகத்தின் ஒலியும் ஆடாநின்ற பந்தின் ஒலியும் ஆங்குள்ளோர் செவியால் கேட்பதல்லது அழகிய அப்பந்துகள் எழுந்தோறும் தானும் எழுதலாலே அவளுடைய கைகளையும் கால்களையும் உடம்பினையும் காண மாட்டாராய்; என்க.

(வி - ம்.) வீழ்வர் - விரும்புவர். பாடகம் - காலணி. சூடகம் - கையணி. ஐய - அழகிய. மெய் - உடம்பு.

(இதுவுமது)

உகச - உரு : மண்ணினள்............தாமம்

(பொ - ரை.) இவள் மண்ணிடத்தாளோ? விண்ணிடத்தாளோ? என்று அறியாமல் ஒள்ளிய நுதலையுடைய இம்மானனீகை இருக்குமிடத்தை அறியுந்தன்மைதானும் நமக்கு அரிதாயிற்று எனவும் தனித் தனியே மயங்கி இது மாயமோ? என்றும் இது மாயமேயன்றி வேறொன்றில்லை! என்றும் அத்தோழிமார் கூறி வியத்தலை அம்மானனீகை அறிந்தவளாய் ஞேரேலென அங்ஙனம் கூறிய மகளிரெல்லாம் காணும்படி சிலவாகிய வரி பரந்த கண்ணையுடைய அம்மானனீகை மெல்ல வளைந்து செவ்விய தளிர்போலச் சிவந்த தன் கையால் பந்துகளை ஏந்தி வருந்திய இவளுக்கு மிருதியான கைகளைக் காணமாட்டாராய் இவளை இகழ்வர் ஆதலின் இவள் எள்ளப்படும் என்று இரங்குவனபோல தாமும் அவள் கைகள் போன்று பந்துகளை அடிப்பனவாய் உகைத்து எழுகின்ற அப்பந்துகளோடே எழுகின்றனபோல மலர்மாலைகள் எழுந்து சுழன்றன; என்க.

(வி - ம்.) மாயம் - இந்திர சாலம் முதலியன. ஆயம் - தோழிமார் கூட்டம். சில்லரிக் கண்ணி : வாசவதத்தை. முரியா - வளைந்து. பொருவ : உவம உருபு. கந்துகம் - பந்து. கசிந்த - வருந்திய. கோதை : மானனீகை. மிகைக்கை - மிகுதியாகிய கை. மிகைக்கை காணுராய் இகழ்வர் ஆதலின் அவள் நகைப்படுவள் என்று இரங்கித் தாமும் கைபோலத் தோன்றிப் பந்தினுடன் எழுவனவாய்த் தாமங்கள் சுழன்றன என்று இயைபு காண்க. உகைத்தெழு பந்து - உகைக்கப் பட்டு எழுபந்து.

(இதுவுமது)

உ௨௫ - ௩௦ : குழன்றது............அடித்தும்

(பொ - ரை.) அவளுடைய கூந்தல் சுருண்டது. உடல் வெதும்பியது. மேகலே அவிழ்ந்தது. குறுவியர்வு எழுந்தது. சந்தனம் வழிந்தது. பெரிய கண்கள் அங்குமிங்கும் ஓடின. புருவங்கள் வளைந்து கூடின. இங்ஙனமாக அம்மானனீகை அப் பந்துகளை உள்ளங்கையில் ஏற்றும் புறங்கையால் தட்டியும் அவை தடையுறும்படி தன் உடலை வளைத்து விரும்பி அடித்தும்; என்க.

(வி - ம்.) குழன்றது - சுருண்டது. அழன்றது - வெதும்பியது. குறுவியர் - சிறிய வியர்வை நீர்த்துளி. சாந்தம் - சந்தனம். அங்கை - உள்ளங்கை. தங்குற - தடையுற. தாள் உடலை வளைத்து அடித்தும் என்க. புரிந்து - விரும்பி.

(இதுவுமது)

உ௩௧ - ௪௦ : இடை............பாடியும்

(பொ - ரை.) இடையிடையே யாவர்க்கும் தெரியும்படி இரு கால்களையும் மடித்தும் அரவின் படம் போன்ற அழகிய அல்குலின்கண் ஆடையை முறையாகத் திருத்தியும், முத்துப் போன்ற சிறிய வியர்வைத் துளிகளை விரலாகத் துடைத்தும் கையிற்பற்றிய பந்தினைச் சுற்றுகின்ற முறைகளை அவையோர்க் குக் கூறியும் தான் அணிந்துள்ள தொடையும் கண்ணியுமாகிய மாலைகளைப் பன்முறையும் திருத்தியும் அடிமுதலாக முடியீறாக உள்ள அணிகலன் பலவற்றையும் திருத்தியும் தன்மேற் படிந்த வண்டுகளை எழுப்பியும் கிடந்த பந்துகளை எண்ணியும் தேன் துளும்பும் மலர்மாலைகளைத் திறம்படத் தொடுத்தும் பந்தின் வரவினை நோக்கியும் தாளம் உண்டாகக் கைகளை நொடித்தும் கண் சுருக்கிப் பந்துகளை அடித்தும் கம்பிதமான இசைகளைப் பாடியும்; என்க.

(வி - ம்.) மானனீகை பந்தடிக்கும்பொழுது இடையிடையே கால் மடித்தல் முதலிய தொழில் பலவற்றையும் செய்துகொண்

டிருந்தாள், என்பது கருத்து. பாணிவர - தாளமுண்டாக. சிப்புளித்தல் - கண்ணைச் சுருக்கிப் பார்த்தல். கம்பிதம் - அசைவுள்ள பாட்டு.

(இதுவுமது)

உசக - ரு : ஆழி............ஏற்றலும்

(பொ - ரை.) பந்துகளைச் சக்கரம் போன்று சுழல வீசியும் இடையிடையே தோழிமாரோடு பேசியும் பற்பல கதியில் பந்துகளைச் செலுத்தியும் அழகிய தளிர்மாலையணிந்த அவந்திகையாகிய எம்பெருமாட்டி வெல்க! என்றும் 'வாழ்க!' என வாழ்த்தியும் பசிய தொடியணிந்த அம்மானனிகை இவ்வாறு பற்பல முறைகளாலே இடையறவின்றி எண்ணாயிரங் கையாக ஏற்றினள். அங்ஙனம் ஏற்றியபொழுது; என்க.

(வி - ம்.) ஆழி - சக்கரம். சாரி - கதி. எம்பெருமாட்டி வாழி என வாழ்த்தியும் என்க. அவந்திகை : வாசவதத்தை. மாதர் : மானனீகை. எண்ணாயிரங் கை - எண்ணாயிர முறை.

(வாசவதத்தையின் எண்ணம்)

உசசு - சு : கண்ணார்...........அளவில்

(பொ - ரை.) மானனீகையின் பேரெழிலையும் ஆட்டத் திறனையும் நேரிற்கண்ட கோப்பெருந்தேவி வாசவதத்தை உலகங் காவலனாகிய எம்பெருமான் காண்போர் கண்ணில் நிறைந்த பேரழகுடைய இம்மானனீகையின் திங்கள் போன்ற முகத்தை என்றேனும் காண்பானாயின் காமுற்று நெஞ்சு கலங்குதல்கூடும் என்றும், இவளை அவன் காணவிடுதல் தீமையாகும் என்றும் தன்னெஞ்சின்கண் நினைத்து நின்ற காலத்தே என்க.

(வி - ம்.) கண்ணார் மாதர் - காண்போர் கண்ணிறைந்த அழகு. மன்னன் : உதயணன். தேவி : வாசவதத்தை. நினைஇ - நினைத்து.

(உதயணன் மானனிகையைக் கண்டு காதலித்தல்)

உசசு - ருஎ : சென்று...........போலும்

(பொ - ரை.) பந்தாடு களத்தின்கண் இடையறாது எண்ணாயிரங்கை பந்தடித்துச் சென்ற அம்மானனீகையின் மதிமுகத்தே பொருந்திய தன்மையோடே அவளுடைய கண்கள் தம்முள் ஒன்றை ஒன்று காணாமல் ஓடி மறைவனபோன்றும், தம்முள் களிப்புற்றன போலவும் அதுவேயுமன்றி ஒன்றனை ஒன்று அழைப்பன போலவும் காணப்பட்டு, வேல்போன்று விளங்காநிற்கும்; சேல் மீனென மிளிராநிற்கும்; திருமால் போன்று மேனோக்கி வளரா நிற்கும்; காண்போரை வருத்துதலாலே கூற்றுவனையும் ஒக்கும்; குழைகளை எறியாநிற்கும்; மீண்டும் மூக்கின்மேற் சென்று தாக்கும்; நன்கு மலராநிற்கும்; கூம்பாநிற்

கும்; செவிகாறும் சென்று நீளாநிற்கும்; சுழலும்; நிற்கும்; ஏனையோரொடு பேசுவனபோன்று தோன்றாநிற்கும்; என்க.

(வி - ம்.) அவை - அக்கண்கள். செய்யுளாகலின் சுட்டுச் சொல் முற்பட வந்தது. ஒன்றை ஒன்றை விளித்தவும் என்க. சேல் - ஒருவகை மீன். மால் - திருமால். திருமால் பேருருக்கொண்டு உலகளந்தமைபற்றி மாலென நிமிரும் என்றார். நிமிர்தல் - வளர்தல். ''நீர் செல நிமிர்ந்த மாஅல் போல்'' என்றார் முல்லைப் பாட்டினும். காலன் - கூற்றுவன். கண்டோர் உயிர் பருகலின் காலன் உவமை. கடுக்கும் : உவமவுருபு. கடை - இடம்; கடைப்பகுதியுமாம்.

(இதுவுமது)

உருஅ - கூச : கழுநீர்..........நோக்கி

(பொ - ரை.) மேலும் செங்கழுநீர் மலரையும் நிகர்த்து வளவிய நீரின்கண் வாழும் கயல்மீன்போன்று மதர்ப்புற்றும், அம்மதர்ப்பு நீங்கியும் சுருக்கியும் பெருக்கியும் இவை முதலிய பற்பல அவிநயக் குறிகளோடே அவளுடைய இரண்டு கண்களும் சிறிதும் குற்றமின்றிச் சுவையோடே தோன்றுதலாலும், அம் மானனீகை நீலப்பட்டாடை உடுத்து அதன்மேலே நிரல்பட்ட மணிமாலைக் கோவையாகிய மேகலையணிதானும் அவளழகிற்கு அழகு செய்வதாய்த் திகழாநிற்ப, அம்மானனீகை தான் பந்தாடிய இளைப்பொழியும் பொருட்டு மெல்லென உயிர்ப்பெறிந்து அக்களத்தின்கண் உலாவி வருதலை நோக்கியதாலும் என்க.

(வி - ம்.) அம்மதர்ப்பினைத் தவிர்க்கும் என்க. சுவை - காமச் சுவை. அவள் மேனியழகை எடுத்துக் காட்டலாலே நீலப்பட்டுடை என்றார். பொன்னிறத்தை நீல நிறம் மிகுத்துக் காட்டல் இயல்பு. உயிர்த்து இளைப்பாற்றி என்க. ஓடரிக்கண்ணி : மானனீகை.

(இதுவுமது)

உகூரு - எ0 : பூண்............விரைந்தென்

(பொ - ரை.) அணிகலன்கள் விளங்காநின்ற கொங்கைகளையும், முகிலையொத்த கூந்தலையும் மாட்சிமையுடைய குழையினையும் உடைய அம்மானனீகையின் புத்தம் புதிய அழகினிடத்தே காட்சிதகச் சென்ற தன் நெஞ்சத்தை ஒருவழிப் படுத்தி மீட்கமாட்டாத வெள்ளம் என்னும் பேரெண் அளவினதாகிய பெரிய படையையுடைய அவ்வுதயண மன்னன் மீண்டும் பிடிமிசைச் சென்று திரும்பி உலாப் போய் வருவான் போன்று வந்து அரண்மனை முன்றிலிலே தோன்றுமளவிலே பந்தாடுகளத்திலிருந்த கோப்பெருந்தேவியையுள்ளிட்ட மகளிரெல்லாம் தத்தம் இடத்தினின்றும் விரைந்து எழுந்து சென்றனர் என்க.

(வி - ம்.) பூண் - அணிகலன். புயல் - முகில். உதயணனுக்கு அவளழகு புத்தம் புதிய காட்சியாகலின் புதுநலம் என்றார். இனி இளநலம் எனினுமாம். ஒருப்படுத்து மீட்கமாட்டாத என்க. வெள்ளம் - ஒரு பேரெண், கடலுமாம். வேந்தன் : உதயணன். பேதையர் - கோப்பெருந்தேவி முதலியோர். தம்முள் மாறுவேடத்திருந்த உதயணனைக் காணமாட்டாமை தோன்றப் பேதைமகளிர் என்றிரங்கிக் கூறியபடியாம்.

கஉ - பந்தடி கண்டது முற்றிற்று.

கரு. முகவெழுத்துக்காதை

இதன்கண் : மானனீகையைக் கண்ட உதயணன் செயலும், தேவியர் இருவரும் உதயணன்பால் வருதலும், உதயணன் தோழியரை அழைத்து வினவுதலும், அவன் வாசவதத்தையை வினவுதலும், அவள் சினந்துரைத்தலும், உதயணன் அவட்குக் கூறுதலும், உதயணன் மானனீகையை வினவுதலும், மானனீகை விடைகூறலும், உதயணன் செயலும், மானனீகை செயலும், அவன் செயலும், வாசவதத்தையின் முகவெழுத்தை மானனீகை காண்டலும், மானனீகை எழுத்தைக் கண்டு உதயணன் மீட்டும் எழுதி விடுதலும், மானனீகை மறுமொழி எழுதி விடுத்தலும், அது கண்டு உதயணன் மகிழ்தலும், மானனீகை மறைந்திருத்தலும், உதயணன் செயலும், வாசவதத்தை உதயணன் செயலை ஒற்றி வருமாறு காஞ்சனமாலையை விடுத்தலும், உதயணன் மானனீகையுடன் காதல் மொழி பேசிக் கலத்தலும், காஞ்சனமாலை அந்நிகழ்ச்சியை வாசவதத்தைக் குணர்த்தலும், வாசவதத்தை உதயணனைக் கண்டு கூறலும், அவன் வினவுதலும், அவள் விடை கூறலும், இருவரும் சொல்லாடுதலும், இருவரும் தனித்தனிச் செயல் செய்தலும், உதயணன் திகைத்தலும் வாசவதத்தை ஊடிச் செல்லலும் கூறப்படும்.

விரைந்தனர் பெயர வேந்தன் காம
சரம்பட நொந்து தளர்வுட னவனோர்
பள்ளி யம்பலத் துள்ளினி திருந்து
மேவத் தகுமுறைத் தேவியர் வருகென
ஏவற் சிலதியர் தாமவர்க் குரைப்பக்
காவல் வேந்தன் கரைந்ததற் கயிர்த்து
மேவுகந் துகத்தியைக் கோயிலுண் மறைத்து
மறுவி றேவிய ரிருவரும் வந்து
திருவமர் மார்பனைத் திறத்துளி வணங்கலிற்
பெருகிய வனப்பிற் பேணுந் தோழியர்
புகுதுக வென்றலும் புக்கவ ரடிதொழச்
சுற்றமும் பெயருஞ் சொல்லுமி னீரென
முற்றிழை மாதரை முறைமுறை வினவலின்
மற்றவ ரெல்லா மறுமொழி கொடுப்பக்

கோற்றவ னுரைக்கும் பொற்றொடித் திரளினைப்
பாரான் பார்த்தொரு பைந்தொடி நின்னொடு
வாரா தொழிதல் கூறெனக் கூறலும்
ஒழிந்த மாதர்க் குரைப்பதை யுண்டெனிற்
றனித்துநீ கண்டரு ளவைக்கு ளென்னெனப்
படைமலி நயனங் கடைசிவப் பூரும்
திறனவண் மொழியொடு தெளிந்தன னாகிப்
பற்றா மன்னன் படைத்தவும் வைத்தவும்
உற்றவ ளறியு முழையரிற் றெளிந்தேன்
மதிவே றில்லென வாசவ தத்தையும்
கரும முன்னிக் குருசில்............
....
பூக்கமழ் குழலி புகுந்தடி வணங்கலின்
நோக்கின னாகி வேற்படை வேந்தன்
பைந்துணர்த் தொடையற் பாஞ்சா லரசற்கு
மந்திர வோலையும் வழக்கறை காவலும்
தந்திர நடாத்தலுந் தகையுடைக் கோலம்
அந்தப் புரத்திற் கணிதலு மெல்லாம்
நின்னைச் சொல்லுவர் நன்னுதல் பெயரும்
துன்னருஞ் சுற்றமு முன்னுரை யென்றலும்
வாட்டிறல் வேந்தனை வணங்கித் தன்கை
கூட்டின ளாகி மீட்டவண் மொழிவோள்
கோசலத் தரசன் மாபெருந் தேவி
மாசில் கற்பின் வசுந்தரி யென்னும்
தேனிமிர் கோதை சேடி யென்யான்
மான னீகை யென்பதென் னாமம்
எம்மிறை படையை யெறிந்தன னொட்டிச்
செம்மையிற் சிலதியர் தம்மொடுஞ் சேரப்
பாஞ்சா லரசன் பற்றிக் கொண்டு
தேன்றேர் கூந்தற் றேவியர் பலருளும்
தன்னமர் தேவிக் கீத்த பின்றை
வண்ண மகளா யிருந்தனெ னன்றி
அருளிய தியாது மறியே னியானெனக்
கடல்புரண் டெனப்பயந் தழுதன ணிற்ப

வ்ாகை வேந்தன் மதித்தன ளுகிக்
கேளுடை முறையாற் கிளரோளி வனப்பின்
வாசவ தத்தைக்கும் வண்ண மகளாய்
நாளும் புனேகேன நன்னுதல் பெயர்ந்தவள்
அடிமுதற் ருேட்டு முடியள வாகப்
புடவியி னறியாப் புணர்ப்பொடு பொருந்தி
ஓவிய ருட்கு முருவக் கோலம்
தேவியைப் புனேந்தபின் மேவிய வனப்போடு
காவலற் காட்டக் கண்டன ளுகி
அழித்தலங் கார மறியா ளிவளேனப்
பழித்தியான் புனேநெறி பாரேனப் புனேவோன்
பற்றிய யவன பாடையி லெழுத்தவள்
கற்றன ளேன்றேடுத் துற்றவ ருரைப்ப
கேட்டன ளுதலிற் கோற்ருேடி நுதன்மிசைப்
பூந்தா தோடு சாந்துறக் கூட்டி
ஒடியா விழுச்சீ ருதயண ஞேலே
கோடியேர் மருங்குற் குயின்மோழிச் செவ்வாய்
மான னீகை காண்க சேணுயர்
மாட மீமிசை மயிலிறை கொண்டேன
ஆடன் மகளிரோ டமர்ந்தோருங் கீண்டி
முந்துபங் தேறிந்தோர் முறைமையிற் பிழையாட
பந்துவிளே யாட்டினுட் பாவைதன் முகத்துச்
சிந்தரி நெடுங்கணேன் னேஞ்சகங் கிழிப்பக்
கோந்தழற் புண்ணுேடு நோந்துயிர் வாழ்தல்
ஆற்றே னவ்வழ லவிக்குமா மருந்து
கோற்றேன் கிளவிதன் குவிமுலே யாகும்
பந்தடி தானுறப் பறையடி யுற்றவேன்
சிந்தையு நிலேயுஞ் செப்புதற் கரிதேனச்
சேம மில்லாச் சிறுநுண் மருங்குற்
காதார மாகி யதனுேடு தளரா
அருந்தனங் தாங்கி யழியுமேன் னேஞ்சிற்
பெருந்துயர் தீர்க்கு மருந்து தானே
துன்றிய வேற்கட் டோழிலுமெய் யழகும்
பைங்கோள் கொம்பாப் படர்தரு மிக்நோய்

ஆழ்புனற் பட்டோர்க் கரும்புணை போலச்
சூழ்வளைத் தோளி காமநற் கடலிற்
றாழ வுறுமற் கோள்க தளர்ந்துயிர்
சென்றாற் செயன்முறை யொன்றுமி லன்றியும்
அடுக்கிய விளமை தலைச்சேலி ஞந்தரக்
கிடைப்பதி லிரப்போர்க் களிப்பது நன்றெனு
நினைத்த வாசக நிரப்பின் றெழுத
இடத்தள வின்மையிற் கருத்தறி வோர்க்குப்
பரந்துரைத் தென்னை பாவை யிக்குறை
இரந்தனெ னருளென விறைமக னெழுதி
மெல்லியற் கோத்த விலையெனப் புகழ்ந்து
புல்லினன் றேவியைச் செல்கென விடவும்
கோயில் குறுக வாய்வளை யணுகலும்
காவலன் புனைந்தது காணெனக் கண்ட
காசறு சிறப்பிற் கோசலன் மடமகள்
வாசக முணராக் கூசின ளாகிப்
பெருமக னெழுதிய பேரலங் காரத்
திருமுக மழகுடைத் தெனமருட் டினளாய்
உட்கு நாணு மொருங்குவந் தடைய
நற்பல கூறி யப்பகல் கழிந்தபின்
வழிநாட் காலைக் கழிபெருந் தேவியைப்
பழுதற வழகொடு புனைநலம் புனையாக்
குங்கும மெழுதிக் கோலம் புனைஇ
அங்கவ ணுதன்மிசை முன்பவ னெழுதிய
பாடை கொண்டுதன் பெயர்நிலைக் கீடா
நீல நெடுங்க ணிரைவளைத் தோளி
மறுமொழி கொடுக்கு நினைவின ளாகி
நெறிமயிர்க் கருகே யறிவரி தாக
முழுதிய லருள்கொண் டடியனேன் பொருளா
எழுதிய திருமுகம் பழுதுபட லின்றிக்
கண்டேன் காவல னருள்வகை யென்மாட்
டுண்டே யாயினு மொழிகவெம் பெருமகன்
மடந்தையர்க் கெவ்வா றியைந்ததை யியையும்
பொருந்திய பல்லுரை யுயர்ந்தோர்க் காகும்
சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்

இயைவ தன்று லிவ்வயி னொருவரும்
காணு ரேன்று காவலு ளிருந்து
பேணு செய்தல் பெண்பிறந் தோருக்
கியல்பு மன்றே யயலோ ருரைக்கும்
புறஞ்சொலு மன்றி யறந்தலை நீங்கும்
திறம்பல வாயினுங் குறைந்தவென் றிறத்து
வைத்ததை யிகழ்ந்து மறப்பது பொருளென
உற்றவண் மறுமொழி மற்றெழு தினளாய்
அடியேற் கியைவ திதுவென விடலும்
வடிவே லுண்கண் வாசவ தத்தை
திண்டிற லரசனைச் சென்றனள் வணங்கலும்
கண்டன னாகிக் கணங்குழை யெழுதிய
இயனோக் கினனு யியையா வாசகம்
தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தேனக்
கலங்கின னாகி யிலங்கிழைக் கீதோர்
நலங்கவின் காட்ட நணுகென வணுகிக்
கண்ட முறைமையிற் பண்டிய லாக்கவல்
கொண்டன னாகி யொண்டொடி யாகம்
இன்றை யெல்லையு ளியையா தாயிற்
சென்றதென் னுயிரெனத் தேவிமுகத் தெழுதி
வாட்டிறல் வேந்தன் மீட்டனன் விடுத்தலிற்
பெருமகள் செல்லத் திருமகள் வாசகக்
கரும மெல்லா மொருமையி னுணர்ந்து
வயாத்தீர் வதற்கோ ருயாத்துணை யின்றி
மறுசுழிப் பட்ட நறுமலர் போலக்
கொட்புறு நெஞ்சினைத் திட்பங் கொளீஇ
விளைக பொலிக வேந்த னுறுகுறை
களைகுவ லின்றெனுங் கருத்தொடு புலம்பி
அற்றை வைகல் கழிந்தபி னவளை
மற்றுய ரணிநலம் வழிகாட் புனைஇக்
கூத்தப் பள்ளிக் குச்சரக் குடிகையுட்
பாற்படு வேதிகை சேர்த்தன ளாகி
அரவுக் குறியி னயலவ ரறியா
இரவுக் குறியி னியல்பட வெழுதி
மாபெருந் தேவியை விடுத்தபின் மற்றவள்

தீவிய மொழியொடு செதிபற் குறுகி
நோன்றாள் வணங்கித் தோன்ற நிற்றலும்
திருநுதன் மீமிசைத் திறத்துளிக் கிடந்த
அருளோர் வாசகந் தெருளுற வறிந்து
மற்றவள் பயந்தனள் பொற்புற வெழுதிய
இற்றைப் புதுநல மினிதென வியம்பி
மாதர் நோக்கின் மான னீகைகட்
காமம் பெருகிக் காதல் கடிகொள
மாமனத் தடக்கித் தேவியொ டினியன
கூறியப் பகல்போ யேறிய பின்றை
மான னீகை வாசவ தத்தையைத்
தான்மறைந் தறைகுறி மேவின ளிருப்ப
வென்வேற் றலைவனும் வேட்கை யின்றித்
தேவிய ரிருவர்க்கு மாறுதுயில் கூறக்
கயிற்பூண் கோதை யயிர்த்தன ளிருப்பப்
பெயர்த்தன ணெதுங்கிப் பெயர்தரக் கண்டே
காஞ்சன மாலையைக் கைவயிற் பயிர்ந்து
பூந்தார் மார்பன் புகுமிட னறிகென
ஆய்ந்த வேந்த னுடற் பேரறை
சார்ந்தபி னொருசிறை சேர்ந்தன ளிருப்பத்
திருத்தகு மார்பன் கருத்தொடு புகுந்து
விருப்பொடு தழுவி நடுக்கந் தீரக்
கூடிய வேட்கையி னொருவர்க் கொருவர்
ஊடியுங் கூடியு நீடுவிளை யாடியும்
இருந்த பின்றை யிருவரு முறைமுறை
திருந்திய முகத்துப் பொருந்திய காதலொ
டெழுதிய வாசக மெல்லா முரைத்து
வழுவுத லின்றி வைகலு மீங்கே
குறியெனக் கூறிச் சிறுவிரன் மோதிரம்
கொடுத்தன னருளிக் கோயிலு ணீங்க
விடுத்தவ ளேகி யடுத்தது முரைத்ததும்
தன்னுட் பொருமலொடு தனித்தனி தெரிய
இன்னதென் றெடுத்து நன்னுதற் குரைப்ப
முறுவல் கொண்டு செறுவகத் தடக்கிப்
பொறையாற் றலளா யிறையுயிர்த் தாற்றிப்

புலர்ந்த காலை புரவலற் குறுகி
நலங்கிளர் மலர்கோண் டிறைஞ்சின ளிருந்தியான்
இரவு கண்டே ஞெருகன வதனின்
புதுமை கேட்கிற் புரைதீர்ந் ததுவேனச்
செவ்வாய் வெண்ணகைத் திருந்திழை கண்ட
தெவ்வா றேவேன வியம்பினன் கேட்பநின்
மனத்துழைப் பெயரா வேனைக்கரந் தேழுந்தனை
தனித்துப் போயோர் தடந்தோண் மடந்தையோ
டாடரங் கேறி யணைந்திருந் தவளோ
டேடியு முணர்ந்துங் கூடிவிளை யாடியும்
தேறினி ராகித் தெளிவுட னிருவிரும்
மாறுமா றெழுதிய வாசகங் கூறி
மாதரு நீயு மயலுரைத் தேழுந்து
போதரும் போதையின் மோதிர மருளிப்
பெயர்ந்தனை நயனமு மலர்ந்தன வாங்கே
புலர்ந்தது கங்குலும் புரவல வாழ்கேன
வண்டலர் கோதாய் மனத்தினு மில்லது
கண்டனை யாதலிற் கலங்கினை மற்றுநின்
உள்ளத் துள்ளே யுறைகுவே ஞகவும்
கள்வ னென்று கருதினை யன்றியும்
நெறியுடை மகளிர் நினைப்பவுங் காண்பவும்
இவையிவை போலுங் கணவர்தந் திறத்தேனக்
கனவிற் கண்டது பிறரோடு பேசக்
குறைபோ மேன்றலிற் கூறினே னன்றியும்
யாவை காணினுங் காவலற் கன்றிப்
பேசுவ தேவரோடு பெரியோ யேன்று
மானூர் நோக்கி மனத்தோடு நகையா
ஆறு நினைவுட னகறர வேந்தன்
தேவியை யையந் தெளித்தன மோருவகை
யாரு மில்லேன வினிதிருந் துவப்பப்
பானுவுந் தேரோடு படுவரை யிடைபுக
மான னீகையைக் காவல்வைத் தனளாய்
மாந்தளிர் மேனியுங் காஞ்சன மாலையோடு
நேர்ந்தவக் குறியிற் றுன்சேன் றிருப்ப
நிகழ்ந்ததை யறியா னேழுந்து மேல்லேன

நடந்தவன் சென்றவ ளிடந்தலைப் படலும்
வேந்தன் செய்வது காண்குவ மென்று
காம்பேர் தோளி கையி னீக்கலும்
மான னீகைதா னூடின ளாகி
மேவல ளாயினள் போலுமென் றெண்ணி
முரசுமுழங்கு தானை யரசோடு வேண்டினும்
தருகுவ லின்னே பருவர லொழியினி
மானே தேனே மானனீ காயெனக்
கானேர் பற்றத் தானது கோடாஅ
துரைப்பது கேட்ப மறுத்தவ ளொதுங்கி
நிலைப்படு காமந் தலைப்படத் தரியான்
புதுமை கூறியிவண் முகம்பெறு கேனென
மதித்தன னாகி யொருமொழி கேளினி
முகைக்கொடி முல்லை நகைத்திரு முகத்துத்
தகைக்கொடி யனையோள் வாசவ தத்தை
இயைந்த நெஞ்சுடை யாமிரு வர்க்கும்
கழிந்த கங்குலி னிகழ்ந்ததை யெல்லாம்
கனவது முந்திய வினைய தாதலின்
அதனிற் கண்டேனக் கோளியா துரைப்ப
அதற்கொரு வழியான் மனத்தினு மில்லெனத்
தெளித்த நிலைமையுந் தெளிந்திலை யேயெனப்
பெயரப் பெயர முறைமுறை வணங்கி
இயனிலை மான னீகா யருளென்
றடுத்தடுத் துரைப்பவு மாற்றா னாகவும்
இதச்சொற் சொல்லவும் வணக்கஞ் செய்யவும்
பெட்ப வருதலிற் பிடித்தல் செல்லாள்
நக்கன ளாகி மிக்கோய் கூறிய
மானுந் தேனு மான னீகையும்
யானன் றென்பெயர் வாசவ தத்தை
காணெனக் கைவிட் டோடினள் தேடி
அடுத்த காட்சியிற் றனித்தொரு மண்டபத்
தொளித்தன னாகித் திகைத்தன னிருப்பச்
சினங்கொ ணெஞ்சொடு பெயர்ந்தவள் வதியப்
புலர்ந்தது கங்குலும் பொருக்கெனப் பொலிந்தென்.

உரை

கஈ. முகவெழுத்துக்காதை

அஃதாவது - உதயணனும் மானனீகையும் வாசவதத்தை நெற்றியிலே ஒருவர்க்கொருவர் காதற் செய்திகளை வரைந்து விடுத்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் செயல்)

க - ரு: விரைந்தனர்............உரைப்ப

(பொ - ரை.) மன்னன் வரவுணர்ந்து வாசவதத்தை முதலியோர் பந்தாடு களத்தினின்றும் விரைந்து அரண்மனைக்குச் சென்ற பின்னர் மானனீகையைக் கண்ட காலத்தே தன் நெஞ்சத்தே காமன் கணைகள் தைத்தமையாலே பெரிதும் வருந்தி யுடல் தளர்ந்து அங்குள்ள வொரு பள்ளியம்பலத்தே இனிதாக வீற்றிருந்து ஈண்டு வரற்குரிய முறைமையோடே எந் தேவியரிருவரும் இங்கு வருவாராக! என்று பணிமகளிரை விடுத்தலானே அவர் சென்று அச் செய்தியை அரசியரிருவர்க்கும் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) தேவிமார் முதலியோர் பெயர என்க. வேந்தன் : உதயணன். காமசரம் - காமவேள் எய்த மலரம்புகள். அவை : தாமரை, சூதம், அசோகம், முல்லை, நீலம் என்பன. பள்ளியம்பலம் - பள்ளி கொள்ளுதற்குரிய இடம். இதனை அவை என்றும் கூறுப. ஏவற்சிலதியர் - பணி மகளிர். அவர்க்கு : வாசவதத்தைக்கும் பதுமாபதிக்கும்.

(தேவியரிருவரும் உதயணன்பால் வருதல்)

சு - கூ: காவல்............வணங்கலின்

(பொ - ரை.) அது கேட்ட குற்ற மற்ற தேவியரிருவரும் தம்மை வேந்தன் அழைத்தமைக்கு ஐயுற்றோராய்க் கண்டோர் விரும்புதற்குக் காரணமான பந்தாட்டம் வல்லுநளாகிய மானனீகையை மட்டும் அரண்மனைக்குள் மறைத்து வைத்தவராய்ப் பள்ளியம்பலத்திற்கு வந்து திருமகள் வீற்றிருக்கும் மார்பினையுடைய உதயண குமரனைக் கண்டு முறைப்படி வணங்குதலாலே என்க.

(வி - ம்.) வேந்தன் : உதயணன். கரைந்ததற்கு - அழைத்ததற்கு. அயிர்த்து - ஐயுற்று. அஃதாவது உதயணன் ஒரோவழி மானனீகையைக் கண்டு விரும்பியிருத்தல் கூடுமோ என்று ஐயுற்று என்றவாறு. மறு - குற்றம். திறத்துளி - முறைப்படி.

(உதயணன் தோழியரை வருவித்து வினவுதல்)

க0 - ச: பெருகிய............கொடுப்ப.

(பொ - ரை.) உதயண மன்னன் அப் பெருந்தேவிமாரை நோக்கி "அன்புடையீர்! மிக்க வனப்போடு நும்மைப் போற்றும் நுந் தோழிமாரனைவரும இப்பொழுது ஈண்டு வருவாராக!" என்று அறிவித்தமையாலே, அவ்வரசியர் கட்டளைப்படி அத் தோழிமாரனைவரும் பள்ளியம்பலத்தே புகுந்து மன்னவன் அடி தொழுது நிற்ப; அரசன் அத் தோழியரைப் பார்த்து "நீயிர் நுங்கள் சுற்றத்தார் பெயரையும், நும் பெயரையும் சொல்விராக!" வென்று நிரம்பிய அணிகளையணிந்த அத்தோழிமாரைத் தனித்தனியே வினவுதலாலே அத் தோழிமார் தாமும் மன்னன் வினவிற்கெல்லாம் மறுமொழி கொடாநிற்ப என்க.

(வி - ம்.) புகுதுக வென்று மன்னவன் கூறலும் என்க. புக்கவர்-புகுந்த தோழிமார். சுற்றம் - இருமுதுகுரவர் முதலியோர். மாதரை-அத் தோழிமாரை. மறுமொழி - விடை.

(உதயணன் வாசவதத்தையை வினுதல்)

கரு — எ: கொற்றவன்............கூறலும்

(பொ - ரை.) பின்னர் இங்ஙனம் தன் வினவிற்கு மறுமொழி கூறுநின்ற பொன் வளையலணிந்த வாசவதத்தையின் தோழியர் கூட்டத்தைப் பார்த்து ஆண்டுத் தன் காதலியாகிய அம் மானனீகையைக் காணமாட்டானுய் அவ் வாசவதத்தையை நோக்கி "நங்காய்! நின் தோழியருள் வைத்து ஒருத்தி மட்டும் நின்னேடு இங்கே வாரா தொழிந்தமைக்குக் காரணம் என்னே? கூறுவாயாக!" என்று வினவாநிற்ப என்க.

(வி – ம்.) கொற்றவன்: உதயணன். உரைக்குந்திரள், பொற்றெடித்திரள் என்று தனித்தனி கூட்டுக. விடைகூறும் தோழியர் கூட்டம் என்றும் வாசவதத்தையின் தோழியர் கூட்டம் என்றும் பொருள் கூறுக. பொற்றெடி என்றது வாசவதத்தையை. இனி திரளிற்கே அடையாக்கினுமாம். திரளினைப் பார்த்து அவருள் மானனீகையைப் பாரானுய் என மாறியும் வருவித்தும் கூறுக. பாரான் வாசவதத்தையை நோக்கிக் கூறு எனக் கூறலும் என்க.

(வாசவதத்தை சினத்தல்)

கஅ - கூ: ஒழிந்த............என்னெனெ

(பொ - ரை.) அது கேட்ட வாசவதத்தை சினந்து "பெருமானே! ஈண்டு வாரா தொழிந்தவளுக்கு நீ கூறவேண்டிய காரியம் ஏதேனுமிருப்பின் நீ அவளைத் தனியிடத்தே கண்டு கூறியருள்வதே தகுதியாம்; ஈண்டு அவையின்கண் அவட்கு நீ கூறலாவது என்னேயோ?" என்று கூறுநிற்ப வென்க.

(வி - ம்.) வாராதொழிந்த மாதர்க்கு என்க. உரைப்பதை - கூறவேண்டிய காரியம். ஐ : சாரியை. அவை - பள்ளியம்பலம். அவைக்குள் நீ அவட்குக் கூறத்தக்க காரியம் என்னை என்று வினவிய படியாம். இவ்வூடல் மொழிகள் பெரிதும் நம்மனோர்க்கின்பந் தருத லுணர்க.

(உதயணன் கூறுதல்)

உ0 - ரு : படை...........குருசில்

(பொ - ரை.) அது கேட்ட மன்னவன் அம்பும் வேலும் ஆகிய படைக்கலன் போன்று கூர்த்த வாசவதத்தையின் கடைக் கண்கள் சிவக்கும் தன்மையை அவள் கூறிய மொழியோடே தெளிந்து கொண்டவனாய், "தேவீ! சினவாதே கொள்! ஈண்டு வாராதொழிந்த அத் தோழி நம் பகைமன்னனாகிய ஆருணியர சன் ஈட்டிய பொருள்களையும், அவன் சேமித்து வைத்த பொருள்களையும் நன்கு அறிவாளாம். இச் செய்தியை யான் என் ஒற்றராலே அறிந்துளேன் காண்! அவற்றை அவளை வினவிக் காண்டற்கே யான் அவளைப்பற்றி நின்னை வினவினேன். அவளை யான் காண விரும்புதற்குரிய நினைவு பிறிதொன்றில்லை காண்!" என்று கூறித் தேற்றா நிற்றலாலே மன்னனுடைய இப் பன்மாயப் பணிமொழியைக் கேட்ட அவ் வாசவதத்தை தானும் ஒரேலெனச் சினந்தணிந்து நம் பெருமான் அரசியற் காரியத்தைக் கருதியே...........என்க.

(வி - ம்.) படைத் தன்மைமிக்க நயனம் என்க. திறன் - தன்மை. அவள் மொழியிலேயே அச்சினந் தெளிதலின் மொழியொடு தெளிந் தனன் என்றார். படைத்த - ஈட்டிய பொருள். வைத்த - சேமித்து வைத்த பொருள். அவள் அவனுக்கு உற்றவளாயிருந்து அறியும் எனினும் பொருந்தும். உழையர் என்றது ஒற்றரை; அமைச்சர் எனினு மாம். மதி - நினைவு. உருஆம் அடியில் இறுதிச்சீரும் அடுத்த ஓர் அடியும் அழிந்தன. இவற்றுள் வாசவதத்தை ஊடனீங்கி அவளை அழையா நிற்ப என்னும் பொருளுடைய சொற்கள் இருந்திருத்தல் வேண்டும்.

(மானனீகையை மன்னவன் வினவுதல்)

உசு - நூ : பூக்கமழ்...........என்றலும்

(பொ - ரை) மலர் மணங்கமழும் கூந்தலையுடைய மான னீகை பள்ளியம்பலத்திலே புகுந்து மன்னனை வணங்கா நிற்ப; வேலேந்தும் அம்மன்னவன் அவளை விருப்பத்தோடு நோக்கிய வனாய், "நல்ல நுதலையுடையோய்! பசிய பூங்கொத்துக்களா லியன்ற மாலையையணிந்த பாஞ்சால மன்னனுக்குத் திருமந்திர ஓலை வரைதலும், அவன் வழக்குரை அறையைக் காத்தலும், அவன் படைகளை நடத்துதலும், அம்மன்னவனுடைய உவளகத்

தின்கண் அவன் தேவியர்க்கு ஒப்பனை செய்தலும் ஆகிய இக் காரியங்களையெல்லாம் நீயே செய்து வந்தனை என்று அறிந்தோர் நின்னையே சுட்டிச் சொல்லா நிற்பர். நல்லநு நங்காய்! நின்னுடைய பெயரையும் நின்னுடைய பெறுதற்கரிய நெருங்கிய சுற்றத்தார் பெயரையும் முற்பட எனக்குக் கூறுவாயாக" என்று பணித்தலும்; என்க.

(வி - ம்.) குழலி : மானனீகை. நோக்கினளாகி என்பது விரும்பி நோக்கினளாகி என்பதுபட நின்றது. வணங்கலின் என்றது எளிதாக நோக்குதற்குக் குறிப்பேதுவாய் நின்றது. வேந்தன் : உதயணன். துணர் - பூங்கொத்து. தொடையல் - ஒருவகை மாலை. பாஞ்சால் - பாஞ்சாலம்: விகாரம். வழக்கறை - அரசன் வழக்குத் தீர்க்கும் அறை. தந்திரம் - படை. கோலம் - ஒப்பனை. அந்தப்புரம் - தேவிமார்க்கு ஆகுபெயர். நன்னுதல் ; அன்மொழி; விளி; முன்னிலைப்புற மொழியுமாம். துன் - நெருங்கிய. அருஞ்சுற்றம் - பெறற்கரிய தாயும் தந்தையும், முன்னுரை என்றது பின்னர் உரைத்தற்குரியனவும் உள்ளன என்பதுபட நின்றது.

(மானனீகை கூறல்)

௩௪ - ௯ : வாள்............நாமம்

(பொ - ரை.) அதுகேட்ட மானனீகை மீண்டும் தன் கைகளைக் கூப்பி வாளாற்றலுடைய அம்மன்னனை வணங்கிக் கூறுபவள், "வேந்தர் வேந்தே! என் பெயர் மானனீகை என்பதாம். யான் கோசல நாட்டு அரசனுடைய கோப்பெருந்தேவியாகிய குற்றமற்ற கற்பினையுடைய வண்டுகள் முரலும் மலர்மாலையணிந்த 'வசுந்தரி' என்னும் அரசியின் வண்ணமகள் ஆவேன்;" என்க.

(வி - ம்.) வேந்தன் : உதயணன். அவள் மீட்டுத் தன் கை கூட்டினளாகி வணங்கி மொழிவோள் என மாறிக் கூட்டுக. இமிர் - முரலுகின்ற. சேடி - தோழி. ஈண்டு வண்ணமகள் என்க. வண்ண மகள் – ஒப்பனை செய்யும் பணிப்பெண். அழகிய மகளாவேன் என்றும் ஒரு பொருள் தோன்றிற்று. நாமம் - பெயர்.

(இதுவுமது)

௪௦ - எ : எம்மிறை...........நிற்ப

(பொ - ரை.) பெருமானே! எங்கள் அரசனாகிய கோசல மன்னனின் படையைப் பாஞ்சால மன்னனாகிய ஆருணி போரின்கண் தாக்கி அரண்மனையை விட்டுத் துரத்தியபின் என்னை இன்னும் பல பணிமகளிரோடே ஒருசேரப் பற்றிக் கொண்டு நடுநிலைமையுடனே வண்டுகள் இரை தேர்கின்ற கூந்தலையுடைய தேவிமார் பலருள்ளும் தன்னைப் பெரிதும் விரும்பும் கோப்பெருந்தேவிக்கு வழங்கினன். அங்ஙனம் வழங்கிய பின்னர் யான் அப்பெருந்தேவியின் வண்ணமகளாய்ப் பணி செய்து கொண்டி

ருந்தேன். இஃதன்றிப் பெருமான் வினவியருளியவற்றுள் யான் ஒன்றனையும் அறிவேனல்லேன்,'' என்று கூறிக் கடல் புரண்டு வந்தாற்போலப் பெரிதும் அஞ்சி அழுது நிற்ப; என்க.

(வி - ம்.) எம்மிறை என்றது கோசல மன்னனை. செம்மையில் என்றது மகளிராகிய எமக்குத் தீதொன்றும் செய்யாமல் என்பது குறித்து நின்றது. தேன் - வண்டு. தேர்தல் - ஆராய்தல். தன்னமர் - தன்னைப் பெரிதும் விரும்பும். அருளியது - வினவியது. கடல் புரண்டு வருங்கால் மாந்தர் பயந்து அழுமாப்போலே அழுது நிற்ப என்க.

(உதயணன் செயல்)

சஅ — ருக : வாகை............புனைகென

(பொ - ரை.) அதுகண்ட வெற்றிமாலையையுடைய உதயண மன்னன் அவள் மொழியை வாய்மையென்று நன்கு மதித்த வனாய்த் "தோழீ! நீ கோசலத்து அரசன் தேவியின் வண்ண மகளாகலின், அக்கோசலத் தரசன்றானும் நங்கள் வாசவதத் தைக்கு உறவினன் ஆதலின் அவ்வுரிமையால் நீ ஈண்டும் கோப் பெருந்தேவியாகிய ஒளிமிக்க அழகினையுடைய வாசவதத்தைக்கு வண்ணமகளாய் இருந்து நாள்தோறும் ஒப்பனை செய்து கொண்டிருப்பாயாக'' என்று பணித்தலாலே; என்க.

(வி - ம்.) வாகை - வெற்றிமாலை. கேள் - உறவினன். வாசவதத் தைக்கும் என்புழி உம்மை இறந்தது தழுவி நின்றது.

(மானனிகை செயல்)

ருக — ரு : நன்னுதல்............புனைந்தபின்

(பொ - ரை.) அக்கட்டளை பெற்ற நல்ல நெற்றியையுடைய அம்மானனீகை பெருந்தேவியோடு சென்றவள், வாசவதத்தை யின் அடிமுதல் முடியினது அளவும் இவ்வுலகின்கண் பிறர் யாரும் அறியாத வண்ணக் கூட்டொடு பொருந்திய ஓவியர் தாமும் அஞ்சுதற்குக் காரணமான அழகிய ஒப்பனை செய்தபின் என்க.

(வி - ம்.) கேட்டுப் பெயர்ந்தவளாகிய நன்னுதல் எனினுமாம். புடவி - உலகம். புணர்ப்பு - அணிகலச் சேர்க்கையுமாம். ஓவியர் - சித்திரம் வரைவோர். உட்கு - அச்சம். உருவம் - அழகு. கோலம் - ஒப்பனை. தேவியை : வாசவதத்தையை.

(உதயணன் செயல்)

ருரு - சுஉ : மேவிய............கூட்டி

(பொ - ரை.) இவ்வாறு மானனீகையாலே புனையப்பட்டுப் புதிதாகப் பொருந்திய அழகோடு சென்று வாசவதத்தை அவ்

வழகினை உதயண மன்னனுக்குக் காட்டக் கண்டவனாய் வாசவதத்தையை நோக்கி "அவந்திகாய்! கேள்! நின் இயற்கையழகிற் கேற்ப அலங்காரம் செய்தலை அம்மானனீகை அறியாள்" என்று பழித்துக் கூறி "அன்புடையோய்! நின் பேரழகிற்கேற்ப யான் உனக்கு அலங்காரம் செய்யும் வகையைப் பார்!" என்று முன்னைய அலங்காரத்தை அழித்துப் புதுவதாகப் புனையத் தொடங்குபவன், அம்மானனீகைதான் கற்றற்கு அவாவிய யவன மொழியின் எழுத்துக்களை நன்கு கற்றிருக்கின்றனள் என்று தன் தோழர் தனக்குக் கூறியதைக் கேட்டிருந்தனனாதலின், வாசவதத்தையின் நெற்றியின்மேல் பூந்துகளையும் சந்தனத்தையும் நன்கு பொருந்தக் குழைத்துக் கொண்டு என்க.

(வி - ம்.) மேவிய வனப்பு - ஒப்பனையால் எய்திய புத்தழகு. காவலற்கு : உதயணனுக்கு. இவள் - மானனீகை. புனைவோன் : பெயர். யவனபாடை - யவனமொழி. உற்றவர் - தோழர். கோற்றொடி - திரண்ட வளையலணிந்த வாசவதத்தை. சாந்து - சந்தனம்.

(இதுவுமது)

சுஅ - எ௦ : ஓடியா............கிழிப்ப

(பொ - ரை.) அந்த யவன எழுத்தாலே, "கெடாத சிறந்த பெரும்புகழையுடைய உதயண மன்னன் வரைந்த ஓலை இது; இதனைப் பூங்கொடிபோன்ற நுண்ணிடையையும் குயில்போன்ற இன்மொழியையும் சிவந்த வாயையும் உடைய மானனீகை என்னும் மடந்தை காண்க! பாவாய்! நீ மிக உயர்ந்த மேனிலை மாடத்தின்கண் மயில்கள் கூடி இருந்தாற்போன்று கூடி இருந்த ஆடல் மகளிரொடு சேர்ந்து ஒருங்கே நினக்கு முன்னர்ப் பந்தெறிந்த மகளிர் முறைமையிலே தவறாதபடி நீ ஆடிய அப்பந்து விளையாட்டின்கண் நின்னுடைய திருமுகத்தின்கண் உள்ள செவ்வரி சிதறிய நெடிய கண்ணாகிய வேல் என் நெஞ்சினைக் கிழித்தமையாலுண்டான என்க.

(வி - ம்.) ஓடியா - கெடாத. உதயணன் வரைந்த ஓலை என்க. மருங்குல் - இடை. மீமிசை - மேலே. இறை கொண்டன. தங்கி இருந்தாற்போல ஆடியபந்து விளையாட்டினுள் என்க. பாவை : முன்னிலைப் புறமொழி. உன்னுடைய என்பது பொருள். அரி சிந்து கண் என்க. அரி - செவ்வரி. கிழிப்ப என்னும் வினைக்கேற்ப கண்ணாகிய வேல் என்க.

(இதுவுமது)

எக - சூ : கொந்தழல்............தானே

(பொ - ரை.) பல சுடராகிய கொத்துக்களையுடைய நெருப்புப் போன்று துன்புறுத்தா நின்ற அந்தப் புண்ணோடு நொந்து

உயிர் வாழ்தற்கு யான் இனி ஆற்றேன்காண்! அந்தக் காமத் தீயினை அவிக்கும் சிறந்த மருந்து யாதெனின் கொம்புத்தேன் போன்று தித்திக்கும் மொழியினையுடைய நின் குவி முலையே ஆகும் கண்டாய்! நீ பந்தடியாநிற்ப அதுகண்டு என் மனம் பறையடிக்கலாயிற்று! அங்ஙனம் ஆகிய என் சிந்தையும் நிலைமையும் கூறிக் காட்டுதற்கு அரிது காண்! (எனவும்) என் நெஞ்சம் என்னைவிட்டு நின்பால்வந்து பாதுகாவலில்லாத உன்னுடைய சிறிய நுண்ணிய இடை ஒடியும் என்று இரங்கி அதற்கு ஆதாரமாக இயைந்து அது தளருங்கால் தான் தளராது நின்று அதனால் சுமத்தற்கரிய நின் முலைகளைத் தானே தாங்கி அழியா நிற்கும் என் நெஞ்சினது இத்தகைய பெரிய துயரைத் தீர்த்தற்குரிய மருந்து நீயே கண்டாய் பிறிதில்லை காண்!'' (எனவும்); என்க.

(வி – ம்.) கொந்தழல் - பல சுடர்களையுடைய நெருப்பு. அவ்வழல்-அக்காம நெருப்பினை. மாமருந்து - சிறந்த மருந்து. கோற்றேன் கிளவிதன் - நின்னுடைய; கொம்புத் தேன்போன்று தித்திக்கும் சொல்லையுடைய நின்னுடைய என்பது பொருள். பறையடியுற்ற - நடுங்கிய. சேமம் - காவல்; ஈடுமாம். எனவே சேமமில்லா மருங்குல் என்றது ஒடியுங்கால் தனக்கு ஈடாக மற்றோர் இடை இல்லாத தனி இடை என்பது கருத்தாயிற்று. நீ பந்தாடுங்கால் என் நெஞ்சு நின் இடை ஒடியும் என்று அஞ்சி அதனோடியைந்து நின்று அது தளர்ந்துழித் தான் தளராமல் அதனாற் சுமக்கமாட்டாத நின் தனங்களைத் தான் சுமந்தும் அழியும் என நன்கு விரித்தோதுக. ஆதாரம் - பற்றுக்கோடு. அதனொடு - அவ்விடையோடு. அருந்தனம் - சுமத்தற்கரிய கொங்கை. தானே - நீயே.

(இதுவுமது)

அ௦ – எ : துன்றிய............நன்றென

(பொ – ரை.) "நெருங்கிய வேல்போன்ற நின்னுடைய கண்கள் இயற்றிய தொழில்களையும், நினது மெய் அழகினையும் பசிய கொள்கொம்பாகக்கொண்டு இக் காமநோய் இடையறாது படராநிற்கும்; சுற்றிய வளையினையுடைய தோளையுடையோய்! இந்தக் காமமாகிய பெருங்கடலிலே யான் அழுந்தாதபடி நீ ஆழ்ந்த நீரின்கண் அகப்பட்டோர்க்கு அரிய தெப்பம்போல எனக்கு உதவி உய்யக் கொள்வாயாக! எனவும் இந்நோயால் மெலிந்து உயிர் போய்விடின் பின்பு நீ செய்தற்குரிய உதவி யாதொன்றுமில்லை. அன்றியும் யாம் எய்திய இவ்விளமைப் பருவம் போய்விடின் அதனை யாம் மீண்டும் வருவித்துக்கொள்ள அது நமக்குக் கிடைப்பதும் இல்லை. நங்காய்! யாதொன்றுமிலனும் இல்லென்று இரப்போர்க்கு ஈவது நல்லறமேயாகும் (எனவும்)'' என்க.

(வி - ம்.) துன்றிய-நெருங்கிய. கண்தொழில் என்றது முன்னர் ௧௨ ஆம் காதையில் (௨௫௧) "ஒளித்தவும்......(௨௬௪) சுவையொடு தோன்ற" எனக் கூறப்பட்டவை. கொள்கொம்பு - கொடிகள் பற்றிக் கொண்டு படரும் கொம்பு. இந்நோய் - இக் காமநோய். புனற்பட்டோர்க்கு அரும்புணை உதவுமாறுபோல யான் காமக் கடலில் அழுந்தாதபடி உதவி என்க. காமநற்கடல் என்புழி நன்மை பெருமைப் பண்பு குறித்து நின்றது. தாழ்வுறுமல் - அழுந்தாதபடி. தலைச்செலின் - போனல்.

(இதுவுமது)

அஅ - ௬௩ : நினைத்த..............விடலும்

(பொ - ரை.) "பாவாய்! யான் நினக்குக் கூற எண்ணிய மொழிகளையெல்லாம் வறுமையின்றி எழுதுதற்கு இவ்வேட்டின் கண் (நெற்றியில்) இடம் இன்மையால் அவற்றை எழுதாது விடுகின்றேன். மேலும் ஒருவர் கருத்தினைச் சொல்லாமலே அறிந்து கொள்ளும் நின்போன்ற அறிவுடையோர்க்குப் பாரித்து உரைத்தலும் வேண்டாவன்றே. பாவாய்! எனது இக் குறையைத் தீர்க்கும்படி நின்னை இரந்து கேட்கின்றேன், எனக்கு அருள் செய்வாயாக!" (எனவும்) அக் கோமகன் எழுதி முடித்து வாசவதத்தையை நோக்கி "மெல்லியலோய்! நின் அழகிற்கேற்ற அலங்காரம் இவைகளே காண்!" என்று அவளைப் புகழ்ந்து தழுவி "இனி நீ செல்க" என்று விடுத்தலும் என்க.

(வி - ம்.) நிரப்பு - வறுமை. கருத்தறிவோர் - பிறர் கருத்தினை அவர் கூறுமலே குறிப்பாலுணர்ந்து கொள்பவர். பரந்துரைத்தல் - பாரித்துக் கூறுதல். என்னை? என்னும் வினு வேண்டா என்பதுபட நின்றது. குறை என்றது இறந்துபடாமல் காத்திடுக என்னும் வேண்டுகோளை. இறைமகன் : உதயணன். மெல்லியல் : வாசவதத்தை. தேவி : வாசவதத்தை.

(வாசவதத்தையின் முகவெழுத்தை மானனீகை காணல்)

௬௪ — ௧௦௧ : கோயில்..............பின்

(பொ - ரை.) வாசவதத்தை தனது மாளிகையை எய்தி அழகிய வளையலணிந்த அம் மானனீகை தன்பால் வந்த உடனே "தோழீ! இன்று நம் பெருமான் எனக்குச் செய்த ஒப்பனையைக் காண்பாயாக" என்று கூற அவ்வொப்பனையைக் கூர்ந்து நோக்கிய குற்றமற்ற சிறப்பினையுடைய அக் கோசலமன்னன் மடமகள் தேவியின் நெற்றியில் உதயணன் யவன எழுத்தாலே எழுதி விடுத்த மொழிகளை உணர்ந்து பெரிதும் நாணியவளாய் அந் நாணத்தைப் புறந்தோன்றுமே தேவியை நோக்கி, "பெருமாட்டீ! நம் பெருமான் எழுதிய பேரலங்காரத் திருமுகம் மிகமிக அழகுடைத்து" என்று வித்தகம்படக் கூறி அத்தேவியை மருட்டின

ளாய்த் தன்னெஞ்சத்தே அச்சமும் நாணமும் ஒருங்கே வந்து சேர்தலாலே அவற்றை மறைத்தற்கு நல்லன பலவற்றைக் கூற அப் பகற்பொழுது கழிந்த பின்னர் என்க.

(வி - ம்.) கோயில் - ஈண்டு உவளகம். ஆய்வளை : மானனீகை. காவலன் : உதயணன். காசு - குற்றம். கோசலன் . கோசலமன்னன். மடமகள் : மானனீகை. உணரா - உணர்ந்து. பெருமகன் - பெருமான்; அரசன். பெருமகன் எழுதிய பேரலங்காரத் திருமுகம் அழகுடைத்து எனவரும். இம் மானனீகையின் மொழி அரசனால் கோலமெழுதப்பட்ட பெரிய ஒப்பனையையுடைய நினது திருமுகம் அழகுடைத்து எனவும், அரசன் எழுதிய பெரிய அணி இலக்கணம் பொருந்திய ஓலைப் பாசுரம் மிகவும் இன்பமுடைத்து எனவும், இருபொருள் வழங்கி இன்பந்தருதல் உணர்க. உட்கும் நாணும் பெண்மைக் குணங்கள். நற்பல - நல்லன வாகிய பல மொழிகள். கூறி- கூற.

(மானனீகை எழுதி விடுத்தல்)

கoஉ - கூ : வழிநாள்...............அரிதாக

(பொ - ரை.) மறுநாள் காலைப் பொழுதிலே கோப்பெருந் தேவியாகிய வாசவதத்தையை அம் மானனீகை குற்றமின்றி அழகோடு ஒப்பனை அழகுசெய்து குங்குமத்தால் கோலம் எழுதி அலங்கரித்து அப்பொழுதே அத் தேவியின் நெற்றியின்மேல் முன்னர் அவ் வேந்தன் எழுதிய அந்த யவன மொழியைக் கொண்டே அம் மன்னவன் தன் பெயரை முன்னிறுத்தித் தனக்கு எழுதிய ஓலைப் பாசுரத்திற்கு ஈடாகக் கரிய நெடிய கண்களையும் நிரல்பட்ட வளையலணிந்த தோளையுடைய அம் மானனீகை மறுமொழி கொடுக்கும் எண்ணம் உடையவளாய் அத் தேவியின் நெறிப்பமைந்த கூந்தலின் அருகில் பிறர் அறிதற்கு அரிதாக; என்க.

(வி - ம்.) வழிநாள் - மறுநாள். கோப்பெருந் தேவியர் இருவருள் முதற்றேவி என்பதுதோன்ற, கழிபெருந்தேவி என்றார். புனைநலம்- ஒப்பனை; அழகு. புனையா - புனைந்து. குங்குமக் கோலம் எழுதிப் புனைந்து என்க. அவள் : வாசவதத்தை. அவன் எழுதிய பாடை - உதயணன் எழுதிய யவன மொழி. தன்பெயர் நிலை - தன் பெயர் நின்ற ஓலைப் பாசுரம். தோளி - மானனீகை- நெறி - நெறிப்பு. அறிவு - அறிதல்.

(இதுவுமது)

ககo - கள : முழுது...............அன்றால்

(பொ - ரை.) "எம்பெருமான் தமது முழுப் பேரருளையும் மேற்கொண்டு அடிச்சியாகிய எளியேனை ஒரு பொருளாக மதித்து எழுதிய திருமந்திர ஓலையை (திருமுகத்தை) என்குறை நேராதபடி விழிப்புடன் ஓதியுணர்ந்தேன். எம்பெருமான் திருவருள் வகை அடிச்சியின்பால் உண்டு என்பதனை அறிந்தேன்.

ஆயினும் எம்பெருமான் என்னிடத்துக்கொண்ட அத்திருவருளை ஒழிக! என்னைப்போன்ற பிற மகளிர்க்கு எம்பெருமான் கருதியது எவ்வாறு பொருந்தும்? அவ்வியத்தகு ஓலைப் பாசுரத்தில் அமைந்துள்ள பல மொழிக் கோவையாகிய எம்பெருமான் அருளிய உயர்மொழி வாசகம் கோப்பெருந்தேவிபோன்ற அரச மகளிர்க்கு நன்கு பொருந்துவதாகும். என்னைப்போன்ற பணி மகளிர்க்கு ஒரு சிறிதும் பொருந்துவதன்று," என்க.

(வி - ம்.) பொருளா - ஒரு பொருளாகக் கருதி. எழுதிய திருமுகம் - எழுதப்பட்ட ஓலை. (எழுதப்பட்ட தேவியின் அழகிய நெற்றி). காவலன், பெருமகன் என்பன முன்னிலைப் புறமொழி. மடந்தையர் என்பது பிற மகளிர் என்பதுபட நின்றது. இயைந்ததை - கருதியது. ஐ : சாரியை. பெருமகன் இயைந்தது பிற மடந்தையர்க்கு எவ்வாறு இயையும் என்க. தேவிமார்போன்ற உயர்ந்தோர்க்கு எனவும் என்போன்ற சிறியோர்க்கு எனவும் கூறிக் கொள்க.

(இதுவுமது)

ககஎ - உரு : இவ்வயின்..........விடலும்

(பொ - ரை.) "இவ்விடத்தே யாம் மறைந்து செய்யும் செயல்களை யாரும் காணமாட்டார் என்னும் கருத்தால் காவல் அமைந்த இடத்தில் இருந்துகொண்டு சான்றோரால் விரும்பப் படாத செயல்களைச் செய்தல் அடிச்சியேன்போன்று பெண்ணாகப் பிறந்தவர்களுக்குத் தகுதியுமன்று. அங்ஙனம் செய்யின் பிறர் கூறும் பழிச்சொல் பரவுதலே யன்றி நல்லறமும் ஒருதலையாக நீங்குவதாம்: இனி இங்ஙனம் செய்தலின் உண்டாகும் நலம் பல உள என்று பெருமான் கருதுவதாயினும் பெருமான் தகுதிக்கு மிகமிகத் தாழ்ந்த என்பால் பெருமான் வைத்த திருவருளை எள்ளி விடுதலோடன்றி அதனைத் துவர மறந்துவிடுதலே நல்ல காரியமாம்!" என்று அவள் நெஞ்சு பொருந்தி அம்மன்னனுக்கு மறுமொழி எழுதியவளாய் வாசவதத்தையை நோக்கி, "பெருமாட்டி! அடியேனுக்குச் செய்தற்கியன்ற அலங்காரம் இவ்வளவே," என்று கூறி அவளை விடுத்தலும்; என்க.

(வி - ம்.) இவ்வயின் - இவ்வரண்மனையின்கண். காவல் - காவலமைந்த இடம். பேணு செய்தல் - சான்றோரால் விரும்பப்படாத செயலைச் செய்தல். தலைமை செய் தொழுகுதல் ஆடவர்க்கே உரியது, மகளிர்க்கு இயல்பன்று என்பாள் பெண் பிறந்தோர்க்கு இயல்பும் அன்றே என்றாள். திறம் - ஈண்டு நன்மை என்பதுபட நின்றது. வைத்த அருளை - என்பால் வைத்த நினைவை என்று வாசவதத்தைக்குக் கூறிவிடலும் என்க.

(மானனீகை எழுதியதைக் கண்டு உதயணன் மீட்டும் எழுதிவிடல்)

கஉசு - ௩க : வடிவேல்...............கலங்கினனுகி

(பொ - ரை.) வடித்த வேல்போலும் மையுண்ட கண்களை யுடைய வாசவதத்தை மானனீகை ஒப்பனை செய்துவிட்ட உடன் அவ்வழகினையும் காட்டற்குத் திண்ணிய ஆற்றலுடைய அரசன் பால் சென்று வணங்காநிற்ப ; அம்மன்னன் அவள் நெற்றியின் மேல் அம் மானனீகை எழுதிவிடுத்த மொழியைக் கண்டவனாய் அதன் பொருளைக் கூர்ந்து நோக்கி அதன்கண் எழுதப்பட்டிருந்த மறுப்பு மொழிகளால் முன்பு நெருப்புச் சுட்ட புண்ணின்மேல் வேல் நுழைந்தாற்போலப் பெரிதும் மனங்கலங்கியவனாய் ; என்க.

(வி - ம்.) உண்கண் - மையுண்ட கண். காண்போர் மனத்தை உண்ணும் கண்ணுமாம். அரசன் : உதயணன். கணங்குழை : மானனீகை. இயல் - மொழிக்கியல்பான பொருள் என்க. இயையா வாசகம் - மறுப்புமொழி: கருவி - படைக்கலம்.

(இதுவுமது)

கங்க — எ : இலங்கிழைக்கு............விடுத்தலின்

(பொ - ரை.) அவ்வாசவதத்தைக்கு "நங்காய்! இங்கே ஓர் அழகினைத் திருத்திக் கவினுறச் செய்தல் வேண்டும். இங்கு வருக!" என்று கூறி அவளை அணுகி முன்னர்க் கொள்ளாத பெருங்கவலையைக் கொண்டவனாய் முன்னர்க் கைகண்ட அவ் வுபாயத்தாலேயே "மானனீகாய்! நின்மார்பு இற்றைநாள் கழியும் முன்பே என் மார்பிற் பொருந்தாதாயின் என் உயிர்போயிற்று" என்று மீண்டும் அக்கோப்பெருந் தேவியின் முகத்திலே எழுதி வாளாற்றல் பொருந்திய அவ்வேந்தன் மீண்டும் அத்தேவியை விடுத்தலாலே என்க.

(வி - ம்.) இலங்கிழைக்கு - நினக்கு. கையாற் சுட்டி - சுட்டிக் கூறலின் ஈதோர் நலம் என்றான். நலங்கவின் காட்டல் - அழகைத் திருத்திப் பின்னும் அழகுறச் செய்தல். நணுகு - இங்கு வருக. நணு கெனக் கூறுமாற்றால் - அவளை அணுகி என்க. கண்ட முறைமை - யவனமொழியால் தேவியின் நெற்றியில் எழுதுவதாகிய முன்பு கண்ட உபாயம் என்க. பண்டு - என்ஞான்றும் வராத கவலை என்க. கவல் - கவலை. ஒண்டொடி - மானனீகாய்; முன்னிலைப் புறமொழி. ஆகம் - மார்பு. தெளிவால் செல்லும் எனல் வேண்டிய எதிர்காலம் சென்றது என இறந்த காலமாகக் கூறப்பட்டது. என்னை? "விரைவினும் மிகவி னும் தெளிவினும் இயல்பினும் பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற் புழி" எனவரும் வழுவமைதிச் சூத்திரத்தால் (நன். சூ. ௩அச) உணர்க. வேந்தன் : உதயணன்.

(உதயணன் எழுதியதை மானனீகை உணர்தல்)

கருஅ - சச: பெருமகள்................புலம்பி

(பொ - ரை.) அக்கோப்பெருந்தேவி தன் மாளிகையிலே சென்று புகாநிற்ப மானனீகை அற்றைநாள் அவள் நெற்றியில் உதயணன் எழுதிவிடுத்த மொழியின் கருத்தையெல்லாம் ஒருமையுற உணர்ந்து தன் உள்ளத்தே தோன்றிய வேட்கை மிகுதி தணிவதற்கு ஓர் உசாத்துணைத் தோழியையும் பெறாளாய் நீர்ச்சுழியின்கண் அகப்பட்ட நறிய மலர்போன்று சுழலாநின்ற தன் நெஞ்சினைத் தானே திண்ணிதாகச் செய்து கொண்டு "அந்தோ! 'விளைக! பொலிக'! எம்பெருமான் எய்துகின்ற மனக்குறையை யான் சென்று இன்று தீர்ப்பேன்," என்னும் கருத்தை யுடையவளாய்த் தனித் துன்பம் உழந்து என்க.

(வி - ம்.) பெருமகள் : வாசவதத்தை. திருமகள் : மானனீகை. கோப்பெருந் தேவியோடொத்தலின் ஆசிரியர் மானனீகையைத் திருமகள் என்றார். ஒருமையின் - அவனோடு ஒருமையுற்ற மனத்தோடு எனினுமாம். வயா - வேட்கை மிகுதி. உசாத்துணை - துன்ப முற்றுழி வினவுதற்குரிய துணை. சுழி - நீர்ச்சுழி. கொட்புறு - சுழல்கின்ற. 'விளைக பொலிக' இங்ஙனம் கூறித் துன்புறுவோரை வாழ்த்துதல் பண்டைக்கால வழக்கம். "வித்தியலையில் விளைக பொலிக" எனவரும் பரிபாடலும் (கO : அரு) "விளைக பொலிக அஃதே யுரைத்திலம்" என வரும் சிந்தாமணியும் (உருO) காண்க. குறை - மனக்குறை. புலம்பி - தனித்துத் துன்புற்று.

(மானனீகை மறுமொழி எழுதிவிடுத்தல்)

கசரு - ருக: அற்றை..............விடுத்தபின்

(பொ - ரை.) அற்றை நாள் ஒருவாறு கழிந்தபின்னர் மறுநாட் காலையிலே அத்தேவியை உயர்ந்த ஒப்பனை அழகுண்டாக அலங்காரம் செய்து அவள் நெற்றியில் கூத்தப்பள்ளிக் குச்சரக் குடிகையுள் ஒருபால் அமைந்த மேடையைப் பாம்பு குறிக்கொண்டு உறையும் இடம்போலப் பிறர் அறியவியலாத இரவுக் குறியின் இடமாகக் குறித்து இலக்கணமுண்டாகத் தேவியின் திருமுகத்தை எழுதி அக்கோப்பெருந் தேவியை விட்டபின்னர் என்க.

(வி - ம்.) அவளை : கோப்பெருந்தேவியை. வழிநாள் - மறுநாள். கூத்தப்பள்ளிக் குச்சரக்குடிகை உள்பால் படுவேதிகை - நாடகம் ஆடுதற்குரிய இடத்திலுள்ள கூச்சர நாட்டுச் சிற்பம் அமைந்த குடிசையுள் ஒருபக்கத்தில் அமைந்த திண்ணை. இரவுக்குறி - தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் இரவின்கண் கூடுதற்குக் குறிப்பிட்ட இடம். அரவுக்குறி - பாம்பு குறிக்கொண்டு உறையும் இடம். இஃது இரவுக் குறியிடத்திற்கு உவமை. சேர்த்தனளாகி - குறிப்பிட்டவளாய்.

(மானனீகை எழுதியதைக் கண்டு உதயணன் உவந்தல்)

கருக - சுக : மற்றவள்..............பின்றை

(பொ - ரை.) அப்பெருந்தேவி இனிய மொழி பேசுபவளாய் அவ்வுதயணமன்னனை அணுகி அவனது வலிய தாள்களை வணங்கி மானனீகை புனைந்து விடுத்த புத்தலங்காரம் தோன்றும்படி அவன் முன்னர் நிற்ப, அவளது நெற்றியின் மேல் முறைப்படி எழுதிக் கிடந்த மானனீகையின் அருளுடைய மொழிப் பொருளைத் தெளிவுண்டாக ஓதி அறிந்து வாசவதத்தையை நோக்கி, "நங்காய்! அம்மானனீகை நமக்கு அஞ்சியவளாய் இற்றைய நாள் நின் நெற்றிமிசைப் பொலிவுண்டாக வரைந்த புதிய அழகு மிகவும் இனிது!" என்று கூறிக் காதல்மிக்க நோக்கினையுடைய மானனீகையின் திறத்திலே காமம் பெருகிக் காதலாகி மிகாநிற்ப, அதனைத் தனது பெரிய மனத்தின்கண் அடக்கிக்கொண்டவனாய் அக்கோப்பெருந் தேவியோடு கேட்டற்கு இனியனவாகிய காதல் மொழிகள் பல கூறி அப்பகற் பொழுது சென்றபின்னர்; என்க.

(வி - ம்.) தீவியமொழி - இன்சொல். சேதிபன் : உதயணன். நோன்றாள் - வலிமையுடைய கால். ஒப்பனை அழகுதோன்ற நிற்றலும் என்க. அருளேர் வாசகம் - அருள்பொருந்திய சொல்லின் பொருள். தெருள் - தெளிவு. மற்றவள் பயந்தனள் என்புழி அவள் நமக்கு அஞ்சியவளாய் எனவும் எனக்குப் பயன்பட்டவளாய் எனவும் இரு பொருள் தோன்றுதல் காண்க. மாதர் - காதல். கடிகொள - மிகாநிற்ப. அடக்குதல் அருமை தோன்ற மாமனம் என்றார். தேவி - வாசவதத்தை. பகல் - பகற்பொழுது.

(மானனீகை மறைந்திருத்தல்)

கசுஉ - ௩ : மானனீகை..............இருப்ப

(பொ - ரை.) இவ்வாறு உதயணனுக்கு இரவுக் குறி கூறி எழுதி விடுத்த மானனீகை அவ்விரவின்கண் அவ்வாசவதத்தை தன் செயலை அறிந்துகொள்ளாதபடி மறைந்து தான் அம்மன்னனுக்குக் கூறிய இடத்தின்கண் சென்று அவன் வருகையை எதிர் பார்த்து விதுப்புற்றிருப்ப என்க.

(வி - ம்.) வாசவதத்தை தன்னை அறியாமல் மறைந்து என்க. அறைகுறி - கூறிய இரவுக்குறி இடம். அஃதாவது கூத்தப்பள்ளிக்குச் சரக்குடிகை உட்பாற்படு வேதிகை என்க.

(உதயணன் செயல்)

கசுச - ரு : வென்வேல்..............கூற

(பொ - ரை.) வென்றி வேலேந்திய தலைவனாகிய அவ்வுதயணன் தானும் தன் தேவிமார் இருவர்பாலும் வேட்கை இலனாய்

அவ்விருவர்க்கும் தனித்தனியே தான் துயிலும் இடத்தை மாருகக் கூறுதலால் என்க.

(வி - ம்.) வென்வேல் - வென்றியுடைய வேல். தலைவன் : உதயணன். தேவியர்பால் வேட்கை இன்றி என்றார் அவன் வேட்கை முழுவதும் மானனீகையின்பால் செல்லுதலின். தேவியர்பால் வேட்கை இலனாய் என்பது கருத்து. காமுற்றார் குணம் இன்னதாதலை,

"சிற்றிடைச் சீதை யென்னு நாமமுஞ் சிந்தை தானும்
உற்றிரண் டொன்றாய் நின்றா லொன்றொழித் தொன்றை யுன்ன
மற்றொரு மனமு முண்டோ மறக்கலாம் வழிமற்றி யாதோ
கற்றனர் ஞான மின்றேற் காமத்தைக் கடக்க லாமோ"

(கம்ப. மாரீச. அச)

எனவரும் இராமாவதாரத்தானும் உணர்க. மாறுதுயில் கூற என்றது பதுமாபதியின்பால் வாசவதத்தையின் மாளிகையில் துயிலப் போவதாகவும் வாசவதத்தைக்குப் பதுமாபதியின் மாளிகையின்கண் துயிலப் போவதாகவும் மாறுபாடாகக் கூறி என்றவாறு.

(வாசவதத்தை உதயணனை ஐயுற்று அவன் செயலை ஒற்றி வரும்படி காஞ்சனமாலையை விடுத்தல்)

ககூகூ - எக : கயில்..........இருப்ப

(பொ - ரை.) மூட்டுவாய் அமைந்த அணிகலனணிந்த வாசவதத்தை முன்னரே அம்மன்னவன் கூற்றில் ஐயங் கொண்டவளாய் இருத்தலினாலே அவன் தன்னை விலக்கியவனாய் ஒதுங்கிப் போதலைக் கண்டு தன் தோழியாகிய காஞ்சனமாலையைக் கையினால் அழைத்து "ஏடீ! நீ பிறர் அறியாமல் மலர்மாலையணிந்த மார்பினையுடைய நம்பெருமான் சென்று புகும் இடத்தை அறிந்து வருக!" என ஏவுதலாலே, காஞ்சனமாலை அவன் அறியாமல் அவனைத் தொடர்ந்து சென்று, மானனீகை யாண்டுளள்? என்று அவ்விருளின்கண் ஆராய்ந்த அவ்வேந்தன் அக் கூத்தாட்டுக் குச்சரக் குடிகையுள் சென்ற பின்னர்த் தானும் ஒருபக்கத்தே மறைந்திராநிற்ப என்க.

(வி - ம்.) கயில் - மூட்டுவாய். கோதை : வாசவதத்தை. அயிர்த்தனள் - முன்னரே ஐயுற்றவளாய். இருப்ப - இருந்தமையால். ஐயுற்றமைக்குக் காரணம் இக்காதையின் கங ஆம் அடி தொடங்கி கூ - ஆம் அடி ஈருக நோக்கியறிக. பெயர்த்தனன் - தன்னை விலக்கிய - கவனாய். ஒதுங்கி - தன்பால் நின்றும் விலகி. கைவயிற் பயிர்ந்து (வாயால் அழையாமல்) கைகாட்டி அழைத்து. மார்பன் : உதயணன். ஆய்ந்த வேந்தன் - மானனீகை எங்குளள் என்று ஆராய்ந்த உதயணன். ஒரு சிறை - ஒரு பக்கத்தில்.

(உதயணன் மானனீகையுடன் அளவளாவல்)

௧௭௨ – அ௧ : திருத்தகு..........நீங்க

(பொ - ரை.) திருமகள் விரும்பி வீற்றிருத்தற்குத் தகுந்த மார்பினையுடைய உதயணமன்னன் மானனீகையின் நினைவோடே அக் கூத்தப்பள்ளியுட் புகுந்து ஆங்குத் தன் வரவினை எதிர் பார்த்திருந்த அம் மானனீகையைப் பேரார்வத்தோடு தழுவி இருவர் துயரமும் ஒருசேர அகலும்படி ஆங்குக் கூடிய காம வேட்கையினால் ஒருவரோடொருவர் ஊடியும் கூடியும் நெடும் பொழுது விளையாடியும் இருந்த பின்னர் அவ்விருவரும் முறை முறையாகத் திருத்தமுடைய கோப்பெருந்தேவியின் திருமுகத்திலே ஒருவர்பால் ஒருவர்க்குப் பொருந்திய காதற் பண்போடே எழுதிவிடுத்த மொழிகளையெல்லாம் ஒருவருக்கொருவர் கூறிக் கூறிச் சிரித்த பின்னர், அம் மன்னவன் அம் மானனீகையை நோக்கி "ஒருநாளும் தவிர்தலின்றி இக் கூத்தப்பள்ளியின்கண் நாம் வந்து கூடுதல் வேண்டும்!" என்று கூறித் தனது சிறுவிரல் மோதிரத்தை அவட்கு அன்புப் பரிசிலாக வழங்கி அரண்மனைக் குட் செல்லாநிற்ப என்க.

(வி - ம்.) மார்பன் : உதயணன். கருத்தொடு - மானனீகையின் நினைவொடு. நடுக்கம் : ஆகுபெயர்; துன்பம் என்க. இருவரும் – உதயணனும் மானனீகையும். வாசவதத்தை முகத்து எழுதிய வாசகம் என்க. வைகலும் - நாடோறும். ஈங்கே - இக் கூத்தப் பள்ளியிலேயே. குறி - கூடுதற்குக் குறிப்பிட்ட இடம். கோயில் - அரண்மனை.

(காஞ்சனமாலை தான் அறிந்ததை வாசவதத்தைக்கு உணர்த்தல்)

௧௮௨ - ௪ : விடுத்தவள்..............உரைப்ப

(பொ - ரை.) இனி வாசவதத்தையால் விடுக்கப்பட்ட காஞ்சனமாலை அம் மன்னன் சென்று மானனீகையைக் கண்டதும் கூறியதும் தன்னுள்ளே பொருமலோடு தனித்தனியே விளங்கும்படி இன்னது இன்னது என்று எடுத்து எடுத்து நல்ல நுதலையுடைய அவ் வாசவதத்தைக்கு உணர்த்தாநிற்ப என்க.

(வி - ம்.) விடுத்தவள் : பெயர்; காஞ்சனமாலை. பொருமல் - துன்பத்தால் நெஞ்சம் விம்முதல். நன்னுதல் : வாசவதத்தை.

(வாசவதத்தை உதயணனைக் கண்டு கூறல்)

௧௮௫ - ௯௦ : முறுவல்..............என

(பொ - ரை.) வாசவதத்தை காஞ்சனமாலை கூறிய செய்தி கேட்டுச் சினத்தைத் தன் நெஞ்சினுள்ளே அடக்கிக்கொண்டு

புன்முறுவல் பூத்து அத் துன்பத்தைப் பொறுக்கமாட்டாளாய்ச் சிறிதுபொழுது பெருமூச்செறிந்து ஒருவாறு ஆற்றியிருந்து, பொழுது விடிந்தபொழுது மன்னவனை அணுகி நன்மைமிக்க மலர்களை அம் மன்னவன் அடியிற் றூவித் தொழுது வணங்கி அவன் பக்கத்தே இருந்து "மன்னர் மன்ன! யான் கழிந்த இரவின்கண் ஒரு கனவு கண்டேன். அக்கனவின் புதுமையைப் பெருமான் கேட்டருளின் அதனால் வரும் குற்றம் தீர்ந்ததாம்" என்று கூறுநிற்ப என்க.

(வி - ம்.) முறுவல் - ஈண்டுச் சினச் சிரிப்பு. செறு - சினம். இறை - சிறிது பொழுது. புலர்ந்த காலை - விடிந்த பொழுது. புரவலன் - அரசன். இரவு ஒரு கனவு கண்டேன் என மாறுக. ஒருவர் கண்ட தீக்கனவை நண்பர்பால் கூறின் அதன் தீமை குறையும் என்பது கனா நூற் கொள்கை. குறை - குற்றம். அக்கனவு நின் உயர்வு தீர்ந்த கனவாம் என்றும் ஒருபொருள் தோன்றிற்று. இதற்குப் புரை உயர்வு என்னும் பொருட்டு.

(உதயணன் வினவுதல்)

கககூ - உ : செவ்வாய்...............கேட்ப

(பொ - ரை.) "சிவந்த வாயையும் வெளிய பல்லினையும் திருந்திய அணிகலனையு முடைய கோமகளே! நீ கண்ட கனவு எப்படியோ?" என்று கூறி வினவாநிற்ப என்க.

(வி - ம்.) திருந்திழை : வாசவதத்தை; விளியேற்று நின்றது.

(வாசவதத்தை கூறல்)

ககூஉ — உ0உ : நின்...............வாழ்கென

(பொ - ரை.) "பெருமானே! யான் கண்ட கனவினைக் கூறுவல், கேட்டருள்க! எம்பெருமான் மனத்தினின்றும் அகலாத எனக்கு ஒளித்து எழுந்து தனியே போய் ஒரு பெரிய தோளை யுடைய மடந்தையோடே கூத்தாடும் மேடையிலேஏறி, அவளைத் தழுவி இருந்து அவளோடு ஊடியும் உணர்ந்தும் கூடி விளையாடியும் ஒருவரை ஒருவர் ஆராய்ந்து தெளிவோராய் நீயிர் இருவீரும் தெளிவுண்டாக ஒருவருக்கொருவர் மாறுமாறாக எழுதிவிடுத்த காதற் செய்திகளை ஒருவருக்கொருவர் கூறி மகிழ்ந்து அவளும் நீயும் ஒருவர்பால் ஒருவர் கொண்டுள்ள மயலைக் கூறி அளவளாவிப் பிரிந்து எழுந்துபோகின்ற பொழுதில் பெருமான் நின் சிறுவிரல் மோதிரத்தை அவளுக்கு வழங்கிப் புறப்பட்டாய்! அவ்வளவில் என் கண்கள் விழித்தன; விழித்துப் பார்க்குங்கால் பொழுதும் புலர்ந்தது, உலகங் காவலனே நீடூழி வாழ்க!" என்று கூறு நிற்ப என்க.

(வி - ம்.) ஆடரங்கு - கூத்தாடு மேடை. தேறினிர் - தெளியும் பொருட்டு. தெளிவுடன் எழுதிய வாசகம் என்க. மயல் - காம மயக்கம். போதையின் - பொழுதில். புரவல என்றது இகழ்ச்சி.

(உதயணன் கூற்று)

உ0ரு - அ : வண்டலர்..............என

(பொ - ரை.) அதுகேட்ட வுதயணன் வாசவதத்தையை நோக்கி "வண்டுகள் மொய்க்கும் மலர் மாலையிணையுடையோய்! நீ நின் மனத்தினுள் நிகழாத நிகழ்ச்சி ஒன்றனைக் கற்பனையாக நினைந்தனைபோலும். ஆதலின் நீ கலங்கினை! அந் நினைவே இங்ஙனம் கனவாகப் பரிணமித்தது; பேதாய்! யான் எப்பொழுதும் நின் நெஞ்சினுள்ளேயே உறைவேனாகவும், நீ என்னை இவ்வாறு கள்வனென்று கருதினைபோலும். அல்லது கற்பு நெறி வழுவா மகளிர் தங்கணவர் திறத்தே நினைப்பனவும் காண்பனவும் ஆகிய நினைவும் கனவும் இவை இவை போல்வனபோலும்!" என்றனன், என்க.

(வி - ம்.) மனத்தின் கண்ணும் இல்லாத தொரு நிகழ்ச்சியை நீ கற்பித்துக் கோடலின் அந்நினைவே உனக்குக் கனவாகத் தோன்றலாயிற்று என்று இங்கு உதயணன் வித்தகமாக மறுமொழி கூறுகின்றான். மனத்தின்கண் உள்ள நினைவு கனவாகப் பரிணமித்துத் தோன்றுதல் உண்டு என்பதனை, "ஓர்த்தது இசைக்கும் பறைபோல் நின் நெஞ்சத்து வேட்டதே கண்டாய் கன" எனவரும் கலியானும் (சுஉ · உக - ரு) உணர்க. நெறி - கற்பொழுக்கம். நினைக்கும் நினைவும் காணும் கனவும் இங்ஙனம் இருக்கும் போலும். இதனால் குலமகளிர் காரணமின்றியே இங்ஙனம் தங்கணவர் திறத்திலே கனக் காண்டல் இயல்பு ஆகலின் இதனை ஒரு பொருளாகக் கொள்ளற்க என்று அவளை மருட்டினனாயிற்று.

(வாசவதத்தை கூற்று)

உ0சு - கச : கனவில்..............அகறர

(பொ - ரை.) அது கேட்ட வாசவதத்தை, "பெருமானே! ஒருவர் தாம் கனவிற்கண்ட நிகழ்ச்சியைப் பிறர் ஒருவர் கேட்கக் கூறினால் அக் கனவின் தீமை நீங்கும் என்று கன நூல் கூறுதலாலே இக் கனவினை யான் கூறினேன். அல்லாமலும் யான் எத்தகைய கனவினைக் கண்டாலும் பெருமான்பால் கூறுவதன்றி வேறு யாருக்குக் கூறுகேன்?" என்று கூறி மான்போலும் நோக்கினையுடைய அத் தேவி தன் நெஞ்சினுள்ளே நகைத்தவளாய்ப் பின்னும் அமையாத எண்ணத்தோடே அவ்விடத்தினின்றும் செல்லாநிற்ப என்க.

(வி - ம்.) 'கனவிற்கண்டது பிறரொடு பேசக்குறைபோம்' என்றது கன நூலினின்றும் எடுத்துக் காட்டியபடியாம். காவலற்கு :

முன்னிலைப் புறமொழி. பெரியோய் என்றது இகழ்ச்சி. அகறர - அகல.

(உதயணன் செயல்)

உகசு - எ : வேந்தன்.............புக

(பொ - ரை.) தன் மொழியை இப்பேதை வாய்மை என்றே கொண்டனள் என்று கருதிய உதயணன் யாம் ஒரு வகையால் தேவியின் ஐயத்தைத் தீர்த்துத் தெளிவித்தேம். இனி இதுபற்றி ஐயங் கொள்வோர் யாரும் இல்லை என்று மானனீகை யின் நினைவோடு இனிதே இருந்து மகிழா நிற்பவே கதிரவனும் தன் தேரோடு மேலை மலையை அடைந்தானாக என்க.

(வி - ம்.) ஒருவகையால் ஐயம் தெளித்தனம் என்க. இனி ஐயுறுவார் யாரும் இல்லை என்று கருதி என்க. பானு - கதிரவன். வரை - மலை.

(வாசவதத்தையின் செயல்)

உகஅ - உ0 : மானனீகை..............இருப்ப

(பொ - ரை.) கதிரவன் மறைந்த பின்னர் மாந்தளிர் போலும் நிறமுடைய வாசவதத்தை நல்லாள் அம்மானனீகை யைச் சிறையில் அடைத்துக் காவல் வைத்தவளாய்த் தன் தோழி யாகிய காஞ்சன மாலையோடே சென்று அம்மானனீகை குறிப் பிட்ட அக்கூத்தப்பள்ளி மேடைமீது அம்மானனீகைக்கு மாறாக இருளின்கண் தானே சென்றிரா நிற்ப என்க.

(வி - ம்.) மாந்தளிர் மேனி : வாசவதத்தை. நேர்ந்த அக்குறி - மானனீகை மன்னனுக்கு நேர்ந்த குறியிடம்; என்றது கூத்தப்பள்ளி வேதிகையை. தான் சென்றிருப்ப என்றது தன்னோடு வந்த காஞ்சன மாலையை வேறிடத்தே மறைத்து வைத்துத் தான் மட்டுமே சென் றிருப்ப என்பது பட நின்றது.

(உதயணன் செயல்)

உஉக - ச : நிகழ்ந்ததை..............நீக்கலும்

(பொ - ரை.) இருள் கவிந்ததும் இங்கு நிகழ்ந்த நிகழ்ச்சி யை அறியாதவனாய் உதயணமன்னன் அம்பலத்தினின்றும் எழுந்து மெல்ல நடந்துசென்று அவள் கூறிய அக்கூத்தப் பள்ளிக் குச்சரக்குடிசையில் சென்று புகுந்து ஆங்கிருந்த வாச வதத்தையை மானனீகை என்றே கையால் அணைக்க முயலலும் அவ்வாசவதத்தை இவன் செய்வதனைக் காண்பேம் என்று கருதிய வளாய் மூங்கில்போலும் தோளையுடைய அத்தேவி அவனைத் தன் கையால் தடுத்தவளாய் மற்றொருபுறம் செல்லாநிற்ப என்க.

(வி - ம்.) நிகழ்ந்ததை - வாசவதத்தை மானனீகையைச் சிறைப் பிடித்ததும் தானே அங்கிருத்தலும் ஆகிய இந் நிகழ்ச்சிகளை என்க. பிறர் அறியாமற் செல்ல வேண்டுதலின் மெல்ல நடந்து என்றார். வேந்தன் செய்வது காண்குவம் என்பது தேவியின் உட்கோள். காம் பேர் - மூங்கிலையொத்த. தோளி : வாசவதத்தை.

(இதுவுமது)

உஉரு - ௩உ : மானனீகை..............தரியான்

(பொ - ரை.) அஃதுணர்ந்த மன்னன் அம்மானனீகையே தன்பால் பிணங்கியவளாய்த் தன் கருத்திற்கு இணங்காளாயினள் போலும் என்று எண்ணி, "மானே! தேனே!! மானனீகாய்!!! ஏனிந்த ஊடல்? வெற்றிமுரசு முழங்குதற்குக் காரணமான படைகளோடே எனது அரசுரிமையை நீ விரும்பினும் இப் பொழுதே தருகுவன்காண்! இனி நின் துயரம் யாதாயினும் ஒழிக" என்று கூறி அவளது காலைப் பற்றுவான் தொடங்க; அது கேட்ட வாசவதத்தை பின்னரும் அம்மன்னவன் கூறு வதனைக் கேட்கும் பொருட்டு அவன் பற்றுதற்குக் காலுங் கொடாளாய் மறுத்துப் பின்னும் ஒதுங்கா நிற்பத் தன் நெஞ்சில் நிலையுதலுற்ற காமம் மிகுதலாலே அத்துன்பத்தைப் பொறுனாய் என்க.

(வி - ம்.) அரசு - அரசுரிமை. இன்னே - இப்பொழுதே. பரு வரல் - துன்பம். ஆர்வத்தால் மும்முறை விளித்தான். அம் மன்னன் பின்னும் உரைப்பதனைக் கேட்கும் பொருட்டு என்க. அவள் : வாசவ தத்தை. ஒதுங்கி - ஒதுங்க. தரியான் - பொறான்.

(இதுவுமது)

உ௩௩ - ௪0 : புதுமை..............உரைப்ப

(பொ - ரை.) அதுகண்ட அவ்வுதயணன் யான் இவளுக்கு இப்பொழுது புதுமையுடைய ஒரு செய்தியைக் கூறி இவள் முகத்தைப் பெறுவேன் என்று கருதியவனாய் "நங்காய்! யான் இப் பொழுது கூறும் ஒரு மொழியைக் கேட்பாயாக! கொடி முல்லை யின் அரும்பை யொத்த பற்களையும், அழகிய முகத்தையும் உடைய அழகிய பூங்கொடி போன்றவளாகிய வாசவதத்தை காதலாற் கலந்த உள்ளமுடைய நம்மிருவர்க்கும் கழிந்த இரவின் கண் நிகழ்ந்த நிகழ்ச்சியையெல்லாம் கனா முந்துறாத வினை இல்லை என்பவாகலின் தன் கனவிற் கண்டு அதனை எனக்கு ஒளியாமல் கூற," என்க.

(வி - ம்.) முல்லைக் கொடிமுகை என்க. முகை - அரும்பு. நகை - பல். தகை - அழகு. காதலால் இயைந்த என்க. சில நிகழ்ச்சி கள் நிகழ்ந்தபின் சிலர்க்குக் கனவிற்றோன்றுதல் உண்டு என்னும்

கொள்கையுண்மையால் இந்நிகழ்ச்சி அவள் கனவில் தோன்ற லாயிற்றுப்போலும் என்றான் என்க. முந்திய வினையது கனவு என்க. "இல்லை கனு முந்துறுத வினை" என்பது பழமொழி (2) அதனில் - அக் கனவில்.

(இதுவுமது)

உசக - எ : அதற்கு.............வருதலின்

(பொ - ரை.) "அங்ஙனம் கூறி ஐயுற்ற அவள் ஐயத்தைப் போக்குதற்கு ஒரு வழியாக அத்தகைய எண்ணந்தானும் என் மனத்தினும் இல்லை என்று கூறி யான் அவளைத் தெளிவித்த செய்தியையும் நீ தெளிந்தாய் இல்லையே!" என்று கூறிக்கொண்டு அவள் விலகுந்தோறும் விலகுந்தோறும் முறை முறையே வணங்கி "அழகின் இருப்பிடமே! மானனீகாய்! அளியேனுக்கு அருள் செய்க!" என்று அடுத்தடுத்துக் கூறவும், ஆற்றான் ஆக வும், இன்பந்தரும் நன்மொழி பற்பல நவிலவும் வணக்கஞ் செய் யவும் தன்மேல் மிகவும் நெருங்கி வருதலாலே என்க.

(வி - ம்.) பெயரப்பெயர - அவள் விலகுந்தோறும் விலகுந் தோறும். இயல்நிலை - அழகின் உறையுளே; விளி. இயல் - அழகு. இதச்சொல் - இன்பம் தரும் சொல்.

(வாசவதத்தையின் செயல்)

உசஎ - ருக : பிடித்தல்..............காணென

(பொ - ரை.) அவ்வாசவதத்தை தன் கொள்கையைக் கடைப்பிடித்தல் இயலாதவளாய்ப் பொள்ளென நகைத்துப் "பெரியோய்! நீ கூறிய 'மானும் தேனும் மானனீகையும்' யான் அல்லேன்காண். என் பெயர் வாசவதத்தை கண்டாய்!" என்று திருவாய் திறந்து கூறுநிற்ப என்க.

(வி - ம்.) பெட்ப - மிக. பிடித்தல் - கடைப்பிடித்தல். மிக் கோய் என்றது இகழ்ச்சி. நான் மானும் அல்லேன், தேனும் அல் லேன், மானனீகையும் அல்லேன், என் பெயர் வாசவதத்தை என்று சினந்து கூறியவாறு.

(உதயணன் செயல்)

உருக - ரூ.: கைவிட்டு............இருப்ப

(பொ - ரை.) வாசவதத்தையின் குரல் கேட்ட அளவிலே மன்னன் அவளைக் கைவிட்டு விரைந்து ஓடினன். அங்ஙனம் ஓடியவன் அடுத்துள்ள அழகிய ஒரு மண்டபத்தினுட் புகுந்து ஒளிந்தவனாய் மனந் திகைத்திராநிற்ப என்க.

(வி - ம்.) .காட்சி - அழகு. மண்டபத்துத் தனித்து ஒளித்தவனுய் என்க.

(வாசவதத்தையின் செயல்)

உ௫ச - ரு : சினம்...............பொலிந்தென்

(பொ - ரை.) இவ்வாற்றல் சினங்கொண்டு சென்ற கோப் பெருந்தேவி தன் மாளிகையில் சிந்தனையோடு சிறிது பொழுது உறையாநிற்பவே அவ்விரவும் புலர்ந்து உலகமும் பொலிவுற்றது என்க.

(வி - ம்.) பெயர்ந்தவள் : வாசவதத்தை. கங்குல் புலர்ந்தது உலகம் பொலிந்து தோன்றிற்று என வருவித் தோதுக.

கரு. முகவெழுத்துக் காதை முற்றிற்று.

கச. மணம் படு காதை

இதன்கண் — வாசவதத்தை மானனீகையின் கூந்தலைக் குறைக்கப் புகுதலும், வயந்தகன் உதயணனைத் தேடுதலும், உதயணன் நிகழ்ந்ததை அவனுக்குக் கூறலும், வயந்தகன் கூறலும், வயந்தகன் வாசவதத்தையைக் காணலும், வாசவதத்தை அவனுக்குக் கூறலும், வயந்தகன் கூற்றும், கத்தரிகைகளின் வகைகளும், உதயணன் யூகியை வருவித்துக் கூறலும், யூகி விடை கூறுதலும், யூகி பித்தர் வேடம் தரித்தலும், தோழியர் யூகியின் வேடத்தைக் கண்டு ஓடலும், வயந்தகன் சிலதியை உதயணன்பால் விடுத்தலும், உதயணன் பதுமாபதியை வருவித்தலும், பதுமாபதி உதயணனை வினவுதலும், உதயணன் அவளை வாசவதத்தையின்பால் விடுத்தலும், பதுமாபதி வாசவதத்தையை வேண்டிக் கொள்ளலும், கோசல மன்னன் தூதுவர் வரவும், தூதர் உதயணனுக்கு ஓலை கொடுத்தலும், அவன் அவ்வோலையை வாசவதத்தைக்கு விடுத்தலும், வாசவதத்தை பதுமாபதியைக் கொண்டு ஓலையைப் படிக்கச் செய்தலும், அவ்வோலையில் எழுதப்பட்ட செய்தியும், பதுமாபதி ஓலையை வாசவதத்தையிடம் கொடுத்தலும், வாசவதத்தை அதனைப் படித்துணர்ந்து தன் செயலுக்கு வருந்துதலும், மானனீகையின் கட்டை அவிழ்த்து விடுதலும், அவளை அலங்கரித்தலும், வயந்தகன் உதயணனுக்குத் தெரிவித்தலும், உதயணன் மகிழ்தலும், மானனீகையை மணம் செய்து கொள்ளலும், கூறப்படும்.

புலர்ந்த காலைப் புதுமண மாதரை
மாபெருந் தேவி கூவினள் சீறி
ஓவிய வெழினித் தூணொடு சேர்த்துக்
கோற்றவன் றன்னொடு கூத்தப் பள்ளியுட்
சொற்றது சொல்லெனக் கச்சினின் யாத்தனள்
அருகோரு மாதரை யிவண்மயி ரரிதற்
கொருகத் தரிகை தருகென வுரைப்ப
மறையக் கண்ட வயந்தக னவ்வயின்
விரைவிற் சென்று வேந்தைத் தேட
அறிந்து வேந்த னறிபயிர் காட்டப்
பரிந்தன னாகிப் பட்டதை யுரைப்ப
மற்றவ ளோருமயிர் கருவி தீண்டின்

இற்ற தென்னுயி ரிதுநீ விலக்கென
நிகழ்ந்த தென்னென நீகடைக் கூட்ட
முடிந்த தென்ன மடந்தையர் விளையாட்
டன்றியுங் கரவொடு சென்றவள் புதுநலம்
கொண்டொளித் தருளக் கூறலு முண்டோ
கொற்றத் தேவி செற்றந் தீர்க்கும்
பெற்றிய ரெவரே யாயினும் பெயர்வுற்
றுறேழ் நாழிகை விலக்குவ லத்துணை
வேறொரு வரைநீ விடுத்தரு ளென்று
வென்றி வேந்தன் விடுப்ப விரைவொடு
சென்றறி வான்போற் றேவியை வணங்கிக்
கொற்றவற் றேடக் கோபமென் றொருத்தி
கைத்தலத் தமைப்பக் கானடுங் கினன்போற்
குறையிவட் கென்னெனக் கோமக ளறியா
வார்ப்பொலி கழற்கான் மன்னவ ருருவிற்
றூர்த்தக் கள்வன் பாற்போய்க் கேளென
....
குறையிவட் குண்டேற் கேசங் குறைத்தற்
கறிவேன் யானெனக் குறையெனக் கூறலும்
மற்றதற் கேற்ற வகைபல வுண்டவை
பத்திக ளாகியும் விற்பூட் டாகியும்
அணில்வரி யாகியு மான்புற மாகியும்
மணியற லாகியும் வயப்புலி வரிபோல்
ஒழுக்கத் தாகியு முயர்ந்துங் குழிந்தும்
கழுக்கொழுக் காகியுங் காக்கையடி யாகியும்
துடியுரு வாகியுஞ் சுழலா றாகியும்
பணிவடி வாகியும் பாத்திவடி வாகியும்
இருப்பவை பிறவுமா மெடுத்ததை யருளுநின்
திருக்கர மலர்மயிர் தீண்ட றகாதால்
ஒருகத் தரிகை தருகென வாங்கி
ஒருபுல் லெடுத்தன னதனள வறியா
நான்மையின் மடித்தொரு பாதி கொண்டதன்
காதள வறிந்தணி யாணியும் பிறவும்
மதிப்பொடு பல்காற் புரட்டினன் னோக்கி
எடுத்திரு கையுஞ் செவித்தலம் புதையாக்

கண்சிம் புளியாத் தன்றலை பணித்திட்
டிங்கித னிலக்கண மெளிதோ கேளினி
நீர்மையுங் கூர்மையு நெடுமையுங் குறுமையும்
சீர்மையுஞ் சிறப்புஞ் செறிந்துவனப் பெய்திப்
பூத்தொழின் மருவியது புகர்வயி னணைந்தோர்க்
காக்கஞ் செய்யு மணங்கொடு மருவிய
இலக்கண முடைத்தீ திவண்மயிர் தீண்டின்
நலத்தகு மாதர்க்கு நன்று மதனல்
மற்றேன் றுளதேற் பொற்றேடி யருணீ
இத்தகைத் தீதென வெடுத்தன னெறிய
ஆகிய துணரும் வாகை வேந்தன்
யூகியை வருகெனக் கூவினன் கொண்டு
புகுந்ததை யெல்லாங் கணந்தனிற் புகல
வயந்தகன் மொழிபொழு திழிந்த தென்செயல்
யானு மவ்வள வானவை கொண்டு
தேனிமிர் கோதை கேசந் தாங்குவென்
மற்றறி யேனென வணங்கினன் போந்து
கற்றறி வித்தகன் பொற்பணி வெண்பூக்
கோவைத் தந்த மேவரச் சேர்த்திக்
கூறை கீறிச் சூழ்வர வுடீஇ
நீறுமெய் பூசி நெடிய மயிர்களை
வேறுவே றுகும் விரகுளி முடித்துக்
கண்டோர் வெருவக் கண்மல ரடக்கம்
கொண்டோ னாகிக் குறியறி யாமற்
கைத்தல மொத்தாக் கயிட படை கொட்டிப்
பித்த ருருவிற் றுட்கெனத் தோன்றலும்
ஏழை மாதரைச் சூழ்வர நின்ற
பாவையர் பலரும் பயந்திரிந் தோடி
விழுநரு மெழுநரு மேல்வர நடுங்கி
அழுநருந் தேவிபின் பணைநரு மாகத்
தேன்றோர் கூந்த லுனது நோக்கி
மேன்மே னகைவர விரும்பின ணிற்ப
நின்ற வயந்தக னிகழ்ந்ததை யுணர்த்தென
அங்கொரு சிலதியை யரசற் குய்ப்பப்
புதுமான் விழியிற் புரிகுழற் சேவ்வாய்ப்

பதுமா பதியை வருகெனக் கூஉய்
வில்லேர் நுதல்வர வேந்தன் சென்றெதிர்
புல்லினன் கொண்டு மெல்லென விருந்தோன்
றுரைப்ப வெண்ணி மறுத்துரை யானுய்த்
திகைப்ப வாயிழை கருத்தறிந் தனளாய்
அடிக ணெஞ்சிற் கடிகொண் டருளுமக்
கரும மெம்மோ டுரையா தென்னென
யானுரை செய்யக் கூசுவென் றவ்வை
தானே கூறு நீயது தாங்கியேன்
செயிர்கா ணுதை தெய்வ மாதலின்
உயிர்தந் தருளென வுரவோன் விடுப்ப
முறுவல்கொண் டெழுந்து முன்போந் தாயிழை
தகும்பதந் தாழத் தானவட் கறியப்
புகுந்ததை யுணர்த்த வருந்திவள் பொருளாச்
சீறி யருளுதல் சிறுமை யுடைத்திது
வீறுயர் மடந்தாய் வேண்டா செய்தனை
அன்புடைக் கணவ ரழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை
அறியார் போலச் சிறியோர் தேஎத்துக்
குறைகண் டருளுதல் கூடா தன்றியும்
பெற்றேன் யானிப் பிழைமறந் தருளென
மற்றவள் பின்னரும் வணங்கின ணிற்பக்.
கோமகற் கவ்வயிற் கோசலத் தவர்புகழ்க்
காவலன் றூதுவர் கடைத்தலை யாரெனக்
கடைகாப் பாளன் கைதொழு துரைப்ப
விடைகொடுத் தவரைக் கொணர்மி னீரெனப்
பொன்றிகழ் கோயில் புகுந்தனர் தொழுதொரு
மந்திர வோலை மாபெருந் தேவிக்குத்
தந்தனன் றனியே வென்றி வேந்தன்
கோவே யருளிக் கொடுக்கென நீட்டவும்
ஏயமற் றிதுவு மினிதென வாங்கி
ஏவற் சிலதியை யாவயிற் கூஉய்த்
தேவிகட் போக்கத் திறத்துமுன் கொண்டு
பதுமா பதியைப் பகருகென் றளிப்ப
எதிரெழுந் தனளா யதுதான் வாங்கிக்

கோசலத் தரச ேனைலை மங்கை
வாசவ தத்தை காண்கதன் றங்கை
மாசின் மதிமுகத்து வாசவ தத்தை
பாசவற் படப்பைப் பாஞ்சா லரசன்
சோர்விடம் பார்த் தென் னூரேறிந் தவளுடன்
ஆயமுங் கொண்டு போயபின் பவனை
நேர்நின் றனனாய் நெறிபடப் பொருதுகோல்
வத்தவர் பெருமான் மங்கையர் பலருடன்
பற்றினன் கொண்டு நற்பதிப் பெயர்ந்து
தனக்குந் தங்கை யியற்பது மாபதி
அவட்குங் கூறிட் டளிப்பத் தன்பால்
இருந்ததுங் கேட்டேன் வசுந்தரி மகளெனப்
பயந்த நாளொடு பட்டதை யுணர்த்தாள்
தன்பெயர் கரந்து மான னீகையென்
றங்கொரு பெயர்கொண் டிருந்ததுங் கேட்டேன்
அன்புடை மடந்தை தங்கையை நாடி
எய்திய துயர்தீர்த் தியான்வரு காறும்
மைய லொழிக்க தைய ருன்மற்
றிதுவென் குறையென வெழுதிய வாசகம்
பழுதின் ருக முழுவது முணர்ந்து
வாசக முணரேன் வாசிமி னடிகளென்
ருசி றவ்வை தன்கையிற் கொடுப்ப
வாங்கிப் புகழ்ந்து வாசகந் தெரிவாள்
ஏங்கிய நினைவுட னினைந்தழு துகுத்த
கண்ணீர் கொண்டு மண்ணினை நோக்கிப்
பெண்ணீர் மைக்கியல் பிழையே பொன்மெனத்
தோயு மையலிற் றுண்ணெ னெஞ்சமொ
டாயிழை பட்டதற் காற்ரு ளாயவள்
கையிற் கட்டிய கச்சவிழ்த் திட்டு
மைவளர் கண்ணியை வாங்குபு தழீஇக்
குழூஉக்களி யானைக் கோசலன் மகளே
அழேற்கவெம் பாவா யரும்பெறற் றவ்வை
செய்தது பொறுவெனத் தெருளாள் கலங்கி
எழுதரு மழைக்க ணிரங்கிநீ ருகுப்ப
அழுகை யாகுலங் கழுமின ளழிய

விம்மி விம்மி வெய்துயிர்த் தேன்குறை
எம்முறை செய்தே னென்செய் தேனென
மாதர்க் கண்ணீர் மஞ்சன மாட்டி
ஆதரத் துடைந்தனள் பேதைகண் டுடைத்துக்
கெழீஇய வவரைக் கிளந்துடன் போக்கித்
தழீஇக் கொண்டு தானெதி ரிருந்து
தண்ணென் கூந்த றன்கையி னுற்றிப்
பண்ணிய நறுநெயு மெண்ணெயும் பெய்து
நறுநீ ராட்டிச் செறிதுகி லுடீஇப்
பதுமையுந் தானு மினியன கூறிப்
பொருவில் பக்கத்துப் பொற்கல மேற்றி
வருகென மூவரு மொருகலத் தயில
வரிநெடுந் தொடையல் வயந்தக னவ்வயின்
விரைவிற் சென்று வேந்தற் குரைப்ப
முகிழ்ந்தேய் மாமதி புகர்நீங் கியதெனத்
திருமுக மலர முறுவல்கொண் டெழுந்து
வருகெனத் தழீஇ முகமன் கூறி
ஒருபுட் பெற்றே னெருந லினிதென
அதுநிகழ் வேலையிற் புதுமண மாதரை
வதுவைக் கோலம் பதுமை புனைகென்
றங்கொரு சிலதியைச் செங்கோல் வேந்தன்
தன்பால் மணநிலை சாற்றென் றுரைப்பப்
பிணைமலர்த் தொடையற் பெருமக னவ்வயிற்
பணைநிலைப் பிடிமிசைப் பலர்வரச் சாற்றி
விரைபரித் தேரொடு படைமிடைந் தார்ப்ப
முரசுமுழங்கு முற்றத் தரசுவந் திறைகொளக்
கோலத் தேவியர் மேவினர் கொடுப்ப
ஓவிய ருட்கு முருவியை யுதயணன்
நான்மறை யாளர் நன்மணங் காட்டத்
தீவலஞ் செய்து கூடிய பின்றை
முற்றிழை மகளிர் மூவரும் வழிபடக்
கொற்ற வேந்தர் நற்றிறை யளப்ப
நல்வளந் தரூஉம் பல்குடி தழைப்பச்

கஅரு செல்வ வேந்தன் செங்கோ லோச்சித்
தாஞ தரவு மேன்மேன் முற்றவும்
ஆஞ தொழுகுமா லல்லவை கடிந்தேன்.

உரை

கச. மணம் படு காதை

அஃதாவது - உதயணனுக்கும் மானனீகைக்கும் திருமணம் நடந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(வாசவதத்தை மானனீகையின் கூந்தலைக் குறைக்கப் புகுதல்)

க - எ : புலர்ந்த............உரைப்ப

(பொ - ரை.) பொழுது விடிந்த உடனே கோப்பெருந்தேவி மானனீகையை அழைத்துச் சினந்து ஆங்கு ஓவியம் வரையப் பட்டுத் திரையிடப்பட்டு நின்றதொரு தூணோடு அம்மானனீ கையைச் சேர்த்து "ஏடீ! நீ மன்னவனோடு அக்கூத்தப்பள்ளியுள் கூறியதனைச் சொல்!" என்று கூறிக்கொண்டே ஒரு கச்சால் கட்டினளாகிப் பக்கத்தே நின்ற பணிமகள் ஒருத்தியை நோக்கி "ஏடீ! நீ சென்று இவளுடைய கூந்தலைக் கத்தரித்தற்கு ஒரு கத்தரிகை கொணர்வாயாக!" என்று கட்டளையிடாநிற்ப என்க.

(வி - ம்.) புதுமண மாதர் என்றூர் அண்மையில் மானனீகை களவு மணம் புணர்ந்த செய்தியை யாம் நினைவிற் கொள்ளுதற்கு. மாபெருந்தேவி : வாசவதத்தை. ஓவிய எழினித்தூண் - ஓவியம் எழுதப் பட்ட திரையால் மூடப்பட்ட தூண். இனி திரை கட்டுந்தூண் எனினு மாம். கொற்றவன் : உதயணன். சொற்றது - சொன்னது. கச்சு - ஓர் ஆடை. யாத்தனள் - கட்டினள். அருகு நின்ற ஒரு மாதரை என்க. கத்தரிகை - கத்தரிக்கோல்.

(வயந்தகன் உதயணனைத் தேடுதல்)

அ - கூ : மறைய............தேட

(பொ - ரை.) கோப்பெருந்தேவியின் சினத்தையும் செயலை யும் தன்னை அவள் அறியாமல் ஒளிந்து நின்று கண்டு வயந் தகன் அப்பொழுதே விரைவாகச் சென்று அவ்வரண்மனைக் குள்ளே அரசனைத் தேடாநிற்ப; என்க.

(வி - ம்.) மறையக் கண்ட - அவள் அறியாமல் தான் மறைய நின்று கண்ட. வேந்து : உதயணன்.

(உதயணன் நிகழ்ந்ததை வயந்தகனுக்குக் கூறல்)

கO - ரு : அறிந்து................என்ன

(பொ - ரை.) முன்னர்த் தனித்துச் சென்று ஒரு மண்டபத்திருந்த அவ்வேந்தன் வயந்தகன் தன்னைத் தேடுதலை அறிந்து தான் அவ்விடத்திருத்தலை அறிதற்குக் காரணமான அழைப்புக் குறிப்பொலியை காட்டாநிற்ப, இவ்வாற்றால் அவன் இருக்குமிடத்தை உணர்ந்துகொண்ட வயந்தகன் மானனீகைக்குப் பெரிதும் இரங்கியவனாய் ஆண்டு அவனுக்கு நிகழ்ந்த செய்தியைக் கூறா நிற்ப, அதுகேட்ட அரசன் "அந்தோ! அம் மானனீகையின் கூந்தலில் ஒரோவொரு மயிரைக் கத்தரிகை தொட்டுவிட்டாலும் என் உயிரே போயிற்று! யான் என் செய்கோ? நண்பனே! நீ விரைந்து சென்று இக்கொடுஞ்செயல் நிகழாவண்ணம் விலக்குவாயாக!" என்று வேண்ட, அதுகேட்ட வயந்தகன் "பெருமானே! பெருந்தேவி இவ்வாறு சினத்தற்குக் காரணம் யாது?" என்று வினவா நிற்ப, அதுகேட்ட உதயணன் "நண்பனே! நீ என்னைக் கடைக்கூட்டி விடுத்த செயலின் முடிவே இஃது," என்று கூற என்க.

(வி - ம்.) அறிந்து - தேடுதலை அறிந்து. வேந்தன் : உதயணன். அறிபயிர் - தன்னை அறிதற்குக் காரணமான அழைப்பைக் காட்டும் குறிப்பொலி. அவை ஓ, ஊ என்பன. மானனீகைக்குப் பரிந்தனனாகி என்க. பட்டதை - நிகழ்ந்ததை. அஃதாவது மானனீகையைக் கோமகள் ஒறுக்கப் புகுந்தமை. அவள் - அம்மானனீகை. கருவி என்றது கத்தரிகையை. இற்றது எனத் தெளிவின்கண் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. இது - இக்கொடுஞ் செயலை. நீ கடைக்கூட்ட - நீ கூட்டி வைக்க. அதன் பயனாக இங்ஙனம் நிகழ்ந்தது. இஃது என் சொல்லியவாறோ எனின் நீ உலாப்போகும் என்னைப் போகாமல் தடுத்து மகளிர் பந்தாட்டம் காணச் செய்தமையால் வந்த வினையே இஃது என்றவாறு.

(வயந்தகன் கூறல்)

கரு - உக : மடந்தையர்................என்று

(பொ - ரை.) அதுகேட்ட வயந்தகன் "பெருமானே! யான் அம்மகளிர் பந்து விளையாட்டைச் சென்று கண்டருள்க! என்று கூறியதேயன்றி நீ கள்ளத்தன்மையோடு சென்று அம்மானனீகையின் புத்தம் புதிய இன்பத்தையும் நுகர்ந்து இம்மண்டபத்திலே புகுந்து ஒளிந்தருளுக! என்றுங் கூறியது உண்டோ? அது கிடக்க, வெற்றிமிக்க அக்கோப்பெருந்தேவியின் சினத்தைத் தீர்க்கும் தன்மையுடையோர் இங்கு யாரேயுளர்? ஆயினும் யான் சென்று ஆறு ஏழு நாழிகை அக்கொடுஞ்செயல் நிகழா வண்ணம் தடுத்து வைப்பேன். அவ்வளவில் நீ மற்றொருவரை அங்கு விடுத்தருளுக!" என்று கூறி என்க.

(வி - ம்.) நீ கடைக்கூட்ட நிகழ்ந்த வினை இஃது என்று கூறும் வேந்தனுக்கு உதயணன் கூறும் மறுமொழி பெரிதும் இன்பமுடைத் தாதல் உணர்க. தேவி : வாசவதத்தை. செற்றம் - சினம். பெற்றியர் - தன்மையுடையோர். எவரே என்னும் வினா ஒருவருமிலர் என்பதுபட நின்றது. ஆறேழ் நாழிகை என்பது ஒரு சிறிய கால அளவைக் குறித்து நின்றது. வேறொருவரை என்றது அதற்கு மேலும் அச்செயல் நிகழா வண்ணம் தடுத்தற்கு உரியவரை என்பதுபட நின்றது.

(வயந்தகன் வாசவதத்தையைக் காணல்)

உஉ - அ : வென்றி...............கேளென

(பொ - ரை.) வெற்றியையுடைய அம்மன்னவன் மீண்டும் தாமதியாமல் செல்க! என்று விடுத்தலாலே, அவ்வயந்தகன் விரைவோடு சென்று தேவியின் மாளிகையின்கண் நிகழ்வதனை அப்பொழுதுதான் அறிபவன்போலத் தேவியை வணங்கி "நம்பெருமான் இங்கு வந்துற்றனரோ?" என்று மன்னனைத் தேடுவானாய் வினவா நிற்ப, அதுகண்டு ஆங்கு நின்ற பணிப் பெண்ணொருத்தி வயந்தகனை நோக்கி "எம்பெருமாட்டி சினந் துள்ளாள். ஆதலால் இப்பொழுது ஒன்றும் பேசாதே கொள்!" என்று கையினாலே குறிப்பாகக் காட்டாநிற்ப; அதுகண்ட வயந்தகன் அங்குக் கட்டப்பட்டிருந்த மானனீகையைப் பார்த்துத் தன் கால்கள் அச்சத்தால் நடுங்குவான்போல நடித்துக்கொண்டு "அந்தோ! இவளுக்கு உண்டாய குறைதான் யாதோ?" என்று பொதுவாக வினவா நிற்ப, அதனை அக்கோப் பெருந்தேவி அறிந்து வயந்தகனை நோக்கி "வாரின்கண் பொலி வுற்ற வீரக்கழல் கட்டிய காலையுடைய அரசர் வேடம் புனைந்த கயவனாகிய அக்கள்வன்பால் போய்க் கேட்டறிந்து கொள்க! ....என்க.

(வி - ம்.) வேந்தன் : உதயணன். கொற்றவன் : உதயணன். சினம் உடையவளாய் இருக்கின்றாளென்று ஒருத்தி கையாற் காட்டி அமைப்ப என்க. கோமகள் : வாசவதத்தை. அறியா - அறிந்து. வார் - வாரின்கட் பொலியும் கழல் என்க. மன்னவர் உருவினையுடைய தூர்த்தக் கள்வனென்க என்றது உதயணனை. உகூ ஆம் எண்ணின்கண் நிற்றல் வேண்டிய ஓரடி முழுதும் சிதைந்தொழிந்தது.

(வயந்தகன் கூறல்)

உகூ - ௩௦ : குறை...............கூறலும்

(பொ - ரை.) தேவியின் இச்சினமொழிகேட்ட பின்னரும் அக்கொடுஞ்செயல் நிகழவொண்ணாமல் தடுத்தற்கு ஓர் உபாயத்தை மேற்கொண்டவனாய் வயந்தகன் "அரசியே! கூந்தலைக் குறைத்தற்குரிய குற்றம் இவளுக்கு உண்டாயின் யானே இவள் கூந்தலைக் குறைத்தற்கு நன்கு அறிவேன். தேவியின் திருவுளக்

கருத்தியாதோ" என வினவ அதுகேட்ட வாசவதத்தை "அங்ஙன மாயின் இக்கயத்தியின் கூந்தலை நீயே குறைத்து விடுக" என்று கூறு நிற்ப என்க.

(வி - ம்.) எம்பெருமாட்டி இவள் கூந்தலைக் குறைத்தற்கு ஏது வாகிய குற்றம் இவள் செய்திருப்பாளேல் யானே அத்தண்டனையை இவட்குச் செய்வேன் என்பது கருத்து. குறை என்று தேவி கூறலும் என்க.

(கத்தரிகைகளின் வகை)

௩௧ - ௪௧ : மற்றதற்கு..............வாங்கி

(பொ - ரை.) அக்கட்டளை பெற்ற வயந்தகன் (அச்செயல் நிகழாமல் தடுத்தற்கோ ருபாயமாக வறுமொழி பல பேசத் தொடங்கி) "தேவீ! அங்ஙனம் கூந்தலைக் கொய்தற்கு ஏற்ற கத்தரிகை வகைகள் பற்பல உண்டு. அவையிற்றைக் கூறுவேன் கேட்டருள்க. அக்கத்தரிகைகள்தாம் வரிசை வரிசையாகவும், விற்பூட்டுப் போலவும், அணில் வரிகள் போலவும், மானினது முதுகு போலவும், மணிகள் போன்று அறல் பட்டனவும், வலிய புலியின்கண் அமைந்த வரிகளைப்போல ஒழுங்குடையன ஆகியும், உயர்ந்தும், குழிந்தும், கழுகினது நடைபோலவும், காக்கைக் கால்போலவும், உடுக்கைபோன்ற உருவுடையதும் சுற்றும் தன்மையுடையனவும் பாம்பின் வடிவுடையதாகவும் பகுத்த வடிவினதாகியும் பல்வேறு வடிவினை உடையனவாக இருப்பன வும் பிறவுமாம்" என்று கூறித் "தேவியின் அருள் செய்தற்குரிய திருக்கைமலர் இவளின் கூந்தலைத் தொடுதல் தகாது" என்று கூறி அவள் தன் கையிலெடுத்த கத்தரிகையை "எனக்கு ஒரு கத்தரிகை வழங்குக!" என்று கூறி வாங்கி என்க.

(வி - ம்.) இங்கு வயந்தகன் கத்தரிகைகளின் வகைகளைக் கூறு பவன்போலப் பொருளற்ற சொற்களை நிரல் நிரலாக அடுக்கிக் கொண்டே போகின்றான். பொருளுணரமாட்டாத சொற்களைக் கூறு தலாலே அத்தேவியும் மயங்கி இப்படியெல்லாம் கத்திரிகைகள் இருக்கும்போலும் என்று நினைக்கும்படி கூறுகின்றான் என்க. "இரவலர்க்கு அருளும் நின் கரமலர் இவ்வெளியவள் கூந்தலைத் தீண்டல் தகாது. ஆதலால் என்பால் ஒரு கத்தரிகை தருக" என்று கூறி அத் தேவி கையிலெடுத்த கத்தரிகையை வாங்கிக் கொண்டு என்க.

(வயந்தகன் செயல்)

௪௨ - ௪௭ : ஒரு..........பனித்திட்டு

(பொ - ரை.) அவ் வயந்தகன் அங்குக் கிடந்த ஒரு புல்லை எடுத்து அக் கத்தரிகையை அளந்து அதன் அளவை அறிந்து பின்னர் அப் புல்லை நான்காக மடித்து அம் மடிப்பில் ஒரு

பாதியை எடுத்து அக் கத்தரிகையின் காதின் அளவினை அளந்தறிந்து பின்னர் அக் கத்தரிகையை நன்கு மதிப்பவன்போல நடித்துப் பன்முறையும் அதனைப் புரட்டிப் புரட்டி அதன் ஆணியும் பிறவும் ஆகிய உறுப்புக்களை நோக்கியவனாய்ப் பின்னர்த் தன் இரு கைகளையும் எடுத்துத் தன் இரு செவிகளையும் பொத்திக்கொண்டு கண்களைச் சுருக்கிக்கொண்டு தன் தலையை நடுக்கி என்க.

(வி - ம்.) புல் - துரும்பு. அறியா - அறிந்து. நான்மையின் - நான்காக. ஒரு பாதி - இரண்டு மடிப்பு. காது - கத்தரிகையின் ஓர் உறுப்பு. ஆணி - இதுவுமது. மதிப்பொடு - அக்கத்தரிகையை நன்கு மதிப்பவனைப்போல. புதையா - புதைத்து. சிம்புளியா - சிம்புளித்து, சுருக்கி. பனித்திட்டு - நடுக்கி.

(வயந்தகன் கூறுதல்)

சஅ - ருசு : இங்கிதன்...............எறிய

(பொ - ரை.) "தேவீ! கேட்டருள்க! இக் கத்தரிகையின் இலக்கணம் கூறுதற்கு எளியதொன்றன்று. இதுதானும் நீர்மையும் கூர்மையும் நெடுமையும் குறுமையும் சீர்மையும் சிறப்பும் ஆகிய உயர்ந்த பண்புகள் நிறையப்பெற்று அழகெய்திப் பூத்தொழில் பொருந்தியது. ஆதலால் இது குற்றத்தின்கண் எய்தியவர்களுக்கு நன்மையே செய்யும் ஒரு தெய்வத்தோடு தொடர்புபட்ட நல்லிலக்கணமுடையது. ஆதலின் இக் கத்தரிகையால் இவள் கூந்தலைக் கொய்தால் அழகுமிக்க இவளுக்கு மேலும் நன்மையேயுண்டாகும். ஆதலால் வேறொரு கத்தரிகை உளதாயின் எம்பெருமாட்டி அதனை வரவழைத்துத் தந்தருள்க. இக்கத்தரிகை இத்தகைய தெய்வத் தன்மையுடையது என்று அதனைக் கையிலெடுத்து எறியாநிற்ப என்க.

(வி - ம்.) இதன் கண்ணும் வயந்தகன் பொருளில் வறுஞ் சொற்களையே பொருளுடையனபோலப் பேசுகின்றான் ஆதல் உணர்க. ஆக்கஞ்செய்யும் அணங்கொடு - நலஞ்செய்யும் ஒரு தெய்வத்தோடு. இவள் - இம்மானனீகை. மாதர்க்கு : இவளுக்கு. பொற்றொடி ஈது - இக்கத்தரிகை; இத்தன்மைத்து என்க.

(உதயணன் யூகியை வருவித்துக் கூறல்)

ருஎ - கூ : ஆகிய ....புகல

(பொ - ரை.) இனி நிகழ்ந்த இந்நிகழ்ச்சியையே நினைகின்ற வெற்றியையுடைய அரசன் யூகியை அழைத்துத் தனியிடத்தே கொண்டு ஆங்கு நிகழ்ந்ததையெல்லாம் நொடிப்பொழுதில் அவன்பாற் கூறாநிற்ப என்க.

(வி - ம்.) ஆகியது - நிகழ்ந்த செயல். அஃதாவது மானனீகை வாசவதத்தையால் ஒறுக்கப்படுதல். புகுந்ததை - நிகழ்ந்ததனை. கணம் - நொடிப்பொழுது.

(யூகி விடையளித்தல்)

சுO - ௩ : வயந்தகன்..........போந்து

(பொ - ரை.) அது கேட்ட யூகி, "வேந்தே! மானனீகையின் கூந்தல் குறைக்கப்படாமல் யான் ஆறேழு நாழிகை தடுத்து வைப்பல் என்று வயந்தகன் கூறினன். யான் சென்று அச் செயலை நிகழாமல் தடுத்துவைக்கும் காலம் அவ் வயந்தகன் கூறிய காலத்தினும் குறைந்ததாகவே இருத்தல் கூடும். யானும் என்னாலியன்ற உபாயங்களை மேற்கொண்டு அத்துணைக் காலமாயினும் வண்டு முரலும் மாலையணிந்த அம் மானனீகையின் கூந்தல் குறைக்கப்படாமல் பாதுகாப்பல். அதன்மேலும் காத்தற்கு யான் அறியேன்" என்று அம் மன்னனை வணங்கிச் சென்று என்க.

(வி - ம்.) வயந்தகன் கூறிப்போந்த பொழுதினுங் காட்டில் யான் காக்கும் பொழுது இழிந்தது என்றவாறு. இழிந்தது - குறைந்தது. என் செயலால் காக்கப்படும்பொழுது இழிந்தது என்க. அவ்வளவு - அவ்வளவுடைய காலமேனும். ஆனவை - எனக்குத் தோன்றிய உபாயங்களை. கோதை : மானனீகை. கேசம் - கூந்தல். தாங்குவென் - பாதுகாப்பேன்.

(யூகி பித்தர் வேடம் தரித்தல்)

சுச - எஉ : கற்றறி..............தோன்றலும்

(பொ - ரை.) பல நூல்களையும் கற்றுணர்ந்த கலைஞனாகிய அந்த யூகி பொன்னணிகலன்களையும் வெள்ளிய யானைக் கோட்டால் இயற்றிய மலர்க்கோவையையும் பொருந்துதலுண்டாக அணிந்துகொண்டு ஆடையைக் கிழித்துக் கிழித்து அரையைச் சுற்றிச் சுற்றி உடுத்து உடல் நிரம்ப வெண்ணீறு பூசித் தனது நெடிய தலைமயிர்களைப் பல்வேறு வகையாகத் தந்திரமாக முடித்துக்கொண்டு தன்னைக் கண்டோர் அஞ்சும்படி மலர்போன்ற தன் கண்களை மூடிக்கொண்டு குறிப்பொன்றுமில்லாமல் கைகளைத் தட்டி கயிடபடை (?) கொட்டிப் பித்தர் வடிவத்தில் ஞெரேலென வாசவதத்தை மாளிகையின்கட் புகாநிற்ப என்க.

(வி - ம்.) வித்தகன் - கலைஞன்; யூகி. பொற்பணி - பொன்னணிகலம். வெண்பூக் கோவைத் தந்தம் - யானைக்கொம்பிற் கடைந்த மலர்க் கோவை. கூறை - ஆடை. கீறி - கிழித்து. நீறு - சாம்பல். விரகுளி - தந்திரமாக. கண்மலர் அடக்கங்கொண்டு - கண்களை மூடிக்கொண்டு. ஒத்தா - ஒத்தி. கயிடபடை கொட்டி - இதன் பொருள் விளங்கவில்லை. துட்கென : விரைவுக் குறிப்பு. வாசவதத்தை மாளிகையின்கண் வந்து தோன்றலும் என்க.

(தோழியர் யூகியின் வேடத்தைக் கண்டு ஓடுதல்)

எங - அ : ஏழை..................நிற்ப

(பொ - ரை.) எளிய மானனீகையைச் சூழ்ந்து நின்ற தோழிமார் பலரும் அந்த யூகியைக் கண்டு அஞ்சிக் கெட்டோடி விழுவாரும், எழுந்து நோக்குவாரும், பின்னரும் அப் பித்தன் தம்மை அணுகி வரக்கண்டு உடல் நடுங்கி அழுவாரும் கோப் பெருந்தேவியின் பின்சென்று அணைவாரும்ஆக வண்டுகள் தேனாராய்கின்ற கூந்தலையுடைய அக் கோப்பெருந்தேவி அந் நிகழ்ச்சியை நோக்கி மேலும்மேலும் தனக்கு நகைப்பே தோன்றுதலின் பின்னரும் அக் காட்சியைக் காண விரும்பி நிற்ப என்க.

(வி - ம்.) தண்டனைக்குள்ளாயிருத்தல் பற்றி மானனீகையை ஏழை மாதர் என்றார். பாவையர் - தோழிமார் முதலியோர். இரிந்து ஓடி - புறங்கொடுத்து ஓடி. தேவி - வாசவதத்தை. தேன் - வண்டு. வண்டு தேனைத் தேருங் கூந்தல் என்க. கூந்தல் - வாசவதத்தை. அது - அந்நிகழ்ச்சியை.

(வயந்தகன் சிலதியை உதயணன்பால் விடுத்தல்)

எகூ - அ0 : நின்ற..................உய்ப்ப

(பொ - ரை.) அப்பொழுது அங்கு நின்ற வயந்தகன் அங்கு எதிர்ப்பட்ட ஒரு பணிமகளை நோக்கி "ஏடி! நீ விரைந்து சென்று இங்கு நிகழ்ந்ததனை நம்பெருமான்பால் சென்று" அறிவிப்பாயாக என்று சொல்லி அரசன்பால் விடுப்ப என்க.

(வி - ம்.) சிலதி - பணிப்பெண். அரசன் : உதயணன்.

(உதயணன் பதுமாபதியை வருவித்தல்)

அக - கூ : புதுமான்..................திகைப்ப

(பொ - ரை.) அச்சிலதி மொழிகேட்ட மன்னவன், புதுவதாக வந்த மான்போல மருளும் விழிகளையும் பின்னிய கூந்தலையும் சிவந்த வாயையுமுடைய பதுமாபதியை வருமாறு அழைத்தலால் வில்போன்ற நுதலையுடைய அந்நங்கை வாரா நிற்ப, அவள் வரவுகண்ட அரசன் அவள் எதிரே சென்று தழுவி அழைத்துக் கொணர்ந்து மெல்லென ஓர் இருக்கையில் அவளோடிருந்து அவளை நோக்கி ஒரு காரியத்தைக் கூற நினைந்து மீண்டும் கூறமாட்டானாய்த் திகையாநிற்ப என்க.

(வி - ம்.) தான் பழகிய இடத்தினின்றும் புதிய இடம் புகுந்த மான் மிகவும் மருண்டு நோக்குதல் இயல்பாகலின் புதுமான்விழி என்றார். கூஉய் - அழைத்து. எதிர்சென்று புல்லினன் என்க. மெல்லென அவளோடு இருந்து என்க. ஒன்று - ஒரு காரியத்தை. என்றது மானனீகைக்கும் தனக்கும் உண்டான தொடர்பைக் கூறத் தொடங்கியவன் நாணத்தால் கூறாது திகைத்தான் என்பது கருத்து.

(பதுமாபதி உதயணனை வினவுதல்)

அகூ — அ : ஆயிழை...............என்னென

(பொ - ரை.) அதுகண்ட பதுமாபதி அம்மன்னவன் கருத்தினைக் குறிப்பால் அறிந்தவளாய், "அடிகேள்! தம்முடைய நெஞ்சின்கண் மிகுதல் கொண்டுள்ள அக்காரியத்தை அடிச்சிபாலும் கூறுதிருத்தற்குக் காரணம் என்னையோ" என்று வினவ என்க.

(வி - ம்.) ஆயிழை : பதுமாபதி. குறிப்பால் அறிந்தனளாய் என்க. அடிகள்: முன்னிலைப் புறமொழி. கடிகொள்ளுதல் - மிகுதல். என் - என்ன காரணம்?

(உதயணன் பதுமாபதியை வாசவதத்தையின்பால் விடுத்தல்)

அகூ - கூஉ : யான்...........விடுப்ப

(பொ - ரை.) அதுகேட்ட அப்பெருமகன், "நங்காய்! அக்காரியத்தை யான் நின்பால் கூறுதற்கு நாணுகின்றேன். நின் தமக்கையே நினக்கு அதனைக் கூறுவள். நீ என் குற்றங் காணாத என் தெய்வமேயாதலின் என் குற்றமாகிய அக்காரியத்தை மேற்கொண்டு என்னைப் பாதுகாத்து என் உயிரை எனக்கு மீட்டுத் தருவாயாக" என்று கூறி அவ்வுரவோன் அவளை வாசவதத்தைபால் விடுப்ப என்க.

(வி - ம்.) கூசுவென் - நாணுவேன். தவ்வை - தமக்கை; என்றது வாசவதத்தையை. அது - அக்குற்றத்தை. தாங்கி - பொறுத்து. அக்குற்றம் நின்னாலும் பொறுக்கொணாதது என்பான் நீ அது தாங்கி என்றான். பொறுத்துக் கோடற்கு ஏதுக் கூறுவான் நீ என்செயிர் காணாத தெய்வம் என்றான். உயிர்தந்தருள் என்றது என் உயிர்போலும் அம்மானனீகையை மீட்டு எனக்குத் தந்தருளுக எனவும் ஒரு பொருள் தோன்ற நிற்றல் காண்க. இங்ஙனம் வித்தகப்பட மொழிதல் கருதி உரவோன் என்றார். உரவோன் - அறிஞன்.

(பதுமாபதி வாசவதத்தையை வேண்டிக்கொள்ளல்)

கூங - க0ங : முறுவல்............நிற்ப

(பொ - ரை.) அதுகேட்ட பதுமாபதி புன்முறுவல் கொண்டவளாய் அவ்விடத்தினின்றும் எழுந்து சென்று வாசவதத்தையினது யாவரானும் தொழத்தகுந்த திருவடியின்கண் தாழ்ந்து வணங்கி எழுந்து நிற்ப, அக்கோப்பெருந்தேவி அப்பதுமாபதிக்கு விளக்கமாக அங்கு நிகழ்ந்த செய்திகளை உணர்த்தினளாக, அதுகேட்ட பதுமாபதி, "பெரியோய்! இயல்பாகவே

பணித்தொழில்புரிந்து வருந்திக்கிடக்கும் இவ்வண்ணமகளைத் தேவி ஒரு பொருளாக மதித்து இங்ஙனம் சினந்தருளுதல் தேவியின் பெருமைக்கு இழுக்கும் தருவதாம். வீறுபெற்று உயர்ந்த மடந்தையே! இப்பொழுது நீ தகாதவொன்றனைச் செய்தாயாகின்றாய். நம்போன்று பெண்ணாகப் பிறந்தவர்களுக்குத் தம் அன்புடைய கணவர் நோதக்க செய்யினும் பொறுத்துக் கோடலே பெருமையாகும். பெருமாட்டியாகிய நீயும் அறிவிலாதார் போன்று சிறியோரிடத்து இங்ஙனம் குற்றங் கண்டருளுதல் நின் பெருந்தகைமைக்குப் பொருந்தாதவொன்றாகும். யான் நின்பால் ஒரு வரம் கேட்கின்றேன். என்பொருட்டு இவள் செய்த பிழையை மறந்து அருளுக!'' என்று அப்பதுமாபதி மீண்டும் அவள் அடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நிற்ப என்க.

(**வி - ம்.**) ஆயிழை : வாசவதத்தை. தகும்பதம் - யாரானும் தொழத்தகும் அடிகள். "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்" என்பதுபற்றி (சிலப். பதி. ருசு) தகும் பதம் தாழ என்றார். அவட்கு : பதுமாபதிக்கு. வருந்திவள் : வினைத்தொகை. வீறு - வேறொருவர்க்கில்லாத சிறப்பு. வேண்டா - தகாத. அழிதக - வருந்துதற்குக் காரணமான செயல்களை. அன்புடைக் கணவர் அழிதகச் செயினும் பெண் பிறந்தோர்க்குப் பொறையே பெருமை எனவரும் இத்தொடரோடு, "தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார், இகழினுங் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்" எனவரும் பரிபாடலையும் (உ0 : அஅ-கூ); "மாயமகிழ்நன் பரத்தைமை, நோவேன் றோழி கடனமக் கெனவே" எனவரும் கலியினையும் (எரு : ௩உ - ௩) நினைக. சிறியோர் தேளத்து என்புழி, தேளம் ஏழாவதனுருபு. குறை-குற்றம். வரம் பெறுவேன் எனல் வேண்டிய எதிர்காலம் தெளிவுபற்றிப் பெற்றேன் என இறந்தகாலத்திற் கூறப்பட்டது. யான் என்பால் ஒரு வரம் பெறுவேன்: அஃதாவது இப்பிழையை மறத்தல் என்றவாறு. மற்றவள் :அப்பதுமாபதி. இப்பகுதியில் பதுமாபதியின் மொழிகள் மிக இன்பம் தருதலுணர்க.

(**கோசலத்தரசனுடைய தூதுவர் வருகையை வாயில்காவலன் உதயணனுக்குக் கூறுதல்**)

கா0சு - கூ : கோமகன்................உரைப்ப

(**பொ - ரை.**) அப்பொழுது கோசல நாட்டினரின் புகழ்மிக்க அரசனுடைய தூதுவர் வந்து நம் அரண்மனை முற்றத்தின்கண் நிற்கின்றனர் என்று வாயில் காவலன் வந்து கைகூப்பித் தொழுது உதயண மன்னனுக்குக் கூறா நிற்ப என்க.

(**வி - ம்.**) கோமகற்கு : உதயணனுக்கு. அவ்வயின் - அப்பொழுது. அவ்விடத்தே எனினுமாம். காவலன் : கோசலமன்னன். கடைத்தலையார் - வாயிலிடத்தார். கடை - வாயில்.

(தூதுவரை உதயணன் அழைத்துவரச் செய்தல்)

க0எ - கக : விடை...............நீட்டலும்

(பொ - ரை.) அதுகேட்ட உதயணமன்னன் அந்த வாயில் காவலர்க்கு விடைகொடுத்து நீவிர் சென்று அத்தூதுவரை அழைத்து வாருங்கோள்! என்று கட்டளை இடுதலாலே அக் கட்டளை பெற்ற அத்தூதுவர் பொன்னொலியன்று விளங்காநின்ற அவ்வரண்மனையிற் புகுந்து அரசனை வணங்கி, "வேந்தே! எங்களரசன் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையாருக்குச் சிறப்பாக ஒரு திருமந்திர ஓலை எம்பால் வழங்கினன்" என்று கூறி "வேந்தே! இதனைத் தேவியின்பால் கொடுத்தருளுக" என்று அத் திருமந்திர ஓலையை உதயணனுக்குக் கொடாநிற்ப என்க.

(வி - ம்.) அவரை - அத்தூதுவரை. கோயில் - அரண்மனை. மந்திர ஓலை - அரசர்கள் விடுக்கும் ஓலையைத் திருமந்திர ஓலை என்று வழங்குதல் மரபு. மாபெருந்தேவி என்றது வாசவதத்தையை. கோவே என்றது அத்தூதர் உதயணனை விளித்தபடியாம். வென்றி வேந்தன் - என்றது கோசலத்தரசனை.

(உதயணன் அவ்வோலையை வாசவதத்தைக்கு விடுத்தல்)

ககஉ - ௪ : ஏய...............போக்க

(பொ - ரை.) அவ்வோலைபெற்ற உதயணன் இச் செவ்வியில் ஏவப்பட்ட இவ் வோலையும் எனக்கு இனிதேயாயிற்று என்று அதை வாங்கி அவ்விடத்தே நின்ற பணிமகள் ஒருத்தியை அழைத்து "இதை நீ கொண்டு சென்று வாசவதத்தைக்குக் கொடுப்பாயாக!" என்று பணித்துப் போக்காநிற்ப என்க.

(வி - ம்.) ஏயஇது - கோசலத்தரசன் ஏவிய இவ்வோலை வாசவதத்தையின் ஊடல் தீர்க்கும் வாயிலாகும் இஃது என்று கருதி இதுவும் இனிது என்றவாறு. ஆவயின் - அப்பொழுது. அவ்வோலையைக் கொடுத்துப்போக்க என்க.

(வாசவதத்தை ஓலைபெற்று ஓதுவித்தல்)

ககச - கூ : அத்திறத்து...........வாங்கி

(பொ - ரை.) அவ்வாற்றால் வாசவதத்தை அத்திருமந்திர ஓலையை முற்படக் கைக்கொண்டு தன் பக்கத்திலிருந்த பதுமாபதியை நோக்கி, "தங்காய்! இத்திருமந்திர ஓலையை நீ படித்துக் கூறுக" என்று கொடுப்ப அப்பதுமாபதி எழுந்து எதிர்சென்று அத்திருமந்திர ஓலையை இரு கைகளாலும் வாங்கிக்கொண்டு என்க.

(வி - ம்.) போக்கு அத்திரத்து என்னும் நிலைமொழி வருமொழிகள் புணருங்கால் வருமொழி முதலாகிய அகரஉயிர் கெட்டது. அத்திறத்து - அவ்வாற்றால். பகருக - கூறுக. அது - அத்திருமந்திர ஓலையை.

(ஓலையில் எழுதப்பட்ட செய்தி)

கசஎ - உஉ : கோசல............பின்பு

(பொ - ரை.) "கோசல நாட்டு அரசன் எழுதிவிடுத்த திருமந்திர ஓலை. இதனை நங்கையாகிய வாசவதத்தை கண்டருளுக. கோப்பெருந்தேவியே! களங்கமில்லாத திங்கள் மண்டிலம் போன்ற முகத்தினையுடைய வாசவதத்தை என்பவள் நின் அருமைத் தங்கையாவாள். பசுமை நிறைந்த தாழ்ந்த நிலத்தின்கண் தோட்டக் கூறுகளையுடைய பாஞ்சாலத்தின் மன்னனாகிய ஆருணி, யான் சோர்வுற்றிருந்த செவ்வி பார்த்துப் படையோடு வந்து புகுந்து எனது நகரத்தைத் தாக்கி அவ் வாசவதத்தையை அவள் தோழிமாரோடு சிறைபிடித்துக் கொண்டு போன பின்பு" என்க.

(வி - ம்.) மங்கை என்றது பருவங்குறியாது நங்கை என்பதுபட நின்றது. மாசின் முகத்து வாசவதத்தை தன் தங்கை என மாறுக. அவ்வரசன் வாசவதத்தைக்குச் சிற்றன்னை கணவனாகலின் தன் மகளை ஈண்டு வாசவதத்தையின் தங்கை என்று குறிப்பிடுகின்றான். மானனீகையின் இயற்பெயர் வாசவதத்தை என்பதே ஆகும் என்று இதனால் குறிப்பிடுகின்றான். பாசுஅவல் - பசிய பள்ளமாகிய நிலப்பரப்பு. படப்பை - தோட்டம். அரசன் : ஆருணி மன்னன். என்னூர் - என் நகரம். அவளுடன் - அந்த வாசவதத்தையோடு. ஆயம் - தோழியர் கூட்டம். சிறைபிடித்துக்கொண்டு போன பின்பு என்க.

(இதுவுமது)

கஉஉ - அ : அவனை...............கேட்டேன்

(பொ - ரை.) "அந்த ஆருணி மன்னனை வத்தவ நாட்டு மன்னனாகிய நின் கணவன் எதிர்த்து நின்று அறநெறி பிறழாமல் போர்செய்து கொன்று அவன் உவளகத்திலிருந்த மகளிர் பலரோடு அவ் வாசவதத்தையையும் கவர்ந்துகொண்டு தன் மாளிகைக்குச் சென்று அம் மகளிர்களை இருகூறாக வகுத்து, உனக்கு ஒருகூறும் உன் தங்கையாகிய அழகுமிக்க பதுமாபதிக்கு ஒரு கூறுமாக வழங்க அவ்விரு கூற்றில் அவ் வாசவதத்தை உன் கூற்றில் அகப்பட்டு நின்பால் வண்ணமகளாய் இருந்ததனையும் யான் கேள்வியுற்றேன்!" என்க.

(வி - ம்.) அவனை - அவ்வாருணி மன்னனை. வத்தவர் பெருமான்; உதயணன். மங்கையர் - ஆருணிமன்னன் உவளகத்திருந்த தோழிமார்.

நற்பதி - நல்ல மாளிகை. தனக்கும் - உனக்கும். பதுமாபதியாகிய அவளுக்கும்.

(இதுவுமது)

கஉஅ - ௯௫ : வசுந்தரி............வாசகம்

(பொ - ரை.) "மேலும் அவள்தானும் வசுந்தரி மகள் என்று உலகம் கூறும் அவளை நின் சிற்றன்னை ஈன்ற நாள் தொடங்கி உண்டான முறைப் பெயரையும் கூறுளாய், யாங்கள் அவளுக்கிட்ட வாசவதத்தை என்னும் இயற்பெயரையும் மறைத்துக்கொண்டு அவ்விடத்தே 'மானனீகை' என்று ஒரு புனைபெயரையும் மேற்கொண்டு இருந்ததனையும் கேள்வியுற்றேன்; அன்பு மிக்க நங்காய்! நின் தங்கையாகிய அவ் வாசவதத்தையை (அம் மானனீகையை) நீ ஆராய்ந்து தெரிந்துகொண்டு அவள் எய்திய துன்பத்தையும் துடைத்து அவளை அழைத்துப்போக யான் நின் அரண்மனைக்கு வருந்துணையும் அவள் மயக்கத்தை ஒழித்தருளுக! தையால்! இதுவே என் வேண்டுகோளாம்," என்று எழுதி இருந்த மொழிகளை, என்க.

(வி - ம்.) வசுந்தரி - கோசலத்தரசன் மனைவி; மானனீகையின் தாய்; வாசவதத்தைக்குச் சிற்றன்னை. பயந்த நாளொடு பட்டதை - அவளை அவள் தாய் ஈன்றநாள் தொடங்கி உண்டான 'வசுந்தரி மகள்' என்னும் முறைப் பெயரையும் உணர்த்தாளாய் என்க. அவள் முன்பு வசுந்தரியின் சேடி என்று பாதிப் பொய்யும் பாதி மெய்யுமாகக் கூறிய தனையும் (௧௩. ௩௭ - ௩௮) ஈண்டு நினைக. தன்பெயர் - அவள் இயற்பெயராகிய வாசவதத்தை. இதனால் வாசவதத்தையின் சிற்றன்னை தன் மகளுக்கும் அன்பு காரணமாக இவ்வாசவதத்தையின் பெயரையே இட்டிருந்தாள் என்பது உணரப்படும். மடந்தை : விளி. மையல் - மயக்கம். தையல் : விளி. குறை - வேண்டுகோள்.

(பதுமாபதி ஓலையை வாசவதத்தையிடம் கொடுத்தல்)

௧௩௬ - அ : பழுது...............கொடுப்ப

(பொ - ரை.) குற்றமின்றி முழுதும் நன்கு தனக்குள் ஓதி உணர்ந்து அச்செய்தியைத்தானே கூறத் துணியாமல் "அடிகளே! யான் இவ்வோலையின் பொருளை உணர்கின்றிலேன். ஆதலின் தாங்களே ஓதி உணர்ந்திடுக!" என்று கூறிக் குற்றமற்ற தமக்கையாகிய வாசவதத்தையின் கையிற் கொடாநிற்ப" என்க.

(வி - ம்.) பழுது-ஓதுவோர் குறை. முழுவதும் - பொருள் முழுவதையும். வாசகம் : ஆகுபெயர். அடிகள் வாசிமின் - அடிகளே ஓதிக் காண்மின். அடிகள் : முன்னிலைப் புறமொழி. ஆசு - குற்றம். தவ்வை : வாசவதத்தை.

(வாசவதத்தை அவ்வோலையைப் படித்து வருந்துதல்)

கஙூகூ - சச : வாங்கி............ஆற்ருளாய்

(பொ - ரை.) அவ் வோலையை வாசவதத்தை கையில் வாங்கிப் பதுமாபதியின் அடக்கமுடைமையைப் புகழ்ந்தவளாய் அவ் வோலையில் அமைந்த பொருளை ஒதியுணர்பவள், தான் செய்த கொடுமையை நினைந்து ஏங்கிய நினைவோடே வருந்தி வருந்தி அழுது சிந்திய கண்ணீரையுடையளாய் நிலத்தை நோக்கி "அந்தோ! பெண் தன்மைக்கு இயற்கை பிழை செய்தலே போலும்!" என்று தன்னுட் கருதித் துன்பத்தில் தோய்ந்து துணுக்கென்னும் நெஞ்சத்தோடு தன்னாலே அக் கோசல மன்னன் மகள் பட்ட துன்பத்திற்குத் தானே ஆற்ருளாகி; என்க.

(வி - ம்.) புகழ்ந்து என்றது பதுமாபதி இதன் வாசகம் யான் உணரேன் என்று கூறிய அடக்கத்தைப் புகழ்ந்து என்றவாறு. பிழை செய்தலே போலும் என்க. "பெண்ணறிவென்பது பெரும் பேதைமைத்தே" என்ருர் பிறரும். போன்ம் - போலும். மையலில் தோயும் நெஞ்சம் என மாறுக. ஆயிழை : மானனீகை.

(வாசவதத்தை மானனீகையின் கட்டவிழ்த்து இரங்குதல்)

க்சச - கூ : அவள்...........பொறுவென

(பொ - ரை.) உடனே அம் மானனீகையின் கையிற் கட்டியுள்ள கட்டினை அவிழ்த்து மைதீட்டப்பெற்று நீண்ட கண்களையுடைய அம் மானனீகையை எடுத்துத் தழுவிக்கொண்டு "கூட்டமாகிய களிப்புற்ற யானையையுடைய கோசல மன்னன் மகளே! அழாதே கொள்! எம்மருமைத் தங்காய்! நின் தமக்கையாகிய யான் செய்த தீமையைப் பொறுத்துக்கொள்!" என்று கூறி என்க.

(வி - ம்.) மைவளர் கண்ணி : மானனீகை. வாங்குபு - எடுத்து அழேற்க - அழாதேகொள். எம் அரும்பெறற் பாவாய் என மாறுக. பாவாய் - ஈண்டு தங்காய் என்பதுபட நின்றது. செய்தது என்பது அறியாமையாற் செய்த தீமை என்பதுபட நின்றது.

(இதுவுமது)

கசகூ - ருசு : தெருளாள்..............போக்கி

(பொ - ரை.) இன்னும் மனத்தெளிவு பெருளாய்க் கலங்கி எழுதுதற்கரிய குளிர்ந்த தன் கண்கள் தான் செய்த பிழைக்கு இரங்கி நீர் சொரியா நிற்ப, அழுகையும் துயரமும் நிரம்பியவளாய் நெஞ்சழிய விம்மி விம்மி வெய்தாக மூச்செறிந்து "அந்தோ! இஃது என் குறையே! என்ன முறை செய்தேன்? என்ன செய்து

விட்டேன்? என்று புலம்பி அழுகிய தனது அன்புக் கண்ணீரா லேயே அம் மானனீகையை நீராட்டி அன்பாலே நெஞ்சுடைந்தவ ளாய் மானனீகையின் கண்ணீர் துடைத்துத் தன்னைச் சூழ்ந்து நிற்கும் பணிமகளிரையெல்லாம் கட்டளையிட்டு அகற்றி என்க.

(வி - ம்,) எழுதரும் கண் - ஓவியத்தில் எழுதுதற்கியலாத பேரழகுடைய கண் என்க. அழுகையும் ஆகுலமும் என்க. ஆகுலம்- துயரம். என் குறை - என் குற்றமே. மாதர்க்கண் - அன்புநோக்குடைய கண். பேதை - மானனீகை. செழீஇய அவரை - தன்னைச் சூழ்ந்து நின்ற தோழிமாரை. கிளந்து - அகலப்போமின் என்று கூறி என்க.

(மானனீகையை வாசவதத்தை அலங்கரித்தல்)

கடுஎ - சுஙு : தழீஇ..............அயில

(பொ - ரை.) மானனீகையைக் கைகளாலே அணைத்துக் கொடுபோய் இருத்தி வாசவதத்தை தானே அவள் எதிரி லிருந்து குளிர்ந்த அவளது கூந்தலைத் தன் கையினாலே ஆற்றி மணப்பொருளிட்டுப் பண்ணுறுத்திய நறிய நெய்யினையும் எண்ணெயினையும் அக் கூந்தலிற் பெய்து நறிய நீரால் ஆட்டிப் பின்னர் அவள் இடையில் பொருந்தும்படி ஆடையை உடுத்து அலங்காரம் செய்து பதுமாபதியும் தானுமாக அவள் பக்கங் களிலே இருந்து இனிய மொழிகள் பல பேசி ஒப்பற்ற சுவை அடிசிலைப் பொற்கலத்தே எடுத்து வருக! என வருவித்துக் கொண்டு அம் மூவரும் ஒரே கலத்தின்கண் உண்ணுநிற்க என்க.

(வி - ம்.) தான் : வாசவதத்தை. பண்ணிய - மணங்கூட்டி இயற்றிய. உடீஇ - உடுத்து. இனியன - கேட்டற்கு இனியவாகிய மொழிகள். பக்கத்து இருந்து எனவும், பொருவில் அடிசில் எனவும் வருவித்துக்கொள்க. மூவரும் - வாசவதத்தை பதுமாபதி மானனீகை என்னும் இம்மூவரும் என்க. கலம் - உண்கலம். அயில - உண்ண.

(வயந்தகன் உதயணனுக்குத் தெரிவித்தல்)

கசுச - ரு : வரி............உரைப்ப

(பொ - ரை.) அப்பொழுது வரிந்துகட்டிய நெடிய பூந் தொடையலை அணிந்த வயந்தக குமரன் விரைந்து சென்று இந் நிகழ்ச்சிகளை உதயணனுக்குக் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) வரி நெடுந் தொடையல் : வினைத்தொகை. வரிதல் - கட்டுதல். இனி வரிகளையுடைய தொடையல் எனினுமாம். தொடையல் - ஒருவகை மாலை.

(உதயணன் மகிழ்தல்)

கசுசு - சு : முகில்.............இனிதென

(பொ - ரை.) அது கேட்ட அவ்வுதயணன் முகிலுள் மூழ்கிய நிறைத் திங்கள் அம் முகிலும் களங்கமும் நீங்கிப்

பொலிந்தாற்போன்று தனது திருமுகம் துயர் நீங்கி மலரும்படி புன்முறுவல்கொண்டு இருக்கையினின்றும் எழுந்து இந் நற்செய்தி கொணர்ந்த வயந்தகனை "வருக! வருக!" என்று வரவேற்று முகமன் மொழிகள் பல கூறி, "நண்பனே! யான் நெருநல் ஒரு நற்சொல் கேட்டேன். அந் நன்னிமித்தம் இங்ஙனம் நலங்கூட்டியதுபோலும்" என்று கூறுநிற்ப என்க.

(வி - ம்.) உதயணனின் துன்பம் தோய்ந்திருந்த முகம் இது கேட்டவுடன் அத் துன்பம் நீங்கிப் பொலிந்தது என்பதற்கு உவமையாக முகில் தோய்மதி என்றும், தான் காதலித்த நங்கை பணிமகள் அல்லள் அரசமகள் என்று அறிந்தவுடன் அவன் நெஞ்சத்திலிருந்த வசை நினைவு நீங்குதலின் புகர் நீங்கியது என்றார். எனவே முகில் தோய்ந்திருந்த மதி அம்முகிலும் தன் களங்கமும் நீங்கிப் பொலிந்தாற் போல என்றாராயிற்று. ஒரு புள் - ஒரு நற்சொல். அச் சொல்லின் பயனே இஃதென்று மகிழ்ந்தபடியாம்.

(உதயணன் மானனீகையை மணஞ் செய்துகொள்ளல்)

கஎ0 - ரு : அது ....உரைப்ப

(பொ - ரை.) இங்ஙனம் நிகழுங்காலத்தே புதிய மணப் பெண்ணாகிய மானனீகைக்குத் திருமணக்கோலம் செய்துவிடுக என்று வாசவதத்தை பதுமாபதிக்குக் கூறிப் பின்னர் அவ்விடத்தே நின்ற பணிமகள் ஒருத்தியை நோக்கி, "ஏடி! நீ சென்று நம் செங்கோல் வேந்தன்பால் அவன் மானனீகையைத் திருமணம் புரிதல் வேண்டும் என்னும் இந்த நிலைமையினை அறிவிப்பாயாக!" என்று கூறிவிடுப்ப என்க.

(வி - ம்.) அது - அந் நிகழ்ச்சி. வேலை - பொழுது. புதுமண மாதர் என்றது மானனீகையை. வதுவைக்கோலம் - மணக்கோலம். சிலதி - பணிமகள். நம் பெருமான் தவறிலன் என்னும் நினைவால் செங்கோல் வேந்தன் என்றாள். சாற்று - அறிவி.

(இதுவுமது)

கஎசு - அக : பிணை...............பின்றை

(பொ - ரை.) அதுகேட்டலும் பிணைத்த மலர்மாலையணிந்த உதயணமன்னன் அப்பொழுது பரிய உடலினையுடைய பிடியானையின்மேல் தன் கேளிர்பலர் வருமாறு கூறுநிற்ப; மன்னர்களாகிய அந் நண்பர்கள் விரைந்து செல்லும் குதிரையையுடைய தேர்களோடும் தம் படை மறவர்கள் நெருங்கி ஆரவாரியா நிற்பப் பிடியின் மேலேறி வெற்றி முரசம் முழங்கும் அரண்மனை முற்றத்தின்கண் வந்து தங்காநிற்பவும், அழகிய பெருந்தேவிமாராகிய வாசவதத்தையும் பதுமாபதியும் பெரிதும் விரும்பி மானனீகையைத் தனக்கு வழங்காநிற்பவும், ஒவியரும் அஞ்சு

தற்குக் காரணமான பேரழகுடைய அந்த மானனீகையை உதயண மன்னன் நான்கு மறைகளையும் ஓதியுணர்ந்த அந்தணர்கள் நல்ல மணச் சடங்குகளை முன்னின்று காட்டாநிற்பவும் அம் மானனீகையோடு தீவலம் செய்து அவளைக் கூடிய பின்னர் என்க.

(வி - ம்.) பெருமகன் : உதயணன். பணை நிலை-பருத்த நிலைமை. சாற்றி - சாற்ற. அரசு - கேளிராகிய அரசர்கள். தேவியர் : வாசவதத்தையும் பதுமாபதியும். இத்தேவிமார் இருவருமே மானனீகைக்குத் தாயும் தந்தையுமாகி அவளைத் தனக்கு வழங்க என்பது கருத்து. உருவி - அழகி. ஓவியர் இவளழகு நம்மால் எழுதவியலாத தென்று உட்குவர் என்றவாறு. உட்குதல் - அஞ்சுதல்.

(இதுவுமது)

கஅஉ - அஎ : முற்றிழை..........கடிந்தென்

(பொ - ரை.) தொழிற்றிறன் முற்றிய அணிகலன்களையுடைய தேவிமார் மூவரும் வழிபடாநிற்பவும், வெற்றியுடைய அரசர்கள் உயர்ந்த திறைப் பொருளைக் கொணர்ந்து அளப்பவும், நாட்டின்கண் நல்ல வளத்தைச் செய்கின்ற பல்வேறு குடிமக்களும் தழைத்தோங்கா நிற்பவும், செல்வமிக்க வேந்தனாகிய அவ்வுதயணன் செங்கோல் செலுத்தி, மேலும் மேலும் தானம் செய்தலின்கண் விருப்பம் மிகாநிற்பவும், இவ்வாற்றால் அந் நாட்டின்கண் தீயன பலவற்றையும் அகற்றி இடையறாது நல்லொழுக்கின்கண் நிற்பானாயினன் என்க.

(வி - ம்.) உதயணன் வழிபடவும் அளப்பவும் தழைப்பவும் முற்றவும் ஓச்சி கடிந்து ஒழுகும் என்க.

கச. மணம்படு காதை முற்றிற்று.

௧௫. விரிசிகை வரவு குறித்தது

இதன்கண் : விரிசிகையின் இயல்பும் அவள் தந்தை உதயணனை அடைதலும் அவனுக்குக் கூறுதலும் உதயணன் விரிசிகைக்கு மலர்மாலை சூட்டிய செய்தியும், விரிசிகையின் முதுக்குறைவும், அவள் தந்தை அவளை மணந்துகொள்ளும்படி உதயணனுக்கு அறிவித்தலும், உதயணன் அச்செய்தியை வாசவதத்தைக்கு அறிவித்தலும், வாசவதத்தை உடன்படலும், உதயணன் விரிசிகையை மணத்தற்கு நன்னாட்கோடலும், நகரமாந்தர் மகிழ்ச்சியும் பிறவும் கூறப்படும்.

ஆறு தொழுகுங் காலை மேனாள்
இலைசேர் புறவி னிலாவா ணத்தயற்
கலைசேர் கானத்துக் கலந்துட னாடிய
காலத் தொருநாட் சீலத் திறந்த
சீரை யுடுக்கை வார்வளர் புன்சடை
ஏதமில் காட்சித் தாபதன் மடமகள்
பூவிரிந் தன்ன போதமர் தடங்கண்
வீழ்ந்தொளி திகழும் விழுக்கொடி மூக்கிற்
றிருவிற் புருவத்துத் தேன்போதி செவ்வாய்
விரிசிகை யென்னும் விளங்கிழைக் குறுமகள்
அறிவ தறியாப் பருவ நீங்கிச்
செறிவொடு புணர்ந்த செவ்விய ளாதலிற்
பெருமகன் சூட்டிய பிணைய லல்லது
திருமுகஞ் சுடரப் பூப்பிறி தணியாள்
உரிமை கொண்டன ளொழுகுவ தெல்லாம்
தரும நெஞ்சத்துத் தவம்புரி தந்தை
தெரிவன னுணர்ந்து விரைவனன் போந்து
துதைதார் மார்பி னுதையணற் குறுகிச்
செவ்விக் கோட்டியுட் சென்றுசேர்ந் திசைப்பித்
தவ்வழிக் கண்ணுற் றறிவி னாடிப்
பயத்தொடு புணர்ந்த பாடி மாற்றம்
இசைப்பதொன் றுடையே னிகழ்தல்செல் லாது
சீர்த்தகை வேந்தே யோர்த்தனை கேண்மதி

நீயே நிலமிசை நெடுமொழி நிறீஇ
வீயாச் சிறப்பின் வியாதன் முதலாக்
கோடா துயர்ந்த குருகுலக் குருசில்
வாடா நறுந்தார் வத்தவர் பெருமகன்
தேனூர் மார்ப தெரியின் யானே
அந்தமில் சிறப்பின் மந்தர வரசன்
யாப்புடை யமைச்சொடு காப்புக்கடன் கழித்தபின்
உயர்ந்த வொழுக்கோ டுத்தர நாடிப்
பயந்த புதல்வரைப் படுநுகம் பூட்டி
வளைவித் தாரும் வாயி னாடி
விளைவித் தோம்புதும் வேண்டிய தாமென
ஒடுக்கி வைக்கு முழவன் போல
அடுத்த வூழிதோ றமைவர நில்லா
யாக்கை நல்லுயிர்க் கரண மிதுவென
மோக்க முன்னிய முயற்சியே னாகி
ஊக்கஞ் சான்ற வுலகிய றிரியேன்
உம்மைப் பிறப்பிற் செம்மையிற் செய்த
தானப் பெரும்பயந் தப்புண் டிறத்தல்
ஞானத் தாளர் நல்லொழுக் கன்றென
உறுதவம் புரிந்த வொழுக்கினேன் மற்றினி
மறுவி லேனமர் மாபத் தினியும்
காசி யரசன் மாசின் மடமகள்
நீல கேசி யென்னும் பெரும்பெயர்க்
கோலத் தேவி குலத்திற் பயந்த
வீயாக் கற்பின் விரிசிகை யென்னும்
பாசிழை யல்குற் பாவையைத் தழீஇ
மாதவம் புரிந்தே மான்கண மலிந்ததோர்
வீததை கானத்து விரதமோ டொழுகும்
காலத் தொருநாட் காவகத் தாடிப்
பள்ளி புகுந்து பாவங் கழூஉம்
அறநீ ரத்தத் தகன்றியான் போக
மறுநீங்கு சிறப்பிற் புண்ணியத் திங்கட்
கணைபுரை கண்ணியைக் கவான்முத லிரீஇப்
பிணையல் சூட்டினை பெருந்தகை மற்றிது

புணைதனக் காகப் புணர்திற னுரைஇ
உற்றது முதலா வுணர்வுவந் தடைதரப்
பெற்றவற் கல்லது பெரியோர் திரிப்பினும்
கோட்டமில் செய்கைக் கோள்கையின் வழாஅள்
வேட்கையிற் பெருகிநின் மெய்ப்பொருட் டமைந்த
மாட்சி நெஞ்ச மற்றுநினக் கல்லது
மறத்தகை மார்ப திறப்பரி ததனால்
ஞாலம் விளக்கு ஞாயிறு நோக்கிக்
கோலத் தாமரை கூம்பவிழ்ந் தாங்குத்
தன்பாற் பட்ட வன்பி னவிழ்ந்த
நன்னுதன் மகளி ரென்ன ராயினும்
எவ்வந் தீர வெய்தின ரளித்தல்
வையத் துயர்ந்தோர் வழக்கால் வத்தவ
யாமகட் டருதுங் கோள்கெனக் கூறுதல்
ஏம வையத் தியல்பன் றாயினும்
வண்டார் தெரியல் வாண்முகஞ் சுடரப்
பண்டே யணிந்தநின் பத்தினி யாதலிற்
பயந்தனர் கொடுப்ப வியைந்தன ராகுதல்
முறையே யென்ப விறைவ வதனால்
யானே முன்னின் றடுப்ப நீயேன்
தேனேர் கிளவியைத் திருநா ளமைத்துச்
செந்தீக் கடவுண் முந்தை யிரீஇ
எய்துத னன்றெனச் செய்தவ னுரைப்ப
மாதவ னுரைத்த வதுவை மாற்றம்
காவற் றேவிக்குக் காவல னுணர்த்த
மணிப்பூண் வனமுலை வாசவ தத்தை
பணித்தற் கூடாள் பண்டே யறிதலின்
உவந்த நெஞ்சமொடு நயந்திது நன்றென
அரிதிற் பெற்ற வவந்திகை யுள்ளம்
உரிதி னுணர்ந்த வுதயண குமரன்
ஓங்குபுகழ் மாதவ னுரைத்ததற் குடம்பட்டு
வாங்குசிலை பொருதோள் வாழ்த்துந ரார
அரும்பொருள் வீசிய வங்கை மலரிப்
பெரும்பொரு ளாதலிற் பேணுவனன் விரும்பி

நீரிற் கொண்டு நேரிழை மாதரைச்
சீரிற் கூட்டுஞ் சிறப்பு முந்துறீஇ
நாடு நகரமு மறிய நாட்கொண்டு
பாடிமிழ் முரசம் பல்லூ ழறைய
மாக விசும்பின் வானோர் நோக்க
போக பூமியிற் பொன்னகர் பொலிய
நாற்பான் மருங்கினு நகரத் தாளர்
அடையாக் கடையர் வரையா வண்மையர்
உடையோ ரில்லோர்க் குறுபொருள் வீசி
உருவத் தண்டமைழத் தாபதன் மடமகள்
வருவழிக் காண்டு நாமென விரும்பித்
தெருவிற் கொண்ட பெருவெண் மாடத்துப்
பொற்பிரம்பு நிரைத்த நற்புற நிலைச்சுவர்
மணிகிளர் பலகை வாய்ப்புடை நிரைத்த
அணிநிலா முற்ற மயலிடை விடாது
மாத்தோய் மகளிர் மாசில் வரைப்பிற்
பூத்தோய் மாடமும் புலிமுக மாடமும்
கூத்தா டிடமுங் கொழுஞ்சுதைக் குன்றமும்
நாயின் மாடமு நகரநன் புரிசையும்
வாயின் மாடமு மணிமண் டபமும்
ஏனைய பிறவு மெழினகர் விழவணி
காணுந் தன்மையர் காண்வர வேறிப்
பிடியுஞ் சிவிகையும் பிறவும் புகாஅள்
இடுமணல் வீதியு ளியங்குநள் வருகெனப்
பெருமக னருளினன் பெறற்கரி தென்று
கழிபெருங் காரிகை..............................
....
.........................மொழிந்தழி வோரும்
சேரி யிறந்து சென்று காணும்
நேரிழை மகளி ரெல்லா நிலையெனப்
பேரிள மகளிரைப் பெருங்குறை யாகக்
கரப்பி னுள்ளமொடு காத னல்கி
இரப்புள் ளுறுத்தல் விருப்புறு வோரும்
வண்ட லாடிய மறுகினுட் காண்பவை
கண்டினிது வரூஉங் கால மன்றெனக்

காவல் கொண்டன ரன்னையர் நம்மென
நோவன ராகி நோய்கொள் வோரும்
எனையோர் பிறரும் புனைவன ரீண்டி
விரைகமழ் கோதை விரிசிகை மாதர்
வருவது வினவிக் காண்பது மால்கொளக்
காண்பதொன் றுண்டெனக் கைத்தொழின் மறக்கும்
மாண்பதி யியற்கை மன்னனு முணர்ந்து
தடந்தோள் வீசித் தகைமாண் வீதியுள்
நடந்தே வருக நங்கை கோயிற்
கணியில் யாக்கை மணியுடை நலத்திற்
றமிய ளென்பது சாற்றுவனள் போலக்
காவ லின்றிக் கலியங் காடியுண்
மாவும் வேழமும் வழக்குநனி நீக்கி
வல்லென மணிநில முறுமை வாயில்
எல்லை யாக வில்லந் தோறும்
மெல்லெ னறுமலர் நல்லவை படுக்கென
உறுதொழி லிளையரை யுதயண னேவா
மறுவின் மாத ரொழியகங் கோயில்
நறுநுதன் மகளிரொடு நன்மு தாளரும்
நண்பிற் றிரியாது பண்பொடு புணர்ந்த
காஞ்சுகி மாந்தருந் தாஞ்சென்று தருகென
நடந்தே வருமா னங்கைநந் நகர்க்கென
நெடுந்தேர் வீதியு மல்லா விடமும்
தொடைநவில் வேந்தன் கொடிக்கோ சம்பி
நிலையிடம் பெறாது நெருங்கிற்றாற் சனமென்.

உரை

கரு. விரிசிகை வரவு குறித்தது

அஃதாவது—உதயணன் முன்னர் விரிசிகை என்னும் பேதைப் பருவத்தினளுக்கு மலர்சூட்டி விடுத்தானாக அதனால் அவள் பெதும்பைப் பருவம் அடைந்த பின்னர் நல்லறிவு வாய்க்கப்பெற்று அவ்வுதயணனை யன்றி வேறு ஒருவரையும் மணவேன்! என்றிருந்தாளாக; அவள் தந்தை உதயணன்பால் வந்து அச்செய்தியை அறிவிப்ப, அதுகேட்ட அம்மன்னவன் அவ்விரிசிகையைத் தன் அரண்மனைக்கு வருமாறு பணித்த தனைக் கூறும் பகுதி என்றவாறு.

(விரிசிகையின் இயல்பு)

க - கய : ஆறைது...............குறுமகள்

(பொ - ரை.) இவ்வாறு உதயண மன்னன் நன்னெறிக்கண் நின்று இடையறு தொழுகுங்காலத்தே பண்டு அவ்வுதயண மன்னன் இலாவாணக நகரத்தின்கண் அரசு வீற்றிருந்தபொழுது, மரங்கள் அடர்ந்த முல்லை நிலத்தின்கண் கலைமானும் பிணைமானும் சேர்ந்த காட்டின்கண் வாசவதத்தையோடும் பரிவாரங்களோடும் சென்று உண்டாட்டு நிகழ்த்திய காலத்தே ஒருநாள் தவ ஒழுக்கத்தின்கண் மிக்கவனும் மரவுரியினையும் நீண்டு வளர்ந்த புல்லிய சடையினையும் குற்றமற்ற நற்காட்சியினையும் உடைய ஒரு துறவியின் மடப்பமுடைய மகளும், கருங்குவளைமலர் மலர்ந்தாற் போன்ற பெரிய விழிகளையும் ஒழுகினாற்போன்று நீண்டு ஒளியினாற் றிகழாநின்ற சிறந்த கொடிபோன்ற மூக்கினையும், அழகிய வில்லையொத்த புருவங்களையும், தேன் பொதிந்து வைத்தாற் போன்ற இனிய மொழிகளையுடைய சிவந்த வாயையும், விளங்கிய அணிகலங்களையுமுடைய பேதைப் பருவத்தாளும் ஆகிய **'விரிசிகை'** என்னும் ஒரு சிறுமி என்க.

(வி - ம்.) மேனாள் என்றது உதயணன் இலாவாணக நகரத்தின்கண் அரசு வீற்றிருந்த காலத்தை. இலை: ஆகுபெயர். மரம் என்க. புறவு - முல்லை நிலம். கலை - ஆண்மான். இனம் பற்றிப் பிணை மானுங் கொள்க. வாசவதத்தையுடன் கலந்து ஆடிய காலத்து என்க. சீலம்-ஒழுக்கம். இறந்த - மிகுந்த. சீரை - மரவுரி. ஏதம் - குற்றம். காட்சி - நற்காட்சி. தாபதன் - துறவி. போதமர் தடங்கண் என்புழிப் போதமர் உவமையின்றி வாளா அடைமாத்திரை. தேன் மொழிக்குவமை. விரிசிகை என்னும் இவளைப் பற்றி இலாவாண காண்டத்தில் கங ஆவது விரிசிகை மாலை சூட்டு என்னும் காதையின்கண் விரிவாக உணர்க.

(இதுவுமது)

கக - எ : அறிவது...............உணர்ந்து

(பொ - ரை.) தான் அறிதற்குரிய பொருளை அறிய மாட்டாத பேதைப்பருவம் நீங்கி முதுக்குறைவோடு சேர்ந்த பெதும்பைப் பருவத்தை எய்தினாளாதலின் கழிந்த அப்பேதைப் பருவத்தின்கண் தன் கூந்தலின்கண் உதயணமன்னன் சூட்டிவிட்ட அம்மலர் மாலையை அணிந்ததல்லது தனது அழகிய முகம் விளங்கும்படி பிற மலரை அணியாளாய் **'உற்றோர்க்குரியர் பொற்றொடி மகளிர்'** என்னும் அறம் பற்றித் தன்னைத் தீண்டி மலர் சூட்டிய அவ்வுதயணனுக்கே கற்புக் கடம்பூண்டு ஒழுகும் ஒழுக்கமெல்லாம் அறம் நிரம்பிய நெஞ்சத்தையுடைய தவம் புரிகின்ற அவள்தந்தை உணர்ந்து கொண்டு என்க.

(வி - ம்.) அறிவதறியாப் பருவம் என்றது பேதைப் பருவத்தை. செறிவு - முதுக்குறைவு. செறிவொடு புணர்ந்த செவ்வியள் என்றது பெதும்பைப் பருவத்தை. பெருமகன் - உதயணன். உரிமை-கற்புரிமை.

(விரிசிகையின் தந்தை உதயணனை அடைதல்)

கஎ - உ௩ : விரைவனன்............கேண்மதி

(பொ - ரை.) விரைந்துசென்று மலர் செறிந்த மாலையினை யுடைய மார்பினையுடைய உதயணமன்னனை அணுகி அம் மன்னன் நல்லவையின்கண் இருந்த செவ்வி தேர்ந்து கொண்டு அவ்வவையின் வாயிலிற் சென்று வாயிலோர் வாயிலாய்த் தனது வரவினை அம் மன்னனுக்கு அறிவித்து, அவன் உடம்பாடு பெற்று அவனையணுகி நோக்கி, "மிக்க புகழையுடைய வேந்தே! யான் என் அறிவினால் ஆராய்ந்து பார்த்ததும், பெரும் பயனோடு கூடியதுமாகிய பாடிவீட்டின்கண் நிகழ்ந்த செய்தி ஒன்றனை நினக்குக் கூறவந்துள்ளேன்; அதனை இகழாது கேட்டு ஆராய்ந்து கொள்க!" என்க.

(வி - ம்.) விரைவனன் - விரைந்து. செவ்விக்கோட்டி-தன்காரியத்திற்கு உதவியான அவை. தன் வரவினை இசைப்பித்து என்க. பண்டு உதயணன் உண்டாட்டின் பொழுது, படவீட்டிலிருந்த காலத்தே நிகழ்ந்த செய்தி என்பான் பாடி மாற்றம் என்றான். பாடி- படவீடு. சீர் - மிக்க புகழ். கேண்மதி என்புழி மதி முன்னிலையசை.

(அம் முனிவன் கூற்று)

உச - க௯ : நீயே............அரசன்

(பொ - ரை.) வண்டுகள் ஆரவாரிக்கும் மார்பினையுடைய மன்னனே! நீ தானும் இந்நில உலகத்தின்மேல் பெரும் புகழை நிறுவிய அழியாத சிறப்பினையுடைய 'வியாதன்' என்னும் வேந்தன் முதல்வனாகக் கோணாது மேன்மேலும் உயர்ந்துவந்த குருகுலத்தோன்றல்; வாடாத நறிய மாலையினையுடைய வத்தவ நாட்டினர் மன்னன்; இனி ஆராயுங்கால் யானும் முடிவற்ற சிறப்பினையுடைய வித்தியாதர உலகத்துள்ள ஓர் அரசனே காண்!" என்க.

(வி - ம்.) நெடுமொழி - புகழ். நிறீஇ - நிறுத்தி. வீயா - அழியாத. வியாதன் - குருகுலத்து முதல் மன்னன். தேன் - வண்டு. தெரியின் - ஆராயின். அந்தம் - முடிவு. மந்தரவரசன் - வித்தியாதர உலகத்துள்ள அரசன். இதனால் நீயும் யானும் சிறந்த அரச மரபினரே எனக் குல ஒப்புமை கூறினானாதல் உணர்க.

(இதுவுமது)

௬௦ - ௬ : யாப்புடை..............திரியேன்

(பொ - ரை.) "வேந்தே! யான் எனது நாட்டின்கண் பொருத்தமான அமைச்சு முதலிய அரசுறுப்புக்களோடு மன்னுயிர் காவலாகிய எனது கடமையை நெடுங்காலம் செய்து கழித்தபின்னர் எனது இறுதிக்காலத்தே செய்யவேண்டிய கடமையை ஆராய்ந்து யான் ஈன்ற மக்களை அரசியற்சாகாடு பூட்டி விட்டுப் பின்னர் ஓர் உழவன் தான் பிற்காலத்தே உண்ணு தற்குரிய வழியை முற்பட ஆராய்ந்து விளைதற்குரிய விதைகள் நமக்கு இன்றியமையாது வேண்டப்படுதலின் அதனைச் சூழ அரணிட்டுப் பாதுகாப்பேம் என்று துணிந்து அவ்விதையினை அவ்வரணகத்தே ஒடுக்கி வைக்குமாறு போல அடுத்தடுத்து வாராநின்ற காலத்தின்கண் தனக்குப் பொருந்துமாறு நிலை நில்லாத யாக்கையினையுடைய நல்ல எனது உயிருக்கு இதுவே நிலைத்த அரணாகும் என்று கருதி வீடுபேற்றினைக் கருதிய தவமுயற்சியை யுடையேனாய் ஊக்கமமைந்த சான்றோர் நெறியிற் பிறழாமல்" என்க.

(வி - ம்.) காப்புக் கடன் - மன்னுயிரைக் காவல் செய்யும் கடமை. உயர்ந்த ஒழுக்கம் என்றது மனம் பொறிவழிச் செல்லாமல் அடக்குதல். உத்தரம் நாடி - இறுதிக் காலத்துச் செய்யும் கடமையை நாடி. படுநுகம் - அரசியற் சாகாட்டின் நுகத்தடி; என்றது அரசாட்சியை ஒப்புவித்து என்றவாறு. உழவன் ஆரும் வாயில் நாடி விளைவித்து வேண்டியதாம் என்று ஓம்புதும் என்று வளைவித்து ஒடுக்கி வைக்குமாறு போல என்க. ஆரும்வாயில் - உண்ணுதற்குரிய வழி. வளைவித்து - சூழ அரண் செய்து. ஊழி - காலம். அமைவர - பொருத்த முண்டாக. நில்லாத யாக்கையையுடைய உயிர் என்க. பேரின்பம் நுகர்தற்குரிய உயிர் என்பான் நல்லுயிர் என்றான். இது - இம் முயற்சி. மோக்கம் - வீடு. உலகு - சான்றோர்.

(இதுவுமது)

௭௦ - ௭ : உம்மை..............பயந்த

(பொ - ரை.) "இப்பிறப்பிலே நடுநின்று செய்த தானத்தின் பெரிய பயன் பிழைக்கும்படி ஒழுகி, ஒருநாட் சாதல் அறிவுடையோர் ஒழுகும் நல்லொழுக்கமாகாது என்று கருதி அச்சான்றோர் மேற்கொள்ளும் மிக்க தவத்தை விரும்பிய ஒழுக்கமுடையேனாயினேன். மேலும் குற்றம் யாதுமில்லாத என்னால் பெரிதும் விரும்பப்படுபவளும் காசியரசனுடைய குற்றமற்ற மடப்பமுடைய மகளும், பெரிய புகழையுடையவளும் அழகுடைய பெருந்தேவியும் ஆகிய நீலகேசி என்னும் பெயரை யுடைய என் சிறந்த பத்தினிதானும் என் குலவிளக்காக ஈன்ற" என்க.

(வி - ம்.) உம்மைப் பிறப்பு - இப்பிறப்பு. செம்மை - நடுநிலைமை. தப்புண்டு - பிழைப்ப. ஞானத்தாளர் - மெய்யுணர்வுடையோர். உறுதவம்-மிக்க தவம். மறு - குற்றம். பெயர் - பெயருமாம். குலத்திற்கு ஆக்கமாகப் பயந்த என்க.

(இதுவுமது)

சஅ - ருச: வீயா............போக

(பொ - ரை.) "கெடாத கற்பினையுடைய விரிசிகை என்னும் பெயரையுடைய பசிய அணிகலனணிந்த அல்குலினையுடைய அப் பெண்மகவினையும் ஏந்திவந்து என்னோடு பெரிய தவத்தினைச் செய்து தீங்கு செய்யாத மான் கூட்டங்களே மிக்க ஒரு மலர் செறிந்த கானத்தே நோன்போடு ஒழுகுங் காலத்தில் யான் தீவினையைக் கழுவும் புண்ணிய தீர்த்தத்தில் ஆடுதற்கு அவ்விடத்தினின்றும் சென்று விட்டேனாக, அப்பொழுது நீ ஒருநாள் அக்காட்டிலே உண்டாடுதல் செய்து எம்முடைய தவப்பள்ளியிலே புகுந்து" என்க.

(வி - ம்) வீயா - கெடாத. பாவை - ஈண்டு மகவு என்பதுபட நின்றது. மான்கணம் என்றது தீங்கு செய்யாத இயல்பினையுடைய மான்கணம் என்பதுபட நின்றது. வீ-மலர். விரதமோடொழுகுங் காலத்து யான் அகன்று பாவங்கழூஉம் அறநீர் அத்தத்துப் போக நீ ஒருநாள் பள்ளிபுகுந்து என்க.

(உதயணன் விரிசிகைக்கு மாலைசூட்டிய செய்தியைக் கூறுதல்)

ருரு - ௪ : மறு..............சூட்டினை

(பொ - ரை.) "களங்கம் நீங்கிய சிறப்பினையுடைய புண்ணியமுடைய திங்கள் மண்டிலத்தே வைக்கப்பட்ட இரண்டு அம்புகளை ஒத்த கண்களையுடைய என் மகளாகிய அவ்விரிசிகையை நீ நினது தொடையின்மேல் ஏற்றிவைத்து அவள் கூந்தலிலே மலர்சூட்டி விட்டனை அல்லையோ ?" என்க.

(வி - ம்.) மறு - களங்கம். இனி புண்ணியத் திங்களாகிய அப்பொழுது எனினுமாம். கவான் - தொடை. இரீஇ - இருத்தி. பிணையல்-மாலை. இது முற்காலத்தே உதயணன் விரிசிகையை மெய்தொட்டுப் பயின்றதனை நினைவுறுத்தியபடியாம்.

(விரிசிகையின் மாண்பு)

ருஎ - கூச : பெருந்தகை...............அதனால்

(பொ - ரை.) "பெருந்தகாய் ! அச்செயலினையே நெடிய இக்கால வெள்ளத்தைக் கடக்கும் தெப்பமாகப் பற்றிக்கொண்டு நின்னையே மணம்புணரும் திறத்தைச் சொல்லிக்கொண்டு நின்

மெய்யைத் தீண்டியதனையே காரணமாகக் கொண்டு, அவட்கு நின்பால் காதலுணர்ச்சி வந்து சேர்தலாலே இவ்வாற்ருல் காதலனாகப்பெற்ற நினக்குக் கற்புக்கடம் பூண்ட செவ்விய செய்கையாகிய தன் கொள்கையினின்றும் சான்ரூர் தன் மனத்தைத் திருப்பினும் திறம்பாதவளாய் நின்பால் வைத்த காமவேட்கையின்கண் பெருகி நின் மெய்யுறு புணர்ச்சியின்பொருட்டு அமைந்துள்ள மாண்புமிக்க அவள் நெஞ்சம் மறத்தகை மார்பனே நினக்குத் திறப்பதல்லது வேறியார்க்கும் திறத்தல் அரிது. ஆதலால்" என்க.

(வி - ம்.) பெருந்தகை: விளி. இது - நீ பிணையல் சூட்டிய இச்செயல். புணை – தெப்பம். புணை என்றதற்கேற்பக் காலவெள்ளத்தைக் கடத்தற்கு என வருவித்தோதுக. உரைஇ - உரைத்து. உற்றது - தீண்டியது. உணர்வு - காதலுணர்ச்சி. பெற்றவன் : காதலன். கோட்டமில் - வளைதலில்லாத. வழாஅள் - திறம்பாள். காமவேட்கையிற் பெருகி என்க. மார்ப : விளி.

(விரிசிகையின் தந்தை தன் மகளை மணம் செய்துகொள்ளும்படி உதயணனுக்குக் கூறல்)

௬௫ - ௭௨ : ஞாலம்............ஆயினும்

(பொ - ரை.) "வத்தவ வேந்தே! உலகத்தை ஒளியால் விளக்குகின்ற ஞாயிற்று மண்டிலத்தின் எழுச்சிநோக்கி அழகிய தாமரை மலர் இதழ்விரிந்து மலர்ந்தாற்போல ஒருவர் தம்பால் காதலால் நெகிழ்ந்த நெஞ்சத்தையுடைய நல்ல நெற்றியையுடைய கன்னி மகளிர் யாரேபாயினும் அவர்தம் காமத்துன்பம் தீரும்படி அவர்பாற் சென்று அளி செய்தல் இந்நில உலகத்தே சான்ரூர் வழக்கம் ஆகும். வேந்தே! இன்பமிக்க இவ்வுலகத்தின்கண் ஈன்ரூர் 'யாம் எம்மகளை நினக்குத் தருவேம்! ஏற்றுக் கொள்க!' என்று முற்படக் கூறுதல் இயல்பன்று. ஆயினும்" என்க.

(வி - ம்.) ஞாலம் - உலகம். கூம்பு - குவிதல். தன்பால்: ஒருமைப்பன்மை மயக்கம். தம்பால் என்க. என்னர் - யாரே. எவ்வம் - துன்பம். வத்தவ : விளி. ஏமம் - காவலுமாம்.

(இதுவுமது)

௭௩ - ௮௦ : வண்டார்............உரைப்ப

(பொ - ரை.) "இறைவனே! நீதானும் முன்னரே அவளுடைய ஒளிமுகம் விளங்கும்படி வண்டுகள் பொருந்தும் மலர் மாலையினை அணிந்தமையால் அவள் நின் பத்தினியே ஆவள். இங்ஙனம் களவு வகையாலே நீ மணந்துகொண்ட அவளை அவள் இருமுது குரவரும் வதுவை முறையால் நினக்கு வழங்க உடம்

பட்டவராதல் முறையே ஆதலின், அவள் தந்தையாகிய யானே முன்னின்று அவளை நின்பால் சேர்ப்ப, நீ என் வேண்டுகோட்கிணங்கி மணத்திருநாள் குறிப்பிட்டுச் சிவந்த தீக்கடவுளின் முன்னர்த் தேன் போன்ற இனிய மொழியையுடைய அவளை இருத்தி வாழ்க்கைத்துணையாக ஏற்றுக்கோடல் நன்றாகும்," என்று பெரிதும் செய்த தவத்தையுடைய அத்துறவோன் கூறாநிற்ப என்க.

(வி - ம்.) தெரியல் - மாலை. பத்தினி - மனைவி. பயந்தனர் - ஈன்றோர். என்ப : அசை. இறைவ : விளி. அடுப்ப - சேர்ப்ப. திருநாள் - மணச்சடங்கு நிகழ்த்தும் விழாநாள். முந்தை - முன்பு. இரீஇ - இருத்தி.

(விரிசிகையின் வதுவையை வாசவதத்தைக்கு உணர்த்தல்)

அக - உ : மாதவன்............உணர்த்த

(பொ - ரை.) அதுகேட்ட அரசன் அத்துறவோன் கூறிய திருமணச்செய்தியை நெஞ்சு காத்தலில் சிறந்த கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தைக்கு உணர்த்தாநிற்ப என்க.

(வி - ம்.) வதுவைமாற்றம் - திருமணம் பற்றிய செய்தி. தேவி : வாசவதத்தை. காவலன் : உதயணன்.

(வாசவதத்தை உடன்படல்)

அ௩ - ௫ : மணி.................நன்றென

(பொ - ரை.) அதுகேட்ட மணியணிகலனணிந்த அழகிய கொங்கைகளையுடைய அவ்வாசவதத்தைதானும், முன்னரே அம்மன்னவன் அவ்விரிசிகையை மெய்தொட்டுப் பயின்றதனை அறிந்திருத்தலாலே அம்மன்னவன் கூறிய அதற்கு ஊடாளாய்ப் பெரிதும் மகிழ்ந்த நெஞ்சத்தோடு தானும் விரும்பி, "பெருமானே! இக்காரியம் மிகவும் நன்றேயாம்!" என்று உடம்படாநிற்ப என்க.

(வி - ம்.) பணித்தற்கு - கூறியதற்கு என்பதுபட நின்றது. பண்டு உதயணன் மெய்தொட்டுப் பயின்ற அம்முனிவன் மகளை அவன் மணத்தல் நல்லறமே என்பதுபற்றி வாசவதத்தை உவந்தாள் என்க. அங்ஙனம் மணம் செய்யாதுவிடின் உதயணனுக்குப் பாவமும் பழியும் ஆகலின் அக்கற்புடைத் தேவி அத்திருமணத்தைத் தானும் நயந்து இது நன்றென்றாள். இச்சிறப்புக்கருதி அப்பெருமகளை அரிதிற்பெற்ற அவந்திகை என்று நூலாசிரியர் பாராட்டுவர்.

(உதயணன் விரிசிகையை மணத்தற்கு நன்னாள் கோடல்)

அ௬ - ௬௭ : அரிதின்.............பொலிய

(பொ - ரை.) அதுகேட்டுத் தான் அருமையாக வாழ்க்கைத் துணைவியாகப் பெற்ற அவ்வவந்திகாட்டரசன் மகளினது திரு உள்ளத்தை உணரும் உரிமையோடு உணர்ந்துகொண்ட அம் மன்னவன் உயர்ந்த புகழையுடைய பெரிய தவத்தையுடைய அம்முனிவன் கூறியதற்குத் தானும் அங்ஙனமே செய்குவல் என்று உடம்பட்டு வளைந்த விற்கிடந்து அழுத்திய தன் தோள் களை வாழ்த்துகின்ற நல்லிசைப்புலவர் முதலியோர் நுகரும்படி பெறுதற்கரிய பொருள்களை எளிதில் வழங்கும் தனது உள்ளங் கையை விரித்து உலகின்கண் மிகப்பெரிய பொருளாதலின் அதைப் பெறுதற்குத் தானும் வேணவாக்கொண்டு விரும்பி நேரிய அணிகலனணிந்த அவ்விரிசிகை நங்கையை அவட்குரி யோர் நீரோடு வழங்க ஏற்றுக்கொண்டு சிறந்த தன் அரண்மனைக் கட் சேர்க்கும் சிறப்பினை முன்வைத்துத் தன்னாட்டு மக்களும் நகர மக்களும் அறிந்துகோடற்பொருட்டுப் பலரறி மணம் செய்தற்கு நன்னாட்கொண்டு அச்செய்தியை ஒலிபரப்பும் முர சத்தை முழக்கிப் பன்முறையும் அறிவிக்கும்படி செய்து மேலும் தனது பொன்னகராகிய அக்கோசம்பி நகரம் வானத்தின் கண்ணுள்ள தேவர்கள் கூடிவாழும் போக பூமிபோலப் பொலி வுறும்படி ஒப்பனை செய்விப்ப என்க.

(வி - ம்.) அவந்திகை : வாசவதத்தை. இஃது அவட்கு இடத் தால் வருபெயர். உரிதின் - உரிமையோடு. மாதவன் : விரிசிகை தந்தை. வாழ்த்துநர் - வாழ்த்தும் புலவர் முதலியோர். ஆர - நுகர. மலரி - விரித்து. பெரும்பொருள் என்றது விரிசிகையை. என்னை ?

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்" (குறள். ருச)

எனவரும் திருக்குறளும் காண்க. இனி இவ்வாசிரியரே,

"வானுறை யுலகினும் வையக வரைப்பினும்
தான விளைவினுந் தவத்தது பயத்தினும்
எண்ணரும் பல்லுயி ரெய்தும் வெறுக்கையுட்
பெண்டிருண் மிக்க பெரும்பொருள் இன்மையின்
உயிரெனப் படுவ துரிமை யாதலின்" (க-௫௮ : உ௬௫-௭)

என மிக அழகாகக் கூறுதலுங் காண்க. நீர்வார்த்துக் கொடுப்பக் கொண்டு என்க. மாதரை - விரிசிகையை. சீர்இல் - சிறந்த அரண்மனை. சிறப்போடு கூட்டும் எனினுமாம். நாடு நகரம் என ஆகுபெயர்கள். நாள் - மணம் செய்தற்குரிய நன்னாள். அறைய - அறைவித்து. மாக விசும்பு : இருபெயரொட்டு. பொன்நகர் பொலிய ஒப்பனை செய் வித்து என்க.

(நகரமாந்தர் விரிசிகை வரவுகாண விரும்புதல்)

௯அ - ௧0௨ : நாற்பால்.............விரும்பி

(பொ - ரை.) அந்நகரத்தின்கண் அரண்மனையைச் சூழ்ந்து நான்கு பக்கங்களினும் வாழும் மாந்தர்கள் அத்திருமண முரசு முழக்கங் கேட்டு ஒவ்வொருவரும் மகிழ்ந்து அடையாத வாயிலை உடையாராய் வரையாது வழங்கும் வள்ளன்மையை உடையராய்ச் செல்வம் உடையோர் அஃதில்லாத ஏழைகட்கு மிக்க பொருளை வழங்கி, அழகிய தண்ணிய தழையாடையை யுடுத்த அத்துறவிமாமகளை அவள் வருகின்ற வழியில் வைத்துக் காண்பேம் என்று பெரிதும் விரும்பி என்க.

(வி - ம்.) அடையாக்கடை - திறந்த வாயில். இரவலர் தடையின்றி வருதற்கு வாயிற் கதவுகளைத் திறந்து போகட்டனர் என்பது கருத்து. வரையாவண்மை - இன்னர் இனையோர் என்று வரையறை செய்யாது எல்லோர்க்கும் வழங்கும் வள்ளற்றன்மை. உடையோர் இல்லோர் என்பன செல்வமுடையோர் அஃதில்லோர் என்னும் பொருளுடையன. உறுபொருள் - மிக்க பொருள். அறத்தாலீட்டிய பொருளுமாம். வீசி - வழங்கி. உருவம் - அழகு. தழை - தழையாடை. மடமகள் : விரிசிகை.

(இதுவுமது)

௧0௩ - ௧௩ : தெருவில்..............ஏறி

(பொ - ரை.) தெருவாக அமைந்த பெரிய வெண்சுதை தீற்றப்பட்ட மாடத்தின்கண் பொன்னாலியன்ற பிரம்புகளை நிரல்பட வமைத்த நல்ல புறநிலைச் சுவரின்கண் மணி ஒளி கிளரும் பலகைகளை முகப்பின்கண் நிரல்பட வமைக்கப்பட்ட அழகிய நிலாமுற்றத்தின் கண்ணும் அயலிடத்தும் இடைவெளியின்றி, மாந்தளிர் நிறமுடைய மகளிர்களும் இன்னும் குற்றமற்ற இடமமைந்த பூத்தொழில் செய்யப்பெற்ற மாடங்களினும் புலிமுக மாடங்களினும் கூத்தாட்டரங்கங்களினும் கொழுவிய சுதையை யுடைய செய்குன்றங்களினும் ஞாயின்மாடங்களினும் நகரத்தின் நல்ல மதில்களின்மேலும் கோபுரங்களினும் மணிதிகழ் மண்டபங்களினும் இன்னோரன்ன பிற இடங்களினும் அழகிய அந்தக் கோசம்பி நகரத்தின் மணவிழா ஒப்பனையைக் கண்டு களிக்கும் கருத்துடையராய் அவற்றிற்கு மேலும் அழகுண்டாக ஏறுநிற்ப என்க.

(வி - ம்.) தெருவிற்கொண்ட - தெருவாக வமைந்த. பிரம்பு நிரைத்த நிலைச்சுவரையும் முகப்பின்கண் மணிப்பலகையினையும் உடைய நிலாமுற்றத்தும் அயலும் என்க. மாத்தோய் மகளிர் - மாந்தளிர் நிறமமைந்த மகளிர் என்க. பூத்தோய்மாடம் - பூத்தொழில் செய்த மாடம். புலிமுக மாடம் - புலி உருவம் அமைந்த முகப்பினை

யுடைய மாடம். குன்றம் - செய்குன்றம். ஞாயில் - ஞாயில் : போலி. புரிசை - மதில். வாயின்மாடம் - கோபுரம். நகர் - கோசம்பிநகர். விழவணி - விழாவின்பொருட்டுச் செய்த ஒப்பனை. காண் - அழகு. ஏறி - ஏற.

(இதுவுமது)

கககச - உ௩ : பிடி.............உறுவோரும்

(பொ - ரை.) "விரிசிகை நல்லாள் பிடியானையினுதல் சிவிகையினுதல் பிற ஊர்திகளினுதல் ஏறுளாய்க் கொணர்ந்து பரப்பிய மணலையுடைய இந்நகர வீதியின்கண் தன்காலாலேயே நடந்து வருவாளாக!" என்று நம்பெருமான் கட்டளை இட்டிருக்கின்றனன். அங்ஙனம் வருதலால் அக்காட்சி பின் பெறற்கு அரிதாம் என்று மிகப் பேரழகு...........கூறி நெஞ்சு அழிவாரும் தம் சேரியை விட்டுச் சென்று அவள் வரும் வழியில் நின்று காண விரும்பும் நேரிய அணிகலனுடைய மகளிர் எல்லாம் தம் செவிலி முதலிய பேரிளம் பெண்டிர் மெய்யென்று கருதும்படி அன்பு மொழி பலவற்றைப் பேசி அம்மகளிர் அறியாமல் மறைந்து சென்று விரிசிகையைக் காணும் கருத்தோடு வேறு சில காரியங்களைக் காட்டி அவற்றின் பொருட்டுச் செல்ல விடை தருமாறு இரந்து விடைபெறும் விருப்பத்தை யுடையோரும் என்க.

(வி - ம்.) நிலை - மெய்ம்மை. பெருங்குறை - இன்றியமையாக் காரியம். பேரிளமகளிர் - செவிலி முதலியோர்.

(இதுவுமது)

கஉச - எ : வண்டல்..........கொள்வோரும்

(பொ - ரை.) எங்கள் தாய்மார் எம்மை நோக்கி ஏடிமாரே! நீவிர் மணல்வீடு கட்டி விளையாட்டயர்ந்த தெருவின்கண் காணும் காட்சியை யெல்லாம் இனிது கண்டு வரும் பேதைப் பருவம் உடையீர் அல்லீர். இப்பொழுது பெதும்பைப் பருவத்தினிர் ஆதலின் புறத்தே போகாதே கொண்மின்! என்று காவல் செய்யாநின்றனர் என்று மனம் நொந்து வருந்துவோரும் என்க.

(வி - ம்.) வண்டல் - விளையாட்டு. மறுகு - வீதி. காண்பவை கண்டு வரூஉம் காலமன்று என்றது நீயிர் இப்பொழுது பேதைப்பருவம் கடந்து பெதும்பைப் பருவம் எய்தினிர் என்றவாறு. அன்னையர் - செவிலித்தாயர். நம் - நம்மை; இரண்டனுருபு தொக்கது. நோய்கொள்வோர் - வருந்துவோர்.

(இதுவுமது)

கஉ௭ - ௩உ : எனையோர்...............உணர்ந்து

(பொ - ரை.) இங்ஙனமே பிற மகளிரும் மற்றவரும் தம்மை ஒப்பனை செய்து கொண்டவராய் யாண்டும் நெருங்கி மணங் கமழும் மலர்மாலையினுடைய விரிசிகை நங்கை வருவதனை ஒருவரை ஒருவர் வினவி அவளைக் காண்டற்குப் பெரிதும் விரும்பாநிற்ப; இவ்வாறு அந்நகரத்து மாந்தர் தாம் இனிக் காண்பதற்குரிய தெய்வக் காட்சி யொன்றுளது என்று அதனையே நினைந்து தத்தம் கைத்தொழிலையும் மறந்து மால் கொள்ளும் தன்மையை உதயண மன்னனும் ஒற்றரால் உணர்ந்து கொண்டு என்க.

(வி - ம்.) புனைவனர் - ஒப்பனை செய்துகொண்டு வருவதனை வினவி என்க. மால் - மயக்கம். ஒரு தெய்வீகக் காட்சியுண்டு என்று கருதி என்க. மாண்பதி - மாட்சிமையுடைய அந் நகரத்து வாழும் மாந்தர்கள்; ஆகுபெயர். மன்னன் : உதயணன்.

(இதுவுமது)

க௩௩ — சஉ : தடந்தோள்...............ஏவா

(பொ - ரை.) மகளிருட் சிறந்த அவ்விரிசிகை அணிகலன் இல்லாத தனது யாக்கை மணியினும் சிறந்த ஒளியினையுடையது. அவ்வழகினால் யான் ஒப்பற்றவள் என்பதனை இந்நகர மாந்தர்க்கு அறிவிப்பாள் போன்று தனது பெரிய கைகளை வீசி அழகால் மாண்புற்ற நம் நகர வீதியுள் காலாலே நடந்து வருவாளாக என்று அறிவித்து, அங்ஙனம் வருதற்பொருட்டுக் காவல் இல்லாமல் செய்து ஆரவாரமுடைய அங்காடித் தெருவில் குதிரையும் யானையும் இயங்குதலைத் துவர விலக்கி அழகிய நிலம் அவள் அடியின்கண் வல்லென்று உறுத்தாமைப் பொருட்டு அரண்மனை வாயில் தொடங்கி உள்ள இல்லங்களின் வாயில்தோறும் மெல்லென்னும் நறிய நல்லனவாகிய மலர்களைப் பரப்பி வைத்திடுக! என்று அத்தொழிலில் மிக்க இளைஞரை அம்மன்னவன் ஏவிப் பின்னர் என்க.

(வி - ம்.) மணியுடை நலம் - மணி இயல்பாகவே உடைத்தாயிருக்கின்ற ஒளி அழகு. அணியில் யாக்கை - ஒப்பனை செய்யாத யாக்கை. நங்கை நலத்தில் தமியள் என்பது சாற்றுவனள் போல வீசி நடந்தே கோயிற்கு வருக என மாறி இயைத்துக்கொள்க. தமியள் - ஒப்பற்றவள். அங்ஙனம் வரும் பொருட்டு என்க. அங்காடி - கடைத் தெரு. வல்லென : குறிப்புமொழி. மணி நிலம் - அழகிய நிலம். தமியள் - ஒப்பற்றவள். வாயில் - அரண்மனை வாயில் என்க. நல்லவையாகிய நறுமலர் என்க.

(இதுவுமது)

க௪௬ — ரு0 : மறுவில்.............சனமென்

(பொ - ரை.) அந்நங்கை நம்மக்கள் விரும்புதற் கேற்ப நம் அரண்மனை காறும் நடந்தே வருவாள். ஆதலால் அரண்மனையின்கண் உறைகின்ற நம் தேவிமார் மூவரும் நிற்க; ஏனைய நறிய நுதலையுடைய மகளிரோடு நல்ல மூதறிஞரும் நம்பால் வழிவழி வந்த கேண்மையிற் பிறழாது நற்குணத்தோடு கூடிய காஞ்சுகி மாக்களும் அப்பெருமகளை எதிர்கொண்டு அழைத்து வருக! என்று கட்டளை இடுதலாலே கொடைத் தொழில் மிக்க அவ்வேந்தனது கொடியுயர்த்த அக்கோசம்பி மாநகரத்தில் நிலைத்து நிற்றற்கும் இடம் பெறாதபடி மாந்தர் நெருங்கினர் என்க.

(வி - ம்.) மறுவில் மாதர் என்றது வாசவதத்தையை யுள்ளிட்ட தேவிமார் மூவரையும் என்க. மூதாளர் - அறிவானும் ஆண்டானும் முதிர்ந்த சான்றோர். பண்பு பாடறிந் தொழுகுந்தன்மை. தருக - அழைத்து வருக. நங்கை : விரிசிகை. வேந்தன் : உதயணன். சனம் - மக்கள்.

௩ரு. விரிசிகை வரவு குறித்தது முற்றிற்று.

கசு. விரிசிகை போத்தரவு

இதன்கண் : *விரிசிகையின் தமர் அவளைக் கொணர்தலும், அவளைப் புனைதலும், அவளை ஓம்படை கூறி அவள் தமர் விடுத்தலும் கூறப்படும்.*

நெருங்கிய பல்சனம் விரும்புபு நோக்க
ஒள்ளிழை மாதரைப் பள்ளியு ணின்று
திருவமர் சிவிகையுட் சுமந்தனர் கோணர்ந்து
பெருநகர் நெடுமதிற் புறமருங் கியன்ற
தேவ குலத்தோரு காவினு ளிரீஇ
வேரியுந் தகரமும் விரையு முரிஞ்சி
ஆர்கலி நறுநீர் மேவர வாட்டித்
துய்யறத் திரண்டு தூறலு மிலவாய்
நெய்தோய்த் தன்ன நிறத்த வாகிக்
கருமையிற் கவினிப் பருமையிற் றீர்ந்த
சில்லென் கூந்தலை மெல்லென வாரிக்
கானக் காழகிற் றேனெய் தோய்த்து
நறுந்தண் கோடிப்புகை யறிந்தளந் தூட்டி
வடித்து வனப்பிரீஇ முடித்ததன் பின்னர்த்
தளிரினும் போதினு மோளிபெறத் தோடுத்த
சேடுறு தாமஞ் சிறந்தோன் சூட்டிய
வாடுறு பிணையலோடு வகைபெற வளாஅய்க்
குளிர்கோள் சாதிச் சந்தனக் கோழுங்குறைப்
பளிதம் பெய்த பருப்பிற் றேய்வையின்
ஆகமு முலையுந் தோளு மணிபெறத்
தாரையுங் கோடியுந் தகைபெற வாங்கி
இருந்தா ளிளம்பனை விரிந்திடை விடாஅ
முளைநகும் போலை முதலீர்க்கு விரித்துத்
தளையவி ழாம்பற் றூஅள் வாட்டி
நீல நெடுமயி ரேறியுங் கருவிக்
காலென வடிந்த காதணி பெறீஇச்
சில்லெ னரும்பு வல்லிதி னமைத்து
நச்சர வெயிற்றி னல்லோன் புனைந்த

நேற்சிறு தாலி நிரல்கிடந் திலங்கக்
கடைந்துசெறித் தன்ன கழுத்துமுதற் கோளீஇ
உடைந்துவே யுகுத்த வொண்முத் தொருகாழ்
அடைந்துவில் லிமைப்ப வணிபெறப் பூட்டி
கல்லுண் கலிங்க நீக்கிக் காவலன்
இல்லின் மகளி ரேந்துவன ரீத்த
கோடி நுண்டுகில் கோல மாக
அவ்வரி யரவின் பையெனப் பரந்த
செல்வ வல்குற் றீட்டிவைத் ததுபோல்
வல்லிதின் வகைபெற வுடீஇப் பல்லோர்
காணச் சேற லாற்று மகட்கு
நாணுத் தரீகந் தாங்கிக் கையுளோர்
நீணீர் நறுமலர் நெரித்துக் கொடுத்து
மலரினும் புகையினு மாத்தொழில் கழிப்பி
உரையினு மோத்தினு முவப்பக் கூறிய
சாங்கிய மடமக டலையாச் சென்ற
காஞ்சுகி மாந்தர்க் கோம்படை கூறி
அடுத்த காதற் றுயர் தவ்வையர்
வடுத்தீர் தந்தை வத்தவர் கோவென
விடுத்தனர் மாதோ விரிசிகை தமரேன்.

உரை

௧௬. விரிசிகை போத்தரவு

அஃதாவது - விரிசிகை கோசம்பி நகரத்திற்கு வந்து சேர்ந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(விரிசிகையின் தமர் அவளைக் கொணர்தல்)

௧ - ௫ : நெருங்கிய..............இரீஇ

(பொ - ரை.) இவ்வாறு துறவி மகளாகிய அவ்விரிசிகை நங்கையைக் கண்டு களித்தற் பொருட்டுக் கொடிக் கோசம்பியின் கண் நிலையிடம் பெறாது நெருங்கிய பல்வேறு மக்களும் அவளைக் காண்டற்கு விரும்பி அவள் வரவினை எதிர்நோக்கி இராநிற்ப, இனி ஒள்ளிய அணிகலனுடைய அவ்விரிசிகையைத் தவப் பள்ளி யினின்றும் அவள் தமர் அவளை அழகு பொருந்திய சிவிகையுள்

வைத்துச் சுமந்து கொணர்ந்து பெரிய கோசம்பி நகரத்தைச் சூழ்ந்துள்ள நெடிய மதிலின்புறத்தே யமைந்த தேவர் கோயிலை யுடைய ஒரு பூங்காவின்கண் வைத்து என்க.

(வி - ம்.) பள்ளி - தவப்பள்ளி. திரு - அழகு. அவள் தமர் சுமந்து கொணர்ந்து என்க. நகர் - கோசம்பி. தேவகுலம் - தேவர் கோயில். இரீஇ - வைத்து.

(விரிசிகையைப் புனைதல்)

சுா - கச : வேரி..............பின்னர்

(பொ - ரை.) வெட்டிவேரும், தகரமும், சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் என்னும் இவ்வைந்துவகை விரையும் தேய்த்துக் கடல் போன்ற பெரிய வாவியின் நறிய நீரால் விருப்பமுண்டாக ஆட்டிச் சிம்பு இல்லாமல் திரண்டு தூறலும் இலவாய் நெய்யில் தோய்த்தெடுத்தாற் போன்ற நிறத்தினை உடையவாகிக் கருமையினாலே அழகுற்றுப் பருமையில்லாத சிலவாகப் பகுக்கப்படும் அவள் கூந்தலை மெல்ல வாரிக் கை செய்து காட்டின் கண்ணதாகிய காழ்ப்புடைய அகிலைத் தேனில் தோய்த்துத் தீயிலிட்டு எழுப்பிய நறிய குளிர்ந்த கொடிபோ லெழா நின்ற நறுமணப் புகையை அளவறிந்து ஊட்டிக் கை செய்துஅழகுற முடித்ததன் பின்னர் என்க.

(வி - ம்.) வேரி - வெட்டிவேர். தகரம் - ஒருவகை மணப் பொருள். விரை : சந்தனம், அகில், கருப்பூரம், கத்தூரி, குங்குமம் இவ்வைந்துமாம். உரிஞ்சி - தேய்த்து. ஆர்கலி - கடல். கடல்போன்ற பெரிய நீர்நிலையின் நீர் என்க. அல்லது பேராரவாரமுடைய நீர் எனினுமாம். துய் - சிம்பு. அஃதாவது கூந்தல் நுனி பிளவுபட்டுச் சுருண் டிருத்தல் என்க. தூறல் – பாரிக்கிடத்தல். தேனெய் : இருபெய ரொட்டு. தேனாகிய நெய் என்க. கொடிப்புகை - கொடிபோலப் படர்ந்தெழும் புகை. வடித்தல் - சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டிக் கூந்தலை அகமும் புறமும் ஆராய்தல். வனப்பு இரீஇ - அழகைச் செய் முறையால் ஆக்கி வைத்து என்க.

(இதுவுமது)

கரு - உக : தளிரினும்..............வாங்கி

(பொ - ரை.) தளிராலும் மலராலும் ஒளியுண்டாகத் தொடுக்கப்பட்டு அழகு பொருந்தியதும் பண்டு மன்னருட் சிறந்தோனாகிய உதயணனால் சூட்டப்பட்டதும் வாடுதலுற்றதும் ஆகிய அம்மாலையோடு சேர்த்துவைத்து வளைத்து அணிந்து குளிர்ச்சி கொண்ட உயர்ந்த சந்தன மரத்தினது கொழுவிய கட்டையினைத் தேய்த்து அதனோடு பச்சைக் கருப்பூரம் பெய்யப் பட்ட நுண்மையுடைய குழம்பினால் அவளது மார்பினும் முலையி

னும் தோளினும் அழகுறத் தாரையும் கொடியுமாக வளைத்து எழுதி என்க.

(வி - ம்.) சேடு - அழகு ; பெருமையுமாம். தாமம் - மாலை. சிறந்தோன் : உதயணன். வாடுறுபிணையல் - வாடுதலுற்ற மாலை. ஆகவே பண்டு உதயணன் தனக்குச் சூட்டிய மாலை பெரிதும் உலர்ந்துபோய பின்பும் அதனைப் பேணி விரிசிகை சூடிக்கொண்டிருந்தாள் என்பது பெற்றும். சாதிச் சந்தனம் - சந்தனத்துள் வைத்துச் சிறந்த சந்தனம் என்க. குறை - கட்டை. பளிதம் - பச்சைக் கருப்பூரம். பருப்பு - பருமை. பருப்பு இல் எனவே நுண்ணிய தேய்வை என்றாராயிற்று. தேய்வை - குழம்பு. தாரை - வரிசை. தகை - அழகு. வாங்கி - வளைத்து வளைத்தெழுதி என்றவாறு.

(இதுவுமது)

உஉ - ௩௦ : இருந்தாள் .... கொளீஇ

(பொ - ரை.) கரிய அடிப்பகுதியினையுடைய இளம் பனையினது விரிந்து இடைவிடாது சேர்ந்திருக்கும் முளையாகிய குருத்தோலையை ஈர்க்குடன் விரித்து, கட்டவிழ்ந்து மலர்ந்த ஆம்பலினது தண்டினைத் தோற்கச்செய்து, நீல நெடியமயிரினைக் கத்தரிக்கும் கருவியாகிய கத்தரிகையின் கால்போல வடிந்து தூங்கும் காதுகளில் அணியாக வைத்துத் தொழில் நன்மையுடைய துறவியொருவன் சிலவாகிய அரும்புகளைத் தொழில் வன்மையுண்டாக நச்சுப் பாம்பின் பல்லொழுங்குபோல நிரல்பட அமைத்துத் தொடுத்துக் கொடுத்த **'சிறுநெற்றுலி'** என்னும் அணிகலன் நிரல்பட்டுக் கிடந்து திகழாநிற்கும்படி கடைந்து செருகி வைத்தாற்போன்ற கழுத்தினது அடிப் பகுதியில் அணிந்து என்க.

(வி - ம்.) இருந் தாள் - கரிய அடிப்பகுதி. ஓலையின் வளம் கூறுவார் பனைக்கு இளைமை கூறினர். நுகும்போலை - குருத்தோலை. ஆம்பற்றுளை வாட்டி என்றது ஆம்பற்றுளினுங் காட்டில் அழகுமிக்க காது என்றவாறு. மயிரெறியுங் கருவி - கத்தரிகை. நல்லோன் - தொழில் நன்மையுடையோன். எனவே துறவியருள் வைத்து ஒருவன் என்க. நல்லோன் - உதயணன் என்பாரும் உளர். உதயணன் இங்ஙனம் ஒன்று புனைந்து அணிந்தான் என்பது முன்னர்க் கூறப்படாமையானும் ஈண்டுக் கழுத்து முதற்கொளீஇ எனப் புதுவதாக அணிதல் கூறப்படுதலாலும் அது பொருந்தாமை உணர்க. நெற்சிறுதாலி - சிறு நெற்றுலி என்க. இஃது ஒரு கழுத்தணிகலன். எனவே துறவோர் பள்ளியுள் நல்லோனாகிய ஒரு துறவி பொன்னால் இயற்றப்படும் சிறு நெற்றுலிபோல அரும்புகளாற் றொடுத்தமைத்து வழங்கிய அணிகலம் என்று கொள்க.

(இதுவுமது)

௩க - அ : உடைந்து.............உடீஇ

(பொ - ரை.) மேலும் மூங்கில் உடைந்து சிந்திய ஒளி முத்துக்களால் கோவை செய்யப்பட்ட ஒற்றைவடம் அவள்

கழுத்தினையடைந்து இறுமாப்புற்று ஒளி வீசும்படி அழகுறப் பூட்டிக் காவிக்கற் குழம்பு தோய்த்த அவளது ஆடையை அகற்றி உதயண மன்னனுடைய அரண்மனை மகளிர் ஏந்திக் கொணர்ந்து வழங்கிய புதிய நுண்ணிய ஆடையை அழகாக, அழகிய வரிகளையுடைய பாம்பினது படத்தினை ஒத்த பரந்த இன்பமிக்க அல்குலின்மேல் ஓவியம் தீட்டிவைத்தாற்போலக் கைவன்மையால் ஒழுங்குபட உடுத்தி என்க.

(வி - ம்.) கல் - காவிக்கல். காவிக் குழம்பில் தோய்த்த துகில் என்க. காவலன் : உதயணன். கோடி நுண்டுகில் - புதிய நுண்ணிய ஆடை. அவ்வரி - அழகிய வரி. அரவின் பை - அரவின் படம். செல்வம் - ஈண்டு இன்பம். உடீஇ - உடுத்து.

(இதுவுமது)

ருஅ - சஉ : பல்லோர்............கழிப்பி

(பொ - ரை.) மாந்தர் பலரும் தன்னைக் காணும்படி இயங்குதல் ஆற்றாத பெரு நாணுடைய அத்துறவி மகளுக்கு நாணுத்தரீகம் என்ற மேலாடையை இட்டு அதனை அவள் ஒரு கையால் தாங்க வைத்து மற்றொரு கையின்கண் நீரில் நின்று நீண்ட நறிய குவளை நாள்அரும்பினைக் கையால் நெரித்துக் கொடுத்துப் பின்னர் மலர்களாலும் புகையாலும் செய்யும் ஒப்பனைத் தொழில்களைச் செய்து முடித்து என்க.

(வி - ம்.) பல்லோர் காணச் செல்லுதல் இயலாத பெரு நாணுடைய மகள் என்க. உத்தரீகம் - மேலாடை. மகளிர்க்கு நாணம் மிகுங்கால் முக முதலியவற்றை மறைத்துக் கொள்ளுதற்குக் கருவியாதலால் அதனை நாணுத்தரீகம் என்றார். மகளிர் குவளை மலரைக் கையிற் கொள்ளுதல் இயல்பு. இதனை, "கையது தாது மல்கிய தண்கழுநீர் மலர்" (ந. ரு : அஎ-அ;) எனவும் "கையிற் புள்ளாவிச் செங்கழுநீர்க் குவளை செய்தாள் புனை பூணாள்" (சீவக. கருஉரு) எனவும் வருதல் காண்க.

(விரிசிகையை விடுத்தல்)

சரு - அ : உரையினும்...............தமரென்

(பொ - ரை.) வாய்மொழியாலும் நூல் மேற்கோளானும் தாம் மகிழ முகமன் கூறிய சாங்கிய மகள் தலைமையிற் சென்ற காஞ்சுகி மக்கள்பால் விரிசிகையை ஓம்படை சொல்லி அவள் தமர் "பெரியீர்! இவளுக்கு உற்ற அன்புடைத் தாயர் இவள் தமக்கையராகிய வாசவதத்தை முதலிய தேவிமார் மூவருமே

ஆவர்! அங்ஙனமே வத்தவ நாட்டு மன்னனாகிய உதயணனே இவளுக்குக் குற்றமற்ற தந்தை ஆவன் என்று கூறி விடுத்தனர் என்க.

(வி - ம்.) உரை - வாய்மொழி. ஓத்து - நூல்; என்றது நூலி னின்றும் எடுத்துக் கூறும் மொழிகளை. ஓம்படை - பாதுகாப்புச் சொல். தவ்வையர் - தமக்கைமார்; என்றது வாசவதத்தை முதலிய தேவிமார் மூவரையும். கோ : உதயணன். விரிசிகை தமர் மாந்தர்க்குக் கூறி அவளை விடுத்தனர் என்க. தமர் என்றது ஈண்டுத் தவப்பள்ளியில் வாழும் விரிசிகை தாய் முதலிய முதுமகளிரை.

கசு. விரிசிகை போத்தரவு முற்றிற்று.

௧௭. விரிசிகை வதுவை

இதன்கண் : விரிசிகையின் தந்தை தவம் புரியச் செல்லலும், அவள் தமர் அவள் விளையாட்டுப் பொருள்களை ஏந்திக்கொண்டு அவளுடன் செல்லுதலும், கண்டோர் கூற்றும், விரிசிகை அரண்மனையை யடைதலும், உதயணன் விரிசிகையை மணந்து இன்புறலும் கூறப்படும்.

விடுத்தனர் போகி விரிசிகை தன்றமர்
அடுத்த காதற் றந்தைக் கிசைப்ப
மாதவன் கேட்டுத்தன் காதலி தனைக்கூஉய்
வடுத்தீர் பெரும்புகழ் வத்தவர் பெருமாற்
கடுத்தனே னங்கையை நின்னை யானும்
விடுத்தனேன் போகி வியனுல கேத்த
வடுத்தீர் மாதவம் புரிவேன் மற்றெனக்
கேட்டவள் கலுழ வேட்கையி னீக்கிக்
காசறு கடவுட் படிவங் கொண்டாங்
காசறச் சென்றபின் மாசறு திருநுதல்
விரிசிகை மாதர் விளையாட்டு விரும்பும்
பள்ளியுட் டன்னொடு பலநாள் பயின்ற
குயிலு மயிலுங் குறுநடைப் புறவும்
சிறுமான் பிணையு மறுநீங் கியூகமும்
காப்பொடு பேணிப் போற்றுவன ளுவப்பிற்
றந்த பாவையுந் தலையாத் தம்முடை
அந்தணர் சாலை யருங்கல மெல்லாம்
அறிவனர் தழீஇத் தகைபா ராட்டிப்
பூப்புரி வீதி பொலியப் புகுந்து
தேற்று மென்னடைச் சேயிழை தன்னொடு
செல்வோர் கேட்பப் பல்லோ ரெங்கும்
குடிமலி கொண்ட கோடிக்கோ சம்பி
வடிநவில் புரவி வத்தவர் பெருமகற்
காக்கம் வேண்டிக் காப்புடை முனிவர்
அஞ்சுதரு முதுகாட் டஞ்சா ரழலின்
விஞ்சை வேள்வி விதியிற் றந்த

கோற்றத் திருமகண் மற்றிவ டன்னை
ஊனூர் மகளி ருள்வயிற் றியன்ற
மானேர் நோக்கின் மடமக ளென்றல்
மெய்யன் றம்மொழி பொய்யென் போரும்
மந்திர மகளிரிற் றோன்றிய மகளெனின்
அந்தளிர்க் கோதை வாடிய திருநுதல்
வேர்த்தது.................................
...............பெருமைப் பயத்தாற் பயந்த
மாதவன் மகளே யாகுமிம் மாதர்
உரையன்மி னிம்மொழி புரையா தென்மரும்
அறுவி றெண்ணீ ராழ்கய முனிந்து
மறுவில் குவளை நாண்மலர் பிடித்து
நேரிறைப் பணைத்தோள் வீசிப் போந்த
நீரர மகளிவ ணீர்மையு மதுவே
வெஞ்சினந் தீர்ந்த விழுத்தவன் மகளெனல்
வஞ்ச மென்று வலித்துரைப் போரும்
கயத்துறு மகளெனிற் கயலேர் கண்கள்
பெயர்த்தலு மருட்டி யிமைத்தலு முண்டோ
வான்றோய் பெரும்புகழ் வத்தவர் பெருமகன்
தேன்றோய் நறுந்தார் திருவொடு திளைத்தற்
கான்ற கேள்வி யருந்தவன் மகளாய்த்
தோன்றிய தவத்த டுணிமினென் போரும்
பரவை மாக்கடற் பயங்கெழு ஞாலத்
துருவின் மிக்க வுதயணற் சேர்ந்து
போக நுகர்தற்குப் புரையோர் வகுத்த
சாபந் தீர்ந்து தானே வந்த
கயக்கறு முள்ளத்துக் காமங் கன்றிய
இயக்கி யிவளே யென்மக ளென்று
மாதவ முனிவன் மன்னற்கு விடுத்தரல்
ஏத மாங்கொலிஃ தென்றுரைப் போரும்
ஈரிதழ்க் கோதை யியக்கி யிவளெனின்
நேரடி யிவையோ நிலமுத றோய்வன
அணியும் பார்வையு மோவ்வா மற்றிவள்
மணியணி யானை மன்னருண் மன்னன்

உதயண குமர னுறுதா ருறுகேன
நின்ற வருந்தவ நீக்கி நிதானமோடு
குன்றச் சாரற் குறைவின் மாதவர்
மகளாய் வந்த துகளறு சீர்த்தி
நாறிருங் குழல்பிற கூறன்மி னென்மரும்
இமிழ்திரை வையத் தேயர் பெருமகன்
தமிழியல் வழக்கினன் றணப்புமிகப் பெருக்கி
நிலவரை நிகர்ப்போ ரில்லா மாதரைத்
தலைவர விருந்தது தகாதென் போரும்
சொல்லியல் பெருமான் மெல்லிய றன்னைக்
கண்டோர் விழையுங் கானத் தகவயின்
உண்டாட் டமர்ந்தாங் குறையுங் காலைத்
தனிமை தீர்த்த திருமக ளாதலின்
இனிய ளுதனன் றென்றுரைப் போரும்
பவழமு முத்தும் பசும்பொன் மாசையும்
திகழொளி தோன்றச் சித்திரித் தியற்றிய
அணிகல மணிவோ ரணியி லோரே
மறுப்பருங் காட்சி யிவள்போன் மாண்டதம்
உறுப்பே யணிகல மாக வுடையோர்
பொறுத்தன் மற்றுச்சில பொருந்தா தென்மரும்
யாமே போலு மழகுடை யோமெனத்
தாமே தம்மைத் தகைபா ராட்டி
நாணிகந் தொரீஇய நாவுடைப் புடையோர்
காணிக மற்றிவள் கழிவனப் பென்மரும்
ஏதமி லொழுக்கின் மாதவ ரிற்பிறந்
தெளிமை வகையி னெளிபெற நயப்பப்
பிறநெறிப் படுதல் செல்லாள் பெருமையின்
அறநெறி தானே யமர்ந்துகை கொடுப்ப
அம்மை யணிந்த வணிநீர் மன்றல்
தம்முட் டாமே கூடி யாங்கு
வனப்பிற் கொத்த வினத்தின ளாகலின்
உவமமி லுருவி னுதயணன் றனக்கே
தவமலி மாதர் தக்கன ளென்மரும்
இன்னவை பிறவும் பன்முறை பகர
ஆய்பெருஞ் சிறப்பி னருந்தவர் பள்ளியுட்

பாயற் கிடந்த பன்மலர் மிதிப்பினும்
அரத்தங் கூருந் திருக்கிளர் சேவடி
சின்மலர் மிதித்துச் சிவந்துமிகச் சலிப்ப
மென்மெல வியலி வீதி போந்து
கோடிபட நடங்குங் கடிநகர் வாயில்
முரசோடு சிறந்த பல்லியங் கறங்க
அரச மங்கல மமைவர வேந்திப்
பல்பூம் படாகை பரந்த நீழல்
நல்லோர் தூஉ நறுநீர் நனைப்பச்
சேனையு நகரமுஞ் சென்றுட னெதிர்கொள
ஆனைச் சிறப்போ டகன்மனை புகுதலிற்
றானை வேந்தன் றானெறி திரியான்
பூவிரி கூந்தற் போங்கிள வனமுலைத்
தேவியர் மூவருந் தீமுன் னின்றவட்
குரிய வாற்றி மரபறிந் தோம்பி
அருவிலை நன்கல மமைவர வேற்றிக்
குரவர் போலக் கூட்டுபு கொடுப்பக்
கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்
வேட்டவட் புணர்ந்து வியனுல கேத்த
அன்புநெகிழ்ந் தணை இ யின்சுவை யமிழ்தம்
பனியிருங் கங்குலும் பகலு மெல்லாம்
முனிவில னுகர்ந்து முறைமுறை பிழையாது
துனியும் புலவியு மூடலுந் தோற்றிக்
கனிபடு காமங் கலந்த களிப்போடு
நற்றுணை மகளிர் நால்வரும் வழிபட
இழுமென் செல்வமோ டின்னுயி ரோம்பி
ஒழுகுவனன் மாதோ வுதயண னினிதென்.

உரை

கஎ. விரிசிகை வதுவை

அஃதாவது - உதயண மன்னன் விரிசிகையைத் திருமணம் புரிந்துகொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(விரிசிகையின் தந்தை தவம் புரியச் செல்லல்)

க - ௧௦ : விடுத்தனர்................பின்

(பொ - ரை.) இங்ஙனம் விரிசிகை மாதரைக் காஞ்சுகி மாந்தர்க்கு ஓம்படை கூறி விடுத்த அவள் சுற்றத்தார் அவளுக்கு உற்ற அன்புடைத் தந்தையாகிய அம் முனிவனுக்கு அந் நிகழ்ச்சியைக் கூறுநிற்ப, அது கேட்ட அம் முனிவன் மகிழ்ந்து தன் காதலியாகிய நீலகேசியை அழைத்து, "நங்காய்! நம் மகளைக் குற்றமற்ற பெரும் புகழையுடைய வத்தவர் பெருமானுக்கு வாழ்க்கைத் துணைவியாக வழங்கினேன். இனி யான் உன்னை நீங்கித் தனித்துச் சென்று இப் பேருலகம் வணங்கிப் புகழும்படி குற்றம் தீர்தற்குக் காரணமான பெரிய தவத்தை மேற்கொள்வேன் காண்" என்று கூற அதுகேட்ட அப் பத்தினி பிரிவாற்றுமையால் பெரிதும் வருந்தி அழாநிற்ப, அவளை அம் முனிவன் தனது அறிவுரையால் அத் துன்பத்திற்குக் காரணமான வேட்கையினின்றும் விடுவித்துத் தேற்றிக் குற்றமற்ற துறவோர் வேடம்தாங்கித் தனது பிறப்பறும் பொருட்டுத் தவத்தின்மேற் சென்ற பின்பு என்க.

(வி - ம்.) தந்தை : விரிசிகை தந்தை. அம் மாதவன் என்க. காதலி : நீலகேசி. வடு - பழி. கலுழ - அழ. காசு - குற்றம். கடவுட் படிவம் - துறவோர் வேடம். ஆசு - அழுக்கு. ஈண்டு அவா. அதன் காரியமாகிய பிறப்பின்மேனின்றது.

(விரிசிகையின் தமர் அவள் விளையாடிய பொருள்களைக் கொண்டு அவளுடன் செல்லல்)

௧௦ - உ௧ : மாசறு...............கேட்ப

(பொ - ரை.) குற்றம் தீர்ந்த அழகிய நுதலையுடைய அவ் விரிசிகை நங்கை விளையாட்டினை விரும்பும் பேதைப் பருவத்தே தன்னோடு வைத்துப் பலநாள் ஆடல் பயின்ற குயிலும், மயிலும், குறிய நடையினையுடைய புறவும், சிறிய பிணைமானும், குற்ற மகன்ற கருங்குரங்கும், அவள் பாதுகாவலோடு பேணி மகிழ்ந்து போற்றித் தந்த விளையாட்டுப்பாவையும், முதலாகத் தம்முடைய அறவோர் பள்ளிக்கியன்ற அரிய அணிகலன்களும் பிறவும் ஆகிய எல்லாப் பொருள்களையும் ஆராய்ந்தெடுத்து அவற்றின் அழகினைப் பாராட்டி மலரிட்டுப் பரப்பிய வீதி பொலிவுறும்படி புகுந்து தெளிவில்லாத மெல்லிய நடையினையுடைய அவ் விரிசிகையோடு செல்லுபவர் தம் செவியாற் கேட்கும்படி என்க.

(வி - ம்.) பள்ளி – தவப்பள்ளி. யூகம் - கருங்குரங்கு. பாவை - விளையாட்டுப் பாவை. தலையா - தலையாக. அந்தணர் - துறவோர். சேயிழை : விரிசிகை.

(கண்டோர் கூற்று)

உக - ௬௦ : பல்லோர்.............என்போரும்

(பொ.- ரை.) அந் நங்கையின் வரவினை எதிர்பார்த்து வழி மேல் விழிவைத்து நின்ற நகரமாந்தர் பலரும் "எங்கெங்கும் குடிமக்கள் மலிதலைக்கொண்ட கொடியையுடைய இக் கோசம்பி மன்னனாகிய வடித்தல் பயின்ற குதிரையையுடைய உதயண னுக்கு ஆக்கம் செய்தலை விரும்பித் தம் பொறிகளை அடக்கும் துறவோர் அச்சம் தருகின்ற முதுகாட்டின்கண் அரிய ஐந்து தீயினால் வித்தையையுடைய வேள்வி செய்து அம் முறைமை யினால் படைத்துத் தந்த வெற்றித் திருமகளே இவள் கண்டீர்! இவ்வுண்மை தேறாது இவளை ஊனுடல் பொருந்திய மானிட மகளிர் வயிற்றிற்றோன்றிய மான்போலும் நோக்கினையுடைய ஒரு மடப்பமுடைய மகள் என்று கூறுதல் மெய்யாகாது. அம் மொழி பொய்யேயாகும்!" என்று கூறுவோரும் என்க.

(வி - ம்.) வடி - வடித்தல் ; வயப்படுத்துதல். காப்புடை - பொறிகளைக் காத்தலுடைய. முதுகாடு - சுடுகாடு. ஆரஞ்சழல் என மாறுக. அரிய ஐந்து தீ என்க. ஊனார் மகளிர் - மானிட மகளிர் வயிற்றினுள் இயன்ற என மாறுக; உருபு மயக்கமுமாம். தங்கூற்றை வற்புறுத்துவார் மெய்யன்று என்றொழியாது மீண்டும் அம் மொழி பொய் என்றார் என்க.

(இதுவுமது)

௬க - ௬௬ : மந்திர.............என்மரும்

(பொ - ரை.) "இவள் மந்திர தேவதையாகிய மகளிரின் கண் தோன்றிய தெய்வ மகள் என்றால் இவளுடைய அழகிய தளிர் விரவிய மாலைகள் வாடின. இவளுடைய அழகிய நுதல் வியர்த்துளது.....................பெருமைமிக்க பயனால் துறவி ஈன்ற மகளே ஆவாள் இந் நங்கை. ஆதலின் இவளைத் தெய்வ மகள் என்று கூறாதே கொண்மின்! அம் மொழி இவட்குப் பொருந்தாது", என்று கூறுவாரும் என்க.

(வி - ம்.) மந்திர மகளிரிற் றோன்றிய மகள் - மந்திர தேவதை யாகிய மகளிர் வாயிலாய்த் தோன்றிய தெய்வமகள். தெய்வமகளிருக்கு மாலை வாடாமையும் நெற்றியில் வியர்வை அரும்பாமையும் இயல்பு. இவட்குக் கோதை வாடின. நுதல் வியர்த்தது ஆதலால் இவளைத் தெய்வமகள் எனல் பொருந்தாது என்றவாறு. இப் பகுதியில் ௬௬ ஆம் அடியின் இறுதிச்சீர் மூன்றும் ௬௪ ஆம் அடியின் முதற் சீரும் அழிந்தன.

(இதுவுமது)

௩எ - ௪உ : அறுவில்…………உரைப்போரும்

(பொ - ரை.) அதுகேட்ட வேறு சிலர் "இவள் அருத் தெளிந்த நீரையுடைய ஆழ்ந்த நீர்நிலையினை வெறுத்துக் குற்ற மற்ற குவளையினது நாள்மலரை ஒரு கையிற் பிடித்து நேரிய இரேகைகளையுடைய பணைத்த மற்றொரு கையை வீசி வீதியில் நடந்துவந்த நீரர மகளே கண்டீர்! இவள் தன்மையும் அவர்க் குரிய தன்மையே காண். இவளை வெவ்விய வெகுளியை விடுத்த சிறந்த துறவியின் மகள் என்று கூறல் வஞ்சகச் செயலே," என்று வற்புறுத்திக் கூறுவோரும் என்க.

(வி - ம்.) அறுவில் - அறல் இல்லாத. கயம் - நீர்நிலை. முனிந்து - தனக்குரிய நீர்நிலையை வெறுத்து என்றவாறு. நீரர மகள் - நீரில் வாழும் ஒருவகைத் தெய்வமகள். நீர்மையும் அது - இவள் பண்பும் அந் நீரர மகளிர் பண்பு என்க. வலித்து - வற்புறுத்து.

(இதுவுமது)

௪௩ - ௮ : கயத்துறு…………என்போரும்

(பொ - ரை.) "நீரின்கண் உறைகின்ற நீரர மகளே இவள் என்றால், அந் நீரர மகளிர் தம்முடைய கயல்மீன் போன்ற கண் களை அசைத்தலும் மருட்டி இமைத்தலும் உண்டாகுமோ? ஆதலின் இவள் நீரர மகள் அல்லள். மற்று இவள்தான் யாரென்பீரேல் வானுலகத்திலும் பரவிய பெரும் புகழையுடைய நம் மன்னனுடைய மார்பின்கண் உறைகின்ற தேன் தோய்ந்த நறிய மாலையாகிய செல்வத்தோடு திளைத்தற்பொருட்டு நிரம்பிய நூற் கேள்வியினையுடைய அரிய தாபதன் மகளாய்த் தோன்று தற்கு உரிய நற்றவத்தை முற்பிறப்பிலே செய்தவள் ஒருத்தி கண்டீர். இதனைத் தெளிந்து கொள்ளுங்கோள்!" என்று கூறுவோரும் என்க.

(வி - ம்.) கயம் - நீர். ஏர் : உவம உருபு. மருட்டி - மருளச் செய்து. நீரர மகளிர்க்குக் கண்கள் மருளலும் பெயர்தலும் இமைத் தலும் இல்லை; இவள் கண்கள் அவையெலாம் உடையனவாதலின் இவள் நீரர மகள் அல்லள் என்றவாறு. திரு - செல்வம். தோன்று தற்குக் காரணமான முற்றவமுடையள் என்றவாறு. தங்கூற்றை வற்புறுத்துவார் துணியின் என்றார்.

(இதுவுமது)

௪௯ - ௫௯ : பரவை…………உரைப்போரும்

(பொ - ரை.) பரப்புடைய பெரிய கடலினால் பயன் பொருந் திய இந் நில வுலகத்தே அழகினால் மிகுந்த உதயண மன்னனைச்

சேர்ந்து இன்பம் நுகர்தற்பொருட்டுத் தனக்கு உயர்ந்தோர் இட்ட சாபந் தீர்ந்து தானே விரும்பிவந்த கலக்கமில்லாத தன் நெஞ்சத்தே காம உணர்ச்சி முதிர்ந்த ஓர் இயக்கியே இவள் ஆதல் வேண்டும். இவளைப் பெரிய தவத்தையுடைய முனிவனொருவன் என் மகள் என்று சொல்லி நம் மன்னனுக்கு மனைவியாக விடுத்தல் குற்றமாம்," என்று கூறுவோரும் என்க.

(வி - ம்.) பரவை - பரப்பு. புரையோர் - தவத்தாலுயர்ந்தோர். கயக்கு - கலக்கம். கன்றிய - முதிர்ந்த. இயக்கி - ஒருவகைத் தெய்வப் பெண். விடுத்தரல் - விடுத்தல். ஏதம் - குற்றம். கொல் : ஆசை.

(இதுவுமது)

௬௧ - ௬௩ : ஈரிதழ்..............என்மரும்

(பொ - ரை.) அது கேட்ட வேறுசிலர் "இவள் ஈரிய மலர் மாலையணிந்த இயக்கி ஆவள் என்று கூறுதல் பொருத்தமுடைத் தன்று. உதோ காண்மின்! இவளுடைய நேரிய அடிகள் நிலத்தின்மேல் தோய்கின்றன. அதுவேயுமன்றி இவள் அணிகலனும் பார்வையும் இயக்கி என்பதற்குப் பொருந்த மாட்டா. இவள் மணி கட்டப்பட்ட யானையையுடைய மன்னருள்ளும் சிறந்த மன்னனாகிய நம் உதயணகுமரன் அணிந்த மாலை தன் மார்பிற் படுக! என்று தான் நீண்ட நாள் நிலையாக நின்று செய்த அரிய தவத்தை விடுத்து அமைதியோடு மலைச் சாரலின்கண் உறையும் குறைவற்ற தவத்தோர் மகளாய் வந்து பிறந்த குற்றமற்ற புகழையுடைய நறுமணங் கமழும் கூந்தலையுடைய மகளாவா ளொருத்தியே காண்மின்! வேறு வேறாகக் கூறாதே கொண்மின்!" என்று கூறுவோரும் என்க.

(வி - ம்.) நேர் அடி - நேரிய அடி. நிலமுதல் - முதல்; ஏழனுருபு. இயக்கிக்கு இவ்வணியும் பார்வையும் இல்லை என்றவாறு. நிலைத்து நின்று செய்த அருந்தவம் என்க. நிதானம் - அமைதி. சீர்த்தி - மிகுபுகழ்.

(இதுவுமது)

௬௬ - ௬௯ : இமிழ்..............என்போரும்

(பொ - ரை.) "முழங்காநின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த நில உலகத்தின்கண் ஏயர் குலத் தோன்றலாகிய நம் பெருமான் செந்தமிழ் நூல் அகப்பொருள் வழக்கின்கண் களவு கற்பு என்னும் இருவகைக் கைகோளுள் வைத்துக் களவு வகையில் இவ்வுலகின்கண் தன்னை ஒப்போரில்லாத அழகுடைய இவ் விரிசிகையை மணந்தவன், பின்பு அவளை அத் தமிழியல் வழக்கின்படி வரைந்து கொள்ளானாய்த் தன் பிரிவுக் காலத்தை மிகவும் நீட்டி அப் பெருமகளே தன்னைத் தேடித் தன்பால்

வருந்துணையும் இருந்தது அத் தமிழியல் வழக்கிற்குப் பொருந்தாது !" என்போரும் என்க.

(வி - ம்.) இமிழ் - முழக்கமுடைய. ஏயர் பெருமகன் : உதயணன். களவும் கற்பும் தமிழர்க்கே சிறந்துரிமை யுடைய ஒழுக்கங்கள். ஆகலின் தமிழியல் வழக்கினன் என்றார். தணப்பு - பிரிவு. பிரிவுக் காலத்தைப் பெருக்கி என்க. மாதர் : விரிசிகை. தலைவர - தன்பால் வர. தகாது என்றது அத் தமிழியல் வழக்கிற்குப் பொருந்தாது என்றவாறு.

(இதுவுமது)

எ௦ - ச : சொல்லியல்..............உரைப்போரும்

(பொ - ரை.) "புகழ் மிக்க நம் பெருமான் மெல்லியல் புடைய இந் நங்கை தான் காண்போர் பின்னும் காண்டற்கு விரும்பும் கானகத்தின்கண் உண்டாடுதலை விரும்பி அங்குச் சென்று உறையுங் காலத்தே தன்னுடைய தனிமைத் துயரத் தைத் தீர்த்துவிட்ட அழகி ஆகலின் அவன் இவளுக்கு இனிய காதலன் ஆதல் அறமேயாம்!" என்று பாராட்டுவோரும் என்க.

(வி - ம்.) மெல்லியல் - தான் உறையுங்காலை தனிமை தீர்த்தவள் ஆதலின் அவட்கு இனியனுதல் நன்று என்பது கருத்து. சொல்-புகழ். பெருமான் : உதயணன். மெல்லியல் : விரிசிகை. திருமகள் - அழகுடையோள்; திருமகள் போல்வாள் எனினுமாம். இனியன் என்பது இனிய காதலன் என்பதுபட நின்றது. நன்று என்பது நல்லறம் என்பதுபட நின்றது.

(இதுவுமது)

எ௫ - அ௦ : பவழமும்.............என்மரும்

(பொ - ரை.) வேறுசிலர், "பவழமும், முத்தும், பசிய மாசை என்னும் பொன்னுங் கொண்டு விளங்கும் ஒளி தோன் றும்படி சித்திரித்துச் செய்த அணிகலம் பலவும் அணிகின்ற பிற மகளிரெல்லாம் இவளை நோக்குழி அழகற்றவர் ஆகிவிடுவர். இவளைப்போல மறுத்தற்கரிய அழகினையுடைய மாண்புடைய தம் கண் முக முதலிய உறுப்புக்களை இயற்கை யணிகலனுகப் பெற்றோர், அவ்வுறுப்புக்களின் இயற்கையழகினை மறைக்கும் வேறு சில அணிகலங்களைச் சுமத்தல் வீணேயாம்" என்று அவ் விரிசிகையின் இயற்கையழகினைப் பெரிதும் பாராட்டு வோரும் என்க.

(வி - ம்.) பொன்மாசை: இரு பெயரொட்டு. அணியிலோர்- அழகில்லாதோர். காட்சி - அழகு. மற்றுச் சில பொறுத்தல் என மாறுக. சில - சிலவாகிய அணிகலம். இக் கருத்தோடு,

" அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென வமைக்கு மாபோல்
உமிழ்சுடர்க் கலன்க ணங்கை யுருவினை மறைப்ப தோரார்
அமிழ்தினைச் சுவைசெய் தென்ன வழகினுக் கழகு செய்தார்
இமிழ்திரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ"
(கம்ப. கோலங் - ௩)

எனவரும் கம்பர் செய்யுளையும் நினைக.

(இதுவுமது)

அக - ௪: யாமே............என்மரும்

(பொ - ரை.) வேறு சிலர் "இவள் பக்கத்தே உள்ள மகளிருள் வைத்து யாமே பிற மகளிரினுங் காட்டில் பேரழகுடையேம் என்று கூறித் தம்மைத் தாமே அழகு காரணமாகப் பாராட்டிக் கொண்டு நாணத்தை விடுத்து அடக்கத்தையும் விட்ட நாவினை யுடைய மகளிர் இவளுடைய பேரழகினைக் கண்கூடாகக் காண்பாராக!" என்று கூறுவோரும் என்க.

(வி - ம்.) தகை - அழகு. தனக்குரிய அடக்கத்தினின்றும் விலகிய நாவுடையராய் இவள் பக்கத்தில் நிற்கும் மகளிர் என்க. ஓரீஇ- ஒருவிய; விலகிய. காணிக : வினைத்திரி சொல். புடையோர்-பக்கத்தி லுள்ளோர். கழிவனப்பு - பேரழகு.

(இதுவுமது)

அரு - கூ௪: ஏதம்............பகர

(பொ - ரை.) "குற்றமில்லாத நல்லொழுக்கினையுடைய பெரிய தவத்தையுடையோர் பள்ளியிற் பிறந்து அப் பிறப்பிற் கேற்ப எளிய வாழ்க்கையை மேற்கொண்டு பேரொளி பெறுதலாலே நம் பெருமான் இவளைக் கண்டு விரும்பா நிற்ப, இவள் தானும் அவனுக்கே கற்புக்கடம் பூண்டு பிறரை மணம் செய்து கொள்ளாளாக; அப் பெருமையினாலே அவ் வறவழிதானே விரும்பி இவட்குக் கை கொடுப்பப் பற்பல பழம்பிறப்புக்களிலே அடிப்பட்டு வந்த அன்பு காரணமாக ஊழ்வினையே கூட்டுவித்து அணி செய்த களவு மணத்தின்கண் இவர் கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தம்முள் தாமே கூடினாற்போலவே இவள் நம் பெருமான் அழகிற்கு ஒத்த அழகுடையள் ஆயினள். ஒப்பற்ற அழகுடைய நம்பெருமானுக்கு வாழ்க்கைத் துணையாகும் தவப் பயன் மிக்க இவள் அவனுக்கு மிகவும் பொருத்த முடையவளே!" என்று பாராட்டுவோரும் ஆகி, இவை போல்வன பிறவும் அம் மாந்தர் தத்தமக்குத் தோன்றியவாறே பலகாலும் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) ஏதம் - குற்றம். உதயணன் நயப்ப என்க. பிற நெறிப் படுதல் - பிறரை மணஞ் செய்து கோடல். அம்மை - பழம்

பிறப்பு. அணிநீர் மன்றல் – அழகிய நீர்மையுடைய களவு மணம். மாதர் : விரிசிகை. பன்முறை - பலவேறு முறைகளாலும் எனினுமாம்; பகர - கூறாநிற்ப.

(விரிசிகை அரண்மனையை அடைதல்)

௯௫ - ௯ : ஆய்..............போந்து

(பொ - ரை.) பிறரால் ஆராயப் படுதற்குக் காரணமான பெரிய சிறப்பினையுடைய செயற்கருந் தவத்தினையுடைய துறவோர் பள்ளியுள் பாயல் போல் பரவிக் கிடக்கும் பலவாகிய மலர்களை மிதித்த விடத்தும் வருந்தி மிகவும் சிவக்கின்ற அழகு விளங்குகின்ற இயல்பாகவே சிவந்த அவ் விரிசிகை நல்லாளின் அடிகள் ஆங்கு வழியில் பரப்பி வைத்த மலர்களுள் சிற்சில மலர்களை மிதித்துப் பெரிதும் சிவந்து வருந்தும்படி மெல்ல மெல்ல நடந்து வீதியின்கண் வந்து என்க.

(வி - ம்.) ஆய் - ஆராயப்படும்.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு" (குறள் - ௨௧)

என்பதனால் ஆய் பெருஞ் சிறப்பின் அருந்தவம் என்றார். பாயல் போலக் கிடந்த மலர் என்க. அரத்தம் - சிவப்பு. திரு - அழகு. சலிப்ப - வருந்த. இயலி - நடந்து.

(இதுவுமது)

௧00 - ௬ : கொடி...............புகுதலின்

(பொ - ரை.) உயர்த்திய கொடிகள் காற்றுப்படுதலாலே அசையாநின்ற அரண்மனை வாயிலின்கண், படைகளும் நகரப் பெருங்குடி மக்களும் மங்கல முரசத்தோடு இன்னிசையாற் சிறந்த பல்வேறு இசைக் கருவிகளும் முழங்காநிற்பவும், அரசர்க்குரிய மங்கலப் பொருள்கள் பலவும் பணிமகளிர் பொருத்தமாக ஏந்தி வாரா நிற்பவும் பல்வேறு பூங்கொடிகள் பரவிய நீழலினூடே மாதர்கள் தூவாநின்ற நறுமணப் பனிநீர் நனையாநிற்பவும், ஒருங்கு சென்று எதிர்கொள்ளாநிற்ப; இங்ஙனம் அவ் விரிசிகை நல்லாள் அமையாத பெருஞ்சிறப்போடு அகன்ற அரண்மனையின்கட் புகுதலாலே என்க.

(வி - ம்.) கொடிகாற்றுப்பட நுடங்கும் என்க. கடிநகர் - அரண்மனை. பல்லியம் - பலவாகிய இன்னிசைக் கருவிகள். அரசமங் கலம் - அரசர்க்குரிய மங்கலப் பொருள்கள். அவை கவரி, நிறை குடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்பன. இவற்றை,

"சாமரை தீபம் தமனியப் பொற்குடங்
காமர் கயலின் இணைமுதலாத்—தேமருவு
கண்ணடி தோட்டி கதலிகை வெண்முரசம்
எண்ணிய மங்கலங்க ளெட்டு"

என்னுஞ் செய்யுளால் உணர்க. பூம்படாகை - பூங்கொடி. நல்லோர்: மகளிர். தூஉம் - தூவும். நறுநீர் - பனிநீர். நகரம் - நகரப் பெருங் குடி மாந்தர்.

(உதயணன் விரிசிகையை மணந்து இன்புறல்)

கoஎ - கச: தானை..............புணர்ந்து

(பொ - ரை.) படைப் பெருக்க முடைய உதயண மன்னன் மூனும் சான்றோர் சென்ற நன்னெறியில் பிறழாளுய்ப் பூக்கள் மலர்ந்த கூந்தலையும் பருத்த இளைய அழகிய முலையினையும் உடைய வாசவதத்தையும் பதுமாபதியும் மானனீகையும் ஆகிய தன் தேவிமார் மூவரும் மணவேள்வியின் முன்னின்று மரபறிந்து செய்தற்குரிய சடங்குகளைப் பேணிச் செய்து அவ் விரிசிகைக்கு அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களைப் பொருத்த முண்டாகப் பூட்டி அவளுடைய தாயும் தந்தையும் போல அவள் கையினைப் பற்றி உதயணன் கையிற் சேர்த்துக் கொடுப்ப, சமித்துக்களைக் கூட்டுதலமைந்த திருமண வேள்வித் தீயின் முன்னிலையில் குறைவற்ற நூல்வழியாலே வதுவை செய்து அவளைக் கூடிய பின்னர் என்க.

(வி - ம்.) தானை - படை. வேந்தன் : உதயணன். உரிய - செய்தற்குரிய சடங்குகள். ஏற்றி - அணிந்து என்றவாறு. குரவர் - தாயும் தந்தையும். கூட்டுபு - கூட்டி. நெறிமை - நெறி. அவள் : விரிசிகையை.

(இதுவுமது)

ககச - உஉ: வியனுலகு...............இனிதெதன்

(பொ - ரை.) அகன்ற இந் நில உலகம் புகழ்ந்து பாராட்டக் குளிர்ந்த கரிய இரவும் பகலும் ஆகிய எப்பொழுதும் வெருளுய் அன்பால் உளம் நெகிழ்ந்து அத் தேவியோடு கூடி இனிய சுவை யுடைய அமிழ்தம் போன்ற காமவின்பம் கூட்டுண்டு முறை முறையே தப்பின்றித் துனியும் புலவியும் ஊடலும் தோற்றிக் கற்பகக் கனி போன்ற காமவின்பங் கலந்த மகிழ்ச்சியோடே தனக்கு வாழ்க்கைத் துணைவியர் ஆகிய வாசவதத்தையை யுள்ளிட்ட நால்வரும் தன்னை வழிபடா நிற்ப, 'இழும்' என்னும் அமைதி இன்பத்தோடு உலகில் வாழும் இனிய உயிர்கள் பல வற்றையும் பாதுகாத்து அம்மன்னர் பெருமான் இனிதே ஒழுகி வாராநின்றான் என்க.

(வி - ம்.) வியன் - அகலம். உளம் நெகிழ்ந்து என்க. அமிழ்தம் போன்ற காமவின்பம் என்க. முனிவிலன் - வெறுப். துனி - முதிர்ந்த பிணக்கு. புலவி - சிறுபிணக்கு. பதனறிந்து நுகர்தலுண்மையின் கனிபடு காமம் என்றார். துணை - வாழ்க்கைத்துணை. அமைதியான செல்வம் என்பார் இழுமென் செல்வம் என்றார். உதயணன் இனிது ஒழுகுவனன் என மாறுக.

௧௭. விரிசிகை வதுவை முற்றிற்று.

நான்காவது வத்தவ காண்டம்
முற்றிற்று.

ஆகக் காண்டம் நான்கிற்குக் கூடிய காதை கஉஉ,

கொங்கு வேளிர் அருளிய பெருங்கதையில்
நான்காவதாகிய வத்தவ காண்டத்திற்குப்
பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் வகுத்த
உரையும் விளக்கமும்
முற்றுப் பெற்றன.

பெருங்கதை

ஐந்தாவது

நரவாண காண்டம்

அஃதாவது - உதயணன் மகனாகிய நரவாணனுடைய பிறப்பு முதலியவற்றைக் கூறும் பகுதி என்றவாறு.

இதன்கண் : உதயணன் வணிகருடைய வழக்கைத் தீர்த்தலும், அவன் மகப்பேறு விரும்பலும், அவன் கனவு கண்டு அதன் பயனறிதலும், வாசவதத்தையின் கருப்பமும், வாசவதத்தை ஒருகனவு கண்டு உதயணனுக்கு உணர்த்தலும், கனவின் பயனை உதயணன் கூறலும், வாசவதத்தையின் கருப்பம் முதிர்தலும், வாசவதத்தைக்கு உண்டான விருப்பமும், உதயணன் வாசவதத்தையின் விருப்பத்தை வினவலும், வாசவதத்தை தன் விருப்பத்தைக் கூறலும், உதயணன் அமைச்சரோடு ஆராய்தலும், உருமண்ணுவா வருதலும், உதயணன் அவனுக்கு உரைத்தலும், உருமண்ணுவா இயக்கனைப் பற்றிக் கூறுதலும், உதயணன் இயக்கனை நினைந்ததும், இயக்கன் வந்ததும், அவன் கூற்றும், உதயணன் கூற்றும், நஞ்சுகன் கூற்றும், பிடியின் பண்டை வரலாறும், பத்திராபதி யானைப் பிறப்பை விரும்பலும், பத்திராபதி குபேரன் முன் செல்லுதலும், குபேரன் அவளைச் சபித்தலும், அவள் வினாதலும், சாப விடையும், பத்திராபதி பழைய உருப்பெற்றுக் குபேரனை அடைந்து வணங்கலும், அவள் குபேரனை வரம் வேண்டலும், உதயணனுக்காக மகப்பேறு வேண்டலும், குபேரன் சௌதர்மேந்திரனை ஏத்தலும், சௌதர்மேந்திரன் சோதவனை விடுத்தலும், சோதவன் பத்திரையை உதயணன்பால் விடுத்தலும், பத்திராபதியின் நன்றியறிவும், இயக்கன் பத்திராபதியைத் தியானிக்கும்படி கூறலும், அவன் ஒரு மந்திரத்தை உபதேசித்தலும், அவன் செல்லுதலும், உதயணன் வாசவதத்தையின் விருப்பத்தைக் கூறுதலும், அமைச்சர்

தச்சரிடம் கூறுதலும், தச்சர் மறுத்தலும், பத்திராபதி தச்ச வுருவங்கொண்டு வருதலும், உதயணனுக்கு உருமண்ணுவா அறிவித்தலும், உதயணன் உடன்படலும், உருமண்ணுவாவின் செயலும், பத்திராபதி எந்திரம் அமைத்துத்தருதலும், உதயணன் முதலியோர் அதிலேறிச் செல்லலும், உதயணன் பத்திராபதியை அழைத்துக் கூறலும், தச்சனுக்குச் சிறப்புச் செய்தலும், பத்திராபதி தன் வரலாறு கூறுதலும், உதயணன் எண்ணுதலும், பத்திராபதி தன் உருவத்தைக் காட்டி மீளலும், நரவாணதத்தன் பிறத்தலும், பிறந்தநாட் சிறப்புக்களும், சாதகர்மமும், யாவருக்கும் பரிசளித்தலும், உதயணன் தன் தம்பி முதலியோர்க்குச் செய்தி கூறி விடுத்தலும், மகவிற்குப் பெயரிடலும், உருமண்ணுவா முதலியவர்களின் புதல்வர்களுக்குப் பெயரிடலும், நகரமாந்தர் மகிழ்ந்து கூறலும், பிரச்சோதனன் நரவாணதத்தன் பிறந்ததை அறிதலும், முரசறைதலும், நகரை அலங்கரித்தலும், பிரச்சோதனன் விழாக் கொண்டாடலும், யூகியைப் பிரச்சோதனன் வருவித்தலும், யூகியும் சாலங்காயனும் தர்க்கஞ் செய்தலும், பிரச்சோதனன் யூகியின் விசேட குணங்களை வியத்தலும், யூகிக்குச் சிறப்புச் செய்தலும், யூகிக்கு இருவரை மணம்புரிவித்தலும், யூகியைப் பாராட்டலும், யூகியை விடுத்தலும், யூகி உதயணனுக்குக் கூறலும், உதயணனது செங்கோன்மையும், நரவாண தத்தனுடைய இளமைப் பருவமும், அவனது காளைப் பருவமும், கணிகையர் இயல்பும், கலிங்கசேனையும், மதனமஞ்சிகை பந்தாடுகையில் பந்து கீழே விழுதலும், நரவாணதத்தன் உலாவரலும், அவன் மதனமஞ்சிகையைக் கண்டு விரும்பலும், அவன் கோமுகனை வினுதலும், கோமுகன் மதனமஞ்சிகையின் உருவத்தை எழுதுதலும், அவன் அவள் வீடுசென்று பரிசங் காட்டலும், பரத்தையர் செயலும், கோமுகன் கூறலும், உதயணன் மதனமஞ்சிகைக்குப் பொன்விடுத்தலும், நரவாணதத்தன் மணமும், திருவிழாவும், மானசவேகன் வருதலும், அவன் கண்ட காட்சியும், அவன் மதனமஞ்சிகையைக் காணலும், அவள் பூதவடிவமொன்றைக் கண்டு அஞ்சுதலும், மானசவேகன் எண்ணுதலும், நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் இன்புறுதலும், மானசவேகன் எடுத்துச் செல்லலும்......................................கூறப்படும்.

௧. வயாக் கேட்டது

இதன்கண் : உதயணன் வணிகருடைய வழக்கைக் கேட்டலும், அவன் மகப்பேறு விரும்பலும், வாசவதத்தையின் செயலும், உதயணன் செயலும், அவன் கனவுகாண்டலும், அதன் பயனை அறிதலும், வாசவதத்தை வயிறுவாய்த்தலும், அவள் ஒரு கனவு கண்டு உதயணனுக்கு உரைத்தலும், உதயணன் அக்கனவின் பயன் கூறலும், வாசவதத்தைக்குத் தோன்றிய வயா விருப்பமும், உதயணன் அவள் விருப்பத்தை வினாதலும், அவள் கூறலும், அது கேட்ட உதயணன் அமைச்சரொடு ஆராய்தலும் கூறப்படும்.

உதையண குமர னுவந்துண் டாடிச்
சிதைவில் போகமொடு செங்கோ லோச்சி
ஒழுகுங் காலை யோரிடத் தொருநாட்
கழிபெருங் கேள்விக் கண்போன் மக்களொடு
பேரத் தாணியுட் பொருந்தச் சென்றபின்
வாரமி லொழுக்கின் வாணிக ரீண்டி
முறையொடு சென்று முறைமையிற் பிழையாக்
கரைதீர் செங்கோற் காவலற் கிசைத்து
முறையிது கேட்கெனக் கேட்பது விரும்பி
உருமண் ணுவாவினைப் பெருமகன் பணியா
வினாவவன் னாற்கு வினாவெதிர் வழாமை
மூவ ராவா ரொருமகற் கொருத்திகண்
மேவரத் தோன்றிய மக்களம் மூவரும்
ஆன்ற கேள்வியொ டறநெறி திரியார்
மூன்றுதிறம் பட்ட விருப்பின ரவருள்
எறிதிரை முந்நீ ருடுசென் றவ்வழி
உறுவிலைப் பண்டத்தி னொருவன் வாழும்
கடையகத் திருந்துதன் னுடையது பெருக்கிப்
பிரிவிலன் வாழு மொருவ னொருவன்
அரிய பண்ட மெளிதி னடக்கியவை
உரிய காலத் துற்றது பகரும்
இன்னவை மற்றவ ரியற்கை முன்னோன்
பொலம்படு தீவிற்குக் கலந்தலைப் பெயர்ந்துழிச்

சூழ்வளி சுழற்ற வாழ்கயத் தழுந்தினன்
அழுந்தின னென்பது கேட்டே யறிவயர்ந்
தொழிந்த விருவரு முறுகடன் கழிப்பித்
தவ்வையைச் சேர்ந்து கவ்விதின் மொழியச்
சென்றது நின்றதுஞ் சிதைவின் றெண்ணி
நன்றுசெய் வாழ்க்கை யென்றெடுத் திற்றென
ஒன்று முரையா ளொருமைக் கோடலின்
வென்றித் தானை வீர வேந்தநின்
அடிநிழ லடைந்தன மதுவெங் குறையென
முடிவுநனி கேட்டலு முன்னேற் கமைந்த
கழிபெருங் காதலி மறுமொழி யெதுவெனச்
சுற்ற மாந்தர் சொல்லுவார் மாறல
உற்றவ ருரைத்தவை யொக்கு மவனொடு
சென்றோ ரொருவருஞ் சிதைகலத் துய்ந்து
வந்தோ ரில்லை மாந்தளிர் மேனிக்குக்
கருவு முண்டே திருவமர் மார்ப
தெய்வம்..
......................படுத்த மாற்றமுந் தெளியாள்
ஐயத் துள்ளமோ டதுவும் படாளென
இருவர் மாற்றமுந் தெரிகவென் றேவலின்
உருமண் ணுவாவதற் குறுவழக் குரைத்தனன்
வருக வப்பொருள் வந்தபி னவ்வழி
இருவரு மிலைச்சித் தீரறு திங்கட்
கொருவன் கையகத் திருக்க விருந்தபின்
மிக்கோண் மாற்ற மெய்யெனின் மேலை
இயல்பே யாகு மதுதா னன்றி
மறுவில் கொள்கையோர் சிறுவனைப் பெறினே
உறுபொருண் மற்றிவ ருரைக்கவும் பெறுஅர்
வெண்குடை நிழற்றிய வேந்தே பெண்பெறிற்
புறநடை யொழித்திவர் திறவதி னெய்துப
நூனெறி யிதுவென நுழைந்தவ னுரைத்தலும்
ஆறு வவரவ ரகத்திறத் தடைதர
அவையம் போக்கி நவையறு நெஞ்சினன்
மக்க ளின்றெனின் மிக்குயர் சிறப்பின்

என்குல மிடையறு மேனநினைந் தாற்றான்
கோற்றத் தேவியைக் குறுகலு மவளும்
பொற்றொடித் தோழியர் புரிந்துபுறங் காப்பத்
திருவோடு பூத்த நாள்வரை யிறந்தபின்
பெருவிற லோன்பிகட்குப் பேலிக்கோடை யாற்றி
ஆசிடைக் கிளவி யவரி னெய்தி
மாசில் கற்பின் மங்கலக் கோலமோ
டுருவமை மாடத் தோரிடத் திருந்தோள்
விரிகோடிப் பவழத்தின் விரிந்த சேவடிக்
காழகிற் புகைநிறங் கடுக்குந் தூவிப்
பல்சிறைப் புறவம் பரிந்துட ளுடி
அவ்வாய்க் கோண்ட வார்இரை யமிழ்தம்
சேவ்வாய்ப் பார்ப்பிற்குச் சேர்ந்தவண் சோரிதலின்
ஊறுபசி வருத்தமு மன்பினது பெருமையும்
திறவதி னோக்கித் தேரியா நின்றுழி
வேந்தனும் வினவியவள் வேட்கை விரும்பித்
தாம்படு மாந்தர்க்குத் தண்ணீர் போலும்
காம்படு தோளியோடு கலந்துமகிழ் வெய்திய
துயிலிடை யாமத்துத் துளங்குபு தோன்றி
அயில்வே னெடுங்கணோ ராயிழை யணுகி
அருளு மெம்மிறை யெழுபுவி யளித்தற்குப்
பொருளு மதுவே போதுக வென்றலின்
யாரவன் கூறெனை வவ்வழி யிறைஞ்சிப்
பேரவ ளுரைத்தலிற் பெருமக னோக்கித்
துன்பமு மின்பமுந் துறக்க லாற்றா
மன்பெருந் தேவியோடு செலவுள மமர்தலின்
மற்றதை யுணர்த்தி முற்றிழை யெழுகெனப்
பற்றவ ளுடனே பறந்துவிசும் பிவர
மேலுங் கீழு மேவர நோக்கி
மாசறு மகளிர் மம்ம ரெய்தி
ஆனுக் கனவிடை மாநிதிக் கிழவன்
விளங்கவை நாப்பட் டுளங்கினர் புகுதலின்
அரிமா சுமந்த வமளி காட்டத்
திருமா னுகைத்துத் தேவியோ டேறி

இருந்த பொழுதிற் பொருந்திய வல்லியுள்
வெள்ளேறு கிடந்த வெண்டா மரைப்பூக்
கொள்வழி யெழுதிய கொடுஞ்சி யுடைத்தேர்ப்
பொன்னிய றேடரிற் புதல்வ னிருத்தலிற்
பின்னரப் பூவின் பிக்க நோக்கிப்
பிறழ்ந்த வாழியிற் பெருநடு வாக
உறழ்ந்துநனி யழுத்திய வுறுபொன் னல்லியின்
ஒருமுடி பிறழ்தலி னருமையொடு விரும்பிக்
கொண்டது வாவெனக் கோமகள் கொண்டு
வண்டவிழ் நறுந்தார் வத்தவற் கருளி
நெடித்தனே னெழுகென விடுத்தனள் போகக்
கொடிக்கோ சம்பி குறுகித் தமரிடை
முடிக்கல மெல்லா முறைமையி னேக்கிக்
கைவினைக் கம்மத்துக் கதிர்ப்புநனி புகழ்ந்து
வேண்டுக விதுவென விளங்கிழைக் கோமகட்
கீயக் கொண்டுதன் னிடைமுலைச் சேர்த்தலும்
காய்கதிர்க் கனலியிற் கதுமெனப் பொழ்ந்து
புக்கது வீழ்தலும் பொருக்கென வெரீஇ
எழுந்த மாதரொ டிறைவனு மேற்றுக்
கழிந்த கங்குற் கனவினை வியந்து
நூனெறி மரபின் வல்லோற் பேணிக்
கோலத் தேவியொடு கோமகன் வினவக்
கனவது விழுப்ப மனவயி னுய்ந்து
விளங்கொளி விஞ்சையர் வெள்ளியம் பெருமலைத்
துளங்கா வாழி தோன்ற வேந்தும்
வெய்யோற் பெறுதலும் விறலவ னெய்தலும்
ஐய மில்லையென் றுய்ந்தவ னுரைப்பப்
புதல்வனஃ தெதிர்மை பொருளென விரும்பித்
திதலை யல்குற் றேவியொடு மகிழ்ந்து
செல்லா நின்ற சின்னு ளெல்லையுட்
பல்கதிர் மதியமொடு பரந்துவிசும் பொடும்
வியந்த நற்கோ ளுயர்ந்துழி நோக்கிப்
பெயர்ந்துவரு நாளிற் பெருமையின் வழாத
நன்னு ளமயத்து மின்னென நுடங்கி

விஞ்சைய ராழி யுருட்டும் வேட்கையோ
டஞ்சேங் தாமரை யகவயி னிறைந்த
வெண்பாற் புள்ளின் விழையுந் தன்மையோ
டவந்தியன் மடமக ளணிவயிற் றங்கண்
வியந்துதலை பனிக்கும் வென்றி வேட்கையோடு
சேட்படு விசும்பிற் சென்றவ னவ்வழிப்
பொய்ப்படு குருசில் பொலிவோடு பட்டென
முயக்கமை வில்லா நயப்புறு புணர்ச்சியுள்
அணிநிற வனிச்சம் பிணியவிழ்ந் தலர்ந்த
அந்த ணறுமல ரயர்ப்பிற் றுங்கும்
சேந்தளிர்......................வருந்த வசாஅய்
நிலாவுறழ் பூந்துகி னுெகிழ்ந்திடைத் தோன்றக்
கலாவப் பல்காழ் கச்சுவிரிந் திலங்கத்
திருநுதற் றிலகமுஞ் சுமத்த லாற்றுள்
பெருமதர் மழைக்க ணின்றுயில் பேணிய
இன்ப யாம மியைந்த வைகறை
நன்பெருங் கனவி னடுங்குவன ளேற்று
வெள்ளத் தானை வியலக வேந்தன்
பள்ளி யேற்றபின் பதனறிந்து வணங்கி
என்னைகோ லடிக ளின்றியான் கண்டது
விண்ணக மருங்கில் வெண்முகில் புரைவதோர்
அண்ணல் யானையென் கண்ணுற வந்துதன்
ஆய்வலித் தடக்கை சுருட்டுபு முறுக்கியென்
வாய்புக் கடங்கிய பொழுதிற் சேய்நின்
றந்தர மருங்கிற் றுந்துபி கறங்கப்
புகழ்ந்துபல ரேத்தப் பொருக்கெனப் பெயர்த்தே
உமிழ்ந்தனே னுமிழப் பரந்திறகு தோற்றிப்
பல்லோர் மருளப் பறந்துசென் றுயர்ந்ததோர்
வெண்மலை மீமிசை யேறி வேட்கையின்
விண்மிசை ஞாயிறு விழுங்கக் கண்டனேன்
என்னைகோ லிதனது பயமென வினவிய
நன்னுதல் கேட்ப மன்னவ னுரைக்கும்
மறுவின்று விளங்கு மறப்போ ராற்றலோர்
சிறுவனைப் பெறுதி சேயிழை மற்றவன்
உறுதிரைப் பக்கமும் வானமும் போகி

அச்சமி லாற்றலோர் விச்சா தரரிடை
ஆழி யுருட்டுமேன் றறிந்தோ ருரைத்த
வீழா விழுப்பொருண் மெய்பெறக் கண்டனை
தீதின் றாகித் திருவோடு புணர்கென
மாதாங்கு குருசிலு மதுவே யிறுப்பப்
போதேர் கண்ணியும் புகன்றன ளொழுக
மங்குல் விசும்பின் வளர்பிறை போலவும்
பொங்குநீர்ப் பொய்கையிற் பூவே போலவும்
நாளினு நாளினு நந்திவனப் பெய்தித்
தோளுந் தாளு முடம்புந் தலையும்
உகிரு மயிரு மொருங்குகுறை வின்றி
ஓதிய வனப்போ டுயர்நெறி முற்றி
அருவினை விச்சை யவனூ டுறைதலிற்
பெருமலை யுலகம் பேணு மவாவொடு
பறத்த லாற்றம் பிறப்பப் பைம்பூட்
சிறப்பொடு புணர்ந்த சேயிழை மாதர்
சுடர்வயிற் கிடந்த குழவிய துள்ளத்
திடர்வகை யறியா ளெவ்வ மெய்தி
உணர்ந்தோ ருரைப்ப வுரையிற் கேட்கும்
இருவகை யிமயமும் பெருகுபுனல் யாறும்
நீலப் பருப்பமுந் தீபமு மப்பாற்
கோல வருவியஞ் சிகரியு ஞாலத்
தொருநடு வாகிய வுயர்பெருங் குன்றமும்
பெருமலை பிறவு மருமையொடு புணர்ந்த
இறுவரை யேறி யிமையோ ராடும்
நறுமலர்ப் பொய்கையு நந்தா வனமும்
உத்தர குருவினோ டொத்தவை பிறவும்
ஆண்டுபோந் தெழுந்து காண்டலுற விழையா
ஐவகைச் சோதிட ரணிபெறு கற்பம்
கைவைத் தொழியக் கடந்துசென் றப்பால்
அமரா பதியு மந்தரத் தெல்லையும்
நகர்பூங் காவு நோக்குபு வருதற்
குற்றதென் மனனெனு முணர்வின ளாகி
மற்றுப்பிறர்க் குரையாண் மனத்தே யடக்கி

ஈர்க்கோடு பிறந்த விளந்தளிர் போல
மாக்கே ழாகமு மருங்குலும் வருந்த
முலைக்கண் கறுப்பத் தலைக்கவி னெய்தி
வளம்பாற் றன்மையின் வந்துபுடை யடுத்த
இளம்பாற் கெதிர்ந்த விடத்த வாகிய
முலைபொறை யாற்ரு முனிவின் றலையும்
மலைபொறுத் தென்ன மகனையுந் தாங்கி
நொந்துபுற மெலிந்த தன்றியு மந்தரத்
தியங்கல் வேட்கைய னிருக்குந ணுதலின்
அயங்கவ னழற்ற வசைவு முந்துறீஇ
முக்கூட் டரத்த வொண்பசை விலங்கி
நெய்க்கூட் டிலங்கு நித்தில நிகர்த்துக்
கூரிய வாகிய நேரியன் முறுவற்
செவ்வாய் திறந்து சில்லென மிழற்ற
ஐதேந் தல்குலு மாகமு மசைஇ
மைதோய் கண்ணி மதியின் மெலியப்
பசைவுறு காதற் பட்டத் தேவி
அசைவுறு வெந்நோ யறிந்த வரசன்
அசாஅ வரும்பொருள் யாதென வுசாஅய்க்
கேட்பவஃ துரையாள் வேட்பது விளம்பின்
நயந்தோர்க் காயினு நாணுத்தக் கன்றென
உயர்ந்தோர் கோள்கையி னெண்டொடி யொதுங்க
மன்னவன் மறுத்து மடவோய் மற்று
....
நின்னுயிர் மதியா யாயி னென்னுயிர்
யானும் வேண்டே னுயிழை கேண்மோ
கூடிய கொழுநன் கொழுங்குடர் மிசைகுற
ஓடிய வுள்ளத் துயர்துணைத் தேவியைக்
குறையிற் கேட்டுக் கொடுத்துநோய் தணித்த
மறையில் பெரும்புகழ் மன்னவன் போல
என்ன தாயினு மீகுவன் மற்றுநின்
இன்னு வெந்நோ யெத்திறத் தாயினும்
ஒடுங்கா வுள்ளமோ டகற்றுவல் யானெனக்
கடுஞ்சூ ளுறைஇக் காவலன் கேட்ப

ஒழுக்கினுங் கற்பினு மிழுக்க மின்றெனப்
பசைஇய கேள்வனைப் பைந்தொடி வணங்கி
அசையா வூக்கத் தடிகளேன் னுள்ளம்
விசைகோ ணேன்றுள் விச்சா தரர்போல்
மிசையே சென்றுற மேன்மே னெருங்கும்
இசையா வரும்பொரு ளிற்றென வுரைத்தல்
வசைதீர் வையத்து நகைய தாதலிற்
சொல்லிய திலனென மெல்லியன் மிழற்ற
எளிதெனக் கென்ன வமைச்சரோ டாராய்ந்
தொளிமலர்க் கோதா யுற்றபி னறியெனத்
துன்ப நீக்குந் தோழரோ டியைந்தே
இன்பக் கோட்டியு ளினிதி னிருந்து
பேராக் கழற்காற் பெருந்தகை வேந்தன்
ஆர்வவேய்த் தோளி யசாநோய் தீரிய
ஆராய்ந் தனனு லமைச்சரோ டொருங்கென்.

உரை

க. வயாக் கேட்டது

அஃதாவது - உதயணன் வயிறு வாய்த்திருந்த வாசவதத்தையின் விருப்பத்தை வினவி அறிந்து கொண்ட செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் கொலு வீற்றிருத்தல்)

க - ரு : உதையணன்.............பின்

(பொ - ரை.) இவ்வாறு உதயணகுமரன் தேவிமாரொடு கூடி மகிழ்ந்து உண்டாடுதல் செய்து சிதைதலில்லாத இன்ப நுகர்ச்சியோடிருந்து உலகில் வாழும் இன்னுயிரோம்பிச் செங்கோலோச்சி ஒழுகுங் காலத்தே, ஓரிடத்தில் ஒரு நாள் மிக்க பெரிய நூற்கேள்வியை யுடையோரும் தனக்குக் கண்கள் போன்றவரும் ஆகிய அமைச்சர் முதலிய அரசவைச் சுற்றத்தார் சூழ அரசு வீற்றிருத்தற்குப் பேரத்தாணி மண்டபத்துள் சென்று அமர்ந்த பின்னர் என்க.

(வி - ம்.) போகம் - இன்பநுகர்ச்சி. ஓரிடத்து (ங) வாணி கரீண்டி (சு) என இயைத்துக் கொள்க. கழிபெருங்கேள்வி: ஒரு பொருட்பன்மொழி. "சூழ்வார் கண்ணாக வொழுகலான் மன்னவன்,

சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்'' (குறள். ௪௪௫) என்பது பற்றி அமைச்சர் முதலியோரைக் கண்போல் மக்கள் என்றார். பொருந்த - கொலு வீற்றிருத்தற்கு.

(உதயணன்பால் வணிகர் வழக்குக் கொணர்தல்)

௬ - ௧௧ : வாரம்..................வழாமை

(பொ - ரை.) ஒருபாற் கோடாமல் நடுநிற்கும் நல்லொழுக்கத்தினையுடைய ஒருசில வாணிகர் கூடிவந்து அவ்வரசவையின்கண் ஒருவழக்கொடு சென்று முறைமையில் பிழைத்தலில்லாத குற்றமற்ற செங்கோலையுடைய மன்னனுக்குத் தம் வருகையைக் கூறிப் "பெருமான் எம் வழக்கினைக் கேட்டருளுக!" என்று வேண்டா நிற்ப, அதுகேட்ட மன்னவன் அதனைக் கேட்க விரும்பி உருமண்ணுவா என்னும் அமைச்சனை நோக்கி, "நீ அதனை வினவுவாயாக!" என்று பணிப்ப அவனும் அவ்வழக்கினை வினவா நிற்ப. அவன் வினாக்களுக்கு விடையாக வழுவுதலின்றிக் கூறும் அவ்வணிகர் என்க.

(வி - ம்.) வாரம் - ஒருபாற் கோடல். ஈண்டி - கூடி. முறை - வழக்கு. கறை - குற்றம். காவலன் : உதயணன். முறையிது - இவ்வழக்கினை. பெருமகன் : உதயணன். பணியா - பணிப்ப. அன்னாற்கு - அவ்வுருமண்ணுவாவிற்கு. எதிர் - விடை.

(வணிகர் வழக்குரைத்தல்)

௧௨ - ௫ : மூவர்..................விருப்பினர்

(பொ - ரை.) "பெருமானே! ஒரு தந்தைக்கும் ஒரு தாய்க்கும் விருப்பமுண்டாகப் பிறந்த மக்கள் மூவராவர். அம்மக்கள் மூவரும் நிரம்பிய கல்விகேள்விகளை யுடையராய் அறநெறியிற் பிறழாதவரும் ஆவர். மேலும் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தனித்தனியான விருப்பத்தையுமுடையராவர்'' என்க.

(வி - ம்.) ஒருமகற்கு - ஒருதந்தைக்கு. ஒருத்திகண் - ஒருதாய் வயிற்றில். மேவர - விருப்பமுண்டாக. மக்கள் மூவராவார் எனக் கூட்டுக. கேள்வி என்றமையால் கல்வியுங்கொள்க. மூன்றுதிறம் - மூன்று வகைப்பட்ட.

(இதுவுமது)

௧௫ - ௨௨ : அவருள்..................இயற்கை

(பொ - ரை.) "ஆதலால் அம் மூவருள் வைத்து ஒருவன் அலையெறிகின்ற கடலினூடு சென்று ஆங்குள்ள தீவுகளிற் றிரட்டிய மிக்க விலையினையுடைய பொன் மணி முதலியவற்றால் வாழ்பவன் ஆவன். இனி, இரண்டாமவன் நம் நகரத்திலேயே தனது அங்காடியின்கண் இருந்து தன்னுடைய வணிகத் தொழி

லால் தன் பொருளைப் பெருக்கி நாட்டினின்றும் பிரியாதவனாய் வாழ்பவன் ஆவான். இனி மூன்றாமவனோ பிற நாட்டிற் சென்று பெறுதற்கரிய பொருள்களை எளிதாக ஈட்டிக்கொணர்ந்து தன் பண்டகசாலையின்கண் அடக்கிவைத்து அவையிற்றை விற்றற்குரிய காலத்தே விற்கும் வாழ்க்கையை மேற்கொண்டவனாவான். இம் மூன்றுவகை ஒழுக்கங்களும் நிரலே அம்மூவர்க்கும் தனித் தனி உரியன'' என்க.

(வி - ம்.) ஒருவன் கடலில் கலத்திற் சென்று தீவகங்களில் பொன் மணி முதலியன ஈட்டிக் கொணர்ந்து வாழுபவன், மற்றொருவன் பிறந்த நகரிலேயே அங்காடிவைத்து வணிகம் செய்து வாழுபவன். மற்றொருவன் வேற்று நாட்டிற் சென்று ஆங்குள்ள பண்டங்களைக் கொணர்ந்து செவ்வி தேர்ந்து விற்றுப் பிழைப்பவன். இவ்வாறு இம் மூவரும் தனித்தனி ஒவ்வொருவகை விருப்பமுடையராய் இருந்தனர் என்றவாறு. எறிதிரை: வினைத்தொகை. முந்நீர் - கடல். உறுவிலை - மிக்க விலை. கடை - அங்காடி. தன்னுடையது - தன்கைப்பொருளை. பெருக்கி - வாணிகத்தால் பெருக்கி என்க. அரிய பண்டங்களை எளிதாக ஈட்டிப் பண்டகசாலையின்கண் அடக்கிவைத்து என்க. உரிய காலம் - ஊதியத்தோடு விற்றற்குரிய காலம். பகரும் - விற்பான்.

(இதுவுமது)

உஉ - சு: முன்னோன்..............கழிப்பி

(பொ - ரை.) இம்மூவருள் வைத்து முதல்வன் தன் இயல்பிற்கேற்பப் பொன் அகப்படும் தீவிற்குச் செல்லுதற்குக் கடலின்கண் மரக்கலமேறிச் செல்லும் பொழுது, கடலினூடே சூறைக் காற்றுத் தோன்றி மரக்கலத்தைச் சுழற்றினமையாலே ஆழ்ந்த நீரின்கண் மூழ்கி இறந்தொழிந்தான், இங்ஙனம் தமையன் கடலுள் மூழ்கி இறந்தொழிந்தான் என்னும் செய்தியைக் கேட்டலும், எஞ்சிய தம்பிமார் இருவரும் மனமயங்கி வருந்தி இறந்தவனுக்குச் செய்தற்குரிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து முடித்தபின் என்க.

(வி - ம்.) பொலம் - பொன். கலந்தலை - மரக்கலத்தில். சூழ்வளி - சூறைக்காற்று. ஆழ்கயம் - கடல். ஒழிந்த இருவரும் - எஞ்சிய தம்பிமார் இருவரும். கடன் - நீர்க்கடன் முதலியன. கழிப்பி - செய்து முடித்து.

(இதுவுமது)

உஎ - கூஉ: தவ்வையை..............குறையென

(பொ - ரை.) "அவ்விருவரும் தம் தாயின்பாற் சென்று அழுகை யொலியோடு கூறாநிற்ப, அவள் அவன் சென்றதனையும் நகரின்கண் நின்ற நிலைமையினையும் ஒவ்வொன்றாக நினைந்து நினைந்து "என் மகன் வாழ்க்கை நன்று! நன்று!" என்று மனத்

தினுள் வருந்தித் தன் வாயால் இஃது என்று யாதொன்றனையும் எடுத்துக் கூறுளாய் மௌனமுறுகிற்றலால், வெற்றியையுடைய படையையுடைய வேந்தனே! யாம் அவனுடைய பொருளை என் செய்வது என்பது தெளியாமல் அது தீர்தற் பொருட்டு நின்னுடைய திருவடி நீழலை எய்தினேம், அதுவே எங்கள் குறையாகும்,'' என்று கூறுகிற்ப என்க.

(வி - ம்.) தவ்வை - தாய். கவ்விநின் - அழுகையொலியொடு. அவன் சென்றதனையும் ஈண்டி எஞ்சிநின்ற பொருளையும். ஒருமைக் கோடல் - மௌனமுறல். வேந்த : விளி, குறை - செய்துதீரவேண்டிய இன்றியமையாச் செயல்.

(இதுவுமது)

நூந - சந : முடிவு..............ஏவலின்

(பொ - ரை.) அவ்வழக்கினைக் கூறிமுடித்த முடிவினை உன்னிப்பாய்க்கேட்ட மன்னவன், “வணிகீர்! அம்முதல்வனுக்கு அமைந்த மிக்க காதலையுடைய மனைவி கூறும் மறுமொழி யாது? கூறுக!'' என்று பணித்தலும் அவர் சுற்றத்தார் மன்னனுக்குக் கூறுபவர் “பெருமானே! அவட்குச் சுற்றத்தார் கூறும் செய்திகள் மாறுபாடுடையன வல்லவாய் ஒக்குமாயினும் அவனோடு அம்மரக்கலத்திலே சென்றோருள் வைத்து ஒருவரேனும் சிதைந்து அக்கலத்தினின்றும் பிழைத்துவந்து அவன் கருத்து இன்னது என்று கூறினாருமில்லை. மேலும் மாந்தளிர் போன்ற மேனியையுடைய அவ்விளமகள் வயிற்றில் கருவும் உளதென்று அறிகின்றேம். திருமகள் விரும்புதற்குக் காரணமான மார்பினையுடையோய்! தெய்வம்...................................தோற்றிய மொழியையும் தெளியாதவளாய், அவன் இறந்தான் என்பதின்கண் ஐயுற்ற நெஞ்சினையுடையளாய் அதனினும் படாள்'' என்று கூறிய அந்த இருவர் மாற்றத்தையுங்கேட்டு உருமண்ணுவாவை நோக்கி, “ஐய! நீ இதனை ஆராய்ந்து தெளிக!'' என்று பணித்தலாலே என்க.

(வி - ம்.) சுற்றமாந்தர் - அவள் சுற்றத்தாராகிய வணிகர். உரைத்தவை மாறலவாய் ஒக்கும் ஆயினும் என மாறிக்கூட்டி ஒருசொல் பெய்து கொள்க. மாந்தளிர் மேனி : அன்மொழி. ஈண்டுச் சுட்டுப் பெயர் மாத்திரையாய் நின்றது. அவள் நிலைமைக்கு இரங்குவார் இங்ஙனம் கூறினர். ச0ஆம் அடியின் இறுதிச்சீர் மூன்றும் சகஆம் அடியின் முதற்சீரும் அழிந்தன. ஆதலால் பொருள் தொடர்பும் அற்றது.

(உருமண்ணுவா வழக்குத் தீர்த்தல்)

சச - ருரு : உருமண்ணுவா...............அடைதர

(பொ - ரை.) அக்கட்டளை பெற்ற உருமண்ணுவா அவ்வழக்கிற்குப் பொருந்திய தீர்வு கூறினன். “கொற்றவெண்

குடையால் மண்ணெலாம் நிழல் செய்த வேந்தே! யான் கட்டளை யின்படி இவ் வழக்கிற்குத் தீர்வு கூறுவல். கேட்டருளுக! கடலுள் மூழ்கிய அவ்வணிகனுடைய பொருளனைத்தும் முன்னர் நம்முன் வருவனவாக! அங்ஙனம் வந்தபின் அவற்றை யாம் கணித்தறிந்தபின் அவற்றைப் பொதியாக்கி அவன் தம்பியராகிய அவ்விருவரும் நங்கண்முன் அவற்றிற்குத் தத்தம் இலச்சினையைப் பொறிப்பாராக! அங்ஙனம் பொறித்த பின்னர் அவை இவ்விரு வருள் முதல்வன் கையகத்தில் ஓரியாண்டு இருப்பனவாக! அங்ஙனம் இருந்தபின்னர் இறந்துபட்ட அம்முன்னோனுடைய மனைவியாகிய கற்புமிக்க அம்மடந்தையின் மொழி மெய்யாதல் காணின் அப்பொருள்கள் முன்போலவே அம்முன்னோனுக்கே உரியனவாகும். அஃதே அறமுமாம். அங்ஙனமின்றி அவன் இறந்துபட்டது உண்மையாயினும் அவள் இப்பொழுது கருவுற் றிருத்தலால் அவள் குற்றமற்ற கொள்கையையுடைய ஓர் ஆண் மகனைப் பெற்றால் அப்பொருள் அவனுக்கே உரியதாம். பின்னர் இவ்வணிகர் தாமும் மிக்க அப்பொருளைப்பற்றி இங்ஙனம் வழக்குரைக்கவும் இடம் பெறார். பெருமானே! அவள் பெண்மகவு பெற்றால் அம்மகவினை வளர்த்தல், கற்பித்தல், அணிதல், மணம்புரிவித்தல் முதலிய புறத் தொழில்களாகிய உலகநடையைச் செய்து முடித்த பின்னர் அவள் பொருட்டுச் செலவாகிய பொருள் போக எஞ்சிய பொருளை இவ்விரு வணி கரும் பாக முறைப்படி அடைவார்கள். இத்தீர்வே அறநூல் வழியாம்.'' என்று அவ்வழக்கினுள் மனம் செலுத்தி அவ்வமைச் சன் தீர்வு கூறலும் அதுகாறும் வழக்கொழிதலில்லாத அவ்விரு வணிகரும் இத்தீர்வினை ஏற்றுக் கொண்டு அவரவர் இல்லத் திற்குச் சென்ற பின்னர் என்க.

(வி - ம்.) தீர்வு கூறுபவன் அவ்வணிகர் கேட்ப அரசனை நோக்கிக் கூறியபடியாம். உருமண்ணுவா பின்வருமாறு உரைத்தனன் என்க. வருக வப்பொருள் என்றது அப்பொருளை நங்கண்முன் கொணருக என்றவாறு. அவ்வழி - நாம் கணித்துக் கண்டபின் என்பதுபட நின்றது. இருவரும் - எஞ்சிய தம்பிமார் இருவரும். இலச்சித்து - இலச்சினை பொறித்து. ஈராறுதிங்கள் - ஓரியாண்டு. பொருள் வயிற்பிரிவு ஓரியாண்டை எல்லையாக உடைத்தாகலின் ஈராறு திங்கள் ஒருவன் கையகத்து இருக்க என்றான். அஃதாவது முன்னோன் கடலுள் மூழ்கி இறந்ததனை அவன் மனைவி மெய்யென்று ஒப்புக் கொள்ளாமையால் அவள் ஐயத்திற்கேற்ப அவன் ஒரோவழி உயிரோ டிருப்பின் ஓரியாண்டிற்குள் மீண்டுவருவன் ஆதலின் அதுகாறும் பொறுத்திருந்து பார்த்திடுக என்றவாறு.

"பொருள்வயிற் பிரிவும் யாண்டின தகமே
ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும்'' (தொ. கற்பி-சஅ - க)

எனவரும் நூற்பாக்களானும் உணர்க. மிக்கோள்மாற்றம் மெய் யெனின் என்றது அவன்மனைவி தன் கணவன் இறந்திலன், அங்ஙனங்

கூறுவதுபொய் என்று கூறும் மொழி மெய்ம்மையாயின் என்றவாறு. இதனால் சுo - க ஆம் அடிகளில் அழிந்து போன சொற்கள் இக்கருத்துடைய அவள் கூற்றுதல்கூடும் என்று ஊகிக்கலாம். மெய்யெனின் என்றது அவன் உயிருடன் இருந்து மீள்வானுயின் என்பது கருத்து. மேலே இயல்பேயாகும் என்றது வரின் முன்பு போலவே அப்பொருள் அவனுக்குரிய தன்மையுடைத்து என்றவாறு. அது - மெய்யென்றல். மறுவில் கொள்கைச் சிறுவன் என்றது தந்தைபொருள் மைந்தற்குரியது என்னும் குற்றமற்ற கொள்கைக்குக் காரணமான சிறுவன் என்றவாறு. உறுபொருள் - மிக்கபொருள். உரைக்கவும் - வழக்குரைக்கவும். பெருர் என்றது இடம்பெருர் என்பதுபட நின்றது. புறநடை - புறமாகப் பெண்ணிற்குச் சுற்றத்தார் செய்யும் செயல்கள். அவை உரைக்கிடையிற் காண்க. திறவதின் - பாக முறைப்படி. வழக்கு ஆறு அவர் என்க.

(உதயணன் மகப்பேறு விரும்பல்)

ருசு — கூ : அவையயம்................குறுகலும்

(பொ - ரை.) அற்றைநாள் அரசவையைக் கலைத்த பின்னர்க் குற்றமற்ற நெஞ்சினையுடைய உதயணமன்னன் நிகழ்ந்த அவ்வழக்குக் காரணமாக "அந்தோ! எனக்கு மக்கள் பிறவாராயின் அரசர்குலத்தில் வைத்து மிகமிக உயர்ந்த சிறப்பினையுடையதாய் வாராநின்ற எனது குருகுலம் இடையறவுபட்டழியுமே" என்று நினைந்து அதனாலுற்ற துன்பத்தினை ஆற்றாய் வெற்றிப்பாடமைந்த வாசவதத்தையின் மாளிகையை அடையாநிற்ப என்க.

(வி - ம்.) அவையயம் - அரசவை. நவை - குற்றம். என்குலம் - எனது குருகுலம். அந்நினைவால் உண்டான துன்பத்திற்கு ஆற்றாய் என்றவாறு. மூதற்றேவி என்பது தோன்ற கொற்றத்தேவி என்றார்; என்றது வாசவதத்தையை.

(வாசவதத்தையின் செயல்)

ருகூ — சுரு : அவளும்...............இருந்தோள்

(பொ - ரை.) அத்தேவிதானும் பொன்வளையலணிந்த தன் தோழிமார் விரும்பிப் புறத்தே நின்று பாதுகாவா நிற்ப, மங்கலமுண்டாகத் தனக்குப் பூப்பு நிகழ்ந்த நாளின் எல்லை கழிந்த பின்னர்த் திருமுழுக்காடிப் பெரிய வெற்றியையுடைய துறவிகளுக்கு உணவு முதலிய பலிகளை வழங்கி அத்துறவோரால் வாழ்த்துப் பெற்றுக் குற்றமற்ற கற்பினுக்குரிய மங்கலக் கோலத்தோடு அழகமைந்த தனது உவளக மாடத்தின் கண்ணே ஓரிடத்தில் அமர்ந்திருந்தவள் என்க.

(வி - ம்.) அவளும் - அவ்வாசவதத்தை தானும். புரிந்து - விரும்பி. ஏனைய பூப்புப் போல வறிய பூப்பாகாது நன்மகப்பேற்றிற்கு இப்பூப்புக் காரணமாதலைக் குறிப்பாலுணர்த்துவார், திருவொடு பூத்த

என்றார். திரு - ஈண்டுப் பூப்பின் பயனாகிய மகப்பேற்றினைக் குறித்து நின்றது. தம்பொருள் என்ப தம்மக்கள் என்பது பற்றி அதனைத் திரு என்றார். பூத்த நாள்வரை என்றது பூப்பு நிகழ்ந்த நாள் முதல் கூட்டத்திற்கு மறுக்கப்பட்ட நாளின் எல்லை என்றவாறு. அஃதாவது பூப்புப்புறப்பட்ட மூன்று நாளும் என்றவாறு. இதனைப்

"பூப்பின் புறப்பா டீரா று நாளும்
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான" (தொல். கற். சசு)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவிற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் "பூப்புப் புறப்பட்ட ஞான்றும் மற்றை நாளும் கருத்தங்கில் அது வயிற்றில் அழிதலும், மூன்று நாள் தங்கில் அது சில்வாழ்க்கைத் தாகலும் பற்றி முந்நாளும் கூட்டமின்றென்றார்" என்று வகுத்த விளக்க உரையானும் உணர்க. பெருவிறல் - பெரிய வெற்றி. நோன்பிகள் - துறவிகள். ஆசிடைக்கிளவி - வாழ்த்து மொழி.

(இதுவுமது)

சாசு - எஉ : விரி..................நின்றுழி

(பொ - ரை.) விரிந்துபடரும் பவழக்கொடிகள் போன்று விரிந்த சிவந்த கால்களையும், காழ்ப்புடைய அகிலினது புகை நிறத்தை ஒக்கும் தூவிகளையும் பலவாகிய சிறகுகளையும் உடைய புறாக்கள் அன்புகூர்ந்து ஆணும் பெண்ணுமாய் ஒருங்கு சேர்ந்து ஆராய்ந்து தம் வாயில் பற்றிக் கொணர்ந்த கிடைத்தற்கரிய இரையாகிய இனிய உணவினைத் தங்களுடைய சிவந்த வாயினை யுடைய குஞ்சுகளிருக்கும் இடத்தைச் சேர்ந்து அவற்றின் வாயில் சொரிதலாலே உயிரினங்களுக்கு மிக்க பசியால் வருகின்ற துன்பத்தையும், தாய்மை அன்பின் பெருமையையும் அவற்றின் பால் கூர்ந்துநோக்கி அதுபற்றித் தன் நெஞ்சினுள்ளே ஆராயுங் கால் என்க.

(வி - ம்.) புறாவின் விரல்களையுடைய கால்களுக்குப் பவழக் கொடி உவமை. அகிற்புகை புறாவின் தூவிக்கு உவமை.

"அங்கெ ருப்பினில் புகைதி ரண்டதொப் பல்ல தொப்புறா வதனி டைப்புறா" (கலிங்கத் - சுகூ) எனவரும் கலிங்கத்துப்பரணியும் காண்க. பரிந்து - வருந்தி எனினுமாம். அவ்வாய் - அழகிய வாய். அமிழ்தம் - உணவு. உறுபசி - மிக்கபசி. அன்பு - தாயன்பு.

(உதயணன் செயல்)

எந - ரு : வேந்தனும்..................எய்திய

(பொ - ரை.) அம்மன்னவன்றானும் அவள் சிந்தனையை வினவி அவள் விரும்புவதனைத் தானும் விரும்பி நீர் வேட்கை மிக்க மாந்தருக்குத் தண்ணீர் எப்படியோ? அப்படிப் போலக் காமவேட்கையுடைய தனக்கு இன்றியமையாத வளாகிய மூங்கில்

போலும் தோளையுடைய அவ்வாசவதத்தை நல்லாளோடு கூடிக் களித்த என்க.

(வி - ம்.) வேந்தன் : உதயணன். அவள் சிந்தனையை வினவி - அவள் வேட்கையைத் தானும் விரும்பி என்க. தாம் - தாகம். காம்பு - மூங்கில். தோளி : வாசவதத்தை.

(உதயணன் கனவு காண்டல்)

௭௬ - ௯ : துயிலிடை............என்றலின்

(பொ - ரை.) இன்றுயில் கொள்ளா நின்ற நள்ளிரவின் கண் கூரிய வேல்போன்ற கண்ணையுடைய அழகிய அணிகலனை யுடைய ஒரு பெண் அவன் கனவிலே நனவுபோல விளங்கித் தோன்றி அவனையணுகி, "வேந்தே! எங்களரசன் உனக்கு ஏழு புவியையும் செங்கோலோச்சுதற்கு அருள்புரிவன். நீ விரும்பும் பொருளும் அதுவேயாகலின் என்னொடு வருக!" என்று அழைத்தலாலே என்க.

(வி - ம்.) துளங்குபு - விளங்கி. எனவே நனவுபோல என்றுயிற்று. எம்மிறை எழுபுவி அளித்தற்கு நினக்கு அருளும் என்க. பொருளும் - நீ விரும்பும் பொருளும்.

(இதுவுமது)

௮௦ - ௯ : யார்...........புகுதலின்

(பொ - ரை.) அது கேட்ட அவ்வுதயணன் "உன் இறைவன் என்பவன் யார்? எனக்குக் கூறுக!" என்று அவளை வினவலும் அது கேட்ட அவள் உதயணனை வணங்கி அவள் இறைவன் பெயரினைக் கூறுதலாலே, அம் மன்னன் அவளைக் குறிப்பால் நோக்கித் துன்பக்காலத்தும் இன்பக்காலத்தும் தன்னைப் பிரிந்திருத்தல் ஆற்றாத கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையோடு செல்லத் தன்மனத்தே விரும்புதலால் அக் கருத்தினை உணர்ந்து கொண்ட அக் கனமகள் அதனை வாசவதத்தைக்கு அறிவித்து "முற்றிழாய்! நீயும் எழுக!" என்று இருவரையும் இரு கைகளினும் எடுத்துக்கொண்டு வான்வழியாக அப்பொழுதே பறந்து செல்லா நிற்ப, அப்பொழுது குற்றமற்ற அவ் வாசவதத்தை நல்லாள் மேலும் கீழும் விருப்பமுண்டாக நோக்கி நோக்கி மயங்கா நிற்ப, அவ்வுதயணன் இடையறவின்றிக் காணும் அக் கனவினூடே பின்னருங் காண்பவன் மிக்க நிதியையுடைய குபேரனுடைய விளக்கமுடைய அவை நடுவே நடுங்கிப் புகா நிற்றலால் என்க.

(வி - ம்.) அவன் - எம் இறை என்று கூறிய அவன். இறைஞ்சி - வணங்கி. பேர் - பெயர். பெருமகன் : உதயணன். மன் பெருந்தேவி :

வாசவதத்தை. மற்றதை - அவன் விரும்புவதை. முற்றிழை : வாசவதத்தை; விளி. இவர - செல்ல. மேவர - விரும்புதல் வர. மகளிர் : வாசவதத்தை. மம்மர் - மயக்கம். ஆனுக் கனவு - இடையறுக் கனவு. நாப்பண் - நடுவே.

(இதுவுமது)

கூ௦ - ரு : அரிமா............இருத்தலின்

(பொ - ரை.) அவள் வருகை கண்ட அம் மாநிதிக்கிழவன் தன் பாங்கர் அவ்விருவர்க்குஞ் சிங்கம் சுமந்த இருக்கையைக் காட்டா நிற்ப, உதயணன் திருமகளை ஒப்பான மெய்யினை யுடைய வாசவதத்தையோடு ஏறி வீற்றிருந்த பொழுதில் தன் அகவிதழின்கண் வெள்ளை விடையொன்று கிடந்த வெண் டாமரைப் பூவினை அக் குபேரன் வழங்க அதனை ஏற்றுக் கொள்ளுமிடத்து அதனூடே எழுதப்பட்ட கொடிஞ்சியை யுடைய தேரினது பொன்னாலியன்ற சங்கிலியின்மேல் ஒரு மகவு இருத்தல் கண்டு என்க.

(வி - ம்.) இவையெல்லாம் கனா நிகழ்ச்சிகள் என்க. அரிமா - சிங்கம். அமளி - இருக்கை. ஆகம் - உடல். அல்லி - அகவிதழ். வெள்ளேறு - வெள்ளைக் காளை. கொடிஞ்சி - ஒருவகைத் தேருறுப்பு. தொடர் - சங்கிலி.

(இதுவுமது)

கூசு - க௦உ : பின்னர்............போக

(பொ - ரை.) பின்னர் அந்த மலரின் பக்கத்தே நோக்க அங்கு உருண்ட ஒரு சக்கரத்தின் நட்ட நடுவில் மாறிமாறி நன்கு அழுத்தப்பட்ட பெரிய பொன்னிறமான ஓரகவிதழின்கண் ஒரு முடிக்கலன் பிறழ்தல் கண்டு அருமையாக அக் கனாமகள் 'ஆ' என்று வியந்து அதனைக் கைக்கொண்டு வண்டுகள் கிண்டி அலர்த்தும் நறிய மாலையையுடைய உதயணனுக்கு அதனை வழங்கி "ஐய! இங்கு நும்மைக் காலந்தாழ வைத்தேன். எழுவீராக!" என்று எழுந்து அவ்விருவரையும் நில வுலகத்திலே விடுத்துச் செல்லாநிற்ப என்க.

(வி - ம்.) ஆழி - சக்கரம். சக்கரம் பொறிக்கப்பட்ட பொன் னல்லியின்மேல் என்க. கோமகள் - அக் கனாமகள். நெடித்தனென் - காலந்தாழச் செய்தேன். நில உலகினில் விடுத்துப் போக என்க.

(இதுவுமது)

க௦ங - க௦ : கொடிக்............ஏற்று

(பொ - ரை.) கொடியையுடைய கோசம்பி நகரத்தை யணுகித் தன் சுற்றத்தார் சூழலிலே அம் முடிக்கலனின் உறுப்

பெல்லாம் முறைமையாகப் பார்த்துக் கைத்தொழிலாற் செய்த அம் முடியினது ஒளியுடைமையை நன்கு புகழ்ந்து உதயணன் "நங்காய்! இம் முடிக்கலனை நீ விரும்பி ஏற்றுக்கொள்க!" என்று கூறி அவ்விறைமகளுக்கு அதனை வழங்காநிற்ப, அவளும் அதனை விரும்பிக் கைக்கொண்டு தன் முலையின்மேல் சேர்த்தலும் அம் முடிக்கலன் சுடுகின்ற கதிர்களையுடைய ஞாயிற்றுமண்டிலம் போலே ஔரேலென அவள் மார்பினைப் பிளந்து அவள் வயிற்றினுட் புகுந்து புறப்படுதலாலே கதுமென அஞ்சி அவ் வாசவதத்தை எழாநிற்ப, இங்ஙனம் கனாக்கண்ட உதயணனும் கனவில் எழுந்த வாசவதத்தையின் எழுச்சியோடே அக் கனாக் கலைந்து தானும் துயிலுணர்ந்து என்க.

(வி - ம்.) கம்மம் - கம்மத் தொழில். கைவினையாகிய கம்மம் என்க. கம்மத்தாலுண்டாகிய கதிர்ப்பு என்க. கோமகட்கு - வாசவதத்தைக்கு. கனலி - ஞாயிறு. கதுமென, பொருக்கென இரண்டும் விரைவுக் குறிப்பு. வெரீஇ எழுந்த மாதரொடு - தான் கனவின்கண் கண்ட வாசவதத்தை அஞ்சி எழுந்த நிகழ்ச்சியோடு என்க.

(உதயணன் கனாப்பயன் அறிதல்)

கககக - உக : கழிந்த ....எல்லையுள்

(பொ - ரை.) கழிந்த இரவினில் தான் கண்ட கனவினை அவ்வுதயணன் மீட்டும் நினைவிற் கொணர்ந்து வியந்து கனா நூல் வழி முறைமையால் பயன் கூறவல்ல ஒரு முனிவர்பால் அழகிய தன் தேவியோடு சென்று அக் கனவின் பயனை வினவாநிற்ப, அத் துறவி அக் கனவினைக் கேட்டு அதன் சிறப்பினைத் தன் நெஞ்சத்துள் ஆராய்ந்து, "வேந்தே! ஒளியினால் விளங்கும் விச்சாதரர் உலகாகிய வெள்ளிமலைமீது நடுங்காத ஆணைச்சக்கரம் உலகெலாந் தோன்றும்படி ஏந்தாநின்ற நின்னால் விரும்பத்தக்க மகன் ஒருவனை அண்மையில் நீ பெறுதலும், அம்மகன் விச்சாதரருலகினை வெல்லுதலும் ஐயமில்லை," என்று ஆராய்ந்த அம் முனிவன் கூறாநிற்ப, அதுகேட்ட வேந்தன் இப்பொழுது மகப்பேறே யாம் விரும்பும் பொருளென அப் பேச்சினை விரும்பித் தேமல் படர்ந்த அல்குலினையுடைய வாசவதத்தையோடு கூடிக் குலாவி மகிழ்ந்து செல்கின்ற ஒருசில நாள்களுள் என்க.

(வி - ம்.) நூல் - கனா நூல். கோமகன் : உதயணன். ஆழி - ஆணைச் சக்கரம். வெய்யோன் - விரும்புதற்குக் காரணமான மகன். விறல் - வெற்றி. எதிர்மை - வருந்தன்மை. பொருள் - விரும்பும் பொருள். திதலை - தேமல்.

(வாசவதத்தையின் கருப்பம்)

கஉஉ - சு : பல்கதிர்..................வேட்கையொடு

(பொ - ரை.) பலவாகிய கதிர்களையுடைய திங்கட் கோளோடு பரவி வானின்கண் இயங்குகின்ற கணிகளால் வியக்கப் பட்ட பிற நல்ல கோள்கள் உயர்ந்த இடத்தை நோக்கிப் பெயர்ந்து வருகின்ற நாளிலே பெருமையில் வழுவாத நல்ல முழுத்தத்தில் மின்னல்போன்று அசைந்து விச்சாதரர் உலகின் கண் ஆணைச்சக்கர முருட்டுதற்குக் காரணமான விருப்பத் தோடே என்க.

(வி - ம்.) மதியம் - திங்கள். நற்கோள் - நற்பண்புடைய கோள் மீன்கள். உயர்ந்துழி - உயர்ந்த இடம், என்றது ஆடு முதலிய இராசி களுள் வைத்துச் சிறந்த இராசி என்றவாறு. நன்னாள் அமையம் - நல்ல விண்மீன் நிலவிய முழுத்தம்.

(இதுவுமது)

கஉஎ - கூஉ : அஞ்செந்தாமரை..................பட்டென

(பொ - ரை.) அழகிய செந்தாமரை மலரின் அகத்திலே சென்று அடைந்த வெள்ளிய பால்போலும் நிறமுடைய அன்னப் புள்போல விரும்பும் தன்மையோடு பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தையின் அழகிய வயிற்றின்கண் பிறர் கேட்டுத் தலையை நடுக்கும் வெற்றிக்குக் காரணமான விருப்பத்தோடே சேய்மை யுடைய வானத்திலே பறந்து சென்றவன் ஊழ்வினை கூட்டப் போய்ப் புகுகின்றவன் பொலிவோடு தங்கினுகை என்க.

(வி - ம்.) ஒரு தேவன் நன்னாளமையத்து மின்னென நுடங்கி வேட்கையோடு விசும்பிற் சென்றவன் மடமகள் வயிற்றகங்கண் போய்ப் புக்குப் பொலிவொடு பட்டென என இயைத்துக் கொள்க. அத் தேவ னுக்கு அன்னப் பறவையும் வாசவதத்தை வயிற்றிற்குச் செந்தாமரைப் பூவும் உவமைகள். சென்றவனுகிய குருசில் எனக் கூட்டுக. பட்டென - தங்கினுகை.

(இதுவுமது)

கஙரு - கூ : முயக்கு..................ஆற்ருள்

(பொ - ரை.) தழுவுதல் ஒழிதலில்லாத விருப்பமுறுதற்குக் காரணமான புணர்ச்சியினிடத்து அழகிய நிறமுடைய அனிச்சத் தினது கட்டவிழ்ந்து மலர்ந்த அழகிய குளிர்ந்த நறிய மலரினது குழைவுபோலே அக் கருப்பொறையைத் தாங்கும் சிவந்த தளிர் ....வருந்தும்படி வருந்தி நிலவினையொத்த வெண்பூந் துகில் நெகிழ்ந்து இடைதோன்று நிற்பக் கலாவமாகிய பல கோவையையுடைய மேகலை விரிந்து விளங்காநிற்பத் தனது

தான் என்னையோ? கூறுக" என்று வினவினள். அங்ஙனம் வின்விய நல்ல நெற்றியையுடைய அத்தேவி கேட்கும்படி உதயணமன்னன் கூறுவான் என்க.

(வி - ம்.) சேய் - தொலை. துந்துபி - தேவர்களுடைய ஒருவகை இசைக்கருவி. பலர் - விண்ணோர் பலரும். பரந்து - பரவ. மருள - வியக்க. இதனது - இக்கனவினது. நன்னுதல் : வாசவதத்தை. மன்னவன் : உதயணன்.

(கனவின் பயனை உதயணன் கூறல்)

கரு௮ - கூகூ : மறுவின்று................ஒழுக

(பொ - ரை.) "சேயிழாய்! 'நீ இப்பொழுது குற்றமின்றி விளங்காநின்ற மறப் பண்புமிக்க போராற்றலையுடைய ஒரு மகனைப் பெறுவாய்காண்! அவன் தானும் கடல்சூழ்ந்த திசைகளிடத்தும் வானத்தினும் சென்று அச்சமில்லாத ஆற்றலையுடையோரான விச்சாதரர் மன்னர்களிடையே ஆணைச் சக்கரம் உருட்டுவான்', என்று கனநூலுணர்ந்த அத்துறவியார் நமக்கு முன்பு கூறிய பொய்யாத சிறந்த பொருள் உண்மையாதற்குரிய நற்கனவினையே கண்டனை. நங்காய்! நீ தீங்ககன்று திருவோடு புணர்க!" என்று வாழ்த்தி யானை குதிரை முதலியவற்றை ஏறித் தகைத்து நிறுத்தும் தலைவனாகிய அவ்வுதயணன்றானும் முன்னர் அம்முனிவன் தமக்குக் கூறிய பொருளையே கூறுதலாலே மலர் போலுங் கண்ணையுடைய அத்தேவிதானும் அக்கனப்பயனைப் பெரிதும் விரும்பியவளாய் ஒழுகி வாராநிற்ப என்க.

(வி - ம்.) மறு - குற்றம். சேயிழை : விளி. உறுதிரை - பேரலையையுடைய கடல். பக்கம் - திசை. ஆழி - ஆணைச்சக்கரம். அறிந்தோர் என்றது முன்பு கனப்பயன் கூறிய துறவோனை. விழுப்பொருள் - சிறந்தபொருள். "தீதின்றாகித் திருவொடு புணர்க" என்பது ஒருவகை வாழ்த்து. கனக்கண்டு கூறுவோரைக் கேட்போர் வாழ்த்துதல் மரபு. மா - யானையும் குதிரையும். குருசில் : உதயணன். அதுவே - அம் முனிவன் கூறியதனையே. கண்ணி : வாசவதத்தை. புகன்றனள் - விரும்பியவளாய்.

(வாசவதத்தையின் கருப்பம் வளர்தல்)

கசுஎ - எ௮ : மங்குல்...............எய்தி

(பொ - ரை.) முகிலையுடைய வானத்தின்கண் வளர்பிறை வளர்வது போலவும், மிக்க நீரையுடைய பொய்கையின்கண் மலர் வளர்வது போலவும் நாள்தோறும் வளர்ந்து அழகெய்திக் கையும் காலும் உடம்பும் தலையும் நகமும் மயிரும் ஆகிய உறுப்புக்கள் எல்லாம் சிறிதும் குறைவின்றி அவற்றிற்கு ஓதப்பட்ட அழகோடு உயர்ந்த வகையால் முதிர்ந்து அம்மகன் நெஞ்சத்தி

னூடே அரிய வினைகளைச் செய்தற்குக் காரணமான வித்தை தங்கி இருத்தலாலே பெரிய மலையினையுடைய விச்சாதரர் உலகத்தை ஆளுதற்குக் காரணமான அவாவோடு பறத்தற்குக் காரணமான ஊக்கமும் தோன்றுதலாலே பசிய அணிகலங்களின் அழகோடு கூடிய சிவந்த அணிகலனணிந்த அத்தேவி தன் வயிற்றின்கண் உருவாகிக்கிடந்த அக்குழந்தையினது இயக்கத்தால் உண்டாகும் துன்பமே இத்துன்பம் என்று அறியாதவளாய்ப் பெரிதும் துன்பத்தை அடைந்து என்க.

(வி - ம்.) எவ்வம் - துன்பம். குழவியது எண்ணத்தால் இங்ஙனம் நிகழ்கின்றது என்று அறியாதவளாய்த் துன்பமடைந்து என்க. மங்குல் - முகில். நாளினும் நாளினும் - நாள்தோறும். நந்தி - வளர்ந்து. உகிர் - நகம். ஓதியவனப்பு - உறுப்புக்களுக்கு நூலின்கண் கூறப்பட்ட இலக்கணம். மலையுலகம் - விச்சாதரர் உலகம். ஊற்றம் - ஊக்கம்.

(வாசவதத்தைக்கு உண்டான விருப்பம்)

களகூ - அச : உணர்ந்தோர்...............பிறவும்

(பொ - ரை.) உலகப் பொருள்களை ஆராய்ந்துணர்ந்த பெரியோர் கூறும் மொழிகளின் வாயிலாய்க் கேட்கப்படும் இருவேறு வகைப்பட்ட இமயமலையும் நீர் பெருகிவரும் யாறுகளும் நீலமலையும் தீவங்களும் அப்பாலுள்ள அழகிய அருவியையுடைய அழகிய குவடுகளும் இப்பேருலகத்திற்கு ஒப்பற்ற நடுவாகி நின்று உயர்ந்த பெரிய மந்தரமும் பெரிய மலையும் இன்னோரன்ன பிறவும் என்க.

(வி - ம்.) இருவகை இமயம் - நிலஉலகத்ததாயும் வானவர் உறைவதாயும் இருவேறுவகைப்பட்ட இமயமலை என்க. யாறு - கங்கை முதலியன. பருப்பம் - பருப்பதம்; மலை. தீபம் - தீவு. சிகரி - சிகரம். நடுவாகிய குன்றம் - மேரு.

(இதுவுமது)

கஅச - கூ௩ : அருமையொடு...............ஆகி

(பொ-ரை.) காண்டற்கு அருமையுடையனவாகத் தொடர்ந்துள்ள பெரிய மலையின்மேலேறி ஆங்குத் தேவர்கள் நீராடாநின்ற நறிய மலர் நிரம்பிய பொய்கையும், அவர்கள் விளையாட்டயரும் பூம்பொழிலும், உத்தரகுருவினை ஒத்த பிற இடங்களும், பறந்து ஆங்காங்குச் சென்று காண்டற்கு விரும்புவதோடு அமையாது, ஐந்து வகைப்பட்ட சோதிடதேவர் அழகு பெறுகின்ற கற்பலோகங்களும் சென்று தொட்டு அவற்றினின்றும் கடந்துசென்று அப்பாலுள்ள அமராபதியும் அந்தரலோகமும் அவற்றின் எல்லையும் ஆங்காங்குள்ள இன்பம் நுகர்தற்குரிய மலர் வனங்களும் ஆகிய இவையிற்றையெல்லாம் கண்டு வருவதற்கு

என்மனம் விரும்புகின்றது என்று தன் விருப்பத்தைத் தானே அறிந்தவளாய் என்க.

(வி - ம்.) இறுவரை - பெரிய மலை. இமையோர் - தேவர்கள். நந்தாவனம் - நந்தனவனம். உத்தரகுரு - உயிர்கள் முன்னர்ச்செய்த நல்வினைப் பயனாகிய இன்பங்களை நுகர்ந்து கொண்டிருக்கும் ஒருவகை நிலம். ஆண்டாண்டு போந்து என்க. விழையா - விழைந்து. ஐவகைச் சோதிடர் - சோதிகர் ஐவர்; சந்திரன், சூரியன், ஏனைக்கோள்கள் அசுவனி முதலிய மீன்கள் ஏனைமீன்கள் என ஐந்து வகைப்பட்ட தேவர்கள். கைவைத்து என்பது தொட்டு என்பதுபட நின்றது. இப்பால் - அப்பால். அமராபதி - இந்திரன் நகரம். அந்தரம் - ஒருவகை மேலுலகம். இவை வாசவதத்தை தன்மனம் விரும்புவன வற்றைத் தானே ஆராய்ந்து உணர்ந்தவாறு.

(இதுவுமது)

கசுகூச - எ : மற்றுப்…………….எய்தி

(பொ - ரை.) இவ்விருப்பத்தைப் பிறர்க்குக் கூற நாணித் தன் மனத்தின்கண் அடக்கி நரம்போடு தோன்றிய இளந்தளிர் போல மாமை நிறமுடைய தன்மெய்யும் இடையும் வருந்தா நிற்பவும் முலைக்கண்கள் கறுப்பவும் முதற்சூல் அழகுபெற்று என்க.

(வி - ம்.) தன் விருப்பம் நிறைவேற்றுதற்கு இயலாதனவாய் இருத்தலால் அதனைப் பிறர்க்குக் கூறவும் நாணி மனத்திலே அடக்கினள் என்பது கருத்து. ஈர்க்கு - நரம்பு. மாக்கேழ் - மாமை நிறம். மருங்குல் - இடை. தலைக்கவின் - தலைச்சூலால் உண்டாகும் புத்தழகு.

(இதுவுமது)

கசுகூஅ - உ0ச : வளம்…………….முந்துறீஇ

(பொ - ரை.) உடம்பினின்றும் வந்து தம்பாற் சுரந்த வளவிய இளம்பால் பாறுதல் இல்லாமையின் அதனை ஏற்றற் பொருட்டு விரிந்த இடத்தை உடையனவாகிய தன் முலைச் சுமை யையே சுமத்தலாற்றாத வெறுப்பின் மேலும், மலையொன்றனைச் சுமப்பதுபோலத் தன் வயிற்றினுள் மகனையும் சுமந்து நொந்து உடல் மெலிந்ததோடல்லாமல் கருவிலிருக்கும் அம்மகன் றானும் வானத்தின்கண் இயங்கும் வேட்கையை யுடையன் ஆத லால் அவ்வேட்கை காரணமாக அம்மகவு, தான் வருந்தும்படி அசைதலாலே தானும் அசைதலை மேற்கொண்டு என்க.

(வி - ம்.) வளம் இளம்பால் என்க. எதிர்ந்த இடம் - எதிர்தற் பொருட்டு உண்டாய இடம். பாற்று அன்மையின் - பாறுதல் இல்லா மையின். அஃதாவது சிந்துதல் இல்லாமையின் என்றவாறு. முனிவின் றலையும் - வெறுப்பின்மேலும். புறம் - உடம்பு; ஆகுபெயர். அந்தரம் - வானம். கருவிலிருக்கும் மகன் வானத்தில் இயங்கும் விருப்பம் உடைய

ளுகலின் அவ்விருப்பங்காரணமாக அவன் கருப்பையுள்ளும் இயங்கு வானாக, அஃதாற்றாது தானும் உடலசைந்து வருந்தினளென்பது கருத்து. அவன் - அம்மகவு. அயங்குதல் – அசைதல்.

(இதுவுமது)

உ0ரு - க0 : முக்கூட்..................மெலியப்

(பொ - ரை.) வெற்றிலை பாக்குச் சுண்ணும்பு என்னும் இம் முப்பொருளின் கூட்டத்தால் உண்டாகும் சிவந்த ஒள்ளிய பசை தவிர்ந்து நெய் தடவியதனால் விளங்காநின்ற முத்துக்களைப் போன்று கூர்மையுடையனவாகிய நேரிய வரிசையையுடைய பற்களையுடைய தனது சிவந்த வாயைத் திறந்து ஆற்றாமையால் சில மொழிகள் மட்டுமே மொழியாநிற்பவும், அழகிதாய் உயர்ந்த அல்குலும் மெய்யும் வருந்தி மையூட்டப்பெற்ற கண்களை யுடைய அக் கோப்பெருந்தேவி நிறைமதிபோல வெளிறி மெலியாநிற்ப என்க.

(வி - ம்.) முக்கூட்டரத்தம் - வெற்றிலை முதலிய மூன்றும் கூட்டுதலால் உண்டாகும் செம்மை நிறம். தம்பலந் தின்னாமையின் பற்களில் செந்நிறம் விலகிப் போயிற்று என்பது கருத்து. நித்திலம் - முத்து. நேரியல் - ஒழுங்குபட்ட. ஆகம் - உடம்பு. கண்ணி : வாசவ தத்தை. மதிபோல வெளிறி - உடல் மெலிய என்க.

(உதயணன் வாசவதத்தையின் விருப்பத்தை வினவுதல்)

உகக - கக : பசைவுறு................கேண்மோ

(பொ - ரை.) அன்புறும் காதல்மிக்க தன் பட்டத்தேவி இங்ஙனம் வருந்துதற்குக் காரணமான வெவ்விய வயாநோயை அறிந்த அரசன் சிந்தித்து அவளை "நீ விரும்புகின்ற அரும் பொருள் யாது?" என்று வினவா நிற்ப; அதனை ஒள்ளிய தொடியினையுடைய அத்தேவி கூறாளாய், "வேந்தே! யான் விரும்புவதனை வெளியிட்டுக் கூறின் அஃது என்னை விரும்பு வோர்க்கும் நாணும் தகுதியையுடைத்தாம்" என்று கூறிச் சான்றோர்க்குரிய அமைதியோடே ஒதுங்கிப் போகாநிற்ப அது கண்ட மன்னவன் அவள் கூற்றை மறுத்து, "மடந்தாய்! மற்று ....நீ நினது உயிரை நன்கு மதித்துப் பேணாயாயின், யானும் என் உயிரை விரும்பிப் பேணுவேனல்லேன்! ஆயிழாய்! நான் கூறும் இதனைக் கேட்பாயாக," என்க.

(வி - ம்.) பசைவு - அன்பு. பட்டத்தேவி : வாசவதத்தை. அசாஅ - விரும்புகிற. உசாஅய் - சிந்தித்து. அஃது தான் விரும்பு வதனை. நாணுத் தக்கன்று - நாணத்தக்கது. உயர்ந்தோர் கொள்கை - என்றது அமைதியோடிருக்குங் கொள்கையை. அஃதாவது உற்ற நோய் நோன்றல். ஒண்டொடி: வாசவதத்தை. உகஎ ஆம் அடியை அடுத்து ஓரடி முழுதும் சிதைந்தது. அஃது அவன் தின்னுடைய

விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டு நின் உயிரைப் பேணுதல் வேண்டும் என்னும் கருத்துடையது போலும். ஆயிழை : விளி.

(இதுவுமது)

உஉ0 - எ : கூடிய....................கேட்ப

(பொ - ரை.) "முன்னொரு காலத்தே கருவுற்றிருந்த கோப்பெருந்தேவி ஒருத்தி வயா நோய் காரணமாகத் தன்னைக் கூடிய கணவனின் கொழுவிய குடரைத் தின்ன விரும்பிய நெஞ்சினை உடையளாய் இருந்தனளாம். உயர்ந்த தன் வாழ்க்கைத் துணையாகிய அத்தேவியை அழியாத பெரும் புகழ் படைத்த மன்னவனாகிய அவள் கணவன் அவள்பால் அவள் விருப்பத்தை அவள் கூறுளாகவும் குறையிரந்தும் கேட்டு அவள் விரும்பியபடியே தன் குடரைக் கொடுத்து அவள் வயா நோயைத் தீர்த்தனனும் யானும் அம்மன்னவன் போலவே நீ விரும்பும் பொருள் எத்தகையதாயினும் வழங்குவேன்காண்! நங்காய்! மேலும் இந்த இன்னலுடைய வெவ்விய வயா நோய் எத்தகையதாயினும் யான் மடியின்றி அகற்றுவேன் காண்!" என்று கடிய சூள் மொழிந்து அம்மன்னவன் வினவாநிற்றலாலே என்க.

(வி - ம்.) ஓடியஉள்ளம் - விரும்பியநெஞ்சம். மறையில் - மறைதல் இல்லாத. இன்னா - துன்பமுடைய. ஓடுங்கா உள்ளம் - மடிதலில்லாத நெஞ்சம். சூள் - சூளுறவு. காவலன் : உதயணன்.

(வாசவதத்தை தன் விருப்பத்தைக் கூறல்)

உஉஅ - நரு : ஒழுக்கினும்...............மிழற்ற

(பொ - ரை.) அதுகேட்ட வாசவதத்தை தனது வயா விருப்பத்தைக் கூறுதலாலே தனதொழுக்கத்திற்காதல் கற்பினுக் காதல் இழுக்குச் சிறிதும் இல்லை என்பதனால் தன்னைப் பெரிதும் விரும்பிய கணவனை வணங்கித் தளராத ஊக்கத்தினையுடைய, "அடிகேள்! என்னெஞ்சம் வேகமுடைய வலிய முயற்சியை யுடைய விச்சாதரரைப்போலே வானத்தே பறந்து திரிதலை மேலும் மேலும் விரும்பி என்னை வருத்துகின்றது. இசையாத அரிய பொருள் ஒன்றனை இஃது என்று கூறுவது குற்றமற்ற இவ்வுலகத்தே நகைப்பைத் தருவதொன்றாகலான் யான் இதுகாறும் இதனைச் சொல்லவில்லை" என்று மெல்லியல் புடைய அந்நங்கை மிழற்றாநிற்ப என்க.

(வி - ம்.) பசைஇய - அன்புற்ற. பைந்தொடி : வாசவதத்தை. அசையா - தளராத. அடிகள் : விளி. விசை - வேகம். மிசை - வானம். நெருங்கும் - வருத்தும். இசையா அரும்பொருள் - கிட்டாப் பொருள். இற்றென - இஃதென்று. மெல்லியல் : வாசவதத்தை.

(உதயணன் அமைச்சரோடு ஆராய்தல்)

உ௩௬ - ௪உ : எளிதெனக்...............ஒருங்கென்

(பொ - ரை.) போரின்கண் பிறக்கிடாத வீரக்கழல் கட்டிய காலையுடைய பெருந்தகையாகிய அவ்வேந்தன் வாசவதத்தை மொழிந்ததனைக் கேட்டு "ஒளியுடைய மலர்மாலை யணிந்த நங்காய்! நீ விரும்புவதனை நிறைவேற்றுதல் எனக்கு எளிய தொரு செயலேயாகுங் காண். கவலற்க! யான் அதனைச் செய்து முடித்தபின் அறிந்துகொள்க," என்று கூறி அவள்பால் நின்றும் சென்று தனக்கு வரும் துன்பங்களைத் துவர நீக்கும் தோழரோடு பொருந்தி இன்புறுதற்குக் காரணமான அக் கூட்டத்தே இனிதாக வீற்றிருந்து தனது ஆர்வத்திற்குக் காரணமான மூங்கில்போலும் தோளையுடைய அவ்வாசவதத்தை யின் வயா நோயைத் தீர்த்தற் பொருட்டுத் தன் நல்லமைச்ச ராகிய அத்தோழரோடு ஒருங்கே ஆராய்வானாயினன் என்க.

(வி - ம்.) கோதாய் : விளி. தோழர் - வயந்தகன் முதலியோர். இன்பக்கோட்டி - இன்பத்திற்குக் காரணமான கூட்டம். பேரா - பிறக் கிடாத. தோளி : வாசவதத்தை. தீரிய - தீர்த்தற்கு. வேந்தன் அமைச்சரோடு ஆராய்ந்தனன் என்க.

க. வயாக் கேட்டது முற்றிற்று

உ. இயக்கன் வந்தது

இதன்கண் : *உருமண்ணுவா வருதலும், உதயணன் அவனுக்குக் கூறுதலும், உருமண்ணுவா ஓர் இயக்கனைப் பற்றிக் கூறுதலும், உதயணன் அவனை நினைதலும், அவன் வருதலுங் கூறப்படும்.*

ஆராய் தோழரோ டரச னதன்றிறம்
ஓரா விருந்துழி யுருமண் ணுவாவும்
ஆரர ணமைத்து வாணடு நீண்மதில்
ஏரணி யுடைய விலாவா ணகமெனும்
ஊர்வயி னின்றும்வந் துதயணற் குறுகி
வணங்கின னிருந்துழி மணங்கமழ் கோதை
கருத்தினை யெல்லாம் விரித்தவற் குரைப்பப்
பொறியுடை மார்பவது புணர்க்கும் வாயில்
அறிவல் யானஃ தருளிக் கேண்மதி
வெற்றத் தானையும் வேழமு நீக்கி
உற்றோர் சிலரோ டொருநா ளிடைவிட்டு
வேட்டம் போகி வேட்டுநீர் பெறாஅ
வெம்பர லழுவத் தெம்பரு மின்மையின்
மதிமயக் கெய்திப் புதுமலர்க் காட்டுட்
டெய்வதை யுண்டெனிற் கையற லோம்புகெனப்
பாற்படு பலாசி னோக்கமை கொழுநிழற்
குரவம் பாவைக் குறுமலர் நசைஇ
அரவ வண்டினம் யாழென வார்ப்பத்
தெறுகதிர்ச் செல்வன் முறுகிய நண்பகல்
அசைந்தியாங் கிடந்தன மாக வவ்வழி
இசைந்த வெண்டுகி லேற்ற தானையன்
கைந்நுண் மீக்கோள் கச்சினோ டணவர
அந்நுண் சாந்த மெழுதிய வாகத்தன்
காசுகண் ணரிந்து கதிரொளி சுடரும்
மாசில் வனப்பினன் மறுமதித் தேய்வென
ஏக வார மிலங்கு கழுத்தினன்
நிழல்படு வனப்பி னீலத் தன்ன

குழல்படு குஞ்சியுட் கோல மாக
ஒண்செங் கழுநீர்த் தெரிய லடைச்சித்
தண்செங் கழுநீர்த் தகைமலர்த் தாரினன்
ஆயிர நிறைந்த வணிமலர்த் தாமரைச்
சேயொளி புரையுந் திகழொளிக் கண்ணினன்
களைக ணாகியோ ரிளையவன் றோன்றி
யாவிர் மற்றுநீ ரசைவுபெரி துடையீர்
ஏக லாற்றீ ரென்னுற் றீரென
....
........................போத றேற்றும்
தெய்வ மகனெனு மையுற வகல
அறிய வேண்டி நெறிமையி னாடி
முன்னுப காரத்தின் முழுப்பய னிகர்ப்பதோர்
பின்னுப காரம் பெயர்த்தல் விரும்பி
என்னருங் கருதா னிறந்த பின்னர்
....
நன்னர் நெஞ்சத்து நயம்பா ராட்டி
எம்மி னாகா விடர்கண் கூடின்
உம்மை யாமு நினைத்தன மொழுகுதும்
அன்ன மாண்பே மறிகபின் யாரென
உண்மை யுணரிய வோருங்குநாங் குறைகொள
வச்சிர வண்ணனை வழிபட் டொழுகுவேன்
நச்சு நண்பி னஞ்சுக னென்னும்
இயக்க னென்னை மயக்கற வுணர்ந்து
மறப்பின் றொழுகு நயப்போடு புணர்ந்த
நன்னட் பாளனேன் யானினி நுமக்கென
என்னட் பறிமி னென்று மென்வயின்
எள்ள லில்லா துள்ளிய காலை
ஓதியி னோக்கி யுணர்ந்தியான் வருவேன்
ஈதியன் மந்திர மென்று கூறி
என்பெயர் நினைந்தா லெவ்விடத் தாயினும்
துன்ப நீக்குவே னென்றவன் றந்த
மந்திர மறந்திலேன் மறங்கனல் வேலோய்
வல்லை யாகி யொல்லை யவனைப்

பொழுதோடு நினையென வெழுதினன் கொடுப்ப
வடிவேன் மன்னனும் படிவமோ டிருந்து
வாய்மையின் வழாஅத் தூய்மைய னாகி
நினைப்பிற் றிரியா நெறிமையி னோதி
இமைப்போன் கண்மிசை யிலங்கிய வொளியோ
டன்றவன் கண்ட யாக்கையுங் கோலமும்
இன்றிவ னுணரு மியல்பின னாகி
நயப்புறு நெஞ்சமொடு நண்புமீக் கூரி
இயக்க னவ்வழி யிழிந்தன னினிதேன்.

உரை

௨. இயக்கன் வந்தது

அஃதாவது உருமண்ணுவாவின் பழைய நண்பனாகிய ஓர் இயக்கனை அவன் நினைந்துழி அவ்வியக்கன் வந்ததனைக் கூறும் பகுதி என்றவாறு.

(உருமண்ணுவா வருதல்)

க — ௬ : ஆராய்...........இருந்துழி

(பொ - ரை.) இவ்வாறு வாசவதத்தையின் வயாநோய் தீர்த்தற்கு வழியை ஆராய்கின்ற தன் தோழர்களோடு உதயண மன்னன் அவ் வழிவகையை கருதிக்கொண்டிருந்தபொழுது உருமண்ணுவா என்னும் அமைச்சன்றானும் பகைவர் கிட்டுதற் கரிய அரண்களை அமைத்துக்கொண்டு வாட்படைகள் நடப்பட் டுள்ள நெடிய மதில்களையும் எடுத்துத் தான் அரசு வீற்றிருக்கும் மிக்க அழகுடைய இலாவாணகம் என்னும் தனது நகரத்தினின் றும் வந்து உதயணனை அணுகி வணங்கி அவனோடிருந்த பொழுது என்க.

(வி - ம்.) அதன் திறம் - வயாத் தீர்க்கும் வகையை. ஓராவிருந் துழி - கருதிக் கொண்டிருந்த பொழுது. அரண் அமைத்து மதிலெடுத் துத்தான் அரசு வீற்றிருக்கும் என்க. வாள்நடு மதில் - வாட்படைகள் நடப்பட்டிருக்கும் மதில்.

(உதயணன் உருமண்ணுவாவுக்கு உரைத்தல்)

௬ - ௭ : மணங்கமழ்..........உரைப்ப

(பொ - ரை.) உதயணமன்னன் நறுமணங்கமழும் மலர் மாலையணிந்த வாசவதத்தையினது வயாவிருப்பத்தினை யெல் லாம் அவ் வமைச்சனுக்கு விரித்துக் கூறுமிற்ப என்க.

(வி - ம்.) கோதை : வாசவதத்தை, கருத்து - ஈண்டு விருப்பம் அவற்கு : உருமண்ணுவாவுக்கு.

(உருமண்ணுவா பழைய இயக்க நண்பனைப்பற்றிக் கூறுதல்)

அ - கச : பொறியுடை.......... எய்தி

(பொ - ரை.) அது கேட்ட அவ் வமைச்சன், "சிறந்த இலக்கணவரிகள் அமைந்த மார்பினையுடையோய்! அவள் விரும்பிய பொருளை நுகர்விக்கும் வழியை யான் அறிகுவேன். அதனைக் கூறுவேன் கேட்டருள்க! முன்பு ஒருகாலத்தே யாம் ஆட்சித்தொழிலை இடையில் விட்டு ஒரு நாள் வெற்றிப் படைகளையும் யானைகளையும் அகற்றி வேட்டைக்குப் பொருந்திய ஒரு சிலரோடு காட்டகத்தே வேட்டமாடச் சென்று அக் காட்டின்கண் நீர்வேட்கை மிக்கு அதனைப் பெறுமல் வெவ்விய பருக்கைக் கற்கள் நிரம்பிய அந்நிலப் பரப்பின்கண் பருகும் நீர் எவ்விடத்தும் இல்லாமையால் அறிவு மயக்கமடைந்து" என்க.

(வி - ம்.) பொறி - சிறந்த இலக்கணமாகிய சிவந்த மூன்று கோடுகள். இதனை, "மார்பில் செம்பொறி வாங்கிய மொய்ம்பின்" எனவும் (முருகு. க0ச - ரு) "பொறிகுலாய்க் கிடந்த மார்பிற் புண்ணியன்" (சீவக. களOசு) எனவும் வருவனவற்றாலறிக. திருமகளுமாம். வெற்றத்தானை - வெற்றியையுடைய படை. உற்றோர் - வேட்டைத் தொழிலுக்குப் பொருந்தியவர். ஆட்சியின்கண் இடைவிட்டு என்க. வேட்டம் - வேட்டை. வேட்டு - விரும்பி. அழுவம் - பரப்பு. எம்பரும் - எவ்விடத்தும்.

(இதுவுமது)

கச - உ0 : புதுமலர்க்.......... ஆக

(பொ - ரை.) "அவ் விளவேனிற் பருவத்தே புதுவதாக மலர்ந்துள்ள அக் காட்டின்கண் இனி இங்கு வனதெய்வங்கள் உளவாயின் எம்முடைய இத்துன்பத்தை அகற்றுவனவாக என்று கையறவு கொண்டு பக்கத்திலிருந்த பலாச மரத்தினது அழகமைந்த கொழுவிய நிழலின்கண் குரவம் பாவையாகிய குறிய மலரின்கண் தேன் பருகுதலை விரும்பி ஒசையையுடைய வண்டுகள் யாழிசை போல முரலாநிற்ப வருத்துகின்ற வெயிலையுடைய கதிரவனுடைய வெப்பம் முதிர்ந்த நண்பகலிலே யாமெல்லாம் இளைப்புற்றுக் கிடந்தேமாக" என்க.

(வி - ம்.) புதுமலர் என்றமையால் இளவேனிற் பருவம் என்பது பெற்றாம். தெய்வதை - தெய்வம். கையறல் - துன்புறல். பால் - பக்கம். பலாசு - புரசமரம். நோக்கு - அழகு. குராமலரைப் பாவை என்றல் மரபு. நசைஇ - விரும்பி. அரவம் - ஓசை. தெறுகதிர் : வினைத்தொகை.

(இதுவுமது)

உ0 - ௩௩ : அவ்வழி..........தோன்றி

(பொ - ரை.) "அப்பொழுது தன் அழகிற்குப் பொருந்திய வெள்ளைத் துகிலாகிய ஆடையை உடுத்தியவனும் கைத்தொழிலால் நுணுகிய மேற்போர்வையும் கச்சும் அசையாநிற்ப அழகிய நுண்ணிய சந்தனத்தால் எழுதப்பட்ட மார்பையுடையவனும் குற்றத்தை நீக்கி ஞாயிறுபோன்று ஒளிசுடரும் குற்றமற்ற அழகையுடையவனும் களங்கமுடைய திங்களை அராவிவைத்தாற் போன்ற ஒற்றை முத்து வடம் திகழும் கழுத்தையுடையவனும் ஒளியுண்டாகும் அழகோடே நீலமணியையொத்த நிறத்தையுடைய சுருளுடைய தன் தலைமயிரின்கண் அழகாக ஒள்ளிய செங்கழு நீர் மலர்மாலையைச் செருகிக் குளிர்ந்த அச் செங்கழுநீர் மலரால் கட்டப்பட்ட மலர்மாலையை யணிந்தவனும் ஆயிரம் இதழ்கள் நிறைந்த அழகிய தாமரை மலரினது செவ்விய ஒளியை யொத்த விளங்குகின்ற ஒளியையுடைய கண்ணையுடையவனும் ஆகிய ஓரிளைஞன் நமக்குப் புகலிடமாகி நங்கண்முன் தோன்றி" என்க.

(வி - ம்.) மீக்கோள் - மேற்போர்வை. அணவர - அசைய. ஆகம் - மார்பு. காசு - குற்றம். வனப்பு - அழகு. மறு - களங்கம். ஏகவாரம் - ஒற்றை முத்துவடம். நிழல் - ஒளி. நீலம் - நீலமணி. குழல்படுதல் - சுருளுதல். குஞ்சி - தலைமயிர். தெரியல் - மாலை. அடைச்சி - செருகி. தகைமலர் : வினைத்தொகை. ஆயிரம் இதழ் என்க. புரையும் : உவம உருபு. களைகண் - புகலிடம்.

(இதுவுமது)

௩௪ - சக : யாவிர்..........பின்னர்

(பொ - ரை.) "வேந்தே! அவ் விளைஞன் நம்மை நோக்கி 'ஐயன்மீர்! நீவிர் யார்? நீவிரோ மிகவும் நீர் வேட்கையால் துன்புறுகின்றீர்; நடக்கமாட்டீராய் இங்குக் கிடக்கின்றீர். நீவிர்உற்ற இடர் யாது?' என்று..........போவதனை யாம் அறிந்துகொள்ள மாட்டேமாய் அவன் ஒரு தேவன் போலும் என்று நமக்குண்டான ஐயம் தீரும்பொருட்டு அவனை யாரெனத் தெரிந்து கொள்ளும் பொருட்டு முறையாக அறிந்து அவன் நமக்குச் செய்த முற்பட்ட உதவியினது முழுமையான பயனை ஒப்பதாகும் ஒரு கைம்மாறு செய்தலை யாம் விரும்பவும், அவனோ நம்பால் எதனையும் எதிர்பாராதவனாய் நம்பால் நின்றும் சிறிது தூரம் சென்றபின்னர்"..........என்க.

(வி - ம்.) யாவிர் - யார். நீரசைவு - நீர்வேட்கைத் துன்பம். ஏகல் - நடத்தல். என்னுற்றீர் - எவ்விடர் எய்தினீர். இப்பகுதியில் ௩௫ ஆம் அடியை அடுத்த ஓரடிமுழுதும் அதற்கும் அப்பாலுள்ள

அடியில் செம்பாதியும் அழிந்தொழிந்தன. அழிந்த இவற்றில் அவ் விளைஞன் அவர்களுக்கு நீர் ஊட்டி ஞெரேலெனச் செல்லத் தொடங் கினன் என்னும் பொருள் இருந்ததாக ஊகிக்கக்கூடும். இன்னும் சக ஆம் அடிக்கு அப்பால் ஓரடிமுழுதும் அழிந்தொழிந்தது. அதன்கண் அவனை யாம் பின்தொடர்ந்து தகைத்து என்னும் பொருள் இருந் திருத்தல் வேண்டும் என ஊகிக்கலாம். நெறிமை - நெறி. முன்னுப காரம் — செய்யாமற்செய்த உதவி. பின்னுபகாரம் - கைம்மாறு. விரும்ப - விரும்ப. என்னரும் - எதனையும்.

(இதுவுமது)

சஉ - சு: நன்னர்..........குறைகோன

(பொ - ரை.) பிறர்க்குதவும் நல்லறம் நிரம்பிய அவனது நெஞ்சத்தினது சிறப்பினை யாம் பெரிதும் பாராட்டி "ஐய! எங்களால் தீர்வுகாண வியலாத இடர்கள் எமக்கு வரின் அப் பொழுது அவ்விடர் தீரும் பொருட்டு உம்மை யாங்கள் நினைத்து நடப்பேம். யாங்கள் அங்ஙனம் உம்மைப் புகலிட மாகக் கொள்ளும் தன்மையுடையேம் என்பதனை அறிந்து கொள்க!" என்று பின் அவனை யாரென்று வினவி உண்மையை உணர்ந்து கொள்ளும் பொருட்டு நாமெல்லாம் அவன் வரலாற் றினைக் கூறும்படி வேண்டா நிற்ப என்க.

(வி - ம்.) நன்னர் - நன்மை. ஈண்டுப் பிறர்க்கு உதவும் அற முடைமை. அன்னமாண்பேம் - அத்தகையேம். உணரிய - உணரும் பொருட்டு.

(இதுவுமது)

சஎ - ருச: வச்சிர..........வருவேன்

(பொ - ரை.) அதுகேட்ட அவ்விளைஞன் "ஐய! யான் குபேரனை நாளும் வழிபாடுசெய்து ஒழுகும் இயல்புடையேன். யாவராலும் விரும்புதற்குக் காரணமான நட்புப் பண்பினையுடைய நஞ்சுகன் என்பது என் பெயர். யான் ஓர் இயக்கன். என்னை மயக்கமின்றி அறிந்துகொண்டு எப்பொழுதும் என்னை மறவாமே ஒழுகுவிராக! யான் இனி நுமக்கு விருப்பத்தோடு கூடிய ஒரு நல்ல நண்பன் என்று கொண்மின்! என் நட்பினை நீங்கள் இடருற்றுழி அறிந்துகொள்ளுங்கோள். நீவிர் என்றும் என் பால் இகழ்ச்சி இல்லாதிருந்து என்னை நினைத்தபொழுது யான் என்னுடைய ஓதிஞானத்தால் நோக்கி உங்கள் நினைப்பினை யறிந்து அப்பொழுதே நும்பால் வருவேன்" என்க.

(வி - ம்.) வச்சிரவண்ணன் - வைச்சிரவணன் என்னும் வட மொழிச் சிதைவு. குபேரன் என்பது பொருள். நச்சுநண்பு : வினைத் தொகை. நஞ்சுகன் - அவன் பெயர். மறப்பின்றொழுகும் - மறவாதே ஒழுகுங்கள். என் நட்பினை இடையூறுற்றுழி அறிமின் என்றவாறு. உள்ளியகாலை - நினைந்த காலத்தே. ஓதி - முக்காலமும் அறியும் ஒரு வகை அறிவு.

(இதுவுமது)

௫௫ - ௬௦ : ஈதியன்.................கொடுப்ப

(பொ - ரை.) "பெருமானே! அங்ஙனம் கூறியவன் பின்னரும் 'இம்மந்திரம் நீயிர் என்னை நினைத்தற்கியன்ற மந்திரமாகும்' என்று கூறி மேலும் 'என் பெயரை நினைந்து இம் மந்திரத்தைக் கணித்தால் நீயிர் எவ்விடத்தே கணிப்பினும் அவ்விடத்தே வந்து நீயிருற்ற துன்பத்தை நீக்குவேன்' என்றும் கூறி அவன் அப்பொழுது தந்த அம் மந்திரத்தை யான் மறந்திலேன். மறப்பண்பு கனலுகின்ற வேலினையுடையோய்! நீ நெஞ்சந் தளராது வன்மையுடையையாய் விரைந்து அந்த நஞ்சுகன் என்னும் இயக்கனைக் காலமுண்டாகவே நினைப்பாயாக!" என்று கூறி அம்மந்திரத்தை ஓலையில் எழுதிக் கொடுத்தலாலே என்க.

(வி - ம்.) இயன்மந்திரம் : வினைத்தொகை. வல்லை - வன்மையுடையை. ஒல்லை - விரைந்து. பொழுதொடு - காலமுண்டாகவே.

(உதயணன் இயக்கனை நினைந்தது)

௬௧ - ௬௪ : வடிவேன்...............கண்மிசை

(பொ - ரை.) அம்மந்திரம் பெற்ற வடித்த வேலையுடைய அவ்வுதயணமன்னனும் மனமொழி மெய்களையடக்கி நோன்போடிருந்து வாய்மையில் வழுவாத தூய்மையையுடையனாய் அவ் வியக்கனை நினைக்கும் அவ்வொரு நினைப்பினின்றும் பிறழாதவனாய் முறைமையோடே அம்மந்திரத்தை ஓதிக் கண்ணிமைத்திருக்கும் அம்மன்னன் கண்முன்னே என்க.

(வி - ம்.) வடிவேல் : வினைத்தொகை. படிவம் — நோன்பு. நெறிமை - முறைமை. மந்திரங் கணிப்போர் கண்ணிமைத்திருந்து கணித்தல் மரபு.

(இயக்கன் வந்தது)

௬௪ - ௬௮ : இலங்கிய...............இனிதென்

(பொ - ரை.) விளங்கிய ஒளியுடனே அற்றைநாள் அம் மன்னவன் கண்ட யாக்கையும் கோலமும் உடையனாய் இற்றைநாள் அவன் நன்கு உணர்ந்து கொள்ளும் தன்மை யுடையனாய் அவ்வுதயணனைப் பெரிதும் விரும்பும் நெஞ்சத்தோடு நட்புரிமையில் மிக்கு அவ்வியக்கன் அப்பொழுது வானினின்றும் இனிதாக இறங்கினன் என்க.

(வி - ம்.) இமைப்போன் கண்மிசை இழிந்தனன் என்க. உதயணன் தன்னை உணர்ந்துகொள்ளுதற் பொருட்டு அவன் முன்பு கண்ட யாக்கையும் கோலமும் உடையனாக இழிந்தனன் என்றவாறு. யாக்கை - உடம்பு. கோலம் - ஒப்பனை. மீக்கூரி - மிக்கு.

௨. இயக்கன் வந்தது முற்றிற்று.

௩. இயக்கன் போனது

இதன்கண் : இயக்கன் கூறுதலும், உதயணன் கூறுதலும், அதற்கு அவன் கூறுதலும், பிடியின் வரலாறும், பத்திராபதி யானைப்பிறப்பை விரும்பலும், அவள் குபேரன்முன் செல்லுதலும், பத்திராபதி சாபவிடை வேண்டுதலும், குபேரன் சாபவிடையும், பத்திராபதி பழைய உருப்பெற்றுக் குபேரனை யடைந்து வணங்குதலும், குபேரன் சௌதருமேந்திரனை ஏத்தலும், சௌதருமேந்திரன் சோதவனுக்குக் கட்டளை யிடுதலும், அவனை விடுத்தலும், சௌதருமேந்திரன் சோதவனை விடுத்தலும், சோதவன் பத்திரையை உதயணன் பால் விடுத்தலும், பத்திராபதியின் நன்றி யறிவும், இயக்கன் பத்திராபதியை நினைக்கும்படி கூறலும், அவன் ஒரு மந்திரத்தை செவியறிவுறுத்தலும், அவன் செல்லுதலுங் கூறப்படும்.

இயக்க னவ்வழி யிழிந்தனன் றோன்றி
மயக்கந் தீர்த்த மாசறு நண்பின்
அலகை யாகிய வரச குமரனை
உலகுப சாரத் துறைமுறை கழித்துக்
கிளையின் மன்னர் கேளிர் சூழத்
தலையகப் பட்ட காலையுந் தலையவிழ்
வண்ணக் கோதை வாசவ தத்தையொடு
பண்ணமை பிடிமிசைப் படைநரு மொழியத்
தனியே போந்தோர் கனிகவர் கானத்துக்
கூட்டிடைப் பட்ட கோட்புலி போல
வேட்டிடைப் பட்ட வெவ்வப் பொழுதினும்
அருந்திற லமைச்ச னறிவி னாடித்
திருந்திழை யல்குற் றேவியைப் பிரிப்ப
வருந்திய நெஞ்சமொடு மகத நன்னாட்
டரசிகந் தடர்த்த வாறு வெகுளித்
தருசகன் றங்கையைத் தலைப்பட் டெய்திய
துயரக் காலத்துத் தோன்னக ரெய்திய
பகைகொண் மன்னனைப் பணித்த பொழுதினும்
துயரந் தீர்க்குந் தோழனென் றென்னைப்
பெயராக் கழலோய் பேணா யாகி

ஒன்றிய செல்வமோ டுறுக ணில்லா
இன்று நினைத்த தென்னெனப் படுமென
வெஞ்சின வீரனை நெஞ்சுறக் கழறப்
பட்டவை யெல்லா....................மெங்களின்
மாறடு வேலோய் மற்றவை தீர்தலின்
எம்மிற் றீரா விடர்வரி னல்லதை
நின்னை நினைத்த னீர்மைத் தன்றெனா
ஊள்ளிய தில்லென வுள்ளங் குளிர்ப்பத்
தகுவன நாடி முகமன் கூறி
அஞ்சொன் மழலை யவந்திகை யென்னுநின்
நெஞ்சமர் தோழி நிலைமை கேண்மதி
மிசைச்செல வசாஅ விழும வெந்நோய்
தலைச்செலத் தானுந் தன்மனத் தடக்கி
ஏருக் கரும மிதுவென வெண்ணிக்
கூறுண் மறைப்ப வூறவ ளுடி
உற்றியான் வினவ விற்றென விசைத்தனள்
மற்றியாந் தீர்க்கு மதுகை யறியேம்
நயந்த நண்பி னன்னர் நோக்கி
உடையழி காலை யுதவிய கைபோல்
நடலை தீர்த்த னண்பன தியல்பென
உரத்தகை யாள் வுள்ளினே னென்னத்
திருத்தகு மார்வன் றிறவதிற் கிளப்பத்
தாரணி மார்ப காரணங் கேண்மதி
மேச்சார்க் கடந்த மீளி மொய்ம்பின்
விச்சா தரருறை யுலகம் விழையும்
திருமக ளுநின் பெருமனைக் கிழத்தி
வயிற்றகத் துறைந்த நயப்புறு புதல்வன்
அன்ன ளுகுத றிண்ணிதி ளுடி
மெய்ப்பொரு டேரியு மிடைதார் மன்னவ
பொய்ப்பொரு ணீங்கிய விப்பொருள் கேண்மதி
உள்ளிய வசாஅவஃ தொளியின்று கிளப்பின்
மஞ்சுசூழ் நெடுவரை விஞ்சத் தடவித்
திருமலர் கெழீஇய தெண்ணீர்ப் படுவின்
நருமதைப் பெயர்யாற் றேருகரை மருங்கின்
எண்ணரும் பருப்பத மென்னு மலைமிசை

ஒண்ணிதிக் கிழவ னுரிமையோ டிருந்துழிக்
கண்ணணங் குறாஉங் காரிகை நீர்மைப்
பத்திரை மேனகை திலோத்தமை யொருத்தி
பத்திரா பதியோ டுருப்பசி யரம்பைமுதற்
பாடகஞ் சுமந்த சேடுபடு சேவடி
நாடக மகளிர் நாலிரு பதின்மருட்
பல்வளைப் பணைத்தோட் பத்திரா பதியெனும்
மெல்லிய றன்னை வேந்தன் விடுக்கவப்
பணியோடு சென்று பனிமலர் போதுளிய
ஆலங் கானத் தாற்றயன் மருங்கின்
இணருந் தளிரு மிருஞ்சினைப் போதும்
பிணர்படு தடக்கையிற் பிறவு மேந்தி
ஒண்ணுத லிரும்பிடி யொன்றே போலக்
கண்ணயற் கடாஅத்துக் களிவண் டோப்ப
மாறுதனக் கின்றி மறமீக் கூரி
ஆறுதனக் கரணு வணிநல நுகர்ந்து
மருப்பிடைத் தாழ்ந்த பருப்புடைத் தடக்கை
செருக்குடை மடப்பிடி சிறுபுறத் தசைஇ
நறுமலர் நாகத் தூழ்முதிர் வல்லிப்
பொறிமலர் கும்பம் புதைய வுதிர
அஞ்சாப் பைங்கணேர் வெஞ்சின வேழம்
எழுவகை மகளி ரின்ப மெய்தி
அகமகிழ்ந் தாடு மண்ணல் போல
நின்ற வின்ப நேயங் காணு
விழுநிதிக் கிழவன் விழையுங் காதலின்
நாடக மகளிர் நலத்தோடு புணர்ந்த
பாடகச் சீறடிப் பத்தி ராபதி
தான மகளிரோடு தண்புனல் யாற்றயற்
கானத் தாடிக் கடவா நின்றேள்
ஊழலர்ச் சோலையூ டுவந்துவிளை யாடும்
வேழப் பிறவும் விழைதக் கதுவென
உள்ளம் பிறழ்ந்ததை யுள்ளகத் தடக்கி
வள்ளிதழ் நறுந்தார் வச்சிர வண்ணன்
அடிநிழல் குறுகிய காலை மற்றென்
மனத்ததை யியைகென நினைத்தனள் செல்லா

....
பிடியெழி னயந்து பெயர்ந்தன ளிவளென
ஒன்றிய வுறுநோ யோதியி னேக்கிச்
செயிர்த்த வுள்ளமொடு தெய்வ வின்பம்
பொறுத்தல் செல்லாது வெறுத்தனை போன்மென
வேழ நினைஇ வேட்கை மீதூர்ந்
தூழ்வினை வகையி னுடம்பிட் டேகி
நன்றியில் விலங்கின் பிறவி நயந்துநீ
கானஞ் செய்தது காரண மாக
மலைக்கணத் தன்ன மாசில் யானையுள்
இலக்கண மமைந்ததோ ரிளம்பிடியாகிப்
பிறந்த பின்றைச் சிறந்துநீ நயந்த
வேக யானையொடு விழைந்துவிளை யாடிப்
போக நுகர்கெனப் போற்று ளுகிச்
சாவ மற்றவ னிடுதலுஞ் சார்ந்து
தேவ வாய்மொழி திரியா தாகலின்
நீடுபெற லரிதா நெடுங்கை விலங்கின்
வீடுபெறல் யாதென விளங்கிழை வினவ
அண்ண னற்று ளவந்தியர் கோமான்
பண்ணமை வாரியுட் பண்ணுப் பிடியாப்
பற்றப் படுதி பட்ட பின்னுள்
அலகை யாகிய வைம்பெருங் குலத்துக்
கோலைகெழு செவ்வேற் குருகுலக் குருசில்
உலகம் புகழு முதயண குமரனைப்
பிறைமருப் பியானைப் பிரச்சோ தனன்றமர்
சிறைகொளப் பட்டுச் செல்லா நின்றுழி
மண்ணமை நெடுந்தோண் மறமாச் சேனற்குப்
பண்ணமை பிடியாய் நீயு மவற்றுள்
யானை வித்தகர் தானத்தின் வடிப்ப
நடையொடு நவின்ற காலை யவ்வழிப்
படையுடை வேந்தன் பனிநீர் விழவினுட்
குடைகெழு வேந்தன் குருகுலக் குருசில்
ஒண்ணறுந் தெரிய லுதயண னேறப்
பண்ணிச் செல்க பத்திரா பதியென

வீர வேந்தன் விளங்கிழைக் குறுமகள்
வார்வளைப் பணைத்தோள் வாசவ தத்தையை
ஆர்வ வுள்ளத் தவனுட னேற்றி
ஊரப் படுநீ யோரிரு ளேல்லையுள்
உலப்பரு நீளதர் தலைச்சேல வோடிக்
கால கூட மென்னும் வெங்நோய்
சாலவும் பெருக மேன்மே னெருங்கி
விலக்குவரை நில்லாது வெம்பசி நலிய
வீழ்ந்த காலை மேயவ னத்தலை
ஆய்ந்த வுள்ளமோடு சேர்ந்தன ளாகி
அஞ்சா தைம்பத நினைமதி நீயென
எஞ்சா தவணீ யியல்பினிற் றிரியாது
சிந்தையோடு முடிந்தது காரண மாக
ஊனமை விலங்கி னுடம்பவ ணொழிய
ஈனமில் யாக்கையோ டிவ்வழி வந்துநின்
முன்னைப் பேரோடு பெண்ணுரு வெய்தி
இத்துணை வாழ்தியென் றுரைக்கப் பட்ட
அன்ன தன்மையோ டிறந்த வாயிழை
மன்னருண் மன்ன நின்னரு ணிகர்க்கும்
மாற்றுப கார மனத்தி னெண்ணி
நிச்ச நிரப்பி னிலமிசை யுறைநர்க்
கேச்சம் பெறுத லின்ப மாதலின்
மற்றது முடிக்கு முயற்சியோ டுற்றதன்
வளநிதிக் கிழவனை வாழ்த்துவனள் வணங்கி
அளவி லின்பத் தாடலிற் பணிந்து
பெருவரம் பாகிய பொருவில் செல்வவோர்
சிறுவரம் வேண்டுவென் றிரியா தீமேன
நிவந்த வன்பி னுவந்தது கூறெனக்
கவிழ்ந்த சென்னியள் கைவிரல் கூப்பி
வன்க ணுள்ளத்து மன்னர்க் கோவ்வா
அங்கவ னுள்ளமோ டருண்முந் துறீஇ
என்குறை முடித்தே னினியேன் றூது
துன்புறு கிளவியிற் றேன்னல மழுங்கத்
திருமலர் நெடுங்கண் டெண்பனி யுறைத்தந்

தருமணி யாகத் தகல நனைப்ப
எவ்வ வுள்ளமோ டிரத்த லாற்றுன்
தைவந் தளித்துத் தக்கது செய்தோய்
படர்கூ ரியாக்கையுட் பற்று விட்டகன்
றிடர்தீர்ந் தினியை யாகவென் குறையெனக்
கடவது கழித்த காவலன் றனக்கோர்
மறுவில் சிறப்பினோர் மகனை வேண்டுவேன்
பெறுதற் கொத்த பிழைப்பில ளாயினும்
அறாஅ வருநிதிக் கிழவ னதனை
மறாஅ தருளென மடமொழி யுரைப்பப்
பெரிதவ னுணர்ந்து பெற்றனை நீயெனச்
சொரிதரு விசும்பிற் சோதமற் குறுகிப்
பாத்தில் பெருமைப் பரதன் முதலாச்
செய்த்தின் வந்தநின் குலமுஞ் செப்பமும்
வைத்த காட்சியும் வல்லிதிற் கூறிச்
சிதைவில் செந்நெறி சேர்ந்துபின் றிரியா
உதையண குமரற் குவகையிற் றோன்றுமோர்
சிறுவன் வேண்டுமது சிறந்ததென் றேத்தப்
பின்னை மற்றவன் மன்னிய வேட்கையொடு
விச்சை யெய்தி வெள்ளியம் பெருமலை
அச்சமி லாழிகொண் டரசுவீற் றிருத்தற்கு
நச்சி நோற்றவோர் கச்சமில் கடுந்தவச்
சோதவ னென்னு மிருடி யுலகத்துத்
தேவ யாக்கையொடு போக மெய்திய
நிதான வகையி னினைத்தினி திருந்தனன்
நாவலந் தண்பொழி லலத்தொடு தோன்றிப்
பாவ நீக்கிய பரதன் பிறந்த
ஆய்பெருந் தொல்குடித் தோன்றி யிப்பால்
மாசில் விஞ்சையர் மலையகந் தழீஇ
ஆழி யுருட்டி யென்வயின் வரூஉம்
ஊழி யிதுவென வுணரக் கூறி
ஆய வெள்ளத் தவனை யழைத்தே
குறையா விருந்தவக் கிழவனை நோக்கி
மன்னிய வத்தவன் றேவி வயிற்றுள்
துன்னினை படுநா ளின்ன தாதலின்

....
....................னூலவ னுரைப்ப
மேலையம் பாற்கடல் வெள்ளேறு கிடந்த
வாலிதழ் நறுமலர் வைகறை யாமத்துக்
கனவின் மற்றவன் கையிற் கொடுத்து
வினையி னெதிர்பொருள் விளங்கக் காட்டென
இந்திரன் விடுத்த காலை வந்தவன்
பைந்தளிர்க் கோதைப் பத்திரைக் களிப்ப
ஒள்ளரி மழைக்கட் டேவியை யுள்ளிநீ
பள்ளி கொண்டுழிப் பரிவுகை யகல
வெள்ளிய நறும்பூத் தந்தனள் விளங்கிழை
ஆர்வ வுள்ள முடையோர் கேண்மை
தீர்வதன் றம்ம தேர்ந்துணர் வோர்க்கே
ஆயினு மக்குறை முடித்த லாற்றுவேன்
தானவட் டந்தன டளிரிய லாதலின்
இதுவு நன்னயஞ் சிறிதென வதனைத்
தான்வெளிப் படாஅ ளின்னு நுனக்கோர்
வான்வெளிப் படூஉம் வாரி விழுப்பொருள்
தருதல் வேட்கை யொருதலை யுடையள்
ஆனுக் கடுந்திற லண்ண லதனால்
மேனாட் கிழமை விண்ணவர் மகளை
மனத்தி னுள்ளி மந்திரங் கூறி
நினைத்த பொழுதின் நின்முனர்த் தோன்றும்
தோன்றிய பின்னர்த் தோன்றலைத் தந்த
மகனது வரவு முறைமையி னுணர்த்துநீ
அகனமர்ந் துரைத்த வயாஅ வரும்பொருள்
இற்றென வுரைத்தவு முற்றிழை தீர்க்கும்
மற்றிது முடியா தாயின் மறித்தும்
வருவல் யானென வொருபதங் கொடுத்துக்
குறிகொண் மாற்றங் கொள்ளக் கூறிச்
சென்றியான் வருவல் செம்மல் போற்றெனக்
குன்றா நன்மொழி யொன்றல பயிற்றிக்
கடிகமழ் மார்ப கவல லென்று
தொடியுடைத் தடக்கையிற் றோழனைப் புல்லிப்

பசும்போற் பல்கலம் பல்வூ ழிமைப்ப
விசும்பின் மின்னென மறைந்தனன் விரைந்தென்.

உரை

௧. இயக்கன் போனது

அஃதாவது—நஞ்சுகன் உதயணனுக்கு வாசவதத்தையின் மயா நோய் தீர்க்க வழிகூறிச் சென்ற செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் இயக்கனை உபசரித்தல்)

க — ச: இயக்கன்..............கழித்து

(பொ - ரை.) இவ்வாறு உதயணன் தன்னை நினைந்துழி வானினின்றும் இறங்கித் தன் மயக்கத்தைத் தீர்த்த குற்றமற்ற நண்பினையுடைய அந்நஞ்சுகனை வரவேற்று உலகத்தவர் செய்யும் உபசார வகைகளை முறையே செய்து அளவளாவி இருந்த பின்னர், உலகத்தின்கண் கோலோச்சும் மன்னருள் வைத்துத் தலைசிறந்த அரசனாகிய உதயணனை அந்நஞ்சுகன் நோக்கி என்க.

(வி - ம்.) தோன்றி - தோன்ற. மயக்கந் தீர்த்த மாசறு நண்பின் இயக்கனை உலகுபசாரத்துறை முறை கழித்து எனவும் அவ் வியக்கன் அலகையாகிய அரசகுமரனை நோக்கி எனவும் இப்பகுதியை ஏற்ற பெற்றி கொண்டு கூட்டியும் சில சொற் பெய்தும் பொருளுரைத்துக் கொள்க. மயக்கம் தீர்த்த மாசறு நண்பு என்றது பண்டு உதயணன் வேட்டையாடச் சென்று நீர்வேட்டு மயக்கமுற்றுக் கிடந்ததனை இந் நஞ்சுகன் தீர்த்தமையைக் கருதிக் கூறியவாறு மாசறு நண்பு என்றார். உறுவது சீர்தூக்கா நண்பாகலின் அலகை எடுத்துக் காட்டு.

(இயக்கன் கூற்று)

௫ - கக: கிளையின்..............பொழுதினும்

(பொ - ரை.) "நண்பனே! நீ நின் பகைமன்னனாகிய பிரச்சோதனனுடைய உறவினர் நின்னைக் காட்டின்கண் சூழா நிற்ப நீ அவர்பால் சிறையாக அகப்பட்ட காலத்திலாதல், அல்லது கட்டவிழ்ந்து மலர்ந்த வண்ணமிக்க மலர் மாலையை பணிந்த வாசவதத்தையோடு ஒப்பனை செய்யப்பட்ட ஒரு பிடி யானையின்மேல் ஏறிக்கொண்டு பின்படை மறவரும் இன்றித் தனியாக வந்து வழியின்கண் கனிகள் கவர்ந்துண்ணும் ஒரு காட்டிடத்தே கூட்டின்கண் அகப்பட்ட கொலைத்தொழிலையுடையதொரு புலிபோல வேடர் கையிலே அகப்பட்டுக்கொண்ட துன்பமிக்க அந்தக் காலத்திலாதல்" என்க.

(வி - ம்.) கிளையில் மன்னர் — பகைமன்னர். ஈண்டு மன்னர் என்றது பிரச்சோதனனை. உதயணன் மாமன் ஆதல் கருதி உயர்த்து மன்னர் என்றான். கேளிர் என்றது சாலங்காயன் முதலியோரை. தளை - இரண்டனுள் முன்னது சிறை; பின்னது கட்டு. பிடி - பத்திராபதி. கோட்புலி - கொலைத்தொழிலையுடைய புலி. வேட்டிடை - வேட்டிடத்து. எவ்வப்பொழுது - துன்பக்காலத்து.

(இதுவுமது)

௧௨ - அ: அருந்திறல்................பொழுதினும்

(பொ - ரை.) "அல்லது பெறற்கரிய ஆற்றலுடைய அமைச்சனாகிய யூகி தன் அறிவினால் ஆராய்ந்து திருந்திய அணிகலனணிந்த அல்குலையுடைய கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையை நின்னிடத்திருந்தும் பிரித்துவிட்டமையாலே நீ வருந்திய நெஞ்சத்தோடு சென்று மகதம் என்னும் நல்ல நாட்டின்கண் பகையரசர்களை வென்று கடந்த தணியாத வெகுளியையுடைய தருசக மன்னனுடைய தங்கையாகிய பதுமாபதியைக் கண்டு கூடிய துயரக்காலத்திலாதல், அல்லது நினது பழைய தலைநகரமாகிய கோசம்பி நகரத்தை மீண்டும் கைப்பற்றுதற் பொருட்டு நின்பாற் பகைகொண்ட ஆருணி மன்னனை வென்ற காலத்திலாதல் என்க.

(வி - ம்.) அமைச்சன் - யூகி. தேவி - வாசவதத்தை. அரசு - பகையரசர். தருசகன் தங்கை - பதுமாபதி. தொன்னகர் - கோசம்பி. பகைகொள் மன்னன் : ஆருணி. துயரக் காலத்தும் என உம்மை விரித்தோதுக.

(இதுவுமது)

௧௯ - ௨௩ : துயரம்................கழற

(பொ - ரை.) "துன்பம் வந்தவிடத்து உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே அவ்விடுக்கணைத் தீர்க்கும் நண்பன் என்று என்னை நீ கருதி நினைந்தாயில்லை. பிறக்கடியிடாத கால்களையுடையோய்! பொருந்திய செல்வத்தோடே துன்பமொன்றும் இல்லாத இற்றை நாள் நீ என்னை நினைத்ததற்குக் காரணம் என்னையோ என்று வெவ்விய வெகுளியையுடைய வீரனாகிய அவ்வுதயணனை அந்நஞ்சுகன் நெஞ்சிற் படும்படி வினவாநிற்ப" என்க.

(வி - ம்.) பேராக்கழல் - பிறக்கடியிடாத கால்கள். பேணுயாகி என்றது நினையாய் ஆகி என்றவாறு. உறுகண் — துன்பம். இடித்துரைத்தலாலே வினவ என்னுமொழியாது நெஞ்சுறக்கழற என்றார்.

(உதயணன் கூற்று)

உ௪ - ௯ : பட்டவை............கூறி

(பொ - ரை.) அதுகேட்ட உதயணமன்னன் அங்நஞ்சுக னுக்கு முகமன் மொழிபல கூறி "அன்பனே! நின்னால் இங்குக் காட்டப்பட்ட இடர்களெல்லாம் யாங்களே தீர்த்துக் கொள்ளும் இடர்களே யாம் எம்மால் தீர்க்கவியலாத இடர் வந்தால் உன்னை நினைப்பதல்லது இத்தகைய எளிய இடர்க்கெல்லாம் உன்னை யாங்கள் நினைப்பது நின்பெருந்தன்மைக்கு ஒவ்வாது என்று கருதியே யாங்கள் அவ்வல்லற் காலத்திலெல்லாம் உன்னை நினை யாது விட்டேம்" என்று அவன் இயல்புக்குத் தகும் மொழிகளை ஆராய்ந்து கூறிப் பின்பு என்க.

(வி - ம்) பட்டவை - நிகழ்ந்த நிகழ்ச்சிகள். மாறு - பகைவர். அல்லதை : ஐகாரம் சாரியை.

(இதுவுமது)

௯௦ - ௯ : அஞ்சொல்..........இசைத்தனன்

(பொ - ரை.) அம்மன்னவன் அவ்வியக்கனை நோக்கி, "நண்பனே! அழகிய மழலை மொழியினையுடைய அவந்திகை என்று கூறப்படும் உன்னுடைய நெஞ்சின்கண் விரும்புதற்குக் காரணமான தோழமையுடைய வாசவதத்தையின் இற்றைய நிலை மையைக் கூறுவேன் கேட்பாயாக. அவட்கு வானத்தே செல்லு தற்கு விரும்புகின்ற துன்பத்தையுடைய வயாநோய் மிக்குப் பெருகாநிற்றலால் அதனையுணர்ந்த அவள் தானும் இது நிறை வேறாத காரியம் என்று கருதி வெளிப்படக் கூறாளாய்த் தன் நெஞ்சத்திலேயே அடக்கி மறையாநிற்ப. அத்துன்பம் மெய்ப் பாடாகத் தோன்றுதலாலே அவ்விடத்தே யான் சென்று ஆராய்ந்து நின் மெலிவிற்குக் காரணம் யாது? என்று வினவு தலாலே அவள் அக்காரணம் இஃதென்று விளக்கமாகக் கூறினாள்" என்க.

(வி - ம்.) அவந்திகை - அவந்தி நாட்டிற் பிறந்தவள். இது வாசவதத்தைக்கு இடத்தால் வருபெயர். நட்புரிமையை மிகுப்பான் என் காதலி என்னுமல் நின் நெஞ்சமர் தோழி என்றான். இங்ஙனம் கூறுதல் அன்புரிமையாம். இதனையும் இராமன் குகனுக்குத் தன் மனைவியையும் தம்பியையும் அறிமுகப்படுத்துபவன்,

" அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலு னிளையானின்
நன்னுத லவனின்கே ணளிர்கட னிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் தொழிலுரிமையி னுள்ளேன்"

(கம்ப - கங்கைப் - ௬௮)

என்று கூறும் இவ் வன்புரிமை மொழிகளையும் ஒப்பிட்டுக் காண்க. கேண்மதி, மதி : முன்னிலையசை. அசாஅ - விரும்புகின்ற. விழுமம் — துன்பம். நோய் - ஈண்டு வயாநோய். தலைச்செல்லுதல் - மிகுதல். ஏருக்கருமம் - நிறைவேருத காரியம். ஊறு - துன்பம். இற்று - இன்னது.

(இதுவுமது)

௩௭ - ௪௨ : மற்று...........கிளப்ப

(பொ - ரை.) "அன்பனே! வெவ்விய அவ் வயாநோயைத் தீர்க்கும் வலியும் இல்லேம்; வழியும் அறிகின்றிலேம். தான் விரும்பிய நண்பினது நலத்தை நோக்கி ஒருவனுடைய ஆடை அவிழும்பொழுது அவ்வாடையை மீண்டும் விரைந்து உடுத்து கின்ற அவனது கையைப்போல நண்பனது வருத்தம் கண்டுழி அவன் வருத்தத்தை விரைந்து தீர்த்தல் அவனுடைய நண்பனின் கடமையாம். ஆகவே அறிவாற்றலும் மெய்யாற்றலுமுடைய நண்பனே! அவள் நோய் தீர்த்தற் பொருட்டு யான் இப்பொழுது நின்னை நினைத்தேன்காண்" என்று செல்வத்தால் தகுதி பெற்ற மார்பினையுடைய அவ்வுதயண மன்னன் நன்ருக எடுத்துக் கூரு நிற்ப என்க.

(வி - ம்.) மதுகை - வலிமை. வலியுமிலேன்; வழியுமறியேம். என விரித்தோதுக. உடையழிகாலை யுதவிய கைபோல் நடலை தீர்த்தல் நண்பனதியல்பு என்னும் இத்தொடரின்கண்,

"உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள். ௭௮௮)

எனவரும் திருக்குறளையும் காண்க. நடலை - துன்பம். உரத்தகையாள என்றது நஞ்சுகனை விளித்தபடியாம். திருத்தகு மார்வன் : உதயணன். திறவதின் - நன்ருக. கிளப்ப - கூற.

(நஞ்சுகன் கூற்று)

௪௩ - ௫௪ : தாரணி...........கிளப்பின்

(பொ - ரை.) அவ்வேண்டுகோளைக் கேட்ட அந்நஞ்சுகன் உதயணனை நோக்கிக் கூறுபவன், "வெற்றிமாலையணிந்த மார்பனே! அங்ஙனம் நின்தேவி ஏருக்கருமம் விரும்புதற்குக் காரணமும் உண்டு. அதனை யான் கூறுவேன் கேள். நின்னுடைய பெரிய மனைக்கிழத்தியாகிய வாசவதத்தை நல்லாளின் வயிற்றின் கண் உருவாகி உறைகின்ற விரும்புதற்குக் காரணமான மகன், பகைவரை வென்று கடந்த மீளிமையையுடைய ஆற்றலுடையவன் ஆவான். மேலும் விச்சாதரர் வாழுகின்ற உலகத்தினையும் ஆள்வதற்கு விரும்புமொரு கருவிலே திருவுடைய நன்மகன் ஆவான். அவன் அத்தகையன் ஆதலைத் திட்பமாக ஆராய்ந்து

அதன் உட்பொருளை உணரா நின்ற நெருங்கிய மலர்மாலை யணிந்த மன்னவனே! இன்னும் பொய்யற்ற மெய்யேயாகிய இனி யான் கூறும் இந்தப் பொருளையும் கேட்பாயாக! அப் பெருமாட்டி விரும்புகின்ற அவ்விருப்பத்தை மறையாமல் கூறுமிடத்து" என்க.

(வி - ம்.) தார் - மாலை. மதி : முன்னிலையசை. மெச்சார் - பகைவர். மீளி - போரின்கண்மீளாத பெருந்தகைமை. மொய்ம்பு - வலி. திருமகளும் - கருவிலே திருவுடைய மகளும். மிடைதார் : வினைத் தொகை. ஒளியின்று - ஒளியாமல். இன்றி என்னும் வினையெச்சம் இன்று எனக் குற்றுகரமாயிற்றுச் செய்யுளாகலின். கிளப்பின்-கூறின். கூறின் : இங்ஙனம் கூறுதல் வேண்டும் என்பது கருத்து. அது மேற் கூறுவான்.

(பிடியின் பழைய வரலாறு)

௫உ - ௬ ; மஞ்சு............இருந்துழி

(பொ - ரை.) "வேந்தே! முகில் சூழ்ந்த நெடிய மலைகளை யுடைய விந்தமலைப் பக்கத்துள்ள காட்டின்கண் அழகிய மலர்கள் பொருந்திய தெளிந்த நீரையுடைய மடுக்களையுடைய 'நருமதை' என்னும் பெயரையுடைய யாற்றினது ஒரு கரையின்கண் அமைந்த நினைத்தற்குமரிய 'பருப்பதம்' என்னும் மலையின்மேல் ஒள்ளிய நிதிக்கிழவனாகிய குபேரன் தன் தேவிமார் முதலிய மகளிரோடு தங்கியிருந்தபொழுது" என்க.

(வி - ம்.) மஞ்சு - முகில். வீஞ்சம் - விந்தமலை. அடவி - காடு. படு - மடு. பருப்பதம் - ஒரு மலை. நிதிக்கிழவன் - குபேரன். உரிமை - தேவி முதலிய மகளிர்.

(இதுவுமது)

௫எ - ௬௩ ; கண்............விடுக்க

(பொ - ரை.) காண்போர்கண் பின்னுங் காண்டற்கு விரும்பி வருந்துதற்குக் காரணமான பேரழகு படைத்த தன்மை யுடைய பத்திரையும் மேனகையும் திலோத்தமையும் ஒப்பற்ற வளாகிய பத்திராபதியும் உருப்பசியும் அரம்பையுமுள்ளிட்ட பாடகம் என்னும் அணிகலனைச் சுமந்த அழகிய சிவந்த அடிகளை யுடைய வானகத்து விறலியர் எண்பதின்மர் மகளிருள் வைத்துப் பலவாகிய வளையல்களணிந்த மூங்கில் போலும் தோளையுடைய பத்திராபதி என்னும் மெல்லியல்புடைய அங்கங்கையைக் குபேரன் ஏவாநிற்றலாலே என்க.

(வி - ம்.) அணங்குறூஉம் - வருத்தும். காரிகை நீர்மை - அழகுத் தன்மை. பத்திரை முதலியோர் குபேரனுடைய நாடக மகளிர் என்க. வேந்தன் : குபேரன்.

(இதுவுமது)

௬௩ - ௯ ; அப்பணி............ஒப்ப

(பொ - ரை.) பத்திராபதி அக்குபேரன் ஏவலை மேற்கொண்டு சென்று குளிர்ந்த மலர் நிரம்பிய ஆலங்கானத்து ஆற்றின் பக்கத்திலே ஒள்ளிய நெற்றியையுடைய கரிய பிடியானைகள் பல ஒன்றுபோலவே பூங்கொத்தும் தளிரும் பெரிய கிளையோடு கூடிய மலர்களும் பிறவும் ஆகிய இவற்றைச் செதும்புடைய தமது கையின்கண் ஏந்திக்கொண்டு அச்சமில்லாத பசிய கண்ணையும் வெவ்விய வெகுளியையுமுடைய ஒரு களிற்றியானையினது கண்ணின் பக்கத்தே வழிகின்ற மதநீரின்மேல் மொய்க்கின்ற களிப்புடைய வண்டுகளை ஓச்சாநிற்ப என்க.

(வி - ம்.) பணி - கட்டளை. பொதுளிய - நிரம்பிய. இணர் - பூங்கொத்து. பிணர் - செதும்பு. கடாஅம் - மதம். ஓப்ப - ஓச்ச.

(இதுவுமது)

௭௦ - ௯ : மாறு.........காணு

(பொ - ரை.) தனக்குப் பகையாய களிற்றியானை ஒன்றும் இன்றித் தனித்து மறப்பண்பில் மிக்கு வழியே தனக்குப் பாதுகாவலாகக் கொண்டு அப்பிடியானைகளின் அழகின்பத்தை நோக்கா னுகர்ந்து அப் பிடியானைகளுள் வைத்துத் தன் மருப்புக்களின் இடையே தூங்குகின்ற பரிய வளைந்த கையினை எடுத்து மதச் செருக்கினையும் இளமையினையு முடைய ஒரு பிடியானையினது சிறிய பிடரின்கண் வைத்துக்கொண்டு நறிய மலரினையுடைய நாக மரத்தின்கண் ஊழ்த்து முதிர்ச்சியை யெய்திய அகவிதழையும் புள்ளிகளையும் உடைய மலர்கள் தனது மத்தகம் மறையும்படி உதிராநிற்பப் பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக வமைந்த ஏழுவகைப் பருவமுடைய மகளிரோடே இன்ப முற்று மனமகிழ்ந்து விளையாட்டயரும் ஓரரசனைப் போல இன்ப நுகர்ந்து நின்ற அவ் வின்ப வன்பினைக் கண்டு என்க.

(வி - ம்.) பத்திராபதி செல்லும் வழியில் ஓரிடத்தே பல பிடிகளிடையே நின்ற ஒரு களிற்றியானை ஓரிளம் பிடியைப் புணர்ந்து நின்றதனை அவள் கண்டாள் என்றவாறு. மாறு - பகை. மீக்கூரி - மிக்கு. ஆறு - வழி. அணிநலம் - அழகின்பம். அசைஇ - வைத்து. ஊழ் மலர் அல்லி மலர் பொறி மலர் எனத் தனித்தனி கூட்டுக. ஊழ் மலர் - ஊமத்த மலர். முதிர்வு அல்லி எனக் கண்ணழித்துக் கொள்க. முதிர்வு - முதிர்தலையுடைய மலர் என்க. அல்லி - அகவிதழ். பொறி - புள்ளி. நாகத்துமலர் என்க. நாகம் - சுரபுன்னை. வேறுவகை மரமுமாம். கும்பம் - மத்தகம். எழுவகை மகளிர் - பேதை முதலாகப் பேரிளம் பெண் ஈறாக ஏழுபருவங்களையுடைய மகளிர். அண்ணல் - ஈண்டு அரசன். பிடியோடு ஆடும் களிற்றியானைக்கு மகளிரோடாடும்

அரசன் உவமை. இன்ப நேயம் - இன்பத்திற்குக் காரணமான காதலன்பு. காணு - கண்டு.

(பத்திராபதி யானைப் பிறப்பை விரும்பல்)

அ௦ - எ : விழுநிதி..........அடக்கி

(பொ - ரை.) சிறந்த நிதிக் கிழவனாகிய குபேரனும் விரும்புதற்குக் காரணமான காதலையுடைய நாடக மகளிர்க்குரிய அழகோடுகூடிய பாடக மணிந்த சிற்றடிகளையுடைய அப்பத்திராபதி நங்கை தானும் ஊழ்த்து மலருகின்ற சோலையினுள்ளே ஆணும் பெண்ணுமாய்க் கூடி மகிழ்ந்து விளையாடாநின்ற யானைப் பிறப்பும் விரும்பத்தக்கதே யாகும்! என்று எண்ணி அப் பிறப்பினை அவாவித் தன் மனம் பிறழ்ந்ததனைப் பிறர் அறியாதபடி தன்னுள்ளேயே அடக்கிக் கொண்டவளாய் வித்தியாதரமகளிராகிய தன் தோழிமாரோடு தண்ணிய நீரையுடைய யாற்றையுடைய அவ் வாலங்கானத்தில் ஆடிச் செல்பவள் என்க.

(வி - ம்.) விழுநிதிக் கிழவன் - சிறந்த பொருளுக்கு உரிமை பூண்ட குபேரன். நாடக மகளிர் நலம் என்றது ஆடலும் பாடலும் அழகும் ஆகிய இம் மூவகைச் சிறப்புமாம் என்க. பாடகம்-ஒரு காலணி. தானமகளிர் — விச்சாதரர் மகளிர். ஊழ்த்து அலரும் சோலை என்க. பிறவு - பிறப்பு.

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்,
பிறவாழி நீந்த லரிது" (குறள் - அ).

என்புழியும், "பிறவாழிக் கரைகண்டாரே" (வில்லி - பாரதம் கிருட்டிணன் தூது. க.) என்புழியும் அஃதப் பொருட்டாதல் அறிக. விழைதக்கது - விரும்பத்தகுந்தது.

(பத்திராபதி குபேரன்முன் செல்லுதல்)

அஅ - கூ௦ : வள்ளிதழ்............செல்லா

(பொ - ரை.) பெரிய இதழையுடைய நறிய மலர்மாலையணிந்த குபேரனுடைய அடி நீழலிலே அணுகிய காலத்தும், என்னுடைய மனத்தின்கண் தோன்றிய யானைப்பிறப்பு எனக்கு வருவதாக என்று நினைத்தவளாய்ச் செல்லாநிற்றலால்.......... என்க.

(வி -ம்.) வச்சிரவண்ணன் - குபேரன். அடிநிழல் குறுகிய காலை என்றது முன்னிலையிற் சென்ற பொழுது என்றவாறு, மனத்ததை : ஐகாரம் சாரியை. மனத்தின்கண் தோன்றிய யானைப் பிறப்பு என்க. இப் பகுதியில் கூ௦ ஆம் அடியை யடுத்து ஓரடி முழுதும் அழிந்தொழிந்தது.

(குபேரன் அவளைச் சபித்தல்)

௯௧ — ௪ : பிடி..........போன்மென

(பொ - ரை.) இப் பத்திராபதி பிடியானையின் அழகினை விரும்பி மீண்டு வந்தனள் என்பதனை அவள் இசைத்த இசைப் பாடலால் அறிந்து கொண்ட அக் குபேரன் அவள் நெஞ்சத்தே பொருந்திய மிக்க காமநோயையும் தன் ஓதி ஞானத்தால் உணர்ந்து வெகுண்ட நெஞ்சத்தோடே, "ஏடி! நீ முற்செய் தவத்தால் எய்தியுள்ள இத் தெய்வ வின்பத்தை ஏற்றுக் கொள்ளாமல் வெறுத்தனை போலும்" என்று கூறி என்க.

(வி - ம்.) பத்திராபதி குபேரன் முன்னிலையில் சென்று பாடுங் கால் தன் மனக் கருத்துத் தோன்றப் பாடினாள், அதனை உணர்ந்த குபேரன் என்னும் பொருளமைந்த சொற்கள் அழிந்த அடியில் இருந் திருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம். இதனை அடுத்துவரும் "விலங்கின் பிறவி நயந்து நீ கானம் செய்தது காரணமாக" எனவரும் குபேரன் கூற்றும் இதனை வலியுறுத்தும். எழில் - அழகு. இவள்: பத்திராபதி. உறுநோய் - மிக்க காம நோய். ஓதியின் - ஓதி ஞானத் தால். செயிர்த்த - வெகுண்ட. பொறுத்தல் செல்லாது: ஒருசொல்; பொறாது என்றபடி. போன்ம் - போலும்.

(இதுவுமது)

௯௫ - ௧௦௪ : வேழம்............இடுதலும்

(பொ - ரை.) "ஆயின் நீ யானையை நினைந்து காம வேட்கை மிகவும் பெருகி நன்மையில்லாத அவ் விலங்கின் பிறப் பைப் பெரிதும் விரும்பி அக் கருத்துத் தோன்ற என் முன்னிலை யில் பண்ணிசைத்தது காரணமாக இனி நீ நினது ஊழ்வினையின் படியே இவ்வுடலினை விட்டுச்சென்று மலைக் கூட்டம் போன்ற குற்றமற்ற அந்த யானைக் கூட்டத்தினுள் வைத்து நல்லிலக்கணம் பொருந்திய ஓர் இளம் பிடியானையாகிப் பிறந்த பின்னர் வளர்ந்து பருவத்தாற் சிறந்து நீ இப்பொழுது விரும்பிய சினமிக்க அக் களிற்றியானையோடு விரும்பி விளையாடி இன்பம் நுகர்வாயாக" என்று அக் குபேரன் அவள் பிழையைப் பொறுஅய்ச் சபித்த லாலே என்க.

(வி - ம்.) நினைஇ - நினைத்து. மீதூர்ந்து - பெருகி. உனது ஊழ்வினையும் அங்ஙன மிருந்தது என்பான் ஊழ் வினை வகையின் ஏகி என்றான். நன்றி - நன்மை. கானம் - பண். மலைக்கணத்தன்ன— மலைக் கூட்டங்களை யொத்த. பருவத்தாற் சிறந்து என்க. வேகயானை - வெகுளிமிக்க யானை. போகம் - இன்பம். போற்றாளுகி - பிழை பொறுஅய். சாவம் - சாபம்.

(பத்திராபதி வினுதல்)

௧0௪ - ௭ : சார்ந்து............வினவ

(பொ - ரை.) அச் சாபத்தைப் பெற்று அப் பத்திராபதி அக் குபேரனை வணங்கிப் "பெருமானே! இச் சாபம் தெய்வ மொழியாகலின் பொய்யாகாது. ஆதலின் நெடுங்காலம் பழைய இத் தெய்வப் பிறப்பினை யான் அடைதல் இயலாதாகிவிடும். ஆகவே உனது சாபத்தின் பயனாக யான் எய்தப்போகும் நெடிய துதிக்கையையுடைய அந்த யானைப் பிறப்பினின்றும் யான் விடுதலை பெறுதற்கு வழி யாதோ?" என்று வினவாநிற்ப என்க.

(வி - ம்.) சார்ந்து - சாரப்பட்டு. இப் பிறப்பினை மீண்டும் பெறல் அரிதாம் என்றவாறு. நெடுங்கை விலங்கு - யானை. வீடு - விடுதலை. விளங்கிழை : பத்திராபதி.

(சாப விடை)

௧0௮ - ௧௫ : அண்ணல்............நின்றுழி

(பொ - ரை.) அது கேட்ட அக் குபேரன் இரங்கி, "ஏடி! இதுகேள், நீ பெருமையினையும் நல்ல முயற்சியினையுமுடைய அவந்தி நாட்டரசனாகிய பிரச்சோதனனுடைய ஒப்பனையமைந்த யானைக் கூடத்தின்கண் ஒப்பனை செய்யப்படும் ஒரு பிடியானையாக அம் மன்னன் மறவரால் கைப்பற்றப் படுவாய். அங்ஙனம் கைப்பற்றிய பின்னர் உயர் குலத்திற்கு எல்லையாயமைந்த ஐம்பெரும் மன்னர் குலத்துள் வைத்துக் கொலைத்தொழில் பொருந்திய சிவந்த வேலையுடைய குருகுலத்துள் தோன்றிய தலைவனாகிய சான்றோர் புகழும் உதயண குமரன் பிறை போன்ற மருப்பினையுடைய யானைப் படையையுடைய அப் பிரச்சோதன மன்னனுடைய மறவரால் சிறை செய்யப்பட்ட காலத்தே" என்க.

(வி - ம்.) அண்ணல் - பெருமை. தாள் - முயற்சி. வாரி - யானைக் கூடம். அலகை - எல்லை. ஐம்பெரும் குலம் - இக்குவாகு குலம், அரிகுலம், குருகுலம், நாதகுலம், உக்கிரகுலம் என்பன. தமர் - ஈண்டு மறவர்.

(இதுவுமது)

௧௧௬ - ௨௩ : மண்............என

(பொ - ரை.) நில உலகத்தைத் தாங்கும் நெடிய தோளையுடைய மறமாச்சேனன் என்னும் பிரச்சோதன மன்னனுக்கு ஊர்தியாய்ப் பண்ணுறுத்தப் பட்ட பிடியானையாய் அவ் வியானைக் குழுவினுள் நின்னை யானை வலவர் அக் கூடத்தின்

கண் சிறப்பாகப் பழக்குதலாலே நீ சிறந்த நடையோடு பழகி வருங்காலத்தே அவ் விடத்தே படையையுடைய பிரச்சோதன மன்னன் ஆங்கு நிகழும் குளிர்ந்த நீர்விழவின்கண் கொற்ற வெண்குடை பொருந்திய வேந்தனாகிய குருகுலத்தோன்றலாகிய ஒள்ளிய நறிய மலர் மாலை யணிந்த உதயணன் ஏறுதற் பொருட்டு 'என் பத்திராபதி ஒப்பனை செய்யப்பட்டு அவன்பால் செல்வ தாக!' என்று கட்டளை யிடுதலாலே என்க.

(வி - ம்.) மண் - உலகம். மறமாச்சேனன் - பிரச்சோதனன். யானை வித்தகர் - யானை பழக்குந் தொழிலில் சதுரப்பாடுடைய பாகர் கள். தானத்தில் - யானைக் கூடத்தின்கண். வடிப்ப-பழக்க. வேந்தன்: பிரச்சோதனன்.

(இதுவுமது)

௧௰௪ — ௩௰ : வீர............காலை

(பொ - ரை.) வீரவேந்தனாகிய அப் பிரச்சோதனன் மேலும் விளங்கிய அணிகலனணிந்த சிறுமியும் வளையலணிந்த நெடிய பருத்த தோள்களை யுடையவளும் ஆகிய வாசவதத்தையாகிய தன் மகளை ஆர்வமுடைய நெஞ்சத்தோடு உதயணனுடன் ஏற்றி விட அப்பொழுது உதயணனால் ஊரப்படுகின்ற நீ ஒரே இரவி னூடே முடிதலில்லாத அரிய நெடிய வழியின்மேல் விரைந் தோடிச் செல்லுங்கால், உனக்குக் காலகூடம் என்னும் வெவ்விய நோயுண்டாகி மிகவும் பெருகா நிற்றலாலும் மேலும் மேலும் தவிர்க்கும் வரையறை யில்லாமல் வெவ்விய பசி நலிதலாலும் நீ அவ்வழியிடத்தே விழுந்த பொழுது என்க.

(வி - ம்.) வேந்தன்: பிரச்சோதனன். ஏற்றி - ஏற்ற. உதயண னால் ஊரப்படும் நீ என்க. உலப்பரு அதர் - உலத்தல் அரிய அதர் என்க. ஈண்டு அருமை இன்மை மேனின்றது. அதர் - வழி. கால கூடம் - யானைகட்கு வரும் ஒரு கொடு நோய்.

(இதுவுமது)

௩௰௨ - ௭ : மேயவன்..............ஒழிய

(பொ - ரை.) "நின் பிடரிலே பொருந்தியிருந்த உதய ணன் அவ்விடத்தே ஆராய்ந்த நெஞ்சத்தோடே கீழிறங்கி நின் செவி அருகே சேர்ந்து 'பிடிநங்காய்! நீ இப்பொழுது அஞ்சாதே கொள்! இறைவனுடைய ஐந்தெழுத்துக்களையும் நினைக!' என்று செவியறிவுறுத்துதலாலே நீ அம் மந்திரத்தைக் குறை யின்றிக் கணிக்கும் தன்மையில் பிறழாமல் அந் நினைவோடு இறந்தது காரணமாக ஊன்மிக்க விலங்கினது உடம்பு அவ் விடத்தே கிடப்ப" என்க.

(வி - ம்.) மேயவன் : உதயணன். ஐம்பதம் - பஞ்ச நமஸ்கார மந்திரம். நினைக்கும் சிந்தையொடு என்க. விலங்கின் உடம்பு - யானை யுடல். அவண் - அக்காட்டின்கண்.

(பத்திராபதி பழைய உருப்பெற்றுக் குபேரனையடைந்து வணங்கல்)

௧௩௮ - ௪௧ : ஈனம்............ஆயிழை

(பொ - ரை.) "நீ குற்றமற்ற உடம்போடு இவ்வுலகத்தில் வந்து பழைய பெயரோடே பெண்ணுருவமும் எய்தி இவ்வளவு காலம் வாழ்க என்று அக் குபேரனால் சாபவிடை கூறப்பட்ட படி, யானையாகி இறந்த அப் பத்திராபதி" என்க.

(வி - ம்.) ஈனமில் யாக்கை என்றது தெய்வ உடம்பினை. முன்னைப் பேர் - பழைய பெயர். அஃதாவது பத்திராபதி என்பதாம். இத்துணை - இவ்வளவு காலம். ஆயிழை : பத்திராபதி.

(பத்திராபதி குபேரனை வரம் வேண்டிக் கொள்ளல்)

௧௪௨ - ௫௦ : மன்னருள்............ஈமென

(பொ - ரை.) "மன்னருள் வைத்துத் தலைசிறந்த மன்னனே! நீ யானைப் பிறப்பின்கண் இறப்பு நிகழ்வுழி மந்திரம் செவியறிவுறுத்துத் தெய்வப் பிறவியில் ஏறவிடுத்த உதவியை அப் பத்திராபதி நினைந்து, அதற்கு ஈடாகத் தானும் ஒரு கைம் மாறு செய்ய வேண்டும் என்று தன் நெஞ்சத்தே நினைந்து நாள் தோறும் ஏதேனுமொரு நல்குரவே நிலவும் இயல்புடைய இந் நிலவுலகத்தின்கண் வாழும் மாந்தருக்கு மகப்பெறுதல் பேரின்ப மாகிய ஒரு பெரும் பேறு ஆதலால் மகப்பேறின்றி நல்கூரும் நினக்கு அப்பேற்றினைக் கூட்டிமுடிக்கும் ஒரு நன் முயற்சியோடு தனக்குரிய வளவிய நிதிக்கிழவனாகிய அக் குபேரனை வாழ்த்தி வணங்கி அவனுக்கு அளவில்லாத இன்பத்தைத் தரும் கூத்தினை ஆடி அவன் மகிழ்ந்த செவ்வி நோக்கி அவனை வணங்கிப் பொரு ளுரிமைக்கு மேல்வரம்பாகிய ஒப்பற்ற செல்வத்தையுடைய பெருமானே! யான் இப்பொழுது ஒரு சிறிய வரம் வேண்டு கின்றேன். அதனை மறுது வழங்கி யருள்க" என்று இரந்து கூறுகிற்ப என்க.

(வி - ம்.) நின் அருள் என்றது யானை இறக்குங்கால் அது தெய்வப் பிறப்பில் பிறக்கும்படி அதன் செவியில் மந்திர மோதியதனை. மாற்றுபகாரம் - கைம்மாறு. நில உலகத்தின்கண் ஆண்டான் முதல் அடிமை ஈறாக எத்திறத்தார்க்கும் நாள் தோறும் யாதானுமொரு குறை யுளதாதல் இயல்பாதல் பற்றி நிச்ச நிரப்பின் நிலம் என்றான். என்றது எல்லாப் பேறுகளும் எய்தியுள்ள அவ்வுதயணன் றானும் மகப் பேறின்றி வருந்துதல் கருதி என்க. எச்சம் - மகவு: ஆடலின் - ஆடும் பொழுது. மருதளித்தற் பொருட்டு ஆடுங்கால் அவன் மகிழ்ந்த

செவ்வி நோக்கி வரம் வேண்டினள் என்க. அவன் எளிதின் வழங்கத் தகுந்தது என்பாள் 'சிறுவரம்' என்றாள்.

(இதுவுமது)

கருக - கூ : நிவந்த............ஆற்றுன்

(பொ - ரை.) அது கேட்ட குபேரன் தன் நெஞ்சத்தே பெருகிய அன்பினாலே, "ஏடி! நீ விரும்பும் வரத்தைக் கூறுக" என்று கட்டளையிட அது கேட்ட அப்பத்திராபதி தலைவணங்கிக் கைக் கூப்பித் தொழுது, "பெருமானே! யானைப் பிறப்பின்கண் என்னை ஊர்தியாகப் பெற்று ஊர்ந்து வந்த உதயணன் யான் காட்டினூடே கடும் பிணி எய்தி நலிந்து வீழ்ந்த காலத்தே என் காரியத்தை ஓரளவு முடித்துக் கொண்டேன் என்றொழியாது அப் பெருமகன் அருள் முற்பட்ட நெஞ்சத்தோடே தறுகண் மையுடைய நெஞ்சத்தையுடைய பிற மன்னர்க்குப் பொருந்தாத அவனுடைய கண்ணோட்டமிக்க நெஞ்சத்தோடே என்பால் அருளை முற்படச் செலுத்தித் துயரமிக்க மொழிகளோடே தனது பழைய அழகு கெடும்படி வருந்தி அழகிய தாமரை மலர் போன்ற தனது நெடிய கண்ணினின்றும் தெளிந்த கண்ணீரைத் துளித்தலாலே அக் கண்ணீர் பெறற்கரிய மணியணிகலனணிந்த தனது மார்பினை நனையாநிற்பப் பெரிய துன்பம் நிறைந்த நெஞ்சத்தோடே என்னை விட்டுச் செல்ல ஒருப்படானாய் என்க.

(வி - ம்.) நிவந்த - பெருகிய. வன்கண்மையுடைய மன்னர்க்குப் பொருந்தாத அருள் நெஞ்சத்தோடே என்க. திருமலர் - ஈண்டுத் தாமரைமலர். ஆகத்தகலம் : இருபெயரொட்டு. ஆகத்தின் கண்ணதாகிய அகலம் எனினுமாம். எவ்வம் - துன்பம். இரத்தலாற்றுன் என்னும் பாடம் பொருந்திற்றில்லை. ஆகலின் இறத்தலாற்றுன் எனக் கொண்டாம். இதனால் பத்திராபதி உதயணன் தனக்குச் செய்த நன்றியைக் குபேரனுக்குக் கூறுகின்றாள்.

(இதுவுமது)

கசுo - அ : நைவந்து............நீயென

(பொ - ரை.) அவ்வுதயணன் என் உடலைத் தழுவிப் "பிடி நங்காய்! நீ எனக்குச் சிறந்ததோர் உதவியைச் செய்தாய். இனி நீ துன்பம் மிகுதற்குக் காரணமான இவ் விலங்கின் உடலின்கண் பற்றினை ஒழித்துச் சென்று துன்பம் தீர்ந்து இனிய தெய்வப் பிறப்பினை உடையையாகுக! இஃதென் விருப்பம்" என்று கூறி அப்பொழுது தான் செய்யத் தகுந்த நீர்க் கடனைச் செய்து முடித்தான்; அவ்வுதயண மன்னனுக்கு ஒப்பற்றவனும் குற்றமற்ற சிறப்பினையுடையவனும் ஆகிய ஒரு

மகனைப் பெருமான் அளித்தருள வேண்டுகின்றேன். இதுவே யான் விரும்பும் வரம், இதனைப் பெருமான்பால் பெறுதற்கு ஏற்ற சீரிய வாழ்வினை உடையேன் அல்லேனாயினும் அழியாத அரிய நிதியையுடைய எம்பெருமான்! இவ் வரத்தை அடிச்சிக்கு மறுக்காமல் அருளுக! என்று மடப்பமுடைய மொழியினை யுடைய பத்திராபதி குபேரனை வேண்டாநிற்ப, அதுகேட்ட அக் குபேரன் அவளின் நன்றியுணர்ச்சியைக் கூர்ந்துணர்ந்து மகிழ்ந்து 'ஏடி! அவ் வரத்தினை யான் நினக்கு வழங்கினேன்!' என்று கூறி என்க.

(வி - ம்.) தைவந்து - தடவி. தக்கது - தகுந்ததோருதவி. படர்- துன்பம். என்குறை - என் விருப்பம். காவலன் : உதயணன். பிழைப் பிலன் : தன்மையொருமை. பிழைப்பு - வாழ்க்கை. ஈண்டுச் சீரிய வாழ்க்கை இலேன் என்றவாறு. நிதிக்கிழவ : விளி. அதனை - அவ் வரத்தை. மடமொழி : பத்திராபதி. அவன் : குபேரன். தெளிவு பற்றி பெற்றனை என இறந்தகாலத்தாற் கூறினன்.

(குபேரன் சௌதருமேந்திரன்பால் சென்று ஏத்தல்)

௬௫ - ௭௬ : சொரி..............ஏத்த

(பொ - ரை.) பின்னர் அக் குபேரன் உலகிற்கு மழை நீரைப் பெய்து புரக்கின்ற விண்ணுலகின்கண் சென்று ஆங்கு அவ்வுலகினை ஆளும் சௌதருமேந்திரனை அணுகி 'ஐய! பிறரும் பகுத்துக் கோடற்கிடமில்லாத தனிப் பெருமையையுடைய பரத சக்கரவர்த்தி முதலாக நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த உன்னுடைய குலச் சிறப்பினையும், அதன் நடுநிலைமையையும் அஃது உலகின்கண் நிறுத்திவைத்த நல்லறிவினையும் வன்மையுற உலகிற்கு உணர்த்தித் தானும் சிதைவில்லாத அந்தச் செவ்விய நெறியிலே சேர்ந் தொழுகிப் பின்னர் ஒருபொழுதும் பிறழ்த லில்லாத உதயண மன்னனுக்கு மகிழ்ச்சியோடே இப்பொழுது ஒரு மகன் பிறத்தல் வேண்டும். அங்ஙனம் பிறப்பித்தல் நீ செய்தற்குரிய சிறந்ததொரு செயலாகும்' என்று பாராட்டிக் கூறாநிற்ப.

(வி - ம்.) சோதமன் - சௌதருமேந்திரன். பாத்தில்பெருமை : அப் பெருமையில் பிறருக்கும் பங்குண்டு என்று பகுத்தல் இல்லாத தனிப் பெருமை என்றவாறு. "பாத்தில் பழம் பொருள்" (சிலப். ௧௦. ௧௮௮) என்புழியும் அஃதப்பொருட்டாதல் உணர்க. சௌதரு மேந்திரன் பரத சக்கரவர்த்தியின் குலத்திற் பிறந்தவனாதலின் பரதன் முதலாச் சேய்த்தின் வந்த நின்குலம் என்றான். சேய்த்தின் - நெடுங் காலமாக. செப்பம் - நடுநிலைமை. நின்குலத்தோர் உலகத்திற்குக் கற்பித்து வைத்த காட்சியும் என்றவாறு. காட்சி - நல்லறிவு. உலகத்தில் அற முதலிய உறுதிப் பொருள்களைப் பரதசக்கரவர்த்தியின் குலத்தோரே அறிவுறுத்தினர் என்பது பற்றி அவற்றை உதயணன்

மேற்கொண்டு பிறழாது ஒழுகுகின்றான் என்று குபேரன் ஈண்டுச் சௌதருமேந்திரனுக்குக் கூறுகின்றான். இஃது அவ்வுதயணனுக்கு மகப்பேறு வழங்குதல் வேண்டும் என்னும் தனது வேண்டுகோளுக்கு ஏதுக் கூறியபடியாம். சிறுவன் - மகன். அது - அங்ஙனம் வழங்குதல் என்க.

(சௌதருமேந்திரன் குபேரனுக்குக் கூறுதல்)

௧௭௩ - ௮௨ : பின்னை...............இருந்தனன்

(பொ - ரை.) அங்ஙனம் குபேரன் பாராட்டிய பின்னர் அச்சௌதருமேந்திரன் அச்செயலின்கண் குபேரனுக்குக் கூறுபவன், "நண்ப! கேள்! முன்பொரு காலத்தே நிலைபெற்ற விருப்பத்தோடே வித்தைகள் பலவும் பயின்று கைவரப் பெற்று வெள்ளிப் பெருமலையின்மேல் உயிர்கள் அச்சமில்லாமல் வாழுதற்குக் காரணமான ஆணைச் சக்கரத்தைக் கைக்கொண்டு அவ்வெள்ளி மலையின்மேல் அரசுவீற்றிருத்தற்குப் பெரிதும் விரும்பி நோன்பு செய்த அளவற்ற கடிய தவத்தினையுடைய சோதவன் என்னும் ஒரு துறவி நிலவுலகத்தின்கண் தெய்வயாக்கையோடு பிறந்து இன்பம் நுகர்தற்கு உறுதிபூண்டு நெடிது நினைந்து இனிதாக இருந்தனன்" என்க.

(வி - ம்.) அவன் : சௌதருமேந்திரன். அச்சமில்லாமைக்குக் காரணமான ஆழி என்க. நச்சி - விரும்பி. கச்சம் - ஒருவகைப் பேரளவு. இருடி - துறவி. எய்திய - எய்த. நிதானம் - உறுதி.

> "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்" (குறள். ௬௬௬)

என்பதுபற்றிப் போகம் செய்த நிதான வகையின் நினைத்திருந்தனன் என்றான்.

(இதுவுமது)

௧௮௩ - ௮ : நாவலந்...............கூறி

(பொ - ரை.) "அவன் பின்னர் நாவலந் தீவின்கண் எல்லா நன்மைகளோடும் பிறந்து உலகின்கண் தீவினையை அகற்றிய பரத சக்கரவர்த்தி பிறந்த பலரும் ஆராய்தற்குக் காரணமான பெரிய பழைய குடியிலே பிறந்து அப்பால் குற்றமற்ற வித்தியாதரருடைய மலைநாட்டைத் தன் குடை நீழலில் வைத்து ஆணைச் சக்கர முருட்டிப் பின்னர் என்பால் வந்து சேர்தற்குரிய காலம் இந்தக் காலமேயாகும்" என்று அக்குபேரன் உணரும்படி விரித்துக் கூறி என்க.

(வி - ம்.) பாவம் - தீவினை. ஆய் - ஆராய்தற்குக் காரணமான. மலையகம் - மலைநாடு. ஊழி - காலம். குபேரன் உணரக் கூறி என்க.

(சௌதருமேந்திரன் சோதவனுக்குக் கட்டளையிடுதல்)

௧அ௯ - ௯௩ : ஆய................உரைப்ப

(பொ - ரை.) பின்னர் அந்தச் சௌதருமேந்திரன் துறவோர் கூட்டத்தினிதிருந்த அத்துறவியை யழைத்துக் குறைவற்ற பெரிய தவத்திற்கு உரிமை பூண்ட அச்சோதவனை நோக்கி 'ஐய! நீ நிலைபெற்ற உதயண மன்னனுடைய கோப்பெருந் தேவியாகிய வாசவதத்தையின் வயிற்றினுள்ளே பொருந்தி உருவாகும் நாள் இந்த நாளே யாதலின்..................................நாலையுடைய அச்சௌதருமேந்திரன் கூறி என்க.

(வி - ம்.) ஆயவெள்ளம் - துறவோர் கூட்டம். அவன் : சோதவன். தவக்கிழவனை : அச்சோதவனை. தேவி : வாசவதத்தை. இப்பகுதியில் ௧௯௨ ஆம் அடியை யடுத்து ஓரடியும் அதனை யடுத்த அடியில் முதற்சீர் இரண்டும் அழிந்தொழிந்தன.

(இதுவுமது)

௧௯௪ - ௯ : மேலை................அளிப்ப

(பொ - ரை.) பின்னரும் அச்சௌதருமேந்திரன் அச்சோதவனை நோக்கி 'ஐய! நீ அவ்வுதயணனுடைய கனவின்கண் வைகறைப் பொழுதிலே தோன்றி மேற்றிசையின் கண்ணதாகிய அழகிய பாற்கடலின்கண் பிறந்ததும் தன் பொகுட்டின்மேல் ஒரு வெள்ளேறு கிடக்கப் பெற்றதும் ஆகிய வெள்ளிய இதழையுடைய நறிய தாமரைமலர் ஒன்றனை அம்மன்னவன் கையில் கொடுக்குமாற்றால் ஊழ்வினையின்படி எதிர்காலத்தே நிகழும் செயலை விளங்கும்படி காட்டுக!' என்று ஏவி விடுத்த காலத்தே அக் கட்டளையோடு வந்த அச்சோதவன் அப்பணியைப் பசிய தளிர் விரவிய மாலையினையுடைய பத்திராபதிக்கு வழங்காநிற்ப என்க.

(வி - ம்.) மேலை - மேற்றிசை. வாலிதழ் - வெள்ளிய இதழ். வைகறையாமத்துக் கண்ட கனவு உடனே பலிக்கும் என்பதுபற்றி வைகறையாமத்துக் கனவிற் றோன்றிக்கொடு என்றான். இந்திரன் - சௌதருமேந்திரன். வந்தவன் : சோதவன்.

(பத்திரை உதயணன் கனவிற் றோன்றல்)

௨௦௦ - ௪ : ஒள்ளரி................உணர்வோர்க்கே

(பொ - ரை.) இத்துணையுங் கூறிய இயக்கன் மேலும் உதயணனை நோக்கிக் கூறுகின்றான்: "நண்பனே! நீ ஒள்ளிய செவ்வரி பரந்த குளிர்ந்த கண்ணையுடைய வாசவதத்தையை நினைந்து பள்ளிகொண்டிருந்தபொழுது நினது துன்பம் நின்னை விட்டு அகன்றுபோம்படி விளங்கிய அணிகலன்களையுடைய அப்

பத்திராபதி உன் கனவின்கண் தோன்றி அந்த வெண்டாமரை மலரை உனக்குக் கொடுத்தாள். ஆராய்ந்துணரும் அறிவுடையோர்க்கு அன்புள்ளம் படைத்த மேலோர் நட்பு அழிவதன்று காண்'' என்று கூறி என்க.

(வி - ம்.) தேவி : வாசவதத்தை. பரிவு - துன்பம். விளங்கிழை : பத்திராபதி. அம்ம - கேட்பித்தற்கண் வந்தது.

(பத்திராபதியின் நன்றியறிவு)

௨0௫ - ௧0 : ஆயினும்...............உடையள்

(பொ - ரை.) "உதயண! நிகழ்ச்சி இங்ஙனமாயினும் நீ கூறிய குறையை யானே முடித்துத் தருவல், இம்மகப்பேற்றினை (இங்ஙனமாகலின்) அப்பத்திராபதியே உனக்குத் தந்தனள் என்றுணர்க. இம்மகப்பேறு வழங்கிய செயலும் நீ அவட்குச் செய்த உதவியைக் கருதுமிடத்தே சிறிதாகும் என்று கருதி அதனை யார்க்கும் வெளிப்படுத்திக் கூறாளாய் உனக்கு இன்னும் வானத்தினின்றும் வெளிப்படுவதும் வருவாய் மிக்கதும் சிறந்ததுமாகிய பொருளொன்றனை வழங்குதல் வேண்டும் என்னும் விருப்பத்தை அவள் ஒருதலையாக உடையளாய் இருக்கின்றனள் காண்'' என்க.

(வி - ம்.) தளிரியலவள்தான் தந்தனள் என மாறுக. இதுவும் - மகப்பேறளித்த உதவியும். சிறிதெனா - நீ செய்த உதவியைக் கருதுமிடத்துச் சிறிதென்று கருதி என்க. அதனை - தான்செய்த உதவியை. நுனக்கு - உனக்கு. வான் வெளிப்படூஉம் விழுப்பொருள் என்றது - வானத்தே பறக்கும் சிறந்த ஊர்தி என்னும் ஒருபொருளும் தோன்றக் கூறியவாறு. ஒருதலை - உறுதியாக.

(இயக்கன் பத்திராபதியை நினைக்கும்படி கூறுதல்)

௨௧௧ - ௨0 : ஆனுக்...........யானென

(பொ - ரை.) "அமைபாத கடிய போராற்றலையுடைய அண்ணலே! அவள் இங்ஙனம் இருத்தலால் நீ முற்காலத்தே நின்னொடு நட்புரிமையுடைய பத்திராபதியாகிய அஃதெய்வ மகளை அன்போடு நின் நெஞ்சத்தில் நினைந்து அவட்குரிய மந்திரத்தையுங் கணித்து நீள நினைத்த பொழுதின் அவள் நின்கண் முன்னர் ஒருதலையாகத் தோன்றுவாள், தோன்றியபின் உனக்கு மகவினையளித்த சோதவனது வரலாற்றினையும் முறையோடே அவள் உனக்குக் கூறுவாள். பின்னர் நீ நெஞ்சில் விரும்பி எனக்குக் கூறிய வயாநோய் தீர்க்கும் அரிய பொருள் இஃதென்று அவளுக்குக் கூறுக. அங்ஙனம் கூறின் அப்பத்திராபதி உனது குறையைத் தீர்த்து விடுவள். யான் கூறிய இதனால்

உனக்கு அக்குறை தீராவிடின் மீண்டும் யான் இங்கு வருவேன் காண்" என்று அவ்வியக்கன் உதயணனுக்குக் கூறி என்க.

(வி - ம்.) அண்ணல் : விளி. கிழமை - நட்புரிமை. விண்ணவர் மகள் : பத்திராபதி. மந்திரம் - அவளை வருவித்தற்குரிய மந்திரம். தோன்றலைத் தந்த மகன் என்றது சோதவனை. இற்றெனை - இஃதென்று. முற்றிழை : பத்திராபதி. மறித்தும் - மீண்டும். வருவல் - வருவேன்.

(இயக்கன் உதயணனுக்கு ஒரு மந்திரம் அறிவுறுத்தல்)

௨௨0 - ௩ : ஒருபதம்..........பயிற்றி

(பொ - ரை.) அவ்வுதயணனுக்கு ஒரு மந்திரத்தை அறிவுறுத்து அவன் குறிக்கோளாகக் கொள்ளவேண்டிய செய்திகளையும் அவன் மனங்கொள்ளும்படி கூறிச் செம்மால்! யான் கூறியதனை நன்கு பேணிச் செய்வாயாக. யான் சென்றுவருவேன் என்று கூறிக் குறையாத நல்ல மொழிகள் பலவற்றையும் பன்முறையும் கூறி என்க.

(வி - ம்.) ஒருபதம் - மந்திரம். செம்மல் : விளி. பயிற்றி - பலகாலும் சொல்லி.

(இயக்கன் செல்லுதல்)

௨௨௪ - ௭ : கடி...............விரைந்தென்

(பொ - ரை.) மணங்கமழ்கின்ற மார்பினையுடையோய்! கவலாதே கொள் என்று கூறி வீரவளையணிந்த தன் பெரிய கைகளாலே ஆருயிர்த் தோழனாகிய, உதயணனைத் தழுவிக் கொண்டு விடைகொண்டு வானின்கண் தனது பசிய பொன்னாலியன்ற பல்வேறு அணிகலன்களும் பிறழ்ந்து பன்முறையும் ஒளி வீசாநிற்ப, மின்னல் போன்று விரைந்து விண்ணினூடே மறைந்து போனான் என்க.

(வி - ம்.) கடி - மணம். கவலல் - கவலைப்படாதே. தொடி - வீரவளை. பல்லூழ் - பன்முறையும். விரைந்து மறைந்தனன் என மாறுக.

௩. இயக்கன் போனது முற்றிற்று

---

௬. வயாத் தீர்ந்தது

இதன்கண் : *உதயணன் செயலும், அமைச்சர் செயலும், தச்சர் மறுத்தலும், பத்திராபதி தச்சவுருவங் கொண்டு வருதலும், உதயணனுக்கு உருமண்ணுவா அறிவித்தலும், உதயணன் உடம்படலும், உருமண்ணுவாவின் செயலும், பத்திராபதி எந்திரம் அமைத்துத் தருதலும், உதயணன் முதலியோர் எந்திரத்திலேறிச் செல்லலும் கூறப்படும்.*

விசும்பின் மின்னென விரைந்தனன் மறைந்தபின்
பசும்பொற் பைந்தார்ப் பனிமதி வெண்குடை
ஒன்றிய வொழுக்கி னுதயண மன்னன்
குன்றகச் சாரற் குளிறுபு வீழ்ந்த
இரும்பிடித் தோற்றமு மிறுதியுங் கேட்டு
விரும்பிய வுள்ளமொடு விரைந்தன னிருந்தபின்
அருமறை விச்சைப் பெருமறை தொடங்கி
வடிக்கண் மாதர் வருத்த நோக்கி
நெடிக்கு மவாவென நெஞ்சி னினைஇ
உள்ளத் தன்னுட் குள்ளழிந் துயிரா
வள்ளிதழ் நறுந்தார் வத்தவ னுரைப்பத்
தீரும் வாயி றேர்தும் யாமெனப்
பேரிய லாளர் பிறிதுதிறங் காணார்
முயற்சியின் முடியாக் கரும மில்லென
நயத்தகு நண்பி னுடுதோறு நாடித்
தச்ச மாக்களை யெச்சார் மருங்கினும்
ஆணையிற் றரீஇ யரும்பெறற் றேவி
பேணிய வசாநோய் தீர வேண்டிச்
சேயுயர் விசும்பிற் செல்லு மெந்திரம்
வாய்மையிற் புணரும் வல்விரைந் தென்றலின்
நீர்சார் பாக வூர்பவு மரத்தொடு
நிலஞ்சார் பாகச் செல்பவு மலங்குசினை
இலைசார் பாக வியல்பவு மென்றிந்
நால்வகை மரபி னல்லதை நூல்வழி
ஆருயிர் கோளினு மதுவெமக் கரிதெனச்

சார்புபிறி தின்மையிற் சாற்றுவன ரிறைஞ்ச
அந்தர விசும்பி னறிவன னோக்கி
இவருரு வாகி யிவ்வினை முடிப்பலென்
றமருரு வோழித்துச் சென்றனள் குறுகிக்
களைக ணீகுவென் கையற லோழிகெனத்
தளையவிழ் தாமமோடு தச்சுவினைப் பொலிந்தவோர்
இளையனிற் றோன்றி யிவர்களை யலைத்தல்
வேண்டா விடுக விரைந்தென வுரைத்தலிற்
பூண்டாங் ககலத்துப் புரவலற் குறுகி
உருமண் ணுவாவும் பெருவிதுப் பெய்திக்
கண்ணியன் கழலினன் கச்சினன் றாரினன்
வண்ண வாடையன் வந்திவட் டோன்றித்
தச்சுவினைப் பொலிந்த விச்சையின் விளங்கி
என்னை மற்றிவ ரறியா ரோழிகெனத்
துன்னிய துயரந் துடைப்பான் போன்றனன்
மன்னருண் மன்னன் மறுமோழி யாதென
விருப்புறு நெஞ்சின் வியந்துவிர னொடித்தவன்
உரைப்பவை யெல்லா மோழியா தாற்றி
நொடித்தல் செல்லா தரியவை யாயினும்
கொடுத்தல் குணமெனக் கோமக னருளி
விடுத்தலிற் போந்து வேணவா முடித்தற்
குரிய முறைமையி னுரிய கொடுப்ப
நிறையுடன் கொண்டோர் மறைவிடங் குறுகிச்
சின்னாள் கழிந்த பின்னா ளெல்லையுள்
அமைவுநனி காண்கென் றாங்கவ னுரைப்ப
உமையோடு புணர்ந்த விமையா நாட்டத்துக்
கண்ணணங் கவிரொளிக் கடவுளைப் போலத்
தடவரை மார்பன்.................
தானுந் தேவியுந் தகைபெற வேறி
வானோர் கிழவனின் வரம்பின்று பொலியத்
தேனார் கோதையோடு திறவதி னிருப்ப
உருமண் ணுவாவுட னேறு மதற்குத்
தெருமர லெய்திச் செய்திற மறியான்
என்றுணைக் குற்ற நோயு மிதுவென
வென்றடு தானை வேந்தன் விரும்பித்

தச்சனை நோக்கி மெச்சுவன னாக
ஏறுக விருவரு மென்றவ னுரைத்தலின்
வீறுபெறு விமானத்து விரைந்தவ ரேறலும்
மற்றை மூவருங் கொற்றவற் குறுகி
விசும்பா றேலின் வேட்கை தீர்க்கெனப்
பசும்பொற் கிண்கிணிப் பாவைய ரெல்லாம்
ஒல்லா நிலைமைகண் டுரைத்தனம் யாமென
வெல்போர் வேந்தனும் விரும்பின னாகித்
தச்ச னயவன் றன்னை நோக்கி
அச்சி னமைதி யறியக் கூறென
உலக மெல்லா மேறினு மேறுக
பலர்புகழ் வேந்தே யென்றவன் பணிதலும்
உவந்த வுள்ளமொடு நயந்துட னிவர
வடுத்தீர் குருசிற் கறிய மற்றவன்
கடுப்புந் தவிர்ப்புநி னுளத்துள் ளனவென
தோடலர் தாரோன் றேன்றக் கூறி
ஏறு மிடமு மிழியும் வகையும்
ஆறுந் தீபமு மடையா விடனும்
கூறுவன னேக்கிக் குறிக்கொளற் கமைந்த
இலக்கண வகையு மிதுவென விளக்கி
நலத்தக மறையாது நன்கனம் விரித்தபின்
விளங்கொளி விமானம் வெங்கதிர்ச் செல்வன்
துளங்கொளி தவிர்க்குந் தோற்றம் போல
நாளு நாளு நன்கன மேற்றி
ஊழி னூழி னுயர வோட்டிக்
கோளுங் குறியுங் கொண்டன னாகி
முகிலுளங் கிழிய வகலப் போகி
வடக்கு மேற்கும் வானுற நிமிர்ந்து
தோடக்கொடு தொடர்ந்த தாமந் துயல்வர
ஏற்றரு மலையுஞ் செலற்கருந் தீவும்
நோற்றவ ருறையு மாற்றயற் பள்ளியும்
பதினா ருயிரம் பரந்த செல்வத்து
விதிமாண் டங்கை வியனா டெய்தலும்
ஐயமோ டிவனு மமரரூ ராமெனக்
கைவயிற் கொண்டு காழகி னறும்புகை

பலிவீ டெய்திப் பரவுவன ளேத்துக்
கலிகோன் மன்னன் கழலடிக் கணவாக்
கணையிற் றேறிக் கலந்துகண் ணுருது
பணைவேய் மென்றோட் பதுமா தேவி
நன்னகர் குறுகலி னயந்துமுக நோக்கிப்
பொன்னிழை யிந்நகர் புகுது மோவென
வேண்டா வென்றபின் மீண்டுமேக் கோங்கி
நாளு நாளு நன்கன மோட
யாழின் கிழவ னிங்ஙன நினைஇ
ஊழி னூழி னுள்ள மூக்கிக்
கோளுங் குறியுங் கொண்டன னாகி
முகிலுளங் கிழிய வகல்விசும் பேறி
எழுச்சி யெல்லை முனிந்த பின்னர்
விழுச்சீர் விசும்பி னியங்குதற் கறிதலின்
மூரிப் பசும்பொன் மால்வரை கண்ணுற்
றேசனை யிழிந்து முகடுவலஞ் செய்து
துகடீர் பெருமைச் சேதியந் தொழுது
விதியிற் போதன் மேவின னாகி
எறிவளி யெடுப்ப வெழுந்துநிலங் கொள்ளும்
வெதிரிலை வீழ்ச்சியின் வேண்டிடத் தசைஇ
விணைகொள் விஞ்சை வீரியர்ருலகிற்
புனைவமை நகரமும் பூந்தண் காவும்
நிறைப்பருங் காட்சி யியற்கைய வாகிச்
சென்றுசே ணோங்கிய சேதி யெங்கணும்
ஒன்றே போல்வன வொருநூ றுயிரம்
வந்தனை செய்குநர் பூசனைக் களரியும்
கிளர்சே ணிமயமுங் கேங்கையுஞ் சிந்துவும்
வளமலர்க் கயமு மணிநிலப் பூமியும்
மேதகு மேருவு மதன்மிசைக் காவும்
சிந்துவுஞ் சீதையுஞ் சீதோ தகையும்
அந்தமில் விதையமு மணிதிக ழுந்தியும்
தேவ குருவு முத்தர குருவும்
ஈரைந் திரதமு மிறுதி யாக
மனத்தினும் வளியினு மிசைப்பி னேட்டி

எச்சார் மருங்கினு மினிதி னுறையும்
விச்சா தரரின் விதியினைக் காட்டி
விராய்மலர்க் கோதைய ருராஅ வூக்கமோ
டொருங்குபல கண்டு விரும்புவன ராகி
அசும்புசோர் முகிலுடை விசும்புபோழ்ந் தியங்கிய
அப்பா லெல்லை முடிந்தபி னிப்பால்
அவந்திகை நாடு மணியுஞ் சேனையும்
மலைமருங் குறையு மழகளிற் றீட்டமும்
கலைமா னேறுங் கவரியுங் களித்த
அருவித் தலையு மணிமலை யிடமும்
குளிர்பொழிற் சோலையுங் குயிற்றுறைப் பரப்பும்
மயில்விளை யாட்டு மான்கண மருட்சியும்
புயல்வளம் படுக்கும் பொருவில் வளமை
அவந்தி நாடு மிகந்துமீ தியங்கித்
தண்டா ரணியமுந் தாபதப் பள்ளியும்
வண்டார் சோலையும் வளங்கெழு மலையும்
மயிலாடு சிமையப் பொதியிலு மதன்மிசைக்
குளிர்கொள் சந்தனத் தொளிர்மலர்க் காவும்
காவி னடுவண வாவியுங் கதிர்மணித்
தேவ குலனுந் தென்பா லிலங்கையும்
....................காண்டகப் பொலிந்த
அராஅந் தாணமு மணிமணற் றெண்டிரைக்
குமரித் துறையு மமர்வனர் நோக்கி
விண்ணவு மலையவு மேவன பிறவும்
ஒண்ணுதன் மாத ருவப்பக் காட்டி
நற்றுணைத் தோழர் நால்வருந் தானும்
பொற்றொடி மாதரும் போதுபல போக்கித்
தன்னகர்க் காகிய வருங்கலந் தழீஇ
நன்னகர்ச் செல்வமு மெலிவு நோக்கி
உரிமைத் தேவி யுறுநோய் நீக்கிப்
பொன்னகர் புக்கனன் புகழ்வெய் யோனென்.

உரை

ச. வயாத் தீர்ந்தது

அஃதாவது வாசவதத்தையின் வயாவிருப்பம் நுகர்விக்கப்பட்டமையால் அந்நோய் தீர்ந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் செயல்)

க - சு : விசும்பின்..............இருந்தபின்

(பொ - ரை.) இங்ஙனம் நஞ்சுகன் வாசவதத்தையின் வயா நோய் தீர்க்கும் வழியை உதயணனுக்குக் கூறி வானின்கண் ஏறி மின்னல் போன்று விரைந்து சென்று மறைந்த பின்னர்ப் பசிய பொன்னாலியன்ற மாலையினையும் குளிர்ந்த நிறைத் திங்கள் போன்ற கொற்ற வெண்குடையினையும் செங்கோன்மைக்குப் பொருந்திய ஒழுக்கத்தினையும் உடைய அவ்வுதயணமன்னன் அவ்வியக்கன் வாயிலாய் மலைகளையுடைய பாலை நிலத்தின்கண் முழங்கி விழுந்த பெரிய பிடியானையினது தோற்ற முதல் சாவு இறுதியாக அமைந்த வரலாற்றினைக் கேட்டு அப் பத்திராபதியை விரைந்து காணுதற்கு விதுப்புறுகின்ற நெஞ்சத்தோடே சிறிது பொழுது இருந்த பின்பு என்க.

(வி - ம்.) இயக்கன் மறைந்தபின் என்க - செங்கோன்மைக்கு ஒன்றிய ஒழுக்கம் என்க.

(இதுவுமது)

எ - கக : அருமறை.....................உரைப்ப

(பொ - ரை.) மாவடுவினது பிளவு போன்ற கண்களையுடைய வாசவதத்தையின் வயாத் துன்பத்தையும் நினைந்து அவளது விருப்பம் நிறைவேறுதற்குக் காலம் நீளும் போலும் என்று தன் நெஞ்சில் நினைத்து அந்நெஞ்சத்தின்கண் நிலை பெற்றிருக்கின்ற அவ்வாசவதத்தையின் பொருட்டுத் தனது நெஞ்சழிந்து வெய்தாக உயிர்த்து நஞ்சுகன் தனக்குக் கூறிய பெறற்கரிய மறைமொழியாகிய அந்த வித்தையையுடைய பெரிய மந்திரத்தை ஓதத் தொடங்கிப் பெரிய இதழையுடைய நறிய மலர்மாலையினையுடைய அவ்வத்தவ நாட்டு மன்னன் இடையறாது கணியாநிற்ப என்க.

(வி - ம்.) அரிய மறையின் கண்ணதாகிய வித்தையாகிய பெரு மறை என்க. வடி - மாவடு. மாதர் : வாசவதத்தை. நெடிக்கும் - நீளும். நினைஇ - நினைந்து. உள்ளத்தன்னாள் - உள்ளத்திலுறையும் அவள். உயிரா - உயிர்த்து. வத்தவன் - உதயணன்.

(அமைச்சர் செயல்)

௧௨ - ௨0 : தீரும்................என்றலின்

(பொ - ரை.) இனி, பெருந்தன்மையையுடைய உருமண்ணுவா முதலிய அமைச்சர் தம்முட்கூடித் தேவியின் வயா நோய் தீர்தற்குரிய வழியை யாமே ஆராய்ந்து தெளிவேம் என்று கருதி ஆராய்பவர்; அது தீர்தற்கு வேறுவழி காணமாட்டாராய் நல்ல முயற்சியினாலே செய்து முடிக்கப்படாத காரியம் இல்லை என்று கருதிச் சோர்வின்றி விரும்பத்தகுந்த நட்புரிமையோடு அவ்வவந்தி நாடு முழுதும் சென்று ஆங்காங்கு உறையும் தச்சுத் தொழில் மாந்தரை எங்கெங்கும் சென்று அழைத்து வாருங்கோள்! என்று கட்டளையோடு தூதுவர்களை ஏவித் தச்சர் பலரை வருவித்துக் கொண்டு அவர்களை நோக்கி "நீவிர் பெறுதற்கரிய நங்கள் பெருந்தேவியார் விரும்பும் வயா நோய் விருப்பம் தீரும் பொருட்டு மிக உயர்ந்த வானத்திலே பறந்து செல்லும் இயந்திர ஊர்தி ஒன்றனை வாய்மையாகவே விரைந்து இயற்றித் தருவீர்" என்று கூறுநிற்ப என்க.

(வி - ம்.) வாயில் - வழி. "அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்" (திருக்குறள். ௬௧௧) என்பது பற்றி முயற்சியின் முடியாக் கருமம் இல் என்று கருதினர். நயத்தகும் - நயக்கத்தகும். தரீஇ - வரவழைத்துக் கொண்டு. தேவி : வாசவதத்தை சேயுயர் - மிக உயர்ந்த. புணரும் : முன்னிலைப் பன்மை.

(தச்சர் மறுத்தல்)

௨௧ - ௬ : நீர்...........இறைஞ்ச

(பொ - ரை.) அதுகேட்ட அத் தச்சர்கள் எல்லோரும் ஒருசேர ஆராய்ந்து அரசன் வெகுளின் தமக்குப் புகலிடம் பிறிதொன்றும் இல்லாமையால் அஞ்சியவராய் அவ்வமைச்சர் அடிகளில் வீழ்ந்து வணங்கிக் கூறுபவர், "பெருமானீர்! அடியேங்கள் நீரைச் சார்பாகக் கொண்டு இயங்கும் யந்திரங்களும், மரங்களைச் சார்பாகக் கொண்டு இயங்கும் யந்திரங்களும், நிலத்தைச் சார்பாகக் கொண்டு இயங்கும் எந்திரங்களும் அசைகின்ற மரக்கிளை இலை முதலியனவற்றைச் சார்பாகக் கொண்டு இயங்கும் எந்திரங்களும் என்னும் இந்த நால்வகை இயந்திரங்களையும் எந்தச்சு நூல்வழி நின்று இயற்றுவதல்லது, எமது அரிய உயிரை நீங்கள் கொள்ளினும் நீங்கள் கூறிய சேயுயர் விசும்பிற் செல்லும் எந்திரமியற்றுதல் எங்களுக்கு இயலாது" என்று கூறுநிற்ப என்க.

(வி - ம்.) ஊர்பவும் - இயங்குவனவும். அலங்குசினை – அசையும் கிளை. இயல்பவும் - இயங்குவனவும். ஆருயிர் கொளினும் என்றது

நீங்கள் எம்மைக் கொன்றாலும் என்றவாறு. அது - விசும்பிற் செல்லும் எந்திரம் செய்தல்.

> "யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
> வேந்து செறப்பட் டவர்" (குறள். ௮௯௫)

என்பவாகலின், மன்னர் ஏவலை மறுத்துழிச் செல்சார்பு பிறிதில தாயிற்று என்க.

(பத்திராபதி தச்சவுருவங் கொண்டு வருதல்)

உ௭ - ௩௩ : அந்தர..............உரைத்தலின்

(பொ - ரை.) இனி ஈண்டுத் தன்னைக் கருதி மந்திரங்கணிக்கும் உதயணன் கருத்தினை வானுலகத்தே இருந்த பத்திராபதி தன் ஓதி ஞானத்தால் உணர்ந்து, இத்தச்சர் உருவங்கொண்டு சென்று யான் இத்தொழிலை முடித்துக் கொடுப்பேன் என்று நினைந்தவளாய்த் தனக்குரிய தெய்வ வுருவத்தை விடுத்துக் கட்டவிழ்ந்து மலர்ந்த மாலையணிந்த தச்சுத் தொழிலால் சிறந்த அழகிய ஒரு இளந்தச்சன் வடிவங்கொண்டு அவ்வமைச்சர்கள் முன்னிலையிற் சென்று "ஐயன்மீர்! இவ்வெளிய தச்சர்களை வருத்துதல் வேண்டா! இவர்களை விட்டொழிக. யானே நுங்கள் இடர் நீக்கும் களைகணாக நீயிர் விரும்பிய வான ஊர்தியை விரைந்து இயற்றித் தருவேன்! நுங்கள் கவலையை விடுங்கள்" என்று கூறுதலாலே என்க.

(வி - ம்.) அந்தரவிசும்பு : இருபெயரொட்டு. இவ்வுரு - இத்தச்சர் வடிவம். இவ்வினை - வான ஊர்தி அமைக்குந்தொழில். அமருரு- அமரருரு. கையறவு - துன்பம். அலைத்தல் - வருத்துதல்.

(உதயணனுக்கு உருமண்ணுவா அறிவித்தல்)

௩௪ - ௪௧ : பூண்............யாதென

(பொ - ரை.) அவ்விளந் தச்சன் மொழியைக் கேட்ட உருமண்ணுவாவும் மிக விரைந்து சென்று பேரணிகலந்தாங்கிய மார்பினையுடைய மன்னனை யணுகி, "வேந்தர் வேந்தே! ஒரு இளைஞன் தச்சுத் தொழிலில் பொலிவுற்று அவ்வித்தையிலே விளங்கியவனாய்த் தலையில் மாலையினையும் காலில் வீரக்கழலையும் இடையில் கச்சினையும் மார்பில் மலர்மாலையினையும் வண்ணமிக்க ஆடையினையும் உடையனாய் யாண்டிருந்தோ வந்து எம்முன்னே தோன்றி 'இவ்வெளிய தச்சர்களை வருத்துதல் என் கொலோ? இவர் நீவிர் கூறும் எந்திரமமைக்க அறியார். ஆதலால் அத்தொழிலை விடுக' என்று கூறி 'யானே அத்தகைய எந்திரத்தை இயற்றித் தருகுவல் வருந்தற்க!' என்கின்றான். அவன் நம்பால் எய்திய துன்பத்தை அகற்றுபவனைப் போன்று தோன்று

கின்றான். இதற்குப் பெருமான் மறுமொழி என்னையோ?" என்று கூறாநிற்ப என்க.

(வி - ம்.) புரவலன் : உதயணன். பெருவிதுப்பெய்தி - மிக விரைந்து. இவர் - இத்தச்சர். வருத்துதலொழிகென என்க. மறுமொழி விடை.

(உதயணன் உடம்படல்)

சஉ - எ : விருப்புறு...............கொடுப்ப

(பொ - ரை.) அதுகேட்ட உதயணமன்னனும் பெரிதும் அவ்விளைஞனைக் காண விரும்பும் நெஞ்சோடு அவன் வரவினை வியந்து தன் விரலை நொடித்து, "அமைச்சனே! அத்தச்ச விளைஞன் கூறுவனவற்றையெல்லாம் குறையாமற் செய்து காலம் தாழ்த்தலில்லாமல் அவன் கேட்கும் பொருள் அரும் பொருளே யாயினும் கொடுப்பதே நன்றாம்!" என்று உருமண்ணுவாவுக்குக் கூறி ஏவுதலாலே அவ்வமைச்சனும் விரைந்து சென்று தமது வேணவாவிற்குப் பொருளாகிய வான ஊர்தியை இயற்றி முடித் தற்கு வேண்டிய பொருள்களை முறைமையோடே அவனுக்கே உரியனவாக வழங்காநிற்ப என்க.

(வி - ம்.) விரல்நொடித்து - விரலை வியப்பினால் நொடித்து என்றவாறு. நெடித்தல் செல்லாது - தாமதியாமல். குணம் – நன்மை. கோமகன் : உதயணன். வேணவா - மிக்க ஆசை. உரியனவாகக் கொடுப்ப என்க.

(பத்திராபதி வான ஊர்தியமைத்துக் கொடுத்தல்)

சஅ - ருo : நிறை.............உரைப்ப

(பொ - ரை.) அப் பொருள்களை அளவுடன் பெற்றுக் கொண்டு அவ் விளந்தச்சன் ஒரு மறைவான இடத்தையணுகி ஒருசில நாள் கழிந்த பின்னர் ஒருநாள் அரசவைக்கண் வந்து, "வேந்தே! யான் இயற்றியுள்ள வான ஊர்தியின் அமைப்பினை நன்கு கண்டருளுக" என்று கூறுதலாலே என்க.

(வி - ம்.) நிறை - அளவு. மன நிறைவுமாம். பொருள்களைப் பெற்றுக்கொண்டு எந்திரம் அமைப்பான்போல மறைவிடத்திலே புகுந்து சில்நாள் கழித்த பின்னர் என்றவாறு. அமைவு - அமைப்பு. அவன் : பத்திராபதியாகிய அவ்விளந்தச்சன். உதயணனுக்குரைப்ப என்க.

(உதயணன் முதலியோர் அவ் வானஊர்தியில் ஏறிச் செல்லல்)

ருக - கூ : உமை................இருப்ப

(பொ - ரை.) அதுகேட்ட உதயண மன்னன் மகிழ்ந்து உமையம்மையாரோடு கூடிய இமைத்தலில்லாத திருக் கண்களை

யுடைய காண்போர் கண்ணை வருத்தாநின்ற விளங்கிய பேரொளியினையுடைய இறைவனாகிய சிவபெருமான்போலே சென்று தானும் தன் பட்டத் தேவியாகிய வாசவதத்தையோடு அழகுண்டாக அவ் வான ஊர்தியின்கண் ஏறித் தேன் நிரம்பிய மலர்மாலை யணிந்த அத் தேவியோடே அமரர் கோமான் போன்று எல்லையற்ற அழகோடே அவ்வூர்தியின்கண் நன்கு வீற்றிராநிற்ப என்க.

(வி - ம்.) கடவுள் - சிவபெருமான், தேவியோடு உதயணன் இணைந்து சென்றமைக்கு உமையொடு புணர்ந்த கடவுள் உவமம். வானவூர்தியின்கண் தேவியோடு வீற்றிருந்தமைக்கு இந்திரன் உவமம். மார்பன் : உதயணன். தகை - அழகு. வானோர் கிழவன் - இந்திரன். கோதை : வாசவதத்தை.

(இதுவுமது)

ருள - கூகூ : உருமண்ணுவா..............ஏறலும்

(பொ - ரை.) அப்பொழுது உருமண்ணுவா என்னும் அமைச்சனும் தன் மனைவியும் கருவுற்றிருப்பவள் வயாவினால் அவ் வாசவதத்தை விரும்புவதெல்லாம் விரும்புவதனை உணர்ந்தவனாய் அவள் வயாநோய் தீர்த்தற்பொருட்டுத் தன் மனைவியோடே அவ்வூர்தியின்கண் ஏறுதற்கு நினைப்பவன் அவ்வூர்தியின்கண் ஏறுதல் கூடுமோ? கூடாதோ? என்று மனச் சுழற்சியை யடைந்து யாது செய்வதென்றறியாமல் ஒருவாறு துணிந்து வேந்தனை நோக்கிப் "பெருமானே! கருவுற்றிருக்கின்ற என் மனைவிதானும் தேவியார் விரும்புவதனையே விரும்புகின்றனள்" என்று கூற, அதுகேட்ட பகைவரை நேர்நின்று வென்று கொல்லும் ஆற்றலையுடைய படைகளையுடைய உதயணனும் உருமண்ணுவா மனைவியோடு ஊர்தியில் வருவதனை விரும்பியவனாய் அத் தச்சனை நோக்கித் தன் குறிப்புத் தோன்றப் புகழ்வானாக, அதுகேட்ட அவ்விளந்தச்சன் "வேந்தே! அவ்விருவரும் ஏறுவாராக!" என்று கூறுதலாலே வீறுடைய அவ் விமானத்தின்கண் உருமண்ணுவாவும் அவன் மனைவியும் விரைந்து ஏறுநிற்ப என்க.

(வி - ம்.) தெருமரல் - சுழற்சி. என்றுணை - என் மனைவி. இது - இவ் விருப்பம். மெச்சுவனன் - புகழ்பவன். அவன் - அவ்விளந் தச்சன். வீறு - வேறொன்றற்குமில்லாத சிறப்பு. அவர் - உருமண்ணுவாவும் அவன் மனைவியும்.

(இதுவுமது)

கூச — எ0 : மற்றை..........கூறென

(பொ - ரை.) மேலும் அமைச்சருள் எஞ்சிய யூகியும் வயந்தகனும் இடவகனும் ஆகிய மூவரும் உதயணனை யணுகி,

"வேந்தே! கோப்பெருந்தேவிபோலவே கருவுற்றிருக்கும் எங்கள் மனைவிமாரும் வானில் ஏறி ஊசலாடுதற்கு விரும்பா நின்றனர். அவர்கள் வயாவிருப்பத்தைத் தீர்ப்பதற்குப் பசிய பொன்னு லியன்ற கிண்கிணியையுடைய அப் பாவைமாரெல்லாம் இதன்கண் ஏறுதற்கியலாத நிலைமையினைக் கண்டு யாங்கள் அம் மகளிர்க்குக் கூறித் தடை செய்துள்ளேம்" என்று கூறாநிற்ப. அதுகேட்ட வெல்லும் போரையுடைய அவ் வேந்தனும் அவர் வரவினையும் விரும்புவானாய் அத் தச்சனை மீண்டும் நோக்கி நண்பனே! அவர்கள் விரும்புவதுபோல இவ் விமானத்தில் அவர்களும் ஏறுதல் கூடுமோ? இவ் விமானப் பொறியின் அமைப்பினை எனக்குத் தெரியக் கூறுக! என்று வேண்டாநிற்ப என்க.

(வி - ம்.) மூவரும் யூகி, வயந்தகன், இடவகன் ஆகிய மூவரும். தேவியின் வயிற்றிற் பிறக்கும் மகவு வித்தியாதரருலகை ஆளும் ஊழுடையது என்பது முன்னர்க் கண்டாம். இவ்வமைச்சர்கள் மனைவி மார் ஈனும் மகவுகளும் அம் மகவிற்கு அமைச்சராய் அந் நாட்டினை ஆளும் ஊழுடையன ஆதலின் அவர் வயாவிருப்பமும் தேவியின் விருப் பத்தையே ஒத்திருந்தது என்பது ஈண்டு ஊகித்துக் கொள்ளல் வேண்டும். கொற்றவன் - குபேரன். விசும்பில் ஊசலாடும் வேட்கை என்றவாறு. பாவையர் - அமைச்சர் மனைவிமார். ஒல்லா நிலைமை - விமானத்தில் மேலும் மேலும் ஏறுதல்கூடாத தன்மை. உரைத்தனம் என்றது கூறித் தடுத்துள்ளேம் என்பதுபட நின்றது. வேந்தன் - உதயணன். இத் தச்சன் உண்மையான தச்சன் அல்லன் என்பது தோன்றத் தச்சனை நோக்கி என்றொழியாது தச்சனாயவன்றன்னை என வேண்டாது விரித்து வேண்டியது முடித்தார். அச்சு - அச்சின் அமைதி. பொறியின் அமைப்பு. அச்சி னமைதி கூறு என்றது இதன்கண் இன்னும் சிலர் ஏறுதலுங்கூடுமோ? கூடாதோ? என்று எனக்கு அறிவிப்பாயாக என்றவாறு.

(இதுவுமது)

எக - சா: உலகம்...............கூறி

(பொ - ரை.) அதுகேட்ட அத் தச்சன் "சான்றோர் பல ராலும் புகழப்படுகின்ற வேந்தே! இவ் விமானத்தில் இவர்களே யன்றி இவ்வுலகத்தில் வாழும் மாந்தரெல்லாம் ஏறினும் ஏறுவா ராக! அஃது எல்லோருக்கும் இடந்தரும்," என்று கூறி வணங்காநிற்ப. அதுகேட்ட மற்றையோரும் மகிழ்ந்த நெஞ்சத் தோடே விரும்பி முன்னர் ஏறியவரோடு ஏறியிராநிற்பப் பின்ன ரும் இதழ் விரிந்த மலர் மாலையணிந்த அத் தெய்வத் தச்சன் உதயணனை நோக்கிக் குற்றந்தீர்ந்த அவ் வேந்தன் அறிந்து கொள்ளும் பொருட்டு "வேந்தே! இவ் விமானத்தை விரைந்து செலுத்துதற்கும், செலவினைத் தவிர்த்து நிறுத்துதற்குமுரிய பொறிகள் உன்னுடைய நெஞ்சினுள்ளேயே இருக்கின்றன

என்று அக் கருத்து அவனுக்கு விளங்கும்படி கூறி

உலகம் : ஆகுபெயர். உலகமெல்லாம் ஏறினும் ஏறுக என்றது இவ் விமானம் எத்தனை பேர் ஏறினும் இடங்கொடுக்கும் என்றவாறு. குருசில் : உதயணன். அவன் : தச்சன். கடுப்பு - விரைந்து செலுத்துதல். தவிர்ப்பு - செலவினைத் தவிர்த்து நிறுத்துதல். இவ் விமானம் நீ விரைந்து செல்ல நினையின் விரைந்து செல்லும். நிறுத்த நினையின் நிற்கும். இதன் செலவிற்கு நின் நினைவே காரணம் என்பான் கடுப்புந் தவிர்ப்பும் நின் உள்ளத்துள்ளன என்றான். எனவே அதனை மேனோக்கிச் செலுத்துதலும் திசைகளிலே திருப்பிச் செலுத்துதலும் பிறவும் ஆகிய எல்லாத் தொழில் விகற்பங்களும் அவன் நினைப்பாலேயே நிகழ்வனவாம் என்பதும் உணர்த்தினான் ஆயிற்று என்க.

(இதுவுமது)

௭௭ - ௮௧ : ஏறும்............பின்

(பொ – ரை.) வானத்தே ஏறிக் காணுதற்குரிய இடங்களையும், இறங்கும் வகைகளையும் காண்டற்குரிய ஆறுகளிருக்குமிடங்களையும் தீவுகளையும் செல்லத்தகாத இடங்களையும் கூறுபவன் பின்னரும் நினைந்து அவ் வேந்தன் குறிக்கொண்டு போற்றுதற்குரிய அவ் விமானத்தின் இலக்கண வகைகளையும் இது இது என்று சுட்டிக்காட்டி நன்மையுண்டாக எதனையும் மறைத்தலின்றி நன்கு விரித்துக் கூறிய பின்பு என்க.

(வி - ம்.) தீபம் - தீவுகள். அடையாஇடன் - செல்லக்கூடாத இடங்கள். அவையாவன பனிமூடிக் கிடக்கும் துருவங்கள் போல்வன. அவை உடல்நிலைக் கொவ்வாவாகலின் அங்ஙனம் கூறல் வேண்டிற்று. மறையாது நலத்தக நன்கனம் விரித்தபின் என மாறுக.

(இதுவுமது)

௮௨ – ௯ : விளங்கொளி..................துயல்வர

(பொ - ரை.) இவ்வாறு அத் தச்சனால் விமானம் பெற்று அதன் இயல்புகளையும் உணர்ந்த அவ்வுதயண மன்னன் அவ் விமானத்தைச் செலுத்தத் தொடங்கி வெவ்விய ஞாயிற்று மண்டிலத்தின் அசையாநின்ற ஒளியை அகற்றும் மற்றொரு விளங்கிய ஒளியையுடைய மண்டிலமொன்று வானத்தே தோன்றும் தோற்றத்தைப்போல அவ் விமானத்தை முழுத்தந் தோறும் நன்றாக வானத்தே ஏற்றி முறைமுறையே வானத்தின் கண் உயரும்படி செலுத்தி அவ் விமானத்தினது இயல்பினையும் அதனுள் குறிப்புக்களையும் அறிந்துகொண்டவனாய் நிலத்தினின்றும் அகன்று முகில்களின் நெஞ்சு கிழியச் செலுத்தி அப்பாற்சென்று வடக்கினும் பின்பு மேற்கினும் வானத்தைப் பொருந்த உயர்ந்துபோய்க் கட்டோடு தொடுக்கப்பட்ட அவ் விமானத்தினது மாலைகள் அசையும்படி செலுத்தி என்க.

(வி - ம்.) அவ் விமானம் கதிர்ச்செல்வன் ஒளி தவிர்க்கும் மற்றோர் ஒளி தோன்றிய தோற்றம்போலத் தோன்றும்படி வானத்தில் ஏற்றி என்க. நாளும் நாளும் - முழுத்தந்தோறும் முழுத்தந்தோறும். கோள் - இயல்பு. குறி - குறிப்பு. தொடக்கு - பிணிப்பு. தொடர்ந்த - தொடுத்த. துயல்வர - அசைப்ப.

(இதுவுமது)

௯௦ – ௧௦௦ : ஏற்றரும்..................நோக்கி.

(பொ - ரை.) ஏறுதற்கரிய மலைகளையும் செல்லுதற்கரிய தீவுகளையும் துறவோர் உறையும் ஆற்றின் பக்கத்திலுள்ள பள்ளிகளையும் பதினாறாயிரம் என்னும் கணக்கிற்பரவிய செல்வத்தையும் உடைய நன்னெறியாலே மாட்சிமைபெற்ற பிரச்சோதனனுடைய அகன்ற நாட்டினையடைதலும் அதன் அழகிய தோற்றத்தால் இஃது அமரர் நாடோ என்று ஐயுற்றவனாய்த் தன் கையின்கண் காழ்த்த அகிலினது நறிய புகையைக் கொண்டு மலர் முதலிய பலிப்பொருளை இட்டு வணங்கப் போவான் போன்று உயிரினங்களின் துன்பத்தைத் துவர நீக்கும் அவ் வமர மன்னனைக் காணவெண்ணி அவன் திருவடி நீழலை அடையத் தாழப் பறந்து சென்று ஆங்குப் பிரச்சோதன மன்னனைக் கண்டு இந்திரன் போன்று ஆயிரங் கண்ணின்றி இரண்டே கண்ணுடைமையால் இவன் பிரச்சோதனனே என்று தன் ஐயத்தினின்றும் தெளிந்து அவனோடு அளவளாவுதலின்றி அவனைக் கண்டதுணையானே அவ்விடத்தினின்றும் விமானத்தைச் செலுத்திப் பருத்த மூங்கிலையொத்த மெல்லிய தோளையுடைய பதுமாபதியினது இராசகிரியம் என்னும் நல்ல நகரத்தை அவ் விமானம் அணுகுதலாலே அவ்வுதயணன் வாசவதத்தையின் திருமுகத்தை விரும்பிப் பார்த்து என்க.

(வி - ம்.) ஆற்றயற்பள்ளி - யாற்றின் பக்கத்தேயமைந்த துறவோர் பள்ளி. பதினாறாயிரம் பதினாறாயிரம் என்னும் கணக்கில் அமைந்த பல்வேறு செல்வமும் என்க. விதி - நூல் நெறி. இவனும் - உதயணனும். கலிகொல் மன்னன் - இந்திரன். பிரச்சோதன நாட்டை அமரர் ஊர் என்று கருதி அங்குறையும் இந்திரனைப் பணியச் செய்வான் போன்று சென்றெனக. கண் காரணமாக ஐயிற்றேறி என்க. ஐயம் - ஈறுகெட்டு ஐ என்று நின்றது என்க. கலி கொண்...... கண்ணுருது - என்னுந் துணையும் வேறுபொருள் தோன்றினுங் கொள்க.

(இதுவுமது)

௧௦௧ - அ : பொன்னிழை............பின்னர்

(பொ - ரை.) "பொன்னாலியன்ற அணிகலனணிந்த நங்காய்! யாம் இந்த இராசகிரிய நகரத்தின்கண் இவ்விமானத்தை

இறக்கி அந்நகரத்தின்கண் புகுவோமோ?" என்று வினவாநிற்ப. அதுகேட்ட வாசவதத்தை பறந்து செல்லுதலிலேயே வேட்கை மிக்கவளாய் வேண்டா என்று விடை இறுத்தபின், மீண்டும் வானவெளியிலே மேலே உயர்ந்து நாளும் நாளும் நன்றாக அவ் விமானம் பறந்து செல்லும்படி யாழ் வித்தைக்குச் சிறப்புரிமை யுடையவனாகிய அவ்வுதயணமன்னன் இவ்வாறு நினைத்து முறை முறையே அவ்விமானத்தைச் செலுத்தி அவ்விமானத்தினது இயல்பினையும் குறிக்கோளினையும் நன்கு பழகிக்கொண்டவனாய் முகில்களின் நெஞ்சு கிழியும்படி அகன்ற வானத்திலே ஏறி அவ் விமானம் எழுவதற்குரிய எல்லைவரை எழுந்து முடிந்தபின்னர் என்க.

(வி - ம்.) பொன்னிழை: அன்மொழி; வாசவதத்தை. இந்நகர் - இராசகிரியம். மேக்கு - மேலே. யாழின் கிழவன்: உதயணன். கோளுங் குறியும் கொண்டனனாகி, முகிலுளங்கிழிய என்னும் இத் தொடர் முன்னும் (௮௬ - ௭) அடிகளில் வந்தமை காண்க. எழுச்சி எல்லை என்றது விமானம் பறத்தற்குரிய காற்றியக்கம் இருக்குந்துணை யும் என்க. அதற்குமேல் பறக்கவியலாமையால் அஃது எழுச்சி எல்லை யாயிற்று. முனிதல் - மேலே பறத்தற்கு விரும்பாமை.

(இதுவுமது)

௧௦௬ - ௧௩ : விழுச்சீர்..............ஆகி

(பொ - ரை.) பறத்தற்கு மிகவும் சிறப்புடையதாகிய அவ் வான வெளியின்கண் இயங்குதற்கு நன்கு அறிதலாலே மேலும் செல்லுங்கால் பெரிய பொன்னாகிய மேருமலையை அவ் வானத்திலிருந்தே கண்டு ஒரு யோசனைத் தொலைவு அவ்விடத்தி னின்றும் இறங்கி அம்மலைச் சிகரத்தின்பக்கத்தே சென்று அதனை வலம் வந்து உயிர்களின் மாசு தீர்தற்குக் காரணமான சிறப்பினையுடைய ஆங்குள்ள அருகன் கோயிலைக் கைகுவித்துத் தொழுது பின்னர் முறையே செல்லுதற்குப் பொருந்தியவனாய் என்க.

(வி - ம்.) விழுச்சீர் - பெருஞ்சிறப்பு. அறிதலின் மேலும் இயங்கி என்க. மூரி - பெரிய. மகாமேரு என்னும் வழக்குப்பற்றி மால்வரை என்றார். ஓசனை - யோசனை. இஃதொரு நீட்டலளவை. முகடு - உச்சி, சிகரம் என்க. சேதியம் - அருகன் கோயில்.

(இதுவுமது)

௧௧௪ - ௨௧ : ஏறி..............களரியும்

(பொ - ரை.) வீசாநின்ற காற்று எடுத்தலாலே வானத் தின் மேல் எழுந்து பின்னர் மெல்லமெல்ல நிலத்தை யடையா நின்ற மூங்கிலினது இலையின் வீழ்ச்சிபோலே தாம் விரும்பிய

விடத்து மெல்ல இறங்கியும், பின்னர் ஏறியும் நல்வினையை மேற்கொண்டுள்ள விச்சதார வீரர்கள் வாழும் உலகின்கண் ஒப்பனையமைந்த நகரங்களையும், தண்ணிய பூஞ்சோலைகளையும் கண் கொள்ளுதலரிய அழகினையுடைய தன்மையை யுடையனவாய் உயர்ந்து சென்று வானில் ஓங்கி நிற்கும் அருகன் கோயில் தோறும் ஒன்றே போல்வனவாகிய கடவுள் வழிபாடு செய்வோருடைய ஒரு நூறாயிரம் பூசனை மண்டபங்களையும் என்க.

(வி - ம்.) எறிவளி : வினைத்தொகை. வீசுங்காற்று என்க. வெதிரிலைவீழ்ச்சியின் - மூங்கிலிலையினது வீழ்ச்சியைப் போல. சேதி- அருகன்கோயில். களரி - தொழில் நிகழும் இடம். பூசனைக்களரி என்பது வழிபாடு செய்யும் மண்டபம் என்றவாறு.

(இதுவுமது)

கஉஉ - கூ: கிளர்...............ஓட்டி

(பொ - ரை.) ஒளி கிளருகின்ற உயர்ந்த இமயமலையையும் கங்கையும் சிந்துவும் உள்ளிட்ட பேரியாறுகளையும் வளவிய மலர் நிரம்பிய நீர்நிலைகளையும் மணிமயமான நிலத்தையுடைய பரப்பினையும் மேம்பாடுடைய மேருமலையினையும் அம்மலையின் மேலுள்ள சோலைகளையும் சிந்து சீதை சீதோதகை முடிவற்ற விதையம் அழகால் திகழுகின்ற அந்தியும் தேவகுருவும் உத்தர குருவும் பத்தாகிய இரதமும் என்னும் இவ்விடங்களையுமெல்லாம் முடியக்காட்டி அவ்வானவூர்தியைத் தன் மனத்தினும் காற்றினும் காட்டில் விரைந்து செல்லும்படி தனது நினைவிசைப்பினால் செலுத்தி என்க.

(வி - ம்.) கெங்கை - கங்கையாறு. சிந்து (கஉக) ஓரியாறு. நிலப்பூமி : இருபெயரொட்டு. சிந்து (கஉ௬) ஓரிடம். சிந்து முதலாக இரதம் ஈறாகவுள்ள இவையெல்லாம் இடப்பெயராகக் கொள்க. இசைப்பின் - தன் மனத்தை இயைந்தல் வாயிலாய் என்க.

(இதுவுமது)

க௩0 - ௫: எச்சார்...........முடிந்தபின்

(பொ - ரை.) அவ்வித்தியாதரருலகின்கண் எல்லா இடங்களினும் இனிதாக வாழுகின்ற அவ்விச்சாதரருடைய வாழ்க்கை முறையினை வாசவதத்தை முதலிய வயாவிருப்பமுடைய அம் மகளிர்க்கெல்லாம் காட்டாநிற்றலாலே விராய்மலர் மாலையணிந்த அம் மகளிரெல்லாம் நீங்காத ஊக்கத்தோடே ஒருங்கே பலவாகிய அக்காட்சிகளையெல்லாம் கண்டு கண்டு மேலும் காண விரும்புவாராய் நீர்த்துளிகள் வீழ்கின்ற முகில்களையுடைய வானின்கண்ணே ஊடறுத்து இயங்கா நின்ற அவ்வித்தியாதரருலகின் எல்லை முடிந்தபின்னர் என்க.

(வி - ம்.) விதி - நாடு நகரம் முதலியன அமைத்து வாழும் முறை. விராய்மலர் ஒருவகைமலர். கோதையர் : வாசவதத்தை முதலிய மகளிர். உராஅ - நீங்காத. அசும்பு - நீர்த்துளி. அப்பால் எல்லை - அவ்வித்தியாதரருலகின் எல்லை.

(இதுவுமது)

௧௩௫ — ௪௩ : இப்பால்..............இயங்கி

(பொ - ரை.) அவ் வித்தியாதரருலகத்தின் இப்பாலுள்ள வாசவதத்தை பிறந்த நாடாகிய அவந்தி நாட்டையும் அந்நாட்டின்கண் அமைந்த அழகிய உஞ்சை நகரத்தையும் மலைகளையும் அம்மலைச்சாரலில் உறைகின்ற இளங்களிற்றியானைக் கூட்டங்களையும் பிணைமானும் கலைமானும் கவரிமானும் அதன் ஏறும் கூடிக் களியாநின்ற அருவி வீழ்கின்ற இடங்களையும் அழகிய பிறமலையிடங்களையும் குளிர்ந்த பொழிலாகிய சோலைகளையும் குயில்கள் தொக்கிருக்கின்ற நிலப்பரப்பினையும் மயில் விளையாடுதலையும் மான் கணங்கள் மருண்டோடுதலையும் கண்டு கண்டு முகில் பொய்யாது பெய்து வளமுண்டாக்குகின்ற ஒப்பற்ற வளத்தையுடைய அவ் வவந்தி நாட்டையுங் கடந்து மேலும் சென்று என்க.

(வி - ம்.) இப்பால் என்றது இந்த நாவலந்தீவின்கண் என்றவாறு. அவந்திகை - வாசவதத்தை. உஞ்சேனை - உஞ்சை நகரம். (உஜ்ஜையினி). மழகளிறு - இளங்களிறு. கலைமானுகிய ஏறும் எனினுமாம். கவரி - கவரிமான். அருவித்தலை - அருவிவீழுமிடம். புயல் - முகில். வளமை - வளப்பம். மீது - மேலும்.

(இதுவுமது)

௧௪௪ - ௫௨ : தண்டாரணியம்................நோக்கி

(பொ - ரை.) தண்டகாரணியத்தையும் ஆங்குள்ள துறவோர் பள்ளிகளையும் வண்டுகள் முரலும் சோலைகளையும் வளம் பொருந்திய மலைகளையும் கண்டு சென்று அப்பாலுள்ள மயில்கள் ஆடுகின்ற சிகரங்களையுடைய பொதிய மலையினையும் அதன் மேலுள்ள குளிர்ச்சியையுடைய சந்தன மரங்களையுடைய ஒளிருகின்ற மலர்ச் சோலைகளையும் அச்சோலைகளினிடையே அமைந்தனவாகிய நீர் நிலையினையும் ஒளிமணி பதித்தியற்றிய கோயில்களையும் கண்டு வணங்கி அப் பொதிய மலையின் தென்பாலுள்ள இலங்கையினையும் கண்டு ஆண்டுள்ள........................அழகால் தகுதிபெற்றுப் பொலிந்துள்ள அருகன் கோயில்களையும் வணங்கி மீண்டும் வந்து அழகிய மணற்பரப்பிலே தெளிந்த அலைபுரளாநின்ற கடலினது குமரித் துறையினையும் பெரிதும் விரும்பி நோக்கி என்க.

(வி - ம்.) தண்டாரணியம் என்னுங் காடு. தாபதப்பள்ளி - துறவோர் இருக்கை. சிமையம் - சிகரம். அதன்மிசை - அப்பொதிய

மலையின்மேல். தேவகுலன் – கோயில். ௯௰ஆம் அடியில் முற்பகுதி இரண்டு சீரழிந்தன. அராஅந்தாணம் – அருகன் கோயில். குமரித் துறை – கன்னியாகுமரிக் கடற்றுறை.

(இதுவுமது)

௯௫ – ௬௦: விண்ணவும்............வெய்யோனென்

(பொ – ரை.) பின்னரும் வானத்தினுள்ளனவும் மலையின் மேலுள்ளனவும் பிறவும் ஆகிய விரும்பப் படுவனவற்றை யெல்லாம் அவ்வுதயண மன்னன் ஒள்ளிய நெற்றியுடைய வாசவதத் தையையுள்ளிட்ட அம் மகளிரெல்லாம் கண்டு மகிழும்படி காட்டி இவ் வானவெளிச் செலவின்கண் அம் மன்னன் தன் நல்ல துணைவராகிய தோழர் நால்வரோடும் பொன்வளையணிந்த மாதர் களோடும் நாள்கள் பல போக்கி ஆங்காங்கே தன் நகரத்திற்கு வேண்டிய பெறற்கரிய அணிகலம் பலவற்றை ஈட்டிக் கொண்டு இதனால் தன் பெருந்தேவியாகிய வாசவதத்தை முதலியோ ருடைய மிக்க வயா நோயைத் துவர நீக்கித் தம்மைப் பிரிந்திருத் தலால் தனது நல்ல கோசம்பியில் வாழும் மாந்தர் மெலிவர் என்பதனையும் அந் நகரின் செல்வ நுகர்ச்சியினையும் நினைத்த வனும் புகழை விரும்புகின்றவனுமாகிய அவ்வுதயணன் மீண்டு பொன்னுலியன்ற தனது கோசம்பி நகரத்தின்கண் புகுந்தான் என்க.

(வி – ம்.) விண்ண, மலைய, மேவன என்னும் இம் மூன்றும் பலவறிசொல். நன்னகர் : ஆகுபெயர். பொன்னகர் – கோசம்பி. புகழ் வெய்யோன் : புகழை விரும்பும் உதயணன்.

௪. வயாத் தீர்ந்தது முற்றிற்று.

ரு. பத்திராபதி உருவுகாட்டியது

இதன்கண் : *உதயணன் தச்சவுருவங் கொண்ட பத்திராபதியை அழைத்துக் கூறலும், தச்சனுக்குச் சிறப்புச் செய்தலும், பத்திராபதி தன் வரலாறு கூறுதலும், உதயணன் எண்ணுதலும், பத்திராபதி தன் உருவத்தைக் காட்டி மீளலுங் கூறப் படும்.*

பொன்னகர் புக்கபின் புகழ்மீக் கூறி
மின்னிலங் கவிரொளி வெய்யோன் மேவும்
வைய மியற்றிய கைவினை யாளன்
வருக வென்றுதா னருளொடு பணிப்ப
நயந்துவந் திறைஞ்சிய வையத் தலைவனை
வியந்த விருப்பொடு நயந்துமுக நோக்கித்
தொல்லைச் செய்த நன்னரு மறியேம்
எல்லையில் பெருந்துய ரெய்தின மகற்றினை
அரசி னுகா தாணையி னுகாது
விரைசெல லிவுளியொடு வெங்கண் வேழம
பசும்பொ னுடைப் பண்ணொடு கொடுப்பினும்
விசும்பிடைத் திரிதரும் வேட்கை வெந்நோய்
பொன்னிறை யுலகம் பொருளொடு கொடுப்பினும்
துன்னுபு மற்றது துடைக்குந ரின்மையின்
உறுகண் டீர்த்தோய்க் குதவியோன் றுற்றிப்
பெறுகுவம் யாமெனப் பெயர்ப்பதை யறியேம்
நல்வினை யுடைமையிற் றேல்வினை தொடர்ந்த
எந்திரந் தந்து கடவுளை யொத்தியென்
றன்புகலந் தொழுகு மறிவிற் பின்னி
அருளுரை யளைஇப் பொருளுரை போற்றித்
தானணி பெருங்கலந் தலைவயிற் களைந்து
தேனணி தாரோன் பெருஞ்சிறப் பருள
அருளெதிர் வணங்கி யதுவுங் கொள்ளான்
பொருளெனக் கென்செயும் புரவல போற்றெனா
என்முதல் கேளெனத் தொன்முத றொடங்கிச்

சுருங்கா வாகத் தரம்பை தன்மையும்
கருங்கோட்டுக் குறவர் கணமலை யடுக்கத்
திரும்பிடி யாயங் கிற்ற வண்ணமும்
ஒன்று மொழியாது நன்றியின் விரும்பி
மயக்குறு நெஞ்சின் மன்னவன் முன்னு
இயக்கன் கூறிய திவளுங் கூறினள்
உள்ள முருக்கு மொள்ளமர்க் கிளவி
ஆரா வுள்ள முடையோர் கேண்மை
தீரா தம்ம தெளியுங் காலென
மேனீ செய்த வுதவிக் கியானோர்
ஐயவி யனைத்து மாற்றிய தில்லென
முன்றனக் குரைத்தன முறைமுறை கிளந்து
நீயும் யானும் வாழு மூழிதோறும்
வேறல மென்று விளங்கக் கூறி
அன்றுதான் கொண்ட வுருவு நீக்கித்
தன்னம ருருவ மன்னவன் காணக்
காட்டின ளாகி வேட்கையின் விரும்பி
விஞ்சை மகளவ் விழைபிடி யாகி
எழிலி மீதாங் கினிதி னடப்ப
வளம்படு வாயிலு மவள்பெயர் கொளீஇ
வாயி லாளரோடு வத்தவன் வழிபடப்
போயினன் மாதோ புனையிழை நகர்க்கென்.

உரை

௫. பத்திராபதி உருவுகாட்டியது

அஃதாவது - தச்சனாய் வந்த பத்திராபதி உதயணனுக்குத் தன்னுடைய பழைய உருவத்தைக் காட்டிய செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(உதயணன் தச்சவுருவங் கொண்ட பத்திராபதியை அழைத்துக் கூறல்)

க - அ: **பொன்னகர்...............அகற்றினை**

(பொ - ரை.) *இவ்வாறு உதயண மன்னன் வாசவதத்தையின் வயா நோய் தீர்த்து அழகிய தனது கோசம்பி நகரத்திற்*

புகுந்த பின்னர் மின்னல் போல விளங்குகின்ற விரிந்த ஒளியை யுடைய கதிரவனாலும் விரும்புதற்குத் தகுந்த வானவூர்தியை இயற்றித் தந்த கைத்தொழில் வல்லவனாகிய அத்தச்சனுடைய புகழை அவையோர் உணரும்படி மிகுத்துக் கூறி அத்தச்சன் பால் அருளுடையனாய் அவன் இங்கு வருவானாக என்று கட்டளை இடுதலாலே, மன்னவன் அழைப்பினை விரும்பித் தன் முன்னிலை யில் வந்து வணங்கி நின்ற விமானத் தலைவனாகிய அத்தச்சனை உதயணன் வியந்த விருப்பத்தோடே அவனை நயந்து அவன் முகத்தை நோக்கித், "தச்சுவினை வல்லோய்! யாங்கள் உனக்கு முன்பு யாதொரு நன்மையும் செய்தறியோம். அங்ஙனம் இருப் பவும் நீ வலியவந்து எமக்கெய்தி யிருந்த எல்லையில்லாத பெரிய துன்பத்தைக் களைந்தனை!" என்க.

(வி - ம்.) பொன்னகர் - கோசம்பிநகர். உதயணன் நகர் புக்க பின் புகழ் மீக் கூறப்பட்டு எனினுமாம். மின்னிலங்கு அவிரொளி வையம், வெய்யோன் மேவும் வையம் எனத் தனித்தனி கூட்டுக. கைவினையாளன் - தச்சன். வையத்தலைவன் - தச்சன். வையம் - ஈண்டு விமானம். தொல்லை - முன்பு. நன்னர் - நன்மை. பெருந்துயர் என்றது வாசவதத்தையின் வயா நோய் தீர்க்கலாகாமையை. இனி வெய்யோன் - உதயணன் எனக் கொண்டு அதற் கேற்பக் கூறினும் அமையும்.

(இதுவுமது)

கூ - கசு : அரசின்..............அறியேம்

(பொ - ரை.) "ஐய! நீ செய்த அவ்வுதவி எனது அரசாட்சியினாலும் ஆற்றலாகாது; எனது கட்டளையினாலும் ஆற்றலாகாது; அன்றியும் விரைந்து செல்லும் குதிரையும் தறுகண்மையுடைய யானையும் ஆகிய இவைகளைப் பசிய பொன்னாலாகிய முகபடாம் முதலியவற்றால் ஒப்பனை செய்து வழங்கினும், நிறைந்த பொன்னும் பொருளும் யாமாளும் உலக மும் ஒரு சேரவழங்கினும், எம்பால் வந்து வாசவதத்தை எய்தி யிருந்த வானிலே சுற்றித்திரியும் விருப்பமாகிய வெவ்விய வயா நோயைத் தீர்ப்பார் யாருமிலர். அங்ஙனமிருப்பவும் வலியவந்து அத் துன்பத்தைத் தீர்த்துவிட்ட உனக்குக் கைம்மாறாக யாமும் ஒருதவியைச் செய்வேம் என்று கருதுமிடத்தும் அதற்குக் கைம் மாறாகத் தகுந்த தொன்றனை யாம் அறிகின்றிலேம்" என்க.

(வி - ம்.) ஓடை - முகபடாம். பண் - பண்ணுறுத்தல். துன் னுபு - துன்னி. உறுகண் - துன்பம். பெயர்ப்பதை - கைம்மாற்றை.

(உதயணன் தச்சனுக்குச் சிறப்புச் செய்தல்)

௧எ - உஉ : நல்வினை.............அருள

(பொ - ரை.) யாம் முற்பிறப்பிற் செய்த பழவினையோடு தொடர்புடைய நல்வினையை உடையே மாகலிற்போலும் நீ வலிய வந்து எந்துயர் தீர்க்கும் வானவூர்தியை இயற்றித்தந்து எம் துயர் களைந்து எங்களுக்குக் கடவுள் போல்கின்றனை !" என்று அன்பு கலந்து அறிவொடு பொருந்தி அருள் மொழியோடு பின்னப்பட்ட பொருளுரை பலவும் கூறிப் பாராட்டித் தான் அணிந்துள்ள பேரணிகலன் ஒன்றனைத் தன் தலையினின்றும் களைந்து தேன் ததும்பும் அழகிய மாலையணிந்த அவ்வுதயணன் அத்தச்சனுக்கு வழங்கிப் பெரிய சிறப்பினைச் செய்யாநிற்ப என்க.

(வி - ம்.) தொல்வினை – பழையவினை. நல்வினை - ஆகூழ். தொல்வினை தொடர்ந்த நல்வினை யுடைமையின் என மாறுக. எந்திரம் - விமானம். ஒத்தி - ஒக்கின்றாய். அன்பு கலந்து ஒழுகுகின்ற அறிவோடு பின்னுதலுற்று எழாநின்ற அருள் மொழியைக் கலந்து பேசாநின்ற பொருள் பொதிந்த உரை என்க. பெருங்கலம் - பேரணி கலம். தாரோன் : உதயணன்.

(பத்திராபதி தன் வரலாறு கூறுதல்)

உ௩ - ௯ : அருள்...............ஒழியாது

(பொ - ரை.) அது கண்ட அத்தச்சன் அம் மன்னவன் அருட் செயலுக்கெதிரே கைகுவித்து வணங்கி அவன் வழங்கும் அவ்வணிகலனை ஏற்றுக்கொள்ளானாய், "புரவலனே ! என்னைப் போற்றியருளுக ! நீ வழங்கும் இப்பொருள் எனக்கு என்ன நன்மையைச் செய்ய வல்லது. இனி யான் என் வரலாற்றினைக் கூறக் கேட்டருளுக" என்று தன் வரலாற்றினைத் தொடக்க முதலாகச் சொல்லத் தொடங்கித் தான் பருத்த கொங்கைகளை யுடைய பத்திராபதி என்னும் தெய்வப் பெண்ணாக இருந்த தன்மை முதலாகக் குறவர் வாழுகின்ற கரிய குவடுகளையுடைய கூட்டமான மலைகளின் பக்கத்தே கரிய பிடியானையாகத் தோன்றிப் பாலை நில வழியிலே நோயுற்று வீழ்ந்திறந்த நிகழ்ச்சி ஈறாக அமைந்த வரலாற்றில் ஒன்றனையும் விடாமல் கூறாநிற்ப" என்க.

(வி - ம்.) அருள் - அருட்செயல். அதுவும் - அவ் வணிகலத்தினையும். புரவல : விளி. என்முதல் - என் வரலாறு. சுருங்கா ஆகம் - சுருங்காத கொங்கை. அரம்பை - தெய்வப்பெண். கணமலை - கூட்டமான மலை. இற்ற வண்ணம் - இறந்தொழிந்த தன்மை. கூறாநிற்ப என ஒரு சொல் வருவித்து முடிக்க.

(உதயணன் எண்ணுதல்)

௨௯-௬௪: நன்றியின்...............என

(பொ-ரை.) அதுகேட்ட உதயண மன்னன் அத்தச்சன் பத்திராபதி என்னும் தெய்வமகளே என்றுணர்ந்து அவள் தனக்குச் செய்த உதவியினாலே மிகவும் விரும்பிச் செய்வ தறியாது மயங்கும் நெஞ்சினையுடையனாய் இப் பத்திராபதி தானும் முன்னர் இயக்கனாகிய நஞ்சுகன் கூறிய வரலாற்றினையே இவளும் கூறினள். இவளுடைய ஒளியுடைய விரும்புதற்குக் காரணமான மொழி என் நெஞ்சத்தை உறுத்துகின்றது. ஆராயாமையையுடைய அன்புள்ளம் உடையோர் நன்கு ஆராயு மிடத்து ஒரு காலத்தும் அழிவதில்லை என்று தனக்குள்ளே வியவா நிற்ப என்க.

(வி-ம்.) நன்றி - உதவி. கைம்மாறு தோன்றாமல் மயங்கு கின்ற என்க. பத்திராபதியே இவள் என்றறிதலின் இவளும் என்றான். கிளவி - உள்ளமுருக்கும் என மாறுக. தெளியுங்கால் என்று நினைத்து வியவா நிற்ப என்க.

(பத்திராபதி தன் உருவத்தைக்காட்டி மீளல்)

௬௫-௯: மேல்...............கூறி

(பொ-ரை.) இவ்வாறு மம்மர் கொண்டு நின்ற உதயணனை நோக்கி ஆங்குத் தச்சனாய் நின்ற அப் பத்திராபதி, "வேந்தே! முன்பு நீ எனக்குச் செய்த உதவியை நினைக்குமிடத்து யான் அவ்வுதவிக்குக் கைம்மாறாக ஓர் ஐயவி யளவும் இன்னும் நினக்கு உதவி செய்ததில்லை" என்று முன்னர் அவன் தனக்குக் கூறிய அன்பு கலந்தொழுகும் அறிவிற் பின்னப்பட்ட அருளுரை விரவிய பொருளுரை பலவும் முறைமுறையே முகமனாகக் கூறி "வேந்தே நீயும் யானும் வாழுங் காலமெல்லாம் வேறலேம் என்று விளங்கும்படி கூறி" என்க.

(வி-ம்.) மேல் - முன்பு உதவி, யானைப் பிறப்பில் மந்திரம் செவியறிவுறுத்தித் தெய்வப் பிறப்பிற்குச் செலுத்தியது என்க. ஐயவி- சிறுகடுகு. உரைத்த முகமன் மொழிகள் என்க.

(இதுவுமது)

௭0-எ: அன்று..................நகர்க்கேன்

(பொ-ரை.) அற்றை நாளிலே தான் மேற்கொண்டுள்ள தச்சவடிவினை அகற்றித் தனது பழைய தெய்வப் பெண்ணாகிய பத்திராபதி உருவத்தை மேற்கொண்டு அம் மன்னவன் கண் கூடாகக் காணும்படி காட்டிப் பின்னர்த் தனக் கெய்திய அந்த

யானைப் பிறப்பின்கண் உள்ள விருப்பத்தால் அத் தெய்வ மகள் விரும்பிக் கண்டோர் விழையும் பத்திராபதி என்னும் அப்பிடி யானையின் உருவத்தையடைந்து வானில் ஏறி ஆங்கு முகிலின் மேல் இனிதாக நடந்து அவ் வத்தவ நாட்டு மன்னன் வளமிக்க தன் அரண்மனை வாயிலுக்கு அப் பத்திராபதியின் பெயரையிட்டு நாள் தோறும் வாயில் காவலரோடு வழிபடாநிற்கும்படி ஒப்பனை செய்த அணிகலங்களையுடைய அப் பத்திராபதி நங்கை தன் நகருக்குச் சென்றனள் என்க.

(வி - ம்.) தாங்கொண்ட உருவு - தான் மேற்கொண்ட தச்ச வடிவம். தன்னமருருவம் - தனது தெய்வவடிவம். விஞ்சைமகள் - விச்சாதரப் பெண். எழிலி - முகில். கொளீஇ - இட்டு. வத்தவன் : உதயணன். புனையிழை : பத்திராபதி.

௫. பத்திராபதி உருவு காட்டியது முற்றிற்று.

௬. நரவாணதத்தன் பிறந்தது

இதன்கண்: *நரவாணதத்தன் பிறத்தலும், அவன் பிறந்த நாட் சிறப்பும், பிறந்த நாட்கணிப்பும், யாவருக்கும் பரிசளித்தலும், உதயணன் தன் தம்பி முதலியோர்க்குச் செய்திகூறி விடுத்தலும், பெயரிடலும், உருமண்ணுவா முதலியோரின் மக்கட்குப் பெயரிடலும், நகரமாந்தர் மகிழ்ந்து கூறலும், கூறப்படும்.*

புனையிழை தன்னகர் புக்கபி னிப்பால்
துனைசேர் நெடுந்தேர் துவன்றிய தானை
வத்தவர் பெருமகன் வானோர் விழையும்
அத்தகு சிறப்பி னவந்தியன் மடமகள்
உசாவி னன்ன நுண்ணிடை யுசாவினைப்
பேதைக் குரைப்போன் பிழைப்பிற் றாகிய
பொற்பமை சுணங்கிற் பொம்மல் வெம்முலைப்
பட்டத் தேவியைப் பதுமையி னீக்கி
முட்டில் செல்வமொடு முறைமையிற் பிழையா
தொழுகா நின்ற வழிநாட் காலைப்
பிறைபுரை திருநுத லஃகப் பிறையின்
குறைவிடந் தீர்ந்த கொள்கை போலத்
திருவயிற்று வளர்ந்த திங்க டலைவர
ஒருமையிற் றீயவை நீங்கப் பெருமையின்
முழுநோக் காக வைம்பெருங் கோளும்
வழுவா வாழ்நாண் மதியொடு பெருக்கிப்
பெருஞ்சிறப் பயர்வர நல்கி யொழிந்துழி
நோக்கி மற்றவை யாக்கம் பெருகப்
பகைமுதல் சாயப் பசிபிணி நீங்க
மாரியும் விளையுளும் வாரியுஞ் சிறப்ப
வழுக்கா வாய்மொழி வல்லோர் வாழும்
விழுத்தகு வெள்ளி வியன்மலை விளங்கத்
திருத்தகு தேவி வருத்த மின்றிப்
பொய்கைத் தாமரைப் பூவி னுறையும்
தெய்வத் திருமகள் சேர்ந்துமெய் காப்பப்

பொய்யில் பொருளொடு புணர்ந்த நாளாற்
றெய்வ விளக்கந் திசைதொறும் விளங்க
ஐவகைப் பூவும் பல்வகை பரப்ப
மதியுறழ் சங்க நிதியஞ் சொரிய
அந்தர விசும்பி னூழிக் கிழவன்
வந்துடன் பிறந்தனன் பிறந்த பின்றைச்
சிறந்தோர் நாப்பட் சேதியர் பெருமகற்
கறஞ்சேர் நாவி னவந்திகை திருவயிற்
றரியவை வேண்டிய வசாவொடு தோன்றிப்
பெரியவ ரேத்தப் பிறந்த நம்பிக்
குதையண குமரன் றுதைதார்த் தோழரும்
அகனம ரவையு மைம்பெருங் குழுவும்
நகரமு நாடுந் தொகைகொண் டீண்டி
ஆயுட் டானம் யாவையென் னாது
மேயவை யெல்லாங் காவலன் வீசி
முத்துமணற் பரந்த நற்பெருங் கோயில்
முற்றந் தோறு முழங்குமுர சியம்பப்
பொலிகெனு மாந்தர்க்குப் புறங்கடை தோறும்
மலிபொன் மாசையு மணியு முத்தும்
ஒலியமை தாரமு மொளிகால் கலங்களும்
கோடணை யியற்றிக் கொடையொடு புரிகென
ஆய்புகழ் வேந்த னேயின னாகிக்
கொலைச்சிறை விடுக தளைச்சிறை போக்குக
கொற்றத் தானையொடு கோப்பிழைத் தொழுகிய
குற்ற மாந்தருங் கொடிநகர் புகுதுக
அருங்கடி நகரமு நாடும் பூண்ட
பெருங்கடன் விடுக விருங்கடல் வரைப்பின்
நல்குர வடைந்த நசைசா லாடவர்
செல்ல றீரவந் துள்ளியது கொள்க
பொருந்தா மன்னரும் பொலிகெனுங் கிளவி
பெருந்திறை யாக விரைந்தனர் வருக
நிலைஇய சிறப்பி னாட்டுளுங் காட்டுளும்
கொலைவினை கடிக கோநக ரெல்லாம்
விழவொடு புணர்ந்த வீதிய வாகெனப்
பெருங்கை யானைப் பிணரெருத் தேற்றி

இருங்க ணதிரப் பொற்கடிப் போச்சிப்
பெருங்கண் வீதிதோறும் பிறபுல மறிய
இன்னிசை முரச மியமர மேருக்க
மன்னிய சும்மையோடு மகாஅர் துவன்றி
வல்லோர் வகுத்த மாடந் தோறும்
நல்லோ ரேடுத்த பல்பூம் படாகை
ஈர்முகி லுரிஞ்சி யெறிவளிக் கெழாஅச்
சீர்மைய வாகிச் சிறந்துகீ ழெழுந்த
நேர்துக ளவித்து நிரந்துடன் பொலிய
மையார் யானை மன்னரோடு மயங்கி
நெய்யாட் டரவமு நீராட் டரவமும்
மறப்போ ருதயணன் மகிழ்ந்த பின்னர்ப்
பிறந்த நாளும் பெற்ற மூர்த்தமும்
சிறந்த நற்கோ ளுயர்ந்துழி நின்று
வீக்கஞ் சான்றதும் விழுப்ப மருத
ஆக்கஞ் சான்ற வாருயி ரோகையும்
நோக்கி யவரு நகருஞ் செல்வத்
தியாண்டுந் திங்களுங் காண்டகு சிறப்பிற்
பக்கமுங் கோளு முட்கோ ளளைஇ
இழிவு மிவையென விசைய நாடி
வழியோ ரறிய வழுவுத லின்றிச்
சாதகப் பட்டிகை சாலவை நாப்பண்
அரும்பொறி நெறியி னுற்ற வமைத்த
பெருங்கணிக் குழுவுக்குப் பெறுதற் கோத்த
ஈரேண் கிரிசை யியல்புளி நடாஅய்
ஆரிய லமைநெறி யரசன் றன்னுரை
ஏத்திய லாளருங் கூத்தியர் குழுவும்
கோயின் மகளிருங் கோப்பெரு முதியரும்
வாயின் மறவருஞ் சாயாச் செய்தொழிற்
கணக்கருந் திணைகளுங் காவிதிக் கணமும்
அணித்தகு முதா ராவண மாக்களும்
சிறப்பொடு புணரு மறப்பெருங் குழுவும்
ஏனோர் பிறர்க்கு மிவையென வகுத்த
அணியு மாடையு மணியு நல்கித்
தணியா வின்பந் தலைத்தலை பெருகத்

தம்பியர் தமக்குந் தருசகன் றனக்கும்
நங்கையைப் பயந்த நலத்தகு சிறப்பின்
உரத்தகு தானைப் பிரச்சோ தனற்கும்
உவகை போக்கி யூகியும் வருகெனத்
தவிர்வில் செல்வந் தலைவந் தீண்ட
ஆசான் முதலா வந்த ணாளரும்
மாசில் வேள்வி மகிழ்ந்தனர் தொடங்கி
ஏனை வகையின் மேனிலை திரியாது
பன்னிரு நாளும் பயத்தொடு கழிப்பிப்
பெயர்நிலை பெறீஇய பெற்றி நாடி
உயர்நிலை யுலகி னுலோக பாலன்
நயமிகு சிறப்பொடு நகர்மிசைப் பொலிந்த
பலர்புகழ் செல்வன் றந்தன னதலின்
உருவாண மாகிய வோங்குபுகழ்ச் செல்வன்
நரவாண தத்த னென்றுபெயர் போக்கி
உறுவிறற் றானை யுருமண் ணுவாவும்
அறிநரை வழிபட் டன்றே பெயர்தலின்

....

பொருவின் மாக்கள் பூதியென் றுரைஇ
ஒழிந்த மூவ ருருவார் குமரருட்
கழிந்தோ ரீமத்துக் கட்டழல் சேர்ந்த
கரியக லேந்திக் காவயிற் பெற்றேன்
அரிசிக னாகப் பெயர்முதல் கொளீஇப்
பயந்தலை நிற்கும் பல்கதிர்ச் செல்வன்
நயந்துதரப் பட்டோன் றவந்தக னாமெனத்
தாயர் போலத் தக்கது நாடிய
ஆவழிப் படுதலி னாகிய விவனே
கோமுக னென்று குணங்குறி யாக
மற்றவர் மகிழ்ந்து..................
..................தோன்னக ராளரும்
பெற்றனம் பண்டே பெருந்தவ மென்மரும்
இன்னோ ரன்ன வெடுத்துரை சொல்லித்
தன்னோ ரன்ன தன்மைய னாகி
மதலை மாண்குடி தொலைவழி யூன்றும்

புதல்வற் பெற்றா னெனப்புகழ் வோரும்
உதவி நண்ணரு முதயண குமரன்
போகமும் பேரும் புகழ்மேம் பட்டதும்
ஆகிய வறிவி னரும்பெறற் சூழ்ச்சி
யூகியி னன்றே வெனவுரைப் போரும்
குறிகோட் கூறிய நெறிபுகழ் வோரும்
வெண்முகி லொழுகிய வெள்ளியம் பெருமலை
உண்முத லுலகிற் கொருமீக் கூறிய
தெய்வ வாழி கைவலத் துருட்டலும்
பொய்யா தாத லுறுபொரு ளென்மரும்
இவையும் பிறவு மியைவன கூறி
நகரத் தாளரொடு நாடுபுகழ்ந் தேத்த
நிகரில் செல்வத்து நிதியந் தழீஇ
யாப்புடை மகன்வயிற் காப்புடன் புரிகென
விதியறி மகளிரொடு மதிபல நவின்ற
மருந்துவகுப் பாளரைப் புரந்துறப் பணித்துத்
தளர்வி லாக்கந் தலைத்தலை சிறப்ப
வளரு மாதோ வைகறொறும் பொலிந்தென்.

உரை

நரவாணதத்தன் பிறந்தது

அஃதாவது - உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் 'நரவாணன்' என்னும் மகன் பிறந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(நரவாணன் பிறத்தல்)

க - க0 : புனையிழை............காலை

(பொ - ரை.) பத்திராபதி தனது தெய்வ நகரத்திற்குச் சென்ற பின்பு இங்குக் கோசம்பி நகரத்தின்கண் விரைவினையுடைய நெடிய தேர்கள் செறிந்த படையினையுடைய வத்தவ மன்னனாகிய வுதயணன், தேவரும் விரும்புதற்குக் காரணமான அழகு தக்கிருக்கின்ற சிறப்பினையுடைய அவந்தி நாட்டரசனாகிய பிரச்சோதனனுடைய மடப்பமுடைய மகளும் நுண்மாண் நுழை புலனால் ஆராயப்படுகின்ற நுண்பொருள் போன்று மிகவும் நுண்ணிதாகிய இடையினையும் அத்தகைய தனது நுண்

மாணுழைபுலனால் ஆராயப்பட்ட நுண்பொருளை யாதொன்று முணராத அறிவிலிக்கு உறஉறக் கூறுவயின் ஒருவன்கட் குற்றம் பெருகுமாறு பெருகியதாய்ப் பொலிவுடைய தேமலையுமுடைய பெரிய விரும்புதற்குக் காரணமான முலையினையும் உடைய தன் பட்டத் தேவியும் ஆகிய வாசவதத்தையினைப் பதுமாபதியினின் றும் விலக்கித் தனி மாளிகையிலே வைத்து அவளை முட்டுப் பாடில்லாத செல்வ வளமுடையளாய்க் கருவுற்றிருக்கும் மகளிரைப் பேணுதற்குரிய முறைமையிற் றவறின்றிப் பேணி வருகின்ற காலத்தே என்க.

(வி - ம்.) புனையிழை : பத்திராபதி. துனை - விரைவு. துவன்றிய - செறிந்த. அ - அழகு. அவந்தியன் : பிரச்சோதனன். பெருமகன் தேவியைப் பதுமையினீக்கிச் செல்வமொடு முறைமையிற் பிழையாது ஒழுகாநின்ற காலை என்க. பெருமகன் : உதயணன். வானோர் விழையும் அவந்தி என்க. உசாஅ - ஆராய்ச்சி. ஈண்டு ஆகுபெயராய் ஆராய்ச்சியிற் றெளிந்த நுண்பொருளைக் குறித்து நின்றது. நுண்மாணுழைபுலமுடைய ஒருவன் அரிதின் ஆராய்ந்து கண்ட நுண்பொருளைப் பேதைக்குரைக்குங்கால் அவன் அதனையுணர மாட்டாமல் தான் உணர்ந்ததனையே அதுவாகக் கொள்வன் அன்றோ? அவ்வழி அக்குற்றம் அவ்வாராய்ச்சியாளன் பாலதேயாய்ப் பெருகு மன்றோ அங்ஙனம் பெருகிய முலை என்றவாறு, "கற்றன கல்லார் செவிமாட்டிக் கையறூஉங் குற்றம் தமதே பிறிதன்று" எனப் பிற சான்றோருங் கூறுதல் காண்க." காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான் கண்டானாந் தான்கண்டவாறு", எனவருந் திருக்குறளுங் காண்க. இனி உசாவினன்ன நுண்ணிடை உசாவினைப் பேதைக் குரைப்போன் பிழைப்பிற்றுகிய வெம்முலை" என்னுமிதனோடு,

" அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றோர்,
உசாப்போல வுண்டே மருங்குல்—உசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்"

எனவரும் பழம்பாடலையும் (யா - கா. ஒழிபு.) ஒப்புநோக்குக.

கோமகளிர் கருவுற்றிருக்கும் அமையத்தே அவர்தம் சக்களத்தியர் பானின்றும் விலக்கிவைத்துப் பேணல் வேண்டும் என்பது அரசியல் விதி. இவ்விதிபற்றிப் பதுமையின் நீக்கி என்று கூறப்பட்டது. சிறப்புப்பற்றிப் பதுமையை மட்டும் கூறினாரேனும் சக்களத்தியர் பானின்றும் விலக்கி எனப் பொதுமையிற் கொள்க, பதுமை பதுமாபதி. முறைமை - கருவுற்ற மகளிரைப் பேணுமுறை என்க.

(இதுவுமது)

௧௧ - அ : பிறை..............பெருக

(பொ - ரை.) பிறையாகத் தோன்றிய திங்கள் நாடோறும் வளர்ந்து தனது குறையிடம் நிரம்பி முழுமதியானாற்போன்று தேவியின் திருவயிற்றிற் கருவாகி உருப்பெற்று நாடோறும்

வளர்ந்த (அந்தரவிசும்பின் ஆழிக்கிழவனுகும், ௩௦.) மகவிற்குப் பத்துத் திங்களும் நிரம்புதலாலே வயாவருத்தத்தாலே தேவியினது பிறையை யொத்த அழகிய நெற்றி சுருங்கா நிற்பவும், தீக்கோள்கள் ஒருசேர நீங்காநிற்பவும் நற்கோள்கள் ஐந்தும் சிறப்பான இடங்களினமைந்து அம்மகவிற்குக் குறையாத வாழ்நாளையும் அறிவையும் பெருக்கிப் பெருஞ்சிறப் புண்டாக அருள் வழங்கி ஒழிந்த இடங்களினும் ஏனைய தீக்கோள்களையும் நோக்கி அவற்றாலும் அம்மகவிற்கு ஆக்கமே பெருகாநிற்கச் செய்தலாலே என்க.

(வி - ம்.) நுதல் வயாவருத்தத்தால் அஃகவென்க. அஃகுதல், சுருங்குதல். வளர்ந்த ஆழிக்கிழவன் (௩௦) என்க. பிறை நாடொறும் வளர்ந்து குறைவிடம் தீர்ந்த கொள்கை போல என்க. தலைவர - நிரம்ப. ஒருமையில் - ஒருசேர. தியவை - தீக்கோள்கள். அவை செவ்வாய், சனி, இராகு கேது என்பன. ஐம்பெருங்கோள் - ஞாயிறு திங்கள் புதன் வியாழன் வெள்ளி என்பன. மதி - அறிவு. ஒழிந்துழி - ஏனைய இடங்களையும் நோக்கி. மற்றவை - மற்றையவற்றாலும். அவற்றின் பயனாகிய தீங்குகள் இன்றித் தம்பார்வையின் பயனாகிய ஆக்கமே பெருகா நிற்பச் செய்தலாலே என்க.

(இதுவுமது)

கசு - உரு : பகை................காப்ப

(பொ - ரை.) பகைமை காரணத்தோடே அழியாநிற்பவும், பசியும் பிணியும் நீங்காநிற்பவும், மழையும் கூல முதலியவற்றின் விளைவும் வருவாயும் பெரிதும் சிறவாநிற்பவும், பிழைபடாத மெய்ம்மொழியினையுடைய கலைவல்லுநரான விச்சாதரர் வாழாநின்ற சிறப்பாற் றகுதியையுடைய வெள்ளியாகிய அகன்ற மலையுலகம் விளக்க மெய்தவும், திருவுடைமையாலே தகுதியையுடைய கோப்பெருந்தேவியாருக்குத் துன்பம் உண்டாகாதபடி பதுமை யென்னும் பொய்கையின் கண்ணதாகிய தெய்வத் தாமரைப் பூவிலுறையும் தெய்வமாகிய சீதேவி அத்தேவியைச் சேர்ந்திருந்து அவருடைய மெய்வருந்தாமற் பாதுகாவா நிற்பவும், என்க.

(வி - ம்.) முதல் - காரணம். பகைவர் குலத்தோடழிய எனினுமாம். பசியும் பிணியும் நீங்க என்க. விளையுள் - விளைவு. வாரி - வருவாய். கலைவல்லோர் என்க. வெள்ளிவியன்மலை என்றது, விச்சாதரருலகினை. தேவி : வாசவதத்தை. தேவியின் மெய்யைக் காப்ப என்க.

(இதுவுமது)

௨௬ - ௩௧ : பொய்யில்..............பின்றை

(பொ - ரை.) பொய்த்தலில்லாத அறமுதலிய உறுதிப் பொருளோடே பொருந்தியதொரு நன்னாளிலே தான் பிறந்ததற்கு அறிகுறியாக எல்லாத்திசைகளினும் தெய்வத்தன்மையுடைய விளக்கமுண்டாகாநிற்பவும், கோட்டுப்பூ முதலிய ஐவகைப் பூக்களும் உலகின் கண் பல்வேறு வகை மணங்களோடும் நிறங்களோடும் பரவி மலரா நிற்பவும், திங்கள் மண்டிலத்தையொத்த சங்கம் நிதியங்களைச் சொரியாநிற்பவும், அந்தரமாகிய வானின்கண்ணமைந்த வித்தியாதர ருலகின்கண் தனது ஆணைச் சக்கரத்தை உருட்டுந்திருவினைக் கருவிலேயே பெற்றுள்ள ஆண்மகன் வந்து பிறந்தனன், அவன்பிறந்த பின்னர் என்க.

(வி - ம்.) ஐவகைப்பூ - கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ, புதற்பூ என்பன. ஆழிக்கிழவன், சக்கரவர்த்தி என்பதன் நேர் மொழி பெயர்ப்பு.

(பிறந்த நாட் சிறப்புக்கள்)

௩௨ - ௮ : சிறந்தோர்..............ஈண்டி

(பொ - ரை.) தஞ்சுற்றத்தார் சூழலின் நடுவே சேதி நாட்டு மன்னனாகிய உதயணகுமரனுக்கு, எஞ்ஞான்றும் அறமே கூறும் இயல்புடைய செந்நாவினையுடைய அவந்தி நாட்டரசன் மகளாகிய வாசவதத்தையின் திருவயிற்றிலே செயற்கரிய செயல்களையே செய்தற்கு விரும்பிய வயாவிருப்பத்தோடு கருவாகிச் சான்றோர் புகழ்ந்து பாராட்டடாநிற்பப் பிறந்த நம்பியின் பொருட்டு அவ்வுதயணனுடைய செறிந்த மலர் மாலையணிந்த தோழரும், நெஞ்சினூடே அம்மன்னனைப் பெரிதும் விரும்புகின்ற அவையத்தாரும் ஐம்பெருங்குழுவினரும் நகரமாந்தரும் நாட்டின்கண் வாழும் மாந்தரும் மகிழ்ந்து கூட்டங் கூட்டமாகக் கூடாநிற்ப என்க.

(வி - ம்.) சிறந்தோர் - சுற்றத்தார். நாப்பண் - நடுவே. அவந்திகை : வாசவதத்தை. அவள் கருவினுற்ற காலந் தொடங்கித் தேவிக்கு அரியவை வேண்டிய அசாஅத் தோன்றுதலாலே அசாவொடு தோன்றிப் பிறந்த நம்பி என்றார். பெரியவர் - சான்றோர். தோழர் : உருமண்ணுவா முதலியோர். அவை - அறங்கூறவையத்தார். ஐம்பெருங்குழு - அமைச்சர் முதலிய ஐந்து வகையினரின் கூட்டம். நகரம் நாடு என்பன ஆகுபெயர்கள். கூடி - கூட.

(இதுவுமது)

௯௧ - ௬௭ : ஆயுள்............ஏயினனாகி

(பொ - ரை.) நெடிய ஆயுள் உண்டாதற் பொருட்டு வழங்குந் தானத்தை எப்பொருள் வழங்கவேண்டும் என்று ஆராயாமல் அந்தணர் விரும்பிய பொருளை யெல்லாம் அம்மன்னவன் பெரிதும் வழங்கி மேலும் முத்தாகிய மணல்பரப்பிய நம் அரண்மனை முன்றில் தோறும் அறமுரசம் முழங்காநிற்ப நம்மகவினைப் 'பொலிக' என்று வாழ்த்தாநின்ற மாந்தர்க் கெல்லாம் அவ்வாயில் தோறும் மிக்க பொன்னாலியன்ற மாசைகளையும் மணிகளையும் முத்தையும் ஒலியுடைய பல பண்டங்களையும் ஒளிவீசாநின்ற அணிகலன்களையும் வழங்கும் செய்தியை எல்லோருமறிய முரசறைந்து தெரிவித்துக் கொடையாக வழங்குக! என்று அழகிய புகழையுடைய அவ்வேந்தன் திணைமாந்தர்க்குக் கட்டளையிட்டவனாய் என்க.

(வி - ம்.) ஆயுட்டானம். ஆயுள் நீளவேண்டும் என்று வழங்கும் தானம். மேயவை - விரும்பியவை. காவலன் - சுட்டு மாத்திரையாய் நின்றது. பொன் மாசை - ஒருவகைப் பொற்காசு. ஒலியமை தாரம் என்றது, உலோகத்தாலியன்ற அடிசிற்கல முதலியவற்றை. கோடணை இயற்றி - முரசறைந்து அறிவித்து.

(இதுவுமது)

௭அ - ௯௪ : கொலைச்...............கொள்க

(பொ - ரை.) கொலைக் குற்றத்தின் பொருட்டுச் சிறை வைக்கப்பட்டோரைச் சிறைவீடு செய்க! என்றும், ஏனைக் குற்றத்தின் பொருட்டு விலங்கிட்டுச் சிறை வைக்கப்பட்டோரையும் விடுக! என்றும், வெற்றியுடைய நம் படைகளிடத்தும் மன்னனிடத்தும் குற்றம் செய்தமையால் நாடு கடத்தப்பட்ட மாக்களும் மீண்டும் நமக்குக் கேளிராய் அஞ்சாமல் நமது கொடிக் கோசம்பி நகரத்தின்கண் புகுவாராக. அரிய காவலையுடைய நகர்வாழ் மாந்தரும் நாட்டில் வாழ்கின்ற மாந்தரும் கடமை பூண்டுள்ள பெரிய இறைப்பொருளை அவர்பாற் கொள்ளாது விடுக! என்றும், பெரிய கடல் சூழ்ந்த நிலஉலகத்தின்கண் வறுமையடைந்த அவாமிக்க ஆடவர்கள் தமது வறுமைத்துயர் தீரும்படி ஈங்கு வந்து அவர் கருதிய பொருளைப் பெற்றுக் கொள்க! என்றும் என்க.

(வி - ம்.) கொலைச்சிறை – கொலை செய்தமையால் சிறையிடப்பட்ட குற்றமாந்தர். தளை - விலங்கு. தானைக்கும் கோவிற்கும் பிழைத்தொழுகிய குற்றமாந்தர் என்க. கொடிநகர் புகுதுக என்றமையால் இவர் நாடு கடத்தப்பட்டோர் என்பது பெற்றாம். கடன் - கடமைப்

பொருள். நசை - பொருள்களின் மேற்செல்லும் விருப்பம். இஃதில்லார்க்கு நல்குரவும் இல்லை. ஆதலின் நல்குரவடைந்த நசைசால் ஆடவர் என்றார். செல்லல் - துன்பம். உள்ளியது - நினைந்த பொருள். மன்னர்க்கு மகப்பேறுண்டாய பொழுது இங்ஙனம் சிறைவீடு செய்தலும் திறைவீடு செய்தலும் மரபு. இதனை,

“ கறைபன் னீரா ண்டுடன்விடுமின்
　　காமர்சாலை தளிநிறுமின்
சிறைசெய் சிங்கம் போன்மடங்கிச்
　　சேரா மன்னர் சினமழுங்க
உறையுங் கோட்ட முடன்சீமி
　　ஞெண்பொற் குன்றந் தலைதிறந்திட்
டிறைவன் சிறுவன் பிறந்தானென்
　　றேற்பார்க் கூர்தோ றுய்த்திமின்” (சீவக. நாமக. ௩௦௬)

எனவரும் சிந்தாமணியானும் உணர்க.

(இதுவுமது)

௫௫ - ௬௩ : பொருந்தா................எருக்க

(பொ - ரை.) நம்பகை மன்னர்களும் எம்மகவினை, ‘பொலிக’ என்னும் வாழ்த்துமொழியே நமக்கு அளக்கும் திறைப் பொருளாகக் கொண்டு விரைந்து வந்து எமக்குக் கேளிராகக் கடவர்! என்றும், நிலை பெற்ற சிறப்பினையுடைய நம்நாட்டின் கண்ணும் காட்டகத்தும் வாழும் மாந்தர் உயிரினங்களைக் கொல்லும் தீவினையை ஒழிக! என்றும், நமது தலைநகரெங்கும் அமைந்த கோயில்களெல்லாம் திருவிழாவோடு கூடிய வீதிகளை உடையன வாகுக! என்றும், அறிவித்துப் பெரிய கையினையுடைய யானையினது பிணருடைய எருத்தின்கண் இனிய இசையினையுடைய முரசங்களையும் இயமரங்களையும் ஏற்றி அவற்றின் கரிய கண்கள் அதிரும்படி பொன்னுலிபன்ற கடிப்பினாற் புடைத்து இடமகன்ற நம் பெரிய வீதிகள்தோறும் வேற்று நாட்டவர் அறியும் பொருட்டு முழக்குக! என்றும், அறைவியாநிற்பவும் என்க.

(வி - ம்.) பொருந்தா மன்னர் - பகைமன்னர். பொலிகெனும் கிளவி - பொலிக என்று கூறும் வாழ்த்துச் சொல். அவர்கள் திறை தருதல் வேண்டா, நம்பால் வந்து நம்மகவினை வாழ்த்துதலே அமையும் என்பது கருத்து. நிலைஇய சிறப்பு, நாடாவளம் முதலியன. நம் நகரத்திலுள்ள கோயில்களுக்கெல்லாம் விழாவெடுத்திடுக என்பான் நகர் எல்லாம் விழவொடு புணர்ந்த வீதிய ஆக என்றான். பிணர் - சருச்சரை. இருங்கண் - கரிய கண். கடிப்பு - முரசடிக்குங் குறுங்கோல். பெருங்கண்வீதி - பெரிய இடத்தையுடைய வீதி. பிறபுலம் – வேற்று நாடு. இயமரம் - ஒருவகைத் தோற்கருவி. எருக்க - அறைய.

(இதுவுமது)

௲௪ - எ௨ : மன்னிய...............பின்னர்

(பொ - ரை.) வீதிகளிலெல்லாம் இளம் சிறுஅர்கள் நிலை பெற்ற மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வந்துகூடா நிற்பவும் தொழில் வல்லோர் இயற்றிய மேனிலை மாடந்தோறும் மகளிர் உயர்த்திய பல்வேறுவகைப் பூக்களாலியன்ற கொடிகள் வானத்தின்கண் இயங்கும் ஈரமுடைய முகில்களை உராஞ்சி வீசுகின்ற காற்றிற்கு எழுந்து ஆடாத தன்மையையுடையனவாய்ச் சிறப்புற்றுக் கீழே வீதியிலெழுந்த நுண்ணிய துகள்களைத் தம்பானின்றும் சிந்தும் தேன் துளிகளாலும் நீர்த்துளிகளாலும் அவித்து ஒருசேர நிரல் பட்டுப் பொலிவுறுநிற்பவும் அஞ்சனமெழுதப்பட்ட யானையை யுடைய அரசர்களோடே கூடி மறப்பண்புமிக்க போரினையுடைய உதயணமன்னன் அரண்மனைக்கண் நிகழும் நெய்பாடுதல் ஆரவாரத்தானும் நீராடுதல் ஆரவாரத்தானும் பெரிதும் மகிழ்ந்த பின்னர் என்க.

(வி - ம்.) சிறுவர்கள் ஆரவாரிக்குங்கால் இடையறுது ஆர வாரித்தல் இயல்பாகலின் மன்னிய சும்மை என்றுர். சும்மை - ஆர வாரம். துவன்றி - துவன்ற. நல்லோர் - மகளிர். பூம்படாகை - பூவாலி யற்றிய கொடி. ஈர்முகில் - ஈரமுடைய முகில். மலரால் இயன்று முகிலும் தோய்ந்திருத்தலின் அக்கொடிகள் வளிக்கு எழாவாயின என்க. பூங்கொடியாகலானும் முகில் உராய்தலானும் தேனும் நீரும் துளித்து அக்கொடிகள் கீழெழுந்த துகளவித்தன என்க. மை - அஞ்சனம். மகப்பேற்றின் பொருட்டு நெய்யாட்டரவமும் நீராட் ரவமும் உண்டாயின என்க.

(மகவிற்குப் பிறந்தநாள் கணித்தல்)

எ௩ - அ௫ : பிறந்த...............நடாஅய்

(பொ - ரை.) அம்மகவு பிறந்த நாளையும் அதனைத் தாய் ஈன்ற முழுத்தத்தையும் அப்பொழுது சிறந்த நல்ல கோள்கள் உயர்ந்த இடத்தில் நின்று பெருமையுற்றதனையும் சிறப்பறுத ஆக்கமுடைய அரிய உயிரினங்களின் மகிழ்ச்சியையும் அரண் மனைப் பெருங்கணிமாந்தர் நுண்ணிதின் நோக்கி இன்பம் நுகர் தற்குரிய செல்வத்தையுடைய யாண்டும் திங்களும் ஆராயத் தகுந்த சிறப்பினையுடைய பக்கமும் கோள்களும் என்னும் இவற்றை ஆராயும் உட்கோளுடையராய்த் தீய கோள்களின் தீமைகள் இவையென்று பொருந்த ஆராய்ந்து பின்னோர் அறியும் படி தவறின்றி எழுதிய சாதகப் பத்திரிகையை நிரம்பிய அரசவை நடுவண் கொணர்ந்து அரசருடைய இலச்சினையை முறையாக இடுதற்கு வைத்த பெரிய அவ்வரண்மனைக் கணிவர்

கூட்டத்திற்கு அவர் பெறுவதற்குத் தகுந்த பதினாறு வகைப் பட்ட கிரியைகளையும் முறையாக நடத்தி என்க.

(வி - ம்.) மூர்த்தம் - முகூர்த்தம். ஓகை - உவகை. அவரும் : கணிமாந்தரும். செய்யுளாகலின் சுட்டு முன்வந்தது. வழியோர் - பின் வருவோர். சாதகப்பட்டிகை - சாதகமெழுதிய பத்திரிகை. அரண்மனைக் கணிமாந்தரைப் பெருங்கணி என்றல் மரபு.

(யாவருக்கும் பரிசளித்தல்)

அசு - கூச : ஆரியல்.....................நல்கி

(பொ - ரை.) அரிய இலக்கண மமைந்த நெறியினை மேற் கொண்டுள்ள அரசனுடைய புகழை எடுத்தோதி ஏத்துகின்ற தொழிலுடையோரும் விறலியர் கூட்டமும் அரண்மனைப் பணி மகளிரும் அரண்மனைப் பணியாளராகிய பெருமூதாளரும் வாயில் காக்கும் மறவரும் பிழைபடாத செய்தொழிலையுடைய கணக்கமாந்தரும் திணைமாந்தரும் காவிரி முதலிய பட்டம்பெற்ற மாந்தர் கூட்டமும் ஆவணக் களரியோரும் சிறப்போடு கூடிய அறவோருடைய பெருங்கூட்டமும் இன்னோரன்ன பிறவுமாகிய இவர்களுக்கெல்லாம் இன்னின்னவை வழங்குதல் வேண்டும் என்று பொருணூலோர் வகுத்துள்ள அணிகலன்களும் ஆடை களும் மணிபொன் முதலியனவும் வழங்கி என்க.

(வி - ம்.) ஆரிய லமைநெறி - பிறர் மேற்கொள்ளுதற்கரிய அர சியல் அமைந்த நெறி என்க. உரை - புகழ். ஏத்தியலாளர் - சூதர். கோயில் மகளிர் - அரண்மனைப் பணிமகளிர். முதியர் - காஞ்சுகி முதி யோர். திணை - உத்தியம் வகிப்போர். காவிதிக்கணம் - காவிதிப் பட்டம் பெற்றோர் கூட்டம். ஆவணமாக்கள் - ஆவணம் எழுதுவோர். ஆவணம் - நில முதலியவற்றின் உரிமை எழுதிய ஓலை. அறப்பெருங் குழு - அறவோர் கூட்டம்.

(உதயணன் தன் சுற்றத்தார்க்குச் செய்தி கூறி விடுத்தல்)

கூ௫ - கூ௦௪ : தணியா...............கழிப்பி

(பொ - ரை.) இவ்வாறு இடந்தொறும் இடந்தொறும் குறையாத இன்பமே பெருகாநிற்ப உதயணமன்னன் தன் தம்பி யராகிய பிங்கலனுக்கும் கடகனுக்கும் மைத்துனனாகிய தருசக மன்னனுக்கும் வாசவதத்தையை ஈன்ற நன்மையால் தகுதி பெற்ற சிறப்பினையும் வலிமையால் தகுதிபெற்ற படைகளையு முடைய பிரச்சோதன மன்னனுக்கும் தான் மகப்பேறெய்திய உவகைச் செய்தியைத் தூதுவர் வாயிலாய்ப் போக்கி யூகியந்தண னும் ஈண்டு வருவானாக என்று தூது விடாநிற்ப, இவ்வாற்றால் குறைதலில்லாத செல்வங்கள் அச்சுற்றத்தார் பாலிருந்து கோசம்பி நகர்க்கண் வந்து குவியாநிற்பவும், வேள்வியாசானை

யுள்ளிட்ட அந்தணரும் மகிழ்ந்து குற்றமற்ற வேள்வியினைத் தொடங்கிச் செய்யாநிற்ப, மற்றைய வகைகளானும் உயர்ந்த நிலை யினின்றும் பிறழாமல் பன்னிரண்டு நாள்களும் அறப்பயனோடு கழித்து என்க.

(வி - ம்.) தலைத்தலை - இடந்தொறும் இடந்தொறும். தம்பியர் - பிங்கலகடகர். நங்கையை : வாசவதத்தையை. உவகை : ஆகுபெயர். ஆசான் - வேள்வியாசான். பயம் - பயன். கழிப்பி - கழித்து.

(பெயரிடல்)

௧௦௫ - ௧௦ : பெயர்............போக்கி

(பொ - ரை.) பின்னர் அம்மகவிற்குப் பெயரிடுதற்கு அதன் பிறப்பின் தன்மையை ஆராய்ந்து மேனிலை யுலகத்தின் கண் அமைந்த நன்மைமிக்க சிறப்பினையுடைய அளகைமா நகரத் தின்கண் பொலிவுற்றிருக்கும் பலராலும் புகழப்படுகின்ற உலோக பாலனாகிய குபேரன் தன் வரத்தினாலே வழங்கிய காரணத்தினாலே அன்புருவாகிய உயர்ந்த புகழ்ச் செல்வனாகிய அம்மகவிற்கு 'நரவாணதத்தன்' என்று பெயரிட்டு என்க.

(வி - ம்.) நிலைபெறீஇய - நிலைபெறச் செய்வதற்கு. பெற்றி - தன்மை. உலோக பாலனாகிய செல்வன் என்க. நகர் - அளகை. ௨-ரு ஆணமாகிய செல்வன் எனக் கண்ணழித்துக்கொள்க. ஆணம் - அன்பு. அன்பே உருவமாகிய செல்வன் என்றவாறு. செல்வன் - மகன். நரவாணன் - குபேரன். இது நரவாகனன் என்பதன் மரூஉ. தத்தன் - வழங்கப்பட்டவன். எனவே நரவாணதத்தன் என்பது குபேரனால் வழங்கப்பட்ட மகவு என்னும் பொருளுடையதாயிற்று.

(உருமண்ணுவா முதலியவரின் மக்களுக்குப் பெயரிடல்)

௧௧௧ - ௨௩ : உறுவிறல்............மகிழ்ந்து

(பொ - ரை.) மிக்க ஆற்றலுடைய படைகளையுடைய உருமண்ணுவாவும் துறவோரை வழிபட்டமையாலே வந்து பிறந்ததனால்..................................ஒப்பற்ற சான்றோர் (அவன் மகவிற்கு) பூதி என்று பெயரிட்டு எஞ்சிய மூன்று அமைச்சர் களுடைய அழகமைந்த மைந்தர்களுள் வைத்து ஒருவனுக்கு இறந்தோர்க்குரிய ஈமக் காட்டின்கண் எரியும் மிக்க நெருப் பினைச்சேர்ந்த கரிய அகலைக் கையிலேந்தி அக்காட்டின்கண் நோன்பு செய்து பெறப்பட்டமையால் அரிசிகன் என்று பெயரிட்டு மற்றொருவன் உலகிற்குப் பயன் தருதலிலே தலை சிறந்து நிற்கும் பலவாகிய கதிர்களையுடைய ஞாயிறு விரும்பித் தரப்பட்டோனாதலின் தவந்தகன் என்று பெயரிட்டு மூன்றும் மகவு உயிர்கட்குத் தாய்போல நன்மையே நாடிய ஆவினை வழிபாடுசெய்து பெறப்பட்டமை நோக்கி இவன் கோமுகன்

என்று பெயரிட்டு அம்மக்களுக்குப் பிறந்த தன்மையையே காரணமாகக் கொண்டு பெயர் வழங்காநிற்ப அதுகேட்டு உதயணனை உள்ளிட்ட தந்தைமார் நால்வரும் மகிழ்ந்து .... என்க.

(வி - ம்.) உறு : உரிச்சொல். மிகுதி என்னும் பொருட்டு. யூகி: உருமண்ணுவா மகன் பெயர். மூவர் - இடவகன், வயந்தகன், இசைச்சன். அம்மூவருடைய மக்களுக்கும் அரிசிகன், தவந்தகன், கோமுகன் எனப்பெயரிட்டு என்பது கருத்து. மற்றவர் - தந்தைமார் நால்வரும். இப்பகுதியில் ௧௨௨ ஆம் அடியையடுத்து ஓரடிமுழுதும் ௧௨௩ ஆம் அடியின்கண் இறுதிச்சீர் இரண்டும் அழிந்தன.

(நகரமாந்தர் மகிழ்ந்து கூறல்)

௧௨௪ - ௩௪ : தொன்னகர்................புகழ்வோரும்

(பொ - ரை.) ....பழைய அக்கோசம்பி நகரத்திலுள்ள மாந்தர்களும் மகிழ்ந்து யாமெல்லாம் இம்மகவினை அரசனாகப் பெறுதற்கு முற்பிறப்பிலேயே பெருந்தவம் செய்து அதன் பயனை இப்பொழுது பெற்றேம் என்று கூறுவாரும் இன்னோரன்ன பாராட்டுரை பலவற்றை எடுத்துக்கூறி மாட்சிமையுடைய நம்மரசர்குடி அழியுங்காலமும் அழியாமல் நிலைநிறுத்தும் ஊற்றுக்கோலாய் நம் மன்னவன் சிறந்த புதல்வனைப் பெற்றான் என்று புகழ்வோரும், தனக்கு உதவிதேடிப் பிறர்பால் செல்லுதலில்லாத இவ் வுதயணகுமரன் இன்ப நுகர்ச்சியாலும் புகழுடைமையாலும் பலரும் புகழும் மேம்பாட்டினை எய்தியது ஆக்கமுடைய அறிவினையும்பெறல் அரிய சூழ்ச்சியினையும் உடைய யூகி என்னும் அமைச்சனா லன்றோ என்று அவ்வமைச்சனைப் புகழ்வோரும், பண்டு இங்ஙனம் ஒரு நன்மகவு பிறக்கும் என்று நிமித்தம் கூறிய நெறியினைப் புகழ்வோரும் என்க.

(வி - ம்.) இப் பகுதியில் ௧௨௪-ஆம் அடியின் முதல் இரண்டு சீர்கள் அழிந்தன. பண்டே தவமுடையேன் அதனால் பெற்றனம் என மாறி ஒருசொற்பெய்து கொள்க. மதலை - ஊற்றுக்கோல். "மதலை மாண்குடி தொலைவழி யூன்றும் புதல்வர்ப் பெற்றான்" என்னு மிதனோடு,

"சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்" (நாலடி - ௧௯௭)

எனவரும் வெண்பாவினையும் நோக்குக. குறிகோள் - நிமித்தம்.

(இதுவுமது)

கடுரு — கூ: வெண்முகில்...............கூறி

(பொ - ரை.) வெள்ளிய முகில்கள் துளிக்கும் வெள்ளிப் பெரு மலையின்கண் அமைந்த தலைமையுடைய வித்தியாதரருல கினுக்குப் பலராலும் புகழ்ந்து கூறப்பட்ட தெய்வத் தன்மை யுடைய ஒற்றையாழியை இந்த நரவாணதத்தன் உருட்டுவான் என்று அந்நிமித்திகர் கூறியதும் பொய்யாது அங்ஙனம் அவ் வாழியை இவன் தன் கை வன்மையாலே உருட்டலும் உருட்டு வான். அங்ஙனமாதல் பொருந்துங் காரியமே என்று கூறு வோரும் இவை போல்வனவும் பிறவும் ஆகிய பாராட்டுரைகள் தத்தமக்கு இயைவனவற்றைக் கூறி என்க.

(வி - ம்.) ஒழுகிய - துளித்த. பெருமலையுள் முதன்மையுடைய உலகில் என்க. கைவலம் - கைவன்மை.

(இதுவுமது)

கச௦ - கூ: நகரத்..............பொலிந்தென்

(பொ -ரை.) நகர்வாழ் மாந்தரும் நாட்டின்கண் வாழு வோரும் புகழ்ந்து தன்னைப் பாராட்டெடுப்ப அம்மன்னவன் தனக்கு நிகரில்லாத செல்வமாகிய நிதிகள் அனைத்தையும் ஒருங்கே பெற்று அன்புடைய தன் மகன் நரவாணதத்த னிடத்தே காப்பொடு அவனுக்கு ஆவன செய்க என்று மகவளர்ப்பு நெறியறி மகளிர் பலரோடும் அறிவுநூல் பலவற் றைப் பயின்ற மருத்துவத் தொழிலாளர் பலரையும், அம் மகவினைப் பேணிவருமாறு கட்டளையிட்ட பின்னர் அம்மகன் தளர்தலில்லாத ஊக்கம் எல்லாத் துறைகளினும் சென்று மிக ஓங்குமாறு நாள்தோறும் பொலிவுற்று வளர்வானாயினன் என்க.

(வி - ம்.) நாடு: ஆகுபெயர். செல்வத்து நிதியம் - செல்வமாகிய நிதியம். அத்துச்சாரியை அல்வழிக்கண் வந்தது. விதி - மகவளர்ப்பு முறை. மதி - நூல்; ஆகுபெயர். மருந்துவகுப்பாளர் - மருத்துவர் அம்மகன் வைகல்தொறும் பொலிந்து வளரும் என்க.

௬. நரவாணதத்தன் பிறந்தது முற்றிற்று.

௭. யூகி பிரச்சோதனனைக் கண்டு வந்தது

இதன்கண் : *பிரச்சோதனன் நரவாணதத்தன் பிறந்ததை அறிதலும், முரசறைதலும், நகரை அலங்கரித்தலும், பிரச்சோதனன் விழாக் கொண்டாடலும், யூகியைப் பிரச்சோதனன் வருவித்தலும், யூகியும் சாலங்காயனும் தர்க்கஞ் செய்தலும், பிரச்சோதனன் யூகியின் சிறந்த குணங்களை வியத்தலும், பிரச்சோதனன் யூகிக்குச் சிறப்புச் செய்தலும், யூகிக்கு இரு மகளிரை மணம் புரிவித்தலும், பிரச்சோதனன் யூகியைப் பாராட்டலும், யூகியை விடுத்தலும் கூறப்படும்.*

பொலிந்த செல்வமொடு புகழ்மீக் கூரி
மலிந்த திருவின் வத்தவர் பெருங்குடி
உண்மகி ழுவகை யூக்க மிமிழப்
பண்மகிழ் பேரியாழ் பயிற்றிய கேள்வி
உலைவில் வென்றி யுதயண குமரற்கு
நலமிகு புதல்வ னன்னாட் பிறந்த
உவகை மாற்ற முஞ்சையம் பெருநகர்ப்
பகையடு வேந்தற்குப் பணிந்தன னுரைப்பத்
தன்மைக் கேற்ற தலைப்பே ரணிகலம்
புன்மை தீர முன்னிலை நல்கிப்
பழன மணிந்த பதினா றாயிரம்
கழனி நன்னகர் கலக்க மில்லன
மன்ன னருளி மன்னரு மறவரும்
இன்னே வருகென் றியமர மறைகென
முரைசெறி முதியற்குப் பெறுவன நல்கி
வினைசெல லிவுளி வேந்த னேவ
ஓடை யணிந்த வோண்போ னேற்றிக்
கோடுடை வேழம் பாடுபெறப் பண்ணி
எருத்தின் மீமிசைத் திருத்தக விரீஇத்
துகின்மடி யணைமிசைத் துளக்க மின்றிப்
பாற்படு வென்றி நாற்புடை மருங்கினும்
கண்டோர் விழையுந் தண்டாக் கோலமொடு
நீத்தியாற் றன்ன நெடுங்கண் வீதியுட்

போத்தர வமைந்து புகுவழி யெல்லாம்
கனைபோற் கடிப்பிற் காண்டக வோச்சிப்
புனைபோற் பூந்தார்ப் புரவலன் காக்கும்
கன்னி மூதெயி னன்னகர் கேட்ப
மதிமரு ணெடுங்குடை மறமாச் சேனற்குப்
பதினா றுயிரம் பட்ட மகளிருள்
முதற்பெருந் தேவி திருநா ளீன்ற
மதுக்கமழ் கோதை வாசவ தத்தை
வடதிசை மீனிற் கற்புமீக் கூரி
வடுவில் செய்தொழில் வத்தவர் பெருமகன்
குறிப்பறிந் தொழுகிக் கோடாக் குணத்தொடு
பொறிப்பூண் மார்பிற் புதல்வற் பயந்தனள்
கோமகற் பெற்று.............................
செய்முதல் வந்த சிறப்பின ராகி
.....................யக்கடம் பூண்டபின்
வருபரி சார மணிநீர்ப் பேரியாற்
றிருகரை மருங்கினு மிங்கில மேத்தச்
சீர்மையொடு பொருந்திச் சிறப்பு முந்துறீஇ
அறிவி னமர்வார் நெறிமையிற் றிரியா
இருபான் மாக்களு மொருபாற் றிருந்த
ஊர்திரை நெடுங்கட லுலப்பி னுளொடு
வாழ்கநங் கோமான் வையக மெல்லாம்
பகையும் பிணியும் பசியு நீங்கித்
தகையுஞ் செல்வமுந் தாம்படு கென்ன
மிகைபல புகழ்ந்து தொகைஇ யாற்றிய
இன்ப மொழியவன் பன்முறை யறைந்தபிற்
...................யோண்புக ழுவந்தன ரேத்தி
வரைநிரைத் தன்ன மாடந் தோறும்
திரைநிரைத் தன்ன படாகையுங் கொடியும்
காட்சிக் காகா மாட்சிய வாகி
அணிபெற வுயரிப் பணிவிலர் மறல
இந்திர வுலக மிழுக்குபு வீழ்ந்து
வந்திருந் தன்றெனக் கண்டவ ரேத்த
வேனல வேந்தன் விழுப்பெருங் கோயிலுட்

பன்னு ருயிரம் பண்முர சார்ப்ப
நன்னீர் விரவிய செந்நிறச் சுண்ணம்
குலநல மகளிரோடு கோமக ஞடி
ஐந்நூற் றிரட்டி யருங்கடை தோறும்
பசும்பொன் மாசையும்.....................
பிடிப்புவிலை யறியாப் பெருங்கல முட்படக்
கொடித்தேர் முற்றத்துக் குறையுடை யோர்கட்
கீகென வருளி யெண்டிசை மருங்கினும்
ஆய்படை வேந்தற் கரும்பெறற் றிருமகள்
வாசவ தத்தை தீதில் சிறப்போடு
புத்திரற் பெற்றனள் பொலிவு முந்துறீஇ
மொய்த்த மாநகர் முறைமுறை வருகென
அதர்கடி தோடுறு மமைதி யாளரைப்
பொறியோற் றோலையோ டறியப் போக்கி
ஆராக் காதலோ டணிபா ராட்டி
நீராட் டயர்ந்து பல்கல னணிந்து
சீரார் செல்வமொடு செவ்வி கொடீஇத்
தெரிமா ணுளர் திறவதிற் சூழ
அரிமா சுமந்த வாசனத் திருந்து
பொன்றுப் புகழோன் போக்கல் வேண்டி
ஒன்று ரட்ட யூகியைத் தரீஇ
இன்றியா னெய்தினே னெனின்............
பிரச்சோ தனனவ னுரைத்ததன் பின்னர்ப்
பாற்பட் டெய்திய பதினு ருயிரம்
தூப்பா லமைச்சர் மேற்பா லறிவிற்
றலைக்கை யாகிய நலத்தகு நாட்டத்து
ஞாலம் புகழுஞ் சாலங் காயன்
ஏற்ற சிறப்பி னியூகி தன்னேடு
மாற்றங் கொடுத்தல் வலித்தன ஞகி
முதல்வன் செவ்வி முகமுத னேக்கிச்
சிதைபொரு ளின்றிச் செந்நெறி தழீஇ
உதையத் திவரு மொண்சுடர் போல
எல்லா மாந்தர்க்கு மிருளற விளங்கும்
செல்லா றிதுவெனச் சொல்லுதல் வேண்டிச்
சாலவை நாப்பட் சலத்திற் றீர்ந்த

கேள்வி யாளரை வேறுதேரிந் தமைத்து
வாதம் வேண்டிய சாலங் காயன்
மாற்றம் பகுத்தற் காற்றி னுடி
மேற்கோண் டுரைக்கு மெய்த்துறை மருங்கின்
நூற்பாற் றழீஇய குற்ற மிவையெனக்
கேட்டோர் மனமுணக் கிளந்தவன் கடாவ
மெய்த்தகு நுண்பொருண் மேத்தப் பன்னி
உத்தர வாக்கியம் யூகியு நிறீஇக்
கழிபே ருவகையொடு காவல் வேந்தன்
ஒழிக நாமிவற் காற்றே முரையெனச்
சாலங் காயனைத் தோல்வினை யேற்றி
உரைத்த கிளவிக் கொன்றே போல
விரித்துப்பல குற்றம் விளங்கக் காட்ட
ஏற்ற முகத்தி னிறைவனும் விரும்பி
நண்பின் மாட்சியுங் கல்விய தகலமும்
பண்பின் றேழிலும் படைத்தொழின் மாண்பும்
காயு மாந்த ராயினும் யாதும்
தீயவை கூறப் படாத திண்மையும்
இவற்கல தில்லை யிவனுற் பெற்ற
அவற்கல தில்லை யரசின் மாட்சியென
மன்னிசை நிறீஇய நன்ன ராளனொடு
நுண்ணெறி நுழையு நூற்பொரு ளோப்புமைத்
தன்வயின் மக்களை யவன்வயிற் காட்டி
வேண்டற் பால வெறுக்கை நாடி
வேண்டா ரட்டோன் வேண்டா னுயினும்
அற்பிற் பிணித்த வருண்மறுப் பரிதா
நற்பல கொடுத்து நம்பி பிறந்த
திருநாட் டானம் பெருநாட் காலை
ஏற்போர்க் கீக வின்றே போன்மெனக்
கோப்பெருங் கணக்கரைக் குழுவிடை விளங்கக்
கடைப்பிடி நகும்பினு ளிடைப்பட வெழுதுகென்
றியூகியு முணர வேயின னுகிப்
பரதகன் றங்கை பறந்தரி சிந்திய
மதரரி மழைக்கண் மடம்படு காரிகைத்

திலகமா சேனையேன் றுலகறி பவளையும்
சாலங் காயற் கிளையோ ளாகிய
நீல வுண்க ணிலவுவிடு கதிர்நுதற்
பாக்கிய மமைந்த பார்ப்பியாப் பியையும்
ஆகிய வறிவி னரும்பொருட் கேள்வி
யூகிக் கீத்துப் பாகுபட லின்றி
யாதே யாயினு மாகவினி யெனக்கென
மாதாங்கு திண்டோண் மகிழ்ந்தன னேக்கி
அங்கண் ஞாலத் தரசிய லமைதி
எங்கட் கெல்லா மின்றி யுதயணன்
தன்கட் டங்கிய தகைமை நாடின்
நின்கண் மாண்பி னெடுமொழி யாள
ஆயிற் றென்றுபல வருளொடும் புணர்ந்த
யூகிக் குரையா வொருங்குட னிழற்றிப்
....
கனவினு நனவினு மின்ப மல்லது
நுனைவேற் றடக்கைநம் புனைமுடி வேந்தன்
காணலன் கண்டீர் மாணல மியைந்த
நல்வினை யுடையன் பெரிதெனப் பல்லோர்
இகழ்தல் செல்லார் புகழ்வனர் புகன்று
வாசவ தத்தையும் வத்தவ மன்னனும்
ஏசினன ....
நவிற்றொறு மினிய ஞானம் போலப்
பயிற்றொறு மினியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள மின்புறப்
பிரிவுறு துன்ப மெம்மாட் டெய்த
எரியுறு நெடுவே லேய றிறைவன்
வருக வென்றனன் சென்மதி நீயெனப்
பருகுவனன் போலப் படைப்பெரு வேந்தன்
அவனே யிருப்ப னிவனே னெனவே
கருதல் வேண்டுமெனக் கைவிரல் பற்றி
விடுக்கும் பொழுதி னெடுத்தவ னின்னேர்
உண்டோ வொழுக்கி னென்றுபின் விடுப்ப
அருங்கலம் பிறவு மொருங்கு முந்துறீஇ
வேந்துறை முதுநகர் வியன்மலை யாகப்

போந்துகடன் மண்டும் புண்ணிய நீர்த்துறைப்
பேரியா றென்ன வார்பெருஞ் செல்வமொடு
நன்ப ணுட்டகம் பின்பட நீந்தி
வளங்கவி னெய்திய வத்தவ னிருந்த
கசுரு நலம்பெறு நகரம் புக்கன னினிதென்.

உரை

எ. யூகி பிரச்சோதனனைக் கண்டு வந்தது

அஃதாவது - யூகி பிரச்சோதனனுடைய அழைப்பிற்கிணங்கி அவன் நகரத்திற்குச் சென்று அவனைக்கண்டு அளவளாவிக் கோசம் பிக்கு மீண்டு வந்ததனைக் கூறும் பகுதி என்றவாறு.

(பிரச்சோதனன் நரவாணதத்தன் பிறந்ததை அறிதல்)

க - அ : பொலிந்த...............உரைப்ப

(பொ - ரை.) பொலிவுடைய செல்வப் பெருக்கத்தோடே அச்செல்வத்தின் பயனாகிய புகழானும் நிரம்பி எல்லாப் பேறு களும் மிக்க வத்தவர் மன்னருடைய பெரிய குடியானது நரவாணன் என்னும் இம்மகப்பேற்றினாலே எல்லோரும் அகமகிழ் தற்குக் காரணமான புதிய வுவகையின்கண் மிகாநிற்ப இசையின்பத்தாலே மகிழ்தற்குரிய பேரியாழ் வித்தையை நன்கு பயின்று அக் கேள்வியானுஞ் சிறந்த கெடாத வெற்றியையுடைய உதயண மன்னனுக்கு நலமிகுதற்குக் காரணமான நல்லதொரு நாளிலே பிறந்த அன்பு மிகும் செய்தியைக் கொண்டு சென்ற தூதுவன் உஞ்சை மாநகரத்தே சென்று தன் பகைவரைக் கொன்றழிக்கும் பேராற்றல் படைத்த பிரச்சோதன மன்னனைக் கண்டு வணங்கிக் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) மீக்கூரி - மிகுந்து. மலிந்த - மிக்க. உவகை யூக்கம் - மகிழ்ச்சியாலுண்டாகும் புதிய மனக்கிளர்ச்சி. இமிழ - உண்டாக்க. பயிற்றிய உதயணன் கேள்வியையுடைய உதயணன் எனத் தனித்தனி கூட்டுக. நலமிகுதற்குக் காரணமான புதல்வன் என்க. உகவை - உயர்ச்சி. வேந்தன் : பிரச்சோதனன். தூதன் உரைப்ப என்க.

(இதுவுமது)

கூ - கசு : தன்மைக்...............ஏவ

(பொ - ரை.) அதுகேட்ட அம்மன்னவன் அச்செய்தி கொணர்ந்த தூதனுக்கு அச்செய்தியின் சிறப்பிற்கேற்ற பரிசிலா

கவும் அவனது நல்குரவு துவர நீங்கவும் தானே தலைசிறந்த பேரணிகலத்தை வழங்கிப் பழனங்களாலே அழகு செய்யப்பட்ட பதினாறாயிரம் காணிகளாகிய கழனிகளையுடையதும் கலக்கமற்ற குடிகளையுடையதுமாகிய தன் தலைநகராகிய அவ்வுஞ்சையின்கண் அவ்வோகைச் செய்தியை அனைவர்க்கும் அறிவித்துக் குறுநில மன்னரும் மறவர்களும் இப்பொழுதே நம்முன் வருக! என்று கூறி இயமரம் அறைக! என்று தன் முரசறை வள்ளுவ முதியோனுக்குக் கட்டளையிட்டு அவ்வள்ளுவர் பரிசிலாகப் பெறத்தகுந்த பொருள்களையும் வழங்கி விரைந்து செல்லும் செலவினையுடைய குதிரையையுடைய அவ்வேந்தன் ஏவாநிற்றலாலே என்க.

(வி - ம்.) தன்மை - கொணர்ந்த செய்தியின் சிறப்பு. அணிகலன்களுட்சிறந்த அணிகலன் என்க. பதினாறாயிரம் காணியாகிய கழனி என்க. பழனம் - பொதுநிலம். கலக்கமில்லனவாகிய குடிகள் என்க. பதினாறாயிரம் நகரங்களை (அருளி) என்னல் பொருந்தாமை யுணர்க. இயமரம் - ஒருவகை முரசம். முரைசு - முரசம். இவுளி - குதிரை.

(முரசறைதல்)

௧௭ - ௨௫ : ஓடை................ஓச்சி

(பொ - ரை.) அக்கட்டளை பெற்ற வள்ளுவன் ஒள்ளிய பொன்னாலியன்ற முகபடாம் அணிந்த நெற்றியினையும் மருப்புக்களையுமுடைய யானையைப் பெருமையுண்டாக ஒப்பனை செய்து அதன் பிடரின்மேல் முரசினை அழகுற வைத்துத் துகிலை மடித்தியற்றிய அணையின்மேல் நடுக்கமின்றி இருந்து பலவேறு வெற்றியினையுடைய நான்கு திசைகளினும் தம்மைக் கண்டோர் பின்னுங் காண்டற்கு விரும்பும் குறையற்ற அலங்காரத்தோடு வெள்ளமிக்க பேரியாற்றை யொத்த நெடிய இடமகன்ற வீதிகளிலே புகுந்து தாம் புகுமிடமெல்லாம் முழங்குதற்குக் காரணமாகிய பொன்னாலமைந்த குறுந்தடியால் முரசினை முழக்கி என்க.

(வி - ம்.) ஒண்பொன் ஓடை என்க. கோடு - மருப்பு. பாடு - பெருமை. பண்ணி - ஒப்பனை செய்து. இரீஇ - இருத்தி. முரசினை இருத்தி என்க. வீதிக்கு நீத்தத்தையுடைய ஆறு உவமை. போத்தரவமைந்து : ஒருசொல் நீர்மைத்து; புகுந்து என்க. கனை - முழக்கம். கடிப்பு - குறுந்தடி. காண் - அழகு.

(இதுவுமது)

௨௬ - ௩௫ : புனைபொற்..............பயந்தனள்

(பொ - ரை.) பொற்பூவால் புனைந்த மாலையினையுடைய பிரச்சோதன மன்னனாற் காக்கப்படும் அழியாத் தன்மையை

யுடைய பழைய மதில்களையுடைய நல்ல அவ்வுஞ்சைமா நகரத்து மாந்தர் அனைவருங் கேட்கும்படி, "நகரத்தீரே! திங்கள் மண்டிலம் போன்ற நெடிய கொற்ற வெண்குடையையுடைய நம்மரசனாகிய மறமாச்சேனனுடைய பட்டத்தேவியர் பதினாறுயிரவருள் வைத்து முதற் பெருந்தேவியார் திருவுடைய நாளிலே ஈன்றருளிய தேன் மணங்கமழும் மலர்மாலையினையுடைய வாசவதத்தையார் வடமீன் போலக் கற்புடைமையிலே மிகுந்து வசையற்ற ஆள்வினையை யுடைய வத்தவ மன்னனாகிய உதயணமன்னனுடைய குறிப் பறிந்து ஒழுகிப் பிறழாத நற்குணத்தோடே நல்லிலக்கணம் அமைந்த அணிகலன்களையுடைய மார்பினையுடைய மகனை ஈன்றனர்" என்க.

(வி - ம்.) புரவலன் : பிரச்சோதனன். கன்னி எயில் - அழிவின் மையையுடைய மதில். நகர் : ஆகுபெயர். மதிமருள்குடை, நெடுங் குடை என இயைக்க. பட்டமகளிருள் என்றது வாளா தேவியர் என் னும் அளவில் நின்றது. திருநாள் - திருவுடைமைக்குக் காரணமான நாள். மது - தேன். வடதிசைமீன் - அருந்ததி. மீக்கூரி - மிக்கு. பொறி - நல்லிலக்கணக் கோடுகள்.

(இதுவுமது)

௩௬ - ௪௫ : கோமகற்...............வாழ்க

(பொ - ரை.) "அவ்வாசவதத்தையார் இறைமகனை ஈன்று ....நெடுங்காலமாகத் தொடர்ந்து வந்த பெருமையினை யுடையராய்...............அந்தக் கடமையை மேற்கொண்ட பின்னர் எப்பொழுதும் நீர்வாரா நின்ற 'பரிசாரம்' என்னும் தெளிந்த நீரையுடைய பேரியாற்றினது இரண்டு கரைப் பக்கங் களினும் இவ்வுலகம் புகழும்படி சீர்த்தியோடு கூடி அம்மகப் பேற்றின் பொருட்டுப் பல்வேறு வகைச் சிறப்புக்களையும் செய்து நல்லறிவோடு அவ்வியாற்றின் கரையில் இறைநெறியில் பிறழாது இரண்டு பக்கத்தும் அமர்வாராகிய மாந்தர் எல்லாம் அலைவீசு கின்ற நெடிய கடலாற் சூழப்பட்ட இந்நில உலகத்தின்கண் முடிவற்ற வாழ்நாளோடு அறத்தினது பகுதியிலே நின்று தம் உயிர் திருந்துமாறு வாழ்க!" என்க.

(வி - ம்.) கோமகன் : நரவாணதத்தன். சேய் முதல் - நெடுங் காலமாக. கடம் - கடமை. பரிசாரம் - அவந்தி நாட்டிற்கும் வத்தவ நாட்டிற்கும் இடையே ஓடும் ஒரு பேரியாறு. இப்பகுதியில் ௩௬ ஆம் அடியில் இறுதிச்சீர் இரண்டும், ௩௮ ஆம் அடியில் முதற்சீரிரண்டும் அழிந்தொழிந்தன. பரிசாரம் வத்தவ நாட்டிற்கும் அவந்தி நாட்டிற்கும் பொதுவான ஆறாகலின் இவ்விரு நாட்டிற்கும் பொதுவுரிமையுடைய நரவாணதத்தன் பிறப்பினைக் கருதி அந்த யாற்றின் இரண்டு கரைகளி லும் மாந்தர் குழுமி இருந்து ஆயுட்டானம் முதலியவற்றை வழங்கி அம்மகவினை வாழ்த்துமின். அங்ஙனம் வாழ்த்துவீர் நீடுவாழ்க என்பது

இப்பகுதியின் கருத்தென்க. சீர்மை - மிக்க புகழ். சிறப்பு - ஆயுட்டான முதலிய சிறந்த செயல்கள். அறிவு - ஈண்டு நன்றியறிவின்மேல் நின்றது. ஊர்திரை : வினைத்தொகை. கடல் சூழ்ந்த உலகம் என்க.

(இதுவுமது)

சுடு - கூ : நங்கோமான்................பின்

(பொ - ரை.) நம்பெருமானால் பாதுகாக்கப்படும் நாடெங்கும் பகையும் பிணியும் பசியும் நீங்கிப் பெருந்தகைமையும் செல்வமும் பெருகுக! என்று மிகையாகப் பலப்பல புகழ்ந்து தொகுத்துச் சொன்ன கேட்டோர்க்கு இன்பந்தரும் மொழிகளை அவ்வள்ளுவ முதியோன் பன்முறையுங் கூறி அறிவித்தபின் என்க.

(வி - ம்.) தகை - அழகுமாம். தாம் : அசை. தொகைஇ - தொகுத்து. அவன் : வள்ளுவமுதியன்.

(நகரை அணி செய்தல்)

ருo - அ : ஒண்புகழ்................ஆர்ப்ப

(பொ - ரை.) (அந் நற்செய்திகேட்ட அந்நகர்வாழ் குடிமக்கள்)............மன்னனுடைய ஒள்ளிய புகழை மனமுவந்து பாராட்டித் தம்முடைய, மலைகளை நிரல்பட வைத்தாற்போன்ற மாட மாளிகைதோறும் அலைகளை நிரல்பட நிறுத்தி வைத்தாற் போன்ற பெருங் கொடிகளையும் சிறு கொடிகளையும் கண்டு கண்டு அமையாத மாட்சியுடையனவாய் அழகுண்டாக உயர்த்துதலாலே பகைவர் தாக்குதலாலே இந்திரனுடைய மேனிலையுலகம் அச்சமெய்தி வானத்தினின்றும் நழுவி நிலத்தின்மேல் வந்து வீழ்ந்து கிடந்தது என்று கண்டோர் பாராட்டாநிற்ப, வேற்படையின் நன்மையையுடைய பிரச்சோதன மன்னனது சிறந்த பெரிய கோயிலின்கண் பதினாறாயிரம் பண்ணமைந்த முரசங்கள் ஒருசேர ஆரவாரியா நிற்ப என்க.

(வி - ம்.) இப்பகுதியில் ருoஆம் அடியின் முதற்சீர் அழிந்தது. திரை - அலை. படாகை - பெருங்கொடி. காட்சிக்காகா - காண்டற்கரிய. உயரி - உயர்த்த என்க. பணிவிலர் - பகைவர். இழுக்குபு - இழுக்கி. வந்திருந்தன்று - வந்திருந்தது. வேல்நலம் - வேலாலாகிய நலம். அது வெற்றி என்க. கோயில் - அரண்மனை. பன்னறாயிரம் - பதினாறாயிரம்.

(பிரச்சோதனன் விழாக் கொண்டாடல்)

ருசு - சுடு : நன்னீர்............அருளி

(பொ - ரை.) இனி, பிரச்சோதன மன்னன் குலநலமமைந்த கோமகளிராகிய தேவிமாரோடு நன்னீரில் கலந்த செந்நிறச்

சுண்ண நீரில் ஆடி நமது ஓராயிரம் அறநிலையங்களின் இடம் பெறலரிய முன்றில்தோறும் பசிய பொன்னுலியன்ற மாசை களையும்...............கொள்ளும் விலையை அறிதற்கொண்ணாத பேரணிகலம் உட்படக் கொடியணிந்த தேரினையுடைய நம்மரண் மனை முற்றத்தின்கண் வறுமையுடையோர்களுக்கு வழங்குக! என்று கட்டளையிட்டருளி என்க.

(வி - ம்.) குலநல மகளிர் - தேவிமார்கள். மாசை - ஒரு பொற் காசு. ௬௨ ஆம் அடியின் இறுதிச் சீர் இரண்டும் அழிந்தன. பிடிப்பு விலை - கொள்ளும் விலை. அரண்மனை முற்றம் என்பான் கொடித்தேர் முற்றம் என்றான். குறை - வறுமை.

(இதுவுமது)

௬௫ - ௭௧ : எண்டிசை..............போக்கி

(பொ - ரை.) பின்னர் எட்டுத் திசைகளிடத்தும் உள்ள "ஆராய்ந்தெடுத்த படையினையுடைய பிரச்சோதன மன்னனுக்கு அரும்பெறல் திருமகளாகிய வாசவதத்தை குற்றமற்ற சிறப்போடு ஆண்மகவினை ஈன்றனள். ஆதலின் அணி செய்யப்பட்டுச் சுற்றத்தார் வந்து மொய்த்த சிறந்த உஞ்சை நகரத்திற்கு எல்லீரும் அவரவர் மரபிற்கேற்ப வருவீராக" என்று வரைந்து இலச்சினையும் இடப்பட்ட திருமந்திர ஓலையுடனே வழியில் விரைந்து ஓடும் இயல்புடைய தூதர்களை ஏனையோர் அறியும்படி செலுத்தி என்க.

(வி - ம்.) எண்டிசை மருங்கினும் அமைதியாளரை ஓலையொடு போக்கி என்க. ஆய் படை : வினைத்தொகை. அதர் - வழி. அமைதி யாளர் - ஈண்டுத் தூதுவர். பொறி - இலச்சினை.

(இதுவுமது)

௭௨ - ௭௬ : ஆராக்காதல்...............இருந்து

(பொ - ரை.) இன்புற்று இன்புற்று அமைதி பெறாமைக்குக் காரணமான புத்தணிகலம் பலவும் அணிந்து நீராடி அழகுக் காட்சிகளைப் பாராட்டிச் சிறப்புற்ற செல்வத்தோடு எல்லோரும் தன்னை எளிதிற் காணும்படி செவ்வி கொடுத்துத் தன் அமைச்சர் நன்றாகத் தன்னைச் சூழ்ந்திருப்பத் தான் அரிமா சுமந்த இருக்கை யின்கண் வீற்றிருந்து என்க.

(வி - ம்.) ஆராக் காதல் - நுகர்ந்து நுகர்ந்து அமையாத பேரன்பு. அணிபாராட்டல் - அழகினை விரும்பிச் செய்தல். செவ்வி- சமயம். கொடீஇ - கொடுத்து. தெரிமாணாளர் - அமைச்சர். பொருள் களை ஆராய்ந்து காணும் மாண்புடையோர் என்றவாறு.

(யூகியைப் பிரச்சோதனன் வருவித்தல்)

எஎ - அ0 : பொன்று.............பின்னர்

(பொ - ரை.) அழியாத புகழையுடைய அப் பிரச்சோதன மன்னன் பகைவர்களைக் கொன்ற யூகியைக் கோசம்பி நகரத்திற்குப் போக்குதலை விரும்பித் தன் முன்னிலையில் வரவழைத்து இன்று யான் இத்தகைய இன்பத்தை எய்தினேன் எனின்........ ....அவ்விடத்தே அம் மன்னவன் கூறிய பின்னர் என்க.

(வி - ம்.) பொன்று - அழியாத. புகழோன் : பிரச்சோதனன். கோசம்பிக்குப் போக்கல் வேண்டி என்க. ஒன்றார் - பகைவர். தரீஇ- அழைத்து. எக ஆம் அடியின் இறுதிச் சீரழிந்தது. அவண் - அவ்விடத்தே. யான் எய்தும் இவ்வின்பத்திற்குக் காரணம் நீயேதான் என்று அம் மன்னவன் உரைத்தான் என வருவிக்கலாம்.

(யூகியும் சாலங்காயனும் சொற்போர் நிகழ்த்துதல்)

அக - சு : பாற்பட்...............ஆகி

(பொ - ரை.) பிரச்சோதனனுடைய அரசியலுறுப்புக்களின் பாற்பட்டு ஆங்கெய்திய தூய நெறியின்பால் ஒழுகும் பதினாறாயிரம் அமைச்சர்களுள் வைத்து மேம்பட்ட அறிவுடைமை காரணமாக முதலிடம் பெற்றவனும் நன்மை தக்கிருக்கின்ற நோக்கத்தையுடையவனும் சான்றோரால் புகழப்படுபவனும் ஆகிய 'சாலங்காயன்' என்னும் அமைச்சன் தனக்குத் தகுந்த சிறப்பினையுடைய அந்த யூகி என்னும் அமைச்சனோடு சொற்போர் ஆற்றத் துணிந்தவனாய் என்க.

(வி - ம்.) பால் - பகுதி. தூப்பால் - தூய தன்மை. மேற்பாலறிவு - மேம்பட்ட அறிவு. தலைக்கை - முதலிடம். நாட்டம்-நோக்கம். ஞாலம் : ஆகுபெயர். சான்றோர் என்க. மாற்றங் கொடுத்தல் - சொல்லாடுதல். வலித்தனன் - துணிந்தனன்.

(இதுவுமது)

அள - கூக : முதல்வன்.............வேண்டி

(பொ - ரை.) மன்னனுடைய செவ்வியுடைய முகத்தை நோக்கிப் பொய்ப் பொருளில்லாமல் செவ்விய நூல் நெறியைத் தழுவி வைகறையில் தோன்றும் ஒள்ளிய சுடரையுடைய ஞாயிற்று மண்டிலம்போலே எல்லா மாந்தர்களுக்கும் இருளின்றி விளங்குகின்ற செந்நெறி இஃது என்று சொல்லுதலை விரும்பி என்க.

(வி - ம்.) முதல்வன் : மன்னன். செவ்வி முகம் - தான் கூறுவதனைக் கேட்டற்கு அமைந்திருக்கின்ற முகம். முதல் : ஏழனுருபு: இரண்டாவதன்கண் மயங்கிற்று. சிதைபொருள் - பொய்ப்பொருள். செந்நெறி - செவ்விய நூல் நெறி. உதையம் - உதயம். ஒண்சுடர் - ஞாயிறு. ஞாயிறு பொருள்களை விளக்குதல் போன்று விளக்கி ஆறு காட்ட என்க.

(இதுவுமது)

சுஉ - அ : சாலவை..............கடாவ

(பொ - ரை.) நிரம்பிய அவ் வரசவையின் நடுவே குற்றம் தீர்ந்த நூற்கேள்வியுடைய சான்றோர் சிலரை ஆராய்ந்துகொண்டு வேறாக இருத்திச் சொற்போர் செய்ய விரும்பிய அச்சாலங்காயன் அச் சொற்போரை வகுத்துக் கொள்ளுதற்குரிய வழியிலே ஆராய்ந்து அச் சொற்போரினை மேற்கொண்டு யாம் இப்பொழுது கூறுகின்ற மெய்யான துறையின்கண் அமைந்த நூலின்கண் தழுவப்பட்ட குற்றங்கள் இவையாம் என்று அவ்வவையின்கண் இருந்து கேட்போருடைய நெஞ்சைக் கவர்ந்துகொள்ளும்படி எடுத்துக் கூறியவன் அவற்றைப்பற்றி நுங் கருத்து யாதென யூகியை வினவாநிற்ப என்க.

(வி - ம்.) சாலவை - அறிஞர் நிரம்பிய அவை. நாப்பண் - நடுவிடம். சலம் - குற்றம். வாதம் - சொற்போர். மனம் உண - மனத்தைக் கவரும்படி. கடாவ - வினவ.

(இதுவுமது)

சுசு - கஙு : மெய்த்தகு..............காட்ட

(பொ - ரை.) மெய்யாந் தகுதியையுடைய நுண்பொருள்களை அந்த யூகி தானும் மிகவும் ஆராய்ந்து அவற்றிற்கு விடையாம் மொழிகளைக் கூறித் தன் கொள்கையை நிலைநிறுத்தாநிற்ப, அதுகேட்ட காவற்றொழிலையுடைய மன்னவன் மிகமிக மகிழ்ந்தவனாய்ச் சாலங்காயனை நோக்கி யாம் இவனோடு சொற்போராற்றுதலை ஒழிவோமாக. யாம் இந்த யூகிக்கு எதிர்மொழிய ஆற்றேங்காண் என்று கூறாநிற்ப, மேலும் யூகி அச் சாலங்காயனுக்குத் தோல்வியை ஏற்றி அவன் கூறிய மொழிகளுக்கு ஒரு மொழி போலவே விரித்துப் பற்பல குற்றங்களைக் கூறி அவ்வவையோர்க்கு விளங்கக் காட்டுதலாலே என்க.

(வி - ம்.) மெத்த - மிகவும். பன்னி - ஆராய்ந்து. உத்தரவாக்கியம் - விடைமொழி. நிறீஇ - நிறுத்த. கழி : உரிச்சொல் மிகுதி. வேந்தன் : பிரச்சோதனன். ஒற்றுமை நயத்தால் நீ ஒழிக என்னாது நாம் ஒழிகம் என்றான். இஃது சாலங்காயன் தோல்வியைத் தன் தோல்வியாக மேற்கொண்டபடியாம் என்க. தோல்வினை - தோல்வியினை. தோல்வு - தோல்வி. சாலங்காயன் உரைத்த கிளவிக்கு என்க.

(பிரச்சோதனன் யூகியின் சிறந்த குணங்களை வியத்தல்)

க௦௬ - ௬௨ : ஏற்ற............என

(பொ - ரை.) அதுகேட்ட அம் மன்னவன்றானும் அவன் கூறிய விளக்கங்களை ஏற்றுக்கொண்டதற் கறிகுறியான மெய்ப் பாடுடைய முகத்தினோடே அந்த யூகியைப் பெரிதும் விரும்பி அவ் வவையோரை நோக்கி நண்பினது பெருமையும் கல்வியது விரிவும் பண்பமைந்த தொழிலும் படைத்தொழிற் சிறப்பும் தன்னை வெகுளும் பகைவராயினும் சிறிதும் தீய மொழிகள் கூறப்படாமைக்குக் காரணமான மனத் திட்பமும் ஒருங்கே இவ் வமைச்சனுக்கன்றிப் பிறருக்கு அமைந்ததில்லை. இவ் வமைச்ச னால் எய்தப்பட்ட அரசியற் சிறப்பும் அவ்வுதயணனுக்கன்றி வேறு அரசர்களுக்கு இல்லை என்று கூறிப் பெரிதும் பாராட்டி என்க.

(வி - ம்.) இறைவன் : பிரச்சோதனன். பண்பின் தொழில் - பண்புடைமையோடு செய்யுந் தொழில். காயுர் மாந்தர் - பகைவர். இவற்கு : யூகிக்கு. அவற்கு : உதயணனுக்கு. உதயணனை மீண்டும் அரியணையில் இருத்தியவன் யூகியேயாதலின் இவனாற்பெற்ற அரசு என்றான்.

(பிரச்சோதனன் யூகிக்குச் சிறப்புச் செய்தல்)

கக௩ - ௬ : மன்னிசை..............கொடுத்து

(பொ - ரை.) நிலைபெற்ற புகழை நிறுத்திய நன்மையை யுடைய அந்த யூகியோடே நுண்ணிய நெறிகளினும் நுழைந்து காணும் நூற்பொருள் உணர்ச்சியால் ஒப்புடைய தன்னுடைய மக்களை அழைத்து அந்த யூகிக்குக் காட்டிக் கேண்மை கொள் வித்துப் பகைவரை வென்ற அந்த யூகி விரும்பானாயினும் அவனுக்கு வேண்டுவனவாகிய பொருள்கள் இவை என்று தானே ஆராய்ந்து கண்டு அன்பாற் பிணிக்கப்பட்ட அரு ளுடைமை காரணமாக அவன் வேண்டாவென மறுத்தல் அரி தாம்படி நல்ல பல பொருள்களை வழங்கி என்க.

(வி - ம்.) மன்னிசை - நிலைபெறும் புகழ். நன்னராளன் : யூகி. யூகியும் பிரச்சோதனனும் நூற்பொருளுணர்ச்சியில் ஒப்புமை யுடையோர் என்பது கருத்து. தன்வயின் மக்கள் - தன் மக்கள், யூகி பொருளை விரும்பானாயினும் தனது அன்பு காரணமாக அவன் மறுக்க வியலாதபடி செய்து வழங்கி என்க. வெறுக்கை - பொருள். வேண் டார் - பகைவர். அற்பின் - அன்பினால். நற்பல - நல்லனபல,

(இதுவுமது)

௧௧௯ - ௨௪ : நம்பி.............ஆகி

(பொ - ரை.) பின்னர் அக் குழுவிடை அரசியற் பெருங் கணக்கரை நோக்கி இனி, நரவாணதத்தன் பிறந்த திருவுடைய நாள் குறித்துச் செய்யுந் தானத்தை ஆண்டுதொறும் அப்பெரு நாளில் இற்றை நாளில் இரவலர்க்கு வழங்குமாறு போலே வழங்கு தற் பொருட்டு அக் கணக்கினைக் கணக்கர் குழுவிற்கு விளங்கும் படி இப்பொழுதே கடைப்பிடி ஓலையின்கண் எழுதிவையுங்கோள்! என்று கட்டளையிட்டு அந்த யூகியும் உணரும்படி அக் கணக் கரை ஏவியவனாய் என்க.

(வி - ம்.) நம்பி : நரவாணதத்தன். இன்றேபோல் ஏற்போர்க்கு ஈக என்று மாறுக. இனி, போன்ம் அசை எனினுமாம். கடைப்பிடி நுகும்பு - கடைப்பிடித் தொழுகுதற்குரிய கட்டளைகளை எழுதும் ஓலை.

(யூகிக்கு இருமகளிரை மணம் புரிவித்தல்)

௧௨௫ - ௬௪ : பரதகன்............நோக்கி

(பொ - ரை.) பின்னர் அம் மன்னர்பெருமான் பரதகன் என்னும் அமைச்சனுடைய தங்கையும் செவ்வரி பரந்து ஒழுகிய மதர்த்த அழகிய குளிர்ந்த கண்களையும் மடப்பமுடைய அழகினையும் உடையவளும் உலகியல் அறிந்தவளும் ஆகிய 'திலகமாசேனை' என்பவளையும் சாலங்காயன் என்னும் அமைச்ச னுடைய தங்கையாகிய நீல நிறமுடைய கண்டோர் நெஞ்சை உண்ணும் கண்களையும் ஒளிவிடுகின்ற கதிர்களையுடைய நெற்றி யினையுமுடைய திருவுடைய பார்ப்பனியாகிய 'யாப்பி' என்ப வளையும் ஆக்கமுடைய அறிவோடு உணர்தற்கரிய நூற்பொருட் கேள்விகளையுமுடைய யூகிக்குத் திருமணம் செய்வித்து இனி யாது நிகழினும் நிகழ்க! என்று யூகிக்கும் தனக்கும் வேற்றுமை யின்றி அவனொடு நட்புரிமை கொண்டவனாய் யானை குதிரை முதலியவற்றை அடக்கி நடத்தும் தனது திண்ணிய தோளை நோக்கி மகிழ்ந்தவனாய் என்க.

(வி - ம்.) பரதகன் - பிரச்சோதனன் அமைச்சர்களுள் ஒருவன். அரி இரண்டனுள் முன்னது செவ்வரி ; பின்னது அழகு. காரிகை - அழகு. உலகறிபவள் - உலகியலை அறிபவள்; உலகத்தாரால் அறிந்து பாராட்டப்படும் சிறப்புடையோள் எனினுமாம். பாக்கியம் - திரு ; புண்ணியமுமாம். பார்ப்பு - பார்ப்பனி. பார்ப்பியாப்பி என்பதே பெயர் எனினுமாம். மன்னன் தான் அவனுக்குச் செய்வன செய்து முடித்த உவகையால் இனி, யாதே யாயினும் ஆக! என்று தன் தோளை நோக்கி மகிழ்ந்தனன். தோளை நோக்குதல் பெருமகிழ்ச்சிக் குறிப்பு. இதனை, "குளிர்ந்து தோணோக்கினர்" (சீவக. ௧அ௪௩.) எனவும்,

"நரனிருந்து தோள்பார்க்க நான்கிடந்து புலம்புவதோ" (கம்ப, சூர்ப்பணகைப். ௧0௬) எனவும் வருவனவற்றாலும் அறிக.

(பிரச்சோதனன் யூகியைப் பாராட்டல்)

௧௩௫ - ௪0 : அங்கண்...............உரையா

(பொ - ரை.) பின்னர் அந்த யூகியை நோக்கி, "நெடிய புகழையுடையோய்! அழகிய இடமமைந்த இந் நில உலகத்தின் கண் உயரிய அரசாட்சி முறைமை எம்மையுள்ளிட்ட அரசர்களிடத் தெல்லாம் நிறைவாக அமைதலின்றி உதயணனிடத்தில் மட்டும் அமைந்துள்ள தகுதிப் பாட்டினை ஆராயுமிடத்து அதற்குக் காரணம் நின்பாலமைந்த அமைச்சியல் மாண்பே ஆகும் என்று இன்னோரன்ன பற்பல அருளளாவிய முகமன் மொழிகளை யூகிக்குக் கூறி" என்க.

(வி - ம்.) எங்கட்கு - எம்மையுள்ளிட்ட பிற அரசர்களுக்கு. நெடுமொழி - புகழ். புணர்ந்த : பலவறிசொல். உரையா - உரைத்து.

(இதுவுமது)

௧௪0 - ௭ : ஒருங்கு...............ஏசினன

(பொ - ரை.) பின்னரும், "அன்பனே! 'உலகத்துயிர்கள் ஒரு சேர இன்புற்று வாழும்படி தனது கொற்றவெண்குடையால் நிழல் செய்து..............கனவும் நனவும் ஆகிய இருவேறு நிலைகளினும் இன்பமேயன்றித் துன்பத்தைக் கூர்த்த நுனியையுடைய வேலை ஏந்திய பெரிய கையையும் புனைந்த முடியையுமுடைய நம் மரசன் கண்டிலன்காண். ஆதலின் அவன் மிகவும் மாட்சிமையுடைய நன்மையோடு கூடிய நல்வினையைப் பெரிதும் உடையன்' என்று உலகில் பலரும் அம் மன்னனை இகழாது விரும்பிப் புகழ்வாராக! வாசவதத்தையும் அவ்வத்தவ மன்னனும் ஏசினன"(?)..........என்க.

(வி - ம்.) ௧௪0 ஆம் அடியையடுத்து ஓரடி முழுதும் ௧௪௧ ஆம் அடியின்கண் மூன்று சீர்களும் அழிந்தன. இன்பம் நுகர்வதல்லது நம் வேந்தன் துன்பங் காணலன் என இயைக்க. இகழ்தல் செல்லார் ஒருசொல். 'புகன்று புகழ்வனர் என மாறுக. புகன்று - விரும்பி.

(பிரச்சோதனன் யூகிக்கு விடை கொடுத்தல்)

௧௪௮ - ௫௩ : நவிற்றொறும்...............நீயென

(பொ - ரை.) "அமைச்சரேறே! ஓதுந்தோறும் இனியவாகும் நூல் நயம் போலப் பழகுந் தோறும் இனியவாகும் உனது பண்புடைய நட்புரிமையை யாங்கள் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எம்முள்ளம் இன்புறாநிற்கும். அங்ஙனம்

அ. மதனமஞ்சிகை வதுவை

இதன்கண் : யூகி உதயணனுக்குக் கூறலும், உதயணன் செயலும், நரவாணதத்தனுடைய இளமைப் பருவமும், நரவாணதத்தனது காளைப்பருவமும், கணிகையர் இயல்பும், கலிங்கசேனையும், மதனமஞ்சிகை பந்தாடுகையில் பந்து கீழே விழுதலும், நரவாணதத்தன் உலா வரலும், நரவாணதத்தன் மதனமஞ்சிகையைக் கண்டு விரும்பலும், நரவாணதத்தன் கோமுகனை வினுதலும், கோமுகன் மதனமஞ்சிகையின் உருவத்தை எழுதுவதும், கோமுகன் மதனமஞ்சிகை வீடு சென்று பரிசங் காட்டலும், பரத்தையர் செயலும், கோமுகன் கூறலும், உதயணன் மதனமஞ்சிகைக்குப் பொன் விடுத்தலும், நரவாணதத்தன் மணமும் கூறப்படும்.

நலம்பெறு நகரம் புக்கன ஞகி
நிலம்பெறு திருவி னெடுமுடி யண்ணலைக்
கண்டுகண் கூடிக் கழலுறப் பணிந்து
மண்டமர்க் கடந்த மறமாச் சேனன்
உள்ளத் தன்ன வுவகைசெய் தனவும்
வள்ளற் றனமும் வகுத்தனன் கூறி
அவந்தி நாடு மணியுஞ் சேனையும்
இயைந்து முந்துறீஇ யிருபாற் குலனும்
தெம்மு னிழியாத் தெளிவிடை யாகச்
செம்மையிற் செய்த செறிவுந் திண்மையும்
நம்பிக் கீத்த நன்புகழ் நாடும்
இன்னவை யென்று பன்முறை பயிற்றி
நாட்டு வாயுளுங் காட்டு வாயுளும்
கரத்த லின்றிப் பரத்த னன்றெனத்
தாமுடை நாடு நகரமுந் தரீஇ
வாய்முறை வந்த வழக்கியல் வழாமை
எட்டுமிசை யேற்றி யியல்பினின் யாப்புறுத்
தாற்றல் சான்ற வரும்பெறற் சுற்றமொடு
கூற்றமும் விழையக் கோலினி தோச்சிக்
கோட்ட மின்றிக் குடிபுறங் காத்து

வாட்டொழிற் ருனை வத்தவர் பெருமகன்
அன்புடைத் தோழரோ டின்புற் றேழுகச்
சிறந்த திருவொடு செல்வம் பெருகப்
பிறந்த நம்பி திறங்கிளந் துரைப்பேன்
குலக்குவிளக் காகத் தோன்றிக் கோலமொடு
நலத்தகு சிறப்பி னல்லோர் நாப்பண்
இலக்கணம் பொறித்த வனப்புடை யாக்கையன்
விசும்பிற் கவாவும் வேட்கைய னாகிப்
பசும்பொற் பல்படை யிலங்குங் கழுத்தினன்
திருவா னுய தேங்கமழ் மார்பன்
நரவாண தத்த னொடொரு நந்தி
உலம்பொரு மார்பி னுதயண குமரன்
நலம்பெறு தோழர் நால்வரும் பெற்ற
வலம்பெறு சிறப்பின் வனப்பொடு புணர்ந்த
நலம்பெறு கோமுக னும வரிசிகன்
தகைமிகு பூதி தவந்தக னென்னும்
நன்ன ரமைந்த நால்வருஞ் சூழத்
தளர்நடைக் காலத் திளமை யிகந்து
நல்லா சாரமொடு நல்லோர் காட்ட
நற்பொருண் ஞான நவின்றுதுறை போகி
விற்பொரு ணன்னூல் விதியி னுனித்துப்
படைக்கலக் கரணம் பல்வகை பயிற்றிக்
கொடைக்கடம் பூண்ட கொள்கைய னாகிக்
குறைவில் செல்வமொடு குமார காலம்
நிறையுற வுய்த்து நீர்மையின் வழாஅ
ஏமஞ் சான்ற விந்நில வரைப்பிற்
காம னிவனெனக் கண்டோர் காமுறத்
தாளுந் தோளுந் தருக்கி நாளும்
நடவா நின்ற காலை மடனார்ந்
தீற்று மந்தி யிற்றெழு பூங்கொடி
புற்புல முதிரக நற்றுற விக்கே
போல்வ ரென்னுஞ் சால்வுடை யொழுக்கிற்
கலைதுறை போகிய கணிகா சாரத்துப்

பலதுறை பயின்று பல்லுரைக் கேள்வியொடு
படிவங் குறிக்கும் பாவனை மேற்கொண்
டடிமையிற் பொலிந்த வகன்பரி யாளத்துத்
தலைக்கோற் சிறப்பி னலத்தகு மகளிர்
ஆயிரத் திரட்டி யைந்நூற் றுவர்களுட்
காசில் சிறப்பிற் கலிங்க சேனையென்
றோசை போகிய வொளியின ளாகிய
மாசில் கற்பின் மடமொழி மடமகள்
வானோ ருலகி னல்லது மற்றவட்
கீனோ ருலகி னிணைதா னில்லெனக்
கண்டோ ராயினுங் கேட்டோ ராயினும்
தண்டாது புகழுந் தன்மைய ளாகித்
துதைபூங் கோதை சுமத்த லாற்றா
மதர்மா னோக்கின் மாதரஞ் சாயற்
பதரில் பணிமொழிப் பணைத்தோட் சின்னுதல்
மதர்வை நோக்கின் மதனமஞ் சிகைதன்
மலைபுரை மாடத் துயர்நிலை மருங்கின்
அணிச்சா லேகத் தணித்தகு துளையூ
டெறிபந் திழுக்குபு விழுதலி னோக்கிச்
செறிவளைத் தோளி செம்முக மாக
வேகத் தானை வேந்த னொருமகன்
போதுகொடி வீதியிற் புகழ்ந்துபல ரேத்த
அருவரை மருங்கி னருவி போல
இருகவுண் மருங்கினுஞ் சொரிதரு கடாத்ததோர்
இடுமணி யானை யெருத்த மேறிப்
படுமுகின் மீமிசைப் பனிமதி போல
உலாவெனப் போந்தோ னிலாவுறழ் பூந்துகிற்
றானைப் படுதலிற் றானே கொண்டிஃ
திட்டோ ளார்கொலென் றெட்டி நோக்கினன்
நிறைமதி வாண்முகத் துறழ்வன போல
நீளரி யொழுகி நிகர்தமக் கில்லா
வாள்புரை தடங்கண் வளைத்தவள் வாங்கி
நெஞ்சகம் படுப்ப வெஞ்சின வீரன்
அறியா மையின் மறுகுறு சிந்தையன்

பந்துவலி யாகப் பையெனப் போகியோர்
அந்தண் காவினு ளசைந்தன னிருந்து
கோய்ம்மலர்ப் படலைக் கோமுகற் கூஉய்க்
கைபுனை வனப்பிற் கணிகையர் சேரியிற்
செய்பந் தீதுடைச் சேயிழை மாதரை
ஐய மின்றி யறிதி யாயின்
மெய்பெற வுரையென மேயினன் வினவக்
கையிற் கொண்டோன் கண்டன னதன்மிசை
ஒற்றிய வொற்றைத் தெற்றெனத் தெரிந்து
நறுவெண் சாந்தம் பூசிய கையாற்
செறிவுறப் பிடித்தலிற் செறிவிர னிரைவடுக்
கிடந்தமை நோக்கி யுடங்குணர் வெய்தி
விரலும் விரலிற் கேற்ற வங்கையும்
அங்கைக் கேற்ற பைந்தொடி முன்கையும்
முன்கைக் கேற்ற நன்கமை தோளும்
தோளிற் கேற்ற வாளொளி முகமும்
மாப்படு வடுவுறழ் மலர்நெடுங் கண்ணும்
துப்பன வாயு முத்தொளி முறுவலும்
ஒழுகுகொடி மூக்கு மெழுதுநுண் புருவமும்
சேடமை செவியுஞ் சில்லிருங் கூந்தலும்
ஒல்குமயி ரொழுக்கு மல்குற் பரப்பும்
மருங்கி னீளமு நிறங்கிளர் சேவடித்
தன்மையு மெல்லா முன்முறை நூலின்
அளந்தனன் போல வளம்பட வெழுதிப்
பாவை யிலக்கணம் பற்றி மற்றதன்
நிறமு நீளமும் பிறவுந் தெரியாச்
செறிதா ளண்ணலைச் செவ்வியின் வணங்கி
இதன்வடி வொப்போ ளிந்நகர் வரைப்பின்
மதன மஞ்சிகை யாகுமென வலித்துப்
பந்துகைக் கொண்டு மைந்தன் போகிக்
காழார் வனமுலைக் கணிகையர் சேரித்
தோழ னுள்ளத் தாழ்நனி கலக்கிய
மாதர் மனைவயிற்று துவனுகிப்
பல்காற் சென்று மெல்லெனச் சேர்ந்து
குறிப்புடை வெங்நோய் நெறிப்பட நாடிய

பாசிழை நன்கலம் பரிய மாக
மாசில்பந் தறிவு படமேல் வைத்தாண்
டீன்ற தாய்முதற் றேன்றக் காட்டிப்
பட்டது கூறலி னேட்டிய வுவகையள்
வழிபடு தெய்வம் வரந்தரு கின்றேன
மொழிவன ளாக முகத்தின் விரும்பித்
தாயுந் தவ்வையுந் தம்மோடு பயின்ற
ஆய்வளை மகளிரு நிகழ்ந்ததை யறிந்து
சீரின மதித்துச் சிற்றின மோரீஇப்
பேரினத் தவரோடு பெருங்கிளை பிரியாத்
தலைக்கோன் மகளிர் தன்மை கூறிக்
கற்கெழு கானவன் கைக்கோ லுமிழ்ந்த
எற்படு சிறுதீ யெழுச்சியிற் காமம்
மிகுமனத் துவகையி னேல்லை விருப்பம்
முறையின் முறையின் முறுக மூட்டிக்
கோடித்தேர்க் கோமான் குறிப்பி னல்லதை
அடித்தியை யருளுதல் யாப்பின் றேமக்கென
படிற்றுள்ர மகளிர் பரிய மறுப்ப
இருங்கண் வையகத் தேந்தலு மூரியன்
மருந்தேர் கிளவி மதனமஞ் சிகைதன்
காமரு நோக்கங் காணக் கூடும்
ஏம வைக லியல்வதா மெனினேன
அன்றுகை நில்லாது சென்ற வுள்ளமோடு
பகன்மதி போலப் பசந்த குமரன்
இகன்மிசை யுள்ளத் தெவ்வங் கேட்டுத்
தலைப்பெருந் தேவியுந் தந்தையுங் கூடிக்
குலப்பெருந் தேவியாக் கோடி விழுநிதி
சிறப்பின்விட் டிருந்து நலத்தகு கிழமைக்
கியாவரு முரியோ ரிவளி னில்லெனக்
காவல் வேந்தன் காணங் காண்டலின்
உறூஅர் போல வுற்ற காதலோடு
மறூஅர் மாதர் வதுவை வலித்தபின்
மதிபுரை முகத்தியை மன்னவ னேருமகன்
வதுவைச் செல்வமோடு வான்றேய் வியனகர்

விதியி னெய்தி விழவு முந்துறீஇப்
பதனறிந்து நுகருமாற் பண்புமிகச் செறிந்தேன்.

உரை

அ. மதனமஞ்சிகை வதுவை

அஃதாவது—நரவாணதத்தன் மதனமஞ்சிகை என்னும் நங்கையை மணம் புணர்ந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(யூகி உதயணனுக்குக் கூறல்)

க - சு : நலம்பெறு..............கூறி

(பொ - ரை.) யூகியந்தணன் உஞ்சையினின்றும் நலம் பெறுதலையுடைய கோசம்பி நகரத்தின்கண் புகுந்தவனும் ஆங்கு மேலும் மேலும் நிலங்களைப் பெறுகின்ற ஆகூழாகிய திருவினை யுடைய நெடிய முடியையுடைய அண்ணலாகிய உதயண மன்ன னைக் கண்டு, கூடி அம்மன்னனுடைய வீரக்கழல் தன்தலையில் உறப் பணிந்து எழுந்து தன்மேல் பகைவர் மண்டி வந்த போர் களை யெல்லாம் வென்று வாகை சூடிய மறமாச்சேனன் என்னும் அப்பிரச்சோதன மன்னன் தனது உள்ளத்திற்கு இயையத் தனக்குச் செய்த மகிழ்ச்சிச் செயல்களையும் அவனுடைய வள் ளற் பண்பினையும் வகுத்து உதயணனுக்குக் கூறி என்க.

(வி - ம்.) நகரம் : கோசம்பி. நிலம்பெறு திரு - மேலும்மேலும் நிலம்பெறுதற்குரிய ஆகூழ். சக்கரவர்த்தி என்பார் நெடுமுடி அண்ணல் என்றார். மறமாச்சேனன் - பிரச்சோதனன். வள்ளற்றனம் - வள்ளற் றன்மை. "வள்ளற் றனம்என் னுயிரை மாய்க்கு மாய்க்கு மென்றான்" என்றார் கம்பநாடரும் (நகர்நீங்கு. சுஉ).

(இதுவுமது)

எ - கஉ : அவந்தி............பயிற்றி

(பொ - ரை.) அவ்வவந்திநாட்டின் ஊராட்சித் தலைவரும் அழகிய அவ்வுஞ்சை நகரப் பெருங்குடி மாந்தரும் தம்முள் இயைந்து முற்பட்டு வந்து நின் குலத்தாரும் பிரச்சோதனன் குலத்தாரும் ஒன்றுபட்டு நின்று இருவர் பகைவரையும் வெல்லுத லன்றி அப்பகைவர் முன் புறங்கொடாத தெளிவான உடம்பாடு இடையாகச் செம்மையாகத் தான் செய்த செறிவும் திண்மையும் உதயணனுக்கு அம் மன்னன் வழங்கிய நல்ல புகழையுடைய நாடும் இன்னின்னவையென்று பல்காலும் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) நாடு - நாட்டுத்தலைவர். உஞ்சேனை - உஞ்சைநகரம் : ஆகுபெயர். நகரத் தலைவரும் என்க. இருபாற்குலன் — பிரச்சோதனன் குலமும் உதயணன் குலமும். இருபாற்குலனும் ஒன்றுகூடி நின்று தம் பகைவர் முன் இழியாமைக்குக் காரணமான தெளிவுடைமையும் என்க. இவற்றை இடையாகக் கூறி ஈருக மேல்வருவனவற்றைக் கூறினான் என்பது கருத்தாகக் கொள்க. நம்பி : முன்னிலைப் புறமொழி.

(உதயணன் செயல்)

கஅ - கூ : நாட்டு..................ஓச்சி

(பொ - ரை.) அதுகேட்ட உதயணன் இக்கேண்மைச் செய்திகளை நமது நாட்டினும் காட்டினும் வாழும் குடிமக்கள் அனைவரிடத்தும் மறைத்தலின்றிப் பரப்புதல் நன்றென்று கருதித் தம்முடைய நாட்டுத் தலைவரையும் நகரத் தலைவரையும் வரவழைத்து அச்செய்தி, வாயினால் கூறிய வழக்குத் தவறாமல் இருக்க ஏட்டில் எழுதி இலச்சினை யிட்டு அவர்பால் ஈந்து விடுத்துப் பெறுதற்கரிய ஆற்றல் நிரம்பிய அரசியற் சுற்றத்தாரோடு கூடிக் கூற்றுவனும் விரும்பும்படி முறைசெய்து இனிதாகச் செங்கோலோச்சி என்க.

(வி - ம்.) நாட்டு வாயுளும் - நாட்டிடங்களிலும். காட்டுவாயுளும் - காட்டிடங்களிலும். நாடும் நகரமும் தரீஇ - நாட்டுத் தலைவரையும் நகரத்தலைவரையும் வரவழைத்து. வழாமை - வழாமலிருக்க. நடுநிலையில் கூற்றம் சிறந்தவனாதலின் உதயணன் நடுநிலைமை கண்டு கூற்றுவன் விழைந்தான் என்க. "உரைவரை நிறுத்தகோ லுயிர்திறம் பெயர்ப்பான்போல் முறை செய்தி" (கலி. க00 : கஙு - சு) எனவும், "தெரிகோன் ஞமன்போல வொருதிறம் பற்ற லிலியரோ" (புற.நா.சு: கூ-க0) எனவும் வருதலுங் காண்க.

(இதுவுமது)

உ0 - ச : கோட்டம்..................உரைப்பேன்

(பொ - ரை.) கோல் வளைதலின்றி அவ் வத்தவ மன்னன் தன் குடிமக்களைப் பாதுகாத்து வாள் முதலிய படைக்கலத் தொழிலின் மிக்க படைகளோடும் அன்புடைய தோழரோடும் இன்புற்று ஒழுகுதலாலே சிறந்த அழகோடு செல்வம் பெருகா நிற்ப, இனி யான் அம்மன்னனுக்குப் பிறந்த மகனாகிய நரவாணதத்தன் என்னும் அந்த நம்பியின் வரலாற்றை விதந்து கூறுவேன் கேண்மின் என்க.

(வி - ம்.) கோட்டம் - வளைவு. பெருமகன் : உதயணன். தோழர் : யூகி முதலியோர். திரு — அழகு. நம்பி : நரவாணன். உரைப்பேன் என்பது நூலாசிரியர் கூற்று. இது நுதலிப் புகுதல் என்னும் உத்தி.

(நரவாணதத்தனுடைய இளமைப் பருவம்)

உ௫ - ௩க : குலக்கு................நந்தி

(பொ - ரை.) இனி, குருகுலத்திற்கு விளக்காகத் தோன்றி அழகோடு நலமெல்லாம் தக்கிருந்த சிறப்பினையுடைய நல்லோரிடையில் நல்லிலக்கணம் எல்லாம் அமையப் பெற்ற அழகுடைய யாக்கையையுடையனும் வானுலகத்தை ஆளுதற்கு எழுகின்ற வேட்கையை யுடையவனும்ப் பசிய பொன்னுலாகிய ஐம்படை விளங்குகின்ற கழுத்தையுடையவனுப்த் திருமகளுக்குப் புகலிடமாகிய தேன்மணக்கும் மார்பினையுடைய அந்த நரவாணதத்தன் நாள்தோறும் வளர்ச்சியுற்று என்க.

(வி - ம்.) குலக்கு - குலத்திற்கு. நல்லோர் - செவிலித்தாயர். வனப்பு - அழகு. பல்படை - ஐம்படை. திருவாண் - திரு ஆணம் : ஈறுகெட்டது. நந்தி - வளர்ச்சியுற்று.

(இதுவுமது)

௩உ - எ : உலம்................சூழ

(பொ - ரை.) உலக்கல்லை யொத்த மார்பினையுடைய உதயணகுமரனுடைய நன்மைமிக்க தோழர் நால்வரும் பெற்ற வெற்றி பெறும் சிறப்பையுடைய அழகோடு கூடிய நன்மை பெறுதற்குக் காரணமான கோமுகன், அரிசிகன், அழகுமிக்க பூதி, தவந்தகன் என்னும் பெயரமைந்த இம்மைந்தர் நால்வரும் தன்னைச் சூழாநிற்ப என்க.

(வி - ம்.) உதயணன் மகனுகிய நரவாணதத்தனுக்கு அவன் தோழராகிய உருமண்ணுவா முதலிய நால்வரும் ஈன்ற கோமுகன் முதலிய நால்வரும் தோழராய் அவனைச் சூழ்ந்தனர் என்க. வலம் - வெற்றி. என்னும் நன்னர் நாமம் அமைந்த என இயைத்துக் கொள்க.

(இதுவுமது)

௩அ - ௪௩ : தளர்................ஆகி

(பொ - ரை.) தளர்ந்து நடக்கும் நடையினையுடைய காலத்ததாகிய குழவிப்பருவத்தைக் கடந்து கற்கும் பருவமெய்தி நல்ல ஆசிரியன்மார் நல்ல அற நூலையும் பொருள் நூலையும் கற்பித்தலாலே அவற்றைப் பயின்று முதிர்ந்து நல்ல வில் முதலிய படைக்கல நூல்களையும் முறைப்படி நுணுக்கமாகப் பயின்று அப்படைக்கலத் தொழில்களையும் பல்வேறு வகைகளாலும் பழகி அரசனுக்குரிய கொடைக் கடமைகளையும் மேற்கொண்ட கொள்கையையுடையவனுகி என்க.

(வி - ம்.) நல்லாசாரம் - அறநூல். நல்லோர் - நல்லாசிரியர். காட்ட - கற்பிக்க. நல்ல பொருள் நூலும் ஞான நூலும் என்க.

நவின்று - பயின்று. கரணம் - தொழில் விகற்பம். கொடைக்கடம் கொடையாகிய கடமை.

"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (குறள். ௩அ௫)

என்பதுபற்றி ஆசார நூல் பொருள் நூல் முதலியவற்றைப் பயின்று கொடைக் கடனும் பூண்டனன் என்றவாறு.

(நரவாணதத்தனது காளைப் பருவம்)

௪௪ - ௬: குறைவில்..............காலை

(பொ - ரை.) குறைவற்ற செல்வத்தோடே வளர்ந்து அப் பள்ளிப் பருவங்கடந்து காளைப்பருவம் எய்திப் பண்பில் வழுவாத பாதுகாவலடைந்த இந்த நில உலகத்தின்கண் இவனே 'காமன்' என்று தன்னைக் கண்டோர் காமுறும்படி தாளுந் தோளும் தருக் குற்று நாள்தோறும் நடவாநின்ற காலத்தே என்க.

(வி - ம்.) குமாரகாலம் – காளைப்பருவம்; மகளிருடைய மனத் தைக் கவரும் கட்டழகு மிக்க பருவம். தாளுந்தோளும் முறுக்கேறித் தருக்கி நடவாநின்ற காலம் என்க. தருக்குதல் - யாரே எம்மை நிகர் வார் என்று இறுமாப்புறுதல்.

(கணிகையர் இயல்பு)

௪௬ - ௬௧: மடன்................மடமகள்

(பொ - ரை.) அறிஞர் "கணிகை மகளிர், மடப்பமுடைய குட்டி ஈனும் பெண்குரங்கையும், முனைமுறிந்து தளிர்த்தெழுந்த பூங்கொடியினையும், புல்லையுடைய நிலத்தையும், மெய்யுணர்ச்சி முதிர்ந்தநெஞ்சினையுடைய நல்ல துறவியையும் நிகர்ப்பர்," என்று கூறுதற்குப் பொருந்திய ஒழுக்கத்தினையும், மகளிர்க்குரிய கலைத்துறை பலவும் பயின்று முதிர்ந்த கணிகை மகளிர்க்குரிய ஒழுக்கத்தோடே பலதுறை நூல்களையும் பயின்று பல நூற் கேள்வியோடு விரதத்தைக் குறிக்கும் பாவனையையும் மேற் கொண்டு அடிமைத்தொழிலில் பொலிவுற்ற விரிந்த அரசன் பரிவாரங்களுள் வைத்துத் தலைக்கோல் என்னும் பட்டம் அரசனாற் சூட்டப்பட்ட அழகுத்தகுதிபெற்ற கணிகை மகளிர் இரண்டாயிரத்தைந்நூற்றுவருள் வைத்துக் குற்றமற்ற 'கலிங்க சேனை' என்னும் பெயரினையுடைய தன் புகழை உலகெலாம் பரவச் செய்த குற்றமற்ற கற்பினையுடையவளும் மடப்பமுடைய மொழியினையுடையவளுமாகிய அக்கணிகையின் மகளும் என்க.

(வி - ம்.) ஈற்று மந்தி - ஈனுதலையுடைய பெண் குரங்கு. இற்று எழுபூங்கொடி – முனைமுறிந்து தளிர்த்தெழுந்த பூங்கொடி. புற்புலம் - புல்லையுடைய நிலம். முதிர் அகம் நல்துறவி - மெய்யுணர்ச்சி முதிர்ந்த நல்ல துறவி. அறிஞர் - மந்தி, பூங்கொடி, புற்புலம், நல்ல துறவி

என்னும் இவற்றைக் கணிகை மகளிர் ஒழுக்கத்திற்கு உவமை கூறுவர். "நொய்ம்பொரு ளானை நுகர்ந்திட்டு வான்பொரு, ணன்குடையானை நயந்தனர் கோடலின், வம்பிடை மென்முலை வாணெடுங் கண்ணவர், கொம்பிடை வாழுங் குரங்கும் புரைப." (வளையாபதி) என்பதனால், வரைவின் மகளிர் குரங்குபோல்பவரென்பது விளங்கும்; கொடி முதலியவற்றிற்குரிய மேற்கோள்கள் வந்துழிக் காண்க. ஒரு கொழு கொம்பை விட்டு மற்றொன்றைப் பற்றுதல் கொடியின் இயல்பு; உள்ள புல்லைவிட்டுப் பயிரைக் கொள்ளல் புலத்தின் இயல்பு; பிறபொருள்கள் எல்லாவற்றிலும் பற்றொழிந்து பரம்பொருளொன்றையே நினைந்திருத்தல் துறவியின் இயல்பு; க. ௩௫ : ௧௩௮ - ௪௧; "தாவரு மருவினை செற்றுத் தன்னரு, மூவகைப் பகையரண் கடந்து முத்தியிற், போவது புரிபவர் மனமும் பொன்விலைப், பாவையர் மனமும்போற் பசையு மற்றதே" (கம்ப. தாடகைவதைப். ௧௫). ஏற்றவாறு பொருட்குணம் விரித்துக் கொள்க. கலைதுறை போகிய கணிகாசாரம் - தமக்குரிய கலைகள் பலவற்றையும் பயின்றுமுதிர்ந்த ஒழுக்கம். கணிகை மகளிர் அறுபத்து நான்கு கலைகளையும் கற்றுங் கேட்டும் துறைபோதல் உண்டென்பதனை,

"வேத்தியல் பொதுவிய லென்றிரு திறத்துக்
கூத்தும் பாட்டுந் தூக்குந் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலுந்
தண்ணுமைக் கருவியுந் தாழ்தீங் குழலுங்
கந்துகக் கருத்து மடைநூற் செய்தியுஞ்
சுந்தரச் சுண்ணமுந் தூநீ ராடலும்
பாயற் பள்ளியும் பருவத் தொழுக்கமுங்
காயக் கரணமுங் கண்ணிய துணர்தலுங்
கட்டுரை வகையுங் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியு மலராய்ந்து தொடுத்தலுங்
கோலங் கோடலுங் கோவையின் கோப்புங்
காலக் கணிதமுங் கலைகளின் றுணிவு
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
வோவியச் செந்நூ லுரைநூற் கிடக்கையுங்
கற்றுத்துறை போகிய பொற்றொடி நங்கை"

எனவும், (மணிமேகலை. ௨. ௧௮ - ௩௨)

"யாழ்முத லாக வறுபத் தொருநான்
கேரிள மகளிர்க் கியற்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த காமக் கேள்வி" (பெருங். க. ௩௫ : ௮௪ - ௬)

எனவும், "எண்ணெண் கிரட்டி இருங்கலை பயின்ற .....மடந்தையர்" (சிலப். ௨௨ : ௧௩௮ - ௯) எனவும் வருவனவற்றாலும் உணர்க. படிவம் - விரதம். பாவனை - அபிநயம். பரியாளம் - பரிவாரம். தலைக்கோல் - இது நாடக மகளிர்க்கு அரசனால் வழங்கப்படும் ஓர் விருது.

"பேரிசை மன்னர் பெயர்புறத் தொடுத்த
சீரியல் வெண்குடைக் காம்புநனி கொண்டு
கண்ணிடை நவமணி யொழுக்கி மண்ணிய
நாவலம் பொலந்தகட் டிடைநிலம் போக்கிக்
காவல் வெண்குடை மன்னவன் கோயில்
இந்திர சிறுவன் சயந்த னாகென
வந்தனை செய்து வழிபடு தலைக்கோல்" (சிலப். ௩: ௧௧௪-௧௨௦)

என்பதனாலும் உணர்க. ஓசை - புகழ். ஒளி - நன்மதிப்பு. மடமொழி அன்மொழித் தொகை. மடமொழியையுடைய அக்கலிங்கசேனை மடமகள் என்க.

(மதனமஞ்சிகை பந்தாடுகையில் பந்து கீழே விழுதல்)

௬௨ - ௭௨ : வானோர்..............நோக்கி

(பொ - ரை.) தேவருலகின்கண் ஒரோவழி இருந்தாலல்லது அவளுக்கு இவ்வுலகத்திலே இணையாவார் யாரும் இல்லை என்று அவளைக் கண்டோரும் அவள் சிறப்பினைக் கேட்டோரும் அமையாது புகழ்தற்குக் காரணமான பெண்மைத் தன்மையுடையளாய்த் தன் கூந்தலிலே செறிந்த மலர்மாலைகளையும் பொறுக்கலாற்றா மென்மையுடையளாய் மானினது மதர்த்த நோக்கத்தையொத்த நோக்கினையுடையளாய்க் கண்டோரைக் காமுறுத்தும் அழகிய மென்மையினையும் பதர்ச்சொல் இல்லாத பணிவுடைய மொழியினையும் பருத்த தோளையும் சிறிய நுதலையும் மிளிர்தலுடைய கண்களையும் உடையவளுமாகிய மதனமஞ்சிகை என்னும் நங்கை தன்னுடைய மலையையொத்த மேனிலை மாடத்தின் உயர்ந்த உச்சியின்கண் எறிந்து ஆடும் பந்து தவறி அழகிய பலகணியினது துளையூடு வந்து கீழே விழுதலால் அதனை நோக்கி என்க.

(வி - ம்.) மடமொழியாளாகிய கலிங்கசேனையின் மகளும் தன்மையளும் சாயலையும் மொழியையும் தோளையும் நுதலையும் நோக்கையும் உடையவளும் ஆகிய மதன மஞ்சிகை என்க. ஈண்டுளோருலகு- இவ்வுலகத்தோர். தண்டாது - அமையாமல். தன்மை - பெண் தன்மை. மாதர் - காதல். சாயல் - மென்மை. பதர் - உள்ளீடற்றது. மலைபுரை - மலையையொத்த. சாலேகம் - பலகணி. இழுக்குபு - இழுக்கி.

(நரவாணதத்தன் உலாவரல்)

௭௩ - ௮௨ : செறி..............நோக்கினன்

(பொ - ரை.) செறிந்த வளையலையுடைய தோள்களையுடைய அம்மதனமஞ்சிகை அம்மாடத்தின்மேல் எதிர்முகமாக நின்றபொழுது சினமிக்க படைகளையுடைய உதயணமன்னனு

டைய ஒரே மகனாகிய நரவாணதத்தன் உயர்ந்த கொடிகளையுடைய அந்த வீதியின்கண் தன்னைப் புகழ்ந்து பலரும் பாராட்டா நிற்ப, ஏறுதற்கரிய மலையுச்சியினின்றும் இருபக்கத்தும் வீழா நின்ற அருவிபோல இரண்டு கவுள்களினின்றும் வீழுகின்ற மதநீரையுடைய ஒரு மணி கட்டிய யானையினது பிடரின்கண் ஏறிப் பெரிய முகில் உச்சியில் தோன்றும் குளிர்ந்த திங்கள் மண்டிலம் போன்று உலாவுதற்கு எழுந்தருளியவனது நிலாவினை யொத்த வெள்ளிய தனது பூந்துகிலின் முன்றானையில் அப் பந்து வந்து வீழ்தலாலே அதனைத் தானே கைப்பற்றிக் கொண்டவனாய் இப்பந்தினை என்மேலிட்டவள் யார்? என்று அறிதற் பொருட்டு அண்ணாந்து மேலே நோக்கினனாக! அங்ஙனம் நோக்குழி என்க.

(வி - ம்.) செம்முகம் - எதிர்முகம். வேந்தன் : உதயணன். போகுகொடி - உயர்ந்த கொடி. கடாத்தது - மதநீரையுடையது. எருத்தம் - பிடர். யானையின் பிடரில் அமர்ந்து உலாவரும் நரவாண தத்தனுக்கு முகில் உச்சியில் தோன்றும் திங்கள்மண்டிலம் உவமை. உலாவென - உலாவுதற்கு என. துகிற்றானை - துகிலின் முகப்பு. எட்டி - அண்ணாந்து.

(நரவாணதத்தன் மதனமஞ்சிகையைக் கண்டு விரும்பல்)

அ௩ - ௯ : நிறை............இருந்து

(பொ - ரை.) கலைகள் நிறைந்த திங்கள்மண்டிலத்தை ஒத்த தனது ஒளிமுகத்தின்கண் ஒன்றனை ஒன்று எதிர்ப்பன போன்று அமைந்து நீண்ட செவ்வரி பரந்து தமக்கு ஒப்பில்லாத வாள்போன்ற தன் பெரிய கண்களாகிய வலையால் அம் மதன மஞ்சிகை அந் நரவாணதத்தனுடைய மனமாகிய மீனை வளைத்துப் பற்றி இழுத்துத் தனது நெஞ்சகமாகிய நீர்நிலையிலே அகப்படுத்து தலாலே வெவ்விய வெகுளியையுடைய அவ் வீரன் அந் நங்கையை இன்னாள் என்று அறியாமையினாலே சுழலுகின்ற சிந்தையை யுடையவனாய் அவளெறிந்த அப் பந்தினையே தனக்குத் துணை யாகக் கருதி அதனைக் கைக்கொண்டு மெல்லச்சென்று ஆங்கோர் அழகிய குளிர்ந்த சோலையினுள் இறங்கித் தங்கியிருந்து என்க.

(வி - ம்.) உறழ்வன - எதிர்வன. அரி - கோடு; செவ்வரி. கண்ணாகிய வலையால் வளைத்து என்க. வீரன் : நரவாணதத்தன். இன்னாளென்று அறியாமையால் என்க.

(நரவாணதத்தன் கோமுகனை வினவுதல்)

௯0 - ௪ : கொய்...............வினவ

(பொ - ரை.) கொய்த மலரோடு தளிர்விரவிப் புனைந்த படலைமாலையணிந்த கோமுகனையழைத்து, "நண்பனே! யாம் உலாவரும் வழியின்கண் உள்ள கணிகையர் சேரியின்கண்

ஒப்பனை செய்யப்பட்ட அழகினையுடைய இப் பந்தினை உடைய நங்கையை நீ ஐயமின்றி அறிவாயாயின் யான் அவளை உணர்ந்து கொள்ளும்படி எனக்குக் கூறுவாயாக" என்று பெரிதும் விரும்பியவனாய் வினவா நிற்றலாலே என்க.

(வி - ம்.) கொய்மலர்: வினைத்தொகை. படலை - மலரும் தளிரும் விரவிப்புனைந்த ஒருவகை மாலை. கோமுகன் - தோழருள் ஒருவன். கூஉய் - அழைத்து. செய்பந்து : வினைத்தொகை. சேயிழை மாதரை என்றது நங்கையை என்னும் அளவின் நின்றது. மேயினன் - விரும்பியவனாய்.

(கோமுகன் மதனமஞ்சிகையின் உருவத்தை எழுதுதல்)

கூரு - கூ : கையிற்...............எய்தி

(பொ - ரை.) அதுகேட்ட கோமுகன் அவனிடத்தினின்றும் அப் பந்தினை வாங்கிக் கையிற்கொண்டவன் அதனைக் கூர்ந்து நோக்கி அதன்மேல் அழுந்தியுள்ள கைச்சுவட்டினைத் தெளிவாக ஆராய்ந்து அப்பந்து நறிய வெண்சந்தனம் பூசப்பட்ட கையினால் இறுகப் பிடிக்கப்பட்டமையால் அக் கையினது செறிந்த விரல்களின் நிரல்பட்ட வடுக்கள் அழுந்திக் கிடந்தமையை நன்கு நோக்கி அவ்வடுக்களைக்கொண்டே அப் பந்தினைப் பிடித்த நங்கையின் உருவ முழுவதையும் ஊகித்துணர்ந்துகொண்டு என்க.

(வி - ம்.) ஒற்றிய ஒற்று - ஒற்றப்பட்ட வடு. தெற்றென - விரைவாக எனினுமாம். தெரிந்து - ஆராய்ந்து. உடங்கு - ஒருசேர. அப் பந்தின்மேல் அழுந்தி இருந்த விரல் வடுக்களைக்கொண்டே அப் பெண்ணின் உருவம் இங்ஙனம் இருத்தல் வேண்டுமென்று ஊகித்துணர்ந்துகொண்டான் என்பது கருத்து.

(இதுவுமது)

கoo - கக : விரலும்...............எழுதி

(பொ - ரை.) அங்ஙனம் உணர்ந்துகொண்டவன் அப் பந்தின்மேற் கிடந்த வடுக்களுக்குப் பொருந்திய விரல்களையும், அவ் விரல்களுக்குப் பொருந்திய உள்ளங் கைகளையும், அவ் வுள்ளங்கைகளுக்கு ஏற்ற பசிய வளையலணிந்த முன் கைகளையும், அம் முன் கைகளுக்கு ஏற்றனவாக நன்கு பொருந்திய தோள்களையும், அத் தோள்களுக்கு ஏற்ற மிக்க ஒளியுடைய முகத்தையும் அம்முகத்திற்கேற்ற மாமரத்தின்கண் தோன்றும் வடுவினது பிளவுகளையொத்த மலர்ந்த நெடிய கண்களையும், பவளம் போன்ற வாயினையும், முத்துக்கள்போன்ற ஒளியுடைய பற்களையும், ஒழுகாநின்ற நீண்ட மூக்கினையும் மை எழுதும் நுண்ணிய புருவங்களையும், அழகமைந்த காதுகளையும், சிலவாகிய கரிய

கூந்தலையும், குழைந்த மயிரொழுக்கினையும், அல்குற் பரப்பினையும், இடையின் நீளத்தினையும், நிறமிக்க சிவந்த அடிகளின் தன்மையையும், எல்லாம் முன்னர் முறையே நூலால் அளந்து அறிந்தவன்போல வளம்பட எழுதி என்க.

(வி - ம்.) அங்கை - அகங்கை; உள்ளங்கை. மாப்படுவடு - மாமரத்திலுண்டாகிய பிஞ்சு. துப்பன - பவழம்போன்ற. முறுவல் - பல். ஒழுகு கொடிமூக்கு - வளருகின்ற நீண்ட மூக்கு. சேடு - அழகு. ஒல்கும் - குழைந்த. நூல் - ஓவிய நூலுமாம்.

(இதுவுமது)

ககஉ - சு: பாவை..........வலித்து

(பொ - ரை.) அங்ஙனம் எழுதியவன் ஓவியத்தின் இலக்கண முறைமைபற்றி அவ்வோவியத்தின் நிறமும் நீளமும் இன்னோரன்ன பிறவும் உணர்ந்தவனாய் வீரக்கழல் செறிந்த அடிகளையுடைய தலைவனாகிய நரவாணதத்தனைச் செவ்விதெரிந்து வணங்கி, "இறைமகனே! இவ் வோவியத்தின் உருவத்தை ஒத்த உருவமுடையவள் நமது நகரத்தின்கண் மதனமஞ்சிகை என்னும் ஒரு நங்கையே ஆவள்" என்று துணிந்து கூறி என்க.

(வி - ம்.) பாவை - ஓவியம். அண்ணல் - தலைவன், நரவாணதத்தன். இதன் - இவ் வோவியத்தின். வலித்து - துணிந்து.

(கோமுகன் மதனமஞ்சிகையின் வீட்டிற்குச் சென்று பரிசங் காட்டல்)

ககஎ - உரு: பந்து..............காட்டி

(பொ - ரை.) நரவாண தத்தனுடைய விருப்பத்தின்படி கோமுகன் அப் பந்தினை எடுத்துக்கொண்டு சென்று முத்துவடம் பொருந்திய அழகிய முலையினையுடைய கணிகையர் சேரியின்கண் தன் தோழனாகிய நரவாணதத்தனுடைய உள்ளக் கோயிலின் நிறையாகிய தாழக்கோலை நன்கு முறித்த அழகியாகிய அம் மதனமஞ்சிகையின் மாளிகையையடைந்து நரவாணதத்தனுக்குத் தூதுவனாய்ப் பலகாலும் செவ்விபெறாமல் சென்று சென்று செவ்வி கிடைத்தபொழுது மெல்ல அவள் இல்லத்தே புகுந்து, காமக் குறிப்புடைய வெவ்விய பிணி தீர்ந்து நன்னெறிப் படும்படி அந் நங்கையின் நெஞ்சத்தை ஆராய்ந்தறியும்பொருட்டுப் பசிய மணிகள் வைத்திழைத்த நல்ல அணிகலங்களைப் பரியப் பொருளாக ஒரு பொற்றூளத்தின்மேல் வைத்து அவற்றின்மேல் குற்றமற்ற அப் பந்தினை அம் மதனமஞ்சிகைக்கு நரவாணதத்தனின் நினைவுண்டாதற்பொருட்டு வைத்து அவ்விடத்தே அவளை ஈன்ற தாயாகிய கலிங்கசேனைக்கு அவற்றை நன்கு காட்டி என்க.

(வி - ம்.) மைந்தன் : கோமுகன். காழ் - முத்துவடம். தோழன்: நரவாணதத்தன். தாழ் - தாழக்கோல், நரவாணதத்தனுக்குத் தூதுவனுய் என்க. செவ்வி பெருமையால் பல்காற்சென்று என்க. முன்பு மதனமஞ்சிகை பந்து வீழ்த்தியபொழுது அப் பந்து நரவாணதத்தன் மேல் வீழ்ந்ததனைக் கண்டிருத்தலின் மீண்டும் அப் பந்தினைக் காணுங் கால் அவன் நினைவு அவளுக்குத் தோன்றுதல் இயல்பாகலின் அந்நினைவு தோன்றற்பொருட்டு அப் பந்தினை அப் பரியப் பொருளின்மேல் வைத்துக் காட்டினன் என்பது கருத்து. அறிவு - ஈண்டு நினைவு. தாய் முதல் : உருபு மயக்கம்.

(பரத்தையர் செயல்)

கஉரு - ௬௬ : பட்டது...............கூறி

(பொ - ரை.) முன்பு அப் பந்து காரணமாக நிகழ்ந்த நிகழ்ச்சியையும் கூறுதலாலே, அதுகேட்ட அக் கலிங்கசேனை பொருந்திய மகிழ்ச்சியையுடையவளாய் முகத்தான் இனிது விரும்பி நோக்கி "யாங்கள் வழிபடுகின்ற தெய்வம் தானே எம்பால் வந்து வலிந்து எமக்கு வரந்தருகின்றது!" என்று கூறி நிற்பாளாக, அப்பொழுது அம் மதனமஞ்சிகையின் செவிலித் தாயரும் தமக்கையரும் அவரோடு பயின்ற அழகிய வளைய லணிந்த தோழிமாரும் நிகழ்ந்ததனை அறிந்து கோமுகனை நோக்கித் தலைக்கோற் பட்டம்பெற்ற பெருந் தகைமையையுடைய கணிகை மகளிர் சிறந்த நல்லினத்தார்களை மிகவும் மதித்துச் சிற்றின மாந்தரினின்றும் விலகி எப்பொழுதும் பேரின மாந்த ரொடு மிக்க கேண்மை பூண்டு பின்பு பிரிவில்லாது வாழும் தன்மையை எடுத்துக் கூறுநிற்ப என்க.

(வி - ம்.) பட்டது - மதனமஞ்சிகையின் பந்து தன்மேல் வீழ்ந் தமை காரணமாக நரவாணதத்தன் காமநோய் வாய்ப்பட்டது என்க. ஒட்டிய - பொருந்திய. தாமே பெரிதும் முயன்று பெறுதற்குரிய காதற் கேண்மை தமக்கு வலிய வருகின்றது என்பாள் வழிபடு தெய்வம் வரந்தருகின்றது என்றுள். வழிபடு தெய்வம் என்றது நரவாண தத்தனைக் கருதிக் கூறியபடியாம். வரந்தருகின்று - வரந்தருகின்றது. தாய் - செவிலித் தாயர். தவ்வை - செவிலித்தாய் மகளாய்த் தனக்கு மூத்த தோழி. சீரினம் - சிறந்த நல்லின மாந்தர். சிற்றினம் - கயவர் கூட்டம். பேரினம் - சான்றோர் கூட்டம். தலைக்கோல் மகளிர் - தலைக்கோற் பட்டம்பெற்ற கணிகை மகளிர். தலைக்கோல் மகளிர் கணிகையராயினும் கற்புக்கடம் பூண்டொழுகுதலில் தலைசிறந்தவர் என்று பாராட்டிக் கூறியபடியாம். இங்ஙனமாதலை மாதவியிடத்தும் காண்க.

(இதுவுமது)

கரு௪ - ௬0 : கற்கெழு.............மறுப்ப

(பொ - ரை.) இவ்வாறு அம் மகளிர் தம் மொழிகளாலே மதனமஞ்சிகையின்பால் காமங்கொண்டு மிகாநின்ற நரவாண

தத்தனுடைய நெஞ்சின்கண் குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவன் கடைகின்ற தீக்கடைகோல் தோற்றுவித்த ஒளியுடைய சிறிய தீ எழுந்து அக்காடு முழுதும் பற்றி எரிதல்போன்று அக் காமமும் எழுந்து பெருகும்படியும் மகிழ்ச்சிக்குக் காரணமான விருப்பத்தை யுண்டாக்கும்படியும் அவ்வெண்ணம் விரைந்து படிப்படியாக முதிருமபடியும் மூள்வித்துப் பின்னர் வஞ்சக மொழிகளையுடைய அம் மகளிர் அக் கோமுகனை நோக்கிப் பெருமானே! கொடியுயர்த்த தேரையுடைய நம் அரசனாகிய உதயணகுமரன் அடியேங்களுக்குக் கட்டளையிட்டாலன்றி நரவாணதத்தன் அடிச்சியாகிய மதனமஞ்சிகைக்கு அருள் செய்தல் எமக்குப் பொருந்தாது என்று கூறி அப் பரியப் பொருளைக் கைக்கொள்ளாமல் மறுத்தலாலே என்க.

(வி - ம்.) கல் - மலை. கானவன் - குறவன். கோல் - தீக்கடைகோல். எழுச்சியின் - எழுதல்போல. தமது சொல்லால் நரவாணதத்தன் காமம் மிகும்படி பேசிப் பின்னர்ப் பரியப்பொருளை மறுப்ப என்க. கோமான் : உதயணன். உதயணனுடைய உடம்பாடின்றி நரவாணதத்தன் மதனமஞ்சிகையை மணத்தல் எம்மனோர்க்குப் பொருந்தாது என்று மறுத்தபடியாம்.

(கோமுகன் கூறல்)

௧௪௪ - ௪ : இருங்கண்............என

(பொ - ரை.) அதுகண்ட கோமுகன் உதயணன்பாற் சென்று, "பெருமானே! நரவாணதத்தன் அமிழ்தத்தையொத்த மொழியினையுடைய மதனமஞ்சிகை என்னும் அந்நங்கையின் விருப்பம் உண்டாதற்குக் காரணமான குறிப்பினையுடைய நோக்கத்தினைக் காணுதற்கு அவளோடு திருமணங்கூடும் இன்பமான நாள் ஒன்று அவனுக்கு வந்தெய்துவதாயின் பெரிய இடமமைந்த இந்நில உலகத்தில் அவன் இனிது வாழ்தற்கு உரியவன் ஆவான். அந்நாள் அவனுக்குக் கைகூடாதாயின் வாழ்தல் அரிது" என்று கூறாநிற்ப என்க.

(வி - ம்.) ஏந்தலும் : நரவாணதத்தனும். நரவாணதத்தன் மதனமஞ்சிகையின் நோக்கங் காண அவளோடு கூடும் திருமணநாள் வருமாயின் வாழ்தற்குரியன், இன்றேல் இறந்து படுவான் என்று அறிவித்தபடியாம். மருந்து - அமிழ்தம். ஏமம் - இன்பம். வைகல் - நாள். இன்றேல் இறந்துபடுவன் என்பது குறிப்பெச்சம்.

(உதயணன் மதனமஞ்சிகைக்குப் பொன்விடுத்தல்)

௧௪௫ - ௫௨ : அன்று..............காண்டலின்

(பொ - ரை.) இவ்வாறு கூறிய கோமுகன் வாயிலாய் நரவாணதத்தனுடைய தன்வயமின்றித் தன்னின் நீங்கித் தன்னை

விட்டுச் சென்ற நெஞ்சத்தோடு பகற்பொழுதில் காணப்படும் திங்கள்போல ஒளிகுன்றி உடல் பசலை பாய்ந்து மாறுபாடு கொண்ட நெஞ்சின்கண் அமைந்த துயரத்தை உதயண மன்னனும் கோப்பெருந்தேவியாகிய வாசவதத்தையும் அறிந்து தாயுந்தந்தையுமாகிய அவ்விருவரும் நம் மகனாகிய நரவாண தத்தனுக்கு நன்மை தக்கிருக்கின்ற காதற்கேண்மைக்கு எல்லாப் பண்புகளாலும் உரிமையுடைய மகள் இவளையன்றிப் பிறர் யாரும் இல்லை என்று கருதி அவளைத் தமது குலத்தின் கோப் பெருந்தேவியாகக் கோடற்கு ஒருகோடி சிறந்த பொன்னை ஏனை வரிசையோடு விடாநிற்ப, அப்பரியப் பொருள்களைக் கலிங்கசேனையை யுள்ளிட்ட அக்கணிகை மாதர் காணுதலாலே என்க.

(வி - ம்.) அன்று - மதனமஞ்சிகையின் பந்து தன் மேல் விழுந்த அற்றைநாள். பகல்மதி - பகற்பொழுதில் தோன்றும் திங்கள். எவ்வம் - துன்பம். தலைப்பெருந்தேவி : வாசவதத்தை. தந்தை : உதயணன். குலப்பெருந்தேவியாகக் கோடற்பொருட்டு என்க. விட்டிருந்து - விட்டிருப்ப. வேந்தன் : உதயணன். காணம் - பொன்.

(நரவாணதத்தன் மணம்)

௯௩ - ௮ : உரூஅர்..............செறிந்தென்

(பொ - ரை.) நொதுமலர்போலத் தன்னைக்காட்டி நிறைந்த காதலோடு உடன்படாதாள்போலப் பெரிதும் உடம்பட்ட மதனமஞ்சிகையினது திருமணத்தைக் கலிங்கசேனை முதலிய மகளிர் முடிவுசெய்த பின்னர்த் திங்கள்மண்டிலத்தை யொத்த முகத்தையுடைய அம்மதனமஞ்சிகையை உதயணமன்னனுடைய ஒரே மகனாகிய நரவாணதத்தன் திருமண விழாவின்பத்தோடே வானத்தைத் தீண்டாநின்ற அகன்ற அரண்மனையின்கண் மறை விதிப்படி திருமணம் புணர்ந்து விழாக்கள் பல செய்து செவ்வி யறிந்து காதற்பண்பால் நிறைவுற்று நரவாணதத்தன் அம் மடந்தையோடு இன்பம் நுகர்வானாயினன் என்க.

(வி - ம்.) உரூஅர் போல - நொதுமலர்போலக் காட்டி மறுப் பாள் போல மருத மாதர் என்க. மாதர் : மதனமஞ்சிகை. வலித்த பின் - துணிந்தபின். மகன் : நரவாணதத்தன். வதுவை - மணச் சடங்கு. விதி - மறை நூல்விதி. பதன் - செவ்வி. பண்பு - காதற் பண்பு.

"செறாஅச் சிறுசொல்லுஞ் செற்றார்போ னோக்கும்
உறாஅர்போன் றுற்றார் குறிப்பு" (குறள். ௧0௯௭)

என்பது திருக்குறள்.

௮. மதனமஞ்சிகை வதுவை முற்றிற்று.

௯. மதனமஞ்சிகை பிரிவு

இதன்கண் : *திருவிழாவும் மானசவேகன் வருதலும், மானசவேகன் கண்டகாட்சியும், மானசவேகன் மதனமஞ்சிகையைக் காணலும், மதனமஞ்சிகை பூதவடிவமொன்றைக் கண்டு அஞ்சுதலும், மானசவேகன் எண்ணுதலும், நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் இன்புறுதலும், மானசவேகன் மதனமஞ்சிகையை எடுத்துச் செல்லலும் கூறப்படும்..........*
....

பதனறிந்து நுகரும் பருவத் தொருநாட்
கோல நீண்மதிற் கோடிக்கோ சம்பி
ஞால மெல்லா நயந்துடன் காண
முழவொடு பல்லிய முன்றிற் றதும்ப
விழவொடு பொலிந்த வழகிற் றாகித்
திசைதிசை தோறுந் திருக்கண் கூடிய
வசையறு திருநகர் வந்துடன் றுவன்றிப்
பொன்று வேட்கைப் புலங்களை நெருக்கி
வென்று ராயினும் விழையும் விழவணி
காணும் வேட்கையொடு சேணுய ருலகிற்
றேவ கணமும் மேவர விழிதர
விறல்கெழு சிறப்பின் விச்சா தரரும்
இறைகொண் டிழிதர விப்பாற் சேடியின்
நுணங்குவினை விச்சையொடு நூற்பொரு ணுனித்த
மணங்கமழ் நறுந்தார் மானச வேகனென்
றுற்றல் சான்ற நூற்றொரு பதின்மர்
அரைச ருள்ளு முரைசெல விளங்கிய
மின்னூர் மணிமுடி மன்னனு மிழிந்து
பத்திப் படாகையும் பல்பூங் கொடியும்
சித்திரித் தெழுதிய வித்தக விமானமும்
இருநிலத் தியங்கு மியந்திரப் பாவையும்
அருவினை நட்பத் தியவனப் புணர்ப்பும்
பொத்தகை யானையும் பொங்குமயிர்ப் புரவியும்
சித்திர மாலையு மக்கடந் தொட்டிலும்
வெண்டா ரொழுக்கும் விளக்குறு பூதமும்

தெரிவுற லரிய பலகலக் குப்பையும்
கைந்நிமிர் விளக்கு..............ம்
எண்ணரும் பல்பொறி யெந்திரப் பொருப்பும்
வண்ண..............................களும்
கண்ணு ளாளர் கைபுனை கிடுகும்
நாடு நகரமு மாடுநர் பாடுநர்
ஆடலும் பாடலு மன்னவை பிறவும்
கூடிக் காணு மாடத் தோங்கிய
தண்கோ சம்பிப் பெண்சன நோக்கி
விண்மிசை யவரும் விழையுங் காரிகை
மண்ணியன் மகளிரு ளுள்கோன் மற்றெனச்
சேணெடுந் தெருவுஞ் சிற்றங் காடியும்
நாணொடு புணர்ந்த நலம்புணர் மகளிர்
நெரியுந் தெருவு நிரம்பிய மறுகும்
மன்றமுங் கோணமுஞ் சென்றுசென் றுலாஅய்
யாறுகிடந் தன்ன வீறுசால் வீதிதோறும்
ஆனுது திரிதரு மானச வேகன்
கோலக் கோயிலு நால்வகை நிலனும்
புடைசூழ் நடுவட் பொன்மலர்க் காவின்
இடைசூ ழருவி யேந்துவரைச் சென்னி
ஆய்மயி லகவு மணிச்சுதைக் குன்றின்
மீமிசை மருங்கின் மின்னென நுடங்கிப்
பழவிறன் மூதூர் விழவணி நோக்கி
மும்மணிக் காசும் பன்மணித் தாலியும்
பொன்மணிக் கொடியும் பூணுஞ் சுடர
மதன மஞ்சிகை நின்றோட் கண்டு
சென்றன னணுகி நின்றினிது நோக்கி
வெள்ளி விமானம் விதிர்விதிர்த் தேறி
வள்ளி மருங்கி னொள்ளிழை யேழையைக்
கச்சார் வனமுலை விச்சா தரியே
ஆவ ளென்னு மையமோ டயலதோர்
தேவ மாடஞ் சேர்ந்தன னிருந்து
வருவோர்ப் பற்றி வாங்குபு விழுங்கும்
இனைய நட்பத் தியவன ரியற்றிய
பெருவலிப் பூதத் துருவுகண் டுணரார்

இன்னுயி ருண்ணுங் கூற்ற மிதுவெனப்
பொன்னிழை சுடரப் பொம்மென வுராஅய்
மைகொள் கண்ணியர் வெய்துயிர்த் திரிய
மாவீ ழோதி மதனமஞ் சிகையும்
ஏயென வஞ்சுஞ் சாய னோக்கி
விச்சை மன்ன னச்சுவன னாகி
விறல்கெழு விஞ்சையர் வெள்ளியம் பெருமலை
இறைகொண் டிருந்த வெழிலுடை மகளிருள்
யாவரு மில்லைமற் றிவளோ ரனையார்
யாவ ளாயினு மெய்துவென் யானென
ஒருதலை வேட்கை யுண்ணின்று நலியப்
பெருவினை விச்சையிற் றெரிய நோக்கி
உயர்நிலை யுலகத் தவரும் பிறரும்
மேனிலை யுயர்ச்சியின் மெய்யா மதிக்க
வளமை நன்னிலத் திளமுளை போந்து
கல்வி நீரிற் கண்விட்டுக் கவினிச்
செல்வப் பல்கதிர் செறிந்துவனப் பேறி
இன்பம் விளைந்த நன்பெரு நெல்லின்
ஆண மடையிற் காண்வரப் பற்றித்
துப்புர வடிவி.......தோயினும்
வேட்கை நாவின் விருப்பொடு சுவைக்கும்
மாற்ற லில்லா மனத்தின ராகி
வலியும் வளமையு....க்கு......யும்
பொலிவும் புகழும் பொருந்திய சிறப்பிற்
குவம மாகு முதயண னொருமகன்
அவமில் சூழ்ச்சி யாய்தா ரண்ணலும்
ஆணு முட்கு மச்சமும் பயிர்ப்பும்
பேணுங் கோலமும் பெருந்தகைக் கற்பும்
வாணுதன் மகளிர் மற்றுப்பிறர்க் கின்றித்
தானே வவ்விய தவளையங் கிண்கிணி
மானேர் நோக்கின் மதனமஞ் சிகையும்
ஆனுக் காதலோ டமர்ந்துவிளை யாடிக்
காமர் பள்ளியுட் கட்டளை பிழையாத்
தாமரை நெடுங்கண் டந்தோழி ருடங்கப்
பள்ளி கொண்ட பொழுதிற் பையென

ஒள்வினை மாட முள்குவன ளுகி
விச்சை மறைவி னச்சமோன் றின்றி
இகன்மிகு குமரனைத் துயின்மிசைப் பெருக்கிக்
கயன்மிகு கண்ணியைக் கவவுப்பிணி நீக்கிப்
புகலு முள்ளமோ டகலத் தடக்கி
இகல்கோள் வீரிய னிகழ்தல் செல்லா
மண்மிசை வந்தனனென் மயக்கற வின்று
விண்மிசை யுலகிற்கு விழுப்பொருள் பெற்றேன்
என்னு முவகையின் மின்னேர் நுடங்கிட
மிளிருங் கச்சையோ டொளிவிசும் பெழுந்து
போ..................................

உரை

௬. மதனமஞ்சிகை பிரிவு

அஃதாவது - நரவாணதத்தன் மதனமஞ்சிகையைப் பிரிந்த செய்தியைக் கூறும் பகுதி என்றவாறு.

(திருவிழா)

௧ - ௭ : பதனறிந்து..............துவன்றி

(பொ - ரை.) இவ்வாறு நரவாணதத்தன் மதனமஞ்சிகையோடு முகைப்பதம் பார்க்கும் வண்டுபோல நகைப்பதம் பார்த்து இன்பம் நுகர்ந்திருக்குங் காலத்தே ஒருநாள் அழகிய நீண்ட மதில்களையுடைய அக்கொடிக்கோசம்பி நகரத்தின்கண் உலகிலுள்ள மாந்தரெல்லாம் விரும்பி ஒருங்குவந்து விழாக் காணும்படி மத்தளம் முதலிய பல வேறு இசைக் கருவிகள் அரண்மனை முற்றத்திலே முழங்காநிற்ப, திருவிழாவோடு புதுப்பொலிவுடைய அழகினையுடையதாய் நான்கு திசைகளினும் செல்வம் செழித்துள்ள குற்றமற்ற அந்நகரத்திலுள்ள மாந்தரனைவரும் ஒருங்கே வந்து கூட என்க.

(வி - ம்.) ஞாலம் : ஆகுபெயர். ததும்ப - முழங்க. திருக்கண் கூடிய - செல்வம் தன்னிடத்தே பெருகப்பெற்ற. நகர் : ஆகுபெயர். துவன்றி - துவன்ற.

(இதுவுமது)

௮ - ௧௩ : பொன்று..............சேடியின்

(பொ - ரை.) இன்னும் அந்நகரத்தின்கண் நிகழும் அழியாத வேட்கையினையுடைய மெய், வாய், கண், மூக்கு,

செவி என்னும் தம் ஐம்பொறிகளும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்களின்பால் செல்லவொண்ணுத படி ஒடுக்கி அவற்றை வென்ற துறவிகளும் காண்டற்கு விரும்பு தற்குக் காரணமான அத்திருவிழாவின் அழகினைக் காணுதற் கெழுந்த விருப்பத்தோடே மிகவும் உயர்ந்த வானுலகத்தில் வாழும் தேவர் கூட்டங்களும் விரும்புதலுண்டாகத் தம்முலகி னின்றும் இறங்கி வாராநிற்பவும் வெற்றியுடைய சிறப்பினை யுடைய விச்சாதரர்களும் அங்ஙனமே விழாக்காண விரும்பி இறங்கிவந்து தங்காநிற்பவும், இனி வெள்ளிமலையின் மேலுள்ள வித்தியாதரருலகின்கண் என்க.

(வி - ம்.) பொன்று - அழியா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம். பொறிகளைப் புலன்களிற் செல்லாதபடி அடக்கிவென்ற என்க. சேணுயருலகம் - மிக உயர்ந்த வானுலகம். மேவர - விருப்ப முண்டாக. விறல் - வெற்றி. இழிந்து இறைகொள்ள என்க. சேடி - வெள்ளிமலையின் மேலுள்ள வித்தியாதரருலகு. நிலஉலகத்தில் நிகழும் திருவிழாவைக் காணத் தேவர்களும் வருதலுண்டென்பதனை, "தீவகச் சாந்தி செய்தரு நன்னாள், ஆயிரங் கண்ணோன் றன்னோ டாங்குள, நால்வேறு தேவரு நலத்தகு சிறப்பிற், பால்வேறு தேவரு மிப்பதிப் படர்ந்து" (மணி. க : ௩௫ - அ) என்பதனானும் உணர்க.

(மானசவேகன் வருதல்)

கச - அ : நுணங்கு..............இழிந்து

(பொ - ரை.) செங்கோல் செலுத்துகின்ற வித்தியாதர அரசர் நூற்றுப் பதின்மருள் வைத்து மேம்பட்டுத் தன் புகழே திசைதொறும் செல்லா நிற்ப, விளங்கிய மின்னுதல் பொருந்திய மணிமுடி சூடிய மன்னனும் நுணுகிய தொழிலையுடைய மாய வித்தைகளோடே நூற்பொருள் பலவற்றையும் கூர்ந்து பயின்ற வனும் நறுமணங் கமழ்கின்ற மலர்மாலை யணிந்தவனும் ஆகிய ஆற்றல்மிக்க மானசவேகன் என்னும் வித்தியாதரனும் இவ் விழாக்காண அக்கொடிக்கோசம்பி நகரத்தின் கண்வந்து இறங்கி என்க.

(வி - ம்.) நுணங்குவினை - நுண்மையுடைய தொழில். விச்சை - மாயவித்தை. நுனித்த - கூர்ந்து கற்ற. அரைசர் - அரசர். உரை - புகழ். இழிந்து - இறங்கி.

(மானசவேகன் கண்ட காட்சி)

கசு - உசு : பத்திப்...............குப்பையும்

(பொ - ரை.) அந்நகரத்தின்கண் அமைந்த நிரல்பட்ட பெருங்கொடிகளையும் பலவாகிய அழகிய சிறு கொடிகளையும் சித்திரித்து எழுதப்பட்ட கலைத்தொழிலமைந்த விமானங்களை

யும், பெரிய நிலத்தின்கண் தாமே இயங்குகின்ற பாவைகளையும் செய்தற்கரிய தொழில் நுட்பத்தையுடைய யவனர்கள் இயற்றிய எந்திரவமைப்புக்களையும், துளையுடைய கையையுடைய யானைகளையும், மிக்க பிடரி மயிரையுடைய குதிரைகளையும் சித்திரித்த மாலைகளையும் மக்கள் ஏறியாடும் இயந்திரத் தொட்டில்களையும் வெள்ளிய மாலைகளை இடும் விளக்க மமைந்த பூத உருவங்களையும் அறிதற்கரிய பலவேறு அணிகலக் குவியல்களையும் என்க.

(வி - ம்.) பத்தி - வரிசை. படாகை - பெருங்கொடி. பூங்கொடி- அழகிய கொடி. யானை புரவி முதலியன இயந்திரங்கள் என்க. பொத்த கை - துளையுள்ள கை. மக்கள் ஏறியாடுந் தொட்டில் என்க. திருவிழாக்களில் மாந்தர், யானை, புரவி முதலிய உருவமைந்த ஊசல்களிலும் தொட்டிலிலும் ஏறியாடுதல் வழக்கம். இதனை இற்றை நாளிலுங் காணலாம். தாரொழுக்கும் பூதம் - மாலை சூட்டும் பூத உருவம். குப்பை - குவியல்.

(இதுவுமது)

உள — ௬௪ : கைந்நிமிர்.............நோக்கி

(பொ - ரை.) கையின்கண் நிமிர்ந்தெரியும் விளக்கினை ஏந்திய..........ம், எண்ணுதற்கரிய பலவேறு விசை யமைந்த எந்திரமாகிய மலைகளையும் வண்ண............களையும், ஓவியத் தொழிலாளர் ஒப்பனை செய்த கிடுகுகளையும் நாட்டு மக்களையும் நகரமக்களையும் ஆடுவாரையும் பாடுவாரையும் அவர்தம் ஆடலையும் பாடலையும் இன்னோரன்ன பிறவற்றையும் அம் மானசவேகன் கண்டு பின்னரும் உயர்ந்த மேனிலை மாடங்களிலே கூடி நின்று இவற்றைக் கண்டுகளிக்கின்ற குளிர்ந்த அக் கோசம்பி நகரத்திலுள்ள பெண்மக்களையெல்லாம் நோக்கி என்க.

(வி - ம்.) இப் பகுதியில் உள ஆம் - கூ ஆம் அடிகளில் உள்ள சொற்கள் சில அழிந்தன. கண்ணுளாளர் - ஓவியர். அன்னவை பிறவும் மானசவேகன் காணு என்றும் மாடத்து கூடிக் காணு பெண்சனம் எனவும் கூறிக்கொள்க. சனம் - மக்கள்.

(இதுவுமது)

௬௫ - சஉ : விண்மிசை.............வேகன்

(பொ - ரை.) இந்நில உலகத்தின்கண் வாழும் மகளிருள் வைத்து வானுலகத்தில் வாழும் தேவர்களும் விரும்புதற்குக் காரணமான பேரழகுடையாள் யாரேனும் இருப்பளோ? இராளோ? என்று ஐயுற்று அவ் வித்தியாதரர் மன்னன் அம் மகளிர் குழுக்களை ஆராய்ந்துணர்தற்பொருட்டு நாண் முதலிய பெண்மைக்குணங்க ளமைந்த அழகுடைய மகளிர் நெருங்கி நிற்கும் மிகவும் நீண்ட தெருக்களிடத்தும், சிற்றங்காடிகளிடத்

தும், அம்மகளிர் நிரம்பிய அரச வீதிகளிடத்தும் மன்றங்களிடத்தும் குறுந்தெருக்களிடத்தும் சென்று சென்று திரிந்து பேரியாறுகள் கிடந்தாற்போன்று கிடக்கின்ற பெருமைமிக்க வீதிகளிலெல்லாம் ஒழியாது இங்ஙனம் திரிகின்ற அந்த மானசவேகன் என்க.

(வி - ம்.) விண்மிசையவர் - தேவர்: உம்மை உயர்வு சிறப்பு. சேணெடுந் தெரு - மிக நீண்ட தெரு. சிற்றங்காடி - சிறிய கடைத்தெரு. நெரியும் - நெருங்கி நிற்கும். கோணம் - குறுந்தெரு. யாறு வீதிகளுக்குவமை. வீறு - வேறொன்றற்கும் இல்லாத சிறப்பு. ஆனது - ஒழியாமல்.

(மானசவேகன் மதனமஞ்சிகையைக் காணல்)

சந - ருக: **கோலக்..................கண்டு**

(பொ - ரை.) செயற்கையாலே இயற்றப்பட்ட அழகிய கோயிலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலனும் பக்கத்தே ஆழ்ந்துள்ள நடுவிடமாகிய ஓரிடத்தே விளையாடுதற் பொருட்டு அமைக்கப்பட்ட பொன் மலர்களையுடைய ஒரு செயற்கைப் பூம்பொழிலின்கண் தன் நடுப்பகுதியில் தன்னைச் சூழ்ந்து வீழுகின்ற அருவிகளையும் உயர்ந்த மூங்கிலையுடைய உச்சியினையுமுடைய அழகிய மயில்கள் அகவுகின்ற அழகிய சுதை தீற்றப் பெற்ற செய்குன்றின் உச்சியில் ஒரு பக்கத்தில் மின்னல் என அசைந்து பழைய வெற்றியினையுடைய முதிய அக்கோசம்பி நகரத்தின்கண் நிகழாநின்ற அழகிய திருவிழாக் காட்சியை நோக்கி மூன்று மணிகளாலியன்ற அணிகலனும் பலவாகிய மணிகளாலியன்ற தாலியும் அழகிய பொற்சரடும் இன்னோரன்ன பிற அணிகலன்களும் ஒளி வீசாநிற்ப நின்ற மதனமஞ்சிகையைக் கண்டு என்க.

(வி - ம்.) மானசவேகன் (சஉ) காவின்கண் அமைந்த செய்குன்றின்மேல் விழவணி நோக்கிச் சுடர நின்ற மதனமஞ்சிகையைக் கண்டு என்க. நால்வகை நிலம், குறிஞ்சி முதலியன. ஈண்டு இவை அரசன் விளையாடற்பொருட்டு நால்வகை நிலத்தின் கருப்பொருள் முதலியன கொண்டு செயற்கையால் இயற்றப்பட்டன என்க. செயற்கை என்பது தோன்ற, பொன்மலர்க்கா என்றார். சுதைக்குன்று - செய்குன்று. மும்மணிக்காசு - மூன்றுவகை மணிகள் பதித்த பொற்காசாலாகிய ஒருவகை அணிகலன். மும்மணியாவன புருடராகம், வைடூரியம், கோமேதகம் என்பன. "மும்மணி யாவன சொன்ன புருடராக, முறுவயிடூரியங் கோமே தகமே என்றுங் கோதுவர்" (திருவால. உசு : உஉ) என்பதனானும் உணர்க. கொடி - சரடு. நின்றவளாகிய மதனமஞ்சிகையை என்க.

(இதுவுமது)

ருஉ - எ : சென்றனன்..............இருந்து

(பொ - ரை.) அங்ஙனம் கண்டுழித் தன் உருவினை அவள் அறியாமல் மந்திரத்தாலே மறைத்துக் கொண்டு அவளை அணுகிச் சென்று இனிதாகக் கூர்ந்து நோக்கிக் கொடிபோன்ற இடையினையும் ஒள்ளிய அணிகலன்களையும் உடைய அம் மதன மஞ்சிகையை இவள் மானிடமகளல்லள் கச்சணிந்த அழகிய முலையுடைய விச்சாதர மகளே யாதல் வேண்டும் என்னும மயக்க உணர்ச்சியோடே காமமயக்கமும் மிகுதலால் உடலும் உள்ளமும் நடுங்கித் தனது வெள்ளி விமானத்தின்கண் ஏறிப் பக்கத்திலுள்ள ஒரு திருக்கோயிலின் மாடத்தின்மேல் இறங்கி அங்கு நின்று என்க.

(வி - ம்.) அணுகி நின்று என்றதனால் உருக்கரந்தமை பெற்றும். விதிர் விதிர்த்து - நடுங்கி. வள்ளி - கொடி. ஏழையை : மதனமஞ்சிகையை. மானிட மகளிரில் இத்துணைப் பேரழகுடையாரை அவன் கண்டிலனாதலின் இவள் விச்சாதரியே என்று கருதினான். கால் நிலந் தோய்தலின் விச்சாதரி அல்லளோ என்று ஐயமுற்றான் என்க. தேவ மாடம் - தெய்வக் கோயிலின் மாடம். விமானம் ஏறி - மாடம் சேர்ந்து இருந்து என்க.

(மதனமஞ்சிகை மண்ணீடாகிய பூதவடிவத்தினைக் கண்டு அஞ்சுதல்)

ருஅ - சுரு : வருவோர்ப்..............நோக்கி

(பொ - ரை.) அந்தச் செய்குன்றத் துச்சியின்கண் யவனச் சிற்பிகள் ஆங்கு வருவோரைக் கையாற் பிடித்து இழுத்து விழுங்குவது போலத் தோன்றும்படி அமைத்துள்ள இத்தகைய தொரு நுணுகிய தொழில்திறத்தோடு கூடிய பெரிய வலிமை யினையுடைய பூத வடிவத்தை மதனமஞ்சிகையும் அவள் தோழி மாரும் கண்டுழி அது சிற்பம் என்று உணரமாட்டாராய் இனிய உயிரை உண்ணுகின்ற மறலியே இஃதென்று நினைத்தவராய் மையீட்டப்பட்ட கண்ணையுடைய தோழிமாரெல்லாரும் அச்சத் தால் நடுங்கி வெய்தாக மூச்செறிந்து ஞரேலென்று அவ்விடத்தி னின்றும் பெயர்ந்து கெட்டோடாநிற்ப, வண்டுகள் வீழுகின்ற கூந்தலையுடைய மதனமஞ்சிகையும் அவர்களுடன் ஓடாளேனும் அவ்விடத்தே நின்று 'ஏஎ' என்று அஞ்சுகின்ற அவளது மென்மைத் தன்மையைக் கூர்ந்து நோக்கி என்க.

(வி - ம்.) மானசவேகன் மாடத்திலிருந்து பூதத்தைக் கண்டு அஞ்சும் மதனமஞ்சிகையின் சாயலை நோக்கி என்க. பூதம் - சிற்பத்தால் செய்யப்பட்ட பூத உருவம். அவ் வுருவந்தானும் எதிர்வருவோரைப்

பிடித்து விழுங்க வருவதுபோல இரு கைகளையும் நீட்டி வாயங்காந்து வெகுண்ட தோற்றத்தோடு நுட்பமாக வெகுளி முதலிய மெய்ப்பாடு தோன்ற அமைக்கப்பட்டிருத்தலின் அதனை முதன் முதலாகக் கண்ட மகளிர் சிற்பமென்றுணராது கூற்றுவன் என்று அஞ்சி ஓடினர் என்பது கருத்து. மதனமஞ்சிகை அஞ்சினளேனும் தோழிமாரோடு ஓடாது நிற்றல் அவளது தலைமைத் தன்மையை விளக்குதல் அறிக. யவனர் - யவன நாட்டுச் சிற்பிகள். கூற்றம் - மறலி. பொம்மென : குறிப்பு மொழி. உராய் - இடம் பெயர்ந்து. இரிய - கெட்டோட. மா - வண்டு. 'ஏ' என : குறிப்பு மொழி. அஞ்சுங்கால் மென்மைத் தன்மை மிக்குத் தோன்றலின் அஞ்சும் சாயலை நோக்கி என்றார்.

(மானசவேகன் எண்ணுதல்)

௬௬ - ௭௨ : விச்சை...............நோக்கி

(பொ - ரை.) விச்சாதர வேந்தனாகிய அம் மானசவேகன் அவளைப் பெரிதும் காமுற்று, "வெற்றி பொருந்திய விச்சாதரருடைய பெரிய அழகிய வெள்ளிமலையின்கண் வதிகின்ற அழகுடைய விச்சாதர மகளிருள்ளும் இவளை நிகர்ப்பவர் யாரும் இல்லை. இவள் விச்சாதர மகளேயாயினும் அன்றி மானிட மகளேயாயினும் அன்றிப் பிறர் யாரேயாயினும் இவளை யான் காதலியாக எய்துவேன் என்று உறுதிகொண்டு ஒருதலைக்காம நோய் தன் நெஞ்சில் நின்று வருத்தா நிற்பப் பெரிய செயல்களையுடைய தனது வித்தையாலே அவள் வரலாறெல்லாம் கூர்ந்துணர்ந்து என்க.

(வி - ம்.) விச்சை மன்னன் - விச்சாதர மன்னன்; மானசவேகன். நச்சுவனாகி - விரும்பியவனாய். விறல் - வெற்றி. இறைகொண்டு - தங்கி. இவள் ஓரனையார் - இவளையொத்தவர். ஒருதலை வேட்கை - ஆண் பெண் இருவருள் ஒருவர் ஒருவரை விரும்ப மற்றவர் விரும்பாதவிடத்து அவ் விருப்பம் ஒருதலை வேட்கை எனப்படும். இதனைக் கைக்கிளை என்றுங் கூறுப. தெரிய நோக்கி - அவள் வரலாறெல்லாந் தெரியும்படி நோக்கி.

(நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் இன்புறுதல்)

௭௩ - ௮௨ : உயர்நிலை...............மனத்தினராகி

(பொ - ரை.) நரவாணதத்தனும் மதனமஞ்சிகையும் மேனிலையுலகத்தில் வாழுந் தேவர்களும் ஏனையோரும் தமது நிலையினை மேலான உயர்ச்சியையுடைய மெய்ந் நிலை என்று மதிக்கும்படி தமது அழகு என்னும் நல்ல நிலத்தின்கண் இளமையாகிய முளை தோன்றிக் கல்வி என்னும் நீர் கால்யாத்தலாலே, கணுக்கள் விட்டு அழகெய்திச் செல்வம் என்னும் பலவாகிய கதிர்களை ஈன்று செறிந்து அழகேறி இன்பம் என்னும் பயன் விளையப் பெற்ற நல்ல பெரிய காமப்பைங் கூழாகிய நெல்லினது அன்பாகிய சோற்றினை யாவரும் காணுதலுண்டாகக்

கைப்பற்றி (துப்புரவடிவி........தோயினும்?) வேட்கை என்னும் தமது நாவினாலே விருப்பத்தோடு சுவைத்துண்ணும் மாறுபாடில்லாத மனத்தையுடையராய் என்க.

(வி - ம்.) உயர்நிலை யுலகத்தவர் - தேவர். பிறர் என்றது- இருடி முதலியோரை. வளமை - அழகு. இளமுளை - இளமையாகிய முளை. ஆணமடை - அன்பாகிய உணவு. வேட்கையாகிய நா என்க. சுவைக்கும் மனம் மாற்றல் இல்லா மனம் எனத் தனித்தனி கூட்டுக. மாற்றல் - மாறுபாடு.

(இதுவுமது)

அசு - கூ௫ : வலியும்..............பொழுதில்

(பொ - ரை.) வலிமையும் அழகும்......க்கு.......யும் பொலிவுடைமையும் புகழுடைமையும் ஒருவன்பால் பொருந்திய சிறப்பினுக்கு உவமையாகின்ற பெருமையினையுடைய உதயண மன்னனுடைய ஒரே மகனாகிய கெடாத சூழ்ச்சியையுடைய அழகிய மாலையணிந்த நரவாணதத்தனும அன்பும், நாணமும், அச்சமும், பயிர்ப்பும் மகளிர் போற்றிக் கொள்ளுகின்ற அழகும் பெருந்தகைமையுடைய கற்புப் பண்பும் உலகின்கண் ஒளிபடைத்த நுதலையுடைய பிறமகளிர்பால் இல்லாமல் அனைத்தையும் தானே கவர்ந்து கொண்டவளும் அழகிய தவளைவாய்க் கிண்கிணியையுடையவளும் மான் நோக்குப் போன்ற நோக்கினையுடையவளும் ஆகிய மதனமஞ்சிகையும் ஒழியாத காதலோடு ஒருவரையொருவர் விரும்பி அழகிய பள்ளியிடத்தே விளையாடித் தமக்கிட்ட கட்டளையினின்றும் தவறாத தாமரைமலர் போன்ற நெடிய கண்கள் தமக்குரிய தொழிலாகிய துயிலுதலைத் தொடங்கா நிற்றலால், அவ்விருவரும் துயிலில் ஆழ்ந்த பொழுதில் என்க.

(வி - ம்.) வலிமுதலிய பண்புகள் ஒருவன்பால் பொருந்தி இருப்பதற்கு உதயணன் ஒருவனே உலகில் எடுத்துக்காட்டாவான் என்றபடி. அண்ணல் : நரவாணதத்தன். ஆண்—ஆணம் : விகாரம், அன்பு என்க. உட்கு - நாணம். வவ்விய - கவர்ந்து கொண்ட. நாணம் முதலிய பெண்மைப் பண்புக்கும் அழகிற்கும் கற்பிற்கும் தான் ஒருத்தியே எடுத்துக் காட்டாக அமைந்தவள் என்றவாறு. அமர்ந்து - விரும்பி. காமர் — அழகு. கட்டளை - அறிவினாலே இதனை நோக்கற்க என்று இடப்பட்ட கட்டளை என்க. இனி, கண்களுக்கமைந்த இலக்கண முறையுமாம். தந்தொழில் என்றது உறக்கத்தை.

(மானசவேகன் மதனமஞ்சிகையை எடுத்துச் செல்லல்)

கூ௫ - ௧00 : பையென...............அடக்கி

(பொ - ரை.) அம்மானசவேகன் ஒள்ளிய தொழிற் சிறப்பினையுடைய அப்பள்ளி மாடத்தின்கண் நுழைந்து தனது மந்திரத்தால் தன் உருக்கரந்து ஒரு சிறிதும் அச்சமின்றி

வலிமைமிக்க நரவாணதத்தனை அவன் மேற்கொண்டிருக்கும் உறக்கத்தைத் தன் மந்திரத்தாற் பின்னும் பெருக்கிக் கயல் மீன் போன்ற மதனமஞ்சிகையை அவன் தன் மார்பகத்திட்டுச் கைகளால் தழுவியிருக்கும் பிணிப்பினை யகற்றிப் பெரிதும் விரும்புகின்ற நெஞ்சத்தோடே அவளை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு என்க.

(வி - ம்.) முள்குதல் - அழுந்துதல். ஈண்டு நுழைதல் என்னும் பொருள் குறித்து நின்றது. மாடத்தில் அழுந்துதலாவது நுழைதல் என்க. விச்சை - உருக்கரக்கும் மந்திரம். அம் மந்திரத்தின் மறைவில் என்க. இகல் - ஈண்டு வலிமை. துயிலை மேலே பெருக்கி என்க. கயலினும் மிக்க அழகுடைய கன்னி என்க. கவவுப்பிணி- அகத்திட்டுத் தழுவியிருக்கும் நிலை. நரவாணதத்தன் கவவுப் பிணியை நீக்கி என்க. புகலும் - விரும்பும். அகலம் - மார்பு.

(இதுவுமது)

௧0௧ - ௬ : இகல்.............போ..........

(பொ - ரை.) மாறுபாடுடைய மறப்பண்பு மிக்க அம் மானசவேகன் சோர்வின்றி 'யான் இந்நில உலகத்திற்கு வந்தேன். இற்றை நாள் மயக்கமின்றி வானத்தின்கண் உள்ள என் விச்சாதர உலகினும் பெறலரிய சிறந்த பொருள் ஒன்றனை ஈண்டுப் பெற்றுச் செல்கின்றேன்' என்று எழுந்த மகிழ்ச்சி யோடே மின்னல் போன்று அம் மதனமஞ்சிகை தன் மார்ப கத்தில் துவளா நிற்ப, ஒளிவிடும் கச்சையோடே ஒளிக்கிடமாகிய வானத்தின்கண் எழுந்து போ..........என்க.

(வி - ம்.) இகல் - மாறுபாடு. வீரியன் என்றது இகழ்ச்சி. இகழ்தல் செல்லா என்றது காலந்தாழ்க்காமல் என்றவாறு. பெற்றுச் செல்கின்றேன் என ஒருசொல் வருவித்துக் கொள்க. மதனமஞ்சிகை மின்னல் போல் நுடங்கிட என்க. ஒளிக்கிடமான விசும்பு என்க. ௧0௬ ஆம் அடியில் 'போ' என்னும் ஓரெழுத்து நிற்கப் பிறவும் இக் காதையின் எஞ்சிய பகுதிகளும் இப்பெரு நூலின்கண் இதற்குமேல் உள்ள பகுதிகளும் காலக் கூற்றன் வாய்ப்பட்டன.

௩. மதனமஞ்சிகை பிரிவு என்னும் இக்காதையில் ௧0௬ ஆம் அடிகாறும் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் எழுதிய உரையும் விளக்கமும் முற்றின.

பெருங்கதை ஐந்து காண்டங்களின்

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்கள் : காண்ட எண்ணும் பக்க எண்ணும்]

அருஞ்சொற்றொடர் அகரவரிசை

[வத்தவ காண்டம்]

(எண்கள் : காதை எண்ணும் அடிஎண்ணும்)

அருஞ்சொற்றொடர் அகரவரிசை

[நரவாண காண்டம்]

(எண்கள்: காதை எண்ணும் அடிஎண்ணும்)
